மஹா பக்த விஜயம்
என்றும்
ஸ்ரீ பாண்டுரங்கன் மஹிமை

ஆர். பொன்னம்மாள்

GIRI
FOR INDIAN CULTURE & TRADITION
SINCE 1951

மஹா பக்த விஜயம்

என்னும்

ஸ்ரீ பாண்டுரங்கன் மஹிமை

ஆர். பொன்னம்மாள்

கிரி

கிரி டிரேடிங் ஏஜென்ஸி பிரைவேட் லிமிடெட்

Book Name	**SRI MAHA BHAKTA VIJAYAM YENNUM SRI PANDURANGAN MAHIMAI**
Language	Tamil
Copyright	**GIRI TRADING AGENCY PRIVATE LIMITED**
1st Edition	June 2003 — 2nd Edition : February 2005
6th Reprint	November 2013
Pages	912
Price	**₹ 250.00**
ISBN No.	978-81-7950-310-2
Book Size	Crown
Paper	Maplitho — Copies : 1000
Published by	**GIRI TRADING AGENCY PRIVATE LIMITED**
Regd. Office	Modi Niwas, Opp.Post Office, Matunga, Mumbai - 19. ✆ (022) 2412 1344
Admn. Office	134 (58/2), T.S.V. Koil Street, Mylapore, Chennai - 4. ✆ (044) 2464 3551

All rights reserved. This book, or parts thereof, may not be reproduced in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording or any information storage and retrieval system now known or to be invented, without written permission from the Publisher.

Our Branches:

MATUNGA : Modi Niwas, Opp.Post Office, Matunga, Mumbai - 400 019.
✆ (022) 2412 2316, 2410 3140, 2411 8107

DOMBIVILI (E) : Seva Dham "A" Wing, Shripal Nagar, Rajaji Path, 4th Cross, (Madrasi Mandir), Opp.: Ponnu Guruvayurappan Temple, Dombivili (E), Thane Dist. 421 201. ✆ (0251) 244 9585

GOREGAON (W) : Shop No. 2, Siddhi Vinayak Apts, Sita Ram Mandir Road, Bangur Nagar, Mumbai-400 104. ✆ (022) 2876 7298

NERUL : S.I.E.S. Engineering & Computer College Complex, Anjaneyar Temple, Navi Mumbai - 400 706. ✆ (022) 2770 7664

CHEMBUR : Mythili Building, Plot No.72, Ground Floor, Road No.2, Pestom Sagar, Chembur, Mumbai - 400 089. ✆ (022) 25256011 / 25257012

MYLAPORE : 14 (Old 10), Sri Kapaleeswarar Sannadhi Street-600 004. ✆ (044) 2464 0376

NANGANALLUR : 14 (Old 8), 10th Street, Near Raghavendra Temple-600 061. ✆ (044) 2267 1335

ALWAR THIRUNAGAR : Shop : A, Plot No.17, Gandhi Road, (Opp.) Chinthamani Vinayagar Temple, Chennai - 600 087. ✆ (044) 2377 5483

KANCHIPURAM : 11/5B&146-B, Kamakshi Amman Sannadhi Street-631502. ✆ (044) 2722 4415

ANNANAGAR : Door No 179, Y Block, 1st Street, 6th Main Road, Annanagar, Chennai - 600 040. (Opp. Tower Park & Sri Ayyappan Temple). ✆ (044) 42666921

COIMBATORE : F6, T.M.House, 92, Thiruvenkatasamy Road, R.S.Puram-641 002.
✆ (0422) 254 1523

MADURAI : 15, North Tower Street, (Opp. Mottai Gopuram)-625 001. ✆ (0452) 262 8090

TRICHY : C-58, 5th Cross, Fort Station Road, Thillai Nagar - 620 018. ✆ (0431) 2740 772

SECUNDERABAD : Sri Subramanya Swami Devalayam, Padmarao Nagar, Skandagiri-500 061. ✆ (040) 2750 3046

BANGALORE : 23/3, 5th Cross, Sampige Road, Malleshwaram-560 003 ✆ (080) 2356 3001.

NEW DELHI : Shop No.6, 92 G/3, Baba Gangnath Market, Opposite Community Centre, Munirka Village, New Delhi - 110 067. ✆ (011) 26165077 & 78

E-mail ***sales@giri.in*** *Website* ***www.giri.in***

பொருளடக்கம்

1. ஸ்ரீ புண்டரீகன் 5
2. ஸ்ரீ நரசிம்மமேத்தா 12
3. ஸ்ரீ ஜயதேவ ஸ்வாமிகள் 24
4. ஸ்ரீ சோகாமேளர் 52
5. ஸ்ரீ நாமதேவர் 59
6. ஸ்ரீ ஜனாபாய் 70
7. ஸ்ரீ ஞானேசுவரர் 82
8. ஸ்ரீ பானுதாஸர் 98
9. ஸ்ரீ ஏகநாதர் 109
10. ஸ்ரீ கபீர்தாஸர் 119
11. ஸ்ரீ மச்சேந்திர நாதர் 138
12. ஸ்ரீ கோபி சந்தனர் 149
13. ஸ்ரீ கூபாகும்பார் 160
14. ஸ்ரீ புரந்தரதாசர் 164
15. ஸ்ரீ சேனா நாவிதர் 180
16. ஸ்ரீ சாங்க தேவர் 184
17. ஸ்ரீ மிருத்யுஞ்சயர் 199
18. ஸ்ரீ மீராபாய் 203
19. ஸ்ரீ சமர்த்தராமதாஸர் 212
20. ஸ்ரீ மண்டலீகராஜன் 247
21. ஸ்ரீ சக்குபாய் 250
22. ஸ்ரீ பத்ராசல ராமதாசர் 271
23. ரசிக முராரி 291
24. பத்ம நாப வேதியர் 295
25. துளசீதாசர் 297
26. பிளாபாய் 308
27. மாதவதாசர் 311
28. நீளோபா 317
29. உத்தவ சித்குணர் 321

பொருளடக்கம்

30. சாந்தோபா 324
31. துக்காராம் ஸ்வாமி 333
32. ஸ்ரீ பகிரமபட்டர் 345
33. ஸ்ரீ பிரம்மசாரி 348
34. துவாரகா ராமதாஸர் 355
35. ஸ்ரீ லதீப்ஷா 360
36. ரோகிதாஸர் (ரவிதாஸர்) 363
37. ஸ்ரீராமச்சந்திரபட்டர் 369
38. பண்ஹாஜிராஜ புத்திரர் 374
39. ஸ்ரீ பெரியதாஸர் 376
40. ஸ்ரீ இராமாபாய் 383
41. ஸ்ரீ கோராக்கும்பார் 388
42. திரிலோசனதாஸர் 400
43. தாமாஜிபண்டிதர் 405
44. சாத்வீகராஜன் 411
45. மனமோகன சுரதாஸர் 415
46. ஸ்ரீ ஜயமல்லர் 420
47. ஸ்ரீகுபராபாய் 425
48. ஸ்ரீ ஜகன்மித்திரர் 430
49. கேசவஸ்வாமி 434
50. நரஹரி பக்தர் 437
51. குணவதிபாய் 440
52. தனாசாடர் 445
53. கணேசநாதர் 448
54. சஜ்ஜனகசாருகர் 451
55. ஸ்ரீசுகானந்தர் 457
56. லாடுபாவா 461
57. ஜோகா பரமானந்தர் 463
58. ஓஹ்ரு சாவ்கார் 467

பொருளடக்கம்

59. கிரிதரலால் 470
60. கானோபாத்திரை 473
61. ஸ்ரீதரபண்டிதர் 479
62. ஸ்ரீசுஹக்ஷா 483
63. ஹரிபாலதாசர் 486
64. அங்கதபூபதி 489
65. ஜம்புதாசர் 493
66. போசலபாவா 496
67. கருமாபாய் 506
68. பிம்பாஜிபக்தர் 511
69. திரிபுரதாசர் 514
70. நானக்தாசர் 518
71. நாபாஜிசித்தர் 526
72. சிளாபாய் 530
73. ஜெயவந்தபக்தர் 534
74. இராமராஜன் 538
75. ஹரி அனந்த வைஷ்ணவர் 544
76. கோமாபாய் 547
77. ஹரிவியாசர் 551
78. பரிசபாகவதர் 553
79. ஸ்ரீசூர்தாசர் 558
80. பிரேமாபாய் 564
81. ராகாகும்பார் 566
82. கூர்மதாசர் 571
83. ஸ்ரீகோபாலதாசர் 581
84. ஜனார்தனப்பிரியதாம் 588
85. பக்தபோதனா 596
86. ஸ்ரீ அனந்தாழ்வார் 608
87. சங்கரத்தேவர் 614
88. ஸ்ரீகனகதாஸர் 627

பொருளடக்கம்

89. ஸ்ரீ சைதன்ய மஹாப்பிரபு 639
90. ஸ்ரீ நாராயணதீர்த்தர் 657
91. ஸ்ரீ ஜகன்னாததாசர் 663
92. ஸ்ரீ ஆனந்ததீர்த்தர் (அ) ஸ்ரீமத்வாச்சாரியார் 669
93. ஸ்ரீ போதேந்திரர் 681
94. பூஜ்யஸ்ரீ ராகவேந்திரர் 692
95. அருணாச்சலக் கவிராயர் 704
96. ஸ்ரீ வேதாந்த தேசிகர் 708
97. நாராயண பட்டத்ரி 716
98. எழுத்தச்சன் 732
99. பொய்கையாழ்வார் 736
100. பூதத்தாழ்வார் 737
101. பேயாழ்வார் 739
102. திருமழிசையாழ்வார் 744
103. நம்மாழ்வார் 754
104. மதுரகவியாழ்வார் 760
105. குலசேகராழ்வார் 763
106. பெரியாழ்வார் 770
107. ஸ்ரீ ஆண்டாள் 780
108. தொண்டராடிப்பொடியாழ்வார் 792
109. திருப்பாணாழ்வார் 804
110. திருமங்கையாழ்வார் 810
111. பூந்தானம் 830
112. ஸ்ரீ ஜயதீர்த்தர் 842
113. ஸ்ரீ இராமானுஜர் 846
114. ஸ்ரீ பில்வமங்கள ஸ்வாமிகள் 864
115. ஸ்ரீ ஸ்வாதித்திருநாள் 872
116. மண்மலரால் அர்ச்சித்த பீமய்யா 874
117. ஸ்ரீ ராமபக்தர் தியாகபிரம்மம் 876
118. ஜயதேவர் அஷ்டபதி 886
119. ஸ்ரீ பாண்டுரங்காஷ்டகம் 898

முன்னுரை

கண்ணன் என்றால் உங்களுக்கெல்லாம் மிகவும் பிடிக்குமல்லவா? தெய்வங்களிலேயே குழந்தையாய் வந்து மனதைக் கவர்ந்தவன் கண்ணன். திருமாலின் பத்து அவதாரங்களிலே சிறப்பாக சொல்லப் படுபவை இராமாவதாரமும், கிருஷ்ணாவதாரமும்தான். இராமன் கதை ஒரே சோகமயம். தேவியைப் பிரிந்து தேடியதும், தந்தை சொல்காக்க வனவாசம் செய்ததும், அரக்கரை வதம் செய்ததுமாக தத்துவ விளக்கம் கூறுகிறது.

கிருஷ்ணனோ பிறந்த இடமே சிறை. கைகாலில் விலங்கினால் பிணைக்கப்பட்டிருக்கும் பெற்றோர். வெளியே இடியுடன் கொட்டும் மழை. கண்ணன் பேசுகிறான். தந்தை வசுதேவரின் விலங்குகள் அவிழ்ந்து வீழ்கின்றன. சிறைக்கதவுகள் திறக்கின்றன. கூடையிலே தன்னை எடுத்து யமுனையின் அக்கரைக்குப் போகச் சொல்கிறான். அரண்மனைக் காவலர் அடித்துப் போட்டாற்போல் உறங்க, கொட்டும் மழையில் நாகம் குடைபிடிக்க, யமுனை வழிவிட, திகிலூட்டும் வாழ்க்கையைத் தொடங்குகிறான் மாதவன்.

விளையாட்டாய் பூதனையைக் கொன்றான். சகடனைக் காலால் உதைத்தான். வெண்ணையும், பாலும் திருடித்தின்றதோடு மட்டுமின்றி சட்டிகளையும் போட்டு உடைத்தான். மாட்டிக் கொண்டாலோ பொய் சொன்னான். சாகசம் செய்தான்.

இதிகாச நாயகனாக வாழ்ந்ததைவிட நம் வீட்டுப் பிள்ளைகளைப் போலவே வாழ்ந்தது தான் அதிகம். அவர்களைப் போலவே மண்ணும், தண்ணீரும் அவன் விளையாட்டுக்களமாயிற்று. மண்ணை உண்டான். நீராடிய கோபியரின் சேலையைக் கவர்ந்து அவர்களை அழவிட்டான். நீரிலே நீந்தி காளியனை விளையாட்டாய் வதைத்தான்.

பாண்டவ தூதனாக, பார்த்த சாரதியாக, ராதா கிருஷ்ணனாக ஆயிரம் லீலைகள் செய்திருந்தாலும், பிள்ளைகள் மனதைக் கவர்ந்தவன் உரலிலே கட்டுப்பட்டு, மத்தினால் அடிபட்ட மாயவன்தான்!

அந்தக் கண்ணன் பிறந்த தினத்தை ஆவலுடன் எதிர் பார்க்கிறார்கள் பிள்ளைகள். ஏன்? எந்தப் பண்டிகைக்கு இவ்வளவு பட்சணம் செய்கிறார்கள்? அடேயப்பா... முறுக்கு, சீடை, அதிரசம், வெல்லச் சீடை, அவல், வெண்ணை, திரட்டுப்பால், மனோகரம், தேன்குழல்... அம்மம்மா....

அன்று ஆயர்பாடியில், மதுரா நகரில், துவாரகையில், பாரதப் போரில் அவன் விளையாட்டாய் செய்த உதவிகள் எண்ணி மாளாதவை.

அப்படிப்பட்ட கண்ணன் பல பக்தர்கள் குடும்பங்களில் தானும் ஒருவனாய் பாடுபட்டிருக்கிறார். ஒன்றி வாழ்ந்து சேலையும் நெய்திருக் கிறார். தெய்வத்துக்கு தொண்டர்கள் தொண்டு செய்த கதைகள் உண்டு. தெய்வமே தொண்டனாய் சேவை செய்த வரலாறுகள் அறிய வேண்டாமா?

சாதி, மத, இன வேறுபாடி ன்றி கல்வி, பணம், தொழில், குணம் என்ற தராதரம் பார்க்காமல் 'என் பாட்டை நீ படுகிறாய், உன்பாட்டை நான் பார்க்கிறேன்' என உழன்றிருக்கிறான் அந்த வாசுதேவன். நண்பனாய், சேவகனாய், கிழவனாய் எப்படியெல்லாம் பக்திக்கு மண்டியிட்டிருக்கிறான் அந்தப் பண்டரிநாதன்.

இனி அவன் லீலைகளில் நீந்திக்களியுங்கள். இந்த எளிய பணியைச் செய்ய வெகு நாளாய் எனக்கு மனத்தாபம் உண்டு. இதிலிருக்கும் சிறப்பெல்லாம் அவனைச்சாரும். குழந்தை தெய்வமான அந்த யசோதை பாலனின் திருவடிக்கே இதை அர்ப்பணிக்கின்றேன். வணக்கம்.

– ஆர். பொன்னம்மாள்

பதிப்புரை

யதுகுல திலகமான ஸ்ரீகண்ணபெருமானின் லீலைகள் அனந்தம். பண்டரிபுரத்தில் பாண்டுரங்கனாக, குருவாயூரில் ஸ்ரீகிருஷ்ணனாக, பூரியில் ஜகந்நாதராக அவன் அருள்பாலிக்கும் ஸ்தலங்களும் அநேகம். ஒவ்வொரு திருத்தலங்களிலும் அப்பெருமான் அடியார்களின் அன்புக்குக் கட்டுப்பட்டு புரிந்திருக்கும் அற்புதங்கள் அளவிடற்கரியவை என்றாலும் **'மஹாபக்த விஜயம் என்னும் பாண்டுரங்கன் மகிமை'** என்ற இந்த நூலில் பாகவதர்கள் போற்றித் துதிக்கும் பக்தவத்சலனான அப்பரந்தா மனின் பொற்பாதங்களை துதிப்பதையே பிறவிப் பயனாகக் கொண்டு வாழ்ந்த அடியார்கள், அருளாளர்கள் பலரின் வரலாறு மிக அழகாகத் தொகுத்துத் தரப்பட்டிருக்கிறது.

இந்த **ஸ்ரீ பண்டரிநாதரின்** வரலாற்றை நூலாக வெளியிடு வதற்கு முன் பலரிடமும் படிக்கக் கொடுத்தோம். படித்த எல்லோருமே உண்ணவும், உறங்கவும் மறந்து அதிலேயே லயித்து உருகிக் கண்ணீர் சொரிந்தனர். அதைப் படித்துப் பார்த்த எங்களுக்கும் அதே நிலைதான் ஏற்பட்டது. **'மஹாபக்த விஜயம் என்னும் பாண்டுரங்கன் மகிமை'** என்ற இந்நூலை தொகுத்து எழுதியவர் **ஆர். பொன்னம்மாள்.** ஆன்மீகப் பத்திரிகைகளில் குறிப்பாக காமகோடி தெய்வீக–பண்பாடு–மாத இதழில் இவர் தொடர்ந்து பல வருடங்களாக எழுதி வரும் நன்னெறி புகட்டும் கதைகள், கட்டுரைகள் வாசகர்களின் நெஞ்சங்களைக் கொள்ளை கொண்டு மெய்மறக்கச் செய்திருக்கின்றன. இவர் குழந்தைகளுக்கு எனப் பல நீதிக்கதைகளை எழுதி பாராட்டுகளைப் பெற்றவர். தமிழக குழந்தை எழுத்தாளர் சங்கம் இவருக்கு பரிசுகளை வழங்கி கௌரவித் திருக்கிறது. ஜோதிட சாஸ்திரம், எண் கணிதம் ஆகியவற்றில் வல்லவர். குருப்பெயர்ச்சி, சனிப்பெயர்ச்சி பலன்களைத் துல்லியமாக கணித்து இவர் எழுதிய நூல்கள் மிகுந்த பாராட்டுக்களைப் பெற்றுள்ளன. **'மஹா பக்த விஜயம் என்னும் பாண்டுரங்கன் மகிமை'** என்ற இந்நூல் ஸ்ரீபண்டரி நாதரின் பாதகமலங்களைப் போற்றி துதித்த பக்த சிரோன்மணிகளுக்குக் கிட்டிய பேறுகளைப் பற்றி மட்டும் கூறவில்லை. பரமன் அடியார்களுக்கு சிவ–விஷ்ணு என்ற பேதம் கிடையாது என்ற சமரசத் தத்துவத்தையும் போதிக்கிறது.

இப்படி ஒரு அற்புதமான எழுத்தோவியத்தை மிகுந்த அக்கறை யுடனும், மிகுந்த ஈடுபாட்டுடனும் இவர் படைத்துத் தந்திருக்கிறார். நம் விரல்களைப் பிடித்து கதை நடக்கும் இடங்களுக்கே அழைத்துச் செல்கிறார். அங்கே நாம் பார்வையாளராக இல்லாமல் கதாபாத் திரங்களோடு இணைந்து விடுகிறோம். இதை நூலாக்கும் பாக்கியத்தை ஸ்ரீபாண்டுரங்கன் எங்களுக்குத் தந்திருக்கிறான். மலர் மென்மையானது. அது கசங்காதபடி தேனீ தேனை எடுக்கின்றன. இங்கே பொன்னம்மாள் என்ற தேனீ ஸ்ரீபண்டரிநாதர் வரலாற்றை தேனாக எடுத்து நமக்கு இனிமையாகத் தந்திருக்கிறார்.

காகிதத்தில் அவர் பேனா தூரிகையாகச் செயல்பட்டு உயிரோட்ட முடன் மிக நேர்த்தியாக இந்தக் காவியத்தை படைத்துத் தந்திருக்கிறது. ஆன்மீகம் என்ற பாறையில் அழுதம் என்ற உளி கொண்டு அற்புதமாக சிலை வடித்ததைப்போல இந்த உன்னதமான காவியத்தை வடித்துத் தந்திருக்கிறார். இதை நம் இல்லமென்னும் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்து போற்றி வருவோம். தமிழ் புரிந்த எல்லோருமே இத்தெய்வத் திருநூலைப் படிக்கச் சொல்லி கேட்டு பிறவிப் பயனை அடைய வேண்டும். பன்னிரண்டு ஆழ்வார்கள் வரலாறும் இதில் அடங்கி இருக்கிறது. கேரளத்து நாராயண நம்பூதிரி, பூந்தானம், எழுத்தச்சன், குரூரம்மா, மஞ்சுளா எல்லோரும் இதில் உலா வருகின்றனர்.

எளிமையான நடையில் எவருக்கும் புரியும் படியான சொற்களைப் போட்டு, அதில் எங்கெங்கே இனிமை கலக்கப்பட்டிருக்கிறதென்று பிரித்துப் பார்க்க முடியாத அளவுக்கு மிக நேர்த்தியாக எழுதும் வல்லமையை இவருக்கு கலைவாணி வாரி வழங்கியிருக்கிறார். ஒரு பெரிய க்ஷேத்ராடனம் செய்ததைப் போன்ற மனநிறைவு இந்நூலைப் படித்து முடிக்கும்போது ஒவ்வொருவருக்கும் வரும். இல்லத்தில் இந்நூல் இருப்பதே புண்ணியம். பெருமை. பக்திச் சுரங்கமான இந்நூல் ஆன்மீகப் பொக்கிஷம் என்றால் அது மிகையாகாது. உங்கள் ஆதரவொன்றே அவருக்கு நீங்கள் தரும் பரிசாகும். ஆன்மீக மணமும், பக்திப்பெருக்கும், கதைச்சுவையும் நிறைந்துள்ள இந்நூலை அனைவரும் வாங்கிப் படித்து ஸ்ரீபாண்டுரங்கனின் பேரருளைப் பெற வேண்டுமென வாழ்த்தி பெருமகிழ்ச்சியுடன் இந்நூலை சமர்ப்பிக்கிறோம்.

— பதிப்பகத்தார்

அணிந்துரை

Sri Yoga Anjeneya Sakthi Peedam (Regd. Trust)

Swamy Kannan Battachariya

Vasthu, Astrology, Numerology

New No.175, Old No. 83, Venkatarangam Street,
(Near VIVEKANANDAR ILLAM BUS DEPOT)
Triplicane, Chennai - 600 005. Ph 044-2844 1820, 2844 4132

Ref. திரும் நன் 6கணி. Date...31...5...2003

பகவானின் பெருமையை ஆயிரம் நாவுள்ள ஆதிசேஷனாலும் சொல்லி முடிக்க இயலாது. கலியுகத்தில் அர்ச்சாவதாரியாய் எழுந்தருளி எம்பெருமான் எல்லோரையும் ரக்ஷிக்கிறார். அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது என்பார்கள். மனித பிறவி எடுத்து இறைவனை நினைக்காத நாட்கள் அனைத்தும் வீணே. மற்ற யுகங்களில் கடின தபசால் பெற வேண்டிய எம்பெருமான் திருவடியை கலியுகத்தில் நாம சங்கீர்த்தனத்தால் அடைய முடியும்.

பகவானின் பெருமையை இனம், மொழி கடந்து உணர்ந்த பக்தர்களின் பெருமையை, அருமையை ஆங்காங்கே **'மஹா பக்த விஜயம் என்னும் பாண்டுரங்கன் மகிமை'** என்னும் இந்நூலில் காண முடிகிறது. குயவர் குலத்தில் பிறந்த கூபகும்பர் மற்றும் சைதன்ய மஹாபிரபு, திரிரோசன தாஸர் துக்காராம் துளசிராம் வரை பலவிதமான பாண்டுரங்க பக்தர்களைக் காண முடிகிறது. எந்தத் தொழில் செய்தாலும் பகவான் நாமாவை மனம் உருகி சொல்பவர்கள் அவன் அருளை அடைவார்கள் என்பது பக்த விஜயத்தில் ஆங்காங்கே காண முடிகிறது.

உடலை வருத்தி தபஸ் செய்வதோ, மனதை வருத்துவதோ எதுவும் இல்லாமல் மனம் உருகி பாண்டுரங்கன் பெயர் சொன்ன மாத்திரத்தில் எல்லா அற்புதங்களும் நிகழ்வதைக் காண முடிகிறது.

நல்ல விஷயங்களை ஜனங்களுக்கு சொல்ல வேண்டும். அதே நோரத்தில் சொல்லும் விஷயம் மனதில் பதியுமாறு, எளிமையாகவும் இருக்க வேண்டும்.

அந்த முறையில் அற்புதமாக **'மஹா பக்தவிஜயம் என்னும் பாண்டுரங்கன் மஹிமை'**யை ஆசிரியர் **ஆர். பொன்னம்மாள்** நன்றாக எழுதியுள்ளார். படிக்கும் பொழுதே கண்ணெதிரே அந்த நிகழ்வுகள் நமக்கு நடப்பது போல் தெரிகிறது. பக்த விஜயத்தின் சில நிகழ்வுகள் வேறு சில புத்தகங்களில் ஒரு வேளை சிறிய மாற்றத்துடன் இருக்கலாம். இந்த புத்தகத்தை படிக்கும் பொழுது பகவான் மீது நம்பிக்கையும், பக்தியும், மக்களுக்கு ஏற்படும் என்பதில் சந்தேகம் இல்லை. **கிரி டிரேடிங் ஏஜென்ஸி பிரைவேட் லிமிடெட்** நிறுவனத்தினர் வழக்கம் போல் பக்த ஜனங்களுக்கு ஒரு வைரத்தை வழங்கி யுள்ளார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அவன் அருளாலே அவன் தாள் வணங்குவோம்.

1. "ஸ்ரீ புண்டரீகன்"

'அன்னையும், தந்தையும் முன்னறி தெய்வம்' என்று ஆரம்பக் கல்வி கற்கிறோம் நாம். இதை சுத்தமாக மறந்தவன் புண்டரீகன். தந்தை சாத்தகியையும், தாய் ஜன்னுவையும் பாடாய் படுத்தி வைத்தான். ஒரேபிள்ளை என்பதால் பொறுத்து வந்தனர்.

நீங்கள் உங்கள் பெற்றோரைப் பற்றி அலட்சியமாகப் பேசினால், அவமரியாதையாக நடந்து கொண்டால் மற்றவர்கள் அவர்களை மதிப் பார்களா?

புண்டரீகன் செய்த அலட்சியம் அவன் மனைவிக்கு சௌகரிய மாகிவிட்டது. அவள் புண்டரீகன் வீட்டிலில்லாத நேரங்களில் மாமனார், ாமியாரைக் கொடுமைப்படுத்தத் தொடங்கினாள்.

பாவம், அந்த வயோதிகர்களின் நிலை மத்தளமாகிவிட்டது. இரண்டு பக்கமும் இடி... நொந்து போனார்கள்.

ஊதாரித் தனமாய் செலவிட்டான் புண்டரீகன். பொறுப்பாய் பொருள் திரட்டினானில்லை. கெட்ட பழக்கங்களே உருவானான். மனைவியுப் மாமன் மாமி ஒழிந்தால் தனிக்காட்டு ராணியாக இருக்கலாமென்று கணவனிடம் அடிக்கடி அவர்களைப்பற்றி கோள் மூட்டினாள். மனைவியின் பேச்சை நம்பி பெற்றவர்களைத் திட்டினான் புண்டரீகன்.

"நீங்கள் ஒழிந்தால் தான் நான் நிம்மதியாய் இருப்பேன்" என்று பலவாறு ஏசினான்.

எத்தனை நாள்தான் ஏச்சையும், பேச்சையும் பொறுக்க முடியும்? தங்க ஊசியே ஆனாலும் கண்ணில் குத்தினால் வலிக்கத் தானே செய்யும்?

குஞ்சுக்கு இறக்கை முளைத்த பின் தாய்ப்பறவையின் உதவி அதற்குத் தேவை இல்லை. இனி நாம் தேட வேண்டியது புண்ணியமே" என பெரியவர்கள் இருவரும் முடிவு கட்டினர். அந்த சமயம் பஜனை கோஷ்டி ஒன்று அந்த ஊருக்கு வந்தது. அவர்கள் பஜனை செய்து கொண்டே தங்கும் ஊர்களில் உஞ்ச விருத்தி எடுத்து சாப்பிட்டு, காசிக்குப் போவதாகப் புறப்பட்டனர்.

சாத்தகியின் தவ வாழ்க்கையை அறிந்து அங்கு தங்கலாமென வந்தனர். அவர்கள், மகனாலும், மருமகளாலும் சாத்தகி படும் வேதனையை அறிந்து சாத்தகியையும், ஜன்னுவையும் தங்களுடன் அழைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டனர்.

மருமகள் விட்டது தொல்லை என அக மகிழ்ந்தாள். தட்டிக் கேட்க ஆளில்லாமல் போனதால் புண்டரீகனும் ஆனந்தப்பட்டான்.



அவனுக்குப் பிடித்தமானவர்களை வீட்டிற்கே வரவழைத்தான். நடனமும், பாட்டும், கேளிக்கையும், கொண்டாட்டமுமாக வீடே அமர்க்களப்பட்டது. புண்டரீகன் மனைவியை லட்சியம் செய்வதே இல்லை.

அப்போது தான் தன் தவறை உணர்ந்தாள் மருமகள். மாமன் மாமியை வதை செய்த பாவம் என உணர்ந்து வேதனைப்பட்டாள். புத்தி சொல்லி கணவரைத் திருத்தாததின் பலனை அனுபவித்தாள்.

ஒதுக்கப்பட்ட பிறகுதான், அவர்களும் இப்படித் தானே துன்புற்றிருப் பார்கள் என எண்ணி வருந்தினாள். மறுபடி அவர்களை சந்தித்து அவர்கள் மனம் போல் நடந்து கொள்ள வேண்டும் என தீர்மானித்தாள்.

பொருள் கரைந்ததும் நண்பர்கள் ஒவ்வொருவராகப் பிரிந்தனர். கூட்டம் கரைந்தது. இதுதான் சமயமென்று “காசிக்குப் போக எனக்கு வெகு நாளாய் ஆசை” எனத் தளுக்கினாள் புண்டரீகன் மனைவி.

புண்டரீகனுக்குத்தான் இப்போது நண்பர்கள் இல்லையே மனைவி சொற்படி ஒப்புக்கொண்டான். இரண்டு குதிரைகளில் புறப்பட்டனர்.

வழியில் பெற்றோரைக்கண்டான் மருமகள். அவர்களையுப் குதிரையில் ஏற்றிக் கொள்ளும்படி எத்தனையோ சொல்லிப் பார்த்தாள் புண்டரீகன் கேட்கவில்லை.

“கிழடுகளுக்கு குதிரையென்ன கேடு... அந்த கோஷ்டிதான் சரி” என்று தூக்கி எறிந்து பேசிவிட்டு குதிரையை வேறு வழியில் திருப்பி விட்டான்.

பாவம்... அவள் என்ன செய்ய முடியும்? கணவனைப் பின் தொடர்ந்தாள்.

அன்றிரவு அவர்கள் ஒரு சத்திரத்தில் தங்கினர். அருகில் ஒரு ஆசிரமம். அங்கு சடாமுடி தரித்த ஒரு முனிவர்.

‘பாதை விலகி வந்து விட்டோமே... காசிக்கு எப்படிச்செல்ல வேண்டும் என்று தெரிந்து கொள்வோம்’ என அவரை அணுகிக்கேட்டான் புண்டரீகன்.

அவரோ “காசியைப் பற்றி எனக்கொன்றும் தெரியாது” எனக் கூறி விட்டார்.

புண்டரீகனுக்கு ஒரே வெறுப்பு.

“காசியைப் பற்றித் தெரிந்து கொள்ளாத நீரும் ஒரு முனிவரா? கங்கையில் நீராடாமல் நீர்தவம் செய்து என்ன பலன்?” என்று பலவாறு இகழ்ந்து பேசினான். முனிவர் ஏதும் பதில் பேசவில்லை.

விடிகாலைப்பொழுது; புண்டரீகன் மனைவி அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தாள். ஏனோ புண்டரீகனுக்கு தூக்கம் வரவில்லை. புரண்டு படுத்தான். அப்போது எதிரிலிருந்த ஆசிரமத்தில் கோரமான முகமுடைய மூன்று பெண்கள் நுழைந்தனர். ஒருத்தி வாசலில் நீர் தெளித்தாள். மற்றொருத்தி விளக்குமாறால் பெருக்கினாள். இன்னொருத்தி கோலமிட்டாள். எல்லோருமாகப் பூப்பறித்தனர். இப்படியாக ஆசிரம வேலைகளை எறும்புபோல் சுறுசுறுப்பாக அவர்கள் செய்வதை புண்டரீகன் வியப்போடு பார்த்தான்.

வேலை முடிந்து அவர்கள் குடிசைக்கு வெளியே வந்த போதோ அவனுக்கு வியப்புக்கு மேல் வியப்பு கண்ணைப் பறிக்கும் வண்ணப் பட்டாடைகளுடன், ஜொலிக்கும் நகைகளுடன், அழகு சொட்டும் புன்னகை பூத்த முகத்துடன் வெளிவந்தனர்.

புண்டரீகன் ஓடிப் போனான். அவர்களை வழி மறித்து நின்று "நீங்கள் யார்? இந்த அசட்டு முனிவரின் குடிலுக்கு வேலை செய்ய வந்த மர்மம் என்ன? விகாரமாக நீங்கள் வந்த ரகசியத்தை சொல்ல வேண்டும்" என்று கேட்டான்.

அவர்களில் ஒருத்தி "புண்டரீகா, நான் கங்கை; இவர்கள் யமுனா, சரஸ்வதி. தினந்தோறும் எங்களில் நீராடும் மக்கள் பாபங்களை எங்களிடம் கழிக்கிறார்கள். அந்த பாபங்களின் பலன் எங்கள் உருவம் கறுத்து முகம் கோரமாகி விடுகிறது. எங்கள் பாபங்கள் தீர, மறுபடி புண்ணியம் சேர்க்க இம்முனிவரது குடிலுக்கு வந்து சேவை செய் கின்றோம். போதுமா? வழி விடு" என்றாள்.

புண்டரீகனுக்கு ஒரே திகைப்பு. கங்கை தன் பெயரைச் சொல்லி அழைத்தது. காசியையே அறியாத முனிவரிடம் பாபம் நீங்க புண்ணிய நதிகள் மனித உருவத்தில் வந்து சேவை செய்வதாவது!

"உங்கள் பாவங்களே போகும் அளவு அவர் செய்த புண்ணிய காரி யத்தைச் சொல்லி விட்டுப் போங்கள்" என்றான்.

கங்காதேவி புன்முறுவலுடன் "பெற்றோரைத் தெய்வமாக மதித்தார். அவர்கள் மீது ஈ உட்காரவும் சம்மதிக்கமாட்டார். ஆயிரம் ஹோமங்களும், லட்சம் தானங்களும், கோடி தீர்த்த யாத்திரையும் அதற்கு ஈடாகுமா?"

என்றாள். புண்டரீகன் தவித்தான், துடித்தான். தான் பெற்றோரைப் படுத்திய கொடுமைகள் அவன் முன் நின்று பயமுறுத்தின.

யமுனை "அடே, புண்டரீகா, நீ முன் செய்த புண்ணியம் இம்முனிவரின் தரிசனம் உனக்குக் கிடைத்தது" என்றாள்.

புண்டரீகன் தடாலென்று அவர்கள் காலில் விழுந்தான்.

"என்னை மன்னித்து நல்வழி காட்ட வேண்டும்" என கதறி அழுதான். சரஸ்வதி "புண்டரீகா, எங்கள் கால்களில் விழுவதால் எந்த லாபமும் இல்லை. பாபங்களில் கொடியது பெற்றோரை அவமதிப்பது. அலட்சியம் செய்து துரத்துவது. அதற்குப் பரிகாரம் அவர்களை எப்பாடு

பட்டாகிலும் கண்டு பிடித்துத் தொண்டுசெய்" எனக் கூறினாள். உடனே மூவரும் மறைந்து விட்டனர்.

பெற்றோர் பாதம் வலிக்க நடந்து செல்கையில் தான் குதிரை மீது ஒய்யாரமாக சவாரி செய்ததை நினைத்தான். அவர்கள் மனம் வருந்தி

பட்டினி கிடந்த சமயம் தான் விருந்து உண்டதை எண்ணி வருந்தினான். அவர்கள் உறங்காமல் கவலையோடு விழித்திருக்கையில் தான் உல்லாசமாக இருந்ததை எண்ணி நொந்து கொண்டான்.

இதற்குள் பொழுது நன்றாக விடிந்துவிட்டது. மனைவியை எழுப்பி நடந்த சமாசாரங்களைக் கூறினான். முனிவரை வணங்கி விடைபெற்றுக் கொண்டு தாய் தந்தையரைத் தேடிப்புறப்பட்டான்.

'முயற்சி திருவினையாக்கும்' என்ற பழமொழி பொய்க்குமா? பெற்றோரைக் கண்டு பிடித்துவிட்டான். பாதம் பணிந்தான். தன் குறைகளை மன்னிக்கும்படி கூறிக்கதறி அழுதான்.

பழம் நழுவிப் பாலில் விழுந்தது போக, அது கையிலும் வந்தால் கேட்க வேண்டுமா? மகன் திருந்தினால் போதும் என்று நினைத்திருந்த வயோதிகத் தம்பதியர் அவன் பாசமாக திரும்பி வந்ததை எண்ணி பூரித்தனர்.

ஒரு புறம் பீமா நதி. ஊர் திண்டிரவனம். அங்கே குடில் ஒன்றை அமைத்துக் கொண்டு பெற்றோர் மனம் கோணாமல் இத்தனை ஆண்டு காலமும் 'பாக்கி வைத்ததை வட்டியும், முதலுமாய் செலுத்துபவன் போல் பணி செய்யலானான்.

பெற்றவர் விரும்பிய ஆலயங்களுக்கு அழைத்துச் சென்றான். அவர்களை புண்ணிய தீர்த்தங்களில் நீராட வைத்தான். மனம் நிறைந்த அவர்கள் வாழ்த்துக்களால் மகிழ்ச்சியோடு காலம் கழித்தான்.

ஒரு நாள் தந்தைக்கு புண்டரீகனும், ஜன்னு அம்மையாருக்கு அவன் மனைவியும் கால்பிடித்துக் கொண்டிருந்தனர்.

அந்த நேரம் அவனது பாசப் பணிவிடையின் தீவிரத்தை சோதிக்க எண்ணிய மாயவன், நீலமணி வண்ணனாக, மார்பில் மாலை, இடையில் பட்டாடை, கால்களில் தங்கச் சலங்கை சப்திக்கப் பிரசன்னமானார்.

புண்டரீகன் பக்தியில் மெய் மறந்தான். கண்ணன் மெல்ல அருகில் வந்து 'புண்டரீகா' என அழைத்தார்.

புண்டரீகன் அசைந்தாலும் தந்தையார் உறக்கம் பங்கப்படும் என்று அருகிலிருந்த செங்கல்லைத் தூக்கிப்போட்டு "கண்ணா, இதில் சற்று

இளைப்பாறும். பெற்றோர் நித்திரை நீங்கி எழுந்ததும் வருகிறேன்” என்றான்.

பெற்றவரின் துயர் துடைக்க கம்ஸனை வதம் செய்த கோபாலன், புன்முறுவலோடு செங்கல்லின் மீது ஏறி நின்று தாமதித்தார்.

இந்திரனே அங்கு செங்கல்லாகக் கிடந்தான். விருத்திராசுரனை வஜ்ஜிராயுதத்தால் வதைத்ததால் அவன் சாபத்தால் அங்கு கிடந்தான். பகவானின் பாதஸ்பரிசம் பட்டதும் சாப விமோசனம் பெற்று கோவிந்தனைத்துதித்து சுவர்க்கம் சென்றான்.

இதற்குள் புண்டரீகனின் பெற்றோரும் உறக்கம் தெளிந்து எழுந்தனர். விட்டலனின் தரிசனம் கண்டு எழுந்து வந்தனர். தங்கள் மைந்தனுக்காக பகவானே காத்திருப்பதை எண்ணி உள்ளம் நெகிழ்ந்தனர். ஆனந்த பரவசமாகி அவனைத் துதித்தனர்.

இறைவன் “புண்டரீகா, உனக்கு சகாயம் செய்ய வந்திருக்கிறேன் என்ன வேண்டுமோ கேள்” என்றார் பார்த்தசாரதி. புண்டரீகன் தனக்கென்று பொன்னோ பொருளோ கேட்க வில்லை. பின் என்னதான் கேட்டான்?

“ஆண்டவனே எப்போதும் இவ்விடத்திலேயே கோயில் கொண் டிருக்க வேண்டும். கங்கையிலும் புனிதமானதாய் இந்த பீமாநதி நீராடுவோரின் பாபங்களைப் போக்க வேண்டும். நீர் எனக்குக் காட்சி அளித்ததின் அடையாளமாக இந்த இடம் என் பெயரால் விளங்க வேண்டும். அடியார்க்கு எளியவனாய் நீ அருள் செய்ய வேண்டும்” என வேண்டினான்.

நாராயணன் “புண்டரீகா, நீ போட்டபடி ஒற்றைச் செங்கல்லில் ருக்மணியோடு நான் நின்றிருக்கிறேன். பீமனைப் போல் அட்டகாசமாய் இரைச்சலோடு ஓடும் இந்நதி அமைதியாய் ஓடும். ஆனால் நேராகச் செல்லாமல் சந்திரப்பிறை போன்று வளைந்து செல்லும். அதனால் அதற்கு இன்று முதல் சந்திர பாகா என்ற பெயர் வழங்கும். அன்னை தந்தையருக்கு நீ ஆற்றிய தொண்டுக்கு அடையாளமாக இந்த இடம் இன்று முதல் புண்டரீகபுரம் என்று வழங்கப்படும்” என ஆசிர்வதித்து மறைந்தார். புண்டரீகன் மெய்மறந்து மனைவியோடும், பெற்றோரோடும்

பலவிதமாய் இறைவனைப்பாடி பஜனை செய்து வந்தான். பெற்றோரின் கடைசிக் காலம் வரை மாறாத பாசத்துடன் காப்பாற்றினான்.

புண்டரீகபுரம் தான் மக்கள் வாக்கில் மருவி பண்டரீபுரமாயிற்று. பண்டரீபுரத்தில் கோயில் கொண்ட ரங்கநாதன் பாண்டுரங்கனானான் புண்டரீகன் இல்லையென்றால் பண்டரீபுரம் இல்லை. பண்டரீபுரத்தை நமக்குத் தந்தவன் புண்டரீகன். அவனுக்கு பண்டரிநாதன் வசமானதற்குக் காரணம் அவன் மாதுர், பிதுர், பக்தி, இதனால் யாவரும் சேவைசெய்து பெற்றோர் சொல்வதைக் கேட்டு, வாழ்வில் மேன்மை அடைய வேண்டும்.

2. ஸ்ரீ நரசிம்ம மேத்தா

"**வை**ஷ்ணவ ஜனதோ தேநே கஹியே ஜே பீடபராஹி ஜானேரே, பரதுக்கே உபகாரஹரே" இந்தப் பாடலை உங்களில் அநேகர் கேட்டிருக்கலாம். இது நமது காந்தி மகானுக்குப் பிடித்தமான பாடல் என்றும் தெரிந்து வைத்திருப்பீர்கள். இதை இயற்றியவர் யார் தெரியுமா? அவர்தான் ஸ்ரீ நரசிம்ம மேத்தா. இந்தப்பாடலின் அர்த்தம் உங்களில் பலருக்குத் தெரிந்திருக்கலாம்.

'உண்மையான வைஷ்ணவன் (வைஷ்ணவன்–விஷ்ணுவிடம் பக்தி கொண்டவன்) பிறர் துன்பத்தை தனதாகக் கருதித் துடைப்பபவனே' என்ற பொருளங்கிய கவிதை இது. வடநாட்டில் இவர் கவிதைகள் மிகவும் பிரபலம். இவர் தந்தையின் பெயர் பலராம் மேத்தா. பெரும் செல்வந்தர். ஏராளமான சொத்திருந்தும் பேர் சொல்ல ஒரு பிள்ளை இல்லையே என்று ஏங்கினார். பலராமின் தம்பி யமுனாதாஸுக்குத்திருமணமாகி பிள்ளை பிறந்து பள்ளிக்கூடமும் போகிறான் என்னும் போது இவருக்கு நமக்குக் குழந்தை பாக்கியமே கிடையாதோ என்ற கவலை எழுவது இயற்கை தானே

கடவுளை நம்பியவர்களுக்குக் கைகூடாத காரியமும் உண்டோ? நரசிம்ம மூர்த்தியை வழிபட்டார். அவர் அருளால் பிறந்த புதல்வன்தான் நரசிம்ம மேத்தா.

தவமாய் தவம் கிடந்து பெற்ற பிள்ளை என்று பெற்றோர் சீராட்டி வளர்த்தனர். கேட்டபொருள் கேட்ட மறுவிநாடியே, அது நடுராத்திரி யாயிருப்பினும் வரவழைத்துத் தந்தனர். தாய் ஒரு தோளிலும், தந்தை யொருதோளிலுமாக பாதம் தேயாமல் வளர்ந்தான் நரசிம்மன். செல்லமாய் வளர்க்கப்படும் பிள்ளைகள் பொல்லாதவர்களாய் மாறுவது கண்கூடு. அப்படி இல்லாவிட்டால்தான் அதிசயம். உலக வழக்கப்படி துடுக்குப் பையனாக வளர்ந்தான் நரசிம்மன்.

ஒழுங்காகப் படிப்பதில்லை. எப்போதும் விளையாட்டு தான். கோலி ஆடுவான். அல்லது ஊரார் மரத்தில் மாங்காய், வாதாங்கொட்டை அடிப்பான். கூட இருந்த பையன்களை உதைப்பான். குளத்தில் குளிக்கும் பையன்களின் ஆடைகளைத் தண்ணீரில் தூக்கி எறிந்து 'எடுத்துக் கொள்' என கெக்கலி கொட்டுவான். கூட நீராடும் சிறுவர்களின் தலையை ஜலத்தில் அமிழ்த்தி மூச்சு மூட்டச் செய்து, சிரிப்பான். நரசிம்மனைப் பற்றிய ஊரார்ின் புகார்கள் பலராமையும், அவர் மனைவி யையும் தலைகுனிய வைத்தன. அவன் கவலையே பெருங் கவலையாக உருக்கி, பெற்றோர் ஒருவர் பின் ஒருவராய் இறைவனடி சேர்ந்தனர்.



பொறுப்பு சித்தப்பா யமுனாதாஸின் தலையில் விழுந்தது. அவரும் எவ்வளவோ கண்டித்துப் பார்த்தார். முளையில் கிள்ளி எறியாதது வேரோடிப் போகுமல்லவா?

யமுனாதாஸின் பிள்ளைக்குத் திருமணமாயிற்று. வீட்டு நிர்வாகம் மருமகள் கைக்கு வந்தது. அவளுக்கு ஊர் சுற்றும் நரசிம்மன்மேல் ஏக வெறுப்பு.

ஒரு நாள் வீட்டில் யமுனாதாஸோ, அவர் மகனோ இல்லை. வழக்கம் போல் ஒரு பெரும் சண்டையை இழுத்து வந்திருந்தான் நரசிம்மன். "உன்னால் எங்களுக்குப் பெருத்த அவமானம். படிக்காத முட்டாளுக்கு பசி ஒரு கேடா? பட்டினி கிடந்தால்தான் திமிர் அடங்கும்" எனக் கண்டபடி திட்டினாள் அண்ணி.

'சுள்'ளென்று உறைத்தது நரசிம்மனுக்கு. ரோஷத்தோடு கால் போன போக்கில் நடந்தான். நேரம் ஆக ஆக பசி வயிற்றைச் சுண்டியது. தலை சுற்றியது. கண்கள் இருண்டன. கால்கள் நோ வெடுத்தது. திரும்பும் வழியும் தெரியவில்லை. அடர்ந்த மரங்கள், நெருங்கிய புதர்கள் கொண்ட காடு. முட்களும், கற்களும் காலைப் பதம் பார்த்தன. திசை மாறி சுற்றி சுற்றி வந்தான். பூரானும், மரவட்டையும் ஊர்ந்தன. வினோதமான சப்தங்கள். சாக்குருவிகளின் கூக்குரல்.

நரசிம்மனுக்குக் கண்களில் நீர் பெருகியது. தொண்டை உலர்ந்தது. அவன் தான் செய்த துஷ்டத் தனங்களைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்தான். பொன்னான நெஞ்சங்களைப் புண்படுத்திய நிகழ்ச்சிகளை அசை போட்டான். பெற்றவர் மனதை நோகடித்ததை நினைத்தான்.

"படிக்கவும் இல்லாமல், உழைக்கவும் செய்யாமல் ஊரைச் சுற்றினால் யாருக்குத்தான் பிடிக்கும்... மதனி திட்டியதில் குற்றமென்ன?" என எண்ணினான். அழகிய தாமரைக் குளம் ஒன்றைக் கண்டான். வயிறு நிரம்ப நீரை அள்ளிக்குடித்தான். காந்தல் அடங்கிய பின் சுற்றும், முற்றும் பார்த்தான். சூரியன் மறையத் தொடங்கி இருந்தான். இருள் கவிய ஆரம்பித்தது. ஒன்றிரண்டு நட்சத்திரங்கள் மினுக்கியது. இன்னும் சற்று நேரத்தில் இருட்டி விடுமே இரவை எங்கே கழிப்பது? அருகில் முக்கால்வாசி சிதிலமடைந்து செங்கற்கள் நீட்டிக் கொண்டிருந்த ஒரு சிவாலயத்துள் சென்றான்.

சிவலிங்கத்தின் அருகில் கொஞ்சம் வில்வம் இருப்பதைக் கண்டு பகலில் யாரோ பூஜை செய்கிறார்கள் என உணர்ந்து கொண்டான். ஒரு சின்ன மண் அகல் பொட்டுப் போல் எரிந்து கொண்டிருந்தது. ஓநாயும், கரடியும் உலாவும் அந்தக் கானகத்தில் அந்த சிவலிங்கத்தையே தன் துணையாக நினைத்தான்..மனக்கிலேசம் முற்றிலும் அடங்க தந்தை சொல்லிய புராணக் கதைகளை நினைவு கூர்ந்தான்.

நஞ்சை ஊட்டியும், மலைமேலிருந்து கல்லைக்கட்டி கடலில் உருட்டி விட்டும், இதுபோல் பல கொடுமைகளைச் செய்தும் பிரகலாதனுக்குத் துணையாக இருந்தது எது? காட்டிலே தவம் செய்த துருவன் நம்மை விடச் சிறியவன் தானே! சிறுத் தொண்டர் சீராளனை அறுக்கும் போது சிரித்துக்கொண்டிருந்தானாமே அச்சிறுவன்! எல்லாம் கடவுள் செயல். அவனைத் தஞ்ச மடைந்தால் ஆகாத காரியமில்லை. என்னை இங்கு இழுத்து வந்த இந்த சிவனே எனக்குத் துணை" என்ற முடிவுக்கு வந்தான்.

"எனக்கு நல்ல வழி காட்டு; நல்ல புத்தியைக் கொடு" என்ற உறுதியான எண்ணத்துடன் கண்மூடி "ஓம் நமசிவாய, ஓம் நமசிவாய" என ஜபித்துக் கொண்டிருந்தான். கொஞ்ச நேரத்தில் அவனுக்கு உலகமே மறந்து போயிற்று.

தன் கணவனும், மாமனாரும் வரும் வரை யமுனாதாஸின் மருமகள் நிம்மதியாக இருந்தாள். அவர்கள் வந்த பின் நரசிம்மன் கொண்டு வந்த வம்பைப் பற்றி காது மூக்கு ஒட்ட வைத்து சொன்னாள். 'வரட்டும்' என்று கறுவிக் கொண்டிருந்தவர்கள், நேரம் ஆக ஆகப் பதறினர். அமாவாசை கழிந்து நான்கு நாட்களே ஆகி இருந்ததால் கும்மிருட்டு. எங்கே அலைகிறானோ எனப் பதறினார் யமுனாதாஸ். மருமகளும் நடு நடுங்கி மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள்.

ஊர் முழுவதும் தேடினர். ஆறு, குளம், குட்டை, கிணறுகள், வாய்க்கால்கள் ஒன்றும் பாக்கி இல்லை. சொத்துக்கு ஆசைப்பட்டு நரசிம்மனை விரட்டி விட்டதாக ஊரார் ஜாடை பேசினர். ஊர்வாயை மூட உலை மூடி போதுமா? இங்கு இப்படி இருக்க பத்து நாட்கள் பசி, தாகம், இயற்கை உபாதைகள், உணர்வுகள் இன்றி ஜபித்துக் கொண்டிருந்த நரசிம்மனை பௌர்ணமி அன்று நள்ளிரவில் சிவபெருமான்

பிரசன்னராகித் தொட்டார். நரசிம்ம மேத்தா மெய்சிலிர்த்தார். சிவ பெருமான் பிரசன்னமானதை அவரால் நம்பவே முடியவில்லை. ஆனால் எதிரே ஜடாமுடியிலே சந்திரனும், கங்கையும் தளும்ப, புலித்தோலாடை அணிந்து, கையில் சூலத்துடன், பாம்பணிகளுடன் திருவாய் மலர்கின்றாரே. "பெருமாளுக்குச் சேவை செய்யப் பிறந்த நரசிம்மா! உன் தவத்துக்கு மெச்சினோம். அந்த மாலின் தங்கை உமாதேவி மனமகிழ்ந்து உனக்கருள் செய்ய என்னை அனுப்பினாள். எழுந்துவா" என்றபடி முன் நடந்தார்.

பத்து நாட்கள் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தது கால்கள் மரத்திருந்தன. கைகளில் சுரத்தே இல்லை. சுயநினைவடைந்தபின் உணர்வுகள் வருத்தின. துவண்ட நிலையில் ஹரனைப்பின் தொடர்ந்தான் நரசிம்மன். ஒரு இனிய புல்லாங்குழலிசை காற்றில் மிதந்து வந்தது. நடக்க நடக்க அது வலுப்பட்டது. என்ன ஆச்சரியம்! விஸ்தாரமான வெட்ட வெளி... அங்கே கிருஷ்ணன் குழலூத, கோபிகைகள் ஆடிக் கொண்டிருந்

தனர். நரசிம்மன் குழம்பினார். கண்ணன் ஒருவர் தானே? இங்கே ஒவ்வொரு கோபிகாஸ்திரிகளுடனும் ஒரு கண்ணன் இருக்கின்றாரே அது எப்படி? யார் நிஜமான கோபாலன்?

தன் ஐயத்தை சிவபெரும்மானிடம் கேட்டார். சிவபெருமான் "நரசிம்மா, நல்ல வெயில் நேரத்தில் கூரையடியில் பார்த்தால் பல சூரிய பிம்பங்கள் தெரியும். வானத்தில் ஒளி தருபவன் ஒரே பகலவன்தான். பிரதி பிம்பங்கள் துளைகள் இருக்குமிடமெல்லாம் தெரியும்.

அந்த பெண்கள் ஒவ்வொருவருக்கும் கண்ணன் மேல் பிரேமை. ஒவ்வொருத்தியும் கண்ணன் தனக்கே சொந்தம். தன்னுடனேயே இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறாள். மனதில் கபடம் என்ற அடைப்பு இல்லாமல் கெஞ்சுகின்றாள். சூதுவாது என்ற திரை இல்லை. அவர்களை திருப்தி செய்ய கிருஷ்ணன் பல ரூபங்களாய் காட்சி தருகின்றார். நீ வேண்டினால் உன்னருகிலும் வந்து அருள்புரிவார்" என விளக்கினார்.

அவ்வளவு தான். நரசிம்மன் 'கண்ணா, கோபாலா' என ஜபிக்க ஆரம்பித்துவிட்டான். அடுத்த நிமிடமே வேணுநாதன் நரசிம்மன் முன் பிரசன்னமானான். நெடுஞ்சாண் கிடையாக அவர் கால்களில் விழுந்தான் சிறுவன்.

கண்ணன் அவனைத்தூக்கி நிறுத்தி "நீ கண்ட பிருந்தாவனக் காட்சியைப் பாடலாகப் பாடு" என்று பணித்தார். நரசிம்மன் தவிப்புடன் "பள்ளிக்கு ஒழுங்காகச் சென்று முறையாகக் கல்வி கற்காத மூடன் நான். இருப்பதோ அடர்ந்த காடு... இதில் கவிதைபாடுவதெப்படி?" என்றான்.

கோவிந்தன் தன் மார்பிலிருந்த துளசி மாலையிலிருந்து துளசி தளங்களைப்பிய்த்து நரசிம்மன் வாயில் போட்டு "உன் வாக்கிலே அருட்கவி பிறக்கும்" எனச் சொல்லி மறைந்து போனான். பிருந்தாவனக் காட்சிகளும் மறைந்தன.

சிவனும் மறைந்து விடுவாரோ என்று நரசிம்மனுக்கு அச்சம். அவர் கையை கெட்டியாகப் பற்றிக் கொண்டான். அவர் மீது ஒரு பாட்டுப் பாடினான்.

அர்த்த நாரீஸ்வரன் மகிழ்ந்து "குழந்தாய்! உன் கவிதைகள் சூரிய சந்திரரும் வானும், நிலமும் உள்ளவரை புகழ்பெற்று விளங்கும்" என

வரமளித்து அந்தர்தியானமாகிவிட்டார். நரசிம்மனுக்கு எல்லாம் கனவு போலிருந்தது. பக்திக்குப் பலன் கிடைத்த உற்சாகம், மறுபடி அந்த சிவாலயத்திற்கே வந்து சிவ நாமங்களைக் கடுமையாக உச்சரித்த வாறிருந்தான். மேலும் ஐந்து நாட்கள் கழிந்தன. மனதில் இருந்த வலு உடலுக்கு இல்லை. சதையெல்லாம் சுருங்கி, கன்னமெல்லாம் ஒட்டி எலும்பும் தோலுமாய் இருந்தான். ஒரு நாள் மாடுமேய்க்கும் பையன் ஒருவன் இதைக் கண்டான். தன் நண்பர்களிடம் நடுக்காட்டில் கண்ட அதிசயத்தைக் கூறினான்.

யமுனாதாஸின் செவிகளுக்கும் இந்தச் செய்தி எட்டியது. ஓடினார் காட்டிற்கு. வெளவால்களும், அணில்களும் விளையாடும் ஆலயத்தில் அண்ணன் மகனைக் கண்டு கட்டி அணைத்தார். விழித்தெழுந்த மேத்தா கண்ணன் மீது அற்புதமான பாடலொன்று பாடினார். மலர்களும் நாணும் மென்மையான குரலில் தேனினும் இனிய பாடலைக் கேட்டதும் திகைத்தார் யமுனாதாஸ்.

படிக்காத நரசிம்மன் பாட்டியற்றும் விந்தையை எண்ணி பிரமித்தார். நடந்தவைகளை ஒன்றுவிடாமல் கூறினான் நரசிம்மன். பரமனருள் பெற்ற பாலகனை புறக்கணித்தால் பாவம் நம்மை சும்மா விடாதென்று அஞ்சினார். "கண்ணே, இங்கிருந்தால் காட்டுவாசிகளின் கண்ணில் பட்டு நரபலியிடக் கொண்டு போய் விடுவார்கள். உன்னை இனி யாரும் எதுவும் சொல்லாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்" என வருந்தி அழைத்தார். நரசிம்மனுக்கு அதில் இஷ்டமில்லை.

"எனக்கு யார் மீதும் கோபமோ, வருத்தமோ கிடையாது. அண்ணியின் வெறுப்பான சொற்கள்தான் என் தெய்வ தரிசனங்களுக்கும், புலமைக் கும் காரணம். அதற்காக அவர்களுக்கு நான் நன்றி செலுத்துகின்றேன். மறுபடி பந்தங்களில் உழல எனக்கு ஆசையில்லை. என் சொத்து, பணம், பந்தம் எல்லாம் இந்த இறைவன் தான்" என தீர்மானமாகச் சொல்லி விட்டார்.

யமுனாதாஸ் திகைத்தார். சிவலிங்கத்தருகில் சென்று "எல்லாம் உன் திருவிளையாடல். ஊர் பழிச் சொல்லுக்கு ஆளாக நான் விரும்பவில்லை. நரசிம்மனை மனம் மாற்றி என்னோடு அனுப்பி வைக்காவிடில் உன் காலடியிலேயே இறக்கும்வரை கிடப்பேன்" எனப் புலம்பினார்.

திடீரென்று ஒரு குரல். "நரசிம்மா, மனிதராய் பிறந்தவர்களுக்கு சில கடமைகள் உண்டு. யமுனாதாஸுடன் வீட்டுக்குப்போ. அவர் சொற்படி கேள். உடல் திடமாக இருந்தால்தான் இறைப்பணி செய்ய முடியும். திருமணமும், இல்லறக் கடமைகளும், உழைப்பும் பக்திக்குத் தடை அல்ல" என்றது.

இறைவனை வணங்கி சிற்றப்பாவுடன் வீடு திரும்பினார் நரசிம்ம மேத்தா.

இப்போது பல ஆண்டுகள் கழிந்து விட்டன. நரசிம்ம மேத்தாவின் மகனுக்கே திருமண வயதாகிவிட்டது. அவன் புத்திசாலி; அழகன். அவனுக்கு ஒரு அழகிய தங்கை. கணவன் மனமறிந்து நடக்கும் மனைவி. இனிய இல்வாழ்க்கை. எப்போதும் கண்ணன் நாமாவளி; பஜனை.

நரசிம்ம மேத்தாவின் பாடலில் பிரேமை கொண்டவர்கள் அநேகர். அவர்களில் முக்கியமானவர் கிருஷ்ணபட்டர். நரசிம்ம மேத்தா வாசம் செய்த ஊர் புராதன கடம் என்ற சிற்றூர். அதன் அருகில் உள்ள சிறு நகரம் சியாமளா. அங்கே திருபுராந்தகர் என்ற செல்வந்தர். அவருடைய மகள் அழகிய குணவதி.

கிருஷ்ணபட்டர் திரிபுராந்தகரின் நண்பர். ஊருக்கே பெரிய மனிதர். மேத்தாவின் மகனுக்கு திரிபுராந்தகரின் மகள் பொருத்தமான ஜோடி அவளை எப்படியாவது மேத்தாவின் மகனுக்கு திருமணம் முடிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்.

மேத்தா இத்தனை ஆண்டுகளாகக் குடும்பம் நடத்தவும், பஜனை, பாகவத உபசாரம், விருந்தோம்பல் என்றும் பெருமளவு செல்வத்தைக் கரைத்திருந்தார்.

திருபுராந்தகரோ மகளை பணக்கார இடத்தில் கொடுக்கத் திட்டமிட்டி ருந்தார். இதில் கிருஷ்ணபட்டரின் எண்ணம் நிறைவேறுவதெப்படி? வெறும் புத்திசாலித்தனமும், குணமும், அழகும் சம்பந்தத்தைக் கூட்டி வைக்குமா?

துணிந்து கிருஷ்ணபட்டர் மேத்தாவின் மகனுக்காகப் பெண் கேட்டார். "என் கௌரவத்திற்கேற்ப சீர் செய்தால் சரி" என்று பதில் சொன்னார் திரிபுராந்தகர். ஏழை மேத்தாவால் சீர் செய்ய முடியாது என்பது அவர்

முடிவு. கிருஷ்ணபட்டர் கிருஷ்ண விக்ரகத்திடம் சென்று "உன் பக்தன் மேத்தா. அவனை இல்லறத்திலும் தள்ளி பாகவத கைங்கரியத்திலேயே சொத்தையும் கரைத்துவிட்டாய். உன்மீது பாரத்தைப் போட்டுவிட்டு நான் செயலில் இறங்குகிறேன். இதிலுள்ள மான அவமானங்கள் உன்னையே சேரும்" என உருக்கமாக வேண்டிக்கொண்டார்.

பின் நரசிம்ம மேத்தாவிடம் சென்று "திரிபுராந்தகர் மகளை உன் மகனுக்குப் பேசி இருக்கிறேன். உனக்கொன்றும் ஆட்சேபணை இல்லையே?" என்றார்.

மேத்தா திகைத்தார். "அவர் செல்வத்தில் குபேரன்; நான் குசேலன். தகாத ஆசை என்றும் அபாயம்; வேண்டா"மென மறுத்தார்.

"உம்மிடமிருக்கும் சொத்து பகவத் பக்தி; புலமை. நல்ல குணம். ஒற்றுமையான குடும்பம். உமது புதல்வனும் எதில் குறைச்சல்? தேடி வரும் ஸ்ரீ தேவியை எட்டி உதைப்பது மட்டித்தனமல்லவா?" எனப்பலவாறு எடுத்துரைத்தபின் அரை மனதாக சம்மதித்தார் மேத்தா.

கிருஷ்ண பட்டர் உற்சாகமாக சியாமளா நகரத்திற்குப் போனார். திரிபுராந்தகர் கேட்ட சீர் வரிசைகளுக்கு மேத்தா ஒப்புக் கொண்டதாகத் தெரிவித்தார். பஞ்சாங்கப் புரோகிதரை வைத்து நாள் குறித்து விட்டுத் திரும்பினார். திரிபுராந்தகருக்கு கிருஷ்ண பட்டரின் செயல்கள் கோமாளிக் கூத்தாகத் தெரிந்ததால், அவர் திருமணத்திற்கான எந்த ஏற்பாடும் செய்யவில்லை.

கிருஷ்ணபட்டர் மேத்தாவிடம் நாளும், நேரமும் சொல்லி பந்து ஜனங்களுடனும், மணமகனுடனும் புறப்பட்டு வரும்படி சொல்லி விட்டார்.

குறித்த நாளில் மேத்தா கால் நடையாகவே குடும்பத்தாருடனும், உறவினருடனும் புறப்பட்டார். வழிப்பயணம் தெரியாதிருக்க தம்பூராவும், சிப்ளாக்கட்டையும் கொண்டு பஜனை செய்து கொண்டே நடந்தனர்.

மேத்தா சூழ்நிலையை மறந்தார். மகனுக்கு விவாகம் என்பதை மறந்தார். ஆவேசமாக 'விட்டல விட்டல பாண்டுரங்க விட்டல" எனப்பாடி வந்தார். பஜனை கோஷ்டி என நினைத்து ஆங்காங்கே உள்ளவர்கள் சேர்ந்து கொண்டனர்.

கிருஷ்ண பட்டரோ கிருஷ்ண விக்ரத்தின் காலடியில் கதறிக் கொண் டிருந்தார்.

சியாமளா நகரத்து எல்லைக்கு வரும்போது ஒரு வினோதமான கூட்டம் அவர்களுக்கு முன் சென்றது. முதலில் பாண்டு வாத்தியம்; அடுத்து மேளக்கச்சேரி. அதனை அடுத்து காதில் வைரக்கடுக்கன்; குண்டலம். கைகளில் வைரக் கங்கணம்; பட்டுப் பீதாம்பரம்; தலையில் அழகிய ஜரிகைத் தலைப்பாகையுடன் ஒரு கணக்குப்பிள்ளை கூட்டத்தினரை அதட்டி உருட்டி ஒழுங்கு படுத்தினார்.

"ஏய், ருக்மா.... முகூர்த்தப் புடவை, திருமாங்கல்யம் உள்ள தட்டு கீழே விழுந்தால் சகுனத்தடை... நேராகப் பிடி... யாரங்கே... பன்னீர் செம்பு வைத்திருப்பவர்கள் தெளித்துக் கொண்டே வரலாமே... பூசணிக்காய் பெண் வீட்டு வாசலில் மாப்பிள்ளைக்கு திருஷ்டி கழித்து உடைக்க... இங்கேயே உடைத்து விடுவீர்கள் போலிருக்கிறதே சந்தனக் கும்பா ஐம்பது பவுன்.... திருடர்கள் ஜாக்ரதை... பெண்ணுக்கு வைர நகைகள் வைத்திருக்கும் பெட்டி யாரிடம் இருக்கிறது... சரஸ்வதியிடமா...

பத்திரம்" இப்படி ஒவ்வொரிவரிடமும் ஜபர்தஸ்து செய்து கொண்டி ருந்தான்.

மேத்தாவும், அவர் குடும்பத்தினரும் இது ஒன்றையும் கவனிக்க வில்லை. ஆனால் சுற்றி இருந்தவர்களுக்கு, வேடிக்கை பார்த்தவர் களுக்கு கவனம் சிதறியது. "நீங்கள் யார்? யார் வீட்டுத் திருமணத்திற்கு இந்தச் சீர் வரிசை போகிறது" என ஆர்வத்துடன் விசாரித்தனர்.

"என்ன இப்படிக் கேட்கிறீர்கள்? மேத்தாவின் மகனுக்குத் திருமணமாயிற்றே திரிபுராந்தகர் மகளைப் பேசி இருக்கிறார்களே... அதற்காகத்தான் பண்டரி புரத்திலிருந்து வருகிறோம்; நான் அவர் கடை கணக்குப்பிள்ளை; என் பெயர் நந்த குமார்" என்றார் கணக்குப் பிள்ளை.

"பண்டரி புரத்தில் அவருக்கு வேண்டியவர் யார் இருக்கிறார்கள்?" என்று வேறொருவர் ஆர்வத்தோடு வினவ,

"பண்டரி புரத்தில் அவர் கடை தான் பெரிய கடை. தினம் ஆயிரக் கணக்கில் வியாபாரம்... நாங்களெல்லாம் அவருடைய காரியஸ்தர்கள் தான்... அடேய்... கொஞ்சம் பார்க்காவிட்டால் போச்சே... பழக்குலையைத் தூக்கிப்பிடி... பழம் உலைந்து போகாதா...." கணக்குப்பிள்ளை மறுபடி ஜபர்தஸ்து செய்யப் போய்விட்டார்.

ஊரார் "இவ்வளவு செல்வமிருந்தும் மேத்தா எத்தனை எளிமையோடு ஒன்றும் இல்லாதவரைப் போல வாழ்கிறார். எல்லாம் பகவான் கிருபை" என அதிசயித்தனர்.

சிவனும், பார்வதியும், நான்முகனும், வாணியும், இந்திரனும் இந்திராணியும் ஜோடி ஜோடியாக சீர் வரிசைகளோடு போவதே கண்கொள்ளாத காட்சியாக இருந்தது ஜனங்கள் வழி நெடுக திறந்த வாய் மூடாதபடி பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் இந்த லீலைகள் எதையும் மேத்தா உணரவில்லை.

ஊர்வலம் திரிபுராந்தகர் வீட்டை அடைந்தது. சீர் வரிசைகளை வீடு கொள்ளாமல் தேவர் குழாம் கொண்டு இறக்கி விட்டனர். திருபுராந் தகருக்கு மேனியெல்லாம் நடுக்கம். பந்தல் போடவில்லை. வீடெல்லாம் மாக்கோலம் மணக்கவில்லை. சந்தன தாம்பூலாதிகள் எடுத்து வைக்க வில்லை. முகத்தில் அசடு வழிய பிரமித்து நின்றார்.

"நாளைக்குத் திருமணம்... எந்த ஏற்பாட்டையும் காணோமே" கணக்கப் பிள்ளையின் குறும்புத்தனமான குத்தல் இது. கிருஷ்ண பட்டர்தான் சமாதானம் சொல்ல சரியான ஆள் என தீர்மானித்து அவரை அழைத்து வர ஆள் அனுப்பினார் திருபுராந்தகர். செய்தி கேட்ட கிருஷ்ண பட்டர் ஓடோடி வந்தார்.

பகவானை உணர்ந்து கொண்டு நெடுஞ்சாண் கிடையாக காலில் விழுந்தார். மேத்தாவின் பக்தியின் பலத்தை எண்ணி வியந்தார். மாதவன் தன்னை இப்போது வெளிப்படுத்த வேண்டாமென கண்களாலேயே உத்தரவு போட்டார். திரிபுராந்தகரும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். "நன்றாக இருக்கிறது.... நாம் சம்பந்தம் செய்கிறவர்கள். நமக்குள் ஏற்ற தாழ்வு வரலாமா? மாப்பிள்ளை வருவதற்குள் தயாராகிவிடலாம்" என்றபடி திருபுராந்தகரின் ஆட்களையும் சேர்த்துக் கொண்டு வேலை வாங்கலானார் கணக்குப் பிள்ளை.

வாயு ஒரு நொடியில் வீட்டை சுத்தப்படுத்தினான். வருணன் வாசலிலும், விட்டிலும் நீர் தெளித்து மெழுகி துடைத்தான். அக்னி சமையலை கவனித்தான். குபேரன் சந்தனாதி வாசனை திரவியங்களை சித்தப்படுத்தினான். இந்திராணியும், வாணியும், பார்வதியும், ருக்மணியும் வீடு முழுவதும் கோலமிட்டனர். கிருஷ்ணபட்டர் மேற்பார்வையில் வாசலில் அழகிய பந்தல் போடப்பட்டது.

எல்லாம் முடிந்த சமயம் மேத்தாவின் பஜனைகோஷ்டி மணமகனுடன் வந்து சேர்ந்தது. திரிபுராந்தகர் எதிர் கொண்டு உபசரித்தார். திருமணம் கோலாகலமாக நடந்தது. விருந்தோ "இப்படி இதுவரை கண்டதில்லை;" என்னும்படி இருந்தது. விவாகம் முடிந்து விடைபெற்றுச் சென்றார் மேத்தா.

சேர்ந்து கொண்ட இடத்திலேயே மறைந்தது பாண்டு வாத்தியமும், கணக்குப் பிள்ளை கோஷ்டியும். மேத்தா கண்களில் நீர் மல்க,

"மனிதர்களின் பாப புண்ணியங்களைக் கணக்குப் போட்டு வாழ்க் கையை நிர்ணயிப்பவன் எனக்குக் கணக்கனாக வந்தானோ... கோவிந்தா, மாதவா, மதுசூதனா முன்னொருமுறை வட்டிப் பணம் கட்ட முடியாமல் தவித்த போது என் மானம் காத்து வட்டிப் பணம் கட்டி விட்டுப்போனாய்... இத்தனை தகுதி எனக்களித்து என்னை கௌரவிக்க

நினைத்தாயே" என பலவாறு போற்றினார். முன்னிலும் பல மடங்கு அவனைத்துதித்து பாடல்கள் இயற்றி பஜித்தார்.

கல்வி அறிவில்லாத ஆட்டிடையனுக்கு காளி நாவில் எழுதி கவியாக்கியதைப் போல, ஊமையாக இருந்த குமர குருபரர் குமரனருளால் பாட்டியற்றியதைப் போல, நரசிம்ம மேத்தா கண்ணனருளால் பாகவத பக்தரானார். பரமன் கிருபைக்கு பாத்திரருமானார். தெய்வத்தை விடாப்பிடியாய் பற்றிக் கொண்டால் ஆகாததும் உண்டோ?

3. ஸ்ரீ ஜய தேவ ஸ்வாமிகள்

பூரி – ஜகந்நாத் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களல்லவா? ஜகந்நாத க்ஷேத்திரத்தில் கண்ணன், அண்ணன் பலராமனுடனும், தங்கை சுபத்திரை யுடனும் வீற்றிருக்கின்றான்.

ஜகந்நாத்துக்கு அருகில் பில்வகாம் என்று ஒரு சிற்றூர். அங்கே நாராயண சாஸ்திரியார் என்று ஒரு மகான். அவர் மனைவியின் பெயர் கமலாபாய்.

அவளுக்குக் குலம் விளங்க ஒரு குழந்தை இல்லையே என்ற ஏக்கம். சதா சர்வதா கண்ணனை வேண்டியது அது ஒன்றே.

ஜகந்நாதரிடம் நாராயண சாஸ்திரியார் "எப்போதும் உன் அருள் வேண்டும். உனக்குப் பணி செய்ய மனத்தையும், உடல் திடத்தையும் கொடு" என்று தான் இறைஞ்சுவார். கண்ணன் குறும்புக்காரனாயிற்றே! ஒரு நாள் இரவு நாராயண சாஸ்திரியாரின் கனவில்தோன்றி "உன் மனைவியின் கோரிக்கை விரைவில் நிறைவேறும்" என்று கூறி மறைந்தான்.

சாஸ்திரியார் ஆனந்த பரவசரானார். கண்ணனின் தோற்றத்தை நினைவுக்கு கொண்டு வந்து மகிழ்ந்தார். மனைவியை எழுப்பி கண்ணனைக் கனவில் கண்ட அதிசயத்தைக் கூறி "உன் கோரிக்கை என்ன? பகவானிடம் எதை வேண்டினாய்?" என ஆவலுடன் கேட்டார்.

கமலாபாய் மகிழ்ச்சியுடன் "ஒரு பெண் வேண்டுவது தாய்மைப் பேற்றைத் தானே? பிதுர் கடன் செய்ய, குலம் விளங்க ஒரு பிள்ளை தா என்று தான் கேட்டேன்" என்றாள்.

நாராயண சாஸ்திரியார் ருத்ராவேசமானார். "என்ன சுயநலம்... அழியாத அவன் புகழ் பாடவேண்டும். எப்போதும் உன் தரிசனம் வேண்டும் என்று கேட்காமல் கேவலம் அழியும் மனிதக் குழந்தைவேண்டும் என்றா கேட்டாய்?" எனப் பலவாறு ஏசினார். மோசம் போனேனே, புத்தி கெட்ட மனைவியால் என, தன்னைத் தானே நொந்து கொண்டு கண்ணீர் சிந்தினார்.

கணவர் மனமறியாமல் மழலையைக் கேட்டது தவறு என கமலாபாயும் வருந்தினாள். ஒருவரோடொருவர் பேசிக் கொள்ளாமல் நிலைதடுமாறித் தவித்தனர்.

அன்றிரவு இறைவன் மறுபடி சாஸ்திரியார் கனவில் தோன்றி, "குழந்தை வரம் கேட்பது கொடிய தவறல்ல... நானே குழந்தையாய் பிறந்து யசோதையையும், தேவகியையும், கௌசல்யையும் மகிழ்விக்க வில்லையா?

உனக்குப்பின் எனக்குப் பணி செய்ய வாரிசு வேண்டாமா? பிதுர்கடன் முடிக்க பிள்ளை வேண்டுமென்று விரும்புவது தவறல்ல... வேத வியாசரே உன்மகனாகப் பிறப்பான். கவலையை விட்டு உன் துணைவியைத் தேற்று" எனக் கூறி மறைந்தார். சாஸ்திரியார் உறக்கம் கலைந்து எழுந்தார். கமலாபாயிடம் கனவைக் கூறி களித்தார்.

வெடித்துக் கிடந்த நிலத்திலே கொட்டிய மழைபோல் நாராயணரின் இல்லத்தில் குழந்தையின் அழுகுரல் பத்து மாதத்தில் கேட்டது. சிப்ளாக்கட்டை, ஜாலரா, மிருதங்க ஒலியுடன் மழலையின் சலங்கை ஒலியும் கலந்து கேட்டது. தந்தையோடு அமர்ந்து தனது குஞ்சு குரலில் பாடினான். பிஞ்சுக்கரங்களால் பஜனை செய்தான்.

இசையிலும், கல்வி, கேள்வியிலும் சிறந்து விளங்கிய ஜயதேவன் வளர்ந்து வாலிபனானான். ஜயதேவருக்குத் திருமணம் செய்துவைக்க கமலாபாய் ஆசை கொண்டாள்.

தேவசர்மாவின் மகள் அழகிலும், குணத்திலும் பக்தியிலும் சிறந்தவள் என கேள்விப்பட்டாள். அவள் பெயர் பத்மாவதி. அவளைத் தன் மகனுக்கு மண முடிக்க ஆசை கொண்டாள் கமலாபாய். வேணு கோபாலனிடம் தன் கோரிக்கையை சமர்ப்பித்தாள். இரவும், பகலும் இதே கவலையாய் உருகினாள். தொண்டருக்குத் தொண்டனல்லவா அவன்! தேவசர்மாவின் கனவில் தோன்றி 'ஜயதேவருக்கே பத்மாவதியை மணமுடிக்க வேண்டும்' என உத்தரவிட்டான்.

தேவசர்மா வலியவந்து சம்பந்தம் பேசினார், நாராயண சாஸ்திரி யாரிடம். திருமணம் வெகு சிறப்பாக நடந்தது. பத்மாவதியின் நல்லொழுக் கத்தையும், குணச்சிறப்பையும் கண்டு, வீட்டு நிர்வாகத்தை அவளிடம் ஒப்புவித்துவிட்டு கமலா பாயும், நாராயண சாஸ்திரியாரும் வானப் பிரஸ்தம் சென்றனர். வானப்பிரஸ்தம் என்றால் வயது ஆகி, கடமைகள் முடிந்து விட்டால் தவவாழ்க்கை மேற்கொள்ள காட்டிற்குச் சென்று விடுவது.

ஜயதேவரின் வீடு ஆலயமாயிற்று. நான்கு வேளையும் ஜகந்நாதருக்கு பூஜை, பஜனை, அஷ்டபதி இயற்றுவது... அலங்காரப் பிரியனான ஸ்ரீ கோபாலனை அழகிய மலர்களாலும், வாசனை திரவியங்களாலும் விதவிதமாய் அலங்கரிப்பது. ருசி ருசியாக நைவேத்யம் படைப்பது.

இல்லையென்று வந்தவர்க்கு உதவுவது. அண்டை அயலில் உள்ளவர் களுக்கு சரீரத்தாலும், பணத்தாலும் முடிந்த ஒத்தாசை செய்வது... இப்படி ஊரும், உறவும் மெச்ச வாழ்ந்து வந்தனர் தம்பதியர். கணவனுக்கு ஏற்ற மனைவி. அவர் பத்மா என்றழைப்பதற்குள் கையில் சாமானோடு ஓடிவரும் பத்தினி. கேட்க வேண்டுமா நிம்மதிக்கு அவர் சொல்லச் சொல்ல கவிதை எழுதுவாள் பத்மாவதி.

சட்டியில் இருக்கும் வரை சரி... கவனிக்காத செல்வம் வளரவில்லை. வருவாய் இல்லாத குடும்பத்தில் வறுமை ராஜபாட்டை போட்டு நடக்கத் தொடங்கியது. அப்போதும் இறைப்பணி நிற்கவில்லை. ஒரு நாள் காலை; ஓலைச்சுவடியில் பாட்டு எழுதிக் கொண்டிருந்தார் ஜயதேவர். எழுதியதைப் படித்துப் பார்த்தவர் திடுக்கிட்டார்.

"ஏ, ராதே உன் நினைவால் தகித்துக் கொதித்துப் போயிருக்கும் என் சிரசிலே உன்பனிபோன்ற தாமரைப் பாதங்களை வைத்தால் தான் என்தாகம் அடங்கும்" என்று அர்த்தம் தரும் வரிகள். இராமாவதாரத்திலே அவர் பாதுகைகளை பரதன் சிரமேல் தாங்கி பட்டாபிஷேகமே செய்திருக்கிறான். வாமனாவதாரத்திலே அவர் மகாபலியின் சிரசில் ஓரடி அளக்கவென்று பாதத்தை வைத்திருக்கிறார். அப்படிப் பட்டவர் தன் சிரசில் ஒரு பெண்ணின் பாதத்தை வை, என்று கேட்பது போல் பாடல் எழுதுவதா? என்ன மடமை கவிதைப்பிதற்றல்... முட்டாள் தனம்! பெரிய பிழை செய்ய விருந்தேனே" என பலவாறு நொந்து கொண்டு ஓலைச் சுவடியைத் தாறுமாறாக, சுக்கல் சுக்கலாக கிழித்தெறிந்தார்.

மனமே சரியில்லை. மேற்கொண்டு எழுதவும் ஓடவில்லை. எண்ணை யையும், அரப்புத் தூளையும் எடுத்துக் கொண்டு நீராட ஆற்றுக்குப் போய்விட்டார். குப்பைமேட்டில் கிழித்த ஓலைத் தூளை எறிந்துவிட்டார்.

பத்மாவதிக்கு அவர் கவிதை எழுதிக்கிழித்த விபரம் தெரியாது. எண்ணை வட்டிலோடு ஆற்றுக்குப் போனது மட்டும் தெரியும். சில நிமிடங்களில் கூடத்தில் மறுபடி காலடி ஓசை கேட்கவே, வெளியே வந்து பார்த்தவள், எண்ணைத் தலையுடன் கணவர் நிற்பதைக் கண்டாள்.

"எதையாவது மறந்து விட்டீர்களா?" என ஆச்சரியத்தோடு கேட்டாள். "ஒரு அழகிய கற்பனை. அப்புறம் மறந்து விடும். காலையில் எழுதிய ஏடும் எழுத்தாணியும் கொண்டு வா" என்றார். அவளும்

அவைகளைக் கொண்டு வந்து தந்தாள். சிலவரிகள் எழுதிவிட்டு "இதை எடுத்துவை; குளித்து விட்டு வருகிறேன்" என்று சொல்லிப் போனார்.

பகல் பூஜை முடிந்து சாப்பாடும் ஆன பிறகு "பத்மா, அந்தப் பலகையில் இருக்கும் ஓலைச் சுவடிகளை எடுத்துவா" என்றார் ஜயதேவர்.

விட்ட இடத்தில் தொடரலாம் எனத் திருப்பியவர் தான், காலையில் எழுதிக் கிழித்த வரிகள் மறுபடி அதில் எப்படி வந்தன என்று திகைத்தார். பகவானை இப்படி எழுதி விட்டோமே என்ற மன உளைச்சலில் துடித்திருக்கும்போது மறுபடியும் அதே வரிகள் இதில் வந்ததெப்படி எனத் திகைத்தார். மனைவியை அழைத்து "நீ இதில் ஏதும் எழுதி சேர்த்தாயா?" என்று கேட்டார்.

அவள் "நன்றாயிருக்கிறது உங்கள் ஞாபக சக்தி! நான் ஏன் எழுத வேண்டும்...? நீங்கள் தாம் அப்புறம் மறந்து விடும் என்று எண்ணைக் கையோடு எழுதினீர்களே! இதோ பாருங்கள் எண்ணைக் கறையை" என ஓலைச் சுவடியில் எண்ணை பட்டிருந்த இடத்தைச் சுட்டிக் காட்டினாள்.

ஜயதேவர் புரிந்து கொண்டார். இறைவனுக்கு அந்தப்பாடல் பிடித்திருக்கிறது. தன் மன உளைச்சலைப்போக்க தன் உருவில் வந்து ஓலையைத் தானே எழுதி இருக்கிறார். அன்பிற்கு உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பேதம் இல்லை. பக்தையான ராதையின் பாதம் தன் சிரசில் படுவதால் எந்த அபசாரமும் ஏற்பட்டு விடாது என உணர்த்தி இருக்கிறார். தொண்டருக்குத் தொண்டனல்லவா? அதுமட்டுமா? பத்மாவதி செய்த பாக்கியம்... அவளுக்குக் காட்சி கொடுத்து விட்டார். தான் அந்தப் பேறுபெற எத்தனை காலம் காத்திருக்க வேண்டுமோ?" இப்படி பலவற்றையும் எண்ணி பிரமித்து உட்கார்ந்திருக்கையில், பத்மாவதி "ஏன் இப்படி இருக்கிறீர்கள்?" என கவலையுடன் வினவ, நடந்ததைக் கூறினார் ஜயதேவர்.

பத்மாவதியின் கண்களில் ஆனந்த நீர் சொரிந்தது. "என்ன பாக்கியம் செய்தேன்! என் கணவர் வடிவில் ஆண்டவனைக்காண" என எண்ணி எண்ணி மகிழ்ந்தாள். வறுமையில் இறைவனை நெருங்குகிறோம் என்பது நிஜமே என ஆனந்தித்தாள்.

இந்தச் செய்தி அறிந்த ஜனங்கள் ஜயதேவரின் கவிதைகளை முன்னிலும் அதிகமாகப் பாடத் தொடங்கினர்.

'பூரி'யின் அரசனும் கவிஞனே. அவனும் இறைவன் மீது பல பாட்டுகள் இயற்றி இருந்தான். ஆயினும் ஜயதேவர் பாடலுக்கு உள்ள மகிமை வேந்தன் பாடல்களுக்கு இல்லை.

ஜயதேவர் பாடல்களையே மக்கள் அதிகமாய் பாடுகிறார்களே என மன்னன் மருகினான்.

கோயில் அந்தணர்களிடம் தன் பாடல்களைப் பாடவைக்கும்படி கூறினான். அதற்கு அவர்கள் "அரசே, இவ்விஷயத்தில் தீர்ப்புக்கூற ஜகந்நாதனே வல்லவன். உங்கள் இருவரின் கவிதைகளையும் அவன் சந்நிதியில் ஓரிரவு வைத்துப் பூட்டி விடுவோம். அவன் தீர்ப்புக்கு மக்கள் கட்டுப்படுவார்கள்" எனக் கூறினார்கள். அரசன் இதற்கு ஒப்புக் கொண்டான். சுவடிகள் கர்ப்பக்ருஹத்தில் வைத்துப் பூட்டப்பட்டன.

இரவு முழுவதும் மன்னன் உறங்கவில்லை. "நான் உனக்குத் தொண்டனில்லையா?" எனப் பலவாறு புலம்பிக் கொண்டிருந்தான்.

மறுநாள் காலை முறைப்படி அந்தணர்கள், கோவில் அதிகாரிகள், மக்கள், அரசன் முன்னிலையில் கதவு திறக்கப்பட்டது. அரசன் சுவடிகள் தாறுமாறாகக் கிடக்க, ஜயதேவர் சுவடிகளில் 'மகிழ்ந்தோம்' என எழுதி இருந்தது. அரசன் மனம் அடைந்த வேதனை சொல்லத்தரமல்ல.

"தெய்வத்துக்கும் பாரபட்சமுண்டா? என் கவிதைகள் சொல்லழகு இல்லாதிருக்கலாம். பக்தியில் பங்கமுண்டா? எனக்கேன் இந்த தண்டனை? நான் செய்த பாபமென்ன?" எனப் பலவாறு அரற்றினான்.

அன்றிரவு கண்ணன் புல்லாங்குழலுடன், புன்னகை வதனத்துடன் மன்னனின் கனவில் தோன்றினான்.

"அன்பனே, நீயும் என் பக்தன்தான். ஆயினும் நான் புவியாளும் வேந்தன் என்ற அகம்பாவம் உன்னிடம் இருந்தது. ஜயதேவனது கீத கோவிந்தத்திற்கு இணையான பாமாலை எங்கும் கிடையாது. ஆயினும் உன்னைப் பெருமைப்படுத்த உன் பாடலில் முதல் பதின்மூன்று பாடல் அஷ்டபதியில் சேர்க்கப்படும்" என வரமளித்து மறைந்தான்.

அரசன் ஆனந்த பரவசத்துடன் ஆலயம் சென்று துதித்தான். அரசன் கனவில் கூறிய அதே வார்த்தைகள் அசரீரியாக மறுபடி ஒலித்தன. மக்கள் பக்தியின் வலிமை கண்டு கரகோஷம் செய்தனர். மனைவியின் பாடலும், ஜயதேவரின் பாடலோடு கலந்தன.

பக்தியில் பணக்காரனாக இருக்கும் மருமகனின் இசை மழையில் நனைய ஒரு சமயம் தேவசர்மா வந்திருந்தார். அப்போது ஜயதேவருக்கு ஒரு யோசனை உதித்தது. பத்மாவதி ஒரு கணமும் தம்மைவிட்டுப் பிரிவதில்லை. உலக அரவங்களிலிருந்து ஒதுங்கி அமைதியாக இறைவனைத் தியானம் செய்ய வேண்டுமென்பது அவர் ஆசை. அதற்கு சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி இருந்தார்.

அந்நாளில் பிரியமான உறவினர் விடை பெற்றுச் செல்லும் போது ஊர் எல்லை வரை சென்று வழி அனுப்பி வைப்பது வழக்கம். அதன்படி தேவசர்மா விடை பெறும் போது பத்மாவதியும் சென்றிருந்தாள்.

திரும்பி வந்து பார்த்தால் ஜயதேவரைக் காணவில்லை. அக்கம் பக்கமெல்லாம் விசாரித்தாள். அழுதாள். தவித்தாள்.

கடைசியில் ஒரு ஆற்றங்கரையில் தியானத்தில் இருந்த ஜயதேவரைக் கண்டு வீட்டிற்கு அழைத்து வந்தாள்.

பிறகு ஜகந்நாதனை வேண்டி "என் கணவர் என்றென்றும் என்னை விட்டுப் பிரியாதிருக்க வரம் தா" என அனுதினமும் பிரார்த்தித்தாள். ரகசியமாக உபவாசமிருந்தாள். கண்ணனும் "கவலைப்படாதே, பத்மாவதி... உன் கணவர் உலகறிய உன் மீது கொண்ட பாசத்தை நிரூபிக்கிறேன்... அவரோடு நீ இணைந்தே வாழ்வாய்" என வரமளித்து மறைந்தான்.

பகவன்தாஸ் என்று ஒரு வியாபாரி. பக்திமான். ஜயதேவரின் பாடலைக் கேட்கும் தோறும் அவரிடம் உபதேசம் பெற துடித்தார். ஒரு முறை ஜயதேவர் நீராட வந்த சமயம் அவரைத் தன் வீட்டிற்கு வரும்படி வேண்டினார்.

ஜயதேவர் அவருடன் தேரில் ஏறிச் சென்றார். அன்று முழுவதும் பகவத் கதைகளும், பாடல்களும், பஜனையும், மந்திரோபதேசமுமாகப் பொழுது போயிற்று. மறுநாள் பகவன்தாஸ் கண்ணன் பூஜைக்கென

ஆயிரம் பவுன்களும், பத்மாவதிக்கென பட்டுப்புடவைகள், தங்க நகைகள் எல்லாம் கொடுத்து தன் தேரிலேயே காவலர் துணையோடு ஜயதேவரை ஊருக்கு அனுப்பி வைத்தான்.

இரண்டு ஊர்களுக்கும் நடுவே அடர்ந்த காட்டு வழி. பின் நிலவுக் காலம். நிலவு இன்னும் தோன்றவில்லை. கொள்ளையர் தேரைவழி மறித்தனர்.

ரத ஓட்டி பயந்து ஓடி விட்டான். காவலுக்கு வந்த வேலைக்காரர்களும் அடிபட்டுப் பின்வாங்கிவிட்டனர். ஜயதேவர் 'கொடுக்கவைத்ததும் அவன் செயல்; இப்போது பறிக்க வைப்பதும் அவன் செயல்' என்ற சமநிலைப்பட்ட மனதோடு ரதத்தைவிட்டிறங்கி, ஊரைப் பார்த்து நடக்கலானார்.

கொள்ளையர்களில் ஒருவன் "பொருளுக்குரியவன் பயந்து போய்விட்டான். வாருங்கள்; பொருள்களைப் பங்கு போடலாம்" என்று சொல்ல, வேறொருவன் "அவன் பயந்து போய் போகவில்லை. ஊருக்குள் போய் கூச்சலிட்டு ஆள்படையைத் திரட்டிக் கொண்டு திரும்பி வருவான். அவனை ஒழித்தால்தான் நமக்கு நிம்மதி" என்றான். திருடர் கூட்டம் ஜயதேவரைச் சூழ்ந்து கொண்டது.

"ஊரைக் கூட்டவா ஓடுகிறாய்" என்று ஒருவன் அடிக்க, "அப்பா, கொஞ்ச நேரம் "நம் மனைவி இதைப் பார்த்தால் சந்தோஷப்படுவாள்;" என நினைத்து இந்தப் பொருள்களைச் சுமந்து வந்ததற்கு இறைவன் அளித்த தண்டனை இது" என வருந்தி வழி நடக்கிறேன். என்னை நம்பு. நான் யாரிடமும் எதுவும் சொல்ல மாட்டேன்" என ஜயதேவர் கெஞ்சினார்.

ஜயதேவரின் கெஞ்சல்கள் செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று. அவர் கதறக் கதற அவரது கை கால்களை வெட்டி அங்கிருந்த பாழுங் கிணற்றில் தள்ளிவிட்டு, தேரைப் பொருள்களோடு ஓட்டிச் சென்று விட்டனர். இரத்தம் பெருக்கெடுத்து ஓடியது. உடல் வேதனை தாங்காமல் துடி துடித்தது. வாய் மட்டும் கோபாலன் நாமாவைப் பாடிக் கொண்டிருந்தது. இரத்த இழப்பின் காரணமாக வாய் குழற, மயக்க நிலையை அடைந்து கொண்டிருந்தார் ஜயதேவர். அவர் கண் முன் ராதையும், கண்ணனும் பாடி ஆடும் மோகனக் காட்சி தெரிந்தது. அந்த மோகன்யம் இந்த உடல் துன்பத்தை மறக்க வைத்தது.

ஒரு சமயம் அனந்த சயனத்தில் பள்ளி கொண்ட திருக்கோலம். கொஞ்ச நேரத்தில் கோபிகைகளோடு கண்ணன் குழலூதும் காட்சி. அடுத்த காட்சி மச்சாவதாரம். இந்த இறைவன் நாடகத்தில் விழிப்பும், உறக்கமுமற்ற நிலையை அடைந்தார் கவிஞர். உடல் உணர்வின்றி மரத்துப் போய் விட்டது.

இங்கு பத்மாவதி கணவனைக் காணாமல் கவலையுற்றாள். நதிக்கரையெங்கும் தேடிப் பார்த்தாள். ஒன்று, இரண்டு, மூன்று என நாட்கள் ஓடின. அன்ன ஆகாரமின்றி, உறக்கமின்றி வாடி மெலிந்தாள் பத்மாவதி. மருமகன் கவிதையிலேயே மனதைப் பறிகொடுத்திருந்த தேவசர்மா எதிர்பாராமல் திரும்பி வந்தது பத்மாவுக்கு ஆறுதலாக இருந்தது. இப்படி இருந்த நிலையில் கிரௌஞ்ச மன்னனது ஏவலாட்கள் வந்து ஜயதேவர் மன்னருடன் நலமாக இருப்பதாகவும், மன்னருக்கு உபதேசம் செய்வதால் அரண்மனையில் தங்கி இருப்பதாகவும், குருபத்தினி விரும்பினால் அழைத்து வரும்படி பணித்ததாகவும் கூறினார்கள். பிறவிக் குருடனுக்குப் பார்வை கிடைத்தது போல் பத்மாவதி

அகமகிழ்ந்தாள். தந்தையை வழி அனுப்பி விட்டு தேரேறி, கிரௌஞ்ச மன்னர் நாடு நோக்கி, சென்றாள்.

கொலு மண்டபத்தில் மன்னருக்கடுத்த குரு பீடத்தில் கம்பீரமாக அமர்ந்திருக்கும் கணவனைக் கண்டு வணங்கினாள். கண்கள் ஆனந்த மிகுதியில் நீர் நிறைந்து பார்வைக்குத் திரை போட்டது. சிறிது நேர ஆசுவாசத்திற்குப் பிறகே முண்டகமான கால்களைக் கண்டாள்.

"ஐயோ, இதென்ன கொடுமை?" என்றவறியவள் மயக்கமாகி விட்டாள். தூக்கி எடுக்க ஜயதேவருக்குக் கைகளில்லை. மன்னரும், மந்திரிகளும், சேனைத் தளபதிகளும், மக்களும் இந்த அவலக்காட்சி கண்டு துடித்தனர்.

அரசன் ஆணைப்படி பணிப்பெண்கள் வந்து பத்மாவதிக்கு மயக்கம் தெளிவித்தனர். கரங்களும் வெட்டப்பட்டிருக்கும் கணவரைக் கண்டு ட ந்மாவதி துடித்தாள்.

"உத்தம சீலரான உங்களுக்கு மனமுவந்து இந்த கொடூரத்தைச் செய்தவர் எவர்? இங்கு வந்து சேர்ந்ததெப்படி? நதியில் நீராடச் சென்றவர் எங்கு போனீர்கள்?" எதுவும் புரியாமல் அடுக்கடுக்காக கேள்விகள் தோடுத்தாள் பத்மாவதி.

பகவன்தாஸின் அழைப்பையும், உபசாரங்களையும், கள்வர்கள் கொடுஞ்செயலையும் விஸ்தாரமாகக் கூறிய ஜயதேவர் "பத்மா, உன் மாங்கல்ய பலமும் பகவத் பக்தியும்தான் இன்று நான் பிழைத்திருக்கிறேன். அந்தரமானகாடு... ஏராளமாய் சேதமாகிவிட்ட இரத்தப் பெருக்கு... உதடுகள் மட்டும் அவன் நாமாவைச் சொல்லிக் கொண்டிருக்கின்றன.

அந்த நிலையில் வேட்டையாட வந்த மன்னர் கண்ணில் நான் பட்டிருக்கிறேன். என்னை அவர் தூக்கி எடுத்து முதல் உதவி செய்தது எதையும் நான் அறியேன். உன்னைப் போலவே மன்னரும் கோபமடைந்து "இக்கொடுமையைச் செய்தவர் எவரென்று கூறுங்கள் பிடித்துவந்து தண்டிக்கிறேன்" எனச் சீறினார்.

ஊழ் வினையை வென்றவரும் உண்டோ? வரும் விதி இரவு தங்கி வா என்றால் கேட்குமா? மன்னாதி மன்னர்கள் என்றாலும் வினை விடாது. முன் செய்த பாபம். தெய்வப் பிறவியான ராமன் காட்டில்

பதினான்கு ஆண்டுகள் கழிக்கவில்லையா? அரிச்சந்திரன் மனைவி யையும், ஒரே மகனையும் அடிமையாக்கி தானும் சுடுகாட்டில் ஏவல் புரிய வில்லையா? தருமரையும், நளனையும் விடாத விதி என்னை மட்டும் விட்டு விடுமா? பத்மா, அவர்கள் துயரத்துக்கு முன் இது தூசு...” சொல்லிக்கொண்டு வரும்போதே திரிகால காட்சிகளும் அவர் கண் முன் விரிந்தது.

ஸ்ரீ மகாபாரதக் காவியத்தையும் பதினெட்டுப் புராணங்களையும், வேதத்துக்கே வியாசம் எழுதி வேத வியாசர் என்ற விருது பெற்றவர், நந்தியிடம் செய்த வாக்கு வாதத்தால் ஜெயதேவராய் பிறந்தார்.

பிரம்ம புராணத்தில் பிரம்மாதான் பெரியவர். பிரம்மா இல்லாவிட்டால் படைப்புத் தொழிலே இல்லை. படைத்தால்தான் காக்கும், அழிக்கும் தொழில்கள் நடக்கும். கந்தனால் குட்டப்பட்டு சிறையிலடைக்கப்பட்ட போதும், சிவபெருமானால் கபாலம் கிள்ளப்பட்ட போதும் பழிவாங்கும் உணர்ச்சியோ, பொறுமையின்றி சாபமிடுவதோ அவரிடம் இல்லை. சகிப்புத்தன்மையே அவரிடம் ஆக்கும் தொழிலைத் தந்ததற்கான காரணம்” என்று எழுதினார்.

விஷ்ணு புராணத்தில் பிருகு முனிவர் சோதனையில் திருமாலே ஜெயித்து யாகத்தலைவரானார் என்று குறிப்பிடுகிறார். காப்பவனுக்குப் பொறுமை அதிகம் வேண்டும் என்று ஆணித்தரமாக எழுதி இருக்கிறார். சிவ புராணத்தில் ஜோதி ஸ்வரூபியான சிவனை அடிமுடி காணாது தோற்றுப் போன திருமாலையும், பிரம்மாவையும் விட சிவனே சர்வ சக்தி வாய்ந்தவர் என்று எழுதி இருக்கிறார்.

தேவீ பாகவதத்தில் ஆதி பராசக்தியிடமிருந்து மும்மூர்த்திகளும் தோன்றினார்கள் என்கிறார். விநாயக புராணத்தில் எவராலும் அழிக்க முடியாத கொடிய அசுரர்களை வதைக்க சக்தியும், சிவனும் உருவாக்கிய விநாயகரே மூலமுதற் கடவுளாகக் கொண்டாடப்படுகிறார். எந்தக் காரியத்திற்கும் விநாயகர் பூஜை நடத்தாவிட்டால் விக்னமேற்படும் என்கிறார்.

ஸ்கந்த புராணத்திலோ பிரம்மாதி தேவர்களின் வேண்டுகோளின்படி சிவனின் நெற்றிக்கண்ணில் தோன்றி, சரவணப் பொய்கையில் வளர்ந்து சூரபத்மன், சிங்கமுகன், தாருகனை வதைத்த கந்தபெருமானே சக்தி நிறைந்தவராகக் காணப்படுகிறார்.

இப்படி ஒவ்வொரு புராணத்திலும் அந்தந்த தேவதைகளை உயர்ந்தவர் களாகச் சித்தரிக்கிறார்.

கடைசியாக எழுதிய பிரம்மாண்ட புராணத்தில் தெய்வங்களுக்குள் ஏற்ற தாழ்வில்லை; எல்லாம் ஒன்றுதான்; பார்க்கும் நேரத்தில் கண் பெரிது; கேட்கும் நேரத்தில் காதுகள் பெரியவை. பேசும் நேரத்தில் வாய் பெரிது; ஜீரணிக்கும் நேரத்தில் குடல் பெரியது; நடக்கும் போது கால்களும், இயங்கும் போது கைகளும், சுவை அறியும் போது நாக்கும், பெரியவை; சூழ்நிலை சந்தர்ப்பங்களுக்கேற்ப முக்கியத்துவம் ஏற்படுகிறது என்று முடித்துவிட்டார்.

தனக்கிட்ட கடமை முடிந்ததால் விண்ணுலகம் போக விரும்பினார். காசிக்குச் சென்று கங்கையில் இறங்கினார். அப்போது நந்தி பகவானும் கங்கையில் நீராட அங்கு வந்தார். அபராத க்ஷமாயாசனம்' சொன்னார். (தன்னை அறியாமல் ஏற்பட்ட தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்பது) 'கீதை சொன்ன நாயகனே... நீயே விஸ்வரூபி; நீயே என்னைக் கடைத்தருள வேண்டும்' என்று உரக்கக் கூறினார் வியாசர்.

இதைக்கேட்ட நந்திக்கு கோபம் வந்தது. "வியாசரே! பிரம்மாண்ட புராணத்தில் எல்லோரும் சமம்; ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு நேரத்தில் சக்தி வெளிப்படுகிறது' என்றீர். இது காசி... இங்கே விஸ்வநாத லிங்கத்திற்கே மகிமை. அப்படியிருக்க நாராயணரே விஸ்வரூபி என்றால் என்ன அர்த்தம்? அபராத க்ஷமாயாசனம்' சொல்லிக் கொண்டே ஓர வஞ்சகம் சொல்கிறீரே!

உமது தூக்கிய கைகளும், மூழ்கிய கால்களும் வெட்டப்படட்டும்" என்று சபித்தார். வியாசர் சிரித்தார்.

"உடலை விடப்போகும் இந்த சமயத்தில் உன் சாபம் என்னை என்ன செய்யும்? மணலில் பெய்த மழைதான் உன்சாபம்" என்றார்.

"அடுத்த பிறவியில் என் சாபம் நிச்சயம் பலிக்கும். காசியில் மரிப்பதால் விஸ்வநாதரும் சேர்ந்து வந்து உன் சாபம் நீக்குவார்" என்றார் நந்தி.

"காசியில் இறப்பவனுக்கு மோட்சம் தான். பிறவி கிடையாது" என்றார் வியாசர்.

"இவ்வளவு வீம்பு பேசும் நீரே விரும்பி அடுத்து இரு பிறவிகள் கேட்பீர்! காசியில் இயற்கையாய் மரணமடைந்தவனுக்கே முக்தி. வேண்டுமென்றே உங்களைப்போல் உயிரை விடுபவர்களுக்குக் கட்டாயம் பிறவி உண்டு" என்றார் நந்தி.

வியாசர் மௌனமாய் கங்கையில் உயிரை விட்டார். ஜெயதேவராகப் பிறவி எடுத்து அஷ்டபதி பாடினார். கை கால் வெட்டுண்டு சிவ தரிசனத்துக்குப் பிறகு கை கால்களையும் பெறப்போகிறார்.

காட்சிகள் மறைந்தன. நிகழ் காலத்துக்குத் திரும்பினார் ஜயதேவர். அருகிலே உள்ள கிரௌஞ்ச மன்னரையும், எதிரே உள்ள பத்மாவதியையும் பார்த்தார்.

"பத்மா! முற்பிறவியில் சந்தர்ப்பவாதியாய், விதண்டாவாதம் செய்பவனாய் இருந்திருக்கலாம். எவரும் பொறுமையை எக்காரணம் கொண்டும் கைவிடக்கூடாது!

இதிலே ஆச்சரியம் என்னவென்றால் கிரௌஞ்ச மன்னன் சிறந்த சிவபக்தன். என்னை அரண்மனைக்கு அழைத்து வந்து மருத்துவர் மூலம் காயங்களைக் குணப்படுத்தினான். அத்தோடு நின்றானா? 'உமக்குப் பணி செய்வதே மோட்சத்துக்கு வழி' என்று அரச அலுவல்களை கவனிக்காமல் துறவிபோல் என் அருகிலேயே நாட்களைக் கழித்தான்.

கடமையைச் செய்வதே கடவுளைத் துதிப்பதற்கான உபாயம் என்று கீதையைச் சொல்லி அவன் மனதை அரசாங்க அலுவல்களில் திருப்புவதே பெரும் பாடாகி விட்டது. "உங்களைப் பிரிந்திருக்க மனம் ஒப்பவில்லை. நீங்களும் கொலு மண்டபத்தில் என்னோடு வந்து இருக்க வேண்டும்" என்று அன்பு நிபந்தனை போட்டு விட்டான்.

அப்புறம் எனக்குக் குடும்பம் உண்டா என்று அறிய ஆயிரம் தயக்கத்தோடு ஆரம்பித்தான். அப்போது தான் உன் நினைவு எனக்கு வந்தது. உன்னையே மறக்கடிக்கவைத்த அரசன் அன்பு, பிரதி பிரயோசனம் பாராதது; களங்கமற்றது. எனக்குக் கரங்களாகவும், கால்களாகவும், அவை இல்லாத குறையே தெரியாதவாறு நடந்து கொண்டான்".

ஜயதேவர் இப்படிக் கூறியவுடன் பத்மாவதி, "சுவாமி, அவர் சிரமத்தில் நானும் சற்று பங்கு கொள்ள அனுமதிக்க வேண்டும். நீங்கள் சொல்ல

நான் எழுதுகிறேன். நடந்ததை எண்ணி வருந்துவது முட்டாள்தனமென உணர்ந்து கொண்டேன்" எனக் கூறினாள்.

கிரௌஞ்ச மன்னன் "குருதேவர் அரண்மனையில் காலடி வைத்த நாள் முதல் எங்கும் செழிப்பு. வயல்களில் முப்போகம் விளைகின்றது. மரங்களும், செடிகளும் காய்த்துப் பூத்து தொங்குகின்றது. எங்கும் பசுமை. நீர் நிலைகள் நிரம்பித் தளும்புகின்றன. பசுக்கள் மதமதப்பாய் பாலைப் பொழிகின்றன. கொள்ளை, கொலை, கற்பழிப்பு முதலிய குற்றங்கள் வெகுவாகக் குறைந்து விட்டன. பக்தியும், பஜனையும், பாகவத உபன்னியாசங்களும் பெருகி இருக்கின்றது. எல்லாம் குருநாதர் பாத தூளியின் மகிமை" எனப் புகழ்ந்தான்.

ஜயதேவர் "வேந்தே, அடியார் திருக்கூட்டங்களுக்கு அமுதளிக் கின்றாய். பசியினால் திருட வேண்டிய அவசியமில்லை. ஏழைகளுக்கும் சாதுக்களுக்கும் தேவைப்படும் பொருள் உதவி செய்கின்றாய். பசியும், இல்லாமையுமே குற்றங்களுக்கு காரணம். நூற்றுக்குத் தொண்ணூறு பேர் மனச்சாட்சிக்கு பயந்தவர்களே. தேவைகள் சுலபமான வழிகளில் தீர்க்கப்படும் போது மானமாக வாழவே மனிதன் நினைக்கின்றான். தவறுகளை செய்யாதிருக்கவும், நல்ல சிந்தனைகள் செய்யவும் பக்தி மார்க்கத்தைப் பரப்புகின்றாய்.. நாடு செழித்திருக்க அதுவே காரணம்" என்று விளக்கினார்.

"எல்லாம் தங்கள் வரவாலேயே" எனப்பணிந்து கூறிய மன்னன் கோலையாட்களை, குருநாதரைப் பல்லக்கில் ஏற்றி இருப்பிடத்திற்குக் கொண்டு போகப் பணித்தான்.

கிரௌஞ்ச மன்னன் நாள்தோறும் பக்திமான்களுக்கு பகவத் சேவைக்காக பொன்னும் பொருளும் தானம் செய்கிறான் என்பது ஜயதேவரைக் கிணற்றில் தள்ளிய கள்வர் குழாத்துக்கும் எட்டியது. கள்வர் தலைவன் தன் தோழர்களைக் கூப்பிட்டு "இருட்டிலே பதுங்கி பயந்து திருடிப்பிழைப்பதை விட காவி உடையில் சாமியார் வேஷத்தில் தானம் வாங்கி வாழ்க்கை நடத்துவது சுலபம் என்று தோன்றுகிறது; வாருங்கள் போகலாம்" என்று ஆலோசனை சொன்னான்.

மற்றவர்களுக்கும் அது தகுந்த ஏற்பாடாகத் தோன்றவே அனைவரும் சன்னியாசி வேடத்தில் அரண்மனையை அடைந்தனர். ஜயதேவரும்,

மன்னரும் அவர்களை அன்புடன் உபசரித்தனர். அவர்கள் ஜயதேவரை அடையாளம் தெரிந்து கொண்டனர். "நம்மால் கொடுமைபடுத்தப்பட்டு கைகால் வெட்டப்பட்டவரல்லவா இவர்" என அஞ்சி மெதுவாக நழுவத் தொடங்கினர்.

ஜயதேவர் அதைப்புரிந்து கொண்டார். சேவகர்களை அழைத்து "அதோ அந்தத்துறவிகளை வெகு நேரம் காக்க வைத்து விட்டோம் போலும். தாமதமாகிவிட்டதால் புறப்பட ஆரம்பிக்கிறார்கள். அவர்களை இங்கு அழைத்து வாருங்கள். அவர்களுக்கும் பரிசில் கொடுத்து முதலில் கவனிக்கலாம்" எனப் பணித்தார்.

அவர்களை அருகில் அமரவைத்து உபசரித்து ஏராளமான பொன்னும், பொருளும், ஆடை, ஆபரணங்களும் கொடுத்து, பின் மன்னரிடம் "மன்னா, காட்டுவழியில் கள்வர்கள் அதிகம். ஆதலால் அவர்கள் இருப்பிடம் வரை பலமான காவலுடன் அனுப்பி வைக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

அரசர் தான் ஜயதேவர் வார்த்தைக்கு மறுபேச்சுப் பேசாதவராயிற்றே! அப்படியே உத்தரவிட்டார். அவர்கள் போனபின் "ஸ்வாமி, அந்த சாதுக்கள் பொறியில் அகப்பட்டுக் கொண்ட எலிகள் போல் இருக்கை கொள்ளாமல் தவித்ததை தாங்கள் கவனித்தீர்களா?" என்று கேட்டார் மன்னர்.

ஜயதேவர் புன்னகையுடன் "அறிவேன்" என்றார். "காரணம் தெரி யுமா? சொல்லக் கூடியதா?" என்று அரசர் ஆவலுடன் வினவ

ஜயதேவர் "என் கை கால்களை வெட்டி பாழுங்கிணற்றில் தள்ள இறைவன் பணித்த ஆட்கள் இவர்கள்" என, "அப்படியா? அதை ஏன் அப்போதே சொல்லவில்லை? அவர்களை சும்மா விட்டுவிட்டோமே..." என்று அரசர் பதற,

"மன்னா, பதற்றம் ஏன்? அதிதிகளாக வருபவர் யாராயிருப்பினும் அன்புக்குப் பாத்திரமானவர்களே... காவி உடை பழி உணர்ச்சியைத் துடைப்பது. வஞ்சம் தீர்க்கும் எண்ணம் இருப்பின் எத்தனை வேதாந்தம் பேசியும் பயனில்லை. எத்தனை தான தர்மம் செய்தாலும் பிரயோசன மில்லை. நீங்கள் இப்படி துடிப்பீர்கள் என்றுதான் அவர்களை இனம் காட்டவில்லை" என்றார்.

அங்கே கள்வர்கள் காட்டின் எல்லை வந்ததும் துணை வந்த காவலர்களை நோக்கி, "இனிமேல் நீங்கள் போகலாம்" என்றனர். அவர்கள் ஆச்சரியத்துடன் "இப்போது தானே காடு வந்திருக்கிறது! காடு தாண்ட வேண்டாமா? உங்கள் ஊர் எது? உங்களை இப்படிவிட்டு விட்டோமென்று தெரிந்தால் குருநாதர் வருத்தப்படுவார். அரசர் தண்டிப்பார்" என்றனர்.

"எங்கள் இருப்பிடமே காடுதான். நாங்களெல்லாம் வழிப்பறிக் கொள்ளையர். எங்கள் தலைவன் தான் உங்கள் குருதேவர். இவன், வேறு மன்னரிடம் விலையுயர்ந்த வைர நகைகளைக் கொள்ளையடித்து விட்டான். அந்த மன்னர் இவனைக் கையைக்காலை வெட்டி கிணற்றில் தள்ளும்படி ஆணையிட்டார். உங்கள் மன்னர் இரக்கப்பட்டு காப்பாற்றி இருக்கிறார். உங்கள் மன்னரை ஏமாற்றி இப்போது வசதியாக வாழ்கின்றான். எங்கே நாங்கள் காட்டிக் கொடுத்து விடுவோமோ எனப்பயந்து தான் எங்களை முதலில் கூப்பிட்டு ஏராளமான பரிசுகள் கொடுத்து அனுப்பி இருக்கிறான். இதிலிருந்தே புரியவில்லையா உங்களுக்கு?"

இப்படி அவர்கள் சொல்லி வாய்மூடவில்லை. பூமி வெடித்து கள்வர் கூட்டம் தடாலென்று விழுந்தது. துணைவந்த வீரர்கள் திகைத்துப் போனார்கள்.

"ஜயதேவ ஸ்வாமிகள் எத்தனை பெரிய மகான்...! அவரை அபாண்டமாகச் சொன்னது பூமாதேவிக்கே பொறுக்கவில்லை. கபளீகரம் பண்ணிட்டா... தன்வினை தன்னைச் சுடும்" என்று பேசிக்கொண்டே அரண்மனைக்குத் திரும்பிச் சென்றனர்.

அரசனிடம் சென்று நடந்ததைக் கூறினர். வேந்தன் "தெய்வமும் ஓரளவு தானே பொறுமையாய் இருக்கும். எளியாரை வலியார் வருத்தினால் வலியாரை தெய்வம் தண்டிக்கும் என்பது பொய்யாகுமா...." எனக் கூறி மகிழ்ந்தான்.

ஜயதேவரோ "மன்னா, அவர்களைக் காப்பாற்றியே ஆக வேண்டும். முடியாவிட்டால் நானும் அவர்களுடனேயே இறப்பேன்" எனத் தீர்மானமாகச் சொல்லவே, வேறுவழியின்றி பரிவாரங்களுடன் அரசன், கள்வர்களுக்குக் காவலாகச் சென்ற காவலர் வழிகாட்ட, ஜயதேவருடன்

சென்றான். அங்கே அந்த புல்லர்கள் வீழ்ந்த அடையாளம் கூட இல்லை. ஜயதேவர் "அரசே, அவர்கள் படுகுழியில் விழ இந்தப் பாவியே காரணம். என்னைப் பாராதிருந்தால் அவர்கள் என்னைப் பற்றித் தவறாகப் பேசப் போவதில்லை. அதனால் அவர்கள் சாகக் காரணமான நானும் அதே குழியில் விழுந்து மாள்வது தான் பொருத்தம்" எனக் கூறி குழியில் குதிக்க முயல, மன்னர் தடுத்து "நீர் இறந்த மறுகணமே நானும் குழியில் விழுந்து விடுவேன். என் மரணத்துக்கும் தாங்களே காரணமாவீர்கள்" எனக்கூற,

ஜயதேவர் "விட்டலா, இப்போது நான் என்ன செய்வேன்? தர்ம சங்கடமான நிலைமையாயிற்றே!" எனக் கதறியபடி மயக்கமடைந்து விழுந்து விட்டார்.

வேரற்ற மரம் போல் ஜயதேவர் விழவும் மன்னர் தவித்துப் போனார். ஜயதேவரைக் காப்பாற்ற ஏதோ சொல்லப் போய் அது இப்படியாகி விட்டதே ஏன வேதனைப் பட்டார். 'இறந்து விட்டாரோ' என மூக்கில் விரல்வைத்துப் பார்த்தார்.

"சம்போ, சங்கரா, மகாதேவா, கைலாஸபதே," என சிவனை வேண்டி உருகி தியானத்தில் ஆழ்ந்துவிட்டார்.

திடீரென்று அந்த காட்டிலே ஒரு ஒளி. பார்ப்பவர் கண்கூச கண்களை சுருக்கிக்கொண்டனர். சிவபெருமான் உமாதேவியாரோடு ரிஷபவாக னத்தில் காட்சி தந்தார்.

"பக்தா, அஞ்சாதே! ஜயதேவர் சாகவில்லை. அவரது மரணம் வெகுதூரத்தில் இருக்கிறது. அவரது தோழமை உனக்குக் கிடைத்தது உன்பூர்வ ஜென்ம புண்ணியம்.

முன் செய்த தீவினையால் கைகால்களை இழந்தார். விரைவிலேயே இழந்த கைகால்களைப் பெறுவார்" என அருள் வாக்களித்தார்.

ஜயதேவரைத் தொட்டு "அன்பா, எழுந்திரு" என, ஜயதேவர் விழித்தெழுந்தார்.

கண்ணெதிரே ரிஷபாரூடரைப் பார்க்கவும் "என் கண்கள் செய்த பாக்கியம். நிஜமா... இது கனவல்லவே? கள்வர்களைக் காப்பாற்ற

வேண்டும் என்ற கருத்தல்லவா உன் தரிசனம் கிடைக்க வைத்தது! மன்னரின் நட்புக் கிடைத்த அதிர்ஷ்டமல்லவா உம் கரம் தீண்டும் பாக்கியம் பெற்றேன்" என ஆனந்தக் கண்ணீருடன் பலவாறு ஸ்தோத்தரித்தார்.

"ஆண்டவரே... ஒரே ஒரு கோரிக்கை. இக்கள்வர்களைக் காப்பாற்ற வேண்டும்" என வேண்டினார். "அன்பா, கள்வர்களின் ஆயுள் முடிந்தது. அவர்கள் மடிய நீ காரணமல்ல... அவர்களின் விதிதான்காரணம். உன் பொருட்டு அவர்கள் நரகத்துள் வீழாமல் மோட்சத்தைத் தருகின்றேன். திருப்தி தானா?" எனக் கேட்க, ஜயதேவர் ஆனந்த பரவசரானார்.

கிரெளஞ்ச மன்னனோ ஆனந்த பரவசத்தில் பேச்சே வராது சிலைபோல் இமைக்கவும் மறந்து, சிவபெருமானைப் பார்த்தவாறிருந்தார்.

ஜயதேவர் பிழைக்க வேண்டுமென்று கேட்க, அவருக்குக் கைகால் மறுபடி வருமென்று சொன்னதும், ஜயதேவர் நீண்ட காலம் பிழைத்திருப்பார் என அருளியதும் தரித்திரனுக்குத் தங்கப் பாளங்கள் கிடைத்தது போலிருந்தது.

"மன்னா, உன்னால் என் தரிசனம் ஜயதேவருக்குக் கிடைத்தது போல், ஜயதேவரால் வைகுண்டவாசனின் தரிசனம் உனக்குக் கிடைக்கும்" இந்த அருள்வாக்கைக் கேட்டதும் இன்பத்துக்கு மேல் இன்பம் பொங்க ஆனந்த [illegible] திளைத்திருந்ததில் சிவபெருமான் எப்போது மறைந்தார் [illegible] தெரியவில்லை.

நிறைந்த மனதுடன் கவிஞரும், அரசரும் அன்றைய நிகழ்ச்சிகளைப் பற்றி அளவளாவிக் கொண்டே நகரை நோக்கிப் புறப்பட்டனர்.

அரண்மனைக்கு வந்ததிலிருந்தே பத்மாவதி மகிழ்ச்சியுடன் [illegible]திருந்தாள். அரசி முதல் அனைத்துப் பெண்களும் அவளிடம் அதிக அன்பும், மரியாதையும் காட்டி வந்தனர். எல்லாம் ஜயதேவரிடம் மன்னன் [illegible]யாடிய நேசம், பக்தி, பணிவின் எதிரொலி.

பத்மாவதியும் புராணங்களையும், வேதங்களின் சாரத்தையும், பத்தினிப் [illegible]பெண்களின் கதைகளையும் சொல்லுவாள். அனாவசியமான ஊர்வம்பு [illegible]பேசுவதில்லை. அழகிய பாட்டுக்களை இயற்றி இனிய குரலில் சொல்லித்

தருவாள். அறிவு பூர்வமான தர்க்கங்கள் நடைபெறும். ஒரு நாள் பகல் நேரம். அரசியும், பத்மாவதியும் பேசிக் கொண்டிருந்தனர்.

அரசி "புராணங்கள் பெண்கள் ஒழுக்கத்தோடு நடந்து கொள்ள வேண்டும். கணவனையும், அவன் உறவினர்களையும் மதிக்க வேண்டும் என்பதற்காகக் கற்பனையாகக் கூறப்பட்ட கதைகள். இந்தக் காலத்தில் சீதையைப் போல் தீயில் இறங்கக் கூடியவர்கள் எவரேனும் உண்டா? யமனோடு வாதாடி இறந்த கணவனை உயிர்ப்பிக்க முடியுமா? கெட்ட நோக்கோடு பார்ப்பவனை எரிக்க முடியுமா? பொழுதே விடியாதே என்றால் விடியாமலிருக்குமா? கற்புக்கரசிகள் எந்தக் காலத்திலும் உண்டு. எனக்குத் தெரிந்து கணவனே தெய்வம் என்று வாழ்ந்த ஒரு மங்கை கணவன் இறந்ததும் அவனை எரித்த தீயில் தானும் விழுவேன் என துடித்தாள். அவளைத் தடுத்து நிறுத்துவதற்குள் போதும் போதும் மென்றாகி விட்டது. அவள் உத்தம பத்தினி இல்லை என்று கூற முடியுமா?" என விதண்டாவாதத்தை ஆரம்பித்தாள்.

பத்மாவதி சிரித்தபடி, "உடலும் உயிருமாய் வாழ்ந்தவர்களுக்கு உயிர் போனபின் உடல் வெறும் கட்டை தானே! உணர்ச்சி ஏது? கணவன் இறந்தார் என்ற சொல் கேட்டவுடன் தன்னால் உயிர் பிரிந்து விடுமே...! அப்படிப்பட்டவர்கள் தான் நகமும் சதையுமாய் வாழ்பவர்கள்" என்று கூறினாள்.

இதைக் கேட்ட ராணியாருக்கு பத்மாவதி தன்னை மடக்கிப் பேசுகிறாளே என்ற ஆத்திரம் வந்தது. 'இறப்பதும், பிறப்பதும் ஈசன் செயல் என்றறிந்தும் குருபத்தினி என்ற திமிரில் பேசுகிறாள். திருதராஷ்டிரனுக்குக் கண் இல்லை என்று அறிந்ததும் தன் ஆயுள் முழுவதும் கண்ணைக் கட்டிக் கொண்டே வாழ்ந்தாளே காந்தாரி அவளை விட இவள் எதில் உயர்த்தி? கணவன் கைகால்கள் வெட்டுண்டார் என்றறிந்ததும் இவளும் கைகால்களை வெட்டிக் கொண்டாளா? அவர் பாழுங்கிணற்றில் தள்ளப்பட்டதை இவள் ஏன் கற்பின் சக்தியால் அறிந்து கொள்ள வில்லை? ஜயதேவர் துதிக்கும் நாராயணரையே மகனாகப் பெற்ற கௌஸல்யா தேவி தசரதரோடு சாகவில்லை என்பதால் அவரை நேசிக்கவில்லை என்று அர்த்தமா? இவள் கர்வத்தை அடக்கியே தீரவேண்டும்' என முடிவு செய்து கொண்டாள்.

பின்னர் அரசி தான் இளைப்பாறுவதாகக் கூறி விடை பெற்றுக் கொண்டாள்.

அந்தரங்கமான தோழியரை அழைத்து "ஜயதேவரின் மனைவிக்கு மமதை ஏறிவிட்டது. கொஞ்சநேரம் அவளை அழ வைக்க வேண்டும். ஒரு சின்ன வேடிக்கை. நீங்கள் ஒரு பறவையை, அல்லது முயல், அணில் இப்படி ஏதாவதொன்றைக் கொன்று அதன் இரத்தத்தை ஜய தேவரது உடைகளில் தடவிக் கொண்டு வாருங்கள். நான் பத்மாவதியிடம் பேசிக் கொண்டிருக்கும் போது அவைகளைக் காட்டி ஜயதேவரைப் புலி அடித்து விட்டதாக அழுது கொண்டே சொல்லுங்கள்" என திட்டம் போட்டாள் அரசி.

தோழிகள் தயங்கினர். "மகாராணி, ஜயதேவர் மகான். அவரைப் பாதகம் பேசியவர் படுகுழியில் வீழ்ந்தனர். அப்படியிருக்க விளையாட்டாகக் கூட அவர் மனைவியை அழவைப்பது விபரீதத்தை விளைவிக்கக் கூடுமே" எனக் கூறினர்.

"அதிலுள்ள நன்மை தீமைகள் என்னைச்சேர்ந்தது. உங்களை எதுவும் பாதிக்காது. வண்ணாத்தியிடம் ஜயதேவரின் சலவைத் துணிகளை எடுத்துவைக்கச்சொல்லி இருக்கிறேன். வாங்கிக் கொண்டு போங்கள். காரியம் நிறைவேறியதும் என்னிடம் வந்து சொல்லுங்கள்" எனக் கட்டளையிட்டாள் அரசி.

பிறகு அரசி பத்மாவதியைத் தேடிப்போய்" காட்டிற்குச் சென்ற மன்னரையும், குருதேவரையும் ஒரு புலி வந்து தாக்கியதாக செய்திவந்தது. எப்படி இருக்கிறார்கள் என்றறிந்து வர ஒரு தாதியை அனுப்பி இருக்கிறேன், என்று கவலையோடு சொன்னாள்.

பத்மாவதியின் முகம் வேதனையால் 'வாடியது.' புலி வந்து தாக்கியதா? கண்ணா, அவருக்கு ஓடக் காலும் தற்காப்புக்கு கரங்களும் கூட கிடையாதே... கோவிந்தா, நாராயணா, ஜகந்நாதா... காப்பாற்று" என ஓலமிடத் தொடங்கினாள். அந்த சமயம் அரசி சொல்லி வைத்த பெண்கள் வந்து "தேவி, மன்னர் சிற்சில காயங்களுடன் தப்பிவிட்டார். ஜயதேவரைப்புலி கொன்று விட்டதாம்" என்றபடி ரத்தம் தோய்ந்த ஜயதேவரின் உடையைக் காட்டினார்கள்.

"என்ன, என் இன்னுயிர்க் கணவரைப் புலி அடித்துக் கொன்றது என்ற சொல்லைக் கேட்டபிறகும் நான் உயிருடன் இருக்கிறேனா?" என்று கேட்ட பத்மாவதி தடாலென சாய்ந்தாள். ராணி நடுங்கி அவளைத் தாங்க, வீழ்ந்தது வெறும் உடலே. உயிர் அப்போதே பிரிந்து விட்டிருந்தது.

அரசி இதை எதிர்பாராததால் நடு நடுங்கினாள். வேடிக்கை வேதனையானது. மன்னர் இதை அறிந்தால் தனக்கு என்ன தண்டனை அளிப்பாரோ எனக் குழம்பினாள்.

தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானித்தாள். அப்போது அரண் மனையிலிருந்த ஒரு முதியவர் "பட்டத்தரசி, நடந்தது நடந்து விட்டது. அதற்காகத் தற்கொலை செய்து கொள்வது முட்டாள் தனம். ஜயதேவர் அற்புதமான பக்தர். அவர் பத்மாவதியை உயிர்ப்பித்து விடுவார். அந்த உடலைப் பத்திரமாகக் காப்பாற்றி ஒப்படைப்பதே உன் பணி" என ஆறுதல் கூறினார்.

பத்மாவதியின் சரீரம் பத்திரமாய் பாதுகாக்கப்பட்டது. அரசி உணவும், உறக்கமுமின்றி கவலையாய் அமர்ந்திருந்தாள்.

தோழிப் பெண்களால் கசமுசவென்று விஷயம் நாடு முழுவதும் பரவிவிட்டது. மன்னரும், கவிஞரும் மகிழ்ச்சியோடு நாடு திரும்பிக் கொண்டிருந்தனர். ஆனால் நாட்டிலே பொலிவிழந்த முகங்கள்; வழியில் எவரைக் கேட்டாலும் சரியான பதிலில்லை.

அரண்மனை வாசல்; அந்தப்புர சேடி ஒருத்தி தென்படவே அரசன் தேரை நிறுத்தி அவளை அழைத்து விசாரித்தான்.

அவள் தயங்கித்தயங்கி நடந்தது நடந்தபடி கூறினாள்.

ஜயதேவரும், அரசரும் திகைத்தபடி விரைந்து பத்மாவதியின் உடல் இருக்குமிடம் அடைந்தனர்.

அரசர் "அடி பாவி, குருபத்தினி பெற்ற தாய்க்கு சமம். பொல்லாங்கு சொல்லி விதிமுடித்தாயே! கற்புக்கரசியின் கற்புக்கு சோதனை வைத்தாயே! அடி கொலைகாரி, என் வம்சத்தை பழிக்கு ஆளாக்கினாயே... பரம்பரைக்கே களங்கம் தேடி வைத்த பாதகி... நீ பெண்ணே இல்லை... உயிர்குடிக்கும் பேய்" எனப்பலவாறு நிந்தித்தவர் களைத்து மயங்கித் தரையில் சாய்ந்தார்.

ஜயதேவர் "என் கண்ணே பத்மா... நான் இறந்தேன் என்று கேட்டதும் உயிர்விட்ட என் ராதா... உன்னை விட்டு நான் தவிக்க வேண்டு மென்பதுதான் உன் ஆசையா? எனக்குக் கைகளாக இருந்து கவிதை எழுதியவளே! என் கால்கள் இல்லாத குறையை நான் அறியவேண்டு மென்பது தான் உன் விருப்பமா? நாதத்தந்திகளான நீ அறுந்து போனபின் இந்த மொட்டை வீணையிலிருந்து கீதம் பிறக்குமா? என் வாழ்வே இருண்டு விட்டதே! நீ இல்லை என்று தெரிந்த பின்பும் பேசிக் கொண்டு நிற்கும் என் நேசம், உன்னைவிடக் குறைவானதல்ல என்று நிரூபிக் கின்றேன். இதோ நானும் வருகிறேன்" எனப் பலவாறு கதறிப் புலம்பினார்.

அரசி "தீராப் பழியையும், பாபத்தையும், வெறுப்பையும் தேடிக் கொண்டேனே! ஆராயாது அவசரப்பட்டு செய்த வேடிக்கை வினையாய் முடிந்ததே" என அலறினார்.

பக்கத்துக்குப் பக்கம் முணுமுணுப்புகள்; குற்றச்சாட்டுகள். அரசன் மூர்ச்சை தெளிந்து எழுந்தான். அவன் வெறியை யாராலும் தணிக்க முடியவில்லை.

"மதிகெட்ட சண்டாளி... ஒழிந்து போ... உன்னைப் பார்க்குந்தோறும் இந்த வேதனையான கணமே நினைவுக்கு வரும்" எனக் கத்தியை உருவிக்கொண்டு ராணியின் மீது பாய்ந்தான்.

அரசி பயந்து "குருதேவா, என்னைக் காப்பாற்றும்" என ஜயதேவர் அருகே ஓட, ஜயதேவர் தான் முடவன் என்பதையும் மறந்து எழுந்து ஓடி மூளிக்கைகளால் அரசர் கையைப் பிடித்துத் தடுத்தார். என்ன ஆச்சரியம்!

கால்கள் முழுமையடைந்து வலுவாகத் தரையில் நின்றன. கைகள் பூரண வளர்ச்சியோடு மன்னனைப் பற்றி இருந்தன. இதைச் சூழ்ந்திருந்த காவலர்களும், சேடிப்பெண்களும், அமைச்சரும், தளபதியும், மன்னரும், அரசியும் பார்த்து ஆனந்த பரவசமானார்கள். ஜயதேவர் இதை உணரவில்லை.

"ஜகந்நாதா, இதென்ன சோதனை... என் மனைவியைக் காரணமாக வைத்து அரசியைப் பலிவாங்கப் போகிறாயா? அன்று மீனாய், ஆமையாய், வராகமாய், நரசிம்மமாய் உலகைக் காத்தவனே! வாமனனாய், இராமனாய், கண்ணனாய் இரட்சிக்க வந்தவனே... எங்களைக் காப்பது உனக்கு ஒரு பொருட்டா?" என தசாவதாரங்களையும் பாட்டாய் பாடினார்.

சங்கு சக்கரதாரியாய் நாராயணர் பிரசன்மானார். "ஜயதேவா, பத்மாவதியைப் பிழைக்க வைக்க உன்னால் முடியாதா? என்னை ஏன் அழைத்தாய்? ஓ, இறந்தவர் உடலோடு பலர் உன்னைத் தேடி வந்து தொல்லை கொடுப்பார்கள் என்ற அச்சமா? நான் செய்தேன் என்ற அகந்தை வந்துவிடும் என்ற நினைப்பா? பத்மாவதிக்கு தன் கணவருக்கு தன்மீது பற்றில்லை என்ற ஏக்கம். அதைப்போக்கவே இப்படி ஒரு நாடகம்" என்று புன்னகை வதனத்தோடு கூறிய மணிவண்ணன், "பத்மாவதி, நித்திரை போதும்; எழுந்திரம்மா" என, ஒரு சோதி, ஒளி வடிவாய் பத்மாவதியிடம்சேர்ந்தது. பத்மாவதி உறங்கி விழித்தாற்போல் எழுந்தாள்.

கை, கால்கள் முழுமை பெற்ற கணவரையும், மயில் பீலியோடு புன்னகை புரியும் கண்ணனையும் கண்டு மெய் மறந்தாள். வணங்கினாள். பஜனை செய்தாள்.

கண்ணன் அனைவரையும் வாழ்த்தி விட்டு "ஜயதேவா, பாகவதத்தை விஸ்தாரமாகக் பாடு" என்று கூறி மறைந்து போனார். 'பத்மாவதி' உன்

பெருமை அறியாமல் செய்த என் சிறு செயலை மன்னிப்பாய்" என அரசி வேண்ட,

"உங்களாலன்றோ என் கணவருக்குக் கை கால்களும் கண்ணன் தரிசனமும், அவருக்கு என்மீதுள்ள பாசமும் தெரிந்தது" என்று சமாதானம் செய்தாள் பத்மாவதி. அனைவரும் மகிழ்ச்சியுடன் இதைப்பற்றிப் பேசியபடியே கலைந்து போனார்கள்.

ஜயதேவர் முழுமூச்சாக பகவான் கட்டளைப்படி பாகவதத்தைப் எழுதி முடித்தார். வித்வான்கள், அறிஞர்கள் நிறைந்த சபையில் அரங்கேற்ற அரசன் ஏற்பாடு செய்தான்.

கூட்டத்தைக் கண்டு ஜயதேவருக்கு அச்சம் ஏற்பட்டது. வேறு யாராவது படித்தால் தேவலை என எண்ணினார்.

அப்போது கூட்டத்திலிருந்து ஒரு பிராம்மணர் வந்தார். அரசனிடம் "அரசே, எனது ஊர் கோகுலம். நான் பல தர்க்கங்கள், சாஸ்திரங்கள் கற்றவன், ஜயதேவர் என்பவர் பாகவதம் எழுதி இருப்பதாகவும், அது இன்று இங்கு அரங்கேற்றப்படுவதாகவும் அறிந்தேன். அவரோடு தர்க்கம் செய்ய அனுமதிக்க வேண்டும்" என்றார்.

அரசர் என்ன சொல்வதென்று தெரியாமல் ஜயதேவரை நோக்க, ஜயதேவர் "ஸ்வாமி, அடியேன் தான் ஜயதேவன். தர்க்கம் செய்யுமளவுக்கு நான் பண்டிதன் அல்ல. தொண்டு செய்யும் பக்தன் நான். எனது சிறுபணி இந்த பாகவதம்" எனக் கூறினார்.

அந்தணர் விழி சிவக்க "ஓ, உன்னைபற்றி நான் கேள்விப் பட்டது சரியாகவே இருக்கிறது! பணிந்து போய் எதிரியை அடக்கும் ஏமாற்றுக்காரன் நீ. உன் தந்திரம் என்னிடம் பலிக்காது. உன் கையிலுள்ள பாகவதத்தைக் கொடு... அதிலுள்ள குற்றம் குறைகளைக் கூறி உன் அறியாமையை அம்பலப்படுத்துகிறேன்" எனக் கையை நீட்ட ஜயதேவர் பாகவதத்தைக் கொடுத்தார். "ஏதோ என் சிற்றறிவுக்கு எட்டிய வரை எழுதி இருக்கிறேன். குற்றம், குறை இருந்தால் மன்னித்து ஏற்க வேண்டும்" எனப் பணிவுடன் கூறினார் ஜயதேவர்.

"நான் இயற்றிய பாகவதத்தைப் படிக்கிறேன். அதை உன் பாகவதத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். தவறுகள் அப்போது தெரியும்.

என்னோடு வந்த அந்தணர் சுலோகங்களை சரி பார்ப்பார்" என்று அருகிலிருந்த முதிய அந்தணரிடம் சரிபார்க்கும் வேலையை ஒப்படைத் தார். கோகுலத்து அந்தணர் பாகவதத்தைப் படிக்கத் தொடங்கினார்.

என்ன ஆச்சரியம்! அவை வரிக்குவரி ஜயதேவர் சுலோகங்களை அப்படியே ஒப்புவிப்பது போல் இருந்தன. ஜயதேவரும், மன்னரும், அரசியும், அமைச்சரும் மற்றும் ஜயதேவர் பாகவதத்தை அறிந்தவர்களும் திகைத்தனர். சபையினர் மெய்மறந்து கேட்டுக் கொண்டிருந்தனர். "ஆஹா, ஆஹா, அற்புதம், அபாரம்" என்ற வார்த்தைச் சிதறல்களும், தலையசைப்பும் அடிக்கடி இருந்தன. ஆங்காங்கே கைதட்டி ரசித்தனர்.

ராஸ லீலைகள் பற்றி சுலோகங்கள் வரும்போது அந்தணர் மெய்மறந்து பிரமித்திருக்க, ஜயதேவரது சுவடியை சரிபார்த்துக் கொண்டிருந்த முதியவர் "ஜனார்த்தனா, போதும் உன் திருவிளையாடல்... பக்தனை சோதிக்கவும் ஒரு அளவு வேண்டாமா? ஜயதேவன் பாகவதத்தை நீயே அரங்கேற்ற வேண்டும் என்ற ஆசையால் வலிய வந்து ஏற்றுக் கொண்டாய். அவனை ஆசீர்வரித்துத் தொடங்கிய காரியத்தை சுபமாக முடி" என்றார்.

மன்னரும், கவிஞரும் திகைத்திருக்க பாகவதம் முடிந்தது. "கைலாஸபதி சரிபார்க்க உன்சுலோகங்கள் எனக்கு நீ எழுதும் போதே மனப்பாடமாகி விட்டன என்பதை உலகுக்கு உணர்த்தவே வந்தேன். உன் அஷ்டபதியில் ஒன்றைப் பாடினவர்களும் பாகவதம் முழுவதையும் படித்த பயனைப் பெறுவார்கள். சிவனார் உன் பாகவதத்தைக் கேட்கவே என்னோடு வந்தார்" என்று கூறி ஜயதேவரையும், மன்னரையும் ஆசீர் வதித்து, சிவபெருமானோடு மக்களுக்கும் மற்றையோருக்கும் காட்சி தந்து மறைந்தார் திருமால்.

மக்கள் ஜயதேவரது பாகவதத்தைப் புகழ்ந்து "அதனாலன்றோ கைலாஸபதி, வைகுண்டவாசி இருவரின் தரிசனமும் ஒருங்கே கிடைத்தது" என மகிழ்ந்து, புகழ்ந்து பேசி மெய் மறந்தனர். ஜயதேவரும், கிரௌஞ்ச மன்னரும் ஊர் ஊராக ஸ்தல யாத்திரை செய்து வந்தனர். என்னதான் பகவானே எழுதினார் என்று கொண்டாலும் ராதையின் பாதங்களை கண்ணன் முடிமீது வைக்கும்படி வேண்டினார் என்பது

பின்னால் கேலிக்கிடம் என்று நினைத்தார் ஜயதேவர். அதனால் அந்த அஷ்டபதியை அவர் வெளிக் கொணராமல் மறைத்து விட்டார்.

இது சரியா என்ற கவலை சதா ஜயதேவர் மனதை அரித்தது. இந்நிலையில் காசியை அடைந்தனர் கவிஞரும், அரசரும். காசியில் தங்கி இருந்த இரவு, சிவபெருமான் ஜயதேவர் கனவில் தோன்றி "அன்பா, உன்மனதை வாட்டும் சந்தேகத்தை நான் அறிவேன். ஜனார்த்தனன் மீது ஆயிரக்கணக்கில் பாடும் நீ என் மீது ஐந்து அஷ்டகங்கள் பாடக் கூடாதா? அவ்விதம் பாடினால் ஆதாரத்தோடு உன் சந்தேகத்தைத் தீர்க்கிறேன்" என்றார்.

விழித்தெழுந்த ஜயதேவர் திகைத்தார். சிவபெருமான் மீது பக்தி பெருக ஐந்து அஷ்டகங்கள் பாடினார்.

அந்நாளில் காசியில் அறிஞர்கள், சாதுக்கள், ஞானிகள் அதிகம். ஒவ்வொருவரும் பத்து பதினைந்து மாணவர் புடை சூழத்தான் நடமாடுவார்கள்.



ஜயதேவர் பாடி முடித்ததும் ஒரு பண்டிதர் மாணவர் குழாம் புடைசூழ வந்தார். "ஐயா, இங்கே ஜயதேவன் என்பவர் யார்? அவரைத் தேடி எங்கள் ஆசிரியர் குடாரபண்டிதர் வந்திருக்கின்றார்" என்றான் ஒருமாணவன்.

ஜயதேவர் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார். "ஓ நீர்தானோ அந்த ஜயதேவன்? வேதங்களெல்லாம் இறைவன் காலடியில் கிடக்க, அவன் தலைமீது ராதையின் கால்கள் கிடப்பதாக எழுதி இருக்கின்றீரே? இது என்ன அக்கிரமம்?" என்றார் பண்டிதர்.

ஜயதேவர் திகைத்தார். மறைத்து வைத்த விஷயம் வெளியானதெப்படி எனத் தடுமாறினார். அருகில் இருந்த பண்டிதர்கள் "மடத்தனமாய் இருக்கிறதே! இறைவன் இவர் வீட்டு வேலைக்காரனோ? கவிஞர்களுக்கே அவமானம்" என ஏசினர்.

ஜயதேவர் வெட்கித்தலைகுனிந்து கூனி குறுகி நின்றார்.

குடார பண்டிதர் கேலியாக "ஜயதேவா, உன் சம்சாரத்திடம் இப்படித்தான் கேட்பாயோ? உன்னை இப்படியே விட்டால் வருங்கால சந்ததியினர் கெட்டு விடுவர். அபத்தமான கவிதைகள் பாடி குவித்து விடுவாய். பாகவதத்துக்கு எதிராக பாகவதம் பாடுகிறானாம்... ஏமாத்துக் காரன்" என்றவர், மற்றபண்டிதர்களைக் கூட்டி,

"இவன் தான் இயற்றிய அஷ்டபதியை மறைத்து வைப்பதிலிருந்தே அது எவரும் ஏற்றுக் கொள்ளக் கூடியதில்லை என்று தெரிகிறது. அதை கங்கையில் எறிந்து விடவேண்டும். ஏடெதிர்த்து வந்தால் ஏற்றுக் கொள்வோம். இல்லையேல் இவன் எழுதிய பாகவதத்தையும் கங்கையில் வீசிவிட வேண்டும் என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டார். பண்டிதர்களெல்லாம் "ஆமாம். அது தான் சரி" என ஆமோதிக்க, கீத கோவிந்தத்தை நீரில் எறிந்து" ஜயதேவரின் கவிதைகள் நல்ல தானால் திருப்பிக் கொடு" என்றார்.

என்ன அற்புதம்! பெருகும் பிரவாகத்தின் வழியே போகாமல் ஏடு திரும்பி வந்தது. ஒரு அழகிய மங்கை கரை அருகில் தோன்றி அந்த ஏட்டுக் கட்டை எடுத்து குடார பண்டிதரிடம் நீட்டி "சந்தேகம் நிவர்த்தி ஆனதா குடார பண்டிதரே! கங்கையின் பாதங்கள் சிவனாரின் தலையில் நிரந்தரமாக இருக்கலாமென்றால் ராதையின் பாதங்கள் சிறிது நேரம் கண்ணனின் தலையில் இருப்பதில் என்ன தவறு?" எனக் கேட்டாள்.

மறுபடியும் அச்சுவடியை நீரில் பண்டிதர் எறியப்போக தண்டையும், சலங்கையும் சப்திக்க, மகரகுண்டலங்கள் ஆட, மயில் பீலி குலுங்க, மாலை அசைய ஓடிவந்தான் மணி வண்ணன். "கைலாஸபதே, போதும் உமது விளையாட்டு... எனக்குப் பிடித்தமான வரிகளே அவை... ஜயதேவனை இனியும் துன்புறுத்தாதீர்" என்று சொல்லியபடி அவைகளைப் பிடுங்கிக் கொண்டான்.

மூன்றாம் முறையாக ஜயதேவரால் அங்கு கூடிய அனைவருக்கும் சிவாவிஷ்ணு தரிசனம் கிடைத்தது. அதன்பின் காசியிலேயே ஜயதேவர் தங்கிவிட்டார். பத்மாவதி கணவனை விட்டு ஒரு கணமும் பிரியவில்லை. ஒரு நல்ல நாளில் தம்பதிகள் இருவரும் பரந்தாமனைப் பாடியபடியே அமரரானார்கள். அவர் தன் பாடல்களில், அஷ்டபதியில் வாழ்கிறார். அவர் புத உடல் மறைந்ததே தவிர புகழ் உடல் மறையவில்லை.

4. ஸ்ரீ சோகா மேளர்

தமிழ் நாட்டிலே நந்தனார்... வைஷ்ணவ குலத்திலே திருப்பாணாழ்வார் போல வடநாட்டிலே பண்டரீபுரத்தில் ஹரிஜன வகுப்பில் உதித்த பக்தர் சோகா மேளர்.

அந்த நாளில் சேரியில் பிறந்தவர்களுக்கு கல்வி வசதி கிடையாது. யாராவது ஒருவர் பாடுவதை கொஞ்சநேரம் கேட்டுவிட்டால் உடனே சின்னசின்னச் சந்தங்களாகப் பாட்டியற்றி விடுவார் சோகா மேளர்.

அவர் இனத்தவர் குடிப்பார்கள். ஆடு, கோழி என வெட்டி புலால் உண்ணுவதை பெருமகிழ்ச்சியாகவே கொண்டாடினர்.

இவரோ "குடி மனிதரின் அறிவை மழுங்கச் செய்யும் வஸ்து, நம் இனம் முன்னேற வேண்டுமாயின் சம்பாதிப்பதை கள்ளுக் கடையில் கொட்டக்கூடாது. ஆடு, கோழிகளும் நம்மைப்போல் இறைவனால் படைக்கப்பட்ட உயிர்களே. அவைகளை வதை செய்ய நமக்கு எந்த உரிமையும் இல்லை. இயற்கையாக ஆயுள் முடியு முன், இடையில் கொலை செய்வது பாபம். தெய்வம் உயிர்களை பலிகேட்பதில்லை. பூசாரி வளர, வாழ உயிர் வதை செய்யாதீர்கள்" எனக் குலத்தாருக்கு அடிக்கடி போதித்து வந்தார்.

அவர்கள் செய்யும் ஏளனங்களையும்; குத்தல் மொழிகளையும், கண்டனங்களையும் அவர் பொருட்படுத்துவதில்லை.

காலையில் எழுந்து சந்திரபாகா நதியில் நீராடி உடலெல்லாம் சந்தனக் கீற்றிட்டு அழகிய பொருள்பட இனிமையான குரல் வளத்துடன் பண்டரி நாதனைப் பாடிக் கொண்டே கோயிலை அடைவார். மதிலுக்கு வெளியே நின்று அவர் சொற்சுவையோடு மென்மையாகப் பாடுவதைக் கேட்க கூட்டம் கூடிவிடும்.

அந்த ஊர் அந்தணர் சிலர் அவரை வெறுத்தனர். ஏன் தெரியுமா? அந்தண குலத்தில் பிறந்தும் பலர் விடிகாலை எழுந்து ஆற்றுக்குப் போவதில்லை. பாடசாலையில் சேர்ந்தாலும் சரியாகப் படிக்காமல் ஊர் சுற்றினர். கண்ட பெண்களையும் வம்புக்கு இழுத்தனர். சிலர் இருட்டியதும்

சாராயக் கடையில் வந்து குடித்துவிட்டு ஆடினர். கோவிலுக்குப் போவதில்லை. பலர் விலைமாதர் சகவாசம் கொண்டிருந்தனர்.

இப்படிப்பட்டவர்களுக்கு சோகாமேளரை எப்படிப் பிடிக்கும்? கோபமும், வெஞ்சினமும் கொண்டு அவரை வெறுத்தனர்.

"ஏண்டா, பாபம் செய்து விட்டுத் தானே சேரியிலே பிறந்திருக்கிறாய்? அப்புறம் கோவிலென்ன கேடு? போய் வேலையைப் பார். நாங்கள் மடியாகக் குளித்துவிட்டு வரும் போது கூர்ச்சம் போல் நீ நிற்கிறாயே? உனக்கென்ன பக்தியும், சாமியும்... அவ்வளவு பக்தி இருந்தால் சாமியையே உன்னிடம் வரவழைத்துக்கொள்"

தினசரி இம்மாதிரி ஏச்சுக்களைக் கேட்டு மனம் நொந்தார் சோகா மேளர். ஆரம்பித்த பஜனையை முடிக்க விடுவதில்லை. தொல்லை தாங்காமல் கோவிலுக்குச் செல்வதை நிறுத்தி விட்டார்.

அந்தந்த வேளை பூஜை முடிந்து மணி சப்தம் கேட்டதும் கை கூப்பி வணங்குவார். அர்த்த ஜாம மணி ஒலி கேட்ட பின்பே உறங்குவார். நெஞ்சிலே கோவில்கட்டி அதில் ஜகன் மோகனனை நிறுத்தி, பூஜை செய்வார். பாடிப் பஜனை செய்வார். அந்த நேரம் அவர் விழிகள் மூடி இருக்கும். எதிரில் யார் வந்தாலும் தெரியாது. கிட்டத்தட்ட சமாதி நிலை. பைத்தியக்காரன் என்று ஊரெல்லாம் கேலி செய்தது.

ஒரு நாள் அர்த்த ஜாம பூஜை மணி அடித்து ஓய்ந்தது. தியானம் கலைந்து எழுந்த பக்தர் திகைத்தார். எதிரே நின்றவர் சங்குசக்கர தாரியான கோபாலன்.

"கண்ணா, கோபாலா, முகுந்தா, மாதவா" என்று உணர்ச்சி மேலிட்டு கண்களில் நீர் பெருக சோகாமேளர் உருக, கோவிந்தன்.

"சோகாமேளா, வா கோவிலுக்குப் போகலாம். அங்கே வந்து பாடு" என்றழைத்தார். மந்திரத்தில் கட்டுண்டாற் போல் சோகாமேளர் பின் தொடர்ந்தார்.

காலையில் அர்ச்சகர்கள் கதவைத் திறக்கும் போது உள்ளே பாட்டுச் சத்தம் கேட்டு பரபரப்படைந்தனர். "அடப்பாவி – நீயா? அனாச்சாரம்... கர்ப்பக்கிரஹகத்துக்குள்ளேயே வந்து விட்டாயே...! கோவில்

வேலையாளின் கவனக்குறைவு. நன்றாகப் பார்க்க வேண்டாமோ? நேற்று எங்கேயோ ஒளிந்திருந்திருக்கிறான். என்னதிமிர்... பண்டரி நாதரின் நகைகளைத் திருடவே பக்தர் வேஷம் போடுகிறான். கையும் களவுமாய் திருடுவதற்குள் பிடிபட்டுப் போனதால் பஜனை பண்ணுகிறான். இழுத்து வெளியே தள்ளுங்கள்" என்று தலைக்குத் தலை விதம் விதமாக கூச்சலிட்டனர் பட்டர்கள்.

"பாண்டுரங்கனே என்னை அழைத்து வந்தார். பூட்டியிருந்த கதவுகள் தாமாகத் திறந்து வழிவிட்டன. வேறெதுவும் நானறியேன்" என சோகாமேளர் பலவாறு கெஞ்சியும் அர்ச்சகர்கள் கேட்கவில்லை.

பஞ்சாயத்து வைக்கப்பட்டது. "ஆலயத்திற்குள் இந்த நீசன் புகுந்த தால் பிராயசித்தம் செய்யவேண்டும். சந்திரபாகா ஆற்றுக்கு அக்கரையில் தான் இனி சோகா மேளர் வசிக்க வேண்டும். பண்டரீபுர எல்லையில் காலெடுத்தும் வைக்கக்கூடாது. பகவான் வந்து அழைத்தாகக் கூறும் பொய் புரட்டுகளை நாங்கள் நம்புவதற்கில்லை" எனத் தீர்ப்பு சொல்லப்பட்டது. எல்லாம் இறைவன் சோதனை என்றெண்ணிய சோகாமேளர் குடும்பத்துடன் சந்திர பாகா நதியின் அக்கரை சென்று வசிக்கலானார்.

ஏகாதசி அன்று முழுவதும் வெறும் துளசி தீர்த்தம் மட்டும் சாப்பிட்டுவிட்டு பஜனை செய்து கொண்டிருப்பார்கள், சோகாமேளரும் அவர் மனைவியும்; துவாதசி அன்று ஸ்வாமிக்கு பூஜை செய்து நிவேதனம் பண்ணிவிட்டு சாப்பிடுவது அவர்கள் வழக்கம். அன்று சோகாமேளர் சாப்பிட உட்காருகையில் 'நானும் வரலாமா?' என்ற குரல் கேட்டு திரும்பிப் பார்த்தவர் பிரமித்தார். பட்டு பீதாம்பரத்துடன் அங்கே காட்சி கொடுத்தவர் பகவான்.

ஆனந்த பரவசத்துடன் கைலாகு கொடுத்து அவரை அழைத்து வந்தார் சோகாமேளர். பார்த்துப் பார்த்துப் பரிமாறினாள் அவர் மனைவி.

அது முதல் ஒவ்வொரு துவாதசியும் பாரனை பண்ண பரந்தாமன் சோகாமேளர் இல்லம் சென்று விடுவார். இது வெகு ரகசியமாகப் பாதுகாக்கப்பட்டது. இப்படியே நடந்து கொண்டிருந்தால் வம்பில்லை! கண்ணன் குறும்புக்காரன் ஆயிற்றே!

அன்று துவாதசி. சூரியன் பவனிவந்து 'சுள்' என்று ஜன்னல் வழியே வெயில் உறைத்த பின்தான் சோகாமேளரும் அவர் மனைவியும் எழுந்தனர். "ஐயோ, தூங்கிவிட்டேனே, பண்டரீநாதர் வரும் நேரமாகி விட்டதே! சீக்கிரம் குளித்து சமையலை முடி. நான் நீராடி விட்டு வருகிறேன்" என்று பதட்டமாகக் கூறினார் சோகாமேளர்.

இது அவ்வழி சென்று கொண்டிருந்த ஒருவர் காதில் விழுந்தது.

"இவனுக்கு என்ன கொழுப்பு! ஊரை விட்டு விலக்கி வைத்தோம் என்பதற்காக ஜாடை பேசுகிறானோ! இவன் வீட்டில் பகவான் வந்து பாரணை பண்ணுகிறாறாமே! இவன் எங்களை விட உயர்ந்தவனோ? இவன் பரிகாசத்தை இப்போதே அடக்காவிட்டால் எல்லைமீறுவான்" என்று தீர்மானித்து, மற்றவர்களையும் சேர்த்துக் கொண்டு அரசனிடம் முறையிட்டான்.

அரசர் சோகாமேளரை அழைத்துவரச் செய்தார். "உங்கள் வீட்டிற்கு பண்டரிநாதன் வருகிறான் என்று சொன்னதுண்டா?" என்று கேட்டார்.

"ஆமாம். ஒவ்வொரு துவாதசியும் பகவான் என்னுடன் உணவருந்துவது



நிஜமே" என்று சோகாமேளர் கூற, அரசனுக்குக் கோபம் தலைக்கேறியது. "இந்த மமதை பிடித்தவனைக் கட்டி கொண்டுபோய் பசுநிரையில் தள்ளுங்கள்" என ஆணையிட்டான்.

பசுநிரை என்றால் காட்டில் ஒரு விஸ்தாரமான இடத்தில் கோவிலுக்காக விடப்பட்ட காளைகள், மாடுகள், கன்றுகள் இருக்கும் இடம். மாடுகளிடமிருந்த பால் முழுவதையும் குடித்து வளரும் கன்றுகள் முரட்டுத்தனமாக வளர்ந்திருக்கும். காளைகள் பெரிய திமிலோடு மதமதர்த்துத் திரியும்.

அந்த இடத்தருகில் சோகாமேளரைக் கைகால்களைக் கட்டி தள்ளி விட்டு வந்தனர் காவலாட்கள். நாலாபக்கத்திலிருந்தும் மாடு, கன்றுகள் அவரை முட்ட வந்தன.

"கோபாலா, அன்று கோகுலத்தில் மாடு மேய்த்த கண்ணா, காளை ரூபத்தில் வந்த அரிஷ்டாசுரனைக் கொன்றவனே! நான் உன் தஞ்சம்" என வேண்டிய சோகாமேளர் பக்திப் பெருக்குடன் பாடத் தொடங்கினார்.

அவ்வளவுதான்... இடைவெளி விட்டு மாடுகள் நின்றும், படுத்தும் அழகாக ரசிக்கத் தொடங்கின.

திரும்பிக் கொண்டிருந்த சேவகர்களில் ஒருவன் 'என்னடா பாட்டுச் சப்தம் கேட்கிறதே' என்று மறுபடி அவரை விட்ட இடத்தில் வந்து பார்த்தான். அங்கே ஆநிரைகள் இசையில் மய்ங்கி நின்ற காட்சி அவனைச் சிலிர்க்க வைத்தது. இந்த அற்புதத்தை தன் தோழர்களைக் கூப்பிட்டு வந்து காட்டினான்.

எல்லோரும் அரசனிடம் தாங்கள் கண்ட காட்சியை விவரித்தனர். அரசன் "உண்மையிலேயே அவர் சிறந்த பக்திமானாயிருக்க வேண்டும். பகுத்தறிவற்ற மாடுகளே அவரைப் புரிந்து கொண்டிருக்கும் போது பொறாமையுற்ற மானிடர்கள் ஏன் தொல்லை கொடுக்க வேண்டும்? கேட்பார் பேச்சுக் கேட்டு நானும் அபசாரம் செய்து விட்டேனே" என்று துடித்தான்.

அவரைவிட்ட இடத்திற்குச் சென்று அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அழைத்து வந்தான். அரசமரியாதைகளோடு அனுப்பி வைத்தான். கணவனின் தண்டனைச் செய்தி கேட்டு துடித்துக்

கொண்டிருந்த சோகாமேளரின் மனைவி கணவன் அரச மரியாதை களோடு திரும்பி வந்ததைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தாள். ஒரு துவாதசி, சோகாமேளரும், ஜனார்த்தனனும் பாரணை பண்ணிக் கொண்டிருந்தனர். சோதனைபோல் தயிர் பூராவையும் போதும் என்று சொல்லாமல் ஏந்தி ஏந்திக் குடித்துக் கொண்டிருந்தான் வெண்ணை உண்ட வாயன்.

எடுத்து வைத்த தயிர் பூராவும் தீர்ந்து விட்டது. இரவுக்காக உறை குத்தியிருந்த சட்டி உறியில் இருந்தது. அவசரமாக எடுத்த சோகா மேளரின் மனைவி கைதவறி கீழே போட்டு விட்டாள். சட்டி சுக்கல் சுக்கலாக உடைந்து தயிர்கட்டிகள் பூராவும் இறைவனின் ஊதா பீதாம்பரம் முழுவதும் தெறித்திருந்தன.

"தயிர் அபிஷேகம் செய்ய வேண்டும் என்று உமது மனைவிக்கு வெகு நாட்களாய் ஆசைபோலும்" என்றார் முகுந்தன் கேலியாக.

"பகவானின் பட்டுப் பீதாம்பரத்தைப் பாழடித்துவிட்டாயே! சாப்பாடு பரிமாறுகையில் பொறுப்பு வேண்டும் பெண்களுக்கு" இப்படி சோகா மேளர் கோபித்துக் கொண்டார். அந்த வழியாகப் போய்க் கொண்டிருந்த கோயில் அர்ச்சகரின் காதில் சோகாமேளரின் வார்த்தைகள் விழுந்தன. உள்ளே எட்டிப் பார்த்தார். அவரின் பொறாமை பிடித்த கண்களுக்கு கிருஷ்ணர் தெரியவில்லை.

"புரட்டிப் பேசுவதே இவனுக்கு வேலையாகிவிட்டது. ஞானிகளும், சாதுக்களும் அவன் தரிசனம் கிடைக்காதா என ஏங்கித்தவிக்க இவன் வீடு தேடி வந்து மாதவன் சாப்பிடுவதாவது" என்று எரிச்சல் பட்டு யாரென உள்ளே நுழைந்து சோகாமேளர் கன்னத்தில் பளாரென்று அறைந்தான்.

"சே, உன்னைத் தொட்டதால் தீட்டாகி விட்டது" என்று திட்டிக் கொண்டே மறுபடி ஆற்றில் போய் குளித்து விட்டு, ஆலயம் சென்ற அர்ச்சகர் கதவைத் திறந்தவுடன் திடுக்கிட்டார்.

பொன்னுரங்க விக்கிரகத்தின் இடது கன்னம் உப்பி இருந்தது. முதல் நாள் சார்த்தியிருந்த ஊதாநிறப் பீதாம்பரம் முழுவதும் தயிர் கட்டிகள் அர்ச்சகன் தன் வலது கரத்தைப் பார்த்தான். அப்பம் போல் 'புஸ்'ஸென்று

உப்பி இருந்தது. 'ஓ'வென்று அழுதான். அவன் அழுகையைக் கேட்டு அந்தணர்கள் கூடினர். வார்த்தை தீப்பொறிபோல... நெருப்பாய் சமாசாரம் பரவியது. மன்னன் காதுக்கும் எட்டியது.

"கண்ணா, கார்மேக வண்ணா, எங்கள் குற்றத்தைப் பொறுப்பாய்... முன்போல் வடிவழகனாக காட்சி கொடு" என அந்தணர்கள் வேண்டினர்.

"பிறப்பால் மனிதன் உயர்வதில்லை. செயலினாலும், செய்யும் தான தருமங்களினாலும், புண்ணியத்தினாலும் உயர் நிலை அடைகின்றான். சோகாமேளன் என் இனிய பக்தன். அவன் வந்து தடவிக் கொடுத்தாலே என் வீக்கம் குறையும். போய் அழைத்து வாருங்கள்" என்ற அசரீரி எழுந்தது.

அதற்குள் அரசனும் "சோகாமேளரை அடித்தது பெருங் குற்றம். அடித்த அர்ச்சகர் மன்னிப்புக்கேட்டுக்கொண்டு பூர்ண கும்ப மரியாதையோடு கோவிலுக்குள் அவரை அழைக்கவேண்டும். சுவாமி விக்ரகத்துக்கு வீக்கம் இருப்பது நாட்டுக்குக் கேடு" என்று செய்தி சொல்லிவிட்டான்.

எவரை ஆலயத்து வெளியிலும் நிற்கவிடாமல் துரத்தி அடித்தனரோ, அவரை பூர்ணகும்ப மரியாதைகளோடு வரவேற்க, அந்தணர் கூட்டம் புறப்பட்டது. சந்திரபாகா நதியைக் கடந்து வரும் கூட்டத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சோகாமேளரின் மனைவி தன் குடிசைக்குள் அவர்கள் நுழைவதைக் கண்டு திடுக்கிட்டாள்.

நடந்த சமாசாரங்களைக் கேட்ட சோகாமேளர், "கண்ணா, இந்த நாயும் உனக்கு ஒரு பொருட்டானேனா? எனக்கு இத்தனை பெருமையா?" என உருக, "சோகாமேளா... எனக்குக் கால் வலிக்கிறது... உன்பாட்டை தினம் கேட்க வேண்டுமென்ற ஆசை. நீயே கோவில் அருகில் வந்து விடு" என்ற இறைவன் குரல் அனைவர் செவிகளிலும் விழுந்தது.

ஆனந்த பரவசத்துடன் கண்களில் நீர்பெருக பஜனை செய்து கொண்டே, சோகாமேளர் முன் நடக்க, பின் தொடர்ந்தனர் அந்தணர்கள்.

சோகாமேளர் இறைவன் கன்னத்தைத் தடவ, விக்கிரகம் முன் போலாகியது. ஜாதி, மத, இன பேதமற்று பக்தியும், சேவையுமே பெரி தென்று காட்டுவது சோகாகாமேளர் வரலாறு.

5. ஸ்ரீ நாமதேவர்

உத்தவர் என்பவர் மகா ஞானி. கண்ணன் மீது பெரும் பக்தி கொண்டவர். பாரத யுத்தம் முடிந்து கண்ணன் துவாரகை திரும்புகையில் அந்த உத்தவரை சந்தித்தான். நடுக்காட்டில் குடிக்க நீரின்றித் தவித்த உத்தவர் தமக்கு தாகமெடுக்கும் போது தண்ணீர் கிடைக்க வேண்டுமென வேண்டிக்கொண்டார். கண்ணனும் இசைந்தான்.

உத்தவருக்கு தாகமெடுத்தது. கண்ணனை வேண்டினார். ஒரு புலையன் உருவில் குடுவையில் அமிர்தம் கொண்டு வந்தார் நாராயணன். உத்தவர் புலையனிடம் தண்ணீர் அருந்த மறுத்தார். தன் சுய வடிவைக் காட்டி உத்தவரின் அறியாமையைப் போக்கினார். அப்போது பகவான் உத்தவருக்கு செய்த போதனைகள் எளியனவாகவும் எவரும் எளிதில் பின்பற்றக் கூடியதாகவும் இருக்கும். அது உத்தவகீதை எனப்படும்.

அந்த உத்தவரை நாராயணன் அழைத்து "மக்களின் மன அழுக்கைப் போக்க பக்தி நீர்கொண்டு சலவை செய்ய வேண்டும். மனக்கிழிசல்களை ஞானை நூல் கொண்டு இணைக்க வேண்டும். உனக்கு நான் சொன்னதை ஊருக்கு நீ சொல். பண்டரீபுரத்தில் தாம் சேட்டி என்ற தையற்காரன் இருக்கின்றான். அவன் மகனாகப் போய் பிறந்து க்களைப் பண்படுத்து", என்றார்.

"தாயின் கருவில் பத்து மாதங்கள் கிடந்து வாழ்நாளை வீண் நாளாக்க விரும்பவில்லை. கருவில் கிடவாதே பிள்ளையாய் வளர்கின்றேன். எனக்கென்று பெயர் வேண்டாம். உன் நாமமே எனக்குப் பெயராக அமைய வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். இறைவன் ன்னகையுடன் ஆசீர்வதித்தார்.

தாம்சேட்டிக்கு அறுபது வயது முடிந்துவிட்டது. அவர் மனைவி ணாபாய் ஐம்பத்தைந்தைத் தாண்டிய வயோதிக மாது. உத்தவருக்கு நாராயணன் உத்தரவிட்ட மறுநாள், குணாபாய் ஒரு அற்புதமான சொப்பனம் கண்டாள்.

"பண்டரிநாதன் அவள் கனவில் தோன்றி "குணாபாய்... நாளைக் காலையில் நீ ஒரு மகனுக்குத் தாயாவாய்" எனக் கூறி மறைந்தார்.

இதைத் தன் புருஷனிடம் கூறினாள் குணாபாய். அவர் கடகடவென்று சிரித்தபடி "அடியே, பேரன், பேத்தி எடுக்க வேண்டிய பருவத்தில் பிள்ளை பெறுவதாகக் கனவு கண்டாயோ? அதிலும் பத்துமாதங்கள் சுமக்காமல் ஒரே இரவு கர்ப்பமா? பேஷ், பேஷ்... ஆசைகளின் பிரதிபலிப்பு தான் கனவு. பேசாமல் போய் தூங்கு" என கேலி செய்தார்.

குணாபாய் வெட்கத்துடன் முகம் சுண்ட, பேசாமல் போய் படுத்து விட்டாள். விடிகாலை எழுந்து நீராட ஆற்றுக்குப் போனார் தாம்ஸேட்டி.

அங்கே நின்ற ஒரு பெரியவர் "தாம்ஸேட்டி, உன்பிள்ளை நலமாய் இருக்கின்றானா?" என்று கேட்கவும், தாம்ஸேட்டி திகைத்துப் போனார். அந்தக் கிழவரை இதற்குமுன் தாம்ஸேட்டி சந்தித்ததில்லை.

"ஐயா, என் மனைவி என்னிடம் பேசியதை ஒட்டுக் கேட்டிருக்கின்றீர்... உங்களைப் போன்ற முதியவர்களுக்கு அது அழகல்ல... அடுத்த பிறவி பல்லியாகப் பிறப்பீர்" என்று சொல்லிவிட்டு குளிக்க ஆற்றில் இறங்கினார்.

நீரில் மூழ்கியவர் காதில் 'குவா, குவா? என்ற குழந்தையின் அழுகுரல் கேட்டது. தலையைத் தூக்கிச் சுற்று முற்றும் பார்த்தார்.

அழகிய பெரிய சிப்பி ஒன்று மிதந்து வந்து அவருக்கு எதிரே மணல் மேட்டில் ஒதுங்கியது. அதில் அழகிய ஆண்குழந்தை. ஓடிப்போய் குழந்தையை எடுத்தார். சொட்டச் சொட்ட நீர் வழிய "குணாபாய் கண்ட கனவு நிஜம் தான். குழந்தை கிடைத்துவிட்டான் " என மகிழ்ச்சியோடு வீட்டிற்கு ஓடி வந்தார்.

ஒரு அந்தணர் வழிமறித்து "அது என் குழந்தை. முதலில் பார்த்தவன் நான் தான்" என்று வழக்காடினார்.

"குழந்தையைத் தூக்கியவனுக்கே அது சொந்தம். அவன் திருநாமம் சொல்லிக்கொண்டிருக்கும் என் கையில் கிடைக்கச் செய்த அந்த வாசுதேவன் பெயரையே வைக்கப் போகிறேன்" என்று அவரிடம் வாதாடிவிட்டு குழந்தையோடு வீட்டிற்கு வந்தார். குணாபாயிடம் நடந்ததைக் கூறி குழந்தையைத் தந்தார். குணாபாய் மகிழ்ச்சியோடு குழந்தையை அணைத்து முத்தமிட்டாள். நாமதேவன் எனப் பெயர் சூட்டி அருமையாக வளாத்து வந்தனர்.

தினம் சமைக்கும் உணவை தாம்ஸேட்டி பாண்டுரங்கனுக்கு நைவேத்யம் செய்து விட்டே சாப்பிடுவது வழக்கம். ஒரு நாள் தாம்ஸேட்டி வெளியூர் சென்றிருந்தார். ஆலயம் சென்று நைவேத்யம் செய்ய முடிய வில்லையே என குணாபாய் கவலைப்பட்டாள். அப்போது நாம தேவருக்கு ஐந்து வயது "அம்மா, நான் கொண்டு போய் நிவேதனம் செய்கிறேன்" என்றான்.

குணாபாய் உணவை ஒருதட்டில் வைத்து மூடிக்கொடுத்தாள். வழியில் அவன் வயதை ஒத்த சிறுவர்கள் பந்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

ஐந்து வயது சிறுவன் தானே நாமதேவ்... விளையாட்டு சுவாரஸ் யமாயிருக்கவே, வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றுவிட்டான். ஒரு முறை வேகமாக அடிக்கப்பட்ட பந்து நிவேதனத்தட்டு மீது வந்து விழுந்தது.

சத்தம் கேட்டு வாசலுக்கு வந்த குணாபாய் "அடே நாமதேவ் நைவேத்யத்தின் மேல் பந்து பட்டுவிட்டது. இனிமேல் அதை நைவேத்யம் செய்யக் கூடாது. உள்ளே கொண்டுவா. நாளை அப்பா வந்தபிறகு நைவேத்யம் செய்து கொள்ளட்டும்" எனக் கூப்பாடுபோட்டாள்.

நாம தேவருக்கு ஸ்வாமி நாளை வரை பட்டினியாய் இருப்பாரே என்ற ஏக்கம். கோவிலுக்கு ஒரே ஓட்டமாய் ஓடிவிட்டான். கோவிலில் அர்ச்சகர் யாரும் இல்லை. வேறு ஆட்களும் இல்லை. சன்னதி திறந்திருந்தது. தரிசனத்துக்கு ஆட்கள் எவரும் வராததால் களைப்புற்ற முதிய அர்ச்சகர் வெளியே ஒரு ஓரமாய் உட்கார்ந்தபடி உறங்கிக் கொண்டிருந்தார்.

பகவானுக்கு எதிரே போய் நைவேத்யத்தை திறந்து வைத்தான் நாமதேவன். "சுவாமி, எனக்கு ரொம்பப் பசிக்கிறது. நீ சீக்கிரம் சாப்பிட்டுத் தட்டைக் கொடுத்தால் தானே நான் சாப்பிட வீட்டிற்குப் போக முடியும்!" என்று கூப்பிட்டுப் பார்த்தான்.

அவன் தாம்ஸேட்டி நிவேதனம் செய்யும் போது பார்த்ததில்லை. வெறும் நீரைச்சுற்றி கையைக் காட்டிவிட்டு வந்து விடுவார் என்பதை அவன் அறியான். சுவாமி நிஜமாகவே வந்து சாப்பிடுவார். அம்மா சொன்னபடி பந்துபட்டதால் சுவாமி கோபித்துக் கொண்டு வரவில்லை என பயந்தான். 'நான் இனிமேல் வேடிக்கை பார்க்க மாட்டேன். தெரியாமல் நின்று

விட்டேன். உடனே வந்து சாப்பிடலேன்னா இந்தக் கருங்கல்லிலே மோதி செத்துப் போவேன்" என அழுதபடி கூறிய நாமதேவன் தேங்காய் உடைப் பதற்காக வைக்கப்பட்டிருந்த கல்லில் மண்டையை மோதிக் கொண்டான்.

இரண்டு அழகிய கரங்கள் நாமதேவன் தலையைப் பிடித்துத் தூக்கின. நிமிர்ந்து பார்த்தான் நாமதேவன். "என்ன ஆச்சரியம்! "நம்ம வீட்டுப் படத்தில் உள்ளபடியே இருக்கிறானே கண்ணன்" என வியந்தான் குழந்தை நாமதேவன். பேச நாவெழாது பிரமித்து நின்றான்.

"நாமதேவா, வா... நாமிருவரும் ஒன்றாகவே சாப்பிடுவோம். பசிக்கிறதென்றாயே... எனக்கு இன்று அவ்வளவாகப் பசியில்லை... எங்கம்மா முறுக்கும், சீடையும், பால்கோவாவும் ஏகப்பட்டது கொடுத்து விட்டாள். உனக்காகத் தான் வந்தேன்" எனச் சொல்லியபடி நாமதேவன் கையைப் பிடித்து அழைத்து, தட்டினெதிரில் உட்கார்த்தி தானும் சப்பணமிட்டு உட்கார்ந்தார்.

நாமதேவன் கண்ணனுக்குத் தன் பிஞ்சு கரங்களால் ஊட்ட, பரந்தாமன் தன் அழகிய கைகளால் நாமதேவனுக்கு ஊட்ட, "ஆஹா, அந்த காட்சியைக் காண கோடி கண்கள் இருந்தாலும் போதாது.

சாப்பிட்டு முடித்ததும் நாம தேவனுக்கு அங்கிருந்த சந்தனத்தைப் பூசினான் கிருஷ்ணன். தன் இடுப்பிலிருந்த பட்டு வேஷ்டியை நாமதேவனுக்கு கட்டி விட்டு, அவனது பழைய துண்டைத் தான்வாங்கி உடுத்திக் கொண்டு விக்ரகமாகி விட்டான். வயிறும், மனமும் நிறைந்திருக்க காலித்தட்டோடு வீட்டுக்குப் போனான் நாமதேவன். "குழந்தை போய் வெகு நேரமாகிறதே காணோமே" எனக் கவலையோடு காத்திருந்தாள் குணாபாய்.

வெறும் தட்டோடு வந்த நாமதேவனைப்பார்த்து "சின்னப் பிள்ளை, பசி பொறுக்காமல் சாப்பிட்டு விட்டான்" என நினைத்தாள். இந்த சமயத்தில் தாம்ஸேட்டியும் வந்து விட்டார்.

"நீங்கள் இல்லாததால் நைவேத்தியத்தை நாமதேவனிடம் கொடுத்த னுப்பினேன். குழந்தை தானே பசி தாங்காமல் சாப்பிட்டு விட்டான்" என சமாதானம் சொன்னாள் குணாபாய். நாமதேவர் இதை தீவிரமாக மறுத்தார். நடந்ததைக் கூறினார். "பொய் சொல்லாதே... ப்ண்டரி நாதர்

நேரில் வந்து சாப்பிடுவதாவது... குழந்தைகளுக்கே உள்ள விஷமம்... சந்தனத்தை வாரிப் பூசிக் கொண்டு... அட பாவி, நல்ல வேளை யார் கண்ணிலும் படவில்லையே... சுவாமியோட பட்டைக் கட்டிக் கொண்டு வந்திருக்கிறாயே அபசாரமில்லையா?'' எனப் பலவாறு கண்டித்தார் தாம்ஸேட்டி.

தாம் சொல்வதெல்லாம் சத்தியமென்றும், தானும் பகவானும் ஒருவருக்கொருவர் ஊட்டி விட்டோமென்றும், சுவாமியே சந்தனம் பூசிவிட்டு பீதாம்பரத்தைக் கழற்றிக் கட்டி விட்டதாகவும், திருப்பித் திருப்பி சொன்னார் நாமதேவர்.

''என் எதிரே சுவாமிக்கு ஊட்டுகிறாயா?'' என்று தாம்ஸேட்டி அதட்ட, அப்படியே செய்வதாக கோவிலுக்கு தாம்ஸேட்டி, குணாபாயுடன் வந்தார் நாம தேவர். கண்ணனைப் பலவிதங்களிலும் அழைத்துப் பார்த்தார்.

''அப்பா நம்ப மாட்டேங்கறாங்களே... கண்ணா, நானா இந்த பட்டு வேட்டியைத் திருடினேன்...! நடந்ததை நீ வந்து சொல்லு. இந்தத் தட்டிலே இருக்கிற பொங்கலை நீ வந்து சாப்பிடு... வரல்லே நிஜமா இந்த கல்லிலே மோதி மண்டையை உடைச்சிக்குவேன்'' எனக் கதறியபடி, மறுபடி கல்லிலே மண்டையை மோதினார்.

விக்கிரத்திலிருந்து ஒரு கை நீண்டு நாமதேவரைத் தடுத்தது. மறுகை உணவுத் தட்டிலேயிருந்து பொங்கலை எடுத்து நாம தேவருக்கு ஊட்டியது. இதைக் கண்ட அனைவரது கண்களிலும் ஆனந்த நீர் சொரிந்தது. மகனை வாரியணைத்து மகிழ்ந்தார் தாம்ஸேட்டி.

இதிலேயிருந்து நாம தேவரின் புகழ் எங்கும் பரவியது. நாமதேவர் வளரவளர அவர் அறிவோடு பக்தியும் வளர்ந்தது.

திருமண வயது வந்ததும் தாம்ஸேட்டி பல இடங்களிலும் நாமதேவ ருக்காகப் பெண்தேடினார். பகவான் அவர் கனவில் தோன்றி ராஜாபாய் என்ற பெண்ணை மணம் பேசச் சொன்னார். குணாபாயிடம் இதைச் சொன்னால் அவள் அதை ஒப்புக் கொள்ள வில்லை.

''ராஜா பாயின் தந்தை பெரிய பணக்காரர். நாமோ தையல்காரக் குடும்பம். சம்பந்தம் பேசுவதென்பது முட்டாள் தனம்'' என்று தாம்ஸேட்டி யோடு வர மறுத்து விட்டாள்.

தாம்ஸேட்டி எல்லாம் பகவான் பாரமென்று நினைத்து ராஜாபாய் வீடு தேடிச் சென்று தம் கனவைச் சொல்லி பெண் கேட்டார்.

ராஜாபாயின் தந்தை "என் மகள் நாமதேவனது பக்திப்பெருமை கண்டு அவனையே மணப்பேன் என்று பிடிவாதமாக இருப்பது உண்மையே. ஆனால் என்மகளை மணக்க வேண்டுமென்றால் ஆயிரம் பொன் பரிசப் பணம் தரவேண்டும். சம்மதமென்றால் மேற் கொண்டு பேச்சைத் தொடரலாம். ஏழ்மை சகதியில் என் மகள் துன்பப்பட நான் சம்மதிக்க மாட்டேன்" என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டார்.

தாம்ஸேட்டி என்ன பதில் சொல்ல முடியும்? தலை குனிந்தபடி வீடு திரும்பினார். அன்று நள்ளிரவு தாம்ஸேட்டியின் வீட்டு முற்றத்தில் கற்கள் பொதெல் பொதெலென்று வீசப்பட்டன. கம்பும் கழியுமாக வந்து பார்த்தபோது திருடன் தப்பி ஓடிவிட்டான். காலையில் எழுந்து கற்களை

அப்புறப்படுத்தலாமென்று பார்த்தால் அத்தனையும் தங்கக் கட்டிகள்! எடுத்து ஒரு ஓரமாய் குவித்து வைத்துவிட்டு பகவானின் கருணையை நினைத்து பஜித்தனர்.

ஒரு நல்ல நாளில் ஆயிரம் பொற்காசுகளோடு ராஜாபாயைப் பெண் பேசப் போகலாமென தீர்மானித்தனர். அங்கே ராஜாபாய் "வந்த சம்பந்தத்தை தந்தை முறித்து விட்டாரே என்ற வேதனையில் இருந்தாள்.

பண்டரி நாதன் ருக்மாயாயுடன் ஏழ்மையான நாமதேவரின் பெற்றோர் வடிவில் ராஜாபாயின் தந்தை முன் நின்றான்.

ராஜாபாயின் தகப்பனாருக்கு சினம் தலைக்கேறியது. "பொழுது விடிந்ததும் வந்து விட்டீரோ? நேற்று பேசாமல் போனீர்களே இன்று ஆயிரம் பொன் கூலி பெறுமளவுக்கு தையல் துணிகள் வந்து விட்டதோ?" என்று பரிகாசமாய் கேட்டார்.

தாம்ஸேட்டி வடிவிலிருந்த பாண்டு ரங்கன் "தனித்தனியாக இருக்கும் துண்டுகளை தையல் இணைக்கிறது. பண்டரி நாதனும் என்னைப் போலொரு தையல்காரனே! பிறவிகளை இணைத்து தைக்கிறான். வேண்டாமென்று நினைத்தால் வெட்டி விடுகிறான். எங்கோ பிறந்தவர்களை திருமணம் என்ற பெயரில் சேர்க்கிறான். சரி, சரி... முகம் சுளிக்காதீர்... விஷயத்துக்கு வருகிறேன். பரிசப்பணம் ஆயிரம் பொன். நகைகள் பதினாயிரம் பவுன். திருமணச் செலவுக்கு இருபதினாயிரம் பவுன். எல்லாம் இதில் இருக்கிறது. ராஜாபாய்க்குப் பிடித்த நகைகளைச் செய்யுங்கள். திருமண ஏற்பாடும் உங்களது தான். இன்றைக்கே நல்ல முகூர்த்தம்; நான்வருகிறேன்" என்று சொல்லியபடி மூட்டையோடு பொற்காசுகளைக் கொடுத்தார்.

ராஜாபாயின் தந்தை அதிர்ச்சியில் ஆடாமல், அசையாமல் உட்கார்ந் திருக்க ஓடி வந்தார் ஒரு அந்தணர்.

"சம்பந்தி ஐயா...! ஒரு விஷயம் சொல்ல மறந்து விட்டாராம் தாம்ஸேட்டி. தங்களை அழைத்து வரச் சென்னார்" என்று அழைக்க, பணத்தைக் கொடுத்த பிறகும் நிச்சயதார்த்தம் நடத்தாதிருப்பது அழகல்ல என்று ராஜாபாயின் தந்தை உறவினர்களுடன் தாம்ஸேட்டியின் வீடு நோக்கி நடந்தார்.

தியானத்திலிருந்து எழுந்த தாம்ஸேட்டிக்கு இறைவனின் லீலைகள் எதுவும் தெரியாது. ராஜாபாயின் பெற்றோர், உறவினருடன் வருவது கண்டு எல்லாம் பகவான்செயல் என்று அவர்களை உபசரித்து அமர வைத்தார் தாம்ஸேட்டி.

கூட வந்த அந்தணர் குடுகுடுவென்று ஓடி, இரவு விழுந்து குவித்து வைத்திருந்த பொற்கட்டிகளை ஒரு கூடையில் அள்ளி "இதை எங்கே கொட்ட தாம்ஸேட்டி?" என்று கேட்க லட்சாதிபதி திகைத்தார். கூடையிலே பவுன்களை அள்ளும் கோடீஸ்வரரிடம் ஆயிரம் பொன் வேண்டும் என்று நிபந்தனை விதித்த அற்பனானோமே என்று வேதனைப்பட்டார். தாம்ஸேட்டி "திருமணச் செலவுகளுக்கு தேவைப்பட்டதை இதிலிருந்து எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூற,

"சம்பந்தி, என்னை மன்னித்து விடுங்கள். கீழ்த்தரமாய் நடந்து கொண்டு விட்டேன். நகைகளுக்கென்றும், விவாக ஏற்பாடுகளுக் கென்றும் நீங்கள் தந்ததே ஏராளம். நான் செல்வந்தன் என்ற திமிர் அடங்கியது. என் மகளுக்கு இதைவிடவும் நல்ல இடம் கிடையாது. உங்கள் மகனுக்கு அவளை மணமுடித்து என்னை கௌரவிக்க வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்.

தாம்ஸேட்டி திகைத்தார். பிறகு மேல் விபரம் அறிந்ததும் பகவானே தன்வடிவில் சம்பந்தம் பேசி இருக்கிறார் என்றறிந்ததும், ஆனந்த பரவசரானார்.

பகவான் பேசி முடித்த திருமணமாயிற்றே! அதன் கோலாகலத்துக்கு கேட்க வேண்டுமா! நாமதேவரும், ராஜாபாயும் வீணையும், நாதமுமாக வாழ்ந்தனர்.

எந்தப்புராணத்தை, எந்த தொண்டர் கதையை வேண்டு மானாலும் புரட்டிப் பாருங்கள். அதிதி உபசாரமும், விருந்தோம்பலும் இல்லாமல் இருக்காது. தான், தருமம் பக்திக்கு அஸ்திவாரம்.

நாம தேவரும் அதில் சளைக்கவில்லை. பசி என்று வந்தவருக்கு இல்லை என்ற பேச்சு இல்லை. தினந்தோறும் நூற்றுக் கணக்கான பேருக்கு வடித்துக்கொண்டிருந்தால் குபேரன் கூட குசேலன் ஆகிவிடுவானே!

நாமதேவருக்கு எப்போதும் பஜனை, பிரவசனம் இதுதான். அவருடைய தாய் குணாபாய் கஷ்டப்பட்டு கொஞ்ச வருமானத்தில் ஏதாவது உணவு தயார் செய்து நாமதேவருக்குச் கொடுத்தால் அதையும் பசி என்று வருந்தும் ஏழைக்குத் தந்து விடுவார்.

ஒரு நாள் ஒரு மாட்டு வண்டி நாமதேவர் வீட்டு வாசலில் வந்து நின்றது. முண்டாசு கட்டிய அழகிய மாட்டுக்காரன் "நாமதேவர் வீடு இது தானா?" ரொம்ப தாகமாயிருக்கிறது. கொஞ்சம் தண்ணீர் கொடுங்கள்" என்று கேட்டான்.

குணாபாயிக்கு ரொம்ப எரிச்சல். "சந்திரபாகா நதியில் ஏராளமாய் தண்ணீர் ஓடுகிறது. போய் குடிக்க வேண்டியது தானே! ஊரில் வேறு கிணறு, குளம் இல்லை... நாமதேவன் வீடுதான் கண்ணுக்குத் தெரிகிறதாக்கும்!" என்று கூப்பாடு போட்டாள். மாட்டுக்காரன் போவ தாயில்லை.

"நாமதேவன் இல்லையா? நான் என்ன சாப்பாடா கேட்டேன்! தண்ணீர் தானே... அதற்காக இவ்வளவு கோபமா? வீட்டுக்கு வந்த வங்களுக்குப் பதில் சொல்கிற அழகா இது!" என்று பதிலுக்குக் கத்தினான்.

"எங்க வீட்டுத்திண்ணையிலே உட்கார்ந்து எங்களையே தூஷணை யாய் பேசுகிறாயா? நாமதேவன் கோவிலிலே முட்டிக் கொண்டிருக்கிறான். அங்கே போய் கத்து... முதலில் இடத்தை காலிபண்ணு... சரியான அடாவடியாய் இருக்கிறாயே" என்று கூறி தாம்ஸேட்டியும் விரட்டினார்.

"நல்ல அம்மா, நல்ல அப்பா... அந்த கேசவ சௌகார் நாமதேவனைப் பற்றி அப்படிப் புகழ்ந்தாரே! இங்கே எல்லாம் நேர்மாறாய் இருக்கிறது.... லட்சம் வராகன் கொண்டு வந்தவனுக்கு நல்ல உபசாரம்... அந்தம்மா உள்ளே இருந்தபடியே விரட்டி அடிக்கிறது..." என்று அலுத்துக் கொண்ட வண்டிக்காரன் திண்ணையிலிருந்து வண்டிக்குத் தாவினான். அவன் கால்பட்டு ஒருபை வாய் அவிழ்ந்து பொற்காசுகள் வீதியெங்கும் சிதறின.

'லட்சம் வராகன்' என்ற வார்த்தையைக் கேட்டதும் குணாபாய் உள்ளிருந்து ஓடிவந்தாள். "அப்பா, ஆடை முழுவதும் கிழிசல்... வெளியே வர வெட்கப்பட்டு உள்ளே இருந்து விட்டேன்' எங்களை மன்னித்து விடு.

கேசவசௌகார் யார்? அவர் எதற்காக லட்சம் பொன் நாமதேவனுக்குக் கொடுத்தார்? விபரமாகச் சொல்” என, தாம்ஸேட்டியும் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினார்.

“நாம தேவன் அன்னதானம் செய்கிறான். நாமும் அதில் பங்கு பெறுவோம், என்று சொல்லி கேசவ சௌகார் லட்சம் பவுன் கொடுத்தனுப்பினார். ஒரு பையில் பத்தாயிரம் பொற் காசுகள் உள்ளன. பத்து பைகள் மொத்தம். எண்ணிக் கொள்ளுங்கள். கீழே இறைந்ததையும் எடுத்துக் கொள்ளுங்கள். அப்புறம் குறைந்ததென்று சொல்லப் போகிறீர்கள்! கேசவ சௌகாரின் ஊர் வைகுந்தபுரம். நான் போய் வருகிறேன்” என்றபடி பைகளை இறக்கித் திண்ணையில் வைத்தான்.

குணாபாய் “அப்பா, தாகமென்றாயே... தண்ணீராவது குடித்து விட்டுப்போ “ என்று கூப்பிட்டாள். “அதுதான் சந்திர பாகா நதி நிறைய தண்ணீர் ஓடுகிறதாகச் சொன்னீர்களே... போய் நானும் குளித்து, மாட்டையும் குளிப்பாட்டி, தண்ணீர் வேண்டிய அளவு குடித்துக் கொள்கிறேன்” என்று புறப்பட்டு விட்டான்.

"அப்பா, இந்தக் கிழவர்களை மன்னித்துவிடு... ஒருவாயாவது சாப்பிட்டுப் போனால் தான் திருப்தியாக இருக்கும் என்று தாம்ஸேட்டி மன்றாட "சரி, குளித்து விட்டு வருகிறேன்.." என்று விடுவித்துக் கொண்டு போனவர்தான்! திரும்பி வரவே இல்லைஸ

நாமதேவர் வந்து விஷயங்களைக் கேள்விப்பட்டு, வந்தவர் இறைவனே என அறிந்து மெய் சிலிர்த்து "அப்பனே, எனக்காக பொருள் சுமந்து வண்டியோட்டி வந்தாயோ" என உருகினார்.

வந்திருப்பவர் பகவான் என அறியாமல் அலட்சியம் செய்ததற்காக குணாபாயும், தாம்ஸேட்டியும் வருந்தினர்.

விருத்தி பண்ணாத செல்வம் எத்தனை காலம் வரும். லட்சம் பொன்னும் நிமிஷமாக கரைந்து விட்டது. வீட்டையும் விற்றாயிற்று. திறந்த வெளியில் குடிசை போட்டுக் கொண்டு வசித்தனர்.

ராஜாபாய்க்கு நிறை மாதம். வலிகண்டு துடிக்கிறாள். வெளியே செல்ல முடியாதபடி காற்றும், மழையும், புயலும் வீசுகின்றன. மரங்கள் மளேர் மளேர் என்று முறியும் சப்தம். அருகில் எங்கோ இடி இடிக்கின்றது. பளிச் பளிச் சென்ற மின்னல்.

பகவானின் சக்ராயுதம் நாமதேவர் குடிசைக்கு மேல் குடையாக காத்து நின்றது. அப்படியும் சாரல் அடித்ததில் ஒரு பக்கச் சுவர் இடிந்து விழுந்தது. சங்கு சக்கரதாரி ஓடி வந்து தோள்களால் முட்டுக் கொடுத்தார். ருக்மாபாய் மண் குழைத்துக் கொடுக்க சுவாமி சுவர் வைத்துக் கொண்டிருந்தார். பீதாம்பர மெல்லாம் களிமண்...!

கூரையைத் தாங்கி நிற்கும் மூங்கில் கம்பு ஒன்று 'மளுக்'கென்று முறிந்தது. மாற்று மூங்கில் வைத்துக் கட்டினார் ஸ்வாமி.

காலையில் எழுந்து பார்த்தால் அது பத்தரை மாற்றுத் தங்கக் கம்பென்று தெரிந்தது. வந்தவர் பண்டரி நாதனே எனப்புரிந்து கொண்டனர்.

ஒரு மூங்கிலை வாங்கி முட்டுக் கொடுத்து விட்டு தங்க மூங்கில் கம்பை விற்று, சில காலம் வாழ்க்கை ஓடியது. ஒரு வருடம் கழிந்தது. மறுபடி திருமணம். இந்த நிலையில் நாமதேவரின் குழந்தைக்கு ஆண்டு நிறைவு

வந்தது. ராஜாபாயின் தந்தை காதுகுத்து விழாவை சிறப்பாகச் செய்ய விரும்பினார்.

தாம்ஸேட்டி சம்பந்திக்குச் சிறப்பாக எதிர்சீர் செய்ய முடிய வில்லையே எனக் கண்ணனிடம் கதறி அழுதார்.

ஒரு சேட் வடிவத்தில் பண்டரிநாதர் வந்து ஏராளமான பொன்னை நாமதேவரின் நண்பர் கொடுக்க சொன்னதாக தாம்ஸேட்டியிடம் கொடுத்து விட்டுச் சென்றார். காது குத்து விழாவுக்கும் வந்து ஏராளமான சீர்வரிசைகள் செய்தார்.

"நூறு கோடி அபங்கங்கள் பாடி உன்னை மகிழ்விக்கப் போகிறேன்" என நாமதேவர் கோவிலே கதியாகக் கிடந்தார். காலப் போக்கில் அழிந்தவை போக நமக்குக் கிடைத்தவை 2500 அபங்கங்களே.

பாரத தேசம் முழுவதும் ஞானேசுவரரோடு கூடி பக்தி மார்க்கத்தைப் பரப்பினார் நாமதேவர். பாண்டு ரங்கன் ஆலயத்தை புனருத்தாரணம் செய்தார். விசோபகேசர் என்ற பெரியாரிடம் குருதீட்சை பெற்றார்.

6. ஸ்ரீ ஜனாபாய்

இராமனுக்குப் பட்டாபிஷேகம் கட்ட விடாமல் கைகேயிக்குப் போதனை செய்து மனதை மாற்றியவள் மந்தரை என்னும் கூனி என்பதை அனைவரும் அறிவீர்கள்.

அவளுடைய வக்ரபுத்தி, குரோதமனப்பான்மை கிருஷ்ணாவ தாரத்திலும் கூனாகப் பிறந்தாள். ஏகவக்ரை என்பது அவளது பெயர். கம்சனுக்கு தினமும்சந்தனம் அரைத்துக் கொண்டு போய் கொடுப்பது அவள் பணி. கண்டவரெல்லாம் அவளைக் கேலி செய்யுமளவு விகாரமாய் இருந்தாள்.

கண்ணன் கம்சனை வதம் செய்ய மதுரா நகர்வந்த போது அவளிடமிருந்து வலிய சந்தனத்தை வாங்கிப் பூசிக் கொண்டு அவள்

மோவாயைத் தொட்டு நிமிர்த்தி, அவள் கூனை சரியாக்கினார். கவானுடைய கோமள விரல்கள் பட்டதும் அவள் அழகியானாள். அவருக்கே தன்னை அர்ப்பணித்தாள்.

அடுத்த பிறவியில் அவளே ஜனாபாயாகப் பிறந்தாள். அவளுக்கு த்துவயதில் பெற்றோருடன் பண்டரிபுரம் வந்தாள். அன்று கார்த்திகை ாத ஏகாதசி. எங்கும் பஜனை. நாம சங்கீர்த்தனம்.

தரிசனம் முடிந்து பெற்றோர் புறப்படுகையில் அவர்களோடு ஊர் திரும்ப ஜனாபாய் மறுத்துவிட்டாள். எப்படியெல்லாமோ நய பயமாய் கூப்பிட்டும் பயனில்லை.

தத்துவ விளக்கங்களை அருவியாய் சொரிந்தாள். 'இவ்வாலயமே என் வீடு, இதுவே என் ஊர். எனக்கு பண்டரி நாதனே தாய், தந்தை, குரு, கணவன், பிள்ளை, நண்பன் எல்லாம். நான் அவரை விட்டு வருவதற்கில்லை'.

அவன் கோவிலைமெழுகிக் கோலமிடுவதிலும், விளக்கேற்றுவதிலும், அவனது அடியாருக்குத் தொண்டு செய்வதிலும் உள்ள இன்பம் வேறெதிலும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. இல்லற வாழ்க்கையில் உழல நான் விரும்பவில்லை" எனத் தீர்மானமாகச் சொல்லி விட்டாள்.

பெற்றோர் முதலில் மனம் கலங்கினாரென்றாலும் பிறகு "ஏதோ ஒரு தெய்வ சக்தி இவளை இப்படிப் பேச வைக்கிறது. அதுவே இவளைக் காப்பாற்றும்" என்று முடிவு செய்து ஆலயத்தில் இவளை விட்டுப் போனார்கள்.

கூடியிருந்தவர்கள் இவள் பேச்சுத் திறமையையும், கேட்ட கேள்விக் கெல்லாம் அழகாகப்பதில் சொல்வதையும் பார்த்து வியந்தனர்.

நாம தேவர் வழக்கம் போல் ஆலயம் வந்தார். ஜனாபாயின் செய்தி யாவும் அறிந்தார். அவளை ஊருக்கனுப்ப எப்படியெல்லாமோ பேசிப் பார்த்தார். ஜனாபாய் எதற்கும் அசைவதாயில்லை. நாமதேவர் தியானத்தில் ஆழ்ந்து ஜனாபாயின் முற்பிறவி ரகசியத்தை அறிந்து கொண்டார்.

பின் "குழந்தாய், கோவில் நாலுபேர் வருகிற இடம். பெண்கள் இரவு தங்குவதற்கு ஏற்றதல்ல.

என்னோடு என்வீட்டில் இரு. என் மனைவியும், தாயும் உனக்காதரவாய் இருப்பார்கள். தேவைப்பட்ட போது நீ கோவிலுக்கு வரலாம். பஜனை செய்யலாம். பாடலாம். பண்டரி நாதனிடம் பக்தி கொண்டோரெல்லாம் என் சொந்தமே" என அழைத்தார்.

ஜனாபாயும் சந்தோஷத்தோடு அவருடன் சென்றாள். வீடு சென்றதும் நாமதேவர் குணாபாயை அழைத்து, "அம்மா, இந்தப் பெண் பாண்டுரங்க பக்தை; பெற்றோரோடு பண்டரிநாதனை தரிசிக்க வந்தவள் அவரைப் பிரிய மனமில்லாததால் ஊர் செல்ல மறுத்து விட்டாள். இனி இவள் நம் வீட்டில் தான் தங்குவாள். வற்புறுத்தி அழைத்து வந்திருக்கிறேன். அன்போடு நடத்த வேண்டும்" என்று கூறி ஜனாபாயின் முற்பிறவி இரகசியத்தையும் கூறினார்.

குணாபாய் கொஞ்ச நாள், ஜனாவை அன்புடன் பெண்போலவே நடத்தினாள். ஜனாபாய் நாம தேவரோடு பஜனை செய்வதும், கோவிலுக்குச் செல்வதுமாக நாட்கள் இனிதே கழிந்தன.

ஜனாபாய் மங்கைப்பருவ மடைந்தாள். வீட்டு வேலைகளை உற்சாகமாகச் செய்தாள்.

"யாராவது "நீ நாமதேவருக்கு என்ன உறவு?" என்று கேட்டால், "கண்ணனை விநாடி நேரம்கூட மறக்காத நாமதேவர் வீட்டு வேலைக்காரி; அடிமை" என்பாள்.

குணாபாய் கொஞ்சம் மூர்க்க குணம் வாய்ந்தவள். கடுகடுப்புடன் பேசுவாள்.

இந்த சமயம் தான் பகவான் கொட்டும் மழையிலும், குளிரிலும் சுவர் வைத்துக் கொண்டிருந்தார். காலையில் எழுந்து பார்த்த நாமதேவர் "ஐயோ, இதென்ன அபசாரம்... தங்கள் கரங்கள் மண் பிசைவதா" எனத் துடிக்க,

பகவான் "நாமதேவா, நீ குடும்பத்தை கவனிக்காமல் சதா என் 'பாட்.டைப்' பாடுகிறாய். நான் உன் பாட்டைப் படுகிறேன்; இல்லாவிட்டால் குணாபாய் "அந்த நாசமாய் போகிற பண்டரிநாதன் பின்னே என் பிள்ளை சுற்றுகிறானே என்று கோபிப்பாளே" என்றார் குறுஞ்சிரிப்புடன்.

பேச்சுக்குரல் கேட்டு குணாயி வெளியில் வந்தாள். பகவானின் கோலத்தைக் கண்டு "மாதவா, வறுமையின் கொடுமையும், பிள்ளையின் பற்றின்மையும் கண்டு நான் திட்டியதுண்டு. என்னை மன்னித்து என் வீட்டில் இன்று சாப்பிடவேண்டும்" என்று கால்களில் விழுந்து வேண்டினாள். இரு கைகளையும் பிடித்து உள்ளே அழைத்துச் சென்றாள். "ஜனா, சீக்கிரம் வெந்நீர் போடு. பகவான் குளிக்க வேண்டும். சுகதியாயிருக்கும் பீதாம்பரத்தை வாங்கி துவைத்துக் காயவை. சல்தி" என அடுக்கடுக்காக உத்தரவிட்டாள் குணாயி.

ஜனாபாயின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. வெடவெடவென்று சுளிரோடு நடுங்கிக் கொண்டிருந்த கண்ணனை இதமான வென்னீரில் நீராட்டி செய்தாள். பீதாம்பரத்தை சுத்தமாகத்துவைத்து உலர்த்தினாள்.

சுளித்துவிட்டுவந்த ஜகந்நாதன் அங்கே கொடியில் காய்ந்து கொண்டிருந்த ஜனாபாயின் கந்தல் தாவணியை எடுத்து அணிந்து கொண்டார். அங்கிருந்த ஒரு கயிற்றுக் கட்டிலில் கொல்லைப் புறத்திலிருந்து புற்களைப் பிடுங்கி வந்து பரத்தினாள் ஜனா. அதன்மேல்

கந்தல் சாக்குகளையும், சாக்குளின் மேல் துணிக் கந்தைகளையும் விரித்தாள்.

"ஆகா, சேஷசயனத்தை விட மெத்தென்று என்ன அற்புதமா யிருக்கின்றது" என்று சொல்லிப் படுத்துக் கொண்டார் பகவான். ஜனாபாய் அன்புடன் "இரவு முழுவதும் சேற்று நீரிலே நின்று கால்கள் கடுத்திருக்கும்" என்று சொன்னபடி கால்களைப் பிடித்து விட்டாள். கொஞ்ச நேரத்தில் பீதாம்பரம் உலர்ந்துவிட்டது. ஜனாபாய் அதை உடுக்கும்படி கொண்டுவந்து தர,

"ஜனா, என் பீதாம்பரத்தைவிட உன் ஆடை எனக்கு மிகவும் பிடித் திருக்கிறது. அதைப்போய் திருப்பிக் கேட்கிறாயே" என வேண்டா வெறுப் பாக மாற்றிக் கொண்டார். இதற்குள் சமையலாகிவிட்டது. சுவாமிக்கு ஜனாபாய் ஜலம்விட, ராஜாபாயும், நாமதேவருமாக பாதம் அலம்பி அர்ச்சனை செய்தனர். பின் பகவானை உணவருந்த அழைத்தார் நாமதேவர்.

சுவாமியின் வலது பக்கத்தில் நாமதேவர் அமர, நாமதேவரின் புதல்வர்களான விட்டலன், மகாதேவன், நாராயணன், கோவிந்தன் நால்வரும் பக்கத்திலும் எதிரிலுமாக உட்கார, "பகவானோடு இன்று நானும் சாப்பிடப் போகிறேன்" என்று குணாயியும் உட்கார்ந்தாள்.

"ஜனாபரிமாறுவாள். நானும் உட்காருகிறேன்" எனத் தட்டை வைத்துக்கொண்டு ராஜாபாயும் உட்கார்ந்துவிட்டாள்.

ஜனாபாய் பரபரவென்று எல்லோருக்கும் பரிமாறினாள். பகவான் சாப்பிடாமல் வேடிக்கை பார்க்க நாமதேவர் குழம்பும், சாதமும் நெய்விட்டுப் பிசைந்து சுவாமிக்கு ஊட்டலானார். பகவானும் புன்னகையோடு ரசித்துச் சாப்பிட்டார். எல்லோரும் மெய்மறந்து இதை வேடிக்கை பார்த்தனர்.

"மற்றவர்கள் சரி... பகவான் ஜனாபாயும் நம்மோடு சாப்பிடட்டும் என்று ஒரு வார்த்தை சொல்லவில்லையே! நாமதேவரைப் போல் சுவாமிக்கு பிசைந்து ஊட்டும் பாக்கியம் எனக்கு எப்போது கிடைக்கும்?" என மனவேதனையோடு ஒரு ஓரமாய் நின்றிருந்தாள் ஜனா. பக்த பராதீனனல்லவா? ஜனாபாய் இப்படி நினைத்ததும் ஜகன்னாதனுக்கு சாப்பாடு ருசிக்கவில்லை.

"நாமதேவ், போதும்... முன்னால் இருந்த ருசி இப்போது இல்லை" என்று தடுத்துவிட்டார். நாமதேவர் "ஜனாபாய் உம்மோடு சாப்பிடாததால் போஜனம் ருசிக்கவில்லை" என்று கேலியாகச் சொன்னார். எல்லோரும் சாப்பிட்டு முடிக்கும் வரை பகவான் சாதத்தை அளைந்து கொண்டு உட்கார்ந்திருந்தாரே தவிர ஒரு பருக்கை கூட சாப்பிடவில்லை. பிறகு கை கால் கழுவிக் கொண்டு ஜனாபாய் தயாரித்துக் கொடுத்திருந்த படுக்கையில் படுத்துத் தூங்கிவிட்டார்.

நாமதேவரும், குழந்தைகளும் கூட படுத்துவிட்டனர். குணாபாய் இறைவன் மீதி வைத்திருந்த சோற்றோடு இன்னும் கொஞ்சம் போட்டு குழம்பு விட்டு கலந்து ஜனாவிடம் கொடுத்து "பகவான் வைத்த மீதம் தேவர்களுக்கும் கிடைக்காது. எச்சில் என்று நினைக்காதே" என்று சொல்லித் தந்தாள்.

ஜனாவும் அதை அமுதமென நினைத்து தனக்கென்று ஏற்பட்ட அறையில் கொண்டு போய் சாப்பிடத் தொடங்கினாள். அப்போது திருட்டுத்தனமாக உள்ளே நுழைந்த மாதவன் "ஜனா, நீ உடன் சாப்பிடாததால் சாப்பாடே செல்லவில்லை. சரியாகச் சாப்பிடாததால் பசி வயிற்றைக் கிள்ளுகிறது. எனக்கும் இரண்டு வாய் கொடேன்" என்று கேட்டு வாங்கிச் சாப்பிட்டார்.

"சுவாமி, இது எச்சிலாயிற்றே" என ஜனா வேதனைப்பட, "சபரி இப்படிச் சொல்லவில்லையே" என பகவான் வாது செய்ய, பேச்சுக்குரல் கேட்டு குணாபாய் எட்டிப் பார்த்தாள். திடுக்கிட்டாள்.

தூங்கிக் கொண்டிருந்த நாமதேவரை எழுப்பி, "கேட்டாயா இந்த அக்கிரமத்தை! புதுச்சோற்றை மணக்க மணக்க நீ ஊட்டிய போது பிடிக்கவில்லை என்று சொன்ன மாயன் ஜனாவின் எச்சில் சோற்றை என்ன ஆனந்தமாய் உண்டு, அங்கே கட்டாந்தரையிலேயே தூங்கவும் ஆரம்பித்து விட்டானே" என அங்கலாய்த்தாள்.

"அம்மா, இதில் என்ன ஆச்சரியம்? ஜனாவின் அன்பு தூய்மையானது. அங்கே பக்தியையும், பாசத்தையும் பகவான் பார்க்கிறார். எச்சிலைப் பார்க்கவில்லை. குரோத மனப்பான்மையை விடு. நேரமும், காலமும் அவருக்குக் கிடையாது. அவர் இஷ்டப்படி அவரைத் தூங்கவிடு.

தொந்தரவு செய்யாதே" என சொல்லிவிட்டு மறுபடி நாமதேவர் படுத்துவிட்டார். விடியற்காலையில் திருவை எந்திரத்தில் கோதுமை அரைக்கும் வேலையை குணாயி ஜனாவுக்குக் கொடுத்திருந்தாள்.

முந்தின இரவு வெகுநேரம் பகவானோடு பேசிக் கொண்டிருந்த களைப்பு; விடிந்ததும் ஜனாவால் எழுந்திருக்க முடியவில்லை. பகவான் எழுப்பினார். சுருண்டு சுருண்டு படுத்தாள் ஜனாயி. நீர் கொண்டு கண்களைத் துடைத்து, தலையை கைகளால் ஒதுக்கி, தூக்கி உட்கார முடி வைத்தார். ஜனா "சுவாமி, இன்று அரைக்க கோதுமை கொஞ்சமே உள்ளது. விருந்தாக நீங்கள் வந்துவிட்டதால் பெரும் பகுதி நேற்றே செலவழிந்து விட்டது. அந்த கோதுமையை அரைக்க இப்போதே எழுந்திருப்பானேன்" என்று கேட்க,

ஜனார்த்தனன் "இதோபார்" என ஒரு மூட்டை அரிசியைக் காண்பித் தார்."எல்லாம் அவன் செயல்" என்று அரைக்கத் தொடங்கினாள் ஜனா. "பாடிக்கொண்டே அரை அம்மா... உன் பாடலைக் கேட்கவே இந்த விடிகாலை வேளை காத்திருந்தேன்" என்றார் பகவான். "சிரமம் தெரியாமல் இருக்க நானும் சுற்றுகிறேன்" என்றார்.

சக்கரம் ஏந்தும் கை திருகை எந்திரத்தின் முளையைப் பற்றிச் சுற்றியது. ஜனாபாட ஆரம்பித்தாள். ஜனாவின் கைதான் முளைச் குச்சியைப் பிடித்திருந்தது. சுற்றியதெல்லாம் பரந்தாமன்தான்.

தசாவதாரங்களைப் பற்றி அருமையாகப் பாடினாள். "பேஷ், பேஷ் அருமையாயிருக்கிறது; அந்த அடியை இன்னொரு தடவை பாடு" என்றெல்லாம் நடு நடுவில் சொல்லிக் கொண்டு வந்தார் பகவான்.

திருகை எந்திரத்தின் ஓசை வெகுநேரம் கேட்கவும் "இவ்வளவு கோதுமை எங்கிருந்து வந்தது?" என்று யோசித்தாள் குணாயி. நடுநடுவில் ஆண்குரல் கேட்கவும், எரிச்சலோடு உறக்கம் கலைந்து, எழுந்து வந்தாள். அவள் தடி ஊன்றிநடப்பது வழக்கம்.

ஜனாபாயுடன் பேசிக் கொண்டிருப்பது மாறுவேடத்திலிருந்த மாயவன் என்பதை அறியாமல்,

"வயசுப் பெண்! கொஞ்சம் கூட கூச்சமில்லாமல் எவரோடு பேசிக் கொண்டிருக்கிறாய்? இவ்வளவு அரிசி எப்படி வந்தது? யாரடா நீ?

திருட்டுப்பயலே" என்றபடி கையிலிருந்த கம்பால் ஜனாபாய்க்கு நாலுஅடியும், பகவானுக்கு இரண்டு அடியும் போட்டாள். "அம்மா, என் பெயர் விட்டோயா... நேற்று பண்டரிநாதன், தான் வந்து சாப்பிட்டதால் உணவு தீர்ந்துவிட்டதென்று கூறி இந்த அரிசியைக் கொடுத்தார். இவள் மேல் பரிதாபப்பட்டு வேலையைப் பகிர்ந்து கொண்டேன். அதற்கு இப்படி அடிக்கிறீர்களே" என்றார் பகவான்.

இந்தக் குரல் கேட்டு நாமதேவர் ஓடிவந்தார்.

"என்ன காரியம் செய்தாயம்மா... பக்திக்கு அடிமைப்பட்டு நம் இல்லத்தில் ஊழியம் செய்யும் பகவானை அடித்துவிட்டாயே" என்று கம்பைப் பிடுங்கி எறிந்தார். பகவான் காலடியில் விழுந்து,

"என் தாயின் பிழை பொறுக்க வேண்டும். என்பொருட்டு அடியும் பட்டீரே! என் அன்னையை யசோதையைப் போல் நினைத்து மன்னித்துவிடும்" என்று வேண்டினார். குணாபாய் பகவானை அடித்து விட்டதை எண்ணிக் கையைப் பிசைந்தாள். பகவானிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள். இதற்குள் பொழுது விடிந்தது.

பகவான் பீதாம்பரத்தை களைந்துவிட்டு மறுபடி ஜனாயியின் கந்தல் உடையை அணிந்து கொண்டு புறப்பட்டார். ஜனாபாய் திடுக்கிட்டாள்.

"சுவாமி, பீதாம்பரம் இதோ இருக்கின்றது. மறந்து போய் என் தாவணியை கட்டிக் கொண்டீர்களா? நேற்று உடுத்திக் கொண்டதாவது துவைத்தது. இது வெறும் அழுக்கு; சர்வ கந்தல்" என்று கத்தி அழைத்தாள்.

"ஜனா, மறந்து உடுத்திக் கொண்டதானாலும் இன்று நான் கொண்ட மகிழ்ச்சி என்றும் நான் அடைந்ததில்லை. அதைத் தட்டிப் பறித்து விடாதே! அதேபோல் என் பட்டுவேஷ்டியை நீ தாவணியாக சற்றிக் கொள்வாய் எனக்கு ஆனந்தமாயிருக்கும். செய்வாயா?" என்று கேட்டார் மாயவன்.

உடனே உடுத்திக் கொண்டாள் ஜனா. மகிழ்ச்சியோடு ஆலயம் சென்றார் மாயவன். கதவைத் திறந்த கோயில் அர்ச்சகர்கள் விக்கிரகத்தின் மேல் இருக்கும் அழுக்குக் கந்தலாடையைக் கண்டு அதிர்ச்சியுற்று நின்றனர்.

"சுவாமி, இதென்ன கோலம்? நேற்றுச் சாற்றிய காசிப்பட்டாடை எங்கே? எந்த பக்தன் தரித்திரம் தீர்க்க தானம் செய்தீர்? உமது மேனியிலிருந்த தங்க, வைர நகைகள் எங்கே? பக்தி செய்தால் எதைத் தருவது என்ற விவஸ்தை இல்லாதவராயிற்றே? கதவு மூடியிருக்க கள்வன் வருவதெப்படி?" என்று ஒருவர் புலம்ப,

மற்றொருவர் "சன்னதி மூடி இருந்தாலும் பகவான் சோகாமேளர் வீட்டிற்குப் போய் வரவில்லையா? பாண்டுரங்கனுக்கு இது பழக்கம்தான்! இந்தத்துணியை ஜனாபாய் கட்டிப் பார்த்திருக்கிறேன். இரவு சுவாமி அங்கே போயிருந்தால் பீதாம்பரம் அவளிடம் இருக்கும். போய் விசாரிக்கலாம் வாருங்கள்" என, எல்லோருமாக கோயிலை பூட்டிக் கொண்டு, நாமதேவர் வீட்டிற்குப் போனார்கள்.

நாமதேவர் அனைவரையும் வரவேற்றார். ஜனாபாயின் உடலில் ஸ்வாமியின் காசிப்பட்டைப் பார்த்ததும் வந்தவர்கள் சந்தேகம் தீர்ந்தது.

"ஜனாபாய். இந்தப்பட்டு வந்திரம் உன்னிடம் வந்ததெப்படி?" என்று விசாரித்தனர்.



"நேற்று அடித்த புயலில், மழையில் குடிசைக் சுவர்விழ பகவான் சுவர் வைத்தார். நாமதேவர் அவரை உள்ளே அழைத்து உண்பித்தார். நானும், அவருமாக எந்திரத்தில் மாவரைத்தோம். பகவான் மகிழ்ந்து அளித்த பரிசு இது" என்று விபரமாகச் சொன்னாள் ஜனாயி.

"சரி, இந்தப் பட்டையும், ஆபரணங்களையும் கொடுத்து விடு" என்று அவர்கள் கேட்க, "ஆபரணமா? சுவாமி பீதாம்பரம் மட்டும் தானே கொடுத்தார்!" என்று திடுக்கிட்டுக் கூறினாள் ஜனா.

"சரி, உன் அறை எது காட்டு... சோதனை செய்து பார்த்து விடுவோம்" என்று அவர்கள் கூற, கள்ளமறியாத ஜனா தன் இருப்பிடத்தைக் காட்டினாள். அர்ச்சகர்கள் அங்கிருந்த தட்டுமுட்டுச் சாமான்களை ஒதுக்கி, கலைத்து சோதனையிட்டனர்.

மாயவன் லீலை அறிவார் யார்? ஒன்று பாக்கி இல்லாமல் எல்லா நகைகளும் கிடைத்தன.

"மோசக்காரி, திருடி" என்று குற்றம் சாட்டப்பட்டாள் ஜனாபாய். இதற்குள் விஷயமறிந்து நாமதேவர் வீட்டு வாசலில் கூட்டம் கூடிவிட்டது.

ஜனாபாய் தரதரவென்று அரசவைக்கு இழுத்துச் செல்லப்பட்டாள்.

ஜனாபாயின் படுக்கை அறையிலேயே நகைகள் அகப்பட்டதாலும், நகைகள் இல்லவே இல்லை என்று ஜனாபாய் பொய் சொல்லி மறைக்கப் பார்த்த குற்றத்திற்காகவும் கழுவிலேற்றும்படி தீர்ப்பளித்தான் மன்னன். கழுமரத்தடியில் கட்டுக் கடங்காத கூட்டம்.

"ஊரெல்லாம் காற்று, மழை, புயலினால் நாசமாகியும் நாமதேவர் இல்லம் மட்டும் புதுப்பூச்சோடு நிற்கின்றது. ஜனாபாய் ஊரையும், உறவையும் துறந்த பக்தை. அவளைப் பாண்டுரங்கன் கைவிடமாட்டான். ஏதாவது அற்புதம் நிகழ்த்தி காப்பாற்றி விடுவான். அதைக் காணலாம்... வாருங்கள்" என ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டு திருவிழாக் காண வருபவர்போல் வந்து அலைமோதினர்.

அதிகாரிகளும், அர்ச்சகர்களும் கழு மைதானத்துக்கு ஜனாபாயை இழுத்து வந்தனர். ஜனாபாய் தலைக்கு மேல் கைகளைக் குவித்து, "கண்ணா, நீ எங்கிருக்கின்றாய்? திரௌபதி மானம்காத்தவனே!

நிரபராதி தண்டனை அடைவது எந்தவிதத்தில் நியாயமானது? நான் என்ன தவறு செய்தேன்" எனக்கதறினாள்.

பக்திக்கு உருகும் பண்டரி நாதனல்லவா! கழுமரம் கரைந்து தண்ணீராக ஓடிற்று. கூடி இருந்தவர்கள் "ஜெய, ஜெய விட்டல, பாண்டுரங்கா, பக்த ரட்சகா" என பஜனை செய்து கரகோஷமிட்டனர்.

பாண்டுரங்கன் ஓடிவந்து ஜனாபாயை அணைத்துக் கொள்கிறார். எப்படி? கிரீடம் சரிந்து விழுகிறது. மயில் பீலியும், கொண்டையும் கலைந்து கிடக்க, ஜனாபாயின் அழுக்குக்கந்தல் அரையில்...! அதுவும் நழுவ ஒருகையில் சுருட்டிப் பிடித்துக் கொண்டு, சங்கு சக்கரத்தை மறந்து அலையக் குலைய ஓடிவருகிறார்.

"ஜனாயி, உன் மகிமையை உலகறியச் செய்வதற்காக நாடகம் ஆடி விட்டேன். என்னை முன்போல் மறக்காமல் பாட்டுப்பாடி மகிழ்விப்பாயா?" என்று கேட்டார் பகவான்.

"மதுசூதனா... உம்மை மறப்பதா? இப்பிறவியிலா! நடக்கக் கூடியதா?" என, அவர் திருவடிகளில் விழுந்து வணங்கினாள் ஜனா. அர்ச்சகர்கள் "உங்கள் பெருமை அறியாமல் தண்டனை வாங்கிக் கொடுத்ததற்கு மன்னிக்க வேண்டும்" என ஜனாபாயின் காலில் விழுந்து மன்றாடினர்.

மக்கள் அனைவரும் 'தெய்வ மங்கை' என ஜனாபாயைப் போற்றினர்.

ஞானேசுவரர் என்ற பண்டரி பக்தர் ஒரு நாள் கோவிலுக்கு வரும்போது சுவாமி தாம் எழுதிக் கொண்டிருந்ததை பின்புறமாய் மறைக்க,

"சுவாமி, அது என்ன? காட்டவேண்டும்" என்று வலுக்கட்டாயமாக வாங்கிப்பார்த்தார் ஞானேசுவரர்.

அது ஜனாபாயின் கீதங்கள். "எல்லாம் சுய புராணமாயிருக்கிறதே! உமது லீலைகளைப் பாட அடியார்கள் நாங்கள் இருக்கும் போது உமக்கு ஏன் இந்தக் கடினமான வேலை?" என்று கேட்டார் ஞானேசுவரர்.

"ஜனாபாயின் பாடல்கள் அழகியது. படிக்கப்படிக்க ஆனந்த மாயிருக்கிறது. அவை பொக்கிஷங்கள் என்பதால் பிரதி எடுக்கின்றேன். சரி, வாரும். அவளைப் போய் பார்த்து வருவோம்" என்று ஞானேசு வரரோடு நாமதேவர் வீடு நோக்கிச் சென்றார்.

நாமதேவர் இருவரையும் நமஸ்கரித்து, உபசரித்து, உள்ளே அழைத்துச் சென்று உட்காரவைத்தார்.

இதற்குள் பகவான் நாமதேவர் வீடு நோக்கிச் செல்லும் செய்தி பரவி, பக்தர்கள் ஒவ்வொருவராக நாமதேவர் வீட்டில் கூடி விட்டனர்.

ஜனாபாய் புறக்கடையில் சாணம் பிசைந்து வரட்டி தட்டிக் கொண்டிருந்தாள். கை வரட்டி தட்டிக் கொண்டிருக்க, வாய் பகவான் புகழைப் பாடிக் கொண்டிருந்தது. உள்ளே நடந்த விஷயம் எதுவும் அவள் அறியாள்.

"ஜனாவைப் பார்த்து விட்டு வருகிறேன்" என மதுசூதனன் பணிந்திருக்க, நாமதேவர் அவரை அமர்த்தி, குணாபாயைப் பார்த்து "ஜனாபாயைக் கைகால் கழுவிக் கொண்டு வரச் சொல்லுங்கள், என,

ராஜாபாய் ஓடிச் சென்று அப்படியே சொல்லி, ஜனாபாயை அழைத்து வந்தாள்.

அதற்குள் ஞானேசுவரர் "மாயன் செய்த காரியம் அறிவீர்களா? ஜனாவின் கீதங்கள் அம்ருதம். அதை எழுதி வைக்காவிட்டால் உலகுக்கு பெருத்த நஷ்டம் என்று சொல்லி தானே எழுதுகிறார் பகவான். என்பாடலை சச்சிதானந்தர் எழுதினார். நாமதேவர், ஜனாபாயின் பாடல்களை பாண்டுரங்கனே படி எடுக்கிறார் என்று கூற, அப்போது அங்கு வந்த ஜனா வெட்கமடைந்து தலைகுனிந்தாள்.

கூடி இருந்த பக்தர்கள் இந்த வார்த்தைகளைக் கேட்டதும், பெருத்த ஆரவாரம் செய்தனர்.

ஜனாபாயின் புகழும், அவள் கீதங்களின் உயர்வும் பண்டரிபுரம் முழுவதும் பரவின.

7. ஸ்ரீ ஞானேசுவரர்

சென்ற பகுதியில் ஞானேசுவரர் பாண்டுரங்கன் கோவில் சென்று பண்டரிநாதரோடு பேசினார் என்று அறிந்திருப்பீர்கள். அந்த ஞானேசுவரரைப்பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும் என்று ஆவலாயிருப்பீர்கள்.

ஞானேசுவரரின் பாட்டனார் பெயர் கோவிந்த பண்டிதர். பாட்டி நிருபமா. கோவிந்த பண்டிதருக்கு அரண்மனையில் கணக்குப் பிள்ளை உத்தியோகம். சம்பளம் குறைவென்றாலும் செல்வாக்கு அதிகம். ஆனாலும் பக்தியில், பக்தர்களுக்கு அன்னமிடுவதில் அவருக்கு ஈடு எவருமில்லை என்று வாழ்ந்தார்.

ஞானேசுவரின் தந்தை விடோபா நெடுநாள் தவமிருந்து பெற்ற செல்வர். அவர் திருமணம் செய்து கொள்ளாமல் வெகுநாள் முரண்டு பிடித்தார். பெற்றோர் வற்புறுத்தவே, ஸ்தல யாத்திரை செய்த பிறகு திருமணம் செய்து கொள்வதாக சாக்குச் சொல்லி புறப்பட்டுவிட்டார்.

அலங்காவதி என்ற ஊருக்கருகில் விடோபா வரும் போது இருட்டி விட்டது. இனி பயணம் செய்வது நல்லதல்ல என முடிவு செய்தார் விடோபா. இரவு எங்கே தங்குவது என்ற பிரசினை. சீதோபந்து என்பவரிடம் விசாரித்தார். அவர் நல்ல மனமுடையவர். அன்புடன் தன் இல்லத்திலேயே உணவிட்டு தங்க வைத்தார்.

அன்றிரவு பகவான் சீதோபந்துவின் கனவில் தோன்றி, "இன்று உன் வீட்டில் தங்கி இருப்பவனே, உன் பெண்ணுக்கு கணவனாவான்" என்று சொல்லி மறைந்தார். காலையில் விடோபா கண் விழித்ததும் தன் கனவைக்கூறி தன்மகளை மணக்கும்படி வேண்டினார் சீதோபந்து.

"என் பெற்றோரிடமிருந்து தப்பி தலயாத்திரை வந்தேன். ஓர் இரவு உணவும், தங்க இடமும் தந்து விட்டுப் பெண்ணைத் தலையில் கட்டப்பார்க்கிறீரா? பகவான் சொல்வதானால் என் கனவில் வந்து சொல்லி இருப்பாரே" எனக் கோபித்து, கேலியான வார்த்தைகளைக் கொட்டினார் விடோபா.

சீதோ பந்து "நான் பொய் சொல்லவில்லை. இன்று இரவும் இங்கேயே தங்கி இருங்கள். கட்டாயம் தங்கள் சொப்பனத்திலும் பகவான் வந்து சொல்வார்" என்று பணிந்து வேண்டிக் கொள்ளவே, விடோபா 'அதையும் பார்ப்போம்' என்ற வீம்புடன் அன்றும் அங்கேயே தங்கினார்.

அன்று பூராவும் சீதோபந்துவும், அவர்மனைவியும் இது பற்றியே பேசினர். இதைக் கேட்டுக் கொண்டிருந்த அவர்கள் மகள் ருக்மாபாய் விடோபாவையே தன் கணவனாக மனதில் வரித்துக் கொண்டாள்.

இரவும் வந்தது. சீதோபந்து "நான் பொய்யனல்ல என்று நிரூபிக்க வேண்டியது உனது பொறுப்பு. ஆட்டுவிக்கும் கயிறு நீயே... வெறும் பம்பரம் நான்" என வேண்டிக் கொண்டு படுக்கைக்குப் போய்விட்டார்.

இறைவன் விடோபாவின் கனவில் தோன்றி, "சீதோபந்து சொன்னது பொய்யே. ருக்மாபாயை மணம் செய்து கொள்" என்று கூறி மறைந்தார். விடோபா திடுக்கிட்டு எழுந்தார். குளித்ததுபோல் உடலெல்லாம் வியர்வை வெள்ளம்.

"சே, சன்னியாசியை சம்சாரம் பிடித்துக் கொண்டதுபோல் பகவானுக்கு ஏன் இந்த வம்பு" என்று கோபம் வந்தது. பொழுது விடியும் சமயம்

சத்தம்போடாமல் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் கிளம்பிவிட்டார். "இனிமேல் இங்கிருந்தால் விபரீதமாய் சம்சாரச்சேற்றில் சிக்கிக் கொள்வோம்" என்று பயம்.

ஆனால் சீதோபந்துவின் மகள் இரவு முழுவதும் தூங்கவே இல்லையே! விடோபா புறப்படவும் ருக்மாபாய் ஓடிவந்து, "ஸ்வாமி, என்னையும் மணம் செய்து அழைத்துப் போவது தானே முறை... உள்ளே வாருங்கள்" என்று கூப்பிடவும், விடோபாவுக்குத் தூக்கி வாரிப்போட்டது. இதென்ன சோதனை என்ற வெறுப்பு! பிரம்மச்சரியத்துக்கு முட்டுக்கட்டையா என்ற ஆத்திரம்!

"சீ, பருவமடைந்தபெண், புலராத இந்தப் பொழுதிலே அன்னிய னோடு பேசலாமா? குலஸ்திரிக்கு இது அழகா? நான் நாடோடி... எனக்குத் திருமணம் பொருத்தமில்லை. நான் உன்னை மணக்கப் போவதில்லை... என்ன துணிச்சல்! சீ, போ... உள்ளே" எனச் சீறி விழுந்தார்.

"நேற்றே என் தந்தையிடம் கனவை மறுத்துவிட்டு நீங்கள் போயிருக்கலாம். அதைவிட்டு மறுபடி ஒருநாள் தங்கி 'கனவில் பகவான் சொல்கிறாரா' என்று பார்த்து, அப்புறமும் சொல்லாமல் ஓடுவது கோழைத் தனம். கணவராக வரிக்கப்பட்டவரோடு நிச்சயிக்கப்பட்ட பெண் பேசுவது குற்றமாகாது" எனப் பலவாறு கெஞ்சினாள் ருக்மாபாய்.

சப்தம் கேட்டு சீதோபந்துவும், அவர் மனைவியும் எழுந்து வந்து விட்டனர். அவர்கள் விடோபாவிடம் நியாயம் சொல்ல, விடோபா அவர்களைக் கண்டபடி திட்டினார். ஒரே அமளி! அப்போது "ஏ, விடோபா! ருக்மாபாய் பதிவிரதை... அவளை ஏற்றுக்கொள்" என்ற அசரீரி கேட்டது.

அதற்கு மேல் மறுக்க முடியவில்லை விடோபாவுக்கு! வேண்டா வெறுப்பாக ருக்மாபாய்க்குத் தாலி கட்டினார். மூன்றாம் நாள் விடோபா சீதோபந்துவிடம், "ஸ்தல யாத்திரையைப் பாதியில் நிறுத்தக் கூடாது. பிரம்மசாரியாகப் புறப்பட்டவன் கிரகஸ்தனாகிவிட்டாலும், தொடங்கியதை முடித்து விடுகிறேன்" என்றார். ஊரார் பலரும் இதை ஒப்புக் கொண்டனர்.

சீதோபந்துவுக்கு மருமகன் மேல் நம்பிக்கை இல்லை. அப்படியே ஓடி விடுவானோ என்ற அச்சம். வெளியே சொல்லவும் முடியாத தர்மசங்க

டமான நிலை. "எனக்கும் வெகுநாளாய் ஸ்தல தரிசனம் செய்ய வேண்டுமென்று ஆவல். நானும் வருகிறேன்" என்று மாப்பிள்ளையை உடும்பாகப் பற்றிக் கொணடார்.

கொஞ்ச நாளில் ஸ்தல யாத்திரை முடிந்து மாப்பிள்ளையும், மாமனாரும் திரும்பி வந்தனர். வேறுவழியின்றி ருக்மாபாயுடன் பெற் றோரைக் காண 'ஆபேகாம்' திரும்பி வந்தார். கூட ருக்மாபாயின் பெற் றோரும் வந்தனர்.

மகனைக் காணாமல் ஏங்கிக் கொண்டிருந்த கோவிந்த பண்டிதரும், நிருபமாவும் மருமகளோடும், சம்பந்தியோடும் வந்த புதல்வனைக் கண்டு பேரானந்த மடைந்தனர். மருமகளை முத்தமிட்டு வரவேற்றார் நிருபமா. பெண்ணுக்கு புத்தி சொல்லி விட்டுச் சென்றனர் பெற்றோர்.

தாமரை இலை நீர் முத்துப் போல் தான் வாழ்க்கை நடத்தினார் விடோபா. இந்நிலையில் அவர் பெற்றோரும் ஒருவர் பின் ஒருவராக இறைவனடி சேர்ந்தனர்.

"பெற்றோரின் அஸ்திகளை கங்கையில் கரைக்கப்போகிறேன். நீ பிறந்தவீட்டில் போய் இரு" என்று ருக்மாவை அனுப்பிவிட்டார். வாடி மெலிந்து சோகமே உருவாய் வந்த புதல்வியைத் தேற்றினார் சீதோபந்து.

"இனிமேல் எங்கே அவர் காசியிலிருந்து திரும்பப் போகிறார்! என்மாமனும், மாமியும் இறந்ததிலிருந்து "சட்டி உடைந்தது, சம்சாரம் விட்டது" என்று பாடிக் கொண்டிருக்கிறார். காவி உடை அணிந்து சன்னியாசி ஆகி விடுவாரோ என்று பயமாக இருக்கிறது. மனைவி என்று ஆசையோடு ஒரு நாள் பேசியதில்லை. ஒரு முழம் பூ வாங்கித்தந் ததில்லை. ஏன், அவர் முகத்தில் சிரிப்பே நான் பார்த்ததில்லை. யாருக்குத் தான் நான் அவருக்கு மனைவி," எனப்பலவாறு நொந்து கூறினாள் ருக்மாபாய்.

சீதோபந்து "இது கடவுளே முடித்து வைத்த விவாகம். நீ மங்கள கௌரி விரதம் இருந்தால் புருஷன் உன்னைத் தேடி வருவான்" என ஆறுதல் கூறினார்.

ருக்மா மங்கள **கௌரி விரதம்** இருந்தாள். கங்கையில் அஸ்தியைக் கரைத்த விடோபா, ஸ்ரீபாத சுவாமிகள் என்பவரைக் குருவாக அடைந்து

ஞானோபதேசம் பெற்றுக் கொண்டார். வெள்ளை ஆடையை நீக்கி காஷாயம் ஏற்றுக் கொண்டார்.

அன்று வெள்ளிக்கிழமை; உச்சிப்பொழுதாகிவிட்டது ருக்மாவின் கௌரி பூஜை முடிய. "பாவம், ருக்மா.... நீ இப்படி உருகித் தவம் கிடக்கிறாய்... உன் அருமை அந்த விடோபாவுக்குத் தெரிகிறதா... என் தம்பி சொல்கிறான் உன் கணவரைச் சாமியாராக காசியில் பார்த்தேனென்று!" ஒருத்தி ஏற்றிவிட்ட அவநம்பிக்கை தீ சீதோபந்துவின் வயிற்றில் பற்றி எரிந்தது.

"அம்பிகே, உன்னை நம்பியவர் கதி இதுதானா?" அப்படியானால் என் மகளைப் பாழாக்க இப்படி ஒரு திருமணத்தை ஏன் நடத்தினாய்?" எனப் பலவாறு ஏங்கினார், துடித்தார், அழுதார், கோபித்தார் சீதோபந்து. இவருடைய வேதனை லோகாமாதாவுக்குக் கேட்டுவிட்டதன் எதிரொலி யோ, என்னவோ! ஸ்ரீ பாத சுவாமிகள் உலக முன்னேற்றத்துக்காக யாத்திரை புறப்பட்டார். விடோபாவின் குரு இவர்தான் என ருக்மாபாய் வீட்டவர்களுக்குத் தெரியாது. அன்று பகல் அலங்காவதியில் அவர் தங்கினார். அவரை தரிசித்துத் தங்கள் துன்ப மூட்டைகளை இறக்க, ஜனங்கள் பழம், பூ, பிரசாதத்தட்டுடன் வரிசையில் நின்றனர். அதில் ருக்மாவும் ஒருத்தி.

ருக்மாவின் முறை வந்தது. ஏதும் பேசாமல் சோகமாக வணங்கி எழுந்தாள்.

"என்னம்மா வருத்தம்?" என்று கேட்டார் சுவாமிகள். ருக்மாவுக்கு பேச முடியாதபடி துக்கம். தொண்டையை அடைத்தது. அருகிலிருந்தவள் "இவள் கணவர் இவளை விட்டுப் போய் விட்டார்" என்றாள்.

"இவ்வளவுதானே! வருந்தாதே! பிரம்மா, விஷ்ணு, சிவ, சக்தி அம்சங்களைக் குழந்தைகளாகப் பெறுவாய்" என வாக்குச் சொன்னார். அனைவரும் திகைத்தனர். "என்னம்மா யோசிக்கிறாய்! 'புருஷனையே காணோமாம், பிள்ளையா' என்றா... உனக்கு இராமாயணம் தெரியுமில் லையா? தசரதனுக்கு அப்போது பிள்ளையில்லை... குருட்டுப் பெற்றோ ரின் தாகம் தீர்க்க நீர்மொள்ள வந்த ரிஷி குமாரனை, ஏதோ விலங்கு என்று நினைத்து தசரதன், அம்புவிட அவன் பெற்றோர் சாபமிட்டனராம்! "எங்களைப் போல் சாகும் போது புத்திரனைப் பிரிந்து தவிப்பாய்"

என்று... தசரதனுக்கு ஒரு விதத்தில் சந்தோஷம்! கண்டிப்பாய் புத்திரன் பிறப்பான்; நான் மலடன் அல்ல... அப்போது தானே புத்திரனைப் பிரிய முடியும் என்று...! சாவித்திரி எமனை மடக்கியதும் பிள்ளை வரம் கேட்டுதானே! அஞ்சாதே மகளே! சூரிய சந்திரர் திசைமாறினாலும் என் வாக்கு பொய்க்காது... பார்" என்று அன்புடன் வாக்களித்தார்.

பின் சீதோபந்துவை அழைத்து விபரங்களெல்லாம் விசாரித்தார். தன் சீடன் விடோபாவே ருக்மாவின் கணவன் எனப் புரிந்து கொண்டார். யாத்திரையை அத்தோடு நிறுத்திக் கொண்டு காசியை அடைந்தார்.

குருதேவர் எதிர்பாராமல் சீக்கிரமாக வந்தது கண்டு சீடர்கள் மகிழ்ந்தனர்.

"விடோபா... இங்கேவா" என்றழைத்தார் ஸ்ரீபாதர். வினயத்தோடு அருகில் வந்தார் விடோபா.

"பொய்யைத் துறப்பவன் தான் துறவி... நீ உண்மையைத் துறந்திருக்கின்றாய்"

குருவின் சொற்கள் விளங்காமல் விடோபா விழித்தார். "திருமணமா காதவர்களுக்கு மட்டுமே நான் தீட்சை அளிக்கிறேன் என்பது தெரியுமல்லவா?" ஸ்ரீ பாதர் இப்படிக் கோபமாகக் கேட்கவும், விடோபா வுக்கு ருக்மாவையோ, சீதோபந்துவையோ குருதேவர் சந்தித்திருக்கிறார் என்று புரிந்துவிட்டது.

"நான் ஒருநாள் கூட இல்லறம் நடத்தியதில்லை சுவாமி" பணிவோடு சொன்னார் விடோபா.

"நீ சொல்வது முற்றிலும் தவறு. ஒரு பெண்ணின் கழுத்தில் மூன்று முடிச்சுகள் போட்டதுமே ஆணுக்கு, சில கடமைகள் வந்து விடுகின்றன. அவைகளை முடித்துவிட்டு துறவறத்துக்கு வா."

குரு சொல்லைத் தட்டாத சீடன் என்பது உண்மையானால் மறுபேச் சின்றி என்னோடு புறப்படு. இதுவரை நான் செய்த தவப்பலனை உனக்குப் பரிசாக அளிக்கிறேன். உத்தமப்பெண் கண் கலங்கினால் எங்கு சென்றாலும், எதைச் செய்தாலும் துன்பம் விடாது. புறப்படு" என்றார்.

விடோபா அரைமனதோடு குருவைப் பின் தொடர்ந்தார். "அம்மா, நீ செய்த கௌரி விரதம் பலித்தது. இதோ உன்கணவன்" என அலங்காவதியில் ருக்மாவிடம் விடோபாவை ஒப்படைத்தார் ஸ்ரீபாதர்.

"ஒழுங்காக இல்லறக் கடமைகளைச் செய்வதே நீ எனக்குச் செய்யும் பணி" என்று விடோபாவிடம் கட்டளையிட்டுச் சென்றார். துறவறத்தி லிருந்து மறுபடியும் குடித்தனம் நடத்த வந்ததற்காக ஊர் மக்கள் விடோபா வைக் கேலி செய்தனர். ஜாடைப் பேச்சுக்கள் அவரைத் துன்புறுத்தின.

மனிதர்களே இல்லாத காட்டுப் பகுதியில் போய் குடிசை கட்டிக் கொண்டு வாழ்ந்தனர் விடோபாவும், ருக்மாபாயும்.

சிவபெருமானது அம்சமாக முதலில் நிவர்த்தி நாத்தும், மஹாவிஷ்ணுவின் அம்சமாக ஞானேசுவரரும், பிரம்மாவின் அம்சமாக சோபான் தேவரும், பராசக்தியின் அம்சமாக முக்தாபாயும் பிறந்தனர்.

குழந்தைகள் நால்வரும் அழகிலும், அறிவிலும், நற்குணத்திலும், சாதுரியத்திலும் ஒருவரை ஒருவர் மிஞ்சுவதாயிருந்தனர். அவர்கள் விளையாட்டெல்லாம் உயர்தரமாயிருந்தது. தெய்வக்கதைகள், பூஜை, பஜனை என்றே விளையாடினர்.

குழந்தைகள் விளையாட்டைக் கண்டு பொங்கிப் பூரித்தனர் பெற்றோர். பெருமைப்படுவதோடு பெற்றோர் கடமை முடிவதில்லையே! சிறந்த கல்வி, நல்ல உணவு, உடை என்று எத்தனை தேவைகளை நிறைவேற்றித் தரவேண்டி இருக்கிறது! இதற்கு நடுக்காட்டில் வசதி ஏது?

விட்டோபாவை நாட்டுக்கு அழைத்தாள் ருக்மா. சொல் அடிபட்ட வலியின் தழும்பு நெஞ்சில் இருந்ததால், ஊருக்குள் வரமறுத்தார் விடோபா.

ருக்மா குழந்தைகளுடன் தகப்பனார் இருக்குமிடம் சென்றாள். அங்கே அவர் நிலை... மனைவியை இழந்த சீதோபந்து உஞ்சவிருத்தி எடுத்து சாப்பிட்டு வந்தார். ருக்மாவைக் கண்ட சீதோபந்து கலங்கினார். "குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்க வேண்டுமானால் ஏதாவது தொழில் செய்ய வேண்டும். போய் விடோபாவை அழைத்துவா" என்று யோசனை சொன்னார் சீதோபந்து.

சரியென்று குழந்தைகளைத் தந்தையிடம் விட்டு விட்டுச் சென்றாள் ருக்மா. அங்கே போனால் குடிசையில் கணவரைக் காணோம்.

எப்போது காவி உடைக்கு மாறுவோம் என சமயத்தை எதிர் பார்த்திருக்கும் கணவனைத் தனியே விட்டுச் சென்றது தப்பாகி விட்டதே, என நொந்து கொண்டாள். தேடித் தேடி அலைந்து கடைசியில் கண்டு பிடித்தாள். தந்தையின் கருத்தைச் சொல்லி பலவாறு அழைத்தாள். அவரோ "இறைப்பணியே தன் கடமை" என்று தீர்மானமாகச் சொல்லி விட்டார். ருக்மாபாய் வருத்தத்தோடு தந்தையிடம் திரும்பி வந்தாள்.

சீதோபந்து உஞ்சவிருத்திக்கு ஞானேசுவரரையும் கூட அழைத்துச் செல்வார். நிவர்த்திநாத் பெரியவனாதலால் தனியே செல்வான். ஞானதேவர் இனிய குரலில் பாடுவார். குழந்தையின் குரலினிமையில் மயங்கிக் கஞ்சன்கூட தானம் செய்வான், சீக்கிரமே உஞ்சவிருத்திப் பை நிறைந்து விடும். அதனால் ஞானேசுவரர் தூக்குமளவு ஒரு குட்டிப்பையும் கொண்டு போவார்கள்.

ஒருநாள் கால்தடுக்கி ஞானேசுவரர் விழ, அவர் பையிலிருந்த அரிசி யெல்லாம் தெருப்புழுதியில் சிதறி விட்டது. தாத்தாவுக்கு வந்ததே கோபம்! 'பளிரெ'ன்று ஒரு அறை விட்டார். இரண்டாவது அடிக்குக் கையை ஓங்க, தற்காப்புக்காக ஞானேசுவரர் அந்தக் கையைத் தள்ள, வயதான சீதோபந்து அலையக்குலைய விழ, பெரியபை அரிசியும் மண்ணில் சிதறுண்டது.

"பாவி, பொறுப்பற்ற தகப்பனுக்குப் பிறந்த பொறுப்பற்ற பிள்ளை! ஆறுபேர் வயிற்றில் மண்ணடித்து விட்டாயே! எல்லாரும் வயிற்றில் ஈரத்துணியைச் சுற்றிக் கொள்ள வேண்டியதுதான்! கிழவன், பாட்டன் என்ற இரக்கம் இல்லாமல் பிடித்தா தள்ளுகிறாய்" என்று கத்திக் கொண்டே சீதோபந்து விரட்ட, ஞானேசுவரர் அடிக்கு பயந்து ஓட, அப்படியும் அன்றைக்கு ஞானேசுவரருக்கு நல்ல அடி!

"அன்று யசோதையிடம் மத்தினால் மொத்துப்பட்ட மாதவன் இன்று தாத்தா கையால் அடிபடுகிறான்" என்று தேவர்கள் கண்ணீர் சிந்தினார்கள். நல்ல மனம் படைத்தவர்கள் விழுந்த அரிசிகளைத் திரட்டி, மண் போகப் புடைத்து சீராக்கிக் கொடுத்து பாட்டனையும், பேரனையும் சமாதானப்படுத்தி வீட்டிற்கு அனுப்பி வைத்தனர்.

மற்றொருநாள் ஒரு செல்வந்தர்வீட்டு சமாராதனை. ருசியான பலகாரங்களை ஒரு கை பார்க்கப்போகிறோமென்று நாவில் நீர் ஊர தாத்தாவுடன், பேரன்கள் உட்கார்ந்திருந்தனர். பூஜை முடிந்து இலை போடப்பட்டது.

"சீதோபந்துவும், விடோபாவின் பிள்ளைகளும் உட்காருவதானால் நாங்கள் வெளியே போகிறோம். அவர்கள் போலி சன்யாசியின் குழந்தைகள். இவர்கள் சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட வேண்டியவர்கள். சீதோபந்துவும் அவர்களோடு வாழ்கிறதனால் உட்காரக்கூடாது" அவர்களைத் துரத்துங்கள்" என்று கூறி வைதீகர்கள் பலர் எழுந்து விட்டனர். நிவர்த்தியையும், ஞானேசுவரரையும் முதுகில் அறைந்து வெளியே தள்ளின புண்ணியவான்களும் உண்டு.

சீதோபந்து "குருநாதர் கட்டளைப்படி மீண்டும் சம்சாரம் நடத்த வந்தது ஒரு குற்றமா? சிவபெருமான் கபாலியாய் ஓடேந்தி அலைய வில்லையா? அர்ச்சுனன் தவவேடம் கொண்டபின் சுபத்திரையை மணக்க வில்லையா? தட்சிணாமூர்த்தியாய் தவவேடம் கொண்டவர் பார்வதியின் மணக்க மணக்கோலம் கொள்ள வில்லையா? தவசிரேஷ்டர்களான வசிஷ்டர், அகஸ்தியர் அத்திரி போன்றவர்களெல்லாம் குடும்பம் நடத்தவில்லையா?" எனப் பலவாறு வாதமிட்டார்.

வாதம் வலுத்தது. இவர் பேச்சு கேலிக்கிடமானது. அவர்கள் பலர்; இவர் ஒருவர். 'தனிமரம் தோப்பாகுமா?" கோபப்பட்ட சீதோபந்து கையில் அகப்பட்ட பாத்திரத்தை வீசி எறிந்தார். அந்தப்பாத்திரம் ஒருவர் நெற்றி யில் பட்டு இரத்தம் கசிந்தது.

என்னடா கிடைக்கும் என்றிருந்த கும்பல் சீதோபந்துவை அடித்து நொறுக்கியது. அவர் ஆடைகள் கிழிந்து, உடலெல்லாம் காயத்துடன் மயங்கி விழுந்துவிட்டார்.

அதுவரை பொறுமையாய் இருந்த ஞானேசுவரர் பொங்கி எழுந்தார். பந்தலுக்கு முட்டுக் கொடுத்திருந்த மூங்கிலை உருவினர். சிலம்பம் ஆட ஆரம்பித்து விட்டார்.

மகாவிஷ்ணுவின் சக்கரம் போல் மூங்கில் சுழன்றது. "ஐயோ, அம்மா, அப்பா" என்ற அலறல் எங்கும். பேசியவர்களெல்லாம் ஓடி ஒளிந்தனர்.

"கிழவனை அடித்த சூரர்களே! இந்தச் சிறுவனிடம் உங்கள் கைவரிசையைக் காட்டுங்கள்" எனச் சீறினார்.

பாரத யுத்ததில் பீஷ்மரின் அம்புகள் தரும் தொல்லை தாங்காமல் 'இந்தக் கிழவனை ஒழித்து விடுகிறேன்' எனச் சக்கரத்தைச் சுழற்றிக் கொண்டு ரதத்திலிருந்து குதித்த பார்த்தசாரதியைப் போல் இருந்தார் அப்போது.

தமையன் நிவர்த்திநாத் "ஞானேசுவரா, சாந்த மடைந்துவிடு, பொறுமையை வரவழைத்துக் கொள்" என்று அவரை சமாதானப் படுத்தினார். பின்னரே சாந்தமாகி தாத்தாவை மயக்கம் தெளிவித்து வீட்டுக்கு அழைத்து வந்தனர்.

அடிபட்டவர்கள் சும்மா இருப்பார்களா? வழக்கு அரசவைக்குப் போயிற்று. சீதோபந்துதான் படும்கையில் கிடக்கிறாரே! ஞானேசுவரர் மட்டும் விசாரணைக்கு வந்தார். ஞானேசுவரரிடம் வழக்கின் விபரங்களைத் தெளிவாகக் கேட்டறிந்து கொண்டான் மன்னன்.

"பிறப்பினால் மட்டும் ஒருவன் உயர்ந்து விடுவதில்லை. செயல்களி னாலேயே அவன் மதிக்கப்படுகிறான். என் தந்தை மது அருந்தினாரா? மாமிசம் உண்டாரா? பிற பெண்களைக் கற்பழித்தாரா? எதுவும் இல்லை. குருவின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடந்தார். வாமனனாய் தவவேடம் கொண்ட மகாவிஷ்ணு கண்ணனாய் அவதரிக்கும் போது பல மனைவியர்களை மணக்கவில்லையா? எது முரண்பாடு? பக்தர்கள்தரும் சமாராதனை வாமனனாய் அவதரித்த விஷ்ணுவுக்கா! கண்ணனாய் அவதரித்த நாராயணருக்கா? அல்லது பத்மாவதியை மணந்து கொண்ட ஸ்ரீனிவாசனுக்கா"?

அரசன் ஆடாது, அசங்காது சிலைபோல் ஞானேசுவரரின் வீராவே சமான பேச்சைக் கேட்டான். பிறகு வேதியர்களை நோக்கி, அரசன் "குற்றம் காண்பதே தொழிலாகக் கொண்டவர்களின் வழக்கு இது. வெறும் மந்திரங்களை மனப்பாடம் செய்து ஒப்பிப்பவர் எல்லாம் உயர்ந்தவர்கள் இல்லை.

உங்களோடு உட்காந்து சமபந்தி போஜனம் செய்ய இக்குழந்தை களுக்கு அருகதை இல்லை என்கிறீர்கள்! நிஜம்தான். இந்த எட்டு

வயதில், எண்பது வயது அனுபவத்தோடு பேசும் இவன் கால்தூசிக்கும் நீங்கள் ஈடாகமாட்டீர்கள்! அப்படி இருக்க அவன் உங்களோடு பந்தியில் உட்காருவது எப்படிப் பொருந்தும்...!

அறிவையும், ஆற்றலையும் கண்டு பொறாமைப்படுவது தவறு... குழந்தைகளையும், கிழவரையும் அடித்து பாபத்தை சேமித்துக் கொண்டீர்கள்! பொய்வழக்கு ஜோடிப்பவர்களுக்கு ஒருமுறை தான் மன்னிப்பு என்பது தெரியுமல்லவா?" என்று மடை திறந்தாற்போல் பேசவும், வெட்கித்தலை குனிந்து வேதியர்கள் சென்று விட்டனர்.

கிழிந்த ஆடையும், நலிந்த உடலும் கொண்ட ஞானேசுவரனை கட்டி அணைத்து முத்தமிட்டு மகிழ்ந்தார் மன்னர். பின் ஏராளமான பொன்னும், பொருளும் பரிசாகக் கொடுத்து ஒரு பல்லக்கில் ஏற்றி "தந்தையை நாட்டிற்கு அழைத்து வந்து மகிழ்ச்சியோடிருங்கள்" என அனுப்பி வைத்தார்.

எல்லோரும் எப்படியெல்லாமோ அழைத்தும் விடோபா வர மறுத்து விட்டார். ஞானேசுவரரும், நிவர்த்திநாத்தும் எப்படியாவது அழைத்து வந்து விடுவதாகச் சொல்லி காட்டில் தங்கி விட்டனர்.

சமாதி கலைந்து எழுந்த விடோபா, தம் மடியில் அமர்ந்திருந்த ஞானேசுவரரைப் பார்த்தார். "குழந்தாய்! நீ உன் தாத்தா, அம்மாவுடன் போகவில்லையா?" என அன்புடன் கேட்டார். "அவர்களோடு இவ்வளவு நாட்கள் இருந்து விட்டேன். உங்களோடு கொஞ்சநாள் இருக்கின்றேன்" என்றான் ஞானா.

"இங்கே காட்டில் சமைத்த உணவில்லை. நல்ல உடையில்லை. புலியும், சிங்கமும், நரியும், ஓநாயும் பாம்பும், கரடியும் உலாவும்... உங்களுக்கு பயமாயிருக்காதா?' அடுத்த கேள்வியை விடோபாகேட்க, "நாங்கள் ஊருக்குத் திரும்ப வேண்டுமென்றால் நீங்கள் வந்தால்தான்... உங்களுக்கில்லாத வசதிகள் எங்களுக்கும் வேண்டாம். உங்களை கடிக்கும் பாம்பும், புலியும் எங்களையும் கொல்லட்டும். நாட்டில் மட்டுமென்ன? மனித வடிவில் புலியும், நரியும், ஓநாயும், பாம்பும் நடமாடிக் கொண்டு தான் இருக்கின்றன. பயமில்லாத இடம் எது? "ஞானேசுவரர் கேட்க, திகைத்தார் விடோபா... இதையெல்லாம் பேச இவன் எங்கு கற்றான்? என்ன சாதுரியமான வாதம்! நயமான உவமைகள்!

"நான் சுட்டமண்... நீங்கள் பச்சைமண்... இரண்டும் ஒட்டுமா?" விடோபா தர்க்கித்தார். அவர்களோடு பேசப் பேச விவாதம் செய்ய ஆசை வளர்ந்தது.

"கங்கையிலே பாத்திரம் கழுவுவதால் கங்கை அசுத்தப்படாது. பாத்திரம் தான் முன்னிலும் புனிதமடையும். காற்றிலே தூசி வருகிற தென்று காற்றை வெறுத்தவர் எவருமில்லை. ஜனகன் அரசாட்சியில் இருந்தும் துறவியாய் வாழவில்லையா? மக்கள், மனைவி இவர்கள் நடுவிலும் சலனமற்று வாழ்ந்து காட்டுவதே உமக்கு மகிமை". இப்படிக் கூறிய நிவர்த்திநாத்தையும், ஞானேசுவரரோடு சேர்த்து அணைத்துக் கொண்டார் விடோபா.

இரண்டாம் முறையாக மைந்தர்களுடன் அலங்காவதியை அடைந்தார் விடோபா. அரசன் செய்தி அறிந்து விடோபாவுக்கு அழைப்பு அனுப்பினான்.

விடோபாவிடம் பல உபதேசங்கள், தத்துவ விளக்கங்கள், யோக சாதனைகள் பற்றித் தெரிந்து கொண்டான்.



விடோபா குடும்பத்தினர் அரசனிடம் பெற்றுவரும் சலுகைகளையும், மதிப்பையும் கண்டு பொறாமைப்பட்ட வேதியர்கள் இருபது பேர் சேர்ந்து பைடணபுரியில் இருக்கும் இராஜகுருவுக்கு, விடோபா துறவறம் ஏற்ற பின், இல்லறம் புகுந்து நான்கு பிள்ளைகள் பெற்றதையும், அவர்களைத் தாங்கள் தள்ளி வைத்திருப்பதையும், ஞானேசுவரன் தங்களை அடித்ததையும், அரசன் ஓரவஞ்சகமாகத் தீர்ப்பு வழங்கினான் என்றும், ஒன்றுக்குப் பத்தாக எழுதி அனுப்பினார்கள்.

இராஜகுரு இதனால் கொதித்துப் போயிருந்தார். அரசன் மந்திரியிடம், "அமைச்சரே, இவ்வூர் அந்தணர்கள் விடோபாவைத் தள்ளி வைத்தது மகாபாபம். அவரை தங்களில் ஒருவராக ஏற்று நடத்த வேண்டும்" என நம் ராஜகுருவிடம் அத்தாட்சிப் பத்திரம் வாங்கி வாரும்" என்றவர், விடோபாவிடம் "சுவாமி, உங்கள் மைந்தர்களை அழைத்துக் கொண்டு மந்திரியோடு பைடணபுரி சென்று வருக. நமது ராஜகுரு சில வேதாந்த ஆராய்ச்சிகளுக்காக அங்கே தங்கி இருக்கின்றார். உம்மையும், குழந்தைகளையும் காண ஆவலாக உள்ளார்" என்று மட்டுமே சொல்லி வைத்தார். எல்லோரும் பைடணபுரி வந்து சேர்ந்தனர். ஓலையை ராஜகுருவிடம் சேர்ப்பித்தார் அமைச்சர். ராஜகுரு "இவர்கள் தள்ளப்பட வேண்டியவர்களே! அதுவே நியாயம்" என சாதித்தார். "இப்படி ஒவ்வொருவருக்கும் பரிதாபம் காட்டினால் நாட்டில் போலித்துறவிகள் நிறைந்து விடுவார்கள்" எனக் குத்தலாகப் பேசினார்.

ஞானேசுவரர் "பாபமே செய்யாத மனிதன் உலகில் கிடையாது. கண்ணப்பர் கொடுத்த மாமிசத்தை உண்டதால் சிவன் கீழ் குலமா? பிள்ளைக்கறி சமைக்கச் சொன்னதால் கொலைகாரனா? தந்தை சொற்படி தாயை வெட்டியதால் நீங்கள் பெருமாளை வெறுத்து விட்டீர்களா? வந்தியிடம் பிட்டை யாசித்ததால் சிவன் பிச்சைக்காரனா? கோபிகைகளிடம் பக்தியை உணர்த்த சேலையை ஒளித்த கண்ணன் பெண் பித்தனா? அதெல்லாம் நிஜமென்றால் என் தந்தையும் வேட தாரிதான்" என்று வாதமிட்டார். விடோபா, "ஞானேசுவரா, எழுந்திரு, நாம் போவோம். பகவான் செயல்களுக்கு காரண காரியம் கற்பிக்கும் அளவு நாம் பெரியவர்கள் அல்ல. வரட்டு வாதங்கள் ஞானமாகாது" என்று கூறி புறப்பட்டு விட்டார்.

"நாய் குரைப்பதினால் சூரியன் ஒளி மங்கிவிடாது. வாதங்களைக் கண்டு வாதம் செய்யத் தெரியாதவன் தான் அஞ்சுவான். அரசனது ஓலைக்குப் பதில் வாங்காமல் வரமாட்டேன்" என்றார் ஞானேவரர் இருந்த இடம் விட்டு அசையாமல்.

குருவுக்கு ஒரே ஆத்திரம் "சாமியார் பெற்ற துஷ்டா! என்னை நாயென்று தூஷிக்கும் உன்னோடு பேச நான் தயாரில்லை. ஓடிவிடு. மன்னனுக்கு பதில் உன்னிடம் தரமாட்டேன்" என சீறினார். "பிரம்ம குலத்தில் பிறந்த இராவணன் செயலினால் எவ்வளவு பெரிய துன்மார்க்கனாயிருந்தான்! இரணியகசிபுவின் மகன் பிரகலாதன் கெட்டவனாயிருந்தானா? உக்கிரசேன மகாராஜா கம்ஸனைப் பெற என்ன பாபம் செய்தார்?" என்று நிவர்த்தி நாத் கொதித்துப் பேசினார்.

இப்படி சகோதரர்களின் ஆணித்தரமான உபமானங்களினால் வாதம் வலுத்தது. எதிர்த்து வாதம் செய்ய திறமையற்ற குருநாதருக்குக் கோபம் மேலிட்டுச் சிறுவர்களைத் துச்சமாகப் பேசினார்.

ஞானேசுவரர் தெருவில் போய்க் கொண்டிருந்த ஒரு எருமையைக் காட்டி "உங்களோடு தர்க்கிப்பதைவிட இந்த எருமையோடு தர்க்கித்தாலும் பலன் உண்டு. வேதங்களையும், புராணங்களையும் முழுக்கக் கற்றவர்கள் இப்படிப் பொருந்தாத விதண்டா வாதம் செய்ய மாட்டார்கள்" என்றார். குருநாதர் சினம் தலைக்கேற "உண்மைதான்... இனம் இனத்தோடு... உன்னோடு பேசும் அறிவு அதற்கு மட்டுமே உண்டு" என்றார்.

"இந்த எருமையின் ஞானத்தில் ஆயிரத்தில் ஒரு பங்கு கூட இல்லாத உமக்கு குருபீடம் ஒரு கேடா?" இப்படி ஞானேசுவர் சொன்னதும் கூட இருந்த அந்தணர்கள் கொதித்தனர். "அடே... துஷ்டச் சிறுவனே! எங்கள் குருவைக் கேவலப் படுத்தியதற்கு அவர் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்க வேண்டும். அல்லது இந்த எருமையைப் பேசவைக்க வேண்டும். இல்லையேல் இங்கேயே உனக்கு சமாதி கட்டி விடுவோம்" என்று சொன்னார்கள்.

ஒருவன் எருமையைக் கட்டி இழுத்து வந்தான். கூட்டத்தைக் கண்டு அது திமிறிக் குதித்தது. ஞானேசுவரர் எழுந்து அதன் தலையில் கை வைத்தார். என்ன ஆச்சரியம்! மௌனமாய் ஆடாது, அசங்காது நின்று அவரைப் பார்த்தது எருமை.

“எருமையே! பிராம்மணன் என்பவன் யார்? இவருக்குத் தெளிய வைப்பாய்” என்றார் ஞானேசுவரர். வாதம் வலுத்ததுமே கூட்டம் கூடிவிட்டது. மேலே என்ன நடக்கப் போகிறதோ என, அனைவரும் மூச்சடக்கி நின்று கொண்டிருந்தனர். எருமை அருமையான சம்ஸ்க்ருத ஸ்லோகங்களைக் கூறி அழகாக விளக்கம் அளித்தது. நான்கு வேதங் களின் அர்த்தத்தைக் கூறியது.

“சென்ற பிறவிகளில் செய்த பாப புண்ணியங்களின்படி மனிதனுக்கு குலம் அமைகிறது. பிராம்மண குலத்தில் பிறந்திருக்கிறோம் என்ற மகிமையைப் புரிந்து கொண்டு, கர்மங்களையும் ஒழுங்காகச் செய்து, வேதங்களைப் படித்து, தான தருமங்கள் (உடலாலோ, பொருளாலோ எப்படி வேண்டுமானாலும்) செய்து நல்லது, கெட்டதுகளுக்குப் பயந்து வாழ்பவன் பிராம்மணன்.

பிராம்மண குலத்தில் பிறந்தாலும் மது, மாமிசம் உண்டு, தீய வழிகளில் பொருள் சேர்த்து பிறரை மோசம் செய்து வாழ்பவனுக்கே மறு பிறவி



கீழ்க்குலமாக அமைகிறது. விதியை தீர்மானிக்கும் பகவான் பாரபட்சம் காட்டுவதில்லை.

நாரதர் தாசி வயிற்றில் பிறந்தவர்தான். தவத்தால் பிராம்மணரானார். நடனமங்கை ஊர்வசியின் பிள்ளையான வசிஷ்டர், தவத்தால் பிரம்ம ரிஷியானார். நாயின் கர்ப்பத்திலிருந்து வந்த ஸ்ரீசௌனகர் தவத்தாலும், வேதத்தாலும் பிராம்மணரானார். செம்படவ நங்கைக்குப் பிறந்த வியாசர் மகாபாரத காவியத்தையும், பதினெட்டு புராணங்களையும் இயற்றினார். அதனால் பிறப்பு குலத்தை நிர்ணயிக்காது. "இப்படிக் கூறி முடித்தது எருமை.

எருமையின் பேச்சு நின்று வெகு நேரமாகியும் கூடியிருந்த எவரும் அசையவில்லை குருநாதர் உட்பட. உணர்வுக்கு வந்ததும் "வாமனனைப் போல், அகஸ்தியரைப் போல், உருவத்தில் சிறியவராயிருந்தாலும் ஞானத்தில் மகான்" என்று பலர் வணங்க, ஞானேசுவரர் " நமஸ்கரிக்கத் தகுந்தவன் ஆண்டவன் ஒருவனே. எத்தனை வேதம் படித்தாலும், தர்க்க ஞானம் இருந்தாலும் மனிதன் தெய்வத்துக்கு சமானமாக முடியாது" என அவர்களைத் தடுத்து விட்டார்.

"இவன் சித்து வித்தைகள் கற்றவன்" என்றனர் சிலர். இவன் சூனியக்காரன்; மந்திரவாதி" என்றனர் சிலர். "எங்கள் குருநாதரை அவமானப்படுத்த செய்த சூழ்ச்சி" எனத் தூற்றினர் அவரைச் சார்ந்த வேதியர்கள். எத்தனை திருப்பங்கள், அற்புதங்கள் நடந்தாலும் ஏற்றுக் கொள்ளாத மந்தபுத்தி படைத்தவர்கள், இவரைப் புகழ்ந்தவர்கள் வீட்டுத் திதி காரியங்களைச் செய்ய மறுத்தனர்.

அவர்கள் இவரிடம் முறையிட இவர் அவரவர் வீட்டு இறந்த மூதாதையர்களையே வந்து சாப்பிட வைத்தார். தாமே திவச காரியங்களைச் செய்து கொடுத்தார். தாமே வலியச் சென்று அனைவரையும் பக்தராக்கினார். 28 அபங்கங்கள் கொண்ட 'ஹரிபாட்' என்ற நூலையும் 10,000 குறள்கள் கொண்ட 'ஞானேசுவரி' என்ற நூலையும் 'அம்ருதானுபவம்' என்ற அத்வைத சைவ வேதாந்த காவியமும் இயற்றி இருக்கிறார். பக்தி யோகம், ஞானயோகம், கர்மயோகம் என்று மூன்று வகையாக அவரவர் மன ஈடுபாட்டுக்குத் தகுந்தபடி உபதேசித்தார். பிறகு ஒருநாள் தன் சீடர்களை அழைத்து, "நான் வந்த காரியம் முடிந்துவிட்டது.

இயன்றவரை பகைமையை ஒழித்துப் பக்தியைப் பயிர் செய்து விட்டேன். இன்றைக்கு நான் தியானத்திற்கு உட்கார்ந்ததும் என்னைச் சுற்றி செங்கற்களை அடுக்கிப் மண்ணைப் பூசிவிடுங்கள்" என்றார்.

"ஐயோ, சுவாமி... இதென்ன கொடுமை" என அவர்கள் வருத்தத்துடன் கதற, "என் ஆயுள் இன்றோடு முடிகிறது. இது என் கட்டளை. மரண அவஸ்தைப்பட்டு நான் துடிக்க வேண்டுமென்பது உங்கள் விருப்பமா? அல்லது இந்த உடலை ஈயும், எறும்பும் மொய்க்க வேண்டுமென்று ஆசையா? ஈழலும், இருமலும், காய்ச்சலும் வந்து உயிர் போவதைப் பார்த்தபின் தான் உங்களுக்கு சமாதிகட்ட சம்மதம் ஏற்படுமா?" அவர் சொல்லிக் கொண்டே போனார்.

பூனாவிற்கு 18 மைல் தொலைவிலே 'ஆனந்தி' என்ற சின்ன ஊரிலே இவர் சமாதி அடைந்தார். இங்கே விவாகம் செய்விப்பதாய் வேண்டிக்கொள்பவர்களுக்கு விரைவில் திருமணமாகிவிடும். உடல் நோயுற்றவர் பிழைத்து விடுவர். மரண கண்டங்களைத் தாண்டி விடும் வல்லமை ஞானேசுவரர் சமாதிக்கு இருக்கிறது. அதனால் இது மிகப் புனிதமாக "தேவாளா ஆனந்தி" என வழங்கப்படுகிறது.

8. ஸ்ரீ பானு தாஸர்

பைடனிபுரம் அழகிய நகரம். அங்கே சூரியனைத் தினந்தோறும் வழிபடும் பெரியவர் ஒருவர் இருந்தார். அவர் தன் அருமை மகனுக்கு சூரிய நாராயணன் என்று பெயர் வைத்தார். பானு எனச் செல்லமாய் அழைப்பார். ஏழு வயதில் உபநயனம் செய்தார்கள். பானுவுக்கு வேதம் வேப்பங் காயாக இருந்தது. "ஆதித்திய ஹிருதயத்தை தலைகீழாக ஒப்பிக்கும் எனக்கு சம்ஸ்க்ருத ஸ்லோகங்களைச் சொல்லத் திக்கித் தடுமாறும் பிள்ளையா?" என்று வேதனைப் பட்டார் பிராமணர்.

அம்மா "பானு, அப்பா வந்தால் அடிப்பாரே! உட்கார்ந்து மனப்பாடம் பண்ணுடா...." என விளையாடிக் கொண்டிருக்கும் பானுவை இழுத்து வருவாள். ஒருநாள் தந்தையார் கோபத்தில் செம்மையாக அடிக்க, பயந்த

பையன் காட்டுக்கு ஓடி விட்டான். இரவு வந்தது. மிருகங்களுக்குப் பிடித்தமான நேரம். காட்டின் வினோதமான சப்தங்கள் பானுவை பயமுறுத்தின. தஞ்சமடைய இடம் தேடினான். அவன் கண்ணில் பட்டது ஒரு கோவில். உள்ளே சென்றான். அங்கே இருந்த சுவாமி சூரியனே!

"எங்கள் குல தெய்வமே! வெகு தூரம் நடந்து வந்ததாலும், காலில் முள்ளும், கல்லும் தைத்து ரணமாகி வேதனைப்பட்டதாலும் களைப்பும், பசியுமாகவும் இருக்கிறது. அப்பாவிடம் அடிபட்டு சாவதைவிட புலியோ, சிங்கமோ அடித்துச் சாவது பெரிய கஷ்டமில்லை என்று வந்துவிட்டேன். என்னைக் காப்பாற்றுவது உன் பொறுப்பு" எனக் கதறி அழுதான். சூரிய பகவான் ஒரு அந்தணன் வடிவத்தில் பானுவின் எதிரில் வந்தார்.

பானு அவர் காலில் நிலம் தோய விழுந்து வணங்கினான். "ஸ்வாமி", எனக்கு வேத பாடங்கள் சரளமாக வரும்படி அருள வேண்டும்" என்று வேண்டினான். சூரியனார் அவனை அணைத்து ஆறுதலளித்தார். ஒரு பொற் கிண்ணம் நிறைய பாலைக் கொடுத்து குடிக்கச் சொன்னார். பானுவுக்கு அசாத்தியப் பசி. ஒரே மூச்சில் குடித்து விட்டான்.

அஷ்டாட்சர மந்திரத்தை உபதேசித்தார். "இன்று முதல் உனக்கு எல்லா மந்திரங்களும் வரும். பாண்டுரங்கன் புகழைப் பாடு. தினந்தோறும் இந்த மந்திரத்தைச் சொல்லி வழிபடு" (ஓம் நமோ நாராயணாய) என அருளி மறைந்தார். இப்படி ஏழு நாட்கள் நடந்தன. இந்த ஏழு நாட்களும் வேளை தவறாமல் உணவு கொடுத்தார் சூரிய பகவான்..

அங்கே பானுவின் பெற்றோர் ஊரெல்லாம் மகனைத் தேடிக் காணாமல் வேதனைப்பட்டனர். இனிமேல் மகன் திரும்பி வந்தால் அவனைப் படிக்கவில்லை என்பதற்காக அடித்துத் துன்புறுத்தக் கூடாது என முடிவெடுத்தனர்.

காட்டில் தர்ப்பை, சமித்து இவற்றை சேகரிக்க வந்த ஒரு வைதீக பிராம்மணன் பானுவைப் பார்த்து விட்டான். "வா, உன் பெற்றோரிடம் போவோம்" என அழைத்தான். பானுவோ பயந்து கோவிலுக்குள் ஓடிவிட்டான். அவன் பானுவின் பெற்றோரிடம் தான் பானுவைக் கண்ட இடத்தைக் குறிப்பிட்டான். அவர்கள் ஏழு நாட்களில் மகன் உணவும், நீருமின்றி எப்படி மெலிந்திருக்கிறானோ எனத் துடித்துக் கொண்டு ஓடி வந்தனர். மகன் முன்னிலும் பலமும், அழகும் கொண்டு இருப்பதைக்

கண்டு பூரித்து விபரம் கேட்டனர். பானுவும் நடந்ததனைத்தையும் விபரமாகக் கூறினான். பெற்றோர் அக மகிழ்ந்தனர்.

"குருட்டுப் பாடம் படிக்கச் சொன்னேன். நீயோ வேத ஞானமே பெற்றுவிட்டாய்." என மகனை அணைத்து ஆனந்தித்தார் தந்தை. சூரியன் தஞ்சமளித்ததால் பானுதாஸன் என மக்களால் அழைக்கப் பட்டான். உரிய வயதில் பெற்றோர் பானுதாஸருக்கு விவாகம் செய்வித்தனர். அவளும் கணவரைப் போலவே தெய்வபக்தியில் சிறந்த வளாய் இருந்தாள். அதனால் குடும்பம் ஒற்றுமையாகவும், மகிழ்ச்சி யாகவும் நடந்தது. அவருக்கு இரண்டு பிள்ளைகள். ஒருவர் பெயர் ஏக நாதர். அவரும் பெரிய கிருஷ்ண பக்தர். வயோதிகத்தினால் பெற்றோர்கள் காலம் முடிந்தது. பானுதாஸர் எப்போதும் பாண்டுரங்கனே தஞ்சம் என்று இருந்தார். இவர் பொருளை விருத்தி செய்யாததால் செல்வம் கரைந்து விட்டது. மனைவியும் இரண்டு பிள்ளைகளும் பட்டினி கிடந்து வாடி மெலிந்தனர். இவரோ 'உலகமெல்லாம் காக்கும் பெருமானுக்கு என் சிறு குடும்பம் ஒரு பொருட்டில்லை. அவன் இஷ்டம் பட்டினி என்றால் எனக்கு அது சந்தோஷமே' எனப் பேசாதிருந்தார்.

அக்கம் பக்கத்தவர்களுக்கும், சுற்றத்தாருக்கும் பானுதாசர் குடும்பம் கஷ்டப்படுவது பொறுக்கவில்லை. ஜவுளி வியாபாரம் செய்யும் சில உறவினர்கள் இவரிடம் வந்து, "குடுமீபத்தைப் பட்டினிப் போடுவது ஆண் பிள்ளைக்கு அழகல்ல. உன் பெற்றோர் ஏராளமாய் சேர்த்து வைத்திருந்ததை கரைத்து விட்டாய். கடைவீதியில் எங்கள் கடைகளுக்கு நடுவில் முன்னூறு பவுன் பெறுமானமுள்ள ஜவுளி வகைகள் தந்து ஒரு கடை வைத்துக் கொடுக்கிறோம். ஒழுங்காய் வியாபாரம் செய்து லாபத்தில் சிறு பகுதியைக் கொடுத்து கொஞ்சம் கொஞ்சமாக கடனை அடைக்கலாம்" என்றனர்.

இதுவும் அவன் செயல் என பானுதாஸர் ஒப்புக் கொண்டார். வியாபார தந்திரம் என்ற பெயரில் சில சூதுகளை அவர்கள் சொல்லித்தர, அவற்றை ஏற்க மறுத்து விட்டார் தாஸர். வியாபாரம் செய்ய வருகிறவர்களெல்லாம் பாண்டுரங்கனாகத் தோன்றினர் இவர் கண்களுக்கு! "இதென்ன விலை?" என்று கேட்பவர்களுக்கு, "இது அசல் விலை இவ்வளவு... லாபம் இவ்வளவு. பிரியமிருந்தால் வாங்குங்கள்" எனத் தெளிவாகக் கூறிவிடுவார்.

இவர் பகவத் பக்தர் என்று ஊரெல்லாம் தெரியும். அதனால் பொய் சொல்லமாட்டார் என, பேரம் பேசிக் குறைக்காது உடனே வாங்கிச் சென்றனர். தவிரவும் சிறிய லாபமே வைத்து விற்றதால் மற்ற கடைகளை விட வாங்குபவர்களுக்கு விலையும் குறைச்சலாகவே இருந்தது. அதனால் பானு தாஸர் கடையில் விற்பனை பெருகிற்று. எப்போதும் கூட்டம் அலை மோதிற்று. மற்றவர்கள் கடையில் ஈ ஓட்டினர்.

பேராசை பிடித்த பெண்கள் இன்னும் இன்னும் என்று ஆசைப்பட்டுக் கேட்கும் போது "அம்மணி, ஆடை அணிவது மானத்திற்காகவே.. அதிகப்பணம் கொடுத்து வாங்குவதோ, அதிக ஆடைகள் வாங்குவதோ தவறு" என இதமாக பல நல்ல போதனைகள் செய்வார். இதனால் ஆண்கள் இவர் கடைக்கு வரவே ஆசைப்பட்டனர்.

ஒரு மாதத்தில் பானு தாஸர் கடன் முழுவதையும் கொடுத்து விட்டார்.

"பானு கையில் காசில்லாமல் கஷ்டப்பட்ட போது இரக்கப்பட்டு கடை வைத்துக் கொடுத்தோம். நாம் முதல் தரமான முட்டாள்கள். நம்மை இப்போது சீண்டுவாரில்லை. வியாபாரம் படுத்துவிட்டது. அவனது சரக்குகள் அப்போதைக்கப்போது தீர்ந்து விடுவதால் புதியதாக இருக்கிறது. நமது சரக்குகள் முடங்கிப் போகின்றன. இதற்கொரு முடிவு தேட வேண்டும்" என மற்ற கடைக்காரர்கள் கூடிப் பேசினர்.

அடுத்த மாதம் எல்லோரும் குதிரைகளின் மேல் ஜவுளிகளை ஏற்றிக் கொண்டு பக்கத்து ஊர் சந்தைக்குச் சென்றனர். வியாபாரம் முடிந்து திரும்புகையில் ஒரு சின்ன, ஊர் எல்லை மண்டபத்தில் தங்கினர். ஏனெனில் அந்த நாளில் கொள்ளையருக்குப் பயந்து இரவில் பயணம் செய்ய மாட்டார்கள்.

களைத்துப் படுத்த பானுதாஸரின் செவிகளில் பிரசங்க ஒலி கேட்டது. தெருவில் இறங்கி வழியில் தென்பட்டவர்களை விசாரித்தார்.

ஹரிதாஸர் என்னும் மகான் பாகவத பிரவசனம் செய்வதாக கேள்விப் பட்டார். அங்கே போக மனம் துடித்தது.

தன் வியாபார நண்பர்களிடம் "என்னுடைய குதிரை, விற்ற பணம், பாக்கி சரக்கு எல்லாவற்றையும் சிறிது பார்த்துக் கொள்ளுங்கள். நான் ஹரிதாஸர் கதை கேட்டு வருகிறேன்" என்று வேண்டினார் பானுதாஸர்.

"நாங்களென்ன நீ வைத்த காவல்காரனா? அதெல்லாம் முடியாது" என எரிச்சலோடு அவர்கள் பதில் சொன்னார்கள்.

"இதை ஏற்படுத்திக் கொடுத்தவனுக்கு, இவ்வளவு தூரம் விருத்தி செய்தவனுக்கு காப்பாற்றவும் தெரியும். அழியாத சொத்து பாகவதமே" என்று சொல்லிவிட்டு கதை கேட்கச் சென்றுவிட்டார் பானுதாஸர். இப்படிச் சொல்லிவிட்டு பானுதாஸர் சென்றது, சக வியாபாரிகளின் எரிச்சல் தீயில் எண்ணை வார்த்தது போலாயிற்று.

"இவனுக்கு என்ன திமிர்! பகவான் காப்பாற்றுவானாமே! புதுப் பணமல்லவா? தலைகால் தெரியாமல் சரக்கை அலட்சியம் செய்கிறான். இவனுக்கு சரியான பாடம் கற்பிக்க வேண்டும். கொஞ்சநாள் மறுபடி தரித்திரப்பட்டால் தான் புத்திவரும். அதற்குள் நமக்கும் வியாபாரம் பெருகும்" என கூடிப் பேசி ஒரு முடிவெடுத்தனர். குதிரையை அவிழ்த்து விரட்டி விட்டனர். தண்ணீரற்ற ஒரு பாழுங்கிணற்றில் ஜவுளி மூட்டையை வீசி எறிந்தனர். பணத்தை பத்திரமாக புதைத்து வைத்தனர்.

"பானுதாஸர் விடிகாலை கதைமுடிந்து வந்ததும் திருடன் வந்து பறித்துச் சென்றதாகச் சொல்லிவிடுவோம். அவன் போன பிறகு நாம் சரக்குகளையும், பணத்தையும் பங்கிட்டுக் கொள்ளலாம்" என உற்சாகமாகப் பேசியபடி தூங்கி விட்டனர். மனிதன் போடும் கணக்கு ஒன்று. பகவான் போடும் திட்டம் வேறு அல்லவா? பானுதாஸர் பாண்டுரங்கனின் மெய்யன்பர். பொய் மெய்யாக்கி விட்டது.

நள்ளிரவில் தீவட்டிக் கொள்ளையர்கள் தூங்கும் வியாபாரிகளைச் சூழ்ந்து கொண்டனர். ஒவ்வொருவருக்கும் செம்மையான அடி. எல்லா ருடைய உடமைகளையும் பறிமுதல் செய்து கொண்டு ஓடி விட்டனர்.

கொள்ளையர் சென்றதும் அனைவரும் ஏக்கத்துடன் அழுது கொண்டிருந்தனர். அங்கே பானுதாஸர் கதை முடிந்து வந்து கொண் டிருந்தார். அவர் நினைப்பெல்லாம் கதையிலேயே லயித்திருந்தது. அப்போது பகவான் மாறு வேடத்தில் எதிரே பானுவின் குதிரையோடு வந்தார்.

"ஓய், பானுதாஸரே! இந்தாரும் உம்முடைய குதிரை" என்று கயிற்றை கைமாற்றிவிட்டு வேகமாக மறைந்துவிட்டார். பானுதாஸருக்கு ஒரே

திகைப்பு. கட்டி வைத்தக் குதிரை எப்படி வந்தது? அப்படியானால் அதன் மேலிருந்து சரக்குகள் என்னவாயிற்று?" என்ற கவலை அப்போதுதான் வந்தது. "தவிர இது என்னுடைய குதிரை என்று அறிந்து கொண்டுள்ள இவன் யார்? நானோ வழிப்பயணி" அவருக்கு எதுவும் புரியவில்லை.

விரைந்து மண்டபத்தை அடைந்தார். அங்கே அனைவரும் இவரைச் சூழ்ந்து கொண்டு "பானு, நீங்கள் உண்மையான பக்தர். உங்கள் பொருளை திருட திட்டம் போட்டோம். எங்கள் சரக்கும், பணமும் கொள்ளை போய் விட்டன. நீர் கதை கேட்கப் போனதால் அடிபடாமல் தப்பினீர். இந்த நஷ்டத்தை எப்படி சமாளிக்கப் போகிறோம்" எனத் துக்கித்தனர்.

பானுதாஸர் "நண்பர்களே! கவலையை விடுங்கள். நீங்கள் கருணை மனம் கொண்டவர்கள். உங்களைக் கல் மனத்தினராக்கியது பணம். என்



குடும்பம் வறுமையில் தவித்த போது கைதூக்கி விட்ட உங்கள் நல்ல மனத்தை நான் எந்நாளும் மறந்ததில்லை. இரக்கத்தையும், அன்பையும் விஷமாக்கும் செல்வம் எனக்கு வேண்டாம். அது என்னிடமிருந்தால் என்னையும் மாற்றிவிடுமோ என அஞ்சுகிறேன். இனி வியாபாரம் செய்ய நான் விரும்பவில்லை" எனக்கூறி கிணற்றில் தள்ளப்பட்ட சரக்கையும், புதைத்து வைத்த பணத்தையும் அவர்களிடம் கொடுத்து விட்டார். அது மட்டுமா? ஊருக்குச் சென்று அத்தனை நாள் சேர்த்து வைத்த பணத்தையும், ஜவுளி வகையறாக்களையும் அவர்களுக்கே கொடுத்து விட்டார்.

கொஞ்ச காலம் நன்றி மறவாமல் நண்பர்கள் முறை போட்டுக் கொண்டு அவர் குடும்பத்துக்கு உதவி செய்தனர். நாள் செல்ல செல்ல அவர்களுக்கும் சலிப்பு ஏற்பட்டது. "இவன் பஜனை, தியானம், கோவில் என்றிருக்க இவன் குடும்பத்தைக் காப்பாற்ற நமக்கென்ன தலைவிதியா" என்று அலுத்துக் கொண்டனர்.

பைடனிபுரத்து பிராம்மணர் ஒருவர் யாகம் ஒன்று நடத்த ஊர் ஊராய் செல்வந்தர்களிடம் பொருள் திரட்டினார். கடைசியாக வித்யாரண்ய நகரம் வந்து அரசனிடம் வேண்டினார்.

அரசன் பெயர் ராமராயன். சிறந்த காளி பக்தன். பவானி தேவிக்கு அற்புதமான கோவில் கட்டி தானே தினமும் பூப்பறித்துச் சூட்டி, தானே அபிஷேகம் செய்து பூஜித்து வந்தான்.

அந்தணரிடம் "உங்கள் ஊர் பண்டரிநாதனைப் பற்றி அற்புதமான கதைகள் உலவுகின்றதே! பாண்டுரங்கன் கோவில் அத்தனை உசத்தியா? பவானி தேவி ஆலய கர்ப்பக்கிருஹம் பூராவும் வெள்ளித் தகடுகள். வாகனங்கள் பூராவும் வெள்ளி. பார்த்தீர்களா? இப்படி இருக்குமா உங்கள் தெய்வத்தின் ஆலயம்" என ஏகத்தாளமாகக் கேட்டான் ராமராயன்.

அந்தணருக்கு பண்டரிநாதரை அரசன் இகழ்ச்சியாகப் பேசியது தாங்கவில்லை.

"அரசே, அன்னை பவானி தேவியைப் போல் பாண்டுரங்கன் சிலை வடிவில் நிற்கவில்லை. நிஜ உருவத்துடனேயே காட்சி தருகிறான். தவிர கர்ப்பக்கிருகம் தங்கத்தால் இழைத்து நவரத்தினங்கள் பதிக்கப்பட்டவை.

வாகனங்கள் தங்கத்தாலே செய்திருந்தாலும் அவைகள் உபயோகப் படுவதில்லை. கருடனும், அனுமாரும் சுவாமியைத் தாங்க எப்போதும் தயாராக காத்திருக்கின்றனர். "ரம்பை, மேனகை, ஊர்வசி போன்ற நடன மங்கையர் நாட்டியம் நடக்கிறது. கற்பக விருட்சம் கேட்டதெல்லாம் தருகிறது. ஸ்வாமியின் அபிஷேகப் பாலை காமதேனு தருகிறது. இந்திர லோகத்துப் பாரிஜாத மரம் நந்தவனத்தில் இருக்கும் அழகு ஒன்றுக்கு ஈடு உண்டா? தங்கக் கோபுரம், உயர்ந்த மதில்கள், கொடி மரமே தங்கம்" இப்படி கண்ணை மூடிக் கொண்டு கற்பனையாக மனதில் நினைத்ததை வார்த்தைகளாகக் கொட்டினார் அந்தணர்.

"போதும். நிறுத்தும்" என கத்தினான் மன்னன். நீர் சொல்வ தெல்லாம் பொய். நானும் பண்டரிபுரக் கோவிலைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனாலும் இப்போதே புறப்படும். நீர் சொல்வது போல் இல்லாவிட்டால் தக்க தண்டனை அடைவீர்" என மந்திரி, பிரதானியரோடு பண்டரிபுரம் புறப்பட்டு விட்டான்.

அந்தணர் மௌனமாய் உடன் சென்றாலும் மனதுக்குள் ஒரே நடுக்கம். "பரந்தாமா... என் சொல்லை மெய்ப்பிப்பது உன் கடன்... என்னைக் காப்பாற்று" என்று நெஞ்சுக்குள் புலம்பியவாறிருந்தார். பண்டரிபுர எல்லையை அடைந்ததும் அந்தணரால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. 'நறுக்'கென்று கிள்ளிப் பார்த்துக் கொண்டார். வலித்தது. பூலோக வைகுண்டமென காட்சி அளித்தது பண்டரிபுரம். அந்தணர் சொன்னது ஒரு பங்கு என்றால் அங்கே கண்டதோ ஆயிரம் மடங்கு. மன்னன் மெய் மறந்து போனான். சந்திரபாகா நதியில் நீராடி ஸ்வாமியை தரிசித்தான். "நீங்கள் சொன்னது அத்தனையும் உண்மை" என அந்தணரை அணைத்துக் கொண்டான்.

அவ்வளவுதான். எல்லா வைகுண்டக் காட்சிகளும் மறைந்து பழைய பண்டரிபுரமாகி விட்டது.

"ஜனார்த்தனா! அந்தணன் வாக்கை நிஜமாக்க வைகுண்டக் காட்சியையே பூலோகத்தில் காட்டிய வல்லமை பெற்றோனே! உன்னை விட்டுப் பிரிய என் மனம் மறுக்கின்றது. என்னோடு என் அரண்மனைக்கு எழுந்தருள வேண்டும்" என கோரிக்கை விடுத்தான் மன்னன்.

உணவும், உறக்கமும் வெறுத்து, விக்கிரகத்தின் காலடியிலேயே கிடந்தான். பக்தர் துன்பம் தாங்காதவனாயிற்றே! ராமராயனுக்கு எதிரே தோன்றி, "பக்தா, இப்போது வருகின்றேன். தப்பு செய்யாதவரை உன்னோடு இருப்பேன். நீதி தவறிய மறு நிமிஷமே உன்னை விட்டு வந்துவிடுவேன்" என்று நிபந்தனை போட்டார்.

மன்னனும் மகிழ்ச்சியோடு ஒத்துக் கொண்டு விக்கிரகத்தை பல்லக்கில் ஏற்றி தன் அரண்மனை வந்து சேர்ந்தான்.

அந்தப்புரத்தில் தனிக்கோவில் கட்டி விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்தான். கடுமையான காவல் வைத்தான். விதவிதமாய் அலங்கரித்து மகிழ்ந்தான். அங்கே பண்டரிபுரத்தில் விக்கிரகத்தைக் காணாமல் அர்ச்சகர்களும், அன்பர்களும் துடித்தனர். கதறி அழுதனர்.

"பண்டரிபுரம் சலித்து விட்டதா? எங்கள் பூஜையில் குற்றமிருந்ததா? மூளியாயிருக்கிற கோவிலில் எங்களுக்கென்ன வேலை" என வருந்திப் புலம்பினார்.

பானுதாஸர் "திரும்பினால் பகவானோடுதான் திரும்புவேன்" என சபதம் செய்து வித்யாரண்ய நகரம் சென்றார். இரவு அர்த்தஜாம பூஜை முடிந்ததும் அரண்மனைக்குச் சென்றார் பானுதாஸர். கண்ணன் திருவிளையாடல். காவலர் மெய்மறந்து உறங்க கதவு தானாகத் திறந்து கொண்டது. உள்ளே சென்ற பானுதாஸர் பகவானைக் கட்டிப் பிடித்துக் கொண்டு 'ஓ'வென்று அழுதார்.

பகவான் மெதுவாக பானுதாஸரைத் தழுவி எடுத்து "பண்டரிபுரத்தில் ருக்மணியும், பக்தர்களும் சௌக்கியமா?" என்று கேட்டார். "உங்களுக்கு பண்டரிபுர நினைவும் இருக்கின்றதோ? அரண்மனை ஆடம்பரத்தில் மயங்கி ஓடி வந்து விட்டீரே!' எனப் பலவாறு பானுதாஸர் குறைப்பட்டுக் கொள்ள, "அன்பா, கவலை வேண்டாம். வெகு சீக்கிரம் பண்டரிபுரம் வந்துவிடுவேன்", இதை வைத்துக் கொள்" என்று ஒரு ரத்தின மாலையை பானுதாஸரின் கழுத்தில் போட்டு ஆறுதல் கூறி அனுப்பினார்.

மறுநாள் காலை. அரசன் திருமஞ்சனம் செய்ய, ஆடை ஆபரணங் களைக் கழற்றும் போது கழுத்தில் நவரத்தின ஹாரத்தைக் காணாமல் திகைத்தான்.

காவலர்களைக் கூப்பிட்டு "நீங்கள் காவல் செய்யும் லட்சணம் வெகு அழகு... எங்கிருந்தாலும் இரத்தின மாலையையும், அதைத் திருடிய கள்வனையும், இன்று மாலைக்குள் கொண்டு வர வேண்டும்" என்று கடுமையாகக் கட்டளையிட்டான்.

சிப்பாய்கள் ஒரு இடம் விடாமல் ஊரெங்கும் சல்லடை போட்டனர். கழுத்தில் மாலையோடு நீராடிக் கொண்டிருந்த பானுதாஸரை அரசனிடம் இழுத்துச் சென்றனர். தீர விசாரியாத மன்னன் பானுதாஸரைக் கழுவில் ஏற்ற உத்தரவிட்டான்.

"சாவது நிச்சயம். கடைசி முறையாக இறைவனை தரிசிக்க அனுமதி தரவேண்டும்" என்று காவலர்களிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார் பானுதாஸர். அவர்கள் அதை அரசனிடம் தெரிவிக்க அரசனின் அனுமதி கிடைத்தது,

பாண்டுரங்கன் அருகே சென்றவுடன் கண்களில் நீர்மல்க "முகுந்தா, மாதவா உன்னை அழைத்துச் செல்ல வந்தவனை வஞ்சகமாக ஆபத்தில்

சிக்கவைத்து விட்டாயே! தந்திரங்களில் இப்படி ஒரு பிரியமா? பிறந்த நாள் முதல் இதுவே உன் வேலையா? இப்படி ஒருவனுக்கு தண்டனை தந்து விட்டால் இனி எவரும் அழைக்க வந்து தொல்லை தரமாட்டார்கள் என்ற எண்ணமா? எனக்கு என்ன முடிவு ஏற்பட்டாலும் சரி... எத்தனை பிறவி எடுத்தாலும், உன்னை மறவாதிருக்க வரம் தர வேண்டும்" என வேண்டிக் கொண்டு கழுமரம் நட்டிருக்கும் மைதானத்திற்கு வந்தார்.

ஊர் முழுவதும் அங்கு கூடியிருந்தது. பானுதாஸர் கழுமரத்தை நிமிர்ந்து பார்த்தார். "ஹே, பண்டரி நாதா, உனக்காக உருகும் பக்தர்களுக்காக நீ பண்டரிபுரம் செல்ல வேண்டும். தனி ஒருவருக்காக இடம் மாறுவது அழகல்ல. சுயநலத்திற்காக நான் வரவில்லை. என் ஆசையை நிறைவேற்று" என்றார்.

இதைச் சொல்லி முடித்ததும் என்ன ஆச்சரியம்! காய்ந்த கழுமரம் தழைத்து கிளையாகி துளிர்த்து பூத்து, மலர்ந்தது. காவலர்கள் செய்தி சொல்ல அரசனிடம் ஓடினர். மக்கள் பிரமித்து செயலற்று நின்றனர்.

"ஆகா, இவர் மகான்.... எல்லாம் பரந்தாமன் லீலை" எனப் பேச்சுக் குரல்கள்! பானுதாஸர் "ஹரி, ஹரி... விட்டல" என பஜனை செய்து கொண்டிருந்தார். அரசன் ஓடிவந்து பானுதாஸர் கால்களில் விழுந்து தன்னை மன்னிக்குமாறு வேண்டினான். பானுதாஸரை அழைத்துக் கொண்டு பண்டரி நாதர் கோவிலில் சென்று பணிந்தான்.

"பண்டரிபுரம் புறப்படலாமா?" என்று கேட்டார் பகவான். மன்னர் " என்னை உதாசீனம் செய்து போவதற்காக நாடகம் ஆடினீரோ" என அழுது அரற்றினார்.

"முன்பே சொன்னது தானே! குற்றம் செய்யாதவரை உன்னோடு இருந்தேன். ஆராயாமல் தீர்ப்புச் சொல்லி என் பக்தனை கழுவில் ஏற்றத்துணிந்தது பெருங்குற்றமே. இனி இங்கு இரேன்" எனச் சொல்லிவிட்டு பானுவோடு புறப்பட்டு விட்டார். பானுதாஸரின் மகிமையை உலகுக்கு உணர்த்த பகவான் செய்த திருவிளையாடல் என அனைவரும் சிலாகித்தனர்.

பல்லக்கில் பண்டரி நாதரை எடுத்துக் கொண்டு பண்டரிபுரம் சென்றார் பானு. வழியில் பத்மாளம் என்ற ஊர். பல்லக்கை ஒரு

குளக்கரையில் இறக்கி வைத்துவிட்டு கை, கால் கழுவச் சென்றார் தாஸர். திரும்பி வந்து பார்க்கும் போது பகவான் பல்லக்கிலிருந்து வெளியே வந்திருந்தார்.

"என்ன காரணம்...?" என்று பானுதாஸர் திகைக்க" பண்டரிக்குச் சென்று என் பக்தர்கள், அன்பர்களை அழைத்து வந்து முறைப்படி பிரதிஷ்டை செய்" என்றார் ஜகந்நாதன். அப்படியே அழைத்து வந்தார் பானுதாஸர். எங்கும் பஜனை கோஷம். அடியார்கள் மகிழ்ச்சியுடன் பகவானைத் தேரில் ஏற்றி வாத்தியங்கள் முழங்க வேத முறைப்படி பண்டரிபுரத்தில் பிரதிஷ்டை செய்தனர்.

9. ஸ்ரீ ஏக நாதர்

பானுதாசரின் பிள்ளை ஏகநாதர். இவர் ஜனித்ததிலிருந்தே பாண்டுரங்க நாமத்தை செவியாரப் பருகி அதிலேயே ஊறித் திளைத்தவர். தன்னிடம் எது இருந்தாலும் கேட்பவர் யாராக இருந்தாலும் கொடுத்துவிடும் இரக்க மனம் கொண்ட பக்தர்.

ஜனார்த்தன பண்டிதரிடம் கல்வி கற்று வந்தார் ஏகநாதர். மடத்தின் வரவு செலவுக் கணக்குகள் ஏகநாதரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஒருநாள் நள்ளிரவு கணக்கில் கூட்டல் சரியாக வராமல் உழன்று கொண்டிருந்தார் ஏகநாதர். பின்னால் குருநாதர் நிற்பதை அவர் கவனிக்கவில்லை. வெகுநேரம் சென்று, கணக்கு சரியாக வந்துவிட்டது.

"சபாஷ்" என்ற குரல் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினார். "இதே உறுதியும், விடாமுயற்சியும் பகவானைத் தரிசிப்பதிலும் செலுத்து" என உபதேசம் செய்தார் குருநாதர். தத்தாத்ரேயரை தரிசிக்க வேண்டும் என தவமிருந்தார். இருமுறை புலையன் உருவில் வந்த பகவானை ஏகநாதர் புரிந்து கொள்ளாமல் ஏமாந்து போனார். மூன்றாம் முறையே உபதேசம் பெற்றார். படிப்பு முடிந்து வீட்டிற்கு வரவும், பெற்றோர் காலம் முடியவும், சரியாக இருந்தது. துக்கத்தில் இவர் எதையும் கவனிக்கவில்லை. ஒருநாள் கனவில் தத்தாத்ரேயர் தோன்றி, "ஏகநாதா, பிறந்தவர் மரிப்பது சகஜம்.

மரணத்தை வென்றவர் எவரும் இல்லை. உலகில் நாஸ்திகம் அதிகமாகி விட்டது. அதர்மம் மேலோங்குகிறது.

தெய்வ பக்தி செழிக்க சுவையாக, வீதி தோறும், வீடு தோறும் முழங்க இராமாயணம் பாடு.... துயரத்தைத் துடைத்தெறி" என்றார். ஏகநாதர் விழிப்புற்றார். பகவான் கட்டளைப்படி இனிய, எளிய முறையில் இராமாயணத்தை இயற்றினார். பக்கத்து வீட்டுக்காரனுக்கு இவர் மேல் பொறாமை. "சமஸ்கிருதம் தெரியாமல் வால்மீகி இராமாயணத்தை எப்படிப் படிக்க முடியும்?" புரிந்து கொண்டு எப்படி எழுத முடியும்? என கேலி பேசி வந்தான். அந்தந்தக் கட்டம் எழுதும் போது தான் அந்தப் பாத்திரமாகவே மாறிவிடுவார் ஏகநாதர். நான்குபேர் முன்னால் ஏகநாதரை அவமதிக்க திட்டம் போட்டு வந்து, உட்கார்ந்து குறுக்குக் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தான் அடுத்த வீட்டுக்காரன்.

சுந்தர காண்டத்தில் அனுமார் விசுவரூபம் எடுக்கும் காட்சி. உக்கிரமாக ஏகநாதர் பாட, சிறுகச் சிறுக வளர்ந்து கொண்டிருந்தார். கண்களில் நெருப்புப் பொறி பறந்தது. கூட வந்தவர்கள் பயந்து ஓடி விட் டனர். தடாலென்று காலடியில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டான் அடுத்த வீட்டுக்காரன். ராமாயணம் பாடி முடிந்து அரங்கேற்றமாகி விட்டது. தினந்தோறும் பூஜை முடிந்ததும், ராமாயணத்தை சொல்லத் தொடங்கினார். கூட்டம் கூட்டமாக ஜனங்கள் வந்து கேட்டனர். மகாராஷ்டிர மகாகவி என மக்கள் புகழ்ந்தனர்.

"போன ஜென்மத்தில் பகவானுக்குத் தேனும், பாலுமாய் அபிஷேகம் செய்திருப்பார். அந்தப் புண்ணியம் நாக்கில் மதுரமாய் இருக்கிறது" என்று ராமாயணத்தைக் கேட்டவர் சிலாகித்தனர். பண்டரி நாதன் இராமாயணத்தையும், பாகவதத்தையும் அவர் அருகே இருந்து கேட்க ஆசைப்பட்டான். எளிய உருவம் தாங்கி ஏகநாதர் இல்லம் வந்தான். ஏகநாதரிடமே "ஐயா, இராமாயணம், பாகவதம் எல்லாம் உருகிப் பாடுகிற ஏகநாதர் யாருங்க?" என்று ஒன்றுமறியாதவன் போல் கேட்டான்.

"ஏனப்பா.... என்ன வேண்டும்...?" என்று விசாரித்தார் ஏகநாதர். "கதை கேட்கிறது எனக்கு ரொம்பப் பிடிக்குமுங்க. நான் அனாதை. ஏகநாதர் கிட்டே வேலை செய்தா கதையும் கேட்டுக்கலாம். வயிற்றுப்பாடும் தீர்ந்து போகும்னு வந்தேங்க" என்றார் பண்டரி நாதன்.

"உன் பேரென்ன? சம்பளம் கொடுத்து வேலையாள் வைச்சுக்க எனக்குக் கட்டுப்படி ஆகாதே" என்றார் ஏகநாதர்.

"ஐயா, சம்பளத்தை வாங்கி நான் என்னங்க் செய்யப் போறேன்? ஒத்தை ஆளு; பிரசாதம் கொடுத்தா போதுமுங்க... எம்பேரு கண்டியா கிருஷ்ணனுங்க..." இப்படியாகத் தொண்டனுக்குத் தொண்டனாய் வேலையில் சேர்ந்தார் கண்ணன்.

பூஜைக்கு வேண்டிய பூக்களைப் பறித்து மாலைகட்டி, சந்தனம் அரைத்து, பூஜை இடத்தை மெழுகி, கோலமிட்டு, ஏகநாதரின் பூஜை துணிமணிகளைத் துவைத்து, உலர்த்தி, எடுத்து வைத்து, படுக்கை போட்டு, நிவேதனம் சமைத்து, பூஜா பாத்திரங்களைத் தேய்த்து, ராமாயணம் சொல்லும் போது விசிறி, வந்தவர்களை உபசரித்து அப்பப்பா.... காலையிலிருந்து இரவுவரை பம்பரம் போல் சுழன்றான் கிருஷ்ணன். "வெறும் சோற்றுக்கு இப்படி ஒரு வேலையாளா?" என அனைவரும் அதிசயித்தனர்.

இப்படி ஒருநாள், இரண்டு நாள் அல்ல... பல வருடங்கள் கடந்தன. ஏகநாதரும் அவனைப் பெற்ற மகன் போல் பாசத்தோடு நடத்தி வந்தார்.

ஒருமுறை ஏகநாதரின் தந்தைக்கு திவசம் வந்தது. இரண்டு தினங்களுக்கு முன்பே அந்தணர்களுக்குச் சொல்லி, சாமான்கள் வாங்கி எல்லா ஏற்பாடும் செய்திருந்தான் கிருஷ்ணன். ஈரத்துண்டோடு மடியாகச் சமையல் செய்து கொண்டிருந்தான். தேவ சமையலாயிற்றே! வாசனைக்குக் கேட்க வேண்டுமா? வெல்லப்பாகு காயும் மணமும், தாளிப்பு நெய் மணமும் வீட்டைச் சுற்றி வீசியது.

வீட்டைச் சுற்றிலும் பூஜைக்கேற்ற பூச்செடிகளை வளர்த்திருந்தார் ஏகநாதர். அத்தோட்டத்தைப் பராமரிக்க ஒரு தோட்டக்காரன். அவன் வசிக்க தோட்டத்து மூலையில் ஒரு குடிசை. தோட்டக்காரன் மனைவி தன் கணவனிடம் "வாசனையே இப்படி இருக்குதே! சாப்பாடு எப்படி இருக்கும்?" என்றாள்.

தோட்டக்காரனுக்குக் கோபம் வந்து விட்டது. "அடி, அறிவு கெட்டவளே, முந்திரியும், ஏலக்காயும் போட்டு எத்தனை சர்க்கரைப் பொங்கலும், வெண் பொங்கலும் தின்றிருப்பாய்! இது இறந்தவர்களுக்

காகச் செய்யப்படும் சமையல். கீழ்சாதியில் பிறந்த நாம் இதை வாசனை பிடிப்பதும் பாபம்... போ, அந்தப்பக்கம்'' என அதட்டினான்.

இந்த சம்பாஷணைகளை ஏகநாதர் பூராவாக கேட்க நேர்ந்தது. ''ஆசை கொண்டு இந்தப் பெண் ஏங்கி நிற்கையில் நாம் இன்னொருவருக்குப் படைப்பதுதான் குற்றம். இதைத் தோட்டக்காரன் குடும்பத்துக்குப் போட்டு விட்டு வேறு சமைக்கச் சொல்லுவோம்'' என முடிவு செய்தார். கண்டியாவை அழைத்து தன் தீர்மானத்தைச் சொன்னார். அவனும் மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டான். தோட்டக்காரன் எவ்வளவோ மறுத்தும் அவனை சமாதானப்படுத்தி பருப்பு, பச்சடி, அப்பம், வடை, போளி, பாயாசத்தோடு அவர்களுக்கு அப்படியே கொடுத்து விட்டார்.

மறுபடி வீடு மெழுகி, தண்ணீர் கொண்டு வந்து, பாத்திரங்களைத் தேய்த்துக் குளித்துவிட்டு, புண்யாக வசனம் செய்து, சமையலைத் தொடங்கினான் கிருஷ்ணன். திண்ணையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த அந்தணர்களுக்கு இந்த விஷயம் தெரிந்ததும் எரிமலையாய் கொதித்தனர்.

''சிரார்த்த நாளிலே பிச்சை போடுவதே பாவம். குழந்தைகளைக் கூட சமையல் அறையில் அனுமதிக்க மாட்டார்கள். அன்றைக்கு பிராம்மணர்களுக்கு சாப்பாடு போட்ட பிறகே பூஜை செய்யலாம். மாட்டுக்குத் தீனி வைக்கலாம். அப்படி இருக்க பஞ்சமனுக்கு முதலில் சமைத்துப் போடுவதா? ஏகநாதரே, மகா பண்டிதர் என்ற அகம்பாவமோ? திதி காரியங்களை நாங்கள் செய்ய மாட்டோம். ப ;து வீட்டினுள் காலை வைத்தாலே தோஷம்'' என்று சொல்லிப் பிடிவாதமாக திண்ணையிலேயே இருந்தனர்.

ஏகநாதர் எப்படியெல்லாமோ சமாதானப்படுத்திப் பார்த்தும் அவர்கள் அசையவில்லை. வேதனையோடு இடிந்து போய் உட்கார்ந்து விட்டார். ஏகநாதர். அருகே வந்த கண்ணன் ''ஸ்வாமி, இதற்கா வருத்தம்! திவச மந்திரம் பூராவும் உமக்குத் தெரியும். திவச காரியங்களை நடத்த மகாதேவனும், நாராயணனும், உமது தந்தையும் வருவார்கள். உண்ட மிச்சம் சாப்பிட நானும், எனக்கு சுற்று வேலை செய்யும் இந்த ஆளும் இருக்கிறோம்'' எனத் தேறுதல் கூறினான். அரை மனதோடு மந்திரங் களைக் கூறி, காரியங்களை ஆரம்பித்து நடத்தினார் ஏகநாதர்.

மனசுக்குள் தைரியமின்மை. பக் பக் என்று பதறியது. என்ன ஆச்சரியம்! கருட வாகனத்தில் மகாவிஷ்ணுவும், சூலா யுதத்துடன் மகாதேவனும் பிரசன்னமானார்கள். நிழல் வடிவில் பானு தாசரும் வந்து சாப்பிட அமர்ந்தார்.

மந்திரங்களின் சப்தமும், ஹோம நெய்யின் புகையும் அந்தணர்களை ஜன்னல் வழியே எட்டிப் பார்க்க வைத்தன. சங்கு சக்கரபாணியும், சூலாயுதபாணியும், பானுதாசரும் சாப்பிடுவது கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.

கண்டியா "கொஞ்சம் போளிக்கு நெய் போடுகிறேனே... அசல் பசு நெய்... இப்போது தான் வெண்ணை காய்ச்சினேன். கொஞ்சம் அதிரசம் போட்டுக் கொள்ளுங்கள்... மாம்பழம் ரெண்டு துண்டம்... பலாச் சுளைக்கு தேன் விடலாமா" இப்படி விழுந்து விழுந்து உபசரித்தது, எரிகிற நெருப்பில் எண்ணைவிட்டதுபோல் இருந்தது.

'ஏகநாதரைத் தள்ளி வைத்தால் தெய்வ கோபத்துக்கு ஆளாக நேரிடும். சேர்த்துக் கொண்டாலோ எவனும் ஆசாரத்துக்குப் பயப்பட மாட்டான். அதனால் கண் துடைப்பு போல கங்கையில் நீராடி, பிராயசித்தம் செய்து கொள்ள வேண்டும் என்று சொல்லுவோம்' என முடிவெடுத்தனர்.

ஏகநாதரும் அதற்கு ஒப்புக் கொண்டார். திதி காரியங்கள் முடிந்ததும் மறுநாள் கங்கைக்கு வந்தார். ஏகநாதர் நீரில் மூழ்க இருக்கையில் உடலெல்லாம் அழுகிச் சொட்டும் குஷ்ட நோய் புண்களோடு ஒரு கிழ பிராம்மணர் வந்தார். கரையிலிருந்த அந்தணர்களிடம் "ஏகநாதர் வீடு எது?" என்று கேட்டார். அவர்கள் நாற்றம் தாங்காமல் ஒதுங்கிக் கொண்டு, "சை, தள்ளி நில்லும். ஏகநாதரை எதற்குத் தேடுகிறீர்?" என்று கேட்டனர்.

"நெடுங்காலமாய் இந்த நோய் என்னை வாட்டி வதைக்கின்றது. பகவானைப் பலநாள் பூஜை செய்து நோய் நீங்க வரம் கேட்டேன். பண்டரிநாதன் 'பைடனிபுரத்தில் என்பக்தன் ஏகநாதன் திதி நாளில் பஞ்சமருக்கு அன்னமிட்டான். அதிலே ஒரு குழந்தை சாப்பிட்ட பலனை உமக்குத் தானம் செய்தால் உன் நோய் பூராவாக நீங்கும்" என்றான். அந்தப் பலனுக்காக அவரைத் தேடுகிறேன்" என்றார் அந்தணர்.

ஏகநாதர் கரை ஏறி வந்தார். "ஐயா, அந்தணரே! நான் அந்தப் பெண் விரும்பினாள் என்று கொடுத்தேனே அன்றி, புண்ணியப் பலன் கருதி அன்னமிடவில்லை. அதனால் உமது நோய் நீங்கும் என்றால், அதுவே பெரிய புண்ணியம்" என்று சொல்லி மந்திரம் சொல்லி நீர் வார்த்தார்.

என்ன அற்புதம்! தண்ணீர் விடவிட கிழவர் உடல் புண்கள் ஒவ்வொன்றாய் மறைந்தது. உடல் தேஜோமயமாய் ஒளி வீசியது. வேதியர்கள் "பஞ்சமர்களுக்கு உணவிட்டதற்கு பிராயசித்தம் செய்யச் சொன்னோம். அந்தப் புண்ணிய பலனில் ஒரு துளிக்கு, தொழுநோயையே குணப்படுத்தும் வல்லமை உண்டு என்று காட்டி விட்டான் பரந்தாமன். அவனைக் குற்றம் சொன்னாலாவது மன்னிப்பான். அவன் அடியார் களைக் குற்றம் சொன்னால் தாங்கமாட்டான்" எனப் பேசிக் கொண்டு ஏகநாதரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர்.

பண்டரிபுரத்தில் ஒரு அந்தணர், பாண்டு ரங்கனைப் பார்த்தே தீருவது என வைராக்கியத்தோடு தவமிருந்தார். பரந்தாமன் தான் ஏகநாதர் வீட்டில் ஏவல் செய்கிறாரே! எப்படி வருவார்? அந்தணர் முன் ருக்மணி தேவியார் தோன்றி "ஒரு மாமாங்கமாக ஏகநாதர் வீட்டில் வேலைக்காரனாக இருக்கும் ஸ்வாமி உங்கள் முன் எப்படி வருவார்? கண்டியா கிருஷ்ணன் என்ற பெயரில் அங்கிருக்கும் பரந்தாமனை கையோடு இழுத்து வாரும்" என்றாள்.

உடனே புறப்பட்டு பைடனிபுரம் சென்று ஏகநாதர் வீட்டிற்குப் போனார். இவர் போன சமயம் பகவான் ஆற்றங்கரைக்குப் போயிருந்தார்.

ஏகநாதரிடம் கண்டியா கிருஷ்ணனைப் பற்றி விசாரித்தார் அந்தணர். "கண்டியாவா? அவனுக்கு யாருமே இல்லை என்றானே! தண்ணீர் எடுக்க நதிக்குப் போயிருக்கிறான். உள்ளே வந்து உட்காருங்கள். இதோ வந்து விடுவான். இந்தப் பன்னிரண்டு வருஷத்தில் அவனைத் தேடி ஒருவரும் வந்ததில்லை" என்று ஏகநாதர் சொல்லிக்கொண்டிருக்கும் போதே தோளில் தண்ணீர் குடத்தோடு வந்தார் கண்டியா கிருஷ்ணன்.

அவ்வளவு தான்! அந்தணர் ஓடிச் சென்று கண்ணன் கால்களில் விழுந்தார். "உலகமெல்லாம் நீ படைத்தவையாயிருக்கும் போது ஒருவருமில்லை என்றாயா? அன்புக்கு அடிமைப்பட்டு பணி செய்ய வந்தாயோ?" என்றெல்லாம் புலம்பினார்.

கண்டியா நிமிஷமாய் பூஜை அறையில் நுழையப் பின்னால் ஓடினார் அந்தணர். அறையைச் சுற்றி ஆராய்ந்தார். கண்டியாவைக் காணோம். கைக்கெட்டியது தவறி விட்டதே என்ற பதட்டத்தில் மூர்ச்சையாக விழுந்து விட்டார். ஏகநாதருக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரே குழப்பம்.

"கண்டியா, கண்டியா தண்ணீர் கொண்டு வா. இவர் மயக்கமாகி விட்டாரே" என ஏகநாதர் குரல் கொடுக்க, அந்தணர் தானே எழுந்தார். ஏகநாதரிடம் "ஸ்வாமி, கண்டியா இனி வரமாட்டான். 12 வருஷம் உழைத்து விட்டானே! கண்டியா, கண்டியா' என அடியார்கள் அலைய அவன் இங்கு வந்து தொண்டு செய்ய நீர் என்ன பாக்கியம் செய்தீரோ...! எனப் பலவாறு புலம்பினார்.

இதைக் கேட்ட ஏகநாதர் துடித்தார். வேதனைப்பட்டு உருகினார். "இறைவனை வேலை ஏவிய பாவியானேனே! 12 வருஷங்கள் பக்கத்திலிருந்தும் அறியாமல் போனேனே!" என்றெல்லாம் புலம்பினார். என்ன சொல்லி என்ன? கை நழுவிப் போன பின்தான் எவருடைய அருமையும் புரிகிறது! ஒரு நாள் ஏகநாதர் கங்கையில் நீராடி விட்டு வந்து கொண்டிருந்தார். ஒரு வழிப்போக்கன் காறி உமிழ்ந்தது அவர் மேல் பட்டது. மறுபடி நீராடி விட்டுத் திரும்பினார்.

"திதியன்று பஞ்சமர்களுக்கு சமைத்த உணவைப் படைத்த நீசன் நீதானா?" என்று மறுபடி காறி உமிழ்ந்தான். ஏகநாதர் பதிலேதும் பேசாமல் மறுபடி நீராடித் திரும்பினார்.

"பகவானையே பன்னிரண்டு ஆண்டுகள் சேவை செய்ய வைத்திருக் கிறாயே" என்று மறுபடி காறி உமிழ்ந்தான். இப்போதும் மௌனமாக நீராடினார் ஏகநாதர். அவர் கரை ஏறியதும் அந்த மனிதன் ஏகநாதர் காலடியில் விழுந்தான்.

"பொறுமையின் சிகரமே, கோபமே வராத ஒருவரிடம் உபதேசம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைத்தேன். நான் தேடிய குரு தாங்கள்தான். என்னை மன்னித்து சீடனாக ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று அடிபணிந்தான். அப்போது ஒரு வியாபாரி வந்தான். ஏகநாதரிடம் "ஸ்வாமி, உலகில் எல்லோருமே கெட்டவர்களாக இருக்கிறார்கள். இந்த உலகத்தில் இருக்கவே எனக்குப் பிடிக்க வில்லை" என்றான்.

ஏகநாதர் கண்ணை மூடி சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். பிறகு "நீ கவலைப்படாதே! உன் ஆயுள் ஒரு வாரம் தான். இன்றைக்கு எட்டாம் நாள் உன் ஆயுள் முடிகிறது. முடிந்தவரை எவருடனும் சண்டையிட்டு பாபத்தைச் சேர்த்துக் கொள்ளாதே! எல்லோருக்கும் முடிந்த உதவிகளைச் செய்து, தான, தருமங்கள் செய்து புண்ணியத்தை சேமித்துக் கொள். சாவதற்கு முதல் நாள் என்னை வந்துபார்" என்றார்.

வியாபாரி சென்று விட்டார். 'ஒரு வாரம் சென்று உனக்கு உபதேசம் செய்கிறேன்' எனவும், வழிப்போக்கனும் சென்று விட்டான். ஒரு வாரம் சென்றதும் இருவரும் வந்தனர். ஏகநாதர் வியாபாரியிடம் "நாளைக்கு உனது இறுதிப் பயணம். இந்த ஒருவாரமாய் உலகம் எப்படி இருந்தது" என்று கேட்டார்.

வியாபாரி "ஸ்வாமி! தப்பெல்லாம் என் மேல்தான் என்று புரிந்து கொண்டேன் .....உலகம் எத்தனை இனிமையானது விட்டுச் செல்ல மனமே இல்லை! நாம் ஒருநாள் விருந்திட்டால், அதில் கலந்து கொண்ட பலர் நம்மை விருந்துக்கழைக்கிறார்கள். தான தருமம் செய்தால் காது

குளிரும்படி புகழ்கிறார்கள். எல்லோருமே நல்லவர்களாக இருக்கிறார்கள்!" என்று சோகமாகக் கூறினான்.

ஏகநாதர் "வருந்தாதே அப்பா! உன் ஆயுள் நீண்டிருக்கிறது. நாளை மரணம் என்று நினைத்து வாழ்பவன் நன்மையே செய்கிறான். நான், எனது என்ற பற்றைத் துறந்தவனுக்கு வாழ்க்கை சுலபமானது. சம்சார சாகரத்தை நீந்திக்கடக்க, சுமைகளை உதறினால் எளிதாய் இருக்கும்" என்றார். வியாபாரி ஏகநாதரை வணங்கி விடை பெற்றான். வழிப்போக்கன் பக்கம் திரும்பிய ஏக நாதர் "இதுதான் உனக்கும் நான் செய்யும் உபதேசம். மற்றவர்களை சோதிப்பது எளிது. முதலில் பொறுமையை நாம் வரவழைத்துக் கொள்ள வேண்டும். கோபம் வரும்போது அரைமணி கழித்துக் கோபப்படுவதாய் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். அந்த அரைமணி நேரமும் கோபப்படும் மனிதரால் நமக்கு எற்பட்ட, அல்லது ஏற்படப்போகும் நன்மைகளை மட்டும் நினைத்துப் பார்க்க வேண்டும். என்ன கஷ்டம் வந்தாலும் பரந்தாமன் நம்மை சோதிக்கிறார் என்று நம்பிக்கை கொள்ள வேண்டும். ஜாதி, குலம், ஏழை என்றெல்லாம் பார்க்காமல் அனைவரையும் உறவாகப் பார்க்க வேண்டும். வீசும் காற்றும், கொட்டும் மழையும். அடிக்கும் வெயிலும் பேதம் பாராட்டாதபோது நாம் வித்தியாசம் பார்க்கலாமா?" என்றவர், ஆற்றங்கரை மணலில் ஓடிவந்து விட்ட குழந்தை, பொரிக்கும் வெயிலில் துடிப்பதைப் பார்த்து ஓடிப்போய் தூக்கினார்.

"சாமி, சாமி" என்றபடி ஓடிவந்து குழந்தையை வாங்கிக் கொண்ட அதன் தாய், "சாமி, நாங்க தீண்டத்தகாதவங்களாச்சே எங்க குழந்தையை நீங்க தொட்டு....." என்று முடிப்பதற்குள், ஏகநாகர் "உனக்கும், எனக்கும் பகவான் சமமாகத்தான் அவயவங்களைக் கொடுத்திருக்கிறார். அப்படி இருக்க நீ எப்படி தாழ்ந்தவளாவாய்?" என்று சமாதானம் சொன்னார்.

வழிப்போக்கனும் பணிவுடன் விடைபெற்றுக் கொண்டான். பைடனி புரத்தில் ஒரு ஏழைக்கிழவி. அன்னதான மகிமையைப் பற்றி கேள்விப்பட்டு, அவள் மனதில் ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்யவேண்டும் என்று ஆசை பிறந்தது. ஒரு பெரியவர் "உன்னுடைய வறுமையில் ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்வதென்பது நடக்கக்கூடிய காரியமா? ஏகநாதர் பகவானுக்குப் பிரியமான தொண்டர். முற்றும் துறந்த ஞானி.

கண்ணனே இவரிடம் சேவை செய்யும் அளவு பெருமை கொண்ட துறவி. அவருக்கு அன்னமிடுவது ஆயிரம் பேருக்கு அன்னமிடுவதற்கு சமம்" என்றார். "அந்த மகான் என்னைப் போலவங்க வீட்டிலே சாப்பிடுவாரா?" சந்தேகக்குரல் எழுப்பினாள் கிழவி.

"குப்பத்திலே போய் சாப்பிட்ட மகானாச்சே! ஏழை, தாழ்ந்தவன்னெல்லாம் வித்தியாசம் பார்க்காத ஞானி. அன்போட அழைச்சியானா எங்கேயும் வருவார்" என்று ஊக்கப்படுத்தினார். கிழவி போய் ஏகநாதரை விருந்துண்ண அழைத்தாள். ஏகநாதரின் புதல்வரான ஹரி பண்டிதருக்கு தந்தையின் செய்கை பிடிக்கவில்லை. ஆனாலும் துணைக்குப் போனார். அன்போடு விருந்திட்டாள் கிழவி. அகமகிழ்ந்து உண்டார் ஏகநாதர்.

"ஹரி, பாட்டி வயதானவள். சாப்பிட்டவர் இலையை எடுக்கக் கூடாது. நீ எடுத்துவிடு" என்றார் ஏகநாதர். ஹரி, ஏகநாதர் சாப்பிட்ட இலையை எடுத்ததும், அடியில் இன்னொரு இலை இருப்பதைக் கண்டார். அதை எடுத்ததும் மற்றொன்று. ஹரி இலைகளை எடுத்துக் கை சளைத்துப் போனார். சரியாக 1000 இலைகள் இருந்தன. "ஆ! அப்பாவுக்கு அன்னமிட்டால் ஆயிரம் பேருக்கு அன்னமிட்டதற்கு சமம் என்று கிழவி மிகைப்படப் புகழ்கிறாள் என்று நினைத்தோமே! தந்தையின் மகிமை அறியாத மூடன் நான் தான! திருடர்களையே திருந்தச் செய்த தீரரல்லவா நம் தந்தை!

தந்தை விளக்கென்றால் நான் நிழலாகவன்றோ இருந்திருக்கிறேன்" என்று வருந்தினான். கிழவி மெய்மறந்து நின்றுவிட்டாள். தன் ஆசையைப் பூர்த்தி செய்த ஏகநாதரை மனதாரப் பாராட்டினாள். ஏகநாதர் கனவில் ஞானேசுவரர் தோன்றி "என் சமாதி அருகிலே உள்ள அசுவத்த விருட்சத்தை வேறிடத்தில் பெயர்த்து வை" என உத்தரவிட்டார்.

உடனே 'ஆனந்தி'க்கு வந்தார் ஏகநாதர். அசுவத்த விருட்சத்தை பெயர்த்து வேறிடத்தில் பிரதிஷ்டை செய்ததோடு சமாதியையும் புதுப்பித்துக் கட்டத் தொடங்கினார். ஊருக்கு வெளியே வெகு தூரத்தில் இருந்தது சமாதி. வேலையாட்கள் தண்ணீரும், உணவும் இன்றி வருந்தினர்.

ஏகநாதரோ சதா பக்தி, பஜனை, காலட்சேபம் என்றிருந்தார். சரியாக வேலை நடக்கவில்லை. அங்கே பரந்தாமன் வியாபாரி வேடத்தில் கடை தொடங்கினார். வேலை செய்கிறவர்களுக்கு ருசியான உணவும், அமிர்தமென ஜலமும் கிடைத்தது. உற்சாகமாக வேலை செய்தனர். சம்பளத்தைப்பற்றிக் கேட்ட போது மொத்தமாக கணக்குத் தீர்த்துக் கொள்வதாக சொல்லி விட்டார் வியாபாரி. வேலை முடிந்தது. குருபூஜை, உத்ஸவம், எல்லாம் மங்களகரமாய் முடிந்து பைடனிபுரம் புறப்பட்டார் ஏகநாதர். வியாபாரியிடம் நன்றி தெரிவித்து பணம் கொடுக்க வந்த போது "நானும் பைடனிபுரம் வழியாகத் தான் போகிறேன். அங்கு வந்து வாங்கிக் கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டார் வியாபாரி.

பஜனை செய்து கொண்டே பைடனிபுரம் வந்து விட்டனர். ஊருக்கு செல்லும் பாதையில் திரும்பும் போது பார்த்தால் வியாபாரியைக் காணோம்! ஏகநாதர் திகைத்தார். தான் எடுத்த வேலையை முடிக்க இறைவன் தொண்டாற்றிய பெருமையைச் சொல்லிக் கதறினார்.

இன்றும் பண்டரிபுரத்தில் ஏகநாதர் பாடலை சன்னதியில் பாடுபவர் களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. அவர்களுக்கு ஹரிதாஸர்கள் என்று பெயர். ஏகநாதர் பாகவதம் 'ஹரிபாட்' என வழங்கப்படுகிறது. மகாராஷ்டிரத்தில் ஏகநாதர் பெயர் அறியாதவர் இல்லை. அவர் தனது ராமாயணத்திலும், பாகவதத்திலுமாக வாழ்கிறார்.

10. ஸ்ரீ கபீர்தாஸர்

ஸ்ரீமந் நாராயணன் ஆதிசேஷன் மேல் பள்ளி கொண்டிருக்கிறார். காலடியில் மகாலக்ஷ்மி. எதிரே சுகப்பிரம்மம் கைகட்டி நிற்கின்றார்.

"பேதாபேதங்கள் அற்றவன் நீ. சாதி, மத வேறுபாடுகள் பக்திக்கு முட்டுக்கட்டை போடுகின்றது. அதை அகற்ற உம்மாலேயே முடியும்; தமால் என்ற முஸ்லீம் அன்பருக்கு மகனாகப் பிறந்து மக்களை செம்மைப் படுத்து" என்றார் பரந்தாமன். "தாயின் வயிற்றில் கிடக்க என் மனம் இடம்தரவில்லை" என்றார் சுகர். "சரி; தாயே வேண்டாம்... தான்

தோன்றியாகவே கிட” என வரமளித்தார் மகாவிஷ்ணு. தமால் வசித்தது காசி. தொழில் நெசவு. எளிய வரும்படியிலும் பசி என்று வாடி வந்தவர்களுக்கு வயிற்றை நிறைத்தே அனுப்பும் வள்ளல். மனைவி பெயர் ஜிஜ்ஜாபீபீ. பதிக்கேற்ற பத்தினி. இருப்பதைக் கொண்டு திருப்தியுறும் மனது. தெய்வபக்தி கொண்ட தம்பதிகள்.

எப்படியோ அவர்களும் முதுமையைத் தொட்டுக் கொண்டிருந்தனர். ஒரு நாள் தமால்வீட்டில் உணவருந்திய மகான் ஒருவர், “இந்த அன்னதானம் உங்களோடு நிற்காது. சீக்கிரமே வாரிசு பிறக்கும்” என்றார்.

தமால் கேலியாக “வெயில் காலத்து மழைபோல வயோதிகத்தில் மகனா” என்று சிரித்தார். “பெரியோர் வாக்கு பலிக்கும்” என்றாள் ஜீஜா. “என்ன உலக ஆசை” என்று வெறுப்புடன் கூறிவிட்டு நூல்களை அலச கங்கைக்குச் சென்றார்.

அங்கேயும் மனிதர்கள் “கங்காதேவி, அடுத்த ஆண்டு எனக்குப் பிள்ளை பிறக்க வேண்டும். என் வியாபாரம் செழிக்க வேண்டும்”: இப்படி விதவிதமான கோரிக்கைகள் விடுப்பதைக் கண்டார். மனசுக்குள் சொல்லமுடியாத எரிச்சல். இந்த வேதனையில் கழுவிக் கொண்டிருந்த நூல் கற்றை ஆற்றோடு போய்விட்டது. பதறினார் தமால். நூல்சுருளோடு ஆற்றோரமாகப் பின் தொடர்ந்தார்.

“செய்யும் வேலையில் மனம் ஒன்றாமல் கருத்தைச் சிதற விட்டதால் அல்லவா இந்த நஷ்டம். இந்தப் பட்டு நூலை நெய்தால் 50 பேருக்கு அன்னமிடலாமே” என வருந்தினார்.

வெகுதூரம் ஓடியும் பலனில்லை. பட்டுச்சுருள் ஒரு சுழலில் சிக்கி மறைந்து விட்டது. வெறுங்கையோடு வீடு திரும்ப மனமில்லை. மனதை ஒருமைப்படுத்தி இறைவனை தியானித்தார். அந்த இடத்தில் ஒரு சிறிய குடிசை. அதனுள் சென்று அமர்ந்தார்.

திடீரென்று ‘குவா, குவா’ என்ற குழந்தையின் அழுகுரல். திடுக்கிட்டு விழித்த தமாலில் எதிரில் பச்சிளம் குழந்தை. சுற்றும் முற்றும் பார்த்தார். யாரையும் காணோம். அழும் குழந்தையை அள்ளி அணைத்தபடி வீட்டுக்கு வந்தார்.

கணவரைக் காணோமே என்று வாசலில் காத்திருந்த ஜிஜ்ஜாவிடம் குழந்தையைக் கொடுத்தார். ஜிஜ்ஜாவின் மகிழ்ச்சி சொல்லத்தரமன்று. "பெரியவர் வார்த்தை பொய்க்கவில்லை" என்று ஆனந்தப்பட்டாள். குழந்தைக்கு 'கபீர்' என்று பெயரிட்டு செல்லமாக வளர்த்தனர். குழந்தையின் அழகிய முகத்தையும், குஞ்சுக் கை, கால், விரல்களையும் தொட்டுப் பார்த்துப் பூரித்தாள். குழுந்தை தவழ்ந்தான்; தள்ளாடி நடந்தான்.. ஓடினான்... கல்வி பயின்றான். தெய்வ பக்தியோடு விளங்கினான். குலத் தொழிலான நெசவுத் தொழிலையும் கற்றுக் கொண்டான். வேலை செய்யும் போதும் அவன் வாய் ராமநாமத்தையே உச்சரிக்கும்.

சுகப்ரம்மத்தை மணக்க ஆசைப்பட்ட ரம்பை தவம் செய்து முஸ்லீம் இனத்திலேயே கபீரின் முறைப் பெண்ணாகப் பிறந்து 'சுந்தரா' என்ற பெயரில் வளர்ந்து வந்தாள். சுந்தராவின் அழகைக் கண்டு அவளை மருமகளாக்கிக் கொள்ள ஆசைப்பட்டனர் கபீரின் பெற்றோர்.

இதற்கிடையே முஸ்லீம் மத வழக்கப்படி கபீருக்கு 'சுன்னத்து' செய்ய உறவினர் தமாலைத் தூண்டினார்கள். "தனக்கு அது பிரியம் இல்லை" எனக் கபீர் தீர்மானமாக மறுத்துவிட்டார். பெற்றோருக்குத் தர்மசங்கட மான நிலை. மதவழக்கத்தைத் துறந்தால் உறவினரின் ஏச்சு, வெறுப்பு வற்புறுத்தினால் கபீர் வீட்டை விட்டுப் போகிறேன் என்கிறார். பாவம்...அவர்கள் தான் என்ன செய்ய முடியும்? கடைசியில் பாசம் தான் வென்றது.

இரவும் பகலும் தறி போடுவார் கபீர். வாய் இறைவனின் நாமாவைப் பாடியவாறிருக்கும். சில சமயம் மெய்மறந்து அப்படியே நின்று விடுவார். தறி தானாகவே ஓடும். ஜனாபாயோடு எந்திரத்தைச் சுற்றிய கைகள் கபீருக்காக தறிக்கயிற்றைப் பற்றி இழுக்கும். அப்படி நெய்யும் துணியையும் யாராவது 'ஐயா' என்றால் கொடுத்து விடுவார். அத்தனை இரக்கம். ஒரு நாள் இரண்டு முழம் தான் நெய்திருந்தார் கபீர். பாதி இறைவன் நெய்தது. ஜிஜ்ஜாவுக்கு ஒரே கோபம்.

"இரண்டு முழம் நெய்ய ஒரு நாளா? இதை விற்றுவந்தால் தான் சாப்பாடு" என்றாள் ஜிஜ்ஜா. அந்தத் துணியை எடுத்துக் கொண்டு கடைவீதிக்கு வந்தார் கபீர்.

"ரொம்ப அழகாயிருக்கிறது... ஆறுமுழமாயிருந்தால் பரவாயில்லை... மூன்று முழமானாலும் தேவலை" என்று விமரிசனம் செய்தனர் சிலர்.

"எனக்கு நாட்டுத்துணி தான் உழைக்கும்... இது ரொம்ப உயர்ரகமாயிருக்கிறதே" என்று ஒதுங்கிப் போனவர் பலர். அலைந்து அலைந்து கபீர் சோர்ந்து போனார். "சரி; வீடு திரும்பலாம்" என்று புறப்பட்ட போது எதிரே வந்த ஒரு அந்தணர் அதைப் பிடுங்கிக் கொண்டு ஓடினார். திடுக்கிட்ட கபீர் சமாளித்துக் கொண்டு துரத்தினார். ஆங்காங்கே நின்ற ஜனங்கள் கூடி விட்டனர். "பிடி, விடாதே... திருடன்" என்ற சப்தம்.

கபீர், அந்தணரைப் பிடித்துத் துணியைப் பிடுங்க, அது சரி பாதியாகக் கிழிந்துவிட்டது. "இந்த கிழிசல் உடைக்கா இப்படித் துரத்தினாய்?" அந்தணர் கேலியாகக் கேட்டார். "கிழிசலோ, கந்தலோ... அதைத் திருடிய அற்பனே... உனக்குப் பேச்சு ஒரு கேடா... என் துணியைக் கொடு" கபீர் எரிச்சலோடு அந்தணர் கைத் துணியைப் பிடுங்கினார்.

"சரி... நான் கிழித்ததை நானே வாங்கிக் கொள்கிறேன். விலை சொல்லு" என்று அந்தணர் வாதாட, "கூடி இருக்கும் ஜனங்கள் சொல்லும் விலை எனக்கு சம்மதம்" என்றார் கபீர்.

கூடி இருந்தவர்களில் ஒருவர் 'ஏழுரூபாய்' என்றார். இன்னொருவர் 'எழுபது ரூபாய்' என்றார். மற்றுமொருவர் 'ஒண்ணே கால் ரூபாய்' தான் பெறும்' என்றார். இப்படி தலைக்கு ஒன்று சொன்னார்கள்.

அந்தணர் "உம்மை நையாண்டி செய்கிறார்கள். உண்மையான விலை இந்தாரும்" என்று சில சோழிகளைக் கொடுத்தார். (அந்த நாளில் சோழிக்கும் மதிப்புண்டு) வெறுப்புற்ற கபீர் சோழிகளை வீசி எறிந்தார்.

"கோபித்துக் கொள்ளாதே கபீர். நான் ஏழை. பிருந்தாவனம் போகிறேன். நந்தகுமாரனுக்கு இதை சாத்தி மகிழலாம் என்ற ஆசை. பிடுங்கிவிட்டேன்" என்றார் அந்தணர். கபீர் சாந்தமடைந்தார். சிறிது நேரம் யோசித்தார்.

"விற்றுப் பணம் கொண்டு வருவேன் என அம்மா, அப்பா காத்திருப்பார்கள். அவர்களை ஏமாற்ற முடியாது" எனச் சொல்லி விட்டார் கபீர். அந்தணர் பெரிதாக சிரித்தார். "கபீர், குறிப்பறிந்து கொடுப்பது

தான் தானம். கேட்டும் மறுக்கிறாயே! மகாபலி அசுரகுலத்தில் பிறந்தும் இறைவன் மூன்றாவது அடி வைக்க தன் தலையையே காட்டினான். கர்ணன் உயிர் போகும் தறுவாயிலும் கண்ணனுக்கு தன் உயிரனய தரும பலனையே தானமாகக் கொடுத்தான். இந்த ஒரு முழத்துணியை ஆண்டவனுக்கு அளிக்க இத்தனை யோசிக்கிறாயே'' என்றார் அந்தணர். ''கொடுத்து விடலாமா? அம்மா கோபிப்பாளே'' என்று கபீர் குழம்பி நிற்கும் போதே, அந்தணர் மறைந்து போனார். பாதி கிழிந்த துணியை மடித்து, எடுத்துக் கொண்டு, வீடு நோக்கிப் புறப்பட்டார் கபீர். பசி காதை அடைத்தது. பயம் மனதைக் குழப்பியது. அப்போது எதிரே வந்த ஒரு பகீர், ''ஐயா, குளிர் நடுக்குகின்றது. கையிலிருக்கும் அந்தத்துணியைக் கொடுத்தால் போர்த்திக் கொள்வேன்'' என்று கெஞ்சினார்.

''ஹரே, ராம்... எல்லாம் உன் சோதனை'' என்றபடி கைத்துண்டை பகீரிடம் நீட்டினார் கபீர். பகீர் கோபத்துடன் துண்டை மறுத்து, ''அல்லாவின் பெயரைச் சொல்லாமல் மனிதன் பெயரைச் சொல்கிறாயே! முஸ்லீம் அல்லாதவர்களிடம் நான் இரப்பதில்லை. காபிர் கை தானம் எனக்கு வேண்டாம்'' என்றார்.

''ராம் என்றாலும் ரஹீம் என்றாலும் இறைவன் ஒருவனே. மனதை ஒரு நிலைப்படுத்த தெய்வபக்தி ஒரு ஏணி. ஏணி எதில் செய்திருந்தாலும் ஏற வழி செய்யும். மனிதன் எப்படி வாழ வேண்டும். எந்த நிலையிலும் நீதி பிசகக் கூடாது என வாழ்ந்து காட்டியவன் ராமன். அவன் பெயரை உச்சரிப்பதால் அவன் குணத்தின் சாயலாவது வராதா என்பது என் ஆசை'' என பலவாறு எடுத்துக் கூறினார் கபீர்.

''அடேய்... நீ முஸ்லீம் இனத்துக்கே துரோகி... புரட்சியா செய்கிறாய்... இதோ உன் பெற்றோரிடம் சொல்லி தண்டனை வாங்கித்தருகிறேன்'' என்று கூறிய பகீர், கபீரின் வீடு நோக்கி நடந்தார். கபீருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. வீட்டிற்குப் போகவும் பயம். அங்கிருந்த ஒரு பாழ் வீட்டில் பதுங்கிக் கொண்டார்.

பகீர் ஜிஜ்ஜா பீபியிடம் போய் ''அம்மா, கபீர் ஒரு இரண்டு முழப் பட்டுத்துணியை கடைவீதியில் விலை கூறிக் கொண்டிருந்தான். நான் பேரம் பண்ணிக் கொண்டிருந்தபோது ஒரு அந்தணரிடம் தானம் செய்யப் போனான். நான் சண்டை போட்டேன். இரண்டாகக் கிழித்து பாதியை

எனக்குத்தந்தான். எனக்கு துணியை இரண்டாக்கினது பிடிக்கவில்லை. கோபித்துக் கொண்டேன்.

"என் அம்மாவிடம் போய்க் கேள்; பெரியதாகத் தருவார்" என்று சொல்லி வீட்டைக் காட்டினான். எனக்கு நல்லதாக ஒரு பட்டுத்துண்டு கொடுங்கள்" என்றான். ஜிஜ்ஜாவுக்கு வந்த கோபத்துக்கு அளவில்லை. இப்படிப் பொறுப்பற்றுத் திரிகிறானே என்ற எரிச்சல் ஒருபுறம். துணி விற்ற பணம் வரவில்லையே என்ற ஏமாற்றம் மறுபுறம்.

"இங்கேதப்பா துணி... பண்டாரம் சோத்துக்கலையும் போது, பக்கத்திலிருக்கும் நாய் பிரியாணிக்கு அவன் காலைச் சுரண்டிய கதை போல இருக்கிறது உன் பேச்சு... அன்றாடம் நெய்து விற்று பிழைப்பு நடத்துகிறோம். ஆமாம்... கபீர் இப்போது எங்கே? உன்னை அனுப்பிவிட்டு அவன் எங்கே போனான்?" எரிச்சலோடு கேட்டாள் ஜிஜ்ஜா.

"ஒரு பாழ்வீட்டில் ஒளிந்து கொண்டிருக்கிறான். வாருங்கள் காட்டு கிறேன். ஆனால் நான்தான் காட்டிக் கொடுத்தேன் என்று சொல்லா தீர்கள்" கம்பை ஊன்றியபடி பகீர் முன்னே செல்ல, பின் தொடர்ந்தான் ஜிஜ்ஜா.

"அம்மா, வீட்டிற்கு புறக்கடை வழி ஒன்று இருக்கிறது. நீங்கள் வாசல் பக்கம் நுழைந்தால் அவன் பின்பக்கமாக ஓடி விடுவான். அதனால் பின்னால் நான் காவல் இருக்கிறேன். முன்பக்கமாக சப்தமிடாமல் போனால் அவனைப்பிடித்துவிடலாம்" என்று யோஜனை சொல்லித் தந்தார் பகீர். அதன்படியே உள்ளே நுழைந்த ஜிஜ்ஜாவுக்கு, கபீரைப் பார்த்ததும் எரிச்சல் இரண்டு மடங்காயிற்று. பகீரின் கைத்தடியை வாங்கி 'பளீர், பளீர்' என்று அடித்தாள்.

"ஹரே ராமா, ஹரே ராமா" என்றார் கபீர். பிரம்பைப் போட்டுவிட்டு முதுகைத் தடவிக் கொண்டாள் ஜிஜ்ஜா.

பிட்டுக்கு மண் சுமக்க வந்த பெருமானை, பாண்டிய மன்னன் அடித்த அடி எல்லா ஜீவராசிகளின் மீதும் பட்டதுபோல, ஜிஜ்ஜா கபீரை அடித்த அடி எல்லார் மேலும் பட்டது. அங்கே தமால் துடித்தார். பகீர் நெளிந்தார். ஜிஜ்ஜாவுக்கு எதுவும் புரியவில்லை. பகீர் உருவில் வந்த பகவான், கபீரின் முதுகைத் தடவிக் கொடுத்தார்.

சக்கரதாரியைக் கண்டதும் ஜிஜ்ஜா "கற்பகோடிகாலம் உன் தரிசனம் வேண்டித் தவம் இருப்போரையெல்லாம் விட்டு இந்த பேதைக்குக் காட்சி தந்த பகவானே! உண்மை அறியாத என்னைப் பகடையாக வைத்து கபீரை அடிக்க வைத்தாயே" எனக் கதறினாள்.

"ஜிஜ்ஜா, நீ கபீரை அடித்த அடி, அவன் முதுகில் படவில்லை. என் முதுகைப்பார்" என்று காண்பித்தார் வைகுண்டவாசி. இறைவன் முதுகில் அடித்தழும்புகளைப் பார்த்ததும் ஜிஜ்ஜா" உலகமே வணங்கும் இறை வனை அடித்த பாவியானேனே" எனக்கதறித் துடித்து மயக்கமாகி விட்டாள்.

இறைவன் தானே தன் மலர்க்கைகளால் ஜிஜ்ஜாவின் விழிகளை நீர் கொண்டு தடவி மயக்கம் தெளிவித்தான். "கபீர், குருமுகமாக உபதேசம் பெற்று அனைவரிடமும் பக்தி மார்க்கத்தைப் பரப்புவாய்" என ஆசீர்வதித்து மறைந்தார் நாராயணன். தாயும், மகனும் நிறைந்த மனதுடன் வீடு திரும்பினர். காசியில் ராமானந்தர் என்று ஒரு மகான். அவரையே குருவாக ஏற்க விரும்பினார் கபீர். பல நாள் சென்றும் ஏமாற்றத்தோடு திரும்பினார். ஒரு நாள் விடியற்காலையில் மடத்துக்கு சென்றார்.

அங்கே இருந்த ராமானந்தரின் சிஷ்யர்கள், "அடே நீயோ முஸல்மான். இந்து மடத்தில் உனக்கென்ன ஜோலி... ஏழை பகீர் பையா... திருட வந்தாயோ... ஈக்கு இரும்படிக்கும் இடத்தில் என்ன கிடைக்கும் "என ஏளனமாகப்பேசி விரட்டினர். "நான் ராமானந்தரிடம் உபதேசம் பெற வந்தேன். உங்களைப் போல் நானும் அவர் சீடனாக வேண்டும்" என்று பலவாறு சொல்லிக் கெஞ்சினார் கபீர். சீடர்கள் அவரைத் தடியால் நையப் புடைத்தனர். வலி பொறுக்காத கபீர் "சீதாராம், ஜெயராம்" எனக் கதறினார். கபீர் அடிபட்டு உடலெல்லாம் வீங்கி, இரத்தக் காயத்துடன் வீடு திரும்பினார்.

ஆனாலும் தன் நோக்கத்தில் பின் வாங்கவில்லை. மறுபடி முயற்சி செய்து அடிவாங்கிக்கொண்டார். மூன்றாம் முறை நன்கு ஆலோசித்து ஒரு திட்டம் தீட்டினார். கருக்கிருட்டுத் அதிகாலை வேளை. இராமாநந்தர் குளிக்க வரும் படித்துறை படிக்கட்டிலே கருப்பு உடைடேயாடு படுத்திருக் கிறார் கபீர். எதிர் பார்த்தபடியே ராமானந்தர் படி இறங்கும் போது கபீரை மிதித்து விட்டார்.

"ராம், ராம்... யாரப்பா அது இருட்டில்...? படுக்க வேறு இடமில்லையா? குளிக்க வருகிற வழியில் படிக்கட்டில்... அபசாரம்.. அபசாரம்" என்றபடி நீராடப் போனார் ராமானந்தர். அதையே உபதேசமாகக் கொண்டார் கபீர். குருதேவரின் பாததூளி பட்டதை பாக்கியமாக நினைத்தார்.

வீட்டிற்கு வந்தார். நெற்றியில் சந்தனக் கீற்று. கழுத்தில் துளசி மாலை. பூஜைக்கு வேண்டிய சாமான்களோடு ராமானந்தர் இருப்பிடம் போய் "ராம், ராம்" என ஜபிக்கத் தொடங்கினார். ராமானந்தர் கபீரிடம் "இதென்ன அடம்... நீயோ முஸ்லீம்... அல்லா வைத் தொழுவதே முறை; போய் வா" என,

"எனக்கு ராம நாமமே பிடித்திருக்கிறது. தாங்களே என் குரு. எனக்குத் தாங்கள் உபதேசம் செய்யாவிட்டாலும் பரவாயில்லை. இன்று காலை தாங்கள் பாத தூளி பட்டதே போதும்" என்று கபீர் கூற, ராமானந்தர் திடுக்கிட்டார். "அப்படியானால் கங்கை படிக்கட்டில் படுத்திருந்தவன் நீதானா? கர்ணன் பிராம்மணன் என்று பொய் சொல்லி

பரசுராமரிடம் வித்தை கற்றதுபோல், வஞ்சனையாய் வலை விரித்திருக்கிறாய்" எனச் சினந்து தன் செருப்பை விட்டெறிய, அது கபீரின் நெற்றியைத் தாக்கியது.

"கோபம் கொள்பவன் புண்ணியத்தைக் கரைக்கிறான். சினந்த வனுக்குத் தவம் பலிப்பதில்லை" எனத் தானே சாந்தமடைந்தூராமானந்தர் "ராம நாமத்தை செபித்து வா" என்று சொல்லி அனுப்பினார்.

மச்சேந்திர நாதர் என்பவர் மகான். அவருடைய சீடர் கோரக்கர். அவர்களைப்பற்றிப் பின்னால் விரிவாகப் படிக்கலாம்.

கோரக்கர் அஷ்டமா சித்திகளும் கற்றவர். ஆனால் தான் மேதாவி என்ற அகந்தை நிறைய இருந்தது. வாதத்திலே என்னை எதிர்ப்பவர் இல்லை என ஊர் ஊராகப் பறை சாற்றி வந்தார்.

காசியிலும் ராமாநந்தரை வெல்ல வந்தார். அவர் வருவதைப் பற்றிய செய்தி அறிந்ததுமே ராமானந்தரின் சீடர்கள் "கோரக்கர் பொல்லாதவர், நாம் ஓடிவிடுவோம்" எனக் குருவிடம் கேட்டனர்.

குரு தயங்கவே, சீடர்கள் ஓடி ஒளிந்து கொண்டனர். ராமானந்தர் தியானத்தில் ஆழ்ந்து விட்டார்.

கோரக்கர் வருவதையும், சீடர்கள் ஓடி விட்டதையும் கேள்விப்பட்ட கபீர், மடத்திற்கு விரைந்து வந்தார். தியானம் கலைந்து எழுந்த குருநாதர் கபீரைக் கண்டு சினந்தார்.

"கபீர்... எங்கு வந்தாய்? ஏன் இப்படித் தொல்லைப்படுத்துகிறாய்? கோரக்கர் ஏற்கெனவே குதர்க்கம் பிடித்தவர். 'இந்த முஸல்மான் தான் உன் யோக்கியதைக்கு மிச்சமா' என நையாண்டி பேசுவானே" என படபடத்தார்.

கபீர் அடக்கமாக "சுவாமி, எறும்புகள் சேர்ந்தாலும் இரும்பை அரிக்க முடியாது. அதை கோரக்கருக்குப் புரிய வைக்கிறேன். உங்களை அவன் அவமதிப்பதை என்னால் தாங்கமுடியாது. கோரக்கரை வெல்ல அனுமதிக்க வேண்டும்" என்றார்.

குருதேவர் "புரியாமல் பேசுகிறாயே கபீர்... புலியைப் பூனை வெல்லதா? நீ தோல்வியுற்றால் அந்தக் கேவலம் என்னைத்தானே சேரும்!

விவகாரம் செய்யாமல் உன் வேலையைக் கவனி... வேற்றுமதத்தானை அனுப்பி அவமதித்தேன் என என்னைத் தாக்குவார் கோரக்கர்... போ, போ" என்று விரட்டினார்.

இதற்குள் கோரக்கர் மடத்துக்கெதிரே வந்து விட்டார். ராமானந்தரின் காலடியில் வணங்கி எழுந்த கபீர் வீதிக்கு வந்தார். கோரக்கரிடம் "மலையில் முட்டிக் கொள்வதால் மண்டை தான் உடையும். சர்ச்சையானாலும், ஞானமானாலும் என் குருநாதர் முன் நிற்க உமக்குத் தகுதி கிடையாது. மரியாதையாய் போனால் மானம் பிழைக்கும். மீறி வாதம் செய்ய விரும்பினால் முதலில் என்னை வெல்ல வேண்டும்" என்று கம்பீரமாகச் சொன்னார் கபீர்.

கடகடவென்று சிரித்தார் கோரக்கர். "அட அற்பனே, மலையை எலி கவ்வுமா? நீ என்னை வெல்வதா? அடாது பேசிய் உன்னை என்ன செய்கிறேன், பார்..." கோரக்கரின் இந்தவார்த்தைகளைக் கேட்ட ராமானந்தர், கபீரைக் காப்பாற்ற எழுந்தார். அவரைத் தடுத்த கபீர், நெய்த பட்டு நூல் நுனியைத் தரையில் பதித்து, ஆகாயத்தை நோக்கி நூல் கண்டை வீசினார். (குருநாதருக்கு ஆபத்து என்றறிந்ததும் நெய்து கொண்டிருந்த நூல்கண்டோடு வந்திருந்தார்) என்ன அதிசயம்...! நூலிழை விரிந்து விரிந்து கம்பிபோல் வளையாது ஆகாயத்தைத் தொடுவது போல் நின்றது.

அந்த மெல்லிய பட்டு நூலிழையில் மளமளவென்று ஏறிய கபீர் உச்சியில் போய் உட்கார்ந்து கொண்டு "கோரக்கரே, இங்கு வாரும்.. வாதம் செய்யலாம்" என்றார். கோரக்கரின் கர்வத்திற்கு சரியான சாட்டை அடி. ஆனாலும் கௌரவத்தை விட்டுக் கொடுக்காமல் "மாய மந்திரத்தையெல்லாம் விட்டுவிட்டு பூமிக்கு வா. வாதம் செய்வோம்" என்றார் கோரக்கர்.

கீழே இறங்கி வந்த கபீர் இரண்டு ராமானந்தர்கள் நிற்பதைக் கண்டு திடுக்கிட்டார். "யார் உண்மையான ராமானந்தர்" என்று தெரியாமல் கபீர் திகைத்தார்.

ராமானந்தர் "ராமா, என் சிஷ்யனைக் காப்பாற்று" என்று வேண்ட, கபீருக்கு ஒரே உற்சாகம். எந்த குருநாதர் அலட்சியம் செய்தாரோ, அவரே தனக்காக பச்சாதாபப்படுகிறார் என்றால் பெருமைப்பட வேண்டியது

தானே! கபீர் கோரக்கரின் குருநாதர் மச்சேந்திரநாதர் வடிவில் நின்றார். கோரக்கர் சங்கு சக்கர தாரியாக வடிவெடுக்க கபீர் ஆதிசேடனானார்.

கோரக்கர் உடனே சுயவடிவாகி ராமானந்தரின் பாதம் பணிந்தார். "துரோணருக்கு ஏகலைவன்போல உமக்கு கபீர் கிடைத்தது நீர் செய்த பூர்வ ஜென்ம புண்ணியம்" என்றவர், கபீரை நோக்கி "குருபக்தியில் உனக்கு இணை எவரும் இல்லை. மதத்தைக் கடந்த உன் பக்தி உலகில் காணக்கிடையாதது. நீ நீடுழி வாழ்க... என் வழிகாட்டி, குரு எல்லாம் நீதான்" எனப் புகழ்ந்தார். காசி நகரம் முழுவதும் இதுபற்றிப் பாராட்டியது.

சுந்தராவை கபீருக்கு மணம் முடிக்க வெகு நாட்கள் அவள் பெற்றோர் ஒப்புக்கொள்ளவில்லை. சுந்தராவோ "சின்ன வயதில் அவரே என் கணவர் என்று சொல்லி வந்ததால் மனதினால் அவரை மணாளனாக வரித்து விட்டேன். இனி வேறொருவருக்கு மனைவியாகமாட்டேன்" எனப் பிடிவாதமாக இருந்தாள்.

சுந்தராவின் தகப்பனாரின் கனவில் பகீர் வடிவில் வந்து பகவான், "கபீருக்கே உன் மகளை மணம் செய்து கொடு" என்று சொல்லியும், மத நியதிகளுக்கு புறம்பாக வாழ்ந்த கபீரை, மருமகனாக்கிக் கொள்ள சுந்தராவின் தந்தை விரும்பவில்லை. பரந்தாமன் முஸ்லீம் பெரியார் வேடத்தில் சுந்தராவின் தந்தையிடம் வந்து, கபீர் போலியாகப் பொய் சொல்வதாகவும், அவனுக்கு சுன்னத்து நடந்து விட்டதாகவும், அதற்குத்தானே சாட்சி என்றும் கூறினார். தேவர் குழாங்களையெல்லாம் தன் மாணவர்களாக்கிச் சாட்சி சொல்ல வைத்தார்.

இறைவன் மாயையில் மயங்காதவரும் உண்டா? கபீர்–சுந்தராவின் திருமணம் இனிதே நடந்தது. கணவருக்கேற்ற மனைவியாய் வாழ்ந்தாள் சுந்தரா. அரைகுறை மனதுடனும், வருகிறவள் தன் ராமபக்திக்கு இடையூறாக இருப்பாளோ என்ற சஞ்சலத்துடனும் அலைமோதிக் கொண்டிருந்த கபீருக்கு சுந்தரா வீட்டிற்கு வந்தவுடன் "ராமானந்தரைக் கண்டு வணங்க வேண்டாமா?" என்று கேட்டது சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பொழிந்தாற் போலிருந்தது. ஊடும், பாவுமாக கபீரும், சுந்தராவும் வாழ்ந்தனர். ராம நாமத்தையும், சாதுக்கள் உபசாரத்தையும் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தார் கபீர். பக்தர்களின் சொத்தான தரித்திரம் இவரையும் விடவில்லை.

"பக்ரீத்" பண்டிகை வந்தது. "பசுக்கன்றை வதைப்பது பாவம்; நம்மைப் போல் இறைவனால் படைக்கப்பட்ட ஒரு உயிர். அதைக்கொல்ல நமக்கென்ன உரிமை?" என்றெல்லாம் வாதாடி முஸல்மான்களின் பழக்கத்தை மாற்றினார்.

அன்றாடம் சோற்றுக்கே வகையில்லாத கபீருக்கு, இப்படி ஒரு மனைவியா என்று நிறையப்பேருக்கு வயிற்றெரிச்சல். இதில் கடை வீதியில் ஒரு சேட், பசிவந்தால் பத்தும் பறந்துவிடும், என்ற நோக்கில் 'சுந்தரா தனக்கு இணங்கி விடுவாள்' என்று, தூண்டில் போட்டு வந்தான். சின்னசின்னக் கற்களை அவள் முதுகில் அடிப்பான். திரும்பிப் பார்த்தால்,

"அடி மானே! அந்த தரித்திரப் பயல் கபீரை நம்பி பாதிநாள் பட்டினி கிடக்கிறாயே! ஒரு நாளாவது என் ஆசைக்குச் சம்மதித்தால் காதுக்கு, கழுத்துக்கு, கைக்கு என்று விதவிதமாகப் பூட்டிக்கலாம். பட்டாய் உடுக்கலாம். பட்டு மெத்தையில் தூங்கலாம். பாயாசத்தோடு சாப்பிடலாம்" என்றெல்லாம் ஆசை காட்டுவான்.

சுந்தராவோ காறித்துப்பி விட்டு வந்துவிடுவாள். கூடியமட்டும் அவன் பார்வையில் படாமல் இருந்தாள். ஒரு நாள் மதியம் நூறு சாதுக்கள் பின் தொடர இறைவன் கபீரின் வீட்டுக்கு வந்தான். "கபீர்... இன்று முழுவதும் பட்டினி... உன் வீட்டில் தான் சாப்பாடு" என்று சொல்லிவிட்டார் பகவான்.

திகைத்தார் கபீர். வயதான பெற்றோரும், அன்பு மனைவியும், தானுமே பட்டினி. வீட்டிலோமணி அரிசி, ஒரு கோதுமை கிடையாது. இந்த அழகில் நூற்றி ஒரு பேருக்கு விருந்தா? "சுந்தரா... இறைவனின் சோதனையைப் பார்த்தாயா? விற்க ஏதாவது பட்டாடையோ, நகையோ இருக்கிறதா? இருந்தால் கொடு. நொய் வாங்கி வந்து கஞ்சி காய்ச்சியாவது ஊற்றலாம்" என்றார்.

சுந்தரா யோசித்தாள் 'என்ன செய்யலாம்?' 'ஆ... அதைத் தவிர வேறு வழியில்லை. சொல்லிப் பார்க்கலாம்" என்று கபீரிடம், கடைவீதி சேட்டின் நடவடிக்கைகளைக் கூறி, "நூற்றி ஒருவரையும் 'என்னால் ஆகாது' என்று பட்டினியோடு திருப்பி அனுப்புவதைவிட என் உடலை விற்பது பாவமாகாது. என்றைக்கிருந் தாலும் அழியப் போகும் உடல் இது. உள்ளம்... அது உங்களுக்கே சொந்தம். உங்கள் யோசனைப்படி நடக்கிறேன்"

என்றாள் சுந்தரா. கபீர், "நல்ல யோசனைதான். அவன் யாரென்று எனக்குத் தெரியாதே! அவன் இருப்பிடத்தைக் காட்டு" என்றார். சுந்தரா உடனே புறப்பட்டாள். கபீர் சாதுக்களிடம் "இதோ சமையலுக்கு வேண்டிய சாமான்களோடு வருகிறேன்" என உத்தரவு வாங்கிக் கொண்டு புறப்பட்டார்.

வியாபாரியின் வீட்டைக் காட்டினாள் சுந்தரா. கதவைத் தட்டினார் கபீர். கதவைத் திறந்த சேட் திடுக்கிட்டான். பயத்தால் குழறினான். சுந்தராவை வம்புக்கிழுத்ததற்கு கபீர் தண்டனை கொடுக்க வந்திருப்பதாக எண்ணி நடு நடுங்கினான்.

கபீரோ "சௌகார், உனக்கு இவள் மீது கொள்ளை ஆசையாமே! இன்று இரவு இவளை உன்னிடம் நான் அழைத்து வருகிறேன். அதற்கு விலை நூற்றி ஒருவருக்கு விருந்து சமைக்க ஆகும் உணவு வகைகள், பாத்திரங்கள். திடீரென்று அதிதிகள் வந்து விட்டார்கள். வேறு வழியில்

லாமல் தான் இந்த ஏற்பாடு. அதிதிகளுக்கு அன்னமிட்டு வழி அனுப்பிய பிறகு இவளை அழைத்து வருகிறேன். உனக்குச் சம்மதமென்றால், தாமதிக்காமல் மளிகை சாமான்களைக் கொடு" என விபரமாகச் சொன்னார்.

வியாபாரி திகைத்தான். தனக்கு இப்படி ஒரு திடீர் யோகமா, என்று பரபரவென்று சாமான்களை கட்டிக் கொடுத்தான். சுமக்க மாட்டாமல் சுமந்து வந்தார்கள் கபீரும், சுந்தராவும். சந்தோஷமாக சமையல் செய்து விருந்திட்டார்கள். பசியோடு அவர்கள் உண்ணுவதைக் கண்டு ஆனந்தப்பட்டார்கள். மகிழ்ச்சியோடு உபசார மொழிகள் சொல்லி வழி அனுப்பினார்கள்.

பிறகு எஞ்சியிருந்த உணவைப் பெற்றோருக்கும், கணவனுக்கும் போட்டுத் தானும் உண்டாள் சுந்தரா. இருட்டத் தொடங்கியதுமே, மழை கொட்டத் தொடங்கி விட்டது. பெற்றோர் உறங்கியதும், கபீர் சுந்தராவை வியாபாரியின் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

எங்கே நாம் ஏமாந்து விட்டோமோ என்ற சஞ்சலத்தோடு காத்திருந்த வியாபாரி, சொட்டச் சொட்ட நனைந்து கொண்டு கபீர் சுந்தராவை அழைத்து வருவதைப் பார்த்தபின் தான் நிம்மதி அடைந்தான். கபீர், சுந்தராவை விட்டு விட்டு "காலையில் வந்து அழைத்துப் போகிறேன்" என்று சொல்லிச் சென்றார்.

வியாபாரி சுந்தராவிடம் "முதலில் ஈர ஆடைகளை களைந்து விட்டு இந்த நேர்த்தியான பட்டாடைகளை உடு. தலையிலிருக்கும் ஈரத்தை இந்தத் துண்டால் துவட்டிக் காயவை" என்று உத்தரவிட்டு விட்டு படுக்கை அறையில் காத்திருந்தான். சுந்தரா அவன் சொன்னபடியே செய்தாள். அரைமணி நேரமாயிற்று. மறுபடி கதவு தட்டும் ஒலி. சௌகாருக்கு ஒரே எரிச்சல். "இதென்ன பூஜை நேரத்தில் விளக்கு அணைந்தாற்போல்" என்று சொல்லியபடி கதவைத் திறந்தான்.

அங்கே நின்றவர் கிராம அதிகாரி. நாக்குழற சௌகார் நடுங்க "சௌகார், உன் வீட்டில் திருட்டுச் சாமான் இருப்பதாகத் துப்பு கிடைத்திருக்கிறது. சோதனை செய்ய வேண்டும்" என்று சொல்லிவிட்டு உட்புகுந்தார் அதிகாரி. ஓரமாய் விரிந்த கூந்தலோடு நிற்கும் சுந்தராவைப் பார்த்ததும் "அடேபாவி! இவள் கபீரின் மனைவியாயிற்றே! இவளை நீ

தெருவில் நடக்கவிடாமல் வெகு காலமாய் வம்புக்கிழுப்பதாகக் கேள்விப் பட்டேன். இப்போது கடத்திக் கொண்டே வந்து விட்டாயா? பொழுது விடிந்து உன்னை விசாரிக்கிறேன்'' என்றவர், சுந்தராவை நோக்கி'' புறப்படு, அம்மா... நானே உன் கணவரிடம் உன்னைச் சேர்த்து விடுகிறேன்'' என சுந்தராவை எதுவும் பேச விடாமல் 'தரதர'வென்று இழுத்துக் கொண்டு கபீரின் விட்டு வாசலில் விட்டுச் சென்றார்.

கதவைத் தட்டி உள்ளே சென்றாள் சுந்தரா. கபீர் திகைத்தார். வியாபாரி மனம் மாறி சுந்தராவை அனுப்பி விட்டானா, என விசாரித்தார். நடந்தவைகளை விபரமாகச் சொன்னாள் சுந்தரா. கபீருக்கு கோபம் பொங்கியது.

''நாளை அந்த சௌகார் நான் மோசம் செய்து விட்டதாக விசாரணையில் சொல்ல மாட்டானா? இப்போதே போய் அவனை என்ன செய்கிறேன் பார்'' எனச் சீறி எழுந்தார் கபீர். அதிகாரி வீட்டுக்குப் போய் அவரை எழுப்பி, ''என் மனைவியைத் தொட்டு இழுத்து வர உனக்கென்ன உரிமை?'' எனத்திட்டினார் கபீர்.

தூக்கத்திலிருந்து விழித்த அதிகாரி திகைத்தார். ''நானா? சௌகார் வீட்டிலிருந்து உன் மனைவியை இழுத்து வந்தேனா? நீ சேட்டுக்கு உன் மனைவியை விற்றாயா? நூறு பேருக்கு விருந்துச்சாப்பாட்டுக்கான சாமான்களுக்கு பதிலா'' எனத் தடுமாறினார். ''செய்ததையும் செய்து விட்டு அப்பாவிபோல நடிக்கிறாயா?'' எனக் கபீர் அவரை அடிக்கக் கையை ஓங்கினார். ஓங்கின கையை ஒரு வலுவான கரம் தடுத்தது. சினத்தோடு திரும்பின கபீர், சங்கு சக்கரதாரியைக் கண்டார்.

''கபீர், கொத்தவாலின் வடிவத்தில் உன் மனைவியை மீட்டவன் நானே! விருந்துண்டு உன்னைக் கடன் படச்செய்தவனும் நானே! அதனால் என்னை அடி'' என்றான் இறைவன். கபீரும், அதிகாரியும் நெடுஞ்சாண்கிடையாக பகவான் காலில் விழுந்தனர். சௌகாரின் சமையல் பொருள்களைத் தாமே கொடுத்து விடுவதாக அதிகாரி வாக்களித்தார்.

ஜிஜ்ஜாவும், தமாலும், சுந்தராவும் இறைவன் திருவிளையாடலைச் சொல்லி மகிழ்ந்தனர். கண்ணனின் அம்சமாக கபீருக்குப் பிறந்தவர் பெயர் கமால். ஏழு வயதிலேயே தீர்த்த யாத்திரை சென்றார் கமால். சென்ற

இடமெல்லாம் பரந்தாமன் புகழ் பரப்புவதே பணியாகக் கொண்டார். ஒரு ரத்ன வியாபாரிக்குத் தீராத வயிற்று வலி. "கமால் இந்த வியாதியைத் தீர்த்து வைக்க முடியுமானால் அவன் நிஜமாகவே பரமனின் நேசன் என்று நம்புவேன்" என்றான். இதைச் சொன்ன உடனேயே வயிற்றுவலி நின்றுவிட்டது. அப்புறம் வரவே இல்லை. கமாலை வீட்டிற்கழைத்து மரியாதை செய்த வியாபாரி ஒரு பை நிறைய பவுன் காசுகளைக் கொடுத்தான். கமால் "நான் சிறுவன்; எனக்குப் பொருள் எதற்கு?" என வாங்க மறுத்துவிட்டான். ஆனாலும் வியாபாரி கமாலுக்குத் தெரியாமல் அவருடைய துண்டிலே விலையுயர்ந்த பச்சைக்கல் ஒன்றை முடிந்து வைத்தான்.

இதையறியாத கமால் வீடு வந்தான். அங்கே ஸ்ரீராமன் வேதியர் வடிவில் கபீரிடம் "இதோ உன் புதல்வன் வந்துவிட்டான். அவனிடமிருந்து என் மரகதக்கல்லை வாங்கித்தாருங்கள்" என்று கமாலைச் சுட்டிக் காட்டினார்.

கமால் ஏதும் புரியாமல் விழிக்க, அந்தணர் துண்டில் முடிந்திருந்த மரகதக் கல்லைக் காட்டி, "திருடிவிட்டு முழிப்பதைப்பார்" எனக் கபீருக்குக் கோபம் பொங்கியது.

கமாலை அடிக்கக் கை ஓங்கினார் கபீர். மறுபடி கபீரின் கையைப் பிடித்துத் தடுத்த ஸ்ரீராமன் சீதா, லக்ஷ்மண பரத, சத்ருக்கன, ஹனுமத் சமேதராகக் காட்சி கொடுத்தார்.

அதே சமயம் சீடனைப் பார்க்க ஆசை கொண்டு அங்கே வந்த ராமானந்தரும், தெய்வ தரிசனம் கண்டு மெய்மறந்து நின்றார். முன்பு வந்தது போலவே நூறுசாதுக்கள் கால்நடையால் களைத்து சூரிய அஸ்தமனம் ஆனதும் உணவு வேண்டிக் கபீரின் வீட்டுக்கு வந்தனர். முன் இருந்த அதே நிலை. ஒரே ஒரு வித்தியாசம் தான்! கபீரின் பெற்றோர் அப்போது இருந்தனர். இப்போது அவர்கள் பரகதி அடைந்து விட்டனர். பெற்றோருக்குப் பதிலாக பிள்ளையும், பெண்ணும் இருந்தனர்.

மூடியிருந்த பெரிய மளிகைக்கடை. அதில் கமால் தான் புகுமளவு கன்னம் வைத்து உள்ளே போய்விட்டான் கமால். சப்பாத்திக்கு வேண்டிய மாவு, நெய், கூட்டுக்கு வேண்டிய பருப்பு, புளி, மிளகாய் எல்லாம் எடுத்து மறுபக்கம் நின்றிருந்த தந்தையிடம் கொடுத்தான் கமால்.

கபீர் "கமால், வாசல் பூட்டைத் திறக்கும் சப்தம் கேட்கிறது. கடைக்காரன் வருகிறான் போலிருக்கிறது, போதும், வந்துவிடு" எனத் துரிதப்படுத்தினார்.

கமால் முக்கால்வாசி வெளியே வந்த நேரம் கடைக்காரன் கால்களைப் பார்த்து விட்டான் கன்னம் வைத்த சுவரின் மறுபக்கம் தலை. மளிகைக் கடையின் உட்பக்கம் உடல். காலைப் பிடித்துக் கொண்ட கடைக்காரன் "திருடன், திருடன், ஓடி வாருங்கள்" எனக் கூச்சலிட்டான்.

தறி வேலை செய்யும் கத்தி தந்தையின் இடுப்பில் இருப்பதைப் பார்த்தான் கமால். "வாப்பா, யோசிக்க நேரமில்லை. அந்தக் கத்தியால் என் தலையை வெட்டி மறைத்து எடுத்துக் கொண்டு போய்விடுங்கள்.

முண்டத்தை வைத்து அடையாளம் கண்டுபிடிப்பது கடினம். அதிதி பூஜை தடைபடக் கூடாது. களவாடி வந்த உணவு என்றால் உண்ண மாட்டார்கள். உம், சீக்கிரம்" எனத் துரிதப்படுத்தினான் கமால்.

கபீர் முதலில் தயங்கினாலும், வேறு வழியில்லாமல் கமாலின் தலையை வெட்டிக் கொண்டு போய்விட்டார். அது கடையின் இடிபாடுள்ள பின்பகுதி ஆதலால் கூட்டம் வருவதற்குள் இது சாத்தியமாயிற்று. கடைக்காரன் துடித்தபடி வந்து விழுந்த முண்டத்தை ஊர்த்தலைவனிடம் ஒப்பித்தான். கள்வர்களுக்கு ஒருபாடமாக இருக்கட்டும் என்று ஊர்ப் பொது மண்டபத்தில் அந்த உடலைத் தலை கீழாக தொங்கவிட்டார் அதிகாரி.

இரவு சப்பாத்தியும், பருப்புக் கூட்டும் சாதுக்களுக்கு முக மலர்ச்சி யோடு சமைத்துப் போட்டாள் சுந்தரா. மறுநாள் மகேசுவர பூஜை செய்தனர். கபீர் முகத்தில் துளி வாட்டமும் காட்டவில்லை. மறுநாள் காலை கபீரிடம் விடை பெற்றுக்கொண்டு சாதுக்கள் புறப்பட்டனர். மரியாதைக்காக ஊர் எல்லைவரை அவர்களோடு பஜனை செய்து கொண்டு வந்தார் கபீர்.

எதிரே மண்டபத்தில் செல்லமகனின் தலையில்லாத முண்டம் தலைகீழாகத் தொங்குகிறது. ஊரார் கூடி 'திருடனுக்குச் சரியான தண்டனை' என ஏளனம் செய்கிறார்கள். கபீரோ சலனமற்றும் ஊமையாக, செவிடாக பஜனை செய்கிறார். சாதுக்கள் முண்டமான கமாலின் உடல் அருகில் வரவும், முண்டத்தின் கைகள் கூப்பி வணங்கின. சாதுக்கள் திகைத்தனர். ஊர் மக்கள் மிரண்டனர்.

அப்போது அசரீரியாக "கபீர், உலகில் சிறந்தது புத்திர பாசம். இரத்த பாசத்தை வென்று விட்டாய்! மகனை வெட்டி விட்டு மகிழ்ச்சியோடு பசி தீர்த்த உன் மகிமை மண்டலம் அழிந்தாலும் அழியாதது. கமால் எழுந்திரு... கபீர், தலையை எடுத்துவா.. கட்டை அவிழ்த்து உடலில் தலையைப் பொறுத்து" என்ற குரல் கேட்டது.

கபீர் அப்படியே செய்தார். கமால் சிரித்தபடி எழுந்தான். "ஹரிநாராயண, ஹரி நாராயண" எனப் பஜனை செய்தான். "கடைக்காரன் கஞ்சன்... கஞ்சனிடமிருந்து வெண்ணை திருடும் கண்ணனின் அம்சமான கமால் அன்னமிடப் பொருள் திருடியது குற்றமல்ல" என ஜனங்கள் பேசினர்.

இனத்தவர்கள் பலர் கபீரை மெக்காவுக்கு வரவேண்டும். என்று வற்புறுத்தியதால் மெக்காவுக்குப் பயணமானார் கபீர். அங்கேயும் ராம நாமாவைப் பரப்பினார். உடலும், மனதும் நல்ல நிலைமையில் இருந்தால் தான் இறைவனைப் பஜிக்கமுடியும் என்பது இவர் கொள்கை.

கபீரின் பதாவளிகள் நமது தமிழகத்து தேவராம், திருவாசகத்துக்கு நிகராகப் போற்றப்படுகின்றது. மெக்காவிலேயே சமாதி அடைந்த கபீரை அங்கேயே அடக்கம் செய்து பூக்களை வாரி இறைத்தனர். அவற்றின் ஒரு பகுதி துளசி தளங்களாக மாறிவிட்டன.

இந்து – முஸ்லீம் இணைப்புக்குப் பாலமாக இருந்தவர் கபீர். இரண்டு இனத்தவருக்குமே அவர் வழிகாட்டி. நாமும் அவர் நினைவை என்றும் போற்றிப் பாதுகாப்போம்.

11. ஸ்ரீ மச்சேந்திர நாதர்

கபீர்தாஸரின் வரலாற்றில் கோரக்கரை வெல்ல அவர் குருநாதர் மச்சேந்திர நாதர் வடிவில் கபீர் நின்றார் என்று பார்த்தோம். அந்த மச்சேந்திரரைப்பற்றி விரிவாகத் தெரிந்து கொள்ள அவாவுறுகின்றது அல்லவா?

ஒரு சமயம் கடற்கரையில் சிவபெருமானும், உமாதேவியாரும் உலாவிக் கொண்டிருக்கையில் தேவியாருக்கு ராம நாம மகிமைபற்றிச் சொன்னார் ஈசன். இதை சக்தி மட்டுமின்றி, நீரிலிருந்த ஒரு மீன் குஞ்சும் கேட்டுக் கொண்டிருந்தது.

அந்தப் புண்ணியத்தினால் மனிதனாக உருவெடுத்துக் கரையேறி வந்தது. மீனாக இருந்து மனித வடிவு பெற்றதால் மச்சேந்திரர் என்ற பெயர் வந்தது. பகலெல்லாம் இவர் ஜனநடமாட்டமில்லாத காட்டிலேயே இருப்பார். இரவில் நகரங்களுக்குச் சென்று 'நாராயணா' என்பார். இரக்கப்பட்டுப் போட்டால் உண்ணுவார். இல்லையேல் பேசாது போய் விடுவார்.

பழங்கால முனிவர் போல வாழ்ந்து வந்த இவர், ஞான திருஷ்டியினால் எதையும் தெரிந்து கொள்ளும் வல்லமை பெற்றிருந்தார். ஒரு நாள் ஒரு வீட்டின் எதிரில் நின்று 'நாராயணா' என்று குரல் கொடுத்தார். அந்த அம்மாள் பிட்சையோடு வந்தாள். இவரைப் பார்த்ததும், "சுவாமி, தங்கள் முகத்தைப் பார்த்தால் தெய்வாம்சம் பொருந்தியவர் என்று தோன்றுகிறது. சந்தான பாக்கியம் இல்லாமல் நலிவுறுகின்றேன். மலடி என்ற பழிச்சொல் நீங்க அருள் புரிய வேண்டும்" என்று வேண்டியபடி பிட்சை இட்டாள்.

"அம்மா, கவலை வேண்டாம். நிச்சயம் உன் கவலை தீரும். நரசிம்மனின் அம்சமாக ஒரு மகன் பிறப்பான்" என்று ஒரு துளி விபூதியைக் கொடுத்து 'இதைச் சாப்பிடு' என்று சொல்லிச் சென்றார். இவள் அதை பத்திரமாக முடிந்து கொண்டாள். அடுத்தவீட்டுப் பெண் இவளுடைய உயிர்த்தோழி. அவளைக் கேட்காமல் இவள் எதுவும் செய்யமாட்டாள். வேலைகள் முடிந்ததும் அவளிடம் போய் நடந்ததைக் கூறி யோசனை கேட்டாள்.

அவள் "அடி பைத்தியமே! நீயோ அழகி; இளம் வயசுடையவள். தாடி வளர்த்துக் கொண்டு காவி கட்டியவனெல்லாம் சன்னியாசியா? போலிச்சாமியார்கள் இப்போது அதிகமாகி விட்டார்கள். வசிய மருந்து கொடுத்துப் பெண்களை மயக்கி இழுத்துப் போவதாக எத்தனை கேட்கிறோம்! இராவணன் சந்நியாசி வேடத்தில் தான் சீதையைத் தூக்கிக் கொண்டு போனான். அர்ஜுனன் காவியும், தாடியுமாகப் பலராமனை ஏமாற்றி சுபத்திரையைக் கவர்ந்து செல்லவில்லையா? சிவபெருமான் பால சன்னியாசியாய் வந்து தாருகாவனத்தில் ரிக்ஷி பத்தினிகளை மயக்க வில்லையா? ஆண்களுக்குத் துறவி வேஷம் பெண்களை இழுக்கும் வழி... அதைச் சாப்பிட்டால் ஏமாந்து அவன் பின்னால் போய் விடுவாய். தூக்கி எறிந்து விடு" என்று மகா மேதைபோல் பிரசங்கித்தாள்.

அவ்வளவு தான்! பயந்து போன வீட்டுக்காரி விபூதியை அடுப்பில் போட்டு விட்டாள். ஒரு மாமாங்கம் கழிந்தது. மறுபடி மச்சேந்திரர் அந்த வீட்டெதிரில் நின்று 'நாராயணா' என்றார். முன்போலவே அவளும் பிச்சையிட வந்தாள். அடையாளம் கண்டு கொண்ட மச்சேந்திரர்.

"சகோதரி, திருநீறால் பிறந்த பிள்ளை சௌக்கியமாய் இருக்கிறானா? அவனைக் கூப்பிடு... நான் பார்க்க வேண்டும்" என்றார். அவளுக்கு ஒரே நடுக்கம். நெருப்பில் விபூதியைப் போட்டதைத் தெரிந்து கொண்டால், சந்தேகப்பட்டதை நினைத்து சபித்து விடுவாரோ என்ற பயம். மௌனமாக நின்றாள். கைகால் உதறின. "பயப்படாதே, அம்மா... நடந்ததை நடந்தபடியே சொல்... நான் ஒன்றும் சொல்லமாட்டேன்" என்றார் மச்சேந்திரர்.

"சுவாமி, நான் துர்பாக்கியவதி. கேட்பார்ப்பேச்சைக் கேட்டுப் பயந்து, பிரசாத விபூதியை நெருப்பில் போட்டு விட்டேன். என்னை மன்னிக்க வேண்டும்" என அழுதாள். மச்சேந்திரர் சாந்தஸ்வரூபி "சரி. போனது போகட்டும்... அன்று அடுப்புச் சாம்பலை எங்கே கொட்டினாய்?" என்று கேட்டார். எல்லோரும் குப்பை கொட்டி அந்தச் சாம்பல் கொட்டிய இடம் மலையெனக் குவிந்திருந்தது. அந்த இடத்தைக் காட்டினாள். அதன் அருகே சென்ற மச்சேந்திரர் சிறிது நேரம் கண்மூடித் தியானித்தார். பிறகு "நாராயனா" என்றார். குப்பைக்குள்ளிருந்து "நாராயணா" என்று பதில் வந்தது. அருகிலிருந்தவர் வியந்தனர்.

அவர்களை நோக்கி மச்சேந்திரர் "இந்தக் குப்பையை ஜாக்கிரதை யாகத் தோண்ட வேண்டும்" என்றார். அவர்களும் வெகு எச்சரிக் கையாகத் தோண்டினர்.

அழகிய பன்னிரண்டு வயதுச் சிறுவன் தூங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. "காற்றும், தண்ணீரும், உணவும் இல்லாமல் பன்னிரண்டு ஆண்டு இவன் எப்படி வளர்ந்தான்? பிணம் கூட எத்தனை பாதுகாத் தாலும் அழுகி விடுகிறது. இரும்பு துருப்பிடித்து விடுகிறது. எலும்பு மண்ணோடு மண்ணாக மட்கி விடுகிறது. சாம்பலில் ஒரு சிறுவன் உயிர் பிழைத்திருப்பது தெய்வ சித்தம் தான்" என அனைவரும் பேசிக் கொண்டனர்.

மச்சேந்திரர் அவன் உடலைச் சுத்தம் செய்து தடவி விட்டார். அவன் எழுந்து நின்றான். உச்சி முகர்ந்து வாரி அணைத்து முத்தமிட்டார். "மகனே, என்னோடு வா" எனப் புறப்பட்டார். அவனும் கை கால்களை உதறிக் கொண்டு பின் தொடர்ந்தான்.

இதையெல்லாம் கேள்விப்பட்ட வியாபாரி, தன் மனைவியை கடிந்து கொண்டான். "அடி பாதகி, தேடிவந்த புதையலைத் தூக்கி எறிந்து விட்டாயே! வம்சம் முடிந்து போயிற்றே" எனப் பலவாறு புலம்பியவன்,

மனைவியோடு மச்சேந்திர நாதர் பாதங்களில் வணங்கினான். "ஸ்வாமி, என் மனைவியின் அறியாமையை மன்னித்தது நிஜமானால் எங்களுக்குப் பிள்ளை வரம் அருள வேண்டும்" என வேண்டினான். "சீக்கிரமே மகன் பிறப்பான்" என ஆசீர்வதித்துத் தன் மாணவனோடு யாத்திரையைத் தொடர்ந்தார் மச்சேந்திரர். பூமியிலே பன்னிரண்டு ஆண்டுகள் இருந்ததாலும், பூமாதேவி காப்பாற்றியதாலும் 'கோரட்சகர்' என்ற பெயர் ஏற்பட்டது. அது நாளடைவில் மருவி 'கோரக்கர்' என்றாயிற்று.மச்சேந்திரர் ஒரு நாளைக்காவது ஒரு இடத்தில் தங்கினார் என்றில்லை. கால் வலித்தால், உடல் களைத்தால் அங்கேயே படுப்பார். எங்கே பசிக்கிறதோ அங்கே சாப்பாடு.

கோரக்கர், குருநாதர் 'பசி' என்றவுடன் 'பிட்சை' வாங்கிய அரிசியை அங்கேயே மூன்றுகல் வைத்துத் தீமூட்டி சமையல் செய்து போடுவார். மிகுந்ததையே தான் உண்ணுவார். சாதமாகக் கிடைத்தாலும் அப்படியே. தூங்கும் போது கால் பிடித்து விடுவார் நதி, குளம் இவை கண்ட

விடத்தில் குருவை இளைப்பாறச் சொல்லிவிட்டு, வேஷ்டியைத் துவைத்து உலர்த்திக் காய வைத்துக் கொடுப்பார். மொத்தத்தில் குருநாதர் மனதில் எண்ணுமுன், செயலில் நிறைவேற்றினார் கோரக்கர்.

மச்சேந்திரரும் வேத சாஸ்திரங்களையும், அஷ்டமா சித்திகளையும், கோரக்கருக்குக் கற்பித்தார். ஒரு நாள் மச்சேந்திரருக்கு மிகவும் களைப்பாக இருந்ததால் கோரக்கரை மட்டும் பிட்சைக்கு அனுப்பினார்.

அன்று கோரக்கருக்கு நல்ல வேட்டை. அவர் பிட்சைக்குப் போன வீட்டில் சமாராதனை நடந்து முடிந்திருந்த சமயம். அந்த அம்மாள் பிராம்மணன் வந்திருக்கிறானே என்று மகிழ்ந்து தொன்னையில் பாயசம் உட்பட, விதவிதமான பட்சணங்கள், காய்கறிகள் எல்லாம் வைத்துக் கொடுத்தாள். கோரக்கரும் ஆனந்தத்தோடு பக்குவமாகக் கொண்டு வந்து குருநாதருக்குப் பரிமாறினார். மச்சேந்திரர் திருப்தியாகச் சாப்பிட்டார். "இத்தனை ருசியாக நான் சாப்பிட்டதேயில்லை. நாளைக்கும் இது போலவே கொண்டு வா" என்றார் குருநாதர்.

குருநாதர் கேட்டுக் கொண்டபடி முந்தினநாள் சென்ற அதே வீட்டிற்குப் போய் பிட்சை கேட்டார் கோரக்கர். அந்த அம்மாள் அரிசி கொண்டு வந்தாள். கோரக்கர் அதை வாங்க மறுத்தார்.

"அம்மணி, என் குருநாதருக்கு நேற்று நீங்கள் கொடுத்த பட்சணங் கள் சுவையாக இருந்ததாம். பாயசமும், கறிவகைகளும், சாதமுமாக நேற்றுப் போலவே தரவேண்டும்" எனக் கெஞ்சிக் கேட்டார். அந்த அம்மாளுக்கு கோபம் வந்தது. "நன்றாயிருக்கிறதே கதை! தினமும் அமாவாசை வருமா? நேற்று சமாராதனை... விசேஷச் சமையல்; கொடுத்தேன். இன்று அரிசியை வாங்கிக் கொண்டு போ" என்றாள்.

"அம்மா, என் குருநாதர் வாய் திறந்து கேட்டு அது கிடைக்க வில்லை என்று வெறுங்கையோடு போக என் மனம் ஒப்பவில்லை. நீங்கள் தயாரித்துத் தரும் வரை உங்கள் வீட்டுத் திண்ணையிலேயே கிடப்பேன்" என்று சாதனையாக அங்கேயே உட்கார்ந்து விட்டார் கோரக்கர். "தடி எடுத்தவன் தண்டல்காரன் என்றிருக்கிறதே! நாளை உன் குருநாதர் கண்ணைப் பிடுங்கிக் கொடு என்கிறார். அப்போது என்ன செய்வாய்?" என்றாள் வீட்டுக்காரி.

"குருநாதர் கேட்டால்தானா? நீங்கள் கேட்டால் கூடத்தருவேன்" என்றார் கோரக்கர். தாஜா செய்ய இப்படிக் கூறுகிறாள் என்று நினைத்தாள் வீட்டுக்குரியவள். இவரை மடக்க இதுவே சரியான வழி என்று முடிவு கட்டினாள். "நேற்றைய சாப்பாடு இன்றைக்கும் வேண்டு மென்றால் உன் கண்ணைப்பறித்துக் கொடு" என்று கேட்டாள். கோரக்கர் பயந்து அரிசியை வாங்கிக் கொண்டு போய் விடுவார் என்பது அவள் எண்ணம்.

"பூ, இது தானா பிரமாதம்" என்றபடியே நுங்கு பறித்தெடுப்பது போல் தன் நீண்ட விரல் நகத்தால் ஒரு கண்ணைப் பிடுங்கிவிட்டார். அடுத்த கண்ணில் கை வைக்குமுன் அந்த அம்மாள் பயந்து தடுத்தாள்.

"அப்பா, வேண்டாம்... என்ன காரியம் செய்து விட்டாய்? விளையாட்டு வினையாகி விட்டதே! உன்னால் முடியுமென்றால் கண்ணைப் பழையபடி பொருத்திக் கொள். உன்விழி இருந்த இடத்துக் குழியைப் பார்த்து உன் குருநாதர் என்னை சபித்து விடுவாரே!" எனப் பலவாறு புலம்பினாள். ஒழுகும் இரத்தத்தைத் துடைத்து உள்ளே அழைத்து வந்து உட்கார வைத்தான்.

கோரக்கர் "அம்மா, பயப்படாதீர்கள்... இதோ கண்ணைப் பொருத்தி விட்டேன்" எனக் கண்ணைப் பழைய்படி பொருத்திக் கொண்டார். ஆயினும் கண் சிவந்தே இருந்தது.

வீட்டுக்குரியவள் நடுங்கியபடி சமையல் செய்து, முந்தின நாள் போலவே கொடுத்தனுப்பினாள். மச்சேந்திரர் கோரக்கரைப் பார்த்து "ஏன் இன்று இத்தனை நேரம்? உன் கண்கள் சிவந்து இரத்தக் கறைகள் காணப்படுகிறதே" என்று கேட்டார்.

கோரக்கர் நடந்தது நடந்தபடி கூறினார். கோரக்கரின் தைரியத் தையும், பக்தியையும் சோதிக்க மச்சேந்திரர் "எனக்கு அந்தக் கண் வேண்டுமே... தருவாயா?" என மற்றொரு கண்ணைக் கேட்டார்.

ஒரு நொடியும் தாமதிக்காமல் உடனே பிடுங்கிக் கொடுத்தார் கோரக்கர். கண்ணை விழிக்குழியில் பொருத்தித் தடவிக் கொடுத்தார் மச்சேந்திரர். கண்கள் முன்னிலும் பிரகாசமாகப் பார்வை பெற்றுப் பிரகாசித்தது. மச்சேந்திரர் ஆனந்த பரவசத்துடன் கோரக்கர் சிரசில்

கைவைத்து உபதேசம் செய்தார். இந்த கோரக்கர்தான் கபீர்தாஸரோடு வம்புக்கு வாதிட்டவர்.

தாயின் வயிற்றில் பிறவாத மச்சேந்திரர், தன் மந்திரத்தால் பிறந்த நாராயண அம்சமான கோரக்கரை ஒரு சமயம் பிரியநேர்ந்தது. தனித் தனியே தேடித் திரிந்தனர்.

மச்சேந்திரநாதர் கேரளக் கோவில்களைத் தரிசித்துக் கொண்டே வந்தார். இயற்கைக் காட்சிகள் அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன.

ஆளுயரத் தென்னைகள்! ஒவ்வொன்றும் நூற்றுக் கணக்கான இளநீர்களின் பாரம் தாங்காமல் வளைந்து அவஸ்தைப் படுகின்றன! வேர்களில் மலிந்து கிடக்கும் பருத்த பலாக்கள் வெடித்துச் சுளைகள் மஞ்சளாக... அடாடா... நாவில் நீர் சுரக்க வைக்கும் காட்சி! எட்டிப் பறித்திடலாம் போன்ற மாங்கனிகள் மரம் கொள்ளாமல்! குட்டை வாழைகள் ஏராளமான பக்கக் கன்றுகளோடு குலை சாய்த்திருந்தன. எங்கும் பச்சைப் பசேல் என்ற தோற்றம். தளும்பி வழியும் நீர் நிலைகள்! அழகிய பெண்கள்! மனிதர்களின் சுத்தமான ஆடைகள், தோற்றம்... இப்படி மச்சேந்திரர் ஊரை வியந்து கொண்டிருந்தபோது மேன்மாடத்திலிருந்து அவரை வியந்து கொண்டிருந்தான் அந்நாட்டு அரசி.

அவள் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட பேரழகி. அழகிய தாழை மடல் போன்ற மேனி தங்கம் போல் ஜொலித்தது. கண்ணையோ, மூக்கையோ, பற்களையோ பார்ப்பவர் எது முகத்துக்கு அதிக வசீகரம் தருகிறது என்று சொல்ல முடியாமல் விழிப்பர். தந்தம் போன்ற, பட்டிலும் மென்மையான கை, கால்கள், தளிர் போன்ற விரல்கள் படைத்தவனையே கிறங்கச் செய்யும் பாவை. அப்படிப்பட்ட பேரழகி தோழிகளை விட்டு மச்சேந்திரரை அழைத்து வரச் செய்தாள். முறைப்படி பாத சேவை செய்தாள். தன்னை மணந்து கொள்ளும்படி வேண்டினாள்.

“ஸ்வாமி, என் பெயர் பிரேமளா. என் தந்தைக்கு ஆண் குழந்தை இல்லாததால் எனக்குப் பட்டம் சூட்டினார். என் பெற்றோர்கள் காலமாகி விட்டனர். இது வரை திருமணத்தை வெறுத்திருந்தேன். உங்களைப் பார்த்ததும் என் மனம் மாறிவிட்டது. அடியாளை ஏற்றுக் கொள்ள வேண்டும்” எனப் பணிந்து நின்றாள்.

இறைவன் திருவிளையாடலுக்குத் தப்பியவர் உண்டோ? மச்சேந்திரர் பிரேமளாவை மணந்து கொள்ள சம்மதித்தார். முறைப்படி திருமணம் நடந்தது. மகிழ்ச்சியாக இல்லறம் நடத்தினர். அழகிய ஆண்குழந்தை யைப் பெற்றெடுத்தாள் பிரேமளா. மீனநாதன் எனப் பெயர் சூட்டினர்.

அங்கே கோரக்கர் குருநாதரைத் தேடி அலைந்தார். கோரக்கரைப் போலவே குருவைத்தேடி வந்தவர் கானேபா என்ற சீடர். இருவரும் சந்தித்த போது கோரக்கர் "கானேபா, உன்குரு ஜாலந்தர் கிணற்றில் தள்ளப்பட்டு ஒரு மாமாங்கம் ஆகிறதே! இங்கே தேடினால் கிடைப்பாரா" என்று கூறினார். கானேபா "வெறும் கிணறு தானே... மேலே வருவது சுலபம். உன் குரு மச்சேந்திரர் கேரள தேசத்திலே இல்லறக்கிணற்றில் விழுந்து கிடக்கிறாரே! அவரை எப்படி மீட்பாய்?" என்று பதிலுக்குக் கேலிசெய்ய, குருவைத்தேடி கேரளாவுக்குப் பயணமானார் கோரக்கர்.

கோரக்கர் கேரளத்துக்கு வந்ததை ஞானதிருஷ்டியால் கண்டு கொண்டார் மச்சேந்திரர். பிரேமளாவிடம், "தேவி, என் சிஷ்யன் கோரக்கன் என்னை சம்சார வலையினின்றும் மீட்க வருகின்றான். அவன் நரசிம்ம அம்சம். மிகுந்த சக்தி வாய்ந்தவன்" என்று கூறினார். பிரேமளா கவலைப்பட்டாள். மச்சேந்திரரைப் பிரிய அவளுக்கு மனமில்லை. நன்கு ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்தாள். "ஊருக்குள் எந்தத் துறவி நுழைந்தாலும் தாமதியாமல் சிரச்சேதம் செய்யும்படி" காவலருக்கு கட்டளையிட்டாள்.

இந்த நிலையில் கோரக்கர் அந்த ஊருக்கு வந்தார். ஒரு வீட்டேதிரில் நின்று பிட்சை கேட்டார். குருதேவர் அருள். எவர் கண்ணிலும் படவில்லை. அந்த வீட்டு அம்மாள் பிட்சையோடு வந்தவள் இவரது இளமையையும், வசீகரத்தையும் கண்டு இரக்கப்பட்டாள். "ஐயா, சன்னியாசிகளைக் கண்டால் அந்த இடத்திலேயே தலையைச் சீவும்படி எங்கள் அரசியார் கட்டளை போட்டிருக்கிறார்கள். உயிர் பிழைக்க விரும்பினால் எவர் கண்ணிலும் படாமல் ஓடி விடும்" என எச்சரித்தாள்.

கோரக்கர் மச்சேந்திரர் அங்கு தான் இருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டார். அவரைத் தக்கவைத்துக் கொள்ளும் பொருட்டு ராணியாரின் ஆணை இது என்பதும் விளங்கியது. ஞானதிருஷ்டி படைத்த நம் குருநாதரே நாம் வருவதைத் தேவியாருக்குச் சொல்லி இருக்க வேண்டும் என்றும் புரிந்து கொண்டார்.

இப்படிப் பலவற்றையும் சிந்தித்தபடியே ஊர் எல்லைக்கு வந்து ஒரு ஆலமரத்தடியில் உட்கார்த்தார். அங்கே நாடகக்குழு ஒன்று ஏற்கெனவே தங்கி இருந்தது. அவர்கள் முகங்களில் ஒரே சோகம். "கோரக்கர் அவர்களுடைய விசனத்தின் காரணத்தைப்பற்றி விசாரித்தார்.

மேளகாரனுக்கு மிகுந்த காய்ச்சல் என்றும், அதனால் அரசவையில் கூத்து நடத்தி சன்மானம் பெறமுடியாமல் திரும்பிப் போக வேண்டி இருக்கிறதென்றும், கூறினார்கள். கோரக்கருக்கு குருநாதரைப் பார்க்க அரண்மனைக்குச் செல்ல அது நல்ல வழியாகத் தோன்றியது. "எனக்கு மிருதங்கம் வாசிக்கத் தெரியும். நான் உதவியாயிருக்கிறேன்" என்றார் கோரக்கர். அவர்கள் மகிழ்ச்சியோடு அழைத்துச் சென்றனர்.

அரசியும், மச்சேந்திரரும், மந்திரி, பிரதானிகளும் வீற்றிருக்கும் சபையில் நாடகம் நடந்தது. அனைவரும் நாடகத்தைப் பாராட்டினர். முடிவில் கோரக்கர் மிருதங்க ஒலியிலேயே "உமது மாணவன் கோரக்கன் வந்திருக்கிறேன்" என்று தெரியப்படுத்தினார். இதை மச்சேந்திரர் மட்டுமல்ல... இசையில் வல்லவளான பிரேமளாவும் புரிந்து கொண்டாள்.



எல்லாருக்கும் வெகுமதி கொடுத்தனுப்பியவள் "மிருதங்க வித்வான் அருமையாக வாசிக்கிறார். அவர் அரசவைக் கவிஞராக இருக்கட்டும்" என்று நிறுத்திக் கொண்டாள். அவரை வெளியே விட்டால் வேறு வழிகளில் கணவரைக் கவர்ந்து சென்றுவிடுவாரோ என்ற பயம்தான் காரணம்.

மச்சேந்திரரைப் பிரேமளா ஊண், உறக்கத்திலும் பிரியாது இருந்தாலும், ஒருநாள் தனியே சந்திக்கும் சந்தர்ப்பம் கோரக்கருக்குக் கிடைத்தது. குருநாதரை சம்சார பந்தத்தை உதறிவிட்டு வரும்படி அழைத்தார்.

மாயைக்கு வசமாகாதவர் எவர்? மச்சேந்திரரை மாயை பூரணமாக ஆக்கிரமித்திருந்தாள். 'அன்பு மனைவியையும், ஆசை மகனையும் விட்டுவர முடியாது' எனத் தீர்மானமாகச் சொல்லிவிட்டார் மச்சேந்திரர். அப்போது பிரேமளா வந்து விட்டதால் மேற்கொண்டு கோரக்கரால் பேச முடியவில்லை.

கொஞ்ச நாள் கழித்தது; அன்று நள்ளிரவு... நல்ல தூக்கம். குழந்தை மீன நாதன் படுக்கையில் மலம் கழித்துப் படுக்கையையும் தன்னையும் அசுத்தப்படுத்திக் கொண்டு 'ஒ'வென்று அழுதான். அப்போது கோரக்கர் தான் வாசலில் இருந்தார். அவர்தான் குருநாதரை எப்போது அழைத்துப்போவோம் என, உறக்கமின்றித் தவிக்கிறாரே!

"யாரங்கே... இளவரசனை சுத்தம் செய்து கொண்டு வா" என தூக்கத்துடனேயே உத்தரவிட்டார் மச்சேந்திரர். "இதோ" என்றபடி படுக்கையோடு குழந்தையைத் தூக்கிச் சென்றார் கோரக்கர்.

சிறிது நேரம் கழித்து எழுந்த அரசி குழந்தையைக் காணாமல் பதறி, மச்சேந்திரரை எழுப்பி விசாரித்தாள். அவர் நடந்ததைக் கூறிவிட்டு, "குழந்தையை இவ்வளவு நேரமா சுத்தம் செய்கிறாள்?" என சந்தேகக் குரல் எழுப்பினார்.

பிரேமளா எழுந்து போய் விசாரிக்க கோரக்கர், "அம்மணி, குழந்தையை எடுத்துப் போனவன் நானே! குழந்தையை நன்கு அடித்துத் துவைத்து உலர்த்தி விட்டு வந்திருக்கிறேன். காய்ந்து விட்டதா என்று பார்த்து விட்டு வரட்டுமா?" என வினயத்துடன் கேட்டார்.

பிரேமளா அழுது புலம்பி மூர்ச்சையாகிவிட்டாள். மச்சேந்திரர் "உனக்கு வித்தைகற்றுக் கொடுத்தற்குக் கைம்மாறு இது தானோ? பச்சைக் குழந்தையை பாறாங்கல்லில் அடித்துக் கொன்ற பாதகா... இந்தக் குழந்தையை வளர்க்க என்ன பாடுபட்டிருப்போம்... அழிப்பது சுலபம்... உருவாக்குவது கடினம்" எனப் பலவாறு திட்டினார். கோரக்கர் எதுவும் பேசாமல் நூற்றி எட்டு முறை மந்திர ஜபம் செய்ய மீனநாதனைப் போல நூற்றி எட்டு குழந்தைகள் தோன்றினர். "சாதாரண மானிடனைப்போல் மனைவி, குழந்தை, அரசபோகம் என்று அல்லாடுகிறீரே! ஒருநொடியில் இத்தனை குழந்தைகளை உண்டாக்கியாயிற்று... இன்னும் எத்தனை வேண்டும்?" என்றார் கோரக்கர்.

பிரேமளா கோரக்கரிடம் "இவர் ஞாபகமாக என் குழந்தையை மட்டும் மீட்டுத்தந்து விடுங்கள். உங்கள் குருவை அழைத்துச் செல்ல நான் இனி தடையாக இருக்க மாட்டேன்" என வேண்டினாள். கோரக்கர் நூற்றி ஏழு குழந்தைகளை மறையச் செய்து, நிஜ மீனநாதனை அரசியிடம் கொடுத் தார். மகனை வாரி அணைத்து மகிழ்ந்தாள் ராணி.

மச்சேந்திரர் கோரக்கருடன் புறப்பட்டார். தன் கணவர் வழிப் பயணத்தில் பசியால் துன்பப்படுவாரே... வசதியாக வாழ்ந்தவரா யிற்றே எனப் பலவாறு எண்ணி ஒரு சிறு சுருக்குப் பையில் பொற்காசு களைப் போட்டு மச்சேந்திரரிடம் கொடுத்தாள் பிரேமளா. கோரக்கருக்குத் தெரிய வேண்டாம்" என எச்சரித்தாள். காட்டு வழி நடக்கும் போது "இங்கே திருட்டு பயம் உண்டோ?" என அடிக்கடி விசாரித்தார் மச்சேந்திரர். இது கோரக்கருக்கு சந்தேகத்தை வளர்த்தது. 'குருதேவர் இப்படி அடிக்கடி கேட்கக் காரணம் என்ன" என்று யோசித்தார்.

சாயங்கால வேளை. குளக்கரையில் சந்தியாஜபம் செய்து கொண்டி ருந்தார் மச்சேந்திரர். அவருடைய துணிமூட்டையை நாய் ஒன்று பிடித்திழுக்க, அதை விரட்டி விட்டுத் துணிமூட்டையை எடுத்தார் கோரக்கர். சுருக்குப்பை தாறுமாறாகி பொற்காசுகள் சிதறின. மூட்டையைப் பிரித்து பூராவாக சோதித்தார் கோரக்கர். "இதனாலல்லவா குருநாதர் கள்ளர்களைப் பற்றிக் கேட்டிருக்கிறார். துறவிக்கு ஏன் தங்கம்! மூவாசைகளையும் துறந்தவனல்லவா துறவி" என சிந்தித்தார்.

பவுன்காசுகளைக் குளத்தில் எறிந்தார். அதற்குப் பதிலாகப் பையில் சிறு கூழாற்கற்களைப் போட்டுக் கட்டிவைத்தார். நடந்தது எதையும் மச்சேந்திரர் அறியமாட்டார். அவர்தான் கண்மூடி ஜபத்தில் ஆழ்ந்திருந்தாரே! அன்று இரவும் "இங்கே கொள்ளையர் வருவார்களோ?" என்று மச்சேந்திரர் கேட்க,

"கொள்ளையடிக்க நம்மிடம் என்ன இருக்கிறது?" என்று திருப்பிக் கேட்டார் கோரக்கர். "வழியில் கஷ்டப்படக் கூடாதேஎன்று பிரேமளா பொற்காசுகள் தந்திருக்கிறாள்" என்று சொல்லியபடி சுருக்குப் பையைப் பிரித்தார் மச்சேந்திரர். அங்கே இருந்த கற்களைக் கண்டு, இது கோரக்கர் வேலை என்று அவரைக் கடிந்து கொண்டார். "அரண்மனையில் ஆனந்தமாக வாழ்ந்த என்னை வலுக் கட்டாயமாக இழுத்து வந்து அலைய விட்ட நீ எனக்குச் சீடனே அல்ல... என்னை விட்டுப் போய்விடு" எனச் சீறி விழுந்தார்.

அப்போது அவர்கள் இருந்த இடம் ஒரு மலை. தன் வியர்வையை வழித்து மலையில் எறிந்தார் கோரக்கர். மலை முழுவதும் பொன்னாய் மின்னியது. "எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளும்" என்று சொல்லி விட்டு கோரக்கர் திரும்பிப் பாராமல் நடக்க, மச்சேந்திரர் மாயை தெளிந்தது.

"பொன்னாசை, பெண்ணாசையால் வாழ்நாளை வீண் நாளாக்கி னேனே" என வருந்தினார். "கோரக்கா, நீ நரசிம்ம அம்சம் என்பதை மறந்து ஏதேதோ பிதற்றி விட்டேன். இங்கு வா" என அழைத்தார். கோரக்கர் அருகில் வந்து "இந்த சித்துவித்தைகளை கற்றுத் தந்தவரே நீங்கள் தான். சிவபெருமானின் அம்சமான நீரும் உலகம் மாயை நிறைந்தது என்பதைக் காட்ட நாடகம் ஆடி இருக்கிறீர்.... என்னைப் பிறப்பித்து உபதேசம் செய்த மகான், பிதா எல்லாம் நீங்களே" என வணங்கினார். பின், இருவரும் தங்கள் யாத்திரையைத் தொடங்கினர். எப்போதும் நாராயண நாமமே ஜீவனாக வாழ்ந்து, இறுதியில் அவன் மலரடி சேர்ந்தனர்.

12. ஸ்ரீ கோபி சந்தனர்

காஞ்சனபுரி என்று ஒரு சிற்றூர். அந்நாட்டு அரசன் பெயர் திரி லோக். சந்தர் என்பது குலப்பெயர். திரிலோக சந்தர் நீதியும், நேர்மையுமாக அரசாண்டு வந்தான். அவனது மனைவியின் பெயர் மைனாவதி. அவள் மிகுந்த குணவதி. அடக்க முடையவள்.

தங்கள் பிள்ளைக்கு கோபி எனப்பெயர் சூட்டினர். கோபி சந்திடம் அழகு, அறிவு எல்லாம் நிறைந்து இருந்தது. கல்வியிலும், போர்ப் பயிற்சியிலும் சிறந்து விளங்கினான். தன் அருமை மகனுக்குப் பட்டம் சூட்டிய கொஞ்ச நாளில் திரிலோக சந்தர் இறைவனடி சேர்ந்தார்.

தந்தை இறந்தபின் கோபி சந்தரின் ஒழுக்கம் சீர்கெடத் தொடங்கியது. அழகிய மனைவி பட்டமகிஷியாக இருந்தும் பல பெண்களை மணந்தான். அந்தப்புரமே கதியெனக் கிடந்தான். அரசியலைக் கவனிப்பதே இல்லை.

கணவன் இறந்த துக்கத்தோடு, மகனின் நடத்தையும் சேர்ந்து சொல்லவொண்ணாத வேதனைப்பட்டாள் அரசி மைனாவதி. சரியான சாப்பாடில்லை. நிம்மதியான தூக்கம் இல்லை. படாதபாடு பட்டாள். அமைச்சர்களும், மக்களும் அரசன் நிலை கண்டு வருந்தினர்.

அந்த நகரில் ஜாலந்தர் என்ற மகான் இருந்தார். காஞ்சனபுரத்தில் குளிர் அதிகம். இரவில் குளிர்காய காட்டில் போய் விறகு, சுள்ளி சேகரித்து வருவார் ஜாலந்தர். பிட்சை எடுத்து உண்பார்.

ஒரு மாலை நேரத்தில் உப்பரிகையிலிருந்து மைனாவதி தேவியார் கழுத்து மணி ஒலிக்க, மாடுகள் மந்தையிலிருந்து திரும்பி வரும் அழகைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்போது விறகுச் சுமையைத்தலையில் சுமந்தபடி ஜாலந்தர் வந்தார். அருகில் வந்த பிறகுதான் தெரிந்தது சுள்ளிக்கட்டு தலையைத் தொடாமல் இரண்டடி உயரத்தில் தொடர்ந்து வந்தது. "இது சித்து விளையாட்டோ.... இவர் அஷ்ட மகா சக்திகள் கற்றவரோ? எதுவாயிருந்தாலும் சரி... என் மனதைச் சதா அறுத்துக் கொண்டிருக்கும் வேதனைகள் நீங்க, இவரைத் தஞ்சமடைவதே சரியான வழி" என முடிவெடுத்தார்.

ஜாலந்தர் தங்கி இருந்த மடத்திற்குப் பூஜைக்கு வேண்டிய சாமான் களோடு போனார். ஜாலந்தரின் பாதங்களில் நமஸ்கரித்தார். "ஸ்வாமி, பாவியான நான் புருஷனை இழந்தேன். கெட்டவனான மகனைப் பெற்றேன். சதா நெஞ்சு கொள்ளாத துன்பம். மனம் அமைதியுற உபதேசிக்க வேண்டும். பெண்ணென்று ஒதுக்கி விடலாகாது" என வேண்டினாள். "அம்மணி, தாங்கள் அரசி... நான் பரதேசி... நானே பகவானைக் காணாதபோது உங்களுக்கு உபதேசிப்பதெப்படி? உங்கள் அந்தஸ்துக்கேற்ற குருவிடம் உபதேசம் பெறுவதே நல்லது" என்றார் ஜாலந்தர்.

நீண்ட நேரம் இருவரும் தர்க்கித்தனர். முடிவில் மைனாவதிக்கு ஜாலந்தர் உபதேசம் செய்தார். மைனாவதிக்கு மனம் அமைதிப்பட்டது. "தாய் தந்தை யார்? உடல் என்ற சட்டை கழற்றப்படுவதே மரணம். பிறவி தோறும் பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?" இப்படி தத்துவ வாதங்களில் நேரம் போவது தெரியாமல் ஈடுபட்டிருப்பார்.

மனம் துளி சங்கடப்பட்டாலும் உடனே மடத்துக்கு வந்து விடுவார். பெரியவர்களை வெறுங்கையோடு பார்க்க முடியுமா? ருசியான பலகாரங்கள் செய்து கொண்டு வருவார். குருநாதருக்குப்போட்டு அவர் சுவைத்துச் சாப்பிடுவதைப் பெருமையோடு பார்ப்பார். நல்ல சமையல் செய்திருந்தால் குருநாதருக்குப் போடவேண்டும் என்ற எண்ணம் தான் மைனாவதிக்கு வரும். உடனே எடுத்துக் கொண்டு போவார். இது கோபி சந்தனது பட்டமகிஷிக்குப் பிடிக்கவில்லை.

"நினைத்தால் பட்சண வகைகளைத் தூக்கிக் கொண்டு, உங்கள் அம்மா மடத்துக்கு ஓடிவிடுகிறாள். ராஜாவின் தாயார் பிச்சைக்காரனுக்குச் சாப்பாடு போடுவது, நினைத்தபோது சந்திப்பது கேவலமில்லையா?" என்று கோள் மூட்டினாள்.

"இது நிஜம்தானா" என்று துப்பறிந்தான் கோபி சந்தன். 'நிஜம் தான்' எனத் தெரிந்தது. தாயைத் தண்டிக்கப் பாசம் இடம் கொடுக்கவில்லை. ஜாலந்தரை "மன்னன் அவரிடம் உபதேசம் பெற விரும்புவதாகச் சொல்லி அழைத்துவாரும்" என, மந்திரியை அனுப்பி வைத்தான். மந்திரி அழைத்ததும் ஜாலந்தர் மறுக்காது வந்தார். ஆசார உபசாரம் செய்தான் மன்னன். "ஒரு இராத்திரியாவது என் இருப்பிடத்தில் தங்கவேண்டும்" எனப் போலி அன்புடன் பிரார்த்தித்தான். ஜாலந்தர் சம்மதித்தார்.

இரவு சாப்பாடு ஆனவுடன் தூங்கப் போய்விட்டார் ஜாலந்தர். நடுநிசி ஆனதும் கோபி சந்தன் ஏற்பாடு செய்த முரடர்கள் ஜாலந்தர் வாயைக் கட்டித் தூக்கிக் கொண்டு போய் கிணற்றில் போட்டு மேலே பாறை கொண்டு மூடி, அதைத் திறக்க முடியாமல் மேலே பெருங்கற்களையும் வைத்து விட்டனர்.

ஜாலந்தர் தன் மகன் அழைப்புக்கிணங்க, அரண்மனை வந்து போன விபரமெதுவும் மைனாவதிக்குத் தெரியாது. விஷயம் வெகு இரகசியமாகப் பாதுகாக்கப்பட்டது. மறுநாள் மைனாவதி மடத்துக்குச் சென்று பார்த்த போது ஜாலந்தரைக் காணாமல் வருந்தி வேதனைப்பட்டாள்.

"தர்மம் தவறிய வேந்தனைப் பெற்ற தாய் என நினைத்து என்னிடம் சொல்லாமல் போனாரோ? பாவியைப் பெற்ற அன்னை கையால் சாப்பிடுவது பாவம் என்றெண்ணிப் போய் விட்டாரோ! கெட்ட அரசன் ஆளும் இராஜ்ஜியத்தில் வசிப்பதே பிசகு என்றெண்ணி இருப்பாரோ?" எனப் பலவாறு எண்ணித் துடித்தாள். ஜாலந்தருக்கு எழுநூறுக்கும் மேற்பட்ட சீடர்கள் இருந்தனர். தலைமைச் சீடரின் பெயர் கானேபா.

அவரும் குருவைத்தேடி காடு, மலை என்று சுற்றினார். அப்போது தான் கோரக்கரைச் சந்தித்தார். இருவரும் விவகாரம் செய்தனர். குருநாதர் இருப்பிடத்தை கோரக்கரால் புரிந்து கொண்டார். காஞ்சனபுரத்தை நோக்கிப் புறப்பட்டார்.

மடத்திலேயே பெரும் பொழுதைக் கழித்த மைனாவதிக்குக் குரு இல்லாமல் மடத்துக்குப் போகப்பிடிக்கவில்லை. கொஞ்ச காலமாய் அமைதியுற்றிருந்த மனம் அலைபாய்ந்தது. மனதை வேறுதிசைகளில் திருப்ப உப்பரிகைப் பக்கம் வந்தார். அங்கிருந்து நந்தவனத்தைப் பார்த்தார். ஏன் பார்த்தோம் என நொந்து கொண்டார். அங்கே அப்படி அவர் கண்ட காட்சி என்ன?

கோபி சந்தன் பல பெண்களோடு உல்லாசமாக இருந்தான். "ஐயோ, பிறவியைப் பாழாகக் கழிக்கிறாயே! ஒரு முறையேனும் ஈசுவர நாமாவைச் சொல்லவில்லையே என்று யமன் வாட்டி வதைப்பானே! பாவி மகன் இந்த அழியும் உடலை நிஜம் என்றெண்ணி பாலைவனத்தில் பெய்த மழைபோல இளமையையும், உடல் வலிமையையும் வீணாக்குகின்றானே! மறுமைக்கு இவன் சேமித்து வைத்ததென்ன? இதைத் தடுக்கும் வழியும் எனக்குத்

தெரியவில்லை" எனப் பலவாறு எண்ணி விம்மி விம்மி அழுதாள். மாலை மாலையாக விழுந்த கண்ணீர் ஒரு பெண்ணின் மடியில் படுத்திருந்த மகனின் கன்னத்தில் பொட்டுப் பொட்டாய் விழுந்தது.

முதலில் அருகிலிருந்த நீரூற்றிலிருக்கும் நீர் காற்றுவாக்கில் வீசுகிறதென்று நினைத்தான். பின் மழைத்துளியோ என நிமிர்ந்து வானத்தைப் பார்த்தான். நேராக அன்னையின் வாடிய முகம் தெரிந்தது. மங்கையரை ஒதுக்கிவிட்டு தாயிடம் விரைந்து வந்தான்.

"அம்மா, அப்பாவை நினைந்து அழுகின்றீர்களா? தங்கள் கண்களில் நீரைப் பார்க்க என் மனம் வேதனைப்படுகிறதே! அழும் காரணத்தைச் சொல்லுங்கள்" எனப் பணிவுடன் கேட்டுத் தாயின் விழிகளைத் துடைத்தான்.

"கோபி, உன்னை நினைத்துதான் கண்ணீர்விட்டேன். இளமை நிலையானதல்ல... தலை நரைத்து, பல் விழுந்து, பார்வை மங்கிய பின் நீ பிறர் தயவின்றி வாழமுடியுமா? எப்போது சாகப் போகிறோம் என்பதை அறிந்தவரும் உண்டா? கடமையையும் மறந்து, கடவுளையும் மறந்து மங்கையரே கதியாகக் கிடக்கின்றாயே! அந்த மங்கையரும் மலஜலம் கழிக்கும் ஊத்தை உடல் கொண்டவர்களே! நெஞ்சிலே கபம் கட்டிக் கொண்டு பாயில் படுத்திருக்கும் போது அவளைப் பார்... நான் சொல்வதன் உண்மை புரியும்" எனப் பலவாறு எடுத்துக் கூறினாள் மைனாவதி.

கோபி சந்தரின் அறிவுக் கண்கள் திறந்தன. தாயின் வார்த்தை களிலுள்ள உண்மை அவன் நெஞ்சை வதைத்தன.

"அம்மா, கண்ணிருந்தும் குருடாய் இத்தனை காலம் கழித்து விட்டேன். இந்தச் சேற்றிலிருந்து மீள வழியுண்டா?" எனக் கலங்கிய குரலில் கேட்டான் மகன்.

"தவறு செய்தவர்கள் திருந்தினால் நிச்சயம் பகவான் சந்தோஷப் படுகிறார். தக்ந்த ஆசாரியனைத்தேடி உபதேசம் பெற்று இறைவனை இடைவிடாது வழிபடு" என்றார் அன்னை.

"தகுந்த குரு யாரென்பதையும் நீங்களே சொல்லுங்கள் அம்மா" பணிவோடு வேண்டினான் புதல்வன். "எனக்கு உபதேசம் செய்த

ஜாலந்தரைவிட பொருத்தமான மகானும் உண்டோ? அவர் திடீரென்று காணாமல் போய் பன்னிரண்டு வருஷங்கள் ஆகின்றன" என்று வருத்தத்தோடு மைனாவதி கூறவும், கோபி சந்தர் விசித்து விசித்து அழுதார். மைனாவதிக்கு மகன் அழுவதின் காரணம் புரியவில்லை.

"குழந்தாய்! ஏன் அழுகிறாய்? குற்றம் செய்யாதவர் உலகில் கிடையாது. இனி கடைத்தேறும் வழியைத் தான் பார்க்க வேண்டும்" எனத் தேற்றினார்.

"அம்மா, குற்றத்திலெல்லாம் பெரிய குற்றம் ஒன்று செய்திருக்கி றேன். அதைச் சொன்னால் இந்தப் பாவியின் முகத்தில் விழிப்பதே தவறு என்று நீங்கள் வெறுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனாலும் சொல்லாமல் நான் ஒருவனே மனதில் தாங்கிக் கொண்டிருக்கும் தைரியமும் இல்லை. நீங்கள் என்ன தண்டனை கொடுத்தாலும், எத்தனை சபித்தாலும் பரவாயில்லை"

கோபி சந்தரின் பீடிகை மைனாவதியை அச்சுறுத்தியது. எந்த குண்டைத் தூக்கிப் போடப்போகிறானோ என்று பதறியபடியே பார்த்தாள்.

"என் மனைவியின் சொற்கேட்டு புத்தியில்லாமல் விதவையான தாங்கள் அடிக்கடி பதார்த்தங்களை எடுத்துக் கொண்டு சன்னியாசியைப் பார்க்கப் போவது குலப்பழியை ஏற்படுத்துமே என்று ஜாலந்தரைத் தந்திரமாய் வரவழைத்து ஊருக்கு வெளியே உள்ள கிணற்றில் தள்ளிப் பாறையால் மூடி பாரமும் வைத்துவிட்டேன். உத்தமருக்குப் பாதகம் செய்த நான் பாவத்திலிருந்து எப்படி மீளப் போகிறேன்" என்று கூறிக் கதறி அழுதான் அரசன்.

இடிவிழுந்த மாளிகை போலாயிற்று மைனாவதியின் மனம்.

"அடே! துன்மார்க்கா... குருபாதகம் செய்த பாவி! உன்னைப் போலவே எல்லோரையும் ஒழுக்கம் கெட்டவர்களாக எண்ணினாயே! இந்த யோசனையை உனக்கு போதித்த மதியூகி யார்? வார்த்தையாலேயே உன்னை எரிக்கக் கூடியவர் உன் வலையில் கட்டுப்பட்டிருந்த காரணம் என்னவோ? முக்காலமும் உணர்ந்த ஞானி உன் சூழ்ச்சியை அறியாமல் போனாரா... என்றாவது குருநாதரைக் காணலாம் என்றிருந்த என் மயிரிழை நம்பிக்கையைப் பாறாங்கல் கொண்டு சிதைத்தாயே!

வமிசத்திற்கே களங்கத்தை ஏற்படுத்திவிட்டாயே...!" எனப் பலவாறு புலம்பி அழுதாள். ராஜா கோபி சந்தனரும் தாயின் வேதனை மிகுந்த திட்டுகளை வாங்கிக் கொண்டு, செய்த தவறை எண்ணி மன வேதனைப்பட்டார்.

அப்போதுதான் கோரக்கர் மூலமாகக் கேட்ட சமாசாரத்தை மைனா வதியிடம் வந்து கூறினார் கானேபா.

"சகோதரா... குருநாதர் கிணற்றில் தள்ளப்பட்டார் என்பது மட்டுமே உமக்குத் தெரியும். தள்ளியவர் யார் என்பதும் நான் அறிவேன்" விம்மியபடியே கூறினாள் அரசி. "யார்?" எனத் துடிப்போடு கேட்டார் கானேபா. "நான் மகனென்ற பெயரில் பெற்ற துராத்மாதான்" எனத் தவிப்போடு கூறினாள் அரசி.

கானேபா, ஞானதிருஷ்டியில் சிறிது நேரம் ஆராய்ந்து "அரசி, வீணாக மனதைக் குழப்பிக் கொள்ளாதீர்கள். நமது குருநாதர் அஷ்டமா சித்திகளில் வல்லவர். அவராக நினைத்தாலன்றி மரணம் அவரை நெருங்காது. தீயிட்டாலும் எரிக்காது... நீரிலும் மூச்சுத் திணறாது... கூடிய சீக்கிரமே அவர் தரிசனம் நமக்குக் கிடைக்கும்" என்று ஆறுதல் வார்த்தைகள் கூறினார்.

கானேபாவிடம் விடைபெற்றுக் கொண்டு, அரண்மனைக்கு விரைந்து வந்தாள் அரசி. மகன் இருப்பிடம் போனாள். கோபி சந்தனர் அப்போது உறக்கத்திலிருந்தார். மகனை எழுப்பினாள்.

"தவறான பாதையில் கண்மூடித் தனமாய் தூங்கியது போதாதா? எழுந்திரு... குரு ஹத்தி செய்தவனே! குரு மீண்டு வந்தால் என்ன சபிப்பாரோ என ஒவ்வொரு விநாடியும் நான் நடுங்கிக் கொண்டிருக் கிறேன். நீ துளியும் பயமின்றித் தூங்கிக் கொண்டிருக்கிறாய்! ஜாலந்தரின் முதல் சீடர் கானேபா, நமது நகர் பூங்காவில் எழுநூறு சகோதர சீடர்களோடு தங்கி இருக்கிறார். அவர் காலடியில் போய் விழுந்துவிடு. கொலைப்பழியினின்றும் மீளும் வழி சொல்வார். மனிதன் பிறவி எடுத்தது உண்ணவும், உறங்கவும் மட்டும் அல்ல... ஊர் மெச்ச வாழவேண்டாமா?" எனப் புத்திர பாசத்தோடு அறிவுரை கூறினாள். "அம்மா, பாவியான நான் ஒரு துளி புண்ணியம் செய்திருப்பதால்தான் உத்தமியான உங்களைத் தாயாக அடைந்திருக்கிறேன். என் பாபம் தொலைய, பழி நீங்க, நீங்களும்

என்ன பாடுபடுகிறீர்கள்" என்று வருந்திக் கூறியபடி எழுந்தான். மந்திரி சேனைகளுடன் பூங்காவை அடைந்து கானேபாவின் கால்களில் பணிந்து "காப்பாற்றும்" என வேண்டினான்.

"நீ யாரப்பா?" என்று கானேபா கேட்க, "கோபீ சந்தன்" என்று மன்னன் சொன்னவுடனேயே, கால்களை உதறிக் கொண்டு எழுந்தார் கானேபா. "துஷ்டா, உனக்கு இந்தப் பெயர் சூட்டியது யார்? காக்காய்க்கு மயில் என்றும், தரித்திரனுக்கு செல்வம் என்று பெயர் வைத்தது போல் இருக்கிறது! மனைவியின் பேச்சைக் கேட்டு மகானைக்கொல்ல நினைத்த துன்மார்க்கா... நீ தொடும்படியாக என் கால்கள் செய்த பாபமென்ன?" இந்த சமயத்தில் ஓடி வந்தாள் மைனாவதி.

"சபித்து விடாதீர்கள்... இந்தப் பேதையை நினைத்து என் மகனுக்கு உயிர் பிச்சை கொடுங்கள், இப்போது திருந்திவிட்டான்" எனக் கூறி, மகன் கையைப் பிடித்துக் கானேபாவின் கையில் ஒப்படைத்தாள். கோபி சந்தரும் "மன்னிக்க வேண்டும்..." என விழுந்து நமஸ்கரித்தார்.

"குருநாதரை எந்தக் கிணற்றில் தள்ளினீர்? ஒளிக்காமல் சொல்லும்" என்று கேட்டார் கானேபா. கிணற்றைக் காட்டினான் அரசன். "கோபீ சந்த்... பொன், வெள்ளி, இரும்பு, செம்பு ஆகிய நான்கு சிலைகளை உன்னுடைய உயரம், பருமனுக்குச் செய்து எடுத்து வா, சீக்கிரம்" என்றார் கானேபா.

வெகு சீக்கிரம் கானேபா கேட்டபடி, மன்னனைப் போலவே நான்கு சிலைகளும் செய்து வந்தன. பாறாங்கற்களை எடுத்து, கிணற்றில் மூடி இருந்த கல்லை நகர்த்தச்சொன்னார் கானேபா. ஜாக்கிரதையாக செய்து முடித்தனர் ஏவலாட்கள்.

தண்ணீரைத் தொடாதபடி தியானத்தில் ஆழ்ந்திருந்த ஜாலந்தரைக் கண்டு அத்தனை பேரும் ஆச்சரியப்பட்டனர். "ஜாலந்தர் வாக்கு, பொய்க்காதே, சபித்து விடுவாரோ" எனச் சந்தேகக்குரல் எழுப்பினர் சிலர். "எப்படியோ கொலைப்பழியிலிருந்து அரசர் தப்பினார்" என ஆறுதல் பெருமூச்சு விட்டனர் சிலர். "மைனாவதி தேவியார் ஜாலந்தரின் உத்தம சிஷ்யை, கானேபா பிரதம சீடர், இருவருமாக ஜாலந்தரின் சாபத்திலிருந்து மன்னரைக் காப்பாற்றிவிடுவார்கள்" எனக் கிசு கிசுத்தனர் சிலர்.

ஒன்றன்மேலேஒன்றாக நான்கு சிலைகளையும் கட்டி கிணற்றுக்குள் மெதுவாக இறக்கச் சொன்னார் கானேபா. "குருநாதர் தலைமீது மோதிவிடாமல் எச்சரிக்கையாக, நிதர்னமாக இறக்கச் சொல். குருநாதர் கேட்கும் கேள்விக்குத் தாமதமின்றி சுருக்கமாக பதில் கொடு. ஒரு மாமாங்கமாக சிறைப்படுத்தப்பட்ட யோக நிலை.... எல்லோரும் ஒதுங்கி இருங்கள். எட்டிப் பார்க்க வேண்டாம்" என மெதுவாகக் கட்டளையிட்டார் கானேபா.

ஜனங்கள் மூச்சடக்கியவாறு என்ன நடக்கப் போகிறதோ என்ற திகில் கலந்த ஆவலுடன், இமைக்கவும் மறந்து காத்திருந்தனர். அரசனும் மைனாவதியும் படபடத்த நெஞ்சுடன் நின்றனர்.

சிலைகள் மெதுவாக இறக்கப்பட்டன. சரசவென்ற சப்தம் ஜாலந்தரின் தியானத்தை கலைத்தது. "ஒரு மாமங்கமாக அடைக்கப்பட்ட கிணற்றில் இறங்குவது யார்?" என்று கேட்டார் ஜாலந்தர். அரசன் மேலிருந்தபடியே "கோபி சந்த..." இவ்வளவுதான் சொல்லி இருப்பான்.

"அக்கிரமமாகக் கிணற்றில் தள்ளி துன்புறுத்திய நீ சாம்பலாகக் கடவாய்" எனச் சீறினார் ஜாலந்தர். அவ்வளவுதான்! நான்கு சிலைகளும் சாம்பலாகி விட்டன.

இதைப் பார்த்துக் கூடி இருந்த அனைவரும் நடுநடுங்கினர். கானேபா "அரசே, கிணற்றருகில் போய குருநாதரை வணங்கும்" என்றார்.

அரசன் கிணற்றருகே போகவும் பயந்தான். கானேபா "வேந்தே, குரு நாதரின் வேதனைத்தீ நான்கு சிலைகளிலும் செலுத்தப்பட்டுத் தீர்ந்து விட்டது. குருதேவரைப் பொறுத்த மட்டில் கிணற்றில் தள்ளிய கோபிசந்த் சாம்பலாகிவிட்டான். இங்கே இருப்பது உத்தம சிஷ்யை மைனாவதியின் புத்திரன். குருநாதர் கண்விழித்த பின்னும் கிணற்றுக்குள் விட்டு வைத் திருப்பது நல்லதல்ல... சீக்கிரம் அவரை மேலே வரச்செய்ய வேண்டும். தைரியமாகப் போங்கள்" என்றார்.

"குருநாதர் திருவடிகளுக்கு நமஸ்காரம்" என்றார் கோபிசந்த். "நீ யார்?" என்று கேட்டார் ஜாலந்தர். "உங்கள் சிஷ்யை மைனாவதியின் புத்திரன்" என்றார் ராஜா. "சிரஞ்சீவியாக இரு" என ஆசீர்வதித்தார் குரு, எல்லோரும் மகிழ்ச்சியாய் ஆரவாரம் செய்தனர். குருநாதரை மேலே

வரச் செய்தனர். நடந்ததை நினைத்து வருந்தி, மன்னிப்புக் கேட்டு கொண்டான் மன்னன்.

தன் மூத்த புதல்வனுக்குப் பட்டம் கட்டும்படி, மந்திரிகளிடம் சொல்லிவிட்டு, மடத்துக்கு வந்துவிட்டான். "வாழ்நாளின் பெரும் பகுதியை நாசமாக்கிக் கொண்டேன். பகவானைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை... அந்த பாக்கியம் எனக்கு உண்டா?" என வேண்டினார் அரசர்.

ஜாலந்தர் "உனக்கு நீண்ட ஆயுள் என ஆசிர்வதித்திருக்கிறேனே... சுகபோகங்களை அனுபவித்தவாறு ஆட்சி செய்வது தானே?" பற்றுக் களைத் துறந்தவன் தான் பகவானை அடைய முடியும். பாவசமுத்திரத்தில் மூழ்கி எழுந்த நீ அவ்வளவு சீக்கிரம் பற்றைத் துறப்பாயா" எனக் கேட்க அந்த விநாடியே அரச சின்னங்களைக் களைந்தார் கோபிசந்த். காவி ஆடையைக் கேட்டுப் பெற்றுக் கொண்டார்.

ஜாலந்தர் "முதலில் உடலுக்கு முக்கியத்துவம் அளிக்கும் கௌர வத்தை விடுத்து, பிட்சை எடுக்க வேண்டும், முடியுமா?" என்று கேட்க,

உடனே கப்பரையைக் கையிலேந்தி, எந்த அரண்மனையில் ஏவலர்கள் பணிசெய்ய கோலாகலமாக அரசாட்சி செய்தாரோ, அதே அரண்மனை வாசலில் நின்று "அம்மா பிட்சை" என்று குரல் கொடுத்தார்.

அரசனின் குரல் கேட்டு அனைவரும் ஓடி வந்தனர். பட்டமகிஷி கணவரை சன்னியாசி வடிவமாய்க் கண்டதும் கதறி அழுதாள். "உன் வார்த்தையைக் கேட்டதாலல்லவா கொலை பாதகத்துக்குத் துணிந்தேன். உன் மகன் தானே அரசாட்சி செய்கிறான். நிம்மதியாக இரு" என்ற ராஜா கோபி சந்தனர் தாயிடம் சென்று வணங்கினார்.

"அம்மா, என் ஞானக்கண்களைத் திறந்தவளே நீதான். முதல் பிட்சை நீங்கள்தான் போடவேண்டும்" என வேண்டினார். பாலும் சோறும் கலந்து கப்பரையில் போட்டாள் அன்னை.

"உன் ஞானமும், பக்தியும், வைராக்கியமும் மேன் மேலும் வளரட்டும். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த நாளில் வந்து பால்சோறு வாங்கிப் போ. உன் விருப்பப்படி கோவில்களுக்கும், தீர்த்தங்களுக்கும் சென்றுவா" என ஆசீர்வதித்தார் மைனாவதி.

குருநாதரிடமும், கானேபாவிடமும் விடை பெற்றுக் கொண்டு க்ஷேத்திராடனம் சென்றார் கோபி சந்தனர். சரீர ஆசையை விட்டதால் காடுகளில் பயமின்றி நடந்தார். படுத்து உறங்கினார். முள்ளும் கல்லும் குத்திக் கிழித்துப் பாதங்கள் புண்ணாகிக் காய்த்துப் போயின. பசித்தபோது பிச்சையெடுத்து உண்டார். காட்டு வழியானால் கிடைத்த கனி கிழங்குகளைச் சாப்பிட்டார். புலியும், சிங்கமும், கரடியும் இவரை எதுவும் செய்யவில்லை. பஜனை கோஷ்டிகளைக் கண்டால் சேர்ந்து கொள்வார்.

கோபி சந்தனரின் தேகம் மெலிந்தது. தாடியும், தலைமுடியும் புழுதி படிந்து சடை சடையாய் இருந்தன. ஒற்றை ஆடை கிழிந்து கந்தலாய்த் தொங்கியது.

இப்படிச் செல்கையில் பத்ராவதி நகரை அடைந்தார். அங்கே அவரது தங்கை சம்பாவதி வசித்து வந்தாள். அந்த வீட்டின் வாசலில் போய் பிட்சை கேட்டார் கோபிசந்தனர். பிட்சை போட வந்த வேலைக்காரி சந்தேகப்பட்டு சம்பாவதியை அழைத்து வர, அவள் தன் அண்ணனை அடையாளம் தெரிந்து கொண்டாள்.

"அண்ணா! இதென்ன கொடுமை...! அம்மா பக்தி வழியில் இறங்கி விட்டார் எனக் கேள்விப்பட்டேன். உன் துறவு நிலைக்கு அவர்கள் தான் காரணமா? அண்ணிகளும், பிள்ளைகளும் சுகமா? ஏகப்பட்ட பெண்களை மணந்திருந்தாயே! எப்படி அரச போகத்தையும், பெண்களையும் துறந்தாய்? அம்மாவோ, அண்ணியோ, மக்களோ உதாசீனப் படுத்தினார் களா? நண்பர்களின் துரோகமா, அமைச்சர்களின் சதியா, எதண்ணா காரணம்?" எனப் பலவாறு கலங்கியபடி கேட்டாள்.

"அளவுக்கு மிஞ்சி அனுபவிக்கும் எதுவுமே திகட்டிவிடுகிறது. எனக்கும் இல்லறம், அரசபோகமெல்லாம் திகட்டி விட்டது. மோட்சமார்க் கத்தை அடையத் துறவியானதை கேவலமென்று நினைக்கிறாயா?"

கோபி சந்தனர் இப்படித் தங்கைக்கு ஆறுதல் சொல்லிக் கொண் டிருக்கும் போதே வேலைக்காரி வந்து, "அம்மா, நீங்கள் சொன்னபடியே உங்கள் தமையன்குளிக்க நீர் நிரப்பி வைத்திருக்கிறேன்" என்று சம்பாவதியிடம் கூறினாள்.

"அண்ணா, முதலில் அழுக்குப் போக குளியுங்கள். குளிப்பது பாவம் என்று எவரும் எழுதி வைக்கவில்லை. கந்தலாடையை அவிழ்ந்துவிட்டு, இந்தப் புதிய காவி ஆடையை அணிந்து கொள்ளுங்கள்" எனக் கூறினாள் தங்கை. கோபி சந்தனர் குளித்துவிட்டுப் புதிய காவிவேஷ்டி அணிந்து வந்தார். தங்கை பாலும், சோறும் கலந்து போட்டாள். "சம்பாவதி, இந்தப் பால் சாதத்தைப் பார்த்தவுடன் நம் அம்மா ஞாபகம் வருகிறது. பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒருமுறை அம்மா கையால் பால் சாதம் சாப்பிட வருவதாக வாக்குத் தந்திருக்கிறேன். இப்போது புறப்பட்டால் தான் காஞ்சனபுரிக்கு சொன்ன நேரத்தில் அம்மாவைப் பார்க்க முடியும்" என்றார் கோபிசந்தனர். தங்கையின் விழிகளிலே குளம் போல் கண்ணீர். "அண்ணா, கொஞ்ச நாளாவது இங்கே தங்கி என் வீட்டைப் புனிதப்படுத்தக் கூடாதர்?" என ஏக்கமாகக் கேட்டாள். "சம்பா, ஒரு பகலுக்கு மேல் ஒரு இடத்தில் நான் தாங்குவதில்லை. சமயத்துக்கேற்றபடி விதிகளை நமக்கென்று மாற்றிக் கொள்ளலாமா? அப்போது உன்னிடம் பற்று அதிகம் என்று ஆகாதோ! மனைவி, மகன், மாதா என்று துறந்த வனுக்கு இப்போது புதிய பாசமா... ஊரை விட்டு வந்து பன்னிரண்டு வருஷமாகப் போகிறது.... பசித்தால் எதிர்படுபவரெல்லாம் என் சொந்தக் காரர்கள் தான், கவலைப்படாதே; பகவானை நினைப்பதே சிறந்தபணி..." என்று சொல்லிவிட்டு, சாப்பிட்டதும் புறப்பட்டு விட்டார்.

காஞ்சனபுரம் வந்து தாயை வணங்கினார். மைனாவதி தேவியும் தீர்த்தயாத்திரை அனுபவங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். "உன்னைப் பற்றி ஊரார் தூற்றிய போது மனம் புழுங்கினேன் மகனே... இப்போது தான் என் நெஞ்சம் நிறைவடைந்தது" என மகிழ்ச்சியோடு கூறி, பாலும், சோறும் அளித்தாள்.

சாப்பிட்டுவிட்டு கோபி சந்தனர் விடை பெற்றுக் கொண்டு மீண்டும் பகவத் பஜனை செய்தபடியே தீர்த்தயாத்திரை சென்றார். கோபிசந்தனர் தனது இறுதிக் காலம் வரை தூய வாழ்க்கையிலிருந்து நூலிழையும் பிசகவில்லை.

"கோபீ சந்தன் வசன ஸினகர்..." என்று கபீர்தாஸரே தனது கீர்த்தனையில் பாராட்டிப் பாடி இருக்கிறார். பகவான் புகழ் காஞ்சனபுரத்தில் எதிரொலிக்கக் காரணமாயிருந்தவர் கோபி சந்தனர்.

13. ஸ்ரீ கூபா கும்பார்

மார்வார் தேசத்து அரசன் ஈவு இரக்கமற்ற கொடியவன். ஏகமாய் வரிவிதித்து ஜனங்களைக் கசக்கிப்பிழிந்து வந்தான்.

அந்த முறையில் குயவர்களுக்கு மாதம் பத்து பானை வரியாக விதிக்கப்பட்டது. குயவர் குலத்தில் பிறந்தவர் கூபா. சிறந்த விஷ்ணுபக்தர். பசி என்று வந்தவருக்கு முகம் சுளிக்காது அன்னமிடுபவர். அவர் மனைவி பர்த்தாவுக்கேற்ற பதிவிரதை. இருவருமாகச் சேர்ந்து தினம் ஒரு பானை செய்து வந்தனர். முப்பது பானைகளையும் மாத முடிவில் சூளையில் சுட்டு விற்பார்கள். அந்தப் பணம் அவர்களின் மாதத் தேவைகளுக்கும், அன்னதானப் பணிக்கும் போதுமானதாக இருந்தது. இந்தப் புதிய வரியால் மூன்றில் ஒருபங்கு வருமானம் குறைந்தது. ஒரு பானைக்கு மேல் செய்யவும் அவர்களால் முடியவில்லை.

ஆனால் உண்மையான பக்தர்களை பகவான் தவிக்க விடுவாரா? மாதமுடிவில் சூளையைப் பிரித்ததும் நாற்பது பானைகள் இருந்தன.

"முப்பது பானை தானே செய்தோம்! பத்து பானைகள் எப்படிக் கூடின?" என்று கூபாவும், அவன் மனைவியும் வியந்தனர். பரந்தாமனின் ஆசியை எண்ணி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். சமார் இருநூறு பேர் கொண்ட பாகவத கோஷ்டி 'ஹரேராமா, ஹரே கிருஷ்ணா' என்று உணர்ச்சி பொங்க பஜனை செய்து கொண்டே கூபாவசிக்கும் ஜிதடம் கிராமத்துக்கு வந்தனர். அவர்களை வரவேற்று உபசரித்தார் கூபா.

"எங்கள் பசியாற்ற இந்த ஊரில் பக்தி மான்கள் உண்டா?" என்று கேட்டார் ஒருவர். "இங்கேயே இருங்கள்... இதோ ஒரு நொடியில் சாமான் களோடு வருகிறேன்" என்று சொல்லிச் சென்றார் கூபா. "ஒரிருவரா யிருந்தால் பரவாயில்லை இருநூறு பேர்! எப்படி சமாளிப்பது... பரந்தாமா... என் வாயிலிருந்து வெளிவரச் செய்த வாக்குக்கு நீயே பொறுப்பு" என்று உருகினார்.

அப்போது அவர் மீது அன்பு கொண்ட ஒரு மளிகை வியாபாரியின் நினைவு வந்தது. அவரிடம் சென்று "இருநூறு பேர் சமைத்துச் சாப்பிடும் அளவு சமையல் சாமான்களும், எரி பொருளும், பாத்திரங்களும்

வேண்டும். ஏற்பாடு செய்து தருவீர்களானால் எப்படியாவது கடனை அடைத்து விடுகிறேன்" என்று இறைஞ்சினார்.

வியாபாரி சற்றே யோசித்து "நீங்களோ பரம ஏழை. எப்படிக் கடனை அடைப்பீர்கள்? நானொரு யோசனை சொல்கிறேன். புதிதாக நிலமொன்று வாங்கி இருக்கிறேன். அதில் ஒரு கிணறு தோண்ட வேண்டும். நீங்கள் தோண்டித் தருவதாக வாக்களித்தால் உங்களுக்கு வேண்டிய சாமான்களை இப்போதே தருகிறேன்" என்றான்.

கூபாவின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. சந்தோஷத்தோடு ஒப்புக் கொண்டார். சாமான்களை வாங்கிக் கொண்டு வந்து பாகவத கோஷ்டியிடம் கொடுத்து வீட்டிற்கருகிலுள்ள காலித் தோப்பில் சமையல் செய்து சாப்பிடச் சொன்னார்.

அவர்களும் திருப்தியுடன் சாப்பிட்டு, கூபாவை வாழ்த்திச் சென்றனர். அடுத்தநாள் சொன்ன சொல் மாறாமல் மண்வெட்டி, கடப்பாரை கூடை சகிதம் மனைவியுடன் வியாபாரியை தேடிச் சென்றார் கூபா. வியாபாரி கழனிக்கு அழைத்துச் சென்று கிணறு வெட்ட வேண்டிய இடத்தைக் காட்டினார்.

கடப்பாறையால் பெயர்த்து, மண்வெட்டியால் தோண்டி, கூடைகளை நிரப்புவார் கூபா. பாண்டுரங்கா, பண்டரிநாதா என்ற பஜனைகோஷத் தோடு, கூபாவின் மனைவி கூடை மண், கற்களை சுமந்து சென்று கொட்டிவிட்டு வருவார் 'ஜெய ஜெய விட்டல பாண்டு ரங்க விட்டல' என்ற நாமத்தை உச்சரித்தபடி.

அலுப்புச் சலிப்பின்றி அவர்கள் இருவரும் உழைத்தனர். என்ன அற்புதம்! பெரும் பாறைக் கற்கள் எதுவுமில்லாமல் பொல பொலவென்று மணலாகவே இருந்தது. சூரியாஸ்தமனத்திற்குள் ஊற்றுக் கண்கள் நாலா புறமும் பெருக்கெடுக்க தண்ணீர் பீய்ச்சி யடித்து அவர்களை நனைத்தது. அக்கம் பக்கம் கழனிக்காரர்கள் இந்த அதிசயத்தைக் காணக் கூடிவிட்டனர். "என் கழனியில் ஒருவாரம் நாலு ஆள் வேலை செய்தும் தண்ணியே வரலேப்பா" என்றான் ஒருவன். "நீ ஒண்ணு... நான் அடுத்த வயல்காரன். வெறும் பாறை... வெடி வைச்சு தகர்த்துக் கிட்டிருக்கேன்!" என்றான் அடுத்த வயலுக்கு சொந்தக்காரன்.

"நான் முப்பத்தஞ்சடி தோண்டியாச்சு... ஈரக்கசிவே இல்லே... எல்லாத்துக்கும் முகராசி வேணும்" என்று ஒருவன் பெருமூச்சு விட்டான். "முகராசி இல்லே... பக்தி... கூபாவுடைய பக்திக்காக பரமன் அருளிய பரிசு" என்றான் இன்னொருவன்.

"தள்ளுங்கப்பா... நிலத்துக்கு உடையவனே வரான்"

எவ்வளவு தூரம் வேலை நடந்திருக்கிறதென்று பார்க்க வந்த வியாபாரி அயர்ந்து போனான்.

கொப்பளித்துப் பெருகிக் கிடக்கும் தண்ணீரைப் பார்த்தும் அவனால் நம்பமுடியவில்லை.

'மளார்'

'ஐயோ'

கூபா நின்றிருந்த பக்கம் மண் சரிந்து விழுந்தது. கூபாவின் மனைவி அலறினாள். கூபாவைக் காப்பாற்ற கூடியிருந்த பலர் நீரில் மூழ்கியும் பலனில்லை. கூபாவின் மனைவியைத் தேற்றி வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். ஆனால் கணவனை இழந்த ஏழை மனைவிக்கு, எது சொன்னால் தான் சமாதானமாகும்?

"நானும் தானே உண்மையாய் உன்னை வேண்டினேன்? என்னையும் சேர்த்து அழைத்துக் கொள்ளாமல் இப்படிப் பாரபட்சமாய் நடந்து கொண்டாயே!" என்று பலவாறு புலம்பினாள். தூங்குவதில்லை; சாப்பிடுவதில்லை; குளிப்பதில்லை... ஏன் எழுந்திருப்பதேயில்லை... சதா பண்டரிநாதன் ஜபம்தான்... மெல்ல மெல்ல ஒடுங்கிக் கொண்டே வந்தாள்.

அப்போது பகவான் அசரீரியாக "பெண்ணே! வருந்தாதே! கவலையை ஒழித்து இயல்பாக இரு. அடுத்த ஆண்டு இதே நாள் உன் கணவர் அதே இடத்திலிருந்து வெளி வருவார்" என்றார்.

கூபாவின் மனைவி மனம் தேறி வாழ்ந்து வரலானாள். கிணறு தோண்டச் செய்த மளிகை வியாபாரி "அடடா, பாகவத பக்தரை கிணறு தோண்டச் செய்து, வீண் பழிச் சொல்லுக்கு ஆளானோமே!" என்று நாள்தோறும் மனம் நைந்து அதற்கு பிராயச்சித்தமாக அந்தக்

கிணற்றருகே ஒரு நந்தவனம் ஏற்படுத்தி, அந்தப் பூக்களால் பண்டரி நாதனுக்கு பூஜை செய்து, மாலை கட்டிப் போட்டு ஏழைகளுக்கு அன்னதானம் செய்து வந்தான்.

மேலும் அந்தக் கிணற்று நீரில் குளிக்கக் குளிக்க, அவனுக்கு ஞானம் ஒங்கியது. அறிவு பெருகியது. பாகவத சிரேஷ்டர் கூபா தோண்டி அந்தர்தியானமான கிணறு என்று ஊர் மக்களும் திரளாக அங்கேயே வந்து நீராடினர். அதனால் ஜிதடம் கிராமத்தில் பக்தி பரவியது.

ஒருவருடம் முடியும் நாள். இரவு நேரம். பஜனை கோஷ்டி ஒன்று அன்று அங்கே தங்கி இருந்தனர்.

அந்த அமானுஷ்ய நேரத்தில் ஜால்ரா, மேள வாத்யங்களோடு எவரோ பஜனை செய்யும் சப்தம் கேட்டது. எங்கே எங்கே என்று துருவிப் பார்த்தனர். புலப்படவில்லை. மறுநாள் அரசனிடம் சென்று இந்த அதிசயத்தைக் கூறினர்.

அரசன் ஆட்பெரும் படையுடன் வந்தான். அவனுக்கும் அந்த இனிய கீதம் கேட்டது. மெய் மறந்தான். அந்த இடத்தை தோண்டச் செய்தான்.

அங்கே அழகிய ராதாகிருஷ்ண விக்ரகத்தின் முன் மெய்மறந்து கூபா கும்பார் பாடிக் கொண்டிருந்தார். இதற்குள் செய்தி கேட்டு வியாபாரியும், கூபாவின் மனைவியும் ஊர் மக்களும் கூடி விட்டனர்.

மன்னன் சாஷ்டாங்கமாக கூபாவின் கால்களில் விழுந்தான். அதிக வட்டிபோட்டு மக்களைக் கசக்கிப்பிழிந்த தன் அடாத செயலை எண்ணி வருந்தினான்.

இனி நேர்மையாய் நடந்து கொள்வதாய்க் கூறி, ஆசிர்வதிக்கும்படி வேண்டினான். கூபாவின் ராதாகிருஷ்ண விக்ரகத்திற்கு ஒரு கோவில் கட்டி மூன்று வேளையும் பூஜை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். வணிகனும், அரசனும் கூபாவின் சீடர்கள் ஆனார்கள்.

பண்டரிநாதன் பிரத்யட்சமாகி "இந்த இடம் பண்டரீபுரத்துக்கு சமானமானது. இங்கு வந்து ஆத்மார்த்தமாக தொழும் பக்தர்கள் கோரிய வரம் பெறுவார்கள்" என வரமளித்தான். கூபாவும், அவன் மனைவியும் இறுதிவரை பக்தியைப் பரப்பி முடிவில் மோட்சத்தை அடைந்தனர்.

14. ஸ்ரீபுரந்தரதாசர்

பண்டரீபுரத்துக்கு அருகில் வேமன்னபுரி என்ற அழகிய சிற்றூர். நீர்வளம் நிலவளம் மிகுந்தது. அங்கே பணமும், அதை நல்லவழியில் செலவிட மனமும் படைத்த மாதவராவ் தன் மனைவி ரத்னாபாயுடன் வசித்து வந்தார். அவர்களுக்கு வெகுநாள் தவமிருந்து பெற்ற மகன் ரகுநாதன்.

மாதவராவின் தொழில் வட்டிக்கடை என்றாலும் ஏழை எளியோரிடம் இரக்கமும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் கொண்டு, நியாயமான வட்டி வாங்கி தொழில் செய்து வந்தார்.

ரகுநாதனின் மனைவி பெயர் லக்ஷ்மிபாய். அழகிலும், அறிவிலும், பொறுமையிலும் சிறந்தவள். மாதவராவ் காலத்திற்குப்பிறகு ரகுநாதன் கடைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டான்.

ரகுநாதனுக்குப் பணத்தையும், மீட்கமுடியாமல் தங்கிவிடும் நகைகளையும் சேர்ப்பதில் ஆசையிருந்ததே தவிர, அதை எடுத்து செலவழிக்கும் போது மனம் படாத பாடுபட்டது. பேராசை கொண்டு வட்டிக்கு வட்டி வாங்கினான்.

யாராவது "இது தவறு. உன் தகப்பனாரைப் போல் அன்னதானம் செய்யாவிட்டாலும் குடும்பச் செலவுக்கே பணம் கொடுக்க மறுக்கிறாயே" என்று சொன்னால் போதும். கோபம் தலைக்கேறி விடும். கண்டபடி திட்டி, உதைத்து அனுப்பி விடுவான். நாரதரிஷி பகவானைப் பாட வேண்டு மென்று ஆசைப்பட்டுக் கேட்டுக்கொண்ட பிறவி ரகுநாதன். பின் ஏன் அவன் கஞ்சத்தனமாய் இருக்கிறான்? அது பகவானின் லீலை. ரகுநாதன் மூலமாக உலக மக்களுக்குப் பாடம் புகட்ட அவர் நடத்தும் நாடகம்.

வீட்டில் சாம்பிராணி, கற்பூரம், பூ, பழம், ஊதுபத்தி, விளக்குக்கு எண்ணை, நிவேதனம் என்றெல்லாம் செலவாகிறதென்று பூஜையை நிறுத்திவிட்டான். பண்டிகைகளும் வேண்டாமென்று திட்டம் செய்தான். லட்சுமிக்கு கணவரின் லோபித்தனம் மறையவேண்டுமென்று தெய்வத் திடம் முறையிடுவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

காலையில் வடித்த சோறு காலையிலேயே தீர்ந்துவிட்டால் இரவு சாதம் வடிக்க அனுமதிக்க மாட்டான். இரவுகளில் அநேகமாகப் பட்டினிதான்! இந்த நிலையில் லட்சுமிக்குப் பெண் குழந்தை பிறந்தது. ருக்மணி என்று பெயரிட்டனர். ரகுநாதன் தினம் சேர்ந்த பணத்தையும், நகைகளையும் குவித்து வைத்துப் பார்ப்பதிலேயே இன்பம் கண்டான்.

ஒரு நாள் காலை தள்ளாத கிழவர் ஒருவர் "வட்டிக்கடை ரகுநாதன் வீடு எது?" என்று எதிர்ப்பட்டவர்களை விசாரித்துக் கொண்டே வந்தார். "எதற்கு ஸ்வாமி... என்ன விஷயம்?" என்று கேட்டார் ஒருவர்.

"ரகுநாதன் தந்தையார் முன்னே எனக்கு உதவி இருக்கிறார். இப்போ கொஞ்சம் பணமுடையாக உள்ளது. ஓடி ஆடி சம்பாதிக்க முடியாத வயசு" என்றார் கிழவர். கேள்வி கேட்டவர் சிரித்தார். பிறகு "தகப்பன் தயாள குணத்தோடு இருந்தால் பிள்ளையும் அப்படியே பிறக்கும் என்று எந்தச் சட்டத்தில் சொல்லி இருக்கிறது? தான தருமமெல்லாம் மாதவராவோடு போயிற்று. நேரத்தை வீணடிக்காமல் வேறு இடங்களில் முயற்சி செய்து பாருங்கள்" என்றார்.

வயோதிகர் எதையும் பொருட்படுத்தாமல் பிடிவாதமாக ரகுநாதன் வீட்டிற்குச் சென்றார். பெயர் சொல்லிக் கூப்பிட்டதும் ரகுநாதன் வந்தார். "என்ன வேணும்? சீக்கிரமாக சொல்லுங்கள். தலைக்கு மேல் வேலை கிடக்கிறது..." என்று அதட்டிப் பேசினான் ரகுநாதன். கிழவர் கையிலிருந்த மூட்டையை அவிழ்த்து ஒரு எலுமிச்சம் பழத்தை எடுத்து "சதமானம் பவதி" என்று தலையில் அட்சதையைப் போட்டு ஆசீர்வதித்துக் கையில் கொடுத்தார்.

பிறகு பணிவுடன் "ஸ்வாமி, இல்லாதவர்களுக்குத் தனவான்கள் உபகாரம் செய்ய வேணும். பணத்தை பதுக்கி வைப்பதால் யாருக்கும் லாபம் இல்லை. விதிமுடிந்து போகிறவர்கள் எதுவும் எடுத்துப் போனதில்லை. என் பிள்ளைக்குக் கல்யாணம் பண்ண வேணும். அவ்விடத்துக் கிருபை இவ்விடம் நோக்க வேண்டும். ஆயிரம் வராகன் கொடுத்தால் தாராளம். அப்பா ஏகப்பட்ட தருமம் செய்தார். அமுத சுரபிமாதிரி எடுக்க எடுக்க வற்றாத செல்வம்" கிழவர் சொல்லிக் கொண்டே வர ரகுநாதனுக்குக் கோபம் வந்தது.

"ஓய், நிறுத்தும்... போகிறது. பெரியவராயிற்றேன்னு பார்த்தால் பேசிக் கொண்டே போகிறீரே! இங்கே நான் முறத்தால் வாருகிறேன் என்று சொன்னது யார்? நீர் கிளம்பிவிட்டீர்... நான் கௌரத்தைக் கருதி வீட்டுக்குள் கிடக்கிறேன். உமக்கும், எனக்கும் அதுதான் வித்தியாசம்... சாப்பிடுகிறதே கஷ்டமாயிருக்கிறபோது தானமாம்... தருமமாம்... இப்போ இருக்கிற நிலைமையிலே யாராவது அன்னதானம் பண்ணினால் நான் குடும்பத்தோடு போய் உட்கார்ந்து விடுவேன்" சண்ட மாருதமாகப் பொழிந்தான் ரகுநாதன்.

கிழவர் இதற்கெல்லாம் மசிகிற ரகம் இல்லை. சாவகாசமாய் திண்ணையில் உட்கார்ந்து கொண்டார். "மகாபலியும், சிபியும், கர்ணனும் வாழ்ந்த நாடு இது... நீங்களெல்லாம் இப்படித் துரத்தி அடித்தால் என் போன்ற ஏழைகளுக்கு கதி மோட்சமேது? வரும்படியில் ஆறில் ஒரு பங்கு எளியவர்களுக்கு ஒதுக்க வேண்டுமப்பா" என்று மறுபடி விளக்கம் கூறவும், ரகுநாதனின் ஆத்திரம் எல்லை மீறியது.

"ஏன் ஐயா? பொழுது போகவில்லை என்றால் நான்தானா அகப்பட்டேன்...! நீங்கள் தொண்டைவற்ற எத்தனை நேரம் கரடியாய்

கத்தினாலும் ஒரு செல்லாத காசும் என்னிடமிருந்து பெயராது. உயிர்மேல் ஆசை இருந்தால் இடத்தைக் காலி பண்ணும்... படாத இடத்தில் பட்டு ஒன்றுகிடக்க ஒன்று ஆகிவிடப் போகிறது" என்று எரிச்சலோடு கூறினான்.

மறுபடி முதியவர் 'ஸ்வாமி...' என்று தொடங்க ரகுநாதன் சினம் தலைக்கேற "காலங்கார்த்தால வந்து வம்பா பண்ணுகிறீர்" என்று கழுத்தைப் பிடித்துத் தள்ளினான். கிழவர் ரகுநாதனைக் கட்டிப் பிடித்தார். இருவரும் தரையில் உருண்டனர்.

ரகுநாதனின் துணிகள் அழுக்காயின. குடுமி அவிழ்ந்தது.

"யாசகத்துக்கு கை ஏந்தி வந்த கிழவனுக்கு இவ்வளவு திமிரா? இந்த வயதில் இவ்வளவு பலம் என்றால் வாலிப வயதில் எத்தனை உறுதியாக இருந்திருக்க வேண்டும்...! இத்தனை பலத்தை வைத்துக் கொண்டு உழைத்துப் பிழைக்கக் கூடாது.." இப்படி முணுமுணுத்தபடி கடைக்குப் போனான் ரகுநாதன். கிழவர் அடிபட்ட அதிர்ச்சியில் சற்றே மயங்கிக் கிடந்தார்.

மயக்கம் தெளிந்ததும் "சரியான கஞ்சப் பயல்... இவனுக்கு வாய்த்தவளின் குணத்தையும் பார்த்துவிடுவோம்" என்று தனக்குள் பேசியபடியே எழுந்து மண்ணைத் தட்டி உடைகளை நேராக்கிக் கொண்டு வீட்டிற்குள் நுழைந்து, உட்பகுதிக்குப் போனார்.

லட்சுமி இவரைப் பார்த்ததும் எழுந்து வந்து நமஸ்கரித்தாள். "தீர்க்க சுமங்கலியாக இரு, அம்மா" என வாழ்த்தி அட்சதை போட்டார் கிழவர். பிறகு "மகளே! சாட்சாத் மகாலக்ஷ்மி போல இருக்கிறாய்! என் ஒரே பிள்ளைக்குக் கலியாணம் பண்ண வேண்டுமென்று உன் கணவரிடம் மடியேந்தி வந்தேன். வயதானவனென்றும் பாராமல் அடித்துப்போட்டு விட்டார். உன்னாலாவது என் குறைதீருமா? கணவன் செய்த தவறுக்குப் பிராயச்சித்தமாக ஏதேனும் கொடுத்து என் குலம் தழைக்கச் செய்வாயா?" என்று பரிதாபமான குரலில் கேட்டார்.

லக்ஷ்மிக்கு மனம் உருகியது. "இதென்ன கஷ்டகாலம்! வயதான வர்களின் சாபத்தை இப்படி சேமிக்கிறாரே... தெய்வமே, என் பொருட்டு என் கணவரை மன்னித்து விடு" என மனதிற்குள் பிரார்த்தித்துக்

கொண்டாள். பிறகு, "சுவாமி, என் புருஷனை என் எதிரில் எதுவும் சொல்லாதீர்... என்னிடம் பணம் இல்லை. என் பிறந்த வீட்டில் போட்ட வைர மூக்குத்தி ஒன்று வெகுநாளாய் பெட்டி அடியில் கிடக்கிறது. உயர்ந்த வைரம். மூவாயிரம் ரூபாய்க்கு வாங்கியது. அவசரத்துக்குக் கேட்பவர் கூட இரண்டாயிரம் தாராளமாய் தருவார். என் கணவருக்கு இது மறந்தே போயிருக்க வேண்டும். அது பற்றிக் கேட்பதே இல்லை. அதனால் கொடுத்தது நான்தான் என்பதை மட்டும் யாரிடமும் சொல்ல வேண்டாம். வெளியூருக்குப் போய் விற்றுக்கொள்ளுங்கள்" எனப் பலவாறு எச்சரித்துவிட்டு மூக்குத்தியைக் கொண்டு வந்து தந்தாள். நாலாபுறமும் அஞ்சிய பார்வையுடன் நோட்டமிட்டபடி, அவள் பார்வையிலிருந்து மறைந்தார் முதியவர்.

ரகுநாதன் கடையில் அமர்ந்து பேரேட்டுப் புத்தகத்தில் கணக்குப் பதிந்து கொண்டிருக்கிறான். அப்போது உயர்ந்த ஜரிகை ஆடைகளுடன், விரல்களில் வைர மோதிரங்களும், கையில் தங்கக்காப்பு, கழுத்தில் தங்கச்சங்கிலியுடன் ஆடம்பரமாக வந்தார் ஒருவர். ரகுநாதன் எழுந்து வந்து ஆர்ப்பாட்டமாக வரவேற்றான். "என்ன வேண்டும்" என்று பணிவோடு விசாரித்தான்.

"என்னிடம் விலை உயர்ந்த வைர மூக்குத்தி ஒன்றிருக்கிறது. ஜாதி வைரம். என்ன கொடுப்பீர்?" என்று கேட்டபடி மூக்குத்தியை எடுத்துக் காட்டினார் வியாபாரி. மூக்குத்தியை வாங்கி நெடுநேரம் ஆராய்ந்தான் ரகுநாதன். பிறகு "ஆயிரம் தரலாம்" என்றான்.

"மூவாயிரம் பெறக் கூடிய சாமானை பாதிக்கும் கீழே சகட்டு மேனிக்குத் தள்ளுபடி செய்கிறீரே! அக்கிரமம்... அநியாயம்... நியாயமாய் சொல்லும்" என்றார் வந்தவர்.

"பழைய வைரம்... பிரித்துப் பார்த்தால்தான் சேதம் தெரியும்... ஆயிரத்துக்குமேல் வராது" என்ற ரகுநாதனுக்கு மனசுக்குள் ஒரு உறுத்தல். 'இது மனைவியுடையதாயிருக்குமோ...'

"எதற்காக இதை விற்கிறீர்கள்? நல்ல வைரமாயிற்றே..." சந்தேகக் குரல் எழுப்பினார் ரகுநாதன். "அனாவசியமாய் கேள்வி கேட்டு என் நேரத்தை வீணடிக்க வேண்டாம். நல்லதோ, இல்லையோ ஆயிரத்தை எடும்.." என்று அவசரப்படுத்தினார் விற்கவந்தவர்.

அவர் காட்டிய அவசரம் ரகுநாதனின் சந்தேகத்தை அதிகப்படுத்தியது. "வீட்டுக்குப் போய் பணம் எடுத்து வரவேண்டும். சற்று பொறுங்கள். பெரிய தொகை கடையில் வைத்துக் கொள்வதில்லை. ஐம்பது, நூறுதான் இங்கே இருக்கும்" என்று பணிவுடன் கூறிய ரகுநாதன் கடையில் ஒரு ஆளைக் கூப்பிட்டு "ஒரு பெரிய வியாபாராம். வீடுவரை போய் வந்து விடுகிறேன். கடையைப் பார்த்துக் கொள்" என்று சொல்லிவிட்டு, ரகசியமாக "இந்த ஆள் மேல் ஒரு கண் வைத்துக் கொள். நழுவ முயன்றால் கூச்சல் போட்டு கட்டிப்போட்டு விடு" என்று சொல்லி வீட்டிற்கு விரைந்தான் ரகுநாதன்.

"நேரங்கெட்ட நேரத்தில் வீடுவந்த புருஷனைக் கண்டு திடுக்கிட்டாள் லட்சுமி. வரும் போதே" லட்சுமி, பெட்டியில் ஒரு பழைய வைர மூக்குத்தி வைத்திருந்தாயே... எடுத்துக் கொண்டுவா" என்றான் ரகுநாதன்.

லக்ஷ்மி திகைத்தாள் "தெய்வமே, இதென்ன சோதனை...! ஒரு நாளும் இல்லாத திருநாளாக இவர் அந்த மூக்குத்தியைக் குறிப்பிட்டுக் கேட்கிறார். ஒருவேளை விஷயம் தெரிந்து தான் கேட்கிறாரோ? நல்ல காரியத்துக்குத்தானே கொடுத்தேன்...! பகவானே... அவர் கோபத்துக்கு ஆளாக்காமல் காப்பாற்று" என மனதுக்குள் வேண்டினாள். உள்ளே போய் பெட்டியில் தேடுவது போல் பாவனை செய்தாள்.

என்னே இறைவனின் கருணை! பெட்டியில் ஒரு வைரமூக்குத்தி இருந்தது. அதன் பளபளப்பு கண்ணைப் பறித்தது. ஜகன்னாதனுக்கு நன்றி கூறியபடியே மூக்குத்தியை எடுத்துக் கணவனிடம் கொடுத்தாள் லட்சுமி. ரகுநாதன் பிரமித்தான். இந்தமாதிரி ஒரு வைரத்தை அவன் பார்த்ததே இல்லை... என்ன ஒளி...!

"லக்ஷ்மி... இது உன் பிறந்தவீட்டில் போட்ட மூக்குத்தி அல்ல... நானும் இதுபோல் வாங்கித் தரவில்லை. ஏது இது? எதுவாயிருந்தாலும் நடந்ததைச் சொல். தயங்காதே! நான் கோபித்துக் கொள்ள மாட்டேன். மறைத்தால் தான் கோபம் வரும்" என்று கேட்டான் ரகுநாதன். லக்ஷ்மி கிழவர் வந்தது முதல் பகவானை வேண்டி, மூக்குத்தி கிடைத்தது வரை, கண்களில் நீர்மல்க நடந்தது நடந்தபடி கூறினாள். "லக்ஷ்மி, நீ புண்ணியவதி. தயாள குணமும், கருணை மனமும் இறைவனின் அருகில் சேர்க்கின்றது. இது தெய்வப் பிரசாதம் ஆனதினாலேயே இதற்கு

இத்தனை பிரகாசம். பகவான் எந்த வடிவிலும் வருவார் என்று தெரியாமல் அடித்துத் துரத்திய மகாபாபி நான். ஆமாம்... நீ மூக்குத்தியைக் கொடுத்தது கிழவருக்கு...! விற்க வந்தவரோ பணக்கார வியாபாரி... இது என்ன மாயம்... இல்லை. எல்லாம் பண்டரீநாதன் லீலை... என்னை சோதிக்க இறைவனே வந்திருக்கிறார்....” என்றபடி கடைக்கு ஓடினான் ரகுநாதன். அங்கே வியாபாரியைக் காணோம். காவலுக்கு வைத்த ஆள் உட்கார்ந்தபடி உறங்கிக் கொண்டிருந்தான். எழுப்பி விபரம் கேட்டால் 'எப்படித் தூக்கம் வந்ததென்றே தெரியவில்லை' என்று கூறினான்.

கடை முழுவதும் பூஜை நடந்தது போல் பூ, ஊதுபத்தி, சாம்பிராணி, சந்தன நறுமணம் கமழ்ந்தது. அந்த இடத்தில் விழுந்து புரண்டான் ரகுநாதன். “பண்டரீ நாதா, அறியாமையால் செய்த தவறுகளை மன்னித்து விடு... இனி அநியாய வட்டி வாங்கமாட்டேன். என்னை ஆட்கொள்ள வந்த அழகா... ஒருமுறை உன் திருமுகத்தைக் காட்ட மாட்டாயா? என் உடல், பொருள், ஆவி முழுவதும் உனக்கே சொந்தம். உனது அடியார்களே என் உறவினர். என் பொருளெல்லாம் உன் பணிக்கே” எனச் சபதம் செய்தார். ரகுநாதன் அதன்பின் முற்றிலும் புதுப்பிறவி எடுத்தது போல் ஆகிவிட்டான். இரப்போருக்கு இல்லையென்னாது அள்ளி அள்ளித்தானம் செய்தான். கோவில், குளம், நந்தவனம், கதா காலட்சேப மண்டபங்கள், வேத பாடசாலைகள், தத்துவ ஆராய்ச்சிக் கழகங்கள் என்று கட்டினான்.

ஊராரும், அவன் மனைவியும் மனம் மகிழ்ந்தனர். பண்டரீபுரத்தில் பஜனை செய்ய நாத பிரம்ம மடம் ஒன்றுகட்டுவித்தான். வட்டிக் கடையை மூடிவிட்டான். இறைவன் பாமாலைகளைப் பாடுவதே பிறவிப்பயன் என்று விரதம் கொண்டான். ரகுநாதராவின் புதல்வி ருக்மணி வளர்ந்து திருமணப் பருவமடைந் தாள். அவர் புதைத்துவைத்த நகைகளும், பணமும் தேய்ந்து கரைந்து உஞ்ச விருத்தி எடுத்துப் பசியைத் தணிக்கும் நிலை வந்தது.

“ரகுநாதனுக்கு அளவு என்பதே இல்லையே! முதலில் கஞ்சப் பிரபுவாய் இருந்தான். ஈயாத லோபித்தனம். அப்புறம் வாரி இறைத்தான். பக்தி, பஜனை என்று கடமையை மறக்கலாமா? வயதுப் பெண்ணுக்கு வாழ்க்கை அமைத்துக் கொடுக்க வேண்டாமா? பாவம் லட்சுமி... தவிக்கிறாள்” என்றனர் ஊரார்.

அந்தக்காலத்தில் பெண்கள் ருதுவாகுமுன்பே மணம் முடிப்பது வழக்கம். பண்டரிநாதர் முதிய அந்தணன் வடிவில் வந்து "ரகுநாதா... உன் குடும்பத்தோடு ரொம்ப நாள் பழகினவன் என்ற முறையில் சொல்லுகிறேன். உன் தந்தை என் சொல்லைத் தட்டாதவர். நான் குருவாயூர் போகும் போது நீ அறியாச் சிறுவன். ஆதலால் என்னை அடையாளம் தெரியவில்லை. சொத்தை எல்லாம் வாரி இறைத்து விட்டாயாம்... கலியாண வயதில் பெண் இருக்கிறாளாமே!" என்று வினவினார்.

ரகுநாதன் "ஸ்வாமி, ஒருகாலத்தில் பணம், வட்டி என்று பேயாய் அலைந்தவன் தான். உலகில் நிரந்தரமானது அவன் திருவடிகள் ஒன்றே.



எல்லாம் அவனுக்கே பாரம். அவன் எப்போது என் மகளுக்குத் திருமணம் முடிக்கவேண்டுமென்று நினைக்கிறானோ அப்போது நடக்கும். நம் கையில் என்ன இருக்கிறது?" என்று அமைதியாகக் கூறினார். பிறகு மகளை அழைத்துக் கிழவரை" நமஸ்கரிக்கச் சொன்னார்.

கிழவர் "அப்பா, ரகுநாதா.... ருக்மணியின் அழகுக்கும், அடக்கத்துக் கும் ஏற்ற வரன் கிஷ்கிந்தாபுரியில் உள்ள கேசவராவின் மகன் தான். உனக்கு சம்மதம் என்றால் நான் பேசி முடித்து விடுகிறேன்" எள்றார்.

ரகுநாதன் "அந்தப் பரந்தாமனே உங்கள் மனதில் புகுந்து இந்த முடிவைச் செய்திருக்க வேண்டும். அவனன்றி அணுவும் அசையுமோ!" என்று புன்னகையுடன் கூறிவிட்டு பஜனையில் ஈடுபட்டு விட்டார். கிழவர் கிஷ்கிந்தாபுரி சென்று கேசவராவைப் பார்த்தார்.

"ஐயா, உங்கள் குடும்பத்துக்கு ஏற்ற மருமகள் வேமன்னபுரியில் இருக்கும் ரகுநாதராவின் மகள் ருக்மணிபாய் தான்! அடாடா... என்ன அழகு.. என்னபாட்டு... என்ன காரியம்... என்ன ஒழுக்கம்! ரகுநாதனும் உங்களைப் போலவே ஒரு காலத்தில் பணக்காரராய் இருந்தவர் தான்... எல்லாம் தரும கைங்கரியத்தில் செலவாகிவிட்டது. எனக்கோ புத்திர பாக்கியம் இல்லை. அந்தப் பெண்ணை சுவீகாரமாய் எடுத்துக்கொண்டு அருமையாய் வளர்த்து வருகிறேன். குழந்தை அதிர்ந்து ஒரு வார்த்தை பேசமாட்டாள்.

குனிந்த தலை நிமிரமாட்டாள். என்னிடம் இருக்கும் பணத்தை வைத்து ஊரார் மூக்கில் விரல் வைக்கும் அளவு செழிப்பாய் கலியாணம் பண்ணித் தருகிறேன்" என்றார். கேசவராவ் "பெரியவர்... வலியவந்து சுப சமாசாரம் சொல்கிறீர்கள்... பெண்பார்க்க வேமன்னபுரிக்கு எப்போது புறப்படலாம்?" என்று கேட்டார்.

"நாலுநாளில் ஒரு முகூர்த்தம் இருக்கிறது. அது தப்பினால் பீடை மாசம் வந்துவிடும்... சுவீகாரத்தகப்பன் நான். என் வார்த்தையில் நம்பிக்கை இருந்தால் இப்போதே பாக்கு வெற்றிலை மாற்றிக்கொள் ளலாம். நூலளவு சீர் வரிசை குறைந்தாலும் ஏன் என்று கேளும்" சவடாலாகச் சொன்னார் முதியவர். பகவானின் வார்த்தை ஜாலத்தில் மயங்கி, கேசவராவ் பாக்கு, வெற்றிலை மாற்றிக் கொண்டார். "எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டேன். உடனே புறப்படுங்கள்" என்று

சொல்லவும், ரகுநாதன், லட்சுமி, ருக்மிணி உறவினர், ஊரார் அனைவரும் திகைத்தனர். ரகுநாதன் "எல்லாம் பண்டரிநாதன் கருணை" என்றபடி பாகவத கோஷ்டிகளோடு பஜனை செய்து கொண்டே கிஷ்கிந்தாபுரி நோக்கிப் புறப்பட்டார்.

கிழவர் "சபாஷ், பேஷ், பலே, ஆகா" என்றபடி பாடலை ரசித்துக் கொண்டே உடன்வந்தார். 'தம்பூரா, வீணை, ஜால்ரா, சிப்ளா, மிருதங்கம்' போன்ற வாத்தியங்களின் இன்னிசையும், ரகுநாதன், ருக்மணியின் தேனான குரலும் ஊராரை மெய்மறக்கச் செய்தன.

"ஆமாம், உங்கள் பெயரென்ன?" என்று ஒரு அன்பர் கேட்டதற்கு 'நான் ரகுநாததாஸன்' என்றார் கிழவர். ஐந்து நாட்கள் ஊஞ்சல், நலங்கு, ஊர்வலம் என்று விவாகம் கோலாகலமாக நடந்தது. இருந்த கடமையும் முடிந்தது. ரகுநாதன் லட்சுமியுடன் க்ஷேத்திரங்கள் தோறும் பஜனை செய்து கொண்டே சென்று பகவானை தரிசித்தார். திருப்பதிப் படிகளில் பாடிக் கொண்டே ஏறிவந்தார் ரகுநாதன். பாடலின் கருத்தும், இனிமையும் கேட்பவரை ஈர்த்தது.

"ஐயா, தாங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள்?" என்று கேட்டாள் ஒரு நாட்டிய நங்கை. அவள் பெயர் புரந்தரி. கோவிலில் நடனமாடுபவள். "அம்மா, எனது ஊர் பண்டரிக்கு அருகிலுள்ள வேமன்னபுரி. ஏழுமலையானை தரிசிக்க ஆசை... புறப்பட்டு வந்தேன். பெற்றோர் வைத்த பெயர் ரகுநாதன். இவள் என் மனைவி லக்ஷ்மிபாய்" என விளக்கமாகக் கூறினார் ரகுநாதன்.

"ஸ்வாமி... தாங்கள் இவ்வூரிலிருக்குமட்டும் தங்களுக்கு உணவிடும் பாக்கியத்தை அடியாளுக்குத் தரவேண்டும். துளிக்குறையும் நேராதபடி காப்பேன்" என்று பணிவுடன் வேண்டினாள் புரந்தரி.

ரகுநாதன் ஒப்புக் கொண்டார். தெய்வ தரிசனமும், பஜனையுமாக சிலநாட்கள் கழிந்தன. ஒரு நாள் நள்ளிரவு. காலில் சதங்கையும், கையில் வீணையுமாகப் புறப்பட்ட புரந்தரியை வழிமறித்தார் ரகுநாதன்.

"தாயே, மன்னிக்க வேண்டும். உங்களைமறிக்க எனக்கு உரிமை இல்லை. ஆயினும் சந்தேகம் என்னைப் புழுவாக அரிக்கின்றது. தினந்தோறும் நாட்டிய உடை அணிந்து எங்கோ சென்று, ரொம்ப நேரம்

கழித்துத் திரும்பி வருகின்றீர்களே? தாங்கள் போகுமிடம் எங்கே? தாங்கள் தூய வாழ்க்கை வாழ்பவர் என்று அனைவரும் கூறுகின்றனர். அப்படியாயின் இருட்டில் நடனமாட எங்கு செல்கின்றீர்கள்?" எனக் கேட்டார்.

புரந்தரி சற்றே யோசித்தாள். பிறகு "நீங்களும் பெருமாளின் பக்தர்தானே..! உங்கள் மகளின் மணம் முடிக்க பகவானே அலைந்திருக் கிறார்! உங்களோடு கட்டிப்பிடித்துச் சண்டையும் போட்டிருக்கிறார்! அப்படி இருக்க உங்களிடம் மறைப்பானேன்! இறைவன் எனக்காக கோவில் கதவைத் திறந்து வைத்திருப்பார். முதலில் பகவான் வீணை மீட்டுவார். நான் ஆடுவேன். பின்னர் நான் வீணை வாசிக்க கண்ணன் நடனமாடுவார். இதுநாள் வரை வேறு எவருக்கும் தெரியாது. இன்று உங்களிடம் சொல்லி இருக்கிறேன்" என்றாள்.

"அம்மணி, என் மனைவிக்குத் தெய்வ தரிசனம் கிடைத்தது. பகவான் என் மகளின் மணமுடிக்க வந்தாலும் அவர் மறைந்த பிறகே இன்னார் என உணர்ந்து கொண்டேன். பகவானைப் பகவானாகவே, அதிலும் நர்த்தன ரூபமாய் காண ஆசைப்படுகிறேன். நீங்கள் மனது வைத்தால் எனக்கு அந்த பாக்கியம் கிடைக்கும். கட்டாயம் என்னையும் கூட அழைத்துச் செல்ல வேண்டும்" என கெஞ்சிக் கேட்டுக் கொண்டார் ரகுநாதன்.

"பாகவத சிரோன்மணி.. நீங்கள் என்னிடம் யாசிப்பதா? என்ன தர்ம சங்கடமான நிலைமை...! சரி... அழைத்துப் போகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. கோவில் வந்ததும் மறைந்து இருந்துதான் பார்க்கலாம்" என்றாள். ரகுநாதன் ஒப்புக் கொண்டு உடன் சென்றார். கோவில் வந்ததும் ஒரு பெரிய தூண் மறைவில் ஒளிந்து கொண்டார். முதலில் புரந்தரி வீணை இசைத்துப் பாடினாள். அற்புதமான இசை. கண்ணன் அழகாக நடனம் ஆடினான். ரகுநாதர் சங்கீத ரஸிகர். தன்னை மறந்து தாளம் போட்டார். பரந்தாமன் ரகுநாதரை வெளிவரச் செய்ய நினைத்தார். மௌனமாக புரந்தரிக்கு ஜாடைகாட்டி ஆட்டத்தை நிறுத்திக் கொண்டு வீணை இசைத்தார். வேண்டுமென்றே தப்பான இசை, அபஸ்வரமாக ஒலித்தது. தாளம் தப்புவதைக் கண்ட ரகுநாதன் வெகுண்டார். "ஏ, புரந்தரி! இதென்ன தப்புத் தப்பாய வாசித்துக் கொண்டு... போதும் நிறுத்து. தலை வெடித்து விடும் போல் இருக்கிறதே" என்று கத்தியபடி வெளிவந்தார்.

ஜகந்நாதனின் திருக்கோலம் கண்டு உள்ளம் புளகித்துப் போனார். நெடுஞ்சாண் கிடையாக பகவான் பாதங்களில் விழுந்து பலவாறு ஸ்தோத்தரித்தார். பரந்தாமனும் அவரை ஆசிர்வதித்து மறைந்தார். புரந்தரியிடம் ஞான சர்ச்சைகள், வேதாந்த விளக்கங்கள் செய்து, அவளால் தெய்வதரிசனம் பெற்றதால் ஜனங்கள் ரகுநாதனைப் புரந்தரதாசர் என்றே அழைத்து வரலாயினர்.

கொஞ்ச காலம் திருப்பதியில் கழித்த பின்பு மேலும் பல ஸ்தலங்களைத் தரிசித்துக் கொண்டு வேமன்னபுரியை அடைந்தார் புரந்தரதாசர். லட்சுமி புடவைக் கிழிசலைத் தைத்துக்கொண்டிருந்தாள். "வீட்டிலே யாரு? ரகுநாதராவ் வீடு இதுதானே?" என்று கேட்டபடி வந்தார் ஒருவர். "ஆமாம்... நீங்க எங்கிருந்து வரேள்? என்ன வேணும்?" என்று கேட்டாள் லக்ஷ்மி.

"நான் கிஷ்கிந்தாபுரியிலேயிருந்து வரேன். ரகுநாதராவ் புத்திரி ருது ஸ்நாநம் ஆகி இருக்கா. சோபன சமாசாரம் சொல்லிவிட்டு வரும்படி கேசவராவ் சொல்லி அனுப்பினார். நீங்க ருக்மணியின் தாயார் லட்சுமிபாய் தானே? குழந்தைக்கு சாந்தி முகூர்த்தம் நடத்தணும். கலியாணத்தைக் குறையில்லாம நடத்தின மாதிரி இதையும் சீர் செனத்தியோட செய்யணுங்கறது கேசவராவ் ஆசை. ஆமாம்... நான் பேசிண்டே இருக்கேன்... ரகுநாதராவ் எங்கேன்னே சொல்லலியே?" என்றார் வந்தவர்.

கையில் பணமில்லாத கஷ்டம் கண்களில் நீரை வரவழைத்தது. பார்வை மறைக்கவே 'நறுக்'கென்று விரலில் ஊசி குத்திவிட்டது. 'குபுகுபு'வென்று ரத்தம் பெருகி வலி எடுத்தது. எல்லா எரிச்சலும் சேர்ந்து கொள்ளவே லக்ஷ்மி "ருக்மணியின் தகப்பனார் சிப்ளாக்கட்டையைத் தூக்கிக் கொண்டு பண்டரிநாதனுக்கு அழப்போயிருக்கிறார் என்று சொல்லும்" என்றாள்.

அதை அப்படியே போய்ச் சொன்னார் கேசவராவின் உறவினர். கேசவராவ் ஏமாந்து போய்விட்டோமே என்ற அதிர்ச்சியில் கல்லாய் சமைந்து போனார். எவ்வளவு நேரம் அப்படி இருந்தாரோ... தெரிய வில்லை... அட்டகாசமான குரல்... முன்னே வந்த பெரியவர் "கேசவராவ், ருக்மணி பெரிய மனுஷி ஆகி இருக்காளாமே! சோபன விசேஷத்துக்கு

என்னெல்லாம் வேணும்? புடவை, வேஷ்டி நகை, பட்சணம் எல்லாம் லிஸ்டு போட்டு [redacted]வச்சிருக்கீரா? என்னபார்க்கிறீர்... வேஷ்டி கிழிசலா யிருக்கேன்னா? என்ன பண்றது... பெண்குழந்தைக்குப் பொறுப்பேத் துண்டவன் ஆடம்பரமா இருக்க முடியுமா?" மடை உடைத்துக் கொண்ட வெள்ளம் போல் கடகடவென்று பேசினார்.

அதைப் போலவே திருமணம் நடந்ததற்குத் துளியும் பங்கமில்லாமல் சாந்தி முகூர்த்தமும் நடந்தேறியது. அந்த விசேஷத்தில் சாப்பிட்ட ஒரு வேமன்னபுரிக்காரர் ரகுநாதனிடம் வந்து "பகவானைப் பாடிண்டே நீ இருந்தாலும் அந்த 'ரகுநாததாசர்' உன் பொறுப்பை விமரிசையா செய்துட்டார். என்ன நேர்த்தி, என்ன கவனம், அடாடாடா..." என்று புகழ்ந்தார்.

"கண்ணா, என்பொருட்டு மறுபடி சிரமப்பட்டாயா? என்னை மன்னித்து விடு" என உருக்கமாக இசை வடிவில் வேண்டினார் புரந்தரதாசர். லட்சுமியும் பகவானின் அருளை எண்ணி ஆனந்தக் கண்ணீர் விட்டாள்.

புரந்தரதாசருக்குப் பல சிஷ்யர்கள். அதில் சிலருக்கு ராகம் வர வில்லை. சிலருக்கு குரலே சரியில்லை. சிலருக்குப் 'பாவம்' வரவில்லை. இதையெல்லாம் பார்க்கும் போது அவருக்கு, தனது இசை மீது, குரல் மீது, ஞானத்தின் மீது கர்வம் வந்தது. தான் என்ற அகந்தை உண்டாயிற்று.

"அடேய், அதற்கெல்லாம் ஒழுக்கம் வேணுமடா... பூர்வ ஜென்மத்தில் புண்ணியம் செய்திருக்க வேண்டுமடா... ஞான சூன்யங்களா... பாட வேணுமென்ற ஆசைப்பட்டால் ஆயிற்றா...? விடியற்காலையில் எழுந்து சாதகம் செய்ய வேண்டும்... சாப்பாடும், தூக்கமும் தான் வாழ்க்கை என்றிருக்கும் மட சாம்பிராணிகளுக்கு உஞ்சவிருத்திக்குக் கூட பாட வராது... பக்தி மனசில் நிறைந்திருக்க வேண்டாமோ?" இப்படி வார்த்தை என்ற சூட்டுக்கோலால் சீடர் நெஞ்சங்களைப் புண்ணாக்கினார்.

அவ்வளவுதான்...! மறுநாள் அவர் நா அசைத்துப் பாடமுடியவில்லை. பேசமுடியவில்லை. ஒரு சொல் எழும்பவில்லை. பகவான் சன்னதி சென்று, தன் குற்றம் உணர்ந்து மௌனமாய் கண்ணீர் விட்ட பிறகுதான் பாட முடிந்தது. அப்பண்ணா என்று ஒரு சீடன். சர்க்கரைப் பொங்கலுக்கு நெய்வாங்கி வர அனுப்பினார். அரசனின் வைரப்பதக்கம் ஒன்றைக்

காணோம் என சோதனையிட்ட வரிசையில் அப்பண்ணாவும் மாட்டிக் கொண்டான். நேரமாகிவிட்டதே, குருநாதர் கோபிப்பாரே என அப்பண்ணா தவித்தான். சோதனை முடிந்து அப்பண்ணா நெய்யோடு வர, இங்கே அபிஷேகம், பூஜை, நிவேதனம் எல்லாம் முடிந்து தம்பூராவை மீட்டிக் கொண்டிருந்தார் புரந்தரதாசர்.

அப்பண்ணா பயத்தோடு அவர் அருகில் சென்று நெய்க்குடத்தை வைத்து மன்னிப்புக் கேட்டான். தாசர் திகைத்தார். 'அப்போது அப்பண்ணா உருவத்தில் நெய்யோடு வந்தது யார்?' என்று. "பரந்தாமா... அப்பண்ணாவைத் தண்டிப்பேன் என்று எனக்குத் தொண்டு செய்ய வந்தாயோ? உனக்கு அபசாரம் செய்தாலாவது பொறுத்துக் கொள்வாய். உன் தொண்டருக்குக் குற்றம் இழைத்தால் தாங்கமாட்டாய் என்று என்னை ஊமையாக்கிய போதே நான் புரிந்து கொண்டேனே" எனப் புலம்பி அழுதார்.



கொஞ்ச நாள்தான்... பழைய சொக்கனே சொக்கன் என்று ஆகிவிட்டார் தாசர். ஒரு நாள் அப்பண்ணாவைக் கூப்பிட்டபடி இருந்தார் தாசர். நேரமோ இரவு. அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான் அப்பண்ணா. பண்டரி நாதனே அப்பண்ணா வடிவில் கெண்டி நீரைக் கொண்டு போய் கொடுத்தார்.

"ஏன் இத்தனை நேரம்?" என்று கோபித்த தாசர் கெண்டியால் அப்பண்ணா வடிவில் இருந்த பகவான் தலையில் அடிக்க, பகவான் ஓடிவிட்டார். நெற்றி புடைத்து இரத்தம் வழிந்தது.

மறுநாள் காலை சன்னதியைத் திறந்து பார்த்த அர்ச்சகர் திடுக்கிட்டு பயந்து அரசனிடம் சென்று முறையிட்டார். அரசர் தன் பரிவாரங்களோடு கோவிலில் சென்று பார்த்தார். அப்போது தாசரும் கோவிலுக்கு வந்திருந்தார். சேதிகேட்டு மக்கள் கூட்டம் அலைமோதியது.

"என்ன உற்பாதம் விளையப் போகின்றதோ?" என மக்கள் கவலையுடன் பேசிக் கொண்டனர். தாசர் அன்போடு பகவானை வேண்டி ஒரு இனிய பாடலை உருக்கமாகப் பாடினார். பிறகு "பண்டரீநாதா, உமக்கு இத்தீங்கு விளைவித்தவனை கட்டி வைத்து கசையடி கொடுக்க வைக்க உன்னால் ஆகாதா? அதைவிட்டு என் போன்ற பக்தர்களின் மனது துன்பமுற இதென்ன கோலம்?" எனப் பரிவுடன் வேண்டினார். மறு நிமிஷமே அந்த அற்புதம் நடந்தது. இறைவன் நெற்றியில் பட்ட காயம் மறைந்து உதிரப் பெருக்கு வருவது நின்றது. எல்லோரும் தாசரைப் புகழ்ந்து கொண்டே மகிழ்ச்சியுடன் பிரிந்தனர். மன்னரும் பக்தரைக் கொண்டாடினான்.

பண்டரீபுரத்தில் ஒரு நடன மங்கை. அவள் பெயர் லீலாவதி. நிரம்ப அழகி. பகவான் அவள் இல்லத்திற்குத் தாசரின் வடிவில் சென்றான். அவள் திடுக்கிட்டாள். "ஸ்வாமீ, தாங்கள் எத்தனை உயர்ந்தவர்? தங்களின் பேரென்ன? புகழென்ன? பக்தியென்ன? நீங்கள் இங்கே வந்ததை எவரேனும் கண்டால் தங்களைக் கேவலாகப் பேசமாட்டார்களா? சீக்கிரம், யாரும் பார்க்கு முன் போய்விடுங்கள்" எனப் பதறினாள்.

தாசர் வடிவிலிருந்த பகவான் புன்னகையுடன், "பெண்ணே, என்பாடலோடு உன் ஆடலையும் இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டு மென்பது எனது வெகு நாளைய ஆசை. உன் ஆடல் அழகில் என்

மனதைப் பறி கொடுத்திருக்கிறேன். ஒரே ஒரு பாட்டுக்கு ஆடிவிடு; போய் விடுகிறேன்" என்றார்.

இவ்வளவு பெரிய மகான் கேட்கிறாரே என, தயக்கத்தோடு ஆடினாள் லீலாவதி. ஆடல் முடிந்ததும் கை தட்டி, கரகோஷம் செய்தார் பகவான்.

"லீலாவதி, தேவ மங்கையரும் நாணும் நாட்டியம்! அற்புத நளின பாவங்கள்... நடராஜர் அருள் பரிபூரணமாய் பெற்ற பாக்கியவதி நீ... மறுக்காமல் என் பரிசை ஏற்றுக் கொள்ள வேண்டும்" என அழகிய வேலைப்பாடுள்ள ஒரு ஜோடி தங்கவளையல்களைக் கொடுத்தார். 'அவர் போனால் சரி' என்று பரிசைப் பெற்றுக் கொண்டாள் ஆடலரசி. பரந்தாமன் விடை பெற்றுக் கொண்டார்.

மறுநாள் காலை சுவாமிக்கு அலங்காரம் செய்யும் போது தங்கவளையல்களைக் காணாமல் அரசனிடம் முறையிட்டார் அர்ச்சகர்.

அரசன் "கோவில் உடைமை எவரிடம் இருந்தாலும் உடனே கொண்டு வந்து தர வேண்டும். பின்னால் கண்டு பிடிக்கப்பட்டால் சிரச்சேதம் செய்யப் படும்" எனத் தமுக்குப் போடச் செய்தான்.

லீலாவதி வளையல்களை எடுத்துப் பார்த்தாள். கோவில் முத்திரை இருந்தது. அரசனிடம் சென்று நடந்ததைக் கூறி வளையல்களைக் கொடுத்தாள். அரசன் புரந்தரதாசரை வரவழைத்து பகவானின் வளையல்களைத் திருடியவருக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்" என்று புரந்தரரைக் கேட்க,. 'கட்டி வைத்துக் கசையடி கொடுக்கலாம்" என்றால் புரந்தரதாசர்.

லீலாவதியைக்காட்டித் 'தெரியுமா' என்று கேட்க, 'லீலாவதியைத் தான் பார்த்ததே இல்லை' என்று கூறினார் புரந்தரதாசர். "வந்தவர் தாசரே" என்பதற்கு சாட்சிகள் இருந்தன. முப்பது சவுக்கடிகள் கொடுக்கும்படி தீர்ப்பளித்தான் மன்னன்.

அடிகள் தாங்காமல் துடித்தார். கதறி அழுதார். 'உன்னைப் பாடியதன்றி நான் செய்த பாவம் என்ன' எனப் புலம்பினார்.

"அரசே, கதவு பூட்டியபடி இருக்கும் போது காப்பு எப்படிப் போயிருக்க முடியும் என யோசித்தாயா? தாசரே, தண்டனையை நீங்களேதான்

வரவழைத்துக் கொண்டீர்கள்... புரியவில்லையா? தூங்கும் சீடனுக்குப் பதில் கெண்டியில் தண்ணீர் கொண்டு வந்த என்னை மண்டையில் அடித்தீரே...! ஞாபகமிருக்கிறதா! திருடியவனைக் கட்டி வைத்துக் கசையடி கொடுக்க வேண்டும் என்ற தீர்ப்பளித்தவரும் நீரே! உமது வேண்டுதலே நிறைவேற்றப்பட்டது... உங்களது பெருமையை உலகமறியவே இந்நாடகம்... வேந்தே! தாசர் வடிவில் போய் லீலாவதியிடம் வளையல்களைக் கொடுத்தது நானே. புரந்தரா... தொண்டர் குலம் ஒன்றே... வித்யா கர்வத்தால் அவர்களை நிந்தித்ததும், தண்டித்ததுமே உனது வேதனைக்கு அஸ்திவாரம்" என்ற அசரீரிக்குரல் கேட்டது.

புரந்தரர் குற்றம் உணர்ந்தார். அரசன் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு தாசரை விடுதலை செய்தான். அனைவரும் அவர் காளடியில் பணிந்தனர்.

இனிய கருத்துள்ள பாடல்களை எழுதிக் குவித்தார் புரந்தரதாசர். 'தாஸர்வாள் பதம்' என்று உலகம் போற்றும் கவிதை ஆரங்கள் அவை. எண்ணற்ற சீடர்களை உருவாக்கினார். அவர்களிடம் அன்போடு நடந்து கொண்டார்.

முடிவில் பண்டரீநாதனோடு இரண்டறக் கலந்து விட்டார்.

15. ஸ்ரீ சேனா நாவிதர்

உத்தரப் பிரதேசத்தில் அவந்திபுரம் என்ற ஊர். அதை ஆண்ட அரசன் நவாப். அவந்திபுர அரண்மனை நாவிதரின் பெயர் சேனா. அவர் மிகுந்த தெய்வபக்தி உள்ளவர்.

ஒரு நாள் காலை அரசன் சேனாவை உடனே அழைத்து வரும்படி ஆட்களை அனுப்பினான். அப்போது சேனா பூஜையில் மெய்மறந்து இருந்தான். ஆதலால் சேனாவின் மனைவி "சேனா வீட்டில் இல்லை" என்று சொல்லி அனுப்பிவிட்டாள். இப்படியே மூன்று தடவை நடந்துவிட்டது. சேனாவின் மீது பொறாமை கொண்ட அவரது சொந்தக்காரன் ஒருவன் மன்னனிடம், "வேந்தே, சேனா வீட்டிலிருந்து கொண்டே இல்லையென்று சொல்கிறான். பூஜை செய்கிறானாம்.

பாதியில் எழுந்தால் பங்கப்பட்டு விடுமாம். இவன் உங்களை விட உயர்ந்தவனா பக்தியில்? பகவானா இவனுக்குப் படியளக்கிறார்? அரண்மனைச் சேவகம்... அடிவயிறு காயாமல் இருக்கிறது. என்னைப் போல் ஆசாமிக்கு இந்த உத்யோகம் கிடைத்தால் கூப்பிட்ட வேளைக்கு நாயாய் ஓடிவருவேன். தாசனாய் காலடியில் கிடப்பேன். அவன் திமிருக்கு தக்க தண்டனை கொடுக்காவிட்டால் உங்களை இன்னும் அலட்சியம் செய்வான்" என்று கோள் சொல்லிக் கொண்டே இருந்தான்.

அரசன் கோபம் பொங்க சேவகர்களைக் கூப்பிட்டு "அடேய், அந்த சேனா வீட்டிலிருந்து கொண்டே இல்லையென்கிறானாம்... நீங்கள் வீட்டினுள் புகுந்து, சேனாவின் கை கால்களைக் கட்டி, கடலில் எறிந்து விட்டு வாருங்கள்" என்று உத்தரவிட்டான். அதே சமயம் பெட்டியும், கையுமாக சேனாவின் வடிவத்தில் அங்கு வந்தார் பண்டரிநாதன். சேனாரூபத்தில் பகவானைப் பார்த்ததும் அரசன் கோபம் பஞ்சாய் பற்ந்தது. "சரி, வந்து க்ஷவரம் செய்ய ஆரம்பி" என்றான். பகவான் கைபட்டதும் பரவசமானான் மன்னன். வானில் பறப்பது போல் மகிழ்ச்சி.

'சேனா கர்வமாய் இருப்பதில் அர்த்தமிருக்கிறது. இத்தனை சுகம் இருக்கிறதே இவன் கையில்', என மன்னன் வியந்தான். க்ஷவரம் முடிந்தது. ஏவலர் பொற்கிண்ணத்தில் வாசனைத் தைலம் கொண்டு வந்து வைத்தனர். தொண்டனுக்காக பாண்டுரங்கன் நவாபுக்கு எண்ணை தேய்க்கலானான். குனிந்து கொண்டிருந்த நவாபுக்கு எண்ணைக் கிண்ணத்தில் சேனாவின் உருவம் தெரிந்தது. எப்படி?

சங்கு, சக்கர, கிரீட, குண்டல அலங்காரத்தோடு நாரயணனாக... அரசன் திக்பிரமித்து கல்லாய் சமைந்திருந்தான். வெகு நேரமாயிற்று, அமைச்சர்கள் கையைப் பிசைந்தனர்.

"என்ன இது... இன்று இத்தனை நேரம்? அரச அலுவல்கள் காத்துக் கிடக்கின்றன... வாசனைப் பொடியோடு நீராட்டும் ஏவலர் நெடுநேரமாக நிற்கின்றனர். உணவு கொள்ளும் வேளையும் தாண்டி விட்டதே' எனத் தவித்தபடி மன்னருக்கு நினைவூட்டினர்.

அரசன் பகவான் உருவத்தில் நிற்கும் சேனாவிடம் "உமது கரம் பட்டதுமே நான் என்னை மறந்தேன். நீங்கள் என்னை விட்டு ஒரு விநாடியும் இனி பிரியக் கூடாது. இதோ ஒரு நிமிஷத்தில் குளித்துவிட்டு

வந்து விடுகிறேன். இதை வைத்துக் கொள்ளுங்கள்" என்றபடி ஒரு கைநிறைய பொற்காசுகளை அள்ளிக் கொடுத்து விட்டுப் போனான். பகவான் நேராக சேனாவின் வீடு சென்று அவர் பெட்டியில் பொற் காசுகளை வைத்துவிட்டு மறைந்து விட்டார்.

அரசன் நீராடி விட்டு வந்து பார்த்தான். நாவிதரைக் காணாமல் துடித்தான். 'இதோ வந்து விடுகிறேன் என்று சொல்லியும் போய் விட்டாரே' என தவித்தான். சேவகர்களை அழைத்து "சேனாவை உடனே கையோடு கூட்டி வாருங்கள். அவரைப் பார்த்தாலன்றி சாப்பிட மாட்டேன்" என்று சொல்லி அனுப்பினார்.

மந்திரி பிரதானிகளுக்கு ஒரே வியப்பாக இருந்தது. "கேவலம்... அவன் நாவிதன். அவன் வேலை முடிந்து போனான். அரசன் கௌரவமென்ன. சேனாவுக்காகத்துடிப்பதென்ன? அவர் இவர் என்ற மரியாதைச் சொல் வேறு... பொற்காசுகளை அள்ளித்தரும் காரணமும் புரியவில்லை... இதென்ன குழப்பம்?" எனப் பலவாறு பேசிக் கொண்டனர். சேவகர்கள் சேனா வீட்டிற்குச் சென்ற போது சேனா நாவிதர் அப்போது தான் பூஜை முடிந்து எழுந்தார். சேவகர்கள் அரசன் கையோடு அழைத்து வரச் சொன்னதாகக் கூறவும், மனைவி முன்பே அரசன் ஆள் அனுப்பியதைச் சென்னாள்.

'கூப்பிட்டவுடன் என் வரவில்லை? அத்தனை கர்வமா உனக்கு என தண்டிக்கப் போகிறானோ... தண்டிக்கட்டும். அந்த அரசனையும் படைத்தவன் ஆண்டவன். அவனன்றி அணுவும் அசையாது. நம் தலையில் எழுதியிருப்பதை இனி மாற்றி எழுதப் போவதில்லை. நடப்பது நடந்தே தீரும்...' இப்படிப் பலவும் எண்ணியவர் பெட்டியுடன் அரண்மனை அடைந்தார். சேனாவைக் கண்டதும் மன்னன் சிம்மாசனத்திலிருந்து எழுந்து வந்து கால்களில் விழுந்து வணங்கினான்.

"ஸ்வாமி, இதுநாள்வரை தங்களை நாவிதராக எண்ணி வேலை வாங்கிய என்னை மன்னிக்க வேண்டும். காலையில் கண்ட அற்புதக் காட்சியை மறுபடி காட்டி அருள வேண்டும்" எனப் பணிவுடன் கூறி ஒரு கிண்ணத்தில் சுத்தமான தைலம் கொண்டு வரச் சொன்னான். ஏவலர் எண்ணை கொணர்ந்து வைத்தனர். எண்ணையில் பார்த்த அரசனுக்கு எதுவும் தெரியவில்லை. சேனாவுக்கு எதுவுமே புரியவில்லை. இதென்ன

திடீர் மரியாதை? காலையில் மன்னர் மனதை மாற்றும்படி என்ன காட்சி தென்பட்டிருக்கும்? மெதுவாக மன்னரிடம் விசாரித்தார் நாவிதர்.மன்னன் புலம்பியபடியே கூறியதிலிருந்து ஒருவாறு புரிந்து கொண்டார் சேனா.

"நான் காலையிலிருந்து இப்போது தான் பூஜை முடிந்து வெளியே வந்திருக்கிறேன். அப்படியானால் மன்னனுக்கு க்ஷவரம் செய்ததும், எண்ணை தேய்த்ததும் நானாக எப்படி இருக்க முடியும்? பாண்டு ரங்கா, பரமதயாளா... எனக்கு தண்டனை கிடைக்கக் கூடாதென்று அடைப்பப் பெட்டி தூக்கி வந்தாயோ? உனக்குக் கோடிப்பேர் சேவை செய்யக் காத்திருக்கும் போது எனக்காக மன்னனுக்கு எண்ணை தேய்த்த னையா?" இப்படிப் பலவாறு கதறிய பக்தர், மூர்ச்சையாகி கீழே விழுந்தார்.

அரசன் அப்போது தான் உண்மையை ஒருவாறு புரிந்து கொண்டான். நாவிதரை மூர்ச்சை தெளிவிக்கச் செய்தான். குடிக்கப் பால் கொண்டு வந்து கொடுக்கச் சொன்னான். மயக்கம் தெளிந்து எழுந்த சேனாவிடம்,

"ஸ்வாமி, தாங்கள் புண்ணியவான். உங்களுக்காக இறைவன் அடைப்பம் தூக்குகிறான் என்றால் உங்களை எத்தனை உயர்வாக அவன் நினைத்திருக்க வேண்டும். இன்று முதல் நீங்களே என் குரு. எனக்கு உபதேசம் செய்ய வேண்டும். உங்களால் அல்லவா பகவான் தரிசனம் எனக்குக் கிடைத்தது...!" எனப் பலவாறு போற்றினான்.

சேனா "வேந்தே, பகவானை தரிசித்த நீரே பாக்கியவான். உங்களை வணங்கினாலே பாண்டுரங்கனை வணங்கியது போல" என்று சொல்லி அரசனை நமஸ்கரிக்க, அடைப்பத்திலிருந்து பொற்காசுகள் கீழே சிதறின. "என் பண்டரிநாதர் சம்பாதித்த ஊதியமல்லவா" என்று சொல்லியபடியே எல்லாவற்றையும் பொறுக்கினார் சேனா. மந்திரி பிரதானிகளுக்கும் அப்போது தான் மன்னர், சேனாவுக்குக் கொடுத்த மரியாதைக்கு அர்த்தம் விளங்கியது.

அனைவரும் சேனாவைப் பணிந்தனர். அரசன் சேனாவை விட்டுப் பிரிவதே இல்லை. இருவரும் சேர்ந்தே பகவானை வழிபட்டு சேர்ந்தே பகவான் திருமலரடி சேர்ந்தனர்.

16. ஸ்ரீ சாங்க தேவர்

கங்கா நதிக்கரையில் உள்ள ஒரு சிறு கிராமத்தில் அந்தண குடும்பத்தில் பிறந்தவர் சாங்க தேவர். சாங்கன் என்றால் அழகன் என்று பொருள். சாங்கன் அத்தனை அழகாக இருந்தான். அழகு இருக்கு மிடத்தில் அறிவு இருக்காது என்பார்கள். அதைப் பொய்யாக்கினான் சாங்கன். சகல சாஸ்திரங்களையும் விரைவாகக் கற்றுக் கொண்டான். அறுபத்து நான்கு கலைகள், வேதாகமங்கள், பதினெட்டு புராணங்கள், அஷ்டாங்க யோகம், இப்படிப் படித்துக் கொண்டே போனான். கற்பதில் தீராத தாகம். என்ன படித்தாலும் இன்னும் இன்னும் என்ற ஆசை. கண்டோர் வியந்தனர். சித்திகளால் நினைத்தால் நினைத்த இடத்திற்குப் போனான். சொன்ன வாக்கு பலித்தது. அனைவரும் மரியாதையுடன் சாங்க தேவர் என அழைத்தனர்.

தினமும் இன்றைக்கு எமன் என்னிடம் வரக் கூடாது என்று சொல்லி விடுவான். பக்தியும், சக்தியமும் கடைபிடித்து வாழ்ந்ததால் எமதூதர் கண்ணில் பட்டால் ஆகாய மார்க்கமாய் பறந்து விடுவார் சாங்க தேவர். இப்படி எமனை ஏமாற்றியவருக்கு எத்தனை வயது தெரியுமா? ஆயிரத்து நானூறு வயது! இதையறிந்த பலர் சிஷ்யர்களானார்கள். தனக்குத் தெரிந்ததை ஒளிக்காமல் அனைத்துச் சீடர்களுக்கும் கற்றுக் கொடுத்தார். அனைவரும் ஆகாயத்தில் பறக்கும் வல்லமை பெற்றனர். மொத்தம் ஆயிரத்து நானூறு சீடர்கள் இருந்தனர்.

தபதி நதிக்கரையில் மடம் கட்டி வாழ்ந்து வந்தார். தினமும் பண்டரீபுரம் சென்று பகவானைத் தரிசிக்காமல் உணவருந்தமாட்டார். சீக்கிரமே இந்த வாழ்க்கை உப்புச் சப்பற்றதாய் சாங்க தேவருக்குத் தோன்றியது. "பகவானே! இத்தனை படித்தும், இத்தனை பேருக்கு கற்றுக் கொடுத்தும் மனதிற்கு நிம்மதியில்லையே! திருப்தியும், சந்தோஷமும் பெற என்ன செய்ய வேண்டும்?" என யோசித்தார். அப்போது அசரீரிக்குரல் ஒன்று "சாங்கதேவா... அளகாபுரியிலே மகாவிஷ்ணுவின் அம்சமான ஞானதேவ் இருக்கின்றான். அவனை நாடிச் சென்றால் நீ நினைத்தது கூடும்" என்ற குரல் கேட்டது.

உடனே சாங்க தேவர் ஒரு ஓலையை எடுத்தார். என்ன எழுதுவது... எப்படி அழைப்பது என்று புரியவில்லை...." ஞானதேவன் இளைஞன். சிறியவனை நமஸ்கரிப்பது முறையல்ல... ஞானாசிரியரை ஆசிர்வதிப்பதும் அபசாரம்... உங்களைக் காணவேண்டும், நிம்மதி வேண்டும் என மொட்டையாக எழுதலாமா... வேண்டாம். அவர் பரிபூரண பிரம்ம ஞானி என்று கூறியதே அசரீரி... புரிந்து கொள்ளட்டும்" என யோசித்து வெற்று ஓலையை ஒரு சீடனிடம் கொடுத்து ஞானேசுவரரிடம் அனுப்பி வைத்தார் சாங்க தேவர்.

அவன் வானவழியாக அளகாபுரி சென்று ஞானதேவரை வணங்கி ஓலையைக் கொடுத்தான். "சாங்க தேவர் நலமாயிருக்கின்றாரா?" என்று ஞானதேவர் கேட்கவும் திகைத்தான் சிஷ்யன். வெற்று ஓலையைப் பிரித்துப் பார்த்தவர் "ஆயிரத்து நானூறு வருஷங்கள் வாழ்ந்தும், அஷ்டமா சித்திகளைக் கற்றும், அறுபத்து நான்கு கலைகள் பயின்றும், என் வாழ்க்கை வெறுமையாக இருக்கின்றது என்று காட்ட வெற்று ஓலையை அனுப்பினாரோ?" என்று கூறிச் சிரித்தார்.

பின் ஓலையில் "சாங்க தேவ், காட்டிலிருக்கும் கொடிய விலங்குகளை வசப்படுத்தலாம். நீரிலும், நெருப்பிலும் நடக்கலாம்; கூடு விட்டு கூடு பாயலாம்; நெஞ்சிலே நிம்மதி பெற பாண்டுரங்கன் மலரடியே துணை... சித்து வித்தைகளால் ஆகாது;" என்ற கருத்துள்ள கவிதையை எழுதி சீடனிடம் கொடுத்தார்.

சீடன் சாங்க தேவரிடம் சென்று நடந்ததைக் கூறி ஓலையைக் கொடுத்தான். அதைப் படித்தவர் சற்று நேரம் மௌனமாக இருந்தார். பிறகு தன் சீடர்கள் அனைவரையும் அழைத்து "நெஞ்சுக்கு வஞ்சனையின்றி நான் கற்றதையெல்லாம் கற்பித்து விட்டேன். சித்து வித்தைகளை நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்துங்கள். இறைவனை மறவாது நேர்மையாக வாழுங்கள்... நான் சிலகாலம் தனியாயிருக்கப் போகிறேன்" எனக் கூறி அனைவரையும் அனுப்பி விட்டார்.

அனைவரும் விடை பெற்றுப் போனதும், தன் யோக பலத்தால் ஒரு புலியை சிருஷ்டித்து ஏறி அமர்ந்தார். சாட்டையாக ஒரு கருநாகத்தைக் கையிலேந்தினார். ஞானதேவரை சந்திக்கப் புறப்பட்டு விட்டார். இதைப் பார்த்தவர்கள் ஞானதேவரிடம் இந்த அதிசயத்தைக் கூறி வியந்தனர். உடனே ஞானேசுவரர் தன் இரு சகோதரர்களையும், சகோதரி முக்தாபாயையும் அழைத்துக் கொண்டு, ஒரு குட்டிச் சுவரின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டு "ஏ, குட்டிச்சுவரே, சாங்க தேவர் புலிமேல் வருகிறார். அவரை வரவேற்க வேண்டும் விரைந்து செல்" என்றார்.

என்ன அதிசயம்...! குட்டிச்சுவர் தெரு வழியே வேகமாகச் சென்றது. ஜனங்கள் இந்த அற்புதத்தைக் கண்டு பிரமித்து நின்றனர். குட்டிச்சுவரின் மேல் வரும் குருநாதரைக் கண்டு நாணினார் சாங்கதேவர். சாட்டையை வீசி எறிந்து விட்டு புலியினிருந்து கீழே குதித்தார்.

"குருதேவா... உயிருள்ள புலியில் ஏறி வருவதைப் பெருமை என்று நினைத்திருந்தேன்; குட்டிச்சுவரும் வாகனமாகலாம் என்பதை இன்றே புரிந்து கொண்டேன்" என்று சொல்லியபடி விழுந்து வணங்கினார். புலி மறைந்து போயிற்று.

நிவர்த்தி நாத், சோபான் தேவ், முக்தாபாய் மூவரும் சாங்க தேவருக்கு வசதி செய்து கொடுக்க ஆசிரமத்திற்குச் சென்றனர். குட்டிச் சுவரிலிருந்து கீழே குதித்த ஞானேசுவரர், சாங்க தேவரை வாரி எடுத்து

அணைத்துக் கொண்டு, அருகிலிருந்த ஆலமரத்து நிழலுக்கு அழைத்துச் சென்றார்.

அன்று சனகாதி முனிவர்களுக்கு சங்கரர் தட்சிணாமூர்த்தியாய் உபதேசித்தது போல், ஆயிரத்து நானூறு வயது முதியவருக்கு நாராயண அம்சமான ஞானதேவர் பகவத் தரிசனத்தை அடையும் வழியையும், அடைந்தபின் ஏற்படும் ஆனந்தத்தையும், மாயையை அகற்றும் வழிகளையும் உபதேசித்தார்.

சாங்க தேவருக்கு உபதேசித்த ஆலமரம் இன்றும் பசுமையாக இருக்கிறது. அதன் கீழ் நின்றாலே ஞானம் பெற்று மோட்சம் கிடைக்கும் என்று போகின்றவர்கள் சொல்கின்றனர்.

ஞானோபதேசம் ஆனதும் இருவரும் ஆசிரமம் சென்றனர். அங்கே முக்தாபாய் ஆடை மாற்றும் கோலம் கண்டு வாசலுக்குத் திரும்பினார் சாங்க தேவர். முக்தாபாய் சாங்க தேவரை அழைத்து "ஆண் உடல், பெண் உடல் என்ற பேதம் உம்மை விட்டு இன்னும் போகவில்லையே...! கூச்சம் ஏன்...? உடல் க்வர்ச்சி கண்ணுக்கு மறைந்து, உள்ளத்துக் கருணையும், அன்பும், பக்தியும், அறிவும் புலப்படுமேயானால் அதுதான் மெய் ஞானம்... காலத்தைக் கடந்தவர் பேதத்தைக் கடக்கவில்லையே" என அங்கலாய்த்தாள்.

சாங்கதேவர் முக்தாபாயின் பாதம் பணிந்து "பக்குவம் பெற்ற ஞானி என்பதை உணராமல் போனேன்" என வருந்தினார். ஞானேசுவரர் அவர் சிரசில் கை வைத்து "அனைவரிடத்திலும் தெய்வத்தைப் பார்க்கும் பக்குவம் வரட்டும்" என ஆசிர்வதித்தார்.

பிறகு, ஆசிரமத்தில் பாகவதக் கதை நடந்தது. 'சன்னியாசியை விட பாகவதர்களுக்கு இறைவன் தாசனாகிவிடுகிறான்' என்ற கருத்து சாங்க தேவர் மனதில் பதிந்தது. ஞானேசுவரரும் சாங்கதேவரை பாண்டுரங்க தரிசனம் பெற பண்டரீபுரம் போகப் பணித்தார். குரு உத்தரவின் பிரகாரம் பண்டரிபுரம் புறப்பட்டார் சாங்க தேவர். எப்படி? முன்பு போல் பறந்தா... அல்ல... தன்னை மறந்து ஹரிகீர்த்தனம் பாடிக் கொண்டே சென்றார். சந்திரபாகா நதிக்கரையில் ஒரு ஆசிரமம் அமைத்துக் கொண்டு உணவும், காற்றும் கூட இன்றி மூன்று நாள் பகவானைக் காண வேண்டி கடும் தவம் இருந்தார்.

மூன்றாம் நாள் ஜகந்நாதன் பிரசன்னமாகி சாங்கதேவரை அணைத்து, ஆசி அளித்து சந்திர பாகா நதிக்குள் அழைத்துச் சென்றார். அங்கே பாற்கடலில் பள்ளிகொண்டகோலத்தில் பகவான் ஸ்ரீதேவி, பூதேவியுடன் இருப்பதைக் கண்டு ஆனந்தித்தார் சாங்க தேவர்.

'உனக்கு என்ன வரம் வேண்டும்' என்று பகவான் கேட்க, "எத்தனை பிறவி எடுத்தாலும் உன்னை மறவாதிருக்கும் பேறு வேண்டும்" என வணங்கினார் பக்தர். அப்படியே வரமளித்தார் பரந்தாமன்.

பஜனை செய்வதும், பகவானை வழிபடுவதுமாயிருந்த சாங்க தேவர் முன் பகவான் தோன்றி "பக்தா, கோதாவரி நதி அருகே நல்லதோர் இடத்தில் இந்த விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்து பக்தியைப் பரப்புவாயாக" என ஆணையிட்டு ஒரு விக்கிரகத்தைத்தந்து மறைந்தார்.

பகவான் சொற்படி சாங்க தேவர் விக்கிரகத்துடன் புறப்பட்டார். வழியில் நாராயணபுரம் என்னும் ஊரில் பஜனைமடம் ஒன்று கட்டி பஜனை, கதை என்று பக்தியைப் பரவச் செய்தார். அவ்வூர் வாசிகளிடம் பிரியா விடை பெற்று கோதாவரி தீரம் வந்து சேர்ந்தார்.

வேத விதிப்படி நல்லதோர் இடத்தில் விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்தார். செல்வம் மிகுந்தோர் உதவியினால் அழகிய கோவிலும் கட்டி கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம் எல்லாம் ஆயிற்று. அன்னதானம் நடந்தது. அதைச் சுற்றி மக்கள் குடியேறினர். வர்த்தகஸ்தலங்கள் தோன்றின. கோவிலுக்கு கேசவப் பெருமாள் கோவில் என்றும், ஊருக்குப் புண்ணிய ஸ்தம்பம் என்றும் பெயர் வழங்கின. சாங்க தேவரை மக்கள் அன்புடன் கேசவ சாங்க தேவர் என அழைத்தனர். அங்கே பக்தி செழித்தது. சாங்கதேவரின் கதாகாலட்சேபத்தால் கேசவர் கோவிலின் பெருமை நெடுகப் பரவியது.

புண்ணிய ஸ்தம்பத்துக்கருகில் கலியாணபுரம் என்று ஒரு சிற்றூர். அங்கே ஒரு பணக்கார விதவை. தன் ஒரே மகன் சங்கரனுக்கு இளம் வயதிலேயே மண முடித்தாள். பெண்ணுக்கு வயது பன்னிரண்டு. மணமான ஒரு வருஷத்திற்குள் சங்கரன் இறந்துவிட்டான். குலம் நசித்து விட்டதே என மனம் வருந்திய விதவைத்தாய் மகனின் சாவை ஒட்டி நிறைய தானதருமங்கள் செய்தாள். பின் அவன் அஸ்தியைக் கங்கையில் கரைக்க எடுத்துக் கொண்டு மருமகளோடு புறப்பட்டாள். வழியில்

புண்ணியஸ்தம்பத்தில் இறங்கி கேசவப் பெருமாளைத் தரிசனம் செய்துவிட்டு சாங்கதேவரையும் தரிசிக்க வந்தாள்.

மாமியும், மருமகளும் ஆசாரியரை விழுந்து பணிந்தார்கள். மருமகளைப் பார்த்து சாங்கதேவர் "சிக்கிரமே நல்ல மகன் பிறப்பான்" என ஆசீர்வதித்தார்.

மாமியார் திடுக்கிட்டாள். "ஸ்வாமி, இவள் என் மருமகள். மகன் இறந்து நாற்பது நாட்களாகின்றன. நீங்கள் சொன்ன வாக்கு பலிக்கும் என ஊரார் சொல்கின்றனர். தங்கள் வாக்கு பொய்க்குமா?" என்று கேட்டாள்.

சாங்க தேவர் "அம்மா, எல்லாம் தெய்வச் செயல். கங்கையில் கரைக்க வைத்திருக்கும் அஸ்தியைக் கொண்டு வாருங்கள்" என்றவர் அஸ்தி வைத்திருந்த சொம்பில் தண்ணீர்விட்டார். அது ஊறித் தெளிந்ததும் அந்த நீரை ஒரு கிண்ணத்தில் எடுத்து இளம் பெண்ணை குடிக்கச் சொன்னார். "அம்மா, அடுத்த பத்தாவது மாதம் உனக்குப் பேரன் பிறப்பான்" எனக் கூறினார் சாங்கதேவர். அந்த ஊரிலேயே சொத்துக்களை வாங்கிக் கொண்டு தங்கி விட்டனர் மாமியாரும், மருமகளும். சாங்க தேவர் சொன்னபடி பத்தாவது மாதம் மருமகளுக்கு அழகிய ஆண்குழந்தை பிறந்தது. குழந்தைக்கு 'விட்டல்' எனப் பெயரிட்டார் குருதேவர்.

அன்னபிராசனம், காது குத்து எல்லாம் முறைப்படி நடந்தது. பாட்டி பேரனை ரொம்ப, செல்லமாக வளர்த்தாள். நல்ல நாளில் படிக்க வைத்தனர். பூணூல் போடும் வயது வந்தது. ஆனால் 'விதவை பெற்ற பிள்ளைக்கு நாங்கள் உபநயனம் செய்யமாட்டோம்" என்று சொல்லிவிட்டார்கள் அவ்வூர் வைதீகர்கள்.

சாங்க தேவர் "விட்டல் தெய்வப் பிரசாதம். மறுப்பது அபசாரமாகும்" என எவ்வளவோ எடுத்துச் சொன்னார். அவர்கள் கேட்பதாயில்லை. 'பண்டரி நாதன் சன்னதியிலேயே பூணூல் போட்டுக் கொள்ளலாம்' என அவர்களை அழைத்துக் கொண்டு பண்டரிபுரம் வந்தார் சாங்கதேவர். கோவிலுக்குச் சென்று பகவானை வணங்கிவிட்டு ஒரு பிராம்மணன் வீட்டில் தங்கினார்கள்.

அந்த ஊரிலும் எந்த அந்தணரும் உபநயனம் செய்து வைக்க மறுத்து விட்டனர். சாங்க தேவர் சொல்ல முடியாத துக்கத்துடன் பாண்டு ரங்கனிடம் சென்று முறையிட்டார். அப்போது ஒரு குரல், "விட்டலுக்கு உபநயனம் செய்துவைக்க நாளை நானே வருகிறேன். வருந்தாதே! கேலி பேசிய, மறுத்த அந்தணர்கள் அனைவரும் நாளை உபநயனச் சாப்பாட்டுக்கு, வருவார்கள்" என்று கேட்டது.

சாங்கதேவர் திருப்தியுடன் திரும்பினார். விதவைப் பெண்ணிடம் அசரீரிவாக்கைக் கூறி "நாளை ஐநூறு பேருக்கு விருந்து சமைத்து வையுங்கள்" எனக் கூறினார். மாமியாரும், மருமகளும் மகிழ்ச்சியுடன் வேண்டிய சாமான்களை வாங்கி வந்தனர். "நாளை விட்டலனுக்குப் பூணூல்; அவசியம் வந்து சாப்பிடவேண்டும்" என வைதீகர்களை அழைத்தார் சாங்க தேவர்.

'யார் போட்டு வைக்கிறார்கள்?' என்று சிலர் ஆர்வமாகக் கேட்க, "பகவான் கிருபையால் பிறந்தவனாதலால் பகவானே போட்டு வைப்பார்" என்று குதர்க்கவாதிகள் அதற்கு பதில் சொன்னார்கள்.

சாங்கதேவர் "ஆமாம். பாண்டுரங்கன்தான் போட்டு வைக்கிறார்" எனவும், எல்லாரும் நம்பாமல் கோவிலில் சென்று பார்த்தனர். என்ன ஆச்சரியம் கோவிலில் விக்கிரகத்தைக் காணோம்! எல்லோரும் சாங்கதேவர் தங்கியிருந்த இடத்திற்குச் சென்றனர். இதற்குள் விஷயம் பரவி ஒரு அந்தணர் குடும்பம் பாக்கியின்றி அனைவரும் சகல அலங்காரத்தோடு பூணூலைப் பார்க்கப் புறப்பட்டு வந்தனர்.

சப்தம் வருகிறது. வைதீக காரியங்கள் நடக்கின்றன. ஆனால் உருவம் தெரியவில்லை. எல்லோரும் மணைப் பலகையில் இருக்கும் பகவான் தங்கள் கண்களுக்கும் தெரிய வேண்டும் என்று பணிந்து கேட்க, சாங்க தேவர் அருளால் சங்கு சக்கர தாரியான நாராயணன் எல்லார் கண்ணுக்கும் தெரிந்தார். லக்ஷ்மி நீர் வார்க்க பிரம்மோபதேசம் கோலாகலமாக நடந்தது. அந்தண மங்கையர் நான், நீ என முந்திக் கொண்டு பிட்சை அரிசி போட்டனர். அந்தணர்கள் வேதம் சொல்லி ஆசீர்வதித்தனர். தங்கள் அறியாமையை மன்னிக்கும்படி பரந்தாமனை வேண்டினர்.

அதற்குள் சமையல் அறையைப் பார்த்து விட்டு வந்த சிலர் "பகவத் பிரசாதம் நாங்கள் எல்லோரும் சாப்பிடாமல் போகமாட்டோம். ஆனால் சமையலோ ஐநூறு பேர்தான் சாப்பிடலாம் போல இருக்கிறது. இருப்பதோ ஐயாயிரம் பேர்" எனசாங்க தேவரிடம் கேட்டனர்.

அவர் "ஐயாயிரம் பேரென்ன... அகில உலகமும் ஒன்று கூடி வந்தாலும் 'போதும், போதும்' என்கிற அளவு சாப்பாடு கிடைக்கும்... எல்லோரும் கட்டாயம் போஜனம் செய்து விட்டுத்தான் போக வேண்டும். உம்... உட்காருங்கள்" என்றார்.

பண்டரிநாதன் மகிமையால் அப்படியே நடந்தது கண்டு அனைவரும் வியந்தனர். சமைத்த பாத்திரங்களிலிருந்து எடுத்துப் பரிமாறிய பதார்த்தங்கள் குறைந்தால்தானே கவலைப்பட....! விருந்து முடிந்ததும் சிறப்பான பஜனை நடந்தது. பின் அனைவரும் சந்தனம், தாம்பூலம், தட்சணை பெற்று, விட்டலை ஆசீர்வதித்து விட்டு விடைபெற்றனர்.

விட்டலுக்குப் படிப்பு முடிந்ததும் நல்ல குடும்பத்துப் பெண்ணாகப் பார்த்து மணமுடித்துவிட்டு துவாரகைக்குப் புறப்பட்டார் சாங்க தேவர். வழியில் யாதவ பண்டிதர் சாங்க தேவரின் மகிமையைக் கேள்விப் பட்டிருந்ததால் அவருடன் துவாரகைக்குப் புறப்பட்டு விட்டார்: யாதவ பண்டிதரின் மனைவி ஏழுமாத கர்ப்பிணி. சொன்னால் உறவினர்கள் தடுத்து விடுவார்கள் என்று சொல்லாமலேயே புறப்பட்டு விட்டார் பண்டிதர். இரண்டு தினங்கள் கழிந்த பிறகே இது தெரிய வந்தது அவளுக்கு.

'ராமன் இருக்குமிடம் அயோத்தி' என்று அவளும் புறப்பட்டு விட்டாள். 'துவாரகை வெகு தூரத்தில் உள்ளது. காட்டு வழியில் கள்ளர் பயமுண்டு. கொடிய விலங்குகள் வரலாம். நடுவழியில் பிரசவ வலி யெடுத்தால் என்ன செய்ய முடியும்? பசி, தாகம், தூக்கம் இப்படி எத்தனையோ உபாதைகள் இருக்கின்றன" என்றெல்லாம் உறவினர் தடுத்துச் சொல்லியும் ஒன்றையும் பொருட்படுத்தாமல் பிடிவாதமாக "புருஷனில்லாத இடம் பாழ்; பாண்டுரங்கன் அருள் புரிவார்" எனப்புறப்பட்டு விட்டாள்.

கர்ப்பிணிப் பெண் ஆனதால் விரைந்து நடக்க முடியவில்லை. தங்கித் தங்கி போனதால் முன்னால் போனவர்களின் பாதையையும் விசாரிக்க வழியில்லை. ஒருநாள் அடர்ந்த காட்டு வழி நடக்கையில் அவளுக்கு

இடுப்பு வலி கண்டது. உதவிக்கு ஆளின்றி தவித்தாள். மார்கழி மாதத்துக்குளிர். கதிரவன் மறையும்நேரம். பலமான காற்று. லேசான தூறல் மழை... சிங்கத்தின் கர்ஜனையும், புலியின் உறுமலும் எங்கிருந்தோ கேட்டது. அசையவும் முடியாதவள் எங்கிருந்து ஓடுவாள்?

"துச்சாதனன் என்ற கொடிய மிருகத்திடமிருந்து பாஞ்சாலியைக் காத்தவனே! நம்பி வந்த சாங்க தேவரே... நினைத்த மாத்திரத்தில் பகவானைக் காண கூடிய நீர் எனக்காக பகவானிடம் ஒரு வார்த்தை சொல்லக் கூடாதா?" என்று அலறினாள். பின் நாவுலர்ந்து மயக்கமாகி விட்டாள். தன்னை யாரோ தொடுவது போல் உணரவே கண்விழித்தாள் பண்டிதரின் மனைவி. அழகிய பெண் ஒருத்தி நின்று கொண்டிருந்தாள். சுற்றிலும் பார்த்த பண்டிதர் மனைவிக்குத் திகைப் பாயிருந்தது.

"அம்மா, தாங்கள் யார்? நான் இங்கே எப்படி வந்தேன்? நான் மயக்கமான இடம் காடல்லவா... மருந்துக்கு ஒரு குடிசையும் இல்லை. இங்கே வீடுகளும், மனிதர்களும், குளங்களும்... இந்த ஊரின் பெயரென்ன?" என்று கேட்டாள்.

"அம்மா, என் பெயர் கிருஷ்ணாபாய். இந்த கிராமம் தான் என் ஊர். நான் சாங்க தேவரின் பக்தை. உன் புலம்பல் கேட்டு இங்கழைத்து வந்தேன். முதலில் எழுந்திரு. என் வீட்டிற்குப் போகலாம்" என்று கூறி யவள் மெதுவாக நங்கையை நடத்தி ஒரு வீட்டிற்குள் அழைத்துச் சென் றாள். நல்ல படுக்கை ஒன்று தயார் செய்து படுக்க வைத்தாள். வேதனை தெரியாமலிருக்க கதைகள் சொல்லியபடி இடுப்பைப் பிடித்து விட்டாள். ஓமக்கஷாயம் போட்டுக் கொடுத்து குடிக்க வைத்தாள்.

சிறிது நேரத்தில் அழகிய ஆண் குழந்தையைப் பெற்றாள் பண்டிதர் மனைவி. குழந்தையை நீராட்டி, அடக்கமாக ஏணைகட்டிப் போட்டு தாலாட்டுப் பாடினாள் கிருஷ்ணாபாய். துணிகளைத் துவைப்பதும், மருந்து இடிப்பதும், பத்தியம் போடுவதுமாக பம்பரமாகச் சுழல்வதைப் பார்த்த யாதவர் மனைவி. "அம்மா, என்னைப் பெற்ற தாயிருந்தால் கூட இத்தனை பக்குவமாய் என்னைப் பேணி இருக்க மாட்டாள். எங்கள் குல தெய்வமான கண்ணனே உன் உருவில் வந்திருக்கின்றான். இத்தனை சின்ன வயதில் எத்தனை நோர்த்தியாய் வேலை செய்கின்றாய்... விட்ட குறை, தொட்ட குறை என்பது இது தானோ" என வாய் ஓயாமல்

புகழ்ந்தாள். கண்ணனின் அருளை நினைந்து மனம் உருகினாள். இப்படியே ஒருவாரமாயிற்று.

அங்கே பண்டிதரும், சாங்க தேவரும் துவரகையை அடைந்தனர். கோமதி நதியில் நீராடி விட்டு கோவிலுக்குச் சென்றால் அங்கே பகவானைக் காணாமல் அர்ச்சகர்கள் கவலையுடன் இருந்தனர். சாங்க தேவர் ஞான திருஷ்டியால் பார்த்தார். பிறகு பண்டிதர் பக்கம் திரும்பி "கலவரப்படாதீர்கள் பகவான் இருக்குமிடம் தெரிந்து போயிற்று வாருங்கள்" என்றழைத்துக் கொண்டு கிருஷ்ணாபாய் இருக்குமிடம் வந்தார்.

எதிர்பட்டவர்களை "கிருஷ்ணாபாய் இருக்கும் வீடு எது?" என விசாரித்தார். பண்டிதர் "ஸ்வாமி, நாம் போகும் போது வழியில் இப்படி ஒரு ஊரைப் பார்த்ததாக நினைவில்லையே?" என்று கேட்க, "எல்லாம் தெய்வ சித்தம்" என்றார் சாங்க தேவர்.

பண்டிதர் மனைவி பிரசவித்த வீட்டை அடைந்த போது வாசலில் ஒரு அழகிய பெண் பெருக்கிக் கொண்டிருந்தாள். "பண்டிதர் மனைவி இங்கே



தான் இருக்கிறாளா?" என்று கேட்டபோது அந்தப் பெண். "ஆமாம்... அவளுக்குப் பிள்ளை பிறந்திருக்கிறது. போய்ப் பாருங்கள்" என்றாள்.

சாங்க தேவரும், யாதவரும் உள்ளே போனார்கள். யாதவர் மனைவி குழந்தையை சாங்கதேவர் காலடியில் கிடத்த, சாங்க தேவர் குழந்தையை எடுத்து யாதவரிடம் கொடுத்தபின் "அம்மா, உனக்கு உதவியவர் எவர்?" எனக் கேட்க, யாதவர் மனைவி தனக்கு வலிகண்டது முதல் அன்று வரை நடந்தவைகளை விளக்கினாள். பிறகு "எல்லாம் தங்கள் கருணை. தங்களின் பக்தை கிருஷ்ணாபாய் இல்லாவிட்டால் இன்று உங்கள் முன் நின்று பேசிக் கொண்டிருக்கமாட்டேன்" என்றாள்.

"இப்போது அவள் எங்கே?" என்று சாங்க தேவர் பரபரப்பாகக் கேட்டார். "நீங்கள் வரும் போது வாசலில் பார்க்கவில்லையா? விளக் கேற்றும் நேரமாகிறது. வாசல் பெருக்குகிறேன் என்று போனாளே" என்றாள் யாதவர் மனைவி. வாசலுக்கு ஓடிப் போனார்கள். யாரும் இல்லை. சாங்க தேவரின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது. "கண்ணா! மணி வண்ணா! கருணைக் கடலே... நீ மிதித்த இடமே எனக்கு துவாரகை... நீ கைகால் பிடித்து, சமைத்துப் போட இந்தப் பெண் செய்த புண்ணியம் நான் செய்யவில்லையே!" என பலவாறு புலம்பினார்.

யாதவரும், அவர் மனைவியும் இது கேட்டு பிரமித்து நின்றனர். நான்கு மாதங்கள் வரை அங்கேயே தங்கி இருந்தார் சாங்க தேவர். பஜனையும், கதா காலட்சேபமுமாக ஹரி கீதம் எப்போதும் ஒலித்துக் கொண்டிருந்தது. ஒரு நாள் கண்ணன் தோன்றி "பேதரியில் இந்து மத தர்மம் நலிவுற்றுக் கிடக்கிறது. அங்குபோய் பக்தியைப் பரப்பு" என ஆணை யிட்டு மறைந்தார்.

உடனே பேதரிக்குப் புறப்பட்டார் சாங்கதேவர். ஜங்கமன் என்று ஒரு விஷ்ணு துவேஷி இருந்தான். அவனுக்கு அநேக சீடர்கள். நாராயணன் பெயரை உச்சரிப்பவர்களைக் கண்டாலே அவனுக்கு வெறுப்பு. அப்படிப் பட்டவர்களை போலியாக வரவேற்று உபசரிப்பான். அவர்களுக்கு உட்கார அருமையான ஆசனம் காட்டுவான். அதில் உட்கார்ந்தவுடன் அதோ கதிதான். கீழே 'கிடு கிடு' குழி வெட்டி வைத்திருப்பான். இப்படி ஒரு குரூர திருப்தி. விஷ்ணு பக்தன் குழியில் விழுந்தவுடன் அட்டகாசமாய் கை கொட்டிச் சிரிப்பார்கள் ஜங்கமனும், அவன் சீடர்களும்.

சாங்க தேவரின் பெருமைகளைக் கேட்டுக் கேட்டு ஜங்கமனின் நெஞ்சில் பொறாமைத்தீமூண்டு கொண்டிருந்தது. எப்போது நேரம் கிடைக்கும் என்று காத்துக் கொண்டிருந்தான். அவரை அவமதிக்க சாங்கதேவன் எனப் பெயரிட்டு ஒரு நாயை வளர்த்து வந்தான்.

ஞான திருஷ்டியால் இதை அறிந்த சாங்கதேவர் பேதரிக்குச் செல்லும் வழியில் ஜங்கமனின் இருப்பிடத்திலேயே தங்கினார். வழக்கம் போல் வரவேற்று, ஆசனத்தைக் காட்டி உட்காரும்படி வேண்டினர். "பாண்டவ தூதனுக்கு துரியோதனன் கொடுத்த ஆசனம் போல் இருக்கிறதே!" என்று சாங்கதேவர் சிரித்தபடி கூற, ஆசனம் தீப்பிடித்து எரிந்தது. ஜங்கமர்கள் நடுங்கினர்.

தலைவன் சாங்க தேவரின் பாதங்களில் நமஸ்கரித்து "எங்களை மன்னிக்க வேண்டும். ஆசனம் முன்பு போல் தோன்றுமாறு அருள் செய்ய வேண்டும்" என வேண்ட, சாங்க தேவர் சாம்பலான இடத்தைப் பார்த்தார். ஆசனம் முன்போல் வந்தது. ஆனால் கீழே இருந்த படுகுழியைத்தான் காணோம்.

பிறகு அனைவரும் சாங்க தேவரை விருந்துண்ணுமாறு வேண்டினர். 'எல்லோரும் சேர்ந்தே சாப்பிடலாம்' என்றார் சாங்கதேவர். எல்லோருக்கும் இலைபோட்டு அன்னம், பாயசம், கறி வகைகள் பரிமாறப்பட்டன. ஜங்கமனும், அவன் சீடர்களும் கழுத்தில் ஒரு பெரிய தாயத்துக்குள் சிவலிங்கம் வைத்திருப்பார்கள். எப்போது எங்கு சாப்பிடுவதானாலும் லிங்கத்தை எடுத்து நிவேதனம் செய்து விட்டுத்தான் சாப்பிடுவார்கள். இது அவர்களின் நியதி. அதன்படி பார்த்தால் தாயத்துக்குள் லிங்கங்கள் இல்லை. 'திருதிரு'வென விழித்தனர்.

'என்ன அபசாரம் செய்தோமோ' என, கைகால்கள் நடுங்கின. சாங்க தேவர் அவர்களின் தவிப்புக்குக் காரணம் கேட்டார். அவர்கள் கூறினார்கள்.

சாங்க தேவர் "ஒரு உயிரைப் பட்டினி போட்டு தான் உண்ண பகவான் விரும்பவில்லை" என்று கூற, "யாரையும் நாங்கள் பட்டினி போட வில்லையே" என்று ஜங்கமன் விழிக்க, "பொய் சொல்லாதே! என் பெயருள்ள நாயை ஆசனம் தீப்பற்றி எரிந்ததும் பயந்து தோட்டத்து அறையில் கட்டி வைக்கச் சொன்னதை மறந்து போனாயோ? அது

பசியால் பரிதவிக்க, பகவான் அதன் பசியைத் தீர்க்க அதன் வயிற்றில் அடக்கமாகி இருக்கிறார்" என்றார் சாங்க தேவர்.

நாயை அவிழ்த்து வந்து சாங்க தேவர் முன் விட்டு "எங்கள் லிங்கங்களை மறுபடி வரவழைத்துத் தரவேண்டும்" என வேண்டினான் ஜங்கமன். "ஏ, சுவானமே! உன் வயிற்றினுள் அடக்கமாகி இருக்கும் சிவலிங்கங்களைக் கக்குவாயாக" என்றார் சாங்க தேவர். நாய் சாங்க தேவரின் சொல்லை ஏற்று லிங்கங்களைக் கக்கியது. ஜங்கமன் நாணித் தலைகுனிந்தான். தன் அறியாமைக்காக சாங்க தேவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். பரிசுத்த மனத்தோடு பகவானை வழிபடும்படி போதித்து விடை பெற்றார் சாங்கதேவர்.

பேதரி நகரத்துக் கோட்டையைக் கடந்ததும் தம் சீடர்களோடு பகவானின் லீலைகளைப் பாடி, பஜனை செய்தபடி அரண்மனையை அடைந்தார் சாங்க தேவர். அவ்வூர் மக்கள் இத்தனை வாத்தியங்களையும்,



பகவான் லீலைகளையும் இதுவரை பார்த்ததுமில்லை, கேட்டதுமில்லை. ஆதலால் அவரைப் பின் தொடர்ந்து கூட்டமாகச் சென்றனர்.

அரண்மனை அருகில் சென்றதும் ஒரு அந்தணர் "ஸ்வாமி, இந்நாட்டு அரசன் மகம்மதியர். அவர்கள் இனத்தவரையே சந்தோஷமாக ஆதரிக்கிறார். ஆலயங்களை இடித்துத் தகர்க்கிறான். இந்துக்கள் இப்படி பஜனை செய்தால் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவார்கள். உங்களது அதிர்ஷ்டம் அரசனது செல்வப் புதல்வி நான்கு நாட்களுக்கு முன் பாம்பு கடித்து இறந்து விட்டாள். அந்தக் கவலையில் மன்னன் மூழ்கிக் கிடப்பதால் மற்றவைகளில் கவனம் இல்லை. நீங்கள் உடனே இந்த ஊரைவிட்டுப் போய் விடுங்கள்" எனக் கூறினார்."அந்தணரே... விஷக்கடியை இறக்க மன்னன் முயற்சிக்கவில்லையா?" என்று சாங்கதேவர் கேட்க,

"ஏகப்பட்ட சன்மானம் தருவதாக முரசறைவித்து மந்திரவாதிகளும், வைத்தியர்களும் வந்து முயற்சி செய்தனர். பலன் பூஜ்யம்" என்றான் கூட்டத்தில் ஒருவன். "என்னால் பிழைப்பிக்க முடியும்" என்று சாங்க தேவர் கூற, அந்தணர், அரண்மனையுள் சென்று, அரசனிடம் தெரிவித்தார். அரசர் சாங்கதேவரை அழைத்து வரும்படி பணியாளை அனுப்பினார். சாங்க தேவர் வந்ததும் அவரை வரவேற்று உட்காரச் சொன்னார். பிறகு,"நான் இந்துக்களுக்கு மரியாதை கொடுப்பதில்லை. இன்று பிரேதத்தை எடுக்க ஏற்பாடாகிக் கொண்டிருக்கிறது. இறந்து நான்கு நாட்களாகிவிட்ட என் மகளை உங்களால் பிழைக்கவைக்க முடியுமா?" என மன்னன் சோகமாகக் கேட்டான்.

"அரசே, நம்பிக்கைதான் வெற்றியின் முதல்படி. இந்த துளசி தீர்த்தத்தை உமது மகளின் உடல்மீது தெளிப்பாயாக" என சாங்க தேவர் கெண்டியிலிருந்து கொஞ்சம் துளசி தீர்த்தத்தை ஒரு பாத்திரத்தில் விட்டு கொடுத்தார். அரசன் அத்தீர்த்தத்தை தெளிக்கவும் துள்ளி எழுந்தாள் புதல்வி. ஆனால் முன்பிருந்த அடக்கமும், அமைதியும் இல்லாமல் கத்தி கலாட்டா செய்யவும், மன்னன் பயந்து, சாங்க தேவரிடம் வந்து அதன் காரணத்தைக் கேட்டான். சாங்கதேவர் "அவளுடைய ஆசையைப் பூர்த்தி செய்தால் பழையபடி ஆகிவிடுவாள்" என்று கூற, மன்னன் திரும்பி மகளிடம் "அம்மா, உன் ஆசை என்ன.... கூறுவாய்... உடனே நிறை வேற்றுகிறேன்" என வாக்களித்தான்.

"தந்தையே... இந்த உடல் இந்து மதக்குருவால்தான் உயிர் பெற்றது. அந்த குரு சொற்படி நடப்பதாக சத்தியம் செய்யவேண்டும். இனி இந்துக்களை கொடுமைப் படுத்தக் கூடாது. அவர்களது ஆலயங்களை இடிக்கக் கூடாது. அவர்களுக்கு உத்யோகம், கல்வி எல்லாவற்றிலும் சம உரிமை அளிக்க வேண்டும்" என்றாள். மன்னன் அப்படியே நடப்பதாக சத்தியம் செய்தான். பின் சாங்கதேவரிடம் மகள் சொன்னதைக் கூறி அவர் விருப்பத்தைக் கேட்டான்.

"உனது மகளே என் எண்ணத்தைக் கூறிவிட்டாளே! மன்னா, ஆட்சியில் அமர்ந்தவனுக்கு குடிமக்கள் எந்தப் பிரிவினராயிருப்பினும் சமமே. அவர்களுக்கு அதிக வரி போடாதே! கொடுங்கோல் இல்லாத நாட்டில் தான் பருவ மழை தவறாது. வெள்ளம், புயல் இவைகளினால் பாதிப்பு ஏற்படாது" இப்படிப் பல நீதிகளைப் புகட்டினார். மன்னனும் தான் இனி நேர்மையாக நடந்து கொள்வதாக வாக்களித்தான். மன்னரிடம் விடை பெற்றுக் கொண்டு பண்டரிபுரம் வந்தார் சாங்கதேவர். 'நான் எங்கு சமாதி கொள்வது?' என பகவானைக் கேட்டார். "ஆடிமாத ஏகாதசியன்று



எனக்குக் கோவில் கட்டிய புண்ணியஸ்தம்பத்தில் சமாதி ஆகுக" என உத்திரவிட்டார் பகவான்.

புண்ணியஸ்தம்பத்திற்கு உடனே பயணமானார் சாங்கதேவர். ஆடிமாதத்தை எதிர் பார்த்து தினமும் பஜனை, கதாகாலட்சேபம் என சதாஹரிபஜனை தான். செய்தி கேட்டு அவர் சீடர்களெல்லாம் புண்ணியஸ்தம்பத்தில் கூடினர். கேசவன், விட்டலன் என்ற இரண்டு பிரதான சிஷ்யர்கள் இவர் பணியை விடாது தொடர்ந்தனர். சமாதி கட்டியாயிற்று. ஆடிமாத ஏகாதசியும் வந்தது. சுவாமிகளை நமஸ்கரித்து, அனைவரும் ஆசி பெற்றனர். பகவான் பெயரைச் சொல்லியபடி சமாதியில் இறங்கினார் சாங்கதேவர்.

'பளி'ரென்று ஒரு மின்னல். பாண்டுரங்கன் பிரத்யட்சமாகி சாங்க தேவரை தன்னோடு ஐக்கியப்படுத்திக் கொண்டார். சடலமிருந்த சமாதியை மூடி விதிப்படி ஆராதனை செய்தனர் சீடர்கள். இன்றும் புண்ணிய ஸ்தம்பத்தில் இவரது சமாதியைக் கும்பிடுவோருக்கு நல்லது நடக்கிறது. மனம் பரிசுத்தமாகிறது என்று கூறுகின்றனர்.

17. ஸ்ரீ மிருத்யுஞ்சயர்

பேதரி நகரம் சில ஆண்டுகளுக்குப் பிறகு இந்து அரசர்கள் வசம் வந்தது. அந்த வழி வந்த அரசன் ஒருவன் பெண் பித்தனாக இருந்தான். அவன் பெயர் சாந்த பிரம்மணி.

ஒரு நாள் அரண்மனை மேன் மாடத்தில் தன் மனைவியருடன் நின்று கொண்டு பழம் உரித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவன் கீழே எறிந்த தோலை கிழிந்த ஆடையும், பரட்டைத் தலையும் கொண்ட ஒருவன் பொறுக்கித் தின்று கொண்டிருந்தான்.

அரசி அதைப் பார்த்து அரசனிடம் "இது நம்மைக் கேவலப் படுத்துவது போல் இல்லை? எவர் வேண்டுமானாலும் அரண்மனை நந்தவனத்துள் நுழைய முடிகிறதே! என்ன காவல் செய்கிறார்கள்? என்று கேலியாகக் கேட்டாள்.

அரசன் கோபத்துடன் "அந்தப் பித்தனை நையப்புடையுங்கள்" என உத்தரவிட்டான். அவ்வளவு போதாதா? அவனைக் கட்டி வைத்து விளாசினார்கள். அவனோ ஒவ்வொரு சவுக்கடிக்கும் விழுந்து விழுந்து சிரித்தான். அரசனுக்கு இது ஆச்சரியமாக இருந்தது.

"அழுவதற்கு பதில் சிரிக்கிறானே! யாராவது ஞானியாக இருக்குமோ?" என சஞ்சலமுற்று அடிப்பதை நிறுத்தச் சொன்னான். 'அவனை இங்கே கூட்டிக்கொண்டு வாருங்கள்' என உத்தரவிட்டான்.

'அடி உடம்பில் வலிக்கவில்லையா? ஏன் சிரித்தாய்?" என வேந்தன் வினவ, "அரசே, வேண்டாமென வீசி எறிந்த தோல்களைத் தின்ற எனக்கே இத்தனை சவுக்கடிகள் என்றால் சதா சுளைகளையே தின்னும் உனக்கு என்ன தண்டனையோ? அந்தப்புரமாடத்துக்குக் கீழே நின்றதற்கே இந்த தண்டனை என்றால் அந்தப்புரத்துள்ளேயே அடைந்து கிடக்கும் உனக்கு எப்படிப்பட்ட சிட்சையோ என நினைத்தேன். சிரிப்பு வந்தது. அரசன் ஆண்டவனின் பிரதி நிதி என்பார்கள். நீ என்னை தண்டிக்கலாம். பகவான் சன்னதியில் உன் பாபங்களுக்கு என்ன பதில் சொல்லப் போகிறாய்? கோபம் பாபங்களின் அஸ்திவாரம். முன் கோபத்தைவிட்டவர் வைகுண்ட பதவியையே அடையலாம்" சாது சொல்லச் சொல்ல அரசனின் அறிவுக் கண்கள் திறந்தன.

அரண்மனை வாழ்வு, மனைவி, மக்கள், உற்றார், உறவினர், செல்வம், சுகம் அனைத்தையும் துறந்து காட்டுக்குப் போய்விட்டான். இரவும், பகலும் பகவானையே ஸ்மரித்தான். ஏகாதசி உற்சவத்திற்காக பண்டரீபுரம் செல்லும் பஜனை கோஷ்டி ஒன்று அவ்வழியே சென்றது. அவர்களுடன் பண்டரீபுரம் சென்றார். சந்திர பாகா ஆற்றில் நீராடி பாண்டு ரங்கன் சன்னதி அடைந்தார். விக்கிரகத்தைப் பார்த்ததும் தன்னை மறந்தார். ஓடிச் சென்று அணைத்துக் கொண்டார்.

"பனகர் என்று பெயர் சொல்லி பித்தனாய் வந்து என் மனக் கண்ணைத் திறந்தவனே! (உன்னிடமே அடைக்கலமாய் வந்து விட்டேன்) என்னை ஆட் கொள்வது உன் பொறுப்பு "எனக் கண்ணீர் சொரிந்தார். மூன்று தினங்கள் உணவும், உறக்கமும் இன்றி இரவு பகலாய் விட்டலன் நாமமே கதியாக இருந்தார். கடைசி நாள். நள்ளிரவு கண்ணன் மாயையில் நித்திரை வசப்பட்டார்.

சொப்பனத்தில் பரந்தாமன் தோன்றி "விவேகஸிந்து என்னும் (நூலைக் கொடுத்து) இதைப் பாராயணம் செய்தால் மன அழுக்கு நீங்கி" ஞானம் பெறுவாய். அருகிலுள்ள கலியாணபுரம் என்னும் ஊரில் சகஜானந்த சுவாமிகள் என்னும் பெரியவர் உனக்கு தீட்சை அளிப்பார். எழுந்து உணவு அருந்துவாயாக" எனக் கூறி மறைந்தார். திடுக்கிட்டு விழித்தார் சாந்த பிரம்மணி. கையிலிருந்த ஓலைச் சுவடியைக் கண்டே, பகவான் வந்தது நிஜமென அகமகிழ்ந்தார்.

தினமும் விவேக ஸிந்துவைப் பாராயணம் செய்து வந்தார். பாண்டு ரங்கன் சொன்னபடி சகஜானந்த சுவாமிகள் பண்டரிபுரம் வந்தார். சாந்த பிரம்மணி அவரைக் கண்டு வணங்கி தான் கண்ட கனவைக் கூறினார். சகஜானந்தர் மகிழ்ச்சியுடன் தாரக மந்திரத்தை உபதேசித்து மிருத்யுஞ்சயர் என்ற தீட்சா நாமமும் சூட்டினார்.

சென்ற கதையில் கூறியபடி கழுத்தில் லிங்கம் கட்டிக் கொண்ட ஜங்கமர்களில் பவராயன் என்பவன் நாராயண மந்திரத்தால் இழுக்கப்பட்டு மிருத்யுஞ்சயரிடம் சீடனாக ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக் கொண்டான். அவரும் மனமுவந்து ஏற்றுக் கொண்டார். இது ஜங்கமர்கள் குழுவுக்கு சினமூட்டியது. அவனைக் குலத்திலிருந்து ஒதுக்கி வைத்து விட்டனர். இது பற்றி அவன் துக்கிக்க, குரு "பவராயா, நல்லது கெட்டதாகவும், கெட்டது நல்லதாகவும் விவேக மற்றவர்களுக்குத் தோன்றும். அதை நாம் பொருட்படுத்தக் கூடாது. 'உன்னோடுசேர எங்களுக்குப் பக்குவம் வரவில்லை' என்று அவர்கள் ஒதுங்கி விட்டார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். அற்ப விஷயங்களுக்காக மனதை அலட்டிக்கொள்ளாமல் பகவத் பக்தியில் மனதைச் செலுத்து" என்று ஞானோபதேசம் செய்தார். பவராயனும் மனம் தெளிந்து முன் போலிருந்தான்.

அப்போது அந்த நாட்டை ஆண்டுவந்த காசிபதி என்ற அரசன் சிறந்த சிவபக்தன். தினமும் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு அன்னதானம் செய்தான். ஒருநாள் லிங்கதாரிகள் சாப்பிட உட்கார்ந்தனர். எல்லாம் பரிமாறி முடித்தவுடன் நைவேத்யம் செய்யலாம் என்று கழுத்திலிருந்த லிங்கப் பெட்டியைத் திறந்தால் லிங்கங்கள் இல்லை.

"முன்பு சாங்கதேவருக்கு அபசாரம் நினைத்ததால் லிங்கங்கள் காணாமல் போனதாக நம் முன்னோர்கள் சொல்லி இருக்கின்றனர். இப்போது என்ன குற்றம் செய்தோமோ? எந்த இடத்தில் லிங்கங்கள் இருக்கின்றனவோ" என ஜங்கமர்களின் தலைவன் சமுச்சி புலம்பினான்.

'பவராயனை ஜாதிபிரஷ்டம் செய்ததாயிருக்கலாமோ' என்று ஒரு ஜங்கமன் கேட்க, அரசன் அது பற்றி விளக்கமாகக் கேட்டுத் தெரிந்து கொண்டு "மிருத்யுஞ்சயர் மகான்; அவரைச் சரணமடைந்தது குற்றம் என்று கூறியது அவமதிப்பில்லையா... அவர் பெயர் நமது சிவபெருமானின் நாமம். அவர் நாராயணனை ஸ்மரித்தால் என்ன? சமயம், சமரசம் என்று புரிந்து கொள்ளாமல் மூடத்தனமாய் நடந்து கொண்டீர்களே... வாருங்கள். அவரிடமே சென்று மன்னிப்புக் கேட்போம். நிச்சயம் இரங்குவார்" என ஜங்கமர்களை அழைத்துக் கொண்டு மிருத்யுஞ்சயர் இருப்பிடம் சென்றான்.

எல்லோரும் மிருத்யுஞ்சயரை விழுந்து பணிந்து மன்னிப்புக் கேட்டனர். பவராயனிடமும் 'தங்களுக்கும் குரு மிருத்யுஞ்சயரே எனக் கூறி 'நாம் இனி ஒற்றுமையாக இருப்போம். நாங்கள் உனக்கிழைத்த அநீதிகளை மறந்துவிடு' என கேட்டுக் கொண்டனர். பிறகு தங்கள் லிங்கங்கள் எங்கே போயிற்றென்று தெரியவில்லை, என்று கூறி வருந்தினர். மிருத்யுஞ்சயர் "நீலகண்டா, சாம்பசிவா, கௌரிசங்கரா... எங்கே ஒளிந்து கொண்டாய்" என ஸ்தோத்தரிக்க கிருஷ்ண விக்கிரத்துக்கு பூஜை செய்திருந்த பூக்குவியல்களில் லிங்கங்கள் தெரிந்தன.

"ஜங்கமர்களே, சைவமும், வைணவமும் ஒன்றே... இறைவன் சங்கர நாராயணனாக காட்சி அளிக்கின்றான். அவரவர்க்கு விருப்பமான வழியில் பிடித்தமான பெயரிட்டு வழிபடுவதில் குற்றமென்ன இருக்கிறது. மக்கள் ஒழுக்கத்திற்கும், நேர்மைக்கும் தெய்வபக்தி முக்கியமே அன்றி பேதம் காண அல்ல... உங்கள் லிங்கங்கள் **நாராயண** புஜையில் ஐக்கியமாகி இருப்பதே சிறந்த உதாரணம். அவரவர் லிங்கங்களை எடுத்துக் கொள்ளுங்கள்" என்றார் **அன்புடன்**.

ஜங்கமர்கள் "ஞான சாகரமே... எங்கள் அறிவைத் தெளிய வைத்தீர்... எது, எவருடையது என்று தெரியவில்லை... அதையும் தாங்களே காண்பிக்க வேண்டும்" எனப் பணிந்தனர். மறுபடி சிவபெருமானை மிருத்யுஞ்சயர் பிரார்த்திக்க லிங்கங்கள் பறந்து அவரவர் தாயத்துப்பெட்டியை அடைந்தன. அனைவரும் மிருத்யுஞ்சயரின் மகிமையையும், பக்தியின் பலத்தையும் கொண்டாடி, அதிசயித்து வணங்கி வழிபட்டனர்.

18. மீராபாய்

வட இந்தியாவில் உதயப்பூர் என்ற சிறிய ஊர். அதைப் பூ நாயகன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் மனைவியின் பெயர் சந்திரமுகி. இருவரும் புத்திரப் பேறின்றி நெடுநாள் தவமிருந்து பெற்ற புதல்விதான் மீராபாய். மீராவின் அழகை வர்ணிக்க வார்த்தைகளுக்கு சக்தி இல்லை. மீரா நன்கு படித்தாள். மற்ற பெண்களைப்போல பாண்டி, கண்ணாமூச்சி என்றெல்லாம் விளையாடாமல் தந்தையிடம் கேட்டு ஒரு கிருஷ்ண விக்கிரகம் வாங்கி வைத்துக்கொண்டு அதை அலங்கரித்து அதற்கு பூஜை, திருவிழா, ஆடல், பாடல் என்றெல்லாம் விளையாடுவாள். தான் சாப்பிடுவதையெல்லாம் அதற்கு நிவேதனம் செய்வாள். இரவு தூங்கும் போது கூட அதைப் பிரியமாட்டாள். அரண்மனையில் அடிக்கடி கதா காலட்சேபம் நடக்கும். பாகவதத்தில் கிருஷ்ணன் லீலைகள் என்றால் மீரா முன் வரிசையில் இருப்பாள். ஆடாது, அசங்காது அந்தச் சின்ன வயதில் அவள் கதைகேட்கும் நேர்த்தியைக் கண்டு அனைவரும் ஆச்சரியப் படுவார்கள்.

"கண்ணா, உனக்கு வெண்ணை என்றால் அத்தனை ஆசையா... குறும்புக்கார நந்த கோபாலா... கோபியர்களை எப்படியெல்லாம் ஆட்டி வைத்திருக்கின்றாய்... கிரிதாரி... இந்தக் குஞ்சுக்கால்களா காளிங்கன் மீது நடனமாடியது? குவலயாபீடத்தைப் பார்த்து நீ பயப்படவே இல்லை யாமே கொட்டுகிற மழையிலே அத்தனை பெரிய கோவர்த்தன கிரியை இந்த ஒருவிரலால் எப்படித் தூக்கினாய்?" என்றெல்லாம் விக்கிரகத்திடம் பேசிக் கொண்டே இருப்பாள். ஒத்த வயது பெண்கள் வலிய இழுத்தாலும் விளையாடப் போகமாட்டாள்.

மீராவுக்குத் திருமண வயதானது. எத்தனையோ அரச குமாரர்களின் சித்திரங்கள் மீரா முன் குவிந்தன. எதையும் மீரா திரும்பியும் பார்க்க மறுத்தாள். மனதில் கண்ணனுக்கே மாலையிடுவது என்று உறுதி கொண்டாள்.

"கண்ணா, ருக்மணிக்காக தேரோட்டி வந்து ஆலய வாசலில் காத்து நின்றாயாமே... நான் உனக்காக காத்திருக்கிறேன். ஆயுள் முழுவதும் உன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாலே போதும். உனக்கு சேவை

செய்வதே எனக்கு பாக்கியம்" என்றெல்லாம் புலம்புவதை, தோழியர் கேட்டு மீராவின் பெற்றோரிடம் கூறினர். திருமண வயதிலிருக்கும் பெண் இப்படிப் புலம்பினால் பெற்றவர்களுக்குக் கவலையாக இருக்காதா? சந்திரமுகி மீராவிடம் அன்புடன் "சேடியர் சொல்வது நிஜம்தானா மீரா... தெய்வத்தை பக்தி செய்யலாம். பூஜிக்கலாம்; மணக்க முடியுமா? இதென்ன விபரீத ஆசை?" எனப் பலவாறு புத்தி சொன்னாள். மீராவின் பஜனையும், கண்ணா, கிரிதாரி என்ற புலம்பலும், சதா பாகவதர்களோடு உரையாடுதலும் பொறாமை பிடித்தவர்களை அபாண்டம் பேச வைத்தது. அரசன் காதில் படும்படி நையாண்டி பேசினர். பாலில் கொடும் விஷத்தைக் கலந்து சந்திரமுகியிடம் கொடுத்து "மீராவைக் கொன்று விடு; உயிரைவிட மானம் பெரியது" என்றான் மன்னன்.

சந்திரமுகி தவித்தாள். "தவமிருந்து பெற்ற என் செல்வத்தை யாரோ எதுவோ சொன்னார்கள் என்று விஷமிட்டுக் கொல்வதா? அரச பீடத்தில் அமர்ந்தவர்களுக்கு மனதில் ஈரமே இருக்காதோ? எவனோ வண்ணான்

என்னவோ சொன்னான் என்று நிறை கர்ப்பிணியைக் காட்டுக்கு விரட்டி அடிக்கவில்லையா ரகுராமன்! மாலையும் கழுத்துமாய் மணமகளாய்ப் பார்க்க வேண்டியவளைப் பிணமாக்குவதா?" என்று புலம்பித் துடித்தாள்.

"தாயே! வருந்த வேண்டாம்... நஞ்சு மீராவை ஒன்றும் செய்யாது. அடியவர்களுக்கு கொடுக்கப்படும் தண்டனைகளை ஆண்டவன் ஏற்றுக் கொள்கிறார்" என்ற குரல் கேட்டது.

'யார்' என்று சுற்றிலும் பார்த்தாள். எவருமில்லை. 'மனப்பிரமையோ' என திகைத்தாள். இதற்குள் தந்தையின் உத்தரவு மீராவுக்கு எட்டியது. தாயிடம் ஓடி வந்தாள். "அம்மா! என் பிரபு மனமிரங்கி தன்னோடு என்னை அழைத்துக்கொள்ளத் தீர்மானித்தே இந்த முடிவெடுத்திருக்கிறார். கிரிதர கோபாலா... இதோ ஒரு நொடியில் வந்து விட்டேன். கொடு அம்மா" என்றபடி, விஷக்கிண்ணத்தை வாங்கி மடமடவென்று குடித்தாள்.

"பாலும், சோறும் ஊட்டிய கையால் விஷம் கொடுக்க நேர்ந்ததும் உன் சோதனையா? இந்தக் கொடுமைகளைப் பார்க்காமல் என் கண்கள் அவிந்து விடாதா? உயிர் போய் விடாதா?" என முகத்தில் அறைந்து கொண்டு கீழே விழுந்த சந்திரமுகி, மீராவின் சிரிப்பொலி கேட்டு திகைத்தாள்.

குடித்த மறுகணமே உயிர் கொல்லும் அந்த விஷம் மீராவை எதுவும் செய்யவில்லை. கண்கள் சொருகி மயக்கமுறவில்லை. உடல் நீலமாக வில்லை. ஆனால் மீரா "அம்மா, இங்கே பாருங்கள்... என் கண்ணனை! கண்ணா, நீலமேக சியாமளன் என்ற பெயருக்கேற்ப நீலநிறமானாயோ? பிரகலாதனைக் காப்பாற்றியது போல் என்னையும் காத்தனையோ? (நந்த முராரி, உன் உடம்பு எரிகின்றதா?") என்றெல்லாம் புலம்புவதைக்கண்டு, 'மகள் எப்படி இருக்கின்றாளோ' என்று பார்க்க வந்த வேந்தனும் திடுக்கிட்டான். மீராவின் கிருஷ்ண விக்ரகம் நீல நிறமாகி இருந்தது. அனைவரும் இந்த அற்புதத்தைப் பார்த்து நடுநடுங்கினர்.

மன்னன் "கண்ணா, அற்ப மானிடப் பிறவியான எங்களை மன்னித்து விடு. உனக்கு நஞ்சு கொடுத்த பாவியாகி விட்டேன். இனி மீராவுக்கு எந்தக் கெடுதலும் செய்யமாட்டேன். இது சத்தியம்" என்று பணிந்து உருகி வேண்ட, விக்ரகம் முன்போலாகியது. மேவார் நாட்டை ஆண்ட அரசர் கும்பராணா. மீராவின் தெய்வ பக்தியையும், விஷம் குடித்தும் இறக்காத

அதிசயத்தையும், அவளது அபரிமிதமான அழகையும் கேள்விப்பட்டு அவளைத் தான் மணக்க விரும்புவதாகச் செய்தி சொல்லி அனுப்பினார். மேவார் பெரிய ராஜ்யம். கும்பராணாவை மணப்பது பெரும் பாக்கியம் என்றெல்லாம் மீராவிடம் சொன்னார்கள் தோழியர். தெய்வத்துக்குச் சூடவென்று கட்டிய மாலையை மனிதனுக்குப் போடுவதா எனத் தயங்கினாள் மீரா.

அன்றிரவு மீராவுக்கு ஒரு அற்புதமான கனவு. அழகிய திருமண மேடை.... அலங்கரித்த முத்துப் பந்தல். தந்தையும், உறவினர்களும் மகிழ்ச்சியுடன் அமர்ந்திருக்கின்றனர். இனிமையான இசை. மீராவைப் பட்டாலும், அணிகளாலும் அலங்கரித்துத் தாய் சந்திரமுகி அழைத்து வருகிறாள். அன்ன நடை நடந்து வரும் மீராவின் எதிரே ஒரு முதியவர்.

"குழந்தாய்! மீரா.... கோபிகைகளுக்கு வீடு, வாசல், மாடு, கன்று, கணவன், குழந்தைகள், இல்லற கடமைகள் எல்லாமிருந்தன. ஆயினும் அவர்கள் கண்ணனிடம் பக்தி செய்யவில்லையா? ராணா கண்ணனிடம் பேரன்பு கொண்டவர். அவரை ஏற்றுக் கொள்" என்றார் அன்புடன். பின் அவரே குழலூதும் கண்ணனாக மாறி மறைந்தும் போனார்.

மீரா விழித்தெழுந்தாள். 'மனிதர் மனிதரைத்தான் மணக்க வேண்டும் என்பது உன் நியதியானால் அதை நான் எப்படி மாற்ற முடியும்' என மனம் தேறினாள். கண்ணன் சொற்படி நடக்க வேண்டும் என்று ராணாவை மணக்க சம்மதித்தாள். பெற்றோருக்கு மீராவின் மனமாற்றத்தினால் பெரும் மகிழ்ச்சி.

சம்மதத்தை ராணாவுக்குச் சொல்லி அனுப்பினர். விவாகம் வெகு சிறப்பாக நடந்தது. கும்பராணா அவளுக்காக அழகிய கிருஷ்ணன் கோவில், அன்னதான விடுதி, கதா காலட்சேபம் நடத்தும் பக்தர் குழு, தங்க இருப்பிடம் எல்லாம் அமைத்து தந்தார். எப்போதும் பஜனை, கதாகாலட் சேபம், பூஜைதான்... ராணா ஜயதேவரது கீத கோவிந்தத்திற்கு 'ரஸிப்பிரியா' என்ற பெயரில் உரை எழுதி இருக்கிறார். 'சங்கீத ராஜம்' என்ற லட்சண கிரந்தம் எழுதி இருக்கிறார்.

ராணாவுக்குப் பல மனைவிகள். அவர்களுக்கு ராணா மீராவின் அந்தப்புரமே கதியாகக் கிடப்பது வெறுப்பைத் தந்தது. ராணாவின் தங்கை ஊதா. அவளுக்கும் அழகாயிருந்ததினால் மீராவின் மேல் பொறாமை.

ராணாவின் இரண்டாம் மனைவியின் உறவினன் மந்தார் ராஜகுமாரன். அவன் பெரும் போக்கிரி. அவன் தான் பஜனையில் கலந்து கொள்ள ஆசைப்படுவதாக ராணாவின் இரண்டாம் மனைவி மூலம் சொல்லி அனுப்பினான்.

மீரா, "கண்ணன் சந்நிதி அனைவருக்கும் பொது. எவருக்கும் கலந்து கொள்ள உரிமை உண்டு" எனக் கூறினாள். அவனோ தேன் குடித்த நரியாக பஜ்னை முடியும் வரை மீராவையே வைத்த கண் வாங்காமல் வெறித்தான். மீரா விழிகள் மூடி மெய்மறந்து தம்பூரா மீட்டியபடி பாடிக் கொண்டிருக்கிறாள். சூது எதுவும் அறியாள். ராணாவின் சகோதரி இதைப்பற்றி புரளி கிளம்பி விட்டாள். ராணாவின் பட்ட மகிஷி இந்த வம்புத் தீயை விசிறிவிட்டாள். அது நெடுக புகைந்து கொண்டிருந்தது.

மீராவின் ஏகாதசி பஜனையைக் காண ஆலயத்துக்கு இந்துக்கள் மட்டுமின்றி முஸ்லீம்கள். பௌத்தர்கள், ஜைனர்கள் என்று எல்லா மதத்தவரும் வருவார்கள். அக்பர் பாதுஷாவுக்கு இச்செய்தி எட்டியது. அவரும் பெரிய இசைப்பிரியர். அக்பரது சபையிலிருந்த இசைக் கலைஞர் தான்சேன் மீராவின் கவிதைகளில் மனதைப் பறிகொடுத்திருந்தார். இருவருக்கும் அவள் பாடலை நேரில் கேட்க வேண்டுமென்று தீராத ஆவல்.

'அரசனாகப் போனால் பயமும், மரியாதையும் வந்து விடலாம். இயற்கையான பக்தியைக் காண முடியாது' எனத் தீர்மானித்து பகீர்களாக மாறு வேடமணிந்து புறப்பட்டனர். ஏகாதசி பஜனையில் மீராவின் பாடல்களைக் கேட்டு மெய் சிலிர்த்தனர். பாதுஷா விலையுயர்ந்த முத்துமாலை ஒன்றை மீராவிடம் கொடுத்து, "உங்களது கிரிதர கோபாலனுக்கு இந்த ஏழைப் ஃபகீரின் எளிய காணிக்கை. உங்களைப் போன்ற மங்கையர்களால்தான் பாரத நாட்டுக்குப் பெருமை" என்று புகழ்ந்தார். 'மீரா பக்தி என்ற பெயரிலே தன் கள்ளக் காதலனை சந்திக்கிறாள். அவன் கொடுத்ததே அந்த முத்துமாலை' என்ற வதந்தி ஊதா மூலம் ராணாவுக்குப் போயிற்று.

அரசியல் சிக்கல்களினால் குழப்பமடைந்திருந்த கும்ப ராணா மீராவிடம் வந்து முத்துமாலையைக் கேட்டார். அதில் அக்பரின் முத்திரை இருந்தது. "வந்தவர் பாதுஷா என்பதை நீ அறியாயா?" என்று கோபமாகக் கேட்டார் ராணா.

"ஸ்வாமி, புல்லாங்குழல் கீதமும், தங்கள் சேவையும் மட்டுமே நானறிவேன். லட்சம் பேர் வருகிறார்கள். யாரையாவது தனிப்பட உபசரித்திருக்கிறேனா? மந்தார் இளவரசன் என்னையே பார்த்தான் என்கிறீர்கள்! நான் அவனைப் பார்த்தேனா என்று பாருங்கள். சுவாமி வீதிஉலாபோகும் போது திருடனின் கண்கள் அவர் மேலிருக்கும் நகைகளையே நோக்கிக் கொண்டிருக்கும். அது பகவானன் பிழையா? பெண்ணாகப் பிறந்துவிட்டால் பஜனை செய்வது கூடக் குற்றமா? என் பூஜைக்கு வரச்சொல்லி யாரையும் நான் அழைக்கவில்லையே!" என்று வேதனையோடு கூறினாள் மீராபாய்.

"நீ சாதாரணப் பெண்ணல்ல... அரசி... இப்படி ஆடுவதும், பாடுவதும் எனக்குக் கௌரவக் குறைச்சல். பெண்களுக்கு அழகு அந்தப்புரத்தில் இருப்பது தான்... உன் பார்வையில் களங்கமில்லை என்றாலும் பார்ப்பவர் கண்களில் இருக்கிறதே! ஊருக்குப் பயந்துதானே, உன் தந்தையே விஷம் குடிக்கச் சொன்னார்? நான் சொன்னபடி கேட்காமல் அடக்கமின்றி ஆடிப்பாடி உன்னைக் காவலில் வைக்க வேண்டிய நிலைக்கு என்னைக் கொண்டு விடாதே... நெஞ்சிலே ஒருவனும், வெளியிலே ஒருவனுமாக வேஷம் போடாதே" இப்படிச் சுடுசொற்களை அள்ளி வீசினார் ராணா. இது பல நாள் புகைச்சல். "ஜாதி, குலம் என்று என்மனதில் பிரிவினைகள் இல்லை. எல்லோரும் அடியார் குலம். ஆண்டவனே புருஷன். என் நெஞ்சில் இருப்பது கண்ணன் தான். நான் வேஷம் போடவில்லை. தாங்கள் என் மீது காட்டிய அன்பு, பாசம் இவைகளுக்காக, இப்படிப்பட்ட ஒரு துணைவரை எனக்களித்தற்காக நந்தபாலனுக்கு நன்றி செலுத்தி இருக்கிறேன். அப்படிப்பட்ட தாங்களே சொல் என்ற வெடி கொண்டு என் நெஞ்சை சிதறடித்து விட்டீர்களே... உங்களாலேயே இந்த மீராவைப் புரிந்து கொள்ளவில்லை என்றால் இனி என்னைப் புரிந்து கொள்பவர் எவர்" எனத்துடித்தாள் மீரா. ராணா எதுவும் பதில் பேசாமல் போய்விட்டார்.

"கிரிதாரி... கோபிகைகளுக்கு இல்லறத்திலிருந்து கொண்டே உன்னை நினைப்பது சுலபமாக இருந்தது. நெஞ்சிலே உன்னை வைத்துக் கொண்டு பதிசேவை செய்ய என்னால் ஆகவில்லை. ஏற்றுக் கொள்வதோ, நிராகரிப்பதோ உன் விருப்பம்" என்று புலம்பிய மீராவின் மனம் அதன்பின் அரண்மனையில் இருப்பதை ஏற்கவில்லை.

உணவும், உடையும் அரச போகங்களும் மட்டுமே வாழ்க்கையாக மீரா நினைக்கவில்லை. தம்பூராவுடன் பிருந்தாவனம் நோக்கிப் புறப்பட்டு விட்டாள். செய்தி அறிந்து ராணா ஓடிவந்தார். மலர் போன்ற இதயத்தைக் கசக்கி எறிந்த தவறைப் புரிந்து கொண்டு மன்னிப்புக் கேட்டார். அரண்மனைக்கு வரச் சொல்லி கெஞ்சினார்.

ஆனால் மீரா வைராக்கியமாக, "அதோ வேணுகானம் ஒலிக்கிறது. இல்லறத்தில் உழன்றது போதும் என கோபாலன் என்னை அழைக்கும் குரல் கேட்கின்றது. உங்கள் கோபம் அவன் சித்தம். என்னைப் பின் தொடராமல் உங்கள் கடமைகளை முடிக்க அரண்மனை செல்லுங்கள்" என்று சொல்லிவிட்டாள்.

தேடக் கிடைக்காத பொக்கிஷத்தை, அலட்சியத்தால் கை நழுவ விட்டோமே என மனம் மருகினார் ராணா. ஊரார் ராணாவைத் தூற்றினர். இதையெல்லாம் கேள்விப்பட்ட அக்பர் 'தான் இசையைக் கேட்டு கண்ணனுக்கு முத்துமாலை பரிசாக அளித்ததைக் காரணமாகக்



கொண்டு மீரா நாடு துறந்ததற்காக கோபம் கொண்டு ஓலை அனுப்பினார். மீராவைத் தான் தெய்வப் பெண்மணியாகவே நினைத்ததாகவும், அவள் உடனே நாடு திரும்பாவிடில் மேவாரின் மீது படையெடுப்பதாகவும், ராஜ நீதிக்குப் புறம்பாக ராணா நடந்ததாகவும், கண்டித்து எழுதி இருந்தார்.

மீராவின்பிரிவால் மனம் நொந்திருந்த ராணாவுக்கு அக்பரின் லிகிதம், வெந்தபுண்ணிலே கொதிக்கும் எண்ணை பட்டது போல இருந்தது.

ராணாவின் மதியூகி மந்திரி ரகுநாதபட்டர். நல்ல விஷயங்களை ராணாவுக்கு எடுத்து சொல்பவர். மீராவின் மீது அவச் சொல் கிளம்பிய போதெல்லாம் 'வம்பு' என்று கூறி ராணாவின் மனதைத் தேற்றி வந்தவர். இப்போதும் அவர் தான் ஆறுதல் கூறி சன்யாசி வேஷத்தோடு மீராவைப் பார்த்து அழைத்து வரலாம் என்று யோசனை சொன்னார். அதன்படி இருவரும் மாறுவேடத்தில் பிருந்தாவனம் வந்தனர்.

பிருந்தாவன ஆலயத்தின் ரூபகோஸ்வாமி என்று ஒரு பெரியார் இருந்தார். அவர் பெண்களையே பார்ப்பதில்லை என்ற விரதம் கொண்டிருந்தார். மீரா வருகிறாள் என்று கேட்டதும் கோவிலை விட்டுப் புறப்பட்டார். பிறகு ஆண் பெண் என்ற இன வேறுபாடில்லாத அவளது தத்துவங்களை பிறர் சொல்லக் கேட்டு அவளைக் கண்டு அவள் பாடலில் லயித்தார். பிருந்தாவனம் வந்த ராணாவுக்கு வழிப் போக்கர்கள் மூலமாக இந்தச் செய்தி எட்டியது மீராவின் மகிமையை அறியாத மூடன் ஆனேனே என நொந்து கொண்டான் ராணா.

சன்யாசி வேஷத்திலிருந்த மந்திரி பாதுஷாவின் ஓலையைக் காட்டி செய்தியைக் கூற, மீரா, "எனக்கு இனி உறவெல்லாம் கிரிதாரி தான். என் இருப்பிடம் அவன் சன்னதி தான். அரசியாக போகங்கள் அனுபவிக்க என் மனம் சம்மதிக்க வில்லை. என்னால் ஒரு படையெடுப்பு வேண்டாம். ராணாவுக்கு எத்தனையோ மனைவியர். என்னால் அந்த இடத்தை நிரப்ப முடியாது. சதாகாலமும் பஜனையும், பாடலுமே என் ஜீவிதம். அதற்கு சம்மதித்தால் வருகிறேன்" என்றாள்.

ராணா சம்மதித்தார். பக்தை மீரா மேவார் திரும்பினாள். அந்தப்புரக் கோவில் மீராவின் இனிய கானத்தால் நிறைந்தது. ராணாவின் மனமும் நிம்மதி அடைந்தது.

அன்று கிருஷ்ண ஜயந்திதினம். வேணுநாதனுக்கு அழகிய ஆபரணங்கள். மலர்மாலை.. தீப அலங்காரம். மீரா புனித கோலத்தில் தம்பூராவோடு பாடிக் கொண்டிருக்கிறாள். ராணாவின் மனதில் பழைய நினைவுகள் ஓடின. ஜயதேவருக்கு பத்மாவதி கிடைத்தது போல் எனக்கும் ஒரு பக்தை மனைவியாகக் கிடைக்கமாட்டாளா எனத் தான் கண்ணனை வேண்டி ஏங்கியதும், மீராவுக்கு மாலையிட்டதும், பின் மீராவோடு வாழ்ந்ததும், கோபம் கொண்டு திட்டியதும், பிரிந்ததும், மறுபடி தேடி ஓடி அழைத்து வந்ததும்... என்ன இது... 'ஏன் இன்று எதிரே இருக்கும் இறைவனை விட்டு எதையோ நினைக்கிறேன்" என்று தன்னை நிலை நிறுத்தி மனதைப் பரந்தாமன் மேல் ஈடுபடுத்த முயன்றார்.

மீரா வேகமாகப் பாடியபடி நடனமாடிக் கொண்டிருந்தாள் "மீரா பிரபு கிரிதாரி" என்ற குரல் எங்கும் எதிரொலித்தன. ராணாவும், மீராவும் சேர்ந்து இயற்றிய பாடல்களைப் பாடினாள் மீரா. ராணாவையும் பாடும்படிக் கூறினாள். ராணாவும் மெய்மறந்து பாடினார். திடீரென்று சுருண்டு விழுந்தாள் மீரா. எல்லோரும் திடுக்கிட்டுப் பார்க்க, தானே எழுந்த மீரா,

"ராணாஜீ, பரம பக்தரான, பக்தி வழிக்கே துணையாக வந்த உங்களை வணங்கி விடை பெறுகிறேன். அதோ கிரிதாரி என்னை அழைக் கின்றான்... இதோ வந்துவிட்டேன் கோபாலா" என்று மெல்லிய குரலில் கூறியபடி, சன்னதியை நோக்கி இரண்டடி வைத்தாள்.

அவ்வளவு தான்! பளிரென்று கண்ணைப் பறிக்கும் மின்னல்! கர்ப்பக் கிரகத்தின் கதவுகள் வெளியே அடித்த மழையிலும், காற்றிலும் படாரென்று மூடிக் கொண்டன. மறுபடி கதவு திறந்து கொண்ட போது மீரா கிருஷ்ண விக்கிரகத்தை அணைத்தபடி இருந்தாள். விளக்குகள் காற்றில் அணைந்தன. விளக்குகளை ஏற்றச் சொன்னான் அரசன். ஏற்றிய பிறகு பார்த்தால் மீராவைக் காணோம். மீரா கட்டிக் கொண்டிருந்த புடவை கண்ணன் விக்கிரகத்தைச் சுற்றிக் கொண்டிருந்தது. இனிய வேணு கானமும், மீராவின் குரலும் கேட்டது. கும்ப ராணா அடியற்ற மரம்போல் விழுந்தார்.

தமிழ் நாட்டில் கண்ணனைப் பதியாக வரித்து அவனோடு கலந்தவள் கோதை. வடநாட்டில் மீராபாய். இன்றும் அவள் கீதங்கள் மெய்யுருகச் செய்பவை.

19. சமர்த்த ராமதாஸர்

வட இந்தியாவில் ஜான்புரி என்ற ஊர். அங்கே சூர்யாஜி பண்டிதர் என்ற அந்தணர் வாழ்ந்து வந்தார். அவர் மனைவியின் பெயர் ராணுபாய். இவர்களுக்குத் திருமணமாகி ஒரு மாமாங்கமாகியும் குழந்தை இல்லை. குல தெய்வமான சூரிய பகவானையும், ஸ்ரீ ராமனையும் வணங்கி வழிபட்டனர்.

ஒருநாள் சூரிய நாராயணன் பிரசன்னமாகி, 'என்ன வரம் வேண்டும்?' என்று கேட்டார். 'தெய்வபக்தியும், நல்ல குணங்களும் வாய்ந்த பிள்ளை வேண்டும்' என்றார் சூர்யாஜி.

"என்னையும் ஸ்ரீராமனையும் வழிபட்டதால் உனக்கு இரண்டு பிள்ளைகள் பிறக்கும். மூத்தவன் என் அம்சமாகவும், இரண்டாமவன் ஸ்ரீராமனின் பிரியத்துக்குப் பாத்திரமான ஆஞ்சநேயர் அம்சமாகவும் பிறப்பார்கள்" என வரம் கொடுத்து மறைந்தார் ஆதித்தன்.

பத்தாம் மாதம் சூரியனார் அருள் வாக்கின்படி ஒரு ஆண் குழந்தையைப் பெற்றாள் ராணுபாய். கங்காதரன் என்று பெயரிட்டு அன்புடன் வளர்த்தனர். அவனுக்கு ஐந்து வயதானதும் மீண்டும் ஒரு ஆண்குழந்தையை ஈன்றெடுத்தாள் ராணுபாய்.

குழந்தைக்கு ஒரு குட்டி வாலிருக்க திடுக்கிட்டாள் அன்னை. "ராணு, இவன் ஆஞ்சனேய அம்சம் என்று நினைவூட்டவே வாலோடு பிறந்திருக்கிறான். இவன் பெரிய மகானாய் வருவான். இவனைப் பாதுகாப்பாய் வளர்க்க வேண்டியது நமது கடமை" என்றார் சூர்யாஜி. குழந்தைக்கு நாராயணன் என்று பெயர் சூட்டினர். நாராயணனுக்கு ஏழாவது ஆண்டில் உபநயனம் நடந்தது.

நாராயணனுக்கு விஷமம் அதிகம். பள்ளிக் கூடத்துக்கு ஒழுங்காகப் போகாமல் மற்ற பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு ஊரில் ஒரு மரம் பாக்கி இல்லாமல் மாங்காய், இளநீர், வாழைப்பழம் என்று திருடிக்கொண்டு இருந்தான். காவலாள் வருகிற சத்தம் கேட்டால் மரத்துக்கு மரம் தாவி மறைந்து ஓடி விடுவான். மற்ற சகாக்கள் மாட்டிக் கொள்வார்கள். கிணற்றில் இறங்கிக் குளிப்பான்.

"நாராயணா, இப்படி சின்னப் பிள்ளைகள் இருட்டிய பிறகு தோட்டத்தில் இருந்தால் பூதம் வந்து விழுங்கிவிடும்" என்று பயமுறுத்திப் பார்த்தாள் அன்னை.

"ஒரே உதை... பூதம் அதற்கப்புறம் உயிரோடு இருக்குமா?" என்று முஷ்டியைக் காட்டினான் நாராயணன். இவனை எப்படி அடக்குவது என்று புரியாமல் விழித்தாள் தாய்.

கங்காதரனுக்கு உரிய வயதில் திருமணம் செய்வித்தனர் பெற்றோர். வேதங்கள் பயின்ற கங்காதரன் சாதுக்களை ஆதரித்து இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்தான். மரத்திலும், கொம்பிலுமாக காலம் கழித்தாலும் நாராயணனுக்கு ஒரு தடவை படித்தாலே பாடங்கள் மனதில் பதிந்து விடும். சீக்கிரமே கல்வியில் தேர்ந்து விட்டான்.

ஒரு நாள் ராணுபாய் மைந்தனிடம் "நாராயணா, எங்களுக்கோ வயதாகிறது. சீக்கிரமே உனக்கும் ஒரு வாழ்க்கை அமைத்துக் கொடுத்தாலல்லவா நிம்மதியாயிருப்போம்! இப்படிப் பொறுப்பின்றி இருக்கலாமா? ஏதேனும் ஒரு வேலை தேடிக் கொண்டால் தானே பெண் கொடுப்பவர்கள் தேடி வருவார்கள்" என்று வருத்தப்பட்டுக் கொண்டாள்.

நாராயணன் யோசித்தான். 'வேலை தேடிக் கொள்வதா? எங்கே எப்படித் தேடுவது' இப்படி சிந்தித்தபடியே நடந்தவனுக்கு அறுவடை முடிந்து நெல்லை மூட்டையாகக் கட்டிப் போட்டிருப்பது தெரிந்தது. வண்டிகள் வரிசையாக நிறுத்தப்பட்டு மூட்டைகள் ஏற்றப்பட்டன. ஒரு மூட்டையை வண்டியிலேற்ற நான்கு பேர் உதவி தேவையாக இருந்தது. ஒரு மூட்டையைத் தூக்கிக் கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டான் நாராயணன்.

இதைப் பார்த்த ஒரு குடியானவன் அவன் பின்னே ஓடினான். வீட்டுத்திண்ணையில் மூட்டையை இறக்கிய நாராயணன் "அம்மா, நீ சொன்னபடியே வேலை தேடிக் கொண்டேன்" என்று உரக்கக் கூவினார்.

ராணுபாய் விரைந்து வந்து பார்த்தாள். 'எத்தனை பெரிய மூட்டை... நாராயணன் தனி ஆளாய் தூக்கி வந்திருக்கிறானே' என்று நினைப்பதற்குள் பின்னால் வந்த குடியானவன் "அம்மா, அம்மா மூட்டை எங்களது. இவர் பாட்டுக்கு தூக்கி வந்து விட்டார். ஆனால் நாலுபேர்

தூக்கவேண்டியதை இவர் ஒத்தை ஆளாக எப்படித் தூக்கினார் என்பதை நினைத்தால் ஆச்சரியமாயிருக்கிறது" என்றான்.

நாராயணன் "எதற்கு வீண்பேச்சு... உன்னுடையது என்றால் எடுத்துப் போயேன்" என்றான்.

உடனே குடியானவன் உதவிக்கு இரண்டு பேரைக் கூட்டிக் கொண்டு வந்து மூட்டையை எடுக்க, பழைய மூட்டை கிடந்த இடத்தில் புதிதாக



மற்றொரு மூட்டை இருந்தது. அனைவரும் திகைத்தனர். ராணுபாய் பிரமித்தாள்.

"ஐயா, தாங்கள் அவதார புருஷன்" என்று சொல்லி அனைவரும் நாராயணனை வணங்கினர். சூர்யாஜி வந்ததும் இந்த அதிசயச் செயலைக் கூறி ஆச்சரியப்பட்டாள் ராணுபாய்.

எங்கு சென்றாலும் தன்னை எல்லோரும் வணங்குவதையும், வியப்போடு பார்ப்பதையும், குறிகேட்பதையும் கண்டு ஊர் சுற்று வதைவிட்டு விட்டான் நாராயணன். எப்போதும் பகவத்தியானம். தனிமை. நாராயணன் பெருமை பரவவே அவனுக்குப் பலர் பெண் கொடுக்கப் போட்டி இட்டனர். அதில் ஒரு அழகான மங்கையை நிச்சயித்தாள் ராணுபாய்.

ராணுபாய் பெண்ணைக் காட்டி "பிடித்திருக்கிறதா?" என்று கேட்டாள். "எதற்கு கேட்கிறாய்? ஏன்" என்று கேட்டார் நாராயணன். "என்னடா இப்படிக் கேட்கிறாய்? உனக்குக் கலியாணம் பண்ண! குலம் விளங்க வேண்டாமா?" என்றாள் தாய்.

"ஏனம்மா, குலம் விளங்க அண்ணா திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்துகிறானே! ராமபக்திக்குத் தடையாக இந்தக் கட்டு ஏன்?" என்று விவாதித்தான் நாராயணன். ராணுபாய் சிரித்தாள். "உன் நல்லது, கெட்டது எங்களுக்குத் தெரியும். கட்டடா என்றால் தாலிகட்ட வேண்டியது உன் பொறுப்பு" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டாள்.

இது இவ்வளவுதான் என்று நினைத்திருந்த நாராயணனுக்கு விவாக ஏற்பாடுகள் மும்முரமாக நடப்பது திகிலூட்டியது. யாருமறியாமல் வீட்டை விட்டு ஓடிவிட்டான். மூலைக் கொருவராய் தேடினர்.

"இந்தமட்டில் தாலிகட்டியபின் ஓடாமல் முன்னதாக ஓடினானே" என்று ஆறுதலடைந்தனர் பெண்ணைப் பெற்றவர்கள்.

"வாலோடு பிறந்த ஆஞ்சனேய அம்சத்தவனை இல்லறத்தில் வற்புறுத்தி ஈடுபட முயற்சி செய்தது தவறு" எனப் பேசினர் ஊரார்.

மகனைக் காணாமல் துயரத்தில் மூழ்கினர் பெற்றோர். அடர்ந்த காட்டு வழி சென்றார் நாராயணன். மரத்தில் மலைபாம்பு சுற்றிக் கொண்

டிருந்தது. அருகிலுள்ள ஓடையில் புலி தண்ணீர் அருந்திக் கொண் டிருந்தது. சிங்கம் தன்குட்டிகளுக்குப் பாலூட்டிக் கொண்டிருந்தது. ஒரு பக்கம் மதம் கொண்ட யானை ஒன்று மரங்களை முறித்துக் கொண்டிருந்தது. வாயில் ராமநாமத்தோடு நடந்து சென்று கொண்டிருந்த நாராயணனை எதுவும் கவனித்ததாகத் தெரியவில்லை. அவரும் எதையும் நின்று வேடிக்கை பார்க்கவில்லை.

இராமனது தரிசனம் பெற வேண்டுமானால் தாசனான ஹனுமானைத் துதிப்பது தான் சிறந்தவழி என்று அவர் மனதில்பட்டது. அன்ன ஆகார மின்றி பலநாள் தியானித்தும் பலன் கிட்டவில்லை. ஆயாசமில்லாமல் இராமனை தரிசிக்க முடியாது என்பது தெய்வ நியதி என நினைத்தார். காட்டுக் கொடிகளை சேகரித்தார். மரத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டு அக்கொடிகளால் இரண்டு பாதங்களையும் வலுவாகக் கட்டினார். மெதுவாக மரக்கிளையின்று தலைகீழாகத் தொங்கினார்.

இருகைகளையும் கூப்பியபடி "வாயு மைந்தனே! அஞ்சனை வயிற்றில் பிறந்தவனே! சூரியனைப் பழமென்று பிறந்த போதே பறந்து சென்று பறிக்கச் சென்ற வீரனே! நித்திய சிரஞ்சீவி! அகழியைத் தாண்டி அன்னைக்குக் கணையாழி அளித்தவனே! சூடாமணி வாங்கிவந்து ஐயன் துயர் துடைத்த மாருதி! இலங்கையை எரித்தவனே! எனக்கு ஐயன் அருள்கிடைக்கச் செய்யாவிடில் இந்த உயிரை இப்போதே போக்கிக் கொள்வேன். இது நிச்சயம்" என்று பிரார்த்தித்தார்.

புயலென காற்று வீசியது. மழை பொழிந்தது. இடி இடித்தது. மின்னியது. பார்த்தால் வாயு மைந்தன் அனுமான் பிரசன்னமாகி நாராயணனின் கால்கட்டுக்களை அவிழ்த்துக் கொண்டிருக்கிறார்.

"நாராயணா! அங்கே கால்கட்டு வேண்டாமென்று ஓடி வந்தவன் இங்கே தானே கட்டிக்கொண்டிருக்கிறாய்" என ஹாஸ்யமாகப் பேசியவர், "அன்பா... உடலெல்லாம் வலிக்கின்றதா?" என்று பிடித்து விட்டார். "எனக்கு ராமனைக் காண்பிக்க வேண்டும்" என்று அவர் பாதங்களில் பணிந்து கேட்டார் நாராயணன். அவனைக் கையைப் பிடித்து அழைத்துச் சென்றார் ஆஞ்சனேயர்.

பஞ்சவடி ஆலயம். ஸ்ரீராம நவமிதினம். அந்தண வடிவில் மாருதியும், நாராயணனும் ஒரு ஓரமாய் உட்கார்ந்திருக்கின்றர். ராமகதையைச்

சொல்லி பஜனை செய்த பக்தர் கூட்டம் போகும் வரை காத்திருந்தார் மாருதி. இரவு வந்தது. அர்ச்சகர் கண்களில் படாதவாறு மறைந்திருந்தனர்.

அர்ச்சகர் கோவிலைப் பூட்டிக் கொண்டு போனபிறகு அனுமார் கர்ப்பகிருகத்துள் சென்று இராமனை ஸ்தோத்தரித்தார். "சீதாபதி... நாராயணன் என் அம்சமாகப் பிறந்தவன். உன்தரிசனம் வேண்டி வந்திருக்கிறான். அருள் செய்ய வேண்டும்" என்று பிரார்த்தனை செய்தார்.

இராமன் தோன்றி "ஆஞ்சனேயா, சேதுவைக் காவல் செய்யும் வேலையை விட்டு வந்த காரணம் என்ன?" என்றார். இராமன் குரல் கேட்கிறது. உருவம் புலப்படவில்லை. பரிதபித்து சுற்றும் முற்றும் பார்த்தார் நாராயணன். ஆஞ்சனேயருக்கு விஷயம் விளங்கி விட்டது.

"ராமா, இவனுக்கு உபதேசம் செய்ய வேண்டிய குரு நீங்கள் தான்" என்றார். உடனே இராமபிரான் நாராயணன் தலையின்மீது கைவைத்து ஆசிர்வதித்து வலக்காதில் தாரகமந்திரத்தை உபதேசிக்க, நாராயணன் கண்களுக்கு ஸ்ரீ ராமச்சந்திரன் சீதா, லட்சுமண, அனுமத் சமேதராய் காட்சி தந்தார். நாராயணன் மெய்மறந்து பாடி ஆடினார். பகவான் பாதங்களில் விழுந்து விழுந்து எழுந்தார்.

"மாருதி, சேதுக் காவலுக்குப் புறப்படு" என்று உத்தரவிட்டார் ராமர். "நாராயணா! வா, போகலாம்" என்று ஆஞ்சநேயர் அழைக்க, "தங்கள் திவ்யதரிசனம் எனக்கு நிதமும் வேண்டும். தங்களைப் பிரிந்து நான் உயிர் தரிக்கமாட்டேன்" என்று நாராயணன் புலம்ப, பகவான்.

"நாராயணா, இன்று முதல் நீ இராமதாசன் என்றே வழங்கப் படுவாய்! நீ சென்ற விடமெல்லாம் பக்திப்பயிர் தழைக்கச் செய்... நீ விரும்பும் போதெல்லாம் மாருதிதரிசனம் தந்து யோசனை சொல்வான்" என்று அருளி மறைந்தார்.

"ஆஞ்சனேயப் பெருமானே! இராமனின் அருகாமைவிட்டு வெளிவந்தது, நீரிலிருந்து நிலத்தில் போட்ட மீனைப் போல் என்மனது துடிக்கிறது... நீங்களும் என்னைப் பிரிந்து சென்றால் என் கதி என்ன?" என்று தவித்துப் புலம்பினார் ராமதாசர்.

அனுமார் அவரைத் தேற்றி அந்தணவடிவில் சாங்க்லீ நகர் அழைத்து வந்தார். அற்புதமான எளிய பதங்களால் பாட்டமைத்து பஜனை செய்த அவ்விருவரையும், பலாச்சுளைகளை ஈமொய்ப்பது போல், மக்கள் விரும்பிச் சூழ்ந்து கொண்டனர். அனுமார் இராமாயணத்தைக் கதையாகக் கூற ஜனங்கள் பக்திப் பரவசத்தில் மெய்மறந்தனர்.

கொஞ்ச நாள் சென்றதும் அனுமார் இராமரின் கட்டளையைக் கூறி சேது காவலுக்குப் போய்விட்டார். இராமதாசர் உஞ்சவிருத்தி எடுத்து, சமைத்து, பாகவதர்களுக்குப் போட்டு தானும் உண்ணுவார். இராமனின் மகிமைகளை அழகுறப் பாடுவார். இனிமையான கதைமூலம் விளக்குவார். ஊரெல்லாம் பக்தி மார்க்கம் பரவியது. இவர்மேல் அதீதப்பிரியம கொண்டு உத்தவர் என்பவர் சீடரானார்.

பல செல்வந்தர்கள் உதவியால் அனுமார் கோவில் ஒன்று கட்டி, சர்வ லட்சணமும் கொண்ட மாருதி விக்கிரகம் ஒன்றை பிரதிஷ்டை செய்தார். மாருதியை நினைக்க அவர் முன் வந்து காட்சி தந்தார் மாருதி.

மாருதி தான் அங்கு அரூபமாக மக்களுக்கு அருள் செய்வதாக வாக்களித்து மறைந்தார். பின் வேத விதிகளின்படி கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம், திருமஞ்சனம் முதலியன நடந்தது. கொஞ்சகாலம் தானே பூஜைசெய்தபின், உத்தவரிடம் அந்தப் பணியை ஒப்படைத்துக் கானகம் சென்றார்.

கனியோ, காயோ எது கிடைப்பினும் உண்டு இராம பஜனை செய்து வந்தார். ஒரு தடவை கடும் புயலடித்து மரம் செடிகளில் ஒரு பழம், காய் கூட இல்லாமல் போன போதும் வெறும் சருகுகளைத் தின்று வாழ்ந்தாரே தவிர நாடு திரும்பவில்லை. கரடியும், ஓநாயும், சிறுத்தையும் கூட இவர் பஜனை செய்யும் போது ஆடாது அசையாது கேட்டன. சிங்கக் குட்டிகள் இவர்மேல் ஏறி விளையாடின.

ஜாரட், மஹாலி என்னும் ஊர்களில் உள்ள அனுமார் கோவிலை தரிசித்தார். கிருஷ்ணாநதிக்கரையில் அமர்ந்து மறுபடி அனுமாரை நினைத்தார். அனுமார் பிரசன்னமானதும் "குருதேவா, இராமபிரானைத் தரிசிக்க வேண்டும். என்றும் இராமன் அருகிலே இருக்கும் வழியைக் கூறவேண்டும்" என்று கெஞ்சிக் கேட்டார்.

மாருதி "இராமநாமத்தை இடைவிடாமல் மூன்றரைக் கோடி முறை சொல்ல வேண்டும். இடையே தடை ஏற்பட்டால் என்னை நினை" என்று சொல்லிச் சென்றார். நீரும், உணவும் ஏன் மூச்சையும் அடக்கி இராமநாமத்தை ஜபிக்கலானார் ராமதாசர்.

தவத்தின் வெப்பம் இந்திர லோகத்தைத் தகித்தது. 'இப்படி தவம் செய்பவர் எவர்?' என்று பிரகஸ்பதியிடம் கேட்டான் இந்திரன். அவர் ராமதாசரைப் பற்றிக் கூற, இந்திரன் ரம்பையை அழைத்து "ராமதாசர் தவத்தைக் கலைத்து விட்டு வா" என உத்தரவிட்டான். ரம்பை வணங்கி விடை பெற்றாள். ராமதாசர் தவம் செய்யும் இடத்திற்கு வந்து அற்புதமாய் நடனமாடினாள்.

தாசர் கண்விழித்துப் பார்த்து இது இந்திரன் சதியென்று புரிந்து கொண்டார். அவளுடைய பாடல்களை இராமனுக்கே அர்ப்பணித்துத்

தொடர்ந்து தவம் புரிந்தார். ரம்பைக்குக் கால் கடுத்தது. தோற்றுவிட்டதை இந்திரனிடம் தெரிவித்தாள். இந்திரனும் இராமஜபத்திற்கு இடைஞ்சல் செய்ததற்காக வெட்கினான்.

ராமதாசர் அனுமாரை நினைக்க மறுபடி மாருதி தோன்றினார். நடந்ததை ராமதாசர் விளக்க, ஆஞ்சநேயர் மகிழ்ந்து, அவர் உறுதியை மெச்சி கனிகளைத் தந்து ஆசிர்வதித்துச் சென்றார். மறுபடி பன்னிரண்டு ஆண்டுகள் மெய்மறந்து இராம தியானத்தில் ஈடுபட்டார்ராமதாசர்.

சீதா, லட்சுமண, பரத, சத்ருக்கன, ஸ்ரீ ஆஞ்சனேயஸ்வாமி சமேதராக பகவான் காட்சி கொடுத்து "ராமதாசா, எது வேண்டித் தவமிருந்தாய்?" என்று கேட்டார். "எப்பிறவி எடுத்தாலும் உன்னடி மறக்கக் கூடாது. ஐயனே, அவ்வரம் மட்டும் போதும்" என ஆடிப்பாடினார்; மலரடி பணிந்தார். இராமர் அவ்விதமே ஆசீர்வதித்து மறைந்தார்.

ஒரு நாள் மன்னன் சிவாஜி அந்தக் காட்டுக்கு வேட்டையாட வந்தார். அவர் கண்ணில் ஒரு சிறு முயல் கூட தென்படவில்லை. இதென்ன ஆச்சரியம் என்று காட்டைச் சுற்றி வரும்போது மெய்மறந்து பஜனையில் ஈடுபட்டிருக்கும் இராமதாசரைப் பார்த்தார். சுற்றி இருக்கும் விலங்குகளைப் பார்த்தார். "அருகில் போய் தரிசித்து ஆசி பெறலாம் என்றால் புதிய ஆளைக் கண்டு விலங்குகள் மிரண்டு ஓடலாம். அவருக்கு ஏதாவது கேடு ஏற்பட்டால் அந்தப் பாவம் நம்மையல்லவா சேரும்" என்று யோசித்தார். 'விலங்குகள் போகட்டும்; அல்லது மகான் கண் திறக்கட்டும்' என்று சூரியன் அஸ்தமிக்கும் வரை காத்திருந்தார். இரண்டும் நடக்கவில்லை. நாளை வரலாம் என்று அரண்மனை திரும்பினார்.

மறுநாளும் ஆவலோடு வந்து தூரத்தில் காத்திருந்தார். பலனில்லை. இப்படியே சிலநாட்கள் சென்றன. ஒருநாள் காத்திருந்து திரும்பும்போது, அவரது வேலையாட்கள் கிருஷ்ணா நதியில் மிதந்து வந்ததாக சில ஓலைச் சுருள்களைக் கொண்டுவந்து கொடுத்தனர். சிவாஜி அதைப் படித்து அதன் அழகிய கருத்துக்களில் மனதைப் பறிகொடுத்தார். 'ராமதாஸ்' என்று கையெழுத்திட்டிருந்த கவிதைகள் அவை. காட்டில் கண்ட மகானாய்தான் இருக்க வேண்டும் என்று முடிவு கட்டினார்.

அமைச்சர்கள் "மன்னா, சம்ஸ்கிருதத்தில் இதைவிடச் சிறந்த கவிதைகள் இயற்றும் புலவர்கள் நம் அரசவையில் ஏராளமான பேர்

இருக்க மராட்டியக் கவிதையை இப்படிப் புகழலாமா? அரச காரியங்கள் எதையும் கவனிக்காமல் தினமும் அதிகாலையில் காட்டுக்கு ஓடுவதும், அந்திசாயும் போது சோர்ந்துபோய் திரும்புவதும் எங்களுக்கெல்லாம் பெரிய வேதனையைத் தருகின்றது! அந்த சாமியாருக்கு எத்தனை கர்வம் இருந்தால் தங்களையே அலைக்கழிப்பார்? தங்களுக்கு உபதேசம் செய்வதை பாக்கியமாகக் கருதி எத்தனை குருமார்கள் காத்திருக் கின்றனர்!" என்று போதித்தனர். சிவாஜி எவர் சொல்லையும் லட்சியம் செய்யவில்லை.

ஒருநாள் ராமதாசர் மாருதியைக் காண ஆசை கொண்டு நினைத்த நேரமும், சிவாஜி அங்கே வந்த நேரமும், ஒன்றாய் இருந்தது. ஆஞ்சனேயரை தரிசிக்கும் புண்ணியம் மன்னருக்கும் கிடைத்தது. மாருதி மறைந்ததும் மன்னரை அருகில் அழைத்தார் ராமதாசர். "தினமும் வந்து வணங்கிச் செல்லும் புண்ணியவானே! உமக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

சிவாஜி ராமதாசரை வணங்கி "என்னைச் சிஷ்யனாக ஏற்று உபதேசிக்க வேண்டும்" என்றான்.

ராமதாசர் "நான் ஆண்டி; நீங்கள் அரசன். நாடாளும் மன்னருக்குத் தகுந்த குரு நானில்லை" என்றார்.

"என்று உங்களைக் கண்டேனோ அன்றே உங்களை மானசீகமாக குருவென வரித்துவிட்டேன். என்னை உதாசீனப்படுத்தாதீர்கள்" என்று மன்னர் பணிந்து கேட்க, கிருஷ்ணா நதியில் நீராடி விட்டு வரச் சொன்னார் ராமதாசர்.

சிவாஜியும் அப்படியே குளித்து தொன்னையில் தண்ணீரும், பழங்களும் கொண்டு வந்து குருவின் முன்வைத்து 'என் அரசும், ஆத்மாவும், சரீரமும் உமக்கே அர்ப்பணித்து விட்டேன்" என்று கூறி பதினோரு தடவை நமஸ்காரம் செய்தார். ராமதாசரும் வலச்செவியில் தாரக மந்திரத்தை உபதேசித்து, சிரசில் கைவைத்து ஆசீர்வதித்தார். இருவரும் சேர்ந்து பழங்களைச் சாப்பிட்டனர்.

பிறகு ராமதாஸர் "நாட்டு மக்களை தெய்வ பக்தியில் ஈடுபடுத்து. அரசை நல்லவழியில் நடத்து" என்றார். சிவாஜி திடுக்கிட்டு "குருதேவா, இதென்ன சோதனை... நாட்டை உமக்கு அர்ப்பணித்து விட்டேனே!

மக்களை நல்வழிப்படுத்துவதும், அரசாள்வதும் உமது பொறுப்பு" என்றார். "சரி, நீ எனக்களித்த நாட்டை நிர்வகிக்க உன்னைப் பிரதி நிதியாக்கி இருக்கிறேன். செம்மையாக அரசாண்டு வா" என உத்தரவிட்டார் ராமதாசர்.

நாட்டில் காவிக்கொடியைப் பறக்கவிட்டான் மன்னன். ஒரு நாள் மூன்று சப்பாத்திகள் செய்து நிவேதனம் செய்தார் ராமதாசர். விருந்தாளி ஒருவர் 'பசி' என்று வந்தார். அதேசமயம் அரசனும் இவரைக் காண வந்தான். அரசருக்கு ஒன்றும், அதிதிக்கு ஒன்றும் கொடுத்து தானொன்று சாப்பிட்டார் ராமதாசர். அறுசுவை உணவிலும் பெரிதாக எண்ணி அதை ருசித்து உண்டான் மன்னன்.

தங்கத்தினால் பூண்பிடிக்கப்பட்ட சாளிக்கிராமம், துளசிமாலை, பட்டு வஸ்திரங்கள் இதையெல்லாம் ராமதாசருக்குப் பரிசாக அளித்தான் வேந்தன். அவைகளைத் திருப்பிக் கொடுத்த ராமதாசர் அவ்விடம்விட்டு மறைந்து போனார்.

மஹாபலேச்வரை அடுத்த நீடுமலைக்காடு. அங்கே அந்நகரத்துச் சிறுவர்கள் வந்து விளையாடுவார்கள். அவர்களுக்கு மாங்காய் பறித்துக் கொடுப்பார். இளநீர் அறுத்துப் போடுவார். சிங்கம், புலி, கரடி போன்ற குட்டிகளுடன் பயமின்றி விளையாட வைத்தார். பலாப்பழத்தை அறுத்து சுளைகள் எடுத்துக் கொடுப்பார்.

ஒரு நாள் சிறுவர்கள் விளையாட்டில் ஒரு பையன் அடித்த கல் தாசரின் நெற்றியைத் தாக்கியது. இரத்தம் 'குபுகுபு'வெனப் பெருகியது. மயக்கமாய் விழுந்து விட்டார்.

"இவர் அரசனுக்கு வேண்டியவராயிற்றே! ராஜ தண்டனை கிடைக்கும்" என்று பயந்து கூட்டத்திலிருந்த சில பெரிய பையன்கள் இவரை ஆற்று மணலில் குழிதோண்டி புதைத்து விட்டனர். மன்னர் சிவாஜி குருபிரானைக் காணாமல் புலம்பிக்கொண்டே தேடி வரும் போது சில பையன்கள் அவர் அடிபட்டதைக் கூறினர்.இரத்தம் சிந்தி இருப்பதை அடையாளம் வைத்து சிவாஜி ராமதாசரைப் புதைத்த இடத்துக்கு வந்து விட்டார். பணியாட்களை விட்டு தோண்டிப் பார்க்க, இராமதாசர் கைகால்களை உதறிக் கொண்டு எழுந்து வந்து விட்டார்.

"ஏழுநாட்களாய் ஒரேபசி. சமையல் செய்யச்சொல்" என்றார் குருதேவர். மன்னர் மிகவும் வருத்தத்துடன் "சுவாமி, பொன்னையும், பட்டையும் காட்டி உங்களை விரட்டிய பாவியாகி விட்டேன். என்னாலன்றோ ஒருவாரமாய் அடிபட்டு மண்ணில் புதையுண்டு கிடந்தீர்கள்!" என்று அங்கலாய்த்தான்.

சமையலானதும் அதிதிக்கு உணவளித்து, மன்னரும், குருநாதரும் சாப்பிட்டனர். நகரத்துக்கு வருமாறு மன்னர் வேண்டுகோள் விடுக்க, 'காலம் வரும்போது கண்டிப்பாக வருகிறேன்' என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

தத்தாத்ரேயன் என்று ஒரு நாவிதன். தத்து என்பது அவனது பெயர் சுருக்கம். ராமதாசரிடம் உபதேசம் பெற்றவன். சிவாஜியைப் பார்க்க தாஸர் புறப்பட்ட போது கூடச்சென்றான். நகரத்தை அடைய மூன்று மைல் இருந்தது. குளித்து விட்டு வந்த தத்துவைப் பசிவாட்டியது. அருகிலிருந்த வயலில் முற்றிய சோளக்கதிர்கள் 'வா, வா' என தலையாட்டின. மூன்று சோளக் கதிர்களைப் பறித்தான் தத்து. பறிக்கும் போது சொந்தக்காரன் வந்துவிட்டான். தடிகொண்டு நையப்புடைத்தான் சோளக் கொல்லைக்கு உரியவன்.

தூரத்தில் உட்கார்ந்திருந்த இராமதாசரையும் பார்த்தான். அவர் யார் என்று அறியாதவன் "ஓகோ, அவன்தான் பறித்துவரச் சொல்லி இருப் பான். இருவரும் கூட்டுக் களவாணிகள்" என்று உறுமிக் கொண்டு வந்து அவரையும் செம்மையாக அடித்துவிட்டான்.

தத்தாத்ரேயன் பேச்சே வராமல் விம்மி விம்மி அழுதான். "உண்மை யான பக்தனுக்கு சுகமும் துன்பமும் சமமே...! ஊரான் தோட்டத்தில் கை வைக்கக் கூடாது என்பதை நான் உனக்கு போதிக்க வில்லை. அதற்காகத் தான் எனக்கும் தண்டனை கிடைத்தது. சரி, சரி... இதை எவரிடமும் சொல்லாதே" என உத்தரவிட்டார் இராமதாசர்.

சிவாஜி இவர் வருவதை அறிந்து நகரை அலங்கரிக்க உத்தரவிட்டான். யானை மேல் ராமதாசரை ஊர்வலமாக அழைத்து வந்து மரியாதை செய்தார். குருநாதர் உணவு உண்ணும் போது அருகிருந்து விசிற, முதுகிலிருக்கும் தழும்புகள் அரசன் கண்களில் பட்டன.

அரசன் பதறி தத்துவை விசாரித்தான். குருநாதர் ஆணைக்குப் பயந்து தத்து மௌனமாய் இருந்துவிட்டான். பின்னர் தத்துவும், மன்னரும் தனியே உணவருந்தும் போது அரசர் "உண்மையைக் கூறாவிடில் உயிர் துறப்பேன்" என்று சொல்ல, தத்து பயந்து நடந்ததைக் கூறிவிட்டான். அரசர் கோபமடைந்து, சோளக்கொல்லை சொந்தக்காரனைச் சிறையில் அடைத்து விட்டார்.

இராமதாசர் இதை அறிந்ததும் அவனை விடுவிக்கச் செய்து உபதேசித்து அனுப்பினார். அவனுக்குப் பரிசாக பொன்னும், பொருளும் கொடுக்கச் செய்தார்.

பின்னர் தன்னால் குடிமக்களுக்குத் தொல்லை கூடாதென்றும், அரசன் அரசாங்க காரியங்களைக் கவனிக்காமல் தன்னுடனேயே இருந்து விடுவதையும் எண்ணி, யாருக்கும் தெரியாமல் தத்துவுடன் புறப்பட்டு விட்டார் ராமதாசர்.

ஆனால் மறுநாள் சிவாஜி ராமதாசரைத் தேடிக் கண்டு பிடித்து விட்டார். குருதேவர் தீர்த்தயாத்திரை போவதை அறிந்து தானும் கூட வருவதாக வேண்டினார். ராமதாசர் அரசன் பாதுகாப்பின்றி வருவது நல்லதல்ல என்று எடுத்துக்கூறி அவரைத் தவிர்த்துக் கொண்டு புறப்பட்டு விட்டார்.

சிவாஜி யானை, ஒட்டகம் இவற்றின்மீது ஏராளமான உணவுப் பொருள்களும், ஆடைகளும், பொன்னும், பொருளும் ஏற்றி காவலுக்கு ஆட்களோடு அனுப்பி வைத்தார்.

ராமதாசரும் வழியெல்லாம் ஏழை எளியவர்கட்கு அன்னதானம், திருமணம் செய்வித்தல், யாக, ஹோமங்கள் செய்து வைதீகர்களுக்கு தட்சணை கொடுத்தல், குளிருக்கு கம்பளி, போர்வை கொடுத்தல் இப்படி பல தர்மங்கள் செய்து கொண்டே போனார். தான்மட்டும் உஞ்சவிருத்தி எடுத்தே சாப்பிட்டார்.

ஒருநாள் சிலர் உண்டைவில் அடித்துக் கொண்டிருந்தனர். ராமதாசர் தானும் ஒரு உண்டைவில் எடுத்து அடித்தார். அவர் வைத்தகுறி தப்பாமல் அடிப்பது கண்டு அனைவரும் ஆச்சரியப்பட்டனர். ஒரு பறவை அவரது உண்டைவில்லால் அடிபட்டு இறந்து விழுந்தது.

அங்கு கூடி இருந்த பிராம்மணர்கள், "உயிர்வதை செய்பவன் கிராதகன். இவன் பக்தி வெறும் வேஷம்" என்று தூற்றினர். இராமதாசர் "வாஸ்தவம் தான். தெரியாமல் அடித்து விட்டேன். பறவையைப் பிழைக்கவைத்து என் பாபம் தீர்க்க வேண்டும்" என்று பகவானைப் பணிந்து வேண்டினார்.

"செத்ததைப் பிழைக்க வைக்க உங்கள் இராமன் வந்தாலும் ஆகாது" என்று அவர்கள் வெறுப்புற்றுப் பேச, "அப்படிச் சொல்லாதீர்கள்! இராமநாமத்துக்கு மிஞ்சிய மருந்து உலகில் உண்டோ" என்றவர் செத்த பட்சியை 'இராம' என்ற கூவியபடி ஆகாயத்தில் வீசியெறிய, அது சிறகடித்துப் பறந்து சென்றது. 'இவர் தெய்வப் பிறவி' என அனைவரும் போற்றினர். அனைவரும் இராம நாமத்தைக் கோஷமாக உச்சரித்தனர்.

அன்னதானமும், இராமாயண கதாகாலட்சேபமுமாக இவர் பக்தியைப் பரப்பும் பொழுது இவருக்கு ஒரு தடவை இராமனின் தரிசனம் கிடைத்தது. பின்னர் இராமதாசர் சாங்க்லீக்குப் புறப்பட்டார். அனுமார் கோவிலில் சேவை செய்து கொண்டிருந்த உத்தவர், குருநாதர் வருகை கண்டு மகிழ்ந்தார். அங்கு மூன்று நாட்கள் தங்கி அநேகருக்கு உபதேசம் செய்துவிட்டு பஜனை செய்து கொண்டே பெற்றவரைக் காணப்புறப்பட்டு விட்டார்.

சிவாஜியின் குருநாதர் என்று ஜான்புரியில் இவருக்கு ஏகவரவேற்பு. பூரண கும்ப மரியாதைகளோடு வேதியர்கள் வரவேற்றனர். வழக்கம் போல் இராமாயணப் பிரசங்கம் நடந்தது. இராமாயணம் முடிந்ததும் ஒரு அன்பர் அவரை நெருங்கி "நீங்கள் சூர்யாஜியின் பிள்ளை நாராயணன் தானே! உங்களைக் காணாமல் தவிக்கும் அம்முதியவர்களுக்கு உங்கள் வரவைச் சொல்ல அனுமதி உண்டா?" என்று கேட்டார்.

"பெற்றவரைத் தேடி பிள்ளை செல்வது தான் இயற்கை. நானே வருகிறேன்" என்று புறப்பட்டார் இராமதாசர். அதற்குள் "உங்கள் பிள்ளை தான் இராமதாசர் என்ற பெயரிலே பஜனை செய்கிறான்" என்று ஊரார் கூறவே கங்காதரன், அவன் மனைவி; ராணுபாயுடன் அங்கே வந்து விட்டார் சூர்யாஜி.

பெற்றோரையும், தமையனையும் வணங்கினார் ராமதாசர். "மன்ன வனும் வணங்கும் புதல்வனைப் பெற என்ன புண்ணியம் செய்தோமோ?"

என பெற்றவர் புத்திரனை மார்போடணைத்து மன மகிழ்ந்தனர். பின்னர் தத்துவோடு வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். மூன்று நாட்கள் அங்கே தங்கி இருந்தார் இராமதாசர்.

தினமும் கதாகாலட்சேபம் நடந்தது. அன்னதானம், வஸ்திர தானம் நடந்தது. ஆயினும் தாமும் சீடனும் சாப்பிட உஞ்சவிருத்தி எடுத்தார் இராமதாசர். பின்னர் சிவாஜியைப் பார்க்க பெற்றவரிடம் விடை கேட்டார். நெடுநாள் கழித்துப் பார்த்த மகனைப் பிரிய மனமின்றி, கூடவே புறப்பட்டு விட்டனர் பெற்றவரும், உடன் பிறந்தவனும்.

சிவாஜி அவர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றார். கங்காதரன் கதா காலட்சேபம் செய்வதில் வல்லவன் என்றறிந்து ராம மகிமையைச் சொல்ல ஏற்பாடு செய்தார் மன்னர். அரசனாயிற்றே என்று வெட்கப்படாமல் தானும் ஒரு செம்போடு குருநாதர் கூட உஞ்ச விருத்திக்குப் போவார். குருநாதர் தருவதையே அன்புடன் சாப்பிடுவார். ஒரு மாதமான பிறகு தாசர் தனிமை வேண்டி காட்டிற்குப் புறப்பட பெற்றவரும், உடன் பிறந்தவரும் மன்னரிடம் விடை பெற்றுக் கொண்டு தங்கள் ஊருக்குத் திரும்பினர்.

மஹாபலேஷ்வரின் ஒரு சாப்பாட்டுப் பிரியன் இருந்தான். அவனுக்குப் படிப்பும் வரவில்லை. வேலை செய்யவும் உடல் வணங்கவில்லை. சொத்தும் இல்லை. இராமதாசரிடம் சிவாஜிக்கு உள்ள பிரியத்தைக் கேள்விப்பட்டு அவரிடம் உபதேசம் பெற்றால் நல்ல சாப்பாடும், வசதிகளும், பணமும் கிடைக்கும்'' என்று தீர்மானித்து தாசர் இருக்குமிடம் சென்று, அவர் கால்களில் விழுந்து உபதேசம் செய்யும்படி வேண்டினான்.

''உபதேசத்தால் உனக்கென்னப்பா நன்மை?'' என்று குருபகவான் கேட்க, ''வயிறு நிறைய சாப்பாடு... நினைத்த இடத்திற்குப் போகலாம். செலவுக்குப் பணம்... கவலையில்லாத வாழ்க்கை கிடைக்கும்'' என்றாள் அந்த முட்டாள்.

அவனுக்கு உபதேசம் செய்ய மறுத்தார் தாஸர். அவன் அவர் முன்னாலுள்ள பாறையில் மண்டையை மோதிக் கொள்ளத் தொடங்கினான். தாசர் அவனைத் தடுத்து உபதேசம் செய்து நற்போதனைகளும் புகட்டினார்.

மூடனுக்கு ரொம்ப சந்தோஷம் நினைத்தது நடந்ததில். தினம் உஞ்சவிருத்தி எடுத்து வருவதில் உப்பில்லாத அடையோ, ரோட்டியோ தயாரித்து சீடர்களுக்குக் கொடுத்து தானும் உண்டார் தாசர். முட்டாளுக்கு அந்த உணவு தொண்டையில் இறங்கவில்லை. 'இதென்னடா கஷ்டம்' என்று மனதுக்குள் சலிப்பு வந்தது.

இந்த நிலையில் மன்னர் சிவாஜி இவரைக் காணவந்தார். அவர் கொண்டு வந்த சுவையுள்ள பட்சணங்களை குரங்குகளுக்கும், பட்சிகளுக்கும், குழந்தைகளுக்கும் கொடுத்து விட்டு உப்பில்லா அடை செய்து சீடர்களுக்குத் தந்தார் தாசர்.

ஆவலோடு பார்த்த சீடனிடம்"நாம் புலனடக்கம் மேற்கொண்ட தவசிகள். உப்பு கோபத்தையும், உணர்ச்சிகளையும் தூண்டவல்லது. அதை நீக்குவதே நல்லது"என்று ராமதாசர் கூறினார். இதன்பிறகு இராமதாசரிடம் மூடனுக்குப் பிடிப்பு இல்லை.

"தெரியாமல் வந்து மாட்டிக் கொண்டோம். எப்படியாவது பிய்த்துக் கொள்ள வேண்டும்" என்று முடிவு கட்டினான். 'தீர்த்தயாத்திரை செல்ல அனுமதி தரவேண்டும்' என்று இராமதாசரிடம் கேட்டான். தாசரும் அனுமதி அளித்தார்.

நல்ல சாப்பாட்டுக்காக ஊர் ஊராய் அலையும் போது ஒரு ஊரில் ஒரு பணக்காரர் இராமநாமத்தைச் சொல்லும் பாகவதர்களுக்கு அன்னதானம் செய்வதாகக் கேள்விப்பட்டு அங்கே போனான். சீடர்களை அவர் மிகவும் கௌரவிக்கிறார் என்று விசாரித்து அறிந்து கொண்டபின் 'அவரிடம் உபதேசம் செய்ய வேண்டும்' என்று பணிந்து வேண்டினான்.

அவர் "அவன் ஊர், பேர், வரலாற்றை விசாரித்த போது எல்லாவற்றையும் ஒன்று விடாமல் கூறினான். அவன் மடையன் என்பதை உணர்ந்து, அவனை வெளியேற்ற "அப்பா, ஒருவரிடம் உபதேசம் பெற்று விட்டால் இன்னொருவனிடம் உபதேசம் பெற முடியாது. அந்த உபதேசத்தைத் திருப்பிக் கொடுத்தால் தான் மறுபடி உபதேசம் பண்ணலாம்" என்று சொல்லி அனுப்பினார்.

முட்டாள் உடனே வேகமாக இராமதாசரிடம் வந்து "நான் வேறொரு மகானிடம் உபதேசம் பெறப் போகிறேன். தாங்கள் செய்த உபதேசம்

உள்ளே நிரம்பி இருக்கிறது. அதை தயவு செய்து திருப்பி வாங்கிக் கொள்ள வேண்டும்" என்று கெஞ்சினான்.

இராமதாசர் சிரித்தபடி "இக் கமண்டலத்துத் தண்ணீரால் நன்கு கொப்பளித்து அந்தப் பாறையில் துப்பிவிடு. வெளியே வந்துவிடும்" என்று கமண்டத்தைத் தந்தார். அவன் அப்படியே செய்ய அவர் உபதேசம் செய்த எழுத்துக்கள் பாறையில் செதுக்கப் பட்டிருந்தன. அனைவரும் ராமதாசர் மகிமை கண்டு வியந்தனர்.

முட்டாள் மகிழ்ச்சியோடு அன்னதானப் பெரியாரிடம் சென்றான். நடந்ததைக் கூறி சீடனாக ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினான்.

"அடே மட்டி... இராமதாசரை விட உயர்ந்த குருவும் உண்டோ? தங்கத்தை குப்பையில் எறிந்துவிட்டு தகரத்தை நாடி ஓடிவந்த பேதையே! என் கண்முன் நில்லாதே.. போ..." என்று விரட்டி விட்டார் அப்பெரியவர். புதையல் கிடைக்கப் போகிறதென்று நம்பி கைப்பணத்தை கோட்டைவிட்ட மூடன் தன்னை நொந்து கொண்டு கால்போன போக்கில் நடந்தான். எஞ்சிய நாட்களை நாமநாமத்தைச் சொல்லி பிச்சை எடுத்து வாழ்ந்து வரலானான்.

பண்டரி புரம் செல்லும் பஜனை கோஷ்டி ஒன்று ராமதாசர் இருக்கும் காட்டு வழியே சென்றது. அவர்களது பாட்டு இனிமை அவர் மனதை இழுக்கவே" எங்கு போகிறீர்கள்?" என்று கேட்டார்.

"பண்டரீபுரம் போகிறோம். கலியுக பிருந்தாவனம், சுவாமிகளும் வரவேண்டும்" என்று கோரினர்.

"ரகுராமனைத்தவிர வேறு தெய்வங்களைத் தொழுவதில்லை" என்று கூறிவிட்டார் ராமதாசர். "தங்கள் இஷ்டம்" என்று கூறியவர்கள் பண்டரீபுரம் புறப்பட்டு விட்டனர்.

அன்றைக்கு சோதனை போல் அதிதிகளே கிடைக்கவில்லை இராமதாசருக்கு. தத்து அலைந்துவிட்டு வெறும் கையோடு வந்தான். மறுபடி வேறுபக்கமாய் அவனை அனுப்பி வைத்தார். அப்போது "இங்கே அதிதிகளுக்கு உணவு தருவார்களாமே" என்றபடி, பகவான் அந்தண ரூபத்தில் வந்து விசாரித்தார். இராமதாசர் மகிழ்ச்சியுடன் அவரை வரவேற்று உபசரித்து ரொட்டிகளைப் பரிமாறினார்.

"ஆடி ஏகாதசி வருகிறதே! பண்டரீபுரம் போவீர்களா?" என்று கேட்டார் பகவான். "நான் பண்டரீபுரமே போனதில்லை. அது கிடக்கட்டும். நீங்கள் சாப்பிடுங்கள். உங்கள் பெயரென்ன?" அன்புடன் கேட்டார் இராமதாசர்.

"என்னது...! பண்டரீபுரம் போகாத பாவியா தாங்கள்... என் ஊர் பண்டரீ... பேர் விட்டல்... பண்டரீபுரத்திற்கு பக்தர்களை அழைத்துச் செல்வது என் பணி.... சரி, சரி, வீண்பேச்சு எதற்கு? நான் வருகிறேன். பாண்டுரங்கனைத் தரிசிக்காதவர் வீட்டில் நான் சாப்பிடுவதில்லை" பகவான் புறப்பட்டு விட்டார்.

அதே சமயம் தத்துவும் சோர்ந்த முகத்தோடு திரும்பினான். இராமதாசர் இவரையும் விட்டுவிட்டால் வேறு ஆள் கிடைக்காது என்பதைப் புரிந்து கொண்டார்.

"பிராம்மணனுக்குக் கோபம் கூடாது. இதுவரை பண்டரிக்குப் போனதில்லை என்று சொன்னேனே தவிர இனிமேல் போகமாட்டேன் என்று சொல்லவில்லையே! நீங்களே என்னை அழைத்துப் போங்களேன்... திருப்தி தானே! வாருங்கள்... சாப்பிடலாம்" என அழைத்து வந்து உட்கார்த்தினார். பகவானும் சமாதானமடைந்தது போல் பாவனையோடு சாப்பிடத் தொடங்கினார்.

இராமதாசருக்கு மனம் குறுகுறு வென்றது. "அங்கே இராம விக்ரகம் இருக்கிறதா?" எனத் தயங்கியபடி கேட்டார். "பண்டரிநாதன் சன்னதி யிலேயே இருக்கிறது. உம்... உம்... சீக்கிரம் புறப்படுங்கள்" என்று அவசரப்படுத்தினார் பகவான்.

இராமதாசர் சீடர்களுடன் புறப்பட்டார். பண்டரி அருகில் வந்ததும் ஒரு பஜனைக் கோஷ்டியோடு சேர்த்து விட்டு "போய்க் கொண்டே இருங்கள். இதோ வந்து விடுகிறேன்" என்று கூறி மறைந்துவிட்டார்.

எங்கும் பஜனை கோஷங்கள். இனிய வாத்தியங்களின் ஓசை. பண்டரிபுரத்தின் திருவிழாக்கோலங்களைக் கண்டு ஆனந்தித்தார் இராமதாசர். "ஜெய, ஜெய விட்டல, பாண்டுரங்க விட்டல" என்ற கோஷங்களுக்கிடையே, "ஜெய ஜெய ராம், சீதாராம்" என்ற இவரது பஜனை கோஷம் பலரைத் திரும்பிப் பார்க்க வைத்தது.

நதியில் நீராடி கோவிலுக்குள் சென்றார் இராமதாசர். கண்ணனை பக்தர்கள் கட்டித் தழுவுவதைக் கண்டார். "எனக்கு இராம தரிசனம் வேண்டும்" என்று கண்மூடிப் பிரார்த்தித்தார்.

பகவானின் புல்லாங்குழல் கோதண்டமாகியது. ருக்மணிபிராட்டி சீதா தேவியாக மாறினாள். அனுமார் லட்சுமணரோடு வந்து சேர்ந்தார்.

இராமதாசரோடு அங்கிருந்த அனைவரும் சீதா, லட்சுமண, அனுமத் சமேதரான ஸ்ரீ இராமச்சந்திர பிரபுவைத் தரிசனம் செய்து ஆனந் தித்தனர். மறுபடி பாண்டு ரங்கதரிசனம் வேண்டுமென்று எல்லோரும் இராமதாசரை வேண்ட, இராமதாசர் வேண்டுகோளின்படி இராமதரிசனம் பாண்டுரங்க தரிசனமானது.

எல்லோரும் தாசரை வியந்து போற்றி ஆற்றங்கரை மண்டபத்திற்கு அழைத்துப்போனார்கள். அங்கே நாமதேவர் பாகவத கீர்த்தனைகளையும், கதைகளையும் அழகாக சொல்லிக் கொண்டிருந்தார். அது முடிந்ததும் இராமதாசரை இராமநாமமகிமை பற்றி பேசச் சொன்னார்கள். இராமதாசர் "எனக்கு இனிய குரலில் நாமதேவரைப் போல பாட வராதே" என்று தயங்க, "உங்களது கதை சொல்லும் நேர்த்தியே தனி அழகு" என்று நாமதேவர் உற்சாகப்படுத்த, தாம் முன்னர் இயற்றிய கவிகளைக் கூறி அழகாய் விளக்கம் சொன்னார் தாசர். ஆடாது, அசங்காது அனைவரும் கேட்டு பூரித்தனர்.

இரவு நடுசாமம். இராமதாசர் "என் பிரபு, இராமனாகவும், கண்ணனாகவும் காட்சி கொடுத்தவனே" என்று சொல்லி கதவைத் தொட கதவு திறந்து கொண்டது. உள்ளே சென்று பகவானை அணைத்தபடி "மன்னன் சாப்பிடாமல் காத்திருப்பான்; அனுமதி தரவேண்டும்" என்று வேண்ட, "என்னை இனி மறக்கமாட்டாயே!" என்று குறும்பாகக் கேட்டான் பாண்டுரங்கன்.

கண்களில் நீர் மல்க விடைபெற்றார் தாசர். 'இத்தகைய பண்டரி புரத்தை காணாத துர்பாக்கியனாய் இதுவரை இருந்து விட்டேனே" என்ற வருத்தம் நெஞ்சை அடைத்தது. பண்டரியை விட்டுச் செல்ல மனமே இல்லாமல்தான் புறப்பட்டார். தென்னாட்டின் மேல் படையெடுப்பதற்காக ஔரங்கசீப் படை மஹாபலேஷ்வர் காட்டில் வந்து கூடார மடித்திருந்தது. ஔரங்கசீபின் படைத்தலைவன் அம்புப்பயிற்சி செய்து கொண்

டிருந்தான். இராமதாசர் அருகில் சென்று "விட்ட அம்பை பற்றி இழுத்து வர முடியுமா?" என்று கேட்டார். சேனாதிபதி "உங்களால் முடியுமா? தாங்கள் யார்?" என்று கேட்டான்.

"நான் யார் என்பதைப் பின்னால் சொல்கிறேன். முதலில் அம்பை விடு" என்றார்தாசர். சேனாதிபதி அம்புவிட்டான். இராமதாசர் உடனே ஓடிப் பிடித்துவிட்டார். பின் அவன் கை வில்லை வாங்கி நாணேற்றி எதிரிலிருந்த மரத்தில்விட அது அதிலுள்ள இலைகள், கிளைகள் எல்லாவற்றையும் ஓட்டையாக்கி விட்டது. சேனாதிபதி பிரமித்து நின்றான்.

"அப்பனே, நான் யார் என்று கேட்டாயே! வில்வித்தையில் தோற்று, அவமானப்பட்டு ஓடி வந்து தலைமறைவாக தாடி வளர்த்துக் கொண்டு அலைகிறேன். தென்னாட்டுப் பூனை. வில்வித்தையில் அரிச்சுவடி கூட தெரியாத கூட்டத்தில் யானை" என்றார். சேனாதிபதி ஔரங்கசீப்பிடம் ஓடிப்போய் நடந்தது அனைத்தையும் கூறினான். ஔரங்கசீப் "தோற்று வந்தவனே இத்தனை கெட்டிக்காரன் என்றால் மற்ற வில்வீரர்களை சமாளிக்கவும் முடியுமா? சேனை முழுவதும் தூள் தூளாகி விடும்' என்று அஞ்சி சேனைகளைத் திருப்பிக் கொண்டு போய்விட்டான்.

மன்னன் சிவாஜி வந்து குருநாதரைக் கண்டு வணங்கிச் சென்றார். அதன்பின் சகபூருக்குச் சென்றார் இராமதாசர். அங்கே இராமாயணப் பிரசங்கம் செய்து பக்தியைப் பரப்பினார். அந்த ஊரில் உள்ள தேஷ்பாண்டேயின் மகள் அக்காபாய்க்கு உபதேசம் செய்துவிட்டு சுராபுரம் சென்றார்.

சுராபுரம் கிராமத்தில் அம்பாஜி என்று ஒரு பைத்தியக்காரன். பெற்றோருக்கு ஒரே பிள்ளை. "அவர்கள் தாசரின் வருகை அறிந்து பிள்ளையை அவரிடம் ஒப்படைத்து "இவன் பித்தத்தைத் தெளிய வைத்து ஞானத்தைப் புகட்ட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டனர்.

இராமதாசர் இராமன் மீது ஐந்துகவிகள் பாடிக் கொண்டு வரும் போதே அம்பாஜி தாசர் கால்களில் விழுந்து 'எனக்கு உபதேசம் செய்ய வேண்டும்' எனப் பணிவுடன் கேட்டான். பெற்றோர் ஆனந்தக் கண்ணீர் விட்டனர். மற்றவர் ஆச்சரியப்பட்டார்கள். அவனுக்கு உபதேசம் செய்தார் தாசர். அவனும் நாளடைவில் புத்திசாலியாகி, தாசருக்குப்பதிலாக கதாகாலட்சேபங்கள் கூட செய்ய ஆரம்பித்தான்.

சகபூரிலிருந்து அக்காபாய் இவரை தரிசிக்க வந்தவள் அவருடனேயே தங்க அனுமதி கேட்டாள். அவர் எத்தனையோ எடுத்துச் சொல்லியும் வீடு திரும்ப மறுத்து விட்டாள். வேறு வழியின்றி இராமதாசர் சம்மதித்தார்.

ஒரு முறை வழிப்பயணத்தில் ஒரு சோலையில் தங்கினார்கள். அங்கு ஆழமான சுனை ஒன்று, தாழ வளர்ந்திருந்த ஒரு மரக்கிளையால் மூடி இருந்தது. கிளை பலமின்றி இருந்ததால் எவரும் வெட்டப் பயந்தனர்.

கிளையை வெட்டினால்தான் இராமதாசர் குளிக்க முடியும். குளித்தால் தான் சாப்பிடுவார். அம்பாஜி மடமடவென்று கோடாலியுடன் கிளையில் ஏறினான். ஒரு வெட்டுத்தான்.... 'மளுக்' கென்று கிளை முறிந்தது. 'ஹரே ராம்' என்ற அலறலோடு சுனைக்குள் மூழ்கிப்போனான் அம்பாஜி. கூடியிருந்த சீடர்கள் "ஐய்யோ" என்றலறினார்கள். இராமதாசர் எதுவும் பேசவில்லை. மௌனமாய் நீராடினார். சாப்பிட உட்கார்ந்தார்.

அக்காபாய் "சுவாமி, அம்பாஜி சுனையில் விழுந்துவிட்டாரே... அவரைத் தேட வேண்டாமா?" என்று கண்ணீருடன் கேட்க, "அந்தப் பொறுப்பு எனக்கில்லையா?" என்று இராமதாசர் பதில் சொல்லவும், மேலே பேச எவருக்கும் தைரியமில்லை.

சாப்பிட்டு முடித்தவுடன் மன்னர் சிவாஜி வந்தார். அனைவரும் சோக மயமாக இருப்பதைக் கண்டு துணுக்குற்றார் என்றாலும், எவரையும் எதுவும் கேட்க அஞ்சி, மௌனமாகத் திரும்பி விட்டார்.

"மன்னரே பேசாமல் போனாரே" என்று மற்றவர்கள் பொறுமினர். இராமதாசர் அறியாதவாறு நீச்சல் தெரிந்தவர் சுனையில் முக்குளித்துத் தேடினர். சடலமும் கைக்குக் கிடைக்கவில்லை.

இராமதாசர் மறுநாள் அவ்வனத்தை விட்டுப் புறப்பட்டு விட்டார். ஒரு வாரம் எங்கெங்கோ சுற்றிவிட்டு மறுபடி சுனை அருகே வந்தார் தாசர். சிவாஜியும் அப்போது அங்கே வந்தார். எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தனர்.

'அம்பாஜீ' என்று ராமதாசர் உரக்கக் கூப்பிட்டார். 'வந்தேன்' என்ற பதில் சுனையிலிருந்து வந்தது. 'கலியாணமா?' என்று தாசர் கேட்க, (கலியாணம் என்றால் சௌக்கியம் என்று அர்த்தம்) 'தங்கள் கருணையால் கலியாணமே' என்று கூறியபடி சுனையிலிருந்து வெளியே வந்து உடம்பைத் துடைத்து உடை மாற்றிக் கொண்டு குருநாதர்

அருகிலுள்ள இலையில் சாப்பிட உட்கார்ந்தான். அரசன் முதல் அனைவரும் பிரமித்து நின்றனர். 'ஏழுநாட்கள் ஒருவன் சுனையில் உயிரோடு இருப்பதா? இறங்கித்தேடிய போது அம்பாஜி எங்கே போனான்?" இப்படி ஏகப்பட்ட கேள்விகள்! அன்றுமுதல் அம்பாஜியை அனைவரும் கலியாண கோஸ்வாமி என்றே அழைத்தனர்.

ஒரு நாள் தாசர் சிவாஜி உட்பட எல்லோரும் கூடி இருக்கும் போது "சீடர்களே, நான் அரசாங்கம் நடத்தப் போகின்றேன். அனுமக்கொடியை நாட்டி சிம்மாதனம்தயார் செய்யுங்கள். புரோகிதர் சிவாஜி. சீடர்களெல்லாம் மந்திரிகள். அடியார்களெல்லாம் சேனைத்தலைவர்கள்" என்று கூறினார்.

சீடர்களெல்லாம் மகிழ்ச்சியுடன் ஒரு பெரிய மர நிழலில் மண்ணால் சிம்மாசனம் அமைத்தனர். மேலே தளிர்களும், இலைகளும் பரப்பினர். தாழம் இலையால் குடை தயார் செய்தனர். அருகிலிருந்த கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து அபிஷேகம் செய்து சிம்மாசனத்தில் அமர்த்தினார் சிவாஜி. மூங்கிலால் கூடுகட்டி மலர்களால் அலங்கரித்த கிரீடத்தை தலையில் சூட்டினார்.

அக்காபாய் இனிய குரலில் பாட, பக்தை வேணுபாய் இராமாயண உபன்யாசம் செய்ய, வந்திருந்த அனைவருக்கும் பட்டாபிஷேகப் பிரசாதம் என்று கூறி கனிகளும், கிழங்குகளும் வழங்கப்பட்டன. இராமதாசர் சொல்லச் சொல்ல கலியாண கோஸ்வாமி எழுதிக் கொண்டே வந்தார். இரண்டு நாட்கள் இவ்விதம் இராஜாங்கம் நடந்தது. சிவாஜி அரண்மனைக்கே திரும்பாமல் தாசர் காலடியில் மெய்மறந்து இருந்தார்.

ஒன்பது சர்க்கங்களுள்ள அந்த 'தாசபோதத்தை' சிவாஜியிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னார் குருதேவர். படிக்கப் படிக்கத் தெளிந்தார் சிவாஜி. இராஜ நீதிகளை தெளிவாக எடுத்துக்கூறும் 'தாச போதத்தையும், குருகீதையையும், எடுத்துக் கொண்டு கடமையை நிறைவேற்ற நாடுதிரும்பினான் மன்னன். காவிக் கொடி நாட்டி தாசர் சொற்படி பன்னிரண்டு ஆண்டுகள் சிறப்பாக ஆட்சி செய்து வந்தான். மக்கள் குறையின்றி செழிப்பாக வாழ்ந்தனர்.

சிவாஜியின் ஆஸ்தான பண்டிதன் பெயர் காகா பண்டிதர். அவருக்கு இராமதாசரின் நூல்களை சிவாஜி சதா படிப்பது பிடிக்கவில்லை. தனக்கு அரண்மனை வாழ்க்கை சலித்துவிட்டதாகச் சொல்லிப் போய்விட்டார்.

அவர் போனதில் சிவாஜிக்கு ரொம்ப வருத்தம். இதையறிந்தார் தாசர். காகா பண்டிதரை ஒருமுறை அரண்மனைக்கு வந்து விட்டுப் போகும்படி ஆள் அனுப்பினார். அந்த சமயம் தானும் வந்து இராமநாம மகிமையைக் கூறி ஆடிப்பாடினார்.

இனிமையான கீதத்தால் ஈர்க்கப்பட்டு ஒரு ஓரமாய் உட்கார்ந்தார் பண்டிதர். அவர் ஆஞ்சனேய பக்தர். திடீரென்று தாசர் மறைந்து அவர் கண்களுக்கு ஆஞ்சனேயரே தெரிந்தார். "அபசாரத்தை மன்னிக்க வேண்டும்; என் அகம்பாவம் ஒழிந்தது" என்று கூறி தாசர் காலில் விழுந்தார் பண்டிதர். இதென்ன விந்தை என்று அனைவரும் வியந்தனர். பிறகு மன்னனிடம் விடை பெற்று சாம்பள்கட் என்ற ஊருக்கு வந்து அங்கே சிஷ்யர்கள் கட்டிய மடத்தில் கொஞ்ச காலம் தங்கி இருந்தார். பின்னர் சாகாபூர் என்ற ஊரை அடைந்து இராமாயண உபன்யாசம் செய்து அந்த ஊர் ஜனங்களை ஆஸ்திக வழியில் திருப்பினார். ஆஞ்சனேயரே இவர் கதையைக் கேட்க வந்தார்.

கதையை அத்தனை உருக்கமாகச் சொன்னார் தாசர். அந்த ஊரில் ஒரு பிராம்மணர், 'குடும்பத்தொல்லைகளினின்றும் விடுதலை வேண்டும்" எனி தாசரிடம் வந்து கெஞ்சினான்.

அவனை ஒரு குளத்தனருகே அழைத்துச் சென்றார் தாசர். அந்தக் குளத்தின் கரையில் ஒரு பெரிய மரம். அதன் ஒருகிளை தாழ்ந்து குளத்தின் ஜலத்தைத் தொட்டுக் கொண்டிருந்தது. அந்தக் கிளையைப் பிடித்துக் கொண்டு தொங்கச் சொன்னார் தாசர். உடனே சொன்னபடி செய்தான் அவன்.

"கிளை உன்னைப் பிடித்துக் கொண்டிருக்கிறதா? அல்லது நீ கிளையைப் பிடித்துக் கொண்டிருக்கிறாயா?" என்று கேட்டார் தாசர்.

"நான்தான் கிளையைப் பிடித்துக் கொண்டிருக்கிறேன்" என்றார் அந்தணர்.

"இதிலிருந்து என்ன தெரிகிறது?" தாசர் கேட்டார். "ஆசைகளை விட்டுவிட்டால் துன்பங்கள் நீங்கிவிடும் என்று தெரிந்து கொண்டேன்." பதிலளித்தார் அந்தணர். சொன்னதோடு நிற்காமல் கிளையை விட்டு விட்டதால் 'தொப்'பென்று குளத்தில் விழுந்து விட்டார்.

அங்கே தங்க மயமான மண்டபம். அதில் பொன்னாசனத்தில் தாசர் உட்கார்ந்திருக்க, ஒரு பக்தர் 'தாசபோதம்' படித்து விளக்கவுரை சொல்லிக் கொண்டிருந்தார். அந்தணன் தாசரை நமஸ்கரிக்கவும், கரையில் நின்றிருந்த ராமதாசர் 'வருக, வருக' என்று அழைக்கும் குரல் கேட்டு நீந்தி வந்து தாசரைப்பணிந்தான்.

"அதிக ஆசையும், பற்றுமின்றி கடமையைச் செய்துவந்தால் தொல்லைகள் நம்மை அணுகாது" என பல நீதிகளை போதித்தார் தாசர்.

சாம்பள்கட் என்னும் ஊருக்கருகே ஒரு பெரிய குன்று. அங்கே தாசர் இருக்கும் போது சிவாஜி அவரைக் காணவந்தார். வந்ததும் அக்கா பாயிடம் "மலையேறிவந்தது தொண்டை உலர்ந்து விட்டது. குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் வேண்டும்" என்றார்.

அக்காபாய் "சீடர்கள் எல்லோரும் பிட்சை வாங்க அடிவாரம் சென்றிருக்கிறார்கள். வரட்டும் தண்ணீர் கொண்டுவரச் சொல்கிறேன்" என்றாள்.

சீடர்கள் வர வெகுநேரமாயிற்று. மன்னன் சோர்ந்து படுத்து விட்டான்.

தாசர் ஒரு கம்பால் மலையில் தட்ட 'குபீர்' என்று தண்ணீர் பீறிட் டுக் கிளம்பியது. அரசன் தாகம் தீர அள்ளி அள்ளிக்குடித்தான். அன்று சிவாஜி தாகம் தீர்க்க ராமதாசர் உண்டாக்கிய ஊற்று இன்றும் வற்றாது பலர் தாகம் தீர்க்க உதவுகிறது.

இராமதாசர் 'தாசபோதம்' இயற்றுமுன் காட்டில் மண்ணாலான ஆசனத்தில் சிவாஜியைப் புரோகிதராகக் கொண்டு மலர்முடி தரித்து அரசாட்சியை நடத்திக் காட்டினார்; அந்த அரசவையில் வேணுபாய் என்ற பக்தை இராமாயண உபன்யாசம் செய்தாள் என்று படித்தோம். அந்த பக்தையைப் பற்றி சற்றே விரிவாகப் பார்க்கலாம்.

வேணுபாய் சின்ன வயதிலேயே கணவனை இழந்தவள். உபதேசம் பெறவேண்டும் என்று தாசரை நாடி வந்தாள். ராமதாசர் "நாளைக்கு அன்னதானத்துக்கு ஏற்பாடுசெய். நான் அங்கே வருகிறேன்" என்று சொல்லி அனுப்பினார். வேணுபாய் சந்தோஷத்தோடு விடை பெற்றுக் கொண்டு போனாள். அன்னதானம் முடிந்தது. தாசர் ஆஞ்சனேயரை நினைத்தார். ஆஞ்சனேயர் காட்சி தந்தார். அவரைப் பார்த்த வேணுபாய்

மூர்ச்சித்து விழுந்தாள். சிறிது நேரத்தில் எழுந்ததும் "இவர் யார்? ஆஞ்சனேயர் மாதிரி இருக்கிறாரே" என்று மெல்லிய குரலில் கேட்க,

"சாட்சாத் ஆஞ்சனேயரேதான்! என்னிடம் எத்தனையோ சீடர்களும், தொண்டர்களும் இருக்கிறார்கள். அனுமாரும் எத்தனையோ முறை காட்சி தந்திருக்கிறார். சிவாஜிக்குப் பிறகு உனக்கே அவர் தரிசனம் கிடைத்திருக்கிறது. நீ களங்கமில்லாதவள். ஆடம்பரமற்றவள், பெரும் பாக்கியசாலி. இவருக்கு உன் கையால் சாப்பாடு போடு" என்றார்.

வேணுபாய் அளவிடமுடியாத ஆனந்தத்துடன் பரிமாற திருப்தியாய் சாப்பிட்ட மாருதி வேணுபாயை ஆசீர்வதித்துவிட்டுப் போனார். அதன்பின் தாசர் வேணுபாய்க்கு உபதேசம் செய்தார். அதுமுதல் அவள் தாசரை விட்டு அரை நிமிஷமும் பிரிவதில்லை.

ஒரு நாள் அவளிடம் சொல்லாமல் வேறொரு இடத்திற்குப் போய் விட்டார். செய்தி அறிந்த வேணுபாய் துடித்தாள். ஒவ்வொரு இடமாய் தேடிக் கொண்டு போய் முடிவில் கண்டு பிடித்தாள்.

"இப்படிச் செய்யலாமா?" எனக் கண்ணீர் விட்டாள். "தாசர், அம்மா, நீ இளம் வயதுப் பெண். என்னோடு காடுகளில் சஞ்சரித்தால் ஊரார் கேலிபேசி தூஷிப்பார்கள். வீட்டிற்குப் போய் பகவானை ஸ்தோத்திரம் செய்" என்று திருப்பி அனுப்பிவிட்டார்.

கொஞ்சகாலம் கழிந்தவுடன் சகாபூரில் தாசர் இருக்கும் போது மறுபடி வந்து நமஸ்கரித்து விட்டுப் போனாள். இது வேணுபாயின் மாமனாருக்குப் பிடிக்கவில்லை. வேணுபாயின் பெற்றோரிடம் சென்று "வேணுபாய் செய்வது குலத்துக்கே கேவலம்" என்று புகார் செய்தார்.

வேணுபாயின் பெற்றோர் "கணவனை இழந்த இளம் பெண்கள் வெளியே வருவதே தவறு. அதிலும் நீ அடிக்கடி அந்த சன்னியாசியைப் பார்க்கப் போகின்றாய். ஊரார் நகைக்கச் செய்துவிட்டாயே... இனி வெளியே போகக்கூடாது" என்று நயமாகவும், கடிந்தும் சொன்னார்கள்.

வேணுபாய் கேட்கவில்லை. "விதவைகள் புண்ணியஸ்தலங்களுக்குப் போவதும், மகான்களை சந்தித்து, உபதேசம் பெறுவதும் எப்படிக் குற்றமாக முடியும்? என் வாழ்நாளை நான்கு சுவர்களாலான கூட்டுக்குள் ஜடமாகக் கழிக்க என்னால் முடியாது. நாராயணனும், லட்சுமியுமே

என்பெற்றோர். திருமணம் செய்து கொடுத்தபின் பெற்றவருக்கு உரிமையில்லை. கணவன் இறந்தபின் தெய்வத்திடமே நான் அடைக்கல மாகிவிட்டேன்" என்று வேணுபாய் பிடிவாதமாகச் சொல்லிவிட்டாள்.

'சொன்னபடி கேட்காமல் கட்டுப்பாடுகளுக்கு அடங்காத இவளை கொல்வதே சரி' என்று பெற்றவர் முடிவெடுத்தனர். சாப்பாட்டில் விஷத்தைக் கலந்துகொடுத்து விட்டனர். சாப்பிட்ட வேணுபாய்க்கு மயக்கமாய் வந்தது. குடல் எரிந்தது. வேதனை தாங்காமல் "குருதேவா, அவஸ்தையிலிருந்து விடுதலை வேண்டும்" என வேண்டினாள். என்ன ஆச்சரியம்! மறு நிமிடம் தாசர் அவள் அருகே இருந்தார்.

"ஆதிசேஷன்மீது பள்ளி கொண்டவனே! காளிங்கநர்த்தனம் செய்தவனே! விஷத்தை முறியடிப்பாய்" என்று ஸ்தோத்தரித்தபடி கமண்டலத்திலிருந்து தண்ணீரை வேணுபாய் மீது தெளிக்க, அவள் தூங்கி எழுந்தது போல் விழித்தாள். குருநாதரைக் கண்டு மகிழ்ச்சியுடன் நமஸ்கரித்தாள்.

"சுவாமி, இந்த உடல் பாகவதத் தொண்டிற்கும், பகவான் சேவைக்கும், குரு பூஜைக்கும் பயன்பட வேண்டும் என்பது தங்களுக்கு சம்மதமா யிருந்தால் இந்த நிமிடம் முதல் தாங்கள் இருக்கும் இடத்தில் தங்க அனுமதிக்க வேண்டும்" என்று கோரினாள்.

தாசர் சம்மதித்து அவளை உடன் அழைத்துச் சென்றார். 'ஆனந்தீ' யிலுள்ள ஞானதேவரின் சமாதிக்குச் சென்று வணங்கினார்.

தன்னைக் காணாமல் துடித்துக் கொண்டிருக்கிறார் சத்ரபதி சிவாஜி என்று கேள்விப்பட்டு அரசனை சந்திக்கச் சென்றார் தாசர். அரசன் அவரை எதிர் கொண்டு உபசரித்து, யானை மேலேற்றி ஊர்வலமாக அழைத்து வந்து, விருந்து படைத்து, உபதேசமொழிகளைக் காதாரப் பருகினான்.

'சாம்பள் கட்'டில் ஒரு இராமர் கோவில் கட்ட ஆசை கொண்டார் தாசர். மாருதியைக் கண்மூடி தியானித்தார். அனுமார் அவர்முன் தோன்றி "ஏழுமைல் தூரத்தில் ஒரு இராமர் கோவில் இருக்கிறது. அங்கே உள்ள விக்கிரகங்கள் ரொம்ப அமைப்பாக உள்ளது. அதை எடுத்து வந்து இங்கே பிரதிஷ்டை செய்" என்று இடத்தைக் குறிப்பிட்டு மறைந்தார்.

அப்படியே இரவில் தொண்டர்களுடன் அவ்வூர் சென்று விக்கிர கங்களை பெயர்த்துக் கொண்டு வந்து விட்டார் தாசர்.

கோவிலில் விக்கிரகங்களைக் காணாமல் அவ்வூர் ஜனங்கள் தவித்து, உளவு தெரிந்து, தாசர் இருக்குமிடம் வந்தனர். விக்கிரங்களைப் பார்த்ததும் ஆத்திரமடைந்து "இராமதாசரா இராமவிக்கிரத்தைத் திருடுவது? வேலியே பயிரை மேய்ந்தால் தடுப்பவரும் உண்டோ? எங்கள் கோயில் சுவாமியை எங்களிடம் தந்து விடுங்கள்" என்று கேட்டனர்.

இராமதாசர் மௌனமாக இருந்தார். அவர்களே ஆசிரமத்துள் புகுந்து விக்கிரகங்களைத் தூக்கினர். என்ன அற்புதம்! விக்கிரகங்கள் பூமியோடு பதிந்திருந்தன.

அவர்கள் தாசரின் கால்களில் விழுந்து "ராமச்சந்திர மூர்த்திக்கு இங்கு கோவில் கொள்ளத்தான் விருப்பம் என்று புரியாமல் உங்களைத் திட்டியதற்கு மன்னிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டனர்.

பிறகு மாருதி சொன்ன இடத்தில் கோவில் கட்டி விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம், அன்னதானம், உபன்யாசம், பஜனை எல்லாம் சிறப்பாக நடந்தன. உற்சவம் நடக்க ஏற்பாடு செய்துவிட்டு கிருஷ்ணா நதியோடும் பிரதேசத்திற்கு வந்தார் தாசர். மாருதியை நினைத்து, தரிசனம் செய்து, ஆசி வாங்கிக் கொண்டு பதினோரு ஸ்தலங்களில் அனுமார் கோவில் கட்டினார். ஒவ்வொரு முக்கிய சீடனை ஒவ்வொரு ஆலயத்தில் அர்ச்சகராக்கினார்.

ஸ்ரீ ராமநவமி வந்தது. சாம்பள் கட்டுக்கு வந்து தாம் கட்டிய கோவிலில் அனுமத் ஜயந்தியை சிறப்பாகக் கொண்டாடினார். சிவாஜியும் அதில் கலந்து கொண்டார். பிறகு ஊர் ஊராகச் சென்று பல நாஸ்திகக் கூட்டங்களை தெய்வபக்தியுள்ளவர்களாக்கினார்.

அவர் ஏற்படுத்திய அனுமார் கோவில்களில் முக்கியமானவை மூன்று. ஒன்று தங்கமாருதி கோவில். இவர் ரொம்ப வரப்பிரசாதி. இவரிடம் வேண்டிக் கொண்டால் நினைத்தது நிறைவேறும் என்ற நம்பிக்கையோடு லடசக்கணக்கான பக்தர்கள் வந்து வழிபடுகின்றனர். இரண்டாவது பிகாரி மாருதி கோவில். மிகுதியாகப் பிச்சைக்காரர்களே வந்து வழிபடுவதால் அதற்கு அப்பெயர் வந்தது. மூன்றாவது சோர்மாருதி கோவில். அந்த ஹனுமாரின் பெரும்பான்மையான பக்தர்கள் திருடர்களே!

முதன் முதலில் கட்டிய ஆஞ்சனேயர் கோவில் அர்ச்சகராக தாசர் நியமித்த சீடர் உத்தவர், இராமநாம மகிமையைப் பரப்பிக் கொண் டிருந்தார். இந்து மதத்தின் மேல் வெறுப்புக் கொண்ட ஔரங்காபாத் மன்னன் அவரைக் கைது செய்து முஸ்லீமாக மாறும்படி பலவந்தப் படுத்தினான். உத்தவர் மறுத்தார். அவரைச் சித்ரவதை செய்தான். பொறுக்காத சிஷ்யர் "குருதேவா, என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று துடிதுடித்துக் கதறினார்.

மும்முரமாக பஜனை செய்து கொண்டிருந்த இராமதாசர் சிப்ளாக் கட்டையைப் போட்டுவிட்டு எழுந்தார்.

சிஷ்யை அக்காபாய் "சுவாமி, எந்தச் சீடருக்கு என்ன அபாயம்? பாதியில் பஜனையை நிறுத்திவிட்டு எழுந்து விட்டீரே!" எனக்கேட்க,

"மாவுலி நகரத்தில் உத்தவன் கொடுமைக்காளாகி இருக்கிறான். இதோ வருகிறேன்" என்றவர் ஆவேசமான மாருதியாக மாறி மன்னன் முன் நின்றார்.

அரசன் பயந்து தாசர் காலடியில் விழுந்து மன்னிப்புக் கேட்டான். உத்தவரை விடுவித்து ஊருக்குப் போகச் சொன்னான். தாசர் அரசனுக்கு வேண்டிய புத்திமதிகள் சொல்லிவிட்டு இருப்பிடம் திரும்பினார்.

பாகா என்னும் ஊரில் கேசவஸ்வாமி என்ற பக்தர் உடல் நலமின்றி இருந்தார். அவருக்கு இராமதாசரைப் பார்க்க வேண்டுமென்று ரொம்ப நாளாக ஆசை.

"உங்களைப் பாத நமஸ்காரம் பண்ண பாவி உடல் இடம் தரவில்லையே" என்று உருக்கமாக கவி இயற்றி ஒரு சீடனிடம் கொடுத்து அனுப்பினார்.

அதைப் படித்த இராமதாசர் மனமுருகி சத்ரபதி சிவாஜியிடம் கூறி அவனுக்குப் பொன்னும், பொருளும் பரிசாகக் கொடுத்து, பதில் ஓலையும் கொடுத்தனுப்பினார்.

ஒருவாரம் வரை சீடன் வரவை எதிர் நோக்கிக் காத்திருந்து ஓலையை வாங்கிப் படித்தார் கேசவர். "இராம சேவை அரைகுறையாய் நிற்கின்றது. முடிந்ததும் நானே வந்து தங்களை தரிசிக்கும் பாக்கியம் பெறுவேன். என்னையும் ஒரு பொருட்டாக எண்ணி ஓலை அனுப்பியது என் பூர்வ

ஜென்ம புண்ணியம்” என்னும் கருத்தடங்கிய பாட்டிருந்தது அதில்! கேசவஸ்வாமி பலமுறை படித்துப் பார்த்து பரவசமடைந்தார். சொன்னபடியே இராமதாசர் அங்கு வந்தார். இருவரும் ஆசைதீர தத்துவ விசாரணை செய்தனர். இரண்டு நாட்கள் கழிந்து சாம்பள் கட் திரும்பினார் குருதேவர்.

இராமதாசரிடம் உபதேசம் பெற்ற பக்தர்களில் கிருஷ்ணன் என்று ஒரு நாவிதன். தாசரின் சீடர்கள் அவரைக் கிருஷ்ணாஜி என அழைப்பர். கிருஷ்ணாஜி ஞான சீலனாய் இராம நாமமே கதியென்றிருந்தான்.

ஜயராமன் என்ற அந்தணர் அவனிடம் உபதேசம் பெற வந்தார். கிருஷ்ணாஜி பதறி, “தாங்களோ பிராம்மணர். நானோ நாவிதன். உபதேசம் தர என் குருநாதராகிய ராமதாசரே சிறந்தவர்” என்றார்.

ஜயராமன் பிடிவாதமாக “தெய்வ பக்தியுள்ளவர்களுக்குள் வேற்றுமை உண்டோ? என் மனதில் உங்களைக் குருவாக நினைத்துவிட்டேன். நினைத்தபோதெல்லாம் குருவை மாற்றிக்கொள்வது முட்டாள் தனம்” என்றான்.

கிருஷ்ணாஜி ஜயராமனை இராமதாசரிடம் அழைத்துச் சென்று நடந்தவைகளைக் கூறினார்.

தாசர் ஜயராமனிடம் “உன் குலத்தவர் நாவிதனிடம் உபதேசம் பெற்றவன் என்றால் கேலி பேசுவார்கள். பல தொல்லைகள் தருவார்கள். அதனால் உனக்குப் பிடித்த வேதிய குருவினிடம் சென்று உபதேசம் பெற்றுக்கொள்” என்று போதித்தார்.

ஜயராமன் “தாங்கள் இப்படிப்பேசுவது முறையா? சாதியும், வயதும் பக்திக்குத் தடையாகுமா? எனக்கு கிருஷ்ணாஜியே உபதேசம் செய்ய வேண்டும்” என்று அழுத்தமாகக் கூற, இராமதாசர் மகிழ்ந்து கிருஷ்ணாஜியிடம் ஜயராமனுக்கு உபதேசம் செய்து வைக்கச் சொன்னார். ஜயராமனுக்கு உபதேசம் செய்தார் கிருஷ்ணாஜி. குருவிடம் அவரது இறுதிக்காலம் வரையில் பக்தி மாறாமல் பணிவிடை செய்து வந்தார் ஜயராமன்.

குரு மறைந்ததும் வேத விதிப்படி தகனம் செய்து, அந்த இடத்தில் ஒரு நந்தவனம் ஏற்படுத்தி, நடுவில் ஒரு மடம் கட்டி, குரு பூஜை செய்து

வந்தான். சதா இராம ஜபம் தான் அவன் மூச்சாக இருந்தது. கிருஷ்ணாஜி மறைந்து ஒருவருஷமானது. திதி காரியத்துக்கு எந்த பிராம்மணரும் வர மறுத்து விட்டார்கள். 'அந்தண குலத்தையே கேவலப்படுத்தி விட்டதாக' அனைவரும் தூற்றினர். 'நாவிதனிடம் உபதேசம் பெறுகிறானாம். அவனுக்கு மடமாம்.... குருபூஜையாம்... திவசமாம்!' என்று அருவறுத்துப் பேசினார்கள்.

தாசரிடம் முறையிட்டார் ஜயராமன். தாசர் கிருஷ்ணாஜியின் நினைவு மடத்திற்கு வந்தார். அந்தணர்களிடம் சொல்லிப் பார்த்தார். கேட்கவில்லை அவர்கள். பிறகு மடத்துக்குள் சென்று ஜயராமனை அழைத்து வந்தார். இப்போது அந்தணர்கள் 'ஜயராமன் தோளில் ஸ்ரீராமரும், ராமதாசர் தோள்களில் அனுமாரும்' வீற்றிருப்பதைக் கண்டு திடுக்கிட்டு தங்களை மன்னிக்கும்படி தாசர் கால்களில் விழுந்தனர். ஜயராமன் விருப்பப்படி திதி காரியங்களை ஒழுங்காக முடித்து வைத்தனர்.

ஒருநாள் அற்புதமான கவிதைகள் பாடி இராமாயணத்தை அழகாக சொல்லிக் கொண்டு வந்த தாசர் பாதியில் நிறுத்திவிட்டு கிருஷ்ணா நதிக்கு நீராடச் சென்று விட்டார். குளித்து விட்டு வந்ததும் அக்காபாய் "நேரமில்லாத நேரத்தில் இராமாயணத்தையும் அரை குறையாய் விட்டுவிட்டு குளிக்கப் போனதேன்?" என்று கேட்டாள்.

"சூரியனின் அம்சமாகப் பிறந்த என் அண்ணன் கங்காதரன் இறைவனடி சேர்ந்தான்" என்றார்.

அப்போது சத்ரபதி சிவாஜி அங்கேவர தாசர் "இன்றிலிருந்து பத்து நாள் சீதகம். நான் பூஜைகளில் கலந்து கொள்ளக் கூடாது. சாம்பள் கட் ஸ்ரீ ராம நவமி உற்சவத்தை நீ போய் நடத்து. பத்தாம் நாள் தீட்டு கழிந்துவிடும். நான் வருகிறேன்" என்று சொல்லி அனுப்பினார். சொன்னபடி பத்தாம் நாள் வந்த தாசரைக் கண்டு சீடர்களும், சிவாஜியும் மகிழ்ந்தனர்.

அப்போது சிவாஜி "பரனி கட் என்னும் மலையில் ஒருமடம் கட்டி இருக்கிறேன். என் சகோதர சீடர்களுடன் அங்கு கொஞ்ச காலம் தங்கினால் எனக்கு மகிழ்ச்சியாயிருக்கும்" என்று வேண்டினார். "எனக்குக் காடுகளில் வசிப்பதே ஆனந்தம் என்று தெரிந்தும் இவ்விதக் கட்டாயம் ஏன்?" என்று தாசர் மறுக்க, சிவாஜி மறுபடி மறுபடி பிரார்த்திக்க,

கடைசியில் ஒருவாறு சம்மதித்தார் இராமதாசர். "பாண்டுரங்கபக்தரான துக்காராம் வருகிறார். எதிர் கொண்டு அழைத்து வர ஆட்களை அனுப்பு" என கால்பிடித்துக் கொண்டிருந்த சிவாஜியிடம் கூறினார் தாசர்.

'அப்போதே அனுப்பி விட்டேன்' எனப் பணிவோடு சொன்னான் மன்னன்.

துக்காராம் தன் பக்தர் கூட்டத்தோடு அங்கு வந்து சேர்ந்தார். தாசரும், துக்காராமும் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டனர். எல்லோரும் சாப்பாடானதும் தூங்கப் போனார்கள். மறுநாள் காலை தாசர் மன்னரை அழைத்து "இன்றைக்கு பஜனை உன்னுடையது" எனக் கூற, சிவாஜி மகிழ்ச்சியுடன் காலில் சதங்கை அணிந்து சிப்ளாக்கட்டையுடன் பக்திப் பாடல்களைப் பாடி ஆடினார். மற்ற சீடர்கள் தம்பூரா, டோலக், முதலிய வாத்தியங்களை இசைத்தனர். தாசரும், துக்காராம் ஸ்வாமிகளும் மெய்மறந்து ரசித்தனர். பிறகு வேணுபாய் ஹரிகதா உபன்யாசம் செய்தாள். இரவு அக்காபாய் சங்கீதக் கச்சேரி செய்தாள்.

பின்னர் ஒவ்வொரு சீடரும் பக்திப் பாடல்களைப் பாடினர். தாசரின் வேண்டு கோளின்படி துக்காராமும் பஜனை செய்தார். விடிய விடிய ஒரே ஆனந்த வெள்ளம் தான். விடியும் நேரம் பகவான் காட்சி தந்து அனைவரையும் ஆசீர்வதித்தார்.

மறுநாள் இரவு இராமதாசர் உபன்யாசம் செய்தார். மன்னர் வரும் அதிதிகளுக்கெல்லாம் அன்னதானமும், வஸ்திர தானமும் சலிப்பின்றி செய்தார். பக்தர்கள், சாதுக்கள் க்ஷேத்ராடனம் செய்யப் பொருளுதவி செய்தார். சதா பாகவத கோஷமாய் இருந்தபடியாலும், சாதுக்கள் சஞ்சாரத்தாலும் அந்த இடம் 'சற்ஜன கட்' என வழங்கலாயிற்று.

ஒரு நாள் துக்காராம் சுவாமிகளையும், அவர் சிஷ்யர்களையும் காணாமல் சத்ரபதி சிவாஜி வருத்தத்துடன் தாசரிடம் "குருதேவா, நான் செய்த குற்றம் என்ன? என்னிடம் சொல்லாமல் போய்விட்டாரே" என,

தாசர் "உயர்ந்த ஆடை, ஆபரணங்களை அவருக்கு வெகுமதியாய் தரவேண்டுமென்று நினைத்திருந்தாயா?" என்று கேட்டார்.

சிவாஜி திகைப்புடன் "ஆமாம். அது..." என்று திணற, "பகவான் நாமமொன்றே விலை மதிப்பற்றது. இதிலே வெறுப்புற்றுத் தான்

விலகிப்போனார்” என்றார் தாசர். அந்த மலையில் ஒரு காளிகோயில். காளி ஒருநாள் தாசர் முன் தோன்றி “இராமரைத்தான் பாடுவாயோ? என்னைப் பாடமாட்டாயோ?” என்று கேட்டாள்.

“அம்மா! இன்றுதானே தரிசனம் தந்திருக்கிறீர்கள்! நிச்சயம் உங்கள் ஆசையை நிறைவேற்றுகிறேன். அடியேனுக்கும் ஒரு ஆசை உண்டு. அதைச் சொன்னால் நிறைவேற்றுவீர்களா?” என்றார் தாசர்.

“உன் ஆசையைக் கூறு” என்றாள் சக்தி. “உன் கழுத்தில் இருக்கும் முத்துமாலையிலுள்ள முத்துக்களைப் போன்ற முத்துக் காதணி செய்து உனக்கு அணிவிக்க வேண்டுமென்பது என் நெடுநாள் விருப்பம்” என்றாள்.

“பூ, இவ்வளவு தானா! நாளை காலை உன் கமண்டலத்துக்குள் முத்துக்கள் கிடக்கும். மன்னனிடம் கொடு; கட்டித்தருவான்” என்றாள் அன்னை பவானி. இராமதாசரும் அன்னையை சுந்தரக் கவிகளால் அலங்கரித்தார்.

மறுநாள் அபிஷேகம் முடிந்து அலங்கரிக்கப்போன அர்ச்சகர் அன்னையின் முத்தாரத்தில் முத்துக்கள் இல்லாதிருப்பது கண்டு பயந்து அரசனிடம் தெரிவித்தார். அரசன் அவர்தான் எடுத்திருக்க வேண்டும் என்று அவரையே சிறையில் வைத்தான். சிவாஜி தாசரை சந்தித்தபோது தாசர் முத்துக்களைக் கொடுத்து காதணி செய்து தரும்படி கூற, மன்னன் முத்துக்கள் எப்படிக் கிடைத்ததென்று கேட்க, தாசர் காளியின் அருட்பிரசாதம் என்று நடந்ததைச் சொல்ல, மன்னன் தன் தவறை உணர்ந்து அர்ச்சகரை விடுதலை செய்தான். முத்துக்கள் மீண்டும் மாலையில் பதிக்கப்பட்டன.

அதே போன்ற முத்துக்களால் தேவிக்கு முத்தாலான காதணியும் செய்து, தாசரைக் கொண்டு பூட்டச்செய்தான் மன்னன்.

இராமதாசரின் சிஷ்யர்களில் சௌதாகரன் என்பவன் கடல் கடந்து வியாபாரம் செய்துவிட்டு பெரும் பொருளோடு வந்து கொண்டிருந்தான். கடலில் திடீரென்று கொந்தளிப்பு. பெரும்புயல். அடைமழை. கப்பல் மூழ்கிவிடும் போல் இருந்தது. குருநாதரை தியானித்தான். 'கப்பல் பத்திரமாக கரை சேர்ந்தால் நான்கில் ஒரு பாகத்தை, தர்ம காரியங் களுக்காக குருநாதரிடம் சேர்ப்பிப்பதாக வேண்டிக் கொண்டான்.

அதே சமயம் சீடர்களோடு பேசிக் கொண்டிருந்த இராமதாசர் சடாரென்று எழுந்து போனார். கொஞ்ச நேரத்தில் சொட்டச் சொட்ட நனைந்து கொண்டு வந்தார்.

இரண்டு நாளில் சௌதாகர் வந்து சொன்னபடி பொருளைக் கொடுத்து 'இரண்டு நாட்கள் முன்பு கடலில் புயல் அடித்த பயங்கரத்தையும், குருநாதரைப் பிரார்த்தித்த சில நிமிடங்களுக்குள்ளேயே கப்பல் ஆட்டமின்றி சீராகச் சென்ற அதிசயத்தையும் கூற, எல்லோரும் குருநாதர் மகிமையை வியந்து போற்றினர். தாசரும் 'பக்தியும், பொருளும் வளர்வதாக' என சௌதாகரனை ஆசீர்வதித்து அனுப்பினார்.

ஔரங்கசீப் 'சற்சன கட்' டைத்தன்வசமாக்கிக் கொள்ள திட்ட மிட்டான். வழியிலுள்ள கிராமங்களையெல்லாம் குண்டுமாரி பொழிந்து நாசம் செய்து கொண்டே வந்தன அவன் படைகள். ஜனங்கள் அலறியபடி வந்து தாசரைத் தஞ்சமடைந்தனர்.

தாசர் ஆஞ்சனேயரை நினைத்தார். அசோகவனத்தை மாருதி படுத்தியபாடு...! ஔரங்கசீப் படையை துவம்சம் செய்துவிட்டார் மாருதி. ஔரங்கசீப் சேதி அறிந்தான். தாசரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு படைகளைத்திரும்பிக் கொண்டு வரும்படி உத்தரவு அனுப்பினான்.

சிவாஜி இதை அறிந்தார். தாசரடி வீழ்ந்து வணங்கினார். "உனக்கு வயதாகிவிட்டது. இனிமேல் பக்தியில் பூரணமாக ஈடுபடு. எனது பிரதிநிதியாக இனி உன் மகன் சாம்பாஜி நாட்டை ஆளட்டும்" என்றார் தாசர்.

"தங்கள் விருப்பம் என்யோகம்" என்றார் சிவாஜி. சொன்னபடியே சாம்பாஜிக்கு பட்டம் சூட்டி விட்டு பக்தியில் முழுமனதைச் செலுத்தினார்.

சிவாஜி அரசராக இருப்பதால்தான் அவரிடம் குருதேவருக்கு அதிக அன்பு. நம்மீது அன்பு இரண்டாம் பட்சம்தான் என்று நினைத்தார்கள் மற்ற சீடர்கள். தாசர் இதைப் புரிந்து கொண்டு உண்மையை விளக்க ஒரு நாடகம் ஆடினார்.

தாசர் தாங்க முடியாத வயிற்று வலியால் அவஸ்தைப்பட்டார். இரண்டு நாளாய் பஜனையில்லை. பூஜையில்லை. சாப்பாடும் இல்லை. சீடர்கள் கையைப் பிசைந்தனர்.

அந்த சமயம் சிவாஜி குருநாதரைத் தேடி வந்தார். குருநாதர் துடிப்பதைக் கண்டு, வைத்தியருக்கு ஆள் அனுப்பினார்.

தாசர் தடுத்து "மருந்து என்னிடம் இருக்கிறது. அந்தக் குளிகையை சிங்கப்பாலின் கரைத்துக் குடிக்க வேண்டும்... பிரச்சினை சிங்கப்பால் தான்...." என்று சொல்லி வாய்மூடுமுன், "இதோ வருகிறேன்" என்று சிவாஜி ஒரு பாத்திரத்தோடு புறப்பட்டு விட்டார்.

காடெல்லாம் சுற்றினார். முடிவில் ஒரு இடத்தில் இரண்டு சிங்கக் குட்டிகள் விளையாடுவதைப் பார்த்தார். குட்டிகள் இருப்பதால் தாய் சிங்கம் தேடிவரும் என்று காத்திருந்தார்.

நினைத்தபடியே தாய் சிங்கம் வந்தது. குட்டிகள் குதித்துக் கொண்டு தாயின் பக்கம் ஓடின.

ஆனால் மனிதனைப் பார்த்த பெண் சிங்கம் சீறியது. சிவாஜி கைகூப்பியபடி "அம்மா பவானி! சிம்மவாகனேஸ்வரி! என் குருநாதருக்காக கொஞ்சம் பால் கறக்கும்வரை உன் வாகனத்தை அமைதியாக இருக்கச் சொல்" என வேண்டினார்.

சிங்கம் பசுவைப் போல் சாதுவாக நின்றது. சிவாஜி தைரியமாக அருகில் சென்று தடவிக் கொடுத்தார். சிவாஜியை சிங்கம் அன்புடன் நக்கிக் கொடுக்கவே காம்புகளை மெதுவாகப் பற்றி பால் கறந்தார். என்ன ஆச்சரியம்... பால் மளமளவென்று சுரக்க பாத்திரம் நிறைந்து விட்டது. அம்பிகையை நினைத்தபடி சிங்கத்தை நன்றியோடு தடவிக் கொடுத்துவிட்டு பாலோடு வெளியே வந்தார் சிவாஜி. அங்கே சீடர்களோடு நின்று கொண்டிருந்தார் ராமதாசர்.

"நாம் மன்னனாயிற்றே என்று ஆட்களை அனுப்பாமல் எனக்கு வயிற்றுவலி என்றதும் சிங்கப்பால் கறக்க பாத்திரத்தோடு ஓடிவந்தானே... பயத்தையும், தன்னலத்தையும் துறந்த அந்த பாசம் யாரிடம் இருந்தது? சிவா, இவர்களுக்கு உண்மையை விளக்க நான் நடத்திய நாடகம் இது. வயிற்று வலி போய்விட்டது. பாலைக் குட்டிகளருகில் வைத்துவிட்டு வா" என்றார் ராமதாசர்.

மன்னன் சொன்னபடி செய்தான். குட்டிகள் ஆவலோடு பாலைக் குடித்தன. சிங்கம் அன்புடன் வாலை ஆட்டியது. சீடர்கள் வெட்கித் தலை

குனிந்தனர். கிருஷ்ணபட்ச நவமி திதி உச்சிப் பொழுதில் "நான் வந்த வேலை முடிந்தது. இராமன் திருவடி அடைய வேண்டும்" என்றார் தாசர்.

அருகில் இருந்த சிவாஜி கண்ணீர் உகுக்க "அன்பா, வருந்தாதே! நீ எத்தனை தீரனானாலும் என் பிரிவைத் தாங்கமாட்டாய் என்பதை நானறிவேன். உன் முடிவு அதற்கு முன்னதாகவே ஆகிவிடும்" எனத்தேற்றினார் தாசர். சிவாஜி மகிழ்ந்தார்.

சொன்னபடி சிவாஜி பரமபதமடைந்ததும் நாடே துக்க சாகரத்தில் மூழ்கியது. சோகத்தில் ஆழ்ந்திருந்த சாம்பாஜியைத் தேற்றி இராஜ நீதியைப் போதித்து 'சற்சனகட்' மடத்துக்கு வந்து சேர்ந்தார் தாசர்.

கர்நாடக சாது ஒருவர் இராம, லட்சுமண, சீதா அனுமத் விக்கிரகங்களை தாசருக்குக் காணிக்கையாகக் கொடுத்தார். தாசர் மகிழ்ச்சியோடு அதைப் பெற்று கலியாணகோஸ்வாமியிடம் கொடுத்து தன் உடல் தகனமான இடத்தில் இந்த விக்கிரகங்களை ஸ்தாபிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

தாசர் குறிப்பிட்ட நவமியன்று அதிகாலையில் நீராடி வந்ததும் "கடைசி முறையாக தாசரதீ தரிசனம் தரவேண்டும்" என பிரார்த்தித்தார்.

கோதண்ட ராமன் பிரசன்னமானதும் அவர் காலடியில் விழுந்து வணங்கினார் சமர்த்த ராமதாசர். பக்தனை கட்டி அணைத்துக் கொண்டார் பகவான். உடல் தன் தியானத்தில் இருக்க ஆத்மா பகவானோடு ஐக்கியமாயிற்று.

இராம பஜனை செய்தபடியே அகில், சந்தனக்கட்டைகளால் சிதைக்குத் தீமூட்டினர் சிஷ்ய கோடிகள். மறுநாள் அஸ்தி எடுக்கப் போன போது அஸ்திக்குள் தாசரின் பாதுகைகள் சாம்பலாகாமல் கிடைத்தன. பாதுகையில்

"ஸ்ரீராம ஜெயராம ஜயஜய ராம" என்ற தாரக மந்திரம் பதிந்து கிடந்தது. "இராம கைங்கரியத்தை விடாமல் செய்யுங்கள்" என்ற ஒலி வந்தது. அந்த இடத்தில் கோவில் கட்டி விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்தார் கலியாண கோஸ்வாமி. ராமதாசரின் அண்ணா பேரனான கங்காதரராவும் அதே சமயம் அங்கு வந்து சேர்ந்தார். தாசரின் பாதுகையும் அங்கே பிரதிஷ்டை செய்யப்பட்டது.

இராம நாமத்தை ஜெபிப்பதிலும், இராமபக்தியைப் பரப்புவதிலும் நீ 'சமர்த்த'னென்று ஹனுமாரால் பாராட்டப் பெற்றவர் சமர்த்த இராமதாசர்.

தாசர் கூறியபடியே அடுத்த தலைமைப் பீடத்தில் கங்காதர ராவையே அமர்த்திப் பட்டம் கட்டினர். அவரும் சிறியபாட்டனார் வழிப்படி அவர் கட்டிய கோவில்களில் உற்சவங்களும், ஆராதனைகளும் ஒழுங்காக நடத்தி வைத்தார்.

தாசர் உடல் மறைந்தாலும் அவரின் உபதேசங்களும், காவியங்களும் மறையவில்லை. தாசரைப் போல் பகவானை தரிசிக்க ஆவலுள்ளவர்கள் ஒரே மனதுடன் பதின்மூன்று கோடி 'ராம திரயோதச அட்சரி' (பாது கையில் இருந்தவை) மந்திரத்தை உறுதியோடு சொன்னால் நிச்சயம் இராமபிரான் தரிசனம் தருவார்.

20. மண்டலீக ராஜன்

"இந்தப் பறவைகளின் ஒலி வேதபாராயணம் செய்வது போலில்லையா நண்பா?" தோழன் நகைத்தான்.

"மண்டலீகா! எதையும் நீ ரசிக்கும் முறையே அலாதி...! ஆற்றின் சலசலப்பு! புலியின் உறுமல் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விளக்கம் சொல்வாய்" தோழனின் விளக்கத்திலிருந்து மண்டலீகனின் கவனம் மாறுபட்டது. தூரத்தில் எதையோ உற்று நோக்கினான்.

இளம் சூரியன் போன்ற முனிவர் ஒருவர் வந்து கொண்டிருந்தார். நண்பனோடு அவரை எதிர் கொண்டு சென்று வணங்கினான் இளவரசன் மண்டலீகன்.

"ஜெய விஜயீபவ! தவமிருந்து பெற்ற அருங்குணபதியான மண்டலீகா! சாஸ்திரமும், போர்க்கலையும் ஒருங்கே கற்றவனே! பிற்காலத்தில் நீ ராமச்சந்திர மூர்த்தியின் பேரருளுக்குப் பாத்திரமாவாய்!" என ஆசிர்வதித்தார் முனிவர்.

மண்டலீகன் அவரைத் தனக்கு உபதேசிக்கும்படி வேண்டினான். "எந்த முறையில் இறைவனை வணங்குவது நல்லது?" என்று கேட்டான் இளவரசன்.

முனிவர் "அது அவரவர் மனப்பக்குவத்தைப் பொறுத்தது. உதாரணமாகப் பால் இருக்கிறது. அது மாட்டிற்குள் இருக்கும் வரை உதிரம். காய்ச்சினால் ஆடை கட்டிய ருசியான பால். புரை ஊற்றினால் கெட்டியான தயிர். கடைந்தால் மோராகவும், வெண்ணையாகவும் மாறுகிறது. வெண்ணையைக் காய்ச்சினால் நெய்யும், கசடுமாகப் பிரிகிறது. பாலிலே இந்தக் கறுப்பான கசடு எங்கிருந்தது? யாரால் சொல்ல முடியும்? மரத்திலே இருக்கும் பூ தான் காயாகி, கனியாகி பின் விதையாகிறது. பல மரங்களை உருவாக்கும் விதை பூவில் எங்கிருந்தது? இதே போல் தான் ஈசுவர தியானமும்!

பார்க்கும், உணரும் பொருளில் எல்லாம் கடவுள் உண்டு. முற்றிய அனுபவமுள்ளவனே இதை அறியமுடியும். பூஜையும், ஆராதனையும் தேவையில்லை. உனக்குள் அவனை நிறுத்து. சதா அங்கு மணி ஒலிக்கட்டும். அர்ச்சனை, ஆராதனை, அலங்காரம் நடக்கட்டும். அதைவிட பெரிய பக்தி எதுவுமில்லை" முனிவரின் சொற்கள் மண்டலீகனின் நெஞ்சில் ஆழப்பதிந்தன. அரண்மனை திரும்பிய மண்டலீகன் பார்ப்பவரிடமெல்லாம் இறைவனைக் காணலானான். ஒவ்வொன்றுக்கும் மனதிற்குள் புதிய விளக்கம் சொல்லிக் கொண்டான்.

யாராவது தன்னிடம் வெறுப்புக் காட்டினால் 'அறுசுவைகளில் கசப்பும் ஒன்று தானே! வேம்பின் கசப்பு உடலுக்கு நல்லதல்லவா!" என்பான். கோபித்தால் "காரமில்லாத உணவு சுவை கூட்டாதே! இனிய பாலைத் தரும் பசுவிற்குக் கொம்பைக் கடவுள் படைத்தது முட்டத் தானே! அது போலத்தான் இதுவும்' என்று சொல்லிக்கொள்வான். அதிகம் பிரியம் காட்டினாலும் "சர்க்கரை ருசியைக் கூட்டினாலும் அளவுக்கு அதிகமானால் நஞ்சல்லவா?" என்று பாசத்தில் மூழ்கிவிடாமல் தாமரை இலை நீர்துளியாய் ஒட்டாமல் இருப்பான்.

தாயைப் போல் அனைவரிடமும் அன்பு காட்டினான். உற்ற தோழனைப்போல் அனைவருக்கும் நன்மையே செய்தான். மக்கள் நலம் பேணுவதில் நல்ல புதல்வனைப்போல் நடந்து கொண்டான்.

இவனுக்கு சுலக்ஷணா என்ற பெண்ணைத்தேடி திருமணம் செய்வித்து அரசாட்சியை அவனிடம் ஒப்படைத்து விட்டு கானகம் சென்றனர் பெற்றோர்.

சுலக்ஷணா நல்ல குடும்பத்தில் உதித்தவள். சிறுவயதிலிருந்தே புராண, இதிகாசங்களில் ஊறியவள். அதிதி பூஜை, பஜனை, தானதர்மம், ஆலயங்களில் விசேஷ ஆராதனை, திருவிழா, அபிஷேகம் இப்படித் தொண்டும் பக்தியுமாக இருந்தாள்.

அவளுக்குத் தன் கணவன் இதிலெல்லாம் கலந்து கொள்வதில்லையே, பாராட்டவில்லையே என்ற குறை. சிலசமயம் வாய்விட்டும் கேட்பாள்.

மண்டலீகன் விளையாட்டாக "குடிகளின் நன்மையே மன்னனின் ஆராதனை! நாட்டின் அமைதியே பெரிய பக்தி... எனக்கு அதற்கெல்லாம் நேரமேது? எனக்கும் சேர்த்து நீதான் கவனித்துக் கொள்கிறாயே" என்று கூறி விடுவான்.

ஒரு நாள் இரவு அயர்ந்த நித்திரை. மண்டலீகன் கனவில் பட்டாபிஷேக வைபவத்தைக் கண்டு களித்தான். ஆனந்த மிகுதியில் "என்பிரபு! ராமச்சந்திரா! ரகுபதே! தாசரதீ!" என்று மெய்மறந்து வாய்விட்டுக் கூவினான். கைகள் கூப்பி இருந்தன.

சுலக்ஷணா விழித்திருந்தாள். ஏக்கம் தீர்ந்து பொங்கிப் பூரித்தாள். இறைவனைப் பலவாறு துதித்தாள்.

மறுநாள் கோயிலில் விசேஷ அபிஷேக, அர்ச்சனைகள் நடக்க உத்தரவிட்டாள். அந்தணர்களுக்கு கோதானம், வஸ்திரதானம் செய்தாள்.

மண்டலீகன் "சுலக்ஷணா! இன்றென்ன விசேஷம்?" என்று கேட்டான்.

சுலக்ஷணா "சுவாமி! என் நெடுநாள் பிராத்தனை நிறைவேறியது! தாங்கள் கனவிலாவது வாய்விட்டு இறைவனைத் துதித்தீர்களே!" என்று கூற, மண்டலீகன் திடுக்கிட்டான்.

"நெஞ்சமெனும் பேழையில் பூட்டி வைத்திருந்த தாரக நாமாவை அசட்டையாக வெளியே விட்டு விட்டேனே! கனவு மயக்கத்தில் உளறி

விட்டேனே! இராமா! எங்கே போனாய்! இதோ உன்னுடன் வருகின்றேன்'' என்றவன் மயக்கமானான். ஒரு ஜோதி கிளம்பி வானில் மறைந்தது.

சுலக்ஷணா பிரமை பிடித்தவளானாள்! ''ஐயோ! இவர் இத்தனை பெரிய பக்தரா! ராம நாமத்தை உச்சரித்தாலே இறைவன் வெளியே வந்து விடுவான் என்று நம்புபவரா? நான்தான் பெரிய பக்தை என்று கர்வம் கொண்டிருந்தேனே!

என் அகந்தை தூளானது... இறைவா! அரை கணமேனும் உன்னை நான் அன்புடன் ஆராதித்திருப்பேனானால் என்னையும் என் பதியுடன் சேர்த்துவிடு'' என்ற உருக்கமாகக் பிராத்தித்தாள். மறுகணமே அவள் உயிரும் பிரிந்தது.

நல்ல மன்னனை இழந்த மக்கள் வாடினாலும், இப்படியொரு அதிசயத் தம்பதிகளா என அவர்களைப் போற்றிப் புகழ்ந்தனர்.

21. சக்குபாய்

''ஸ்வாமீ! உடம்பு இப்படித் தெப்பலாய் நனைந்திருக்கிறதே! என்ன கனவு கண்டீர்கள்?'' கமலாபாய் கணவனை உசுப்பினாள்.

கண்விழித்த கங்காதர ராவ்'' கமலா, நீ விழித்துக் கொண்டா இருக்கிறாய்! நான் ஒரு அற்புதமான கனவு கண்டேன்... ஆஹா!'' என்று தனக்குள் புளகாங்கிதமடைய, கமலாபாய்,

''நானும் ஒரு மகிழ்ச்சியான சொப்பனம் கண்டு தான் விழித்துக் கொண்டேன். நல்ல கனவைக் கண்டபின் தூங்கினால் பலிக்காது என்பார்களே என்று தான் படுக்கவில்லை'' எனவும்

''அப்படியா! என்ன கனவு?'' கங்காதரன் ஆவலாகக் கேட்டார். ''நீங்கள் முதலில் சொல்லுங்கள் என்றாள் கமலா.

''சரி. கங்காதரா.... ஒரு குழந்தை வேண்டும் என்று பல நாளாய் என்னிடம் வேண்டுகின்றாய்? என் அருளால் ஒரு தெய்வ மகள் உனக்குப்

பெண்ணாகப் பிறப்பாள். அவளால் பக்திப்பயிர் தழைக்கும்" என்றான் பாண்டுரங்கன்"

"என்ன அதிசயம்! கிட்டத் தட்ட இதேபோலொரு கனவைத்தான் நானும் கண்டேன்!" கமலாபாய் வியப்போடு சொன்னாள்.

"வா... இனி நாம் உறங்க வேண்டாம். கை கால் கழுவிக் கொண்டு பஜனை செய்யலாம்" இருவரும் விடிய விடிய பாண்டுரங்கன் லீலைகளைப் பாடிப் புளகித்தனர்.

இறைவன் உரைத்தபடியே சரியாகப் பத்தாம் மாதம் ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள் கமலாபாய்.

குழந்தை சகுந்தலையும், பரதனும் இருக்கும் ஓவியத்தை ஆர்வத்தோடு கவனித்ததால் சகுந்தலை என்றே பெயரிட்டனர். செல்லமாக சக்கு என்று அழைத்தனர்.

சக்குபாய் பிறந்த சிஞ்சிருணிபுரக் கிராமம் பண்டரீபுரத்துக்கு வெகு அருகில் இருந்தது. பண்டரி செல்லும் யாத்ரீகர்கள் கோஷ்டி அவ்வழியே அடிக்கடி போகும். வீட்டிலும் சதா பூஜையும், பஜனையும் தான். கேட்க வேண்டுமா! சக்குபாயின் விளையாட்டெல்லாம் பாண்டுரங்கன் வரலாறுதான்.

தானே யசோதையாக, ராதையாக, பலராமனாக மாறிவிடுவாள் எத்தனை நேரமானாலும் அலுக்காது, கம்சவதம், கோவர்த்தனகிரி, காளிங்கமர்த்தனம் என்று கதைகளைப் பாட்டாகப் பாடுவாள். சின்னஞ்சிறு மழலைப் குரலில் அவள் இசைப்பது பார்ப்பவரை மெய்மறக்க வைக்கும்.

ஒரு நாள். லேசான ஈரப்பதமான மண்ணில் கோயில் கட்டிக் கொண்டிருந்தாள் சக்குபாய். உச்சி வேளையானது. தோழிகள் ஒவ்வொருவராகச் சாப்பிடப் போய் விட்டனர். சக்குபாய்க்கு கோபுரை அரைகுறையாய் விட்டுவிட்டுப் போக மனமில்லை.

அப்போது சலங்கையணிந்த ஒரு பக்தர் பஜனை செய்து கொண்டே வந்தார். குதித்துக் குதித்துப் பாடினார். அவரது ஆனந்தத்தைக் கண்டு சக்குபாய் ஒதுங்க, அவர் கால்பட்டு அவள் கஷ்டப்பட்டுக் கட்டிய மண்

கோயில் சிதைந்தது. சக்குபாயின் கோபத்துக்கு அளவேயில்லை. அவரைப் பிடித்து நிறுத்தினாள். அவரது பஜனை நின்றது. ஏதும் விளங்காமல் பார்த்தார் அவர்.

சக்குபாய் இடிந்த கோயிலைக் காட்டி "இதென்ன நியாயம்! கோயிலை ஏன் மிதித்து இடித்தீர்கள்? சொல்லாமல் விடமாட்டேன்" எனவும், கிழவர் பணிவுடன், "கண்ணை மூடிக்கொண்டு வந்ததால் கவனிக்கவில்லை. பொறுத்துக் கொள் அம்மா" என்றார்.

"அதெல்லாம் முடியாது. தெரியாமல் செய்தால் தப்பு சரியாகி விடுமா? பணம் போட்டுக் கட்டினால் தான் மதிப்பீர்களோ?" என்று சக்குபாய் அழ,

"அழாதே பாப்பா! நான் வேண்டுமானால் அதேபோல் கட்டித் தந்து விடுகிறேன்" என்று தேற்றினார் கிழவர்.

"அதெல்லாம் வேண்டாம். எனக்கு இந்தக் கோயில் மாதிரி உங்களுக்கு இந்தத் தம்பூரா! இதைக் கொடுத்து விட்டுப் போங்கள்" என்று தர்க்கம் செய்தாள்.

"தம்பூராவும், மண்வீடும் ஒன்றாகுமா... அழகுதான்! போ" கிழவர் நடந்தார்.

சக்குபாய் விடாமல் அவர் பின்னே போக, "நான் பண்டரிபுரம் போகிறேன். என் பின்னால் ஏன் வருகிறாய்... வீட்டிலே தேடுவார்கள். போ, அம்மா" என்றார் பக்தர்.

சக்குபாய் "தம்பூராவைத் தரும் வரை உங்களை விடப்போவதில்லை" எனவும், 'எல்லாம் அவன் செயல்' என்று கூறியபடி தம்பூராவைச் சக்குபாயிடம் கொடுத்தார் வயோதிக பக்தர்.

தம்பூராவை எப்படி மீட்டுவது என்று புரியாமல் கம்பிகளைத் தட்ட அவரே மீட்டும் முறையையும் சொல்லித்தந்தார்.

"தாத்தா, 'ஓம் நமோ நாராயணாய" என்று சொல்கிறீர்களே! அந்த நாராயணன் யார்?" என்று ஆவலோடு கேட்டாள் குழந்தை.

"ஆதிமூலமே என்று அலறிய கஜேந்திரனை முதலையின் பிடியிலிருந்து காப்பாற்ற சக்ராயுதத்தை ஏவியவர். தூணிலும் இருப்பான்;

துரும்பிலும் இருப்பான் என்று திடமாகக் கூறிய பிரகலாதனுக்காக தூணைப் பிளந்து கொண்டு நரசிம்மமாக வெளிப்பட்டவர்" என்றார் கிழவர்.

"தாத்தா, தாத்தா இந்தப் பாறையிலே உட்கார்ந்து அந்தக் கதையையெல்லாம் விஸ்தாரமாய் சொல்லுங்களேன்! இந்தாருங்கள் உங்க தம்பூரா! நான் விளையாட்டாய்த்தான் கேட்டேன்" தம்பூராவைக் கிழவரிடம் கொடுத்துவிட்டு அவர் முகத்தை ஆர்வமாகப் பார்த்தாள் சக்குபாய்.

கிழவரும் நிதானமாகக் கதைகளைக் கூறிவிட்டுக் கிளம்பினார்.

"தாத்தா, பண்டரீபுரத்திலேயிருந்து எப்போ வருவீங்க?" அன்போடு கேட்டாள் சக்கு.

"ஐந்து மாதம் ஆகும்" கிழவர் நடந்து கொண்டே பதில் தந்தார். சக்குபாய் அவர் போவதையே பார்த்துக் கொண்டிருந்தாள். "சக்கு கண்ணாமூச்சி விளையாடலாம்; வருகிறாயா?"

"மனித வாழ்க்கையே ஒரு கண்ணாமூச்சிதானே! அஞ்ஞானம், ஆசை என்ற துணிகளால் கண்ணைக் கட்டிக் கொண்டு சுழன்று கொண்டிருக்கிறோம்"

"இதென்னடி... பத்துவயசுப் பெண் பேசுகிற பேச்சா இது!"

"சக்கு! ஓடிப்பிடித்து விளையாடலாமாடீ?"

"பிறப்பையும், மரணத்தையும் துரத்தித் துரத்தி ஓடிக்கொண்டு தானே இருக்கிறோம்!" தோழிகள் தங்கள் தங்கள் வீட்டில் போய் சொல்ல, ஊரே சக்குவைப் பைத்தியம் என்று முடிவு கட்டியது.

கமலாபாய் கவலையில் இளைத்துப் போனாள். அந்த நாளில் பெண் ருதுவாகுமுன் கட்டிக் கொடுப்பது வழக்கம். அதன்படி சக்குவுக்கு மாப்பிள்ளை தேட, உள்ளூர்காரர்கள் எவரும் அவளை மருமகளாக ஏற்க முன்வரவில்லை.

இந்த நேரத்தில் சிந்து தேசத்திலிருந்து மித்ருராவ் என்ற இளைஞன் வந்தான். அவன் சக்குபாயின் அழகைக் கண்டு அவளை மணம் செய்து தரும்படி கேட்டான்.

கங்காதரராவும், கமலாபாயும் அடைந்த மகிழ்ச்சி சொல்லி முடியாது. விரைவில் சக்குபாய்க்கும், மித்ருராவுக்கும் திருமணம் நடந்தது. சக்குபாயை அழைத்துக் கொண்டு தன் ஊர் திரும்பினான் மித்ருராவ்.

"அடியே! இந்த அநியாயத்தைப் பார். உன் தம்பி எங்கேயோ போய் ஒரு பெண்ணை இழுத்து வந்திருக்கிறான்" மித்ருராவின் தாய் கூவினாள்.

சக்குபாய்க்கு புக்ககத்தில் கிடைத்த முதல் வரவேற்பு இது.

"அதென்னடீ! சூரியோதயம் ஆகுமுன் ஒரு பெண் எழுந்திருக்க வேண்டாமோ?"

அதிகாலையில் எழுந்து குளிரக் குளிர நீராடுவாள் சக்குபாய்.



வாசல் தெளித்து, பெருக்கி, கோலமிட்டு, வீடு மெழுகி, சமைத்து, எல்லாருடைய துணிகளையும் துவைத்து உலர்த்தி பாத்திரங்கள் தேய்த்து, அப்பப்பா.... இரவு பதினோரு மணிவரை ஓய்வே இருக்காது சக்குபாய்க்கு.

மத்தியானம் பூராவும் சோளத்தை எந்திரத்தில் அரைப்பாள். கை சுற்றிக் கொண்டிருக்கும் போதே வாய் இடைவிடாமல் அவன் புகழ் பாடிக் கொண்டிருக்கும். 'எங்கே இருக்கிறான் ஹரி! காட்டு'' இரணியனின் அதட்டலில் மெய்சிலிர்த்து நின்று விடுவாள். நறுக்கென்று தலையில் குட்டுவிழும். தலையைத் தடவிவிட்டுக் கொண்டு மறுபடி கை இயங்கும்.

உடலும் உள்ளமும் களைத்து அவள் நித்திரைக்குச் செல்லும் போது மித்ருராவ், ''இதென்ன எப்போது பார்த்தாலும் உறக்கம்! சரியான விடியா மூஞ்சி, தலையெல்லாம் ஒரே பிசுக்கு நாற்றம். எண்ணைத் தேய்த்துக் குளிக்க சோம்பலா? துணியெல்லாம் ஒரே அழுக்கு! சவுக்காரம் போட்டுத் துவைக்கக் கூடாது! சுத்தம் என்றால் என்னவென்றே தெரிய வில்லையே! அக்கம் பக்கத்துப் பெண்களைப் பார்த்தாவது கற்றுக் கொள்ளக் கூடாதா? நான் வரும்போதெல்லாம் எண்ணை வடியும் முகமும், பரட்டைத் தலையுமாக காட்சி தருகிறாயே! எனக்கு எப்படி இருக்கும்? நான் ஏமாந்து விட்டேன்! உன் வீட்டில் உன் அம்மா உன்னைத் தேய்த்துக் குளிப்பாட்டி, துணி துவைத்துத் தந்து துப்புரவாக வைத்துக் கொண்டிருந்திருக் கிறார்கள்! சரியான காரியப் பைத்தியம்! சதா தோசைக்கு மாவாட்டுவதும், எந்திரத்தில் திரிப்பதும், பாத்திரம் தேய்ப்பதும் தான் உனக்குப் பிடித்திருக்கிறது! என்னிடம் அன்பும், அக்கறையும் காட்ட உனக்கு நேரமே இல்லை!'' என்று சலித்துக் கொள்வான்.

அவன் பேசிக் கொண்டிருக்கும் போதே இவள் தூங்கி விடுவாள்! பாவம், அத்தனை அசதி! அவனும் நாளடைவில் அவளை வெறுக்கத் தொடங்கினான்.

போதாத குறைக்கு அவன் வீட்டிற்கு வந்ததும் அவன் தாயும், தமக்கையும் புகார் பட்டியல் படிப்பார்கள். 'குளிக்க எண்ணையும், அரப்பும் தரவில்லை. அதற்கு நேரமுமில்லை' என்று சக்குபாய் சொல்லவா முடியுமா?

'சரியான மக்கு! அசடு... மூளைக்கோளாறு... பேய் பிடித்திருக்கிறது' என்றெல்லாம் பட்டம் சூட்டினார்கள்.

மித்ருராவ் கோபவெறியில் அடிப்பான்; உதைப்பான்; தலைமயிரைப் பிடித்து சுவரோடு மோதுவான்; சூட்டுக்கோலைப் பழுக்க வைத்து இழுப்பான். சக்குபாயின் கன்னமெல்லாம் கிள்ளுக்காயம். தலையெல்லாம் முண்டு முண்டாய் முழைத்திருந்தது.

சக்குபாய் மனதிற்குள் "பிரகலாதனை அவனைப் பெற்ற தந்தையே கல்லைக் கட்டி கடலில் இறக்கினாரே! அதை விடவா இது கொடுமை! இவர்கள் அன்னியர்கள். இவர்கள் தரும் துன்பங்கள் இயற்கை. முடிவில் என் பரமாத்மா எனக்கும் காட்சி தருவான்" என்று சொல்லிக் கொண்டு பொறுமையோடிருப்பாள்.

மண்டையிலிருந்து ரத்தம் பெருகும். சிரித்துக் கொண்டிருப்பாள். மித்ருராவின் தாயும், தமக்கையும் அரண்டு போவார்கள்.

'ஆ, ஊ என்று அழாமல் சிரிக்கிறாளே! இத்தனை அடியையும் சாதாரண மனிதரால் தாங்கமுடியுமா? இத்தனை வேலைதான் ஒருத்தி செய்ய முடியுமா?

இது ஏதோ காத்து கருப்பு வேலை. நீ போய் அம்மன் கோயில் பூசாரியைக் கூட்டிக் கொண்டு வா" என்று உத்தர விட்டாள் அன்னை. பூசாரி வந்தான். ஓமம் வளர்த்தான் வீபூதியை வாரி இறைத்தான். விளக்கு மாற்றால் 'ஓடிப் போகிறாயா! சொல்!' ன்று அடித்தான்.

அடுத்து மந்திரவாதி வந்தான். ஆடும், கோழியும், சேவலும் பலியிட் டார்கள்! ராத்திரியில் சுடுகாட்டில் போய் பொங்கலிட்டார்கள்.

சக்குபாய்க்காக எல்லா அவஸ்தைகளையும் இறைவனே அரூபமாக சுமந்ததால் சக்குபாய்க்கு வலியில்லை. இது புரியாமல் அவளை ஒரு அறையில் தள்ளிப் பூட்டினர் அவள் புக்ககத்தினர். அவளோ 'இதுவும் நன்மைக்கே' என்று இறைவனை நெஞ்சில் இருத்தி சமாதியில் ஆழ்ந்து விட்டாள்.

சிறுவயதில் தம்பூராவுக்குச் சண்டைபோட்ட தாத்தாவின் குரல்! சக்குபாய் ஜன்னல் வழியாக வீதியின் இருகோடிகளிலும் பார்வையை ஓடவிட்டாள். அவளை அடைத்திருந்தது வாசல் பக்கத்து அறையானதால் இந்த சௌகரியம் கிடைத்தது. "அதோ அவரேதான்! என்ன இனிமை யாகப் பாடுகிறார்" கானத்தில் லயித்தாள்.

கிழவர் மித்ருராவின் வீட்டு வாசலில் நின்று "அம்மா! தாயே!" என்று பிச்சைக்குக் குரல் கொடுத்தார்.

சக்குபாயின் மாமியார் பொங்கி வரும் கோபத்தோடு வெளியே வந்தாள். வேலையையெல்லாம் சக்குபாயே செய்து விட்டதால் உட்கார்ந்து தின்றவளுக்கு, வேலை செய்கையில் ஏற்பட்ட கடுப்பு வேறே!

'கை, கால் நன்றாகத் தானே இருக்கிறது! உழைத்துப் பிழைக்கிறது! வீடு வீடாய் கையேந்த வெட்கமாயில்லை!" என்று எரிந்து விழுந்தாள்.

"தாயே! இனிய கானத்தால் மனம் பக்தி வசப்படுகிறது. பக்திக்குக் கட்டுப்பட்ட உள்ளம் பாப புண்ணியங்களைக் கண்டு அஞ்சும். எங்களைப் போன்ற வீடு, வாசல், பந்தபாசமற்ற துறவிகளுக்கு வேண்டியது ஒரு வயிற்றுச் சோறு. வடிப்பதில் ஆளுக்கொரு பிடி தந்தால் எங்கள் வயிறு நிறைந்து விடும். தேவையில்லாதவன் உழைத்துப் பொருளைப் பதுக்கி வைப்பதால் பலன் உண்டா? இந்த வீட்டில் ஒரு கிருஷ்ண பக்தை இருக்கிறதாகச் சொன்னார்கள். வாழ்வென்னும் கடலில் புண்ணியமென்ற துடுப்புப் போட்டால் தான் மோட்சமென்னும் கரையை சுலபமாக அடையலாம்"

இந்த சமயம் உள்ளேயிருந்து வந்த மித்ருராவ் "வீட்டிலே இருக்கிற அவஸ்தை போதாதென்று பிச்சைக் கழுத்தறுப்பு வேறே! போ, போ, என்றான். கிழவர் கனிவாக "அப்பா! வீட்டிலே என்ன அவஸ்தை? என்னிடம் சொல்லு. மனதிற்குள்ளேயே குமைவதால் தொல்லை விட்டு விடுமா? என்னால் முடியுமானால் தீர்த்து வைக்கிறேன்" என்று கேட்கவும்,

மித்ருராவ் "ஆமாம்! ஆனானப்பட்ட மாந்த்ரீகர்களே கையை விரித்து விட்டார்கள்! நீதான் விமோசனம் சொல்லப் போகிறாயாக்கும்!" என்று சலித்துக் கொண்டே,

"வேலியிலே இருக்கிற முள்ளை காலில் தைத்துக் கொண்ட மாதிரி மனைவி என்று ஒரு பைத்தியத்தை ஆசைப்பட்டு மணந்து கொண்டேன். சரியான ஜடம்! அவளால் நான் ஒரு சுகமும் கண்டதில்லை!. கேவலப்பட்டது தான் மிச்சம்" என்று துயரத்தோடு கூறினான். கிழவர் ஆறுதலாக "அடாடா, நீ கவலைப்படாதே! எனக்கு இமயமலைப் பக்கம். எப்பேற்பட்ட பேயானாலும் என்னைக் கண்டால் ஓடிவிடும். நான் குணமாக்கி

விடுவேன். ஒரு காசும் நீ தரவேண்டாம். என்ன சொல்கிறாய்?" என்று கேட்டார்.

மித்ருராவ் கிழவரை உள்ளே அழைத்துச் சென்று பூட்டைத் திறந்து சக்குபாயைக் காண்பித்தான். சக்குபாய் மகிழ்ச்சியுடன் அவரை வணங்கினாள்.

கிழவர் மித்ருராவிடம் "உன் மனைவியை நிச்சயம் குணப்படுத்தி விடலாம். முதலில் நாம் மூவரும் தீர்த்தக் கரைக்குச் செல்லலாம். மந்திரங்களை வீட்டில் சொன்னால் பேய் உன் தாயையோ, தமக்கையையோ பிடித்துக் கொள்ளும்" என்றார்.

மித்ருராவின் தாயும், தமக்கையும் அலறி அடித்துக்கொண்டு உள்ளே ஓடிப்போய் கதவைச் சார்த்திக் கொண்டனர். அங்கிருந்த படியே "அவளை குளத்துக்குக் கூட்டிக் கொண்டு போ" என்று கத்தினர்.

மித்ருராவ் சக்குபாயுடன் கிழவர் பின்னால் குளக்கரையை அடைந்தான். சீரான வேப்பங்குச்சிகளாக ஐம்பது குச்சிகள் கொண்டு வரச் சொன்னார் கிழவர். மித்ருராவ் வேப்பங்குச்சி ஒடிக்கச் சென்றான்.

சக்குபாய் அழுது கொண்டே நடந்தவைகளை விபரமாகக் கூறினாள். அதோடு "ஸ்வாமி! எனக்கு இந்த வாழ்க்கையே பிடிக்கவில்லை. என்னை எப்படியாவது பண்டரீபுரம் அழைத்துச் செல்லுங்கள். பகவான் பஜனையும், உங்கள் தொண்டுமாக காலத்தைக் கழித்துவிடுகிறேன்" என்றாள்.

கிழவர் பரிவுடன் "சமுத்திரத்தில் அலைகளும், சுறாமீன்களும் இருக்கிறதென்று மீன்பிடிக்காமல் இருக்கிறார்களா? முள் குத்துமென்று ரோஜாவைப் பறிக்காதவர்கள் உண்டா? சகுணிக்கும், பிசினுக்கும், முரட்டுத் தோலுக்கும் இடையேதான் இனிய பலாச்சுளைகள் இருக்கின்றன. மரணாவஸ்தை பட்டுக் கொண்டு தான் பிள்ளை பெறுகிறார்கள்! உலகத்தில் துன்பம் கடல் மாதிரி. இன்பம் நிலம் மாதிரி சிறு பகுதிதான்! அளவுக்கு மீறிய பொறுமையைப் பித்து என்கிறார்கள் மூடர்கள்! கணவனைத்திருப்திப்படுத்துவது மனைவியின் கடமை. மித்ருராவ் நல்லவன். உன்னை ஆசைப்பட்டு மணந்தவன். அவனை சந்தோஷப்படுத்துவது தான் உன் தர்மம். வலி தாங்காத போது அழுதுவிடு. இயந்திரமாய் உழைக்காதே!" இந்த சமயம் குச்சிகளோடு மித்ருராவ்

வந்தான். மித்ருராவின் கையைப் பிடித்துக் கொண்டு சக்குபாயை நீராடச் சொன்னார். வேப்பங்குச்சிகளை நீரில் நனைத்து ஏதோ மந்திரங்களைச் சொன்னார். பின்னர் மூவரும் வீடு திரும்பினர். கிழவர் மித்ருராவின் தாய், தமக்கை இருவரையும் அழைத்தார்.

"சூர்யோதயத்திற்கு முன் சக்குபாயை எழுப்பினால் அந்தப் பேய் மறுபடி அவளைப் பிடித்துக் கொள்ளும். தவிர அவளைத் தனியே வேலை செய்ய விடக் கூடாது. பாத்திரம் தேய்த்தால் கூட ஒருவர் கழுவ வேண்டும். சமைத்தால் கூட ஒருவர் அரைத்து, காய் நறுக்கி, தேங்காய் துருவி சுற்றுக்காரியம் செய்ய வேண்டும். காலை 11 மணியிலிருந்து இரண்டு மணி நேரம் ஓய்வு கொடுக்க வேண்டும். சாயங்காலமும் ஐந்து மணி முதல் ஏழுமணிவரை ஓய்வு தரவேண்டும். மாவாட்டுவது, எந்திரத்தில் திரிப்!து, சலிப்பது என்று எல்லா வேலைகளையும் தனியே செய்தால் பேய் உங்களில் ஒருவரைப் பிடித்துக் கொள்ளவும் வாய்ப்பிருக்கிறது".

மித்ருராவின் சகோதரியும், அன்னையும் நடுங்கிய படியே அவர் சொன்னபடியே நடப்பதாக ஒப்புக் கொணடனர். பின்னர் அவர் மித்ருராவைப் பார்த்து "உங்கள் குடும்பத்தில் ரொம்பப் பாவக் கறை இருக்கிறது. எந்தப் பெண்ணானாலும் அவளைப் படுத்தத் தான் செய்யும். தினம் ஒருவருக்குச் சாப்பாடு போட வேண்டும்" என்றவர், சக்குபாயிடம் "தினமும் நீ காலையும், மாலையும் பஜனை செய்ய வேண்டும். இனிமேல் எந்தக் கலக்கமும் இராது" என்று சொல்லி அனைவரையும் ஆசீர்வதித்து விட்டுச் சென்றார்.

வேலைப்பளு இல்லாததால் சக்குபாய் தன்னை கவனித்துக் கொள்ள முடிந்தது. இரவு ஒன்பது மணிக்குள் வேலையை முடித்துக் கொண்டு படுக்கைக்குப் போனதால் கணவனிடம் சிரித்துப் பேச முடிந்தது. பஜனையும், அதிதி பூஜையும் மனதிற்குத் திருப்தியளித்ததால் உற்சாகமாக இருந்தாள். ஆனால் நாளாக நாளாக இல்லற வாழ்வில் அவள் மனம் ஒட்டவில்லை. கிழவரின் பொக்கை வாய்ப் புன்னகையை, மதுரமான சொல்லை எப்போது கேட்போம் என்று ஏங்கினாள்.

அதே குளக்கரை. குடத்தில் தண்ணீர் முகர்ந்தவள் சில நாட்களுக்கு முன் அந்தக் கிழவரோடு தான் பேசிய, நினைவுகளை அசை போட்டாள். அவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. கிழவர் தண்ணீருக்

குள்ளிருந்து 'வா, வா' என்று தலையசைப்பது போலிருக்கவே தண்ணீரில் பாய்ந்தாள்!

தண்ணீரில் மூழ்கித் தத்தளிக்கும் போது, வலுவான ஒரு கரம் அவளைப் பற்றிக் கரைக்கு இழுத்தது. கண்விழித்துப் பார்த்தால் அந்தப் பொல்லாத கிழவர்!

சக்குபாய் குலுங்கி குலுங்கி அழுதாள். கிழவர் "எத்தனை புத்திமதி சொன்னேன்! தற்கொலை செய்து கொள்வது பாபமல்லவா? நீ இத்தனை கோழையா?" என்று அவளைத் தேற்றிக் கொண்டிருந்தார்.

தண்ணீர் எடுக்க வந்த சில வம்புக்காரப் பெண்கள் இதைப் பார்த்தார்கள்.

அவர்கள் திரும்பும் வழியில் தான் மித்ருராவின் வீடு இருந்தது. வாசலில் மித்ரு பல்விளக்கிக் கொண்டிருந்தான். "சக்குபாய் உங்களுக்கு முன்னாலேயே தண்ணீர் எடுக்கப் போனாளே! என்ன செய்கிறாள்?" என்று கேட்டான்.

அவர்கள் கேலியாக "சொட்டச் சொட்டக் குளித்துவிட்டு யாரோ ஒருத்தனோடு சரஸமாடிக் கொண்டிருக்கிறாள்" என்றனர். கோபம் தலைக்கேற மித்ருராவ் குளத்திற்கு விரைந்து வந்தான்.

"ஓகோ! பழைய சினேகிதமோ? அப்பவே சந்தேகப் பட்டேன்... என்னைக் குச்சி ஒடிக்க அனுப்பிவிட்டு நீ அவளோடு தனியாகப் பேசிய மாய்மாலத்தை... தூரத்திலிருந்து காதுதான் கேட்காதே தவிர பார்வை பழுதாகவில்லையே! இந்த நீலி உம்மிடம் அழுது சாகாசம் செய்தாளா? எத்தனை நாளாய் நடக்கிறது இந்த நாடகம்?" என்று கத்தியபடியே கிழவரை அடிக்கப் போனான்.

கரையில் ஜபம் செய்து கொண்டிருந்த அந்தணர்கள், மித்ருராவைக் கட்டிப் பிடித்துத் தடுத்தனர். "மித்ரு! இதென்ன உன்புத்தி இப்படிப் போகிறது! யார் கொளுத்திய நெருப்பு இது? அவர் வயதென்ன? சக்குபாயின் வயதென்ன? என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று ஆராயாமல் அவசரப்படலாமா? உன் மனைவிக்குப் புத்திதான் சொல்லிக் கொண்டிருந்தார். சரியான முட்டாளடா நீ!" என்று ஏசினர்.

கிழவரும் சினத்துடன் "கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுத்தது போல் இவளுக்குப் போய் நீ புருஷனாக வாய்த்தாயே காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்! உனக்குத் தான் சந்தேகமென்னும் பிசாசு பிடித்திருக்கிறது! முதலில் அதை விரட்டு! இந்த உத்தமியின் முகத்திற்காக உன்னைச் சும்மா விடுகிறேன். உன் மனைவி தண்ணீர் எடுக்கும்போது பாசி வழுக்கி விழுந்துவிட்டாள். தற்செயலாக அங்கே வந்தவன் காப்பாற்றிக் கரை சேர்த்தது குற்றமா? அவளைப் பிடித்திருந்த பேயை விரட்டியவன் என்ற முறையில் க்ஷேம லாபம் விசாரித்தது தப்பா? அதற்காக இப்படிக் கூச்சல் போட்டு அடிக்க வருவதுதான் நீ காட்டும் நன்றியா? பேஷ்! அடே மட்டி! இனியாவது புத்தியோடு நடந்து கொள்" என்று சொல்லியபடி விடுவிடு வென்று நடந்து சென்றுவிட்டார்.

அனைவரும் திக்பிரமித்து நின்றனர். மித்ரு ராவ் தலைகுனிந்தபடியே, சக்குபாய் பின் தொடர வீடு வந்து சேர்ந்தான்.

"அதோ அவர் தான் கபீர்தாஸ்!"

"பகவானே இவருக்காக அடிவாங்கினார் என்பார்களே! அந்த மகானா?" "ஆமாம், அவர் பக்த ராமதாஸ்!" "ஆ! பத்ராசலத்தில் ராமர் கோயில் கட்டினாரே"

"அவரேதான்! விட்டல, விட்டல என்று மெய்மறந்து ஆடிக் கொண்டு போகிறாரே அவர்தான் நாம தேவர்"

"ஐயோ! இவரைப் பார்ப்பதே பாக்கியமாயிற்றே! இறைவன் இவருக்காக எத்தனை தொண்டுகள் செய்திருக்கிறார்..."

தோழிகளோடு நின்றிருந்த சக்குபாய் அதற்கு மேல் பொறுக்க மாட்டாமல் தண்ணீர் குடத்தைக் கீழே வைத்து விட்டு ஓடிப்போய் அவர்கள் பாதங்களில் விழுந்து வணங்கினாள். "ஸ்வாமி! தாங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று பணிவுடன் கேட்டாள்.

கபீர்தாஸ் அன்புடன் "அம்மா! ஏகாதசி உற்சவத்திற்காக பண்டரீபுரம் போகிறோம்" என்றார். "நானும் உங்களுடன் வரலாமா?" ஏக்கத்தோடு பார்த்தாள் சக்குபாய்.

"தாயே! உன் கழுத்திலுள்ள கருகுமணி நீ மணமானவள் என்று சொல்கிறது. மணமான பெண்கள் கணவனோடு, அல்லது கணவன் அனுமதியோடு வெளியே செல்வது தான் உத்தமம். நீ போய் உத்தரவு பெற்று வா" என்றார்.

சக்குபாய் வேகமாக வீட்டிற்கு வந்தாள். மித்ருராவிடம் "பண்டரீ புரத்தில் ஏகாதசி உற்சவம் பிரமாதமாயிருக்குமாமே! நான் பார்த்ததே யில்லை. போகலாமா?" என்று கேட்டாள்.

மித்ருராவ் "இந்தவருஷம் கையில் பணமில்லை. அடுத்த வருஷம் போகலாம். நாம் மட்டும் போனால் நன்றாயிராது. அம்மா, அக்காவோடு தகுந்த ஏற்பாடு செய்து கொண்டு போக வேண்டும்" என்று சொன்னான்.

"அடுத்த வருஷம் நாம் உயிரோடிருப்போம் என்பது என்ன நிச்சயம்? எப்போதும் எதிலும் கஞ்சத்தனமா? ஏன் இப்படிப் பணம், பணம் என்று பறக்கிறீர்கள்! நாம் பிறக்கும் போது கொண்டுவந்தோமா? போகும் போது கொண்டு போகப் போகிறோமா? இந்த வருஷம் எப்பேற்பட்ட மகான்கள் தரிசனமும் சேர்ந்து கிடைக்கும்! சரி, பைசா செலவில்லை... நானாவது அவர்களோடு போகிறேன். சம்மதம் தாருங்கள்" என்று வாதிட்டாள் சக்குபாய்.

"விளைந்து வந்திருக்கும் தானியங்களைத் தும்பு தூசு நீக்கவேண்டும். பண்டிகை வருகிறது. வீடு சுத்தம் பண்ண வேண்டும். எங்கும் போகக்கூடாது. பிடிவாதத்தை விட்டு வேலையைக்கவனி" என்று அதட்டினான் மித்ரு.

சக்குபாய்க்கும் கோபம் வந்தது. சாப்பிட மறுத்தாள். வேலை செய்யமறுத்தாள். மனதிற்குள் "ஐயோ! மகான்கள் எத்தனை தூரம் போய்விட்டார்களோ! அவர்களோடு சேர்ந்து கொள்ள முடியுமோ" என்ற தாபம்! மித்ருராவ் அடித்தான்; உதைத்தான். சக்குபாய் எதற்கும் மசியவில்லை. தூணில் கட்டிப்போட்டு அறையைப் பூட்டிவிட்டான். சக்குபாய் உருகினாள்.

"பண்டரீ நாதா! என்னை ஏன் இப்படி வாட்டி வதைக்கிறாய்! எனக்குள் மட்டும் ஏன் இந்தத் தாபம்? இந்தத் தாப நெருப்பைப் பற்ற வைத்தவன் அணைக்கும் வழியைக் காட்டமாட்டாயா? உன்னைத்

தொடமுடியாத பாவியா நான்! என்மாமி, நாத்தி இவர்களுக்கு உன்னைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையை உண்டாக்கக் கூடாதா? அதனால் பூவோடு சேர்ந்த நாரும் பெருமை பெற்றது போல் நானும் உன்னைப் பார்க்கும் வாய்ப்பைப் பெறுவேனே! ஸ்வாமி! உன்னைப் பார்க்க முடியாத கண்களைக் குருடாக்கிவிடு! உன் நாமாவளியைக் கேளாத செவிகளைச் செவிடாக்கிவிடு! உன் ஆலயத்துக்கு வராத கால்களையும், உனக்கு சேவை செய்ய முடியாத கைகளையும் முடக்கிவிடு. என் மனம் பொறுக்கவில்லை. என் உயிரை எடுத்துக் கொள்" என்று புலம்பியபடி பின்மண்டையால் தூணில் மோதிக் கொண்டாள். கயிறு இறுகி உடலில் ரத்தம் கட்டியது.

அந்த சமயம் பூட்டுத்திறக்கும் சப்தம் கேட்டது. சக்குபாய் நிமிர்ந்தாள். அவளே அச்சாய் ஒரு பெண்! சக்குபாயின் அருகே வந்தவள் அவளைக் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்தாள். "அம்மா! தாங்கள் யார்?" சக்குபாய் பிரமிப்போடு கேட்டாள்.

"என் பெயர் கிருஷ்ணாபாய்! ஊர் பண்டரீபுரம். நான் வேண்டிய ஏகாதசி உற்சவம் பார்த்து விட்டேன். உன் ஆவலையும், நீ படும் பாட்டையும் கேள்விப்பட்டேன். கவலைப்படாதே! உனக்காக நீ வரும் வரை நான் இங்கு உன் பெயரில் சமாளித்துக் கொள்கிறேன். பாகவ கோஷ்டி ராஜபாட்டையில் தான் போய்க்கொண்டிருக்கிறார்கள். நீ போய் கலந்து கொள். "என்றாள். சக்குபாய் சற்றே யோசித்தவள் "நீ என்னைப் போலவே இருக்கிறாய்! சமாளிக்கும் ஆற்றல் இல்லாவிட்டால் என் மாமி, நாத்தி, கணவர் மூவர் கண்ணையும் தப்பவைத்துவிட்டு சாவியோடு வந்திருக்க முடியாது. அதிலும் சந்தேகமில்லை. வேண்டாமம்மா... என்ன பாவம் செய்தேனோ! இப்பிறவியில் இந்தப்பாடு படுகிறேன்! அப்பாவியான, சம்பந்தமில்லாத உன்னை இதில் மாட்டவைத்து வேடிக்கை பார்க்க எனக்கு மனமில்லை" என்று மறுத்தாள்.

"உன் கணவரைப் பறித்துக் கொள்வேன் என்ற பயமா?" கேலியாக அப்பெண் கேட்டாள். "சேச்சே, இல்லறத்தில் என்றுமே எனக்கு நாட்டமிருந்ததில்லை! இவர்கள் பொல்லாதவர்கள். உழைக்க ஆள் கிடைத்தால் உள் எலும்பு உருகுகிற வரை விடமாட்டார்களே என்றுதான் பயப்படுகிறேன்! இரக்கப்படுவதற்குத் தண்டனையாகிவிடக் கூடாதில்லையா?"

"செக்குத் தேய்கிறதே என்று புண்ணாக்கு கவலைப் பட்ட மாதிரி இருக்கிறது! இதோ பார், நீ புறப்படுகிறாயா, இல்லையா... உன் வீட்டவர்கள் எழுந்து விடுவார்கள். உம்... சீக்கிரம் என்னைக் கட்டு" கிருஷ்ணாபாய் ஊக்கினாள்.

'இப்படியும் ஒரு பெண்ணா' என்று அதிசயித்தபடி தயக்கத்துடன் அவளைத் தூணோடு கட்டினாள் சக்குபாய்.

"இந்த சமயம் விட்டால் நீ அழுது புரண்டாலும் சந்தர்ப்பம் கிடைக்காது. வெளிக்கதவைப் பூட்டி சாவியைத் தூங்கும் உன் கணவன் தலைமாட்டில் வை. கூடத்து ஊஞ்சலில் உன் மாற்றுப்புடவை, ரவிக்கைகளை மூட்டை கட்டி வைத்திருக்கிறேன். சப்தமிடாமல் எடுத்துக் கொண்டு வேகமாக நட... உம் "கிருஷ்ணாபாயின் ஏற்பாடுகள் சக்குபாயைத் திணறடித்தன.

மூட்டையை எடுத்துக் கொள்ளும் வரை இருந்த தயக்கம், அப்புறம் பறந்தோடிவிட்டது. வெகு விரைவில் பாகவத கோஷ்டியோடு சேர்ந்து கொண்டாள்.

ராமதாசரும், நாமதேவரும் தன்னை மறந்த நிலையில் ஆடிப் பாடிக் கொண்டிருந்தனர். கபீர் ஒருவரே சக்குபாய் கோஷ்டியில் கலந்து கொண்டதைப் பார்த்தார். 'இவள் முகத்தில் தெளிவு இல்லை; இவள் தெரியாமல் ஓடி வந்திருப்பாளோ" என்று சிந்தித்தவர், பண்டரீநாதனை நெஞ்சில் நிறுத்திப் பார்த்தார்.

ஆஹா! அங்கே இறைவன் பெண் வடிவில் ஒரு தூணில் கட்டப்பட்டு நின்று கொண்டிருந்தான். கபீர் மெய் சிலிர்த்தார்! சக்குபாயை அவர் பார்த்த பார்வையில் மதிப்பும், பெருமையும் இருந்தது.

"தாயே! அன்று யசோதை உரலோடு கட்டினாள்! பின்னர் சகாதேவன் அன்பால் நெஞ்சிலே கட்டினான்! இன்று நீ தூணில் கட்டி இருக்கிறாய். யசோதை கட்டும் போது அவன் குழந்தை. சகாதேவன் கட்டும் போது அவன் பாண்டவ சகாயன். உனக்காக அவன் உருவத்தையே மாற்றிக் கொண்டான்! அந்தக் கட்டுக்களெல்லாம் சில கணங்கள் தான். இந்த கட்டிலிருந்து எப்போது விடுபடப் போகிறான்? உன் பெருமையைச் சொல்ல வார்த்தைகளுக்கு வலுவேது!" என்ற அர்த்தங்கள் அவருடைய பார்வையிலேயே பொங்கி வந்தது!.

"விடிந்து விட்டது. உன் அருமைப் பெண்டாட்டி நேற்றிரவெல்லாம் முட்டி மோதி ரகளை பண்ணினவள் ஓய்ந்து விட்டாள் போலிருக்கிறது! மூன்று நாளாய் குலைப்பட்டினி. இன்றாவது பல்விளக்கி ஏதாவது சாப்பிடும் நோக்கம் உண்டா" என்று கேள்" சட்டியில் போட்ட கடுகாய் பொரிந்து கொட்டினாள் மித்ருவின் அன்னை.

மித்ருராவ் கதவைத் திறந்தான். துவண்டு சரிந்து கிடக்கும் போலிச் சக்குபாயைக் கண்டு "ஏ! சக்கு, பண்டரீபுர ஆசைவிட்டதா? கனவில் வைகுண்டம் போனாயா? வயிற்றை இன்றைக்கும் உலரப் போடுவதாய் திட்டமா? எப்படி உத்தேசம்?" என்று கேலியாகக் கேட்டான்.

கிருஷ்ணாபாய் "கயிறு ரொம்ப இறுக்குகிறது. கொஞ்சம் தளர்த்தி விடுங்களேன்" என்றாள். "அவிழ்த்தே விடுகிறேன். இனிமேல் அலட்டமாட்டாயே?" மித்ரு மிரட்டினான். கிருஷ்ணாபாய் போலியான மிரட்சியுடன், "இல்லை. சொன்னபடி கேட்கிறேன்" என்றாள்.



மித்ருராவ் மகிழ்ச்சியுடன் "அடி உதவுகிறாப்போல் அண்ணன் தம்பி உதவுவதில்லை என்று தெரியாமலா எழுதி வைத்திருக்கிறார்கள்! தண்டோபாயம் நல்ல பலனைத் தந்திருக்கிறது" என்று சொல்லியபடியே கட்டை அவிழ்த்துவிட்டான். பரந்தாமன் நினைத்தால் பாரமான பணிகளும் உண்டோ?

கண் இமைப்பதற்குள் மூட்டை சோளமும் மாவாகிவிட்டது. எந்திரம் தானாக அரைத்துத் தள்ளியது. பூப் பூவான இட்டிலிகளை வேண்டிய அளவு வார்த்துக் குவித்தது இட்டிலிப்பானை. பாத்திரங்களெல்லாம் பளபளவென்று தானாகத் தேய்த்து, அலம்பிக் கொண்டன. வீடு வாசலெல்லாம் பளிச் பளிச் சென்று மின்னின.

படுக்கையறை சுத்தமாக இருந்தது. தலையணை உறைகளெல்லாம் மாற்றப்பட்டு அழகாகக் காட்சி அளித்தது. சுண்டக் காய்ச்சிய பசும்பாலில் கற்கண்டும், குங்குமம்பூவும் போட்டு அழகிய மனைவி தரும்போது அது மித்ருராவுக்குத் தேனாய் இனித்தது. தன் செயலுக்கெல்லாம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

"சக்கு, உனக்கு இத்தனை அழகாகக் கூடக் காட்சி அளிக்கத் தெரியுமா? என்ன நேர்த்தி! என் மனைவிதான் எத்தனை சமர்த்து! எனக்கு எத்தனை பெருமையாயிருக்கிறது தெரியுமா? இந்தத் தங்க மேனியைக் காலால் உதைத்தேனே! என் காலில் சூடு போட வேண்டாமோ? இந்த பட்டு உதடு கிழியும்படி அறைந்தேனே! நான் எத்தனை பெரிய மட்டி!" இப்படி தினமும் இரவுகளில் புலம்பித்தீர்த்தான்.

ரகசியமாய் தினுசு தினுசாய் பட்சணங்கள் வாங்கி வந்து ஊட்டினான்.

"சக்கு, அம்மாவையும், அக்காவையும் கூட நீ மாற்றி விட்டாயே! இந்த மாயத்தை எங்கே படித்தாய்? கிணற்றிலே இறைத்து உன் கை விரல்கள் காய்த்துப் போய்விட்டதா? தைலம் தேய்த்து விடட்டுமா? காலைப் பிடிக்கட்டுமா?" என்று உருகுவான். மாமியும், நாத்தியும் போட்டி போட்டுக் கொண்டு அன்பு செலுத்தினார்கள். தம்பியிடம் தமக்கை,

"நன்றாயிருக்கிறதடா மித்ரு! ஊரிலே எங்களைப் பழிக்க மாட்டார்களோ? சக்கு வாயில்லாப் பூச்சியா எதை வேணாக்கட்டிண்டு தண்ணிக்குப் போயிடறா... புடவையெல்லாம் கிழிசல்... கிழியாத புடவை

சாயம் போயி ஈன்னு இளிக்கிறது. பளிச்சுனு விலை ஒசந்ததா நாலு புடவை எடுத்துண்டு வா... இன்னொரு பொண்ணாயிருந்தா உன்னை ரோட்டுக்கு இழுத்து நாறடிச்சுடுவா. களஞ்சியம் ரொம்பி வழியறச்சே கஞ்சத்தனம் காட்டாதே" என்று படபடப்பாக சிபாரிசு செய்தாள்.

அடுத்த நாளே அரைடஜன் புடவைகள் வந்து விட்டன சக்குவுக்கு. "சக்குவுக்கு முடி ஜாஸ்தி... சின்னப் பொண்ணு... அரப்பு தேச்சுக்க முடியாம எண்ணை போக மாட்டேங்குது... நீ கொஞ்சம் தேய்ச்சு விடேன். அவ நமக்குக் காலை அமுக்கலியா? நம்ம துணியைத் துவைச்சு உலர்த்தலையா? வித்தியாசமாவா இருக்கா?" மாமியார் பெண்ணிடம் சொன்னாள். கிருஷ்ணாபாயின் தலையில் கை வைத்ததுமே மித்ருவின் தமக்கையின் நெஞ்சில் உள்ள கசடுகள் கருகிப் போயிற்று. நல்ல எண்ணங்களும், பக்தியும் பெருகியது.

மித்ருவின் குடும்பமா இது என்று ஊரார் அதிசயித்தனர். பண்டரிக்குச் சென்ற சக்குபாய் பீமா நதியில் சுதந்திரமாக நெடுநேரம் நீராடினாள். விக்கிரகத்துக்கு அபிஷேக, ஆராதனைகள் முடிந்ததும் கட்டித் தழுவிக் கொண்டு கண்ணீர் சொரிந்தாள். தரித்திரன் பொற்குவியலைக் கண்டாற்போல் வைத்த விழி இமைக்காது நின்றாள். ஒவ்வொரு பஜனைகளிலும் கலந்து கொண்டு தன்னை மறந்து பாடினாள்.

பாகவத கோஷ்டியிலிருந்து பிரிந்து ஒதுங்கிவிட்டாள். ஊரை மறந்தாள்; வீட்டை மறந்தாள்; ஏன், அவள் தன்னையே மறந்து விட்டாள். பூப்பறிப்பாள். விதவிதமாய்ப் பார்த்து மாலை கட்டுவாள். பாண்டுரங்கனுக்குச் சார்த்தி அழகு பார்ப்பாள். அவன் சேவையே அவள் உயிர் வாழத் தேவையாயிற்று.

ஒருநாள் நந்தவனத்தில் மலர் கொய்கையில் நல்லபாம்பு ஒன்று சக்குபாயைக் கொத்திவிட்டது. பறித்த மலரோடு பரமன் பாதத்திலேயே மயங்கி விழுந்தாள்பேதை! உள்ளூர் வைத்தியரை அழைத்தனர். அவர் வந்து பார்த்து விட்டு 'உயிர் போய் விட்டது' என்றார். ஊர்க்கோடியில் பாழடைந்து கிடந்த ஒரு வீட்டில் சக்குபாயைக் கிடத்திவிட்டு, கோவிலில் புண்யாக வசனம், சம்ப்ரோஷணம் எல்லாம் செய்தனர். பிணம் கிடந்த இடமாயிற்றே! பூஜை செய்ய வேண்டுமே!

சிஞ்சிருணிபுரத்துக்காரர்கள் சிலர் அன்று கோவிலில் இருந்தனர். அவர்கள் ஊர் திரும்பியதும் மித்ருராவிடம் "மித்ரு, சக்குபாய் பூப்பறிக்கும் போது அவளைப் பாம்பு கடித்து விட்டது. பாவம், உடனே செத்து விட்டாள். பண்டரியில் ஊர் கோடி வீட்டில் போட்டிருக்கிறார்கள். நீ போய் ஆக வேண்டியதைக் கவனி" என்றார்கள்.

மித்ருவிற்கு வந்த கோபம் இவ்வளவு அவ்வளவல்ல. "பொறாமைப் பேய்களா! உங்களுக்கு எங்கள் வீட்டைப் பற்றி வம்பு பேசாவிட்டால் தலை வெடித்துவிடாதோ? யாராவது சக்குவைப் பற்றி ஏதாவது சொல்லிக் கொண்டு இங்கே வாருங்கள். தொலைத்துக் கட்டிவிடுகிறேன்" என்று உறுமினான்.

வந்தவர்கள் அரண்டு போய் போய்விட்டனர். மித்ருராவ் வீட்டிற்கு வந்தவுடன், "உயிரோடிருப்பவர்களை சாகடித்து விட்டார்கள் உலுத்தர்கள்! இவள் பஜனை, பூஜை என்று நின்று விடுவது அவர்களுக்குத் தொக்காகப் போய் விட்டது" என்று பிரலாபித்தான்.

யாரென்றே தெரியவில்லை... அழகான இளம் பெண்! இன்றைக்கு அனாதையென்று தகனம் செய்து விட்டால் நாளைக்கு உரியவர் வந்து கேட்கும் போது என்ன செய்வது?"

"அதுதான் இரண்டு நாள் பார்த்தாகிவிட்டதே! யாரும் உரிமை கோரவில்லை! இனிமேலும் போட்டு வைத்தால் நாறாதா?" சக்குபாயின் இறுதி யாத்திரைக்கு ஏற்பாடாகிக் கொண்டிருந்த சமயம் "வழி, வழி" என்ற குரல் கேட்டது. ஒரு வயோதிகர். வெண்ணிறத்தாடி. கட்கத்தில் ஒரு பெட்டி. "இவன் என் பேத்தி... நான்பார்த்துக் கொள்கிறேன்" என்று கூட்டத்தைக் கலைத்துக் கொண்டு உள்ளே போனார். ஏதோ ஒரு பச்சிலையைக் கசக்கி சக்குபாயின் மூக்கில் பிழிய மிரண்டு போய் கண்ணை விழித்தாள் சக்கு! "தாத்தா நீங்கள்...?"

"நானே தான். மாந்த்ரீகமும் தெரியும். வைத்தியமும் படித்திருக் கிறேன். இதென்னம்மா கூத்து! நீ செய்வது நியாயமா? ஏகாதசி உற்சவமென்று வந்தவள் இங்கேயே ஐக்கியமாகி விட்டாயே!" சக்குபாய் தலை குனிந்தாள். "எனக்கு ஊருக்குப் போக இஷ்டமேயில்லை. நான் இங்கேயே இருக்கிறேன் தாத்தா..."

"அது தப்பும்மா... உன்னை தக்க சமயத்தில் காத்த பெண்ணின் கதி?" சகுந்தலா திடுக்கிட்டாள்!

"தாத்தா! நான் செய்தது பெரிய குற்றம்! இப்போது தான் இன்னும் பமாக இருக்கிறது! என்னென்ன விபரீதங்கள் நடக்குமோ?"

"ஒன்றும் நடக்காது... வா. நானே துணைக்கு வரேன். மித்ரு ன்கோபி. இதமா நடந்துக்கோ. நீ பண்டரீபுரத்துக்கு வர்ரதுக்கு பதிலா ண்டரீபுரத்தை அங்கே வரவழை"

"ஒண்ணும் புரியலையே! எப்படி?"

"நடந்துண்டே பேசலாம். எழுந்துவா..." ஊர் எல்லைவரை ஊராரும் டன் வந்தனர். பின்னர் சக்குபாய்க்குப் புத்தி சொல்லி பிரிந்து சென்றனர். சிஞ்சிருணிபுரக் குளக்கரை. கிழவர் "நான் வரேன் சக்கு! த்தியா நடந்துக்கோ. யார் கண்ணிலாவது பட்டு முன்னப்போல குழப்பம் பர வேண்டாம்" என்று கூறி விடை பெற்றுச் சென்றுவிட்டார். இதுவரை ரளவு தைரியமாயிருந்த சக்குவுக்குக் கைகால் உதறியது.

"எப்படிப் போவது? இருவரையும் ஒரே நேரத்தில் வீட்டாரோ, ஊராரோ ந்தித்து விட்டால்...?" என்ற தயக்கம்.

"உம்... இவ்வளவு செய்த தெய்வம் இதற்கும் ஒரு வழிகாட்டாதா? நாம் ரன் மூளையைக் குழப்பிக் கொள்ள வேண்டும்!" என்று எண்ணியபடி திரும்பினால், அங்கே குடத்தோடு எதிர்ப்பட்டாள் கிருஷ்ணாபாய்.

"அழகுதான்! போ... உன் பக்திக்கு மதிப்பு கொடுத்து, உன் நிலைமைக்கு இரங்கி உதவியதற்கு சரியான வெகுமதி தந்தாய்! இப்படிக் கை கழுவிவிட்டால் யார்தான் உனக்கு உபகாரம் செய்வார்கள்?" என்று சீறினாள்.

சக்குபாய் கண்ணீர் பெருக "சகோதரி! என்னை, என் தவறை மன்னித்து விடு. பரந்தாமன் சேவையில் நான் என்னையே இழந்து விட்டேன். நாகம் தீண்டியவள் ஏன் பிழைத்தேன் என்று வருந்துகிறேன். இப்போதும் எனக்கு இங்கே வர விருப்பமில்லை. ஆனாலும் உன்னை அடமானமாய் வைக்க நான் யார்? என் உடலைச் செருப்பாகத் தைத்துப் போட்டாலும் உன் உதவிக்கு ஈடாகாது. உன் கால்களில் விழுந்து மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். என்னை மன்னித்தேன் என்று சொன்னால் தான் உன் பாதங்களை விடுவேன்" என்றபடி கால்களில் சடாரென்று விழுந்தாள்.

இரண்டு வலிய கரங்கள் அவளைப் பிடித்துத் தூக்கி நிறுத்தி விழிகளைத் துடைத்தது சக்குபாய் திக்பிரமித்து பேச்சற்று நின்று விட்டாள். எந்தப் பண்டரிநாதனை தரிசிக்க அவள் பண்டரி புரத்துக்கு ஓடினாளோ, அந்தப் பரந்தாமன் அவளுக்காக அங்கே வந்து கட்டுண்டிருந்திருக்கிறான். மித்ருராவும், அவன் தாயும், தமக்கையும் தன்னிலும் புண்ணியம் செய்தவர்கள். பரந்தாமனின் சேவையைப் பெற்றுக் கொண்டவர்களாயிற்றே.

பரந்தாமன் அன்புடன் "சக்குபாய்! நீயாக அவர்களிடம் எதுவும் சொல்லாதே! உன் துன்பங்கள் தொலைந்தன. மித்ருவின் தாயும், சகோதரியும் மாறி விட்டார்கள்! இல்லறக்கடமைகளை நீயும் மறக்காதே! கணவனை சந்தோஷமாக வைத்திரு" என்று சொல்லி மறைந்தார். பிரமை நீங்கிய சக்குபாய் குடத்து நீரோடு வீடு வந்து சேர்ந்தாள். இரவு வந்தது. பாலைக் கொண்டு போய் கணவனிடம் தந்தாள்.

அதைக் குடித்த மித்ரு "சக்கு, உண்மையைச் சொல்... நேற்று வரை இருந்த சக்குபாய் நிஜமா? இன்றிருக்கும் நீ நிஜமா? பாலில் சுவையில்லை! ஓடிவந்து முந்தானையால் முகம் துடைத்து கால் பிடிப்பாயே! அந்த போதையிலேயே மயக்கம் கொண்டு உறங்கிப் போவேனே! திருப்தியுடன் என்னை வசப்படுத்திய அந்த தேவதை எங்கே?" என்று கேட்டான். சக்குபாய் நடந்ததை நடந்தபடி கூறினாள். மித்ரு பிரமித்தான். தாயையும், சகோதரியையும் திருத்தி, தனக்கு அமைதி தந்து சேவை செய்த பண்டரிநாதனின் வள்ளல் தன்மையை நினைந்து நினைந்து உருகினான்.

சக்குபாயும் ஒரு மனைவியின் அன்பையும், கடமையையும் உணர்த்த பகவான் தனக்காக ஒரு பெண்ணாகவே வந்து சேவை செய்த அற்புதத்தைப் புரிந்து கொண்டாள்.

"பகவான் எனக்குத் தொண்டு செய்தாரே! சந்தேகக் கண் கொண்டு உன்னைத் துன்புறுத்தினேனே" என்று மித்ருராவ் துடிக்க, சக்குபாய் அவனைத் தேற்றினாள்.

பின் இருவருமாக பண்டரீபுரம், துவாரகா, வடமதுரை, பூரி என்று பல க்ஷேத்திரங்களுக்குச் சென்று பகவானைத் தரிசித்து ஆடிப்பாடினர். தினமும் அதிதி பூஜை குறைவின்றி நடந்தது. சக்குபாயும் மனம் நிறைந்த வாழ்க்கையில் ஒன்றி, கணவனோடு இறைவனுக்குச் சேவை செய்தாள்.

22. பத்ராசல ராமதாசர்

ஆந்திர மாநிலத்திலே கொல்ல கொண்ட பல்லம் என்னும் ஊரிலே வாழ்ந்த அந்தணர் லிங்கன்னா. அவரது இல்லாள் காமாம்பாள்.

காமாம்பாளுக்கு அக்கன்னா, மாதன்னா என்று இரண்டு சகோதரர்கள். ஹைதரபாத் அரசரான தானீஷாவிடம் இருவரும் அமைச்சர் பதவி வகித்தனர்.

லிங்கன்னாவின் ஒரே அருமைப் புதல்வன் கோபன்னா. தெய்வ பக்தியுடைய கோபன்னா எங்கே கதா காலட்சேபம் நடந்தாலும் முதல் வரிசையில் இருப்பான். அதிலும் இராமாயணக் கதை என்றால் அவன் விழியும் கொட்டாமல் கேட்பான். இந்தச் சின்ன வயதில் இத்தனை பக்தியா என்று ஊரார் வியந்தனர்.

எப்போதும் உதடுகளில் ராமநாமத்தை உச்சரித்த வண்ணமிருப்பார். பெரியோர் வழிபட்ட ராமவிக்ரகமொன்று வீட்டிலிருந்தது. அதை முறைப்படி பூஜை செய்து வந்தார். ராமன் மேல் கொண்ட பக்தியே பெற்றோர் ஒருவர் பின் ஒருவராய் மறைந்ததும், கலங்காதிருக்கத் துணை செய்தது. ஒருநாள் ராம விக்ரகம் வைத்திருந்த பேழையைக் காணாமல் கலங்கினார் கோபன்னா. உணவுண்ணாமல் உருகினார். தூக்கமின்றிப் புலம்பினார்.

கபீர்தாஸர் வயோதிகர் வேடத்தில் அவரிடம் வந்து "என்ன தேடுகிறாய்?" என்று வினவ, விஷயத்தைச் சொல்லித் தேம்பி அழுதார் கோபன்னா. கபீர்தாஸர் அவரைத் தேற்றி, வேறொரு விக்ரகத்தைத் தர கோபன்னா அதை வாங்க மறுத்தார்.

"விக்ரகத்தில் என்ன இருக்கிறது? இதிலும் இறைவனைப் பார்க்க முடியாதா?" என்று கபீர் வாதிட்டார்.

"பக்கத்து வீட்டுக்காரர் நம் தந்தையைப் போல் இருக்கிறாரே! அவரிடம் அப்பாவைப் போல் அன்பு செலுத்தலாம் என்றெண்ணாமல் தந்தை இறந்து விட்டால் அலறித் துடிக்கிறோமே! அது அறியாமையா?" என்று திருப்பிக் கேட்டார் கோபன்னா.

பதில்பேசத் தோன்றாத கபீர் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு, அவரது பேழையை வரவழைத்துக் கொடுத்துவிட்டு, உபதேசமும் செய்து, ஆசீர்வதித்துச் சென்றார்.

பக்திக்கு இல்லறம் தடையில்லை என்று வற்புறுத்தி, ஒரு நல்ல குடும்பத்துப் பெண்ணை கோபன்னாவுக்குத் திருமணம் செய்வித்தனர் மாமன்மார். ஒத்த இல்லறத்துக்குச் சான்றாக அழகிய ஆண் குழந்தையொன்று பிறந்தது.

ஸ்ரீராம நவமி உற்சவம். ஊரையே வளைத்துப் பந்தல் போட்டிருந்தனர். புறக்கடையில் பெரிய பெரிய அண்டாக்களில் சாம்பாரும், ரசமும், கறி வகைகளும் தயாராயின. மூட்டை மூட்டையாக அரிசி வடித்து அன்னமலையாகக் குவிந்திருந்தது. சாதம் வடிக்கிற கஞ்சியில் யாரும் சறுக்கி விடக்கூடாதே என்று ஒரு பெரிய குழி வெட்டி இருந்தனர். கொதிக்கிற கஞ்சி அந்தக் குழியில் விழ ஏற்பாடு செய்திருந்தனர். கொதிக்கிற கஞ்சி குழி நிரம்ப இருந்தது.

கூடத்தில் ராம விக்ரகம் அழகாக அலங்கரிக்கப்பட்டு பூஜை செய்யப்பட்டிருந்தது. பஜனை கோஷங்கள் வானை முட்டின. இதெல்லாம் கோபன்னாவின் பிள்ளைக்கு வியப்பாய் இருந்தது. தளர் நடையிட்டு அங்குமிங்கும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

சமையல் முடிந்து விட்டதால் சமையல்காரர்களும் பஜனையில் கலந்து கொள்ள, முன்பக்கம் சென்று விட்டிருந்தனர்.

கடைசியாக வடித்திருந்த சாதத்திலிருந்து கஞ்சி ஓடி வந்து குழியில் விழுந்து கொண்டிருந்தது. ஆவிபறக்கும் வெள்ளைவெளேரென்ற கஞ்சி குழந்தைக்கு பிரமிப்பை ஊட்டியது. வைத்தகண் வாங்காமல் குனிந்து பார்த்துக் கொண்டிருந்தவன், கால் தடுமாற குழிக்குள் விழுந்து விட்டான். சூடு குழந்தையை அலற வைத்தது. ஆனால் அந்த அலறல் சப்தம் 'ராமஹரே' ஹரே ராமஹரே'' என்ற கோஷத்தில் அமுங்கிப் போய்விட்டது. தத்தளித்துத்துடித்து, மூச்சுத் திணறும் குழந்தையைக் காப்பாற்று வாரில்லை.

'நைவேத்யம் எடுத்து வாருங்கள்' கோபன்னாவின் குரல் கேட்டு நிவேதனம் எடுக்க வந்த அவர் மனைவி கஞ்சித்தொட்டியில் மிதக்கும்

குழந்தையைக் கண்டு திகைத்தாள், தூக்கினாள். குழந்தை விறைத்து விட்டிருந்தான். கண்ணீர் சொரிந்தாள். இதயம் துடித்தது மகனின் இழப்பை எண்ணி. வருந்திய அதே கண்கள் அங்கே அண்டா அண்டாவாய் தயாராகி இருக்கும் சாப்பாட்டு வகைகளைப் பார்த்தது.

"செத்த வீட்டில் யார் சாப்பிடுவார்கள்? பூஜைசெய்த பாகவதர்கள் வயிற்றிலோ பெரும்பசியாக இருக்கும்! ஊரிலே ஒரு வீட்டில் அடுப்பு மூட்டவில்லை! காலத்துக்கும் இது ஒரு கறையாகப் பேசப்படும்! சமைத்தவை எல்லாம் வீணாகும். இவ்வளவும் நான் இதை இப்போது வெளிப்படுத்தினால்தானே! கொஞ்சம் தாமதமாய் சொல்வதனால் என்ன கெட்டுப் போய்விடும்? அழுது அரற்றுவதால் இறந்த குழந்தை எழுந்து வரப்போகிறானா?" என்று விவேகமாக எண்ணியவள் குழந்தையின் உடலை ஒரு சாக்கில் சுற்றி தட்டுமுட்டுச் சாமான் போடும் பின்புற அறை மூலையில் வைத்தாள்.

இதற்குள் "என்னம்மா இங்கேயே நின்று விட்டீர்கள்! சாம்பிராணிக்கு அக்னி கேட்கிறார்; கற்பூர ஹாரத்தி ஆக வேண்டும்! மணி ஒன்றாகி விட்டது" என்ற பக்தர்கள் நிவேதனங்களை ஆளுக்கொன்றாய் தூக்கிக் கொண்டார்கள். துக்கத்தை விழுங்கிக் கொண்டு செயல்பட்டாள் பேதை.

ஒன்று, இரண்டு, ஐந்து, பத்து என்று பந்தி போஜனம் சளைக்காமல் நடந்தது. வந்தவர்களெல்லாம் விருந்தை வாயாரப் புகழ்ந்து கொண்டு தாம்பூலம் பெற்றுச் சென்றனர்.

"சாப்பிடலாம், வா! குழந்தை எங்கே?" என்ற கேட்டார் கோபன்னா. விம்மியபடியே விஷயத்தைச் சொன்னாள் அவர் மனைவி. பதறியவர் ஓடிச் சென்று குழந்தையை எடுத்து வந்தார்.

விக்ரகத்தின் முன்னால் குழந்தையைக் கிடத்தி "ஹே, ராமா! இது தான் உன் வரப்பிரசாதமா? இப்படி ஒரு மனைவியைத் தந்து விழாவைப் பூர்த்தி செய்த நீ எங்கள் வயிற்றில் நெருப்பைக் கொட்டலாமா? சோதனைக்கு எல்லை கிடையாதா? இப்படியெல்லாம் நடந்தால் பக்திப் பயிர் எப்படி வளரும்! கோபன்னாவை ஆண்டவன் காப்பாற்றினானா என்று உலகம் ஏசாதா? எங்களைப் பட்டினி போட்டுப் பார்க்கத்தான் நீ ஆசைப்பட்டாயா?" இப்படிப் பலவாறு கதறினார். இப்படி எவ்வளவு நேரம் அழுதிருப்பாரோ?

'அப்பா, அப்பா' என்ற மழலைக்குரல்! கண்விழித்த தம்பதிகள் குழந்தையை வாரி எடுத்து மாறிமாறி முத்தமழை பொழிந்தனர். சமையல்காரர்கள், வேலைக்காரர்களெல்லாம் இந்த அதிசயத்தை பார்த்துப் பிரமித்தனர். சற்று முன் சோகமாயிருந்த அந்த இடம் சந்தோஷ மண்டலமாக மாறியது.

"ஜம்புலன்களையும் அடக்கி, இந்திரியங்களை ஜெயித்து பஞ்சாக்னி மத்தியில் தவம் செய்தவர்களுக்கே எளிதில் கிட்டாத பரம்பொருளை இப்போதே பார்க்க வேண்டும் என்று அடம்பிடிக்கிறாயே! இது நடக்கக் கூடிய காரியமா? உரிய காலத்தில் எதுவும் தானாக நடக்கும்" என்றார் கபீர்.

கோபன்னா "பக்திக்கு பேதம் உண்டா? என்பக்தி எதில் குறைந்தது? தவசிகளும் தவமும் தான் மேலானதென்றால் இல்லறத்தை இன்றே துறந்து விடுகிறேன். எனக்கு ஸ்ரீராமனை இப்போதே பார்க்க வேண்டும் இனியும் பொறுமையாயிருக்க என்னால் ஆகாது" என்றார் பிடிவாதமாக

கபீர் "சரி, அவசரப்பட்டு ஏடாகூடமாக எதுவும் செய்துவிடாதே நாளை பகல் உச்சி வேளையில் பகவான் தரிசனம் கிடைக்கும்" என்று கூறிச்சென்றார்.

கோபன்னாவின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. வேலையாட்கள் மூலம் விஷயம் ஊர் பூராவும் பரவி விட்டது.

ஒவ்வொருவராக கோபன்னாவிடம் வந்து, "கோபன்னா, ஓரமாய் நின்று நானும் பார்க்கிறேனே!"

"கோபன்னா... ஸ்வாமி வரும் போது வரவேற்க வேண்டாமோ? பெரிய பஜனைக்கு ஏற்பாடு செய்வோமா? நான் டோலக் வாசிக்கிறேன்!"

"ஸ்வாமிக்குப் பூச சந்தனம் நான் அரைக்கிறேன்"

"முதல் தரமான மாலை நான் கட்டிக் கொண்டு வருகிறேன்!"

"கோபன்னா... எனக்கு தூரத்திலிருந்தால் கண்சரியாகத் தெரியாது.... என்னை உன் பக்கத்தில் நிறுத்திக்கோடா". இப்படியாக கூட்டம் சேர்ந்து விட்டது. கோபன்னாவின் மனைவி மூலம் பெண்கள் கூட்டம் இன்னொரு பக்கம்.

அங்கே கபீர், இராமனிடம் "நாளை பகல் உச்சி வேளையில் கோபன் னாவுக்குத் தரிசனம் தந்தே ஆக வேண்டும். நான் வாக்குத் தந்து விட்டேன்" என்று வாதாடிக் கொண்டிருந்தார்.

"அவனுக்கு இன்னும் பக்குவம் வரவில்லை. அஞ்ஞானிகளையும், நான் காட்சி அளித்தவுடன் என்னை -வரம் கேட்டு, விதியை மாற்றச் சொல்லி அடம்பிடிக்கும் அறிவீனர்களையும், கூட்டி வைத்துக் கொண்டிருக்கிறான்" என்றார் பகவான்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. என் வாக்கு உமது வாக்கு. அதைக்காப்பாற்றியே ஆக வேண்டும்" என்று கெஞ்சினார் கபீர்.

வானை அளாவும் பஜனை வோஷம். நடுவிலே அலங்கரித்த சிம்மாசனம். ஒரு பெரிய வெள்ளித் தட்டில் தாம்பூலம்! குலை வாழை. மா, பலாக்கனிகள்; மாலை... சந்தனம்; பன்னீர்! பட்டு உத்தரீயம்! சத்ரம், சாமரம் என்று ஆளுக் கொன்றைக் கையிலே தூக்கிக் கொண்டு வாசலையே பார்த்த வண்ணமிருந்தனர். கோயில் வாசலில் சிலர் தவமிருந்தனர். கோபன்னா பூஜா விக்ரத் தருகிலேயே உட்கார்ந்திருந்தார்.

உடம்பெல்லாம் சகதியுடன் ஒரு முரட்டு எருமைமாடு திமுதிமுவென்று வந்தது. அதன் கால்பட்டு சுவாமிக்கு அர்ச்சனை செய்யவைத்திருந்த நறுமண மலர்கள் சிதறடிக்கப்பட்டன. பால், சந்தனம் எல்லாம் கொட்டி ஆறாய் ஓடின. தடியை எடுத்துக் கொண்டு பக்தர்கள் செம்மையாய்த் தாக்க 'அம்மே!" என்றலறிக்கொண்டே எருமை ஓடிவிட்டது.

மாலையாகி இரவும் வந்து விட்டது. பக்தர்கள் ஏமாற்றத்தோடு தத்தம் வீடு சென்றனர். கபீர், கோபன்னாவிடம் "எருமைவடிவத்தில் வந்த இறைவன் உன் பாலையும், சந்தனத்தையும், பூக்களையும் பாதபூஜையாக ஏற்றுக் கொண்டான். நீங்கள் தான் அவனை அறியாது அடித்து விரட்டி இருக்கிறீர்கள்!" என்றார்.

கோபன்னா சோகமாக "இராமன் எருமை ரூபத்தில் வருவான் என்று எப்படித் தெரியும்?" என, "இதே கேள்வியை நானும் அவரிடம் கேட்டேன். எந்த வடிவத்திலும், எல்லா உயிரிலும் இறைவனைப் பார்ப்பவனே மெய்யான பக்தன் என்பதை உனக்கு உணர்த்த இறைவன் ஆடிய நாடகம் இது. வருந்தாதே! உலகில் பசிகொடியது. அடியார்களை ஆதரி.

ஆண்டவனின் அருகில் அது சேர்த்து விடும்" என்று ஆறுதல் கூறிச் சென்றார் கபீர்.

"தானீஷா! இவன் எங்கள் மருமகன் கோபன்னா. நிரம்ப புத்திசாலி. நேர்மையானவன். படித்தவன். இவனுக்கு ஏதாவதொரு நல்ல வேலை போட்டுத் தரவேண்டும்!" மருமகனுக்காக மன்னரிடம் சிபாரிசு செய்தார் அக்கன்னா.

கோபன்னாவை ஏற இறங்கப் பார்த்த தானீஷா "கோபன்னா, தானீஷா பணவிஷயத்தில் ரொம்ப கறார். எல்லாத் தகராறுகளுமே பண விஷயத்தினாலே தான் உண்டாகிறதுங்கறது நம்ம அபிப்ராயம். உங்க மாமனுங்க ரெண்டு பேரும் எங்கிட்டே ரொம்ப நாளா மந்திரியாயிருக்கிற வங்க. வேலையிலே ஒரு அப்பழுக்குச் சொல்ல முடியாது. அவங்க சிபாரிசு பண்ணா சரியாத்தான் இருங்குங்கற நம்பிக்கையிலே பத்ராசலம் தாலுகாவுக்குத் தாசில்தாரா நியமிச்சு கடுதாசு தரேன். போயி சேர்ந்துக்குங்க. கிஸ்தியை ஒழுங்கா வசூல் பண்ணி அனுப்பிச்சுடணும்" என்றார்.

கோபன்னா மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்து, மாமன்மாரிடம் விடை பெற்றுக் கொண்டு, ராஜமரியாதைகளுடன் பல்லக்கில் பத்ராசலம் சென்று வேலையை ஒப்புக் கொண்டார். குடும்பத்தை வரவழைத்துக் கொண்டார். அதிதி பூஜையும், பஜனையும் தவறாமல் நடந்தது. தினமும் கோவிலுக்குச் சென்று ஸ்ரீராமச் சந்திரமூர்த்தியை வழிபட்டு வந்தார்.

புதிய தாசில்தார் எப்படியிருப்பாரோ என்று பயந்த பத்ராசலவாசிகள் ஆஸ்திகரான, நற்குணம் வாய்ந்த கோபன்னாவைக் கண்டு ஆனந்தித் தனர். கிஸ்திப் பணத்தை தாமதமின்றி செலுத்தி வந்தனர். தாசில் தாருக்கு எல்லா வகையிலும் ஒத்துழைப்புத் தந்தனர்.

ஸ்ரீராம நவமி. கிரிபிரதட்சணம் செய்துவந்தார் கோபன்னா. கூட வந்த முதியவரிடம், "இப்படி முள்ளும், புதருமாய் மண்டிக்கிடக்கிறதே! மதில் சுவர்களில் வெடிப்பு விழுந்து, இடிந்து, சிதிலமாகி, கரும்பாசி பிடித்து, ஆலஞ்செடி முளைத்திருக்கிறதே! கோவில் கட்டிய பிறகு புனருத்தாரணம் செய்யவே இல்லையா?" என்று கேட்டார்.

கிழவர் "தம்பீ, மன்னனோ முஸ்லீம். எங்கேயிருந்து கோவில் சீர்படும்... பாம்பும், நரியும் ஏன் சிறுத்தையுமே குடி இருக்கிறது. தம்மக் கான்னு ஒருவிதவை. அவ சொப்பனத்திலே நான் இன்ன இடத்திலே இருக்கேன். மலைமேலே கோயில் கட்டுன்னு ஆண்டவன் சொன்னார். தம்மக்கா ஊரார் உதவியோட இந்தக் கோயிலைக் கட்டினா. பக்திரெட்டி என்கிறவன் அர்த்தமண்டபம், மகா மண்டபமெல்லாம் கட்டித் தந்தான். அப்புறம் ரொம்ப நாள் கழிச்சு ஒரு ராஜா கொஞ்சம் சீர்திருத்தி கும்பாபிஷேகம் செஞ்சார். அவ்வளவு தான்." என்றார் வருத்தத்துடன்.

"கோயில் நன்றாயிருந்தால் தானே மக்கள் அடிக்கடி வருவார்கள்! பக்தி பெருகும். இந்து மதம் தழைக்கும்! ஜனங்கள் பாபபுண்ணியத்திற்கு அஞ்சுவார்கள்! இவ்வளவு பெரிய கோயிலை இப்படிப் பாழடித்திருக் கிறார்களே! எத்தனை யாத்ரீகர்கள் தங்கலாம்! வரி மட்டும் வாங்கும் நவாபுக்கு அதை செலவழிக்க ஏன் மனம் வருவதில்லை? இதனால் அரசனுக்கு நற்பெயரும், புகழும் தானே கிடைக்கும்! திருவிழா நடந்தால் வியாபாரம் செழிக்கும்! கலைஞர்கள் பிழைப்பார்கள். பணம் தாராளமாய் புழங்கும். இந்தப் பணம் வந்துதான் தானீஷாவின் கஜானா நிரம்ப வேண்டும் என்ற அவசியமுமில்லை. நாட்டில் தற்போது நல்ல செழிப்பு" இந்தரீதியில் சிந்தனை செய்தபடி அலுவலகம் வந்த கோபன்னா

கணக்குப் பிள்ளையைக் கூப்பிட்டு, "வசூலான வரிப்பணம் எவ்வளவு?" என்று விசாரித்தார். "ஆறுலட்சம் பொன்" என்று பதில் வந்தது. திருப்பணிக்கு என்ன செலவாகும் என்று கணக்குப் போடச் சொன்னார். வந்த விடை அவரை மூச்சுத் திணறச் செய்தது.

"ஆறு லட்சம் பொன்!" ஆண்டவன் தன்னைக் கொண்டு இந்தக் காரியத்தை முடித்துக் கொள்ள எண்ணியிருப்பதாலேயே இந்த பதில்கள் ஒத்து வந்திருப்பதாக நம்பினார். உடனே திருப்பணி வேலைகள் தொடங்கிவிட்டன. முதலில் முட்களும் புதர்களும் வெட்டி எறியப்பட்டன. மலைப்பிரதேச மெங்கும் சிற்பிகளின் உளிச்சத்தம்.

மணமிகுந்த வாசமலர்களும், துளசியுமாக கோவிலைச் சுற்றி நந்தவனம் அமைக்கப்பட்டது. அழகான புதிய கருங்கல் மதில் சுவர்கள் எழுப்பப்பட்டன. தங்கத்தகடு வாய்ந்த கொடிமரமும் கலசங்களும் சூரிய ஒளியில் தகதகவென்று மின்னின. ராமாயண காவியம் கல்லிலே கதை பேசியது. அந்தரத்தில் பூவேலை செய்யும் சைத்ரீகர்கள். ஊரெங்கும் இதே பேச்சு.

அழகழகான வாகனங்கள். அபிஷேக பாத்திரங்கள், நகைகள், எல்லாம் முடிந்து கும்பாபிஷேகம் ஆக ஒருவருஷமாயிற்று. ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி பிராட்டியுடன் பளபளவென்று ஜொலித்துக் கொண்டிருப்பதைக் கண்டு கோபன்னாவின் நெஞ்சும், மனமும் குளிர்ந்தது.

"வணக்கம் ஐயா!" "வணக்கம். என்ன சமாசாரம்?" "நான் ஹைதராபாத்திலிருந்து வருகிறேன். மந்திரி அக்கன்னா, மாதன்னா அனுப்பி வைச்சாருங்க. அவங்க கொடுத்த பத்திரம் இது" என்றபடி தூதன் ஓலையைக் கொடுத்தான்.

ஓலையைப் பிரித்துப் படித்தார் கோபன்னா. அதில் "ஒருவருடமாக வரிப்பணம் கட்டாததின் காரணம் என்ன? ராஜசேவகம் என்பது கம்பி மேல் நடப்பது போல. எங்கள் பெயருக்கு இழுக்கு உண்டாக்காமல் உடனே கிஸ்திப்பணத்தைச் செலுத்தவும்" என்று எழுதி கையொப்பமிட்டிருந்தது.

கோபன்னா தூதனை அழைத்துச் சென்று திருப்பணிகளைக் காட்டினார். தூதன் மகிழ்ச்சியுடன் "அற்புதமான பணி தான். அரசனின் சம்மதமின்றி வரிப்பணத்தை உபயோகித்தது திருட்டுக் குற்றமாகுமே!

இன்று புகழும் ஊர், நாளை தூற்றாதா? புண்ணியம் ராஜ தண்டனை யிலிருந்து காப்பாற்றுமா? தானீஷா மகா கஞ்சனாயிற்றே" என்றான்.

"ஸ்ரீராமன் செயல் செலவழிக்க உந்தியது. அன்று மாயமான் என்று தெரிந்தும், பின்னால் சென்று என் பிரபு துன்பம் அனுபவிக்கவில்லையா? நானும் கஷ்டப்படத் தலையில் எழுதி இருந்தால் தப்ப முடியுமா? சொந்தக் காரியத்துக்கு ஒரு பைசாகூட தொடவில்லை. தானீஷாவுக்கு மன்னிக்கும் மனப்பான்மையை ஸ்ரீராமன் அருள வேண்டும்" என்று விரக்தியோடு கூறினார் கோபன்னா.

தூதுவன் சென்று மாமன்மார்களிடம் கண்டது, கேட்டது எல்லாம் உள்ளபடி தெரிவித்தான்.

அவர்களும் செய்வதறியாது திகைத்தனர். ஆண்டு இறுதி வந்தது. சபை கூட்டப்பட்டது. வரவு செலவுகள் படிக்கப்பட்டன. பத்ராசலத் திலிருந்து வரிப்பணம் வரவில்லை என்று கேட்டதும் தானீஷா "என்ன காரணம்?" என்று அமைச்சர்களிடம் கேட்டார்.

காரணத்தைத் தூதன் மூலம் அறிந்து கொண்டார். தானீஷா கோபத்தில் கண் சிவந்தான். "ஆறு லட்சம் பொன்னை உடனே செலுத்தா விடில் கைது செய்து கொண்டு வாருங்கள்" என்று உத்தரவிட்டான்.

நான்கு காவலர்கள் அரச உத்தரவுடன் பத்ராசலம் போய் சேர்ந்தனர். கோபன்னா அவர்களை சாப்பிடச் சொன்னார். காவலர்கள் "தாகீதுக்கு முதலில் பதில் சொல்லுங்கள்" என்று கேட்க, கோபன்னா,

"நான்தான் எல்லாவற்றையும் திருப்பணிக்குச் செலவிட்டு விட்டேனே! சாப்பிட்டதும் ஹைதராபாத் போகலாம்" என்றார்.

காவலர்கள் "கூடாது. கைது செய்ய வந்த இடத்தில் கை நனைப்பது லஞ்சமாகக் கருதப்படும். புறப்படுங்கள் போகலாம்" என்றனர். பல்லக்கு வந்தது. ஏறப்போனார் கோபன்னா. காவலர்கள் தடுத்தனர். "தாங்கள் குற்றவாளியாக வருகிறீர்கள். அதனால் நடந்து தான் வரவேண்டும்" என்றனர்.

பல்லக்குத் தூக்கிகளும், ஏவலர்களும், கணக்குப் பிள்ளையும் இதைக் கேட்டு கண்ணீர் சொரிந்தனர். கோபன்னாவின் மனைவியும், மகனும், ஊராரும் ஓடிவந்தனர்."ராமனுக்குத்தான் செலவிட்டேன். ராமன்

காப்பாற்றுவான். தைரியமாயிருங்கள். கடமையைச் செய்ய வந்தவர்களை தடுப்பது குற்றம். விலகுங்கள்" என்று சமாதானம் சொல்லிவிட்டு நடந்தே கையில் விலங்குடன் ஹைதராபாத் சென்றார்.

அங்கே சென்றதும் அவர் சிறையில் அடைக்கப்பட்டார். இருண்ட சிறையில் மருமகனைக் கண்டதும் மாமன்மார்களின் கோபம் சொல்லத்தரமல்ல. வாயில் வந்தபடி வைதனர். 'விட்டில் பூச்சி விளக்கில் மடிவது போல், விழுந்தாயே", என்று பாசம் மீதூரக் கண்ணீர் வடித்தனர்.

மறுநாள் விசாரணை மண்டபத்திற்குக் கோபன்னாவைக் கொண்டு வந்தார்கள். சபையின் நடுநாயகமாக தானீஷா. அருகிலிருந்த ஆசனங்களில் அமைச்சர்கள். கூண்டில் நின்றிருந்தார் கோபன்னா. ஊசி விழுந்தால் கேட்கும் நிசப்தம்.

வழக்கின் போக்கை அறிய, நாடே கூடி இருந்தது. விசாரணை தொடங்கியது. 'தான் கேளாமல் செய்தது தவறுதான்' என்று ஒப்புக் கொண்டார் கோபன்னா. ஆனால் "ஆலயங்கள் நாட்டின் சொத்து அதைப் பராமரிக்க வேண்டியது அரசரின் கடமை. அரசரின் பிரதிநிதியாக மக்களின் திறைப் பணத்தை மக்களுக்கே செலவிட்டேன்" என்று கூறி, பக்தி வளர்வதால் ஏற்படும் நன்மைகளையும், அது நலிவதால் உண்டான தீமைகளைப் பற்றியும் விஸ்தாரமாய் விளக்கினார்.

"சுல்தான்ஜீ! மனித வாழ்க்கை அநித்யமானது. நாளையே உங்களுக்கு மரணமேற்பட்டாலும் அடுத்து வரும் மன்னர் நல்ல விதமாய் செலவழித் தால் அவரைத்தான் மக்கள் கொண்டாடுவர். உங்களைக் கஞ்சன் என்றே தூஷிப்பர். பழி வராதபடி ஸ்ரீராமன் தங்களை ஆட்கொண்டிருக்கிறார் என்று நம்புங்கள்" என்றார்.

தானீஷாவின் இரும்பு மனமும் இளகியது. ஆனால் அதேசமயம் "இன்று இவனை விட்டுவிட்டால் நாளை இன்னொரு அதிகாரி இன்னொரு ஊரில் கோயில் கட்டுவான். சக்திரம் கட்டுவான். அன்று அவனை விடுதலை செய்யவில்லையா என்பான். மக்களுக்கு ராஜாங் கத்திடம் அவநம்பிக்கை ஏற்பட்டுவிடும். அதிகாரிகளுக்குப் பயம் போய் விடும். கொலை தண்டனை வேண்டாம். ஆறு லட்சமும் வசூலாகும் வரை சிறையிலடைத்து வைப்போம்" என்று முடிவு கட்டினான்.

அப்படியே தீர்ப்பும் கூறினான். ஆந்திர மாநிலம் பூராவும் வெகுநாள் வரை கோபன்னாவின் வழக்கே மக்களிடை அலசப்பட்டது. தேங்காய் நார்ப்பாய். மயிர்கள் தொட்டால் உதிர்ந்து கையோடு ஒட்டிக் கொள்ளும் கறுப்புக் கம்பளி. குண்டு குழியுமான மண்தரையில் ஈரக்கசிவு. ஒரே நாற்றம். இருட்டு. வெகு உயரத்தில் மூன்று கம்பிகளுள்ள ஜன்னல் ஒன்று. ஒழுகும் மரக்குவளை. இதுதான் கோபன்னாவின் வாசஸ்தலம்.

"ஹே, ராமா! வனவாசத்திலே புழுதியிலே, கட்டாந் தரையிலே எப்படிப் படுத்தாய்? எனக்காவது நான்கு சுவர்கள் பாதுகாவலாய் இருக்கின்றன! உனக்கு சதா காட்டு மிருகங்களின் உறுமலும், இயற்கையின் சீற்றங்களும் தானே துணையாயிந்திருக்கும்!" என்று உருகுவார்.

அவருக்கு உணவு உப்பையும், அரிசியையும் சம விகிதத்தில் கலந்த கஞ்சி.

"ஹே ராமா! இது உனக்கு நீதியா! புளியோதரையும், சுண்டலும், தயிர்சாதமும், பானகமும், நீர்மோரும், சர்க்கரைப் பொங்கலுமாக உனக்கு நிவேதனத்துக்கு வழி செய்தவனுக்கு நீ தரும் வெகுமதியா இது" என்றழுவார்.

சும்மா இருக்கும் நேரங்களில் அவனுடைய கல்யாண குணங்களை வர்ணித்துப் பாடுவார். நெஞ்சிலே அவனைப் பதித்துக் கொண்டு தியான நிலையில் ஆழ்ந்து போவார்.

தானீஷா முச்சந்தியில் நிறுத்திக் கசையடி கொடுக்கச் செய்தார். மூன்று அடிக்கு ஒருபிரம்பு வீதம் துண்டாய் போயிற்று. வரி வரியாய் ரத்த காயங்கள்!

"ராமா, ராமபத்ரா! ராமச்சந்திரமூர்த்தி!" என்றலறினார். குழந்தைகளும், பெண்களும், இரக்கமனம் கொண்டவர்களும் இது கண்டு கலங்கினர். சிலர் மயக்கமுற்று விழுந்தனர்.

"அடாடா! இவர் பாட்டில் தாசில்தாராய் ஜம்மென்று இருந்திருக்கலாமே! இவர் தலைவிதியைப் பார்த்தாயா? அவனுக்குச் சந்தனக் களபம் சார்த்தி மகிழ்ந்தார். இவர் உடம்பெல்லாம் ரத்த களபம்! இவர் பெண்டாட்டிக்கா நகை செய்து போட்டார்! பிள்ளை பேரில் நிலமா வாங்கிக் கொண்டார்! பூலோக வைகுண்டமாய் பத்ராசலத்தை மாற்றியவருக்கு

பூலோக நரகம் கிடைத்திருக்கிறது! ராமா! இது தகுமா? இது முறையா?'' என்று புலம்பினர்.

''பணத்துக்கு ஏற்பாடு செய்தாயா?'' என்று தானீஷா கேட்க, ''செப்புக் காசும் என்னிடம் இல்லையே! எங்கிருந்து ஏற்பாடு செய்வேன்?'' என்ற கோபன்னா துக்கித்தார்.

''வைத்துக் கொண்டு மறைக்க எனக்கென்ன பைத்தியமா?'' என்று வருந்தினார். ''ஒரு பெருங்கல்லைத் தலையில் ஏற்றி வீதி வீதியாய் சுற்றச் சொல்லுங்கள்'' என்று ஆணையிட்டார் நவாபு.

''ராமனுக்குப் பிரம்மோற்சவம் ஏற்பாடு செய்து வீதிவலம் வரச் செய்தவருக்கு இதுவா கதி!'' என்று மக்கள் அனுதாபித்தனர்.

கைகளைப் பின்புறமாய்க் கட்டி, கால்களை மடக்கிக் கட்டி மணலிலே உருட்டி விட்டனர். கோபன்னா தவித்தார். துடித்தார். வருஷங்கள் கடந்தன. காலம் சென்றதே தவிர துன்பங்களுக்கு முடிவைக் காண முடியவில்லை. பொறுமையை இழந்தார் கோபன்னா.

''மனிதனாய் அவதாரம் எடுத்துக் காட்டிலும், மேட்டிலும் கஷ்டப்பட்ட உனக்கே மானிடனின் துயரங்கள் புரியவில்லையே! பக்த கோடிகள் வருகிறார்கள்! அபிஷேக ஆராதனைகள் நடக்கின்றன. ஒரு மாமாங்கமாய் நான் வேளைக்குச் சோறின்றி இங்கே அல்லல்படுவது உன் நினைவில் படவில்லையா? நீ நினைத்தால் இச்சாமாத்திரம் இந்த வேதனைகள் தீர்ந்து விடும். நீயும் நான் செய்தது குற்றம் என்று நினைக்கிறாயா? அப்படி யோக்கியமாய் நினைப்பவன் அன்றே என் கனவில் வந்து தடுத்திருக்கலாமே! 'என் கோவிலை நீ பழுது பார்க்க வேண்டாம்; எப்போது செய்து கொள்வதென்று எனக்குத் தெரியும்'' என்று அசரீரியாகவேனும் சொல்லி இருக்கலாமே! செய்யச் செய்யப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு சோதனையா செய்கிறாய்! நகைகளும், பட்டாடைகளும், முத்துக் கிரீடமும் தசரதனா செய்து போட்டான்? திருவிழாவுக்கான மானியங்களை கௌசல்யையா எழுதிவைத்தாள்?'' என்று வேளை தோறும் புலம்பிக் கொண்டிருந்தார்.

மேல்தோல் கழன்று ரத்தப்பொருக்குகள் பறட்பறட்டென்று இழுக்கும். படுக்க நாதியற்ற கரடுமுரடான தரை உடம்பை ரணப்படுத்தும். ஓட்டி

உலர்ந்த கோபன்னாவின் நிலை மிகவும் பரிதாபமாக இருந்தது. விழிகளில் ஒளியில்லை. அவரைப் பார்க்க எவருக்கும் அனுமதியில்லை. கொடூர மனம் படைத்த காவலர்கள் காவலுக்கிருந்தனர்.

"தாயே! ஸ்ரீராமன் கருணையற்றவன்! அவனை வேண்டுவதில் பயனில்லை என்று இப்போதுதான் புரிந்து கொண்டேன். நிறை கர்ப்பிணியைக் காட்டில் விட்டவன் தானே! கற்பினுக்கணியை தீயில் குளி என்றவன் தானே என்பதை யோசிக்காமல் இத்தனை காலமும் அவனைப் பிரார்த்தித்துக் காலத்தை வீணாக்கி விட்டேன்! சீதம்மா! இராமனிடம் நீயாவது எடுத்துச் சொல்லக் கூடாதா? அசோக வனத்தில் நீ தனிமைத் துயரை அனுபவித்தவளாயிற்றே! உனக்குமா புரியவில்லை என் நிலை! நீ போட்டுக் கொண்டிருக்கும் வைரக் கம்மலை உன் தந்தை ஜனகனா செய்து போட்டார்? உன் மூக்கிலே ஜ்வலிக்கும் வைர மூக்குத்தியை ஸ்ரீராமனா அணிவித்தார்? இந்த ஏழைக் கோபன்னாவை எல்லாரும் மறந்து போனீர்களே!" என்று கதறினார்.

அப்போது ஒரு நல்லபாம்பு சரசரவென்று ஓடியது.

"இனியும் என்னால் பொறுக்க முடியாது. உடல் வேதனைகளுக்கு இன்றோரு முடிவுகட்ட வேண்டும்" என்றவர் ஓடும் நாகத்தைப் பிடித்தார். பிடித்த வேகத்தில் நாகம் விஷத்தை பக்கத்திலிருந்த மரக்கிண்ணத்தில் கக்கியது.

நாகம் அவர் கையில் துணிச் சுருளாய் நழுவி மறைந்தது. விஷத்தை நீர்விட்டுக் கரைத்துக் குடிக்கப் போனபோது கோபன்னாவின் கண்கள் சொருகிக் கொண்டன. உறக்கமா, மயக்கமா என்று புரியாத நிலை! கண்முன் தேவியின் மங்களகரமான தோற்றம் தெரிந்தது. அந்த ஆனந்தத்தில் மூழ்கி தன்னை மறந்து தியானத்திலாழ்ந்தார்.

ஸ்ரீ வைகுண்டம்; பெருமானின் பாதம் வருடிக் கொண்டிருந்த தேவி கேட்டாள்.

"கோபன்னாவின் நிலை கல்மனதையும் கரையச் செய்கிறதே! அவன் விஷயத்தில் ஏன் பாராமுகமாய் இருக்கிறீர்கள்! சோதனைகளால் நீங்கள் காணும் சுகம் என்ன? அங்கே அவன் விஷமருந்தப் போகிறான்! இங்கே நீங்கள் நிம்மதியாய் சயனித்துக் கொண்டிருக்கிறீர்கள்!"

ஸ்ரீமந்நராயணன் புன்னகையோடு, "தேவி! காலம் கனியாமல் எதுவும் கை கூடாது. சென்ற பிறவியில் கோபன்னா ஒரு கிளியின் சிறகைப் பிய்த்து பன்னிரண்டு ஆண்டுகள் சிறையில் அடைத்து வளர்த்தான். அதன் பலனை இப்பிறவியில் அனுபவிக்கிறான். அனுபவித்தாலன்றி வினை விடாது. இன்றிரவோடு அவன் கஷ்டங்கள் தீர்ந்துவிடும். நானும் ஆதிசேஷனும் ராம லட்சுமணர்களாகச் சென்று தானீஷாவிடம் கடனைச் செலுத்திவிடுவோம்" என்றார்.

தேவி கலகலவென்று சிரித்தாள். "கோபன்னா காலமெல்லாம் காத்திருக்க தானீஷாவுக்கு தரிசனமா? பேஷ்! நல்ல நியாயம் தான்! இதென்ன ஓரவஞ்சகம்?"

"தேவி! போன பிறவியில் தானீஷா, காசியில் வாழ்ந்த ஒரு ஏழை அந்தணன். '1000 குடங்கள் கங்கை நீரால் அபிஷேகம் செய்தால் நினைத்தது கிட்டும்' என்று எழுதியிருந்த கற்றளியைப் படித்து விட்டு தன் வறுமை நீங்கி தான் மாபெரும் அரசனாக வேண்டும் என்று பிரார்த்தித்தபடியே 999 குடங்கள் அபிஷேகம் முடித்து விட்டான். கடைசிக்

குடத்தைச் சுமந்து வரும் போது நடை தளர்ந்து விழி ஒளிமங்கி வெறுப்பின் எல்லைக்குப் போய் விட்டான். பொறுமையின்றி அந்தக் குடத்தை நீரோடு லிங்கத்தின் தலையில் போட்டு உடைத்து விட்டான்.

அதனாலேயே இந்து மதத்தின் பெருமை அறியாத முஸ்லீம் அரசனாகப் பிறந்திருக்கிறான். அவனுக்கும் காட்சி தரவேண்டிய கடமை இருக்கிறது. தானீஷா நல்ல அரசன். கோபன்னாவின் நிலையிலிருந்து பார்க்காமல் தானீஷாவின் நிலையிலிருந்து பார். வரிப்பணத்தை இப்படி எல்லோரும் செலவழித்து விடுவார்களானால் ராஜ்யம் எப்படி நடக்கும்? கோபன்னாவைப் போலவே நல்ல நோக்கத்துக்கே எல்லாரும் செலவழிப் பார்கள் என்பது என்ன நிச்சயம்? தெய்வ காரியம் என்ற பெயரில் தாங்கள் பெரும் பகுதியைச் சுருட்டிக் கொள்வார்கள். ஆள்பவனிடம் அச்சம் இருக்காது. கட்டுப்பாடு குறையும்!" என்றார் பரந்தாமன்.

தேவி பிரமித்திருந்தாள்.

"யாரது?" அருகிருந்த விளக்கைத் தூண்டிய நவாப், மெய்மறந்து போனார்.

"ஆடவர்களிலும் இத்தனை வசீகரம் உண்டா? யார் இவர்கள்? எப்படி உள்ளே வந்தார்கள்? காவல்காரன் என்னவானான்? எந்த தேசத்து இளவரசர்கள்? நள்ளிரவில் அவசரமாய் என்னைக் காணவேண்டிய அவசியம் என்ன? என்ன கம்பீரமான உடலமைப்பு! பார்த்துக் கொண்டே இருக்கலாம் போன்ற இந்தக் காந்தப் பார்வை மனதைக் கொள்ளை கொள்கிறதே! இதென்ன கையிலே மூட்டை?" க்ஷணத்தில் இப்படி எண்ணிய தானீஷா சுதாரித்துக் கொண்டு கேட்டார்.

"எங்கிருந்து வருகிறீர்கள்?"

பத்ராசலத்திலிருந்து வருகிறோம்; "நாங்கள் கோபன்னாவின் பணியாட்கள். என் பெயர் ராம்ஜி. இவன் பெயர் லக்ஷ்மண்ஜி.

கோபன்னாவின் கடனைத் தீர்க்க வந்திருக்கிறோம்" மளமளவென்று சொன்னான் கருநிற மேனியன்.

"இத்தனை வருஷங்களாய் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? இந்த நடுராத்திரியில் அப்படியென்ன அவசரம்? விடிந்ததும் கொடுக்கலாமே?" என்றார் தானீஷா.

"ஆறு லட்சம் வராகன் சேரவேண்டாமா? பணம் சேர்ந்தபின் ஒரு விநாடி கூட தாமதிக்க விரும்பவில்லை. பாராக்காரன் தூங்கிக் கொண்டிருக்கிறான். இதோ! உங்களைச் சேர வேண்டிய பணம்! சரியாக இருக்கிறதா என்று எண்ணிக் கொண்டு ரசீது தந்து சீக்கிரமாய் எங்களை அனுப்புங்கள்" என்ற ராம்ஜி கையிலிருந்த மூட்டையின் வாயைப் பிரித்துக் கொட்டினான்.

சலசலவென்ற சப்தம். புத்தம் புது தங்கநாணயங்கள் கண்ணைப் பறித்தன. வேகமாக நடந்த காரியங்கள் தானீஷாவைப் பேச்சிழக்கச் செய்தன.

"உட்காருங்கள் பத்ராசலத்திலிருந்து எப்போது புறப்பட்டீர்கள்? வழிப்பயணம் எப்படி இருந்தது? எப்போது சாப்பிட்டீர்கள்? என்ன சாப்பிடுகிறீர்கள்? தூக்கக் கலக்கம். வந்தவுடன் கேட்கவில்லையே என்று வித்தியாசமாய் எண்ண வேண்டாம்" என்றார் தானீஷா.

"நீங்கள் மன்னர். நாங்கள் சேவகர். இதிலே உபசாரத்தை எதிர்பார்க்க முடியுமா? நீங்கள் எங்களை விசாரித்ததே நாங்கள் செய்த புண்ணியம்! பணியாட்களை எசமானர் உபசரித்ததாய் சரித்திரமே கிடையாதே! நாங்கள் தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் எங்கள் தலைவரின் வேதனையை நீட்டிக்கும். அதனால் சீக்கிரமாய் எங்களுக்கு விடை கொடுத்தால் அவரை விடுதலை செய்து அழைத்துப் போய் புண்களுக்கு மருந்து போட்டு, நல்ல சாப்பாடு கொடுத்து மெத்தையிலிட்டுத் தூங்கச் செய்வோம்" என்று அவசரப் படுத்தினார்கள்.

"நீங்கள் என்மேல் ரொம்பக் கோபமாயிருக்கிறீர்கள்! நான் என் கடமையைச் செய்தேன். கோபன்னாவிடம் இத்தனை விசுவாசமாய் இருக்கிறீர்களே! அப்படி அவர் உங்களுக்கு என்ன சம்பளம் தந்தார்? எத்தனை ஆண்டுகளாயிற்று அவரிடம் வேலைக்குச் சேர்ந்து?" என்று தானீஷா ஆச்சரியத்துடன் கேட்டார்.

"கொல்ல கொண்ட பல்லத்திலே அவங்கப்பா காலத்திலிருந்தே நாங்க அவங்க ஊழியர்கள். அவர் பத்ராசலம் வந்தப்ப நாங்களும் வந்துட்டோம்! சம்பளமா பெரிசு... நேர்மையும், பக்தியும் கொண்ட குடும்பம்! மனுஷா தராதரம் கிடையாதா? எல்லாரையும் ஒரே நோக்கிலே எடை போட முடியுமா? அவருடைய ஒவ்வொரு துளிக் கண்ணீரும் எங்க நெஞ்சிலே ரத்தம் சொட்ட வைக்கிறதே!"

கரிய திருமால் பேசப் பேச, தானீஷா தலை குனிந்தார். "பணம் வந்து விட்டது. நீர் இதுகாறும் கோபன்னாவுக்களித்த வேதனைகளைத் திருப்பி வாங்க முடியுமா? ஏன் வீண் பேச்சு. முத்திரை பதித்த ரசீது கொடுங்கள். நாங்கள் போகிறோம்" என்றார் ராம்ஜீ.

"நள்ளிரவில் முத்திரைக்கு எங்கு போவது?" தானீஷா விழித்தார். அவர் கையிலிருந்த முத்திரை மோதிரத்தை அங்கிருந்த தம்பல வட்டில் வெற்றிலைச் சாற்றில் அமிழ்த்தி, தன் அங்கியில் பதித்துக் கொண்டு நகர்ந்தார் ராம்ஜீ.

தானீஷா நடந்ததை நம்ப முடியாமல் பிரமை பிடித்து நின்றார். கீழே கொட்டிக் கிடந்த நாணயங்கள் அவரைப் பார்த்து நகைப்பது போலி ருந்தன. சிறைச்சாலை, தொய்ந்து துவண்டு உறங்கும் கோபன்னாவைக் கண்டு இருவரும் உருகினர்.

"லட்சுமணா, இந்த அங்கியை அவன் பக்கத்தில் வைத்து விட்டு விஷக்கிண்ணத்தைக் கவிழ்த்து விட்டு வா" என்றார் ஸ்ரீராமன்.

சரசரவென்று நாகமாக வடிவெடுத்துச் சென்று விஷக் கிண்ணத்தைக் கவிழ்த்துவிட்டு முத்திரை பதித்த அங்கியை அவர் பக்கத்தில் வைத்துவிட்டுத் திரும்பிய லட்சுமணன்,

"இந்தக் கருணையை அப்போதே காட்டியிருக்கக் கூடாதா? நமக்கு வானளாவிய கோபுரமும், மதிலும் எடுத்தவனுக்கு இருண்ட நாற்றமெடுத்த சிறையில் வாசமா?" என்று கரைந்தார்.

தம்பிக்குச் சமாதானம் சொல்லி அழைத்துச் சென்றார் தாசரதி. ராம லட்சுமணர்கள் மறைந்ததும் கோபன்னா விழித்தார்.

"அதுதான் ஒரே தூக்கமாகத் தூங்கப் போகிறேனே! அதற்குள் ஒரு குட்டித் தூக்கமா?" என்று விரக்தியாக நகைத்தவர், விஷக் கிண்ணம் கவிழ்ந்து கிடப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டார்.

"ஹே ராமா! நான் அத்தனை பாபியா? நரகத்திலும் எனக்கு இடம் கிடையாதா? நவாபின் தண்டனைகளில்தான் இந்தப் பாழும் உயிர் போகமாட்டேனென்கிறதென்றால் அபூர்வமாய்க்கிடைத்த நஞ்சும் நாசமாகிவிட்டதே! இனி இன்னொரு நாகப் பாம்பு எப்போது வரும்?" என்று துக்கித்தவர் அங்கே கிடந்த பட்டு அங்கியை எடுத்தார்.

கோபன்னாவின் கடன் தீர்ந்தது என்ற எழுத்தின் கீழ் தானீஷாவின் முத்திரை! 'இதென்ன அதிசயம்! இதையார் போட்டது?' குழம்பினார் கோபன்னா. உள்ளே நுழைந்த தானீஷா "கோபன்னா! என்னை மன்னித்து விடுங்கள். உம்மிடம் மன்னிப்புக் கேட்கவும் அருகதையற்றவன் நான். உமது கடனெல்லாம் நேற்று நள்ளிரவோடு தீர்ந்தது. ஆஹா! அவர்கள் பணியாட்கள் மாதிரியா இருந்தார்கள்! என்ன பொலிவு! என்ன கட்டமைப்பு! இப்படி ஒரு வேலையாட்கள் இருப்பதாய் அங்கிருந்து வந்த எவருமே சொல்லவில்லையே! உம்மிடம் தான் எத்தனை பாசம்! "சம்பளமா பெரிது! உமது பக்தி தான் பெரிது! என்று சொல்லி விட்டார்கள்!" தானீஷா சொல்லச் சொல்ல கோபன்னா எதுவும் விளங்காமல் விழித்தார்.

"கடனைத்தீர்த்தவர் எவர்? பணியாட்களா? நேற்று நள்ளிரவிரலா? பெயரென்ன?" என்று கேட்டார். இப்போது தானீஷா விழித்தார். "ராம்ஜீ, லட்சுமண்ஜீ என்றார்களே! கொல்ல கொண்ட பல்லத்திலிருந்தே தலைமுறை தலைமுறையாய் பணியாட்கள் என்றார்களே!"

"ஹே ராமா! பன்னிரண்டு வருஷங்களாய் கதறிக் கதறி பாதி ராத்திரியில் மூட்டை சுமக்க வைத்து விட்டேனே'! தானீஷாவின் பணம் என்பதால் அவருக்குக் காட்சி தந்தாயா? திட்டியதால் உன் முகத்தை எனக்குக் காட்டவில்லையா? இணைபிரியா தம்பியோடு வந்து தம்பல எச்சிலை முத்திரை பதித்துக் கொண்டாயா? ராமா! இது உன் பிறந்த நாள் ஊர்வலத்திற்காக விசேஷமாக நெய்யச் சொன்ன அங்கியாயிற்றே! அடையாளம் காட்டக் கொண்டு வந்தாயா?" என்று புரண்டழுதார். "வந்தவர் ஸ்ரீராமனா" தானீஷா பிரமித்தார். கோபன்னாவின் காலில் விழுந்து முட்டி மோதினார்.

"கோபன்னா! இன்று முதல் நீர் கோபன்னாவல்ல... ராமதாசர்... இறைவன் உமக்காக கடன் தீர்க்க வந்திருக்கிறார் என்றால் நீர் எத்தனை பெருமை பெற்றவர்! உம்மால் இறைவனின் தரிசனம் பெற்றேன். என்னை நீங்கள் மன்னிப்பது நிஜமானால் மீண்டும் பத்ராசலம் பொறுப்பை ஒப்புக்



கொள்ள வேண்டும்” என்று வேண்டினார். ராமதாசரைத் தூக்கி வந்து, நறுமணத் தைலமிட்டு நீராட்டவைத்து, நல்ல ஆடைகளளித்து, அறுசுவை உணவை அருகிருந்து, உபசரித்து உண்ண வைத்து சப்ரமஞ்சத்தில் துயிலச் செய்தார்.

ராமதாசர் உடம்பு தேறும் வரை பக்கத்திலிருந்து கவனித்துக் கொண்டார். தானீஷாவுக்குப் பகவத் கதைகளை நேரம் போவது தெரியாமல் விளக்கிக் கொண்டிருப்பார் தாசர். முடிவில் தான் கட்டிய பத்ராசலக் கோயிலை ஆசை தீர, நிம்மதியாக அருகிருந்து சேவிக்கப் போகிறோம் என்ற மகிழ்ச்சியோடு நவாப் தந்த ஏராளமான பொன்னும், மணியும் கொண்டு புறப்பட்டார்.

வழியில் கள்வர் மிரட்ட சிவிகை நிறுத்தப்பட்டது. ஸ்ரீராமச்சந்திரன் குதிரை மேல் வந்து கள்வர்களை விரட்டினார். பாட்டும், தியானமும், பூஜையுமாக எந்தக் கவலையுமின்றி கடமையாற்றிக் கொண்டிருந்த தாசருக்கு மரண வேளையும் வந்தது.

வாசலில் தங்கத் தேர் வந்து நின்றது. மனைவி மகனுக்குச் சாதம் பரிமாறிக் கொண்டிருந்தாள்.

“ப்ரியே! ஓடிவா” என்றழைத்தார் தாசர். “கொஞ்சம் இருங்கள்; வருகிறேன்” என்று உள்ளிருந்தபடி குரல் கொடுத்தாள் அவள்.

தாசர் ஏறியதும் தேர் வான வீதியில் பறந்து சென்றது. சப்தம் கேட்டு ஓடி வந்தாள் மனைவி. தாசர் செல்வதைக் கண்டு தவித்தாள். “மாயை உன்னை விடவில்லை; மகனைக் கவனித்துக் கொள்ளும் ஆசையில் மண்ணில் தங்கிவிட்டாய்” என்று குரல் வந்தது.

தாசரின் தேர் வான வெளியில் மறைந்து விட்டது. பன்னிரண்டு ஆண்டுகள் தனியே தவித்த தாசரை தங்கத்தேரில் தனியே ஆட்கொண்டான் பரந்தாமன். இன்றும் அவர் பக்திக்கு எடுத்துக்காட்டாக பத்ராசலம் நிற்கிறது.

23. ரசிக முராரி

ரசிக முராரி பெரிய கிருஷ்ணபக்தர். ஜனங்கள் அவரிடம் அன்னதானத்துக்கென்று ஏராளமான பொருள் காணிக்கையாகச் செலுத்தினர். அவரும் தேவையான உணவுப் பொருள்கள் வாங்கி சலிக்காமல் அன்னதானம் செய்து வந்தார்.

சாப்பிடும் பக்தர்களை எல்லாம் பகவான் ரூபமாகவே எண்ணி காலலம்பி, அந்த நீரைச்சாப்பிட்ட பிறகே, தினமும் உணவு உண்ணுவார்.

ஒரு முறை அன்னதானம் செய்யப்பொருளில்லை. தனது சீடர்களை அழைத்து "அன்னதானத்துக்குக் காத்திருக்கும் பாகவதர்களிடம் நிலைமையைக் கூறி, அவர்கள் பாதம் அலம்பி, நீர் சேகரித்து வாருங்கள்" என்று அனுப்பினார்.

அவர்களும் அவ்வாறே செய்து கொண்டு வரும்போது ஒரு குறைவுற்ற பாதத்தைக் கண்டார்கள். சீழும், ரத்தமும், வெடிப்புமாக விரல்கள் அழுகிக் கிடந்தன. 'இவருடைய காலை அலம்பினால் நமது குருநாதரை நோய் பீடிக்கும்" எனப் பேசாது வந்து விட்டனர்.

குருநாதர் தீர்த்தம் சாப்பிட்டார். பிறகு சீடர்களைப் பார்த்து "தினம் போல் இந்த நீர் இனிப்பாக இல்லாததின் காரணம் என்ன? எத்தனையோ தடவை அன்னமிட முடியாத சமயங்களில் இப்படி தீர்த்தம் மட்டும் சாப்பிட்டு இருந்திருக்கிறேன். நடந்ததை ஒளிக்காமல் கூறுங்கள்" என்றார்.

சிஷ்யர்கள் குஷ்டரோகியைப் பற்றி நினைத்ததைக் கூறினார்கள். "அவர் பெரிய பாகவத சிரோன்மணியாயிருக்க வேண்டும். நீங்கள் செய்தது அபசாரம். உடனே அவர் இருக்குமிடத்தை எனக்குக் காட்டுங்கள்" என்று புறப்பட்டு விட்டார். சீடர்கள் குருவிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, பெருநோய் பிடித்திருந்தவரிடம் அழைத்துப் போனார்கள். அவர் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, அவர் பாதம் அலம்பி தீர்த்தம் சாப்பிட்டார் குருநாதர். சீடர்களும், ஜனங்களும் ரசிக முராரியின் பேதமற்ற மனதைக் கண்டு பிரமித்தனர்.

ரசிக முராரியின் குரு தயார்ணவர், சாளிக்கிராம பூஜை செய்து வந்தார். அவரது பூஜைக்காக அந்நாட்டரசன் பிரம்மகேசரி நான்கு கிராமங்களை மானியமாக அளித்தான். அவன் காலம் கழிந்தபிறகு வேற்று நாட்டரசன் படையெடுத்து வந்து சாயனம் என்ற அந்த அழகிய நகரத்தைக் கைப்பற்றினான். தயார்ணவருக்கு பிரம்ம கேசரி கொடுத்த மானியத்தையும் பறித்துக் கொண்டான். தயார்ணவரும் சீடர்களும், மற்ற ஜனங்களும் புதிய அரசனுக்கு எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. உடனே குரு இச்செய்தியை ரசிக முராரிக்குச் சொல்லி அனுப்பினார்.

செய்தி வரும் போது ரசிகமுராரி பாதி சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அப்படியே எச்சில் கையுடன் குருவின்முன் வந்து நின்றார்.

"முராரி, முதலில் கை கழுவிக் கொள். மானியமாகத் தந்த கிராமங்களைத் திரும்பப் பெற்று வருவது உன் பொறுப்பு" என அன்புடன் வேண்டினார் குருதேவர். கை கழுவிக்கொண்டு அரண்மனைக்குப் புறப்பட்டார் முராரி. இந்தச் செய்தி துஷ்ட அரசனுக்கு எட்டியது. முராரியின் மேல் மதயானையை ஏவிக் கொல்லும்படி உத்தரவிட்டான்.

மன்னனைப் போன்ற பணியாட்கள். மாவுத்தன் பரம நாஸ்திகன். கொலை வெறி பிடித்த பாதகன். மகிழ்ச்சியோடு யானையை அங்குசத்தால் குத்தி விரட்டினான். யானை வலி தாங்காது பிளிறிக் கொண்டு தும்பிக்கையைத் தூக்கிக் கொண்டு வந்தது. ரசிக முராரியின் சீடர்கள் மூலைக் கொருவராய் ஓடி ஒளிந்தனர். மக்கள் முராரியைக் காப்பாற்றக் கடவுளை வேண்டினர்.

ரசிகமுராரி துளியும் அச்சமின்றி, "நாராயணா, அன்று கஜேந்திரனைக் காப்பாற்றியவனே! லக்ஷ்மீ நரசிம்மப்பெருமானே! கஜேந்திரனுக்கு சாந்தத்தை அளிப்பாயாக! குவலயாபீடமெனும் யானையை சம்ஹரித்த பாண்டு ரங்கா! இந்த யானையின் வெறியைத் தணிப்பாயாக!" இப்படி அவர் சொல்லச் சொல்ல, அந்தயானை அவர் முன் மண்டியிட்டு, வணங்கி, எழுந்து மூன்று முறை வலம்வந்து, எதிரே வந்து நின்றது. இதைக் கண்ட முராரி தன் கழுத்திலிருந்த துளசி மாலையை அதன் கழுத்தில் அணிவித்து தடவிக் கொடுத்தபடி காதில் ராம நாமத்தை உச்சரித்தார். ராம நாமத்தைக் கேட்ட மத்தகஜம், அவர் காலைத் தொட்டு கண்களில் ஒத்திக் கொண்டது.

இங்கு நடந்த விஷயங்களை சேவகர்கள் ஓடிப்போய் அரசனிடம் சொல்ல, அரசன் பயந்து நடுங்கியபடி விரைந்து வந்து முராரியின் காலில் விழுந்து, "ஸ்வாமீ, என் திமிர் ஒடுங்கியது. பக்திக்கு முன் அரசும் தூசே என்றுணர்ந்து கொண்டேன். என் பிழையை மன்னித்து சீடனாக ஏற்றுக் கொண்டு உய்யும் வழியைக் காட்ட வேண்டும்" என வேண்டினான்.

முராரி "அரசே, அரசை ஆள்பவர்கள் மாறுவதுண்டு. அரச தர்மங்கள் மாறுவதில்லை. எல்லா விஷயங்களையும் நீ ஒருவனே கவனிக்க முடியாது. தர்மம் ஒழுங்காக நடந்தால் தான் நாட்டில் மழை பொய்க்காது. பக்தி செழித்தால் தான் பஞ்சமகா பாதகங்கள் கட்டுக்குள் அடங்கி இருக்கும். பிரம்ம கேசரி அந்த தர்மமும், பக்தியும் செழிப்பாயிருக்கத் தந்த மானியங் களை நீ கவர்ந்து கொண்டது தவறு. கொதிப்படைந்த மக்கள் நாளை ஆட்சியையே கவிழ்க்கலாம்" என்று சொல்லிக் கொண்டு வரும்போது மன்னன்,

"ஸ்வாமி, நான் செய்த தவறு இப்போது தான் எனக்குப் புலப்படு கின்றது. அந்த நான்கு கிராமங்களையும் தங்கள் குருநாதரிடம் திரும்பிக் கொடுத்து விடுகின்றேன்" என்றான்.

"அது மட்டும் போதாது. இந்த யானையை எனக்குத் தரவேண்டும். இனி இதுபோல் நடந்து கொள்வதில்லை என்று வாக்களிக்க வேண்டும்" என்றார் முராரி. அரசன் அப்படியே வாக்களித்து, யானையை அவருடன் அனுப்பி வைத்தான். பல நீதிகளைப் போதித்து விட்டு விடைபெற்றுக் கொண்ட முராரி, குருநாதரிடம் வந்துசேதி சொன்னார். குருநாதா மகிழ்ச்சியுடன் ஆசிர்வதித்து அனுப்பினார். தன் இருப்பிடம் சேர்ந்த ரசிக முராரியைப் பின் தொடர்ந்து சென்ற யானை முராரி கொடுப்பதை, உண்டு, சொன்னதை செய்து வந்தது.

முராரி சீடர்களோடு ஸ்தல யாத்திரை புறப்பட்டார். யானையும் உடன் சென்றது. அடர்ந்த காட்டு வழி சென்று கொண்டிருக்கும் போது கள்வர்கள் வழி மறித்தனர். அவர்களிடம் ஏதும் இல்லை என்று தெரிந்ததும் ஆத்திரமடைந்து துன்புறுத்தினர். அவ்வளவு தான்! யானை அவர்களை நாலாபுறமும் ஓட ஓடத் துரத்தியது. முராரி யானையைக் கொண்டாடி தட்டிக் கொடுத்தார். யானையின் துணையால் எந்த இடையூறுமின்றி ஸ்தலயாத்திரை முடித்துக் கொண்டு அருணாவதி என்ற

நகரை அடைந்தனர். அங்கே ஒரு நந்தவனத்தில் தங்கினர். அவ்வூர்மக்கள் யானைக்குத் தேங்காய், கரும்பு, வாழை, பலா போன்றவற்றைக் கொடுத்தால் கொடுப்பவர் நெற்றியில் நாமமோ, கழுத்தில் ஜபமாலையோ இல்லாவிட்டால் வாங்கமாட்டேன் என்று தலையசைத்து விடும். மீறி வற்புறுத்தினால் தும்பிக்கையைத் தூக்கி விரட்டும். எவரையும் பயமுறுத்துமே தவிர தீங்கு செய்யாது. குருநாதர் பூஜை செய்யும் போது தேங்காய் உடைத்துக் கொடுக்கும்; மணி அடிக்கும். மண்டி இட்டு நமஸ்கரிக்கும். பூப்பறிக்கும் போது குடலையை தும்பிக்கையில் மாட்டிக் கொண்டு வரும். கிணற்றிலிருந்து தண்ணீர் இழுக்கும். குருநாதர் சாப்பிட்டாலன்றி சாப்பிடாது.

இதெல்லாம் பார்த்து அதிசயித்த ஜனங்கள் நவாபிடம் சென்று கூறினர். அதைத் தான் எப்படியாவது அடைய வேண்டும் என்று ஆசைப்பட்டான் நவாபு. முராரியிடம் சென்று யானையைக் கேட்டான். முராரி "அரசே, யானை வைஷ்ணவ பக்தர்களிடம் மட்டுமே அன்புடன் நடந்து கொள்ளும். பலாத்காரமாய் இழுத்துச் சென்று அசம்பாவிதமாக ஏதும் நடந்தால் அதற்கு நான் பொறுப்பில்லை" என்று கூறினார்.

நவாப் அரண்மனைக்கு வந்து ஆழ்ந்து யோசித்தான். பின் பல சேவகர்களை அழைத்து நெற்றியில் நாமமும், கழுத்தில் துளசிமாலையும் அணிந்து யானையைக் கவர்ந்து வரச் சொன்னான்.

அவர்களும் அப்படியே வேஷமிட்டு, பஜனை செய்து கொண்டே போனதில், யானை ஏமாந்து, இவர்களை வணங்கியது. அவர்களும் தைரியமாய் யானையைப் பிடித்து நவாபின் முன் நிறத்தினர். நவாப் மகிழ்ச்சியுடன் இரும்புச் சங்கிலியால் பிணைத்து கற்தூணில் கட்டி வைக்கும்படி மாவுத்தனுக்கு ஆணையிட்டான். அதுவரை "விட்டல், விட்டல் பாண்டு ரங்க விட்டல்" என்று பஜனை நடந்து கொண்டிருந்ததால், யானை அதில் லயித்து பொம்மையாய் இருந்தது.

பஜனை நின்றதும்தான் தான் வஞ்சிக்கப் பட்டதை உணர்ந்தது. தன் குருநாதரை இனிப்பார்க்க முடியாது என்று புரிந்து கொண்டு கண்ணீர் வடித்தது. தும்பிக்கையால் தரையில் அறைந்து கொண்டது. வாழைத்தார், சுவை மிகுந்த பலாப்பழம், அரிசி, வெல்லம் என்று எதைக் கொடுத்தாலும் திரும்பிப் பாராமல் இரவும், பகலும் அலைபாய்ந்து ஏழாம் நாள் உயிரை

விட்டது. இதைக் கேள்விப்பட்ட ரசிகமுராரி யானையின் அன்பை எண்ணிக் கண்ணீர் விட்டார். நவாப் "யானையை மோசம் செய்து கொன்றதற்காக மகான் சாபமிடுவாரோ" எனப்பயந்து முராரியின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டான். "கபடமாக யானையைக் கவர்ந்து சென்று அதன் சாவுக்குக் காரணமாகி விட்டேன். எனக்கு உபதேசம் செய்து என் பாவம் தொலைய வழிகாட்ட வேண்டும்" என்று கெஞ்சினான்.

அவனுக்கு உபதேசம் செய்து விட்டு ரசிக முராரி அந்த ஊரை விட்டுப் புறப்பட்டு விட்டார். யானையை அடக்கம் செய்த இடம் பவித்ரமான தீர்த்தஸ்தலமாக விளங்குகிறது. அருணாவதியில் இந்துமதம் தழைக்க யானை தன் உயிரை விட்டது, என்று மக்கள் பேசி அங்கலாய்த்தனர்.

24. பத்மநாப வேதியர்

அந்தண குலத்தில் பிறந்த பத்மநாபர் இளமையிலேயே வேதங்கள், உபநிஷதங்கள், பிரம்ம சூத்ரம் எல்லாம் கற்று வித்தகரானார் என்றாலும் கடவுளை அடைய குரு மூலமாக உபதேசம் பெறவேண்டும் என்று கபீர்தாஸரைச் சரணடைந்தார். கபீரும் இவரை அன்புடன் ஏற்று உபதேசம் செய்தார். பத்மநாபர் தினமும் அதிகாலையில் கங்கையில் நீராடப் போவார். அப்படிப் போன சமயம் ஒரு நாள் கங்கைக் கரையில் கூட்டமாக இருந்தது. எட்டிப்பார்த்தார். ஒரு குஷ்ட ரோகியைச் சுற்றிக் கொண்டிருந்தனர் ஜனங்கள். காரணம் கேட்டார் பத்மநாபர்.

"ஐயா, இவர் ஒரு பெரிய வியாபாரி. நல்ல மனமுடையவர். தான தருமங்கள் செய்வார். அழகிய மனைவியும், ஐந்து பிள்ளைகளும் உண்டு. வியாதியால் அவரை அனைவரும் நெருங்கப் பயந்தனர். வியாதிக் கொடுமை தாங்காமல் கங்கையில் விழுந்து தற்கொலை செய்து கொள்ளத் தீர்மானித்திருக்கிறார்" என்று கூறினான் ஒருவன். பத்மநாபர் நோயாளி அருகே சென்றார். "அன்பரே, மானிடப் பிறவி கிடைப்பது அரிது. அதிலும் அங்க ஹீனம் இல்லாமல் பிறப்பது கஷ்டம். அதிலும் புத்திசாலியாக, செல்வந்தனாக வாழ்வது துர்லபம். செல்வந்தனாக

இருந்தாலும் தானம் செய்யும் நல்ல மனம் அமையாது. இப்படி எல்லாம் வாய்க்கப் பெற்ற நீங்கள் ஆயூளை முடிக்க நினைப்பது தவறு" என்று எடுத்துச் சொன்னார்.

நோயாளி அழுது கொண்டே "சீழும், புண்ணும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் இந்த சரீரத்தை இன்னும் காப்பாற்ற வேண்டுமா?" என்று கேட்க, "முற்பிறவிகளில் செய்த வினை நம்மைவிடாது. வியாதி நீங்க மருந்தைத் தேடவேண்டுமே தவிர, உயிரை மாய்க்க நினைப்பது பாவம்" என்றார் பத்மநாயர். "வியாதி நீங்கும் ஔடதத்தைக் கொடுங்கள்" என்று வணிகனைச் சூழ்ந்துள்ளவர்கள் வேண்ட, கங்கை யில் நீராடி மூன்று முறை ராமநாமத்தை உச்சரியுங்கள்" என்று சொல்லி விட்டு தான் நீராட கங்கையில் இறங்கினார்.

மெதுவாகத் தவழ்ந்து தவழ்ந்து கங்கையில் அமிழ்ந்த வணிகள். உதடுகளைக் கூட்டிப் பேசமுடியாமல் ராம, ராம, ராம என்றலறினான். இவன் தனியே எப்படி எழுந்து வரப் போகிறான் என சூழ்ந்துள்ளவர்கள் கவலையுடன் இராம நாமத்தை உச்சரித்த வண்ணம் பார்த்துக் கொண்டிருந்தனர். வணிகன் புனிதமான உடலுடன், எந்தச் சிறுவெடிப்பு மின்றி திடமாக எழுந்து வந்து பத்மநாபர் பாதங்களில் வணங்கி ஸ்தோத்தரித்தான்.

இதை சிலர் கபீர்தாஸரிடம் ஓடிப்போய் தெரிவித்தனர். கபீர்தாஸரும் "பத்மநாபர் செய்தது மகிழ்ச்சிக்குரிய செயல்தான்! இராம நாமத்தின் மகிமையைச் சொல்ல யாரால் முடியும்? அதன் பெருமை அறியாமல் அதை மூன்று முறை சொல்லச் சொல்லி விட்டாரே!" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது குருநாதர் பாதம் பணிந்தார் பத்மநாபர். தன் சந்தேகத்தை சீடனிடம் கேட்க, பத்ம நாபர் "குருதேவா, குருமுகமாய் உபதேசம் பெறாத குற்றம் நீங்க ஒரு தடவை, குஷ்டம் நீங்க இரண்டாம் தடவை, அவன் ஞானம் பெற்று மோட்சமடைய மூன்றாம் தடவை என மூன்றுமுறை ஜபிக்கச் சொன்னேன். நீங்களானால் மூன்றையும் ஒரே தடவையில், செய்து முடித்து விடுவீர். எனினால் அது முடியுமா?" எனப் பணிவுடன் கூறினார்.

கபீர் "மன உறுதியும், திட நம்பிக்கையோடும் சொல்பவர்களுக்கு இராம நாமா எத்தனை பயன் தருகிறது என்பதற்கு இந்நிகழ்ச்சியே தகுந்த சாட்சி" என்று சீடனைப் பாராட்டினார். பத்மநாபரும் காசி நகரத்தில் இராமநாமத்தைப் பரப்புவதில் தன் வாழ்நாளைக்கழித்தார்.

25. துளசீ தாசர்

மொகலாயச் சக்கரவர்த்தி அக்பரின் சபையிலே ஆத்மாராம் என்ற மந்திரி இருந்தார். அக்பரின் பெருமதிப்பைப் பெற்ற இவர் அரசியலில் நிபுணர். சிந்தித்து செயலாற்றும் குணவான். நிரம்பப் படித்தவர். பழுத்த ஞானி. இவருடைய ஒரே மகன் தான் துளசீ தாசர்.

தர்பாருக்குப் போகும் போதெல்லாம் துளசியையும் அழைத்துச் செல்வார் ஆத்மாராம். துளசியும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினான். தந்தையோடு தினசரி அரசவைக்குச் சென்றதால் அரசியல் நுணுக்கங்களையும் தெரிந்து கொண்டான்.

தக்க வயது வந்ததும் மமதாபாய் என்ற அழகிய பெண்ணை மணம் செய்து வைத்தார் ஆத்மாராம். அக்பர் துளசிக்கு அரண்மனையில் உயர்ந்த பதவி அளிக்கவே, மகனிடம் குடும்பப் பொறுப்பை ஒப்படைத்து விட்டு தீர்த்த யாத்திரை புறப்பட்டார் ஆத்மாராம்.

செல்வாக்கான பதவி; வற்றாத செல்வம். அரசரின் அன்பு. கட்டுப்பாடு செய்த தந்தை அருகில் இல்லாத சூழ்நிலை. இள வயது. தீய நண்பர்கள் பெருகினர். ஆடல் பாடல் கேளிக்கைகளில் பொழுதைப் போக்கினார் துளசி. தாயின் புத்திமதியும், மனைவியின் கண்ணீரும் அவர் மனதை மாற்றுவதாய் இல்லை.

அந்தரங்கமான நண்பர் மூலம் ஆத்மாராமுக்குச் செய்தி சொல்லி அனுப்பினாள் துளசியின் அன்னை. ஆத்மாராம் பதறியடித்துக் கொண்டு பாதி க்ஷேத்ராடனத்தில் திரும்பி வந்தார். மகனை அழைத்து புத்திமதிகள் கூறினார்.

"மனைவியைத் தவிர மற்ற பெண்களிடம் நேசம் வைப்பது நரகத்தைத் தரும்" என்று கூறி டெல்லியிலிருந்து சொந்த ஊரான ராஜாப்பூருக்கு அனுப்பி வைத்தார். நைமிசாரண்யத்தில் போய் தவவாழ்க்கை மேற்கொண்டார் ஆத்மாராம்.

இதையெல்லாம் கேள்விப்பட்ட அக்பருக்கு பெருத்த வேதனை. "எத்தனை புத்திசாலி! எவ்வளவு பெரிய ஆத்ம ஞானி! அவருக்கா

இப்படிப்பிள்ளை பிறக்க வேண்டும்" என்று வருத்தப்பட்டார். தான் அருகில் வைத்துக் கொண்டு திருத்திவிடலாம் எனத் தீர்மானித்துத் தூதர்களை அனுப்பினார். 'தனக்கு வேலை செய்யப் பிரியமில்லை' என்று பதில் சொல்லி அலைக்கழித்தார் துளசி.

கடைசியில் இதற்கு நாமேதான் போகவேண்டுமெனத் தீர்மானித்துப் பரிவாரங்களுடன் புறப்பட்டுவிட்டார் அக்பர். ராஜாப்பூரில் வந்து தங்கிக் கொண்டு துளசியை அழைத்துவரச் சொன்னார். தெருக்கோடியில் காவலன் வருவதைக் கண்டு உள்ளே வந்து ஒளிந்து கொண்டார் துளசி. "மமதா, அக்பர் அனுப்பிய ஆள் நம் வீடு நோக்கி வருகிறான். என்னைக் கூப்பிட்டால் நான் வெளியூர் போயிருப்பதாகவும், திரும்பி வர ஒருமாதமாகும் என்றும் சொல்லி அனுப்பி விடு" என்று மனைவியிடம் கெஞ்சினார்.

மமதாவுக்கு கோபம் பொங்கி வந்தது. "இப்படி ஒளிந்து கொண்டு மனைவிமூலம் சேதி சொல்ல உங்களுக்கு வெட்கமாக இல்லை? உத்யோகம் புருஷ லட்சணம்... வேலையில்லாத சோம்பேறியை எவள் விரும்புவாள்? சகல வசதியோடு மாமா நந்தவனம் நடுவில் வீடு கட்டிக் கொடுத்தார். அங்கே அழகாகக் குடித்தனம் செய்தோமா? வேசியர் வீடே கதியாகக் கிடக்கிறீர்களே என்று, மனைவியை நேசி என்றார். இப்படி இளமையைப் பாழாக்கிக் கொண்டு பெண்டாட்டி முந்தானையைப் பிடித்துக்கொண்டு திரிவது பேடித்தனமாய் தெரியவில்லையா? அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சுதான்! புருஷன் எப்போது வருவான் என்று காத்திருப்பது தான் ஆசையை வளர்க்கும்! புகழும், வீரமும். சம்பாதிக்கத் தான் வாலிபத்தையும், திடத்தையும் கடவுள் கொடுத்திருக்கிறார்" இப்படி படபடவென்று வார்த்தையைக் கொட்டினாள் மமதா.

ஆனால் துளசியோ "என் கண்ணே மமதா, பாதுஷா என்னை டில்லிக்கு வேலைக்குக் கூப்பிடுவார். காலையில் போய் மாலையில் வருவதே எனக்கு நரகவேதனை. இதில் மாதக்கணக்கில் உன்னைப் பிரிந்திருப்பதா? என் தாபம் புரியாமல் பேசுகிறாயே" என்று கொஞ்சினார்.

மமதா வெறுப்புடன் "உங்களை மோகப்படுத்தி வேலைக்குப் போக விடாமல் தடுத்தது இந்த உடல் தானே! இதை அழித்து விட்டால்...!" என்றபடி தற்கொலை செய்து கொள்ள புறக்கடை கிணற்றை நோக்கி

ஓடினாள். பதறித் தடுத்த துளசி அரைமனதுடன், காவலனோடு பாதுஷாவைப் பார்க்கச் சென்றார். பாதுஷா சாதுரியமாக மடக்கி, அவரை டில்லிக்கு அழைத்துச் சென்று விட்டார்.

தன் மகன் டில்லி புறப்பட்டுச் சென்று விட்டான் என்றறிந்ததும் துளசியின் தாயார் மமதாவிடம் வந்து, "என் மகன் உத்யோகத்தை விட்டு உன்னையே சுற்றி வந்ததற்குக் காரணம் உன் அழகுதான்! மனைவி யானவள் புருஷனைக் கண்டித்து கறாராய் வேலைக்கு அனுப்பவேண்டும். உடனே குடித்தனம் போட்டால் குட்டிச் சுவராகி விடுவான். கொஞ்ச நாள் அவன் பார்வையில் படாமல், பிறந்தவீட்டில் போய் இரு" என்று கடுகடுத்தான்.

மமதா கண்ணீருடன் தன் தலைவிதியை நொந்து கொண்டு புறப்பட்டுச் சென்றாள். அங்கே பயணம் செய்து கொண்டிருந்த துளசியோ, பாதுஷாவிடம் மமதாவை ஒருமுறை பார்த்து, விடை பெற்று வருவதாகப் பல்லைக்காட்டி, கெஞ்சிக் கொண்டிருந்தான். தொல்லை தாங்காமல் அக்பரும் போகச் சொல்லி விட்டார். துளசி குதிரையை விரட்டிக் கொண்டு வீடு வந்து சேரும் போது நள்ளிரவு.

படபடவென்று கதவு இடிபடும் சத்தம் கேட்டு பயந்து கொண்டே கதவைத் திறந்த அன்னை, துளசியைக் கண்டு திகைத்தாள். வானம் இருண்டு, மேகங்கள் திரண்டு குமுறிக் கொண்டிருந்தன. பெருங்காற்று. அவ்வப்போது சிறு தூறல். "ஏண்டா துளசீ! என்ன வாயிற்று? எங்கே வந்தாய்?" என அரக்கப்பரக்க விசாரித்தாள். பிரயாணத்தினால் புழுதி படிந்த ஆடை. அலங்கோலமான தோற்றம். "மமதா எங்கே? மமதா, மமதா...!" என்று தேடினான். "அவன் பிறந்த வீடு போயிருக்கிறான்" வெறுப்போடு சொன்னாள் அன்னை.

"நீதான் அவளை அனுப்பியிருப்பாய்...! இந்த நிமிஷமே அவளைப் பார்க்க வேண்டும். நான் எப்போது தொலைவேன் என்று காத்துக் கொண்டிருந்தாயோ?" என்று பலவாறு கூச்சலிட்டான் துளசி.

"மழை கொட்டும் போலிருக்கிறது. விடிந்ததும் அவளை அழைத்து வரச் சொல்கிறேன். துளசீ! இப்போது நீ போனால் மாமனார் வீட்டில் மானக்கேடாக நினைப்பார்கள்" என்று எவ்வளவோ கூறியும், கேளாமல் புறப்பட்டு விட்டான் துளசி.

மழை வலுத்து 'சோ'வென்று கொட்டிக் கொண்டிருந்தது. யமுனா நதியின் எதிர்க்கரையில் மமதாவின் கிராமம். புயலிலும், மழை இருட்டிலும் படகு விடுவார் எவர்? குதிரையிலிருந்து இறங்கிய துளசி அக்கரையை எப்படி அடைவதென்று யோசித்தார்.

பிணமொன்று மிதந்தது ஆற்றில். அது அவருக்கு இருட்டில் கட்டைபோல் தெரிந்தது பற்றிக் கொண்டு நீந்திக் கரை சேர்ந்தார். சொட்டச் சொட்ட மமதாவின் வீடு நோக்கி ஓடினார். வீடு தாளிட்டு 'கல்'வென்று இருந்தது. எப்படி உள்ளே நுழைவதென்று சுற்றிச் சுற்றிப் பார்த்தார்.

கதவைத் தட்டி குசலப் பிரசனம் விசாரித்து, ஈரஉடையை மாற்றி... அவ்வளவுக்கு அவருக்குப் பொறுமை இல்லை. இரண்டாம் பேர் அறியாமல் மனைவியைப் பார்க்க வேண்டும்.... அதற்கு சுவர் ஏறிக் குதிப்பதே வழி என்று முடிவு கட்டினார்.

தோட்டத்தில் ஒரு பெரிய மரம். அதன் கிளை ஒன்று வீட்டு மேல்மாடிச் சுவரைத் தொட்டுக் கொண்டிருந்தது. மரத்திலிருந்து கயிறு போல் தொங்கியதைப் பற்றிக்கொண்டு மரத்தில் சரசவென்று ஏறினார். 'தொப்'பென்று தாழ்வாரத்தில் குதித்தார்.

சப்தம் கேட்ட வீட்டார்கள் 'திருடன், திருடன்' என்று கத்தினர். விளக்கைப் பொருத்திக் கொண்டு வந்து பார்த்தனர். ஈரம் சொட்ட, இரத்தக் காயத்துடன் நின்ற கணவனைக் கண்டு மமதாவுக்கு அவமான மாக இருந்தது. "தாங்கள் டில்லிக்குப் பாதுஷாவோடு செல்கிறீர்கள் என்று சொன்னாளே மமதா?" என்று கேட்டார் மாமனார்.

"டில்லிக்கு மமதாவையும் அழைத்துச் சென்று விடலாம் என்று திரும்பினேன். மமதா இங்கே வந்திருப்பதாக அம்மா கூறினாள்" என்றார் துளசி குளிரில் வெடவெடத்தபடி. "இந்த மழையில் ஆற்றில் படகு விடமாட்டானே?" என்றாள் மமதா. "நீந்தி வந்தேன்"

"கதவைத் தட்டி இருக்கலாமே... ஏன் ஏறிக் குதிக்க வேண்டும்? அடிபட்டிருந்தால் என்னாவது? அவ்வளவு உயரமான மரத்தில் எப்படி ஏறினீர்கள்?"

"ஒரு கயிறு தொங்கிக் கொண்டிருந்தது."

"மரத்திலே கயிறா... நான் நேற்று பூப்பறிக்கும் போது கூட ஒன்றும் இல்லையே?" என்று விளக்குடன் மரத்தடிக்குப் போய்ப் பார்த்தாள் மமதா. அங்கே குற்றுயிராய் சுற்றிக் கொண்டு தொங்கிக் கொண்டிருந்தது ஒரு கரு நாகம். துளசி பற்றிய இடம் அதன் கழுத்து... மமதா திடுக்கிட்டுக் கண்ணீர் வடித்தாள்.

"என்ன ஆவேசம் என்மேல் எத்தனை ஆசை இருந்தால் புயலும், மழையும், வெள்ளமும், பாம்பும் உங்களுக்கு ஒரு பொருட்டாய் இருந்திராது? இந்த ஆசையை, உறுதியை பகவான் மேல் வைத்தால் எத்தனை ஞானமும், புண்ணியமும் கிடைக்கும்" என துயரம் பொங்கக் கூறினாள். துளசியின் அகக் கண்கள் திறந்தன. தமிழகத்து அருணகிரியாரைப் போல, சித்தம் தெளிவடைந்து திரும்பினார்.

மமதா பயந்து போனாள். ஓடிச் சென்று தடுத்தாள். உள்ளே வந்து படுக்கும்படி கெஞ்சினாள். ஆனால் எதையும் கருத்தில் கொள்ளாமல் சென்று விட்டார் துளசி. மமதா மயங்கி விழுந்தாள். இடியிலும், மழையிலும் புறப்பட்டுச் சென்ற மகன் என்னவானானோ" என்று தாயுள்ளம் தவித்தது. சம்பந்தி வீட்டுக்கு வந்தாள். நடந்தவைகளைக் கேள்விப்பட்டு மனம் நொந்தாள்.

நாலாபுறமும் தேட ஆட்களை அனுப்பினாள். துளசி காசியில் பைத்தியக்காரனைப் போல ராம ஸ்மரணை செய்து கொண்டிருப்பதாகச் செய்தி வந்தது. காசிக்குப்போய் மகனை வீட்டுக்கு வரும்படி அழைத்தாள். துளசியோ ஒரே வைராக்கிய சித்தத்தோடு இருந்தார்.

தீர்த்த யாத்திரை முடிந்து வீடுதிரும்பிய ஆத்மாராம், மகனின் தெய்வ பக்தியைக் கேட்டு மனம் மகிழ்ந்தார். காசிக்கு வந்து துளசியை சந்தித்து ஆசி வழங்கினார். குறுகிய காலத்திலேயே அவர் காலம் முடிந்தது. கணவர் இறந்தபின் வாழ விரும்பாமல், ஆத்மா ராமின் மனைவியும் கங்கையில் குதித்து உயிர்விட்டார். "மமதாவை அழைத்து வந்து பெற்றோருக்கு உரிய ஈமக்கடன்களை முடிக்க வேண்டியது உன்கடமை. பன்னிரண்டு வருஷங்கள் தவம் செய்" என அசரீரி கூறியது. அப்படியே செய்தார் துளசி.

வால்மீகியின் மறு அவதாரமான துளசி கங்கைக்குக் குளிக்கப் புறப்பட்டார். திடீரென்று அவர்முன் ஒரு பூதம் தோன்றியது.

"ராமர் பாததூளிபட்டு கல்லான அகலிகை சாபவிமோசனம் பெற்றது போல சதா ராமநாமத்தைச் சொல்லும் உங்கள் பாதத்தூளியால் எனக்கு சாபவிமோசனம் கிடைத்தது.

"அதற்குப் பிரதி உபகாரமாக உங்களுக்கு ஒன்று சொல்கிறேன். ராமனை தரிசிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறீர்கள். அடுத்த தெரு மடத்தில் ஒருவர் இராமாயணம் சொல்கிறார். அங்கே தினமும் ஹனுமார் கிழ பிராம்மண வடிவில் வந்து கேட்கிறார். அவரைவிடாமல் பிடித்துக் கொண்டு உமது ஆசையைக் கூறினால் எண்ணம் நிறை வேறும்" என்று சொல்லிச் சென்றது.

அதுமுதல் தினந்தோறும் அந்த உபன்யாசத்திற்குச் சென்றார் துளசி. பூதம் சொன்ன கிழவர் யாரென ஊகம் செய்யவே பல நாட்களாயிற்று. துளசி ஒவ்வொரு கிழவராய்ப் பிடிக்க எல்லோரும் இவரை அனுதாபத் தோடு நோக்கினர். கடைசியில் பிடித்த கிழவர் இவரைத் தள்ளிவிட்டு

திமிறி ஓட, அவரே மாருதி என முடிவுகட்டினார். இப்படிப் பலநாள் துளசி மாருதியைப் பிடித்துத்தவற விட்டுவிட்டார். ஒருநாள் இன்று என்ன வானாலும் விடுவதில்லை என்று கங்கணம் கட்டிக் கொண்டு காத்திருந்தார் துளசி. ஒளிந்திருந்து பாய்ந்து அவர் கைகள் இரண்டையும் துண்டினால் கட்டிப் பிடித்துக் கொண்டார். இராமாயணம் கேட்கக் கூடி இருந்தவர்கள் "அவரை ஏன் கட்டிப்போட்டிருக்கிறீர்கள்? கடன் பாக்கியா?"

"ஐயோ பாவம்! வயதானவர்" என்றெல்லாம் பரிந்து கொண்டு வந்தனர். மாருதிக் கிழவர் கட்டுடன் ஓட, துளசி மறுமுனையைப் பிடித்துக் கொண்டு பின்னால் ஓடினார். வாயு புத்திரனோடு ஓடி ஜெயிக்கமுடியுமா? துளசி விழுந்துவிட்டார். ஆனாலும் பிடித்தபிடி விடவில்லை. அதனால் கல்லிலும், முள்ளிலும் இழுக்கப்பட்டு உடலெல்லாம் சிராய்ப்புகள்... ரத்த சேதத்தால் துளசி மயக்கமுறும் நிலை.

மாருதி சுய உருவுடன் எதிரே வந்து "துளசீ, ஏன் இந்தக்கஷ்டம்? உனக்கு வேண்டியதென்ன?" என்று பரிவுடன் கேட்டார். "எனக்கு ஸ்ரீராமனை தரிசிக்க வேண்டும்" என்றார் துளசீ. "அன்பா, உன் உறுதி கண்டு மகிழ்ந்தேன். நாளை உன் தெருவழியாக ஸ்ரீராமச் சந்திரப் பிரபு வருவார். உன்னிடம் பேசுவார்" என்று வரமளித்து மறைந்தார் அனுமார்.

மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினார் துளசி. துளசிக்குக் காட்சி தரும்படி பகவானிடம் விண்ணப்பித்துக் கொண்டார் ஆஞ்சனேயர் பகவானும் ஒப்புக் கொண்டார். மறுநாள் காலையில் நீராடி பகவான் வரவை எதிர்பார்த்து யாரிடமும் பேசாது அமர்ந்திருந்தார் துளசி. அப்போது கிழிந்த ஆடையுடன் வயோதிக கோலத்துடன் வந்த ஒரு பக்கிரி "ஐயா, நான் ஊருக்குப் புதுசு. என்தம்பிகளும், மனைவியும் ஊர் எல்லையில் இருக்கின்றனர். ஒரு பல்லக்கு ஏற்பாடு செய்து கொடுத்தால் அவர்களை அழைத்து வருவேன். உங்கள் புண்ணியத்தில் கங்காஸ்நானம் கிடைக்கும்" என்று நாநடுங்கக் கேட்டார்.

துளசி பகவானையன்றி எவரிடமும் பேசுவதில்லை என்று வைராக்கியம் கொண்டு மௌனமாய் இருக்கவே, பக்கிரி சற்று நேரம் நின்று விட்டுத் திரும்பிவிட்டார். கொஞ்சம் நேரத்தில் ஆஞ்சநேயர் அங்கு தோன்றவே "பகவானை இன்னும் காணோமே" என்று துளசி வருந்த, ஆஞ்சனேயர்.

"சரிதான், சீதையும், லக்ஷ்மண, பரத, சத்துருக்கனர்களும் ஏறி வரப்பல்லக்குக் கேட்ட என்பிரபுவுக்கு, நீ பதிலே சொல்ல வில்லையே" என்று பதில் சொன்னார். துளசி வருந்தி மன்னிப்புக் கேட்டுக் கொண்டு மறுபடி. அருள் செய்ய வேண்டுமென்று கெஞ்சினார். ஆஞ்சனேயர் அப்படியே அனுக்கிரத்து பகவானை வேண்டினார்.

ஸ்ரீராமன், "எந்த உருவிலும் இறைவனைக் காண முயற்சிப்பவனே பழுத்த ஞானி" எனக் கூறினார். இரண்டாம் தடவையும் துளசி ஏமாந்து விட்டார். துளசி கதறிப் புலம்ப மூன்றாம் முறை சுயஉருவோடு தரிசனம் கிடைக்கும் என அசரீரி கூறியது. இதற்குள் இச்செய்தி காசி நகரம் முழுவதும் பரவி விட்டது. 'ராமராம' என்ற நாம சங்கீர்த்தனத்தோடு பக்தர்கள் கூடிவிட்டனர்.

மடத்து வாசலில் மிகப் பெரிய பந்தல். ஊதுபத்தி, சாம்பிராணி, பூக்களின் வாசனை, அழகிய தீபவரிசை. பகவான் சீதா, லக்ஷ்மண, பரத சத்துருக்கனர் புடை சூழக்காட்சி தந்தார். தடாலென்று காலடியில் விழுந்து பணிந்தார் துளசி.

"பகவானே! உன் பாதார விந்தத்தில் என்னைச் சேர்த்துக் கொள்" எனக் கதறினார் துளசி.

ராமர் சீதாதேவியைப் பார்த்து புன்னகைத்தார். பின் பக்தனை நோக்கி "ஏ, துளசீ, கம்பனும் வால்மீகியும் என் சரிதத்தைப் பாடி இருக்கிறார்கள். ராமசரித மானஸத்தை நீபாடு... தாழ்வு மனப்பான்மையை விடு. 'நான் பாவி... நான் ராமகாதையைப் பாடுவதா' என்றெண்ணுகிறாய். அது தவறு. தவறு செய்வது சகஜம். திருந்திய வாழ்க்கை மருந்தினும் அருமை.

பன்னிரண்டு ஆண்டுகள் உண்மையே பேசுபவன் சொன்னது பலிக்கும். நெஞ்சிலே உறுதியும், நேர்மையும் தெய்வ சன்னதிக்கு அருகில் கொண்டு சேர்க்கும். நீயும் வாழ்ந்து பிறரையும் நெறிப்படுத்து. அதோ பார்... உன் ஞானக் கண்ணைத் திறந்து வைத்த மமதா.... பதி சேவையே பாக்கிய மென்று வாழ்க்கிறாள். அவதி, மாகதீ, மைதிலி என்று குழம்பிக் கிடக்கும் பாஷைகளை சீர்படுத்தி ஹிந்தியிலே ராம சரிதத்தைப் பாடு. அனுமனிடம் உபதேசம் பெற்றுக் கொள். பக்தியைப் பரப்பி உன்பணி முடிந்த பிறகு, உனக்கு முக்தி கிடைக்கும்" என்று அருளி மறைந்தார்.

அனுமன் துளசிக்கு உபதேசம் செய்து துளசிதாசராக்கினார். அனுமனது உபதேசம் ஞான ராமாயணம் எனப் பெயர் பெற்றது. ஹிந்தியில் துளசிதாசர் இயற்றிய ராம சரிதமானஸ் மக்களிடையே பிரசித்தி பெற்றது.

துளசி தாசருடைய மடத்தில் ஏராளமான செல்வம். அக்பரின் காணிக்கைகளும், பக்தர்களின் வெகுமதியுமாக மடம் நிறைந்திருந்தது. அமாவாசை இரவு. மடத்து சாமியார்களில் நான்குபேர் மடத்துப் பொருள்களைத் திருடி, மூட்டை கட்டிக் கொண்டு நழுவினர். தோட்டத்தைக் கடக்குமுன் இரண்டு காவல்காரர்கள் இரண்டு கைகளாலும் நால்வரையும் பிடித்தனர்.

"உங்களுக்கும் பங்கு தருகிறோம்; விட்டு விடுங்கள்" என்று அவர்கள் கெஞ்ச, 'பளார், பளார்' என்று அடி விழுந்தது. "காவி உடையில் கள்ளத்தனமும் செய்துவிட்டு காவலர்களையும் கெடுக்க லஞ்சமா கொடுக்கிறாய்? உங்களால் சாதுக்களுக்கே கெட்ட பெயர்... அவமானம்" என்று மேலும் செம்மையாக உதைத்து மற்ற சாதுக்களின் முன் கொண்டு நிறுத்தினர்.

அவர்கள் துளசிதாசரிடம் இதைச் சொல்ல, துளசிதாசர் "திருடுவது மகாபாவம்... இருட்டில் ஒளிந்து ஏன் கஷ்டப்பட வேண்டும்? பகலில் பகிரங்கமாக எடுத்துப் போகலாமே" என, சாதுக்கள் அழுது கொண்டே, "ஸ்வாமி, எங்களை மன்னிக்க வேண்டும். நேற்றிரவு சேவகர்கள் அடித்த அடி... அம்மம்மா... இப்போது நினைத்தாலும் குலை நடுங்குகிறது. எங்களுக்குப் புத்தி வந்துவிட்டது" என்று துளசிதாசரின் கால்களில் விழுந்தனர்.

காவலர்கள் சாதுக்களை அடிப்பதா? இது என்ன அக்கிரமம்... பிடித்து ஒப்படைப்பதை விட்டு தண்டிக்க அவர்களுக்கு உரிமையளித்தவர் யார்? அவர்களை அடையாளம் காட்டுங்கள்... தகுந்த சிட்சை விதிக்கிறேன்" என்று கோபத்துடன் கூறினார்.

அப்போது ராம லக்ஷ்மணர்கள் எதிரே தோன்றி "சாதுக்களை அடித்தவர்கள் நாங்களே... தகுந்த தண்டனை கொடுங்கள்" என்று கையிலிருந்த வில்லைக் கீழே போட்டு விட்டு நின்றனர்.

"பொருளைக் காப்பாற்ற காவலனாகவும் வந்தாயோ" என விம்மி விம்மி அழுதார் துளசிதாஸர்.

"துளசீ! நீயோ துறவி... உனக்கேன் நாளையக் கவலை...? பொருளைச் சேர்த்து வைக்காதே! யார் எதைக் கேட்பினும் இல்லை யெனாது கொடு. எளியவர்களுக்கு உபநயனமும், திருமணமும் செய்து வை. அன்னதானம் செய்... செய்த தான தருமங்களே ஒருவனைக் காக்கும்" என்று சொல்லி மறைந்தார் பகவான்.

அது முதல் துளசிதாசர் மடத்துச் செல்வங்களை அப்படியே செலவிட்டார். இரப்போர்க்கு இல்லை என்ற சொல்லே அங்கு இல்லை. ஒரு நாள். வயதான, உடலெல்லாம் சொறிபிடித்த அந்தணர் ஒருவர் வந்தார்.

"ஸ்வாமி, நான்முன் செய்த பாவம் என் உடலெல்லாம் வங்கு வைத்துவிட்டது. முதுகெல்லாம் தேமல். எந்தப் பெண்ணும் என்னைத் திருமணம் செய்து கொள்ள மறுத்து விட்டாள். நீங்களோ இளமையிலேயே துறவியாகி விட்டீர்கள்! பிள்ளை பெறாத உமது மனைவி இளமை யோடிருக்கிறாள். சாமியாருக்குப் பெண்டாட்டி எதற்கு? என்னுடன் அனுப்பினால், மனைவியாக ஏற்றுக் கொண்டு வாழவைப்பேன்" என்றார்.

துளசிதாசர் மமதாவை அழைத்து "மமதாபாய்... கணவன் சொற்படி நடப்பது தான் பத்தினிப் பெண்களுக்கு அழகு... என் பெற்றோரின் அந்திமச் சடங்குக்கு வந்தவள் என் சொல்லே வேதமென்று என்னோடு இருக்கிறாய். அப்படி நீ சொன்னது மெய்யென்றால் இவரோடு போ" என்றார். மமதா திடுக்கிட்டாள். ஆயினும் இதுவும் அவன் திருவிளை யாடல். இதுவரை நடத்திச் சென்றவனுக்கு இனிமேல் நடத்த வேண்டியது தெரியாதா என்ற விரக்தி! மௌனமாய் தன் உடமைகளோடு புறப்பட்டாள்.

மடத்தில் இருந்த சாதுக்கள், அந்தணர்கள் இது அநியாயமென்று தடுத்தனர். "என் மனைவியை நான் அனுப்புகிறேன். நீங்கள் ஏன் தடுக்கிறீர்கள்?" என்று கோபமாக துளசிதாசர் கேட்க, "மனைவி என்ற உரிமை சாதுக்களுக்குக் கிடையாது. மடத்து சேவகி, அந்தணப்பெண் என்ற முறையில் தடுத்தே தீருவோம்" என அவர்கள் மறிக்க, எதிர்த்த வர்களை கொன்று குவித்தார் துளசிதாஸர்.

"துளசி, நிறுத்து, நிறுத்து... இது நான் உன் உறுதியை சோதிக்க நடித்த நாடகம்" என வயோதிகர் ராமனாக மாறித் தடுத்த பின்பே அவர் சினம் தணிந்தது. இறந்தவர்களையெல்லாம் எழுப்பி மமதாவையும், துளசிதாஸரையும் ஆசீர்வதித்து மறைந்தார் இறைவன்.

துளசிதாஸரின் பெருமைகளைக் கேள்விப்பட்டு அக்பர் காசிக்கு வந்தார். அவரைக் கண்டு அவருடைய 'ராமசரிதமானஸ'த்தை அவர் வாயினால் பாடக்கேட்டு சந்தோஷித்தார்.

பாதுஷாவைப் பார்க்க வந்த இனத்தவர்கள் "அல்லாவே உண்மை... ராமன் பொய்... அப்படி ராமன் மெய்யென்றால் அவரைக் காட்டச் சொல்லுங்கள். ஊரை ஏமாற்றும் எத்துத்தனம் இவர் செய்வது" என துளசிதாசரை நிந்தித்தனர்.

அக்பர் துளசி தாசரிடம் "ஆத்மாராமும், நீங்களும் என்னிடம் வேலை பார்த்தவர்கள். அதிலும் நீங்கள் மனைவி மேல் மோகம் கொண்டு பதவியையே உதறியவர். அப்படிப்பட்ட நீங்கள் அற்புதங்கள் செய்வதாகப் பேசப்படுவதும், ராமதரிசனம் செய்ததும் புரட்டு என்கிறார்கள் சில பச்சோந்திகள். அவர்கள் ஐயம் நீங்க ராமனை ஒரு முறை இப்போது அழைக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

துளசிதாசர் "நாம் நினைத்தபோது வர தெய்வம் ஏவலாளா? பக்தனுக்கு இரங்கி அருள் செய்ய வருவார். இன்றைக்குச் சிலருக்கு சந்தேகம் நீக்க வரவழைத்தால், நாளை இன்னும் சிலருக்குச் சந்தேகம் தோன்றலாம். அப்புறம் இதற்கு முடிவேது? சித்திகளைத் தவறாகப் பயன்படுத்துவது குற்றம்" என்றார்.

உடன் இருந்த முஸ்லீம்கள் "இல்லை. இவன் நழுவப் பார்க்கிறான். இவனை விடக்கூடாது. இங்கே பக்கத்தில் உள்ள கிராமத்தில் இளம் மனைவி அழுது துடிப்பதைக் காணப் பொறுக்காமல், இறந்த புருஷனை எழுப்பி இருக்கிறானாம். இந்துக்கள் இப்படிக் கதை விட்டே இவனுக்குக் கூட்டம் சேர்க்கிறார்கள். செத்தவனை எழுப்புவது மட்டும் ஆண்டவனை இடைஞ்சல் படுத்துவதாகாதா? ராமனைக் கூப்பிட்டே ஆகவேண்டும்" எனக் கூச்சலிட்டனர். "ஆஞ்சனேயரைத் துதித்தார் தாசர்" 'தொப் தொப்'பென்று மரக்கிளைகளில், மதில் சுவர்களில், தெருவில் எங்கும் குரங்குக் கூட்டம். 'கீச்கீச்' ஒலி. ஒன்று குல்லாவைப் பிடுங்கியது.... ஒன்று

லுங்கியை இழுத்தது. ஒன்று விரட்டியது... முஸ்லீம்கள் கலைந்து போனார்கள். அக்பர் திகைத்து 'இதென்ன' என்று விசாரித்தார்.

துளசிதாசர் "ராமர் வரப்போகிறார். முதலில் வானர சேனைகள். ஆயிரத்தில் ஒரு பங்கு வந்திருக்கிறது. பாக்கி சேனைகளை முன் நடத்திக் கொண்டு ஆஞ்சனேயர் வந்த பிறகு ராமர் வருவார்" என்றார்.

அக்பர் "ஐயோ, இவைகள் செய்யும் அமளியே சகிக்க முடியவில்லை. இன்னும் 999 பங்கா? காசி அசோகவனமாகிவிடும்.... போதும்... ராமரைத் தொந்தரவு பண்ண வேண்டாம். முஸ்லீம்கள் சார்பில் நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்" என்று வேண்டிக்கொள்ளவே, துளசிதாசர் புன்னகையுடன் ஆஞ்சனேயரைத் துதிக்க, வந்தது போலவே குரங்குகள் மறைந்து போயின.

தெய்வ பக்தி, நல்லொழுக்கம், பண்பாடு இவைகளின் இலக்கணமாகத் திகழும் தாசரது 'வினய பத்ரிகா'வையும், ராமாயணத்தையும் நாடு முழுவதும் பரவச் செய்தார் அக்பர். தாசர் மறைந்தாலும் அவரது காவியம் மறையவில்லை.

26. ஸ்ரீ பிளாபாய்

பிளாபாயின் தந்தை சிறந்த ஹரிபக்தர். மிகுந்த ஞானமுடையவர். மீராவைப் போல் சிறுவயதிலேயே தெய்வ விளையாட்டுகளில் ஈடுபட்ட பிளாபாய், நன்கு கல்வி கற்றாள். அவளது சகோதரர்கள் இருவரும் பரம நாஸ்திகர்களாயிருந்தனர்.

உரிய வயதில் வீரமும், கல்வியும், நன்னடத்தையும் உள்ள வாலிபனுக்கு அவளை மணம் செய்து கொடுத்தார்கள். புகுந்த வீட்டினர் பிளாபாயை அன்புடன் நடத்தினர்.

கண்முன் சிறிய பூனை அவஸ்தைப் பட்டாலும் கருணையுடன் அதன் துன்பம் போக்கப் பாடுபடும் மனமுடையவள் பிளாபாய். சிறுவர்கள் தும்பிகளைக் கட்டி விளையாடுவதைக் கண்டால் வாதாடி விடுவித்து

விட்டுதான் நகர்வாள். திருவிழாக்களில் தனியே விடப்படும் குழந்தைகள், வயோதிகர்களை, சொந்தக்காரர்களிடம் சேர்த்துவிட்டே வீடு திரும்புவாள். கண் தெரியாதவர்களுக்கு பகவத் கதைகளைப் படித்துச் சொல்வாள். காது கேட்காதவர்களுக்கு எழுதிக்காட்டி விளங்க வைப்பாள். இப்படி சேவையே வாழ்க்கையாய் வாழ்ந்தாள்.

தினமும் பூஜை செய்யாமல், பசியால் வருந்தும் ஒருவருக்காவது சாப்பாடு போடாமல் தான் உணவருந்தமாட்டாள். எத்தனை நேரமானாலும் சரி...! இவளது பக்திப் பாடல்கள் அனைவரையும் ஈர்த்தது.

இந்த நிலையில் இறைவன் சோதனை... விதியின் வலியால் பிளாபாயின் கணவன் இறைவனடி சேர்ந்தான். புருஷனை இழந்த பெண்ணுக்கு புகுந்த வீட்டில் ஆதரவேது? தாய் வீடு வந்தாள் பிளாபாய். பக்தியில் தன் மனதைச் செலுத்தினாள்.

ஆனால் அவளது நிலைகண்ட பெற்றோர் உருகி உருகி ஒருவர் பின் ஒருவராக உயிர்விட்டனர். பெற்றோர் இருந்தவரை பிளாபாய்க்குப் பிரசினை இல்லை. தந்தையின் பூஜை அறையில் இருந்த பூஜைப் பெட்டியில் அழகிய கிருஷ்ண விக்ரகமும், ஒரு அபூர்வ சாளிக்கிராமமும் இருந்தது. தந்தைக்குப்பின் அதை பயபக்தியுடன் பூஜித்து வந்தாள் மகள். என்னதான் அதிகாலை எழுந்தாலும், குளித்து, பூப்பறித்து. மாலைகட்டி, சந்தனம் அரைத்து பூஜை செய்வதற்குள் வீட்டிலுள்ள அண்ணி, அண்ணன், தம்பி, குழந்தைகளுக்குப் பசி கிளம்பிவிடும். நிம்மதியாய் பூஜை செய்ய விடாமல் சொல்லம்புகள் கிளம்பும். குழந்தைகளை அடிப்பது பிளாவுக்கு பெருந்துன்பத்தைத் தந்தது.

"ஆமா... சாமி, சாமின்னு அந்த சாமிகிட்டவே உட்கார்ந்திருந்தா சாமியா வந்து இட்லி சுட்டு, சட்டினி அரைக்கும்? கொல்லைப்புறத்திலே அழுக்குத் துணி குவிஞ்சு கிடக்கு! எவ துவைக்கிறது?" இப்படிப் பேச்சுக்கணைகள்!

பிளாபாய் "எல்லாம் அவன் லீலை. பேச வைப்பவனும் அவனே! ஏச்சைக் கேட்கச் செய்பவனும் அவனே!" என்று மனதைத் தேற்றிக் கொண்டிருந்தாள். கடைசியில் அதற்கும் சோதனை வந்தது. தனித் தனியாய் பிரிந்து விடுவதென்று முடிவு கட்டிய சகோதரர்கள் சொத்தை சமபங்காகப் பிரித்தனர்.

"நான் அதிகம் வேலை செய்கிறேன்; அவளுக்குச் செலவு அதிகம்; அவள் குழந்தைகளுக்கு நல்லதைப் போட்டு விடுகிறாள்" என்று சதா வம்பு வளர்க்கும் அவர்களின் மனைவிமார்களின் தொல்லை தான் இதற்குக் காரணம். அந்த நாளில் சொத்தில் பெண்களுக்குப் பங்கு கிடையாது. ஆளுக்கு ஆறுமாதம் பிளாபாயைக் காப்பாற்ற வேண்டும் என்பது ஏற்பாடு.

பூஜைப் பெட்டியிலுள்ள கிருஷ்ண விக்ரகம் வெண்கலம். அது இளையவன் பாகத்தில் சேர்ந்து விட்டது. மூத்தவன் வீட்டில் இருந்தாள் பிளாபாய். பூஜை செய்யாமல் தமக்கை சாப்பிடமாட்டாள் என்று தெரியுமாதலால் சின்னவன் அதைத் தேடினான். ஆனால் அது மாயமாகி விட்டிருந்தது. வீடுபூராவும் அலசியும் அது கிடைக்க வில்லை. வருத்தத்துடன் சொல்லியனுப்பினான் இளையவன்.

செய்தி கேட்ட பிளாபாய் தானும் குளிக்காது, உண்ணாது முடங்கிக் கிடந்தாள். ஐந்து நாட்களாகி விட்டன. வறுமையால் காய்வது பட்டினி. பிறரை வழிக்குக் கொண்டுவர வயிற்றைக் காயப்போடுவது காரியசாதகம். பிரார்த்தனையை நிறைவேற்ற இருப்பது நோன்பு.

ஆனால் பிளாபாய் கிடந்தது உபவாசம். "கண்ணா! நான் செய்த பிழை என்ன? இப்பிறவியில் கணவரையும், பெற்றோரையும் பிரித்தாய்... உன்னையே ஆதரவாகப் பற்றி இருந்தேன். ஓடி ஒளிந்த மாயம் என்ன? மாயவனே... உனக்கு அபிஷேகம், அர்ச்சனை, நிவேதனம் செய்யாமல் நான் குளித்து உண்டு உடலைப் பேணுவேனென எண்ணுகிறாயா?" என பலவாறு மனதுள் மறுகியபடி இருந்தவள், தன்னை மறந்து தூங்கி விட்டாள்.

அலைகடல்... மகாலட்சுமி கால்வருட அனந்த சயனத்தில் வீற்றிருக்கும் எம்பெருமான். மறுகணம் காளிங்க நர்த்தனம். அடுத்த கணமே கோவர்த்தன கிரிதாரி. புல்லாங்குழலுடன் புன்னகை செய்து கொண்டே அவளை நோக்கி வருகிறான் கண்ணன். "பிளாபாய்! உன் பெருமையை உன் சகோதரர்கள் அறியவே இதை மறைத்து வைத்தேன். இருவரும் உன் மகிமையை உணர்ந்து கொண்டனர். இனி உன் பூஜைக்கும், பக்திக்கும் தடை சொல்ல மாட்டார்கள். உன் உயிருள்ளவரை பூஜைப் பெட்டியைக் கேட்கமாட்டான் இளையவன். (நீ உள்ள இடத்தில் நானிருப்பேன்;) இந்தா..." என்று பூஜைப் பெட்டியைக் கொடுக்கிறான்.

கண்களில் நீர்மல்க அதைப் பெற்றுக் கொண்ட பிளாபாய் கண்ணன் அந்தர்தியானமானதும் திடுக்கிட்டுக் கண்விழித்தாள். அருகே பூஜைப் பெட்டி இருந்தது. திறந்து பார்த்தாள். விக்ரகமும், சாளிக்கிராமமும் இருந்தன. மகிழ்ச்சியுடன் வீட்டிலுள்ளவர்களைக் கூப்பிட்டுக் காட்டினாள். அந்த இரவில் கதவு பூட்டி இருக்க நிகழ்ந்த அதிசயத்தைக் கண்டு அனைவரும் மகிழ்ந்தனர். இரவே நீராடி பூப்பறித்து, பூஜை செய்தாள் பிளாபாய்.

விடியற்காலை தம்பி வந்து தன் கனவில் கண்ணன் வந்து "பூஜைப் பெட்டி பிளாபாய்க்கே சொந்தம். அவளிடமிருந்து பறித்தால் அனர்த்தம் வரும்" என்று சொன்னதாகக் கூறி நமஸ்கரித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். அண்ணியும், தம்பிமனைவியும், பக்தி, ஆசாரத்துடன் நிவேதனம் செய்து கொடுத்தனர். அனாவசியமாக பிளாபாயை சொல்லம்பு கொண்டு துன்புறுத்தாமல் இருந்தனர். சகோதரர்களுக்கும் பக்தி பெருகியது. பிளாபாயின் பெயர் இன்றும் பக்தர் குழுவில் புனிதமாகப் போற்றப்படுகிறது.

27. மாதவ தாசர்

நான்கு வேதங்களையும், ஆறு சாஸ்திரங்களையும், அறுபத்து நான்கு கலைகளையும் நன்கு கற்றவர் மாதவ தாசர். பிறப்பால் மட்டுமின்றி நல்லொழுக்கத்தாலும் சிறந்து விளங்கிய அந்தணர்.

சதா பக்தி, பஜனை, பகவன் நாமாதான். இல்லை என்று வந்தவர்க்கு இல்லை என்ற சொல்லே இல்லை. இல்லறத்தில் தாமரை இலைத் தண்ணீர் போல் வாழ்ந்த புனிதர். திடீரென்று இவர் மனைவி மரணமடைந்தாள். 'சட்டி சுட்டது, கைவிட்டது' என்று நிம்மதியடைந்தார்.

அவ்வூரில் திருமண வயதிலிருந்த ஏழைப் பெண்களுக்கு மனைவியின் நகைகள், திருமாங்கல்யம், பாத்திரங்கள் எல்லாவற்றையும் பகிர்ந்து கொடுத்தார். தரித்திரக் குடும்பங்களுக்கு வீட்டிலிருந்த அரிசி, பருப்பு போன்றவைகளையும், மற்றுமுள்ள மர சாமான்களையும் தானமாகக்

கொடுத்தார். ஆக வீடு காலி. ஜகந்நாதரைத் தரிசிக்க புறப்பட்டுச் சென்றார். கடலில் குளித்துவிட்டு சன்னதியை அடைந்தார்.

"பக்தவத்சலா, ஜகந்நாதா... இருந்த ஒரே பந்தம் இப்போது தான் விட்டது. உன் தரிசனம் வேண்டும். (மோட்சமடையும் மார்க்கத்தைக் காட்ட வேண்டும்)" என உரக்க வேண்டினார். வேலை முடிந்து சன்னிதியைப் பூட்டவந்த குருக்களுக்கு இவர் பிரார்த்தனை எரிச்சலை மூட்டியது.

"காசு செலவழிக்காமல் கடவுளை தரிசிக்க வந்தவனே! என் வேலையைக் கெடுக்காமல் ஒதுங்கி இரு. அட பைத்தியக்காரா... கோவிலுக்குப் போகும் போது வெற்றிலை, பாக்கு, பழம் கூடவா வாங்க வக்கு இல்லை? உனக்கெல்லாம் என்ன கோவில்? தரிசனம் ஒரு கேடு! போ, போ" என்று விரட்ட மாதவர் மனம் நொந்து, வெளியே வந்து மனித நடமாட்டமில்லாத, ஒரு ஒதுக்குப்புறமான இடத்தில் உட்கார்ந்து, தண்ணீரும் அருந்தாமல் ஜகந்நாதனைப் பிரார்த்தித்தபடி இருந்தார். இப்படி மூன்று நாட்களாயின. பக்தன் நிலைகண்டு இரங்கிய பரந்தாமன், ருக்மணியை அழைத்து, மாதவதாஸருக்கு உணவளித்து விட்டு வரும்படி ஏவினார்.

பிராட்டியும் தங்கவட்டிலில் சர்க்கரைப் பொங்கலும், புளியோதரையும், வெண்பொங்கலும், சுண்டலும், வடையும் கொண்டு வந்தாள். ருக்மணி தேவியைக் கண்ட தாசர் எழுந்து "அம்மணி! தாங்கள் யார்?" எனக் கேட்க, தேவி,

"அப்பா, நீ யாரைக் காணத் தவமிருக்கின்றாயோ அவரின் பத்தினி நான். என் பெயர் ருக்மணி. உன் பசி காண அவருக்குப் பொறுக்க வில்லை. முதலில் திருப்தியாகச் சாப்பிடு. எழுந்து நிற்கவும், பகவானைப் பாடவும் தென்பு வேண்டாமா? பிறகு ஜகந்நாதன் வருவார்" என்று கூறி கைகால் கழுவ, குடிக்கத் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள். தாசர் சாப்பிட்டு முடிக்கும் வரை புன்முறுவலோடு பார்த்துக் கொண்டிருந்தாள். ஆனால் அவர் கை கழுவித் திரும்பியதும் காணவில்லை.

வயிறு நிறையச் சாப்பிட்ட அயர்ச்சி மாதவரை அசத்தியது. கட்டாந்தரையில் சாய்ந்தார். தலையில் கல்லும், காரையும் உறுத்தவே, தட்டைத் தலையணையாக்கிக் கொண்டார். சுகமான நித்திரை; உறங்கிவிட்டார். மறுநாள் உதயம். கோவில் மடைப்பள்ளியில் சுவாமிக்கு நிவேதனம்

கொண்டு போகும் தங்க வட்டிலைக் காணவில்லை. தலைமை சுயம்பாகி அலறி அடித்துக் கொண்டு, அர்ச்சகர்களிடம் கூற ஆலயத்தில் அல்லோல கல்லோலப்பட்டது. கோவிலெங்கும் தேடினர் பலர். புல் பூண்டு முளைத்துப் புதராக இருக்கும் மண்டபமூலையெங்கும் அலசுகையில் வட்டிலைத் தலைக்கு உயரமாகக் கொண்டு, கொட்டாவி விட்டுறங்கும் மாதவ தாசரைக் கண்டனர்.

"ஓ, இவனா... மூன்று நாட்களுக்கு முன் சன்னதியில் திருட்டு முழி முழித்துக் கொண்டிருந்தான். சந்தேகப்பட்டு அதட்டி விரட்டி விட்டேன். நான் நினைத்தது சரியாப் போச்சு... கோவில் சொத்தைத் திருட இவனுக்கு எத்தனை நெஞ்சழுத்தம்! திருடியதுமில்லாமல் நாம் வருகிற சத்தம் கேட்டு தூங்குவது போல் பாசாங்கு செய்கிறானே! தட்டை ஒளித்துக் கட்ட, ஒரு துண்டு கூட இல்லாத கபோதிப்பய...! இவனை சும்மாவிடக்கூடாது" என மூன்று தினங்களுக்கு முன் இவனை வெறுத்துப் பேசிய அர்ச்சகர் தட்டைப் பிடுங்க, மற்றவர்கள் அடித்து எழுப்பினர். பதறிப்போய் விழித்த மாதவருக்கு எதுவும் புரியவில்லை. அவரைக் கயிற்றால் இறுகக் கட்டி ஒரு அறைக்குள் தள்ளிப் பூட்டினர்.

மாதவ தாசரின் உடலைத்தான் கட்ட முடிந்ததே தவிர மனதைக் கட்ட முடியவில்லை. மௌனமாய் பகவத் தியானத்தில் ஆழ்ந்தார். அன்றிரவு மாதவ தாசரைத் திட்டிய குருக்களின் சொப்பனத்தில் பகவான் தோன்றி "கைகால்களைக் கட்டி அறையில் பூட்டி இருக்கும் தாசன் எனதன்பன். மூன்று நாட்களாய் என் தரிசனம் வேண்டி பட்டினி கிடந்தான். இறந்து விடுவானே என்ற இரக்கத்தில் நேற்று ருக்மணியை உணவு கொண்டு போகச் சொன்னேன். மறதியாக ருக்மணி தட்டை விட்டுவிட்டு வந்து விட்டாள். தங்கத்தில் ஆசையுள்ளவனாக இருந்தால் கற்தரையில் தலைக்கு உயரம் வைத்துக் கொண்டு படுத்திருப்பானா? அவன் திருடனில்லை... இன்றைய பூஜைக்குப் பூப்பறிக்கும் போது நந்தவனத்தில் ஆதிசேஷன் படுத்துக் கிடந்தான். நீங்கள் புரிந்து கொள்ளவில்லை. அர்ச்சனை செய்யும் போது உன்னை மயக்கமடையச் செய்தேன். அப்போதும் நீங்கள் உணரவில்லை. நாளை மாதவன் விடுவிக்கப் படாவிடில் விபரீதம் விளையும்" என்று கூறினார்.

அர்ச்சகர் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தார். 'அன்று நந்தவனத்தில் நாகம் வந்ததும், மயக்க மடைந்ததும் மெய்யே...

அப்படியானால்...? மாதவதாசர் நிரபராதியா? தெரியாமல் ஒரு பக்தனுக்கு அபசாரம் செய்து துன்புறுத்தி விட்டோமே" என வருந்தினார். உடனே அதிகாரிகளிடம் இதைத் தெரியப்படுத்தி மாதவ தாசரை விடுவித்து, அவர் பாதங்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். மறுநாள் அவருக்கு விசேஷ தரிசனம் செய்வித்து கோவில் பிரசாதங்கள் கொடுத்தார். அவரை அடித்தவர்கள் எல்லாம் அடிதொழுது வணங்கினர். மாதவதாசர் பகவானைப் பிரார்த்தித்துக் கொண்டு, கோவில் மதில் சுவரை ஒட்டிய மண்டபத்திலேயே தங்கி இருந்தார். அவ்வூரில் அவருக்கு ஏக மரியாதை.

ஒரு நாள் இரவு; நல்ல மழைகாலம். 'சோ'வென்று மழை கொட்டிக் கொண்டிருந்தது. தொப்பலாய் நனைந்துவிட்ட தாசர் வெடவெடத்துக் கொண்டிருந்தார். பற்கள் கிட்டிபோட்டன. கொஞ்ச நேரத்தில் பகவான் தன் பீதாம்பரத்தை இவருக்குப் போர்த்திவிட்டுச் சென்றார். விடிந்தது. சுவாமியின் பீதாம்பரத்தைக் காணாமல் அர்ச்சகர்கள் தேட, அது மாதவர் மேல் போர்த்தப்பட்டிருப்பதை ஒருவர் கண்டுபிடித்தார்.

பழைய அர்ச்சகர் "இது பகவான் வேலை; மறுபடி நாம் தவறு செய்து விடக்கூடாது" என்று பயத்தோடு கூறினார். எல்லோரும் அதை ஒப்புக் கொண்டனர். மாதவதாசரின் பெருமைகளைக் கேள்விப்பட்ட அரசன் அவரைக் கண்டு வணங்கிச் சென்றான். அவ்வூர் மக்கள் அவருக்கு ஒரு போர்வை வாங்கித் தந்தனர்.

பந்தம் கூடாது என்று எல்லாவற்றையும் உதறிவிட்டு வந்த தன்னை போர்வை, புகழ் என்று புதிய பந்தங்கள் ஒட்டிக் கொள்வதை வெறுத்தார் மாதவதாசர். அதிக கௌரவம், பக்திக்குத் தடை என்று அங்கிருந்து எவரும் அறியாமல் மதுராபுரிக்குப் புறப்பட்டுச் சென்றார்.

அங்கேயும் அர்ச்சகர்கள் இவரைக் கேலிபேசித் துரத்த, மாதவதாசர் வருத்தத்துடன் ஒரு மண்டபத்தில் வந்து உட்கார்ந்திருந்தார். அந்தசமயம் ஒரு பெரியவர் 'அரிசி, உப்பு, புளி, மிளகாய், பருப்பு, காய்கறி எல்லாம் கொண்டுவந்து கொடுத்து', "பசி வயிற்றைப் பிராண்டுகிறது. சமைத்தீர் களானால் இரண்டு பேரும் சாப்பிடலாம்" என்றார்.

மாதவதாசர் சம்மதித்து சமைத்தார். சமையல் முடியும் தருணம் "இதோ வருகிறேன்' என்று போனவர் திரும்பவில்லை. வெகு நேரமாயிற்று.

தாசர் "கார் மேகவண்ணா, உன் தரிசனம் கிடைக்காமல் சாப்பிடுவே னென்று நினைத்து சமையல் செய்யச் சொன்னாயோ? இந்த முறை ஏமாறமாட்டேன்" என திடமாக அமர்ந்திருக்க, சலங்கை ஒலிக்க வந்தான் மாயன்.

தாசர் மகிழ்ச்சியுடன் கண்ணன் பாதம் பணிய அவரை மார்போட ணைத்து "மாதவா, என்னைத் தொட்டு அலங்கார அர்ச்சனை செய் பவர்கள் உன்னைத் துரத்தி விட்டார்களே" என்று கண்ணிர் விட்டான் கண்ணன். பகவான் அழுவதைக் கண்டு தாசர் அழ, ஒருவரை ஒருவர் தேற்றிக் கொண்டு, ஒருவருக்கொருவர் உபசரித்துக் கொண்டு சாப்பிட்டு முடித்தனர். பிறகு பகவான் விடைபெற்றுக் கொண்டார்.

மறுநாள் காலை, நைவேத்ய அரிசியைக் களைந்து கொண்டிருந்த சுயம்பாகியை மாடுதுரத்த, அரிசியெல்லாம் சிதறிவிட்டது. மறுபடி வேறு அரிசி எடுத்து உலையில் போட பானை ஓட்டையாகி தண்ணீர் ஒழுகி, அடுப்பெல்லாம் சொட்டச் சொட்ட ஆகி விட்டது. அதையெல்லாம் திருத்தி, மறுபடி நிவேதனம் செய்யும்போது விறகின் மேல் ஒரு நல்ல பாம்பு சீறிக் கொண்டு படுத்திருந்தது.

இதென்ன சோதனை என அர்ச்சகர்கள் கலங்க, "என்பக்தனை அவதூறு பேசித் துரத்திய உங்களிடமிருந்து எனக்கு நிவேதனமா? மாதவன் எனக்கு சமைத்துப் போட்டதே மிகவும் ருசியாக இருந்தது. உங்கள் உபசரணை எனக்கு வேண்டாம்" என்ற அசரீரி கேட்டது.

அர்ச்சகர்கள் குலை நடுங்கினர். மாதவதாசரை அழைத்து வந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டு தரிசனம் செய்வித்தபின் விறகின் மேலிருந்த நல்ல பாம்பைக் காணோம்! நைவேதனமும் தடங்கலின்றி நடந்தது. மாதவதாஸர் அங்கிருந்த நான்கு மாதமும் அவருக்கு ராஜோபசாரம் தான்!.

ஒரு நாள் திடீரென்று மாதவதாசருக்கு கடும் வயிற்றுப் போக்கு ஆரம்பித்துவிட்டது. பகலெல்லாம் யாராவது உதவினர். இரவில்...? தாசரோ எழுந்து நிற்கவும் முடியாமல் பலகீனமாகிவிட்டார். பகவான் இவரது வேஷ்டிகளைத் துவைத்து, கால் கழுவ தண்ணீர் கொண்டு வந்து உதவினார். வந்தது பகவான் என்பதை உணர்ந்த தாசர், "முகுந்தா, நீ நினைத்தால் ஒரு நொடியில் இந்த வியாதியைத் தீர்க்க முடியாதா? எதற்காக இப்படி கஷ்டப்படுத்துகிறாய்" என்றார்.

பகவான் "முற்பிறவி வினை என்பது எவரையும் விடாது. துன்பங்களைக் குறைக்க உதவுவது பக்தி. இப்போது நான் இதை நீக்கிவிட்டால், இதை அனுபவிக்க நீ மற்றுமொரு பிறவி எடுத்தே ஆகவேண்டும். நான்கு நாட்களில் இந்த வியாதி குணமாகிவிடும். வருந்தாதே... அடுத்த ஜென்மத்தில் என்ன வருமோ என்று அஞ்சி நடந்தவர்களே, நல்ல குடும்பத்தில் அழகாக, குணசாலியாக, செல்வந்தனாகப் பிறந்து. சரஸ்வதி அருளோடு வாழ்கிறார்கள்" என்றார்.

பகவான் சொன்னபடி நான்கு தினங்களில் தாசருக்குக் குணமாகி விட்டது. ஒரு தர்க்க சாஸ்திரி மாதவதாசரிடம் வந்து "நீ என்னமோ பெரிய வேதவேதாங்களைக் கரைத்துக் குடித்தவன் என்று சொல்கிறார்களே. அது நிஜமானால் என்னோடு வாதம் செய்யவா" என சவால் விட்டார். தாசர் சாஸ்திரியை வரவேற்று உட்காரவைத்து 'இதோ வந்து விடுகிறேன்' எனக் கூறி விட்டு கடற்கரைக்குச் சென்றார்.

"பாற்கடல் துயின்றோனே! உனது பக்தன் ஒருவன் என்னோடு வாதிட வந்திருக்கிறான். அவன் தோற்றால் உங்கள் மனம் வாடுமே! இந்த தர்ம சங்கடத்திலிருந்து என்னைக் காப்பது உமது கடன்" என்று பிரார்த்தித்தபடியே தியானத்தில் ஆழ்ந்துவிட்டார்.

கண்ணன் மாதவதாசர் வடிவில் சென்று சாஸ்திரியுடன் வாதாடி ஜெயித்தார். சாஸ்திரி அவமானத்துடன் தலைகுனிந்திருக்கும் போதே மறைந்து விட்டார் மாயக்கண்ணன்.

அதே சமயம் தியானம் கலைந்து எழுந்த தாசர் சாஸ்திரியின் எதிரில் வந்து அமர்ந்தார். சாஸ்திரி சடாரென்று தாசரின் கால்களில் விழுந்து "என்னை மன்னிக்க வேண்டும். அதிகம் படித்து விட்டோமென்ற அகந்தையில் அனைவரையும் வம்புக்கிழுத்து வாதம் செய்தேன். உங்களது ஒரே கேள்வியில் என்கர்வம் அடங்கியது. மலையில் தலையை மோதிக் கொண்ட எலியைப் போல, வெட்கமும், வேதனையுமே மிஞ்சியது" என்று ஏதேதோ சொல்ல, தாசர் விழித்தார்.

"நான் இப்போது தானே வந்து உட்காருகிறேன். நீங்கள் ஏற்கெனவே வாதம் நடத்தி வெற்றி பெற்றுவிட்டதாகக் கூறுவது, என் பகவானாகத் தான் இருக்க வேண்டும்!" என்றார் தாசர்.

சாஸ்திரி "பரந்தாமனே உம்மைப்போல் வருவதென்றால்? உங்கள் பெருமை எவ்வளவு பெரிதாயிருக்க வேண்டும்! உங்களாலல்லவா எனக்கு ஜகன்னாதன் தரிசனம் கிடைத்தது! என்னை மன்னித்து உங்கள் சீடனாக ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று வேண்டினார்.

'எல்லாம் நீயே என்று சரணடைந்துவிட்டால் என்றுமே தொல்லை யில்லை என்பதை விளக்க இந்நாடகம் ஆடினாயோ' என மாதவ தாசரும் கசிந்து கண்ணீர் மல்கி உருகினார். பின்னர் இருவருமாக கோகுலம், பிருந்தாவனம், பண்டரீபுரம் என்று கண்ணன் திருப்பதிகள் தோறும் சென்று அவன் புகழ்பரப்பி, பக்தியில் ஜனங்களை ஈடுபடச் செய்து முடிவில் ஜகன்னாதன் சன்னதியிலேயே பரமபதமடைந்தனர்.

28. ஸ்ரீ நீளோபா

பிம்பளம் என்னும் அழகிய நகரத்தில் உஞ்ச விருத்தி எடுத்து வாழ்ந்தவர் நீளோபா. அவருக்கு மனைவியும் ஒரு மகளும் உண்டு.

மகளுக்கு திருமண வயது வந்தது. உரிய காலத்தில் திருமணம் நடக்காவிடில் ஊரார் வம்பு பேசுவார்களே என்று மனைவி கவலைப்பட, நீளோபா "எல்லாம் பகவானுக்குத் தெரியும்" என்று அவன்மேல் பாரத்தைப் போட்டுவிட்டு இருந்தார்.

நீளோபாவின் புதல்வியின் அழகைக் கண்டு வலிய மணம் செய்துகொள்ள ஒரு வாலிபன் முன் வந்தான். ஏழை என்றாலும் அழகிய, வலிமையுள்ள இளைஞன். திருமண நாளும் குறிக்கப்பட்டது.

இரக்கமுள்ள பணக்காரர்கள் கொடுத்த காய்கறி, இலை, பழங்கள், மளிகை, சாமான்கள் கொஞ்சம் இருந்தது. இது திருமணத்துக்குப் போதாதே என்று மனைவி கவலைப்பட்டாள். உறவினர் எவரும் உதவிக்கு வரவில்லை. மாப்பிள்ளை அழைப்பன்று காலை பகவான் கிழப் பிராம்மண வடிவத்தில் கந்தல் உடையில் அங்கு வந்தார். "நீளோபா, பெண்ணுக்குக் கலியாணமாமே!" என்று விசாரித்தார்.

"ஏதோ பகவான் சித்தம்; நீங்கள் யாரென்று தெரியவில்லையே? எந்த ஊரோ?" என்று பவ்யமாகக் கேட்டார் நீளோபா.

"ஊராவது, பேராவது..... ஜகந்நாதம், உடுப்பி, கோகுலம், பிருந்தாவனம், குருவாயூர், மதுரா இப்படி ஊர் ஊராய் பிச்சையெடுத்து வயிறு வளர்க்கிறேன். இன்றைக்கு அபாரப் பசி... இந்த அரிசி, பருப்பு, காய்கறி, புளி, மிளகாய் எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டு கொஞ்சம் சாப்பாடு போட்டால் நல்லது" என்றபடி கந்தையில் இருந்த சிறுசிறு முடிச்சுகளை அவிழ்க்கத் தொடங்கினார்.

நீளோபா அவரைத் தடுத்து "கலியாண வீட்டில் சாப்பாட்டுக்குப் பஞ்சமா? போய் பசியார சாப்பிடுங்கள்... அரிசி, பருப்புக் கொடுத்துச் சாப்பிடுவதாவது!" என்று கூற, பகவான் "சுவாமி, நாளைக்குக் கலியாணம். அதற்கடுத்த நாள் வரை இதைக் காப்பாற்றுவதாவது! பிச்சைக்காரனிடம் வாங்குவதா என்று யோசிக்கிறீர்கள் போலிருக்கிறது. நானும் ரோஷமுள்ளவன்தான். எனக்கு சாப்பாடு வேண்டாம்" என்று எழுந்திருக்க, "பசித்து வந்தவர் சாப்பிடாமல் போகக்கூடாது... அதை

இப்படித் தாருங்கள்" என்று நீளோபா மறித்து, சமையல் சாமான்களை வாங்கிக் கொள்ளும்படி மனைவியைக் கூப்பிட்டார்.

கிழ்வர் "அம்மணீ, கலியாண சமையலுக்கு வைத்திருக்கும் சாமான்களோடு சேர்க்க வேண்டும்" என்று சொல்ல, அவள் அப்படியே செய்தாள். பிறகு இலைபோட்டு சம்பிரமபாகப் பரிமாறி கிழவரை சாப்பிட அழைத்தாள். கிழவரும் திருப்தியாகச் சாப்பிட்டார்.

சாப்பிட்ட பிறகு நீளோபாவின் அருகில் வந்து "இதென்ன? பெண் கலியாணத்திற்கு தாயாரே சமைப்பதா? கலியாணப் பெண்ணே சுற்றுக் காரியம் செய்கிறது! ஒரு ஆள் போடக் கூடாதா?" என்று கேட்டார் கிழவர்.

நீளோபா "ஸ்வாமி, நானோ உஞ்சவிருத்தி பிராம்மணன். வரி பிரித்துக் கலியாணம் நடத்துகிறேன். இதில் ஆள் போடக் கட்டுமா?" என்று வருத்தத்தோடு சொல்ல,

"அப்போ நாளைக்கு சமையல்?" என்று கிழவர் கேட்க, "அதற்காகத்தானே நேரங்கழித்த முகூர்த்தம் பார்த்தது. சீக்கிரமே எழுந்து சமையலை முடிக்க வேண்டியது தான். தாலி கட்டி முடிந்ததும் வடை, அப்பளம் எல்லாம் செய்து கொள்ளலாம்" என்று தீர்மானித் திருக்கிறோம்" என்றார் நீளோபா.

"ரொம்ப அழகாயிருக்கிறது. பேஷ்! நாளைக்கு அம்மா அடுப்படிப் பக்கமே வரக்கூடாது! நான் நன்றாய் சமைப்பேன். கொட்டாமல், சிந்தாமல் சிக்கனமாய், அதே சமயம் ருசியாய் எல்லா விதமான சமையலும் செய்வேன். என்னென்ன வேணும் என்பதும் எனக்குத் தெரியும். சம்பந்தியாய், லட்சணமாய் வந்தவர்களை வரவேற்று போஜனத்துக்கு அனுப்ப வேண்டியது மட்டும் தான் அவர்கள் வேலை" என்றார் பகவான்.

நீளோபா "பருத்தி புடவையாய் காய்க்கிறதென்றால் வேண்டாமெனச் சொல்வாருண்டா... ரொம்ப சந்தோஷம்! அந்த பகவான்தான் சமயத்தில் உங்களை அனுப்பி இருக்கிறார்" என்று மகிழ்ச்சியோடு சொன்னார்.

அப்போதே போய் அடுப்படியில் இருந்த நீளோபாவின் மனைவியையும், மகளையும் விரட்டி விட்டுப் புகுந்து கொண்டவர்தான்! கலியாண தினத்தன்று சாப்பிட்டவர்கள் வர்ணித்த ருசியைக் கேட்டு நாக்கில் நீர் ஊற சாப்பிட வந்தவர்கள் ஏராளம்.

"என்ன நீளோபா... பத்திரிகை வைத்தாய்... வராவிட்டால் ஏழை என்று ஒதுக்கி விட்டதாக நினைத்துக் கொள்வாய் என்றுதான் அவசர வேலைகளைக் கூட அப்படியே போட்டுவிட்டு வந்திருக்கிறேன்" என்று நோட்டம் பார்க்க வந்த, உறவினர்கள் வாயடைத்துப் போனார்கள்.

அத்தனை பட்சண வகைகள்! பந்தலில் முறுக்கும், அதிரசமும், லட்டுவும் கண்ணைப் பறித்தன. சமையலறை வாசனை மூக்கைத் துளைத்தது. முந்திரியும், பாதாமும், குங்குமப்பூவும் முதல் பந்திக்குச் சாப்பிட்டவரை மூன்றாம் பந்திக்கும் சாப்பிடத் தூண்டியது. விருந்தினர்களும், சம்பந்தியும் நீளோபாவைப் பெரிதும் பாராட்டினர். நீளோபா இவற்றிற்கெல்லாம் காரணமான கிழவரைப் பாராட்ட மடைப் பள்ளிக்குச் சென்ற போது, அங்கே சமையல் சாமான்கள் குறைவின்றி அப்படியே இருப்பதைக் கண்டு திகைத்தார்.

மனைவியிடம் "இவர் உஞ்சவிருத்தி பிராம்மணரல்ல.... சித்து விளையாடல் கற்ற மகான். இவர் கந்தைத் துணியிலிருந்த சாமான்களை நமது சாமான்களோடு போட்ட பிறகுதான், மளிகை சாமான்கள் அமுத சுரபி போல் வளர்ந்திருக்கிறது. அரைக்க, இடிக்க, பரிமாற என்று உதவிக்கு ஆளில்லாமல், அதே சமயம் ஒரு குறையுமில்லாமல்தான் ஒருவரே இவ்வளவையும் செய்வதென்றால் அம்மாடியோ....! அதுவும் தவிர இத்தனை ஓடி ஆடியும் துளி களைப்பில்லை. ஒதியிட்ட வகையில் ஒரு பொன்னாடை வந்திருக்கிறது. அதை இவருக்குப் போர்த்திக் கௌரவிக்க வேண்டும். எடுத்து வை" என்றார். மனைவியும் எடுத்து வர உள்ளே சென்றார்.

பெண்ணை அழைத்துக் கொண்டு பிள்ளை வீட்டார் புறப்பட்டனர். உபசாரம் சொல்லி அவர்களை வழியனுப்பிவிட்டு வந்திருந்த உறவினர் களுக்கு மரியாதை சொல்லி அனுப்பிவிட்டு, பட்டுத்துண்டோடு கிழவரைத் தேடி வந்தார் நீளோபா. வீடு முழுவதும் தேடியும் கிழவரைக் காணவில்லை. நீளோபா வந்தது கண்ணனே என்று தெரிந்து கொண்டார். விம்மி விம்மி அழுதார். 'கல்ப கோடி காலம் தவமிருந்தாலும் காணக் கிடைக்காத கற்பகமே! இந்த ஏழையின் பொருட்டு விறகுச் சூட்டில் நின்றீரோ? சூடு தணிய பாற்கடலில் ஓய்வெடுக்கச் சென்றீரோ? எச்சில் இலையெடுத்து, சுத்தம் செய்ய விட்டேனே பாவி! வந்தது பகவான், மனிதனால் இப்படிக் காரியங்களை நடத்த முடியுமா என்று உணராத மூடனானேனே" எனப்

பலவிதமாகப் புலம்பினார். உணவும், நீரும் துறந்து இருந்ததால் மயங்கிச் சாய்ந்தார். கனவில் வந்த பாண்டு ரங்கன் "நீளோபா, உதவிக்கு ஆளின்றி நீ துன்பப் படுவதைக் கண்டு உதவி செய்யவே வந்தேன். சுய உருவில் வந்தால் என்னை வேலை செய்ய விட்டிருப்பாயா? திருமண வேலைகளை மறந்து என் பின்னோடு பாடிக்கொண்டிருப்பாய்! நீ என்னிடம் பக்தி கொண்டிருப்பது போல் நான் உன்னிடம் அன்பாயிருந்ததில் என்ன தவறு? வேலைகளில் இழி தொழில் என்று உண்டா? நானாக விரும்பிச் செய்த வேலையில் அபசாரம் எங்கிருந்து வந்தது? மனதைக் குழப்பிக் கொள்ளாமல் எழுந்து சாப்பிடு. உன் விருப்பப்படி இந்த மடைப்பள்ளியில் நான் சமையல் செய்த இடத்தில் விக்கிரமாக எழுந்தருளி இருக்கிறேன். அந்தப் பட்டாடையைப் போர்த்து. இப்போது திருப்திதானா?" என்றார்.

கண்விழித்த நீளோபா சமையலறைக்கு ஓடிப்போய் பார்த்தார். அழகிய கிருஷ்ண விக்ரகம் பிராம்மணர் சமையல் செய்த இடத்தில் இருந்தது. மனைவியை, ஊராரை அழைத்து வந்து காண்பித்தார். பட்டாடையைப் போர்த்தி அழகு படுத்தினார். தினசரி திருமஞ்சனமும், பூஜையும், பஜனையும் செய்து கொண்டாடினார். ஊரார் இவர் பக்தியையும், பகவான் அருளையும் வியந்து போற்றினர். ஊரார் இவர் காலத்துக்குப் பின் அந்த இடத்தைக் கோவிலாக்கி கும்பாபிஷேகம் செய்து திருவிழா கொண்டாடினர். இன்றும் பிம்பள நகரில் ஸ்வாமி சமையல் செய்த நாள், கோலாகலமாக கொண்டாடப்படுகிறது.

29. உத்தவ சித்குணர்

உத்தவ சித்குணரின் ஊர் தாரூர். அவர் தீர்த்த யாத்திரை செய்து கொண்டே பேதரூ நகரத்தை அடைந்தார். இவர் எந்த இடத்தில் தங்கினாலும் பஜனை, கதா காலட்சேபங்களெல்லாம் சிறப்பாகச் செய்வார். சரீரத்தால் முடிந்த உதவிகளை கஷ்டப்பட்டவர்களுக்கு செய்வார். இதனால் பழகும் அனைவரும் இவரிடம் அன்பாய் இருந்தனர்.

பேதரூ நகர மக்கள் இவர் ஸ்வாமி தரிசனம் முடிந்து திரும்பும் போது கொஞ்ச நாள் அங்கேயே தங்கி இருந்து ராமாயணத்தை விஸ்தாரமாகச்

சொல்ல வேண்டுமென்று வேண்டினர். இவரோ "ஸ்ரீராம நவமி வருகிறது. நவமியை துவாரகையில் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்று நினைத்திருக்கிறேன்" என, பக்தர்கள் "தாங்கள் நவமியை இங்கேதான் கொண்டாட வேண்டும். பகவானை எங்கு கொண்டாடினால் என்ன? வேண்டிய வசதிகளை நாங்கள் செய்து தருகிறோம்" என வற்புறுத்தினார். உத்தவ சித்குணர் ஒப்புக்கொண்டார்.

பக்தர்கள் உற்சாகமாக ஆளுக்கு ஒரு வேலையாக இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தனர். வாழை, கமுகு, மாவிலை முதலியவைகள் வந்து குவிந்தன. பெரிய பந்தல் போடப் பட்டது. வாத்திய கோஷ்டிகள் வந்து சேர்ந்தனர். ஸ்ரீராமனின் விக்கிரகத்திற்குத் திருமஞ்சன மாட்டி ஆடை ஆபரணங்களால் அலங்கரித்துத் தேரில் எழுந்தருளச் செய்தார் உத்தவ சித்குணர். பானகம், நீர் மோர், ததியன்னம் எல்லாம் நிவேதனம் செய்து வினியோகித்தனர்.

பேதரூ நகரில் முஸ்லீம்கள் அதிகம். ஸ்ரீ ராம நவமி கோலாகலத்தைக் கண்டு அவர்களில் சிலருக்கு வெறுப்பு வந்தது. கூட்டத்தில் கல்லெறிந்தனர். பயந்து ஓடியவர்களால், சிலர் மிதி பட்டனர். இதனால் இந்துக்களுக்குள்ளேயே கலகம் மூண்டது. "குழந்தை பிறந்த நாளா? பிறந்த அன்றே உங்கள் ராமன் நீர் மோர் குடித்தானா? தசரதனுக்குப் பிறக்காமல் அமிருதத்தால் பிறந்தவனாமே" என்றெல்லாம் கிண்டல் செய்தனர். இதையெல்லாம் பார்த்த உத்தவரின் மனம் புண்பட்டது.

"அல்லாவும், அரங்கனும் ஒன்றே என்றுணராமல் பேதப்படுத்திப் பார்க்கும் இவர்களும் உன் குழந்தைகள் தானே? பேத உணர்ச்சி நீங்கி இவர்களை ஒற்றுமைப் படுத்துவது உன்கடமை அல்லவா? எத்தனை ஆர்வத்தோடு கூடிய மக்களுக்கு நீ பாதுகாப்புக் கொடுக்க முடியாதா?" என்று பகவானைப் பிரார்த்தித்தார்.

ஸ்ரீ ராமனின் ஆணைப்படி ஆஞ்சநேயர், அவ்வூர் மசூதியின் மீது வந்து உட்கார்ந்து கொண்டார். நீளமான வாலால் மசூதியைச் சுற்றி இழுத்தார். அப்போது தொழுகை நேரம். திரளாகக் கூடி இருந்தனர். முஸ்லீம் அன்பர்கள்; முகம்மதியர்களின் தலைவன் "தாங்கள் ராமாயணத்தில் வரும் அனுமார் போலிருக்கிறீர்கள்... இங்கென்ன செய்கிறீர்கள்? மசூதியைக் கீழே சாய்க்க முயற்சிப்பதின் காரணம் என்ன?" என்று கேட்டான்.

"நான் ராமதூதன் ஆஞ்சனேயனேதான்! தன் பக்தர்களுக்கு தொல்லை தந்து கலகம் விளைவித்ததால், ராமன் வேதனையுற்று என்னை அனுப்பி இருக்கிறார். உங்கள் மனம் சங்கடப்படுவது போலத்தானே அவர்களும் துன்புற்றிருப்பார்கள்?" என்றார் மாருதி. தலைவன் மசூதிக்குள் நுழைந்து "ராமநவமி உத்சவத்திற்கு வந்த பக்தர்களை அவமதித்ததால் நம்மை தண்டிக்க அனுமான் வந்திருக்கிறார். நாமெல்லாரும் சேர்ந்து போய் அவரிடம் மன்னிப்புக் கேட்போம். மன்னிப்புக் கேட்க இஷ்டப்படாதவர்கள் இங்கிருந்து போய் விடலாம்" என்றான். பலர் சம்மதித்தனர்.

சில வெறியர்கள் அவர்களைத் தடுத்து, "உங்களுக் கெல்லாம் மூளை கலங்கி விட்டதா? சின்னக் குரங்கு மசூதியை இடிக்குமா? அது மட்டும் சிறு காரையைப் பெயர்க்கட்டும். தடியால் ஒரே அடி... போய் தடிக்கம்புகளையும், கொதிக்கும் வென்னீரையும் தயார் படுத்துங்கள்" என ஆரவாரம் செய்தனர்.

இந்த வார்த்தைகளைக் காதில் கேட்டதுதான்.... தாமதம்.. ஆஞ்ச னேயர் கோபத்தால் கண்கள் சிவக்க மசூதியை நொறுக்கித் தள்ளினார். வெளியே இருந்து இதைப்பார்த்தவர்கள் நவாபிடம் ஓடிச் சென்று செய்தியைத் தெரிவித்தனர். நவாப் தெளிவாக விஷயங்களைக் கேட்டறிந்தான். நேராக உத்தவ சித்குணரின் காலில் வந்து விழுந்தான். "பரம பாகவத சிரோன்மணியே! சிரத்தையோடு நடந்த உத்சவத்தில் குழப்பம் விளைவித்தது குற்றம்தான். ஆஞ்சனேயரை அமைதி கொள்ளச் செய்ய வேண்டும். முன்னமே தெரிந்திருந்தால் கலாட்டா செய்தவர்களைத் தடுத்துக் காவல் போட்டிருப்பேன்" என்று வேண்டினார்.

உத்தவ சித்குணர் "அரசே, குடிமக்கள் செய்யும் நன்மை தீமைகள் அரசனையே சேரும். அரசன் துஷ்டர்களைத் தண்டிக்காவிடில் குற்றவாளியாகக் கருதப்படுகிறான். ஆட்சியிலிருப்பவர்களுக்குப் பாரபட்சம் கூடாது. நீ நிரபராதி என்பதால், மாருதி சினம் தணிய நான் பிரார்த்திக்கிறேன். இனியாவது அப்பாவி மக்களுக்கும், சாதுக்களுக்கும் காவலனாக இரு" என்று பல ராஜ நீதிகளைப் போதித்தார்.

நவாப் "இனி என் ஆட்சியில் இந்துக்களும், முஸ்லீம்களும் சமமே. அவரவர் மத காரியங்கள் இடையூறின்றி நடக்க நான் காவல் போடு கின்றேன்" என்று வாக்களித்தார். ஸ்ரீ ராம நவமி காரியங்கள் ஒழுங்காக

நடக்க, ஏராளமான பொன்னும், பொருளும் கொடுத்தார். உத்தவ சித்குணரும் மனம் நிறைந்து பகவானை ஸ்தோத்தரிக்க ஆஞ்சனேயர் கோபம் தணிந்து பக்தர்களை ஆசிர்வதித்துவிட்டு அந்தர்தியானமானார். பஜனையும், கதாகாலட்ஷேபமுமாக நவமி பூஜை அமர்க்களப்பட்டது. எல்லாம் நலமாக முடிந்து உத்தவ சித்குணரும் தன் யாத்திரையைத் தொடர்ந்தார்.

30. சாந்தோபா

சாந்தோபா பெரிய பணக்காரர். சிறந்த பக்தர். வந்தவர்களுக் கெல்லாம் இல்லையெனாது அன்னமிட்ட புண்ணியவான். எங்கே ஹரிகதை, பஜனை நடந்தாலும் எந்த நேரமாயிருந்தாலும். அங்கே சாந்தோபாவைக் காணலாம். இவரது ஒழுக்கத்தையும், ஏழைகளுக்கு இரங்கும் குணத்தையும் கண்டு அரசனும் பூஜைக்கும், தர்மத்துக்குமாக கொஞ்சம் நிலம் அளித்திருந்தான். ஒரு தடவை துக்காராம் கதையைக் கேட்டுக் கொண்டிருந்தவர் அதிலேயே லயித்து விட்டார். உயர்ந்த மனித ஜென்மம் எடுத்தும், உண்பதும், உறங்குவதுமாகக் காலங்கழிப்பது தவறு என்று நினைத்தார். பற்றற்று வாழ முடிவு செய்தார். ஊழியர்களெல்லாம் அவர் கண்களுக்குப் பரந்தாமனாகத் தெரிந்தனர். எவரையும் வேலை சொல்ல அவர் நா கூசியது.

ஒருநாள் அவர் வீட்டு வண்ணான் உப்பில்லாக் கஞ்சி குடிப்பதைப் பார்த்தார். வண்ணான் கண்ணனாகத் தோன்றியதால் தான் சாப்பிடும் சாப்பாட்டை அப்படியே அவனுக்குக் கொடுத்து விட்டார்.

"இதென்ன அநியாயம்.... பஜனை, கதா காலட்ஷேபம் என்று போய் போய் இவன் மூளை பிசகி விட்டது" என்று அவர் அன்னை கூச்சல் போட்டாள். இன்னொரு நாள் வீட்டு வேலைக்காரன் கிழிந்த ஆடையுடன் உழைக்க, இவர் கண்களுக்கு எம்பெருமானாக காட்சி அளிக்க, தன்னுடைய விலையுயர்ந்த பட்டு வேஷ்டியைக் கட்டாயப் படுத்திக் கொடுத்து, அணிந்து கொள்ளச் செய்தார்.

நாளுக்கு நாள் இந்த மாதிரிக் கூத்துக்கள் அதிகமாக தாயாருக்கும் இவருக்கும் சச்சரவு ஓய்வதே இல்லை.

ஒருநாள் கட்டிய கந்தையுடன் இவர் காட்டுக்குப் புறப்பட்டு விட்டார். தாயார் ஓடிவந்து தடுத்தார். கண்ணீர்விட்டு மன்றாடினார்.

"சாந்தோபா.... உன்னைவிட்டால் எனக்கு கதி ஏதடா? நீ எனக்கு ஒரே பிள்ளைடா... இந்தத் தள்ளாத பருவத்தில் உன்னைப் பிரிந்து நான் எப்படியடா வாழ்வேன்? ஓட்டிலே சாப்பிடுகிறான் என்று தங்க வட்டிலை நீ தானமாகக் கொடுத்தாலும் இனி ஒன்றும் சொல்லமாட்டேனடா" எனப்பல விதமாகக் கெஞ்சினாள்.

சாந்தோபா எதற்கும் அசைந்து கொடுப்பதாயில்லை. பிடிவாதமாகப் புறப்பட்டுவிட்டார்.

சாந்தோபாவின் மனைவியின் பெயர் யசோதா. அவளை அழைத்த சாந்தேபாவின் தாய் "மனைவியின் கடமை என்னவென்று தெரியாதா? சொத்து, சுதந்திரத்தில் அவனுக்குப் பற்றுள்ளபடி நடந்து கொள்ளக் கூடாதா? ஒவ்வொரு பெண்கள் கணவனை கைக்குள் போட்டுக் கொண்டு எத்தனை காரியங்களை சாதிக்கிறார்கள்! புருஷன் சன்னியாசி யாகப் போகிறான் என்றால் மனைவிக்கு சாமர்த்தியமே இல்லை என்றுதான் அர்த்தம். பீம நதியும், கமடநதியும் சங்கமமாகும் இடத்தருகே ஒரு மலையில் அவனைப் பார்த்ததாக ஒரு வேடுவன் சொல்கிறான். நீ எப்படியாவது அவனை மயக்கி இங்கழைத்து வா". எனக்கூறி மருமகளை ஆடை ஆபரணங்களால் அழகாய் அலங்கரித்து வேண்டிய புத்திமதிகள் கூறி "என் பிள்ளையில்லாமல் வராதே" என்று சொல்லி பல்லக்கில் ஏற்றி அனுப்பினாள். துணைக்கு நல்ல உறவினர்களையும் கூட அனுப்பி வைத்தாள்.

சாந்தோபா இருக்குமிடம் தெரிந்ததும் பல்லக்கை இறக்கச் சொன்னாள் யசோதா. கீழே இறங்கி நடந்து சென்று தியானத்தில் ஆழ்ந்திருக்கும் கணவனை மூன்றுமுறை சுற்றி வந்து நமஸ்கரித்தாள். கலகலவென்ற வளையல், கொலுசு, கொண்டையிலுள்ள மணிகள், மலர்களின் வாசனை எல்லாமாக சாந்தோபாவை கண் விழிக்க வைத்தது. எதிரே இருந்த மனைவியைப் பார்த்தார்.

"இங்கே ஏன் வந்தாய்? வீட்டிற்குப் போ" என்று கூறிவிட்டு மறுபடியும் ராம தியானத்தில் ஈடுபட்டார். யசோதா மென்மையாக "ஸ்வாமி, கணவன் இல்லாத இடம் பெண்களுக்கு காடு. காட்டிலே இருப்பதானாலும் கணவனோடு வாழ்வது சுவர்க்கம் என்பது கற்புக்கரசி சீதை காட்டிய வழி அல்லவா? நான் இனி உங்களுடனேயே இருக்க அனுமதிக்க வேண்டும்" என்று வேண்டினாள். அவளை ஏற இறங்கப் பார்த்தார் சாந்தோபா.

"காட்டிலே பட்டும், பொன்னும் கிடைக்காது. ருசியுள்ள உணவு கிடையாது. உறவினர்கள், விழாக்கள் இல்லை. இங்கே காயும், கனியும், பகவத் தியானமும் தான் வாழ்க்கை. நீ அணிந்திருக்கும் நகைகளுக்காக, கொள்ளையர்கள் விரட்டுவார்கள். உன் பகட்டைக்கண்டு மற்றவர் மோகிக்கலாம்... துறவிக்கு இத்தனை தொல்லைகள் அவசியமா?" கணவரின் வார்த்தைகள் யசோதாவைச் சுட்டன. ஆபரணங்களைக் கழற்றினாள். துணைக்காக வந்திருந்த உறவினர்கள் வசம் ஒப்படைத்தாள். தான் இனி வனத்தில் கணவருக்குச் சேவை செய்யப் போவதாக மாமியாரிடம் சொல்லும்படி வேண்டிக் கொண்டாள். ஏவலுக்கு வந்திருந்த எளிய பணிப்பெண்ணின் ஆடையை வாங்கி அணிந்து கொண்டுதான் அணிந்திருந்த பட்டாடையை அவளுக்குப் பரிசாக அளித்தாள்.

சாந்தோபாவின் தபசுக்கு ஏற்ற தபஸ்வினியாகத் தொண்டு செய்து வந்தாள் யசோதா. ஒருநாள் சாந்தோபா மனைவியிடம் "இன்றைக்கு மிகவும் களைப்பாகவும், பசியாகவும் இருக்கின்றது. அருகிலுள்ள கிராமத்திற்குச் சென்று பஜனை செய்து மக்கள் பிரியமுடன் தாங்களாகவே கொடுப்பதைப் பெற்றுவா. எவரையும் வற்புறுத்தாதே! ஒருவரிடமிருந்தே பெரும் பகுதி உணவைப் பெற்றுவராதே! தேவைக்கு மேலும் வாங்காதே! நெய், சர்க்கரை சேர்த்த பட்சணங்களை வாங்கி வராதே" என எச்சரித்து அனுப்பினார். யசோதாவும் கணவரை வணங்கி, கணவர் சொன்னபடி பஜனை செய்து கொண்டே போனாள். தேனினும் இனிய குரலில் யசோதா பாடுவதைக் கேட்டு மகிழ்ச்சியுடன் அவ்வூரார் பிட்சை இட்டனர். பலர் அவள் பின்னால் அவள் கூடவே பாடிக்கொண்டு சென்றனர்.

அருகிலிருக்கும் காட்டில் ஹரிபஜனை செய்து வாழும் சாந்தோபாவின் துணைவி என்பது பலருக்கும் தெரிந்திருந்ததால் மரியாதையோடு

வழிபட்டனர். அந்த கிராமத்தில் தான் சாந்தோபாவின் தங்கை வசித்து வந்தாள். அவள் அந்த கிராமத்துக்கு வந்த விஷயம் யசோதாவுக்குத் தெரியாது. வேலை செய்து கொண்டிருந்த அவள் காதில் மதுரமான பஜனை சப்தம் விழுந்தது. பாட்டைக் கேட்க வெளியே வந்தவள் பாடுவது அண்ணன் மனைவி என்பதைப் புரிந்து கொண்டு திடுக்கிட்டாள்.

ஓடிப் போய் கட்டிக் கொண்டு கண்ணீர்விட்டாள். "மதனீ, அண்ணா காட்டிற்குப் போய் விட்டார் என்று கேள்விப் பட்டேன்! உன் நிலைமை இப்படி ஆகிவிட்டதா? பிட்சை எடுத்தா சாப்பிடுகிறாய்? ஐயோ,

புடவையெல்லாம் கிழிந்து கிடக்கின்றதே! எத்தனை பேருக்கு வஸ்திர தானம் செய்திருப்பாய்? எத்தனை சொகுசாய் வளர்ந்தவள், இப்படிக் காட்டிலும் மேட்டிலும், வெயிலிலும், மழையிலும் கஷ்டபப்டுகிறாய்! கை சலிக்கு மட்டும் கூப்பிட்டு அன்னதானம் செய்தவர்களுக்கு இப்படி ஒரு தலைவிதியா'' எனப் புலம்பியபடியே வீட்டிற்கு அழைத்தாள்.

யசோதா சமாதானமாக 'இது தானே விரும்பி ஏற்றுக் கொண்ட முடிவு' என்று எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேட்பதாயில்லை. அவள் திருப்திக்காக அவன் கொடுத்த உயர்ந்த பட்டாடைகளை ஒதுக்கி, எளிய நூலாடை ஒன்றை வாங்கி அணிந்து கொண்டாள் யசோதா. நெய்யப் பங்களைக் கொண்டு வந்து யசோதா மறுக்க, மறுக்க முந்தானையில் கட்டி அனுப்பினாள் தங்கை. கணவரிடம் வந்து நடந்த சமாசாரங்களைக் கூறி பிட்சை வாங்கி வந்தவைகளை சமர்ப்பித்தாள்.

சாந்தோபா ''நமக்கு வேண்டாமெனில் தூர எறிந்து விடலாம். வேறு ஏதேனும் பிராணிக்கு அது ஆகாரமாகும். ஆனால் தங்கையும், மற்றவர் களும், நாம் அந்த பலகாரத்தைச் சாப்பிட்டதாக நினைத்து மறுபடி, மறுபடி கொடுத்தனுப்புவார்கள். அதனால் நீ இவைகளைத் திருப்பிக் கொடுத்து விட்டு வரும்வரை நான் பட்டினியாக இருப்பேன்'' என்று யசோதாவை அனுப்பி விட்டார்.

யசோதாவும் மனம் வருந்தியபடி நாத்தியிடம் சென்று அப்பங்களைக் கொடுத்துவிட்டு ''நான் சொன்னதைக் கேளாததால் எனக்கும் அலைச்சல். உங்க அண்ணனும் பட்டினி'' என்று சொல்லிவிட்டுத் திரும்பினாள்.

யசோதா திரும்பும் போது சூரிய அஸ்தமன நேரம். மழைகாலம். கரு மேகங்கள் சூழ்ந்து கொண்டது. இடி, மின்னல்.... மழை சோவென்று கல்வருஷ தாரைகளாய் கொட்டியது. காற்றின் உய்உய்யென்ற இரைச்சல்....! யசோதா தான் சொட்டச் சொட்ட நனைந்ததைப் பற்றிக் கூட கவலைப்படவில்லை. வெள்ளமாய் பெருகி ஓடும் காட்டாற்றைக் கடந்து கணவரிடம் எப்படிப் போய் சேருவது என்று வேதனைப்பட்டாள்.

''ஸ்ரீஹரி, பாண்டு ரங்கா.... இதுவும் உனக்கொரு வேடிக்கையா? அப்படி நான் செய்த தவறென்ன?'' என்று பிரார்த்தித்தாள்.

பகவான் ஓடமோட்டிப் பையனாக அவள் முன் வந்தார். "அம்மா! தாங்கள் யார்? கண்களை மூடி என்ன வேண்டுகிறீர்கள்? ஆற்றைக் கடந்து போக வேண்டுமா?" என்றார். கண்களைத் திறந்தாள் யசோதா. "அப்பா, நீ எங்கிருந்து வந்தாய்? அருகில் குடிசைகளும் இல்லையே!

ஆற்றைக் கடந்து அக்கரை போக வேண்டும். அங்கேதான் என் கணவர் பசியோடு காத்திருக்கிறார். காலையில் பசியென்றவர், நான் போனால் தான் சாப்பிடுவார். வரும்போது முழுங்காலுக்கும் கீழே இருந்தது தண்ணீர்" என்றாள்.

"அம்மா, நான் ஓடம் ஓட்டுபவன்; இந்தக் காற்றிலும், வெள்ளத்திலும் ஓடம் விடுவது கடினம். மார்பளவு தண்ணீர் ஓடுகிறது. எனக்கு நீச்சலும் தெரியும். என்னை உன் சகோதரனாக எண்ணி தோள்மீது அமர்ந்து கொண்டால் பத்திரமாக உன் கணவரிடம் சேர்ப்பிக்கிறேன்" என்றார் ஓடக்காரன் வடிவிலிருந்த கண்ணன். யசோதா சம்மதித்து பகவான் தோளில் உட்கார, ஒரு நொடியில் தியானத்திலிருந்த சாந்தோபா அருகில் அவளை இறக்கினார் மாயவன்.

கணவன் அருகில் விரைந்து வந்தாள் யசோதா. அரவம் கேட்டு விழித்த சாந்தோபா "யசோதா, பெரும்காற்றும், மழையும் பிடித்துக் கொண்டதே! நதியில் வெள்ளம் ஓடுகின்றதே... எப்படி வந்தாய்?" என்று வினவ,

நடந்ததை நடந்தபடி கூறினாள் யசோதா. "ஓடக்காரன் எங்கே?" என்று சாந்தோபா கேட்க, அங்குமிங்கும் தேடிப் பார்த்து களைத்துப் போனாள் யசோதா. பகவானாலேயே அந்த வெள்ளத்தில் எதிர் நீச்சல் போட முடியும் என்று புரிந்து கொண்டார் சாந்தோபா. தன் மனைவிக்குக் கிடைத்த பாக்கியம் தனக்குக் கிடைக்கவில்லையே என்று உருகினார்.

கண்ணன் தரிசனம் கிடைக்குமட்டும் தண்ணீரும் அருந்துவதில்லை என்று வைராக்கியமாகப் பட்டினி கிடந்தார். தன் பக்தனான ஒரு வியாபாரியின் கனவில் வந்த பரந்தாமன் "என் அன்பன் சாந்தோபா பட்டினியால் வாடுகிறான். நீ அவனுக்கு அறுசுவை உணவிடு" என ஆணையிட, அவ்வணிகனும் அவ்விதமே தயார் செய்து சாந்தோபாவை உண்ணும்படி கெஞ்சினான்.

சாந்தோபா மேலும் வருத்தமுற்றார். "உன் கனவில் தோன்றிய புண்டரீகன் என் கனவில் தோன்றக் கூடாதா? அத்தனை பாவியா நான்!" என மனம் வெதும்பி காற்றையும் விடுத்து கடும் நிஷ்டையிலமர்ந்தார். வணிகன் வருத்தத்தோடு திரும்பினான். சாந்தோபா தேகம் நலிந்து, கண்கள் குழிவிழுந்து காதடைத்து நிஷ்டையிலேயே இருந்தார். யசோதாவும் மனம் உருகி "ஓடக்காரனாய் வந்த கண்ணா! அவரை ஏன் இப்படி வருத்துகிறாய்?" என மனம் வெதும்பிப் பிரார்த்தித்தாள்.

"பளீரென்ற மின்னல்! பரந்தாமன் தேவியரோடு சங்கு சக்ரதாரியாய் காட்சியளித்தான். புன்சிரிப்போடு "அன்ப, உன் இதயத்திலேயே நான் வாசம் செய்யும் போது வெளியில் என்னைத் தேடுகிறாயே!" எனக் கூறி மறைந்தார்.

சாந்தோபா கண் இமைக்கவே மறந்து போனார். சாந்தோபா தவமிருக்கும் காட்டை அடுத்துள்ள ஒரு கிராமம். அங்கே ஒரு தம்பதியர். கணவன் மகாப் பொல்லாதவன். எதற்கெடுத்தாலும் சண்டை. அடி, உதைதான். அவள் பதில் பேசினாலோ, "நானும் சாந்தோபாவைப் போல் காட்டுக்குப் போய் விடுவேன்" என்று பயமுறுத்தி வந்தான். அவளும் பயந்து அவன் சொன்னபடியெல்லாம் ஆடினாள்.

ஒருநாள் சாந்தோபா அவள் வீட்டுக்கு பிட்சைக்கு வந்தார். அப்போது மூர்க்கன் வீட்டில் இல்லை. மூர்க்கனின் மனைவி வருத்தத்துடன் தன் துன்பங்களையும், கணவரின் பயமுறுத்தலையும் கூறினாள். எல்லா வற்றையும் பொறுமையாகக் கேட்டார் சாந்தோபா. பிறகு அப்பெண்ணிடம் "அம்மா, அடுத்த தடவை உன் கணவன் என் பெயரைச் சொல்லி அச்சுறுத்தினால் தாங்கள் தாராளமாய் காட்டிற்குப் போகலாம்" என்று சொல்லி விடுங்கள். அப்புறம் பாருங்கள், அவர் நடவடிக்கையை!" என்றார். மறுநாள், வழக்கம்போல் தகராறு. கூச்சல்.... பயமுறுத்தல்!

மூர்க்கன் மனைவி துணிச்சலுடன் "நீங்கள் காட்டுக்குப் போய் நான் அலைய வேண்டும் என்பது தலைவிதியானால் அதை யாரால் மாற்ற முடியும்! இப்படி தினமும் சித்திரவதைப் படுவதை விட பட்டினி கிடப்பதே சொர்க்கம்" என்றாள். மூர்க்கன் அப்படியே பிரமித்து நின்றுவிட்டான். "தாய் தந்தையற்ற அநாதை; போக்கிடமற்றவள் என்றல்லவா விரட்டிக் கொண்டிருந்தோம்! இப்படிக் கேட்டு விட்டாளே! இனிமேல் காட்டுக்குப்

போகாமலிருப்போமானால் இவள் நம்மை மதிக்கமாட்டாளே! இருக்கட்டும்... சம்பாதிக்கும் நாம் இல்லாமல் போனால் தான் நம் அருமை. இவளுக்குப் புரியும். பசி வந்தால் தேடிக்கொண்டு வருவாள். வீறாப்பை விடக்கூடாது" என்று தீர்மானித்துக் கொண்டு ஒரு செம்புடன் காட்டிற்குப் புறப்பட்டு விட்டான்.

மனைவி சாந்தோபாவின் வார்த்தைகளை நினைவில் கொண்டு தடுக்காமல் இருந்தாள். காட்டில் சாந்தோபாவைக் கண்டான் கணவன். காலில் விழுந்து சீடனாய் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினான். சாந்தோபா அவனிடம் "முதலில் நதிக்குச் சென்று நீராடிவா. ஆற்றுக்குப் போகும் வழியில் கள்ளர் பயமுண்டு. அதனால் மாற்று வஸ்திரங்களையும், செம்பையும் இப்படி வைத்து விட்டுப்போ" என்றார்.

சாந்தோபா காட்டிய இடத்தில் அவைகளை வைத்துவிட்டு ஆற்றுக்குச் சென்றான் கணவன். அவன் போன பிறகு செம்பையும், அவனது மாற்று ஆடைகளையும் புதரில் மறைத்து வைத்தார் சாந்தோபா.

குளித்தவுடன் தினமும் சுடச்சுட பலகாரம் சாப்பிட்ட வயிறு பசிபசி என்று ஓலமிட்டது. களைத்துப்போய் தள்ளாடியபடி வந்தான் மூர்க்கன். ஆடைகளை வைத்த இடத்தில் காணவில்லை. குளிரில் கைகால்கள் விறைத்துப்போக, பற்கள் கிட்டிக்க நடுங்கியபடியே சாந்தோபாவிடம் மாற்று ஆடைகளை எங்கேயென்று கேட்டான்.

அவர் கனிவுடன் "அன்பனே, உட்கார்... நீயோ சன்னியாசி. சகலத்தையும் துறந்தவன் தான் துறவியாக முடியும். புழுதியும், பளிங்கும் நமக்கு ஒன்றே! காட்டிலே சப்ர மஞ்சக் கட்டிலை எதிர்பார்க்கலாமா? ஈர வஸ்திரத்தில் மண் ஒட்டிக் கொள்ளுமென அஞ்சுகிறாயே! மழையும், பனியும், வெயிலும், குளிரும் நமக்கு சமம்... அப்போது தான் நீ பக்குவப் பட முடியும்... இந்த வேப்பங்காய்களைச் சாப்பிடு... கசப்பும், இனிப்பும் நமக்கு சமானமாக இருக்க வேண்டும். முதலில் நாவை ஜெயிக்க வேண்டும்.... ஏன் குமட்டுகிறாய்? முதலில் அப்படித்தான் இருக்கும். போகப் போகச் சரியாகிவிடும்" என்றார்.

அவனுக்கோ கண்ணில் ஜலம் தளும்பி வழிந்தது. வயிற்றில் ஒரே புரட்டல். சாந்தோபாவின் கால்களில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்தான். "ஸ்வாமி, பசியாலும், குளிராலும் உயிர் போய்விடும் போலிருக்கிறது.

கருணை காட்ட வேண்டும்" என்று கெஞ்சினான். சாந்தோபா "காட்டுக்குச் செல்வதை சாமான்யமாக நினைத்தாயே! இதன் சுகங்களைப் பார்த்தாயா? வேளை பார்த்து, பசி நோக்கி, அன்புடன் உணவிட்ட இல்லாளை என்ன பாடு படுத்தினாய்! ஆதரவற்ற அவளுக்குத் துணையாக இருப்பதை விடுத்து தொல்லை தரலாமா? காட்டிலே கிடைத்ததை உண்ணவும், எதுவுமில்லா விட்டால் பசியோடிருக்கவும் பக்குவப் பட்டவர்கள் தான் வனவாசம் செய்ய முடியும். மறுபடி மனைவியை பயமுறுத்தாமலும், அடித்து வதைக்காமலும் இருப்பதாக வாக்களித்தால், உன் மனைவியோடு சேர்த்து வைக்கிறேன்" என்றார்,

மூர்க்கன் தான் மனைவியிடம் இனி அன்புடன் நடந்து கொள்வதாக, சத்தியம் செய்து தந்தான். சாந்தோபா அவனுடன் கிராமத்திற்குச் சென்றார். அவன் மனைவியிடம் "அம்மா, உன் புருஷன் திருந்தி விட்டான். உன்னுடன் இனி ஒற்றுமையாக இருப்பான்" என்று ஆறுதல் கூறினார். மனைவி கணவனை அன்புடன் வரவேற்று அறுசுவை உணவளித்தாள். இருவரும் சாந்தோபாவை வணங்கி ஆசி பெற்றனர்.

ஆடிமாதம் வளர்பிறை ஏகாதசி. மலையெல்லாம் மழைச்சாரல் கட்டி ஆடி பதினெட்டுக்குப் பொங்கிப் பெருகியது. பீம நதியில் வெள்ளம் இரு கரையையும் தொட்டுக் கொண்டு ஓடியது.

பண்டரீபுரம் செல்லக்கூடியிருந்த ஜனங்கள் நரசிம்மபுரத்திலேயே நின்று விட்டனர். 'தரிசனம் கிடைக்காமல் திரும்பிப் போக வேண்டியது தானா' என்ற ஏக்கம் அனைவருக்கும். சாந்தோபாவிடம் முறையிட்டனர். சாந்தோபா நதிக்கரைக்கு வந்தார். சாந்தோபா "சம்சார சாகரத்தையே கடக்கத் துணை செய்யும் கூர்மாவதாரா...! அன்று இலங்கை செல்ல சேது அமைத்தவனே! கோவர்த்தனகிரி தாங்கி கோகுலத்தைக் காத்தவனே! காளிங்கமர்த்தனா! இத்தனை பேரும் உன்னை தரிசிக்காமல் போவதால் உனக்கென்ன லாபம்?" என்றபடி பாண்டுரங்கனைப் பிரார்த்தித்தபடி நதியில் இறங்கி நடந்தார்.

"எல்லோரும் என் பின்னே வாருங்கள்" என்று குரல் கொடுத்தார். என்ன ஆச்சரியம்! தண்ணீரின் நடுவே ஒரு பாதை தோன்றியது. "ஜயஜய விட்டல! ஹரி ஹரி விட்டல!" என்று சிப்ளாக் கட்டையுடன் பஜனை செய்தவாறே பக்தர் கூட்டம் நதியைக் கடந்தது. அந்தப் பாதை சீதாப்

பழத்தின் தோலைப் போன்ற அமைப்பில், கெட்டியான பாறை போல் ஆடாமல் அசையாமல் இருந்தது. ஏகாதசி உற்சவம் முடியு மட்டும், வெள்ளம் வடியும் வரை இருந்த அந்தப் பாதை மறையும் போது தான் அது ஒரு பெரிய ராட்சச ஆமை என்பது தெரிந்தது. சாந்தோபாவுக்காக இறைவன் கூர்மாவதாரம் எடுத்துக் காத்திருக்கிறார் என்று மக்கள் அவரைக் கொண்டாடினார்கள். இப்படி சாந்தோபா செய்த அற்புதங்கள் எண்ணற்றவை. இப்படி பக்தி செய்தே தன் காலத்தைக் கழித்துவிட்டு மனைவியுடன் பரம பதம் அடைந்தார் சாந்தோபா.

31. துக்காராம் ஸ்வாமி

துக்காராமை நாமதேவரின் மறுபிறப்பு என்பார்கள். நாமதேவர் பாடப்பாட பாண்டுரங்கனே வந்து எழுதியதாகச் சொல்வதுண்டு. கணக்கு முடியுமுன் நாமதேவரின் காலம் முடிந்து விட்டபடியால் மறுபடி அவரே இறைப்பணியாற்ற துக்காராமாகப் பிறந்தார் என்கின்றனர்.

தேவநகரம் என்னும் பட்டணத்தில் மாதவராவின் மகனாகப் பிறந்தவர் துக்காராம். குலத்தொழில் தானிய வியாபாரம். துக்காராம் அதிகம் படித்தவரல்ல. ஆயினும் கல்வி அறிவும், சங்கீத ஞானமும், பாடல் புனைவதும் இயற்கையிலேயே அவருக்கு வரப்பிரசாதமாய் அமைந் திருந்தது. அவரது திறமையும், அழகும், குரல் வளமும் அவருக்குப் பெண் கொடுக்க பலரைப் போட்டியிட வைத்தது.

அதிலும் மாதவராவின் இரு உயிர் நண்பர்கள் தங்கள் பெண்களையே மருமகள்களாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென வாதாடினர். மாதவராவ் துக்காராமிடம் "இருவரும் என் அத்யந்த சினேகிதர்கள். இருவருடைய பெண்களும் அழகிலும், அறிவிலும் சிறந்தவர்கள். ஒருத்தியை மணந்து கொண்டால் இன்னொருவருக்கு மனத்தாங்கல் ஏற்படும். இருவரையும் உனக்கே மணமுடிக்க இருவரும் சம்மதித்துள்ளனர். நீ என்ன சொல்கிறாய்?" என்று கேட்டார். துக்காராம் வருத்தத்துடன் "தந்தையே! நான் சம்சார பந்தமே வேண்டாமென்றிருக்கும்போது இரு பெண்களை

மணந்துகொள் என்கிறீர்களே! பரமனைப் பாடுவதே என் குறிக்கோள். இல்லறத்தில் ஈடுபட்டவனால் பக்திப் பணி புரிய முடியாது. எனக்குத் திருமணமே வேண்டாம்" என்று மறுத்தார்.

மாதவராவ் "சத்ரபதி சிவாஜி இருதாரம் கொண்டவர். மன்னர் எவ்வழி மக்கள் அவ்வழி" என, "அவர் அரசர். பொருளாதாரச் சிக்கல் அவருக்கில்லை! யானை குளிக்கும் மடுவில், முயல் இறங்கினால் என்ன ஆகும்?" என்று பதில் கூறினார் துக்காராம்.

"நீ வணங்கும் பரந்தாமனே ஸ்ரீதேவி, பூதேவியுடன் தான் வலம் வருகிறார்" என்று மாதவராவ் கூற, "அவர் பகவான். காரண காரியம் புரியாமல் இதற்கு மட்டும் அவரை உதாரணம் கொள்ளலாமா" என்று வாதம் செய்தார் மகன். இப்படியே நெடு நேரம் இருவருக்கும் வாதம் நடந்தது. ஆனால் முடிவில் பாசத்துக்குக் கட்டுப்பட்டு தந்தையின் விருப்பப்படியே இருவரையும் மணந்து கொண்டார் துக்காராம். தந்தை இருந்தவரை குடும்பக் கவலை இல்லாமல் பக்தியும், பஜனையுமாகக் காலம் கழித்தார் துக்காராம்.

பெற்றோர் காலம் கழிந்தது. தந்தையின் வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்தினார். நல்ல லாபம் வந்தது. இரு மனைவியரும் சண்டை சச்சரவின்றி துக்காராமிடம் அன்புடன் நடந்து கொண்டனர். ஒரு மனைவி இரு குழந்தைகளைப் பெற்றுவிட்டு மரணமடைந்து விட்டாள்.

இன்னொருத்தியின் பெயர் கமலாபாய். தேவ நகரத்திலேயே பண்டரி நாதனுக்கு ஒரு கோயில் கட்டினார் துக்காராம். அப்போது நாட்டிலே கடும் பஞ்சம். துக்காராமோ எவரும் பசி என்று முகம் வாடினால் சகிக்க மாட்டார். விற்கக்கொண்டு போகும் தானியங்களைத் தானம் செய்து விடுவார். வண்டி காலியாகுமே தவிர அவர் மடி நிறையாது.

தினமும் வீட்டில் ரகளை தான்! "தனக்குப் போகத்தான் தானம்" என்று பிள்ளைகள் சண்டையிட்டனர். ஒருநாள் கோபத்தோடு பிரிந்து சென்று விட்டனர். தங்கம், வெள்ளி, பித்தளை என்று எல்லா சாமான் களும் அடகுக் கடையில் குடியேறின. கமலா பொறுமை இழந்தாள்.

"இப்படி சதா பாண்டுரங்கா, பாண்டுரங்கா என்றால் அவனா வந்து பசி தீர்ப்பான்? அடுப்பில் பூனை தூங்குகிறது. ஏழை எளியவர்களுக்கு

தானம் செய்கிறீர்களே. நான் கூட இப்போது அன்னக் காவடிதான். எனக்கும் ஒரு கால்படி நெல் தருமமாகக் கொண்டு வந்திருக்கலாமே. பசி பிராணன் போகிறது... வீட்டைக் கவனிக்காமல் தான தருமம் பண்ணும்படி உங்கள் பாண்டு ரங்கன் சொன்னானா" என்று அழுதாள்.

துக்காராம் எதுவுமே பேசாமல் மௌனமாக அமர்ந்திருந்தார். இதைப்பார்த்த கமலாபாய் "ஐயோ, பாவம்... அவருக்கும் தானே பசிக்கும்! அது ஏன் எனக்கு உறைக்கவில்லை? பெற்றோரும் இறந்து, பிள்ளைகளும் பிரிந்து, எனக்கு நீ, உனக்கு நான் என்றிருக்கும் நிலையில் நானும் ஏசினால் அவர் என்ன பண்ணுவார்..." என்று மனம் வருந்தியவள்,

"இதோ வந்து விடுகிறேன், எங்கேயும் போய் விடாதீர்கள்" என்று சொல்லிவிட்டு வெளியே போனாள். துக்காராமிடம் அன்பு கொண்ட ஒரு மார்வாடி. வயோதிகர். அவரிடம் நிலைமையை எடுத்துச் சொல்லி கடன் கேட்டாள் கமலா. அவரும் இரக்கப்பட்டு நூறு வராகன் கடன் தந்தார். அதைக் கொண்டு வந்து துக்காராமிடம் கொடுத்து, "இதோ பாருங்கள். ஒரு மாதத்திற்குள் திருப்பித் தருவதாய்ச் சொல்லி கடன் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன். ஏதாவது தானியம் வாங்கி வியாபாரம் செய்யுங்கள். லாபத்தில் நான்கில் ஒரு பங்கையாவது வீட்டிற்குத் தாருங்கள். மீதி மூன்று பங்கை ஏழை எளியவர்கட்கும், உங்கள் பாண்டு ரங்கனுக்கும் செலவிடுங்கள்" என்று சொன்னாள்.

துக்காராம் நொந்த மனதுடன் "கமலா, உன்மீது எந்தத் தவறும் இல்லை. நீ சொல்வதெல்லாம் நியாயம் தான். இதோ இப்போதே போய் வியாபாரப் பொருட்களை வாங்கி வருகிறேன். இனி குடும்பத்தை கவனித்து விட்டே, தான, தருமம், பக்தி எல்லாம்" என்று சொல்லிச் சென்றார். சொன்னபடியே சிறிது நேரத்தில் சாமான்களோடு வந்தார். அடுத்த ஊர் சந்தையில் விற்றுவருவதாகக் கூறி, மாட்டு வண்டியில் சாமான்களை ஏற்றிக் கொண்டு புறப்பட்டார். கமலாபாய் இனி கஷ்டம் தீர்ந்தது என்று புளகாங்கிதமடைந்து வண்டி கண்ணுக்கு மறையும் வரை பார்த்துக் கொண்டே நின்றாள்.

ஜல்ஜல் என்று சலங்கையொலிக்க மாடுகள் வேகமாக நடை போட்டன. கருமேகங்கள் கூடியது. இடி இடித்தது. கண்ணைப் பறிக்கும் மின்னல். மழை சோவெனக் கொட்டத் தொடங்கியது. மாடுகளின் நடை

பின்னடைந்தது. துக்காராம் மாடுகளை ஒரு மரத்தடியில் நிறுத்திவிட்டு தானும் மரத்தின் மேல் ஒரு வசதியான இடத்தில் அமர்ந்து கொண்டார். எத்தனை நேரம் ஜல தாரையைப் பார்த்துக் கொண்டிருப்பது? மழையோ அப்போதைக்கு ஓய்வதாய்க் காணோம்.

"அன்று கோகுலத்தில் இப்படித்தானே மழை கொட்டியிருக்கும்! இப்படிப்பட்ட மழையைப் பார்த்தபடி தானே, என் ஐயன், இராமாவதாரத்தில் சீதையை நினைத்து, உருகியபடி கழித்திருப்பார்" இப்படி அவரின் கற்பனைகள் விரிந்தன! மழை தாரையின் சப்தமே பக்கவாத்தியமாக, அதற்கேற்றபடி பாடத் தொடங்கினார். தன்னை மறந்தார். சூழ்நிலையை மறந்தார். வண்டி, மாடுகள், தானிய மூட்டைகள், கமலாபாய், கடன், வறுமை, வாக்குறுதி எல்லாம் நீரோடு நீராக ஓடிவிட்டது.

மழை நின்ற போது சூரியோதமாகிவிட்டது. சுய நினைவுக்கு வந்த துக்காராம் வண்டியைப் பார்த்தார். வண்டி குடை சாய்ந்து கிடந்தது. மாடுகளைக் காணோம். தானிய மூட்டைகள் சரிந்து கட்டவிழ்ந்து பெருகி ஓடிய நீரில் தானியங்கள் மிதந்து கொண்டிருந்தன. அப்போதும் மாடுகளைப் புலி அடித்துச் சென்று விட்டதோ, என்று கவலைப் பட்டாரே அன்றி தானிய நஷ்டத்திற்காக வருந்தவில்லை.

"இப்படிப் பஜனையும், பக்தியுமாக மெய் மறக்கும் எனக்கு வீடெதெற்கு? குடும்பத்தை ரட்சிக்கத் துப்பில்லாதவனுக்கு மனைவி எதற்கு? பாவம் கமலாபாய்! கடன் வாங்கித் தந்தாள், 'தொலைத்து விட்டேன்' என்று எந்த முகத்தோடு போய் சொல்வது."

இப்படிப் பலவாறு சிந்தித்தவர், அங்கே உள்ள ஒரு பாறையில் பரந்தாமன் உருவை நெஞ்சில் நிறுத்தி, யோகத்தில் ஆழ்ந்து விட்டார். அவர் மனத்திரையில் ஓடியவை இறைவனின் லீலைகள்... அந்தத் சொர்க்கானுபவத்தின் போதையில், வெளி உலக ஞாபகமும் வருமா! அங்கே கமலாபாய் கவலையோடு காத்திருந்தாள். "ஐயோ, இப்படி மழை பெய்கிறதே! இவர் சந்தைக்குப் போய் சேர்ந்திருப்பாரோ, இல்லையோ? இந்த மழையில் என்ன வியாபாரம் ஆகப் போகின்றது....!"

அதோ, பழக்கமான சலங்கைச் சத்தம் கேட்கிறதே" ஆவலோடு தெருக்கோடியில் பார்த்தாள். 'ஹேய்...' என்றபடி மாடுகளை நிறுத்தி, வண்டியிலிருந்து குதித்தார் துக்காராம். நெற்றியில் அரும்பு கட்டி இருந்த

வியர்வை. வண்டிக்குள் எட்டிப் பார்த்தாள் கமலா. கோணிகள் கூட இல்லை. தயக்கத்துடன் கணவர் முகத்தைப் பார்க்க, அவர் வேஷ்டி முடிவிலிருந்து நூற்று நாற்பது வராகன்களைக் கொடுத்து, "இந்தா, எடுத்து வை. கசகசவென்றிருக்கிறது. குளித்து விட்டு வருகிறேன்" என்றபடி மாட்டை அவிழ்த்துக் கட்டிவிட்டு நதிக்குச் சென்றுவிட்டார். கமலாவுக்கு சந்தோஷத்தில் பேச்சே வரவில்லை. பார்த்தது பார்த்தபடி நின்றாள்.

"பண்டரி நாதா, நீதான் அவருக்கு இதே புத்தியை நீடிக்கச் செய்ய வேண்டும். இந்த மழையில் இத்தனை சீக்கிரம் நாற்பது வராகன் லாபமும் சம்பாதித்து, அதை நேரிடையே வீட்டிலும் கொண்டு வந்து தந்திருக் கிறாரே" என்று புலம்பியவள், கதவைப் பூட்டிக் கொண்டு, நூறு வராகனுடன் மார்வாடிக் கடைக்குச் சென்றாள்.

"வாங்கம்மா! எப்ப வேணுமானாலும், எவ்வளவு வேணுமானாலும் பணம் வாங்கிட்டுப் போங்க! உங்கள் வீட்டுக்காரர்கிட்டே ரசீது கொடுத்துட்டேனே. வட்டியும், அசலும் கட்டிட்டுப் போயிட்டார்" என்றாள் மார்வாடி. கமலா திக்கு முக்காடிப் போனாள். "இரட்டிப்பு லாபமா? சொல்லவே இல்லையே! ஆற்றுக்குப் போகும் வழியில் இங்கே வந்துவிட்டுப் போயிருக்கிறார். இப்படி வியாபாரம் செய்தால் எவ்வளவு சீக்கிரம் பணக்காரர்களாகி விடலாம்!" இப்படி எண்ணியபடியே விரைந்து வீடு வந்து, அறுசுவை உணவை சமைத்து வைத்துவிட்டு, கணவர் வரவை எதிர் நோக்கிக் காத்திருந்தாள்.

நேரம் ஓடிக் கொண்டே இருந்தது. துக்காராம் வரவில்லை. நதிக்குச் சென்று பார்த்தாள். வரும் வழியில் சந்தித்தவர்களை விசாரித்தாள். துக்காராமை யாரும் பார்க்கவேயில்லை என்றார்கள். மாடு மேய்க்கச் சென்றவர்கள் வந்து, காட்டில் துக்காராமைப் பார்த்ததாகச் சொல்ல, வீட்டைப் பூட்டிக்கொண்டு போகலாமென கமலா புறக்கடைக்கதவைத் தாளிடப் போனவள் மாட்டுக் கொட்டிலில் வண்டி மாடுகளைக் காணாமல் திகைத்தாள்.

காட்டிலே துக்காராமைக் கண்டதும் அழுது கொண்டே "வறுமையின் கொடுமையால் நான் கடுமையாகப் பேசியதை மனதில் கொண்டு தானே வியாபாரம் பண்ணிவிட்டு, பணம்தானே உனக்கு முக்கியம் என்பது போல்

பணத்தைக் கொடுத்துவிட்டு இங்கே வந்து வீட்டீர்கள்! குளிக்கப் போனவரைக் காணோமே என்று நான் தவித்துக் கொண்டிருக்கிறேன்! இது உங்களுக்கே நியாயமாகப் படுகிறதா? மாடுகள் எங்கே?" என்று புலம்ப,

துக்காராம் விழித்தார். "கமலா, நீ சொல்வதில் எதுவும் எனக்கு விளங்கவில்லை. நான் வந்தேனோ? பணம் தந்தேனோ? என்ன சொல்கிறாய்? மழைக்கு ஒதுங்கியவன் பஜனையில் ஈடுபட்டு வழக்கம் போல் என்னை மறந்து விட்டேன். தானியங்கள் சேதமாகி விட்டன. மாடுகளைப் புலி அடித்துப் போனதோ? கள்வர் கவர்ந்து சென்றாரோ? உன் முகத்தில் முழிக்க அஞ்சி இங்கேயே இருக்கிறேன்" என, கமலா பிரமிப்புடன் நடந்ததை விளக்க துக்காராம் "கமலா, நீ எத்தனை பாக்கியவதி! அல்லும், பகலும் அவனைக்காண நான் தவமிருக்கிறேன். உனக்குக் காட்சி தந்து, உன்னோடு பேசிப் பொருளும் தந்து.. அடாடா... உன் பொருட்டு மார்வாடி கடனையும் அடைத்து, பாண்டு ரங்கா... அந்த மார்வாடியை விட நான் பக்தியில் கீழ்ப்பட்டவனா!" என்று பிரலாபித்தார்.

கமலாபாய்க்கும் அப்போது தான் உண்மை விளங்கியது. கணவரை வணங்கி, இல்லம் வரும்படி வேண்டினாள். அவரோ பிடிவாதமாய் வர மறுத்தார். கமலா தினந்தோறும் காலையில் நீராடி, உணவு சமைத்து எடுத்து வந்தால், மாலை தான் வீடு திரும்புவாள். பகலில் தினந்தோறும் பஜனை, தியானம், பாடல் தான்! இப்படியே இரண்டு வருஷங்கள் கழிந்தன. இறைவன் கொடுத்த பணம் கரையவும் கமலாபாய் சலித்துப் போனாள்.

"இதென்ன வம்பு? தாலிகட்டியவர் மனைவியைக் காப்பது தான் மரபு.... இங்கே எல்லாம் தலை கீழாய் நடக்கிறதே! பரம்பரை சொத்தா இருக்கிறது... கடமையை மறந்து கண்ணனை பூஜிக்கும்படியாக கீதையில் சொல்லி இருக்கிறாரா? வீட்டிற்கு வந்து ஏதாவதொரு தொழில் செய்யுங்கள்" என்று தினமும் நச்சரிக்க ஆரம்பித்தாள்.

அவள் நச்சரிப்புத் தாங்காமல் துக்காராம் வீடு திரும்பினார். வீட்டிற்கு வந்தும் துக்காராமின் போக்கு மாறவில்லைஸ 'மனது மாற வேண்டுமே அன்றி இடத்தை மாற்றிப் பயனில்லை' என்பதை கமலாவும் உணரவில்லை. சோளமும், கம்பும், தினையும், சாமையுமாக புன்செய்ப் பயிர் விளைவித்

திருந்த ஒரு விவசாயி வலிய வந்து "துக்காராம்! இங்கே பாடுவதை அங்கே வந்து பாடும்.... பறவைகளை விரட்டும். எவரும் திருடிக் கொண்டு போகாதபடி காவல் காத்தால் உமது குடும்பச் செலவுக்கான தானியமும், பணமும் நான் தருகிறேன்" என்றான்.

"பண்டரிநாதன் தான் அவன் புத்தியில் இப்படி எண்ணச் செய்திருக்கிறார்" என்று துக்காராம். கமலாவிடம் பெருமைப்பட்டுக் கொண்டார். கமலாவின் வயிற்றுப் பிரச்சினை அப்போதைக்குத் தீர்ந்தது. துக்காராம் கவண் கல்லும், கையுமாகப் பரணில் உட்கார்ந்து கொண்டதென்னவோ நிஜம். பரந்தாமன் மீது பண் இசைத்தார். கடல் போன்ற பயிரில், கலகலவென்ற சப்தத்துடன் பறவைகள் சஞ்சரிக்கவும், அவருக்கு அது பிருந்தாவனமாய் காட்சியளித்தது.

"பண்டரிநாதா! பறவைகள் எந்தக் கடையில் போய் சாமான் வாங்கும்! இப்படிக் காவல் காத்து மூட்டையில் பதுக்கி வைத்தால் இவற்றின் பசி எப்படித் தீரும்? எத்தனை ஒற்றுமை? நாளையக் கவலை இன்றி என்ன ஆனந்தமாய் சஞ்சரிக்கின்றன!" இப்படி சிந்தித்தபடியே விரட்டாமல் ஒருவர் உட்கார்ந்திருந்தால், பறவைகளுக்கு பயம் எப்படி வரும்? இவர் மடி மீதே உட்கார்ந்து கொஞ்சின.

கிளிகளுக்கும், புறாக்களுக்கும், மைனாக்களுக்கும் கொண்டாட்ட மாகி விட்டது. பயிர்கள் அங்காங்கே வழுக்கை விழுந்த தலையானது. சேதி கேட்டு ஓடிவந்தான் நிலச் சொந்தக்காரன். பயிர் பாழானதைக் கேட்டு கொதித்தான். சோளத் தட்டை ஒன்றை உருவிக் கொண்டு துக்காராமை அடிக்கப் போனான். உடன் இருந்தவர் தடுத்தார்.

"அதோ பார்! நீ அடிக்க வருவதையும் உணராமல் பாடிக் கொண்டிருக்கிறான். இவன் பொருட்டு பரந்தாமனே வண்டி ஓட்டி வந்து, கடனைத் தீர்த்திருக்கிறார். அதுபோல நிலம் பொக்கையாயிருந்தாலும் விளைச்சல் வழக்கத்தை விட அதிகமிருந்ததால், அவனை விட்டுவிடு. குறைந்தால் அவனை தண்டிப்போம்" என்றார் ஒருவன். "உம், இவன் குடும்ப நிலைக்கண்டு இரக்கப்பட்டு வேலைக்கமர்த்தியது என் தப்பு" என்று நொந்து கொண்டே சோளத்தட்டையை வெறுப்புடன் வீசி எறிந்தான் உடமைக்காரன். அறுவடையானது. மற்ற நிலங்களைவிட தானியங்கள் நன்கு முற்றி, வழக்கத்தைவிட இரண்டு பங்கு கிடைத்தது.

விவசாயி லாபத்தில் ஒரு பகுதியை துக்காராமுக்கு மனமுவந்து கொடுத்தான். அவரும் வழக்கம் போல் அதை ஏழை எளியவர்களுக்குத் தானம் செய்தார்.

பண்டரீபுரம். ஆஷாட சுக்ல ஏகாதசி. துக்காராம் மெய்மறந்து தான் இயற்றிய "அபங்கம்" என்ற கவிமாலையை இறைவனுக்குச் சூட்டி கொண்டிருக்கிறார். பக்த கோடிகளின் கூட்டம். துக்காராமின் பாடல் எனும் அமுதத் தேனைப் பருக சத்ரபதி சிவாஜி மாறு வேடத்தில் வந்திருக்கிறார். அந்த மலை எலியைப் பிடிக்கக் காத்திருந்த ஔரங்கசீப் ஒற்றர்கள் மூலம் செய்தியைக் கேள்விப்பட்டு தனது குதிரைப்படையை அனுப்புகிறான்.

குதிரைப்படை கோயிலைச் சூழ்ந்து கொண்டது. மக்கள் திகிலுடன் பிரமித்தனர். சிவாஜியோ அபங்கத்தில் தன் நிலை மறந்திருந்தார். துக்காராம் நிலைமையைப் புரிந்து கொண்டார். சிவாஜியைக் காப்பாற்றும் படி, பண்டரி நாதனிடம் மௌன வேண்டுகோள் விடுத்தார்.

"அதோ" குதிரைப் படை வீரன் ஒருவன் கைகாட்ட, மொகாலய வீரர்கள் குதிரையில் செல்லும் சிவாஜியை விரட்டினர். மாயமான் இராம ரை அலைத்தது போல காட்டிலும், மேட்டிலும், கல்லிலும், முள்ளிலும், மலையிலும், பள்ளத்திலுமாக படை அடிபட்டு நலிந்தது. கோயிலில் சத்ரபதி மெய்மறந்த நிலையிலேயே இருந்தார். அவரின் வீர சாகசம் பற்றி மற்றவர் பாராட்ட, அவர் திகைத்தார்.

துக்காராமின் பக்திப் பாடலை தான் சலனமின்றிக் கேட்க உதவிய பண்டரி நாதனை நினைத்து உருகினார். அத்தகைய 'அபங்கங்களை' இயற்றிய துக்காராம் வறுமையில் வாடுவதைக் கேள்விப்பட்டு மாறு வேடத்தில் தானிய மூட்டைகளை இறக்கி விட்டுப் போனார். வள்ளல் துக்காராமுக்கு இதெல்லாம் எத்தனை நாட்களுக்கு வரும்?

"குதிரை தான் விழுந்தது போதாமல் குழியையும் பறித்ததாம்!" உங்களோடு போகாமல் ஊரை எல்லாம் வளைத்துப் போட்டிருக்கிறீர்கள்? அதோ அழுது துடித்துக் கொண்டு வருகிறாளே, அவளுக்கு பதில் சொல்லுங்கள்" என்று பொரிந்து கொட்டினாள் கமலாபாய். துக்காராம் நிமிர்ந்தார். இறந்த குழந்தையை துக்காராமின் காலடியில் போட்ட அந்தப் பெண் "பாண்டு ரங்கா பண்டரிநாதா என்று பஜனை செய்து கொண்டே

இருந்தார் என் கணவர். குடும்பத்தையும் கவனிக்கவில்லை; குழந்தை யையும் கவனிக்கவில்லை. வியாதி முற்றி குழந்தை போய் விட்டது. உங்கள் கண்ணன் வந்து காப்பாற்றுவாரா" என்று கதறினாள். துக்காராம் கண்ணனிடம் மனமுருகி வேண்டினார்.

"குருதேவரின் குழந்தையை மீட்டுக் கொடுத்த வள்ளலே! உத்தரையில் கர்ப்பத்தில் இருந்த சிசுவைக் காப்பாற்றிய உனக்கு இக்குழந்தைக்கு உயிர் கொடுப்பது பெரிய காரியமா? பக்தர்களுக்கு அவப்பெயர் வந்தால் நாட்டில் பக்தி குறைந்து போகாதா? இக்குழந்தை மறுபடி மூச்சுவிடும் வரை நான் இந்த இடத்தை விட்டு அசையவும் மாட்டேன்" என்று புலம்பியபடி உருக்கமாகப் பாடிக் கொண்டிருந்தார்.

பஜனை உச்சஸ்தாயியை அடைந்தது. "ஜயஜய விட்ட ல" என்ற கோஷம். குழந்தையின் பெற்றோரும் மெய்மறந்து கண்மூடியபடி பாடிக் கொண்டிருந்தனர். என்ன ஆச்சரியம்! குழந்தை எழுந்து அவர் சட்டையைப் பிடித்து இழுத்தது...! இச்செயலைக் கண்டு ஊரே அதிசயித்தது!

"ஐயா"

"யாரம்மா நீ? என்ன வேண்டும்?"

"இதோ பார்த்தீங்களா? புடவையெல்லாம் நைந்து கிழிஞ்சு போயிட்டது... பழசு ஏதாவது இருந்தா கொடுங்கய்யா...." துக்காராம் பார்த்தார். ஏழைப் பெண். கமலாபாய் துவைத்து உலர்த்தி இருந்த புடவையை உருவிக் கொடுத்தார். "ஐயா குடும்பம் நல்லா இருக்கணும்" வாழ்த்தி விட்டு அவள் சென்றாள். புறக்கடைப் பக்கம் வேலையாக வந்த கமலா "இங்கே உலர்த்தி இருந்த புடவை எங்கே? அதற்குள்ளா காய்ந்து விட்டது" என்றாள். துக்காராம் "கமலா, பாவம்... ஒரு ஏழை ஹரிஜனப் பெண்... கந்தையைக் கட்டிக் கொண்டு வந்தாள்" என்று தொடங்கவுமே, கமலாபாய் புரிந்து கொண்டாள்.

தாங்கமாட்டாத சினத்துடன் "இரக்கம் பொங்கி வர, தானம் செய்து விட்டீர்களாக்கும்! உங்களோடு பெரிய தொல்லையாகப் போயிற்று! என்னதான் பொறுமையாக இருந்தாலும், சம்பாதிக்கவும் துப்பில்லாமல், வீட்டையும் துடைத்துப் போட்டால் எப்படித் தாங்க முடியும்? பாண்டு

ரங்கன், பாதார விந்தங்களே கதி என்று சதா புலம்பினால் ஆயிற்றோ? நாளை உடுத்துக் கொள்ள புடவைக்கு என்ன செய்வேன்? அந்தப் பண்டரிநாதனின் பாதார விந்தங்களை நசுக்கினால்தான் புத்திவரும்... உங்களை அப்போது தான் திருத்துவான்" என்றபடி அம்மிக் குழவியுடன் கோவிலுக்கு ஓடினான். துக்காராம் தடுத்துப் பார்த்தார். கமலாபாய் திமிறிக் கொண்டு ஓடினாள்.

கமலாபாய் ஆலயத்துள் நுழைந்ததும் கோயில் கதவுகள் தாமாகவே மூடிக் கொண்டன. கமலாபாயின் பழைய புடவையுடன் எதிரே வந்தாள் ருக்மிணி பிராட்டி. "கமலா, குசேலரிடம் அவல் வாங்கியது போல, உன்னிடம் ஏதாவது வாங்கினால்தானே, நான் கடன் பட்டவளாகி உனக்குத் திருப்பித் தரமுடியும்? உன் மேனியைப் பார்" என்று கூறினாள். கமலா பிராட்டியைப் பார்த்ததுமே மெய் மறந்து நின்றாள். அவள் கையிலிருந்து அம்மிக் குழவி நழுவி விழுந்தது. கண்கள் ஆனந்த வெள்ளமாய் நீரைப் பெருக்கியது. தன்னைப் பார்த்த போது அவளுக்கு வாயடைத்துப் போயிற்று.

நவரத்தினங்கள் இழைத்த ஆபரணங்களும், கெட்டி சரிகை போட்ட பட்டாடையும் எப்படி வந்ததென்று பிரமித்தாள். பிராட்டியை நமஸ்கரிக்க நிமிர்ந்த போது பிராட்டி அங்கே இல்லை. கோயில் கதவுகள் மறுபடி திறந்து கொண்டன. வெளியே நின்றிருந்த துக்காராம் ஓடி வந்தார். மனைவியைக் கண்டு திகைத்தார். நடந்தவைகளைக் கேள்விப்பட்டதும் துக்காராம் வருத்தத்துடன், "பாண்டு ரங்கா! ருக்மிணி தேவியாருடன் பேசும் பாக்கியம் என் மனைவிக்குத் தான் கிட்டி இருக்கிறது. நான் அத்தனை பாவியா?" என்று புலம்ப, "துக்காராம்! வருந்தாதே! நான் தினமும் உன்னோடு அமர்ந்து சாப்பிடுகிறேன். ஆனால் நான் உன் கண்ணுக்கு மட்டுமே தெரிவேன்" என்று வாக்களித்தார்.

கமலாவும் ஆனந்த பரவசத்துடன் "கையிலே வெண்ணையை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைந்தாற்போல் இப்படி ஒரு ஞானப் பொக்கிஷத்தை கணவராக அடைந்தவள், பொருளைத் தேடி அலைந்து நாட்களை வீணே கழித்தேனே" என்று வருந்தினாள். அன்று முதல் எவர் மூலமாகவாவது குடும்பச் செலவுக்கான உணவுப் பொருள் வந்து சேரும். கணவனும், மனைவியும் ஒரு மனதாக இறைவனைத் துதித்து பக்தியைப் பரப்பினர்.

"துக்கராம்"

"ஸ்வாமீ"

"கிஞ்சன்வாடியில் ஒரு தீவிர கணேச பக்தர் இருக்கிறார். அவர் நான் உன்னோடு சாப்பிடுவதை நம்பவில்லை"

"அவர் நம்பாவிட்டால் நமக்கென்ன நஷ்டம்?"

"இல்லை.... அவன் நம்பும்படி செய்ய வேண்டும். நான் உனக்குத் துணை இருக்கிறேன். ஞான திருஷ்டியால் உனக்கு எல்லாம் புரியும். தெய்வ பக்தி குறைய இடம் தரலாகாது. நீ உடனே கிஞ்சன் வாடிக்குப் புறப்படு...."

"உத்தரவு பிரபோ.... ஆனால்...."

துக்காராம் இழுத்தார். கண்ணன் புன்னகையோடு "உன் சந்தேகம் புரிகிறது. நாளை உன்னோடு உணவுண்ண அங்கேயே வருகிறேன்" என்றார். மறுநாள் கிஞ்சன்வாடிக்குச் சென்றார் துக்காராம். அந்தணரை சந்தித்து அறிமுகம் செய்து கொண்டார்.

கணேச பக்தர் துக்காராமை அன்புடன் உபசரித்து "ஸ்வாமீ, உங்களுடன் பண்டரிநாதன் தினமும் உணவருந்துவதாய் கேள்விப் பட்டேன். அதுபோல் விநாயகர் என்னோடு சாப்பிட வேண்டும் என்பது என் தணியாத ஆசை" என்றார்.

துக்காராம் "பக்தர்களின் ஒரு மனதான வேண்டுகோளை இறைவன் புறக்கணிப்பதில்லை. நீங்கள் நம்மோடு இன்னும் இரண்டு இலை போட்டு பரிமாறச் சொல்லுங்கள்" என்றார். கணேச பக்தருக்கு ஆனந்தம் தாங்கமுடியவில்லை. பூமியில் கால் பாவாமல் பறந்தார். சாப்பாட்டு நேரம். நான்கு இலைகள் போட்டு பரிமாறப் பட்டன. அறுசுவை உணவு. கணேச பக்தர் உருகி வேண்டினார். பஜனை செய்தார். ஊஹூம்... விநாயகர் வருவதாகக் காணோம்.

கணேச பக்தர் சோர்ந்து துவண்ட சமயம் துக்காராம், "அதோ கணபதி வந்து விட்டார். கைகால் கழுவ உள்ளே சென்றிருக்கிறார். கடலில் மூழ்கவிருந்த ஒரு கப்பலைக் காப்பாற்றிவிட்டு வந்ததால்தான் தாமதம்" எனவும் கணேச பக்தர் புறக்கடைக்கு ஓடிச்சென்று பார்த்தார்.

தும்பிக்கையார் உடம்பிலிருந்து உப்புநீர் சொட்டிக் கொண்டிருந்தது. துக்காராம் "பிள்ளையாரே! நேரமாகிறதே! கொழுக்கட்டைகளும், அதிரசமும், எள்ளுருண்டைகளும் ஆறிக் கொண்டிருக்கின்றன; வாரும்" என்றழைக்க, பண்டரி நாதனுடன் வந்தமர்ந்தார் கணபதி. "என்னை விட நீரே உயர்ந்த பக்தர்" என்று துக்காராமின் கைகளைப் பிடித்துக் கொண்டார் கணேச பக்தர்.

"தான் என்ற அகந்தை விடுத்து, சகலமும் இறைவனுக்கே அர்ப்பணமாக்கி விடுவோமானால், இறைவன் குழந்தையாய் நம்மோடு கலந்துவிடுகிறான்" என்று உணர்த்தினார் துக்காராம்.

"ஐயா, இங்கே துக்காராம் என்கிறது யார்?"

"நான்தான்... தங்களுக்கு என்ன வேண்டும்?"

"எனக்கு அவந்தி நகரம். என் மானசீக குரு ஞானேசுவரர். என் குருநாதர் நேற்று கனவில் வந்து தங்களிடம் கல்வி கற்கும்படி கூறினார். எனக்குப் பாடம் போதிக்க வேண்டும்" பணிவுடன் கூறினான். "பாண்டு ரங்கா! எல்லாம் உன் திருவிளையாடல்!" என்ற துக்காராம், மகாராஷ்டிர மொழியில் சில கவிதைகளை இயற்றி, "அன்ப, இந்தத் தேங்காயைப் பண்டரி நாதனுக்கு நிவேதனம் செய்துவிட்டு இந்தக் கவிதையைப்படி. அறிவு ஊற்றாய் பெருக்கெடுக்கும்" என்று ஒரு தேங்காயையும் ஓலைச் சுவடிகளையும் தந்தார். "இதென்ன சித்து விளையாட்டு வேலை! படிக்காதவர் எப்படிப் படிப்புச் சொல்லித் தர முடியும்" என்ற அவ நம்பிக்கையுடன் தேங்காயையும், ஓலைச்சுவடிகளையும் அங்கேயே வைத்துவிட்டு, துக்காராமிடம் சொல்லிக் கொள்ளாமலேயே போய்விட்டார் அவர். அடுத்த நாள். ஒரு வாலிபன் வந்தான்.

"ஐயா, நான் படிக்காதவன். என் தந்தையோ சகல சாஸ்திர பண்டிதர். அரசாங்கத்தில் உத்யோகம். ஒரு கர்வம் பிடித்த புலவர் என் தந்தையோடு போட்டியிட வந்திருக்கிறார். என் தந்தையை அவமானப்படாமல் காப்பாற்ற வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. கையில்லாதவன் மலர் தொடுக்க ஆசைப்பட்டால் ஆகுமா? தாங்கள் தான் வழிகாட்ட வேண்டும்" என்று அழுதான். அந்தணருக்குக் கொடுத்த அதே தேங்காயையும், ஓலைச் சுவடிகளையும் அவனிடம் கொடுத்தார் துக்காராம். பக்தியோடு அவர் சொன்னபடி செய்தான் வாலிபன்.

என்ன அற்புதம்! மடை திறந்த வெள்ளமென பொழிந்த அவன் புலமைக்கு எதிர் நிற்க முடியாமல் தோற்றோடினார் வாதிட வந்த கவிஞர். பெற்ற தந்தையும், கொற்றவனும், சபையோரும் திறந்த வாய் மூடவில்லை. அதுமுதல் சத்ரபதி சிவாஜிக்கு இவரிடம் மதிப்பும், அன்பும் பெருகியது. சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் இவரை சந்தித்தார். பண்டரீபுரம் திருவிழாவுக்குத் தம்மால் போக முடியவில்லையே என்று இவர் ஏக்கத்துடன் ஓலை அனுப்ப பாண்டுரங்கன் பதில் எழுதியதோடு, ஏறி வரும்படி கருடனையும் அனுப்பி வைத்தார்.

துக்காராம் "பாண்டுரங்கா, நீ அமரும் வாகனத்தில் நானா? தொண்டனும், தெய்வமும் ஒன்றாகிவிட முடியுமா? உன் மதிப்பை நான் குறைக்க மாட்டேன். அதற்காக அழியும் பொருளைத் தந்து என்னை மாயா வசப்படுத்தாதே! திருவிழா முடிந்ததும் அதே கோலத்தோடு நீ இங்கு வா. நான் தரிசித்துக் கொள்கிறேன்" என்று பதில் அனுப்பினார். பாண்டு ரங்கனும் பிராட்டியோடு அப்படியே வந்து அவருக்கு தரிசனமளித்தான்.

பாண்டுரங்கனே அவரிடம் விரும்பி வந்து கேட்டிருக்கிறான் பாமாலை தொடுக்கச் சொல்லி. பாடிப்பாடி பக்தி யோகத்தைப் பரப்பியவர் ஒருநாள் பஜனை செய்யும் போதே பரகதியடைந்தார். இவருடைய கவிதைகளைச் சில அந்தணர்கள் புனல் வாதம் செய்து பார்க்க ஓலைகள் நீரில் எதிர்த்து வந்தன. துக்காராமின் சமாதி பூனாவிற்கு 10, 12 மைல் தொலைவிலுள்ள 'தேஹூ ரோட்' என்னுமிடத்தில் விளங்குகின்றது. இது தற்போது ராணுவ ஸ்தலமாக இருக்கிறது.

32. ஸ்ரீ பகிரமபட்டர்

பகிரமபட்டர் வாழ்ந்த ஊர் பைடனிபுரம். அந்தண குலத்தில் பிறந்த இவர் ஜோதிடத்திலும், சாஸ்திரத்திலும் வல்லவர். இ[illegible]டம் பலர் பாடம் கேட்டு வித்வான்களாகி இருந்தனர். ஒரு நாள்; சாப்பாட்டுநேரம். பொரியலைச் சாப்பிட்டவர் மனைவியை நோக்கி, "கறிக்கு உப்புப்போட மறக்குமளவு என்ன சிந்தனை" என்று கேலி செய்தார். விருந்தினர்

எதிரில் அவ்விதம் கேட்டதும் பகிரமரின் இல்லாளுக்கு ரோஷமாக இருந்தது. "வயது அறுபதாகிவிட்டது. வேதாந்தத்தைப் போதிக்கிறீர்கள். புலனடக்கம் இல்லையே! முதலில் நாவைக் கட்ட வேண்டாமா? கண்ணன் விதுரர்கொடுத்த தோலைச் சாப்பிட்டே பசியாறினார் என்று பாடம் சொன்னால் ஆயிற்றா? அறுசுவையில் ஒருசுவை, அதிலும் ஒன்றில் குறைந்தாலே தாங்கவில்லையே" என்று பதிலுக்குச் சாடினாள்.

அப்படியே எழுந்து விட்டார் பகிரமர். மனைவியும், விருந்தினர்களும் பதறினர். பகிரமரோ "அவள் சொல்வதும் வாஸ்தவம் தானே! மாயை யிலிருந்து என்னை மீட்ட குருநாதரே அவள்தான். துளசிதாஸருக்கு மமதாபாய் அறிவுறுத்தியது போல் சம்சாரக்கடலில் மூழ்கிக்கிடந்த என்னை கை தூக்கிவிட்டாள்" என்றவர், யாருமறியாமல் தவம் செய்ய காட்டுக்கு ஓடி விட்டார்.

பகிரமரின் மனைவி வருந்தினாள். "சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தது போல் உழைத்து குடும்பத்தை கௌரவமாய் வாழவைத்த கணவரை, உப்பில்லை என்று சொன்னதற்காக சாடப்போய் இப்படியாயிற்றே" என்று புலம்பினாள்.

அவள் நிலை கண்டு இரங்கிய உறவினர்கள் அவரைத் தேடிப் பிடித்து கூட்டி வந்தனர். ஆனாலும் அவருக்கு இல்லறத்தில் பிடிப்பில்லை. மதம் மாறிவிட்டால் இவர்கள் தொல்லை இருக்காதென்று முஸ்லீமாக மாறிவிட்டார். ஆனால் அறுபதாண்டுகள் சைவமாயிருந்து அந்தக் கருத்துக்கள் நெஞ்சில் ஊறி இருந்ததால் அவரால் புலால் உண்ண முடியவில்லை. மற்றவர் சாப்பிடுவதையும் அவர் அருவெறுத்தார். உயிர்வதை செய்யக் கூடாதென்று போதித்தார். இதனால் அந்த மதத்திலுள்ளவர்களும் இவரிடம் ஒட்டவில்லை. அந்தண குலத்தவரோ சௌகரியம்போல் போக மனுபவிக்கவே, இவர் மதம் மாறியதாகத் தூற்றினர். இவர் நிலை திரிசங்கு சொர்க்கம் போலாயிற்று.

குரானை நன்கு படித்தார்; எப்போதும் தனிமையிலேயே காலம் கழித்தார். பரந்தாமனை பூஜிக்க அவருக்கு சொல்ல முடியாத வேட்கை. பாண்டு ரங்கனை இவர் ஜபிப்பதைப் பார்த்து விட்டதால் பக்கீர்கள் 'காபிர்' என்று இவரைத் தூஷித்தனர். அதனால் மறுபடி அந்தணராக மாறினார். முஸ்லீம்கள் இவர்மீது வழக்குத் தொடுத்தனர். வழக்கை விசாரித்த

அரசன் "எப்போது முஸ்லீமாக மாற 'சுன்னத்' செய்து கொண்டாயோ அப்போதிருந்து நீ முஸ்லீம்தான்" என்று தீர்ப்பளித்தான்.

சலன புத்திக்காரன் என்று இருமதத்தினருமே இவரை மதிக்க வில்லை. "பகவானே! உலகம் எத்தனை பெரியது... இதில் சிறிய எறும்பை ஏன் படைத்தாய்? எறும்பைச் சற்றே பருமனாய்ப் படைப்பதால் உனக்கென்ன குறைந்து போயிற்று என்று ஒரு சமயம் நினைத்தேன். இந்த எறும்பு என் கால் கட்டைவிரல் ஆரம்பத்துக்கும், முடிவுக்கும் இடையே தன் போக்கில் செல்கின்றது! என்னே உன் மகிமை! நான் நினைத்தது போல் பருமனாகப் பிறந்திருந்தால் என் பாரம் தாங்காமல் நசுங்கிச் செத்திருக்குமே" என்று தன் போக்கில் பேசிக் கொண்டிருந்த மகானின் காலில் விழுந்து கதறி அழுதார் பட்டர். தன் நிலைமையைக் கூறி "அந்தண குலத்தில் பிறந்து வளர்ந்த நான் 'சுன்னத்'செய்து கொண்டதால் மட்டும் முஸ்லீமானாகி விடுவேனா? நான்யார்?" என்று கேட்டார்.

நாகநாதர் அஷ்டமாசித்திகளும் கைவரப் பெற்ற மகான். அவர் பகிரமரை ஒரு குச்சியால் தட்ட, பட்டர் பிணமாய் சாய்ந்தார். நாகநாதர்

தன் சக்தியால் யோகத்தில் அமர்ந்து இராமத்தியானம் செய்ய பகிரமர் எழுந்து வந்தார். நாகநாதரை வணங்கினார். நாகநாதர் பகிரமரிடம் "இப்போது நீ யார்?" என்று கேட்க, பகிரமர் விழித்தார். நாகநாதர் அன்புடன் "பகிரமா, மனதை வீணாக அலைக்காதே! அழியும் இந்த உடல் மண்ணுக்கு சமானம்" என்றவர் சீடர்களிடம் ஒரு மண்பாண்டத்தில் கோதுமையைப் போட்டு கொண்டு வரச் சொன்னார். வந்ததும், அப்பானையைக் குச்சியால் அடிக்க பானை உடைந்து தானியங்கள் சிதறின. வேறொரு காலிப் பானையைக் கொண்டுவரச் சொல்லி தானியங்களை அதில் சேமிக்கச் சொன்னார்.

"பார்த்தாயா! தானியம் தான் ஆத்மா! பாண்டம் தான் உடல்! இந்த உடல் அழிக்கப்பட்டு, இப்போது புதிய உடல் கொடுக்கப்பட்டுவிட்டது. அனைவரையும் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுத்து. புத்தியை பரமனிடம் செலுத்து." இப்படிப் பலவிதமாய் உபதேசம் செய்துவிட்டு வீடு திரும்பும்படி கூறினார். பைடனிபுரத்திலோ இவரைக் கண்டதும் "அடே பாவி! குலத்தைக் கெடுக்க வந்த துரோகி! நீதான் முஸ்லீம் என்று தீர்ப்பாகிவிட்டதே! அக்ரஹாரத்திற்கு ஏன் வந்தாய்?" என்று வைதீகர்கள் திட்டினார்கள். பகிரமபட்டர் நாகநாதரிடம் தீட்சை பெற்றதைக் கூறினார். பிறகு பண்டரீபுரம் புறப்பட்டுச் சென்று சிறந்த பாகவதோத்தமராக மாறினார். சிறிது காலத்திற்குப் பிறகு அவரது அருமையைப் புரிந்து கொண்ட பைடனிபுர வாசிகள் மத துவேஷமின்றி அவரைக் கொண்டாடி அழைத்து வந்து பெருமைப்படுத்தினர்.

33. ஸ்ரீ பிரம்மசாரி

"இல்லற மல்லது நல்லறமன்று" என்பது ஆன்றோர் வாக்கு. சன்யாசிகளை ஆதரிப்பவர்களே சம்சாரிகள் தான். நானும் சம்சாரிதான். எனக்கும் மனைவி, மக்கள், வீடு எல்லாமுண்டு. பக்குவநிலையை எய்திய பிறகே துறவு நிலை ஏற்க வேண்டும். திருமணம் பாபமானதென்றால் ஸ்ரீகிருஷ்ணன் ருக்மணியை மணந்திருப்பாரா?" என வாதிட்டார் கலியாண கோஸ்வாமி.

வாலிபன் யோசித்தான். அருகிலிருந்தவர்கள் "என்ன வழக்கு?" என்று விசாரித்தனர். "எனக்கு ஊர் ஹரித்வார். தீர்த்தயாத்திரை புறப்பட்டேன். வழியில் இந்தப் பையனும் சேர்ந்து கொண்டான். வடமதுரைக்கு வந்ததும் எனக்கு நல்ல ஜுரம் வந்துவிட்டது. பல நாட்கள் எனக்கு நினைவே இல்லை. பொதுவாக நான் குடும்பப் பற்றற்றவன். இந்தப் பையனிடம் என் முகவரி எதுவும் சொல்லவில்லை. இவன் முகவரி பொறுமையாகப் பாடுபட்டு, உழைத்து, எனக்குக் கஞ்சி, மருந்து கொடுத்து காத்து வந்திருக்கிறான்".

இளைஞன் குறுக்கிட்டான். "ஐயா, இதெல்லாம் மனிதாபிமானமும், இரக்க சிந்தையும் உள்ள எவரும் செய்யும் செயல்தான். ஆறுமாதங்கள் இவருக்குச் சிச்ரூஷை செய்தேனென்பதற்காக, என்னைச் சம்சாரக் கடலில் தள்ளப் பார்க்கிறாரய்யா"

கல்யாண கோஸ்வாமி "அப்படியல்ல... என்மகள் சிறந்த குணவதி. மகாலட்சுமியை போல் இருப்பாள். அவளைப் பரிசாகத்தந்தால் தான் என்மனம் சிறிது ஆறுதல் படும். இவன் செய்ததற்கு அந்த நன்றி சிறிதுதான்" எனவும், வழிப்போக்கர்கள் திருமணத்தின் அவசியத்தைத் தாங்களும் வலியுறுத்தினர்.

பிரம்மச்சாரி, "நீங்கள் சொல்வதெல்லாம் சரி. திருமணம் என்பது தாயும், தந்தையும் சேர்ந்து உடன்படுவது. இவரோ இப்படிப் பற்றற்று அலைகிறார். இந்த ஏழெட்டு மாதமாய் இவரைத் தேடி வந்தவர் எவருமில்லை. இதிலிருந்தே இவர் குடும்பத்தினருக்கு இவர்மீதுள்ள அக்கறை புரிகிறது. இவர் சொல்கிறார் என்பதற்காக இந்த ஏழையான, அனாதைப் பையனுக்குப் பெண்ணைத்தர இவரது மனைவியும், பிள்ளைகளும் சம்மதிப்பார்களா? இவருடைய பெண் வேண்டுமானால் தந்தை வாக்கை மாறாதிருக்கலாம்" என்றான்.

கலியாண கோஸ்வாமி "வடமதுரை ஆலயத்தில் வீற்றிருக்கும் எம் பெருமான் முன் சத்தியம் செய்து தருகிறேன். அப்புறம் ஏன் தயக்கம்" என, வழிப்போக்கர்கள் 'இது நல்ல யோசனை' என்று ஒருமனதாய் சிலாகித்தனர்.

பிரம்மசாரியும் உடன்பட்டு, கலியாண கோஸ்வாமியுடன் வடமதுரை சென்றான். சன்னதிக்கு முன் ஆணையிட்டார் கலியாண கோஸ்வாமி.

உடனே இருவரும் ஹரித்வார் சென்றனர். உற்சாகமாக வீட்டிற்குள் நுழைந்தவரை அப்படி ஒருவர் வந்திருப்பதாகவே எவரும் கண்டு கொள்ளவில்லை. மனைவி கடுகடுவென்றிருந்தாள். பிள்ளைகளோ முகத்தைத் திருப்பிக் கொண்டனர்.

கலியாண கோஸ்வாமி திடுக்கிட்டார். "ஐயோ, இதென்ன விபரீதம்? இந்தப் பையன் சொன்னது நிஜமாகிவிடும் போலிருக்கிறதே" என்றெண்ணியவர், மனைவியைப் பார்த்து, "இவ்வளவு நாள் கழித்து வந்திருக்கும் கணவனிடம் இப்படித்தான் நடந்து கொள்வதா? நீங்கள் கோபப்படும்படி நான் என்ன செய்தேன்? குடித்தேனா? குடும்ப சொத்தை அழித்தேனா? கொலை செய்தேனா? திருடினேனா? சிறைக்குப் போய் வந்தேனா? பரஸ்த்ரீ பின்னால் அலைந்தேனா?" என்றார்.

அருகிலிருந்த மூத்த மகன் கோபத்தோடு "இதெல்லாம் செய்யாமல் சாதுவாயிருந்தால் மட்டும் பசி தணிந்துவிடாது. மானத்தைக் காக்க துணி ஆகாசத்திலிருந்தா குதிக்கும்? தீர்த்த யாத்திரை என்ற பெயரில் ஊரைச் சுற்றி விட்டு இஷ்டம் போல் வருவீர்களாக்கும்! உங்களை ஆலத்தி சுற்றி வரவேற்கவில்லையே என்று தாபமாக்கும்! நினைத்த போது வரவும், போகவும் இதென்ன சத்திரமா? பிள்ளைகளைப் பெறுவதோடு கடமை தீர்ந்துவிடுமா? இந்த அழகில் விருந்து வேறு அழைத்துக் கொண்டு வந்தால் மனசில் ஆனந்தம் பொங்குமென்று நினைத்தீர்களோ?" என்று பொரிந்து கொட்டினான்.

கலியாண கோஸ்வாமியின் முகம் அவமானத்தால் சிறுத்தது. "அப்பா, மெதுவாகப் பேசு. அந்தப் பையன் காதில் விழுந்தால் வேதனைப் படுவான். நான் ஆறுமாதமாய் காய்ச்சலில் விழுந்து விட்டேன். இந்தப் பையன் மட்டும் மருந்தும், கஞ்சியும் கொடுத்து காப்பாற்றி சிச்ருஷை செய்திருக்காவிடில் இறந்திருப்பேன். இதற்குக் கைம்மாறாக நமது பெண்ணை இவனுக்குக் கொடுக்கலாமென கூட்டி வந்திருக்கிறேன்" எனவும்,

மனைவி சீறினாள். "பேஷ்! குதிரை கீழே தள்ளியதுமல்லாமல் குழியையும் பறித்ததாம்! நானொருத்தி உங்களைக் கட்டிக் கொண்டு தவிக்கிறது போதாதென்று என் பெண்ணுக்கும் அதே கதியா? இதற்கு நான் சம்மதிப்பேனென்று எப்படி நினைத்தீர்கள்?" என்று கத்தினாள்.

"ஏன் சத்தம் போடுகிறாய்? பையன் மிக நல்லவன். ஒரு கெட்ட பழக்கம் கிடையாது. பணிவுள்ளவன். பெரியவர்களிடம் மரியாதையாக நடப்பவன். பக்திமான். யாரிடமும் கைநீட்டாது உழைத்துப் பிழைக்கும் வலுவுள்ளவன். திடகாத்திரமான அழகன்; இளைஞன். வேறென்ன வேண்டும் ஒரு பெண்ணுக்கு?" என்றார் கலியாணகோஸ்வாமி.

"குலம் கோத்திரம் தெரிய வேண்டாமா? சொத்து சுகம்வேண்டாமா? எவனோ அனாதையை இழுத்து வந்து வம்பு செய்கிறீர்களே?" என்று எரிச்சலுடன் கேட்டாள். "வீண் பிடிவாதம் பிடிக்காதே! தெய்வசன்னதியில் வாக்குக் கொடுத்திருக்கிறேன்".

"வாக்குக் கொடுத்தால் இன்னொரு கலியாணம் செய்து கொண்டு பெண்ணைப் பெற்றுக் கொடுங்கள். இங்கே யாரும் குறுக்கே நிற்க வில்லை" சொல்லீட்டிகளால் தாக்குண்டார் கலியாண கோஸ்வாமி. "முடிவாக உன் பதில் தான் என்ன?"

"விஷத்தைக் கொடுத்துக் கொன்றாலும் கொல்வேனே தவிர, சிறுகச்சிறுக சித்திரவதைப்படும் என்போன்ற வாழ்க்கை அவளுக்கு வேண்டாம்"



இத்தனையும் வாசல் திண்ணையில் அமர்ந்திருந்த பிரம்மச்சாரியின் காதில் விழுந்தது. என்ன தான் நடக்கிறது பார்ப்போமென, அவனும் பொறுமையாய் உட்கார்ந்திருந்தான். கலியாண கோஸ்வாமி வாசலுக்கு வந்தார்.

அவருடைய துயரம் நிரம்பிய முகத்தைக் கண்டு பிரம்மச்சாரியே சமாதானம் சொன்னான். ஆனாலும் கலியாண கோஸ்வாமி திருப்தியுறாமல் பிரம்மச்சாரியை அழைத்துக் கொண்டு அரசனிடம் சென்றார்.

அரசன் வழக்கை நிதானமாக விசாரித்தான். பிறகு "தெய்வசாட்சி யன்றி வேறு சாட்சியில்லை என்கிறீர்கள்! உங்கள் பக்தி மெய்யானால் தெய்வமே இங்கு வந்து சாட்சி சொல்லட்டும். சாட்சி இல்லாமல் நான் எப்படி தீர்ப்பு வழங்குவது?" என்று சொல்லிவிட்டான்.

பிரம்மசாரி, கலியாணகோஸ்வாமியிடம் "நீங்கள் அலைய வேண்டாம். நானே சென்று பகவானைப் பிரார்த்திக்கிறேன்" என்று சொல்லிவிட்டு வடமதுரை சென்றான். சன்னதி முன் கண்ணனை நெஞ்சில் நிறுத்தி, தியானத்தில் அமர்ந்தான். ஈ, எறும்பு, மொய்த்தது. போகிற வருகிறவர்களின் கூச்சல், இடறல். எதுவும் அவனை அசைக்கவில்லை. அர்த்த ஜாமம் முடிந்து கோவிலும் பூட்டியாயிற்று. 'ஜல்ஜல்' என்ற சதங்கையொலி 'அன்ப'என்ற இனிய குரல். பிரம்மச்சாரி கண்விழித்தான். எதிரே மயில் பீலி துலங்க, புன்சிரிப்புடன் கண்ணன் நின்றிருந்தான்.

பிரம்மசாரி சாஷ்டாங்கமாய் அவர் காலில் விழுந்தவன், "நடந்ததை நான் உனக்கு விளக்க வேண்டாம். எல்லாம் அறிந்தவன் நீ. திருமண இச்சையே இல்லாதிருந்தவனை கலியாணகோஸ்வாமியின் மூலம் இச்சைப்பட வைத்தவனும் நீ. மனதால் திருமண ஆசை கொண்டதால் நான் இப்போது பிரம்மசாரியும் அல்ல. வேறு பெண்ணை மணந்து கொண்டால் இல்லறம் எப்படியாகுமோ என்ற அச்சம். கலியாண கோஸ்வாமியின் பெண்ணை எனக்குத் திருமண முடித்து வைக்க வேண்டியது உமது பொறுப்பு. நீர் வந்து சாட்சி சொன்னால் மன்னன் அனுகூலமாய் தீர்ப்பு வழங்குவார்" என்று வேண்டினான்.

கண்ணன் புன்னகையுடன் "பிரம்மசாரி. உன் வார்த்தைக்கு நான் கட்டுப்பட்டு உன் பின்னால் வருகிறேன். எக்காரணம் கொண்டும்

திரும்பிப் பார்க்கக் கூடாது. மீறினால் அங்கேயே சிலையாகி விடுவேன். சாட்சி சொல்ல அரசவைக்கு வரமாட்டேன்" என்றார்.

பிரம்மச்சாரி உற்சாகத்துடன் புறப்பட்டான். கண்ணனின் தண்டை ஒலியும் பின்னாலே வந்தது. ஆயிற்று. ஹரித்துவாரை அடைய இன்னும் மூன்று கோசம்தான் பாக்கி.

"ஆ! கண்ணன் வந்து சாட்சி சொன்னதும் ஊரார் நம்மை எப்படிப் போற்றுவர்? அரசன் சாதகமான தீர்ப்பை வழங்கியதும் பெண்ணின் தாயும், சகோதரர்களும் என்ன செய்ய முடியும்" இப்படி பிரம்மசாரியின் மனம் குதூகலித்தது.

திகைத்தான் பிரம்மசாரி. "இதென்ன... சலங்கை ஒலி நின்று விட்டதே. மாயக் கண்ணன் நின்று விட்டாரா? எங்காவது ஒளிந்து கொண்டிருக்கிறாரோ?" பதறிப் போய் திரும்பிப் பார்த்தால்.... கண்ணன் புன்சிரிப்புடன் நின்று கொண்டிருந்தார்.

"ஸ்வாமீ, இதென்ன சோதனை?" எனவும், "அப்பா! மனதில் பக்தியுடன் நீ நடந்தபோது ஓசை கேட்டது. வெற்றித்தெம்பும், சுயபலமும் மிஞ்சியதும் ஓசை நின்றுவிட்டது. இனி நான் ஒன்றும் செய்வதற்கில்லை. நீ போய் அரசனிடம் சொல்லி இங்கே அழைத்து வா" என்றார்.

பிரம்மசாரி அரண்மனைக்கு ஓடினான். அரசனிடம் நடந்தவைகளை எடுத்துரைத்தான்.

அரசன் உடனே கலியாண கோஸ்வாமியின் வீட்டிற்கு ஆளனுப் பினான். கலியாண கோஸ்வாமியின் மனைவியும், மகளும், பிள்ளைகளும் விரைந்து அரண்மனைக்கு வந்தனர். காற்றென செய்தி பரவ, ஹரித்வார் நகரமே அரசரைப் பின் தொடர்ந்தது. கண்ணன் நின்ற இடத்திற்கு பிரம்மசாரி முன் நடந்தான். ஆனால் அந்தோ... கண்ணன் சிலையாக நின்றார்.

"நான் வரும்போது உயிர் கொண்டு பேசிய மாயன் இப்போது விக்ரகமாகி விட்டாரே" என்று பிரம்மசாரி மயங்க, அரசன் அவனைத் தேற்றி, "நான் வடமதுரை சென்றிருக்கிறேன். அங்குள்ள விக்ரகம் தான் இது. உனக்காக பகவான் கால் தேய நடந்திருக்கிறார் என்றால் உன் பக்கம் நியாயம் இருக்கிறது என்று பொருள்" என்று கூறிவிட்டு, கலியாணகோ ஸ்வாமியின் மனைவி பக்கம் திரும்பி, "அம்மா, இனி மறுப்பேதும் சொல்லாமல் உங்கள் மகளை இவருக்குத் திருமணம் செய்து கொடுக்க வேண்டும். குணத்தை வைத்துத்தான் குலம் நிர்ணயமாகிறது. சத்தியமும், பக்தியும் பொருந்தி நின்ற இவனுக்கு அரண்மனையிலேயே நல்ல உத்யோகம் தருகின்றேன். அப்புறம் என்ன ஆட்சேபனை" என, அந்த அம்மாள் மகிழ்ச்சியுடன் சம்மதித்தாள்.

அரசன் உத்தரவுப்படி அங்கேயே பந்தல் போட்டு பிரம்மசாரிக்கும், கலியாண கோஸ்வாமிய்யின் மகளுக்கும், அரசன் செலவில் விமரிசையாய் திருமணம் நடந்தது. பகவானுக்கு அழகிய ஆலயம் அமைத்து பூஜை செய்யும் பொறுப்பை கலியாண கோஸ்வாமியிடம் ஒப்படைத்தான் அரசன்.

வடமதுரை ஆலயத்திற்கும் அழகிய புதிய விக்ரகமொன்று செய்து ஒரு நல்ல நாளில் பிரதிஷ்டை செய்தான். பிரம்மசாரி தன் மனைவியுடன் பாண்டுரங்கனை வழிபட்டு இனிய இல்லறம் நடத்தினான்.

34. துவாரகா ராமதாஸர்

"அப்பனே, பசி காதை அடைக்கின்றது. கண் இருட்டிக் கொண்டு வருகின்றது" என்று அந்தக் குருட்டுக் கிழவி புலம்பினான். அவளின் கோலைப் பிடித்துக் கொண்டு வந்த பேரன் "பாட்டி, அதோ துவாரகை கோயில் தெரிகிறது. இன்னும் கொஞ்ச தூரம் தான். இன்றைக்குத் துவாதசி ஆயிற்றே. வயிறு நிறையச் சாப்பாடு கிடைக்கும்" என்றான். "இருபத்தஞ்சு வருஷமா அந்த மகான் போட்டுட்டு வரார். அவர் சாப்பாட்டைச் சாப்பிட்டாலாவது ஞானம் கிடைக்காதான்னு பார்க்கறேன்" என்றாள் கிழவி. "அடேயப்பா... இருபத்தஞ்சு வருஷமா! அப்போ நான் பிறக்கிறதுக்கு முன்னேயிருந்து, இல்லியா?"

"ஆமாண்டா ராஜா... அப்போவெல்லாம் எனக்குக் கண் நல்லாத் தெரிஞ்சது. ஆடிமாச ஏகாதசிதோறும் துவாரகைக்கு வந்துடுவார். துவாதசி அன்னிக்கு ஏழைகளுக்கு அன்னதானம் செய்வார்"

"அப்போ அவர் பெரிய பணக்காரரா?"

"இல்லேப்பா... ரொம்ப ரொம்ப ஏழை... மனசுதான் பெரிசு. வீட்டிலே துளசி மாடம் கட்ட வகையில்லாம பட்டுப்போன மாமரத்து அடியைக் குடைஞ்சு அதுக்குள்ளே துளசி வைச்சு பூஜை பண்றார். அந்த துளசியைத் தான் பூஜைக்கு இங்கே பறிச்சுண்டு வரார்"

"அவர் வீடு எங்கே இருக்கு? நீ போய் பார்த்திருக்கியா?" பேரன் ஆவலாகக் கேட்டான். "ஒரு தடவை போயிருக்கேன். நூற்றி நாற்பது மைல்லே டாங்கோர் என்கிற கிராமம். வருஷத்துலே ஒரு தடவை இங்கே வந்தாலும், மற்ற இருபத்து மூணு ஏகாதசிக்கும் வீட்டிலே பஜனை, பூஜை; துவாதசி சாப்பாடு எல்லாம் உண்டு. தினமும் ராத்திரி ஜனங்களுக்கு புராணக் கதைகள் சொல்லுவார்.

உஞ்ச விருத்தி எடுத்து சாப்பிட்டாலும் தேவைக்கு மேலே ஒரு வீட்டிலே செம்பை நீட்டமாட்டார். நம்ம தெருவுக்கு இன்னிக்கு வரலியேன்னு எல்லாரும் ஏங்குவான்னா பார்த்துக்கயேன்" பாட்டிக்கு மூச்சிறைத்தது.

"பாட்டி, இங்கேயும் ராத்திரி கதை சொல்வாரா?"

"ஓ, இன்னிக்கு கதை கேட்டுட்டே போவோம்"

"அதோ, பஜனைச்சப்தம் கேட்கிறதே" பாட்டியும், பேரனும் விரைந்தனர்.

"கண்ணா, மணி வண்ணா... இந்த தடவை ஆடிமாத ஏகாதசிக்கு என்னால் வரமுடியவில்லை. உடம்பில் நரம்பு தளர்ந்து பலகீனமாகி விட்டது. ஆனாலும் உன்னிடம் சொல்லிக் கொள்ளாமல் நிற்க மனமில்லை. இதுதான் நான் உன்னைப் பார்ப்பது கடைசி தடவையோ? உன்னை தரிசிக்காமலும் வாழ்நாளைக் கழிக்க வேண்டுமா?" என்று விம்மி விம்மி அழுதார் ராமதாஸர். பித்தனைப் போல் புலம்பினார். அவர்தான் ஏகாதசி அன்று பஜனை செய்தபடி, யாத்திரையாக துவாரகை வந்து, ஐயனை தரிசித்து, அன்னதானம் செய்த மகான். துவாரகா ராமதாஸர் என்று ஜனங்களால் அன்புடன் விளிக்கப்பட்டவர்.

உச்சிப் பொழுது. சன்னதி மூடி இருந்தது. நந்தவனத்து மூலையில் ராமதாஸர் முன் தோன்றினார் பகவான். "தாஸா, உன் அன்பையும், இயலாமையும் நான் அறிவேன். உன் பக்திக்கு நான் கட்டுப்பட்டவன். உன்னோடு என்னை எடுத்துச் செல்" என்றார்.

தாஸர் விழித்தார். ஆனந்தத்தில் திக்கு முக்காட, "உங்களை எடுத்துச் செல்வதா? எப்படி?" என்று தடுமாறினார். "இன்றிரவு ரதம் வரும். அதில் என்னை ஏற்றிச் செல்" என்றார் குறும்புப் புன்னகையுடன். ராமதாஸர் கையைப் பிசைந்தபடி "அர்ச்சகர்கள் விக்ரகத்தைக் காணாமல் என்னை கட்டி வைத்து அடிப்பார்களே?" என்று கலங்க, "அடிக்கமாட்டார்கள்" என்றார் இறைவன். "தேடிக் கொண்டு வந்து விட்டால்?" மறுபடி ஒரு சந்தேகக் கேள்வியைத் தொடுத்தார். "இதோ பார்... உனக்கு விருப்பமானால் இரவு என்னை எடுத்துச் செல். இல்லையேல் ஊருக்குப் போ. சும்மா புலம்பாதே" என்ற பகவான் மறைந்து விட்டார். தாஸரின் பாடு தர்மசங்கடமாகி விட்டது. 'கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை கதை தான். இரவு. அர்ச்சகர்கள் சன்னதியைப் பூட்டிக் கொண்டு போயாயிற்று. தாசர் இருந்தது அவர்கள் கண்ணுக்குத் தெரிய வில்லையே? எல்லாம் கண்ணன் அருள் என்று தியானத்தில் இருந்தார் தாஸர். தேர் வந்தது. கண்ணனும் பீதாம்பரம் புரள நடந்து வந்து ஏறினார். பக்தரையும் கைலாகு கொடுத்து உட்கார்த்திக் கொண்டார். தேர் தாஸரின் வீட்டு வாசலில் அவர்களை இறக்கி விட்டு மறைந்து விட்டது.

இறைவனை அழைத்து கொண்டு வீட்டிற்குள் சென்ற தாஸர், கண் இமைக்காமல் இறைவனை அணுப்பொழுதும் பிரியாமல் இருந்தார். விடிந்தது. அர்ச்சகர்கள் நீராடி இறைவனைப் பாடியபடியே ஆலயக் கதவுகளைத் திறந்தனர். மணிகள் ஒலிக்க கர்ப்பக் கிரக வாயில்கள் திறக்கப்பட்டன. காத்திருந்த சேவார்த்திகள் திகைத்தனர். அர்ச்சகர்கள் பதறினர். கோவிலில் ஸ்வாமி இல்லை! "நேற்று இரவு பூட்டும்போது இருந்த விக்ரகம் எப்படி மாயமாய் போகும்? பூட்டிய கதவுகள் பூட்டியபடியே இருக்க இதென்ன அக்ரமம்?" என்று கொதித்தார் ஒரு அர்ச்சகர்.

"நேற்று அந்த ராமதாசர்தான் சன்னதியில் புலம்பிக் கொண்டிருந்தார். வயசாகிவிட்டதே! வரமுடியவில்லையே என்று... ஒரு வேளை எடுத்துச் சென்றிருப்பாரோ?" சந்தேகத்தைக் கிளப்பினார் இன்னொருவர். "ஏன் ஐயம்? புறப்படுங்கள். போய் பார்த்து விடுவோம்" பரபரத்தார் ஒரு பக்தர்.

"அரசருக்குத் தெரிவிக்க வேண்டாமா?" என்று ஒருவர் தயங்க, "சேச்சே! தாசர் பக்தர்... விற்பதற்காக களவாடி இருக்கமாட்டார். பக்திப்பித்து. அரசர் தண்டித்தால் அந்தப்பாவம் நம்மைத்தான் வந்து

சேரும். அதெல்லாம் வேண்டாம்" என்றார் தர்மகர்த்தா. இதை மற்றையோரும் ஆமோதித்தனர். எல்லோருமாகப் புறப்பட்டு டாங்கேர் வந்து சேர்ந்தனர்.

இவர்கள் வரும் சப்தம் தாஸருக்குக் கேட்டது. "ஐயோ, கண்கொடுத்து கண் பறித்த கதையாகிவிடுமே..." என்று கலங்கியவர், கண்ணன் விக்ரகத்தை கயிற்றில் கட்டி, கிணற்றில் இறங்கிவிட்டார். "கண்ணா, என்னை மன்னித்தருளும்! கூர்மாவதாரம் எடுத்தவனே! காளிங்கனை வதைக்க மடுவுக்குள் சென்றவனே! அலைகடல் துயின்றோனே! மச்சாவதாரா, மாதவா அவர்கள் சென்றதும் நானே இறங்கி உம்மை வெளியே எடுக்கிறேன்" என்று மானசீகமாக, இறைவனுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். அர்ச்சகர்களும், துவாரகாவாசிகளும் வந்தனர். இவரிடம் பலவிதமாய் கேட்டுப்பார்த்தனர். இவர்தான் யோக நிலையில் இருந்தாரே! வீடு முழுவதும் அலசினர். எங்கும் காணோம்! கிணற்றுக்குள்ளும் தேடி விடுவோம் என்று ஒருவர் யோசனை சொல்ல, நீச்சல் தெரிந்த இருவர் கிணற்றுக்குள் இறங்கினர்.

அப்புறம் என்ன! ஆனந்த கோஷம்தான்! விக்ரகத்தை வெளியி லெடுத்துத் துடைத்துத் தயாராய் கொண்டு வந்திருந்த தேரில் ஏற்றினர். இராமதாஸர் "என்னை நிர்க்கதியாய் விட்டுப் போகத்தான் உடன் வந்தீரோ?" என்றழுதார். இறைவன் அவருக்கு மட்டும் கேட்கும்படியாக "என் எடைக்குப் பொன் தருவதாகச் சொல். பணத்தாசையால் என்னை விட்டு விடுவர்" என்றார்.

"அவ்வளவு பொன்னுக்கு நான் எங்கே போவேன்? என்னை வைத்து விளையாட உமக்கு இத்தனை ஆசையா?" என்று தேம்பினார் தாசர். "அன்ப, கண்ணீரைத்துடை. அன்று ருக்மணி அன்புடன் வைத்த ஒரு துளசி தளத்துக்கு நான் சமமாகவில்லையா? உன் மனைவி மூக்கி லிருக்கும் சிறு நத்துக்கு நான் சமமாவேன். என்னை உரிமையோடு உன் இல்லத்தில் வைத்திருக்க, உன் பக்தியை வெளிப்படுத்த, இது ஒரு சிறு நாடகம்" என்றார் இறைவன். தாசர் பரவசமடைந்தார். "ஜெயஹரி கிருஷ்ணா" என்று ஆடிப் பாடினார். "என்னிடம் உனக்கு இத்தனை அன்பா? இப்பிறவியில் எனக்கு வேறென்ன வேண்டும்" என்று உருகினார்.

இறைவன் பேசியது ஜனங்களுக்குக் கேட்கவில்லை. தாசர் பேசுவதைக் கேட்டு "பாவம்! பக்தி முற்றிப் பைத்தியமாகிவிட்டது" என்று பரிதாபப்பட்டனர். தாஸர் அர்ச்சகரை வழிமறித்து "பகவான் எடைக்குப் பொன் தந்தால் கொடுத்து விடுகிறீர்களா?" என்று கேட்கவும், கூடியிருந்தவர்கள் 'கொல்'லென்று நகைத்தனர். "உமது பசிக்கே ஊரார் படியளக்கின்றனர். பகவான் எடைக்குத் தங்கம் தரப்போகிறீரா நீர்? என்ன வல்லடி வம்பய்யா இது" என்று கேலி செய்தார் அர்ச்சகர்.

"அதைப்பற்றி உமக்கென்ன? பொன் தந்தால் கொடுப்பீரா?" என்று தாசர் கேட்க, அர்ச்சகர்கள், "பகவான் எடைக்குத் தங்கமா? இவனால் முடியாது என்பது இருக்கட்டும். இவனைத் திருப்தி பண்ண சம்மதிப்போம்" என்று பேசி ஊரார் முன் ஒப்புக் கொண்டனர். தராசின் ஒரு பக்கம் கண்ணன் விக்ரகம் வைக்கப்பட்டது.

"தாசரே, பொன்னைக் கொண்டு வந்து கொட்டும்" என்று நையாண்டி செய்தார் ஒரு அர்ச்சகர். தாசர் உள்ளே சென்று மனைவியின் ஒரே நகையான சிறு பொன் மூக்குத்தியைக் கொண்டுவந்து இன்னொரு



தட்டில் வைத்தார். "என்னய்யா... இந்த அழுக்கு மூக்குத்திக்கு எங்கள் பகவான் சமமா? இப்படியா அவமானப்படுத்துவது?" என்று அர்ச்சகர்கள் கோபிக்க, தாசர், "பாண்டுரங்கா, உன் வாக்கும் பொய்த்துப் போகுமோ" என்று பிரார்த்திக்க, இருதட்டுகளும் சமமாயின. அனைவரும் இது கண்டு திடுக்கிட்டனர்.

"பகவானே தாசருக்கு அனுகூலமாயிருக்கும் போது மனிதர்கள் அதைத் தடுக்க முடியுமா?" என்று கூறிய அர்ச்சகர்கள், விக்ரகத்தை தாசரிடமே கொடுத்துவிட்டு, அவரை வணங்கி விடைபெற்றனர். தாசரும், அவர் மனைவியும் இறுதிவரை அந்த கிருஷ்ணவிக்ரகத்தை பக்தியுடன் பூஜித்து பரமபதமடைந்தனர்.

35. ஸ்ரீ லதீப்ஷா

மகம்மதிய குலத்தில் பிறந்தவர் லதீப்ஷா. ஒழுக்க நெறி மிகுந்த அப்பெரியார் குரானை நன்கு படித்தார். அதோடு பாகவதம், ராமாயணம், மகாபாரதம், பகவத் கீதை போன்ற பிற நூல்களையும் ஆராய்ந்தார். படிக்கப் படிக்க அவருக்கு தெவிட்டாத இன்பம் உண்டாயிற்று.

வடமொழியில் பாண்டித்யம் பெற்ற ஒரு வைணவப் பெரியாரிடம் சில கடினமான வேதாந்த நூல்களுக்கு விளக்கம் சொல்லும்படி கேட்டார். அவரோ "நீங்கள் வைணவராக மாறினால் தான் சொல்லுவேன்" என்று தீர்மானமாக சொல்லிவிட்டார். உடலுக்குத் தானே சமயமாற்றம்? ஆத்மா சுத்தி பெற, ஞானம் பெற எந்த மதத்தவனாய் இருந்தால் என்ன என்று லதீப்ஷா வைஷ்ணவனாக சம்மதித்தார்.

மதமாற்றம் நடந்தது. பூணூல், திருமண் துலங்க வைஷ்ணவனாக மாறினார் லதீப்ஷா. வேத வேதாந்தங்களை நன்கு கற்று அதில் ஊறித் திளைத்தார். எத்தனை நூல்கள், எத்தனை தத்துவங்கள் படிக்கப்படிக்க அவருக்கு பிரமிப்பாயிருந்தது. இகலோக சிந்தனையே இல்லை. புராணங்கள் கூறியபடி மூன்று வேளை நீராடி, காயத்ரி ஜபித்து, ஸ்வாமிக்கு அபிஷேக ஆராதனை செய்து, அதிதி உபசாரம் செய்து...

அவருக்கு காலம் ஓடியதே தெரியவில்லை. ஏகாதசி பஜனை, ராதா கலியாண மகோற்சவம் இப்படி அவர் இல்லம் சதா அமர்க்களப்பட்டுக் கொண்டிருக்கும்.

ஒரு நாள் ஒரு பழைய நண்பர் அவரைக் காண வந்தார். லதீப்ஷாவின் நிலையைக் கண்டார். அவர் தீவிர மதப்பற்றுடையவர். சினம் தலைக்கேற நவாபிடம் ஓடினார். நவாபை வணங்கி "சுல்தான், லதீப்ஷா நாஸ்திகனாகி விட்டான். காபிர்களோடு சேர்ந்து பஜனை என்ற பெயரில் கூத்தடிக்கிறான். இதனால் நமது மதத்துக்கே அவமானம். இவனை தண்டிக்காது விட்டீர்களானால் பலர் இம் மாதிரி கிளம்பக் கூடும். இஸ்லாமிய மதமும் நசித்து விடும்" என்று போதித்தான்.

அவ்வளவு போதாதா! நவாப் கொதித்தெழுந்து "லதீப்ஷாவின் வீடுவாசல் சொத்துக்களைக் கைப்பற்றி அவனையும் இங்கு இழுத்து வாருங்கள். சொத்துக்கள் போன பிறகு எப்படி அன்னதானமும், பஜனையும் நடத்துகிருனென்று பார்ப்போம்" என்று ஆணையிட்டான்.

சேவகர்கள் விரைந்து லதீப்ஷாவின் வீட்டை அடைந்தனர். அப்போது அங்கே மும்முரமாக பஜனை நடந்து கொண்டிருந்தது. "எந்த தெய்வமாயி ருந்தாலென்ன? பிரார்த்தனையில் ஈடுபட்டிருக்கும் போது கலகம் விளைவித்தால் நமது குடும்பத்தவருக்கு துன்பம் நேரலாம். பிரார்த்தனை முடிந்த பிறகு நவாபின் உத்தரவைக் கூறி கைது செய்யலாம்" என்று கலந்து பேசினர்.

மௌனமாக ஒரு ஓரமாக உட்கார்ந்தனர். வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் மனதை பஜனை ஈர்த்தது. மெய்மறந்து லயித் திருந்தனர். நவாப் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான். சேவகர்கள் லதீப்ஷாவை அழைத்து வராதது கண்டு தானே புறப்பட்டான். தெருக் கோடியிலேயே ஆட்டமும் பாட்டும் காதைத் துளைத்தன. லதீப்ஷாவின் வீட்டை அடைந்தான்.

முன் கூடம் முழுவதும் பாகவதக் கதைகள் சித்திரமாக தீட்டப் பட்டிருந்தன. சித்திரத்தின் நேர்த்தி அவன் நெஞ்சை பிரமிக்கச் செய்தது. **கண்ணன் பிறப்பு, பாலலீலைகள், கம்சவதம், சிசுபால வதம், கீதோபதேசம், ராஸலீலை, காளிங்கமர்த்தனம், கோவர்த்தன கிரி இப்படி ஒவ்வொன்றாய் ரசித்தபடி வந்தான்.**

அதற்குள் பூஜை முடிந்தது. சேவகர்கள் சுய உணர்வுபெற்று நவாபைக் கண்டதும் அஞ்சி ஒடுங்கி நின்றனர். நவாபைக் கண்ட லதீப்ஷாவும் எழுந்து வந்தார். 'என்ன நடக்கப் போகிறதோ' என்று அனைவரும் அச்சமும், ஆவலும் கொண்டு காத்திருந்தனர். நவாபுக்கும் கோபம் இப்போது ஆறி இருந்தது. ஒரு ஓவியத்தைக் காட்டி "இது என்ன?" என்று கேட்டார். "ராதாபிராட்டி கண்ணனுக்குத் தாம்பூலம் தருகிறார்" என்று விளக்கினார் லதீப்ஷா.

"நான் வந்ததிலிருந்து நீட்டிக் கொண்டிருக்கிறார். கண்ணன் ஏன் வாங்கிக் கொள்ளவில்லை?" லதீப்ஷாவின் பக்தியைக் கேலி செய்வதற் காகவே நவாப் எழுப்பிய கேள்வி இது. "வேண்டும் போது வாங்கிக் கொள்வார்" லதீப்ஷா விட்டுக் கொடுக்காமல் பதில் சொன்னார். "பொய். தெய்வத்துக்கு உருவம் கிடையாது. இதெல்லாம் கட்டுக்கதை. லதீப்ஷா! உன் பக்தி போலி என்று நிரூபிக்கவே வந்தேன். கண்ணன் அதை வாங்கிக் கொண்டால் நான் என் உத்தரவை மாற்றிக் கொண்டு அரண்மனை போய் சேருவேன்" என்றான் நவாப்.

லதீப்ஷா கண்ணை மூடிக் கொண்டு பிரார்த்தித்தார். 'ஆ, ஆ' என்ற குரல் கேட்டுக் கண் திறந்தவர் பிரமித்துப் போனார். படத்திலிருந்த கண்ணனின் கை நீண்டு ராதையின் வெற்றிலைச் சுருளை வாங்கி மென்றது. கடைவாயில் தாம்பூலச் சாறு. சங்கு சக்கரதாரியின் முகத்தில் குறும்புச் சிரிப்பு.

நவாப் படத்தினடியில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தான். மீண்டும் ஓவியம் ஓவியமாகவே நின்றது. ஒருசிறு மாற்றம். இப்போது ஓவியத்தில் கண்ணனின் வாயில் தாம்பூலச் சிவப்பு. லதீப்ஷாவை வணங்கிய நவாப் "தன் குறுகிய புத்திக்காகவும், மதவெறிக்காகவும்" மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விடை பெற்றான். இதன் பின் மன்னரும் லதீப்ஷாவின் பஜனைகளில் கலந்து கொண்டு கண்ணனை வழிபட்டு வந்தார்.

36. ரோகி தாஸர் (ரவிதாஸர்)

"ஆ, ஐயோ, அம்மா... பகவானே!"

"தாத்தா... வெயில் நெருப்புப் பொறி பறக்கிறது. எங்கே கிளம்பினீர்? வெயில் தாழ வரக் கூடாதா?" என்றான் அந்த அனுதாபமுள்ள வழிப்போக்கன். "அப்பா, நானோர் அனாதை... பண்டரீபுரம் சென்று தங்கிக் கொள்ளலாம் என்று புறப்பட்டேன். உஞ்ச விருந்தி பிராம்மணன் வெயில், மழை பார்த்தால் நடக்குமா?"

"அப்படியா! ஒரு செருப்புப் போட்டுக் கொண்டு வருவது தானே?" கிழவர் சிரித்தார். "நான் சோற்றுக்கே வழியில்லை என்கிறேன். நீ பாதத்துக்குப் பாதுகாப்பு வேண்டாமா என்கிறாய்!"

வழிப்போக்கன் அனுதாபத்துடன் "தாத்தா, இப்படி கங்கையோடு போனால் அதோ தெரிகிறதே அந்த கிராமத்தில் போய் சக்கிலியன் ரோகிதாசரென்று கேளுங்கள். அடையாளம் சொல்வார்கள். அவரிடம் அளவு கொடுங்கள். உடனே தைத்துத் தருவார். தினமும் ஒருஜோடி செருப்பு பக்தர்களுக்குத்தானம் செய்வது அவரது லட்சியம். பிறப்பால்

சக்கிலியரே தவிர பெரிய பக்திமான். நிறையப் படித்தவர். குலத்தொழிலை மதிப்பவர். பகவானே, இவர் தோட்டத்திற்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருக்கும் போது சாளக்கிராமமாகத் தோன்றி தன்னை பூஜை செய்யும்படி அசரீரியாகச் சொன்னார் என்றால் அவர் பக்தியின் சிறப்புக்கு வேறென்ன உதாரணம் வேண்டும்?'' என்றான்.

''ஆ! அப்படியா? இப்படிப்பட்ட உத்தமரைத் தரிசித்தாலே பாபம் போகுமே'' என்றபடி கிராமத்தை நோக்கி விரைந்தார் கிழவர். ''நீ அழகிய பசுங்குன்றானால் நான் அதில் ஆடிக்களிக்கும் மயில். நீர் குளிர்மதி என்றால். உன் கதிர்களுக்கு ஏங்கும் சகோரப் பறவை நான். நீ தீபஒளி என்றால் நான் அந்த தீபத்தின் திரி. நீ அன்பே வடிவானால் – நான் அதில் ஒரு திவலை'' என்ற பொருள் பட கவிதை இயற்றிப் பாடிக் கொண்டே வேலை செய்து கொண்டிருந்தார் ரோகிதாஸர்.

உஞ்ச விருத்தி பிராம்மணர் ''இங்கே ரோகிதாசன் என்பது...'' என்று முடிப்பதற்குள், ''நான் தான்... ஸ்வாமி... என்ன வேண்டும்....'' என்று கேட்டவர் அவர் பாதத்தைப் பார்த்தவுடன் ''அடடா, நல்ல வெயில்... வெறுங் காலோடு வந்திருக்கிறீர்கள்! சற்று முன்தான் தைத்தேன். சரியாயிருக்கிறதா பாருங்கள்'' என்று ஒரு புது ஜோடி செருப்பை எடுத்து அவர் பாதத்தடியில் வைத்தார். என்ன ஆச்சரியம்! அந்தணருக்கு அந்தச் செருப்பு கனகச்சிதமாய் பொருந்தியது. நன்றி பொங்க ''அப்பா, உனக்கு நான் என்ன செய்யப் போகிறேன்'' எனத் தயங்க,

சுவாமி, கங்கையில் போய் ''ரோகிதாசன் உனக்குத் தாம்பூலம் கொடுத்தனுப்பி இருக்கிறான்'' என்று உரக்கக் கூறுங்கள். கங்கா மாதா வாங்கிக் கொள்வாள். வீசி எறிந்து விடாதீர்கள். தண்ணீருக்கருகில் போய் கூப்பிடுங்கள்'' என, ''உன் தாம்பூலத்தை கங்கா மாதா நேரில் வாங்கிக் கொள்வாளா?'' என்று அதிசயித்தார். ரோகிதாசன் சொன்ன படியே செய்வதாக வாக்களித்து, தாம்பூலத்தை வாங்கிக் கொண்டு சென்றார்.

மறுநாள் நீராடி, பூஜை முடித்தபின், ''கங்கா தேவி, ரோகி தாசனின் தாம்பூலத்தைப் பெற்றுக் கொள்கிறாயா?'' என்று தாம்பூலத்தை நீரில் விட, ஒரு கை நீண்டு அதை எடுத்துக் கொண்டு பின் மறைந்தது. அந்தணர் திகைப்புடன் நிற்க, மீண்டும் ஒரு கரம் ஒரு வைரக் கங்கணத்துடன்

நீண்டது. "அந்தணரே, 'தாம்பூலம் தந்த ரோகிதாசனுக்கு கங்கா மாதாவின் பரிசு' என்று சொல்லி இந்தக் கங்கணத்தை அவனிடம் கொடுத்து விடுங்கள்" என்ற குரலும் கேட்டது. அந்தணர் கங்கணத்தைப் பெற்றுக் கொண்டதும் கங்கையின் நீண்ட கை மறைந்து விட்டது. அந்தணருக்கு கனவா, நனவா என்றே புரியவில்லை. நனவுதான் என்பதை கையிலிருந்த கங்கணம் உணர்த்தியது. ஆசை யாரை விட்டது?

ரோகிதாசன் தாம்பூலம் கொடுக்கச் சொன்னானே தவிர, கங்காதேவி கங்கணம் தருவாள் என்று சொல்லவில்லை. பரிசு தருவாள் என்பது அவனுக்கே தெரியாது. அப்படி இருக்கும் போது இதை அவனிடம் கொடுப்பானேன்? பகவான் இரும்பைத் தங்கமாக்கும் பரிசவேதிக் கல்லைக் கொடுத்த போது வேண்டாமென்றிருக்கிறான். ரோகி தாசனுக்குத் தங்கத்தின் மேல் ஆசை இல்லை. ஒரு தடவை நந்த வனத்தில் பூஜைக்குப் பூப்பறிக்கும் போது இறைவன் இவனது கூடையில் ஐந்து மோஹராக்களைப் போட்டிருக்கிறார். அதைக் கொண்டு இவன் கோயில் திருப்பணி செய்திருக்கிறான். பக்தர்கள் தங்குமிடம் கட்டி இருக்கிறான். இந்தக் கங்கணத்தைக் கொடுத்தாலும் அதை விற்று



நிறையத் தோல் வாங்கி செருப்பு தானம் பண்ணுவான். எனக்கு இரங்கித்தான் பகவான் கங்காதேவி மூலம் இந்தக் கங்கணத்தைத் தந்திருக்கிறான்" எனப் பலவும் எண்ணி தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டார்.

"இந்தக் கங்கணத்தை மன்னரிடம் விற்றால் நல்லதொரு தொகை கிடைக்கும்" என்ற முடிவுடன் மன்னரைக் கண்டு வளையலைக் கொடுத்தார். மன்னர் அருகிலிருந்த ராணியிடம் காட்ட, ராணி அதன் ஜ்வலிப்பையும், வேலைப்பாட்டையும் கண்டு பிரமித்தாள். "ஒரு வளையலை எப்படிப் போட்டுக் கொள்வது? இன்னொன்று எங்கே?" என்றாள். திருதிருவென விழித்தார் அந்தணர். அரசன் "இன்னொன்றையும் கொண்டு வந்து கொடுத்துப் பரிசைப் பெற்றுச் செல்லுங்கள். ஏமாற்ற நினைத்தால் தலை தப்பாது" என இரு சேவகர்களை உடன் அனுப்பினான். அந்தணர் மனம் வெதும்பினார்.

"துரோகம் செய்த எனக்கு பகவான் சரியான தண்டனை கொடுத்தான். ரோகி தாசனிடம் சென்று நடந்ததைக் கூறி நிவாரணம் பெறுவதைத்தவிர வேறுவழியில்லை" என நொந்தபடியே ரோகிதாசன் வீட்டை அடைந்து நடந்ததைக் கூறி, மன்னிப்புக் கேட்டார். ஒரு மரத்தொட்டி நிறைய தோல் ஊறவைக்க தண்ணீர் இருந்தது. அதைத்தன் மேல் அங்கியால் மூடினான் ரோகிதாசன். கண்மூடி பிரார்த்தித்தான்.

"கங்கா மாதா! தூய்மையான பக்தியுடன் உள்ளம் உருக எவர் அழைத்தாலும் வருபவள் நீ. நீ என் அன்புக்கு மதிப்பளித்து பரிசளித்திருக்கிறாய்! உன் நீரில் குளிப்பவர்களில் நல்லவர், கெட்டவர், பாபி, துரோகி, உயர்ந்தவர், தாழ்ந்தவர், ஏழை, பணக்காரன், அழகு, அவலட்சணம் என்றெல்லாம் பேதம் பாராட்டாமல் அவர்களின் பாவங்களைப் போக்குகிறாய்! அந்தணரின் தவறு ஆசையால் செய்யப்பட்டது. அதை நீ மன்னித்து அரசர் தண்டனையிலிருந்து அவரைக் காப்பாற்று. தவறை உணர்ந்து கொண்ட மனிதன் மன்னிக்கப்பட வேண்டும். இன்னொரு கங்கணத்தைக் கொடுத்து உதவ வேண்டும்" என மனமுருகி வேண்டினான். என்ன அதிசயம்! மரத்தொட்டிக்கு வெளியே ஒரு கை நீண்டது. கங்கையில் நீண்ட அதே கையில் அடையாளமான சங்கு வளையல்கள் உள்ளங்கையில் மற்றொரு கங்கணம். நமஸ்கரித்துவிட்டு அந்த கங்கணத்தை வாங்கி, அந்தணரிடம் தந்தான் ரோகிதாசன்.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த சேவகர்களில் ஒருவன், இந்தச் செய்தியை விரைந்து சென்று கொற்றவனிடம் தெரிவித்தான். மன்னரும், அரசியும், அமைச்சரும், குலகுருவும், சேனாதிபதியும் ரோகிதாசன் குடிசைக்கு விரைந்து வந்தனர். அந்தணரோ "சுயநலம் மிகுந்த நான் இதைத் தொடவும் தகுதியற்றவன். தண்டனைப்படி என் உயிர் போகட்டும்" என்று புலம்பிக் கொண்டிருந்தார். மன்னர் வந்ததும் கங்கணத்தைப் பெற்றுக் கொண்டு ரோகிதாசனுக்கு ஏராளமான மானியங்களைப் பரிசாக அளித்தார். ரோகிதாசனோ அதையெல்லாம் இறைத் திருப்பணிக்கே செலவிட்டு விட்டான்.

"ஆ, அம்மா"

"யாரது" கைவிளக்கை உயர்த்திப் பிடித்தார் ரோகிதாஸர்.

"ஸ்வாமி... இதென்ன பனிகொட்டுகிறது உள்ளே வந்து படுங்கள். விடிந்ததும் போகலாம்..."

"நீங்கள்..." தயங்கியபடியே கேட்டார். "குலம்?"

"சக்கிலியர்"

"ஏன் ஸ்வாமி தயக்கம்... நீங்கள் மயக்கமாகி விட்டால் உயிர் போவதைவிட நான் ஒருவாய் தண்ணீர் ஊற்றினால் குடிப்பது அவ்வளவு பாபமா? பிறப்பு என்பது நல்வினை, தீவினைகளுக்கு ஏற்ப உண்டாகிறது. இப்பிறவியில் கொலை, களவு, ஜீவஹிம்சை, கள்ளுண்ணல், பரஸ்த்ரீயை இச்சித்தல் போன்ற பஞ்ச மகா பாதகங்களையும் நீக்கியவர் எவரும் உயர்ந்தவரே! உள்ளே வாருங்கள்" ரோகிதாசர் அன்புடன் அழைக்க உள்ளே வந்தார் பிராம்மணர். சுற்று முற்றும் பார்த்தார். எளிய சிறு இல்லம். ஒரு ஓரத்தில் பதனிட்ட தோல்கள். இன்னொரு சிறு மாடத்தில்... "என்னப்பா... நீ பூஜை செய்வாயா? அதென்ன சாளக்கிராமமா?" திகைப்புடன் கேட்டார். "ஆமாம் ஸ்வாமி. பகவானே தந்தது" பணிவுடன் சொன்னார் ரோகிதாசர். "அடப்பாவி... இதென்ன தோலினாலேயே பூக்குடலை, பஞ்சபாத்திர உத்தரணி, வட்டில், பீடம்..."

"நான் சக்கிலியன் தானே! தங்கத்துக்கும், வெள்ளிக்கும் எங்கே போவேன்? என்னிடம் இருப்பது தோல்தான்."

"அநியாயம்! அக்கிரமம்! பாபத்தை சம்பாதிக்கிறாய்... சாளக்கிராம பூஜையே கீழ் சாதிக்காரர்கள் செய்யக் கூடாது. அதிலும் செத்த மிருகங்களின் தோலால்... பகவானே" அந்தணர் கோபாவேசமாகப் பேசினார்.

"ஸ்வாமி, புலித்தோல், மான்தோல் இதெல்லாம் கூட செத்த மிருகங்களின் தோல்தான் இதில் அமர்ந்து பூஜை, தவம் செய்வதில் லையா? இதயத்தில் பகவானைப்பிரதிஷ்டை செய்யுங்கள் என்கிறீர்களே! இதயத்தில் இரத்தமும், சதையும் இல்லையா? நாக்கால் பூஜா மந்திரங்களைச் சொல்கிறீர்களே! எச்சில் ஊறும் அது நிஷித்த மில்லையா? பூவை எடுத்துப் போடும் கை எதனால் ஆக்கப்பட்டது?" இப்படி ரோகிதாசர் சொல்லவும் அந்தணர் விழி சிவக்க "எனக்கு புத்தி சொல்லும் அளவு நீ பெரிய பண்டிதனாகிவிட்டாயா? விதண்டாவாதம் செய்கிறாய் நீ! நான் உன் வீட்டில் தங்குவதே பாபம்" என்று ஏழுந்திருக்க, ரோகிதாசர் தடுத்து "ஸ்வாமி, தாங்கள் அனாவசியமாக கோபிக்கிறீர்கள்! வசதியுள்ளவர்தான் பகவானை பூஜிக்க வேண்டுமென்று எந்தச் சட்டத்தில் எழுதி வைத்திருக்கிறது? எளியார்க்கு அடியார் அல்லவா எம் பெருமான். தங்களைப் போலுள்ளவர்கள் பக்தியை எளிமைப் படுத்தினால், ஏழைகளும் உய்வார்கள் என்பதற்காகப் பேசினேனே ஒழிய வாதம் செய்வதற்காக அல்ல" என்று பணிவுடன் கூறினார்.

"நீ பண்ணும் பூஜையை நாராயணன் ஏற்க மாட்டான். இது அசுத்தமானமுறை" என்று ஆக்ரோஷமாக அந்தணன் கூற, பனீரென்று ஒரு மின்னல்! கருட வாகனத்தில் ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக பகவான் எழுந்தருளி "உடலும், உள்ளமும் ஒருங்கே இணையும் தியானமும், பூஜையும் யார் செய்தாலும் நான் ஏற்றுக்கொள்கிறேன். குலமோ, செய்யும் முறைகளோ எனக்கு முக்கியமல்ல. ரோகிதாசன் சக்கிலிய குலத்தில் பிறந்தாலும் செய்கையால் அந்தணனாகிறான். ரோகிதாசா! நீடூழி வாழ்ந்து பக்தியைப் பரப்பு" என்று ஆசிர்வதித்தார். அந்தணருக்கு குரல்மட்டுமே கேட்கிறது. உருவம் தெரியவில்லை!

அந்தணர் திகைத்து கண்ணில் நீர்சோர நின்றார். பகவான் மறைந்ததும் ரோகிதாசரின் காலில் விழுந்து தன்னை மன்னித்து உபதேசம் செய்யும்படி வேண்டினார். ரோகிதாசரும் அவரைச் சீடனாக ஏற்றுக் கொண்டார். இருவருமாக ஊர் முழுவதும் பக்தியைப் பரப்பினர். ஊர் ஊராகப் போய்க் கொண்டிருந்தார் ரோகிதாசர். அந்த ஊரில் ஒரு

பிரபு அன்னதானம் செய்கிறார் என்று கேள்விப்பட்டு சாப்பாட்டு நேரத்துக்கு பந்தியில் போய் உட்கார்ந்து கொண்டார்.

அறுசுவை உணவு பரிமாறப்பட்டது. அப்போது தன் சிஷ்யர்களோடு ஒரு அந்தணர் வந்தார். ஒரு சீடன் உரக்க "பந்தியில் அந்தணரல்லாதார் இருந்தால் எழுந்து விடுங்கள். உங்களுக்கெல்லாம் அடுத்த பந்தி. இந்தப் பந்தியில் எங்கள் குருநாதர் உணவருந்தப் போகிறார்" என்றான். பலர் எழுந்து வெளியே புறப்பட்டனர். ரோகிதாசர் தடுத்து "ஏன் எழுந்திருக்கிறீர்கள்? அந்தணருக்கும் ஒருவயிறு! நமக்கும் ஒருவயிறு. பசியிலும், ரத்தத்திலும் வித்தியாசம் கிடையாது. அப்படி ஆசாரம் பார்ப்பவர்கள் பந்திக்கே வரக் கூடாது. நானும் பிறப்பால் சக்கிலியன் தான்." என்று வாதமிட்டார்.

அந்தணர் குழாம் சினமுற்று அந்தப்பந்தியில் சாப்பிடவில்லை. தனியாக அவர்கள் உண்ணும் போது பார்த்தால் ஒவ்வொரு அந்தணரும் ரோகிதாசராகவே காட்சியளித்தனர். அந்தணர்கள் தன் தவறை உணர்ந்து, ரோகிதாசரிடம் மன்னிப்புக் கேட்டனர்.

இவர் நூற்றி இருபது ஆண்டுகள் வாழ்ந்தார் ஸ்ரீராமானந்தரின் முக்கிய சீடராக விளங்கினார். மீராவின் தாய் இவருடைய சிஷ்யையாக இருந்தாள். இவரது கவிதைகள் சீக்கியரது மதக்கிரந்தமான 'கிரந்தா ஸாகேப்'பில் இடம் பெற்றிருக்கின்றது. கபீர்தாசருக்கு சரிசமமாக தர்க்க வாதம் செய்து, இறைவனை தரிசித்தவர். இறுதியில் உடலோடு வைகுந்தம் சேர்ந்தார்.

37. ஸ்ரீ ராமச்சந்திரபட்டர்

கோசல நாட்டிலே சரயூ நதிபாயும் அழகிய கிராமம். அதன் பெயர் அமலனேர். அங்கு பிறந்த ஸ்ரீராமச்சந்திரர் நான்கு வேதங்களையும் கற்றவர்; குணக்குன்று. அந்நாட்டு அரசர் இவரையே குலகுருவாய் ஏற்று மந்திரோபதேசம் பெற விழைந்தபோது இராமச்சந்திரர் போட்ட நிபந்தனை.

"இராஜகுரு என்பதற்காக நான் ஆடம்பரமாக உடையணியமாட்டேன். அந்தஸ்துக்காக மாளிகையில் வசிக்க மாட்டேன். உஞ்ச விருத்தி எடுத்தே காலந்தள்ளுவேன். தினமும் எனக்கு அக்கினிகோத்திரம் செய்ய வேண்டும். இதெல்லாம் கௌரவக் குறைவென்று நீ எண்ணி, என்னை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தக் கூடாது. இதற்கு சம்மதமெனில் நான் உனக்கு உபதேசிக்கிறேன்" என்றார். மன்னனும் சம்மதித்தான்.

இவரது மனைவியும் இவருக்கேற்ற குணவதி. சாந்தஸ்வரூபி. இவர் கொண்டு வருவதைக் கொண்டு இல்வாழ்க்கை நடத்தி வந்தாள். அதிலேயே அதிதி உபசாரமும், பூஜைகளும் நடந்தன. பாலும் வெண்ணையும் போல, எள்ளும், எண்ணையும் போன்ற இவர்களின் ஒற்றுமையைக் கண்டு கோசல நாடே வியந்தது. ஒரு நாள் அரசி மேன்மாடத்தில் நின்று கொண்டிருந்தாள். கல்லும் கரையும் வண்ணம் இராமச்சந்திரபட்டர் பாடுவதைக் கேட்டாள்.

அரசரிடம் "இப்படிப்பட்ட மகானை நாலுதெரு சுற்றி நாலுவீட்டில் கையேந்தும்படி விடலாமா? அரச குருவை இப்படி அலையவிடுவது அபசாரமல்லவா?" என்று கேட்டாள்.

அரசர் "மண்ணும், பொன்னும் அந்த மகானுக்கு சமம். நாளைக்கு என்று சேர்த்து வைத்தால் சம்சாரத்தில் பற்று விழுந்து விடும் என்பதில் அசையாத நம்பிக்கை உள்ளவர். இதற்கு நானென்ன செய்ய முடியும்?" எனவும், "இவருக்கு வேண்டுமானால் ஆசை இல்லாமல் இருக்கலாம். இவர் மனைவிக்கு...? பெண்களுக்கு எப்போதுமே நகை, புடவை என்றால் ஆசை அதிகம்" என்று மடக்கினாள் அரசி.

"குருநாதர் குடும்பத்திற்குச் செய்வதில் எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. உன்முயற்சிக்கு நான் குறுக்கே நிற்கவும் மாட்டேன்" என்று அனுமதி தந்தார் மன்னர்.

உடனே அரசி இராமச்சந்திரரின் மனைவியை அழைத்து வர பல்லக்கை அனுப்பினாள். குரு பத்தினியை எதிர்கொண்டு வரவேற்று கால்களில் பணிந்து பால், பழம் கொடுத்து உபசரித்தாள். பின் "தாயே, எங்களது சிறு காணிக்கையாக இவைகளை ஏற்க வேண்டும்" என்று விலையுயர்ந்த பட்டுப்புடவைகள், தங்க நகைகளைப் பேழையில் வைத்துப் பரிசளித்தாள். இராமச்சந்திரரின் மனைவி பேராசை கொண்டவளல்ல.

ஆனாலும் துறவி அல்லவே. பெண்களுக்கே இயற்கையாக உள்ள ஆடை, ஆபரண ஆசை அவரையும் ஈர்த்தது. "கணவர் கோபிப்பாரே" என்று ஒரு கணம் தயங்கினாள். ஆனால் அடுத்த கணமே "நாமா அரசியிடம் யாசகம் கேட்டோம். வலிய வருகிற திருமகளை அலட்சியம் செய்யக் கூடாது. அரசி தானே பல்லக்கை அனுப்பி வரவழைத்து, மரியாதை செய்கிறார். மறுத்தால் அகம்பாவம் என்று நினைக்க மாட்டார்களா? தவிர என் கணவரின் சுபாவம் தெரிந்து தானே என்னிடம் தருகிறார்!" என்று மனதிற்குள் சமாதானமும் சொல்லிக் கொண்டாள். அரசியை ஆசிர்வதித்து, விடை பெற்றுக் கொண்டு, வீட்டிற்கு வந்தாள்.

ஹோமம் செய்து கொண்டிருந்த பட்டர் "இதென்ன சுமை" என்ற கேட்டார். அரண்மனையில் நடந்தவைகளைக் கூறி பரிசுப் பொருள் களைக் காண்பித்தார் பட்டரின் மனைவி.

"உனக்கு ஒரு கதை தெரியுமா? ஒரு சன்னியாசி எதன்மீதும் பற்றற்று வாழ்ந்து கொண்டிருந்தான். அவனுக்குள்ள ஒரே உறவு கௌபீனம் (கோவணம்) தான். ஒரு நாள் அதை எலி கடித்து விட்டது. இன்னொரு கோவணத்தை சம்பாதித்தவன் அதைக் காப்பாற்ற ஒரு பூனை வளர்த்தான். பூனைக்குப் பால் கொடுக்க ஒரு பசு வாங்கினான். அப்புறம் பசுவை மேய்க்க, கறக்க ஆள், அந்த ஆளுக்குச் சம்பளம், சாப்பாடு... அதை சம்பாதிக்க கதா காலட்சேபம் செய்ய வேண்டி இருந்தது. கௌபீனத்தோடு பிரவசனம் செய்தால் யார் கேட்பார்கள்... பட்டு வேஷ்டி, அங்கவஸ்திரம், மோதிரம்... பார்த்தாயா? ஒரு கௌபீனத்தைப் பத்திரப்படுத்த நினைத்தது எவ்வளவு பெரிய பந்தங்களில் சிக்க வைத்துவிட்டது. பொருள் ஒரு மாயவலை. இதையெல்லாம் பாதுகாக்க பெட்டி வேண்டும். நீ அணிந்து கொண்டு போகும் போது உனக்குக் காவல் வேண்டும். பெட்டியில் தூங்கும் போதும் அதற்குக் காவல்... இதை முளையிலேயே கிள்ளாவிட்டால் கோடாரியால் வெட்ட வேண்டி வரும்" என்று கூறியவர் பட்டாடைகளை ஹோமத்தைக்காண வந்திருந்த அந்தணர்களுக்குத் தானமாகக் கொடுத்தார். ஆபரணங்களை நெருப்பில் போட்டு விட்டார்.

"அவனுக்கு நாலுபவுன் வளையல்; எனக்கு மூணுபவுன் சங்கிலி; ஓரவஞ்சகம்" என்றெல்லாம் பேச்சு வரும்" அதனால் ஆபரணங்களை அக்கினிக்கே சொந்தமாக்கிவிட்டேன்" என்று விளக்கமும் சொன்னார்.

பட்டரின் மனைவி சிலையாய் நின்றாள். அவள் மனம் வெம்பிக் கொதித்தது. "எல்லோரும் உஞ்சவிருத்திக்குப் போனால் அரிசி போடவும் ஆள் வேண்டாமா? எல்லோரும் பல்லக்கைச் சுமப்பேனென்றால், பல்லக்கில் உட்காருவது யார்? ஊருக்கு வேலிபோட முடியுமா? தெருவில் முள்ளாய்க் கிடந்தால் காலுக்குத்தான் செருப்புப் போட்டுக் கொள்கிறோம். தெருவுக்கே தோல் பாவாடை போடுவதில்லை!" என்றாள். பட்டர் சிரித்தார்.

"அடி பைத்தியக்காரி! முதலில் அந்தச்சாத்தான் செய்த காரியம் உன்னையே எதிர்த்துப் பேச வைத்திருக்கிறது பார்! அதை விற்று அன்னதானம் செய்தால் கூட "இவன் அப்பன் வீட்டுப் பணமா பாழாய்ப் போகிறது! இன்னும் நாலு பேருக்குப் போட்டிருக்கலாம். இன்னும் நன்றாகச் செய்திருக்கலாம்" என்று ஏசும் உலகமிது. பணம் பாஷாணம்" என்றார்.

இதற்குள் 'அவரது தூய வாழ்க்கையில் எங்கே களங்கம் விழும்' என்று கண் கொத்திப் பாம்பு போல் காத்திருந்த சிலர் அரசனிடம் இதைத் திரித்துக் கூறினார்.



உடனே அரசன் விரைந்து வந்தான். பட்டரிடம் "ராணி நான் சொன்னதைக் கேட்க வில்லை. உமது மனைவியை அழைத்துப் பரிசளிப்புச் செய்துவிட்டாள். உமக்கு அது வேண்டாத பட்சத்தில் அதைத் திருப்பிப் பெற்றுப் போகவே வந்திருக்கிறேன்" என்றார். பட்டர் திகைத்தார். இருதலைக் கொள்ளி எறும்பானது அவர் நிலைமை. "வேண்டு மென்றால் ஆசைப்பட்டதாய் அர்த்தமாகிவிடும். அதோடு மனைவி அதை அணிந்து கொள்ளாவிடில் அதற்கொரு பொய் சொல்ல வேண்டி இருக்கும். தீயில் எறிந்துவிட்டேனென்றால் அரச தண்டனைக்கு உட்பட வேண்டும். பொருள் வந்து சேர்ந்த உடனேயே என்ன ஒரு சோதனை" என்று புழுங்கினார்.

பின்னர் அரசனை நோக்கி "இன்னும் சில நிமிடங்களில் உங்களது பொருள் உங்களிடமே வந்து சேரும்" என்றவர், மௌனமாக இறை வனைப் பிரார்த்திக்கலானார். ஹோமாக்னி ஜ்வாலையாகப் பிரகாசிக்கத் தொடங்கியது. ஆபரணங்களெல்லாம் முன்னிலும் பன்மடங்கு பிரகாசத்துடன் வெளியே விழத் தொடங்கின. அரசன் வெட்டிய மரம் போல் குருநாதர் காலில் விழுந்து கதறினான்.

"உங்களின் அருமை அறியாமல் அவசரப்பட்டேனே" என்று புலம்பித் துடித்தான். பட்டர் கண் விழித்தார். "மன்னா? உனது பொருட்கள் சரியாக இருக்கின்றதா பார்" என்றார்.

பட்டரின் மனைவியும், மற்றவர்களும் வாயடைத்து நின்றனர். "இவர் எத்தனை மேன்மையானவர்! இவர் நினைத்தால் எது தான் இவருக்குக் கிடைக்காது" என்று மனைவி மறுகினாள். அரசன் "குருதேவா, என்னை மன்னிக்க வேண்டும். ஒருவருக்குத் தானமாகக்கொடுத்த பொருளைத் திரும்ப எடுத்துப் போவது முறையல்ல! உங்கள் விருப்பம் போல் செய்யுங்கள். அக்னியே உங்கள் நேர்மைக்கும், பக்திக்கும் கட்டுப்பட்டவன் என்பதைக் கண் கூடாகக் கண்டேனே!" என்று வேண்டினான்.

பட்டரும் அதை விற்று அப்பொருளை வறியவர்களுக்குத் தானம் செய்தார். பக்திப் பணியே லட்சியமாகக் கொண்டு வாழ்ந்த பட்டரை ஊரும், உலகமும் போற்றிப் பணிந்தது.

38. பண்ஹாஜிராஜ புக்திரர்

குஜராத் மாநிலத்தில் போகாபூர் என்ற நகரம். அதை ஆண்ட மன்னன் குமான்சிங். நீதி நெறி தவறாதவன். அவ்வூரில் வாழ்ந்த விஷ்ணுபக்தர் பண்ஹாஜீ அரசரின் நெருங்கிய நண்பர். பண்ஹாஜீ பொருளாசை அற்றவர். அரசன் தன் நண்பனாயிற்றே என்று எந்தச் சலுகையும் கோராத நன்னெறியாளர்.

இருவருமாக ஸ்ரீராமநவமி, கிருஷ்ண ஜயந்தி விழாக்களை விமரிசை யாகக் கொண்டாடினர். திருவிழாக் காலங்களில் புராணப்பிரவசனங்கள், நல்ல புராண நாடகங்கள் நடைபெறும். ஸ்வாமி புறப்பாடு ஆனவுடன் தான் சாப்பிடுவார்கள். ஸ்வாமியோடு வீதி உலா வருவார்கள். இதனால் போகாப்பூரில் பக்திப்பயிர் செழித்தது. ஜனங்கள் பாபதோஷங்களுக்கு அஞ்சி நேர்மையாக நடந்து கொண்டதால் திருட்டுபயம் இல்லை. வழக்கு விசாரணை இல்லை.

அன்று தீபாவளி. அரசன் உத்தரவுப்படி கோயிலில் லட்ச தீபக்காட்சி ஏற்பாடானது. கோயிலில் மட்டுமா? பூமியிலோர் நட்சத்திரக் கூட்டமோ என்னும்படி வீடுகள்தோறும், பஜனை மடங்கள், சத்திரங்களில் கூட தீப வரிசைகள் பிரகாசித்தன.

கோயிலில் பண்ஹாஜீ உருக்கமாக பஜனை செய்து கொண்டிருந்தார். அரசரும் கைதட்டி பவ்யமாக உடன் பாடிக்கொண்டிருந்தார். திடீரென்று பண்ஹாஜீ துள்ளி எழுந்து 'ஆ, ஆ' என்றபடி வேஷ்டியைக் கசக்கி விட்டுக் கொண்டார்.

எங்கும் கசமுசா... அமைதி கலைந்தது. 'என்ன, என்ன'' என்றனர். அரசருக்கு ஒரே எரிச்சல். "என்ன பண்ஹாஜீ?" என்றார் பொறுமையை வரவழைத்துக் கொண்டு. "துவாரகையில் தீபாராதனை நடந்தபோது கற்பூரக்கட்டி சிதறி கண்ணனில் பீதாம்பரத்தில் நெருப்புப் பற்றிக் கொண்டது. அதுதான் கசக்கி விட்டேன். இப்போது அணைந்துவிட்டது" என்றார் பண்ஹாஜீ.

அரசருக்கு பண்ஹாஜீ நாடகமாடுகிறார்; மக்களை ஈர்க்க மிகைப்படுத்திச் சொல்கிறார் என்ற கோபம். 'துவாரகை எங்கே! போகாபூர்

எங்கே! இவர் மானசீகமாய் துவாரகா சன்னதியில் இருந்தாராம்! என்ன பாசாங்கு! எதற்காக இப்படி ஒரு வேஷம்! நானும் தான் பரந்தாமனின் வடிவில் ஐக்கியமாகி இருந்தேன்! எனக்குத் தெரியவில்லையே" என்று மறுகினார். பிறகு, "இப்போது பகவான் என்ன நிற வஸ்திரம் அணிந்திருக்கிறார்?" என்று கேட்க,

பண்ஹாஜீ சிறிதும் தயங்காமல் "பச்சை நிற ஆடை" என்றார். அதற்குப் பிறகு எதுவும் கேட்கவில்லை. பஜனை முடிந்து, அரண்மனையை அடைந்த அரசர், பண்ஹாஜீயின் குட்டை உடைக்க வேண்டுமென்று தன் உறவினனான துவாரகாபுரி அரசனுக்கு ஒரு லிகிதம் எழுதினார். முக்கியமான வினா:

"தீபாவளி எப்படிக் கழிந்தது. துவாரகை கோயிலில் ஏதேனும் விசேஷம் உண்டா?" உடனே பதில் வந்தது. "தீபாவளி அன்று கோயிலில் லட்சதீப விழா நடந்தது. நிவேதனம் முடிந்து தீபாராதனை காட்டும் போது அர்ச்சகரின் கவனக்குறைவால் ஸ்வாமியின் அழகிய பச்சை வண்ண

பனாரஸ் பீதாம்பரத்தில் தீப்பிடித்துக் கொண்டது. இதில் என்ன ஆச்சரியம் என்றால் அணைப்பதற்குள் தானே அணைந்து விட்டது"

மன்னன் பிரமித்தான். "இப்படியும் ஒரு பக்தியா? நான் பண்ஹா ஜியைத் தவறாக மதிப்பிட்டேனே" என நொந்து கொண்டான். அவரிடம் ஓடிச் சென்று காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். "அங்கே நடப்பதை இங்கே அறியும் ஆற்றலுள்ள உமது பக்திக்கு முன் நான் தூசு! என்ன விசாலமான ஞானம்! என்ன ஐக்கிய பாவம்!" என்று கொண்டாடி அவருக்கு மானியமாக இரு கிராமங்களைத் தந்தான்.

அவரும் அதில் கிடைக்கும் வருவாயில் அதிதி உபசாரமும், பாகவதத் தொண்டும் செய்து வாழ்நாளைக் கழித்தார். அரசனும் தினந்தோறும் அவரை சந்தித்து வேதாந்த விளக்கங்கள் கேட்டுக் கொண்டான்.

இருவரும் நிலவும், ஒளியும் போல் இணைபிரியாது பக்தியைப் பரப்பி வந்தனர்.

39. ஸ்ரீ பெரிய தாஸர்

தஞ்சை நாயக்கமன்னர்கள் ஆட்சிக்கு வந்து, கைமாறி, பல பிரிவினரும் ஆண்டகாலம். மன்னார் நாயுடு என்பவன் சிறிது காலம் அரசனாய் இருந்தான். மதீயினன்; தரங்கெட்ட நட்புக் கொண்டிருந்தான் என்றாலும் தெய்வ பக்தி உள்ளவன். அவன் கீழ் வேலை பார்த்த ஒரு அதிகாரி சேஷாசலம். அவர் வளைச் செட்டி வகுப்பைச் சேர்ந்தவர். அவருடைய ஒரே மகன்தான் பெரியசாமி.

பெரியசாமி நன்கு படித்தான். புத்திசாலியாகவும், பக்திமானாகவும் விளங்கினான். உரிய வயது வந்ததும் தன் வேலையிலேயே அமர்த்த சேஷாசலம் எண்ணினார். பெரியசாமியோ கைகட்டி சேவகம் செய்வதை விரும்பவில்லை. சரி, குலத் தொழிலையாவது கவனிக்கட்டும் என்று வளையல் கடை வைத்துக் கொடுத்தார்.

பெரியசாமியின் உதடுகள் "நரசிம்மா, சேஷாசலம், ரங்கநாதா" என்று உச்சரித்துக் கொண்டிருக்கும். கடைத்தெருவுக்கு வரும் ஏழைப் பெண்கள்

பளபளவென்று மின்னும் கண்ணாடி வளையல்களைப் புரட்டிப் பார்த்து விட்டு ஏமாற்றத்தோடு திரும்புவதைக் கண்டால் "தாயீ, ஏம்மா வைச் சுட்டே?" என்பார்.

"துட்டு பத்தாதே செட்டியாரையா?" என்றால் "எம்புட்டு இருக்கோ குடுத்துட்டு எடுத்துட்டுப்போம்மா" என்பார் அனுதாபத்துடன். சிறிது நேரத்துக்கெல்லாம் இன்னொருத்தி வருவாள். "அவளுக்கு அந்த விலைக்குக் கொடுத்தியே" என்று சண்டை போடுவாள்.

"அவளிடம் அந்த அளவு தான் காசு இருந்தது" என்றால் "நானும் அவ்வளவுதான் தருவேன்" என்று மீதிக்காசை வம்படி பண்ணி வாங்கிப் போய் விடுவாள். அன்று முதல் அந்த வளையலுக்கு அதுதான் விலையாக இருக்கும்.

"அம்மா, அந்த வளையலை வாங்கித் தாயேன்"

"பேசாம இரு, எங்கிட்டே பணம் இல்லே" தாய் மகளை அடக்கும் குரல் காதில் விழுந்தால் போதும். இவர் விளிப்பார்.

"அம்மணி! மகாலட்சுமி போல வாழற பொண்ணு கேட்குது! வாங்கிக்குடுங்கம்மா"

"ஆமாம், அதுக்கென்ன தொட்ட்துக்கெல்லாம் ஆசைப்படும். வக்கு வேணாமா?" தாய் சலித்துக் கொண்டே நடப்பாள். "காசே தரவேணாம். எடுத்துட்டுப் போங்கம்மா" இப்படி வியாபாரம் செய்தால்? அசலை எப்படி எடுக்கமுடியும்? கடையை மூட நேர்ந்தது.

கோயிலே கதியாகக் கிடக்க ஆரம்பித்தான் பெரியசாமி. முள்ளை முள்ளால் எடுக்க வேண்டுமென்று பாகவதோத்தமர்களை அனுப்பி மகனுக்குப் புத்தி புகட்ட வேண்டுமென்று வேண்டினார் தந்தை. பல மகான்களின் சரித்திரங்களை உவமைகளாகக் கூறி கடமையை அறிவுறுத்தினார்கள் அவர்கள். பெரியசாமி தந்தை சொற்படி தந்தையின் உத்யோகத்தில் அமர்ந்தான்.

ஒருநாள் பெரியசாமி குதியில் போகும் போது கோலி விளையாடிக் கொண்டிருந்த சிறுவர் நடுவினில் குதிரை புகுந்ததால் ஆட்டம் குலைந்து, கோலிகள் சிதறி உடைந்தன. சிறுவர்களுக்கு வந்த கோபத்துக்கு அளவே இல்லை. "டேய், இவன் எங்கக்காவுக்கு ஓசியா கண்ணாடி, சீப்பு எல்லாம் கொடுத்தவண்டா?"

"இவனுக்கு குதிரை மேல ஏறவாவது யோக்யதை உண்டா?"

"கோயில்லே பைத்தியக்காரன் மாதிரி புலம்பிட்டிருக்கிறவனுக்கு உத்யோகம் கொடுத்தா இந்த கதி தான்!"

"டேய், கீழே இழுத்துத் தள்ளி அடிச்சு நொறுக்குங்கடா..." பெரியசாமி நினைத்திருந்தால் அவர்களைத் திருப்பி அடிக்கலாம். அல்லது தன் அதிகாரத்தைக் காட்டி தண்டிக்கலாம்.

'எல்லாம் இறைவன் செயல்' எனப் பேசாது நின்றார். "டேய் யாருடாது... மாதவனா... ஒழுங்காப் படிக்காம கோலியா விளையாடிண்டிக்கே... உங்கப்பா கிட்டே சொல்லி தோலை உரிச்சு உப்புக்கண்டம் போடச் சொல்றேன்... நீ சீனுவாசன் தானேடா... பொறுக்கிப் பயலே... மூணுவருஷமா ஒரு வகுப்பிலேயே தேச்சுண்டிருக்கியே... வெட்கமா இல்லே... கைலாசம்... உங்கம்மா பாவம்... இட்லியும், முறுக்கும் போட்டு ஓடாத் தேயறா... நீ இப்படி ஊரைச் சுத்திண்டிருக்கியா?" யாதவரங்கனின் இந்த அதட்டலில் சிறுவர் கும்பல் சிட்டாய் பறந்துவிட்டது. "யாதவரங்கா... ரொம்ப நன்றிப்பா... நல்ல நேரத்திலே காப்பாத்தினே" விடுவிடு வென்று நடந்தான் பெரியசாமி.

"தஞ்சாவூருக்கும் வைகுண்டத்திற்கும் எவ்வளவு தூரம்?" அரசனின் இந்தக் கேள்விக்கு புலவர்கள் விழித்தனர். அசட்டுக் கேள்வி என்றால் உத்யோகத்துக்கு உலை விழும். "கோவில்லே இருக்காரே பெரியதாசர் அவருக்குத் தாங்க இதுக்கு பதில் தெரியும்" என்றான் ஒரு சமயோஜிதன். "பெரியதாசரா? அது யார்?"

"அதான்... நம்ம அரண்மனையிலே முன்னே 'ஷராப்'பா இருந்தாரே"

"சேஷாசலத்தின் பிள்ளை பெரியசாமியையா சொல்கிறீர்கள்!"

"ஆமாம் அரசே! அவர்தான் வேலையை உதறிட்டுக் கோயிலே கதியாப் போயிட்டாரே!"

"சரி, உடனே அவரைப் போய் அழைத்து வாருங்கள்" ஏவலர்கள் கோயிலுக்குப் போனார்கள்.

"அரண்மனை வாழ்வுதான் எனக்கு ஒத்து வரவில்லையே! என்னை ஏன் அழைக்கிறீர்கள்?" பெரியசாமி மறுத்தார். "ஐயா, தங்களுக்கு இரக்க

மனமுண்டு. ஏழை பங்காளர் என்பது உண்மையானால் எங்களோடு வர வேண்டும். உங்களை அழைத்து வராமல் போனால் எங்களுக்குத் தண்டனை கிடைக்கும். மறுபடி உங்களை உத்யோகத்தில் அமர்த்த மன்னர் அழைக்கவில்லை. பகவான் சம்பந்தப்பட்ட சர்ச்சைதான். ஏதோ விளக்க வேண்டுமாம்" என்று நயந்து கெஞ்சினர் ஏவலர்.

பெரியதாஸர் அரசவைக்குப் போனார். அரசன் அவரை வரவேற்று அதே கேள்வியைக் கேட்டான். பெரியதாஸர் கஜேந்திர மோட்சம் கதையைக் கூறினார். "அரசே! 'ஆதிமூலமே' என்று யானை அலறிய போது ஓடி வந்தவர் எம்பெருமான். ஆக மனங்களைப் பொறுத்தது தான் தூரம். வைகுண்டம் பக்தர்களுக்கு கூப்பிடும் தூரம் தான்" என்றார்.

அரசனுக்கு தாசரின் விளக்கம் பிடித்திருந்தது. ஏராளமான சன்மானங்களுடன் மரியாதை செய்து பல்லக்கில் அனுப்பி வைத்தான். தாசர் மூக்கறுபட்டு ஓடப்போகிறார் என்று காத்திருந்தவர்களுக்கு, இது பொறாமையை விளைவித்தது. காலத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

"பெரிய தாசரே! என் மேல் ஒரு பாட்டுப்பாடும்; வேண்டிய பொருள் தருகிறேன்" என்றான் வேந்தன்.

"அரசே! பொருளுக்காகப் பாடுபவனல்ல நான்! நரசிம்மனைப் பாடும் நாவால் நரனைப் பாடுவதா? அரசே! அழிவில்லாத பரம் பொருளை நினைத்தாலே பாட்டு வருகிறது! உம்மைப் பற்றிப் பாட என்ன இருக்கிறது?" பெரியதாசர் போனதும், அரசனது சினத்தை விசிறி கொண்டு வீசினர் பொறாமைக்காரர்கள்!

"உங்களது ராஜ்யத்தில், உங்களது நிர்வாகத்தில் உள்ள கோவிலில் இவனால் நிம்மதியாய் பஜனை செய்ய முடிகிறதென்றால் அது எவரால் என்று யோசித்தானா? பெரிய புலவன்! கொழுப்பு! திமிர்... எல்லாம் நீங்கள் கொடுத்த இடம். உங்களைப் பாட என்ன இருக்கிறது என்று கேட்டு விட்டானே இந்தப் பெரியசாமி! இவனை தண்டிக்காது விட்டால் புலவன் என்ற போர்வையில் உங்களை எதிர்க்கப் பலர் கிளம்பி விடுவார்கள்"

இவ்வளவு போதாதா! அரசன் ஆணைப்படி கத்தியாலும், ஈட்டிகளாலும் பெரிய தாசரைக் கட்டி வைத்துக் குத்தினர். கத்தியும், ஈட்டியும் முனைமழுங்கி உடைந்தன. அவர் உடம்பிலோ துளி காயம் இல்லை. அரசனுக்கு இப்போது இது கௌரவப் பிரசினையாகிவிட்டது. புலிக் கூட்டிலே தள்ளச் சொல்லி உத்தரவிட்டான். புலி அவரை வணங்கியது. காளவாய் அடுப்பில் பெரிய இரும்புக்கம்பிகள் சிவக்கப் பழுக்கப் போடப்பட்டன.

"நரசிம்மா, நரசிம்மா" என்று தியான நிலையில் இருந்த தாசரின் உடம்பில் தாறுமாறாக இழுத்தனர். தாசரிடம் அசைவே இல்லை. ஆனால் சூட்டுக் கோல்கள் ஜில்லிட்டு விட்டன.

அங்கே பக்தியே அக்கினியைச் செயலற்றதாக்கி விட்டதோ? நல்ல பாம்பின் விஷம் தாசரிடம் தரப்பட்டது. இருபக்கமும் அவர் குடிக்க மறுத்தால், அடிக்கச் சவுக்குடன் காவலர்கள் நின்றனர்.

தாசர் சிரித்தார். 'உலக வாழ்வே அநித்யம். 'நரசிம்மா, உன்னோடு என்னைச் சேர்த்துக் கொள்; என்று கதறும் எனக்கு இப்படி ஒரு எளிய பாதை கிடைத்திருக்கும் போது மறுப்பதாவது" என்று ஆசையுடன் வாங்கிப் பருகினார்.

பிரகலாதனிடமும், மீராவிடமும் தோற்ற விஷத்துக்கு மற்றுமொரு தோல்வி.

பட்டத்து யானையைக் குத்தி, வெறியூட்டி, தாசரைக் கொல்லும்படி ஏவினார் அரசர். யானை பயங்கரமாய் பிளிறிக்கொண்டே வெறிகொண்டு ஓடி வந்தது. தாசரை அசையமுடியாதபடி சங்கிலியால் பிணைத்திருந்தனர். மக்கள் அலறியபடி பாதுகாப்புத் தேடி ஓடினர். அரசன் மமதையோடு கொக்கரித்தான். ஏற்கெனவே நடந்த அற்புதங்களால், சேவகர்கள் தாசரை பயபக்தியோடு நோக்கினர்.

என்ன அற்புதம்! மதங்கொண்ட யானை தாசரைக் கண்டதும் அஞ்சி, திரும்பி ஓடி, காலிடறி, விழுந்து வாயில் நுரைகக்கி இறந்தது. அரசன் முகம் கறுத்தது. தன்னிடம் வேலை பார்த்த ஒரு வேலைக்காரன் முன் தான் தோற்பதா என்ற வீறாப்பில் "இவன் மந்திரவித்தை தெரிந்தவன். இவனை இத்தோடு விட்டால் நாளை ஊரையே ஆக்கிரமித்துக் கொண்டு ஆட்டிப் படைப்பான். இவனை அழித்துவிட வேண்டும். கல்லில் கட்டில் குளத்தில் எறியுங்கள்" என்று ஆணையிட்டான்.

கல்லே தெப்பமாய் மிதந்தது. இவர் நாவிலோ நரசிம்ம நாமம். அடுத்துக் கூரான கழுமரம் தயாராயிற்று. சங்கிலியால் கட்டி தாசரை தெருவில் இழுத்துச் செல்ல வைத்தான். இது கண்டு அனைவரும் நடு நடுங்கினர். "இந்த ராஜாவின் ஆட்சி இத்தோடு முடிந்தது" என்பாரும், "இத்தனைக்கும் பிழைத்தவருக்கு இது ஒரு பொருட்டா" என்பாரும், "கழுமரம் எரிந்துவிடும்"

"இல்லை, கப்பும், கிளையுமாய் தளிர்க்கும்" என்று ஹேஷ்யம் சொல்வோருமாக எங்கும் ஒரே முணுமுணுப்புகள். கழுமர மேடையைச் சுற்றி ஊர் முழுவதும் கூடி விட்டது. கொலுமண்டபத்தில் திடீரென்ன பூமி அதிர்ந்தது. அரசன் சிங்காசனத்திருந்து சரிந்து விழுந்தான். சிங்கத்தின் கர்ஜனை; அன்று தூணைப் பிளந்து கொண்டு பிரகலாதனுக்காக வந்த நரசிம்மர், இன்று தாசருக்காக தஞ்சை அரண்மனையில், கையில் சவுக்கோடு தோன்றினார்.

"பெரியதாசன் என்ன குற்றம் செய்தான்? கத்தியால் குத்தச் சொன்னது இந்த வாய்தானே! கடலில் தள்ளச் சொன்னாயே! அப்போது எப்படி இருந்திருக்கும்! சூட்டுக் கோலால் இழுத்ததைவிட சவுக்கடியின் வலி குறைவு தான்! புலிக் கூண்டில் தள்ளினாயே! புலி நகம் பிறாண்டினால் இப்படி வலிக்குமா? யானை மிதித்தால் சுகமாயிருக்குமா?

கழுமரத்திலிருந்து அவனைக் காப்பாற்றா விட்டால், நஞ்சு தராமலே **மரணம் உன்னைத் தேடி வரும். ஓடு. அவன் பாதங்களை உன் கண்ணீரால் கழுவி பாவமன்னிப்புத்தேடு**" அவரின் ஒவ்வொரு வார்த்தைகளுக்கும், சவுக்கடி பக்க மேளமாக விழுந்தது. தோல் உரிந்து இரத்தம் கசிந்தது. மன்னன் புழுவெனத் துடித்தான். நரசிம்மம் மறைந்ததும், அரசன் கழுமரம் நோக்கி வீதிகிளில் ஓடினான்.

ரணமென தவிக்க வைத்த வேதனையோடு "நிறுத்துங்கள், தாசரைக் கழுவில் ஏற்ற வேண்டாம்" என்று அலறிக் கொண்டே ஓடினான். அமைதியாய் நின்றிருந்த தாசர் காலில் அவன் விழுந்த அதே நேரம், கழுமரம் சொக்கப்பனை போல் எரிந்தது. எதுவும் புரியாத ஜனங்கள் குழம்பினர். மன்னன் ஏன் அலறுகிறான்? அவனது ஆடைகள் கிழிந்து காயங்கள் எப்படி ஏற்பட்டன? கழுமரம் எரிகின்ற விந்தை" இப்படி தலைக்குத்தலை கூக்குரல்.

நடந்தவைகளை அரசன் விவரித்தான். மன்னிக்கும்படி வேண்டினான். "தாசரே! வாய்விட்டு மன்னித்தேன் என்று சொல்லாமல் நான் எழுந்திருக்கப் போவதில்லை" என்று புலம்பினார். தாசர் "மன்னா! நிஜமாகவே நீ பாக்கியசாலி! நரசிம்மா, நரசிம்மா என்று நான் அலறுகிறேன். தரிசனம் உனக்குக் கிடைத்திருக்கிறது! எழுந்திரு. தவறை உணர்ந்தபோதே நீ மன்னிக்கப்பட்டாய். அதோடு தண்டனையும் பெற்றபின் மன்னிப்பு எதற்கு? நீ மனம் மாறியதே சிறந்த வெகுமதி" என்று அவரைத் தூக்கி நிறுத்தினார். அரசர் பெரியதாசரை அன்புடன் அழைத்துச் சென்று அரண்மனையில் இருக்கும்படி வேண்டினார். தாசரோ மறுத்து கோயிலே கதியாய் கிடந்தார். அரசர் தினமும் இரவில் தாசரைக் கண்டு வேதாந்த விளக்கங்கள் கேட்டு, ஞானத்தைப் பெருக்கிக் கொண்டார். இதனால் தாசரிடம் அரசருக்கு ஈடுபாடு அதிகமானது. அரசர் அரச அலுவல்களை அடுத்த வாரிசிடம் ஒப்படைத்து விட்டு, தாசரோடு இறைப்பணியில் ஈடுபட்டு பக்தியைப் பரப்பினார்.

ஒரு நாள் தாசர் "அரசே, இன்னும் எனக்கு தரிசனம் தர அந்த நரசிம்மனுக்கு மனமில்லை பாருங்கள்" என்று வருந்திக் கொண்டிருக்கும் போது, நெற்றியில் பெரிய திருமண்ணும், கட்டுகட்டாய் பூணூலும், பஞ்ச கச்சமும், துளசி மாலையும் அணிந்து ஒரு அந்தணர் வந்தார்.

"நரசிம்மனாகவே பார்த்தால் எப்படி? ரங்கநாதனாய்ப் பார்க்க ஸ்ரீரங்கம் போகிறது. அவர்தான் இராவண யுத்தத்தில் களைத்து சயனித்திருக்கிறார். உங்களுக்கென்ன?" என்றார். தாசர் அந்தக் குரலைக் கேட்டு திகைத்தார். "இவர் யார் தானாகப் பேச்சில் மூக்கை நுழைத்துக் கொள்கிறார்! இதென்ன குரல்! அமுதமா, தேனா! பாலா!" என்று மயங்க, அந்தணரை அடுத்த நிமிடம் காணோம்.

வந்தவர் ஸ்ரீரங்கநாதரே என்பதை உணர்ந்து கொண்ட தாசரும், அரசரும் ஸ்ரீரங்கம் சென்று ரங்கநாதரின் பாதசேவையில் நாட்களைக் கழித்தனர். இறுதியில் ஓரிரவில் நரசிம்ம வடிவிலேயே வந்து தாசரை தன்னிடம் இணைத்துக் கொண்டார் எம்பெருமான்.

40. இராமாபாய்

காசி நகரை ஆண்டு வந்த சந்தனராஜன் ராமபக்தி மிக்கவன். அரசி கருவுற்ற போது தினமும் இராமாயண பாராயணத்தைக் கேட்கச் செய்தான். உரியகாலத்தில் பெண் குழந்தை பிறக்கவும் 'இராமாபாய்' என்றே பெயர் சூட்டினான். இராமாபாய் பேரழகியாய் திகழ்ந்தாள். அழகோடு அடக்கம், அன்பு, கல்வி, ஜீவகாருண்யம், ஒழுக்கம் எல்லாம் சேர்ந்து கொண்டது. உரிய காலம் வந்தது. பல அரசர்கள் பெண் கேட்டு வந்தனர். அவர்களில் நல்ல அழகும், வீரமும், சம அந்தஸ்தும் வாய்ந்த ஒரு அரச குமாரனுக்கு, மகளை விமரிசையாய் திருமணம் செய்து கொடுத்தான் ராஜன். சீரும் சிறப்புமாய் மகளைப் புருஷன் வீடு அனுப்பி வைத்தான்.

இதுவரை எல்லாம் சரிதான். ஆனால் புருஷனைப் பற்றிய செய்திகள் அரண்மனையில் லேசுபாசாய் காதில் விழவும் இராமாபாய் திடுக்கிட்டாள். அதற்கேற்றபடி அவனும் நேரம்கெட்ட நேரத்தில் அந்தப்புரம் வருவதும், அவளுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. நேராக மாமனாரிடம் சென்றாள். மகனின் நடத்தை குறித்துக் கேட்டாள். அவர் வருத்தத்துடன் "அம்மா, என்னை மன்னித்துவிடு. நீ கேட்ட தெல்லாம் பொய் என்று சொல்ல நான் ஆசைப்படுகின்றேன். ஆனால் முடியவில்லையே! உன்னைப் போல் ஒரு

குணவதி, அழகி அவனுக்கு மனைவியானால் திருந்தி விடுவான் என்று தப்புக் கணக்குப் போட்டு உன் வாழ்க்கையைப் பாழாக்கி விட்டேன்" என்றார்.

பேதை என்ன செய்யமுடியும்? மகள் மகிழ்ச்சியாய் வாழ்கிறாள் என்று நினைத்திருக்கும் தந்தைக்குச் செய்தி எட்டக் கூடாது என்று தீர்மானித்துக் கொண்டாள். ஒன்று, தந்தை விசனத்தால் நோயில் விழுவார். இல்லையானால் தாறுமாறாய்ப் பேசி, தன்னை அழைத்துச் சென்று விடுவார். ஊஹூம்... அது சரியில்லை. இதெல்லாம் என் தலையெழுத்து.. கண்ணீரால் அழிக்க முடியாது. எப்படியும் கணவனைத் திருத்தியே ஆக வேண்டும் என்று முடிவெத்தாள். அன்று ஏகாதசி. பூஜை நடந்து கொண்டிருந்தது. "பாதரட்சைகளோடு வரக்கூடாது "என்று எத்த னையோ தடுத்துப் பார்த்தாள் இராமாபாய். "இதென்ன பஜனை மடமா? கோயிலா?"

"முதலில் நாட்டிலுள்ள பஜனை மடங்களை இடித்து நடன அரங்கங்கள் கட்டினால் அரசாங்கத்துக்கு வருமானமாவது பெருகும். நாட்டில் எத்தனை சோம்பேறிகள் உலா வருகிறார்கள் என்று இப்போது தானே தெரிகிறது!" என்று சீறினான். அவ்வளவோடு பூஜை நின்றது. இன்னொரு துவாதசி. அதிதிகள் தயிர்சாதம் சாப்பிட்டுக் கொண் டிருந்தனர்.

ராமாபாயின் கணவனுக்கு வந்த கோபத்தில் அவர்களைத் தடி கொண்டு அடித்து விரட்டிவிட்டான். ராமாபாயால் கண்ணீர் விடுவதைத் தவிர வேறெதுவும் செய்ய இயலவில்லை. இந்த நிலையில் ராமாபாய் ஒரு ஆண் குழந்தைக்குத் தாயானாள். ராமாபாயின் கணவனுக்குக் குழந்தைமேல் எல்லையற்ற பிரியம். தினமும் சிலமணி நேரங்களாவது, குழந்தையினருகில் கழிப்பான். அதன் விளையாட்டுக்களிலும், சிரிப்பிலும் தன் கோபத்தைச் சற்றுக் குறைத்திருந்தான்.

அன்று ஏகாதசி. ராமாபாயின் விரதத்தை ஏளனம் செய்வதுபோல், ஆட்டை, வெட்டி சமையல் செய்யச் சொன்னான் அவள் கணவன். அவள் பூஜை அறையினருகேயே, அவன் மேற்பார்வையில் ஆட்டைவெட்ட ஏற்பாடானது. இராமாபாய் துடித்தாள்.

அவன் காலில் விழுந்து "ஜீவஹிம்சை செய்வது மகா பாபம். கடவுளால் படைக்கப்பட்ட உயிரைத் துடிக்கத் துடிக்கக் கொல்ல நமக்கு யார் அனுமதி கொடுத்தது? அதிலும் இன்று ஏகாதசி. எல்லோரும் விரதம்

இருக்கும் போது தாங்கள் இப்பாதகம் செய்யலாமா? வேண்டாம். ஆட்டை அவிழ்த்து விடுங்கள்" என்று கதறினாள்.

அவனுக்கோ அவள் அழுகை வேடிக்கையாயிருந்தது. "உன் பெருமாள்தான் சகலகலா வல்லவராயிற்றே! ஆட்டை வெட்டவிடாமல் தடுக்கிறாரா பார்ப்போம்" என்று சவால்விட்டபடி சைகை காட்டினான். அவன் ஜாடையைப் புரிந்து கொண்ட கசாப்புக்காரன் துடிக்கத் துடிக்க ஆட்டை வெட்டினான்.

ராமாபாய் மனமுடைந்து போனாள். அதே சமயம் குழந்தை அழும் சப்தம் கேட்டது. "என்ன, ஒரு ஆட்டுக்காக ஒப்பாரி வைக்கிறாய்? என் மகன் அழுகிறான். போய் கவனி" என்று அதட்டினான் கயவன். இராமாபாய் எழுந்தாள். "நிச்சயம் குழந்தையைச் சாக்காக வைத்து இவரைத் திருத்த வேண்டும். நாட்டுக்காக எத்தனையோ பேர் என்னென்னவோ தியாகம் செய்திருக்கிறார்கள். ராஜகுமாரர்களைக் காப்பாற்ற தன் குழந்தையைப் பலி கொடுத்த தாதிப் பெண்கள் எத்தனை பேர்! தாய்ப் பாசம் பெரியது தான். இது விஷப்பரிட்சைதான். ஆயினும் நான் இதைச் செய்தே ஆகவேண்டும்." என்று தீர்மானித்தபடி தொட்டி லின் அருகில் சென்று மகனை வாரி எடுத்து முத்தமிட்டாள். பசியோடு

இருக்கும் மகனுக்கு நெய்யும் பருப்பும் மட்டுமல்லாமல் விஷத்தையும் கண்ணீரோடு கலந்து ஊட்டினாள்.

"மகனே! என்னை மன்னித்து விடு; இப்படிப்பட்ட கொடிய தந்தைக்குப் பிறந்ததற்காக உன் உயிரைப் பணயமாக்குகிறேன். உயிர் வதையைத் தடுக்கக் கூடுமோ என்ற சபலத்தில் உன் அன்னை தரும் விலை இது" என்று மனதிற்குள் புலம்பினாள்.

அதேசமயம் குழந்தை மயங்கி வீழ்ந்தது. அதைத் தொட்டிலில் கிடத்திவிட்டு, சோறூட்டிய கிண்ணம் முதலானவைகளை சுத்தம் செய்து விட்டு, வந்து பார்க்கும் போது குழந்தை இறந்து விட்டது. இளகிப்பெருகிய துக்கத்தை விழுங்கியபடி, கண்ணனைப் பிரார்த்திக்கின்றாள்.

"காளிங்கன் கக்கிய விஷம் உன்னை எதுவும் செய்யவில்லை. உன் மேல் பாரத்தைப்போட்டு விட்டுத்தான் இந்தக் காரியத்தைத் துணிந்து செய்தேன். இதன் காரண காரியங்களை நீ அறிவாய். இதை ஆரம்பிக்கத் தான் எனக்குத் தெரிந்தது. சுபமாய் முடித்து வைக்க வேண்டியது உன் பொறுப்பு." பிறகு உரத்த குரலில் அழலானாள். "ஐயோ, என் கண்மணியைப் பாருங்களேன்!" அவள் கணவனும், தாதியரும், ஏவலர்களும் ஓடி வந்தனர்.

"இது எப்படி நேர்ந்தது? நீதானே சோறுட்டினாய்?" கணவன் விசாரித்தான். "நன்றாகத்தானே சாப்பிட்டான். திடீரென்று கையும் காலும் இழுத்துக் கொண்டு, கண்சொருகிக் கொண்டதே! ஆட்டை வெட்டும் போதே சொன்னேன் கேட்கவில்லை" என்று கூற, அவன் ஆத்திரத்துடன், "ஆடும், அரசகுமாரனும் ஒன்றா? கசாப்புக் கடைக்காரன் குழந்தைக ளெல்லாம் செத்துக் கொண்டா இருக்கிறது? ஏகாதசி, விரதம், பூஜை, அன்னதானம் என்று எவ்வளவு செலவிட்டாய்! ஒன்றுக்காவது பலன் இல்லையே! கண்ணன் கருணை வடிவினன். குருநாதரின் இறந்த பிள்ளையை மீட்டுத் தந்தான் என்றெல்லாம் கதையளப்பாயே! என் மகனைக் காப்பாற்றவில்லையே..." என்று வாயில் வந்தபடி புலம்பினான். கதறி அழுதான்.

ராமாபாய் அமைதியாக "பரந்தாமன் பக்த வத்சலன் தான். நிச்சயம் உங்கள் மகனைப் பிழைக்க வைப்பான். இனிமேல் ஜீவஹிம்சை செய்வதில்லை. அடியார்களை இம்சிப்பதில்லை. தீய வாழ்க்கை முறையை ஒழித்து நன்னெறியில் நடக்கிறேன் என்று சத்தியம் செய்யுங்கள்" என்றாள்.

அவன் "என்மகன் உயிரோடு எழுவானாயின் நீ சொல்கிறபடி நடக்கிறேன்" எனவும், "முதலில் கோயிலில் போய் ஏதேனும் பாகவதோத்தமர்களை அழைத்து வாருங்கள்" என்றாள் இராமாபாய். "நான் கூப்பிட்டால் வருவார்களா? தூரத்தில் என்னைப் பார்த்ததுமே ஓடிவிடமாட்டார்களா" என்றான் சந்தேகத்துடன்."ஹரிநாம சங்கீர்த்தனத்துடன் போங்கள். முன்னாலேயே பணிப்பெண்ணிடம் சேதி சொல்லி அனுப்புகிறேன். பக்தர்கள் நெஞ்சில் வஞ்சமற்றவர்கள். வன்மம் வைத்துக் கொள்ள மாட்டார்கள். யாருக்கு ஆபத்து என்றாலும் ஓடிவரும் இயல்புடையவர்கள்" என்றாள் இராமாபாய்.

"ஹரி ஹரி நாராயண!" என்று நடுங்கும் குரலில் ஜபித்தபடி கோயிலுக்கு ஓடினான் இளவரசன். முன் கூட்டி சேதி அனுப்பிய இராமாபாய் பூஜாவிக்ரகத்தின் முன் கண்மூடிப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள்.

"பரசுராமனாய் அவதாரம் எடுத்து பெற்ற தாயையே வெட்டிக் கொன்று மறுபடி சேர்த்தவனே! நான் எனக்காகக் கேட்கவில்லை. அவர் திருந்த இது கடைசி சந்தர்ப்பம்! சீதா தேவி! கற்பினால் நெருப்பிலிருந்தே மீண்டு வந்தாளே! என்மகனை அக்கினிக்கு தத்தம் செய்யாமல் காப்பாற்று. ஜெயஹரிவிட்டல! பாண்டுரங்கா! அன்று 'ஆதிமூலமே' என்றலறிய யானைக்கு அபயமளித்தவனே!" எனப் பலவாறு புலம்பியவாறிருந்தாள்.

மிருதங்கம், ஜால்ரா, சிப்ளாக்கட்டை சப்தத்துடன் பஜனை வரும் சப்தம் கேட்டது. கண்ணைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்து அவர்களை வரவேற்றாள். இராமாபாய்க்கு ஆறுதல் கூறியவர்கள் துளசி தீர்த்தத்தை குழந்தை வாயில் நெம்பி ஊற்றினர். குழந்தை விழித்தது. இராமாபாயின் கணவன் அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை. அவர்களுக்குப் பாதபூஜை செய்து, நன்கு உபசரித்து அனுப்பி வைத்தான்.

அன்று முதல் அவன் புலால் உண்ணுதலை தவிர்த்ததோடு தீய பழக்கங்களையும் அறவே ஒழித்தான். இராமாபாயுடன் சேர்ந்து பூஜை, பஜனை, விரதம் என்று பக்தி பூர்வமாக மாறி நேர்வழியில் அரசாண்டான். உத்தம பத்தினி வாய்த்துவிட்டால் அதமனும் திருந்தி விடுவான் என்பது நிஜமாயிற்று என்று குடிமக்கள் கொண்டாடினார்கள். மாமனார், மருமகளைப் போற்றிப் புகழ்ந்தார். இராமாபாய் கொண்ட தீவிர பக்தியினால் அவள் வாழ்க்கை ராஜபாட்டையில் அமைதியாகச் சென்றது.

41. ஸ்ரீ கோராக்கும்பார்

மண்பிசைந்து சட்டிபானை செய்வதைக் குலத்தொழிலாய் கொண்டவர்களைக் கும்பார் என்றழைப்பதுண்டு. அத்தகைய கும்பார் குலத்தில் உதித்த உத்தமர் அன்னையா. அவர் மனைவி சத்தியவதி கணவனுக்கேற்ற குணவதி. கணவரின் தெய்வபக்தியிலும், தொழிலிலும் சமபங்கு எடுத்துக்கொண்டதால் இல்லறம் இனிமையாகச் சென்றது.

அவர்களுக்கு இருபிள்ளைகள். மூத்தவன் கோரா. இளையவன் எற்றன்னா. இருவரும் பெற்றோரைப் போலவே தெய்வ பக்தியில் சிறந்து விளங்கினார்கள். 'தோடகிபுரத்'திலிருந்து விசேட நாட்களில் பண்டரீபுரம் சென்று பாண்டுரங்கனை வழிபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இருவருக்கும் சிறந்த கல்விப் பயிற்சி அளித்தார் தந்தை. குலத்தொழிலையும் சிரத்தையோடு கற்றுக் கொண்டனர். 'விசுவ போதகர்' என்ற மகானிடம் உபதேசமும் பெற்றுக் கொண்டனர்.

திருமண வயது வந்ததும் கோராவுக்குப் பத்மாவதி என்ற பெண்ணை மணம் செய்து வைத்தனர் பெற்றோர்.

பத்மாவதி மாமியைப் போலவே கணவனின் மனம் அறிந்து நடந்து கொண்டாள். கணவருக்கு மண்பிசைந்து தருவது, அதிதி உபசாரம் செய்வது. பூஜைகளுக்கு முகம் சுளிக்காமல் நிவேதனம் தயாரிப்பது, பூத்தொடுப்பது. மைத்துனரிடம் அன்புடன் பழகுவது என்று இருந்ததால் கோராவுக்குக் குடும்பப் பிரசினை எதுவும் இல்லை.

மருமகளின் இந்த அனுசரணையில் திருப்தியடைந்த மாமியாரும், மாமனாரும் விரைவிலேயே இறைவனடி சேர்ந்தார்கள். "பானை நிறைய சேர்ந்து போச்சு. இன்னைக்கு சூளை போடணும் தம்பீ" என்றார் கோரா. எற்றன்னா சூளை போட்டார். வரட்டியில் தீமூட்டினார். தீ கொழுந்து விட்டு எரிந்தது. 'மியாவ், மியாவ்' என்ற சப்தம்.

"ஐயோ, தம்பீ... பூனைக்குட்டிங்கபோல இருக்கே" பதறினாள் பத்மாவதி. கோராவும், எற்றண்ணாவும் தவித்தனர். ஆனால் அந்தோ... சின்னஞ்சிறு பூனைக்குட்டிகள் வெந்திருந்தன. எற்றன்னா மனம் வெதும்பி தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டார்.

பத்மாவதியும், கோராவும் எவ்வளவோ சமாதானம் சொல்லியும் அவர் மனம் திரும்பவில்லை. கங்கையில் நீராடி மனம் நேரானபின் வருகிறேன் என்று பிடிவாதமாகக் கிளம்பி விட்டார். அப்போது பத்மாவதி கர்ப்பிணி. சில நாட்களில் அவளுக்கு அழகிய ஆண்குழந்தை பிறந்தது. பத்மாவதிக்கு அதன் மீது கொள்ளைப் பிரியம்.

கோராவுக்கு என்றுமே இல்லறத்தில் பற்றுக் கிடையாது. பெற்றோரின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டே பத்மாவதியை மணந்து கொண்டார். அவருக்கு பக்தி தான் சாப்பாடு, தூக்கம், தொழில் எல்லாம். பத்மாவதி ஞாபகப்படுத்தினால் தான் சாப்பிடுவார். 'மண் பக்குவப்பட்டு விட்டதே! இன்னும் மிதித்துக் கொண்டிருக்கிறீர்களே' என்றால் தான் வேலையில் கவனம் திரும்பும்.

'அகாலமாகிவிட்டதே! தூங்கினால் தானே காலையில் சந்தைக்குப் போக எழுந்திருக்கலாம்" என்று ஞாபகப்படுத்தினால் தான் படுப்பார். இப்படிப் பட்டவருக்கு குழந்தையிடம் என்ன பிடிப்பு இருக்க முடியும்? குழந்தையின் விளையாட்டு, சிரிப்பு, பேச்சு எல்லாவற்றிலும் அவர் கண்ணனையே கண்டார். அவருக்கு எல்லாமே, எப்போதுமே கண்ணன் நினைவு தான்!

யாராவது பாண்டுரங்கன் பெயரைச் சொல்லிக் கொண்டு வந்தால் இலவசமாகப் பானையைத் தூக்கிக் கொடுத்து விடுவார். அதற்காகச் சந்தைக்குத் தானும் போவாள் பத்மாவதி. குழந்தை பிறந்த பிறகு செலவும் அதிகம். கோராவினுடைய பித்துக்கொள்ளிப் பக்தியால் வருமானமும் குறைந்துவிட்டது. இந்த அழகில் அதிதி உபசாரம், பூஜை என்றால் எத்தனை காலம் தாக்குப்பிடிக்க முடியும்! வறுமை தலைகாட்டத் தொடங்கியது.

ஆனாலும் கணவரைக் கடிந்து கொள்ள மனமில்லாது பொறுமையாய் இருந்தாள் பத்மாவதி. ஒரு நாள்; சாயங்காலம் மண் மிதித்துக் கொண்டிருந்தார் கோரா. பத்மாவதி குழந்தையைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு சமையல் சாமான்கள் வாங்கி வரச் சென்றாள். தாயைப் பிரிய மனமில்லாத குழந்தை அழுதான். கோரா அவனிடம் "கண்ணா, அங்கேபார்... காக்கைகள் பறக்கின்றன... காக்கையும் கறுப்பு. என் கண்ணனும் கறுப்பு. என் கையிலும் சக்கரம் சுழல்கிறது. அவனிடமும்

சக்கரம் சுழல்கிறது. இதோபார், அப்பா ஆடுகிறேன்...” ஜெய ஜெய விட்டல... பாண்டுரங்க விட்டல” என்று கையைக் கொட்டிக்கொண்டு குதித்தார்.

குழந்தை அழுகையை நிறுத்திவிட்டு பாட்டையும், ஆட்டத்தையும் கவனிக்கத் தொடங்கியது. அவ்வளவுதான்! கோராவுக்கு உற்சாகம் பிய்த்துக் கொண்டது. குதித்து குதித்து பஜனை செய்தார். சூழ்நிலையை மறந்தார். வீட்டை மறந்தார். குழந்தையை மறந்தார். ஏன் தன்னையே மறந்து ஆடினார்.

இப்படிப்பட்டவர் குழந்தை தவழ்ந்து தன் காலடியில் வந்ததை எப்படி உணர்வார்? மண்ணோடு சேர்ந்து குழந்தையும் மிதிபட்டது. அதன் அழுகுரல் அவர் பாட்டு சப்தத்தில் அமுங்கி விட்டது. எழுந்திருக்க முயன்று தோற்று, அழுத குழந்தையின் ஹீனஸ்வரம் காற்றில் கரைந்தது.

என்னே விதி! பத்மாவதி பக்கத்து வீட்டிலிருந்து பாலகன் பசி பொறுக்க மாட்டானென்று பருப்பும், நெய்யும் கலந்தசோறு இரவல் வாங்கிக் கொண்டு சாமான்களோடு வந்து சேர்ந்தாள். அவள் சற்றுமுன் வந்திருந்தால் மைந்தனின் மரணத்தைத் தடுத்திருக்கலாம். கோராகும் பாரும் பழியிலிருந்து தப்பியிருப்பார்.

‘குழந்தை எங்கே’ என்றாள் பத்மாவதி. சுயநினைவுக்கு வந்த கோரா “எங்கே?” என்று கூடவே கேட்டார். அவன் விளையாடிய சிறுதேர் மண்ணருகே கிடந்தது. பத்மா வீடெல்லாம் தேடினாள். அக்கம் பக்கம், வாசலெல்லாம் ஓடிப்பார்த்தாள். அப்போது தான் மிதிக்கப்பட்ட மண்ணிலே பளபளவென்று ஏதோ மின்ன, திடுக்கிட்டு அதை எடுத்தபோது... ‘ஐயோ’வென்று அலறினாள். அது குழந்தையின் தண்டையணிந்த குஞ்சுப்பாதம். நடந்த விபரீதத்தை எண்ணி கோராவுக்கு நெஞ்சை அடைத்தது.

குழந்தையைத் தேடி அள்ளி மடியில் போட்டுக் கொண்டு பத்மாவதி கதறிய கதறல், அவள் வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்ட அடி, காண்பவரைக் கதிகலங்க வைத்தது. கோரா மனைவியைத் தேற்றினார். “பத்மா, இது கொடுமை தான். ஆனாலும் அவன் பிறக்கும் போதே பிரம்மன் அவனுக்கிட்ட விதி இது. இதைத்தடுக்க எவரால் ஆகும்?

என்றைக்கு ஜனனமோ அன்றைக்கே மரணமும் உறுதி செய்யப்பட்டு விடுகிறது. அது ஆறுநாளிலும் வரலாம். அறுபது வயதிலும் வரலாம். மனதைத் தேற்றிக்கொள். இப்படி துக்கிப்பதால் உன் உடம்புதான் கெடும் ஆகவேண்டியதை கவனிப்போம். எழுந்திரு.” பத்மா சீறினாள்.

“செய்வதையும் செய்துவிட்டு வேதாந்தமா பேசுகிறீர்கள். உங்கள் பக்தியால் பொருள் நஷ்டமானபோதெல்லாம் பொறுமையாகத்தான் இருந்தேன். என் கண்மணியைக் கொலை செய்து விட்டீர்களே! இதென்ன பக்தி! கொலைகார பக்தி! இது பக்தியல்ல, வெறி! உங்கள் பாண்டுரங்கன் தெய்வமல்ல... கல்” அவ்வளவுதான்! கோரா வெகுண்டெழுந்தார். தன்னைத் திட்டினால் சகித்துக் கொள்பவர், தன் கண்ணனைத் திட்டியதைத் தாங்கமாட்டாமல், பானைவனையும் சக்கரத்தை இயக்கும் மூங்கில் தடியை எடுத்துக் கொண்டு கோபாவேசமாய்,

“ஒழிந்து போ... நான் கண்ணனை நினைத்தால் மெய்மறந்து விடுவேன் என்று தெரிந்தும், குழந்தையை என்னிடம் விட்டது உன் தப்பு” என்று சீறிக் கொண்டே அவள் மீது பாய்ந்தார். அவர் கண்ணில் மின்னும்



கோர வெறியைக் கண்டு பத்மாவதி பயந்தாள். அவரைத் தடுக்க சட்டென்று அவள் நாவில் வந்த வார்த்தைகள் "உங்கள் பாண்டுரங்கன் மேல் ஆணை; என்னைத் தொடாதீர்கள்" என்று அலறினாள்.

அவரைக் கட்டுப்படுத்த பக்தி ஒன்றினால்தான் முடியும் என்பது அவளுக்குத் தெரியும். கோரா தடியை ஓங்கியது ஓங்கியபடி, அப்படியே நின்று விட்டார். சற்று நேரமானதும் தான் சுயநிலைக்கு மீண்டார். பிறகு தடியை வீசி எறிந்துவிட்டு "உன் ஆத்திரம் நியாயமானதுதான். பத்துமாதம் சுமந்தவளுக்குத் தானே பிள்ளையின் அருமை தெரியும்" என்றார்.

அதற்குள் சில நாஸ்திகர்கள் காவல் படையினருக்கு இச்செய்தியைத் தெரிவிக்க காவலர்கள் கோராவை விசாரிக்க வந்தனர். தூரத்திலிருந்தே அவர்கள் வருவதை பார்த்தாள் பத்மாவதி. 'கணவனைச் சிறை செய்வதால் மகன் திரும்ப வரப்போவதில்லை!' என்று யோசித்தவள், உளுத்திருந்த கூரைக்கம்புகளை மூங்கில் தடியால் தள்ளி கூரையைப் பிரித்துப் போட்டாள்.

காவலர்கள் வந்ததும் கூரை இடிந்து மகன் இறந்து விட்டதாக அழுதாள். கோராவைப் பேச விட்டால் தானே! பத்மாவதியின் பதிபக்தியை நினைத்து, தான் அதற்கு சிறிதும் அருகதையற்றவன் என்று கோரா நொந்து கொண்டார். முக்கியமான சாட்சியே மாறுபாடாய் சொல்லும் போது காவலர்கள் என்ன செய்ய முடியும்? பேசாமல் திரும்பி விட்டனர். குழந்தையை துக்கத்துடன் அடக்கம் செய்தார் கோரா. மறுநாள்; அதற்கும் மறுநாள்; கோரா மண் பிசைவதும், பானை வனைவதுமாக இருந்தாரேயன்றி குளிக்கவோ, சாப்பிடவோ, தூங்கவோ இல்லை. மூன்று நாட்கள் குப்புற விழுந்து கிடந்த பத்மா எழுந்தாள்.

"இப்படியும் ஒரு மனிதரா? பாண்டுரங்க நாமமே சாப்பாடும், தூக்கமுமா!" என்று நொந்து கொண்டவள். தானே மனம் தேறி, சமையல் செய்துவிட்டு, சாப்பிட அழைத்தாள். கோரா "பத்மா! நாம் சாதாரண மனிதர்கள் தான்! யோகிகளல்ல... ஆனாலும் ஆணையை மீறலாமா? உன் கைபட்டு சமையல் செய்ததை நான் எப்படி சாப்பிட முடியும்? நீ போய் சாப்பிடு" என்றார். பத்மா திடுக்கிட்டாள். "இதென்ன வம்பு! கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாய் கிளம்புகிறது!" என்று நினைத்தவள்,

"இதோ பாருங்கள்... நானே வெந்து புழுங்கிக் கிடக்கிறேன். அதில் ஈட்டி கொண்டு கிளறாதீர்கள்! ஏதோ பயத்தில், கோபத்தில் சொன்ன வார்த்தைகளுக்கு அர்த்தமே கிடையாது" இப்படி என்னவெல்லாமோ, எப்படியெல்லாமோ சொல்லிப் பார்த்தாள்.

கோராவோ பிடிவாதமாக இருந்தார். "சரி, நீங்களேயாவது சமைத்துச் சாப்பிடுங்கள்" என்று மன்றாடினாள். அரை மனதோடு ஒப்புக் கொண்டார் கோரா. ஒரே வீட்டில் கணவனும் மனைவியும் தனித்தனி அடுப்பு வைத்து சமைத்து சாப்பிட்டனர். "பத்மா... மண்ணைத் தொடாதே...! தானே மண்ணைப் பிசைந்து பானை செய்து கொண்டார். பத்மா தலைவிதியை நொந்து கொண்டு விம்மி, விம்மி அழுதாள்.

"மகனைப் பிரித்துக் கொண்ட மாதவா! கணவனிடமிருந்தும் பிரித்துவைத்த உன்னை காருண்யமூர்த்தி என்று எப்படிச் சொல்வேன்!" எப்படியோ யந்திரம் போல் காலம் கழிந்தது. ஊரார் கோராவை இகழ்ந்தனர். கேலி செய்தனர். கோரா எதையுமே லட்சியம் செய்யாமல் வாழ்ந்தார். பத்மாவதிக்குத்தான் கோராவின் நிலை சங்கடத்தை உண்டாக்கியது. தேசாந்திரம் போன மைத்துனரையும் காணோம்! இப்படி வம்சாவளி அற்றுப்போக காரணமாகி விட்டோமே! இதற்குப் பிராயச்சித்தம் செய்யவேண்டுமே" என்று அல்லும் பகலும் உளைந்தாள். முடிவில் பிறந்த வீட்டுக்குப் புறப்பட்டாள்.

"ஏனப்பா, இரண்டாம் தாரமே என்று யோசிக்கிறீர்களா?"

"என்னம்மா நீ! அதெல்லாம் இல்லை. கோராவைப் போல் ஒரு மாப்பிள்ளை கிடைக்க உன் தங்கை கொடுத்து வைத்திருக்க வேண்டும்! ஆனால் உன்னையே ஒதுக்கி வைத்திருப்பவன், இன்னொரு பெண்ணை மனைவியாக்க ஒப்புக்கொள்ள வேண்டுமே என்று தான் யோசிக்கிறேன்"

ானே முன்நின்று முடிக்கும் போது தயக்கமென்ன? அப்பா, பாகவதர்கள் சொன்னால் அவர் தட்டமாட்டார். இப்போ இந்த ஊரில் வந்திருக்கும் பாகவத கோஷ்டியாரிடம் சொல்ல சொல்லிச் சொல்லுங்களப்பா". மகளின் யோசனைப்படியே நடந்தார் கோராவின் மாமனார். அவர்களும் கோராவிடம் பலவிதமாய் எடுத்துக் கூறினர். "ஸ்வாமி, பத்மாவையே நான் விருப்பமில்லாமல்தான் மணந்தேன். இல்லறத்தில் என்னைத் திணிக்காதீர்கள்!"

"கோரா! தாமரை தண்ணீரிலேயே இருந்தாலும் நனைவதில்லை. சிப்பி நீரிலேயே கிடந்தாலும் கெடுவதில்லை. சந்ததியை விருத்தி செய்வது பிள்ளைகளின் கடமை. உன் மகன் இறந்ததையும், மனைவியின் ஆணையையும் பாண்டுரங்கன் திருவிளையாடல் என்று ஏற்கும் நீ இதை மறுப்பானேன்! பக்தியும், பத்தினியும் முரண்பட்டவர்களல்ல..."

இப்படிப் பலவிதமாய் வற்புறுத்தவும், கோரா அரைமனதுடன் சம்மதித்தார். திருமணம் நடந்தது. மணக்கோலத்தோடு மாமனாரிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டார். பத்மாவதி அவர்களை வரவேற்க முன்கூட்டியே தோடகிபுரம் சென்று விட்டாள். வில் வண்டியில் புதுமணப் பெண் ஏறியாயிற்று கோரா சொல்லிக் கொண்டு கிளம்பும்போது, ாமனாருக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

"மாப்பிள்ளை, பத்மாவை எப்படி வைத்துக் கொண்டிருக்கிறீர்களோ, அதேபோல்தான் இவளையும் நடந்த வேண்டும்" என்றார்.

"அதெப்படி முடியும்?" என்று கோரா ஆட்சேபிக்க மாமனார், "உங்கள் பாண்டுரங்கன் மீதாணை. இருவரையும் சமமாகவே நடத்தவேண்டும். துளி வித்தியாசமும் கூடாது" வார்த்தையின் விபரீதம் புரியாமல் மாமனார் இப்படிச் சொல்லவும், கோராவுக்குத் தலை சுற்றியது.

"இதென்ன கொடுமை! இதற்கேன் திருமணம்! இறைவா, இதுவும் உன்திருவிளையாடலா!" என்றபடி விடைபெற்றார்.

புதுமணப் பெண்ணின் ஆடையும் மேலே படாதபடி வண்டியில் அமர்ந்து கொண்டார். வண்டி ஊர் வந்தது. பத்மாவதி நினைத்ததை சாதித்து விட்டோம் என்று பூரித்தபடி தங்கையையும், கணவரையும் வரவேற்றாள். 'இப்படியும் ஒரு பெண்ணா' என்று ஊரார் அதிசயித்தனர். இரவு கோரா வீட்டிலே தங்கவே இல்லை. இப்படி ஒரு நாளா, இரண்டு நாளா பதினைந்து தினங்கள் ஓடிவிட்டன. சகோதரிகள் இருவரும் காரணம் புரியாமல் விழித்தனர்.

பத்மாவதி கோராவிடம் இதைபற்றிக் கேட்ட போது, கோரா அவள் தந்தை புறப்படும்போது சொன்ன வார்த்தைகளைக் கூறினார். பத்மாவதி இடிந்து போய் உட்கார்ந்து விட்டாள். தங்கை துக்கத்துடன் தலைசீவி, பூ வைத்து எதுவும் செய்யாமல் சோர்ந்து காணப்பட்டது பத்மாவதிக்கு

வேதனையைத் தந்தது. கோராவோ பிடிவாதமாக இருந்தார். "ஏனக்கா, அவர்தான் நம்மைத் தொடக்கூடா தென்றிருக்கிறார். நாமாக அவரைத் தொட்டுவிட்டால் என்ன செய்வார்?" என்று கேட்டாள் தங்கை.

பத்மாவதி சிந்தித்தாள். "ஆமாம்... என்ன செய்வார்? ஈசுவர சங்கல்பம் என்ற பேசாமல் இருப்பார். இதுவும் நல்ல யோசனைதான்" என்று தங்கையைப் பாராட்டினாள். அன்று இரவு கோரா அயர்ந்து தூங்கும்போது, இருவரும் அவருக்கு இருபக்கத்திலும் அமர்ந்து அவர் கையை வருடினர். விஷம் தீண்டியது போல் திடுக்கிட்டு எழுந்தார் கோரா.

'ஆ! ஆணை மீறப்பட்டதே! பாண்டுரங்கன் மீதான ஆணையை மீறிய கை இந்த உடலில் இனி இருக்ககூடாதென்று வெட்டரிவாளில் கைகளைத் துணித்துக் கொண்டார். கொட்டும் இரத்தத்தைக் கண்டு இளையவள் மூர்ச்சை அடைய, மூத்தவள் கதறினாள்.

"கல்லுப்போல இரு மனைவியர் இருந்தும் தானே சமைத்துச் சாப்பிடுவதும், தானே மண்பிசைந்து கொள்ளுதலும், சந்ததி விளங்க வழியில்லாமல் போனதும் தான் தங்களை இப்படிச் செய்யத் தூண்டியது" என்று புலம்பினாள் பத்மாவதி. வேதனையால் துடித்துக் கொண்டிருந்த கோராவோ 'ரங்கா, ரங்கா' என்றாரேயன்றி வேறெதுவும் பேசவில்லை.

"என்னண்ணா ரத்தம்? கையை வெட்டிண்டு... அடாடா..." பயணப்பையை ஒரு பக்கமாக வைத்த தம்பி எற்றன்னா, மேல் வேஷ்டியைக் கிழித்துக் கட்டுப்போட்டார். எற்றன்னாவைப் பார்த்ததும் பத்மாவதிக்குத் துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது. 'தம்பீ' என்றலறினாள்.

"அடாடா... கண்ணைத் துடைங்க அண்ணி! அதான் நான் வந்துட்டேனே! குடும்பம்னா ஆயிரம் இருக்கும்... மனசைத் தளர விடலாமா? நான் எல்லாம் கேள்விப்பட்டேன். தைரியமா இருங்க... நிச்சயம் அண்ணன் மனசு மாறும். சின்ன அண்ணிக்கு முகத்திலே தண்ணி தெளிங்க... அண்ணனை இனிமே நான் கவனிச்சுக்கறேன்" எற்றன்னாவின் பேச்சு பத்மாவதிக்குத் தெம்பாக இருந்தது. "எற்றன்னா! சாதாரணமா நீ இத்தனை பேசக் கூடியவனில்லையே! ஊர் சுற்றிய அனுபவமா? கங்கையில் நீராடினாயா? நீ இல்லாமல் என்னெல்லாம் ஆகிவிட்டது தெரியுமா? உங்கண்ணிக்குக் குழந்தை பிறந்து".

"அண்ணா... நீங்க இப்போரொம்பப் பேசக்கூடாது. சூடா பால் கொண்டுவரேன்; குடிச்சிட்டுப் பேசாமப் படுங்க... விடிந்ததும் பேசிக்கலாம்" கோராவை மெதுவாகப் படுக்க வைத்தான் எற்றன்னா. மயக்கம் தெளிந்து எழுந்த தங்கையிடம், எற்றன்னாவைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தாள் பத்மாவதி.

"தம்பீ, இனிமே என்னை விட்டு எங்கேயும் போகக் கூடாது. நீ தடவிக் கொடுத்தா அத்தனை வலி இல்லே... தூக்கம் வராப்போல இருக்கு. நீ நகர்ந்தா வலி துடிக்கிறதுடா" கோரா உருகினார். "தம்பி, என் பக்கத்துலேயே படுத்துக்கோ" அண்ணனுக்கு வேர்க்காமல் விசிறிக் கொண்டே ஆறுதல் சொன்னான் எற்றன்னா. பானை களை எடுத்துக் கொண்டு சந்தைக்குப் புறப்பட்டார் எற்றன்னா.

வழியில் கோராவை கிண்டல் செய்யும் முரடர்கள் வண்டியை மடக்கினர். "அடடே! எற்றன்னாவா? எப்ப வந்தே ஊரிலேயிருந்து...! காசிக்குப் போயும் கர்மா விடலியாக்கும்! உனக்கு ஒரு கலியாணமில்லே... உங்கண்ணன் பக்தி வேஷம் போட்டே ரெண்டு பொண்டாட்டி கட்டிக்கிட்டான்... ஆமாம், எற்றன்னா, காசியிலேருந்து மண் கொணாந்து செஞ்சபானையா இது... பானை என்ன விலை?"

எற்றன்னா புன்னகையுடன் "அண்ணே, உங்களுக்கில்லாத பானையா? உடையாத பானை செய்கிற வித்தையைக் கத்துக்கிட்டு வந்திருக்கேன். இது மந்திரப்பானை. கீழேபோட்டா உடையாது. அக்கிரமமா பேசறவங்களைத்தண்டிக்கும்" என்றான்.

"அப்படியா" என்று கேலியாகக் கேட்டவர்கள் "இது மந்திரப் பானையாம்! உடையாதாம்! அண்ணன் பக்திப்பானை... தானம் பண்ணுவான்... ஆளுக்கொண்ணு எடுத்துக் கீழே போடுங்கடா..." என்று ஆளுக்கொன்றை தூக்கிக் கீழே போட, பானை பந்து போல் கிளம்பி அவர்களைத்துரத்தி, துரத்தி அடித்தது. உடலெல்லாம் வீக்கம், காயம்.. தலை தெறிக்க ஓடினார்கள். எற்றன்னா விழுந்து விழுந்து சிரித்தான்.

அதுமுதல் எற்றன்னாவுக்கு ஊரில் மதிப்பு கூடியது. நல்லவருக்கு நல்லவனாகவும், வல்லவருக்கு வில்லனாகவும் இருந்தான் எற்றன்னா. பொம்மைகள் செய்து விற்று வந்தாள் பத்மாவதி. தன் குழந்தையைப் போல் யாராவது குழந்தைகளைப் பார்த்து விட்டால் வீட்டு ஞாபகமின்றி

அங்கேயே உட்கார்ந்து விடுவாள். எற்றன்னா போய் அவளை அழைத்து வருவான்.

கோரா அவனை ஒருநிமிஷம் காணாவிட்டால் துடித்து விடுவார். "அண்ணா, ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க?" அண்ணனுக்குக் கால் பிடித்துக் கொண்டே கேட்டான் தம்பி. சற்று எட்ட பத்மாவதியும், அவள் தங்கையும் உட்கார்ந்திருந்தனர்.

"தம்பீ... பண்டரீயில் பிரம்மோற்சவம். மனசெல்லாம் ரங்கனுடைய அலங்கார வடிவத்தைக் கண்குளிர சேவிக்க முடியவில்லையே என்று தவிக்கிறது. மற்றபடி எனக்கு வேறென்ன குறை? குழந்தையைப்போல் சாதம் ஊட்டி, தொண்டனைப் போல் துணி துவைத்துக் கொடுத்து, ரட்சகனாய் குடும்பத்தைக் காக்க நீ வந்தபிறகு எனக்குத் துன்பமே கிடையாது" கோரா பாசம் பொங்க தம்பியைப் பார்த்தார்.

"இவ்வளவுதானா! பண்டரீக்கு நான் அழைத்துப் போகிறேன் உங்களை! நிம்மதியாய்த் தூங்குங்கள்" என்றான் எற்றன்னா.

"தம்பீ, என் தங்கை கூட பண்டரீ திருவிழா போக வேண்டுமென்று கேட்டாள்" என்றாள் பத்மாவதி.

"அதற்கென்ன அண்ணீ, எல்லாருமே போகலாம்" என்றான் எற்றன்னா உற்சாகமாக!

"அடேயப்பா! எவ்வளவு பெரிய பந்தல்..." அதிசயித்தாள் இளையவள்.

"இங்கேதான் கதா காலட்சேபமெல்லாம் நடக்கும்" விளக்கினார் கோரா. "எற்றன்னா... இன்றைக்கென்ன பந்தலில் இத்தனை கும்பல். யார் பிரசங்கம்?"

"நாம தேவர் பிரவசனம் முடிந்து பஜனை... அண்ணா... முன்னாலே போக வேண்டாம். ரொம்ப நெரிசல்... இந்த இடம் வசதியாயிருக்கிறது. அண்ணி, இப்படி உட்காருங்கள். அண்ணாவைப் பார்த்துக் கொள்ளுங்கள். இதோ வந்து விடுகிறேன்" எற்றன்னா கூட்டத்தில் மறைந்து விட்டான்.

பிரவசனம் முடிந்து பஜனை தொடங்கியது. "ஹரிஹரி விட்டல.... ஜெய ஜெய விட்டல..." என்ற ஆக்ரோஷமான ஒலிகள். பக்தர்கள் கூடவே

நாமாவளியைச் சொல்லி தலைக்குமேல் கைதாளம் போட்டு பஜனை செய்தனர். கோராவும் தன் ஊனமுற்ற கையால் தட்டிக் கொண்டு மெய்மறந்து பாடினார்.

நாமதேவர் உரக்க "கோராவின் கைகள் முன் போல் ஆகிவிட்டன... பாருங்கள்! பாண்டுரங்கா, பண்டரீபுரத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் உன் கடைக்கண் நோக்கிற்காகக் காத்திருக்க தனிப்பட்ட ஒருவனுக்கு சேவை செய்வது தான் நீதியா! மண்பிசைந்து, சூளை வைத்து உன் விரல்கள் காய்த்துப் போகலாமா? கோராவின் பாதம் வருட அவர் என்ன பாக்கியம் செய்தார்?" என்று உருகினார். சகோதரிகளிருவரும் கணவரின் வளர்ந்த கைகளைப் பார்த்துப் பழி நீங்கிற்றென்று, கண்களில் ஆனந்த பாஷ்பம் பொங்க நின்றார்கள்.

பத்மாவதி எழுந்து நாமதேவரை வணங்கி, "எற்றன்னாவாக வந்தது எம்பெருமானா? அப்படியானால் ஏன் இந்த பாரபட்சம்? பக்தி மயக்கத்தில் மிதிபட்டு இறந்த என் செல்வத்தையும் மீட்டுத்தரக் கூடாதா அவர்?" என்று இறைஞ்சினாள்.



நாமதேவர் அன்புடன் "அம்மா, பண்டரீநாதனுக்கு அனைவரும் சமம்தான். சகலமும் அவனுக்கு சமர்ப்பணம் செய்தவர் உன் கணவர். நீயும் மெய்யுருகிப் பிரார்த்தனை செய்; இரங்குவார்" எனவும், பத்மாவதி,

"கண்ணா! மணிவண்ணா! மைத்துனன் என்றெண்ணி உன்னை வேலை வாங்கினதையோ, கோபித்துக் கொண்டதையோ மனதில் வைக்காதே! என் கணவரின் நன்மைக்காக நான் பாடுபட்டவள் என்பது சத்தியமானால். என் மீது கருணை காட்டி என் குறையைத் தீர்த்து வை" என்று கண்மூடிப் பிரார்த்தித்தது தான் தாமதம்.

'ம்மா...ம்மா' என்ற மழலையின் குரல் அமுதம் போல், பத்மாவதியை கண் விழிக்கச் செய்தது. பரபரப்புடன் பார்த்தான். மூலஸ்தானத்திலிருந்து அவள் குழந்தை தவழ்ந்து வந்து கொண்டிருந்தான். வாரி யணைத்து, உச்சி முகர்ந்து, முத்தமாரி பொழிந்தாள் பத்மா. பக்தர்கள் ஒரே ஆனந்த ஆரவாரம் செய்தனர்.

இளையவளும் நாமதேவர் கால்களில் பணிந்து "ஸ்வாமி, அப்போது நான்தான் பெரும் பாவியா?" என்று விம்ம, அவர் நடந்தது எதையும் அறியாமல் தியான நிலையிலிருந்த கோராவை உசுப்பி, "கோரா, எழுந்திரு.... முழுமையடைந்த உன் கைகளையும், உன் மனைவியின் அணைப்பில் இருக்கும் குழந்தையையும் பார். உன் தம்பியாக வந்து சேவை செய்த பண்டரீ நாதனின் அருளால் இனி இனிதே இல்லறம் நடத்து. உன் சபதப்படி கைகளை வெட்டிக் கொண்டாய்! இது பாண்டுரங்கன் அளித்தவை. தவறு என்றால் மறுபடி கைகளைத் தந்திருப்பானா...? அதிதி பூஜையும், இரக்கமும், அன்புமே இல்லற தர்மம்... கர்மாவை ஒழுங்காகச் செய்யச் சொல்கிறவன் கண்ணன். கட்டிய மனைவியரைக் கண்கலங்காமல் காப்பாற்று. உம். கண்ணன் கொடுத்த கையால் அவள் கையைப் பிடி" என்றார்.

கோராவுக்கு அப்போது தான் எல்லாம் புரிந்தது. பண்டரீநாதனின் அன்பை, சேவையை நினைத்து மெய்யுருகினார். நாமதேவரின் பாதங் களைப்பணிந்து அவர் சொன்னபடி இளையவளின் கை பிடித்தார். பின்னர் இரு மனைவியருடனும் திருவிழாக் கோலாகலங்களைக் கண்டு, களித்து விட்டு, ஊர் திரும்பி இனிதே இல்லறம் நடத்தினார்.

42. திரிலோசனதாஸர்

"திரிலோசனர் என்ற தட்டார் நீர்தானோ?"

"ஆம், அரசே" திரிலோசனர் பணிவுடன் வணங்கினார்.

"இளவரசிக்குத் திருமணம் நிச்சயமாகி இருக்கிறது. இன்றைக்கு நான்காம் நாள் நிச்சயதார்த்தம். மாப்பிள்ளை வீட்டார் பிரமிக்கும்படி ஒரு சந்திர ஹாரம் செய்ய வேண்டும். மூன்று நாட்களில் உங்களால் செய்ய முடியுமா?" என்று கேட்டார் மன்னர்.

"முடியும் அரசே" என்று வாக்களித்தார் திரிலோசனர். பொக்கிஷத்தி லிருந்து வேண்டிய பொன்னும், மணியும் தரும்படி உத்தரவிட்டார் அரசர். வாங்கிக் கொண்டு போகும் வழியிலேயே ஒரு பாகவத கோஷ்டியைப் பார்த்தார் திரிலோசனர்.

ஆடிமாத ஏகாதசிக்காகப் பண்டரீபுரம் புறப்பட்ட கோஷ்டி அது. பசியிலும், களைப்பிலும் சோர்ந்திருந்தனர். தன்வீட்டில் தங்கலாமென உபசரித்து அழைத்து வந்தார்.

அப்புறமென்ன? குளியல், சாப்பாடு, பஜனை, கதாகாலட்சேபம், வேதாந்த சர்ச்சைகள்! இரண்டு நாட்கள் கழிந்து அவர்கள் போன பிறகுதான் திரிலோசனருக்கு நகையின் ஞாபகமே வந்தது.

அதேசமயம் அரண்மனையிலிருந்து இரு சேவகர்கள் 'நகை எவ்வளவு தூரம் வந்திருக்கிறது' என்று பார்க்க வந்தார்கள். திரிலோசனர் அரண்மனைக்குச் சென்றுநடந்ததைக்கூறி மன்னிக்கும்படி வேண்டினார். கலியாணத்துக்குள் சிறப்பாகச் செய்து கொடுத்து விடுவதாகச் சொன்னார்.

அரசரின் கோபத்துக்கு அளவே இல்லை. "அதென்ன? அரசனின் உத்தரவைவிட ஆண்டிகள் கூட்டம் உமக்குப் பெரிதானதோ? நாளை மதியத்துக்குள் நகை வந்து சேராவிடில் கடும் தண்டனைக் குள்ளாவீர்" என்று எச்சரித்து அனுப்பினான். திரிலோசனர் திகைத்தார். 'மூன்று நாட்கள் இல்லாமல் சந்திரஹாரம் முடியாது. அரைகுறையாய் செய்து அவதிக்குள்ளாவதைவிட ஓடிவிடுவது மேல்' என்று அப்படியே காட்டிற்குப்

போய்விட்டார். அங்கே தியானத்தில் அமர்ந்தவர் அற்புதமான கவிதாபரணங்களை கடல் மடைபோல் பொழிந்து கண்ணனுக்குச் சமர்ப்பித்தார். "ஐயோ, பாவம்! இந்த திரிலோசனன்... இந்தக் காடென்ன தொலை தூரத்திலா இருக்கிறது! அந்த முஸ்லீம் அரசன் தேடிவந்து தண்டிப்பானே? இப்படித் தங்கத்தையும், நவரத்தினங்களையும் வாங்கி வைத்துவிட்டுப் பேசாமல் இங்கே வந்து உட்கார்ந்து கொண்டு, உங்கள் மேல் பாட்டுப் பாடிக் கொண்டிருக்கிறான்" என்றாள் ருக்மிணி பிராட்டி.

"ஐயோ பாவம்..." என்று ஆமோதித்தார் கண்ணன். "கூடப்பாடினால் சரியாயிற்றா?" அன்னை கோபிக்கவும், "அப்போது என்ன செய்ய வேண்டும்?" அப்பாவியாய் கண்ணன் கேட்டார்.

"அழகுதான்! நான் சொல்லித்தான் இதுவரை செய்தீர்களாக்கும்! ஜனாபாயோடு எந்திரத்தில் மாவுதிரித்தவர், நாமதேவர் வீட்டிலே கூடவே மண்வைத்தவர், ஏகநாதருக்கும், கோராவுக்கும் தொண்டு செய்தவர், திரிலோசனனுக்காக நகை செய்ய வேண்டியது தான்! 'என் பாட்டை நீ பாடுகிறாய்; உன் பாட்டை நான் படுகிறேன்" என்பது தானே உங்கள் வேதம்" ருக்மணிதேவி சிரித்தாள்.

கண்ணன் அடுத்த விநாடி திரிலோசனரின் வீட்டில் கும்மிட்டியின் முன் இருந்தார். புல்லாங்குழலை, ஊதியவாய், ஊதுகுழல் கொண்டு நெருப்பை ஊதியது. கையிலே சாமணம். "அட, அரண்மனையிலிருந்து எப்போ வந்தீர்கள்? காணோமே என்று கவலைப்பட்டுக் கொண் டிருந்தேன். நவாப் என்ன சொன்னார்" கேள்விகளை அடுக்கினாள் உள்ளேயிருந்து வந்த திரிலோசனரின் மனைவி.

"நாளைப் பகலுக்குள் நகை வேண்டுமாம்!"

"ஐயோ, முடியுமா?"

"பார்ப்போம்... நீ போய் படுத்துக் கொள்" திரிலோசனரின் மனைவி முடிந்தவரை விழித்திருந்தாள். பிறகு ஆடி ஆடி விழுந்தவள், அயர்ந்து உறங்கிவிட்டாள். புள்ளினங்களின் கீச் சொலியில் பதறிப்போய் விழித்தவள், கணவன் செய்து முடித்திருந்த சந்திரஹாரத்தின் அழகில் மனதைப் பறி கொடுத்தாள். அவள் மட்டுமா? நவாபும் பார்த்தது பார்த்தபடி இருந்தான். "திரிலோசன்! என்ன திறமையை கைக்குள் ஒளித்து

வைத்திருக்கிறீர்! அடாடா, இப்படிப்பட்ட ஜேஹரை நான் பார்த்ததே இல்லே! என்ன நகாசு! என்ன அழகு.” என்று பாராட்டியவன், ஒருபை நிறைய தங்கக் காசுகளைப் போட்டு, ஒரு வெள்ளித் தட்டில் தாம்பூலம், பழங்களோடு தந்தான்.

திரிலோசனர் வடிவிலிருந்த கண்ணன் அதை திரிலோசனரின் மனைவியிடம் கொடுத்து, “ஒரு பவுனை மாற்றி அருமையான விருந்து தயார் செய். நான் போய் அடியார்களை அழைத்து வருகிறேன்” என்றான். அவர் சுபாவம் அவள் அறிந்தது தானே!. அவர் சொன்னபடியே விருந்து தயார் செய்தாள். கண்ணனும் கணக்கில்லாத அடியார்களை அழைத்து வந்து தானே அவர்கட்கு உணவிட்டு சந்தனம், தாம்பூலம் கொடுத்து அனுப்பி வைத்தார். பிறகு தானும் சாப்பிட்டு, எல்லாவற்றையும் ஒரு இலையில் வைத்து மேல் துண்டில் முடிந்து கொண்டு திரிலோசனரின் மனைவியிடம், “வெகு சீக்கிரம் வந்து விடுகிறேன்” என்று சொல்லி விட்டுக் காட்டிற்குப்போனார்.

காட்டிற்குள் வந்ததும் கண்ணன், அடியவர் வேடம் பூண்டான். “திரிலோசனரிடம் வந்து” தாகம் நாக்கை வறட்டுகின்றது. தண்ணீர்



எங்கே கிடைக்கும்?" என்றார். திரிலோசனர் அருகிருந்த சுனைக்கு ஓடிச் சென்று, பனை ஓலையால் தொன்னை செய்து, கொஞ்சம் பழங்களையும் பறித்துக் கொண்டு, நீரும் முகந்து கொண்டு வந்தார். பகவான் அதை அன்புடன் பெற்றுக் கொண்டு பழங்களைத் தின்று, தண்ணீரைக்குடித்து ஏப்பம் விட்டார்.

பிறகு "எனக்குப் பசி இல்லை. தாகம் தான்! ருசியாயிருக்கிறதே என்று வயிறு தெரியாமல் சாப்பிட்டு விட்டேன். புளியோதரையும், தேங்காய் சாதமும், வடையும், அவியலும் தாகத்தைக்கிளப்பி விட்டன. தாகம் தணியட்டும் என்று தான் பழத்தைச் சாப்பிட்டேன். ஆமாம்... நீங்கள் சாப்பிட்டு வெகு நாளாயிருக்கும் போலிருக்கிறதே! பழத்தை நீர் சாப்பிட்டி ருக்கலாமே! அடப்பாவமே! இது அடியார்கள் சாப்பிட்ட சேஷம்... இதைச் சாப்பிடுங்கள்" என்று துண்டைப் பிரித்து, இலையை விரித்தார்.

"அடியார்களின் சேஷமா? அப்படி அடியார்களுக்கு விருந்திட்ட புண்ணியவான் யாரோ?" என்று திரிலோசனர் ஆவலோடு விசாரித்தார்.

"யாரோ திரிலோசனர் என்ற பொற்கொல்லராம்... ரொம்பப் பெரிய பொன்வேலைக்காரராம்! நவாபின் மகளின் நிச்சயதார்த்தத்திற்காக உயர்ந்த சந்திரஹாரம் செய்து கொடுத்தார் என்று ராஜா நிறைய சன்மானம் செய்தாராம்! இவர் அமர்க்களமாய் விருந்து வைத்தார். அதுதான் வயிறு தெரியாமல் சாப்பிட்டுத் திக்கு முக்காடிக் கொண்டி ருக்கிறேன். போதும் போதாதற்கு வழிப் பயணத்திற்கும் கட்டிக் கொண்டேன்... எங்கே சாப்பிட முடியும்... நீங்களாவது சாப்பிடுங்கள்" திரிலோசனர் திகைத்தார்.

"நான் இங்கே இருக்க அங்கே நகை செய்து கொடுத்தது யார்? என் பெயரில் இன்னொருவன் என் தொழில் செய்து கொண்டு, என் ஊரிலேயே இருப்பது எனக்குத் தெரியாமல் போயிற்றே! சரி, எப்படியோ ராஜகோபத்திலிருந்து தப்பிவிட்டோம். அரசர் கொடுத்த பொன்னையும், மணியையும் அவரிடம் நாணயமாகத் திருப்பிக் கொடுத்து விடவேண்டும் என்று சிந்தித்தபடியே சாப்பிட்டு முடித்தார். பிறகு "ஐயா, தாங்கள் என் வீட்டில் இரண்டு நாட்களாவது தங்கிச் சென்றால்தான் என் மனது ஆறுதல் படும்" என்று வற்புறுத்தி, ஸ்வாமியையும் அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தார். பகவானைத் திண்ணையில் உட்கார வைத்துவிட்டு உள்ளே சென்றவர் மனைவியிடம் "அடியார்களுக்கு விருந்திட்ட

திரிலோசனர் யாரென்று உனக்குத் தெரியுமா?'' என்று கேட்க, அவள், ''அழகுதான்! கேலிக்கு நேரம் காலம் பார்த்தீர்களா! அந்த மகானுபாவர் தாங்கள் தான்... போதுமா? அதை என் வாயால் கேட்க ஆசையாக்கும்!'' என்று சிரித்தாள்.

திரிலோசனர் திகைக்க, ''நல்ல ஞாபகமறதி! இரவெல்லாம் விழித்து நவாபின் மகளுக்கு நகை செய்ததாவது நினைவிருக்கிறதா? அரசன் ஒரு பை நிறைய தங்கக் காசுகள் கொடுத்து மரியாதை செய்தாரே! அதுவாவது கவனத்தில் உள்ளதா? இதோ அந்தப் பை! அதிலிருந்து ஒரு பவுன் எடுத்துத் தானே அடியார்களுக்கு விருந்து சமைத்தேன்! ஓடி ஓடி உபசாரம் செய்தீர்களே! அவசரமாய் சாப்பிட்டு விட்டு இலையில் வாரி துண்டில் கட்டிக் கொண்டு போனீர்களே! யாருக்கு? போகும்போது கேட்க வேண்டாமென்றிருந்தேன். இப்படி உங்களையே மறக்குமளவு சொக்குப் பொடிபோட்ட அடியார் யார்?'' என்றாள் படபடப்பாக. திரிலோசனருக்கு எல்லாம் புரிந்துவிட்டது. வாசலுக்கு ஓடினார். மாயன் இன்னுமா அங்கே இருப்பார்! அவர் வந்த வேலைதான் ஆகிவிட்டதே!

திரிலோசனர் ஆனந்தக் கண்ணீர் பொங்க, ''என் சொல்லை உண்மையாக்க, எனக்குத் தண்டனை கிடைக்காமல் இருக்க இரவெல் லாம் உழைத்தாயோ! அப்பா, உனக்கு என்ன கஷ்டம் கொடுத்து விட்டேன்! உன்கையால் சோறு சுமந்து வந்தீரே! நீதான் என்ற சுயரூபத்தைக் காட்டக் கூடாதா'' என்று மெய்யுருக வேண்ட, பகவான் பிரத்யட்சமாகி திரிலோச னரைத் தழுவிக் கொண்டான்.

அவன் மனைவியும் நடந்ததை யூகித்துப் புளகாங்கித மடைந்தாள். அதுமுதல் அவளது பக்தியும் தீவிரமடைந்தது. கணவரோடு அடியார் களைப் பேணுவதிலும், கணவனுக்குசேவை செய்வதிலும் முன்னிலும் பன்மடங்கு தீவிரமானாள். திரிலோசனர் மெய்யுருகிப் பாடிய பாடல்கள் சீக்கிய மத நூலான 'கிரந்தாசாகேபி'ல் இடம் பெற்றுள்ளன.

43. ஸ்ரீ தாமாஜி பண்டிதர்

"தாமாஜீ! தாமாஜீ!"

"யார்?" தாமாஜி வெளியே வந்தார்.

"இவர் பண்டரீபுரத்திலிருந்து வருகிறாராம்! ரொம்பப் பசியாம்" எலும்பும் தோலுமாயிருந்த அந்தணரை அறிமுகப்படுத்தி விட்டுச் சென்றார் ஒருவர்.

தாமாஜி அவரை அன்புடன் அழைத்து கைகால் கழுவச் சொல்லி, இலை போடச் செய்தார். இலையிலே மல்லிகைப் பூபோல சாதமும், புத்துருக்கு நெய்யும், பருப்பும், காய்கறி வகைகளும் பரிமாறியதும் அவர் விம்மி விம்மி அழுதார். தாமாஜி எதுவும் புரியாமல் "ஐயா, தங்களின் கண்ணீருக்குக் காரணம் என்ன?" என்று விசாரித்தார்.

"என் மனைவியும், குழந்தைகளும் சாப்பாட்டைக் கண்ணால் பார்த்து ஒரு வாரமாகிறது. அவங்க பசியாலே மூலையிலே சுருண்டு கிடக்கிற காட்சியை நினைச்சேன் ஐயா"

தாமாஜி அன்புடன் "அடாடா... அப்படியா! முதல்லே நீங்க சாப்பிடுங்க... அப்போதானே நெல்லைத் தூக்கிட்டு நடக்கவாவது தெம்பிருக்கும்!" எனவும்,

"நெல்லா? எனக்கா? யார் தரப்போராங்க?" அந்தணர் வாயைப் பிளந்தார்.

"ஐநூறு கலம் ஒருவண்டியிலே காவலோட அனுப்பி வைக்கிறேன்; போதுமில்லே?" தாமாஜி கேட்கவும்,

"ஐயா, நீங்க தெய்வம்" நெடுஞ்சாண் கிடையாக தாமாஜியின் காலில் விழுந்தார் அந்தணர்.

"ஓய் நமசிவாயம்...! அக்கிரமத்தைக் கேட்டீரா?"

"இப்பத்தான் சங்கரன் சொன்னான். இருந்தாலும் இந்தத் தாமாஜி செய்கிறது. அநியாயம்! பஞ்சம் பண்டரீபுரத்திலே ஒரு வீட்டிலே மட்டும்

தானா? நாட்டிலே மழையே இல்லாம நிலமெல்லாம் பாளம் பாளமா வெடிச்சுக் கிடக்கு”

தாமாஜி அதிகாரியாக இருந்த மங்களபட ஊருக்கு அருகிலிருந்த கிராமமெல்லாம் கூடி விட்டனர்.

“கொஞ்சம் அமைதியாப் பேசுங்க... தாமாஜி வள்ளல்... இல்லை என்கிற வார்த்தையே அவர் அகராதியிலே இல்லே... நமக்கெல்லாம் எத்தனை நன்மை செய்திருக்கார்!” என்று கூட்டத்தை அமைதிப் படுத்தினார் ஒரு பெரியவர்.

“அதுக்காக?” ஒரு இளவட்டம் கொதித்தான்.

“அதோ வண்டி வருது... நாம கூட்டமா மறிப்போம். இருக்கிறதை ஆளுக்குக் கொஞ்சமா சண்டை போடாம எடுத்துப்போம். பசியும், பட்டினியும் எல்லாருக்கும் ஒண்ணுதான்” இன்னொருவர் சமாதானம் சொன்னார்.

வண்டி நெருங்கியதும் அதே போல் நடந்தது. “சாமி வரம் கொடுத்தும் பூசாரி தடுத்துவிட்டது போல்” ஆயிற்றே என்று துக்கித்தார் அந்தணர்.

காவலர்கள் தடுத்துப் பார்த்தார்கள். யார் மீதாவது வன்முறை காட்டினால் உத்யோகம் போய்விடும் என்பதால் அவர்களால் மீறி எதுவும் செய்ய முடியாமல் காலி வண்டியுடன் மங்களபட சென்று தாமாஜியிடம் நடந்ததை எடுத்துரைத்தனர்.

தாமாஜி புன்னகையுடன் “பாண்டுரங்கன் திருவுள்ளப்படி பசித்த வருக்கு உணவு போயிருக்கிறது. போகட்டும். நீங்கள் போய் உமது குடும்பத்தை இங்கேயே அழைத்து வந்துவிடும் செலவுக்கு இதை வைத்துக் கொள்ளும்” என்று பணத்தோடு அனுப்பி வைத்தார். அந்தணர் மகிழ்ச்சியுடன் விடை பெற்றார்.

“எல்லாரும் எங்கே போறீங்க?” எலும்பும் தோலுமான மக்கள் கூட்டம் மூட்டை முடிச்சுக்களுடன், குழந்தை குட்டிகளோடு சென்று கொண்டிருந்தது. “தரும வள்ளல் தாமாஜி கிட்டேப்போறோம். மனுஷன் சளைக்காம கஞ்சி ஊத்துறாரே!” யாரோ ஒருவன் போகிற போக்கில் சொன்னான்.

“அப்ப நானும் வரேன்” புதியவனும் சேர்ந்து கொண்டான். பஞ்சத்தாலும், நோயாலும் அடிபட்டு வாடி நின்ற கூட்டத்தைக் கண்டு

தாமாஜி கரைந்தார். என்ன செய்வதென்று கலங்கினபோது, அவர் மனைவி தான் ஆறுதல் சொன்னாள்.

"அரசாங்கத்துக்குச் சேர வேண்டிய நெல் அம்பாரமாய்க்குவிந்து கிடக்கிறதே! போன வருஷம் தானே கணக்கு முடித்திருக்கிறோம். இனி அடுத்த வருஷம் தானே கணக்கு! பண்டரிநாதன் அனுக்கிரகத்தில் இந்த வருஷம் மழை பெய்து விளைந்தால் அடுத்த வருஷமே விற்றுக் கணக்குக் கொடுத்து விடலாம். பாவம்... ஜனங்கள்! நல்ல காரியத்துக்கு யாருக்கு மறுப்புச் சொல்ல யாருக்கு மனசு வரும்?"

இது போதாதா? கிராமம் கிராமமாக, வீடு வீடாகக் கணக்கெடுத்து நபருக்கு இவ்வளவு என்று படியளந்தார் தாமாஜி. அத்தனை பேருக்கும் மலையளவு தானியம் என்றாலும் எத்தனை காலத்துக்கு வரும்? சீக்கிரமே களஞ்சியம் காவியாயிற்று.

இதெல்லாம் மன்னவன் காதிற்கும் எட்டியது. அரசன் சினந்தான். "சொத்துக்கு உரியவன் நான். இவன் வெறும் காவலாள். என்னை ஒரு வார்த்தை கேட்க வேண்டும் என்று இவனுக்கேன் தோன்றவில்லை?



தருமம் செய்வது இவன் சொந்தக் காசாயிருந்தால் பரவாயில்லை. ஊரான் சொத்தில் நல்ல பெயர் சம்பாதிக்கிறானோ? வேதம் ஓதிய பிராம்மணன்; மோசம் செய்ய மாட்டான் என்று நம்பியது வீண் போயிற்று. பதவி வேண்டாம் என்று மறுத்ததினால் பிறர் சொத்தில் பற்றில்லாதவன் என்று நினைத்து ஏமாந்து விட்டேன்" என்றவன், கணக்கனை அழைத்து,

"இனி ஆண்டுதோறும் கணக்குத்தர வேண்டும் என்ற அறிக்கையை எல்லா கிராமத்துக்கும் அனுப்பிவிடு. மங்களபட கிராமத்துக் கணக்கு எவ்வளவு" என்றான்.

கணக்கன் கணக்குப் பார்த்து "எண்பத்து நான்கு லட்சம் வராகன் (1 வராகன் மூன்றரை ரூபாய்) எனவும்,

"தவணை சொல்லாது ஒரே தவணையில் வாங்கி வரும்படி தாமாஜிக்குச் சொல்லி அனுப்பு. இல்லையேல் கைது செய்து வரச் சொல்லுங்கள்" என்று ஆணையிட்டான் அரசன்.

காவலர் அப்படியே சென்று தாமாஜியிடம் "நீங்கள் செய்தது பஞ்ச நிவாரணம் என்றாலும் மன்னரிடம் உத்தரவு பெற்றிருந்தால் இந்த வேதனை இல்லை. உங்களை விசாரிக்காது விட்டால் எல்லா அதிகாரிகளும் தான் தோன்றியாகி விடுவார்கள் என்பது அமைச்சர் களின் கருத்து. மன்னரிடம் விளக்கமாக எடுத்துரைத்தால் மன்னித்து விடுவார்" என்று இணக்கமாகக் கூறினர்.

தாமாஜி "எல்லாம் அவன் செயல்" என்று அவர்களுடன் புறப்பட்டார். வழியில் பண்டரிபுரம் வந்தது. சந்நிதிக்குச் சென்று திரும்ப அனுமதி கேட்டார்.

அவர்களோ "ஸ்வாமி, நீங்கள் பரம பாகவதர் என்பதை நாடே அறியும். ஏதேனும் விபரீதம் நடந்து விட்டால் எங்கள் தலை போய்விடும்" என்று அஞ்ச, தாமாஜி "அப்பா, நான் ஓடிப் போக மாட்டேன். உங்களை மோசம் செய்ய மாட்டேன். உங்கள் கடமையை நான் அறிவேன். உங்களையும் அடியாராகவே எண்ணுகிறேன். இனி நான் எப்போது விடுதலையாகி எப்போது பண்டரீபுரம் வரப்போகிறேன். இரக்கம் காட்டுங்கள்" என்று கெஞ்சினார். காவலர்கள் மூலஸ்தானத்தைப் பார்த்தபடி நின்று கொண்டு அவரை உள்ளே அனுமதித்தனர். தாமாஜி விக்ரகத்தைக் கட்டிக் கொண்டு புலம்பினார். முட்டி மோதிக் கொண்டு அழுதார்.

"ஏழை பங்காளா? இது உனக்கொரு வேடிக்கையா? நீ மனம் வைத்தால் மழைபெய்து நாடு செழிக்காதா? காண்டவவனத்தையே அழித்து நாடாக்கின நீ இன்று நாடைக் காடாக்குகிறாயா? விரல் நுனியில் மலையைக் குடையாகப பிடித்து மழையைத் தடுத்த உனக்கு மழையை உண்டாக்கத் தெரியாதா? ஏழைக்குச் சோறிட்டால் உன்னை வந்து அடைவதாக புராணங்கள் சொல்வதெல்லாம் கட்டுக்கதையா? பொன் கங்கணம் செய்து பூட்டிய என் கையில் விலங்கு மாட்டிப் பார்க்க வேண்டும் என்பது உன் எத்தனை நாளைய ஆசை? உனக்கு நெய் வழிய வழிய சித்ரான்னம்! ஊரிலே ஓட்டிய வயிளோடு மக்களா? இப்படியெல்லாம் தீர்ப்பளித்தால் பொதுஜன சேவை செய்யவும், அடியார்களை ஆதரிக்கவும் எவர் முன் வருவார்கள்? நான் பொய்யனா? பித்தலாட்டக்காரனா? அரசரை மோசம் செய்ய நினைத்தேனா? ஏன் பேசாமலிருக்கிறாய்? என் மனதில் இரக்ககத்தை ஏன் தோற்றுவித்தாய்" இப்படிப் பலவாறு கதறிக் கொண்டிருந்தார்.

"யார் இவன்?" என்றார் அரசர். "மங்கள பட'விலிருந்து வருகிறா னாம். தாமாஜி பண்டிதர் கஜானாவுக்கு வரிப்பணம் அனுப்பி இருக் கிறாராம். மங்கள படவின் தலையாரி என்கிறான்" என்றான் காவலன்.

அரசரும், அமைச்சர்களும் அவனை ஏற இறங்கப் பார்த்தனர்.

ஆஜானு பாகுவான உயரம். வைரம் பாய்ந்த உடல். தேக்கு மரம் போல் நிறம். முறுக்கிய நீண்ட மீசை. சிவப்புப் பட்டை போட்ட தலைப்பாகை. காலிலே செப்புக்காப்பு. பித்தளைப் பூண்போட்ட பெரிய தடி, முழங்காலுக்கு மேல் ஏறிய சாய வேஷ்டி. தலையில் கம்பளியாலான சின்ன மூட்டை.

"உன் பெயரென்ன? எந்த ஊர்?" என்றார் மன்னர்.

"அனாதைக்கு ஊரைப் பற்றி என்ன தெரியும்? எங்கே மதிக் கிறார்களோ அவர்களுக்குச் சேவகம் செய்வேன். இப்போது தாமாஜி பண்டிதரின் பணியாள். மாதவன், கோவிந்தன், கண்ணன், ரங்கன் இப்படி ஊருக்கு ஒரு பேர்"

"எவ்வளவு கொண்டு வந்திருக்கிறாய்?" என்றான் தளபதி. "84 லட்சம் வராகன்" அரசர் புன்னகையோடு "என்னப்பா, இந்தச் சின்ன மூட்டையில் எண்பத்து நாலு லட்சம் வராகனா?" எனவும், அவன்

ரோஷத்தோடு "எண்ணிக்கொள்ளுங்கள்" என்று மூட்டையைப் பிரித்துக் கொட்டினான். கலகல வென்ற சப்தம். கண்ணைப் பறிக்கும் தங்க நாணயங்கள்! சபையோர் பிரமித்தனர். அரசர் ரசீது கொடுக்கும்படி சைகை காட்ட, கணக்குப்பிள்ளை கொடுத்த ரசீதோடு வெளியே நடந்தான் பணியாள்.

எதையோ பறிகொடுத்தாற் போலிருந்தது மன்னருக்கு. "அடாடா, அவனை நம்மிடமே வேலைக்கு வைத்துக் கொள்ளாமல் போனோமே! அவன் கண்களில் தான் என்ன வசிய சக்தி! என்ன சுகமான புன்புறுவல்!

அரசரின் சிந்தனையைக் கலைத்தன. 'ஆ'வென்ற கசமுசாக்கள். பார்த்தால் தாமாஜி விலங்குடன் நடந்து வந்து கொண்டிருந்தார். மன்னர் சிம்மாசனத்திலிருந்து எழுந்து வந்து "தாமாஜி! பணத்தை அனுப்பி விட்டு ஏன் கைதாகி வந்தீர்?" எனவும், தாமாஜி விழித்தபடி, "பணத்தை அனுப்பினேனா? எப்படி? யாரிடம்?" பதில் கேள்வி தொடுத்தார்.

அனைவருக்கும் வந்தது பண்டரிநாதனே என்று விளங்கி விட்டது. விலங்கைக் கழற்ற உத்தரவிட்ட அரசர், தாமாஜியின் கால்களில் விழுந்து மன்னிக்கும்படி வேண்டினார்.

தாமாஜி "அரசே, நீங்கள் தான் பாக்கியவான். உங்களுக்குத்தான் அவன் காட்சி தந்திருக்கிறான். தருமம் செய்தது நானானாலும் உரிமை உள்ளவர் நீங்கள். தலையாரி வேஷம் பூண்ட தலைவா... இனி எனக்குத் தாசில்தார் உத்யோகம் வேண்டாம். உன் சேவையே என் மூச்சு. பந்தங்களை இன்றே உதறிவிட்டேன்" என்று கதறினார்.

அரசர் என்ன வேண்டியும். தாமாஜியின் மனம் மாறவேயில்லை. மறுபடி மங்களபட் திரும்பாமல் மனைவியை வரச்செய்து, பண்டரிபுரத்திலேயே தங்களை இறைப்பணிக்கு அர்ப்பணித்துக் கொண்டு இறுதியில் இறைவனடி சேர்ந்தனர்.

44. சாத்விக ராஜன்

பூரி, ஜகன்னாதத்தை ஆண்ட சாத்வீகன் நீதி நெறி தவறாதவன். தான் மன்னன் என்ற அகந்தை சிறிதும் இல்லாதவன். அங்க ஹீனங்களிடம் அதிக தயவுள்ளவன். விஷ்ணு பக்தியைப் பரப்ப தன்னால் இயன்றதைச் செய்து வந்தான். பாகவதர்களை நன்கு ஆதரித்தான். ஆலயங்களில் மூன்று காலமும் பூஜைகள் செவ்வனே நடைபெறச் செய்தான்.

இவ்வளவிருந்தும் அவனிடமுள்ள ஒரே ஒரு கெட்ட பழக்கம் சூதாட்டம். ஆட்டத்தில்லயித்து விட்டால் தன்னையே மறந்து விடுவான். அப்படி ஒரு பைத்தியம். அதனால் அவன் எதையும் பணயம் வைத்து ஆடாமல் மந்திரிகள், தளபதிகள், மெய்காப்பாளர்கள் கவனமாக இருந்தனர். தனது பிறந்த நாளன்று ஜகன்னாதர் கோயிலில் விசேட அபிஷேகத்திற்கு ஏற்பாடு செய்திருந்தான். தரிசனத்துக்காக ஆலயம் வந்தபோது திரை போடப்பட்டிருந்தது. அலங்காரம் ஆக சிறிது நேரம் ஆகுமென்று கண்டான்.

அவனது நண்பர்கள் சிலர் சொக்கட்டான் ஆடலாமென அபிப்ராயம் சொல்லவும், வெளி மண்டபத்தில் போய் அமர்ந்து ஆட்டத்தை ஆரம்பித்தான் அரசன். ஆட்டம் சுவாரஸ்யமான கட்டத்திற்குத்திரும்பிய போதுஅலங்காரம் முடிந்து திரை விலகியது.

"தீபாராதனை ஆகப் போகிறது... தீர்த்தம்' பிரசாதம் வாங்கிக் கொள்ள வருகிறீர்களா?" என்று மந்திரி, பிரதானியர், அர்ச்சகர்கள். ஒருவர் மாற்றி ஒருவர் கூப்பிட்டும், அரசன் 'இரு, இரு' என்று கையமர்த்தினானே ஒழிய எழுந்து வரவில்லை. வற்புறுத்திக் கூப்பிடவும் பயந்தனர். அர்ச்சகர்கள் பிரசாதத்தை அரசன் ஆடுமிடத்திலேயே கொண்டுபோய் நீட்ட, வலதுகையால் பாச்சிகையை உருட்டிக் கொண்டே, இடது கையை நீட்டினான் அரசன்.

அர்ச்சகர் திடுக்கிட்டார். "இதென்ன விபரீதம்! இடது கையில் பிரசாதத்தைக் கொடுப்பவர், வாங்கியவர் இரு வம்சமும் நசித்துப் போகுமே! சாத்வீகன் மிக நல்லவன். ஆட்ட சுவாரஸ்யத்தில் புத்தி

ஹீனமாக அவன் நடந்தாலும், அவனுக்குப் பாபத்தை சம்பாதித்துத் தரலாகாது. இதனால் எனக்குத் தண்டனையே கிடைத்தாலும் சரி'' என்று தீர்மானித்துக் கொண்டு பிரசாதத்தைக் கொடுக்காமலே உள்ளே சென்று விட்டார்.

ஆட்டம் முடிந்ததும் அரசன் எழுந்தான். சன்னதி பூட்டியிருப்பதைக் கண்டு வெகுண்டான். காத்திருந்த அமைச்சர், பிரதானியர் நடந்ததைக் கூறவும், அரசன் வெட்கித் தலை குனிந்தான். அரண்மனைக்கு வந்தும் அவன் மனம் வேதனையில் தத்தளித்தது.

''பகவானுடைய பிரசாதத்தை வாங்கிக் கொள்வதை விட எனக்கு சூதாட்டம் பெரிதாகிவிட்டதே! தருமபுத்திரரும், நளமகாராஜாவும் காட்டிலே அல்லல் பட்டதற்கு இந்த சூதாட்டம் தானே காரணம்! இனி இதைத் தொடக் கூடாது. முடியுமா? நிச்சயம் முடியாது... நண்பர்களையும், பாச்சிகையையும் பார்த்தால் நிச்சயம் ஆட உட்கார்ந்து விடுவேன். ஆண்டவனையே அலட்சியம் செய்த இந்தக் கை இனி உடலில் இருக்கக் கூடாது. வெட்டி எறிய வேண்டும். வலிக்கிறதென்று பாதியில் நின்று விட்டால் என்ன செய்வது? அரசன் கையை வெட்ட எவருக்குத் துணிச்சல் வரும். ஊஹூம்! பொய் சொல்ல வேண்டியது தான்! இந்தப் பொய்யினால் எவருக்கும் துன்பம் ஏற்படாது. ஆதலினால் பொய் சொல்வதில் தப்பில்லை'' என்று முடிவெடுத்த பிறகே, அவன் மனம் ஒரு நிலைப்பட்டது.

பிறகு மந்திரியை அழைத்து ''தினமும் ஒரு பூதம் நடுநிசியில் ஜன்னல் வழியாய் கையை நீட்டி 'உன்னைத் தின்று விடுவேன்' என்று பயமுறுத்துகிறது. நாளுக்கு நாள் அதன் கை வளர்ந்து கொண்டே போகிறது. நிம்மதியாய்த்தூங்க முடியவில்லை. இந்தச் சேதி வெளியில் தெரிந்தால் 'அரசன் கோழை' என்று ஜனங்கள் கேலி செய்வார்கள். இன்று நான் வேறு அறையில் படுத்திருக்கிறேன். நீ என் படுக்கை அறையில் உருவிய வாளுடன் காத்திரு. பூதம் இன்று கையை நீட்டியதும் ஒரே வீச்சாகக்கையை வெட்டிவிடு. கொஞ்சமும் யோசிக்காதே'' என்றான்.

மந்திரியும் கூரிய வாளுடன் ஜன்னலருகே மறைந்திருந்தான். நடுநிசியானது. அரசன் வெள்ளை ஆடையால் தன்னை முழுவதும் மறைத்துக் கொண்டு ஜன்னல் வழியாகக் கையை நீட்டினான். அரசனின் கட்டளைப்படி மந்திரி ஒரே வீச்சில் கையை வெட்டி எறிந்தான். கை

துண்டாகி விழுந்ததும், பூதத்தின் கையைப் பார்க்கும் ஆவலில் மந்திரி கையைப் புரட்ட திடுக்கிட்டான்.

மணிக்கட்டருகில் இருந்த துவரம் பருப்பளவு மச்சமும், யுத்தத்தின் போதுபட்ட சில காயத்தழும்புகளும் அவை அரசரின் கையோ என ஐயுற வைத்தன. "இருக்காது, பூதங்களின் மாயை இது" என்று சமாதானம் சொல்லிக் கொண்டான். இதற்குள் மந்திரி போயிருப்பான் என்று நினைத்து படுக்கை அறைக்குள் வந்தார் மன்னர். இரத்த சேதத்தால் அவருக்கு மயக்கமாக இருந்தது. உள்ளே நுழைந்த அரசரைக்கண்ட அமைச்சர் அதிர்ச்சி யுற்றார். அரசனது வெள்ளை ஆடையில் ஆங்காங்கே சிவப்புத் திட்டுகள். விளக்கைப் பெரிதாக்கினான்.

"ஐயோ, இந்த நேரத்தில் நீங்கள் ஏன் கையை நீட்டினீர்கள்? உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்த பாவியானேனே!" என்று அரசன் கால்களில் விழுந்து கதறினான் அமைச்சன். சாத்வீகன் இடது கையால் மந்திரியைத் தூக்கி அணைத்துக் கொண்டு "உன்மீது தவறில்லை. அரசன் ஆணையை நிறைவேற்றினாய். தெய்வப் பிரசாதத்தை அலட்சியம் செய்து,

சொக்கட்டான் ஆடுவதைப் பெரிதாக நினைத்த கை இனி உடலில் இருக்கக் கூடாதென்பது என் தீர்மானம். அதை நிறைவேற்ற உதவிய உனக்கு நான்தான் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும்" என்று தேற்றினான். மந்திரி உடனே காயத்தைத் துடைத்து மருந்திட்டுக் கட்டினான்.

பொழுது விடிந்தது. அரண்மனையிலிருந்து ஆரம்பித்து நகரம் பூராவும், அரசன் கை வெட்டுண்ட செய்தி பரவிற்று. அனைவருக்கும் இது அதிசயமாயிருந்தது. அரசன் வெட்டுண்ட கையை பல்லக்கில் வைத்து அமைச்சர்கள், தளபதி, குலகுரு, குடி ஜனங்கள் சகிதம் கோயிலுக்கு வந்து அர்ச்சகர்களிடம் "இந்தக் கையை சன்னதியில் வைத்து என் சார்பில் மன்னிப்புக் கேளுங்கள். நான் சன்னதிக்குள் செல்ல அருகதையற்றவன்" என்றான். மறுத்துப் பேச எவருக்கும் தைரியம் இல்லை. கண்ணில் நீர்பெருக அரசன் சொன்னபடியே செய்தனர்.

என்ன அற்புதம்! வெட்டுண்ட கை பச்சைப்பசேலென்ற தவனக் கட்டாக மாறி இருந்தது. அதையும், பிரசாதத்தையும் எடுத்துக் கொண்டு கோயில் வாசலுக்கு வந்தனர். சாத்வீகன் முன் அதை நீட்ட, அவன் "இடது கையால் வாங்குவது பாபம என்று தானே நேற்று பிரசாதம் பட்டர் கொடுக்காமல் சென்றார்! நாமும் கையை வெட்டினோம்! இப்போது மூளியான கையால் வாங்கலாமா? நீட்டக்கூட முடியாதே! ரணமான வேதனை வேறு. பரந்தாமா! நான் எத்தனை பெரிய பாவி! இறைவா... எனக்கு ஒரு நல்ல யோசனையைத்தா" என்று கண்மூடி, சிரமமீது, கரம்கூப்பி பிரார்த்தித்தான்.

பிரசாதத் தட்டிலிருந்த தவனக்கட்டு மறைந்து, அவன் வலது கை முழுமையடைந்தது. உடலைத் திருணமாக மதித்த சாத்வீகனின் பக்தியையும், பரந்தாமனின் கருணையையும் கண்டு அனைவரும் வியந்தனர். சாத்வீகன் இரு கைகளாலும் பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு மூலஸ்தானம் சென்று ஜகந்நாதனை சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து துளசி, தீர்த்தம், சடாரி பெற்றுக் கொண்டு அரண்மனை திரும்பினான். அன்று முதல் சூதாட்டத்தை ஒழித்து, தெய்வத்திருப் பணிகளில் முழுமனதாய் ஈடுபட்டு, பக்திப்பயிரை நாடெங்கும் தழைக்கச் செய்தான்.

45. மன மோகன சுரதாஸர்

வடமதுரை, பிருந்தாவனம், கோகுலம் இவை மூன்றும் அடங்கிய பிரதேசத்தின் அதிகாரிக்குத் தள்ளாமை வந்து படுத்த படுக்கையாகி விட்டார். உடனடியாக வேறு தாசில்தார் நியமிக்க வேண்டிய நிலைமை.

யார் பொருத்தமானவர் என்று அக்பர் யோசித்தார். அடக்கமும், தெய்வ பக்தியும், பொறுமையும் கொண்ட வேதாந்த சிகாமணி மனமோகன சுரதாஸர் அவர் நினைவுக்கு வந்தார். அவரும் பதவியை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு புறப்பட்டார். சுரதாஸர் பரம்பரைச் செல்வந்தர். நல்ல வருமானம் தரும் உத்யோகம். வள்ளல் குணம். கேட்க வேண்டுமா?

ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு, உபநயனம் செய்ய, உதவினார். வெள்ளம், நெருப்பு இவற்றால் பாதிக்கப் பட்டவர்களுக்கு பாதுகாப்பான வீடுகள் கட்டிக் கொடுத்தார். வழிப்போக்கர்களுக்கு தண்ணீர் பந்தல், சத்திரம் கட்டி பயணத்தை இனிமையுடையதாகச் செய்தார். பசி என்று வந்தவர்களுக்கு எந்த நேரமும் அவர் வீட்டு வாசல் திறந்தே இருக்கும்.

சொத்தெல்லாம் கரைந்தது. அவர் சேர்த்ததெல்லாம் "தர்மப்பிரபு, இரக்ககுணம், கருணை வள்ளல்" என்ற பட்டங்கள் தான். இந்த நிலையில் அவருக்குக் கீழ்ப்பட்ட சேவகர்கள் வரி வசூலித்துக் கொண்டு வந்தனர். ஊரிலோ கொடிய நோய். செலவழிக்கப்பணம் வேண்டும். இரக்கம் பிரவாகமாய் சுரக்க என்ன செய்வதென்று தவித்தார்.

"வரிப்பணத்தை உபயோகப்படுத்தலாமா?" என்று மனம் ஒருபக்கம் சபலப்பட்டது. "அதைத் தொட உனக்கேது உரிமை?" என்று ஒரு குரல் மடக்கியது. "ஏன் இல்லை? வரி எதற்கு வாங்கப்படுகிறது? மக்களின் நன்மைக்காக. அரசரின் சொந்தப் பணமா அது! இல்லையே! அக்பர் இரக்க மனம் கொண்டவர். இந்துக்களை ஆதரிப்பவர். அவரே முன்வந்து செய்ய வேண்டிய காரியம். என் சொந்த நலனுக்கு உபயோகித்தால் தான் தவறு" என்று சமாதானம் சொல்லி கொண்டார்.

சில நண்பர்கள் சுரதாசர் வரிப்பணத்தை உபயோகப்படுத்துவதைத் தடுத்தனர். 'இராஜ தண்டனை கிடைக்கும்' என்று பயந்தனர்.

அவரோ "அரச பதவியே ஆண்டவன் தந்தது. இது அரசரே செய்ய வேண்டிய காரியம். தெரிந்தால் நிச்சயம் பாராட்டுவாரேயன்றி தண்டிக்க மாட்டார்" என்று சொல்லிவிட்டார். ஒரு பொறாமைக்காரன் டில்லிக்கே சென்று "ஆண்டவன் நினைத்தால் அக்பரின் பதவியே நிலைக்காது. வசூல் செய்த எனக்கு செலவழிக்கவும் உரிமை உண்டு' என்று திமிராகப் பேசுகிறார் சுரதாஸர். சோம்பேறிகளுக்கு வடித்துக் கொட்டுகிறார். இதனால் யாரும் உழைத்துப் பிழைக்கவே விரும்புவதில்லை" என்று விஷயங்களைத் திரித்துக் கூறினான்.

அக்பருக்கு சினம் தலைக்கேறியது. உடனே சேவகர்களை அழைத்து "வரிப்பணத்தை உடனே வசூல் செய்து கொண்டு வாருங்கள். தரத் தவறினால் சுரதாசரைக் கைது செய்து வாருங்கள்" என்று முத்திரை மோதிரத்தோடு அனுப்பி வைத்தார்.

வீரர்கள் மதுராவை அடைந்து சுரதாசரிடம் முத்திரை மோதிரத்தைக் காட்டினார்கள். சுரதாசர் விஷயத்தை யூகித்துக் கொண்டார். அவர்களிடம் "மன்னரின் வரிப்பணத்தை வராகனாகவே வைத்திருந்தால் எடுத்துச் செல்ல கஷ்டமாயிருக்குமென்று, நவரத்தினங்களாக மாற்றி வைத்திருக் கின்றேன். இரவுப் பயணம் கள்வர்களுக்கு சாதகமாயிருக்கும். விடிந்ததும் போகலாம். இளைப்பாறுங்கள். இதோ எடுத்து வருகிறேன்" என்று உள்ளே சென்றார்.

ஒரு தந்தப் பெட்டியில் கற்களைப் போட்டு மூடிப் பூட்டி, அரக்கு முத்திரையிட்டு, இறைவன் முன் வைத்தார். பின் ஒரு கடிதத்தில் "அரசர் பெருமானுக்கு வணக்கம். வரிப்பணம் செலவானது நிஜம் தான். ஆனால் என் சொந்தக் காரியத்துக்காக அல்ல. உங்கள் ஆளுகைக்கு உட்பட்ட அடியார்களின், ஏழைகளின் நல்வாழ்வுக்காக. மன்னர் செய்ய வேண்டிய சீர் திருத்தங்களை மன்னரின் பிரதிநிதியாக மக்களின் வரிப்பணத்தில் செய்தேன். அதுவும் என் சொந்தப் பணம் காலியானதால். இதனால் உமது குடி தழைக்கும். குலம் பெருகும். ஆட்சி நிலைக்கும் "என்றெழுதிக் கையெழுத்திட்டு அதையும் முத்திரையிட்டு, பரந்தாமன் பூஜையில் வைத்தார், "பக்த வத்சலா, இப்படிச் செய்யத் தூண்டிய நீயே இதற்கு மாற்றுத் தர வேண்டும். மௌனமாயிருந்து, அவமானப் படுத்தி விடாதே" என்று மெய்யுருகிப் பிரார்த்தித்தார்.

பின் இரண்டையும் சேவகர்களிடம் ஒப்படைத்து அவர்களை உபசரித்தார். அவர்களும் "அடடா! இவர் எப்பேற்பட்ட மகான்! இவர் மீதும் பழி கூறுகிறார்களே!" என்று வருந்தினர். இரவே சுரதாசர் அருகிலிருந்த காட்டிற்குச் சென்று யோக நிஷ்டையில் அமர்ந்து விட்டார். விடிந்தது, சேவகர் எழுந்து புறப்படத் தயாரானார்கள். சுரதாசரிடம் சொல்லிக் கொண்டு போகலாம் என்று பார்த்தால் அவரைக் காண வில்லை. அவர் போன இடமும் எவருக்கும் தெரியவில்லை.

"சரி, அவருக்கு என்ன அவசரமோ? நம்மிடம்தான் பொருளை ஒப்படைத்தாயிற்றே. நாம்புறப்படுவோம்" என்று தீர்மானித்துக் கொண்டு புறப்பட்டனர். சேவகர் கொண்டு வந்த பேழையை அக்பர் திறந்தார். உள்ளே இருந்த நவரத்தினங்கள் ஒன்றுக் கொன்று சளைக்காமல் ஒளி வீசின.

"ஏழுலட்சம் வராகன் தானே வரிப்பணம்! அதற்கு மேலேயே இருக்கும் போலிருக்கிறதே!" என்று அமைச்சர்களும், புலவர்களும், சேனாதி பதிகளும் பிரமித்தனர். அக்பருக்குப் பேச்சே வரவில்லை. 'கேட்பார் பேச்சைக் கேட்டு அவசரப்பட்டு விட்டோமே! சுரதாசரின் மனது புண்பட்டிருக்குமோ' என்று உளைந்தபடி கடிதத்தை உடைத்துப் படித்தார்.

ஒரே குழப்பமாயிருந்தது. அமைச்சரிடம் மௌனமாகக் கடிதத்தை நீட்டினார். அமைச்சர் படித்து விட்டு "சேவகர்களிடம் வரிப்பணத்துக்குப் பதிலாக இரத்தினங்கள் வாங்கி வைத்திருப்பதாகச் சொல்லி, பெட்டியைக் கொடுத்திருக்கிறார். பெட்டியிலும் இரத்தினங்கள் இருக்கின்றன. கடிதத்தில் பணத்தைச் செலவு செய்து விட்டதாக எழுதி இருக்கிறாரே" என்றார்.

"அதுதான் உண்மை. காலையில் பார்க்கும் போது சுரதாசரைக் காணோம் என்கிறார்கள் சேவகர்கள். சுரதாசர் சிறந்த விஷ்ணு பக்தர். தண்டனைக்கு அஞ்சி வெறும் பெட்டியைத் தந்திருக்க வேண்டும். கண்ணனுடைய லீலையில் அதில் நவரத்தினங்கள் இருக்கின்றன. ஒரு நாகரத்தினத்தை விற்றால் டெல்லியையே விலைக்கு வாங்கலாமே! ஏழு லட்சம் வராகனுக்கு இதை எப்படி வாங்கிக் கொள்வது? சுரதாசர் எங்கு சென்று அவதிப்படுகிறாரோ? உடனே அவரைத் தேடிக்கண்டு பிடிக்க வேண்டும். அதுவரை என் மனதுக்கு அமைதி இல்லை. அவருக்கு

ஏதாவது என்றால் நானும் தற்கொலை செய்து கொள்வேன்" என்று அக்பர் வேதனைப் பட்டார். உடனே சுரதாசரைத்தேட, நாலாபக்கமும் ஆட்கள் அனுப்பப்பட்டனர். தவநிலை யில் இருந்த சுரதாசரைக் கண்ட காவலர்கள் அவரை வணங்க, நடந்ததை யெல்லாம் விவரித்து, அரசன் அழைத்துவரச் சொன்னதையும் சொன்னார்கள்.

சுரதாசர் மெய் மறந்தார். "பிருந்தாவனவாசி! எனக்காகக் கற்களை நவரத்தினமாக்கினாயா? அக்பர்ஷாவின் மனதில் ஏழை என்பால் அன்பைப் பெருக்கினாயா?" என்று பலவாறு உருகியபடி, டெல்லி புறப்பட்டார்.

தாசரைக் கண்ட அக்பர், அவரை எதிர்கொண்டு வரவேற்று, சரியாசனம் தந்து, தனது செயலைப் பொறுத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார். தாசர் "அரசே, இதெல்லாம் ஒரு படிப்பினை. இறைப் பணியை விட்டு அரச உத்யோகம் ஏற்றது மாபெரும் தவறு. என்னைத் தயவு செய்து வேலையிலிருந்து விடுவிக்க வேண்டும்" எனவும், அக்பர் "மதுரா, பிருந்தாவனம், கோகுலம் இம்மூன்றின் வரிப்பணத்தையும் நீர் தெய்வ



காரியத்துக்கும், ஏழைகளின் சௌகரியத்துக்கும் செலவிடலாம். எனக்குக் கப்பம் கட்ட வேண்டாம். அப்புறம் உத்யோகத்திலிருக்க என்ன தடை?" என்று அன்புடன் கூறினார்.

"இல்லை, மன்னா... ஒரு முறை கேள்வி என்று வந்தபிறகு என்மனமும் அப்பணத்தைத் தொடும் போது துணுக்குறும். பொக்கி ஷத்தில் நிதி குறையும் போது உங்களுக்கும் இம்மூன்று மாவட்டங் களினால் நமக்கு எந்த வருமானமுமில்லயே என்று சலிப்பு எழும். ஏன் இந்த பந்தம்?" என்று மறுத்தார் தாசர். அக்பர் எழுந்து தாசரின் இருகைகளையும் பிடித்துக் கொண்டு "தாசரே, இதை நீங்கள் ஏற்றுக் கொள்ளாவிடில் என்னை மன்னிக்கவில்லை என்று தான் அர்த்தம். உங்களைப் போன்ற நல்ல உத்யோகஸ்தர்களால் தான் என் கீர்த்தி நிலைத்து நிற்கும், இந்த இரத்தினங்களையும் எடுத்துச் சென்று நல்ல காரியத்துக்கே பயன் படுத்துங்கள்" என்று கெஞ்சவும், தாசர் சற்றே யோசித்தார்.

"நாட்டில் தெய்வ பக்தி தழைக்க ஆண்டவன் காட்டிய வழி இது. இதை உதாசீனம் செய்ய எனக்கு உரிமை இல்லை. நான் பெருமாளின் சேவகன். ஏழைகளின் துயர்துடைக்க இப்படி ஒரு சந்தர்ப்பம்" என்று நினைத்துப் பதவியை ஏற்றுக் கொண்டு, அரசனைவாழ்த்தி விடை பெற்று மதுரா, வந்து சேர்ந்தார்.

பதவியினால் கர்வமின்றி இவர் வாழ்ந்தும், ஒரு சன்னியாசி இவரை சோதிக்க தனது செருப்பைக் காண்பித்து "இதைச் சற்றுப் பார்த்துக் கொள்ள முடியுமா? நான் தரிசனம் செய்து விட்டு வருகிறேன்" என்று கேட்க, தாசர் அவர் தரிசனம் செய்துவிட்டு வரும் வரை செருப்புக்குக் காவல் இருந்தார். தான் தாசில்தார் என்ற எண்ணம் அவர் நெஞ்சில் கிஞ்சித்தும் இல்லாததை எண்ணி ஊரே பாராட்டியது. இப்படி அடியார்க்கு எளியாராய், ஏழை பங்காளனாய் நீண்ட காலம் வாழ்ந்து தொண்டு செய்து, இறைவனடி சேர்ந்தவர் சுரதாசர்.

46. ஸ்ரீ ஜயமல்லர்

"அடுத்த அரசன் நீயல்ல... உன் அண்ணன் ஜயமல்லரின் மகன்தான். அடுத்து அவன் மகன்... அடுத்து..."

"போதும். நிறுத்து..."

"வெறும் கூச்சலினால் வெற்றிவந்து விடாது. உன் அண்ணன் காலையில் எழுந்து பூஜை புனஸ்காரமெல்லாம் முடித்து நிஷ்டையிலமர்ந்து விடுகிறார். நீயோ சோறு கண்ட இடம் சொர்க்கமென்று மூக்கைப் பிடிக்கச் சாப்பிட்டு, பட்டு மெத்தையில் தூங்கி, உல்லாசமாய் ஊரைச் சுற்றிக் கொண்டிருக்கிறாய். இப்படிப்பட்டவன் பதவியின் ருசியை எப்படி அறிய முடியும்?"

"இப்போது நான் என்ன செய்யவேண்டும்?"

"ராஜ்யத்தை இரண்டாகப்பிரித்துக் கொடு என்று கேள். நீ கிழவனாகும் வரை காத்திருக்க முடியாதென்று அடித்துக் கூறு"



"மறுத்தால்..."

"எப்படிப் பட்டவனுக்கும் விரோதி உண்டு. பகையரசர்களைச் சேர்த்துக் கொண்டு போர் தொடு. போர் பயிற்சி கிடையாது. நெடுங் காலமாய் யுத்தமே நடக்காததால் யுத்த அனுப்வமும் இல்லை. பலமான படையும் இல்லை. அதனால் வெற்றி நமக்குத்தான். முழு அரசையும் நீயே ஆளலாம்", போதனை சர்க்கரையாய் இனித்தது ஜயமல்லரின் தம்பிக்கு.

அண்ணன் நிஷ்டை கலைந்து வரும் வரை காத்திருந்தான். நண்பர்கள் சொல்லிக் கொடுத்தபடி கேட்டான். ஜயமல்லர் புன்னகையுடன் "தம்பீ! அரச பதவி என்பது ஆடம்பரத்துக்கோ அலங்காரத்துக்கோ அல்ல! குடிகளின் வரிப்பணம் அவர்கள் நன்மைக்கும், முன்னேற்றத்திற்கும் செலவிடப்படவேண்டும். சதாசர்வதா காலமும் கள்வர் பயமின்றி பெண்டிரும், பலஹீனமானவர்களும் காக்கப் படவேண்டும். இப்படிப் பல பொறுப்புக்களை இன்று முதல் நீ மந்திரிகளோடு கலந்து ஏற்றுக்கொள். பக்குவமடைந்து விட்டாய் என்று தோன்றியதும் நானே உன்னிடம் ராஜ்ஜியத்தை ஒப்படைத்து விடுகிறேன்" என்றார்.

ஏமாற்றமடைந்த சோதரன், ஊர் ஊராகச் சென்று, படைபலம் சேர்க்கத் தலைப்பட்டான். நல்ல அரசர்களெல்லாம் "ஜயமல்லருக்கு இப்படியொரு தம்பியா? அவர் எத்தனை சாது! அனாவசியமான வம்புகளில் தலையிடமாட்டார். சிறந்த பக்திமான்" என்று ஆச்சரியப்பட்டு அவனுக்குப் புத்தி சொல்லித் திருப்பி விட்டனர்.

ஜயமல்லரின் புகழில் பொறாமைகொண்டிருந்த சிலர் தம்பியை உற்சாகப்படுத்தினர். "ஜயமல்லரைக் கூட்டுப் படை கொண்டு அழித்துவிட்டால் இவனைத் தொலைப்பது சுலபம். தீய அரசாட்சியை மக்கள் வெறுப்பார்களாதலால் உள்ளூர் பகையும் சேர்ந்து கொள்ளும்" என்பது இவர்களின் திட்டம். பெரும்படை புறப்பட்டது. அப்போது ஜயமல்லர் சமாதியில் இருந்தார். அப்படி அவர் இருக்கும் போது யாரும் அங்கே வரக் கூடாதென்று கடும் உத்தரவு.

படைத்தளபதிகள் கோட்டைக் கதவைச் சார்த்தித் தாளிட்டனர். பிறகு அமைச்சர்களோடு கலந்து பேசி மன்னருக்குச் செய்தி தெரிவிக்கும்படி பெரிய ராணியாரிடம் முறையிட்டனர்.

ஜயமல்லரின் அன்னையும் மகனை எப்படியெல்லாமோ உசுப்பிப் பார்த்தார். ஊஹூம்! ஜயமல்லரின் நிஷ்டை கலைவதாய்க் காணோம்! மனதிற்குள் மாயக் கண்ணனின் லீலைகளைக் கண்டு ஆனந்தித்துக் கொண்டிருந்த அவரை, வெளியில் கேட்கும் ஒலிகளால் அசைக்க முடியவில்லை. கோட்டை மதில் சுவரிலிருந்து கவண் கற்களும், அம்புகளும், கத்திகளும் வீசப்பட்டன. கொதிக்கும் வெந்நீரைக் கோட்டைக் கதவை இருப்புச் சலாகைகளாலும், பெரும் யானைப் படையாலும் தகர்த்துக் கொண்டிருந்தவர்கள் மீது கொட்டினர்.

ஆயினும் பகைவர் படையோ பெரிது. நகங்களால் கிள்ளி மலையை உடைக்க முடியுமா? அவர்கள் வீசிய குத்தீட்டிகள் இவர்களை மாய்த்தன. கண்போனவர்களும், கை போனவர்களுமாக அலறினர். எதிரிகள் நூலேணி கொண்டு பக்கம் பக்கமாக கோட்டைக்குள் ஏறினர்.

அதே சமயம் "ஏன் சிரமப்படுகிறீர்கள்? கோட்டைக் கதவை நானே திறந்து விடுகிறேன். தைரியமுள்ள ஆண்மகன் என்னை வெற்றி கொண்டு உள்ளே நுழையலாம்" என்ற கம்பீரமான குரல் கேட்டது.

மணிகளும், இரும்புச் சங்கிலிகளும் ஒலிக்க அவனே கதவைத் திறந்து விட்டான். 'இவன் யார்' பலபேர் சேர்ந்து திறந்து மூட வேண்டிய, பெரும் கோட்டைக் கதவை தான் ஒருவனாகவே அனாயாசமாகத் திறக்கிறானே!'' என இரு திறத்தாரும் பிரமித்தனர்.

பருத்த தோள்கள்; கருத்த நிறம். கையிலே தண்டம், இடுப்பில் நீலநிறப்பட்டு.

''இவன்யார்? இவனை நான் படையில் சேர்க்கவில்லையே'' என்று தளபதி விழித்தாரேயன்றி, தடுக்க முனையவில்லை.

தண்டம் சுழன்றது தெரிந்தது... பொத்து பொத்தென்று எதிரிகளின் படை வீழ்ந்தது. கீழே சரிந்த யானைகளுக்கும், அவைகளின் காலடி பட்டுத்துடித்த வீரர்களுக்கும் கணக்கில்லை.

''விழி சிவக்க யுத்தம் செய்யும் இவன் இந்திரனோ! சூரசம்ஹாரம் செய்த முருகனோ? திரிபுரத்தையும் சிரித்தே எரித்த நீலகண்டனோ? அல்ல... இவன் நமது அரசர் வணங்கும், பாரதப் போரில் அர்ஜுனனுக்கு வெற்றி தேடித் தந்த பார்த்த சாரதியாய்த்தான் இருக்க வேண்டும். என்ன அனாயாசமாய் இடது கையால் வீரர்களைச் சுழற்றி எறிகிறான்! அகழிகளிலும், பக்கத்து மாட மாளிகைகளின் அலங்கார முகப்புகளிலும் தொக்கி நிற்கும் பிணங்களைக்கண்டு, எதிரிப்படை வீரர்கள் ஓடுகின்றனர். சற்றுமுன் கொக்கரித்த இளையவர் திருதிருவென்று விழித்துக் கொண்டு நிற்கின்றாரே'' என்று பலவும் பேசி அதிசயித்தனர் ஜயமல்லரின் படை வீரர்கள்.

ஜயமல்லரோ நடந்தது ஏதும் அறியாமல் யோக நிஷ்டையில் இருக்கிறார். ஆயிற்று யுத்தம் முடிந்தது. இளையவனைப் பிடித்து மந்திரிகள் வசம் ஒப்புவித்துவிட்டு, மறைந்து போனான் கரியவன். ஜயமல்லர் நிஷ்டை கலைந்து எழுந்தவர், ஆரவாரக் கூச்சல்களை உணர்ந்து திகைத்தார். அதற்குள் இளையவரை ஜயமல்லர் முன் நிறுத்தி நடந்ததை விஸ்தாரமாக எடுத்துரைத்தனர் அமைச்சர்கள்.

அரசர் கண்ணீர் பெருக ''பரந்தாமா, என் பொருட்டு ஆயுதம் தாங்கி போர் புரிந்தாயோ? உன் உடம்பிலே எத்தனை காயங்கள் ஏற்பட்டனவோ? உன்னைக் காணும் பாக்கியத்தை இத்தனை பேருக்குத் தந்தாயே!

இவ்வளவு பேரிலும் நான் அதமனா? தம்பீ! நீதான் எத்தனை புண்ணி யசாலி! உன்னைத் தொட்டு இழுத்து மந்திரியிடம் ஒப்படைத்தாராமே! அவர் தொடும் போது எப்படி இருந்தது? பாற்கடலையே ஸ்பரிசித்ததுபோல இருந்ததா?" என்று தம்பியைத் தழுவிக் கொண்டார்.

இளையவன் துக்கத்தோடு "அண்ணா, உங்களால் அல்லவா எனக்கு பகவானுடைய ஸ்பரிசம் கிட்டியது! உங்கள் பெருமை அறியாமல் துஷ்ட சகவாசத்தால் துர்புத்தி கொண்டு அனர்த்தம் விளைவிக்க இருந்தேனே! மன்னிப்புக் கேட்பதற்கும் எனக்கு அருகதை இல்லை" என்று வருந்த,

அரசர் "நீ திருந்தியதே போதும். அரசியலில் பயிற்சி பெற்று எனக்கு உறுதுணையாய் இருந்து ராஜ்யத்தை கவனித்துக்கொள். என்னை முழுநேரமும் இறைப்பணிக்குச் செலவிட முடியாதபடி இந்தப் பந்தங்கள் பிணிக்கின்றன. கூடிய சீக்கிரம் எனக்கு விடுதலை கொடு" என்றார்.

பிறகு அழகான கோவில் கட்டி தன் பூஜையை அங்கே வைத்துக் கொண்டார். அந்த ஆலயத்துக்கு யாரும் லேசில் வரமுடியாதபடி அமைத்தார். நான்கு பக்கமும் உயரமான மதில்கள். பெருந்தூண்களின் மேல் பூஜை அறை. மாடிப்படியோ, ஜன்னலோ கிடையாது. நூலேணி வழியாக ஏறிப்போவார். ஏறியதும் நூலேணியை எடுத்து விடுவார். பசி, தாகம் தெரியாமல் காலக்கணக்கின்றி ஸ்வாமிக்கு அபிஷேக, ஆராதனைகள் செய்து தங்கத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுவார். தன்னை யசோதையாய் நினைத்துக் கொண்டு லீலைகள் செய்வதாய் கற்பனையில் கண்டு உருகினார். தேவகியாய் பாவனை செய்து திருமணம் முடித்து மகிழ்ந்தார். அர்ஜுனனாய் பாவித்து தோழமையில் ஆனந்திப்பார்.

இவரின் பக்தி கனிய இறைவன் தன் நிஜ உருவையே இவருக்குக் காட்டி மகிழ்வித்தார். கேட்க வேண்டுமா? பகவான் அந்தர்தியானம் ஆகும் வரை, இவருக்குப் பூலோக நினைப்பே இருப்பதில்லை. ஒருநாள் பூஜைக்கு சற்று நேரமாகிவிடவே நூலேணியை எடுக்க மறந்துவிட்டார். ஜயமல்லரின் மனைவிக்கு வெகு நாட்களாக கோயிலுக்குச் சென்று பார்க்கவேண்டு மென்ற ஆவல். கணவரோ மறுத்து வந்தார். எங்கே அடுத்தவருக்குத் தெரிந்தால் பகவத்தரிசனம் நின்று விடுமோ என்று ஜயமல்லருக்கு பயம்.

அன்று தொங்கிக் கொண்டிருந்த நூலேணி அவளை ஏறத் தூண்டியது. மெதுவாக ஏறிச் சென்றாள். சன்னதிக்குள் சென்றவள்

திகைத்து விட்டார். என்ன அற்புதக்காட்சி! மயிற்பீலி துலங்க புன்ன கையுடன் கண்ணன் உறங்க, அவன் பாதம் வருடியபடி நீலாம்புரி ராகத்தில் ஜயமல்லர் பாடிக்கொண்டே, மெதுவாகத் தொட்டிலாட்டிக் கொண் டிருந்தார்.

அவள் மெய்மறந்து ஓடிவந்து "கண்ணா, கண்ணா" என்று உருக, ஜயமல்லர் என்னவாகுமோ என்று திகைக்க, கண்ணன் தன் மலர் விழிகளைத் திறந்து புன்சிரிப்புடன் "ஜயமல்லா, அவளும் சிறந்த பக்தைதான்! அவளையும் துணை கொண்டே என்னைக் காண வா" என்று ஆசீர்வதித்தார்.

அப்புறம் என்ன? ஆட்சியைத் தம்பியிடம் ஒப்படைத்துவிட்டு மனைவியுடன், தன் இறுதிக் காலம் வரை, கண்ணன் சேவையிலேயே காலம் கழித்தார் ஜயமல்லர்.

47. ஸ்ரீ குபரா பாய்

குபராவின் தந்தை சரவாகன மன்னன் சபையில் அமைச்சராக இருந்தார். அந்தக்கால வழக்கப்படி குபராவுக்கு பால்ய விவாகம் செய்வித்து விட்டனர்.

குபராவோ பேசத்தெரிந்த நாளிலிருந்தே கிருஷ்ண பக்தியில் திளைத்திருந்தாள். குபராவுக்கு தேனினும் இனிய குரல். அவள் பெற்றோர் அவளுக்குச் சங்கீதப் பயிற்சியும் அளித்தனர். குபரா வளர்ந்து பருவமங்கையானாள். குபராவை அழைத்துப் போக, அவள் புக்ககத்தினர் வந்தனர். குபராவுக்கு இதையெல்லாம் பார்த்ததும் அருவறுப்பாய் இருந்ததுஸ

"இதென்ன அநியாயம்! ஒரு பெண்ணுக்கு அறிவு முதிர்ச்சி யடையுமுன், அவள் போக்குப் புரியாமல், விவாகம் செய்வதாவது! இல்லற வாழ்க்கையிலும், சரீர தேவைகளிலும் என்ன இருக்கிறது! 'இல்லறத்தி லிருந்து பக்தி செய்தவர் இல்லையா என்று அப்பா வாதாடுகிறார். தவளை

தண்ணீருக்குள்ளேயே தான் கிடக்கிறது. அதன் மேலிருக்கும் வழும்பு போயிருக்கிறதா? சம்சாரம் ஒரு சகதி...? முதலில் கணவன், மாமியார், மாமனார், நாத்தி, மைத்துனன் இவர்களைத் திருப்தி செய்ய வேண்டும். பிறகு உடல் நோகப்பிள்ளைகளைப் பெற்றெடுக்க வேண்டும். அந்தப் பிள்ளைகளுக்கு வியாதி வந்தால் கவலைப்பட்டு... சேச்சே... என்று ஒயும்? இதில் பரந்தாமனை நினைக்க நேரம் ஏது? அம்மா கண்ணீர் விடுகிறாள். இவர்களுக்கு என்ன சொன்னாலும் புரியப்போவதில்லை. இனி ஒரு கணம் கூட இங்கிருக்கக் கூடாது" என்று தீர்மானித்து வீட்டைவிட்டு அந்த நள்ளிரவில் புறப்பட்டு விட்டாள்.

இரவில் கோட்டைக் கதவைச் சார்த்தி விடுவார்கள். குபரா திகைத்து கண்மூடி பகவானைப் பிரார்த்தித்தான். "குபரா!" யார் அழைப்பதென்று கண் திறந்து பார்த்தாள் குபரா. வயதான மங்கை ஒருத்தி அங்கே நின்றிருந்தாள். "குபரா, நான் பிருந்தாவனம் செல்கிறேன். நீயும் அங்குதான் புறப்பட்டாயா?" என்று இனிய குரலில் கேட்டாள் அம்மங்கை.

குபரா திகைத்தாள். "யார் இவள்? நான் பார்த்ததே இல்லையே! என் பெயர் இவளுக்கு எப்படித்தெரியும்?" என்றெண்ணியவள், "கதவு மூடியிருக்கிறதே! எப்படிப்போவது?" என்று கேட்டாள்.

அவள் புன்னகைத்தபடி "எனக்கு சில மந்திர வித்தைகள் தெரியும். இதோ பார்" என்றபடி வெகு சாதாரணமாகத் தாளிடாத கதவைத் திறப்பதுபோல் திறந்துவிட்டாள். கதவும் சப்தமிடாமல், பரக்கத்திறந்து, மூடிக் கொண்டது. பிருந்தாவனம் வரை கூட வந்த அந்த மங்கை "குபரா! நான்யார் என்று யோசிக்கிறாய் இல்லையா? நான் உன்னைப் பிறந்ததி லிருந்தே அறிவேன். உனக்குத்தான் என்னைத் தெரியவில்லை போகட்டும்... நடுநிசியில் வீட்டீடவிட்டு வந்த காரணம்?" என்று கேட்டாள்.

குபரா "பரந்தாமனையே நினைத்துப்பாட வேண்டும். சம்சார பந்தத்தில் ஈடுபட எனக்கு விருப்பமில்லை. என்னைப் பிறந்ததிலிருந்தே அறிந்தவர், இதையும் தெரிந்து கொண்டிருப்பீர்களே" என, அவள் சிரித்தப்படி "அறிவேன். சம்சார விலங்கை அறுத்தெறிந்து புறப்பட்ட வளுக்கு, இத்தனை பொன் விலங்கு ஏன்?" என்று கேட்க, குபரா அப்போது தான் தன்னைப் பார்த்துக் கொண்டான். முந்தின நாள்

அந்தணகுல வழக்கப்படி, மணையில் உட்கார்த்திப் பாடும் போது, செய்த அலங்காரத்துடனேயே வந்து விட்டிருந்தாள். மாற்ற அவகாசமில்லை. அங்கேயே அமர்ந்து ஒவ்வொன்றாய் கழற்றத் தொடங்கினாள். 'சங்கிலி, முத்துமாலை, பதக்கம், வளையல்கள், கொலுசு, தோடு, ஜிமிக்கி, மாட்டல், மோதிரம்" எல்லாவற்றையும் கழற்றி மடியில் கட்டிக் கொண்டாள்.

அதற்குள் யமுனாநதி வந்துவிட்டது. 'இதோ வருகிறேன்' என்று போன மங்கையைக் காணோம். தேடிச்சலித்த குபரா பிருந்தாவனம் அடைந்து பகவானைத் தரிசித்து, திருமணம் முடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்த ஏழைப் பெண்களைப் பெற்றவர்களுக்கு அந்த நகைகளைத்தானம் செய்தாள். ஒரு நாள் "கண்ணா, ஒரு முறையாவது இந்த அபலைக்கு உன் தரிசனம் கிட்டாதா?" என்று கல்லும் கனியும் படிப்பாடிய, அவளின் மூடிய விழிகளுக்கு முன் ஒரு சோதிஸ்வரூபம் தோன்றி, "இராதாகுண்டம் வா" என்று சொன்னது.

குபரா மகிழ்ச்சியுடன் இராதாகுண்டம் வந்தாள். உண்ணாது, உறங்காது எப்போதும் பஜனைதான். "குபரா, உன்னை எங்கெல்லாம் தேடுவது? சாப்பிடாமல், நீரும் அருந்தாமலா பஜனை செய்வது?" என்ற



குரல் கேட்டுத் திடுக்கிட்டு விழித் தால், எதிரே யமுனைக் கரையில் விட்டுவிட்டுப் போன மங்கை தட்டில் உணவும், செம்பில் நீரூமாக நின்றிருந்தாள். குபராவை தினம் சாப்பிட வைத்தவள் அவள் தான். குபராவின் பாடலை 'ஆஹா' 'ஒஹோ' என்று அருகிலிருந்து ரசிப்பவளும் அவள் தான். இது இப்படி இருக்க அங்கே சாந்தி முகூர்த்தத்திற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்த நேரத்தில் பெண்ணைக் காணோம் என்றால் பெற்றவர்களுக்கு எப்படி இருக்கும்? தெரிந்தவர் வீடுகள், குளம், குட்டை, கிணறு ஒரு இடம் பாக்கியில்லாமல் தேடினார்கள்.

"அந்தப் பெண்ணுக்கு இந்த மாப்பிள்ளையைப் பிடிக்கவில்லை."

"பெண் ரொம்ப கர்வம் பிடித்தவள்"

"பண்டாரமாட்டம் எப்பப் பார்த்தாலும் பஜனை! குடும்பப் பொறுப்பே கிடையாது. அதான் பயந்து ஓடிட்டாள்"

"ஆரம்பத்திலேயே கண்டிக்காதது பெத்தவங்க தப்பு". ஊரும், உறவும் சொன்ன பழிச்சொற்கள் தாளாமல் பெற்றவர் கண்ணீர் வடித்தனர்.

புக்ககத்தினர் கோபித்துக் கொண்டு போய்விட்டனர். குபராவை இராதா குண்டத்தில் கண்டதாக ஒருவர் வந்து சொல்ல, தந்தை அங்கே ஓடினார். குபராவைக் கண்டு அழுதார் புலம்பினார். ஊரார்ின் பழிச்சொற்களைக் கூறி, "உன் வாழ்க்கை பாழாகி விட்டதே, அம்மா" என்று கதறினார். குபரா அமைதியுடன் "அப்பா, இத்தனை வயதாகியும் உங்களை சம்சாரக் கடலில் சிக்க வைத்திருப்பது எது? மகளின் வாழ்க்கை என்ற தூண்டில். பேரன் பேத்திகளைக் காண வேண்டுமென்ற ஆசை. நான் பிறக்காதிருந்தால் உங்களுக்கு இந்த வேதனை இல்லை. உங்களோடு இந்தத் துன்பம் அழியட்டும். என்னையும் இந்தச் சேற்றில் தள்ள வேண்டாம்" என்று பலபல விதமாய் எடுத்துக் கூற, அவளின் தந்தைக்கு ஞானம் வந்தது. அகக்கண் திறந்தது.

அன்புடன் "மகளே! உன்னை முழுவதுமாக உணர்ந்து கொண்டேன். ஆனாலும் தவறாகப் பேசுபவர்களின் வாயை அடைக்கவாவது நீ திரும்பி வரவேண்டும். இந்த பூஜையையும், பஜனையையும் அங்கே செய். உன்னை சம்சாரத்தில் ஈடுபடும்படி நான் நிர்ப்பந்திக்க மாட்டேன். இது சத்தியம்" என்று உறுதி கூற, குபரா வீடு வந்து சேர்ந்தாள்.

வீடே கோயிலானது. பாடிக்கொண்டே கண்ணனுக்கு அலங்காரம் செய்வாள். ஊஞ்சலாட்டுவாள். பூஜை நடக்கும். கொஞ்சம் கொஞ்சமாக, அக்கம் பக்கத்தினர், இவள் பூஜையைப் பார்க்க வந்தனர்.

வம்பு சேகரிக்க வந்தவர்கள் கூட அவள் கானத்தினால் ஈர்க்கப்பட்டு மெய்மறந்தனர். கூடப் பாடத்தொடங்கினர். எங்கும் கிருஷ்ணகானம். அரசனும், மற்றொரு அமைச்சரும் இந்த பஜனையில் கலந்து கொள்ள ஆசைப்பட்டனர். குபராவின் தந்தை அவர்களை அழைத்து வந்தார்.

அரசன் சரவாகனன் துறவியல்ல... சங்கீதப்பிரியன். அவனுக்கு மனைவியும், மைந்தர்களும் உண்டு முதலில் பாட்டை ரசித்தவன், பின்னர் பாடும் பாவையை ரசிக்கத் தொடங்கினான். அவளை தனக்கே உரிமையாக்கிக் கொள்ள நினைத்தான்.

அன்று குபராவின் தந்தையிடம் 'தன் எண்ணத்தை வெளியிட, பஜனை முடியட்டும்' என்று காத்திருந்தான். மெய்மறக்கச் செய்யும் பாடல். கண்மூடி ரசித்தவன் முன் ஒரு காட்சி விரிந்தது. கனவா... நனவா, என்று புரியாத மயக்க நிலை! வெள்ளம் பெருக்கெடுத்தோடும் ஆறு. கொஞ்ச நேரத்தில் சர வாகனனை மூழ்கடித்து விடும். அக்கரையில் உயர்ந்த இடத்தில் குபராபாய் நிற்கிறாள்.

குபரா "அடே பாவி! திரும்பிப் போ... இந்தக் காமமென்னும் ஆற்றில் இறங்காதே! இங்கே மோகமென்னும் முதலைகள், துன்பமென்னும் சுழல்கள், பாவமென்னும் பாறைகள் ஏராளமாய் உண்டு... போ, போ" என, திடுக்கிட்டுக் கண் விழித்தவன், எதிரே தம்பூராவை இசைத்தபடி தூய்மையான வெள்ளை ஆடையில், துறவுக்கோலத்தில் இருந்த குபரா தென்பட்டாள். ஜால்ராவும், மிருதங்கமும், டோலக்கும், வீணையும் அவன் புத்தியை நிதானப்படுத்தின.

மானசீகமாக மன்னிப்புக் கேட்டவன், குபராவின் பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினான். பின்னர் அவளிடமே உபதேசம் பெற்று, பக்தி மார்க்கத்தில் தன் புத்தியைத் திருப்பினான். குபரா பக்தியிலேயே தன் வாழ்நாளைக் கழித்து இறைவனடி சேர்ந்தாள்.

48 ஸ்ரீ ஜகன் மித்திரர்

பண்டரீபுரத்திற்கருகேயுள்ளது பாரளி என்ற சிற்றூர். அங்கே வைஷ்ணவ குலத்தில் பிறந்தவர் ஜகன் மித்திரர். யாவரிடமும் (ஜகம் பூராவும்) நேசபாவத்தோடு நடந்து கொண்டதால் ஜகன்மித்திரர் என்று வழங்கப்பட்டு, இயற்பெயர் மறைந்து போயிற்று. உஞ்சவிருத்தி எடுத்துத்தன் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார்.

"தெய்வத்தை நேரில் காட்ட முடியுமா?"

"பக்தி என்றால் என்ன?"

"பக்தி செய்யாதவரை இறைவன் காப்பாற்றமாட்டானா?" என்றெல்லாம் பலர் அவரிடம் வாதம் செய்தனர். அவரோ "பக்தி இதயத்தில் உண்டாகும் ஒரு ஊற்று. பாறைகளில் அது கிடைக்காது. தொண்டினால் தான் பரந்தாமன் அருள் கிடைக்கும்" என்று கூறி விட்டு ஒதுங்கிவிடுவார். அவர்கள் ஜகன் மித்திரர் வேஷம் போடுவதாக கேலி செய்வார்கள். அவரோ அவமானங்களை அலட்சியம் செய்துவிட்டு ஆண்டவன் பணியையும், அடியார் சேவையையும் செம்மையாகச் செய்து வந்தார். சில போக்கிரிகளுக்கு அவரது இந்தச் செயல் வெறியூட்டியது. ஒருநாள் இரவு ஊர் உறங்கும் நேரம், அவர்குடிசைக்குத் தீவைத்து விட்டனர்.

"உன் பாண்டுரங்கன் உன்னை வந்து காப்பாற்றுகிறானா என்று பார்க்க வேண்டும்."

"தொண்டு, தொண்டு என்று வாய்கிழியப் பாடுவாயே! எத்தனை பேர் சேவா மனப்பான்மையோடு உன்னைக் காக்கிறார்கள் என்று பார்ப்போம்..."

"அக்னியும் ஒரு தேவனே! பகவான் கண்ணன் காண்டவ வனத்தை எரித்த போது கிரௌஞ்சப்பட்சியின் குரலுக்கு ஓடி வந்தவன்... அவனைப் பாடி பஜனை செய்" என்ற கோஷங்கள் வேறு!

இந்த ஆரவாரங்களினாலும், கூரைமூங்கில்கள் வெடித்துச் சிதறும் சப்தங்களினாலும், புகை நாற்றத்தாலும் அக்கம் பக்கத்தார் உறக்கம்

கலைந்து எழுந்துவர, முரடர்கள் ஓடிவிட்டனர். உள்ளே தீ வெம்மையால் ஜகன்மித்திரரும், அவர் குடும்பமும் எழுந்தனர். நாலாபக்கமும் தீபரவி, வெளியே வரமுடியாதபடி இருந்தது.

ஜகன்மித்திரர் தன் குடும்பத்தினரை அழைத்துக் கொண்டு பூஜை செய்யும் இடத்திற்குச் சென்றார். மனைவியையும், குழந்தைகளையும் உட்காரச்சொல்லி தானும் உட்கார்ந்தார்.

"ஹரி நாராயணா! நாங்கள் பலகாலம் உன்னைப் பாட வேண்டு மென்று நினைத்தால் எங்களைக் காப்பாற்று! காண்டவவனமே எரிந்து சாம்பலாகும் போது குஞ்சுகளைக் காப்பாற்றிய தயாநிதி ஆயிற்றே நீ" என மெய்யுருகப் பிரார்த்தித்து விட்டு பஜனை செய்யத்தொடங்கினார்.

அண்டை அயலார் "ஜகன்மித்திரர் பெரும் பக்தர். அவருக்கா இப்படி ஒரு கஷ்டம்! அவரைக் காப்பது உன்பாரம்" என்று பிரார்த்தித்தபடி தண்ணீரை மொண்டு மொண்டு ஊற்றினர். அவர்கள் போட்ட கூச்சலில் ஊரே அங்கு கூடிவிட்டது.



வீடு மொத்தமும் சாம்பலான பிறகே நெருப்பு அணைந்தது. கிட்டே நெருங்கமுடியாமல் அனல் வீசியது. ஆனால் ஜகன்மித்திரரும், அவர் குடும்பத்தினரும் எந்த சேதமுமின்றி அமைதியாக பஜனை செய்து கொண்டிருந்தனர். ஊரார் அவர் பக்தியின் பெருமையையும், வலிமை யையும் அரசனிடம் எடுத்துரைத்தனர். அரசன் அவருக்குக் கட்டடம் கட்டித்தந்து, ஒரு கிராமத்தையும் எழுதி வைத்தான்.

ஜகன்மித்திரர் முதலில் அதை மறுத்தார். "அரசே, பணம் பாஷாணம். பேராசை விதையை மனதில் ஊன்றச்செய்யும். 'நிலத்திலிருந்து போன வருஷம் இத்தனை மூட்டை வந்ததே! இந்த ஆண்டு ஏன் குறைந்தது' என்று சந்தேகப்படச் செய்யும். அப்புறம் அந்த தானியங்களைத் திருடர் கவர்ந்து செல்லாமல் இருக்க வேண்டுமே என்ற கவலை... இந்த பந்தங்களெல்லாம் மெய்மறந்த பக்திக்குத் தடைகல்" என்றார்.

அரசர் "பொருளில்லாமல் வாழ்க்கை இல்லை. உமக்கு ஒரு தொல்லையுமில்லாமல் ஊரார் விளைச்சலையும், பாதுகாப்பையும் கவனித்துக் கொள்வர். உம்மைப் போன்ற பக்திமான்களால்தான் நாடு செழிக்கும். நீர் அந்தப் பொருளால் விருந்தோம்பலும், பாண்டுரங்க சேவையும் செய்து கொண்டிரும்" என்று சமாதானம் சொல்ல, ஊராரும் வற்புறுத்த, ஜகன்மித்திரர் இந்த ஏற்பாட்டுக்கு ஒருமாதிரி ஒப்புக் கொண்டார்.

இப்படியே காலம் அமைதியாகச் சென்றது. எதுவும் ஒரே மாதிரி இருப்பதில்லையே! பருவங்கள் மாறுவது போல் ஒரு முஸ்லீம் அரசன் பண்டரி மீது படையெடுத்து, வெற்றி கொண்டான். அவனுக்கு இந்துக்கள் மீது தீராத வெறுப்பு. ஜகன் மித்திரருக்கு ஒரு கிராமம் எழுதி வைத்தது எதற்கு என்று விசாரித்தான். அவர் மீது பொறாமை கொண்ட சில துஷ்டர்கள் "அவர் சோம்பேறியாக சதா பஜனைசெய்ய, வேலை செய்யாத பண்டாரங்களுக்கு சோறு போட" என்று திரித்துக் கூற அவனுக்குக் கோபம் பொங்கியது.

ஜகன்மித்திரரை அழைத்து, "இப்போது இந்த நாடு எனக்குச் சொந்தமானது. இதில் ஒரு கிராமத்தை உனக்கு அனாவசியமாகத் தரமாட்டேன். உன்னால் ஒரு காரியம் ஆக வேண்டி இருக்கிறது. அதை முடித்துத் தந்தால் முன்போலவே இதை நீ அனுபவிக்கலாம். இன்று

சூரியாஸ்தமனத்திற்குள் எங்கள் குலதெய்வ பூஜைக்கு ஒரு புலி வேண்டி இருக்கிறது. உன்னை நெருப்பும் சுட முடியவில்லையாம்! சாதாரண மனிதர்கள்களால் காட்டிற்குச் சென்று புலியைக் கொண்டுவர முடியாது. உன்னால் முடியாவிட்டால் நீ இது நாள் வரை செய்ததெல்லாம் வேஷம். தக்க தண்டனையுடன், கிராமமும் பறிமுதல் செய்யப்படும்" என்று எச்சரித்தான்.

ஜகன்மித்திரர் யோசித்தார். தண்டனைக்கு அவர் அஞ்சவில்லை. ஆனால் அந்த கிராமத்தால் எத்தனை ஏழை எளிய மக்கள் பிழைக்கி றார்கள். அவர்கள் வறுமைக்குத்தான் காரணமாக வேண்டுமா? எத்தனை யாத்ரீகர்கள் பசியாறுகிறார்கள்! இந்து மதம் ஆழமாய்ப் பரவ பக்திப்பணி செய்ய முடிகிறது. இத்தனையும் பாழாகுமே! முஸ்லீம் அரசனின் மனதில் இந்த எண்ணத்தைத் தோற்றுவித்தவனும் அவன் தானே!

ஆரம்பித்தவனுக்கு முடிக்கத்தெரியாதா? நம்மால் முடியாது என்று ஓடுவதைவிட முயற்சி செய்தோம் என்ற மனத்திருப்தி நிறைவா யிருக்குமே! அன்று தீயிலிருந்து காத்தவன் இதற்கும் ஒரு வழிகாட்டா மலிருக்கமாட்டான்" என்று முடிவு செய்து அரசனிடம் விடை பெற்றுக் காட்டிற்கு வந்தார். அங்கே ஓரிடத்தில் உட்கார்ந்து கண்மூடி இறைவனை நினைத்து மெய்யுருகிப் பாட ஆரம்பித்தார். பாடிக் கொண்டே இருந்தார். சூரியன் மேற்கே சாய்ந்து கொண்டிருந்ததை அவர் அறியார்.

திடீரெனப் புலியின் உறுமல் கேட்டுக் கண்விழித்தார். எதிரே பிரம்மாண்டமான புலி! புலி வாய் திறந்து "அன்ப! நடந்ததை நான் அறிவேன். புறப்படலாமா?" என்றது. ஜகன்மித்திரர் நெடுஞ்சாண் கிடையாக புலியின் கால்களில் விழுந்தார். பின்னர் எழுந்து தன் மேல் துண்டை புலியின் கழுத்தில் கட்டி நகருக்கு அழைத்துச் சென்றார். கழனி களில் வேலை முடிந்து வீடு திரும்புவோரும், ஆடு, மாடு மேய்ப்பவரும் இந்தக் காட்சியைக் கண்டு அலறி ஓடினர். ஊருக்குள் செய்தி பரவியது. அவரவர் இல்லங்களுக்கு விரைந்த மக்கள், கதவைச் சார்த்தித் தாளிடத் தொடங்கினார்கள். "இந்த அரசன் ஒரு முட்டாள்" என்று திட்டிக் கொண்டே சிலர் ஓடினர். இதற்குள் அரண்மனைக்கும் செய்தி எட்டியது. அரசன் எல்லாக் கதவுகளையும் மூட உத்தரவிட்டான். தானும் அந்தப் புரத்துக்குள் சென்று ஒளிந்து கொண்டான்.

கதவு மூடியிருப்பதைக் கண்டு ஜகன்மித்திரர் திகைத்தார். பாண்டுரங்கப்புலி சீற்றம் மேலிடக் கண்கள் பளபளக்க, மூடிய கதவின் மீது பாய்ந்ததும், கதவு பரக்கத்திறந்து கொண்டது. காவலர்களும், பணிப்பெண்டிரும் நடுநடுங்கினர். புலியுடன் அந்தப்புரத்திற்கே சென்றார் ஜகன்மித்திரர். குழந்தைகள் புலியின் உறுமலைக் கேட்டு பயத்தில் அலறின. "ஐயோ, இப்போது என்ன செய்வது?" என்று அரசன் புலம்ப, அரசி "ஆராயாமல் பக்தர்களை வதைத்தால் இதுதான் பலன். அரசுகள் மாறலாம். பக்தர்கள் மாறுவதில்லை. அவரிடம் மன்னிப்புக் கேட்பதொன்றே தப்பும் மார்க்கம்" என்றாள்.

அரசனும், அரசியும் ஜகன்மித்திரர் காலில் விழுந்து மன்னிப்புக் கோரவும், அங்கே புலி மறைந்து சங்கு சக்கரதாரியாய் மகா விஷ்ணு காட்சியளித்தார். ஆனால் பரந்தாமனின் திவ்விய மங்கள ரூபம் பக்தருக்கு மட்டுமே தெரிந்தது. திடீரென்று புலி மறைந்ததை மட்டுமே, மற்றவர்கள் உணர்ந்து கொண்டனர். ஜகன் மித்திரர் கிராமத்தை அடைந்து எந்த வித இடையூறுமின்றி, இறைவனை பூஜித்துக் கொண்டே, தன் காலத்தைக் கழித்தார்.

49. கேசவ ஸ்வாமி

"ஹரி ஹரி விட்டல! ஜெய ஜெய விட்டல" எங்கும் ஒரே கோஷம். விஜயபுரத்தில் ஏகாதசி பஜனை. அதிலும் பரம பாகவதர் கேசவஸ்வாமி தலைமையில் நடக்கிறதென்றால் கேட்க வேண்டுமா? தீர்த்தாடனம் செய்து கொண்டிருந்த கேசவஸ்வாமி பல அன்பர்களின் வேண்டு கோளுக்காக ஏகாதசி பூஜைக்கு விஜயபுரத்தில் தங்கியிருந்தார்.

யாரோ இரண்டு பேர் இருமினார்கள். குரல் பிசிறடித்தது. கேசவர் ஒரு சீடனை ரகசியமாக அழைத்தார். "இன்று முழுவதும் பக்தர்கள் உபவாசமிருந்து பஜனை செய்கிறார்கள். தொண்டை வறண்டுவிட்டது. நீ ஓடிப்போய் சுக்கும், வெல்லமும் வாங்கி இடித்துக் கொண்டு வா" என்றார்.

சீடனும் பணத்துடன் கடை வீதிக்கு வந்தான். இரவுநேரம் எல்லாக் கடையும் பூட்டியாகி விட்டது. ஒரு கடை வாசல் பலகையில் ஒரு மனிதன் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தான். சீடன் அவனை எழுப்பி, "ஐயா, இந்தக் கடையின் சொந்தக்காரர் தாங்களா?" என்று கேட்டான்.

"ஆமாம்" என்று அவன் கூறவும், சீடன்,

"கேசவஸ்வாமி இந்த ஊரில் பஜனை செய்கிறார். சுக்கும் வெல்லமும் இடித்து பாகவதர்களுக்குக் கொடுக்க வேண்டும். கொஞ்சம் தயவுசெய்து கடையைத் திறந்து எடுத்துக் கொடுக்கிறீர்களா? சும்மா இல்லை. இதோ, பணம் கொண்டு வந்திருக்கிறேன்" என்று பணத்தைக் காண்பித்தான். கடைக்காரர் பரபரவென்று எழுந்து,

"என்ன காரியம் சொன்னீர்! என்னை ஈயாத லோபி என்று நினைத்தீரா? நானே கேசவஸ்வாமியின் பஜனையில் கலந்து கொள்ள முடியவில்லையே என்று புழுங்கிக் கொண்டு படுத்திருந்தேன். இன்றைக் கென்று வீட்டிலும் யாரும் இல்லை! எனக்கும் தான் கொஞ்சம் புண்ணியம் கிடைக்கட்டுமே! பகவானே என் மனமறிந்து உங்களை இங்கே அனுப்பி இருக்கும்போது பணம் வாங்கிக் கொள்வதாவது!" என்றவன் கடையைத் திறந்தான். விளக்கு அணைந்து விட்டது. தட்டித் தடுமாறி பொதி யிலிருந்து வெல்லம் எடுத்து வந்து சீடனிடம் தந்தான்.

சுக்கு இருக்குமிடத்திற்கு நிதானத்திலேயே சென்று சுக்கென்று நினைத்து பாஷாணத்தையும் எடுத்து வந்து தந்தான். சீடன் கடைக்காரனின் தயாள குணத்தைப் பாராட்டிவிட்டு, அவனும் இருட்டில் சரியாகப் பார்க்காமல், இரண்டையும் இடித்துக் கலந்து குருநாதரிடம் பணிவுடன் தந்தான்.

கேசவஸ்வாமி அதை பக்தியுடன் நிவேதனம் செய்துவிட்டு சீடர்களிடம் கொடுத்து, பக்த கோடிகளுக்கு விநியோகிக்கச் சொன்னார். பஜனை முடிந்தது. பாஷாணம் அவர்களை எதுவும் செய்யவில்லை. அனைவரும் தத்தம் இல்லம் சென்றனர்.

மறுநாள் பொழுது விடிந்தது. கடைக்காரன் வழக்கம் போல் கடையைத் திறந்தான். பாஷாணப்பை அவிழ்ந்து தரையில் பாஷாணத்துண்டுகள் சிதறி இருப்பதைப் பார்த்தான். 'எலியின் வேலையல்ல இது. அப்படி

யானால் பை அவிழ்ந்து கிடப்பானேன்' என்று யோசித்தவன், சந்தே கத்துடன் சுக்குப் பையைப் பார்த்தான். பை கட்டியபடி இருப்பதைக் கண்டு திடுக்கிட்டான்!

"உபகாரம் செய்கிறேன் என்று அபவாதத்தைச் சம்பாதித்துக் கொண்டேனே! பரம்பரைக்கே தீராத பழியை ஏற்படுத்தி விட்டேனே! இருட்டிலே சுக்குக்கு பதிலாக பாஷாணத்தைக் கொடுத்து விட்டேனே! ஊரில் எத்தனை பேர் என்ன நிலையில் இருக்கிறார்களோ?" என்று பதறித் துடித்து, கடையைப் பூட்டிக் கொண்டு, ஊருக்குள் சென்று பார்த்தான். எந்தவித அசம்பாவிதமும் நடந்ததாகத் தெரியவில்லை. சுடுகாட்டுக்குச் சென்று வெட்டியானிடமும் பேச்சுக் கொடுத்துப் பார்த்ததில் நேற்று இரவு முதல் ஒரு பிணமும் வரவில்லை என்றும் தெரிந்து கொண்டான். சற்றே மனம் அமைதியுற்றது. ஆனாலும் செய்த பிழையை கேசவஸ்வாமியிடம் சொல்லி மன்னிப்புக்கேட்டால் தான் ஆறும் என்று பட்டதால் கேசவஸ்வாமி தங்கியிருந்த இடத்திற்கே விரைந்தான்.

அப்போது தான் கேசவஸ்வாமி நீராடி புனர் பூஜை செய்ய பூக்களோடு விக்கிரகத்தின் முன் அமர்ந்தவர், விக்கிரகம் ஒரே நீல நிறமாயிருப்பதைக் கண்டு திடுக்கிட்டார். வணிகன் அவருடைய காலில் விழுந்து நடந்தவைகளைச் சொல்லி அழுதான். கேசவஸ்வாமி மெய் சிலிர்த்து புளகாங்கிதத்துடன் "அப்பனே, எழுந்திரு, நீ அறியாமல் செய்த பிழையின் விளைவை அவன் ஏற்றுக் கொண்டு விட்டான்" என்றவர், பகவானை நோக்கி "பக்தவத்சலா! என்னையும், வணிகனையும் பழியின்றி காப்பாற்றியது சரி. ஆனால் இப்படி நீல நிறத்துடனேயே இருந்தால் எங்கள் தவறு எங்களை வாட்டி வதைக்காதா? பழைய உருவத்தோடு காட்சி தந்தால் தான் எங்களை மன்னித்ததாக அர்த்தம்" என்று வேண்ட, இறைவனின் விக்ரகம் பழைய நிறத்துக்கு மாறியது.

இதைக் கண்ட சீடர்களும், ஊராரும், வணிகனும் கேசவ ஸ்வாமியின் பக்தியின் மகிமையை எண்ணிப் புளகாங்கித முற்றனர்.

50. நரஹரி பக்தர்

நரஹரி நாமதேவர் காலத்து பொற்கொல்லர். பிழைப்புக்காக பண்டரி புரத்தில் வசித்தார். பாண்டு ரங்கன் கோவில் இருக்கும் தெரு வழியாகக் கூடப் போகமாட்டார். அத்தனை தீவிர சிவபக்தர். ஊரிலே பிரம்மோற்சவம் என்றால் திருநாள் முடியும் வரை வெளியூர் சென்று விடுவார். சுவாமி வீதிவலம் வருகிறார் என்றால் வீட்டிற்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டுவிடுவார்.

அந்த ஊரில் ஒரு வியாபாரி. அவனுக்கு வெகுகாலம் குழந்தை யில்லாமல் இருந்தது. தனக்குக் குழந்தை பிறந்தால் பண்டரிநாதனுக்குத் தங்க அரைஞாண் செய்து போடுவதாக வேண்டிக் கொண்டான். அடுத்த வருஷமே அவனுக்கு ஒரு அழகிய ஆண்குழந்தை பிறந்தது. வியாபாரியும் நரஹரியிடம் வந்து தன் பிரார்த்தனையைக் கூறி அரைஞாண் செய்து கொடுக்கும்படி கேட்டான்.

நரஹரி "உங்கள் விக்ரகத்தை நான் பார்க்கமாட்டேன். விக்ரகத்தின் இடைச் சுற்றளவை அளந்து வந்து கொடுத்தால் செய்து தருகிறேன்" என்றார். வணிகனும் ஒப்புக் கொண்டு அப்படியே அளந்து வந்து கொடுத்தான். நரஹரி சொன்ன கெடுவில் அரை ஞாணை செய்து முடித்தான். அதைப் பார்த்த வணிகன் பிரமித்தான். அது அத்தனை புதுமையாக, நுணுக்கமான, நகாசு வேலைகளுடன் இருந்தது. மகிழ்ச்சியுடன் கூலியைக் கொடுத்து வாங்கிக் கொண்டுபோய் அணிவித்தால், சுற்றளவு போதவில்லை. கொக்கி மாட்டமுடியவில்லை.

வணிகன் வேதனையோடு நரஹரியிடம் வந்து சொல்ல, நரஹரி வணிகன் சொன்ன அளவுப்படி அதை நீட்டித் தந்தான். மறுபடி அதைப் போட்டால் இடுப்பிலேயே நிற்காமல் தொப்பென்று விழுந்தது. வணிகன் மறுபடி நரஹரியிடம் கொண்டு வந்தான். நரஹரி குறைத்துத் தந்தார். வணிகன் பயபக்தியோடு மறுபடி பூட்ட, இப்போது பற்றாத நிலை. வணிகனுக்கு ஒன்றுமே புரியவில்லை!

"இறைவா! இதென்ன சோதனை? நான் பார்த்துப் பார்த்து நவரத்தினங்களைத் தேர்ந்தெடுத்தேனே! கற்கள் தோஷமுள்ள

தாயிருக்குமோ? என் காணிக்கையை பகவான் ஏன் ஏற்க வில்லை? என் மனதில் என்னையுமறியாமல் களங்கம் விழுந்திருந்தால் மன்னிக்கக் கூடாதா? நான் அத்தனை பெரிய பாவியா?" என்று துக்கத்துடன் அழுது புலம்பியவாறே நரஹரியிடம் வந்து, "ஐயா, எனக்கு அளவெடுக்கத் தெரியவில்லை. நீங்களும் சலிக்காமல் நான் சொன்னபடியெல்லாம் செய்தீர்கள். என் துர்பாக்கியம் பொருந்தவில்லை. என் குழந்தை பேரும், புகழும் பெற்று நீடு வாழ, நீங்கள் தயவு செய்து பரந்தாமனுக்குப் பொருந்தும்படி நேரில் வந்து நீங்களே அளவெடுத்தால்..." முடிப்பதற்குள் நரஹரி சீறினார். "இதென்ன முரண்பாடான பேச்சு? நான்தான் முதலிலேயே விக்ரகத்தை பார்க்க மாட்டேன் என்று ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறேனே! உங்கள் கடவுளைப் பார்த்தால் நரகம் தான் கிடைக்கும்"

வணிகன் யோசித்தான். மூர்க்கன் முதலை மாதிரி... இவன் போக்கில் போனால் தான் காரியம் நடக்கும் என்று தீர்மானித்து பணிவுடன் "ஐயா, இருவருக்கும் பாதகமில்லாத ஒரு யோசனை சொல்கிறேன். தயவு செய்து பரிசீலனை பண்ணிப் பாருங்கள். பாண்டுரங்கன் ஆலயம் வரும்போது

உங்கள் கண்களை இறுகக் கட்டி, நான் அழைத்துச் செல்கிறேன். நீங்கள் அளவெடுங்கள். உங்களுக்கு மூர்த்தியோ, அலங்காரமோ, பூஜைகளோ தெரியாது. வெறும் சிலைதான் தெரியும். இது என் வேண்டுகோள். என் மனம் படும் பாட்டையும், என் குழந்தையின் ஆயுளையும் நினைத்து, என் மனைவியின் பயத்தையும் உணர்ந்து இரக்கம் காட்டுங்கள்" என்றான். நரஹரியும் வெகு நேர யோசனைக்குப் பின் ஒப்புக் கொண்டான்.

கோவில் வாசல் வரும் போதே நரஹரி கெட்டியான துணியால் கண்களை கட்டிக் கொண்டான். மூலஸ்தானத்துக்கு வந்ததும் நரஹரி விக்ரகத்தின் இடுப்பு எங்கே இருக்கிறதென்று தடவ, அங்கேயிருந்த பக்தர்களும் அர்ச்சகர்களும்,

"எங்கெங்கிருந்தோ கோடானு கோடி பேர் பாண்டு ரங்கனை தரிசிக்க ஓடி வருகிறார்கள். 'ஆயிரங்கண்கள் போதவில்லையே அவன் அழகைப் பருக' என்று நாமதேவர் போன்ற பக்தர்கள் பரிதவிக்கிறார்கள். இவன் சந்தன மரத்தை வெட்டி அடுப்பெரிக்கும் மூடனைப் போல, கண்ணைக் கட்டிக் கொண்டு தடவுகிறான்" என்ற பரிகசித்தார்கள். நரஹரிக்கோ இடுப்பைத் தொட்ட மாத்திரத்தில் புலித்தோல் தட்டுப்பட்டது. திகைத்தான்.

பெருமாளின் இடுப்பிலே பட்டுப் பீதாம்பரமல்லவா இருக்கும்! சந்தேகப்பட்டு கைகளைத் தடவ சங்குச் சக்கரத்துக்கு பதிலாக, மான், மழு, சூலம், அக்கினி, உடுக்கை, யானைத்தோல் போர்வை எல்லாம் தட்டுப்பட்டன. கிரீடத்தை ஸ்பரிசித்துப் பார்த்த போது 'தண்'ணென்ற கங்கையும், பிறையும், சடாமுடியும், காதுகளில் நாக குண்டலங்களும், நெற்றிக்கண்ணும் தென்படவே பரபரவென்று கட்டுக்களை அவிழ்த்தான்.

"இங்கே இருப்பது கைலாசநாதனல்லவா? முட்டாள் தனமாகப் பாண்டுரங்கன் என்று மற்றவர்கள் சொன்னதைக் கண்மூடித்தனமாக நம்பி, இதுநாள் வரை சேவிக்காமல் இருந்துவிட்டேனே!" என்று பதறியபடி கண்ணைத் திறந்தால், இடுப்பில் கைவைத்துக் கொண்டு குஞ்சிரிப்புடன் சங்குச் சக்கரதாரி, பீதாம்பரதாரியாய் காட்சியளித்தார்.

நரஹரி வெறுப்புடன் கண்களை மூடிக்கொண்டு "என் நெஞ்சில் சதா கங்காதரனை நினைத்துக் கொண்டிருப்பதால் கற்பனையையே கையில் உணர்வதாகப் பிரமை! நீ யாராயிருந்தால் என்ன? வந்த வேலையை முடித்துக் கொண்டு போகிறேன்" என்றபடி இடுப்பை அளந்தான்.

மீண்டும் அவன் கையில் தட்டுப்பட்டது புலித்தோல்! திறத்தால் பீதாம்பரம்! அளவெடுப்பதை விட்டு கண்ணை மூடுவதும் விக்ரகத்தைத் தடவு வதும், கண்ணைத் திறப்பதுமான நரஹரியின் செயல் வணிகனுக்கும், சுற்றியுள்ளவர்களுக்கும் வியப்பாக இருந்தது.

பகவான் கருணை கூர்ந்து நரஹரியின் மயக்கத்தைத் தெளிவிக்க, அசரீரியாக "அன்பா, அரை நாணைக் கூட்டவும், குறைக்கவுமாகச் செய்தது உன் புத்தியைத் தெளிவிக்கவே! சிவனும் நாமே! விஷ்ணுவும் நாமே! பசுபதியும் நானே! பாண்டு ரங்கனும் நானே! தத்தாத்ரேயனாய் அத்திரி முனிவரின் ஆசிரமத்தில் உருவெடுத்தேன்.

நாமதேவரின் அன்னதான வைபவத்தில் சிவனும், பெருமாளுமாக நான் சாப்பிடுவதைப் பார். சங்கர நாராயணனாக புன்னைவனச் க்ஷேத்திரத்தில் காட்சி தருவதே உன் போன்றவர்களின் அஞ்ஞானத்தைப் போக்கத்தான்" எனவும் நரஹரி கைகூப்பி, கண்ணீர் சோர நின்றார். தன் தவறை உணர்ந்து மன்னிக்கும்படி வேண்டினான். பித்தனைப்போல் பாண்டுரங்கனை ஆலிங்கனம் செய்து கொண்டு முத்தமிட்டார். என்ன ஆச்சரியம்!

அரை நாணை நரஹரி அணிவித்துப் பார்த்தபோது கன கச்சித மாயிருந்தது. வணிகன் மனத்திருப்தியுடன் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான். சங்கர நாராயண ரூபமாக ஒருகணம் நரஹரிக்குக் காட்சியளித்தார் பாண்டுரங்கன். அன்று முதல் பேதம் விடுத்து பக்தி கொண்டு வாழ்ந்தார் நரஹரி பக்தர்.

51. குணவதிபாய்

சிற்றரசன் மாதவ சிங்கின் மனைவி குணவதி. நற் குணங்களின் பிறப்பிடம். பதிபக்தி மிக்கவள். நீதி நெறியுடன் அரசாண்டதால் ஜனங் களுக்கு அரசனிடம் அதிக வாத்சல்யம். அவர்களுக்கு அழகான இரு குழந்தைகள். பதினாறு பேறுகளும் பெற்று வாழ்ந்ததால் வாழ்க்கை திகட்டுமளவுக்கு இனித்தது.

அந்தப்புரத்தாதிகளில் ஒருத்தி விஷ்ணு பக்தை. இளம் வயதிலேயே கணவனை இழந்ததால் மனதை பக்தி மார்க்கத்தில், செலுத்த சதா பகவந் நாமாவையே ஜபித்து வந்தாள். அதெல்லாம் மனப்பாடமாகி சாப்பிடும் நேரம், உறங்கும் நேரம் தவிர மற்ற நேரமெல்லாம் அவள் உதடுகள் ஜபித்துக் கொண்டே இருந்தன. ஒருநாள் குணவதி அவளிடம் "சதா மொண மொண வென்று என்ன சொல்கிறாய்? அதனால் என்ன லாபம்?" என்று கேட்டாள். தாதி "அம்மணி! ஊத்தை நாற்றம் பிடித்த இப்பிறவிப் பிணியை அகற்றவே பரந்தாமனை ஸ்மரிக்கிறேன். இம்மைக்கும், மறுமைக்கும் இன்பம் தரும் சொர்க்கமாயிற்றே அது" என்று புளகித்துக் கூறினாள்.

குணவதி இயற்கையிலேயே பக்தி மிகுந்தவள். விசேட நாட்களில் ஆலயம் சென்று பகவானை வணங்கத் தவறமாட்டாள். பசி என்று வந்தவரை வெறும் வயிற்றோடு திருப்பி அனுப்ப மாட்டாள். உதவி என்று வந்தவர்களுக்கு கருணையுடன் அள்ளித்தருவாள். அப்படிப்பட்டவள் தாதியிடம், அந்த ஸ்தோத்திரங்களை தனக்குச் சொல்லிக் கொடுக்கும்படி வேண்டினாள்.

தாதி அவளிடமிருந்த அபூர்வ வேலைப்பாடமைந்த கிருஷ்ண விக்ரகத்தைக் கொடுத்து, மந்திரங்களை உபதேசித்தாள். பூஜை செய்யும் முறைகளையும், உபவாச மகிமைகளையும், கண்ணன் பெருமைகளையும் விளக்கினாள். அதெல்லாம் பசுமரத்தாணி போல் குணவதி மனதில் பதிந்தது. அன்று முதல் குணவதி ஊண் உறக்கத்தை மறந்தாள். உற்றார் உறவினரை மறந்தாள். எப்போதும் பூஜை, பஜனை, அன்னதானம், அடியார்கள் உபசரிப்பு இப்படித்தான் அவள் பொழுது கழிந்தது.

மாதவசிங்கின் உறவினர்கள் அரண்மனைக்கு வந்தனர். திரும்பிப் போகும் போது மாதவ சிங்கிடம், "குணா முன்போல் இல்லையே! கெட்ட ஆவி ஏதும் பிடித்துக் கொண்டதா என்று பார்... ஒருவேளை எங்கள் வரவை அவள் விரும்பவில்லையோ?" என்று மனத்தாங்கலோடு கூறிச் சென்றனர்.

இன்னும் சிலர் "ஏன் குணா இப்படி இளைத்து கறுத்து உருமாறி விட்டாள்? தளதளவென்று எப்படி இருப்பாள்! பாவம் சின்ன வயது..., சாமியாரிணி போல் வேளைக்குச் சாப்பிடாமல் பூஜையும், பஜனையும்

என்ன வேண்டிக் கிடக்கிறது! தலையெல்லாம் ஒரே சிக்கு நாற்றம்! நீ கொஞ்சம் கண்டித்து வை" என்று சொன்னார்கள்.

மாதவசிங்குக்கு இதெல்லாம் பெருத்த அவமானமாகப் பட்டது. பூசாரிகளை வரவழைத்துப் பேயோட்டினான். கோயில்களில் குண வதியின் பெயரால் அபிஷேக, அர்ச்சனைகீள் செய்தான். பலாத்காரமாய் குணவதியை நீராட்டி, சாப்பிட வைத்தான். பூஜைகளைத் தடை செய்து அதட்டி மிரட்டினான். இதெல்லாம் குணவதிக்கு சஞ்சலத்தை அளித்தது. கண்மூடி கண்ணனைப் பிரார்த்தித்தார். "மாயவா! எனக்கோ உலக விஷயங்களில் பற்றில்லை. சதா உன்னைப் பூஜிப்பதிலும், அடியார்களைப் பேணுவதிலும் உள்ள மகிழ்ச்சி வேறெதிலும் இல்லை.

குளிப்பதும், சாப்பிடுவதும் கூட அனாவசியமாய் காலத்தை வீணாக் குவதாய் மனதை வாட்டுகின்றது. 'என் கணவரோ அலங்காரம் செய்து கொள். கேளிக்கைகளில் கலந்து கொள்' என்று வற்புறுத்துகிறார். நான் என்ன செய்வேன்?" என்று கண்ணீர் விட்டாள். விக்ரகத்திலுள்ள உருவம் உயிர் பெற்றுப் பேசியது. "குணவதி! அஞ்சாதே... உன் மனதை நான்



அறிவேன். உன்னைக் காக்க நானிருக்கிறேன், தைரியமாயிரு" என்றது. குணவதி மெய்மறந்து கண் திறந்தாள். விக்ரகம் பழையபடிதான் இருந்தது.

அந்த நேரம் காட்டு மிருகங்கள் கிராமத்துக்குள் புகுந்து தொல்லை விளைவிப்பதாய் கிராமவாசிகள் முறையிடவே, அரசன் பரிவாரங்களோடு வேட்டைக்குப் புறப்பட்டான். போகுமுன் அமைச்சர்களிடம் "அந்தப் புரத்துக்குள் சாமியார்களை அனுமதிக்க வேண்டாம். குணாவும் வெளியே போகக்கூடாது. அவளது நடவடிக்கை பற்றி அடிக்கடி எனக்குச் செய்தி அனுப்ப வேண்டும்", என்று எச்சரித்துவிட்டுப் போனான். துவாதசி வந்தது. அடியார்கள் வழக்கம் போல வந்தார்கள். குணவதி அவர்களை வரவேற்க மந்திரிகள் தடுத்துப் பார்த்தார்கள். "நான் அரசி" என்று குணவதி கண்டித்துக் கூறி விட்டதால் இத்தகவலை அரசனுக்குத் தெரிவித்துவிட்டனர்.

அரசன் சினந்து, நான்கு கொலையாளிகளை அனுப்பி குணவதி யைத் தீர்த்துக் கட்டும்படி உத்தரவிட்டான். அவர்களும் அரசனளித்த முத்திரை மோதிரத்துடன் அந்தப்புரம் அடைந்தனர். அப்போது குணவதி பூஜையிலிருந்தாள். பூஜை முடியட்டும் என்று தாமதித்தனர்.

திடீரென ஒரு கர்ஜனை! விக்ரகத்திலிருந்து ஒரு புலி புறப்பட்டது. குணவதி கண் திறந்து பார்த்தாள். "ஸ்வாமி! அன்று இரணியனுக்காக நரசிங்க வடிவமெடுத்தவனே! பூமியைக்காக்க வராகமாய் உருக் கொண்டவனே! இன்று புலி உருக்கொண்டது எவருக்காக?" என்று கேட்க, புலி சீறிப் பாய்ந்தது.

கையிலிருக்கும் வாள் சிதற, கொலையாளிகள் புலியால் அறையப் பட்டார்கள். அலறிக்கொண்டு மடிந்தார்கள். புலி மறைந்தது. புலியின் உறுமல் கேட்டு ஓடிவந்த மந்திரிகளும், காவலாட்களும் கொலையாளி களின் நிலை கண்டு நடு நடுங்கினர். அவர்கள் கையிலிருந்த அரசனின் முத்திரை மோதிரத்தைக் கண்டு நடந்ததை யூகித்துக் கொண்டனர். நடந்ததை அரசனுக்குச் சொல்லி அனுப்பினர். குணவதியிடமும், பயபக்தியும், மரியாதையும் கொண்டு நடந்தனர். நடந்ததைக் கேட்ட அரசன் மிகவும் துக்கித்தான். உடனே ஒரு ஓலையில், "குணவதியின் பூஜைக்கு இனி எந்தத் தடையும் செய்ய வேண்டாம். இப்படிப்பட்ட பக்தை துணைவியாகக் கிடைத்தது என் பூர்வ ஜென்ம புண்ணியமே. என்

செயலுக்காக நான் வருத்தமும், வெட்கமும் அடைகிறேன் என்பதை தெரிவிக்கவும். வேட்டையை முடித்துக் கொண்டு விரைவில் வந்து அவளிடம் மன்னிப்புக் கேட்கிறேன். அடியார்களை உபசரிக்க, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கவும்" என்று எழுதி அனுப்பினான்.

மந்திரிகளும் அவ்வண்ணமே நடந்து கொண்டனர். குணவதி இறைவனின் திருவிளையாடலையும், அருளையும் எண்ணிப் பூரித்தாள். அரசன் வேட்டை முடிந்து திரும்பினாள். வழியில் ஒரு காட்டாறு., பெரிய ஓடத்தில் பரிவாரங்களோடு வரும் போது ஓடம் சுழலில் சிக்கிக் கொண்டது. படகோட்டியால் எதுவும் செய்ய முடியாதபடி ஓடம் பயங்கரமாய் சுழன்று, பள்ளத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அனைவரும் அலறினர்.

அரசன் "குணவதி, உன் பக்தியைப் பழித்ததனால் வந்த பாவமோ? உன்னைக் கொலை செய்ய கொலையாளி ஏவிய பாதகன் உயிரோடிருக்கக் கூடாது என்பது இறைவன் திருவுள்ளமோ? பகவானே! என் மனம் மாறிய பிறகு இத்தண்டனை அளிப்பது ஏன்? ஒரே ஒரு முறை மாறிய கண வனாக, என் குணாவை மகிழ்விக்க முடியாமல் சாகப் போகிறேனே" என்று துக்கப்பட்டான்.

என்ன ஆச்சரியம்! ஓடம் ஓரமாக ஒதுங்கிக் கரை சேர்ந்தது. படகி லிருந்த அனைவரும் ஆனந்தமடைந்தனர். அரசன் குணாவை நினைத்த மாத்திரத்தில் பரந்தாமன் எப்படி உதவி செய்தார் என்று பிரமித்தார். 'இறைவன் தொண்டர் உள்ளத்தடக்கம்', என்பதை எப்படி நிதரிசனமாக்கி விட்டார் என்று நினைத்து, நினைத்து பூரித்தான். ஊர் வந்ததும் குணவதியிடம் நடந்ததைக்கூறி, மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

குணவதி 'கணவன் மனைவியிடம் மன்னிப்புக் கேட்பது தகாது. ஒரு பெண்ணுக்குப் புருஷனே தெய்வம்' என்று தடுத்து "ஆண்டவனையும், அவன் அடியாரையும் தொழ தடை சொல்லாமலிருந்தாலே போதும்" என்று விண்ணப்பித்தாள். அரசன் குணவதியிடம் முன்பைவிட அன்பு செலுத்தி அவளுடன் இணைந்து பக்தியில் ஈடுபட்டு முடிவில் மோட்ச மடைந்தான்.

52. தனாசாடர்

விவசாயக் குடும்பத்தில பிறந்தவர் தனாசாடர். தந்தைக்கு உதவியாக ஊர் மாடுகளை மேய்த்து வந்தார். அவர் ஏழு வயதுச் சிறுவனாயிருக்கும் போது அவ்வூருக்கு ஒரு பஜனைக் கூட்டம் வந்திறங்கியது. அவர்கள் தீர்த்த யாத்திரை செல்லும் வழியில் அக்கிராமம் இருந்தது.

தனாசாடர் வேலையில்லாத நேரம் அந்த வைஷ்ணவர்களையே கவனித்து வந்தார். அவர்கள் திருமண் இட்டுக் கொள்வதும், சாளக்கிராமத்துக்கு பூஜை செய்வதும், பாடுவதும் அவர் மனதைக் கவர்ந்தது. அவர்கள் ஊரை விட்டுப் புறப்படும் போது தனாசாடர் அவர்களிடம் "ஐயா, இது என்ன?" என்று சாளக்கிராமத்தைச் சுட்டிக் காட்டிக் கேட்டார்.

"சாளக்கிராமம்" என்றார் ஒருவர். "இதை பூஜை செய்தால் என்ன கிடைக்கும்?" சிறுவன் ஆவலாகக் கேட்டான். "மோட்சம் கிடைக்கும்; பிறவா வரம் கிடைக்கும். ஏன், வேண்டியதெல்லாம் தருவான் என் ஐயன். உயர் குலத்தில் பிறந்து கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கலாம். பரந்தாமன் இதனுள் இருக்கிறான். மெய்யுருகி அழைத்தால் காட்சி தருவான்" என்று விளக்கம் சொன்னார் பக்தர்.

தனாசாடர் "ஐயா, எனக்கும் ஒரு சாளக்கிராமம் தாருங்கள். எனக்கும் பூஜை செய்து, பகவான் அருளைப் பெற ஆசையாயிருக்கிறது" என்று கெஞ்சினார். உடன் இருந்தவர்கள் "இவனோ அறியாச் சிறுவன். தகுதி இல்லாதவரிடம் சாளக்கிராமத்தைத் தரலாமா? இவன் மனத்தில் விழுந்த பக்தி விதை அழியவும் கூடாது" என்று பலவும் யோசித்து மறுநாள் வரும்படி அனுப்பிவைத்தனர்.

ஆற்றங்கரைக்குப் போய் கறுப்பு நிறத்தில் வழுவழுப்பான ஒரு கல்லை பொறுக்கி வைத்துக் கொண்டனர். மறுநாள் தனாசாடர் வரும்போது சாளக்கிராமம் என்று சொல்லி அவர் கையில் அக்கல்லைக் கொடுத்து விட்டுச் சென்றனர். தனாசாடர் மாடுகளைப் புல் நிறைய இருக்குமிடத்தில் மேயவிட்டு விட்டு, ஓரிடத்தைக் குப்பை நீக்கி பசுஞ்சாணத்தால் மெழுகி

அக்கல்லை வைத்துவிட்டு, நதி அல்லது சுனையில் நீராடி, திருமண் இட்டுக் கொண்டு, அக்கல்லையும் முழுக்காட்டி, சிரட்டையில் பால் கறந்து அபிஷேகம் செய்து, காட்டுப் பூக்களைப் பறித்து மாலை சாத்தி அர்ச்சித்து வாய்க்கு வந்தபடி பாடுவார். பின்னர் தனக்குக் கட்டிக் கொடுத்திருக்கும் கம்பங்களியை சுவாமி முன் வைத்து 'சாப்பிடு, சாப்பிடு' என்று உபசரிப்பார்.

சுவாமி வரவில்லை. தனாசாடர் "என் பூஜை உனக்குப் பிடிக்க வில்லையா? எத்தனை காலமானாலும் நீர் சாப்பிடாமல் நான் நீரும் அருந்தமாட்டேன்" என்று பட்டினியாய் இருந்தார். மாலையாயிற்று. தனாசாடர் வீட்டிற்குப் புறப்பட எழுந்திருக்கும் போது பகவான் வந்து அன்போடு கம்பங்களியைச் சாப்பிட்டார். பின்னர் 'தனாசாடா, இதை எவரிடமும் சொல்லாதே! சொன்னால் நாளை முதல் வரமாட்டேன்' என்று எச்சரித்தார். தனாசாடர் ஏன் வாயைத் திறக்கிறார்? தினமும் இது போலவே நடந்தது. தனாசாடர் வளர்ந்து பெரியவரானார். குடும்பப் பொறுப்பு தந்தைக்குப் பின் இவர் தலையில் விழுந்தது. தன்னுடைய சிறு நிலத்தில் விவசாயம் செய்து குடும்பத்தைக் காப்பாற்றினார்.

எவர் பசியென்று வந்தபோதும் முகம் சுளிக்காது உபசரிப்பார். தான் சாப்பிட உட்கார்ந்துவிட்டால் கூட அப்படியே தூக்கிக் கொடுத்துவிடுவார். எங்கும், எவரிடமும் இறைவனையே கண்டார் அவர். ஒருநாள் சில பாகவதர்கள் தனாசாடர் வீட்டிற்கு வந்து "நீங்கள் அன்ன தாதா என்று கேள்விப்பட்டோம். ஒரே பசி. நாங்கள் பண்டரீபுரம் போகிறோம். இன்று உங்கள் வீட்டில் தான் சாப்பாடு. உங்களுக்கொன்றும் ஆட்சேபனை இல்லையே" என்றனர்.

தனாசாடர் அவர்களை அன்புடன் வரவேற்றார். விதைக்க வைத்திருந்த நெல்லைக் குத்திச் சமையல் செய்யும்படி மனைவியிடம் கூறினார். அவளும் பதி சொல் கடவாத உத்தமி. சொன்ன வண்ணமே செய்தாள். எளிய விருந்து தயாரானது. பாகவதர்கள் ஆனந்தமாய் உண்டு தனாசாடரை வாழ்த்திச் சென்றனர். மறுநாள் சக விவசாயிகள் "தனாசாடா, நேற்றுப் பெய்த மழையில் நிலம் பதமாயிருக்கிறது. உழலாம், வா" என்று ஏர் கலப்பையுடன் வந்தழைத்தபோது, தனாசாடர், "உழுது என்ன செய்ய? விதைக்கிருந்த நெல்லை விருந்திட்டு விட்டேன். விதை வாங்கவும் கையில் பணமில்லை" என்று சொல்ல அவர்கள், "நீ என்ன பெரிய மிராசுதாரா? பண்ணையாரா? அல்லது பெரும் பணக்காரனா? நாலுபேர் பாராட்ட வேண்டுமென்பதற்காக விதை நெல்லை வடித்துப் போட்டிருக்கிறாயே! வருஷம் பூராவும் குடும்பம் எப்படிச் சாப்பிடும் என்று யோசித்தாயா? விரலுக்குத் தக்கபடி வீங்கினால் தான் தாங்க முடியும்!" என்று கோபிக்க, தனாசாடர், "வீண் படாடோபத்துக்காக நான் அன்னதானம் செய்யவில்லை. ஆண்டவனை நாடிப் போகும் அடியவர் கூட்டம். பசியால் ஒரு உயிர் வருந்துவதை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. பகவான் தந்தது தானே விதை நெல்! பூமியில் விளைவதெல்லாம் அவன் அருள் தானே! பாடுபடுபவனுக்கு உரிமை சிறிது கூட இருக்கலாம்.

மண்ணிலே போடுவதை மனிதர் வயிற்றிலே போட்டதிலே என்ன தப்பு? அந்த விதை விளைந்து வரும் வரை அதைச் சாப்பிட நான் உயிரோடி ருப்பேன் என்பதற்கு என்ன ஆதாரம்? இந்த யோசனையைத் தந்த பகவான் இதற்கொரு வழியும் காட்டாமலிருக்க மாட்டான்" என்று சொல்லிவிட்டு வழக்கம் போல் பூஜை செய்யப் போய்விட்டார்.

அவர்களும் சலிப்புடன் 'இவன் திருந்தமாட்டான். பட்டால்தான் தெரியும். வயிறு காயும்போது வேதாந்தம் வருகிறதா என்று பார்க்க

வேண்டும்” என்றபடி வயலுக்குச் சென்றனர். அங்கே போனதும் அத்தனை பேரும் ஆச்சரியத்தில் பேச வாயெழாது திக்கு முக்காடினர். தனாசாடரின் நிலத்தில் கதிர்கள் முற்றிச் சாய்ந்திருந்தன. சிலர் தனாசாடரிடம் ஓடோடிச் சென்று இச் செய்தியைக் கூறினர். ஊராரும், தனாசாடரும் வயலுக்கு விரைந்து வந்தனர். தனாசாடர், “கருணைக் கடலே! உழாத நிலத்தில் கதிர் முற்ற விளைவித்திருக்கிறாயே! அடியார் வயிற்றிலிட்ட அன்னம் இங்கே ஒன்றுக்குப் பத்தாய் விளைந்து விட்டதோ! ஆகா! இத்தனை தானியத்தால் எத்தனை அடியார் பசி தீரும்” என்று புளகித்தார். விவசாயிகள் தனாசாடரைக் கேலி செய்து இடித்துரைத்ததற்காக வருந்தி மன்னிப்புக் கேட்டனர்.

பச்சைப் பயிர்களிடையே பச்சை வண்ண மேனியன் தோன்றி ‘தனாசாடா, உனக்கென்ன வரம் வேண்டுமென’க் கேட்க, தனாசாடர், “ஐயனே! உன்னை என்றும் மறவாதிருக்க வேண்டும். அதோடு பசி என்பவர்க்கு இல்லை என்னாது அன்னமிடும் மனமும், வற்றாத பொருளும் வேண்டும்” என்று பிரார்த்தித்தார். அப்படியே வரமளித்து மறைந்தார் பகவான்.

53. கணேச நாதர்

சத்ரபதி சிவாஜிக்கு எப்போதுமே துறவிகளிடம் மரியாதையும், பக்தியும் அதிகம். ஸ்ரீ துக்காராம், சமர்த்த ராமதாசர் போன்றோரிடம் அவர் காட்டிய அன்பும், தொண்டும் வரலாற்றில் பதிந்திருக்கிறது. அப்படிப் பட்டவர் ஒருமுறை பண்டரீ புரத்தில் கணேச நாதரைக் கண்டார்.

‘இவர் யார்’ என விசாரித்தார். “அவர் சொத்தனைத்தையும் அடியார்களுக்குத் தானமாக அளித்துவிட்டு, கோவணமொன்றே மானம் காப்பாற்ற, உடமையாய்க் கொண்டிருந்தார்” என்று தகவல் கிடைத்தது.

சிவாஜி அவரது இனிய குரலில், கருத்தாழமிக்கப் பாடலில் மனதைப் பறி கொடுத்து பஜனை முடிந்ததும் அவரைப் பணிந்து ‘அரண்மனைக்கு வர வேண்டும்’ என்று வேண்டினார். கணேச நாதரும் அரசன் அழைப்பை ஏற்று அரண்மனை சென்றார். அங்கே பூஜை, பஜனை எல்லாம் சிறப்பாக

நடந்தது. விருந்து முடிந்து இரவானது. அரசன் கணேச நாதருக்கு ஒரு கட்டிலைக் காட்டி அதில் படுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். கணேச நாதர் ஒப்புக் கொண்டு அரசனுக்கு விடையளித்தார். அரசன் சென்ற பிறகு ஒரு சீடனை அழைத்து மாளிகை கட்டவென்று குவித்திருந்த கற்களில் கொஞ்சம் எடுத்து வருமாறு ஒரு பையைக் கொடுத்தார். அவனும் அப்படியே அள்ளி வந்தான். அதைக் கட்டிலில் சமமாகப் பரப்பி அதில் படுத்துக் கொண்டார்.

பொழுது புலர்ந்ததும் சிவாஜி, கணேச நாதரைக் காண விரைந்து வந்தான். கட்டிலின் மேல் கற்கள் பரப்பப்பட்டிருப்பதன் காரணம் அவனுக்குப் புரியவில்லை. கட்டில் நேர்த்தியான சந்தன மரத்தில் இழைத்து, மன்னன் சயனிக்க வென்று செய்யப்பட்டது. முதலில் அடியார் உபயோகித்தால் அதிர்ஷ்ட மாயிருக்கும் என்றெண்ணியே, அரசன் அதில் கணேச நாதரைப் படுக்கச் சொன்னான். அவரோ அதில் கற்களைப் பரப்பிக் கொண்டு சயனித்திருக்கிறார்.

'இதன் காரணத்தை எனக்குச் சொல்லக் கூடுமா?' என்று அரசன் பணிவுடன் கேட்டான்.

கணேச நாதர் "அரசே! நானோ வீட்டைத் துறந்தவன். துறவிக்கு இன்பமும், துன்பமும் சமம். காட்டிலே சஞ்சரிக்க வேண்டிய சன்னியாசி இன்று சப்ரமஞ்சக் கட்டில் சுகத்தை அனுபவித்து விட்டால், நாளை என்னையும் கேட்காமல் என் உடல் இந்த சுகத்தைத் தேட ஆரம்பிக்கும். உன் அன்பைப் புறக்கணிக்கவும் மனமில்லை. அதனால் தான் இந்த ஏற்பாடு" என்று கூறி அரசனை ஆசீர்வதித்து கானகமடைந்தார்.

இது காவலாட்கள், அதிகாரிகள் மூலமாக நாடெங்கும் பரவியது. குறைந்தது தினம் ஒருவராவது அவரைச் சரணடைந்து, தீட்சை பெற்றனர். இவரும் பக்தித் தத்துவங்களை போதித்து ஞான மார்க் கத்தைப் பரப்பி வந்தார்.

இறைவனுக்கே எதிரிகள் தோன்றும் போது அவன் அடியார்களுக்குப் பகை இல்லாதிருக்குமா? ஒருநாள் பஜனை நடந்து கொண்டிருக்கும் போது சில போக்கிரிகள் எழுந்து "ஏ கள்ளச் சாமியாரே! கோவணம் கட்டிக் கொண்டவனெல்லாம் மகானா? ஏன் இந்த நாடகம்? எதற்கு இந்த வேஷம்?

பாவ புண்ணியத்தைப்பற்றிப் பேசுகிறாயே! உன் பாவ மூட்டையை எண்ணிப் பார்த்தாயா? எத்தனை பேர் வீட்டை அம்போ என்று விட்டுவிட்டு இங்கே வந்திருக்கிறார்கள்! எத்தனை பேர் வேலை செய்ய சோம்பி காஷாயம் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று ஆராய்ந்தாயா? எத்தனை குடும்பங்கள் அனாதையாய் கண்ணீர் சிந்துகிறதென்று யோசித்தாயா? ஏ, சித்து வேலைக்காரா... நாங்களெல்லாம் அந்தப் பெண்களின் அண்ணன்கள், பிள்ளைகள்... எங்களுக்கு இதனால் பாரம் அதிகரித்து விட்டது. உன்னை இப்படியே விட்டால் ஊரையே அழித்து விடுவாய். இங்கேயே உன்னை வெட்டிக் கூறுபோட்டு விடுகிறோம். நீ உண்மையிலேயே பக்தி மான் என்றால் இந்த மரத்துக்கு உபதேசம் செய்து உன் சீடனாக்கிக் காண்பி" என்று தலைக்குத் தலை கூச்சலிட்டனர்.

பக்தர்களிடையே ஒரே குழப்பம். கணேச நாதர் அவர்களை கையமர்த்தி, அவர்கள் காட்டிய மரத்தைத் தொட்டு, மந்திரோப தேசம் செய்தார். 'படார்' என்ற சப்தம். மரம் வெடித்தது. நிவேதனத்துக்கு வைத்திருந்த சுத்த அன்னம் மறைந்து போயிற்று. போக்கிரிகள் நடு நடுங்கித் தங்கள் செயலுக்கு மன்னிப்புக் கோரி, அடிபணிந்தனர். அத்தனை பேரும் அவரின் சீடர்களானார்கள். இந்த சம்பவத்திற்குப் பிறகு தினமும் பஜனைக்கு ஆயிரக்கணக்கானோர் கூடி அவருடைய

உபதேசத்தைக் கேட்டார்கள். ஒருநாள் கூட்டத்தில் ஒரு வேதியன் எழுந்து "ஐயா, நீரோ நீச வம்சத்தில் பிறந்தவர். இத்தனை பிராம்மணர்கள் உம்மை வணங்குவதும், உபதேசம் பெறுவதும் பாபமல்லவா? நீரும் அதைத் தடுக்காமல் இருப்பது அடுக்குமா?" என்று கேட்டான்.

கணேசநாதர் அமைதியுடன் "பிராம்மணன் என்பவன் யார்? பிரம் மத்தை நன்கு அறிந்தவன். இந்தக் கூட்டத்தில் பிரும்மத்தை அறிந்த பிராம்மணர்கள் எத்தனை பேர் இருக்கிறீர்கள்? அவர்கள் எழுந்து இங்கே வாருங்கள். பிறப்பினால் மட்டும் ஒருவன் உயர்ந்தவனாக முடியாது. நற்குண நற்செய்கைகளினால் தான் ஒருவனது பிறப்பு உயர்வடைகிறது. பிராம்மணனாய்ப் பிறந்து பஞ்சமா பாதகங்களையும் செய்தவன் நீசனாய் கருதப்படுகிறான். அவனை விட இந்தக் கற்கள் புனிதமானவை" என்று அருகிலுள்ள ஆற்றிலிருந்த கூழாங் கற்களைக்காட்ட, அவை அதை ஆமோதிப்பது போல் சலசலவென்று ஒலியெழுப்பின. கணேச நாதர் இனிய பாக்களால் இறைவனைத் துதிக்க, கற்களும் பாட்டு முடியும்வரை இசைக்கேற்ப தாளமிட்டன. இந்த அற்புதத்தைக் கண்ட அந்தணர் தன்னையும், தன் அறியாமையையும் பொறுத்துக் கொள்ளும்படி வேண்டி, அவரிடம் உபதேசம் பெற்று, அவருடைய தலை சிறந்த சீடரானார்.

54. சஜ்ஜனக சாருகர்

"ஐயா, கசாப்புக்கடை வைத்திருந்தாலும் நீர் உயிர்களைக் கொல்வ தில்லை. வாங்கித்தான் விற்கிறீர் என்று கேள்விப்பட்டேன். அதிக லாபத்திற்கு ஆசைப்பட்டு அநியாயம் செய்வதில்லை. அன்னதானம் செய்கிறீர்கள் என்றெல்லாம் ஊரார் புகழ்ந்தார்கள். எல்லாம் சரிதான். ஆனால் அபிஷேக ஆராதனைகள் செய்ய வேண்டிய சாளக்கிராமத்தை எடைக் கல்லாக உபயோகிக்கிறீர்களே! அதுதான் பொறுக்கவில்லை. அதனால்தான் வைஷ்ணவனான நான் வரக்கூடாத இந்த இடத்திற்கு வந்திருக்கிறேன். அதை என்னிடம் கொடும். நான் செய்யும் பூஜை, நைவேத்யங்களால் உமக்கும் புண்ணியம் கிடைக்கும்! அழகிய மாலைகட்டி சாக்கடையில் எறிவாருண்டோ? வைரத்தைத் தங்கத்தில் பதித்தால்தான் மதிப்பு! பித்தளையில் பதிக்கிறவன் முட்டாள்"

வைஷ்ணவன் தன் நீண்ட பிரசங்கத்தை முடித்ததும் கண்ணீரோடு சஜ்ஜனகர் சாளக்கிராமத்தை அவரிடம் கொடுத்து விட்டார். "நான் ஏன் கசாப்புக்காரனாகப் பிறந்தேன்? என் மனம் ஏன் சாளக்கிராமத்தைப் பிரிய மறுக்கிறது. அதன்மேல் இத்தனை பற்று ஏன்? பகவானே! நான் செய்தது பாபமென்றால் எனக்கு அப்புத்தியைக் கொடுத்ததும் நீதான்! சாளக்கிராமத்தை வைத்திருக்க முடியாத இந்த ஜன்மம் எனக்கினி வேண்டாம். உம்மைப் பார்க்காத கண்கள் இனி எதையும் பார்க்க வேண்டாம். இப்பிறவி ஒழியட்டும்" என்று துக்கத்துடன், தண்ணீரும் பருகாமல் யோக நிஷ்டையில் ஆழ்ந்து விட்டார். அங்கே அந்தணர், சாளக்கிராமத்தை கோமயத்தால் நீராட்டி, புண்யாகவசனம் பிராயச் சித்தமெல்லாம் செய்து, அழகான பீடம் அமைத்து பால், தேன், தயிர், பன்னீர், சந்தனம், இளநீரால் அபிஷேகித்து, நறுமண மலர்களால் அர்ச்சித்து, சமாராதனை செய்து பூஜையைத் தொடங்கினார்.

அன்றிரவு அவர் கனவில் பரந்தாமன் தோன்றி "உன் பூஜைப்பீடம் எனக்குப் பிடிக்கவில்லை. சஜ்ஜனகனின் தராசுதான் சுகமாயிருக்கிறது. வியாபாரம் இல்லாத நேரமெல்லாம் என்னை உள்ளங்கையிலேயே வைத்திருப்பான் அவன். கண்ணீரால் அபிஷேகிப்பான். பூஜை, பஜனை களில் நேரத்தைச் செலவிட முடியாததால்தானே என்னை அரைக் கணமும் பிரிய மனமின்றி அருகிலேயே வைத்திருக்கிறான். இது புரியாமல் என்னை இங்கே கொண்டு வந்து விட்டாயே! என்னைப் பிரிந்தது முதல் உமிழ் நீரும் விழுங்காமல் உலர்ந்து கிடக்கிறான். அந்தப் பாவம் உன் வம்சத்தையே நாசமாக்கிவிடும். அவனுக்கு ஏதும் ஆகுமுன் என்னை அங்கே கொண்டு சேர்த்துவிடு" என்றார்.

விழித்தெழுந்த வைஷ்ணவர் வியர்வையில் குளித்திருந்தார். சாளக் கிராமத்தை எடுத்துக் கொண்டு ஒரே ஓட்டமாய் சஜ்ஜனகரை அடைந்தார். கண்ட கனவைக் கூறி சாருகரிடம் சாளக்கிராமத்தை ஒப்படைத்து மன்னிப்பும் கேட்டுக் கொண்டு தனது இருப்பிடம் சென்றார். சாருகர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. பெருமாளைக் கண்ணீரால் நீராட்டி ஆலிங்கனம் செய்து மகிழ்ந்த பின்பே தண்ணீர் குடித்தார்.

சஜ்ஜனருக்கு ஜகந்நாதப் பெருமானை தரிசனம் செய்ய வேண்டுமென்று வெகு நாட்களாய் ஆசை. அவர் கையில் பணம் இருந்த சமயம் ஜகந்நாதம் போகும் ஒரு கோஷ்டி அவ்வூரில் தங்கியது.

தன் விருப்பத்தை அவர்களிடம் தெரிவிக்க அவர்களும் மகிழ்ச்சி யோடு அவரை வரவேற்றார்கள். பஜனை செய்து கொண்டே பயணம் தொடங்கியது. சூரியன் மலைவாயில் விழும் நேரம். அருகிலிருந்த சத்திரத்தில் இரவைக் கழிக்க முடிவு கட்டினர். எல்லோரும் சத்திரத்தில் சாப்பிடப் பணம் கொடுத்தார்கள். சத்திரக்காரனின் மனைவி சஜ்ஜனகரின் கட்டுடலிலும், அழகிலும் மனதைப் பறி கொடுத்தாள். அவர் சாப்பிடும் போது நெய், இனிப்பு போன்றவைகளை அதிகமாக, கவனத்துடன் போட்டாள்.

நள்ளிரவு; அனைவரும் அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருந்தனர். பூனைபோல் ஓசைப்படாது சஜ்ஜனகர் அருகில் வந்தாள் சத்திரக்காரன் மனைவி. சஜ்ஜனகர் வழக்கம்போல தனது சாளக்கிராமத்தோடு மானசீகமாக உரையாடிக் கொண்டிருந்தவர் அவளின் மோகப் பார்வையிலிருந்து அவளுடைய கருத்தைப் புரிந்து கொண்டார். பதறி எழுந்தார். அவள் ஓடி வந்து அவர் கையைப் பற்றிக் கொண்டாள்.

"ஸ்வாமீ, தாங்கள் என்னைத் துணையாக ஏற்றுக் கொள்ள வேண்டும். தங்களுடன் இப்போதே நான் வந்து விடுகிறேன்" என்று கெஞ்சினாள். 'நாராயணா' என்று காதைப் பொத்திக் கொண்ட சஜ்ஜனகர், "தாயே! என்ன வார்த்தை சொன்னீர்கள்? உண்ட வீட்டிலேயே கெண்டி தூக்குவதா? அக்கினி சாட்சியாக தாலி கட்டிய கணவன் இருக்கும் போது ஒரு பெண் இப்படிப் பேசுவது பெரும் பாதகம். சீதை, சாவித்ரி, நளாயினி, அருந்ததி போன்ற கற்புக்கரசிகள் வாழ்ந்த நாடு இது" என்று மிக மெல்லிய குரலில் அறிவுரை கூறினார். அவள் 'சரே'லென எழுந்து உள்ளே சென்றாள். தன் தவறை உணர்ந்து விட்டாள், என அகமகிழ்ந்தார் சஜ்ஜனகர். அந்தோ! என்ன கொடூரம்! போன வேகத்திலேயே, ரத்தம் சொட்டும் கூரிய அரிவாளோடு திரும்பி வந்தாள்.

"ஸ்வாமி! தூங்கும் கணவரை ஒரே வீச்சால் வீழ்த்தி விட்டேன். வேண்டுமானால் வந்து பாருங்கள். இனி என்னை ஏற்றுக்கொள்ளத் தடை ஏதும் கிடையாதல்லவா?" என்று ஆசை வார்த்தைகள் பேச, சஜ்ஜனகர் திடுக்கிட்டு, "நான் யாத்திரை புறப்பட்ட நேரம் சரியில்லை போலும்! மகாபாவி! கொலைகாரி! நீ பெண்ணே அல்ல... நான் போகிறேன்" என்று வீதிக்கு ஓட, குறுக்கே ஓடி மறித்தாள் அவள்.

"உங்களால் எனக்கு ஆதாரமாக இருந்த கணவரையும் கொன்று விட்டேன். என்னை நிராதரவாக்கிவிட்டு எங்கே ஓடப் பார்க்கிறீர்? என் குணம் புரிந்ததல்லவா? என் ஆசைக்கு உடன்படாவிட்டால் உம்மையும் ஒரே வீச்சுதான்" என்று பயமுறுத்த, சப்தம் கேட்டு சில யாத்ரீகர்கள் எழுந்து வந்தனர்.

சரேலென்று சஜ்ஜனகரின் கையைப் பிடித்துக் கொண்டு, "அடேய் துன்மார்க்கா! நீ நன்றாக இருப்பாயா? உன் குலம் விளங்குமா? இந்த அநியாயத்தைக் கேட்பாரில்லையா? என்னைப் பெண்டாள இழுத்தான். இவன் ஆசைக்கு இணங்கவில்லை என்பதற்காக என் கணவரைக் கொன்று விட்டானே! என்னை அநாதையாக்கி விட்டு தப்பித்து ஓடவா பார்க்கிறாய்...? உன்னை லேசில் விடமாட்டேன்" என்று அலறினாள்.

சத்திரத்திலிருந்த எல்லாரும் அங்கே கூடிவிட்டனர். அவள் அரிவாளும் கையுமாக இழுத்த இழுப்பில் சஜ்ஜனகரின் ஆடையெங்கும் இரத்தக் கறை! வெட்டுண்டு கிடந்த சத்திரக்காரனைக் கண்டு அனைவரும் பரிதாபப்பட்டனர்.

தனக்கு எதிராக திசை திருப்பிவிடப்பட்ட காரியங்களைப் பார்த்து சஜ்ஜனகர் திகைத்தார். யாத்ரீகர்கள் "எங்கள் பெயரைக் கெடுத்து விட்டாயே! உனக்கெல்லாம் பக்தி ஒரு கேடு! புண்ணியம் சம்பாதிக் காவிட்டாலும் பாவமூட்டையை சுமப்பார்களா? உன் முகத்தில் விழிப்பதே பாவம்" என்று காறித்துப்பி அவரைக் கயிற்றால்கட்டி அரசன் முன் நிறுத்தி வழக்கைக் கூறினர். அரசன் சஜ்ஜனகர் கூறியதை ஏற்கவில்லை. அதற்கான சாட்சியும் இல்லை. அல்லாமலும் சத்திரத்துக்காரியின் நீலிக் கண்ணீரும், மாய்மாலமும் பொய்யை மெய் போல் எண்ண வைத்ததால் சஜ்ஜனகர் குற்றவாளி என்று தீர்ப்பளித்து, 'அடுத்தவன் மனைவியை இழுத்ததற்காகவும், சத்திரக்காரனை கொலை செய்ததற்காகவும் சஜ்ஜனகரின் இரு கைகளையும் வெட்டி விடும்படி உத்தரவிட்டான்.

உதிரம் ஆறாய் பெருக 'ஜகந்நாதா, நாராயணா, என்று அலறியபடி துடித்துக் கொண்டிருந்தார் சஜ்ஜனகர். அதே சமயம் ஜகந்நாதத்தில் அர்ச்சகரின் கனவில் "என் பக்தன் சஜ்ஜனகன் இவ்வூர் எல்லையில் கைகள் வெட்டுண்டு கிடக்கிறான். அவனை சகல மரியாதைகளுடன் பல்லக்கிலேற்றி அழைத்து வந்து தரிசனம் செய்துவை" என்று கூறினார் பகவான்.

அர்ச்சகர் பல்லக்கு பரிவாரங்களோடு வந்து தாசரின் காயத்துக்கு மருந்திட்டுக் கட்டி, பல்லக்கிலேறும்படி வேண்டினார். சஜ்ஜனகர் வேதனையோடு நகைத்தபடி, "பிடித்துக் கொண்டு ஏறமுடியாதபடி கைகளை வெட்டி விட்டு இதென்ன மரியாதை! மதுசூதனா! கையை வெட்டும் போதே நீ நினைத்தால் தடுத்திருக்க முடியாதா? உண்மை என்ன என்பதை நீ அறியமாட்டாயா? இப்படிப் பார்ப்பது உனக்கு வேடிக்கையா?" என்று புலம்ப, ஒரு ஜோதி தோன்றியது. ஸ்ரீமந்நாராயணன் தோன்றி சஜ்ஜனகரைத் தழுவிக் கொள்ள அவர் வேதனை குறைந்தது.

வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோர் எல்லாம் "இந்தப் புண்ணி யாத்மாவால் அல்லவா நமக்கும் இறைவன் தரிசனம் கிட்டியது! இவர் குற்றமற்றவர். மன்னன் ஆராயாது தீர்ப்பளித்து விட்டான்!" என்று மெய்மறந்தனர். தாசர் பகவான் காலடியில்,பூமியில் சர்வாங்கமும் பட நமஸ்கரித்தார்.

என்ன அற்புதம்! கூப்பிய கைகள் முழுமை அடைந்தன. சஜ்ஜனகர் ஆனந்தக் கண்ணீருடன் "ஸ்வாமி! கை மறுபடி வந்தது பெரிதில்லை. ஒட்டிய பழியை எப்படிப் போக்குவது? கசாப்புக் கடை வைத்திருந்த

போதிலும் நான் ஒரு சிறு பிராணியைக் கூட வெட்டியதில்லையே! என்னை ஏன் சோதனைக்குள்ளாக்கினாய்?" என்று பரிதவிக்க, பரந்தாமன் "அன்பா! இதெல்லாம் உன் வினைப்பயன். நீ போன பிறவியில் ஒரு அந்தணன். ஒரு நாள் கங்கைக்கரையில் சந்தியாவந்தனம் செய்து கொண்டிருந்தாய்! கசாப்புக் கடைக்காரனிடமிருந்து தப்பித்து வந்த பசு ஒன்று நீ இருந்த பக்கமாக ஓடிப்போயிற்று. பின்னாலேயே துரத்தி வந்த கசாப்புக் கடைக்காரன் "இந்த வழியாகப் பசு ஏதாவது ஓடிப் போயிற்றா?" என்று கேட்டான்.

நீ பசு ஓடிப்போன திசையைக் காட்டினாய். அவன் கசாப்புக் கடைக்காரன் என்பதை நீ அறியாவிட்டாலும் அந்தப் பசு துடிக்கத் துடிக்க வெட்டப்பட்டதற்கு நீ காரணமானாய்!

அந்தப்பசுதான் சத்திரக்காரன் மனைவி. கசாப்புக் கடைக்காரன் தான் சத்திரக்காரன். பசுவைச் சுட்டிக்காட்டிய அந்தணன் தான் நீ. தன்னைக் கொன்றவனை அவள் வெட்டித்தீர்த்தாள். சுட்டிய உன்கைகள் வெட்டப்பட அவள் காரணமானாள். அழும் கண்ணீரால் விதியை அழிக்க முடியாது. ஆனாலும் உன் பக்தியால் கைகள் மீண்டு வந்தன.

அன்றே நீயும் மடிந்து போனாய். நீ கடைசியாகப் பார்த்தது கசாப்புக் கடைக்காரனை. அதனால் நீ கசாப்புக் கடைக்காரனாகப் பிறக்க நேர்ந்தது" என்றார். கூடியிருந்த அனைவரும் இதைக்கேட்டு ஆச்சரிய மடைந்தார்கள். சிலர் அரசரிடம் விரைந்து சென்று இதைக் கூற, அரசன் சஜ்ஜனகர் இருக்குமிடத்திற்கு ஓடோடி வந்தான். அதற்குள் பரந்தாமன் அந்தர்தியானமாகிவிட்டார். அரசன் சஜ்ஜனகர் காலில் விழுந்து தன்னை மன்னிக்கும்படி வேண்டினான்.

சஜ்ஜனகர் "ஊழ்வினைக்கு உன்னைக் குற்றம் சொல்லி என்ன பலன்? உன்னைக் கொண்டு காரியத்தை முடித்தது விதி" என்று அரசனைத் தேற்றி, அவன் வேண்டுகோளின்படி உபதேசம் செய்து விட்டு, ஜகந்நாதர் ஆலயம் சென்று, பகவானைப்பாடி பணிந்து, நான்கு மாதம் அங்கே தங்கி, பின்னர் ஊருக்குப் போய் கடமையைச் செய்துகொண்டே, பகவத் பக்தியிலும், அடியார் தொண்டிலும் காலம் கழித்து வந்தான்.

55. ஸ்ரீ சுகானந்தர்

"வணக்கம்"

"வணக்கம் வாருங்கள். இப்படி அமருங்கள்" சுகானந்தர் வந்தவர்களை உபசரித்தார். "ஜய விஜயீபவ! மங்களமுண்டாகட்டும். இந்தாருங்கள். இது திருப்பதி லட்டு, வடை, அதிரசம், இது குருவாயூர் பட்சணம், இது உடுப்பி நிவேதனம்" வந்தவர்கள் பட்சணங்களை அடுக்கினர். சுகானந்தர் மெய்சிலிர்த்து ஆனந்த பரவசரானார்.

"ஆகா! வேங்கடேசப் பெருமானையும், கண்ணனையும் தரிசித்தீர்களா? உங்களைப் பார்ப்பதே நான் போன பிறவியில் செய்த புண்ணியம்" என்று உணர்ச்சி ததும்பக் கூறியவர் பட்சணங்களில் சிறிது எடுத்து சாப்பிட்டார். அவர் சாப்பிட்டு முடித்ததும் வந்தவர்கள் விழுந்து விழுந்து சிரித்தனர். சுகானந்தருக்கோ எதுவும் புரியவில்லை. சிரிக்கும்படி என்ன நடந்தது என்று விழித்தார். ஒருவன் சிரிப்பைக்கட்டுப்படுத்திக் கொண்டு "உமது குலத்தவர் பிறர் வீட்டிலேயே சாப்பிடமாட்டார்கள். நீங்களோ இப்போது ஹோட்டல் பட்சணத்தையே சாப்பிட்டு விட்டீர்கள்! உங்கள் ஆசாரம் என்னவாயிற்று? இப்போது வயிற்றை அறுத்துக் கொள்ளப் போகிறீரா? நாக்கை தண்டிப்பீர்களா? இல்லை... பற்களைத் தட்டப் போகிறீர்களா? நீர் வணங்கும் தெய்வம் இதை உமக்கு உணர்த்த வில்லையே? ஊர் பூராவும் இதைத் தம்பட்ட மடிக்கப் போகிறோம். உங்கள் குலத்தவர் உம்மை பிராயச்சித்தம் செய்யாவிட்டால் தள்ளி வைத்து விடுவார்கள். என்ன செய்யப் போகிறீர்?" என்று கேலி செய்தான்.

சுகானந்தர் அப்படியே தியான நிலையில் அமர்ந்தார். விழிகளை மூடி, புலன்களை அடக்கி யோகத்தில் ஆழ்ந்தவர், சற்று நேரத்தில் வாயைத் திறந்து வாயிலிருந்து முழுமையாக தின்ற பட்சணங்களை எடுத்து வைத்தபோது அந்த துஷ்டர்கள் நடுநடுங்கி அவர் பாதங்களில் விழுந்தனர்.

"அந்தணோத்தமரே! எங்கள் பிழையை பெரிய மனது பண்ணி மன்னிக்க வேண்டும். உமது புகழைக் கண்டு பொறாமை கொண்டு களங்கம் விளைவிக்க எண்ணிய எங்களுக்குச் சரியான பாடம்

கற்பித்துவிட்டீர்” எனக் கெஞ்ச, சுகானந்தர் அன்புடன், “அறியாமல் செய்த பிழையை ஆண்டவன் பொருட்படுத்துவதில்லை. பகவான் உங்களை நிச்சயம் காப்பாற்றுவார்” என்ற தேற்றி அனுப்பினார்.

பின்னர் மனைவியை அழைத்து, “சுரசுரீ, நான் திருப்பதி, குருவாயூர், உடுப்பி, பத்ராசலம், மதுரா, பிருந்தாவனம், துவாரகை போன்ற ஊர்களுக்குப் போய் என்னப்பனை தரிசனம் செய்து விட்டு வரப் போகிறேன். நீ நான் இல்லை என்ற குறை தெரியாமல் கேட்பவர் கேட்பதை முகம் சுணங்காமல் தரவேண்டும். அதிதி போஜனத்திலும், அடியார்களை உபசரிப்பதிலும் குறை வைத்து விடாதே” என்று கூற, அவள் பணிவுடன்,

“சுவாமி, இத்தனை காலம் உங்களோடு இருக்கிறேனே! என் குணத்தை அறியமாட்டீர்களா? நீங்கள் வேறு, நான் வேறா? பத்தினி என்பதிலேயே பதி என்ற சொல் அடங்கியுள்ளது. கவலையை விடுத்து நிம்மதியாய் செல்லுங்கள். தங்களுக்குச் சிறுமை வரும்படி எவரையும் மறுத்துப் பேசி, திருப்பி அனுப்ப மாட்டேன். திருப்திதானே” என்று கேட்க, சுகானந்தர் மகிழ்ச்சியுடன் தீர்த்தயாத்திரை புறப்பட்டார். சுகானந்தரும், சுரசுரீயும் பேசிக் கொண்டிருந்ததை திண்ணையி லிருந்தபடி ஒரு துஷ்டன் கேட்டுக் கொண்டிருந்தான். சுரசுரீ பேரழகி. சந்தன நிறத்தவள். அவள்மேல் அவன் மோகம் கொண்டு அவளைப் பார்ப்பதையே ஒரு பாக்கியமாக எண்ணி அவ்வீட்டைச் சுற்றிச்சுற்றி வந்து கொண் டிருந்தவன் அவன். இவர்களின் சம்பாஷணை அவனைத் தேன் குடித்த நரி போலாக்கியது.

திருப்பாற் கடலைக் கடையும் போது, அமிருதத்தோடு கொடிய விஷமும் வந்தது போல, சுகானந்தரின் மொழியில் கள்ளம் செய்து கொண்டான். ‘யார் முகமும் சுணங்கக் கூடாது என்பது அவர் கட்டளை. எவரையும் மறுத்துப்பேசி திருப்பி அனுப்பமாட்டேன் என்பது அவள் வாக்கு. நான் சுரசுரீயையே யாசிக்கிறேன். மறுத்துப் பேசினால் முகம் சுண்டுவேன். ஆகா... என்ன அருமையான சந்தர்ப்பம்!” என்று அகமகிழ்ந்தான்.

ஆயினும் “அவசரப்படக்கூடாது. சில நாட்கள் பொறு மையாக இருக்க வேண்டும்” என்று தீர்மானித்துக் கொண்டான். சுகானந்தர் தீர்த்த யாத்திரை புறப்பட்டார். தினமும் அதிதி போஜனத்தைக் குறைவற நடத்தி, அடியார்களை அன்புடன் உபசரித்தாள் சுரசுரீ. ஒரு நாள் “ராம ஹரே!

ஸ்ரீராம ஹரே!” என்ற பாடல் கேட்கவும், சுரசுரீ வாசலுக்கு விரைந்தாள். அங்கே மேனியெங்கும் திருமண். கையிலிருக்கும் பாத்திரத்தில் சங்கு, சக்கர ரேகைகள்! கழுத்திலே துளசி மாலை! எவருக்கும் எவரோ பக்தர் என்று தானே நினைக்கத் தோன்றும்! சுரசுரீயும் அவ்வண்ணமே நினைத்து பாதமலம்பி புரோஷித்துக் கொண்டு, பிரதட்சண நமஸ்காரம் செய்து பிக்ஷை அரிசிபோட வந்தாள்.

கபட வேஷதாரி வினயமாக “அம்மா! இங்கே சுகானந்தர் இல்லம் எது? வழி நடந்த களைப்பும், பசியும் போக்க அவர் வீட்டை நாடி வந்தேன்” என்ற கேட்க, சுரசுரீ ஆனந்த பரவசத்துடன், “ஸ்வாமி! தன்யளானேன்! நீங்கள் தேடிவந்தது இந்த இல்லமே! என் கணவர் தீர்த்த யாத்திரை சென்றிருக்கிறார். ஆயினும் ஒரு குறைவுமின்றி உம்மை உபசரிப்பேன். உள்ளே வாருங்கள்” என்றழைத்தாள்.

துன்மார்க்கன் எண்ணம் நிறைவேறப் போகிறதென்ற களிப்புடன் உள்ளே நுழைந்தான். சுரசுரீ காட்டிய ஆசனத்தில் அமர்ந்தான். “தளிகை ஆகிவிட்டது. சாப்பிட வாருங்கள்” என்று இலை போட்டாள். அவனோ



"என் பசி வேறு; நான் நாடி வந்தது உன்னை" என்று மோகப் பார்வை பார்த்தான். சுரசுரீ "இறைவன் அடியார்களை சோதிப்பான் என்று அவர் அடிக்கடி சொல்வார். இவன் பேசியது கொடிய சொல்லானாலும் போட்டிருப்பது அவன் சின்னங்கள். சோதனையை உண்டாக்கியவனுக்கு அதை உடைக்கவும் தெரியும். சூதறியா என் கணவர் வாயிலிருந்து உண்ட பட்சணங்கள் மீண்டு வரவில்லையா? அன்று காத்த பரந்தாமன் இன்று கைகட்டிக் கொண்டிருக்க மாட்டார்" என்று முடிவெடுத்து மலர்ந்த முகம் மாறாமல், "முதலில் வயிற்றுப்பசி ஆறட்டும். பிறகு பரந்தாமன் கட்டளைப்படி நடப்போம்" என்றாள். அவன் தேன் குடித்த நரியானான். அறுசுவை உணவை ஒருகை பார்த்தான். பாய் விரித்துத் தந்தாள். படுத்தான் ஆயினும் தூங்கினானா? அரைக்கண் விழித்து அவள் வேலை செய்யும் அழகைப் பார்த்து மேலும் மோக வசமானான். எப்போது வேலை முடிந்து வருவாள் என்று பரபரத்தது அவன் நெஞ்சம். அவளும் சாப்பிட்டு வேலைகளை முடித்துக் கொண்டு தங்களின் படுக்கை அறைக்குப் போனாள். காமுகனின் சொற்களைக் கேட்டது முதல் அவள் மனம் தவித்தது. உதடுகளில் இறைவனின் நாமம் இடைவிடாது ஒலித்தது. தனது இக்கட்டான நிலையையும், கணவருக்குக் கொடுத்த வாக்குறுதியையும் நினைத்துப் புழுங்கினாள்.

சுரசுரீயைப் பின் தொடர்ந்து எழுந்து வந்தான் துஷ்டன். மோகா வேசத்தோடு கட்டிலை நோக்கினான். அங்கே அவன் கண்டதென்ன? பஞ்சணைமேல் சிவந்த நாக்குகளைத் தொங்கவிட்டுக் கொண்டு ஒரு பிரம்மாண்டமான புலி கண்களில் பசியோடு காத்திருந்தது. துஷ்டன் அலறிக் கொண்டு ஓடி, முற்றத்துத் துவைக்கும் கல்லில் மோதி, நெற்றியில் இரத்தகாயம் பட்டுக் கொண்டான். சத்தம் கேட்டு சுரசுரீ எழுந்து வர, அவள் காலடியில் விழுந்து அழுதான். "கற்புத்திலகமே! உம்மைக் களங்கப்படுத்த நினைத்த எனக்கு இறைவன் நல்ல புத்தி புகட்டி விட்டார். இனி நான் உங்கள் பிள்ளை. பிராயச்சித்தமாக வாழ்நாள் முழுவதும் உமக்குத் தொண்டு செய்ய அனுமதி தர வேண்டும். போலியாகப் போட்டுக் கொண்ட வேஷங்களே எனக்கு இனி நிரந்தரம். என்னை மன்னித்து ஏற்றுக் கொள்ள வேண்டும். மறுத்துச் சொல்லி விடாதீர்கள்" என்று கெஞ்சினான்.

சுரசுரீ இரக்கத்துடன் "அப்பா, இந்த உடல் வெறும் தோல்பை. இதன் மேல் வைக்கும் ஆசை அழிவையே தரும். உன்னைப் பரமனே ஆட் கொண்டது உன் பூர்வ ஜென்ம புண்ணியம். இங்கு வரும் பாகவதர்களின்

சகவாசத்தால் உன் நல்ல புத்தி நிலைக்கட்டும்" என்று ஆசீர்வதித்தாள். அவனும் ஒரு மூலையில் ஒடுங்கிக் கிடந்தான். சுகானந்தரும் யாத்திரையை முடித்துக் கொண்டு வந்து சேர்ந்தார். அவனைப் பற்றிய விஷயங்களை விஸ்தாரமாக எடுத்துரைத்தாள் சுரசுரீ.

"கல்லாக இருந்த ஒருமனிதனை சிலையாகச் செய்து விட்டது உன் கற்பும், பக்தியும்" என்று மனைவியைப் பாராட்டியவர், அவனிடமும் அன்புடன் நடந்து கொண்டார்.

56. லாடு பாவா

ஜோத்பூரில் வாழ்ந்த ஹரி பக்தர் லாடுபாவா. அவர் தீர்த்த யாத்திரை புறப்பட்ட வழியில் இருந்தது காவூர். அவ்வூர் எல்லையை மிதித்ததும் யாகத்துக்கு நரபலி கிடையாமல் தவித்துக் கொண்டிருந்த அவ்வூரார் அவரைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய், மஞ்சள் நீரால் குளிப்பாட்டி, சந்தன்ம் குங்குமம் இட்டு கழுத்தில் மாலை போட்டு அம்மனுக்கு முன் இருந்த பெரிய தூணில் கட்டிவிட்டு, காளிக்கு அபிஷேகம் தொடங்கினார்கள்.

பாவா உருக்கமாக "தாயே! உலக மக்களையெல்லாம் காப்பவள் நீ! இதென்னம்மா கொடுமை! எல்லாம் உயிர்களையும் துடிக்கத் துடிக்கக் கொல்வது தான் உனக்குப் ப்ரீதியா? நான் சாவதற்கு அஞ்சவில்லை. பிறப்பெடுத்தவர்களுக்கு மரணம் என்றாவது ஒரு நாள் நிச்சயம். அதை வரவேற்கிறேன். ஆனால் அது தானாக வராமல் நாமாகத் தேடுவது கொலையல்லவா? அப்படியானால் நீ கொலைகாரியா? பஞ்சமாபாதகம் என்று புராணங்களின் மூல்மாக நீதி வகுத்துக் கொடுத்த நீயே வதம் செய்வதுதான் முறையா? ஆலயம் புனிதமான இடம்... அங்கே எலும்பும், சதையும், இரத்தமுமா? இவை எங்கிருந்து பக்தியை ஊட்டும்? எத்தனை ஆடு, மாடுகளின் எலும்புகள்? எத்தனை கோழி இறகுகள்! இது உனக்கு அருவருப்பாகத் தோன்றவில்லையா? என் மாதவன் உன்னோடு பிறந்தவன். அவன் கோயிலிலே பலி இல்லை...! அதோ, பார்... அது போல் மதுக்குடங்களைக் குடித்துவிட்டு ஆடும் பக்தர்கள் இல்லை!

அவனோடு பிறந்த நீ இனியும் மௌனமாக இருந்தால் இது உன் பெருமைக்குத்தான் இழுக்கு. வெளியே வா... உன் பக்தர்களைத் திருத்து... நரபலியை நிறுத்து...” என்று வேண்டினார். அபிஷேகம் முடிந்து அலங்காரமாயிற்று செம்பட்டாடையில் அம்மன் தீச்சுடராய் ஜொலித்தாள். கற்பூர ஹாரத்தி காட்டப்படும் போது கொலையாளி, பாவாவின் மேல் பளபளக்கும் வாளை ஓங்கினான். “ஜெய மாதவா, ஹரிகிருஷ்ணா, துவாரகாநாதா, கோபாலா” என்று பாவா உரக்க அலறினார். பெரிய ஹுங்காரத் த்வனியோடு சூலத்தை வீசினாள் சக்தி. கொலை யாளிகள் வாட்கள் எகிற, கீழே விழுந்தனர். தேவியின் மூர்க்க ஸ்வரூபத்தைக் கண்டு அனைவரும் மூர்ச்சையாயினர்.

பாவா பக்தியுடன் தேவியைத் துதிக்க, தேவி சினம் தணிந்து, “அன்பா, உயிர் பலியால் களங்கப்பட்டிருந்த இந்த இடம் உன் பாதம்பட்டுப் புனிதமடைந்தது. உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்” என்றாள்.

பாவா மனங்கசிந்து “இவர்கள் மூட பக்தி கொண்டவர்களாயினும் இவர்களை சம்காரிப்பது அழகல்ல... அப்புறம் பலிக்கும், இதற்கும் என்ன வித்தியாசம்! இவர்களை உயிர்ப்பித்துத் தரவேண்டும். இனி இந்த

ஆலயத்தில் மிருக பலியும் கூட நடக்க விடாமல் தடுக்க வேண்டும். இதுவே என் பிரார்த்தனை" என்றார். தேவி அவ்விதமே வரமளித்து மறைந்தாள். அனைவரும் எழுந்து லாடுபாவாவை கட்டவிழ்த்து காலில் விழுந்து மன்னிக்கும்படி வேண்டினர். பாவா அன்புடன் அவர்களைத் தேற்றி ஜீவஹிம்சையைப் போதித்தார்.

அன்றிரவு அவ்வூர் அரசன் கனவில் அம்பாள் தோன்றி, காவூர் ஆலயத்தில் நடந்ததைக் கூறி "இனி இவ்வூரில் உயிர்பலி கூடாது. மீறி நடந்தால் உன் வம்சம் அழியும். நாடெங்கும் இதைப் பறைசாற்று. என் சகோதரனின் பக்தர் ஒருவர் என் ஆலயத்தில் பஜனை செய்து கொண் டிருக்கிறார். அவர் மூலம் நாட்டில் பக்தியைப் பரப்பு. என் ஆலயத்தைச் சுத்தம் செய். சர்க்கரைப் பொங்கலும், பழங்களுமே எனக்குப் ப்ரீதி. அபிஷேக அலங்காரங்களிலேயே நான் திருப்தி அடைவேன். தூய்மையான பக்திக்கு அடையாளங்கள் வேண்டாம்" என்று கூறி மறைந்தாள்.

அரசன் பதறி எழுந்தான். தேவியின் ஆணையை நாடெங்கும் முரசொலித்தான். ஆலயத்தைப்புனருத்தாரணம் செய்து புனிதப்படுத் தினான். பாவாவை மரியாதையுடன் வரவேற்று, அவர் பக்திப் பணிக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தான்.

பாவாவின் வருகையால் காவூரில் ஹரிபக்தி செழித்தது. உயிர்பலி நின்றது. நாடு பூராவும் லாடுபாவாவைக் குருவாக ஏற்று அவர் உபதேசத்தைப் பின்பற்றியது.

57. ஸ்ரீ ஜோகா பரமானந்தர்

பரசி என்ற நகரத்திலே வாழ்ந்தவர் ஜோகா பரமானந்தர். அவர் உதடுகள் எப்போதும் பண்டரீநாதனின் நாமத்தை உச்சரித்த வண்ணமாகவே இருக்கும்.

தினமும் அதிகாலையில் நீராடி கீதையின் எழுநூறு ஸ்லோகங் களையும் பக்தி சிரத்தையுடன் பாவமுணர்ந்து சொல்லி, ஒவ்வொரு

ஸ்லோகத்திற்கும் ஒரு நமஸ்காரமாக எழுநூறு நமஸ்காரங்கள் செய்வார். அதன் பின்னர் தான் சாப்பாடு. அதில் துளியும் குறைபாடு நேர்ந்ததாகக் கருதினால் அன்று பட்டினி தான். இதனால் அவர் நமஸ்கரித்து முடியும்வரை, அவர் மனைவி கூட அவர் இருக்கும் பக்கம் வரமாட்டாள். அவர் கவனம் திரும்பி அவரைப் பட்டினி போட்ட பாவம் வந்துவிடுமே என்ற அச்சம்!

ஊராருக்கு அவர்மேல் அசாத்திய மரியாதை. 'இப்படிப்பட்ட மகான் நம் ஊரில் பிறக்க, அவரோடு வாழ நாம் என்ன புண்ணியம் செய்தோமோ" என்று பெருமைப்பட்டனர். ஒரு நாள் கல் வருஷதாரையாய் மழை கொட்டியது. பரமானந்தர் இருந்ததோ குடிசை. பூராவும் ஒழுகல். இவர் சேற்றையும் கவனிக்காமல் வழக்கம் போல் கீதா பாராயணமும், நமஸ்காரமும் செய்து வந்தார்.

அந்த வழியே வந்த பட்டு வியாபாரி ஒருவன் இதைக் கண்டான். "அடாடா, இதென்ன கோலம்... இந்த மகானின் தேகம் குளிரால் விறைத்திருக்கிறது. உதடுகள் நடுங்குகின்றன" என்று பரிதவித்து கடைக்கு ஓடிப்போய் ஒரு பட்டு வேஷ்டி எடுத்து வந்தான்.

'இதை உடுத்திக் கொண்டு நமஸ்காரம் செய்யுங்கள்' என்று வேண்டினான். பரமானந்தர் அவன் இரக்க குணத்தைப் பாராட்டிவிட்டு,

"அன்பரே! இது பட்டாடை; அரச குடும்பத்தினர் அணியக் கூடியது. நான் உடுத்திக் கொண்டால் நாய்க்கு வைர அட்டிகை போட்டது போல் பொருந்தாமலிருக்கும். பகவானின் நாமங்களே உயர்ந்த ஆடையாய் நான் மதிக்கிறேன். நான் இதை அணிந்து கொண்டால் இந்த ஆடைக்கு அவமானம். அழகான ஆடைகள் என்னை அகம்பாவி ஆக்கிவிடுமோ என்றஞ்சுகிறேன். எனக்கு சேதமடைந்த வேஷ்டி இருந்தால் கொடு போதும்" என்றார்.

அவனோ பிடிவாதமாக அருகில் வந்து, "பதவியால் அரசனாவதைவிட பக்தியால் அரசனாவது கடினம். உமது இடுப்பை அலங்கரிப்பது இந்த பட்டாடைக்கு அவமானம் என்றால் பட்டை அணிவதே கேவலம்" என்று சொல்லி தானே அவர் இடுப்பில் அதைக் கட்டி விட்டுச் சென்று விட்டான். அவர் பலமுறை கூப்பிட்டும் திரும்பிப் பார்க்கவில்லை.

பிறகு அவர் "இந்தப் பட்டாடையை அழுக்காக்காமல் நமஸ்காரம் செய்யவேண்டும். அப்போதுதான் யாருக்காவது கொடுத்தாலும் உபயோகமாயிருக்கும்" என்று நினைத்தபடி ஜாக்கிரதையாக நமஸ்காரம் செய்தார்.

நமஸ்காரம் முடியும் போது சாயங்காலமாகிவிட்டது. திடுக்கிட்டார். 'இவ்வளவு நேரமானதற்கு என்ன காரணம்? அதோடு பட்டாடையின் மேலிருந்த அக்கறையால் ஸ்லோகத்தின் அர்த்தத்தில் மனம் பதியவில்லையே! பழக்கத்தின் காரணமாக வாய் இயங்கிக் கொண்டி ருந்திருக்கிறது. சரி, இனிமேல் உஞ்ச விருத்திக்குப் போவதா? வேண்டாம். பட்டின் மென்மையில் சுகப்பட்ட வயிற்றை இன்று காயப் போட்டுவிடலாம். அந்த தண்டனை போதுமா? நிச்சயம் போதாது! வேறென்ன செய்யலாம்?

வாளால் இந்த உடம்பை வெட்டி விடலாமா? தீயூட்டி அதில் எரித்து விடுவோமா? சேச்சே... இந்த உடல் ஒரு நிமிஷத்தில் அழிந்துவிட்டால் தவறை உணர்வதெப்படி? அணு அணுவாய் சித்திரவதைப்பட வேண்டும். அதற்கென்ன வழி?" என்று சிந்தித்தபடி கால் போன வழியே நடந்தார். அப்போது ஒரு குடியானவன் மிகவும் ஏழை. அவனிடமிருந்தது சிறு துண்டு நிலம், ஒற்றை மாடு; பகலில் உழுவதற்கு கலப்பைக்கும், ஒற்றை

மாட்டிற்கும் அதிகக் கூலி கொடுக்க வேண்டும். இரவில் கூலி குறைவு. அதனால் அவன் இரவில் உழுது வந்தான்.

அவனைப் பார்த்ததும் அவருக்கு நல்லதொரு வழி புலப்பட்டது. அவனை நெருங்கி "நண்பரே! இந்தப் பட்டாடையைப் பார்த்தீரா? இதை நீர் பெற வேண்டுமானால் எனக்கொரு உதவி செய்ய வேண்டும்" என்றார்.

பட்டின் பளபளப்பும், கெட்டி சரிகையும் விவசாயியை மயக்கியது. "என்ன உதவி?" என்று கேட்டான். "மாட்டுக்குப் பதிலாக நான் உழவேண்டும். இது என் நெடுநாளைய விருப்பம். நீ தைரியமாக என்னை விரட்டலாம்" என்றார் ஜோகா.

உழவன் அவரை வினோதமாகப் பார்த்தான். "இப்படி ஒரு ஆசையா? இதில் எனக்கு ஒரு நஷ்டமுமில்லை" என்றெண்ணியவன், தன் மாட்டை அருகிலிருந்த மரத்தில் கட்டிவிட்டு, வாடகை மாட்டை ஒரு பக்கமும், ஜோகாவை ஒரு பக்கமுமாகப் பிணித்தான். ஜோகா பட்டாடையை அவனிடம் கொடுத்தார்.

ஜோடி காளைக்குப் பதிலாக மனிதன் பூட்டப்பட்டிருப்பதைக் கண்ட மாடு மிரண்டது. அதோடு அது முரட்டுக்காளையும் கூட. கோபத்தோடு தாறுமாறாக இழுத்துக் கொண்டு ஓடிற்று. முட்களும், கற்களும் பரமானந்தரின் உடலைக் கிழித்தது. மழை நீரும், இரத்தமும் கலந்து நிலம் செந்நிறமானது. சிவப்பு நிறத்தைக் கண்ட எருது மேலும் மூர்க்கா வேசமாய் இழுத்துக் கொண்டு ஓடியது. பரமானந்தரோ சிரித்துக் கொண்டே "உன் சிந்தனைகள் இன்று இந்த மாட்டைப் போலத் தறிகெட்டு ஓடிற்றல்லவா? நன்றாக வேண்டும். பகவானைத் துதிக்கும் போது என்ன அசிரத்தை! படு, படு... புத்தி வந்ததா" என்று பேசிக்கொண்டே ஓடினார்.

உழவன் பைத்தியமென்றே நினைத்தான். 'பரிதாபப்பட்டு அவிழ்க்கப் போய் 'என் பட்டு வேஷ்டியைக் கொடு' என்று கேட்டு விட்டால்' என்றஞ்சி மேலும் விரட்டினான். பரமானந்தர் மயங்கி வீழ்ந்தார். உழவனால் மாட்டைப் பிடித்து நிறுத்த முடியவில்லை. என்ன செய்வதென்று தவித்தான்.

அப்போது ஆகாயத்தில் ஒரு மின்னல். கோகுலக் கண்ணன், அன்று ஆநிரைகள் மேய்ந்தவன் மாட்டைப் பிடித்து நிறுத்தினாள். பாகவதரின்

கட்டை அவிழ்த்தான். மடியில் போட்டுக் கொண்டு தடவிக் கொடுத்தான். பரமானந்தரின் காயங்கள் மறைந்தன. பரமானந்தர் கண்விழித்த போது பகவானின் மந்தகாச மலர் முகத்தைக் கண்டார். எழுந்து வணங்கினார்.

பண்டரீநாதன் அன்புடன் "ஜோகா, இதென்ன கொடுமை! இப்படியா உன்னை வருத்திக் கொள்வது! நீ செய்த குற்றமென்ன? அடியார்களின் திட்டுக்களையே பஜனை கீதங்களாக எண்ணி மகிழ்பவன் நான்!

என்னுடைய் சொந்தமே தொண்டர்கள் தான். அவர்கள் பட்டினி கிடந்தால் நான் நிவேதனங்களை ஏற்பதில்லை. அடியார்கள் நடப்பதே என்னைப் பிரதட்சணம் செய்வதாகும். பக்தர்கள் உறங்குவதையே நமஸ்காரமாக ஏற்பவன் நான். இனி உன்னை தண்டித்துக் கொள்வதாய் எண்ணி என்னை வருத்தாதே! எழுந்திரு" என்று அன்புடன் அவரைத் தூக்கி நிறுத்தினார்.

உழவன் நடுநடுங்கிப் போனான். பரம பாகவதருக்கு அபசாரம் செய்து விட்டோமே எனப் பயந்தான்.

ஞானேசுவரர் ஜோகா பரமானந்தரின் வரலாற்றை அடியார் கூட்டத்தில் சொல்லும் போது, அனைவரும் ஜோகாவின் தீவிர பக்தியையும், பரந்தாமனின் அருளையும் எண்ணி வியந்தனர்.

58. ஓஹ்ரு சாவ்கார்

வட இந்தியாவில் வாழ்ந்த ஓஹ்ரு சாவ்கார் வட்டிக்குக் கடன் கொடுக்கும் லேவா தேவித் தொழிலை மேற்கொண்டிருந்தாலும் நேர்மையானவர். நியாயமான வட்டியே வாங்குவார். 'இவ்வளவு தான் கொடுப்பேன்' என்று அடகு வைக்க வருபவர்களின் இக்கட்டுகளைப் பயன்படுத்தி அடாவடி அடிக்கமாட்டார். இதனால் அவருக்கு லாபம் அதிகமாக இல்லை. அதோடு அன்னதாதா என்று ஊரே பாராட்டுமளவு பசி என்று வந்தவருக்கு அவரது வாசல் என்றும் திறந்தே இருக்கும்.

அவருக்கேற்ற பத்தினி அவரது மனைவி கஸ்தூரிபாய். நள்ளிர வாயினும் முகம் கோணாது விருந்து சமைத்துப் பரிமாறுவாள். 'அதிக

லாபம் சம்பாதிக்கவில்லை, நமது இனத்தாரைப்போல் பகட்டான ஆடை, ஆபரணங்கள் இல்லையே' என்று சலித்துக் கொள்ளதாத உத்தமி.

ஒரு நாள் சாவ்கார் வெளியூர் சென்றிருந்தார். தள்ளாடியபடி ஒரு கிழவர் வந்தார். "அம்மா! பசி பிராணன் போகிறது. சாப்பாடு கிடைக்குமா?" என்று நா நடுங்க யாசித்தார்.

கஸ்தூரி அவரை அன்புடன் அழைத்து உட்கார வைத்துவிட்டு "ஐயா, சற்றே வீட்டைப் பார்த்துக் கொண்டிருங்கள். என் கணவர் வெளியூர் சென்றிருக்கிறார். அதனால் சாமான் வாங்க ஆள் கிடையாது. ஒரு நொடியில் மளிகை சாமான்கள் வாங்கி வந்து சமைத்துப் போடுகிறேன்" என்று சொல்லிவிட்டு கடை வீதிக்கு வந்தாள்.

கையிலோ செப்பாலடித்த காசும் இல்லை. எப்படி சாமான் வாங்குவதென்று யோசித்தாள். மங்கலப் பெண்கள் எது நேர்ந்தாலும் மூக்குத்தியைக் கழற்ற மாட்டார்கள். கஸ்தூரியிடம் இருந்த கடைசி நகை அதுதான். ஆபத்துக்குப் பாவமில்லை என்று அதைக் கழற்றி அடகு வைத்துவிட்டு மளிகை சாமான்கள் வாங்கி வந்தாள். ருசியாக சமைத்து, அன்புடன் உபசரித்து, கிழவரின் பசியைப் போக்கினாள்.

கிழவர் சாப்பிட்டு எழுந்ததும் "அம்மா, நீ கடை வீதிக்குப் போகும் போது மங்களமாய் உன் மூக்கிலிருந்த மூக்குத்தி இப்போது இல்லை. இப்போதுதான் கவனித்தேன். அதை விற்றோ, அடகு வைத்தோ சாமான்கள் வாங்கி வந்திருக்கிறாய். இதற்கு எத்தனை பெரிய மனம் வேண்டும்? நீ நீடூழி காலம் தீர்க்க சுமங்கலியாய், தீர்க்காயுளுடன் வாழ வேண்டும். நீ வாங்கி வந்த சாமான்களின் அளவைக் கொண்டே இந்த வீட்டின் வறட்சியைப் புரிந்து கொண்டேன். தாயே, தயான குணமுள்ள உன்னைப் போன்றவர்களுக்குப் பொருள் இல்லாமல் எப்படித்தானம் செய்ய முடியும்? எனக்கு சில மந்திர சக்திகள் உண்டு. இன்று முதல் உன் வீட்டுப் பானைகள் நீ அன்னதானம் செய்ய நினைக்கும் போதெல்லாம் நிறைந்திருக்கும்" என்று மனமார வாழ்த்தி, உள்ளே சென்று பானைகளைத் தொட்டுச் சென்றார்.

சாவ்கார் வந்ததும் மனைவி அந்த விஷயங்களையெல்லாம் விஸ்தாரமாகக் கூறினாள் சாவ்காரும் மனம் பூரித்து "உடம்பிலிருந்த பொட்டுத் தங்கமும் போய் விட்டதே என்று வருந்தாது விருந்திட்ட

உன்னை மனைவியாக அடைந்தது என் பூர்வ ஜென்ம புண்ணியம். என் பெயரைக் காப்பாற்றினாய்" என்று கொண்டாடினார்.

மற்றொரு நாள். அன்றும் சாவ்கார் ஊரில் இல்லை. பிருந்தாவனம் செல்லும் ஒரு பாகவத கோஷ்டி வந்தது. சுமார் 500 பேருக்குக் குறையாது. நேரமோ அகாலம். எல்லோர் வீட்டுக் கதவும் அடைத்தாகி விட்டது. வந்தவர்களுக்கு ஒரே பசி.

"சாவ்கார் இருக்கிறாரா?" என்று அவர்கள் குரல் கொடுக்க, கஸ்தூரி தவித்தாள். சட்டென்று கிழவர் சொன்னது நினைவு வந்தது. ஓடிப் போய் பானைகளைத் திறந்து பார்த்தாள். எல்லாப் பானைகளிலும் தானியங்கள் நிரம்பி இருந்தன. ஒரு பானையில் தங்கக் காசுகளும் நிறைந்திருந்தது. கஸ்தூரியின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

அவர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்று உட்கார வைத்தாள். உபகார மனமுள்ள சிலரிடம் காசு கொடுத்து காய்கறி, தேங்காய் போன்றவற்றை வாங்கி வரச் செய்தாள். அத்தனை பேருக்கும் அன்புடன் விருந்து சமைத்துப் பரிமாறினாள். அனைவரும் கஸ்தூரிபாயை வாழ்த்தி விடை பெற்றனர். மறுதினம் ஊர் திரும்பிய சாவ்காருக்கு ஆச்சரியம் சொல்லி முடியாது.

"அத்தனை பேருக்கும் எப்படி விருந்திட்டாய்? நானறியாமல் உன்னிடம் பணமும் கிடையாதே?" என்று பிரமிக்க, கணவனை அழைத்துச் சென்று பானைகளைக் காட்டினாள். சாவ்கார் "கஸ்தூரி, அன்று வந்த கிழவர் பரந்தாமனே! நீயே பாக்கியவதி! பகவானைத் தரிசித்து, விருந்திட்டு, சம்பாஷித்திருக்கிறாய். தங்கக் காசுகளைக் கண்டதும் எனக்கு நகை வேண்டும் என்றெண்ணாமல் அடியார்களுக்கு இனி சளைக்காமல் விருந்திடலாம் என்று பூரிக்கும் உன் உயர்ந்த குணத்தைப் புரிந்து கொண்டே, உனக்குக் காட்சி தந்திருக்கிறார்.

நான்பாவி! அடியார்கள் வரும் நேரமெல்லாம் வெளியூர் செல்ல வேண்டிய பணி குறுக்கிடுகிறதே" என்று துக்கிக்க, பளீரென்ற ஒரு மின்னல் கண்ணைப் பறித்தது. பரந்தாமன் சங்கு சக்ரதாரியாய் காட்சி தந்து தம்பதிகளை ஆசீர்வதித்து மறைந்தார்.

சாவ்காரும், அவர் மனைவியும் இறைவன் ஆசிப்படி நெடுங்காலம் வாழ்ந்து, அன்னதானப்பணி செய்து புகழுடம்பு எய்தினார்கள்.

59. கிரிதரலால்

கண்ணன் ிளையாடிய பிருந்தாவனத்திலேயே அவதரித்தவர் கிரிதரலால். நியம நிஷ்டைகள் தவறாதவர். காலையில் பூஜை நித்ய கர்மானுஷ்டானங்கள். மாலையில் பஜனை.

காலில் சதங்கை; கையிலே தம்பூரா; இடையில் பீதாம்பரம், கழுத்திலே துளசிமாலை; நாவிலே சுத்தமான, ராகம் பிசகாத சங்கீதக்கீர்த்தனைகள். அவ்வளவுதான்! கண்ணனாகவே மாறிவிடுவார்.

பூதனை, சகடாசுரனை வதம் செய்வார்... கொட்டும் மழையில் இடையர்களைக் காக்க கோவர்த்தன கிரியைக் குடையாய் பிடிப்பார். பால், வெண்ணை, தயிர் திருடி உண்டு அடிபடுவார், பிடிபடாமல் ஓடுவார். கொடிய காளிங்கனை அடக்கி நர்த்தனம் செய்வார். குவலயாபீடத் தைத்துவம்சம் செய்வார். வாயிலே உலகத்தைக் காண்பிப்பார். பின்னர் யசோதையாய் மாறி அதிசயிப்பார். உரலில் கட்டுப்பட்டது போல் உருளுவார். பார்ப்பவர் மெய்மறந்து போவார்கள். சிலர் "பக்திக்கு ஏன் ஆடம்பரம்... பட்டில்லாமல் பஜனை வராதா?" என்று நையாண்டி செய்தனர். அவரோ "ஆண்டவன் தந்ததை அவனுக்கு ஒளிப்பானேன்! நாடகத்தில் அவரவர் வேஷத்தை அணிந்து கொள்ளாமல், வசனம் மட்டும் உணர்ச்சிகரமாய் பேசிவிட்டால் எடுபடுமா?

அவன் அலங்கார வண்ணன். அவனோடு ஐக்கிய ாக ஒரு அருகதை வேண்டும். கண்ணன் என்பவன் அழுக்கு வஸ்திரத்தோடு பரட்டைத் தலையோடு நின்றால் பார்ப்பவருக்கு பக்தி எப்படி வரும்?" என்று பதில் சொல்லுவார். ஒரு நாள் ஆலயத்தில் தரிசனம் செய்து திரும்பும் நேரம் ஒரு பாகவத கோஷ்டி வந்திரங்கியது. கோஷ்டியின் தலைவர் கிரிதரலாலை அடையாளம் கண்டு அன்புடன் தழுவிக் கொண்டார்.

பின்னர் கூட வந்தவர்களை நோக்கி "இவருடைய ராஸக்கிரீடை பஜனையை நீங்கள் கண்டதில்லையே! கண்படைத்தவர் நிச்சயம் காணவேண்டிய அற்புதம் இது. கண்ணனின் வரப்பிரசாதம் பெற்ற மகான் இவர்... எல்லோரும் அப்படியே உட்காருங்கள்... நாம் மாலையே திரும்ப வேண்டுமே... நேரமிருக்காதே என்று சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தேன்.

நந்தகுமாரன் இவரை நம்முன் கொண்டு நிறுத்திவிட்டான். ஐயா, நீங்கள் ஆரம்பிக்கலாம்'' என்று கூறி அவரும் உட்கார்ந்து விட்டார்.

ஊசி விழுந்தாலும் கேட்கும் நிசப்தம். ஆவலோடு எதிர் நோக்கும் அடியார் கூட்டம். இவருக்கோ உபகரணங்கள் இல்லாமல் பஜனை செய்ய முடியாது. வீடோ வெகு தூரம். தர்ம சங்கடமான நிலைமை.

'இறைவா, இதென்ன சோதனை'' என்று பிரார்த்திக்க, அவர் முன் சதங்கைகளும், தம்பூராவும், பீதாம்பரமும் தோன்றின. இதைக் கண்டவர்கள் ''கண்ணனுக்கே இவருடைய பஜனையைக் கேட்க இருந்த ஆர்வத்தைப் பாராட்டி பிரமித்தனர்.

இவரோ பெருமானை வணங்கி அவைகளை ஏற்று பஜனையைத் தொடங்கினார். கண்ணன் அன்று செய்த லீலைகளை அற்புதமாய் வர்ணித்துப் பாடினார். கோலாட்டம், கும்மி, கண்ணாடி காட்டுதல், பாதத்துக்குச் செம்பஞ்சுக்குழம்பு பூசுதல், பின்னி விடுதல், மறைந்து விளையாடுதல், கண்ணனைக் காணாத கோபிகைகளின் தாபம்

எல்லாவற்றையும் குழைத்து வடித்துத் தந்தார். சபையோர் பேரானந்த வெள்ளத்தில் மூழ்கி இருந்தனர். இன்னொரு நாள் ஒரு பைராகி பாடிக்கொண்டு வந்தான். கிரிதரலால் அவரைப் பிரதட்சண நமஸ்காரம் செய்து, பாதமலம்பி உபசரித்தார். அவ்வூர் அந்தணர்கள் இது கண்டு மகாகோபமுற்றனர்.

"ஓய், கிரிதரலால்! நம்முடைய குலம் என்ன? ஆசாரம் என்ன? உடம்பெல்லாம் நாமத்தைச் சார்த்திக் கொண்டு பஞ்சகச்சம் கட்டிக் கொண்டு வந்தவனுக்கெல்லாம் பாத பூஜை செய்கிறீரே! இவன் சுடுகாட்டில் வாழும் மாந்த்ரீகன்" என்று கூப்பாடு போட, அவர்கள் அருகில் வந்த கிரிதரலால், "மெதுவாகப் பேசுங்கள். அவர் மகாவிஷ்ணு பக்தர். காதில் விழுந்தால் வேதனைப்படுவார். ஒருவரைப் பற்றிய உண்மை அறியாமல் தூஷிக்கலாமா?" என, "என்ன மகாப் பெரிய பக்தர்? உமக்கு அவரைப் பற்றிய உண்மை யெல்லாம் தெரியுமாக்கும்! நீர் சொல்வது தான் மெய்யென்றால் இன்று காலையில் இறந்து போனானே, உமது அடுத்த வீட்டுப் பிராம்மணன்.... அவனை எழுப்பித்தாரும். பாவம்... இளம் மனைவியும், வயதான தாயும் கதறுகிறார்கள். அந்தப் புண்ணியமாவது கிடைக்கட்டும்" என்றார்கள்.

கிரிதரலால் அங்கேயே கல்லும் கனிய கண்ணனை நினைத்துப் பாடினார். "அன்று பாஞ்சாலி மானம் காத்தவனே! அபிமன்யுவைக் கர்ப்பத்தில் சக்கரத்தைக் கொண்டு பாதுகாத்தவனே! குரு புதல்வனை மீட்டுத் தந்தவனே! உன் பக்தருக்கு வைத்த சோதனை உனக்கே வைத்த தல்லவா?" என்று பலவாறும் உருகித் துதித்தார்.

என்ன ஆச்சரியம்! இறந்தவன் விழித்தான். எழுந்து வந்தான். நடந்ததைக் கேள்விப்பட்டு கிரிதரலால் காலில் விழுந்து வணங்கினான். அவன் மட்டுமா? அவன் குடும்பத்தாரும், அந்தணர்களும், ஊராரும் கிரிதரலாலின் பெருமை உணர்ந்து அவர் காலில் விழுந்தனர். எங்கும் ஒரே மகிழ்ச்சி வெள்ளம்! அந்தணர்கள் தங்கள் குறுகிய நோக்கிற்காக மன்னிப்புக் கோரினர். எல்லோருமாகச் சேர்ந்து கோலாகலமாக பஜனை செய்தனர். அன்று முதல் கிரிதரலாலைப் பழித்து எவருமே பேசுவதில்லை.

60. கானோ பாத்திரை

"கோயில்லே ஸ்வாமியைத்தான் நமஸ்காரம் செய்யச் சொல்லுவாங்க! நீ இந்த மரத்தைப் பிரதட்சணம் செய்யச் சொல்றே! இலையைக் கண்ணிலே ஒத்திக்கறே!" தன் பாட்டனிடம் விளக்கம் கேட்டான் அந்த அறியாச் சிறுவன்.

"உம்... அப்படிச் சொல்லப்படாது... மீராபாய், ஆண்டாள் கதை யெல்லாம் கேட்டிருக்கிறே இல்லியா? அதுமாதிரி கானோபாத்திரை என்ற ஒரு பக்தையின் சரித்திரமே இதில் அடங்கி இருக்கு" என்றார் பாட்டன். "ஹை! கதையா... தாத்தா, தாத்தா... அந்தக் கதையை சொல்லுங்களேன்" பேரன் கெஞ்சினான். "சரி, இங்கேயே உட்கார்ந்துக்குவோம். இந்த வாசலுக்கு கானோபாத்திரை வாசல் என்று பெயர். கானோபாத்திரை கணிகையர் குலத்தில் பிறந்தவள். அவள் பிறந்த ஊர் பண்டரிக்குத் தெற்கேயுள்ள மங்கள வேடம் என்ற கிராமம். அவள் தாயின் பெயர் சியாமா.

சியாமா கணி ..கையாயிருந்த போதிலும் கோயில் திருப்பணிகளுக்குத் தாராளமாய் செலவிடுவாள். அடியார்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வாள். குழந்தை பிராயத்திலிருந்து இதையெல்லாம் பார்த்து வந்த கானோபாத்திரைக்கு பக்தி இரத்தத்திலேயே ஊறி இருந்தது. சியாமாவும் அவளுக்குத்தக்க ஆசிரியரைக்கொண்டு நாட்டியமும், பாட்டும், படிப்பும் போதித்தாள். புத்திசாலியான கானோபாத்திரைக்கு எல்லாக் கலைகளும் எளிதில் வந்தன.

கானோபாத்திரை அழகில் சிறந்தவள். தாழம்பூ மேனியாள். முத்துக் களைக் கோர்த்தது போன்ற பல் வரிசை. காதளவு நீண்ட கரிய விழிகள். எள்ளுப்பூ நாசி. அவள் நடப்பதே நாட்டியம் போலிருக்கும். கானோபாத்திரை பருவமடைந்தாள். சியாமா மகளின் அழகைக் கண்டு பூரித்து, "குழந்தாய்! அரண்மனையில் அரங்கேற்றத்துக்கு ஏற்பாடு செய் கிறேன். எப்படியாவது அரசரை உன் வலைக்குள் போட்டுக் கொள். அதன்பின் நமக்கு எதற்கும் குறைவில்லை" எனவும், "பாண்டுரங்கா, ஹரி, ஹரி, இதென்ன சோதனை" என்று காதுகளைப் பொத்திக் கொண்டாள் கானோபாத்திரை.

பிறகு தாயிடம் "அம்மா! அழியும் இந்த உடலை சாச்வதம் என்று நினைக்கிறாயா? உயிர் பறந்தபின் இந்த உடல் நாற்றம் எடுக்கும். அழகிய உடல் என்று பாதுகாத்து வைத்தவர் உண்டா? மீனைப் போன்ற கண்களிலே கண்வலி வந்தாலே கவர்ச்சி போய் விடுகிறதே! யோசித்துப் பார். எள்ளுப்பூ நாசியிலே ஜலதோஷம் பிடித்து சளி கொட்டும் போது பார்க்க ரம்யமாகவா இருக்கிறது? பாச பந்தப் பிசாசு குடியிருக்கும் பாழ் மண்டபமம்மா இது! மல ஜலம் சரியாகக் கழியா விட்டால் அவயவங்கள் எப்படி அவஸ்தைப் படுகின்றன! இல்லறமென்னும் உளையில் மாட்டிக் கொண்டால் மீள்வது கடினம். என்னையும் அதில் தள்ளாதே அம்மா! நீ சம்பாதித்து வைத்திருப்பதே ஏழு தலைமுறைக்குப் போதுமானது. இன்னும் ஏன் பேராசை? நான் ஆடலும், பாடலும் கற்றது அவன் புகழைப் பாடி ஆட. கல்வி கற்றது அவன் சரித்திரங்களைப் படிக்க... அவனுக்கே என்னை அர்ப்பணித்து விட்டேன். அவனே என் மணாளன். நிச்சயம் பண்டரி நாதன் என்னை ஆட்கொள்வான்" என்றாள்.

சியாமளா பிரமித்து நின்று விட்டாள். தன்மகளா இப்படிப் பேசுகிறாள்! தன்மடியில் தாலாட்டிப் பாலூட்டி வளர்த்தவள், என்ன வேதாந்த ஞானி போல் பேசுகிறாள்! இது நடக்குமா? இந்த புத்தி நிலைக்குமா" என்று நினைத்தவள், எதுவானாலும் விட்டுப் பிடிப்போம் எனப் பேசாதிருந்து விட்டாள். சில நாட்கள் சென்றன. ஆடிமாத வளர்பிறை ஏகாதசி வந்தது. பண்டரீபுரம் செல்லும் ஒரு பாகவத கோஷ்டியை சந்தித்தான் கானோபத்திரை. 'தன்னையும் அழைத்துச் செல்ல முடியுமா என்று பணிவுடன் கேட்டாள் கானோபத்திரை.

அவர்கள் "உன்னை என்ன தூக்கிக்கொண்டா போகப் போகிறோம்? தாராளமாய் வா" என, தாயிடம் ஓடிச் சென்று பண்டரீபுரம் செல்ல அனுமதி வேண்டினாள்.

சியாமா நிதானமாக சிந்தித்தாள். கடைசியில் "வெளியுலக அனுபவம் பெற்றால் மகள் பக்குவமடைவான்" என்று முடிவெடுத்து அன்புடன் அனுப்பி வைத்தாள். கானோபாத்திரையின் மகிழ்ச்சி சொல்லி முடியாது. அவர்களுடன் பஜனை செய்தவாறே பண்டரீபுரம் அடைந்தாள். கானோபாத்திரைக்கு வெளி உலகமே மறந்து போய்விட்டது. பண்டரீ புரத்திலோ தினமும் அடியார் கூட்டம். அதுவும் ஏகாதசி போன்ற தினங்களில் கேட்கவே வேண்டாம்.

கானோபாத்திரை தினமும் அதிகாலையில் எழுந்து சந்திர பாகா நதியில் நீராடி ஆலயத்தைப் பெருக்கி, துடைத்து, கோலமிட்டு, பூப்பறித்து, மாலைகட்டி, சந்தனம் அரைத்து சுவாமியின் வஸ்திரங்களைத் துவைத்து, அடியார்களின் தேவைகளைக் கவனித்து... அவளுக்குக் காலம் ஓடியதே தெரியவில்லை. சதா அவள் வாய் பாடிக் கொண்டே இருக்கும். சன்னதியில் தன்னை மறந்து நின்று விடுவாள். தானே சிரித்து மகிழ்வாள். நெக்குருகிக் கண்ணீர் வடிப்பாள். இப்படியே நின்றிருந்தால் பிரசினையில்லை. அவளோ பேரழகு. பருவ மங்கை. உலகம் சும்மா விடுமா?

மன்னன் ஒருநாள் அவளைக் கண்டான். அவளை எப்படியும் அடைய வேண்டும் என்று ஆவல் கொண்டான். காவலர்களை அனுப்பி அவளை எப்படியாவது அழைத்து வரச் சொன்னான். கோயில் வாசலில் பெருக்கிக் கொண்டிருந்த கானோபாத்திரையிடம், காவலர்கள் அரசனது விருப்பத்தைத் தெரிவித்தார்கள். கானோபாத்திரை திடுக்கிட்டு, விறைத்து, விழித்தது விழித்தபடி நின்றுவிட்டாள்.

காவலர்கள் "ஊஹூம்! இவள் நிற்கிறதைப் பார்த்தால் படிகிற மாதிரித் தெரியவில்லை. வெறுங்கையோடு போனால் வேந்தன் சீறுவான். அதட்டினால் தான் காரியம் நடக்கும்" என்று கலந்து பேசி, "இதோபார்! தப்பிக்கலாம், ஏமாற்றலாம், முரண்டு பண்ணலாம் என்று கணக்குப் போடாதே! ஏதாவது இடக்குப் பண்ணினாய் தூக்கிக் கொண்டு போய் விடுவோம்" என்று மிரட்டினர்.

கானோபாத்திரை நிலைமையை உணர்ந்து கொண்டாள். "இவர்கள் மூர்க்கர்கள்; வாத விவாதங்களுக்குக் கட்டுப் படாதவர்கள். இதுவோ அரச கட்டளை. தண்டனைக்குப் பயந்து எவரும் உதவிக்கு வரமாட்டார்கள். இந்தச் சிக்கலை நாமேதான் தீர்த்துக் கொள்ள வேண்டும்" என்று தீர்மானித்து, நயமாக,

"நீங்கள் சொன்ன செய்தியால் என் மனம் பூரித்து இருக்கிறது. நான் பண்டரி நாதனுக்குச் செய்த சேவைக்கு நல்ல பலன் கிடைத்திருக்கிறது. சற்று பொறுங்கள். சன்னதிக்குச் சென்று பகவானைப் பிரார்த்தித்துக் கொண்டு வருகிறேன்" என்றாள். காவலர்கள் வந்த வேலை இத்தனை எளிதாக முடிந்ததே என்று ஆனந்தமுற்றனர்.

கர்ப்பக்கிரகத்துள் சென்ற பக்தை கண்ணீர் ஆறாகப் பெருக "ஆபத்பாந்தவா! அனாத ரட்சகா! இது உனக்கு அடுக்குமா? நிவேதனத்தை நாய் கொண்டு போக பார்த்திருப்பாயோ? இவ்வுடல் உனக்களிக்கப்பட்டதென்பதை அறியாயோ? இன்னொருவன் தொட்டால் அந்த நிமிஷமே என் உயிர் பிரியும் என்பது உனக்கு தெரியாதா? தப்பும் மார்க்கம் அறியாமல் தவிக்கிறேனே!" எனப் பலவாறு புலம்பியவள் மயங்கி வீழ்ந்தாள்.

சூழ்ந்திருந்த அர்ச்சகர்களும், பக்தர்களும் அவளது நிலை கண்டு பரிதவித்தனர். கானோபாத்திரையின் உடலிலிருந்து ஒரு ஜோதி தோன்றி பாண்டுரங்கனிடம் ஐக்கியமாயிற்று. அர்ச்சகர்கள் திடுக்கிட்டு கானோ பாத்திரையின் அருகில் வந்து மூக்கில் விரல் வைத்துப் பார்க்க அவள் இறந்து விட்டதை அறிந்து, உடலைப் பரிவட்டம் கொண்டு போர்த்தி, கோயிலின் தெற்குப் பிரகாரத்தில் குழி தோண்டிப் புதைத்தனர்.

வாசலில் அரண்மனைக் காவலர்கள் காத்திருந்ததால் கானோபாத்தி ரையின் உடல் சீரழிக்கப்படுமோ என்று பயந்தே அவ்விதம் இரகசியமாக அடக்கம் செய்தனர்.

கானோபாத்திரையைப் புதைத்துவிட்டு நிமிர்ந்ததும், அந்த இடத்தில் சிறு செடி முளைத்தது. பார்த்துக் கொண்டிருக்கும் போதே அது பிரம்மாண்டமான கம்பும், கிளையுமான மரமாக வளர்ந்தது. அர்ச்சகர்கள் பயபக்தியுடன் அதை வணங்கினர்." தாத்தா சற்றே நிறுத்தி மூச்சுவிடவும் பேரன் கேட்டான்.

"வாசலிலே காத்திருந்த காவலர்கள் என்ன ஆனார்கள்? சும்மா திரும்பிப் போய் விட்டார்களா?"

"சும்மா போவார்களா? என்னடா, உள்ளே போனவளை வெகு நேரமாய்க் காணோமே... வேறு வழியாய் தப்பி ஓடி விட்டாளா? உலகத்தில் எங்கே ஓடினாலும் அவளை விடுவதாவது" என்றெண்ணியபடி கோவிலுக்குள் வந்து பார்த்தனர். அப்போது தான் அர்ச்சகர்கள் மரத்தை நமஸ்கரித்துக் கொண்டிருந்தனர். கூடியிருந்தவர்கள் நடந்ததைக் கூற, காவலர்கள் அதை நம்பவில்லை. கோபத்தோடு சிரித்தார்கள்! "அவளை எங்கே ஒளித்து வைத்திருக்கிறீர்கள்? மரியாதையாய் உண்மையைச் சொல்லாவிட்டால் ராஜ தண்டனைக்கு ஆளாவீர்கள்! கல்லிடம்

கதறினாளாம்! மயக்கமானாளாம்! ஜோதி கிளம்பியதாம்! புதைத்த இடத்தில் மரம் முளைத்து விட்டதாம்! கேழ்வரகில் நெய் ஒழுகுகிறது என்றால் கேட்பவனுக்கு கொஞ்சமாவது புத்தி வேண்டாமா? அரசன் ஆசைப்பட்ட பொருள் அவள்! அப்படியே அவள் மரித்தாலும் உடலை அரசனிடம் ஒப்படைக்க வேண்டாமா? யாருக்கும் தெரியாமல் அடக்கம் செய்தது குற்றமல்லவா?

உங்கள் புளுகு மூட்டைகளை அரசனிடம் வந்து சொல்லுங்கள்" என்று அர்ச்சகர்களைக் கைது செய்து, அரசன் முன் நிறுத்தினர். அங்கும் அவர்கள் நடந்த உண்மைகளை உள்ளபடி கூறினர். அரசன் சேவகர் பேச்சை நம்பினானேயன்றி, அர்ச்சகர்கள் பேச்சை எடுத்துக் கொள்ளவில்லை. "பண்டரிநாதன் பிரசாதத்தின் மேல் கைவைத்து சத்தியம் செய்து சொல்வீர்களா?" என்று மன்னன் கேட்க, அவர்களும் அப்படியே சத்தியம் செய்தனர்.

அரசன் தாம்பாளத்தில் உள்ள மாலையை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொள்ளும் போது அதில் கரிய நீண்ட உரோமம் ஒன்று சுற்றிக் கொண்டிருக்கக் கண்டான். கோபத்துடன் "வரவர உங்களுக்கு பூஜையில்

அக்கறை இல்லை. இறைவனுக்குச் சார்த்திய மாலையில் ரோமம் வரக்காரணம் என்ன? அதற்கும் ஒரு கதை சொல்வது தானே?” என்றான்.

அர்ச்சகர்கள் திடுக்கிட்டனர். “ஐயோ, எத்தனை பக்தி சிரத்தையாக கவனத்தோடு செய்த சேவையில் பின்னம் வந்ததென்றால் இது இறைவன் திருவுள்ளம்” என்று சஞ்சலமுற்றாலும், “இப்போது தயங்கினால், மன்னன் கானோபாத்திரையின் விஷயத்தையும் நம்ப மாட்டான்’ என்று மனதைத் திடம் செய்துகொண்டு, “மன்னா, கண்ணனுக்கு நீண்ட குழல் உண்டு என்பதை நீங்கள் அறியமாட்டீர்களா?” என, மன்னன் கொதித்தெழுந்தான்.

“உங்களை இப்படியே விட்டால் என்னை முட்டாளாக்கி விடுவீர்கள்! வாருங்கள்... இப்போதே ஆலயம் செல்லலாம். பாண்டுரங்கனுக்கு முடி இல்லாமலிருக்கட்டும். நீங்கள் சொல்வதெல்லாம் பொய்யென்றாகிவிடும். சரியான சிட்சைக் குள்ளாக நேரிடும்” என்று புறப்பட்டான்.

அர்ச்சகர்கள் நெஞ்சில் துளியும் கபடமின்றி, “நெருக்கடியில் வாயில் வந்த வார்த்தைகள் உன் சித்தமே. எங்களைக் காப்பாற்றுவதோ, தண்டிப்பதோ உன் விருப்பம்’ என்றபடி மூலஸ்தானத்திற்குச் சென்று இறைவன் கிரீடத்தைத் தூக்க நீண்ட சிகை அவிழ்ந்து தொங்கியது. அரசன் பிரமித்தான். தன் தவறை உணர்ந்து தலைகுனிந்தான்.

அர்ச்சகர்களிடம் மன்னிக்கும்படி வேண்டியவன், மரமாகிப் போன கானோபாத்திரையிடமும் வந்து நமஸ்கரித்து, மன்னிப்பைக் கோரினான்.

சிறந்த பக்தனாகி நாடு முழுவதும் பக்தியைப் பரப்பினான்.

‘இதுதான் கானோபாத்திரையின் கதை’ என்றார் தாத்தா.

பேரன் இன்னுமொருமுறை பயபக்தியுடன், விருஷத்தை வலம் வந்து நமஸ்கரித்தான்.

61. ஸ்ரீதர பண்டிதர்

"பூஜை முடிந்து விட்டதே! இன்னும் ஏன் சாப்பிட வரவில்லை? என்ன யோசனை?" என்று கேட்டாள் பண்டிதரின் மனைவி.

"ப்ரியே! இந்த வாழ்க்கையில் ஏதாவது அர்த்தமிருக்கிறதா? யந்திரம் போல் இதென்ன இயக்கம்! தினம் குளியல், பூஜை, சாப்பாடு, தூக்கம், பாகவத உபசரணை, பஜனை... எனக்கு சலித்துவிட்டது" என்றார் ஸ்ரீதர பண்டிதர்.

மனைவி புன்சிரிப்புடன் "திடீரென்று ஏன் அலுத்துப் போக வேண்டும்? நமக்கோ பணக்கஷ்டம் இல்லை. நியாயமான முறையில் நிறைய சம்பாதித்துவிட்டீர்கள்! இன்னும் சம்பாதிக்கிறீர்கள்! ஊரிலும் பண்டிதர் என்ற மதிப்பு! மரியாதை! ஏராளமான படிப்பு! பட்டம்! ஒருவேளை பிள்ளையில்லை என்ற குறையோ?" என, ஸ்ரீதரர் அவசரமாய் மறுத்தார்.

"இல்லை... செல்வம் எனக்கு அலுத்துவிட்டது. அந்த ஸ்ரீராமனையே குழந்தையாக நினைக்கிறவன் நான்!" என்றவர், சற்று யோசித்தபின்,

"நாம் தீர்த்த யாத்திரை போகலாம்... ஒவ்வொரு ஸ்தலத்திலும் அலுக்குமட்டும் இருக்கலாம். இறுதியில் கயையில் தங்கிவிடலாம்... வீடு வாசல் சொத்து சுகங்களையெல்லாம் பணமாக்கிக்கொண்டு ஊரைவிட்டே போய் விடலாம். சம்பாதித்தது போதும். சேர்த்து வைக்கும் அவசியமோ நமக்கு இல்லை. அன்புள்ள பத்தினி நீ அருகிருக்க எனக்கேது குறை? இரண்டு நல்ல குதிரைகள் வாங்குவோம். ஒன்றிலே துணிமணி சாமான்கள். இன்னொன்றிலே நாம்... உன் எண்ணம் என்ன?" என்று கேட்டார்.

"உங்களை மறுத்து என்றைக்கு நான் பேசி இருக்கிறேன்? உங்கள் எண்ணம் என் பாக்கியம்" என்ற அவர் மனைவி அப்போது முதலே பயணத்துக்கான சாமான்களை சேகரிக்கத் தொடங்கினாள். மளமள வென்று வீடும், தோட்டமும் விற்கப்பட்டன. ஊர் முழுவதும் இதே பேச்சாக இருந்தது. சில முக்கியமான பாத்திர பண்டங்கள், நகைகள் தவிர மற்றவைகளை விற்றுப் பணமாக்கிக் கொண்டனர். குதிரைகள் வாங் கப்பட்டன. ஊரார் வழியனுப்ப, ஒரு நல்ல நாளில் தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டனர்.

முதலில் பத்ராசலம் போவதாக ஏற்பாடு. வழியில் அடர்ந்த காடு. அழகிய சுனையருகே இறங்கி, குதிரைகளை மேய விட்டு விட்டு, கொண்டு வந்த இட்லி, புளியோதரை, தயிர் சாதம் பொட்டலங்களைப் பிரித்துப் பசியாறினர்.

ஸ்ரீதரரும், அவர் மனைவியும் பெரும் பணத்தோடு போவதாக ஊர் முழுவதும் தெரிந்திருந்ததே! ஒரு கொள்ளைக் கூட்டத்தினர் அவர்களைக் கொள்ளையடிக்கத் திட்டமிட்டனர். அவர்களறியாமல் அவர்களைப் பின் தொடர்ந்து வந்தனர்.

சுனையருகே ஏராளமான குதிரை வரும் சப்தம் கேட்கவும், இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். கொள்ளையர்கள் வியாபாரி வேஷத்திலிருந்தாலும் முகத்திலிருந்த கொடூரமும், தழும்புகளும் போய்விடுமா? ஸ்ரீதரரின் மனைவிக்கு அவர்களைக் கண்டதுமே பயமும், வெறுப்பும், சந்தேகமும் ஏற்பட்டுவிட்டது.

கணவரிடம் மெல்லிய குரலில் "ஸ்வாமி, அந்தக் கூட்டத்தைப் பார்த்தால் நல்ல விதமாகத் தெரியவில்லை. தவிர இருட்டிக் கொண்டு வருகிறது. ஒரு மைலுக்கு முன்னாலே அந்த ஊரிலேயே தங்கி விடாதது முட்டாள்தனம். பேசாமல் திரும்பி அங்கேயே போய் விடுவோம். அவ்வூரார் நல்லவர்கள். பிரியமாக நடந்து கொண்டார்கள். அதோ நரி ஓடுகிறது. அந்த மரத்தில் எத்தனை பெரிய மலைப்பாம்பு! தவிர தண்ணீர் குடிக்க சிங்கம், புலி போன்ற கொடிய மிருகங்கள் வரலாம். பத்து கல் போனால் தான் ஊர் என்று கொன்னார்களே! இராத்திரி இங்கே தங்க முடியாது அதோ அவன் சாமான் வைத்திருக்கும் குதிரையையே நோட்டமிட்டுக் கொண்டிருக்கிறான்" எனவும், ஸ்ரீதரர் குதிரைகளைப் பிடித்து வந்தார். பாத்திரங்களைக் கழுவி மூட்டை கட்டிக் கொண்டு பரபரப்பாக செயல்பட்டாள் அவர் மனைவி.

இவர்கள் புறப்பட ஆயத்தமாவதைப் பார்த்த கொள்ளை கூட்டத் தலைவன் ஸ்ரீதரரின் அருகில் வந்தான்.

"ஏன் திரும்பிச் செல்கிறீர்கள்? பயமா? இன்னும் நாலைந்து மைல் போனால் பெரிய நகரமொன்று வந்து விடுமே! வியாபார விஷயமாக நாங்களும் அங்குதான் செல்கிறோம். நாம் ஒருவருக்கொருவர் துணையாயிற்று. கொடிய மிருகங்கள் வராமலிருக்க தீவட்டி கொளுத்திக் கொள்ளலாம்" என்றான்.

ஸ்ரீதரர் அன்புடன் "நண்பரே! என் மனைவி பெண்ணானதால் மிகவும் அஞ்சுகிறாள். எங்களுக்கும் அப்படி அவசரமாய் போய்த் தீர வேண்டிய வேலையொன்றுமில்லை. நாங்கள் வந்த வழியே போகிறோம். உங்கள் அன்புக்கு நன்றி" என்றார்.

ஸ்ரீதரர் ராமபக்தர் என்பது கொள்ளையர்களுக்குத் தெரியும்.

"தாயே! யாரேனும் வந்த வழியே போவார்களா? நனைத்துச் சுமக்கிறீர்களே! நீங்கள் எங்களையே சந்தேகிக்கிறீர்களா? பழகினால் நீங்களே எங்கள் மேல் ஐயப்பட்டதற்காக வருந்துவீர்கள்! அந்த ஸ்ரீராமன் மேல் ஆணை. எங்களால் உங்களுக்கு ஒரு கெடுதலும் வராது... போதுமா? இன்னும் பயம் தெளியவில்லையென்றால் எங்களுக்கென்ன நஷ்டம்... எப்படியோ போங்கள்" என்றான் கொள்ளையர் தலைவன்.

அவனுடைய சாதுரியமான பேச்சாலும், ராமன் மேல் ஆணை யிட்டதாலும் பரிபூரணமாக நம்பிய தம்பதிகள் அவர்களுடனேயே வழி நடந்தனர்.

சூரியாஸ்தமனமாகி இருட்டிக் கொண்டு வந்தது. திடீரென்று கொள்ளையர் தலைவன் ஸ்ரீதரரின் குதிரை மீது பாய்ந்து அவர் தலையைச் சீவினான். இன்னொரு குதிரையைக் கைப்பற்றும்படி கூட்டத்தாருக்கு உத்தவிட்டான். தரையில் விழுந்த கணவரின் சிரசைப் பார்த்து ஸ்ரீதரரின் மனைவி நடுநடுங்கினாள்.

"அடே பாவி! செல்வத்தை அபகரிக்க வந்தவன் அவரை ஏன் கொன்றாய்? கேட்டிருந்தால் அள்ளித்தரும் வள்ளலாயிற்றே அவர்! நான் சந்தேகப்பட்டது சரியாகப் போயிற்றே! ராமன் மேல் ஆணையிட்டதால் அல்லவா நம்பினோம்! கழுதைக்குப் புத்தி சொல்வது போல் வழி யெல்லாம் சத்விஷயங்களைப் போதித்தாரே! ஹே, ராமா! இந்த அக்கிரமத்தைப் பார்த்துக் கொண்டிருப்பாயோ? இது அடுக்குமோ! இது தான் நீதியா? இவர்களுக்கு சரியான தண்டனை தரமாட்டாயோ? பொய்யாக ஆணையிட்டு எவர் வேண்டுமானாலும் எதுவும் செய்யா லாமா? உன் பக்தரின் துன்பம் உன் கண்ணில் படவில்லையா?" என்று கதறினான்.

திடீரென்று குதிரை மீது வில்லும், அம்புமாக வந்த கருநிற வேடன் கொள்ளையர்களை வதம் செய்தான். ஸ்ரீதரரின் தலையை எடுத்து குதிரை மீதிருந்த முண்டத்தில் வைத்துத் தடவினான். ஸ்ரீதரர் எழுந்து 'ஸ்ரீராமச் சந்திரப் பிரபு!" என்றபடி காலில் விழுந்த பிறகுதான் அவர் மனைவிக்கு வந்தவர் ரகுகுல திலகன் என்பது புரிந்தது. அவளும் கண்ணீரால் தாசரதியின் பாதமலம்பினாள்.

ஸ்ரீராமன் இருவரையும் தேற்றி, நகரம் வரை உடன் வந்தவர் திடீரென்று மறைந்து விட்டார்.

முதலில் தம்பதிகள் வருந்தினார்களெனினும் இறுதியில் தேறி ஒருவருக்கொருவர் ஆறுதல் சொல்லிக் கொண்டனர். பத்ராசலம் முதல் பல திருப்பதிகள் சென்று, தீர்த்த யாத்திரை செய்து, முடிவில் தீர்மானித்த படி காசியில் தங்கி, கயையிலும் கர்மாக்கள் முடித்தபின் விண்ணக மடைந்தனர்.

62. ஸ்ரீ சுஹக்ஷா

அகமதாபாத்தில் வசித்த அலி புருஷர் சுஹக்ஷா. தன் பிறப்பு இப்படி ஆகி விட்டதே என்று மனம் வேதனையுற்று யாரிடமும் நட்புக் கொள்ளாமல், உறவினரிடமிருந்தும் ஒதுங்கி பகவானே கதியென்று வாழ்ந்து வந்தார்.

அதிகாலையில் நீராடி விடுவார். தாமே எளிய உணவை சமைத்து, இறைவனுக்கு நிவேதனம் செய்தபின் சாப்பிடுவார். எப்போதும் பூஜை, ஸ்லோகங்களைப் படிப்பது. இப்படியே அவர் வாழ்க்கை கழிந்தது.

ஒருநாள் இறைவன் அவருக்குப் பிரசன்னமாகி, அவரை மகிழ்விக்க அவரோடு சம்பாஷித்தார். தினமும் ஏதேனும் ஒரு சமயம் தன்னைவந்து பார்க்கும்படி சுஹக்ஷா வேண்ட, இறைவன் அவ்விதமே வாக்களித்து அப்படியே நடந்து வந்தார். அந்த நேரத்திற்காகவே காத்திருந்த சுஹக் ஷாவிற்கு வெளியுலக நினைவோ, தொடர்போ இல்லை. அவர் உலகமே பரந்தாமன் சேவையும், சந்திப்பும்தான் என்று ஆனது. இதை அடுத்த வீட்டுக்காரர்கள் கூட அறிய மாட்டார்கள்.

நாட்டில் ஒரு சமயம் மழையின்றி பூமி வறண்டது. எங்கும் பஞ்சம். கால்நடைகள் மெலிந்தன. மக்கள் குடிக்க நீருமின்றித் தவித்தனர்.

ஜனங்களின் கஷ்டத்தைச் சகிக்கமாட்டாத அரசன் காட்டிற்குச் சென்று அன்ன ஆகாரமும், நித்திரையுமின்றி, ஆண்டவனை மனதில் இருத்திக் கடும் தவம் செய்தான்.

சில நாட்களில் அசரீரியாக "ஹே, ராஜன்! உன் தவ வலிமையும், குடிகளின் மேலுள்ள அன்பும் கண்டு மகிழ்ந்தேன். தவம் செய்தது போதும். உன் நாட்டிலுள்ள சுஹக்ஷா என்ற பக்தரை வணங்கி வழிபடு. மாதம் மும்மாரி பெய்து நாடு செழிக்கும்" என்ற குரல் எழுந்தது.

அரசன் மகிழ்ச்சியுடன் நாட்டிற்குச் சென்றான். மந்திரி பிரதானி களிடம் அசரீரியின் வாக்கைக் கூறி, சுஹக்ஷா என்ற பக்தரைப் பற்றி விசாரித்து வரச் செய்தான்.

சுஹக்ஷா ஒரு அலி புருஷர் என்பது தெரிந்தது. இவரை அரசன் வழிபடுவதாவது என்று குலகுரு, அமைச்சர் முதலியோர் தயங்க, மன்னர்,

"பக்தர்களுள் குல பேதமோ, தாழ்வுணர்ச்சியோ கிடையாது. அவர்களின் அளவு கோல் பக்தி தான்" என்று கூறி, அவர்களுடன் சுஹக்ஷாவின் இல்லத்தை அடைந்தான்.

சுஹக்ஷா மன்னர், அமைச்சர், குலகுரு, சேனாதிபதி இவர்கள் கூட்டமாக வந்தது கண்டு திகைத்தார். அவர் மேலும் பிரமிக்கும் வகையில் அவர்கள் அவர் காலில் விழுந்தனர். ஒருவர் அசரீரி வாக்கைக் கூறி 'நாட்டில் ம்ழை பெய்யும்படி செய்ய வேண்டும்' என்று வேண்டினார்.

சுஹக்ஷா வேதனையுடன் "இது என்ன வேடிக்கை! நானோ அலி. என்னை அரசர் வணங்கும்படி ஏன் செய்தாய் இறைவா? நீ நினைத்தால் மாரி கொட்டாதா? அன்று கோவர்த்தன கிரிதாங்கி கோகுலத்தைக் காத்தவனே. நாடு செழிக்க மழை பொழியச் செய்! எங்கள் அரசர் மிகவும் நல்லவர். அவர் மனதை நோகச் செய்யாதே! பச்சைப் பசும்பயிர் வளர வேண்டும். பஞ்சம் நீங்க வேண்டும்" என்று பலவாறு பிரார்த்தித்தார்.

ஆகாயத்தைப் பார்த்தபடி அனைவரும் ஆவலாக நின்றிருந்தனர்.

சுஹக்ஷா "சும்மா கிடந்த என்னை விந்தைப் பொருளாக்கி நாலுபேர் நகைக்கப் பண்ணுவதில் உனக்கென்ன லாபம்? எதற்காக மன்னனை என்னை வணங்கும்படி சொன்னாய்? மழையைப் பொழிய வைக்கும் சக்தி எனக்கெங்கே இருக்கிறது? ஊர் பேர் தெரியாமல் கிடந்த என்னை அம்பலத்தில் நிறுத்தியது என்ன நியாயம்?

நான் கேட்டேனா இந்தப் பெருமைகளை? உனது குறும்புகளை எண்ணி மகிழ்ந்திருந்த என்னையும் சோதனைக்குள்ளாக்கி விட்டாயா? எனக்கு அவமானமாக இருக்கிறதே! எங்கே மேகம்? இடி, மின்னல் ஒன்றையும் காணோமே! போதும்... உன் சகவாசமே இனி வேண்டாம்! உன்னை இனி ஸ்மரிக்கவும் மாட்டேன்" என்று சினந்து கூற, பலத்த இடி, மின்னலுடன், மழை கொட்டியது.

ஒருநாளா, இரண்டு நாளா... பதினைந்து நாட்கள் எவரும் வெளியே தலை நீட்ட முடியாதபடி கொட்டியது. ஏரி. குளம், கிணறெல்லாம் நிரம்பி வழிந்தது. குடியானவர்கள் கலப்பையுடன் உழப் புறப்பட்டனர். மக்கள் முகங்களில் களிப்பு. எல்லோரும் சுஹக்ஷாவைக் கொண்டாடினர்.

அரசன் சுஹக்ஷாவைப் போற்றி "கைம்மாறாக ஏதேனும் செய்தால் தான் எனக்குத் திருப்தி. என்ன வேண்டுமோ தயங்காமல் கேளுங்கள்" என, சுஹக்ஷா "வேந்தே! இந்த ஈனப்பிறவியை நான் முடித்துக் கொள்ளப் போகிறேன். எனக்கொரு சமாதி கட்டித்தருவாயா?" என்று கேட்க, மன்னன் மறுக்க முடியாமல் தயங்கினான்.

சமாதி கட்டி முடித்ததும், அதில் போய் அமர்ந்து பரந்தாமனைத் துதித்தார் சுஹக்ஷா. பகவான் பிரத்யட்சமாகி சுஹக்ஷாவை ஜோதி ஸ்வரூபமாய் தன்னிடம் சேர்த்துக் கொண்டனர்.

மக்களும், மன்னரும் மலர் தூவி அவர் சமாதியை வணங்கினர். ஜனங்கள் ஆண்டு தோறும் அவர் மறைந்த நாளில் அதற்கு பூஜை செய்து வழிபட்டனர். அன்று முதல் அந்நாட்டில் மாரி பொய்க்கவே இல்லை. பஞ்சம் என்ற பேச்சே கிடையாது.

63. ஹரிபாலதாசர்

"அன்னதானப்பிரபு ஹரிபால ஸ்வாமி வீடு இதுதானே? நாங்கள் பண்டரீபுரம் போகிறோம்".

குரல் கேட்டு ஹரிபாலதாசர் வெளியே வந்தார்.

'வரவேண்டும், வரவேண்டும்..." என்று வரவேற்றார்.

பாகவதர்கள் "இன்றிரவு பஜனையும், சாப்பாடும் இங்கே தான். நாங்கள் நீராடி வருகிறோம்" என்று சொல்லிச் சென்றார்கள். வீட்டிலோ மணி அரிசி கிடையாது. வில்லையும் அம்பறாத்தூணியையும் எடுத்துக் கொண்டு அருகிலுள்ள கானகம் சென்றார் தாசர். இருட்டி வெகு நேரமாகி விட்டது. எவரையும் காணோம். ஹரி பாலருக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

"பரந்தாமா, இதென்ன சோதனை? இரக்கத்தையும், கருணையையும் என் நெஞ்சில் புகுத்தியது ஏன்? எத்தனையோ செல்வந்தர்கள் இரும்புப் பெட்டியோடு மனதையும் இறுகப் பூட்டிக் கொண்டிருக்கவில்லையா? என் செல்வமனைத்தையும் நான் சல்லிக்காசும் மீதம் வைக்காமல் செலவழித்து விட்டேனே? நான் வீடு வாசல் வாங்கி சொத்து சேகரிக்கவா வழிப்பறி செய்கிறேன்? யாராவது பசி என்றால் என்னால் தாங்க முடியவில்லையே! வெறுங்கையோடு போவதைக் காட்டிலும் இந்த அம்பினால் என்னைக் குத்தி மாய்த்துக் கொள்ளுவேன்" என்று வேதனையுடன் தற்கொலை செய்து கொள்ள முயலும் போது, 'ஜல் ஜல்' என்ற சதங்கை ஒலி கேட்டது.

ஹரிபாலர் கூர்ந்து பார்த்தார். வந்தவர்களைப் பார்த்து, அவருக்குச் சொல்ல முடியாத ஆனந்தம். தலையில் பட்டு முண்டாசு. இடையில் கெட்டிக்கரை வேஷ்டி. கழுத்திலே பதக்கம், சங்கிலி. கையிலே வைர மோதிரங்கள். காதிலே வைரக்கடுக்கன். அவர் மனைவியோ உச்சி முதல் உள்ளங்கால் வரை சர்வாலங்கார பூஷிதையாக இருந்தாள். வில்லைத் த்வனி செய்து கொண்டு அருகே நெருங்கினார் ஹரி பாலர்.

"அப்படியே நில்லுங்கள். மரியாதையாக எல்லாவற்றையும் கழற்றித் தருகிறீர்களா? இல்லை... உயிரை விடப் போகிறீர்களா? என்று

மிரட்டினார். பக்தனின் துன்பம் பொறுக்காமல் காட்சி தந்த பகவான் பயந்தவர் போல் நடுங்கி "அப்பா, எங்களைக்கொன்று விடாதே! நாங்களே தந்து விடுகிறோம்" என்றவர், "லக்ஷ்மீ, எல்லாவற்றையும் சீக்கிரமாய் கழற்று" என்று மனைவிக்கும் உத்தரவிட்டார்.

எல்லாவற்றையும் மகிழ்ச்சியோடு மூட்டைகட்டி எடுத்துப் போன ஹரிபாலர் அவைகளைக் கடைவீதியில் விற்று, வேண்டிய சாமான் களுடன் வீட்டிற்கு விரைந்து அதிதிகளின்-பசியாற்றினார்.

வைகுண்டத்தில் மகாலக்ஷ்மிக்கு ஒரே கோபம். உம்மென்றிருந்தாள்.

"பஞ்சமா பாதகங்களுள் திருடுவதும் ஒன்று என்பது நாம் வகுத்த நீதி. பக்தன் என்பதனால் அதை மீறுவது முறையா? திருமங்கை மன்னனும் இதையேதான் செய்தான்" என்று வெடித்தாள்.

ஸ்ரீமந்நாராயணன் புன்னகையுடன், "அவன் தனக்காகத் திருட வில்லையே? அதுவும் தவிர தானங்களில் சிறந்தது அன்னதானம். பூஜைகளில் முதன்மையானது அதிதி பூஜை. அவன் யாரையும் கொல்வ

தில்லை. அதுவும் செல்வந்தர்களிடம் மட்டுமே திருடுகிறான். அவன் புலம்பியபடி இரக்கத்தையும், வறுமையையும் சேர்த்துக் கொடுத்தது நம் குற்றம்" எனவும், "அழகுதான்! அவன் செயலை நியாயப்படுத்து கிறீர்களே! சரி, அப்படியே ஆனாலும் அவ்வளவு நகைகளும் எதற்கு?" என்று கேட்டாள் லக்ஷ்மீ. "ஏன் சந்தேகம்? வா, நேரிலேயே போய் பார்ப்போம்" என்றபடி மகாலக்ஷ்மியுடன் ஏழைத்தம்பதியாராக, ஹரிபாலர் வீட்டின் முன் நின்றார்.

ஹரிபாலர் தம்பதிகளை உள்ளே அழைத்துச் சென்று, உபசரித்து வயிறார சாப்பாடு போட்டு, தாம்பூலம் மடித்துக் கொடுத்தார். பின்னும் பகவான் தயங்கவே, "இன்னும் என்னால் செய்யக்கூடியது ஏதேனும் இருக்கிறதா?" என்று பணிவுடன் கேட்டார் ஹரிபாலர். பரந்தாமன் "ஐயா, இவளும் நானும் நேற்று இவ்வூருக்கு வரும்போது ஒரு கள்வன் எங்களை பயமுறுத்தி எங்களின் ஆபரணங்களைக் கொள்ளையடித்துவிட்டான். ஹரிபக்தர்களை மிரட்டி வழிப்பறி செய்யும் அக்கொடியவனைத் தண்டிக்க வேண்டும். இவ்வூரில்தான் அவன் இருக்க வேண்டும். அவனைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?" என்று ஏதுமறியாதவர்போல் கேட்க, ஹரிபாலர்.

"ஹரிதாசர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதே என் லட்சியம். இதுவரை இது போல் யாரும் கேட்டதில்லை. நான் அக்கள்வனை அறிவேன். இதோ பிடித்து வருகிறேன் இஷ்டமான தண்டனை கொடுங்கள்" என்றபடி உள்ளே சென்று, பெருத்த மீசையும், உருமாலும், அம்பறாத்துணியும், வில்லும் அணிந்து முன்னே வர, அங்கே அவன் கண்ட காட்சி!

வணிகனும், அவன் மனைவியுமாக வந்தவர்கள் ஸ்ரீமந் நாராயணனும், லட்சுமியுமே என்று புரிந்து கொண்டான். 'பகவானிடமா கொள்ளையடித் தோம்! பரமனையா மிரட்டினோம்' என்று நெக்குருகி, கண்ணீர் வடித்து பாதங்களில் விழுந்து மன்னிப்புக் கோரினான். பகவான் அவனை வாரியெடுத்து ஆலிங்கனம் செய்து கொண்டு "இனி நீ கொள்ளையடிக்க வேண்டாம். இந்தப் பொருளை மூலதனமாகக் கொண்டு வியாபாரம் செய். வற்றாத செல்வமுண்டாகும். அதைக் கொண்டு அதிதி பூஜை செய்" என்று ஆசீர்வதித்து மறைந்தார். அதன்படியே நடந்த ஹரிபாலர் அன்னதானப் பிரபுவாகவே விளங்கினார்.

64. அங்கத பூபதி

அந்தபுரத்துள் அலுப்போடு வந்து கொண்டிருந்தான் அங்கத பூபதி. "ராணி எங்கே?" சேடியைக் கேட்டான். "குருநாதரை தரிசிக்கப் போயிருக்கிறார்கள்" பணிவோடு பதில் சொன்னாள் பணிப்பெண்.

அங்கத பூபதிக்கு சினம் தலைக்கேறியது. அதே சமயம் உள்ளே நுழைந்த அரசி, கணவரருகில் வந்து "வெகு நேரமாயிற்றா? ஏன் முகவாட்டமாயிருக்கிறீர்கள்?" என்று அன்புடன் கேட்டாள்.

அரசன் கோபத்துடன் "இதென்ன சன்னியாசி மடமா? எப்போதும் அடியார்களுக்குச் சேவை செய்வதும், பஜனை செய்வதும் எனக்குத் துளியும் பிடிக்கவில்லை. கற்புடைய பெண்களுக்கு கணவனே தெய்வம். என்னை வணங்கினாலே போதும். கடவுள், கடவுள் என்கிறாயே அந்தக் கடவுளை நீ காட்டுவாயா? அல்லது நீ பாத பூஜை செய்யும் அந்த அடியார்கள் தான் காட்டுவார்களா? பதியைத் தவிர பரபுருஷனைத் தொழும் போது உன் பதிவிரதா தர்மம் பழுதுபடவில்லை?" என்று கேட்டான்.

அரசி மௌனமானாள். அவள் நெஞ்சு பாகாய் உருகியது. அந்த நிமிடம் முதல் அவள் தண்ணீரும் அருந்தாமல், பாயில் படுக்காமல் உபவாச மிருந்தான் இரவில் தனிமையில் பகவானிடம், "பரந்தாமா, பாஞ்சாலிக்கு ஐந்து கணவர்கள் அருகிலிருந்தும் 'கண்ணா' என்று உன் பெயரைச் சொல்லித்தானே கதறினாள்? அதனால் அவள் பதிவிரதை அல்ல என்று அர்த்தமா? குந்திக்கு முன்னாலேயே பாண்டு மகாராஜா இறந்து போனான்... அப்படியானால் அவள் யாரைத் தெய்வமாகக் கொள்வாள்? சந்திரமதியை விற்று விட்டான் அரிச்சந்திரன்.... அவள் தெய்வம் யார்? கடவுளைக் காட்டுவாயா என்று கேட்டாரே நான் கடவுளை எப்படிக் காட்டுவேன்?" இப்படி எண்ணாததெல்லாம் எண்ணிப் புலம்பினாள்.

இப்படியே மூன்று நாட்கள் கழிந்தன. மூன்றாம் நாள் இரவில் ஸ்ரீமந் நாராயணன் அங்கத பூபதியின் கனவில் தோன்றி, "உங்கள் குல தெய்வமான ஜகந்நாதப் பெருமாள் நானே! உன் மனைவி செய்த புண்ணியத்தால் உனக்குக் காட்சி தந்தேன். மகாபதி விரதையான அவளை

மனம் நோகச் செய்யாதே!" என்று சொல்லி மறைந்தார். அங்கத பூபதி விழித்தெழுந்தான். குளித்தது போல் வியர்த்திருந்தது. மனைவியைத் தேடிச் சென்றான். தியானத்திலிருந்த அவள் வழி நீரைத்துடைத்தான். கனவில் பகவான் தோன்றியதை விவரித்தான்.

"உபவாசத்தை விடு. என் அறிவின்மையை மன்னித்து விடு. இந்தப் பாலையும், பழத்தையும் சாப்பிடு" என்று தேற்றினான். கணவன் மனம் மாறியது கண்டு அங்கத பூபதியின் மனைவி பூரித்தாள். அன்று முதல் இருவரும் ஒற்றுமையாக பகவத் பக்தியிலும், அடியார்களை உபசரிப்பதிலும் ஈடுபட்டனர். அங்கத பூபதியின் தமையன் பெயர் இராயசிங். அவனுக்கொரு தங்கையுமிருந்தாள்.

எதிரி மன்னனொருவன் அங்கத பூபதியின் நாட்டின் மேல் படையெடுத்து வந்தான். படை நடத்திச் செல்லும் பொறுப்பை தம்பியிடம் ஒப்படைத்தார் இராயசிங். வீரமாகப் போரிட்டு வெற்றியுடன் திரும்பினார் அங்கத பூபதி. ஏராளமான பொன், வெள்ளி, ரத்தின வகைகள் அவரோடு வந்தன. அபூர்வமான ஒரு வைரத்தை மட்டும் வைத்துக் கொண்டு



மற்றவைகளை ஏழைகளுக்கு விநியோகித்து விட்டார் பூபதி. இந்த செய்தியை விஷமிகள் இராயசிங்கிடம் திரித்துக் கூறி விட்டனர். இராயசிங் அந்த வைரத்தை தனக்கு அனுப்பும்படி சொல்லி அனுப்பினார்.

அங்கத பூபதி "அது ஜகந்நாதப் பெருமாளுக்குப் பதக்கம் செய்வதற் காக வைத்திருக்கிறேன். பகவானுக்கு என்று தீர்மானித்துவிட்டதை மனிதர்கள் உபயோகப்படுத்துவது குற்றம்" என்று சொல்லி அனுப்பி விட்டான்.

இராயசிங்குக்குக் கோபம் தலைக்கேறியது. தங்கையிடம், "சேவகர் கள் இனி என்னை மதிப்பார்களா? அவனுக்கு அகம்பாவம் அதிகமாகி விட்டது. அண்ணன் என்ற மரியாதை இல்லை. தெய்வம் அவனுக்கு மட்டும் தானா? நான் நாஸ்திகனா? இவனை இப்போதே ஒழித்துக் கட்ட வேண்டும். இந்த விஷத்தை சோற்றில் கலந்து இப்போது அவன் சாப்பிட உட்காரும் போது என் கண்ணெதிரிலேயே போட வேண்டும்" என்று கொதித்தான். அங்கத பூபதியின் மேல் தங்கை பாசம் கொண்டிருந்தா ளெனினும் இராய சிங்கிடம் பயம் அதிகம். பெரிய அண்ணனுக்குக் கோபம் வந்தால் உறவு, நட்பு என்று பார்க்காமல் தீர்த்துக் கட்டிவிடுவான் என்பதை அவள் அறிவாள். மௌனமாகச் சொன்னபடி செய்தாள்.

என்றும் மூவரும் ஒன்றாகச் சாப்பிடுவதுதான் வழக்கம். அங்கத பூபதி சாப்பிட வந்தான். தங்கை துக்கத்தை அடக்கிக் கொண்டு விஷம் கலந்த அன்னத்தைப் படைத்தான். எப்போதும் போல் 'ஈசுவரார்ப்பணம்' என்று சொல்லிவிட்டு சோற்றைப் பிசைந்து வாயருகில் கொண்டு போகும் போது இராயசிங் தடுத்தான். "இப்போது பகவானுக்கர்ப்பணம் செய்தாயே! இது விஷம் கலந்தது. பகவானுக்கு நஞ்சு கலந்த அன்னத்தையா அர்ப்பணம் செய்வது?" என்று கேட்டான்.

"அங்கத பூபதி வினாடி நேரம் திகைத்து, பின் சமனமான மனத்துடன் இது நஞ்சு கலந்தது என்பது தெரியாமல் அர்ப்பணித்து விட்டேன். ஆயினும் இது இறைவன் செயல். காளிங்க மடுவில் விஷத்தின் நடுவில் நீச்சலிட்டவனுக்கு இந்த விஷம் ஒரு தூசு. அவன் நீல மேக சியாமளன். மீராபாய் விஷமருந்திய பாலை உண்ட போது அதைத்தான் ஏற்றுக் கொண்டவன் காரணமில்லாமல் இந்தக் காரியத்தைச் செய்யமாட்டான்..! கிருஷ்ணா! மாதவா" என்றபடி சாப்பிடத் தொடங்கினான்.

தமையனுக்கு நெஞ்சு படபடத்தது. "தம்பீ! அதைச் சாப்பிடாதே" என்று தடுத்துப் பார்த்தார். அங்கத பூபதியோ "இல்லை... எம்பெரு மானுக்கே நிவேதனம் செய்தபின் எனக்கு இது நிஷித்தமில்லை" என்று கூறியபடி சாப்பிட்டு முடித்துவிட்டார்.

தங்கையும், தமையனும் பிரமித்திருந்தனர். அக் கொடிய விஷம் அவரை ஒன்றும் செய்யவில்லை. ஆனால் அங்கத பூபதி மனைவியிடம் சென்று நடந்ததைக் கூறி, "இனி இங்கு அரைக்கணம் கூட இருக்கக் கூடாது. பகை பிறந்த பின் சேர்ந்திருக்க முடியாது. வைரத்தை எடுத்துக் கொள். ஜகந்நாதம் சென்று இறைவனுக்கு அர்ப்பணித்துவிட்டு பிறகு போகுமிடத்தைத் தீர்மானித்துக் கொள்வோம்" என்றார்.

அவர் சொன்னபடியே அவளும் பயணத்துக்கு ஆயத்தமானாள். இந்த விஷயத்தைக் காவலர்கள் இராயசிங்குக்கு அறிவிக்க, வைரக்கல்லைப் பறித்து வரும்படி அமைச்சர் தலைமையில் ஒருசிறு படையை அனுப்பி னான் இராயசிங்.

படை அங்கத பூபதியை வளைத்துக் கொண்டது. படைகள் வருவதைக் கண்டதுமே காண்போர் கண்ணைக் கவரும் அப்பெரிய வைரத்தை மனைவியிடமிருந்து வாங்கிய அங்கத பூபதி, அருகிலிருந்த நதியில் வீசி எறிந்தான். படையினர் ஆற்றைச் சல்லடை போட்டனர். அங்கத பூபதி சிரித்தபடி, "அறிவிலிகளா? அது ஜகந்நாதப் பெருமாளுக்கு அர்ப்பணிக்கப் பட்டது. வேண்டுமானால் என்னோடு ஜகந்நாதத்தில் வந்து பாருங்கள்" என்றார்.

படையினர் மௌனமாக அங்கத பூபதியைப் பின் தொடர்ந்தனர். ஜகந்நாதர் ஆலயம். குதிரைகளையும், ஆயுதங்களையும் காவலாக வெளியே வைத்துவிட்டு, அமைச்சர், அங்கத பூபதியுடன் கருப்பக்கிரகம் சென்றார்.

ஜகஜ்ஜோதியாக தீபாராதனை நடந்து கொண்டிருந்தது. அப்பெரிய வைரம் தீய ஒளியில் பல வண்ணங்களை வாரி இறைத்துக் கொண் டிருந்தது கண்டு மந்திரி பிரமித்தார்.

அர்ச்சகரிடம் "இந்த வைரப் பதக்கம் எப்போது செய்யப்பட்டது?" என்று வினவ, அவர் பவ்யத்துடன் "இரண்டு நாட்கள் முன் பெருமாள்

என் கனவில் வந்து 'இன்ன இடத்தில் மூழ்கினால் ஒரு வைரக்கல் கிடைக்கும். அதை எடுத்து வந்து பதக்கத்தில் உடனடியாகப் பதிக்க வேண்டும்" என்றார். அப்படியே மூழ்கிப் பார்த்த போது இந்தக்கல் கிடைத்தது. இன்று காலைதான் பதக்க வேலை முடிந்தது. முதல் தீபாராதனை. நீங்கள் வருகிறீர்கள்" என்றார்.

மந்திரி மெய் சிலிர்த்தார். 'எங்கோ காட்டாற்றில் எறிந்தகல் ஜகந்நாதத்தில் கிடைத்த அதிசயத்தை' மன்னருக்கு ஓலையில் எழுதி அனுப்பினார். இராயசிங் தங்கையுடன் விரைந்து வந்தார். தம்பியிடம் மன்னிப்புக் கோரினார். ஜகந்நாதப் பெருமாளை தரிசனம் செய்து, தம்பி குடும்பத்துடன் ஊர் திரும்பி கண்ணன், பலராமன், சுபத்திரை யைப் போல ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தான். ஹரிசேவை செய்வதில் ஒருவருக் கொருவர் சளைக்காமல் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர்.

65. ஜம்பு தாசர்

கை ஏர்க்காலைப் பிடித்தாலும் வாய் பாண்டுரங்கன் நாமத்தையே உச்சரித்துக் கொண்டிருக்கும். ஒரு துண்டு நிலம் என்றாலும் அதில் விளைவதை அவசியப் பசிக்கு மட்டுமே சாப்பிட்டு மீதத்தை அடியார் களுக்கும், இல்லாதவர்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்து விடுவார். எளிமையிலும் ஜம்புதாஸரின் கருணையைக் கண்டு ஊரே போற்றியது. சிறுகுடிசையும், இரண்டு உழவு மாடுகளும் ஏர்க்காலும்தான் அவர் சொத்து. ஒரு வினாடியும் வீண் பொழுது போக்காமல் உழைத்துக் கொண்டிருப்பார். ஊருக்கு உபகாரி. சதா சத் விஷயங்களையே பேசிக் கொண்டிருப்பார்.

ஒருநாள் நள்ளிரவு. ஜம்புதாஸர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த நேரம். இரு கள்வர்கள் வந்து அவரது எருதுகளைக் கவர்ந்து கொண்டு போனார்கள். பகவான் பார்த்தார். 'அடடா! இரவு மழை நன்றாகப் பெய்தி ருக்கிறது... விடிந்தால் உழவேண்டுமே! ஜம்பு தவிப்பானே" என்று அதே போல இரண்டு மாடுகளைக் கொண்டு கட்டி விட்டார்.

விடிந்தது. ஏரைத் தூக்கிக்கொண்டு மாடுகளுடன் பாடிக்கொண்டே வயலுக்குப் புறப்பட்டார் ஜம்பு. சந்தையில் மாட்டை விற்றுவிட்டு வந்து கொண்டிருந்த திருடர்கள் ஜம்புதாஸர் வயலில் உழுது கொண்டிருந்ததைப் பார்த்ததும் அரண்டு விட்டனர்.

"திருடிய மாடுகளை விற்ற பணம் மடியில் குலுங்குகையில் துளியும் கவலையின்றி அதே போன்ற மாடுகளுடன் உழுகிறாரே! ஒருவேளை ஏராளமான மாடுகளை வேறிடத்தில் வைத்திருக்கிறாரோ? சித்து விளையாட்டோ?" என்று பலவிதங்களில் சந்தேகம்.

அன்றிரவும் மாடுகளை திருடுவதென்று முடிவெடுத்து அதன்படியே செய்தனர். பகவானும் வேறு இரண்டு காளைகளை கிருஷ்டித்தார். அவனோடு போட்டி போட முடியுமா? கோபிகையரிடையே பல கண்ணன் களாக மாயத்தோற்றம் காட்டி ராசலீலை செய்தவனாயிற்றே!

காலையில் வயலுக்கு வந்து பார்த்த போது ஜம்பு உழுது கொண் டிருந்தார். "எத்தனை மாடுகள் தான் வைத்திருக்கிறார் பார்ப்போம்" என்று திருடர்கள் தொடர்ந்து திருட, பகவானும் சிருஷ்டித்துக் கொண்டே



இருந்தார். ஒரே அங்க அடையாளம், கொம்பு, சுழி, பற்கள், நிறம் கொண்ட மாடுகளால் கொட்டம் நிரம்பி விட்டன.

திருடர்களுக்குப் பயம் பிடித்துக் கொண்டது. 'அவர் ஏழை. வேறு மாடுகள் வாங்க வசதியற்றவர். அதுவும் இப்படி ஒன்று போல் மாடுகளைத் தேடி வாங்க முடியாது. பக்தருக்காக பகவான் போடும் நாடகம் இது! பரமனைச் சோதனை செய்துவிட்டோமே! என்ன தண்டனை கிடைக்குமோ" என்று நடுங்கினர். மாடுகளை ஓட்டிக் கொண்டு போய் தாசரின் முன் நிறுத்தி, நடந்ததைக்கூறி மன்னிப்புக் கேட்டனர்.

"இரவும், பகலும் இவை போடும் சத்தம் தாங்க முடியவில்லை. அதோடு தீனி போட்டும் கட்டுப்படி ஆகவில்லை. சந்தை தோறும் மாடு விற்கப் போனாலும் ஊரார் சந்தேகக் கண் கொண்டு பார்க்கிறார்கள். இப்பாபப் புதை குழியிலிருந்து எங்களைக் காப்பாற்ற வேண்டும்" என்று அவர் காலடியில் வீழ்ந்தனர். நடந்ததை அறிந்த தாசர் மெய் மறந்தார்.

"உலகையே வாய்க்குள் காட்டியவனே! ஆநிரைகள் (மாடுகள்) மேய்த்த கோவிந்தா! என் பொருட்டு மாடுகளை உற்பத்தி செய்தாயோ... இந்த மாடுகளெல்லாம் உன் ஸ்பரிசம் பெற்றனவல்லவா? இந்த மாடுகள் செய்த பாக்கியம் நான் செய்யவில்லையே" என்று அவைகளைக் கட்டித்தழுவிக் கொண்டு கண்ணீர் உகுத்தார். பித்தனைப் போல் முத்தமிட்டார்.

'உங்களால் அல்லவா எனக்கு பகவான், என்னிடம் வைத்த அன்பு புரிந்தது. நீங்களே என் குருநாதர்" என்று கள்வர்களைப் போற்றினார்.

"பரந்தாமா! கோவிந்தா! உனக்குக் கஷ்டத்தைத் தந்து விட்டேனே" என்று துடித்தார். பக்தன் படும் வேதனை தாங்காத பரந்தாமன், ஜம்புதாஸருக்குக் காட்சி தந்து தாஸரைத் தேற்றினார்.

"அன்பா! வீணில் ஏன் வருந்துகின்றாய்! அடியார்களை சோதித்து உதவுவது எனக்கு ஆனந்தம் என்பதை நீ உணரவில்லையா? உனக் கென்ன வேண்டுமோ, கேள்" என்றார்.

நாக்குழற ஸ்தோத்திரம் செய்து கொண்டே விழுந்து, விழுந்து நமஸ்கரித்த தாசர், "உன்தரிசனம் பெற்றபின் வேறொன்றும் வேண்டு மோ? உன்னை என்றும் மறவாதிருக்கும் வரம் தந்தாலே போதும்" என்று வேண்ட, பகவான் அவ்விதமே வரமருளி மறைந்தார்.

கள்வர்களும் பகவான் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். "தாசரே! உமது கூட்டுறவாலன்றோ எங்களுக்கும் தெய்வ தரிசனம் கிட்டியது" என்று தாசரைக் கொண்டாடினர். தாசரோ "உங்களால் தான் எனக்குப் பண்டரிநாதன் தரிசனம் கிடைத்தது" என்று அவர்களைப் புகழ்ந்தார்.

அன்று முதல் கள்வர்கள் திருட்டுத் தொழிலைவிட்டு நேர்மையான வழியில் உழைத்துப் பிழைத்தனர். அடியார்களைப் போற்றும் ஹரி பக்தர்களாக, தாசரின் சீடர்களாக வாழ்ந்தனர்.

66. போசல பாவா

போசல பாவா வாழ்ந்தது பண்டரீ புரத்திற்கு அருகேயுள்ள பால்காடு. பாவாவின் மனைவி பெயர் மம்தாபாய். மகன் பெயர் ஏமாஜி. சொந்த நிலத்தில் அவரே உழுது பயிரிட்டார். கருணையும், அன்பும் கொண்ட பாவாவின் குடும்பத்தினர் பண்டரிநாதன் மீது எல்லையற்ற பக்தி கொண்டவர்கள்.

தசமியன்று பண்டரீபுரம் சென்று, ஏகாதசியன்று சுத்த உபவாச மிருந்து, பஜனை செய்து, துவாதசியன்று அன்னதானம் செய்த பிறகு தான் ஊர் திரும்புவார்கள். இது பல ஆண்டுகளாக நடந்து வந்தது. அந்த முறை கடும் பஞ்சம் வந்தது. நீர் நிலைகளெல்லாம் வறண்டுவிட்டன. வயல்களெல்லாம் பாளம் பாளமாய் வெடித்துக் கிடந்தது. 'பசிக்கே சோறில்லாத நிலையில் அன்னதானம் எப்படிச் செய்வது? அதற்காக இத்தனை ஆண்டுகள் செய்து வந்த அறப்பணியைக் கைவிடுவதா? என்று புழுங்கினார். மமதா மிக நல்லவள். புருஷன் மனமறிந்து நடக்கும் குணவதி. "காட்டிலே விறகு வெட்டி வாருங்கள். விற்றுக் காசாக்கி கிடைப்பதில் சிறிது சோளமாவது வாங்கி ஏழை ஒருவரின் பசியையாவது தீர்ப்போம்" என்று யோசனை சொன்னாள். நல்லதென்று பாவாவும் ஏமாஜியும் கோடாலியுடன் காட்டிற்குச் சென்று முடிந்த அளவு விறகு வெட்டி அருகிலிருந்த ஊர்களில் விற்றார்கள். சோளமாவை எடுத்துக்கொண்டு பாவா மட்டும் புறப்பட்டார்.

துவாதசி – எங்கும் அன்னதானம் நடக்கும்போது பாவாவின் சோளமாவைச் சீந்துவார் யார்? கேலியாகப் பார்த்துவிட்டுச் சென்றனர். அத்திதிக்கு அன்னமிடாமல் பாவா சாப்பிட்டதில்லை. சோர்ந்து, களைத்து, சரிந்து ஒரு மர நிழலில் அமர்ந்தார்.

நல்ல வெயில். கிழிசல் ஆடையுடன் ஒரு கிழத்தம்பதியர் வந்தனர். பாவாவின் அருகில் வந்ததும், அந்தக் கிழவர் கண்ணருகில் கையைக் கொண்டுபோய் உற்றுப் பார்த்தார்.

பிறகு மகிழ்ச்சியுடன் மனைவி பக்கம் திரும்பி "ருக்மா, இவர்தான் பாவா" என்றவர், பாவாவிடம் "என்னைத் தெரியவில்லை? வருஷா வருஷம் அன்னதானம் செய்வாயே! உன் சாப்பாட்டைத்தான் சாப்பிடுவது என்று கட்டுப்பாடுடன் வந்தேன். நேற்றுப் பட்டினியா? பாரணை நேரம் தாண்டிவிடுமோ என்ற பயம் வேறே... உன்னை எங்கெல்லாம் தேடுவது? பசி பிராணன் போகிறது. இந்த தடவை அன்னதானம் கிடையாதா? என்றார்.

பாபா குன்றிப்போய் தளர்ந்த குரலில், "வயலில் விளைச்சல் இல்லை. களஞ்சியம் வற்றி விட்டது. ஆனாலும் பழக்கத்தை விடக்கூடாது என்று சொஞ்சம் சோளமாவு கொண்டு வந்திருக்கிறேன்" என்றார். கிழவர் பரபரப்பாக "மனசுதான் முக்கியம். அதைத்தா. ருக்மா, நீ போய் ரொட்டிசுட வேண்டிய சாமான்களை இரவல் வாங்கி வா..... நான் சுள்ளி பொறுக்குகிறேன். அந்தக் கற்களை எடு. அதோ அந்த வீட்டில் கொஞ்சம் தணல் கேள். ரொட்டி சுடு" என்றார்.

வயதான காலத்திலும் சுறுசுறுப்பாக செயல்பட்ட அவர்களின் ஒற்றுமை பாவாவை வியக்க வைத்தது. அதிதிகளை அனுப்பிவைத்த பாண்டுரங்கனின் கருணையை மனதிற்குள் கொண்டாடினார். தயங்கியபடி "ஸ்வாமி! தாங்களோ பெரும் பசியோடிருக்கிறீர்கள்! என்னிடமிருப்பதோ கொஞ்சம்தான்! இருவர் பசிக்கு அது போதாதே! பேசாமல் அறுசுவை உணவுடன் அன்னக்கொடி கட்டி சாப்பாடு போடும் இடத்திற்குச் சென்று வயிறார உண்ணுங்கள். வயதான காலத்தில் ரொட்டி சுடும் சிரமம் வேறு" என்றார் கிழவரிடம்.

கிழவர் சிரித்தபடி "பாவா, எனக்குப் பசி பெரிதல்ல.... அன்பு தான் முக்கியம். ஒருவன் தன் பணப் பெருமையைப் பறைசாற்ற கொட்டுகிறான்.

அடுத்தவன் புகழுக்காக விளம்பரம் தேடுகிறான். உன்னை நான் அறிவேன். நீ பசிக்கும் வயிற்றைப் பார்ப்பவன். வலது கை கொடுப்பதை இடதுகையும் அறியாவண்ணம் புகழ் சொல்லுக்கு நாணி, ரகசியமாகத் தருமம் செய்தவன். எங்களுக்கொன்றும் சிரமமில்லை. பொறுமையாயிரு" என்றார். அதற்குள் ரொட்டி தயாரானது. "நல்ல சோளம்... என்னருசி, என்ன ருசி! ருக்மா..... நீ இப்படி ரொட்டி இதுவரை செய்ததே இல்லை" என்று புன்சிரிப்புடன் சொல்லியபடியே தின்றார் கிழவர்.

கிழவி ஏதும் பேசாமல் சிரித்தபடியே, தானும் ரொட்டிகளைச் சாப்பிட்டார். "பாவா, போதுமா என்று சந்தேகப்பட்டாயே! மூச்சுத் திணறுகிறது, பார்! இந்த மூன்று ரொட்டி மிச்சம். வீட்டிற்குப் போய் உன் மனைவி மக்களோடு இதைச் சாப்பிடு" என்று ஏப்பமிட்ட கிழவர், ஒரு இலையில் மூன்று ரொட்டிகளை வைத்து பாவாவிடம் கொடுத்தார்.

ரொட்டி தயாரிக்க உதவிய சாமான்களை, உரியவரிடம் சேர்ப்பித்து விட்டு வருவதாகத் தம்பதிகள் புறப்பட்டனர். பாவா பிரமித்திருந்தார். "இது என்ன மாயம்? இருந்த மாவில் மூன்று ரொட்டிகளைத்தான் செய்ய முடியும். இவர்களோ தானும் வயிறார உண்டு எனக்கும் மூன்று கொடுத்து விட்டார்களே! எப்படி?"

நெடு நேரமாயிற்று. போனவர்கள் திரும்பக் காணோம். பாவா பண்டரீபுரம் பூராவும் அலைந்தார். அப்படி ஒருவரைக் கண்டதாகவே எவரும் கூறவில்லை. வந்தவர்கள் பாண்டுரங்கனும், பிராட்டியும் என்பதை உணர்ந்து கொண்ட பாவா மெய் சிலிர்ந்தார். புளகாங்கிதமடைந்தார்.

கண்ணில் நீருடன் "ரங்கா! என்குறை தீர்க்க அதிதியாய் வந்தீரா? தேவி! எனக்கும், என்மனைவி, மகனுக்கென்றும் மூன்று ரொட்டி அளவாகச் சுட்டுத் தந்தீரா? நீங்கள் தந்த பிரசாதத்தைக் குடும்பத்தாரோடு தான் உண்ணுவேன். அப்போதே என் பாரணை முடியும்" என்று தீர்மானித்துக்கொண்டு வழி நடந்தார். பட்டினிக்களைப்பில் மயங்கி வீழ்ந்தார் பாவா. 'சுள்' ளென்று முகத்தில் ஜலம் விழவும் விழித்தார்.

எதிரே முண்டாசுக்கட்டோடு ஒரு விவசாயி. "என்னய்யா இது? இப்படி மயங்கி விழுந்துட்டீங்களே" எனவும், "பிரசாதம்" என்றபடி ரொட்டிப் பொட்டலத்தைத் தொட்டுப் பார்த்து அது பத்திரமாய் இருப்பதைக்கண்டு பெருமூச்சு விட்டார்.

விவசாயி அன்புடன் "அதோ அதுதான் என் குடிசை. அங்கே வந்து சாப்பிட்டு கொஞ்சம் இளைப்பாறிப் போங்கையா" எனவும், தட்டமுடியாமல் அங்கு சென்று அவன் போட்ட சாப்பாட்டைச் சாப்பிட்டு, நிம்மதியாகத் தூங்கினார்.

எழுந்து பார்த்த போது அவர் படுத்திருந்தது ஒரு மரத்தடி. சுற்றிப் பார்த்தார். கண்ணுக்கெட்டிய தூரம் ஒரு குடிசையையும் காணோம். நடந்தது கனவோ என்றால் ஆடையில் சொட்டிய கூட்டுக்கறை அப்படியே இருக்கிறது. மீண்டும் இறைவனின் திருவிளையாடலை எண்ணி ஆனந்த பரவசத்துடன் வீடு திரும்பி, மனைவி, மகனிடம் நடந்ததைக் கூறி பிரசாதத்தைக் கொடுத்தார். மமதாவும் இறைவன் திருவருளை நினைத்து பூரித்தாள்.

அடுத்த வருடம் நாட்டிலே நல்லமழை. விவசாயிகள் உற்சாகத்தோடு உழுது பயிரிட்டனர். பாவாவும் விவசாயம் செய்தார். தானியக்கதிர்கள் முற்றிச் செழித்துத்தலை சாய்ந்திருந்தது. பறவைகள் பாடிக்கொண்டே கூட்டங்கூட்டமாய் வரும். மற்றவர்கள் பரண்கட்டி, காவல் இருந்து, கவண்

வீசும் போது, இவர் மட்டும் அவைகளின் ஒலியில், கண்ணனின் புல்லாங்குழல் கீதத்தைக்கேட்டார். "இப்படி எல்லோரும் விரட்டி அடித்தால் உங்கள் பசி எப்படித் தீரும்? எல்லோருக்கும் உதவ வேண்டும் என்று தானே பரந்த ஆகாயத்தின் கீழ், விரிந்த பூமியில் விளைச்சலை ஏற்படுத்தி இருக்கிறான் பரந்தாமன்" என்றெல்லாம் அவைகளோடு கொஞ்சுவார்.

கிளிகளும், புறாக்களும், மைனாக்களும், குருவிகளும் அவர் வயலையே தேடி வந்தன. விரட்டுவார் இல்லாததால் அவைகளுக்கு ஒரே கொண்டாட்டம்தான்!

பறவைகளைப் பார்க்க வரும் குழந்தைகள் தானியக் கதிர்களை தாமும் ஒடித்துத் தின்றனர். "குழந்தைகள் தெய்வத்துக்கு சமம், போன வருஷம் விளையவே இல்லை. அதற்கென்ன செய்தோம்" என்று சமாதானம் சொல்லிக் கொண்டார்.

இதுதவிர வழிப்போக்கர்கள் பாவா தடுக்காததால், தாமும் பசியாறி, வழிக்கும் ஒடித்துக்கொண்டனர். "விளைச்சலையும் அன்னதானமாகத் தான் கொடுக்கப் போகிறேன். தானே பசியென்று வெயிலில் களைத்து வருபவரை விடுத்து தேடிக்கொண்டு போவானேன்" என்று சும்மா இருந்து விட்டார். கடைசியில் அறுவடையின் போது பார்த்தால் ஒருமாத உணவுக்குக் கூட போதவில்லை.

மறுபடி நிலைத்தை உழுது உரமிட்டு விதைத்தார். ஒருமணி நேரம் சென்றபின் சோதனை போல் ஒரு வயதான அதிதி பசியென்று வந்தார். வீட்டிலே குன்றுமணி தானியமும் இல்லை. மமதா உடனே கூடையையும், மண்வெட்டியையும் எடுத்துத் தந்து விதைகளை அரித்து எடுத்து வரும்படிக்கூற, இவரும் உற்சாகத்துடன் புறப்பட்டார்.

விதைகளை சேற்றோடு அள்ளிக் கொண்டு வந்து தர, அவள் கழுவி, அரித்து, சமைத்து வந்தவரின் பசியாற்றினாள். விருந்தாளி அவர்களை வாழ்த்தி விட்டுச் சென்றார். வெறும் வாழ்த்து வரிகட்ட உதவுமா? பாவா கையைப் பிசைந்தார். கடன் கேட்க ஓடினார். லேவாதேவி செய்து வந்த பாட்டியும் பணம் தர சம்மதித்து உள்ளே எழுந்து சென்றாள்.

அதே சமயம் அவள் உறவினர்கள் வந்தனர். பாவாவையும், அவர் வந்திருக்கும் காரணத்தையும் கேட்டதும், "தனக்குப் போகத் தானம் என்று ஏட்டில் எழுதி வைத்திருக்கிறது. இந்த பாவா வாங்கும் கடனை

எப்படி அடைப்பான் என்று கேட்டாயா? இவன் இந்த ஆண்டு விதை நெல்லையும் விருந்திட்டு விட்டான். அடுத்த ஆண்டு விளைந்தாலும் கூட பண்டரீபுரத்திற்குப் போய் அன்னதானம் செய்து விடுவான். உன் பணத்துக்கு பட்டை நாமம் தான்." எனவும், பாட்டி கடன் தர மறுத்து விட்டாள்.

"ரங்கா, நான் என்ன செய்வேன்?" என்று கதறினார் பாவா. அவர் கேட்காத ஆளில்லை. அனைவரும் கையை விரித்து விட்டனர். தண்டல்காரனும் (நிலவரி வசூலிப்பவன்) வந்து விட்டான். பாவா பயந்து நடுங்கி, பூஜை அறைக்குள் புகுந்து கொண்டார்.

வீட்டிற்குள் நுழைந்தவன்" என்னய்யா செய்கிறீர்? எத்தனை நேரம் குரல் கொடுப்பது? வாசலுக்கு வந்து ரசீதை வாங்க முடியாமல் அப்படியென்ன தியானமோ? உமக்கு பூஜை, பஜனையென்று உட்கார்ந்து விட்டால் நேரம் காலமே தெரியாதே" என்று அலுத்துக்கொண்டபடி இரைந்தான்

"ரசீதா?" ஒன்றும் புரியாமல் விழித்த பாவா, விரைந்து வெளியே வந்தார். "பணம் கட்டியது யார்?"

"அதான், கோயில்லே மாலை தொடுத்து சந்தனம் அரைத்து செய்வாரேய்யா..... பேர் நினைவுக்கு வர மாட்டேங்குதே! அந்த ஆள்தான் நீர் கொடுக்கச் சொன்னதா பணத்தைக் கட்டிட்டுப் போனான். ரசீது கொடுக்கிறதுக்குள்ளே பறக்கறானே!" என்று சொல்லி விட்டுப் போனான் தண்டல்காரன். ஏமாஜியை அழைத்து அவனை அழைத்துவரச் செய்தார் பாவா.

அவன் வந்ததும் அவனது இரு கைகளையும் பிடித்துக்கொண்டு, "சமயமறிந்து உதவி செய்த உனக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன் உன்னிடம் அவ்வளவு பணம் இருக்கும் என்று தெரிந்தி ருந்தால் ஊரெல்லாம் அலைந்திருக்க மாட்டேனே!" என்றார் கண்களில் நீர்மல்க. கைகளை விடுவித்துக் கொண்ட மாலை கட்டி "ஐயா, தாங்கள் பெரியவர். ஏமாஜி எல்லா விபரங்களும் சொன்னான். என்னிடம் ஏது அத்தனை பணம்? ஒரு வாரமாகக் காய்ச்சலில் படுத்திருக்கிறேன். கோயில் வேலைக்கே போகவில்லை. இந்த நிலையில் நான் வரி கட்டினே னாவது!" என்றான்.

பாவா விழித்தார். "உயரமாய், ஒல்லியாய், கறுப்பாய், கன்னத்திலே மரு, தோள்பட்டையில் சுட்டவடு அச்சு அடையாளம் அப்படியே சொன்னாளே!" என திகைத்தார். "அந்தப் பாண்டு ரங்களே உமக்காக என் வடிவில் போய் பணம் கட்டி இருக்கிறார். பூவோடு சேர்ந்த நாரும் மணப்பது போல் நான் செய்யும் சிறு தொண்டுக்காக ஆண்டவன் என் வடிவெடுத்ததே நான் செய்த பெரும் பாக்கியம்" என்றான் மாலைகட்டி.

"பாண்டுரங்கா, பண்டரீ நாதா!, பக்தவத்ஸலா" என்று மெய்யு ருகினார் பாவா. ஆங்காங்கே தெருவில் சென்று கொண்டிருந்தவர்கள், இந்த அதிசயத்தைக் கேட்டு நிற்க, இச்சம்பவம் ஊர் முழுவதும் பரவிவிட்டது. அது முதல் ஊராருக்கு அவர் மேலிருந்த மதிப்பும், மரியாதையும் கூடிற்று.

"போசல பாவாவின் பஜனையை நீ பார்த்ததில்லையே?"

"பஜனையில் கலந்து கொள்ள வேண்டும் என்றுதானே இன்று தங்கி இருக்கிறேன். நான் வந்த காரியம் நேற்றே முடிந்து விட்டதே!"

"சரி, வா, போவோம். சீக்கிரம் போனால் பூஜையை பார்க்கலாம். முன்வரிசையில் இடம் கிடைக்கும். அதிலும் ராஸக் கிரீடை பஜனை பார்க்க வேண்டும். கோகுலத்துக்கே போனமாதிரி இருக்கும்."

தன் வீட்டுக்கு வந்த உறவினரோடு, பஜனைக்குப் புறப்பட்டார் அந்த நண்பர். அதோ பாவாவின் வீடு. "ஜால்ராவும், சிப்ளாக்கட்டையும், தம்பூராவும் கேட்கிறதே! பஜனை ஆரம்பித்துவிட்டதே" என்று நண்பர் அவசர நடை போட்டார்.

"கவலை படாதே! இன்னும் ராஸக்கிரீடை ஆரம்பிக்கவில்லை. இது காளிங்க நர்த்தனம் தான்!" ஆறுதல் சொன்னார் உறவினர். 'ஆ' கத்தியபடி நண்பர் உட்கார, "என்ன, என்ன" உறவினர் பறந்தார்.

"அதோ" அவர் சுட்டிக் காட்டிய இடத்தில் கருநாகம் ஒன்று சரசரவென்று புதரில் சென்று மறைந்தது. நண்பர் வாயில் நுரை தள்ள கண்கள் செருக, மயக்கமாகி இருந்தார். "தன் வீட்டிற்கு வந்த உறவினருக்கு இப்படி ஆகி விட்டதே" என்று நண்பர் துக்கிக்க, தெருவில் சென்று கொண்டிருந்த ஒருவர் ஓடிப்போய் கிராமத்து வைத்தியரை அழைத்து வந்தார்.

வைத்தியர் வருமுன்பே உடம்பெல்லாம் நீலம் பாரிக்க இறந்து விட்டார் உறவினர். சூழ்ந்திருந்தவர்கள் "நீங்கள் பாவாவின் பஜனையில் கலந்து கொள்ளத்தானே புறப்பட்டீர்கள்!

பாவாவுக்காக பகவான் என்னவெல்லாம் செய்திருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியாதா? பாவா வீட்டு நடையிலே கொண்டுப் போட்டுவிட்டு, பாவா காப்பாற்றுவார் என்று நிம்மதியாக இருங்கள்." என்றனர். நண்பரும் ஒத்துக் கொள்ளவே, இறந்தவரை பாவா வீட்டுக் கூடத்தில் ஓரமாய் போட்டு விட்டு பஜனையில் கலந்து கொண்டனர்.

காளிங்க மர்த்தனம் உக்கிரகமாய் நடந்து கொண்டிருந்தது. பஜனையில் கலந்து கொண்ட நண்பர், இறந்த தன் உறவினரை மறந்தே போனார். ராஸக்கீரிடை பஜனை விஸ்தாரமானதாதலால் தீபத்தை நடுக் கூடத்தில் வைத்து அதில் கண்ணனை வரித்து வாத்தியக் கருவிகளுடன் பக்தர்கள் சூழ பஜனையைத் தொடங்கி நடனமாடும் சமயம், இறந்தவன் உடல் பாவாவின் காலில் தட்டியது.

தூங்குகிறான் என்று நினைத்த பாவா "எழுந்திரப்பா, பகவானது ராஸக் கீரிடையில் கலந்து கொள்ள வந்து விட்டு இப்படித் தூங்கலாமா? தூக்கம் போதும், விழித்துக் கொள்" என்றார். என்ன அற்புதம்! தூங்கி விழிப்பவன் போல் அரண்டு எழுந்தான் இறந்தவன். கண்களைத் துடைத்துக்கொண்டு பஜனையில் கலந்து கொள்ள வந்தான்.

மற்றவர்களின் பேச்சிலிருந்தும், பிரமிப்பிலிருந்தும் அவன் விஷம் ஏறி இறந்தவன் என்பதை அறிந்த பாவா, பகவானின் கருணையை எண்ணி, மெய்யுருகி, ஆவேசத்துடன் பஜனை செய்தார். இவர் சித்தர் என்று ஊரார் புகழ்ந்து கொண்டாடினர்.

"ஐயா வணக்கம்".

"வணக்கம், நீ யார்? என்னைத் தேடி வந்த காரணம் என்ன? என் பெயர் ஆசி.

நான் பாண்டுரங்க பக்தை. என்னைக் காப்பாற்றி யவன், வியாபார நோக்கத்தோடு விலை பேசுகிறான். பெரும் பணம் கொடுத்து வாங்க இருப்பவனோ மிகவும் பொல்லாதவன். அதோடு நாஸ்திகன். என் வாழ்க்கை இருண்டு விடாமல் காப்பாற்ற உம்மாலேயே ஆகும்.

இறந்தவரைப் பிழைக்கவைத்த மகானல்லவா தாங்கள்" என்று பாவாவின் பாதங்களில் வீழ்ந்து அழுதாள் அந்தப் பெண்.

"அம்மா! நானும் உன் ரகம் தான்! என்னிடம் இருக்கும் சொத்து பக்திதான்! இரக்கம் மட்டும் விலை போகும் என்றால்தான் உன்னை என்னால் வாங்க முடியும்!" பாவா துக்கப்பட்டார்.

"அட கழுதை, இங்கு ஓடி வந்துவிட்டாயா? நினைத்தேன்" என்றபடி அங்கு வந்த வியாபாரி அந்தப் பெண்ணை இழுத்துக் கொண்டு போனான். பரிதாபமாக பாவாவைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே அவள் சென்றாள்.

"விலை பேசிப் பத்திரமும் எழுதிவிட்டார்கள். பாண்டுரங்கா.... உன் பக்தர் இல்லத்தில் சேவை செய்யலாம்... நீ எப்படியும் காப்பாற்றுவாய் என நம்பி மோசம் போனேன்! இனி எனக்கு மீட்சி ஏது" புலம்பிக் கொண்டிருந்தான் ஆசி.

"இங்கே ஆசி என்கிறது யார்?" கம்பை ஊன்றிக் கொண்டே வந்தார் ஒரு கிழவர். "நான்தான் தாத்தா.... என்ன வேணும்?" ஆசி கண்ணைத் துடைத்துக் கொண்டு எழுந்து வந்தான். "நான் பாவா வீட்டிலிருந்து வருகிறேன். பாவா உன்னை அழைத்துக் கொண்டு வரச்சொன்னார்" என்றார் கிழவர்.

"தாத்தா! தெரியாமல் ஓடிவருவது தப்பல்லவா? அப்படியே இருந்தாலும் பாவா வீட்டில் வந்து அவன் இழுத்து வந்து விடுவானே! முறையிட வந்த போதே அவக் கேடாயிற்று" என்று அழுதாள் ஆசி.

"அதெல்லாம் ஒண்ணும் ஆகாது.... பாவாவுக்கு தெய்வபலம் உண்டு. கண்ணன் துணை இருப்பான்.... மசமசவென்று கேள்வி கேட்டுக் கொண்டிராமல் புறப்படு" என்று கிழவர் அவசரப் படுத்தவே, ஆசி அவருடன் சென்றாள்.

பத்திரம் எழுதி முடித்து, ஆசியை அழைத்துப்போக வந்தவன், ஆசியைக் காணாமல் திகைத்தான். வியாபாரியோ ஆசி பழையபடி பாவா வீட்டிற்குத்தான் போயிருக்க வேண்டும் என்று, வாங்கியவனை அழைத்துக்கொண்டு பாவா வீட்டிற்கு வந்தான்.

அங்கேயும் ஆசியைக் காணோம். பாவா ஆசியை எங்கோ ஒளித்து வைத்திருக்கிறார் என்று அவன் கூச்சலிட்டான். ஊர் கூடியது. வாங்கியவன் ஆசியோ, பணமோ வேண்டுமென்று முறையிட்டான்.

பாவா இறந்தவனைப் பிழைக்க வைத்தது போல் ஆசியையும் மறைத்திருக்க வேண்டும் என்பது ஆசியை வளர்த்தவனின் கூற்று. பாவாவோ தனக்கு எதுவுமே தெரியாது என்று கூறினார்.

அதே சமயம் அவர்கள் இருவருக்கும் காக்காய் வலிப்பு போல், கைகால் களை இழுத்துக் கொண்டு, வாயில் நுரை தள்ளியது.

இருவரும் தங்கள் தவறை உணர்ந்து பாவாவை பழி சொன்ன மைக்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர். விற்றவன் பணத்தைத் திருப்பிக்கொடுத்து ஆசியை இனி அடிமைப்படுத்துவதில்லை என்று வாக்குக் கொடுத்த பின்பே வலிப்பு பூரணமாக நின்றது. வாங்கியவன் செத்தேன், பிழைத்தேன் என்று தன் ஊருக்குப் போய் விட்டான்.

அதற்குப்பின் ஆசியை வாங்க எவர் முன்வருவர்? கையில் சிறு மூட்டையோடு அங்கே வந்த ஆசி பாவாவின் கால்களில் பணிந்தாள்.



தன்னை வளர்த்தவனைக்கண்டு பயந்தாள். பாவா அவளைத்தேற்றி 'எங்கு போயிருந்தாள்" என்று வினவ, ஆசி, "நீங்கள் பண்டரீபுரத்தில் இருப்பதாக அந்தத் தாத்தா சொன்னார். பண்டரீபுரத்தில் கோவிலில் தரிசனம் செய்தோம். தேடிப் பார்த்தோம். உங்களைக் காணோம். நீங்கள் ஊருக்குத் திருப்பி இருப்பீர்கள் என்று சொல்லி இங்கே அழைத்து வந்தார். 'ஆகாரம் பண்ண வாதா இலை ஒடித்து வருகிறேன். நீ போ" என்றார். அதான்...." என்று ஆசி தயங்கினாள்.

வெகு நேரமாகியும் கிழவர் வரவில்லை. வந்தவர் இறைவனே என்று அனைவரும் புரிந்து கொண்டனர். பாவா ஆசியிடம் "நீ மிகவும் புண்ணியசாலி. பகவத் தரிசனம் பெற்றவள். பகவானோடு வழி நடந்தவள்" என்று போற்றி நடந்தவைகளைக் கூறினார்.

அதற்குப்பின் ஆசி அவர் இல்லத்திலேயே தங்கி பாவாவின் பூஜைக்கு ஒத்தாசை செய்தாள். பஜனைகளில் கலந்து கொண்டு இறைப் பணியிலேயே நிம்மதியாய் காலம் கழித்தாள். பாவாவின் வாழ்க்கையில் பகவான் இரண்டற இணைந்திருந்தார். பாவாவும், அவரது குடும்பத் தினரும், ஆசியும் பகவானை பஜனை செய்தபடியே இறைவனடி சேர்ந்தனர்.

67. கருமாபாய்

ஜகந்நாதத்திலே பிறந்து வளர்ந்தவள் கருமாபாய். கருமாபாயின் கணவன் இறக்கும்போது அவள் நிறை கர்ப்பிணி. வயிற்றிலிருக்கும் குழந்தையை எண்ணி துக்கத்தை அடக்கிக் கொண்டாள். உரிய காலத்தில் அவளுக்கொரு ஆண் குழந்தை பிறந்தது. அதை அன்புடன் பேணி வளர்த்தாள். அவனைப் படிக்க வைத்து பூணூல் போட்டு, நல்ல குலப் பெண்ணாகப் பார்த்து திருமணமும் செய்வித்தாள். அவனுக்கும் உரிய காலத்தில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. கருமாபாயின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. கண்ணன் என்று பெயரிட்டு அக் குழந்தையைக் கண்ணும் கருத்துமாய் வளர்த்தாள். இந்நிலையில் கருமாபாயின் மகன்

நோய்கண்டு மடிந்தான். மகன் இறந்த சோகத்தைப் பேரனின் முகத்தைப் பார்த்துத் தேற்றிக்கொண்டாள்.

கருமாபாய் பக்தி நிறைந்த குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவள். மூதாதையர் வழியில் அவளும் பஜனைகளில் கலந்து கொள்வாள். பூஜை செய்யாமல் சாப்பிடமாட்டாள். ரொம்பவும் ஆசாரமாக இருப்பாள். விரதங்களைத் தவற விடுவதில்லை. அடியார்களை ஆதரிப்பதில் முன்னணியில் இருந்தாள்.

பாட்டி பூஜை செய்யும் போது பேரன் தன் பிஞ்சுக் கரங்களால் மணி அடிப்பான். பஜனை செய்கையில் ஜால்ரா கொட்டுவான். பாட்டி ஆனந்தத்தில் மெய் மறந்து போவாள். விதி கருமாவை விட்டபாடில்லை சோதனை போல் பேரக்குழந்தை வியாதியாய்ப் படுத்தது. இரக்கமில்லாத காலன் குழந்தையின் உயிரையும் கவர்ந்து கொண்டான்.

சோக சாகரத்தில மூழ்கிப் போனாள் கருமா. உணவில்லை. உறக்கமில்லை. மருமகளை அவள் பெற்றோர் அழைத்துச்சென்று விட்டனர். வீடு தூசி அடைத்து ஒட்டடையாய் தொங்கியது. அடுப்பிலே புழுதி படிந்திருந்தது. அந்த சமயம் ஒரு பாகவத கோஷ்டி அவ்வூருக்கு வந்தனர். முன்பொருமுறை வந்தபோது கருமாவின் வீட்டில் தங்கி, அவள் உபசரணையால் பூரித்துப் போன கோஷ்டி அது. அந்த ஞாபகத்துடனேயே அவர்கள் கருமாபாயின் விட்டை அடைந்தனர்.

கருமாபாயைக் கண்டதும் திடுக்கிட்டனர். "தாயே! இதென்ன கோலம்? தங்கள் புதல்வன் தங்களைக் கைவிட்டு விட்டாரா? குளித்து, திருநீறணிந்து, தெய்வீகத்தோற்றத்துடன் காட்சி அளிக்கும் தாங்களா இப்படி அழுக்காடையுடன், எலும்பும், தோலுமாகக் காட்சி அளிக்கிறீர்கள்! என்ன நடந்தது? ஏன் இப்படி" என்று வினவினர்.

அவர்களை உபசரித்து உள்ளே அழைத்துத் தூசி தட்டி உட்கார வைத்த கருமா விம்மியபடியே "ஐயா, ஒரே மகனுக்குத் திருமணம் செய்வித்தேன். குலவிளக்காய் ஒரு குழந்தையும் பிறந்தது. மகனும் போய், அந்தக் குழந்தையும் இறந்து, மருமகளும் பிறந்த வீடு சென்றுவிட்டாள். எனக்கென்று யார் இருக்கிறார்கள்? நான் எதற்காக வாழவேண்டும்? உண்டு, உடுத்தி உடலைப் பேண வேண்டிய அவசியம் என்ன?" என்று விரக்தியோடு கேட்டாள்.

கோஷ்டியின் தலைவர் அன்புடன் "தாயே! நாம் முற்பிறவியில் செய்த பாப புண்ணியங்களுக்குத் தக்கபடியே வாழ்க்கை அமைகிறது. பிறக்கும்போதே இறப்பு நிர்ணயிகக்ப்படுகிறது. அது எந்த வயதில் வந்தால் என்ன? உங்களுக்கு இந்தப் பிறவியில் இறையுணர்வை, பாகவத சேவைசெய்ய வேண்டும் என்ற ஆர்வத்தை பகவான் அருட்பிரசாதமாகத் தந்திருக்கிறான். அதை பயன்படுத்திக் கொள்ளாமல் வீணே காலம் கழிக்கலாமா? அடுத்த பிறவி எப்படி இருக்குமோ? இப்பிறவியிலாவது புண்ணியத்தை சேமிக்கலாமே!

இதே பிள்ளை உங்களை வெறுத்து விரட்டி விட்டிருந்தால் என்ன செய்திருப்பீர்கள்? அதனால் சோதனைகளைக் கண்டு சோர்வடையக் கூடாது. இந்தாருங்கள். இந்தக் கிருஷ்ண விக்கிரகத்தை உங்கள் பேரன் கண்ணனாகவே நினையுங்கள். இவனுக்காக வாழுங்கள்" என்று கூறி, அழகிய கிருஷ்ண விக்ரகமொன்றைக் கொடுத்தார்.

பணிவுடன் அதைப் பெற்றுக் கொண்ட கருமா, பேரன் படுத்திருந்த தொட்டிலில் கொண்டு படுக்க வைத்தாள். பிறகு நொடியில் வீடு, அடுப்பு எல்லாம் சுத்தம் செய்து, தயிர் சாதம் கிளறி, அவர்களுக்கு போட்டு

அனுப்பி வைத்தாள். மறுநாள் காலையில் எழுந்து தொட்டிலைப் பார்த்தவள் திடுக்கிட்டாள்.

'அடடா! எத்தனை புழுதி... குழந்தையை அப்படியே போட்டேனே' என்று தன்னை நொந்து கொண்டு, தொட்டிலைத் துடைத்து, மெத்தையைத்தட்டி, சுத்தம் செய்தபின் விக்ரகத்தைப் படுக்க வைத்தாள். கிரீச்சிடும் தொட்டில் கம்பிகளுக்கு எண்ணையிட்டாள். "அடடா, குழந்தையின் உடம்பிலும் தானே தூசியாயிருக்கும்!" என்று வருந்தி இளம் பதமாக வென்னீர் வைத்துக் குளிப்பாட்டினாள். கருமாபாயின் பக்திக்குக் கட்டுப்பட்ட பரமாத்மா, அவள் பேரன் கண்ணனாகவே காட்சி தந்தான்.

குழந்தைக்குச் சட்டை போட்டு, மையிட்டுப் பொட்டிட்டு, சுடச்சுடச் சமைத்து, அன்னமூட்டி தாலாட்டுப் பாடி குழந்தை தூங்கிய பிறகே, வீடு மெழுகி குளிக்கப் போவாள். இப்படியே நெடுநாட்கள் நடந்தது. ஒருநாள் வேறொரு பஜனை கோஷ்டியினர் அவ்வூருக்கு வந்தனர். கருமாபாய் அவர்களை வரவேற்று உபசரித்தாள்.

சாப்பாடு போடும் போது அவர்கள் "அம்மணி! தாங்களோ வயது முதிர்ந்தவர். வயதுக்குத் தக்கபடி குளிக்காமல், சமைத்திருக்கிறீர்களே! ஏன்?" என்று கேட்க, கருமாபாய், "என் பேரன் பசி தாங்கமாட்டான். குளிப்பாட்டாமல் சாப்பாடு போட எனக்குப் பிடிக்காது. அவனுக்கு வென்னீர் வைத்து குளிப்பாட்டி, சமைத்து சாதம் ஊட்டி, தூங்க வைக்கும் போது நேரமாகி விடுகிறது! என்ன செய்வது?" என்றாள்.

"குழந்தையா? எங்கிருக்கிறது? இத்தனை நேரமாய் அழுகுரலையே காணோம்?" என்று ஆச்சரியப்படவும், கருமாபாய் "அவனை நான் அழவே விடுவதில்லை. இருங்கள். காண்பிக்கிறேன்" என்று கிருஷ்ண விக்ரகத்தை எடுத்து வந்தாள்.

அவர்கள் கண்களுக்கு அது விக்ரகம்தான்! கருமாபாய்க்கு மட்டுமே அது குழந்தை! அவர்கள் விக்ரகத்தைப் பார்த்ததும் கேலியாகச் சிரித்தார்கள்! "இதற்கா பசி! இதுவா சாப்பிடும்?" என்று கேட்க, கருமா ரோஷத்துடன், "கண்ணா, இந்தப் பொங்கலைச் சாப்பிடுடா" என்று வெண்பொங்கலை நீட்ட, விக்ரகத்தின் கை நீண்டு அதை எடுத்து உண்டது.

பக்தர்கள் பிரமித்தனர். பயபக்தியுடன் கருமாபாயின் காலில் விழுந்து வணங்கினர். புறப்பட்டுச் செல்லும் போது அவளிடம் "தாயே! பகவான் பக்திக்குக் கட்டுப்பட்டவர் என்று படித்திருக்கிறோம். இன்று நேரிலும் கண்டோம். ஆயினும் ஒன்று. தாங்கள் இதைக் குளித்து முடித்தபின் செய்தால் இன்னும் விசேஷமல்லவா?" என, கருமாபாய் யோசித்தாள்.

"என் பேரன் இறந்து விட்டான். ஸ்ரீ கிருஷ்ணன் நான் பக்குவம் பெற கண்ணனாக என் மடியில் தவழ்ந்து, என் உபசரணைகளை ஏற்கிறார். அப்படியானால் அவர் சாப்பிடும் உணவு நிவேதனம். பாகவதர்கள் சொன்னபடி அதை சுத்தமாகத்தான் படைக்க வேண்டும்" என்று தீர்மானித்தாள்.

மறுநாள் அதிகாலை எழுந்தவள் வீடுமெழுகி சுத்தம் செய்து, பின் நீராடி சமையல் செய்தாள். ஜகந்நாதர் கோயில் அர்ச்சகர் கனவில் கிருஷ்ணன் தோன்றி "கருமாபாய் தினமும் விடியற் காலையிலேயே எனக்குப் பல் தேய்த்து, குளிப்பாட்டி சாப்பாடு போடுவாள். நேற்று பசியால் துடித்துப் போனேன் ஆசாரத்தை விட என் பசி பெரிதென்று அவளிடம் சொல்" என்றார்.

அர்ச்சகர் திடுக்கிட்டு எழுந்தார். கருமாபாயிடம் ஓடிப்போய் தான் கண்ட கனவைத் தெரிவித்தார். கருமாபாயும் இதைக் கேட்டுப் பதறினாள்.

"ஐயோ! கேட்பார் பேச்சைக் கேட்டு என் குழந்தையைப் பட்டினி போட்டேனே!" என்று துடித்தாள்.

வழக்கப்படி குளிக்காமல் சமையல் செய்து கொண்டே குழந்தை வேலைகளைக் கவனித்து, சுடச்சுடச் சாதம் ஊட்டி, தூங்கப்பண்ணிய பிறகே வீட்டு வேலைகளை கவனித்தாள். குளித்தாள்.

கண்ணன் அவளின் இறுதிக்காலம் வரை இரண்டு வயதுக் குழந்தையாகவே அவளோடு இருந்தார். அவளும் குழந்தை வளர வில்லையே என்று கவலைப்படாமல், சலிக்காமல் அவருக்குத் தொண்டு செய்தாள். ஊரார் அவள் பக்தியைக் கண்டு வியந்தனர்.

ஜகந்நாதத்தில் ஆசாரம் குறைச்சல்தான். அங்கே பகவான் பக்தியையே பிரதானமாகக் கொண்டவர். அதனால்தான் 'சர்வம் ஜகந்நாதம்' என்ற பழமொழி ஆசாரக் குறைவான இடங்களில் சொல்லப்படுகிறது. இப்படியே பூஜை செய்து கருமாபாய் இறைவனடி சேர்ந்தாள்.

68. பிம்பாஜி பக்தர்

மங்கள கட்டின் அரசன் பிம்பாஜி. அஞ்சா நெஞ்சன். தருமசீலன். நீதி நெறி தவறாமல் அரசாண்டான். நியாயமான வரி விதித்தான். நாட்டில் கள்ளர் பயமில்லை. வறுமையில்லை. மாதம் மும்மாரி பெய்து செழிப்பா யிருந்தது. யாக யக்ஞங்களைத் தவறாமல் செய்து வந்தான். சுருங்கக் கூறினால் பதினாறு பேறுகளையும் பெற்றவன்.

அவனது குல தெய்வம் பவானி. தினமும் பவானியை தரிசிக்காமல் உணவருந்த மாட்டான். ஒருநாள் மங்கள கட்டுக்கு பெரிய பாகவத கோஷ்டியொன்று வந்தது. அவர்களை வரவேற்று தங்கவும், உணவருந்தவும் ஏற்பாடு செய்துவிட்டு ஆலயம் சென்றான் மன்னன்.

சன்னதியிலிருந்து "மன்னா, நீ பூர்வ ஜென்மத்தில் பெரும் புண்ணியம் செய்தவன். அதனாலேயே வாழ்வில் எந்தக் குறையுமில்லை. புண்ணிய காரியங்களில் முழு மனதுடன் ஈடுபடுகிறாய். நீ செய்துவந்த செயல் எனக்குப் பூரண திருப்தி அளிக்கின்றது. அடுத்தடுத்த பிறவிகளிலும் நல்ல குலத்தில் பிறந்து குறைவற்ற வாழ்க்கை வாழ நினைத்தால் தாரக நாம உபதேசம் பெறவேண்டும். இப்போது வந்திருக்கும் பக்தர் கூட்டத்தை அணுகி, உபதேசம் பெறுவாயாக" என்று அசரீரி ஒலித்தது.

மன்னன் பிரமிப்புடன் "தாயே! தாங்களே என் இஷ்ட தெய்வம்! தங்களை வணங்கினால் போகாதா?" என்று தழுதழுத்த குரலில் கேட்டான். கருவறையிலிருந்து "காக்கும் கடவுள் திருமால். அலைகடல் மேல் துயில்பவன். சம்சாரமென்ற கடலில் துன்ப அலைகளில் சிக்கிச் சீரழியாமல் காக்கும் வல்லமை பெற்றது தாரக நாமம். உடலிலே கை, கால், கண், வாய் என்று பல அவயவங்கள் உள்ளன. ஒன்றே ஒன்று போதும் என்று திருப்தி அடைவாயா? எனக்கு மூத்தவன் அவனே. நாராயணனை வணங்குவதால் நான் உன்னிடம் காட்டும் கருணை வற்றி விடாது" என்றொலிக்கவும் பிம்பாஜி நெடுஞ்சாண் கிடையாக விழுந்து நமஸ் கரித்து, "தேவி! உன் ஆக்ஜைப் படியே நடந்து கொள்கிறேன். என்னை வழி நடத்திச் செல்பவளே நீதான்" எனப் பலவாறு போற்றினார்.

ஆலயத்திலிருந்து திரும்பியதும் பாகவத கோஷ்டியிடம் சென்று, அசரீரி வாக்கைக் கூறி தனக்கு உபதேசம் செய்யும்படி வேண்டினார். அவர்கள் "அரசே! ஆதிபராசக்தியின் அருள் பெற்றவர் தாங்கள்! உங்களுக்கு உபதேசம் செய்யும் தகுதி எங்களில் ஒருவருக்கும் கிடையாது. காசியில் இருக்கும் இராமானந்த ஸ்வாமிகளிடம் சென்று உபதேசம் பெறுங்கள்" என்று கூறி விடை பெற்றனர்.

பிம்பாஜி உடனே பயணத்துக்குச் சித்தமானார். ராஜ காரியங்களை மந்திரிகளிடம் ஒப்புவித்துவிட்டு, மனைவி மக்களுடன் காசியை அடைந்து, இராமானந்தரை தரிசித்து அன்னை பவானியின் அருள்வாக்கைக் கூறினார். இராமானந்தரும் மகிழ்ச்சியுடன் அரசனுக்கும், அவனைச் சேர்ந்தோருக்கும் உபதேசம் செய்தார்.

சிலநாட்கள் காசியில் தங்கி குருவுக்குப் பணிவிடை செய்த பிம்பாஜி ஒருநாள் குருவிடம் "குருதேவா! அவதாரங்களில் மேன்மையாகச் சொல்லப்படுவது இராமாவதாரமும், கிருஷ்ணாவதாரமும். அதிலும் கண்ணன் மக்களோடு இரண்டறக் கலந்து வாழ்ந்தவன். அவன்

அரசாண்ட, உலாவிய துவாரகையை தரிசிக்க ஆவலாயிருக்கிறேன். அனுமதி தர வேண்டும்" என்று பணிவுடன் வேண்டினார். இராமானந்தர் "மனிதப்பிறவி எடுத்த ஒவ்வொருவரும் காண வேண்டிய க்ஷேத்திரம் துவாரகை. ஸ்ரீகிருஷ்ணனைத் தரிசித்த பின், மங்கள்கட் சென்று, அரசனுக்குரிய கடமைகளை வழுவாமல் நடத்தி, பக்தியையும் பரப்பு" என்று அன்புடன் ஆசீர்வாதம் செய்தார்.

துவாரகை சென்றான் மன்னன். நான்கு மாதங்கள் அங்கே தங்கி வேளை தவறாமல் எல்லா பூஜைகளிலும், பஜனைகளிலும், திருவிழாவிலும் பங்கெடுத்துக் கொண்டான். மனம் ஓரளவு திருப்தியடைந்ததும் நாடு திரும்பினான். வழியில் அடர்ந்தகாடு. அருகிலிருந்த ஊரை எட்டி விடலாம் என்று துணிந்து புறப்பட்ட வேந்தனை, மழை இருள் சூழ்ந்து கொண்டது. சூரியன் மேகத்தில் ஒளிந்து கொண்டான்.

திடீரென்று சீறும் புலியின் குரல். அருகிலிருந்த புதரிலிருந்து முரட்டுப்புலி ஒன்று கண்களில் பசியுடன் பாய்ந்து வந்தது. குழந்தைகள் பயத்தில் நடுநடுங்கினர். கால்கள் கட்டிப் போட்டாற் போல் அசையவும் மறுத்தன. அரசி கணவரிடம் "ஐயோ நம் அனைவரையும் தின்று தீர்த்து விடும் போலிருக்கிறதே" என்று குழறினாள்.

அரசன் உடனே "பயப்படாதே! சம்சார பயத்தையே தாரக நாமம் போக்கும் என்று அருளிச் செய்த அன்னையின் வாக்கு பொய்க்குமா? இது அவள் வாகனமாயிற்றே! உபதேசம் பெற்று வரும் என்னை எதிர் கொண்டழைக்க அனுப்பி இருக்கும் தூதாயிருக்கும்" என்றவர், 'ராம், ராம்' என்று உரக்க உச்சரித்தபடி கழுத்திலிருந்த துளசி மாலையை புலியை நோக்கி வீசினார். அது சரியாகப் புலியின் கழுத்தில் விழுந்தது. என்ன ஆச்சரியம்! புலி கண்களில் சாந்தத்துடன் பிம்பாஜியின் அருகில் வந்து அவர் முகத்தை ஆவலோடு நோக்கியது.

அவர் அன்புடன் "உபதேசம் பெற வந்தாயோ!" என்றபடி அதன் தலையில் கை வைத்து, காதில் தாரக மந்திரத்தை உபதேசித்து, "இன்று முதல் உயிர் வதை செய்யாதே" என்றார். புலி அவர் காலடியில் பணிந்தது. நாய்க் குட்டியைப் போல் அவர் பின்னோடு வழி நடந்தது. பிம்பாஜியின் மனைவி மக்களும், வழிப் போக்கர்களும் இதைக்கண்டு பிரமித்தனர்.

புலி தன்குரலைக் காட்டவேயில்லை. இரண்டு நாட்கள் சென்றன. கொல்லா விரதம் மேற்கொண்ட புலி, நடைதளர்ந்து இளைத்து, சோர்ந்து வீழ்ந்தது. உடனே அதன் உடலிலிருந்து ஒரு ஜோதி கிளம்பி வானில் மறைந்தது. அரசன் புலியின் உடலை, நல்லமுறையில் அடக்கம் செய்தபின் நாட்டை அடைந்தான். நீதி நெறி தவறாமல் அரசாண்டான். அடியார்களை ஆதரித்தான். தருமகாரியங்களை செவ்வனே முடித்தான். பக்தியைப் பரப்பினான்.

69. திரிபுர தாசர்

மதுரா நகரத்து அரசரிடம் அமைச்சராக இருந்த திரிபுரர் சிறந்த விஷ்ணு பக்தர். அரசனுக்கு வலது கையாக விளங்கிய அவருக்கு நாளுக்கு நாள் செல்வத்தில் பற்றற்று உலக வாழ்க்கையில் வெறுப்பு வந்துவிட்டது. அரசரிடம் சென்று தன் எண்ணத்தைக் கூறி விடுதலை வேண்டினார். பிருந்தாவனம் சென்று ஜகன்மோகன வேணு கோபாலனுக்கு சேவை செய்வதே தன் வாழ்வின் குறிகோள் என்று தெரிவித்தார்.

மன்னருக்கு, அமைச்சர் பதவியிலிருந்து விலகுவது, வருத்தத்தை அளித்தாலும், வேறு வழியின்றி, வேதனையோடு விடை அளித்தார்.

திரிபுரர் மகிழ்ச்சியுடன் வீட்டிற்குச் சென்று மனைவியிடம் "நமக்கோ குழந்தைகளில்லை. யாருக்கென்று சேர்ந்து வைக்கவேண்டும்? உடலே ஒரு தளை. பிருந்தாவனத்திலேயே காலத்தைக் கழித்து விடுவோம். உஞ்ச விருத்தி எடுத்து பிழைத்துக் கொள்ளலாம்" என்றவர், தன் சொத்துக் களையெல்லாம் விற்று, அன்னதானம் செய்தார்.

ஆலயத்திருப்பணிகள், ஏழைப் பெண்களுக்குத் திருமணம் செய் வித்தல் போன்ற பலதரும காரியங்களிலும் செல்வம் கரைந்து போகவே இருவரும் உஞ்சவிருத்தி எடுக்க ஒரு பித்தளைச் செம்புடன் பிருந்தா வனத்திற்குப் புறப்பட்டனர்.

தினமும் பஜனை, ஸ்வாமி தரிசனம், பகவத் பாராயணம் இப்படியே அவர் காலம் கழிந்தது. கோகுலாஷ்டமி உற்சவம்; விதவிதமான வண்ணப் பீதாம்பரங்களால் கண்ணனை அலங்கரித்தனர்.

திரிபுரருக்கு தானும் ஒரு வஸ்திரம் சாத்த வேண்டும் என்று தணியாத ஆசை. மனைவியிடம் தன் விருப்பத்தைக் கூறினார். அவள் "ஆசை சரியானது தான்! ஆனால் வழி இல்லையே. நாமே மாற்று ஆடை சரியில்லாமல் இருக்கும் நிலையில் இறைவனுக்கு ஆடை சாற்று வதாவது! செல்வந்தராய் இருந்தபோது தங்களுக்கு இந்த அவா வந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும்! அவன் நித்ய அலங்கார ரூபன். அவனுக்கென்ன குறை? நாம் தந்தா நிறையப் போகிறது! அவனுக்குக் கோடிக்கணக்கான பக்தர்கள்! கொண்டு வந்து குவிக்கிறார்கள்! வேண்டாத கவலையை விடுங்கள்" என்றான்.

திரிபுரரோ சமாதானமடையவில்லை. "உடலிலே கண், மூக்கு போன்ற அவயவங்கள் பிரதானமாக இருந்தாலும், கால் சுண்டு விரல் நகமும் அத்தியாவசியமானது தானே! மா, பலா, கொய்யா, மாதுளை என்று



ருசியான பழங்கள் இருப்பினும் எளிய நாவல் பழத்தை ஏற்றுக் கொண்டவன் என் கோபாலன். எத்தனை பீதாம்பரம் இருப்பினும், நான் தருவது கந்தலே ஆனாலும், என் கண்ணன் மகிழ்ச்சியுடன் ஏற்பான்" என்றவர், கடை வீதிக்குச் சென்று உஞ்ச விருத்திப் பாத்திரத்தை விற்று அதில் ஒரு நூல் வேஷ்டி வாங்கிக் கொண்டு வந்தார்.

சன்னதியிலிருந்த அர்ச்சகரிடம் அதைக் கொடுத்து பகவானுக்குச் சாற்றும்படி வேண்டினார். அந்த அர்ச்சகர் அகம்பாவி. பரிவட்டத்தை வாங்கிப் பிரித்துப் பார்த்தவர் ஏளனமாகச் சிரித்தார்.

"பணக்காரர்கள் வாங்கிக் குவித்திருக்கும் பட்டாடைகளையே சாற்ற நேரமில்லை. உமது பீத்தல் துண்டுக்கு என்ன அவசரம்? ஓய் உஞ்சவிருத்தி? இதைக் குப்பைத் தொட்டியிலிருந்து பொறுக்கி வந்தீரோ?" என்று கெக்கலி கொட்டி சிரித்தார்.

திரிபுரர் கண்ணில் நிர்மல்க "ஆடையின் தரத்தைப் பார்க்காமல் என் ஆசையின் தரத்தைப் பாருங்கள். அலட்சியப் படுத்தாமல் ஒரு தடவை சாற்றக் கூடாதா?" என்று கெஞ்சினார்.

அர்ச்சகர் திமிருடன் "நீர் இவ்வளவு தூரம் கெஞ்சுவதால் ஒன்று செய்யலாம். நான் பகவானைத் தொட்டு அலங்கரிக்கும் பாக்கியம் பெற்றவன். அதனால் நான் வேஷ்டி அழுக்காகாமல் உட்கார விரித்துக் கொள்கிறேன்" என்று கீழே விரித்து உட்கார்ந்து விட்டார்.

வேதனையோடு திரிபுரர் அவ்விடத்தை விட்டு அகன்றார். திருமஞ்சன நேரம் வந்தது. திருமஞ்சனம் செய்ய வந்த அர்ச்சகர்கள் திடுக்கிட்டனர். விக்கிரகம் நடுங்கிக் கொண்டிருந்தது.

"இதென்ன உற்பாதமோ" என்று பயந்து பரிவட்டத்தால் விக்கிரகத்தை ஒற்றினர். பின்னும் வேகமாக விக்கிரகம் ஆடவும் மனதில் கலக்கத்துடன் மளமளவென்று துணியைச்சுற்றினர். தடதடவென்ற சப்தம். பட்டுப் பீதாம்பரங்களால் போர்த்தினர். தோன்றினபடியெல்லாம் பிரார்த்தனை செய்தனர்.

தூபம், தீபம், அகில், குங்குமப்பூ, கற்பூரம் என்று சூடேற்றிப் பார்த்தனர். என்ன செய்தும் நடுக்கம் நிற்கவில்லை. செய்தி அறிந்து மக்கள் இந்த அதிசயத்தைக் கூட்டம் கூட்டமாக வந்து பார்த்தனர்.

நள்ளிரவு; தலைமை அர்ச்சகர் களைத்து, கோவிலில் ஒரு இருட்டு மூலையில் முடங்கிக் கிடந்தார். அவர் கனவில் வேணுகோபாலன் தோன்றி, "திரிபுரன் தந்த பரிவட்டத்தை எனக்குச் சாற்றினால் நடுக்கம் நிற்கும்" என்றார்.

அர்ச்சகர் திடுக்கிட்டெழுந்தார். தனது கனவை அனைவரிடமும் தெரிவித்து "திரிபுரர் தந்த பரிவட்டம் எங்கே" என்று கேட்டபோது கர்வம் கொண்ட அர்ச்சகர், நடுநடுங்கியபடி பரிவட்டத்தைக் கொண்டுவந்து கொடுத்தார்.

உடனே அதைத் துவைத்து, காயவைத்து சாம்பிராணி தூபத்தில் காட்டி, புனிதப்படுத்தி, இறைவனுக்கு பயபக்தியுடன் சாத்தினார்.

என்ன அற்புதம்! சிலையின் நடுக்கம் நின்றது. இதற்குள் திரிபுரரிடம் அன்பு கொண்ட ஒருவர், அர்ச்சகரின் கனவை ஓடிச் சென்று கூற, திரிபுரரும், அவர் மனைவியும் ஆனந்த பரவசத்துடன் ஆலயத்திற்கு விரைந்து வந்தனர்.

திரிபுரரின் மனைவி "நான் சொன்னது எத்தனை தவறாகி விட்டது. பகட்டை விட பக்தியே முக்கியம். பணக்காரர்கள் தந்த பட்டாடைகளை விட, நூலாடையே வேண்டும் என்று பரந்தாமன் உணர்த்தி விட்டார். என்னை மன்னித்து விடுங்கள்" என்றாள்.

அங்கே ஒரே ஆகாகாரம்! தாசரின் கால்களில் அனைவரும் விழுந்து வணங்கினர். அர்ச்சகரின் மமதையை அனைவரும் நிந்தித்தனர்.

கர்வ பங்கமடைந்த அர்ச்சகர் தாஸரின் கால்களில் விழ்ந்து மன்னிக்கும்படி வேண்டினார்.

திரிபுரதாசரின் பெருமையை உலகுக்கு உணர்த்த இறைவன் நடத்திய லீலையை கண்டு கூடியிருந்தோர் பிரமித்தனர். தாசர் மெய்மறந்தார்.

முன்னிலும் அதி தீவிரமாக கண்ணன் மேல் பக்தி கொண்ட திரிபுரரும், அவர் துணைவியும் தங்களது இறுதிக்காலம் வரை கண்ணனுக்கே சேவை செய்து இறைவனடி சேர்ந்தனர்.

70. நானக் தாசர்

பஞ்சாபில் லாகூர் ஜில்லாவில் டால்வண்டி என்ற சிற்றூரில் பிறந்தவர் நானக். இவரின் தந்தையின் பெயர் காலு. தாயின் பெயர் த்ரிபதா. இவருடைய ஒரே சகோதரியின் பெயர் நானகி. சீக்கிய மதத்தை ஸ்தாபித்த குரு நானக் இவரே. க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்த இவரின் தந்தை ஒரு முஸ்லீம் பணக்காரரிடம், காரியஸ்தராக வேலை பார்த்தார்.

நானக் இளமையிலேயே கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். இவரது மனைவியின் பெயர் சுலகாணி. அது பாபர் அரசாண்ட காலம். நானக் ஒரு அந்தணரிடம் கல்வி பயின்றவர். அதனால் பெருமாள் மீது அபார பக்தி கொண்டு ஒரு அழகிய பெருமாள் கோயில் கட்டினார்.

முஸ்லீம்கள் இவரைத் தூற்றினர். கோயிலை இடிப்போம் என்று பயமுறுத்தினர். உடனே நானக் "உங்களுக்கேன் பொல்லாப்பு? மனிதப் பிறவி எடுத்தால் எவர் மனமும் புண்படாமல் வாழவேண்டும்" என்று சொல்லி பெருமாள் கோயிலைத் தானே தரை மட்டமாக இடித்து விட்டு, அதே இடத்தில் ஒரு மசூதியைக் கட்டினார். இந்துக்கள் சும்மா இருப்பார்களா? "பெருமாள் கோயிலை இடித்த பாவி! முஸ்லீமாகி விட்டான்" என்று பழித்துப் பேசினர்.

உடனே மசூதியையும் தகர்த்தெறிந்துவிட்டு அந்த இடத்தை செம்மைப்படுத்தி உழுது பயிரிட்டு ஏழைகளுக்குத் தானம் செய்து விட்டார். "பைத்தியமோ! மூதாதையர் சேர்த்து வைத்த பொருளை இப்படி நாசமாக்குகிறாரே!" என்று ஊரார் கேலி செய்தனர்.

சிலர் பாபரிடம் சென்று மசூதியை இடித்ததைப் பற்றித் திரித்துக் கூறினர். "குல தர்மத்துக்கு மாறாக நடந்தால் தண்டனைக்குள்ளா வீர்கள்" என்று பாபர் சினந்து ஓலை அனுப்ப, நானக்,

"பலகலன் ஆகுவ மண்ணால் பன்னும்
பலகலன் ஆகுவ பொன்னால் –பலஞ்சேர்
மல நீக்கும் மாலொருவனேனும் வழங்கும்
பலசமயந் தாள் சேர்ந்தேன் பார்த்து."

என்று பதில் ஓலை அனுப்பினார். இதைப்படித்த பாபர் மகிழ்ந்தார்.

நண்பர் ஒருவர், சக்கரவர்த்தியிடம் விளக்கம் கேட்க சக்கரவர்த்தி, "குயவன் பானை, குடம், அகல், பொம்மை என்று பல பாண்டங்கள் செய்தாலும் எல்லாவற்றிற்கும் மூலப்பொருள் மண்தான். தட்டான் பதக்கம், வளையல், சங்கிலி என்று பல நகைகள் செய்தாலும் மூலமானது பொன்னே! உருவங்கள் பலவானாலும் தெய்வம் ஒன்றே! அந்த தெய்வத்தின் தாள் பணிந்தவன் நான்" என்று என்ன அழகாக எழுதி இருக்கிறார்!" என்றார்.

ஆனாலும் கோள் சொன்னவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக, நானக்கை கைது செய்து வரும்படி, ஒரு படையை அனுப்பினார். படை நானக்கின் வீட்டை முற்றுகையிட்டது. அப்போது நானக் தியானத்தில் இருந்தார். அவர் இல்லத்துக்குள்ளிருந்து ஆயுத பாணிகளாகப் பல வீரர்கள் தோன்றி பாபரின் படையை துவம்சம் செய்தனர்.

பாபர் இவரின் மகிமையை கோள் மூட்டிகளுக்குச் சுட்டிக் காட்டி, தானும் மன்னனது தர்ம சங்கடங்களை நானக்கிடம் விளக்கி, மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

அதுமுதல் இவருடைய புகழ் நாடெங்கும் பரவியது. ஏராளமானவர்கள் இவரது சீடர்களானார்கள். காணிக்கையாக வரும் பொருட்களை தரித்திரர்களுக்காக வாரி வழங்கினார். எவரும் துன்பப்படப் பொறுக்க மாட்டாதவர் நானக். தனக்கென வாழாப் பெருந்தகையாளர்.

இவரது சிஷ்யர்களில் முக்கியமானவர்கள் சூத்திரா, மர்தனா என்ற இருவர். நானக்கிடம் அபார பக்தி கொண்டவர்கள். அவரை ஒரு நொடியும் விட்டு விலகாதவர்கள். ஒருசமயம் முஸ்லீம்களின் கலகத்தால் சையத்பூர் என்ற ஊர் சூறையாடப்பட்டது. அடிதடி; ரகளை அமீனாபாத் சிறையில் இந்துக்கள் வதைபட்டனர். அவர்களுடன் நானக்கும், மர்தனாவும் சிறைப்பட்டனர்.

நானக் மூட்டை சுமப்பார். மர்த்தனாவுக்கு சிறைக் கூடத்தைப் பெருக்கி, சுத்தம் செய்யும் வேலை கொடுக்கப் பட்டிருக்கும். "நாம் ஏன் இதைச் செய்ய வேண்டும்" என்று முரண்படுபவர்களை, நானக் அன்பால், தன் எளிய அறிவுரையால் தன் வசப்படுத்தினார். பாடிக் கொண்டே வேலை செய்து பக்திப்பயிரை வளர்த்தார். சிறையே தெய்வ மணம் கமழ்ந்தது.

பாபருக்குச் செய்தி எட்டியது. விரைந்து வந்து நானக்கை விடுதலை செய்தார். நானக்கோ "தன்னோடு இருந்த அனைவரையும் விடுதலை செய்தால் தான் வெளியே வருவேன்" என்று பிடிவாதமாகச் சொல்லி விட்டார். பாபர் இவரது உயர்ந்த குணத்தைக் கண்டு மகிழ்ந்து அனைவருக்கும் விடுதலை அளித்தார். சிறையிலிருந்த இந்துக்கள் தன்னலமற்ற இவரது கனிந்த குணம் கண்டு இவரைத் தெய்வமாகவே வழிபட்டனர்.

ஒரு நாள் அதிகாலை; ஆழ்ந்த தியானத்திலிருந்த நானக்கின் காதில் "நானக்! ஒரே இடத்திலிருந்தால் பக்திப்பயிர் வளருமா? செழிக்குமா? பாபம் குறையவேண்டுமானால் பக்தி பரவ வேண்டும். உலகம் முழுவதும் சுற்ற உன்னால் தான் ஆகும். ஏழுந்திரு..... என் ஞான மைந்தனே!" என்ற குரல் கேட்டது. நானக் விழித்துப் பார்த்தார். அருகில் எவரும் இல்லை. இறைவன் கட்டளை என்று சூத்திராவை மடத்திற்குக் காவலாக வைத்து விட்டு.மர்தனாவுடன் தல யாத்திரைக்குப் புறப்பட்டார். போகுமிடமெல்லாம் "மகா ஜனங்களே! இதயமாகிய வயலில் ஒற்றுமை ஏர் கொண்டு நேர்மை, அன்பு இரக்கமென்னும் நீர் பாய்ச்சி, உரமிட்டு தான தருமமென்னும் விதை விதைத்து, அகங்காரக் களைகளை நீக்கி, பக்திப் பயிர்களை அறுவடை செய்யுங்கள்" என்று போதனை செய்தார்.

குருக்ஷேத்திரம், கர்னல், பானிபட், ஹரித்வார், டெல்லி, பிருந்தாவனம், சோரக்மாதா, அயோத்யா, லக்னௌ, காசி, காட்னா, கயா, டக்கா, அஸ்ஸாம், சிட்டகாங், பூரி என்று கால் நடையாகவே சென்று பிரசாரம் செய்தார்.

ஒரு தடவை இவர் போகும் வழியில் காட்டாறு ஒன்று குறுக்கிட்டது. கோடை காலத்தில் இந்த ஆற்றில் கணுக்கால் தண்ணீர்கூட ஓடாது. மழைகாலங்களிலும் இடுப்பளவு ஆழம் தான் இருக்கும். அகலமான ஆறும் அல்ல. அதனால் அதில் படகோட்ட முடியாது. திடிரென வெள்ளம் வந்து விட்டால் சுழித்துக் கொண்டு ஓடும். வெள்ளம் வடியும் வரை காத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை. வெள்ளம் வடிய சில சமயம் வாரக்கணக்கிலும் ஆகும்.

அன்று நானக் ஆற்றைக் கடக்க இருந்தபோது வெள்ளம் கட்டுக் கடங்காமல் ஓடியது.

நானக் "நீரே! அடங்குக" என்று சொல்லி விட்டு ஆற்றில் இறங்கினார். என்ன அற்புதம்! பொங்கும் பாலில் தண்ணீரைத் தெளித்தது போல் நீர் சுருசுரு வென்று வற்றி கணுக்காலளவு வந்து விட்டது. நானக் அக்கரையிலேறி திரும்பிப் பார்த்தால் மர்தனா பயந்து அப்புறமே நின்று கொண்டிருக்கிறார்.

"மர்தனா! ஏன் நின்று விட்டாய்?" என்று நானக் உரக்கக் கேட்டார்.

"குருதேவா! தாங்கள் அடி பெயரும் போதே வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்றது. பின்னால் வருவதெப்படி?" என்றார் மர்த்தனா. நானக் சிரித்தபடி "மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற உலக நியதிப்படி தெய்வ பக்திக்கும் மேலானது குருபக்தி. நான் தெய்வ பக்தியுள்ளவன். நீயோ குருபக்தியுடையவன். என்னைவிட உயர்ந்தவன். குருவின் பாதாரவிந்தங்களை மனதில் தியானம் செய்தபடி நதியில் இறங்கு" என்றார்.

அப்படியே செய்தார் மர்தனா. தண்ணீர் இடுப்புவரை இருந்தது. சுழல் இல்லை. "நீரே அடங்குக!" என்று குருநாதர் சொன்னது போல் கூறினால் கணுக்காலளவு வரும்போலும். அப்போது இன்னும் எளிதாக நடக்கலாமே" என்று நினைத்து அப்படியே சொல்ல மளமளவென்று நீர் அவர் மூக்குவரை வந்து விட்டது. மர்தனா திணறினார்.இருகைகளையும் மேலே தூக்கி "குருநாதா அபயம்" என்றலறினார்.

தண்ணீர் மீண்டும் இடுப்புவரை குறைந்தது. கரையேறிய மர்தனா "ஏன் இப்படி?" என்று நானக்கரிடம் கேட்க, அவர் "குரு ஸ்மரனை விட்டு வேறு சிந்தனையில் புத்தி அலைந்தால் இப்படித்தான்" என்று சொல்ல, அது முதல் மர்தனா, குரு கிழித்த கோட்டை மனதாலும் மீறுவதில்லை.

பூரியிலிருந்து விந்திய மலைப் பகுதியைக் கடந்து இராஜபுதனம் சென்றார்கள். நானக் இரண்டாம் தடவை பிக்கானீர், ஆஜ்மீர், புஷ்கரம், ஆபு, தமிழ்நாடு, நாகப்பட்டினம் எல்லாம் பிரசாரம் செய்தபடி கடல்கடந்து சிங்கப்பூர் சென்று, மொழியறியாத மக்களிடமும், தன் இனிய கவிதை களால் பக்திப் பிரசாரம் செய்தார். அப்போது சிங்கப்பூரை ஆண்டவர் சிவநாயர் என்பவர். இருவரும் தீவிரமாகச் சர்ச்சை செய்து விவாதித்த பின், இவரது கொள்கைகளை மன்னர் எற்றுக் கொண்டார்.

அங்கிருந்து இராமேசுவரம், துவாரகா, கத்தியவார், சிந்து, ஸத்காரா, தால்வண்டி சென்று இறுதியில் லாகூரை அடைந்தார். மூன்றாம் தடவை இமயமலையிலேறி, மானஸ ஸரோவர் வரை சென்று அங்குள்ள தவமுனிவர்களை தரிசித்து, அங்கேயே சிலகாலம் வசித்துப் பின்னர் கார்வால், ஹேம குண்டம், கோரக்பூர், சிக்கிம், பூடான், திபெத், கைலாச மலை, லாட்கா, காஷ்மீர், ரியாஸி, ஜம்மு என்று காடு மேடெல்லாம் இண்டு இடுக்கு விடாமல் சுற்றி அலைந்தார். காட்டு வாசிகளிடமும், அன்புடன், வேதாந்த போதனை செய்தார். மானஸ ஸரோவரை அடுத்துள்ள குகைகளில் இவரது சிலை இன்றும் இருக்கிறது. அங்குள்ள பழங்குடி மக்கள் 'பத்ரகுரு' என்று இன்றும் இவரை பூஜிக்கின்றனர்.

முஸ்லீம்களின் புனிதஸ்தலமான மெக்காவில் கிருஷ்ணர் கோவில் ஒன்றிருந்தது. மெக்காவில் முஸ்லீம்களே அதிகம். அவர்கள் கிருஷ்ண விக்ரகத்தை குழிதோண்டிப் புதைத்து, மேலே மாட்டிறைச்சியும், எலும்பும் போட்டு வைத்தனர். இந்துக்கள் இதை நானக்கிடம் கூறி வருந்த, நானக் உடனே மெக்காவுக்குச் சீடனுடன் புறப்பட்டார்.

மதவெறி பிடித்த சிலர் இவர்களை ஊர் எல்லையிலேயே மடக்கி "யார்?" என்று கேட்டனர். நானக் கம்பீரமாக "உலகில் பிறப்புக்கும், இறப்புக்கும் காரணமானவன். தானே தனக்காகி, தனக்குள்ளேயே தன்னை அடக்கியவன். முக்குணங்களற்றவன். அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நிறுத்தக் காரணமானவன்" என்றார்.

மகாமுரட்டுத்தோற்றமுடைய ஒருவன், முன்வந்து கேலியாக "ஓ நீதான் இறைவனோ? நாங்கள் கிருஷ்ண விக்ரகத்தைப் பூமியில் புதைத்து விட்டோம். அது தானே எழும்பி கோயிலுக்கு வரச் சொன்னால் உன்னை, நீ சொன்னவற்றை நாங்கள் ஏற்கிறோம்?" என்றான்.

நானக் அமைதியுடன் "நீ சொன்னது எனக்கு உவப்பானதே! ஆனால் ஊர் முழுவதும் இங்கு கூடவேண்டும். ஒரு சிலருக்காக இதைச் செய்யமுடியாது" என்றார்.

முரடன் சில நிமிஷடங்களிலேயே ஊரைக் கூட்டி விட்டான். அவன் இனத்தவரும், இந்த அதிசயத்தைக் காண ஆவலோடு விரைந்து வந்து விட்டனர். நானக்கர் இதயத்தைப் பிழிவது போன்ற உருக்கமான குரலில் இறைவனை வேண்டினார்.

“நான்கு வேதங்களாயிருப்பவனே! யாகங்களில் மறைந்தருளு பவனே! ஒளிவீசும் அனலே! சூறாவளியே! பரந்த பூமியே! விரிந்த வானமே! தென்றலே! இடியும் மின்னலும், மழையுமாய் ஒளி வீசுபவனே! சப்த சாகரமே! மாமேரு பர்வதமே! சகல சாஸ்திரங்களே! அன்று மந்தர மலையை மத்தாகவும், வாசுகியைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடையும் போது கூர்மாவதாரம் தாங்கி மறைந்து காத்தவனே! இன்று வெளியே எழுந்து வாரும்! அன்று பிரகலாதனுக்காக தூணிலிருந்து வெளிப்பட்டவரே! இன்று பூமியைப் பிளந்து கொண்டு வருக! ஆயிரம் தோள்களும் அற்று விழும்படி கோடரியால் கார்த்த வீர்யார்ச்சுனன் மார்பைப் பிளந்த பரசுராமா! உனக்கு இன்று இந்த பூமியைப் பிளப்பதொரு கடினமா? அலைகடலுக்கே பாலம் அமைத்த ஸ்ரீராமா! ஆலயத்துக்கு எழுந்தருள இத்தனை தாமதமா?” இப்படிப் பலவாறு போற்றித் துதிக்கவும், பூமியே பிளப்பது போன்ற பேரிரைச்சலுடன் கிருஷ்ண விக்ரகம் வெளிப்பட்டு, கர்ப்பக்கிரகத்தில் போய் பதிந்து கொண்டது.

எல்லா முஸ்லீம்களும் பிரமித்தனர். அங்கு சிலநாள் தங்கி பக்திப் பிரசாரம், வேதாந்த விளக்கங்கள் கூறிவிட்டு மெதினாவுக்குச் சென்றார். அங்கிருந்து பாக்தாத் நகருக்கும் சென்று, பல அற்புதங்கள் நிகழ்த்தி விட்டு இந்தியா திரும்பினார். ஒரு அரசன் பெருஞ்சேனையோடு வெள்ளப் பெருக்கெடுத்தோடும் ஆற்றைக்கடக்க மாட்டாமல் தவித்துக் கொண்டிருந்தான்.

சீடரோடு நானக்கர் வந்து கொண்டிருந்தார். அவர் முகத்திலிருந்த தேஜஸைச் கண்டு, அவர் மகான் என்பதை உணர்ந்து, அவர் பாதங்களில் வீழ்ந்து ‘அவசரமாய் நகருக்குத் திரும்ப அருள் செய்ய வேண்டும்’ என்றார். நானக் காகிதத்தால் ஒரு படகு செய்தார். அதை நீரிலே விட்டார். “ஒவ்வொருவராக ஏறி உட்காருங்கள் என்றார்.

அரசன் திகைத்தான் ‘காகிதப்படகில் பயணம் செய்யமுடியுமா, தாங்குமா?” என்று. ஆயினும் குருநாதர் வாக்கை வேத வாக்காக எண்ணி, சேனைகளை வரிசைப்படுத்தி அனுப்பினான். புஷ்பக விமானம் போல் ஏற ஏற இடம் இருந்து கொண்டே வந்தது. கடைசியில் வேந்தனும் ஏறி அமர்ந்து, நானக்கரிடம் கைகூப்பி, வணங்கி விடை பெற்றான். ஓடக்காரன் இல்லாமலே, அலைப்புறாமலே படகு அக்கரை சேர்ந்தது.

என்ன ஆச்சரியம்! அங்கே அவர்களுக்கு முன்பே சீடரோடு நானக்கர் காத்திருந்தார். அரசன் அவர் காலடியில் வீழ்ந்து உபதேசம் பெற்றான்.

நானக் பூனாவில் கோரக்கரை சந்தித்தார். கோரக்கர் "ஹரித்வாரத்தில் நாளை திருவிழா. அங்கு சென்று அன்னதானம் செய்தால் நன்றா யிருக்கும்" என்று கூற, நானக் "அப்படியே செய்கிறேன். நீங்கள் முதலில் போய் நான் வரும் செய்தியைக் கூறி அன்னதானத்துக்கு ஆள் சேருங்கள். பல பேர் விசேட நாட்களில் அன்னதானம் செய்வதால், சிலசமயம் சாப்பிட ஆள் கிடைப்பதில்லை" எனவும்,

கோரக்கர் தன் மந்திர, சக்தியால் பறவைபோல் பறந்து ஹரித்வார் சென்றார். கோரக்கர் சென்றபின் நானக் யோக நிலையில் ஆழ்ந்து இறைவனை வேண்ட, அடுத்தகணம் சீடரோடு ஹரித்வாரத்தில் இருந்தார். அன்றே சிறப்பாக அன்னதானம் நடந்தது. மர்தனாவுடன் நானக் ஹரித்வாரத்தின் வேறொரு பகுதிக்குச் சென்று விட்டார்.

நானக் போனபின் கோரக்கர் ஹரித்வாரத்தில் வந்து இறங்கினார். அடியார்கள் கூட்டத்தில் "நானை மகான் நானக்தாஸர் வரப் போகிறார். அன்னதானம் செய்யப்போகிறார். தவறாது ஒன்று கூடுங்கள்" என்று விளம்ப, ஒருவர் எழுந்து,

"ஸ்வாமி! நானக்கரை தரிசித்து, இப்போதுதான் அவர் அளித்த அன்னதானத்தில் கலந்து கொண்டோம்" என கோரக்கர் திகைத்தார். அதே சமயம் நானக்கும், மர்தனாவுடன் அங்கே வர கோரக்கர் ஓடிச் சென்று அவரை ஆலிங்கனம் செய்து கொண்டார்.

"மந்திர சக்திகளும், சித்து விளையாட்டும், ஞான பலத்துக்கு முன் தூசி என்பதை உணர்ந்து கொண்டேன்" என்று அவர் பக்தியின் மீது கொண்டுள்ள நம்பிக்கையைப் புகழ்ந்தார். ஒரு சமயம் நானக் தனிமையில் தியானத்தில் இருந்தபோது ஒரு அடிமை வியாபாரி இவரைப் பிடித்துக் கொண்டான்.

"இந்த உடலும், உயிரும் அவன் அளித்த பிச்சை. யாருக்கும் எதுவும் சொந்தமல்ல" என்ற இவருடைய தத்துவம் அவனுக்கு சௌகரியமாகப் போயிற்று. அனாதை என்று தீர்மானித்து "நீ எனக்குத்தான் சொந்தம்" என்று இழுத்துக் கொண்டு போய் இன்னொரு வியாபாரியிடம், இரண்டு

குதிரைகளுக்குப் பதிலாக விற்று விட்டான். எல்லாம் பகவான் அருள் என்று நானக் மௌனமாக இருந்து விட்டார்.

வாங்கியவன் ரோஹில் கண்ட் நாட்டின் தலைவன். 'ஸுபி' மதத்தைச் சேர்ந்தவன். அவனை 'மிர்' என்று அழைப்பர். 'மிர்' நானக்கைப் பார்த்ததுமே 'மகான்' என்று புரிந்து கொண்டான்.

"அரே! பகவான்" என்றலறி இவர் காலடியில் விழுந்து மன்னிக்கும் படி வேண்டினான். நானக் அவனிடம் "மனிதனை மனிதன் அடிமை கொள்வது முட்டாள்தனம். மனிதனைப் படைத்தவன் இறைவன். உண்மையிலேயே நீ தவறை உணர்ந்து மன்னிப்பு வேண்டினால், உன்னிடமிருக்கும் அடிமைகளை விடுதலை செய்" என்று சொல்ல, மிர் அப்படியே செய்தான்.

நானக்கின் பிரதம சீடனாகி உபதேசம் பெற்று அவருக்குத் தொண்டு செய்தான். அடிமை வியாபாரத்தை அடியோடு விட்டு விட்டான். ஜாதி, இன, மத வேறுபாடின்றி சீடர்களைக் கொண்டவர் நானக். பக்திப்பயிர் செழிக்க ஓயாது அலைந்தவர்.

ஒருமுறை இந்துக்கள் இவர் உடலை எரித்து, அஸ்தியை கங்கையில் கரைக்க வேண்டும் என்று வாதமிட, முஸ்லீம்கள் அடக்கம் செய்தாலே மோட்சம் கிடைக்கும் என்று தர்க்கம் செய்ய, கேட்டுக் கொண்டே வந்த நானக், "உயிர் இருக்கும் வரை தான் உடலுக்கு மதிப்பு. இந்தக் கையும், காலும், கண்ணும், வாயுமா நானக்? அல்ல..... மனம்! ஆத்மா, நல்லவைகளை எண்ணுவது அதுதான். ஆத்மா கூட்டை விட்டுப் பறந்தபின் உடலை நாறாமல் கழிக்கவேண்டும். அதை எப்படிச் செய்தால் என்ன? ஆத்மாவின் எண்ணங்களை, ஆசைகளை செயல்படுத்தும் கருவி தான் உடல்..... அது நல்ல முறையில் இருந்தால் தான் செயல்பட முடியும் என்பதால் பேணுகிறோம். வேறென்ன? மற்றவர் மேல் காட்டும் அன்பும் நம்பிக்கையுமே நான் விரும்பும் பூக்கள். அதை அள்ளித் தாருங்கள். ஆண்டவனின் உபதேசங்களில் மனதைச் செலுத்துங்கள். தத்துவங்களை ஆராயுங்கள்" என்றார்.

சீடர்கள் தலை குனிந்தனர். நானக் கட்டிய பொற்கோயில் அமிருதசரஸில் உள்ளது. அதில் உள்ள தெய்வம் 'கிரந்தா சாஹேப்' என்னும் அவருடைய உபதேசங்கள் அடங்கிய வேத நூலே! பட்டுத்

துணியால் சுற்றப்பட்டு அங்கே வைக்கப்பட்டிருக்கிறது. இதைத் தொகுத்தவர் குரு அர்ஜூன் சிங் என்பவர். இதில் நாமதேவர், மீராபாய், திரிலோசன தாசர் போன்ற பக்தர்களின் கவிதைகளும் சேர்க் கப்பட்டுள்ளன.

மூலஸ்தானத்தின் உள்ள நூலின் மேல் 'ஸ்த் ஸ்ரீ கால்' என்ற எழுத்துக்கள் பொறித்த கொடி பறந்து கொண்டிருக்கும். 'அகால புருஷனுக்கு வெற்றி' என்பது அதன் பொருள்.

வடமொழியில் நானக் இயற்றிய மற்ற நூல்கள் நிராகார மீமாம்ஸை, அத்புதகீதை. 'ஜப்ஜீ' என்ற நூலை சீக்கியர்கள் தினசரி பாராயணம் செய்வார்கள். அஞ்சா நெஞ்சம் கொண்ட நானக் கடவுளைத் தினசரி தொழ வேண்டும் என்ற அசையாக் கொள்கை உடையவர்.

71. நாபாஜி சித்தர்

போகாரி தாஸர் என்ற மகானின் சீடன் அக்ரஜி. இவர் கருணை மனம் கொண்டவர். பகவானைப் பாடுவதே பிறவிப்பயன் என்றெண்ணு பவர். உடல் அயர்ந்து உறங்கினாலும் கனவிலும் கண்ணன் லீலைகளையே காண்பவர். இவர் காசி நகரில் வாழ்ந்து வந்தார். இவர் பகவானைத் தரிசிக்க வேண்டும் என்று நினைத்து விட்டால் கடும் தியானத்தில் ஆழ்ந்து விடுவார். எம்பெருமானின் தரிசனம் கிடைக்கும்வரை யோகத் திலிருந்து மீளமாட்டார்.

ஒருசமயம் காசியில் கடும் பஞ்சம் ஏற்பட்டது. ஜனங்கள் குடி நீருக்காக பல மைல் தூரம் அலைந்தனர். வயல்களெல்லாம் பாளம் பாளமாய் விரிந்திருந்தன.

ஒரு இளம் விதவை சுற்றத்தினரால் பாராமுகமாக ஒதுக்கப்பட்டவள். அவளுக்கு இரண்டு வயது ஆண் குழந்தை. இரண்டு நாளாய் பிச்சை கேட்டு அலைந்தும், ஒருசிறு ரொட்டித்துண்டு கூட கிடைக்கவில்லை. தன்பசி பொறுப்பாள் தாய்; பிள்ளைபசி பொறுப்பாளா? பசியால் துடிக்கும் குழந்தையைக் கண்டு தவித்தாள்.

குழந்தையுடன் கங்கையாற்றின் கரைக்கு வந்தாள். "இப்போது தூங்கு. விழித்ததும் பகவான் உனக்கு சாப்பாடு கொண்டு வருவார்" என்று தட்டி தூங்க வைத்தாள். தூங்கும் குழந்தையை முத்தமிட்டு விட்டு 'பகவானே சரணம்' என்றபடி பெருகும் பிரவாகத்தில் விழுந்து இறந்து விட்டாள்.

குழந்தை விழித்தது. அருகில் அன்னையைக் காணாமல் அழுதது. அப்போது தான் அக்ரஜி நீராட வந்தார். அழும் குழந்தையைத் தேற்றி விசாரித்தார். குழந்தை மழலைக்குரலில் "அம்மாவை ரெண்டு நாளாய் சாப்பாடு, சாப்பாடு என்று தொந்தரவு செய்ததால் அம்மா காணாமல் போயிட்டா" என்று கூறி விக்கி விக்கி அழுதது.

"அக்ரஜி நிலைமையைப் புரிந்து கொண்டார். குழந்தையிடம் அன்பாக" என்னோடு வருகிறாயா? வயிறாரச் சாப்பாடு போடுகிறேன். ஆனால், அம்மா, அம்மான்று சதா அழக்கூடாது. அம்மா வராவிட்டாலும் சமர்த்தாக இருக்கணும்" என்றார்.

குழந்தை அவரைக் கட்டிக்கொண்டது. அக்ரஜி குழந்தையை சமாதானப்படுத்தி விட்டு, வேகமாக நீராடினார். பிறகு குழந்தையுடன் மடத்திற்கு வந்தவர், முதலில் குழந்தையின் பசியைத் தீர்த்தார். மடத்திலிருந்தவர்கள் குழந்தையை நாபாஜி என்றழைத்தனர். அஞ்சேல் என்று அபயம் தந்ததால் அப்பெயர் வழங்கலாயிற்று.

குழந்தை சொன்னபடியே சமர்த்தாக இருந்தது. அக்ரஜியின் பூஜையை அக்கறையாய் கவனிக்கும். குறிப்பறிந்து வேண்டிய உதவிகளைச் செய்யும். மடத்திற்கு வரும் மகான்களின் உபதேசங்களை கவனமாய் கேட்கும். தன் வயதுக் கேற்றபடி விளையாட ஓடாது. மழலைக்குரலில் பஜனையில் பாடும். இப்படியே சத்புத்திரனாக நாபாஜி வளர்ந்து வாலிபனானான். அன்று அக்ரஜிக்குப் பகவானை தரிசிக்க ஆவல். நாபாஜியை வாசலில் காவலுக்கு வைத்து விட்டு, எவரையும் உள்ளே அனுமதிக்கக் கூடாதென்று உத்தரவு போட்டு விட்டுத் தியானத்தில் உட்கார்ந்து விட்டார்.

நாபாஜி அக்ரஜியைக் காண வந்தவர்களையெல்லாம் திருப்பி அனுப்பிக் கொண்டிருந்தார். வெகு நேரமாயிற்று. பகவத் தரிசனம் அக்ரஜிக்கு ஏன் கிடைக்கவில்லை என்று நாபாஜி சிந்தித்துப் பார்த்தார்.

"கொந்தளிக்கும் கடல். கப்பல் நிறைய விலையுயர்ந்த தங்க நகைகள். நவரத்தினங்கள். வியாபாரி உருக்கமாய் பிரார்த்தித்துக் கொண்டிருக் கிறான். "பகவானே! கப்பல் பாறைகளில் மோதி உடையாமல் பத்திரமாய் கரை சேர்ந்தால், ஐந்தில் ஒருபகுதித் தங்கத்தை அக்ரஜியின் அன்ன தானத்திற்குத் தருகிறேன்"

அதோ! சூறாவளியில் ஆடி அலைக்கழிந்து கொண்டிருந்த கப்பல், அமைதியாய் கரை நோக்கிச் செல்கிறது. பரந்தாமன் நெற்றியெல்லாம் வியர்வைத்துளிகள். கதவைத் திறந்து கொண்டு அக்ரஜியின் அருகே வந்தான் நாபாஜி.

"குருதேவா! வருந்த வேண்டாம் ....." என்று தேற்றி, நடந்ததைக் கூறி விட்டு, "பகவான் கப்பலை நிலை நிறுத்தி விட்டார். இதோ வந்து விடுவார்" என்று கூறி, மீண்டும் வாசல் காவலுக்கு வந்து நின்று கொண்டான். அக்ரஜி ஒன்றுமே பேசாமல் கொஞ்ச நேரம் பிரமித்திருந்தவர், மீண்டும் தியானத்தில் ஆழ்ந்தார்.

சிறிது நேரத்தில் பகவானின் பாதச்சிலம்பொலி கேட்கக் கண் திறந்தார் அக்ரஜி. பகவானின் பாதாரவிந்தங்களில் சாஷ்டங்கமாக



விழுந்த அக்ரஜி "சுவாமி, இன்று தாங்கள் தரிசனமளிக்க இத்தனை தாமதம் என்? தங்கள் பீதாம்பரம் ஏன் நனைந்திருக்கிறது?" என்று கேட்க, பரந்தாமன் "உன்னைப் போல் ஒரு பக்தனின் கப்பல் புயலில் சிக்கித் தவித்தது. இப்போதுதான் காப்பாற்றி விட்டு வருகிறேன். அதனால் தான் தாமதம். அவன் தரும் பொருளை மறுக்காமல் எற்றுக் கொண்டு, அதிதி பூஜையைத் தடங்கலில்லாமல் நடத்து" என்று ஆசி கூறி மறைந்தார்.

பரந்தாமன் மறைந்ததும் நாபாஜியை அழைத்த அக்ரஜி "நாபாஜி, நான் உன்னை வளர்த்தவன். உனக்கு முன் பலகாலமாக பகவானை தரிசிப்பவன். பகவான் 'எந்த நேரம் என்ன செய்கிறார். எங்கே போகிறார்' என்பது தெரியவில்லை. நீ எப்படி அறிந்தாய்? இந்த சக்தி உனக்கெப்படி உண்டாயிற்று?" என்று கேட்க, நாபாஜி பணிவுடன் "சுவாமி! தாங்கள் பகவானை தரிசித்து விட்டால் உடனே என்னை அழைப்பீர்கள்! இன்று ரொம்ப நேரமாயிற்று. எனன செய்கிறீர்கள் என்று யோசித்தேன். கண்முன் நீங்கள் வருத்தத்துடன் உட்கார்ந்திருப்பது புலனாயிற்று. தங்களின் வேதனையை என்னால் தாங்க முடியவில்லை. இத்தனை நேரமாய் பகவான் ஏன் வரவில்லை என்று யோசிக்கும் போது கடலும், கப்பலும், வியாபாரியும், பரந்தாமனின் செயலும் நாடகமேடைக் காட்சி போல் கண்முன் தெரிந்தது. உடனே ஓடிவந்து கூறினேன். இதை 'ஞான திருஷ்டி' 'அபூர்வ சக்தி' என்று சிலாகித்தால், அது தங்களின் கூட்டுறவாலும், மடத்துக்கு வரும் மகான்களின் சத் சங்கத்தை கிரகிப்பதாலேயுமே ஏற்பட்டிருக்க வேண்டும்" என்றார்.

அக்ரஜி அன்புடன் "நாபாஜி, உன் அடக்கம் போற்றத் தகுந்தது. உனது இந்த சக்தி கடலில் கரைத்த காயமாகக் கூடாது. பக்தர்களின் சரித்திரங்களை ஞான திருஷ்டியில் கண்டு எழுது" என்றார்.

நாபாஜியும் குருநாதர் கட்டளையை சிரமேற் தாங்கி பாகவதர்களின் கதைகளை எழுதிக் குவித்தார். பண்டிதரும், பாமரரும், செல்வரும், வறியவரும் இனபேதம் பாராமல் அவர் பிரவசனத்தைக் கேட்கக் கூடினர். அவர் நூலையே முதலாகக் கொண்டு பின் வந்தவர்கள் சரித்திரங்களை எழுதினர். அவைதான் பாண்டுரங்க மகாத்மியம்.

72. சிளாபாய்

குஜராத் மாநிலத்தை ஆண்ட பாண்டேயின் தவப் புதல்வி சிளாபாய். அந்நாள் வழக்கப்படி அவளுக்கு ஐந்து வயதானதும், உத்தமமான ஆசாரியார் வசம் கல்வி கற்க அவளை ஒப்படைத்தான் பாண்டே. அதற்கு வேண்டிய மானியமும் கொடுத்தான்.

சிளாபாயின் ஆசிரியர் விஷ்ணு பக்தியுடையவர். தினமும் அதிகாலையில் நீராடி சாளிக் கிராம பூஜை செய்யாமல் சாப்பிட மாட்டார். இளமையிலிருந்து இதைக் கூடவே இருந்து பார்த்துக் கொண்டிருந்த சிளாவுக்கும் விஷ்ணுபக்தி ஊறிப் போயிருந்தது. சிளாபாய் புத்திசாலி. சகல கலைகளையும் பதினோரு வயதுக்குள் கற்றுக் கொண்டாள். ஊர் திரும்பும் நாள் வந்ததும் ஆசானை வணங்கி, 'தனக்கும் ஒரு சாளிக்கிராமம் தர வேண்டும்' என்று கேட்டாள்.

ஆசான் திடுக்கிட்டார். இவளோ ராஜ கன்னிகை. பக்தி பித்தாகி சன்னியாசினி ஆகி விட்டால், அரச கோபத்துக்கு ஆளாக வேண்டி வருமே என்று அஞ்சினார். ஆயினும் அவளைத் திருப்தி செய்ய பளபளவென்னும் ஒரு வழுவழுப்பான கருங்கல்லைக் கொடுத்து ஆசீர்வதித்து அனுப்பினார்.

நாடு திரும்பியதும் தந்தையிடம் கேட்டு, ஒரு அழகிய பெட்டி செய்து, அதில் அக்கல்லை வைத்தாள். ஆசான் செய்தது போலவே அதிகாலை எழுந்து, சுத்தமாக நீராடி, பால், தேன், தயிர், இளநீர், சந்தனம் இவற்றால் அபிஷேகம் செய்து, துளசி மாலை சாற்றி அர்ச்சித்து, தூப தீபம், காட்டி நிவேதனம் செய்தபிறகுதான் சாப்பிடுவாள். பெற்றோரும் அவள் பக்திக்கு அனுகூலமாகவே இருந்தனர். சிளாபாய் பருவ மங்கையானாள்.

பல ஊர்களிலிருந்து வரன்களின் ஒவியங்களையும், ஜாதகங்களையும் வரவழைத்து அலசினார்கள் பெற்றோர். எல்லா வகையிலும் பொருத்த மாக இருந்த ஒரு மாப்பிள்ளையின் பெற்றோர் சிளாபாயைப் பார்க்க வந்தனர்.

வந்தவர்களிடம் சிளாபாயின் தாய் தந்தையர், அவளுடைய பூஜையைப் பற்றிக் கூறினர். அவர்களும் அதைத் தடை செய்வதில்லை

என்று வாக்களித்த பிறகே, திருமணம் நிச்சயமாயிற்று. சிளாபாயின் சம்மதத்துடன் விவாகம் வெகு கோலாகலமாக நடந்தது. ஏராளமாகச் சீர்வரிசைகள் செய்தார் பாண்டே. சம்பந்திகள் மகிழ்ச்சியுடன், மணமகளை அழைத்துக் கொண்டு புறப்பட்டனர்.

பெண்களெல்லாம் பல்லக்கிலேறிவர, ஆண்கள் குதிரைகளில் முன்னும் பின்னுமாய் வந்தனர். இரவு ஒரு ஊரில் தங்கினர். விடியற்காலை எழுந்து காலைக் கடன்களை முடித்தபின் அவ்வூர் நதியில் நீராடினர். கட்டுச் சோற்றைப்பிரித்து கேலியும், விளையாட்டுமாகச் சாப்பிடத் தொடங்கினர்.

சிளாபாய் பூஜைப் பெட்டியுடன் ஆற்றின் வேறொரு பக்கத்துக்குச் சென்று விட்டாள். நீராடி, ஈரத்துகிலுடன், சாளக்கிராமமென்று நினைத்துக் கொண்டிருந்த கல்லை எடுத்து அத்தியாவசியத் தேவை களுக்காகப் பெட்டிக்குள்ளேயே வைத்திருந்த சிறு பஞ்சபாத்திரத்தில் தண்ணீர் எடுத்து சந்தனக் கட்டியை உரைத்து அபிஷேகம் செய்தாள். நேற்றே பறித்து வந்திருந்த துளசி தளங்களால் அர்ச்சித்தாள். கற்கண்டு. திராட்சையை வைத்து நிவேதித்தாள். நமஸ்காரம் செய்துவிட்டு மறுபடி பாத்திரங்கள், நிவேதனப் பொருள்கள் எல்லாவற்றையும் பெட்டிக்குள் பத்திரப்படுத்தி விட்டு, மளமளவென்று கட்டுச் சோற்றை அவிழ்த்து சாப்பிட்டாள்.

சிளாபாயின் கணவன் இதையெல்லாம் மறைவாக நின்று பார்த்துக் கொண்டிருந்தான். சிளா சாப்பிட்டு முடித்துக் கைகழுவச் சென்றதும், அவளது பூஜைப் பெட்டியைத் திறந்து அதிலிருந்தவைகளை மடியில் கட்டிக் கொண்டு, முன்போல் மூடி வைத்து விட்டு வழி நடந்தான்.

அந்த ஆற்றின் வேறொரு பக்கம் பயங்கரமான சுழல். அங்கே அவைகளை வெறுப்புடன் வீசி விட்டு "இதென்ன சாமியாரிணி போல் பூஜை! இனி என்ன செய்ய முடியும்?" என்றபடி ஒன்றுமறியாதவன் போல், மற்றவர்களோடு வந்து கலந்து கொண்டான். அதற்குள் சிளாவும் கைகழுவி விட்டு, பெட்டியோடு வந்து விட்டாள்.

பயணம் தொடர்ந்தது. மாலையில் இருப்பிடம் போய் சேர்ந்தனர். விடியற்காலை எழுந்ததும் சிளா நீராடி முடித்து, பூஜை செய்ய பெட்டியைத் திறந்ததும் திடுக்கிட்டாள். பெட்டி காலியாக இருந்தது.

"யார் எடுத்திருப்பார்கள்? புதிய இடம். எவரை சந்தேகப்பட முடியும்? இத்தனை காலமாக ஆராதித்து வந்த தெய்வத்தைப் பத்திரப்படுத்தத் தெரியாமல் இருந்து விட்டேனே! கடவுளே! என் கணவருக்கோ, மாமன், மாமிக்கோ, பெற்றோருக்கோ எந்தத்தீங்கும் வரக்கூடாதே!" என்று பலவும் நினைத்து வருந்த, அங்கே வந்த மாமியார் நடந்த சம்பவத்தைக் கேட்டு வருந்தினாலும் அவளைத் தேற்றினாள்.

சாப்பாட்டு நேரத்தில் சிளா வராமல் போகவே மாமனாரும் அங்கு வந்தார். நடந்ததை அறிந்ததும் மருமகளிடம், "குழந்தாய், வயிற்றைக் காயப்போடுவது தவறு. உலகம் எங்களைத் தூற்றும். உனக்குப் புதிய சாளிக்கிராமமும், பூஜா பாத்திரங்களும் நான் வாங்கித் தருகிறேன்" என்று அன்புடன் கூறினார்.

அவளோ "அது நான் இவ்வளவு காலமாகப் பூஜித்து வந்த தெய்வம். அதற்குள் கற்பூர ஹாரத்தியின் போது பகவானின் திவ்ய சொரூபத்தை தரிசித்திருக்கிறேன். அதுதான் எனக்கு வேண்டும். அதுகிடைக்காமல் நான் சாப்பிட மாட்டேன். மறுத்து பேசுகிறேன் என்று நினைக்காமல் என்

மனதைப் புரிந்து கொள்ளுங்கள்” என்று பலவிவுடன், ஆனால் பிடிவாதமாகக் கூறி விட்டாள்.

இப்படியே நான்கு நாட்கள் கழிந்தன. ஐந்தாம் நாள் அரண்மனையே சோகமாக இருந்தது. சிளா மெலிந்து தளர்ந்திருந்தாலும், கடும் தியானத்திலிருந்தாள்.

பசி பிடுங்கும் போது சாப்பிடாமல் எங்கே போகிறாள் என்று அலட்சியமாக நினைத்திருந்த சிளாவின் கணவனும், கிணறுவெட்ட பூதம் புறப்பட்டதே என்று தவித்தான். தன்னை மன்னித்து சிளாவுக்கு நல்ல வழி காட்டும்படி கடவுளைப் பிரார்த்தித்தான். “சிளா, இந்தா, பூஜை செய்” அந்தக் கிழவர் பூஜைப் பெட்டியை நீட்டினார். சிளா திடுக்கிட்டாள். பசி மயக்கம். தியான நிலையில் உறங்கி விட்டோமே என்று வெட்கினாள்.

‘கனவு போலவே இல்லையே! எனது பூஜைச்சாமான்கள் அப்படியே இருந்தனவே’ என்றெண்ணி பூஜைப் பெட்டியைத் திறக்க, மகிழ்ச்சியில் பூரித்துப் போனாள். சாளிக்கிராமமும், பூஜா சாமான்களும் அப்படியே இருந்தன. ஆசாரியரை தெய்வமாக எண்ணி அவர் சொல்லையே வேத வாக்காகக் கொண்டு பூஜித்ததில் கல்லிலும் தெய்வத்தைக் கண்டவள் சிளா. அவளது இதய பூர்வமான பக்தியைக் கண்டு பகவான் கூழாங்கல்லை சாளக் கிராமமாக மாற்றி இருந்தார். இந்த ஆனந்தச் செய்தியை ஓடோடிப் போய் மாமன், மாமி, கணவனிடம் கூறினாள். அரண்மனையே குதூகல மடைந்தது.

சிளா நீராடி பூஜை செய்தாள். “ஆற்றிலே எறிந்தவை அப்படியே வரவேண்டுமானால் சிளாவின் பக்தி எத்தனை தீவிரமானது! அதை அவமதித்தது எத்தனை பெரிய குற்றம்! அவளை நான்கு நாட்கள் பட்டினி போட்டது அதைவிடப் பெரிய குற்றம்! தெய்வமே! இதுவே என் கடைசித் தவறு” என்று சங்கல்பித்துக் கொண்டான் அவள் கணவன்.

சிளாவோடு சேர்ந்து அவனும் பூஜையில் கலந்து கொண்டான். பூஜைக்கு வேண்டிய பூ, சந்தனம், வாசனைத் திரவியங்களை சேகரித்துத் தந்தான்.

மருமகளால், மகனும் தெய்வபக்தி பூண்டது கண்டு பெற்றோர் மனமகிழ்ந்தனர்.

73. ஜயவந்த பக்தர்

ஜயவந்தர் பரம்பரைப் பணக்காரர். அவரும் முன்னோர்கள் செய்து வந்த வியாபாரத்தை விடாமல் செய்து வந்தார். அவருக்கு ஆறு பிள்ளைகள். பிள்ளைகள் ஆறுபேரும் தந்தையிடம் பாசம் கொண்டவர்கள் தான் . ஆனால் தந்தையின் தரும குணத்தைத் தான் வெறுத்தார்கள்.

'நாம் கஷ்டப்பட்டு, பாடுபட்டு சம்பாதிக்கிறோம். எங்கிருந்தோ வந்து பசி என்கிறான். கலியாணம் என்கிறான். உபநயனம் என்கிறான். அவனுக்கெல்லாம் அள்ளித் தருகிறாரே இந்த அப்பா....! பசித்தவன் உழைத்துப் பொருள் சம்பாதிப்பதை நாமா தடுத்தோம்! ஊர்மக்களின் பசியையெல்லாம் தீர்க்க நம் ஒரு குடும்பத்தால் முடியுமா? கலியாணம் பண்ண வக்கில்லாதவன் ஏன் பெண்ணைப் பெற்றுக்கொள்ள வேண்டும்? பணமில்லாதவன் யாசித்தாவது தீர்த்தயாத்திரை செல்ல வேண்டுமென்று எந்த சாஸ்திரத்தில் சொல்லி இருக்கிறது?" இப்படியெல்லாம் சர்ச்சை செய்தார்கள். கோபப்பட்டார்கள்.

தானம் வாங்கிக் கொண்டு போகிறவர்களை "கை, காலெல்லாம் நன்றாகத்தானே இருக்கிறது.... உழைத்துப் பிழைக்கக் கூடாதா? என் தகப்பனார் ஏமாளி என்று தலையில் மிளகாய் அரைக்கிறீர்களோ? இப்படிப் பிச்சையெடுப்பது உங்களுக்கு வெட்கமாக இல்லை?" என்று கேலி செய்வார்கள்.

"தாடியை வளர்த்துக் கொண்டு ஊரை ஏமாற்றுகிறார்கள்" என்று ஜாடை பேசுவார்கள். இவர்களுக்குப் போதனை செய்ய சில தூர்க்குணம் படைத்த நண்பர்களும் சேர்ந்து கொண்டனர். பிள்ளைகளின் நடவடிக்கைகளைப் பார்த்த ஜயவந்தரும் யோசித்தார்.

'மனித வாழ்க்கை அநித்யம். மரணம் எப்போது வரும் என்று சொல்ல முடியாது. நல்ல பிள்ளைகளுக்குச் சொத்து சேர்த்து வைக்க வேண்டாம். அவர்கள் புத்திசாலிகளாய், உழைத்துப் பிழைத்துக் கொள்வார்கள். கெட்ட பிள்ளைகளிடம் சொத்தை விட்டுச் சென்றால் அவர்கள் தீயவழிகளில் சொத்தை அழித்து விடுவார்கள். அப்படியானால் இவ்வளவு பெரிய சொத்து போதாதென்று இன்னும் ஏன் சம்பாதிக்கிறேன்? இதில் தான்

எத்தனை பொய் சொல்ல வேண்டி இருக்கிறது! கலப்படம் நான் செய்யா விட்டாலும் அதை வாங்கி வந்து விற்பதும் பாவம் தானே! போதும்.... இனி வியாபாரம் வேண்டாம். பகவத் கைங்கரியத்தில் பூரணமாய் ஈடுபடுவோம்" என்று தீர்மானித்து, வியாபாரத்தை நிறுத்தி விட்டார்.

பிள்ளைகளின் கொதிப்பு அதிகமாயிற்று. 'சொத்தை நாங்கள் நிர்வாகம் செய்கிறோம்" என்று கேட்டுப் பார்த்தனர். "உங்களுக்குப் பொறுப்பு வரவில்லை" என்று சொல்லி விட்டார் ஜயவந்தர். "இப்படியே போனால் கப்பரை ஏந்த வேண்டியது தான்" என்று மன்னரிடம் சென்று முறையிட்டனர்.

"அரசே! நாங்கள் செல்வந்தர் ஜெயவந்தரின் புதல்வர்கள். எங்கள் முன்னோர்கள் சேர்த்துவைத்த ஏராளமான சொத்தையும் தான தருமம் என்ற பெயரில் எங்கள் தந்தை கரைத்து வருகிறார். வியாபாரத்தையும் நிறுத்தி விட்டார். கேட்டால் 'ஒருவரே லாபம் சம்பாதிக்கக் கூடாது. புதிதாகக் கடை வைத்தவர்களும் பிழைக்க வேண்டாமா? என்று குதர்க்கம் பேசுகிறார். சரி. நாங்களாவது வியாபாரம் செய்கிறோம். முதல் தாருங்கள் என்றால் நாங்கள் துஷ்டர்களாம். கலப்படம், அநியாய விலை என்று மக்கள் வயிற்றிலடிப்போமாம்! அக்கிரமத்துக்கு நான் துணை போக மாட்டேன். அப்படிச் சேர்த்த பணம் உருப்படாது' என்றெல்லாம் அவராகவே முடிவுகட்டிப் பேசுகிறார். அவருக்கு வயதாகி விட்டது. நாங்கள் இளவயதினர். இந்தவயதில் விதவிதமாய் உடுத்தவும், கேளிக்கைகளில் கலந்து கொள்ள நினைப்பதும் குற்றமா? ஊதாரித்தன மென்கிறார். செலவுக்குப் பணம் தர மறுக்கிறார். பிள்ளைகள் போன ஜன்மத்துக் கடன் என்று தத்துவம் சொல்பவர் எங்களைப் பெற்று ஏன் இப்படி அவதிப்படுத்த வேண்டும்? மனைவி சுமை என்று வேதாந்தம் சொல்பவர் திருமணம் செய்து கொண்டது எப்படி நியாயம்? பணத்தை அநித்யம் என்பவர், ஏன் அதன்மீது உரிமை கொண்டாட வேண்டும்? சதா ஆண்டிகள் கூட்டம்! இப்படியே போனால் நாங்கள் முழத்துணிக்கு விதியற்று வீதிக்கு வந்து விடுவோம். சொத்தை எங்கள் வசம் வாங்கித்தரவேண்டும். அப்பாவை எந்தக் குறையுமின்றி நாங்கள காப்பாற்றுகிறோம்" என்று உருக்கமாக வேண்டினர்.

அரசன் ஜெயவந்தரை அழைத்து வர ஆணையிட்டான். ஜயவந்தர் வந்தார்.

அரசன் விசாரணை செய்தான். "உமது முன்னோர்கள் உமக்குப் பயன்படும்படி விட்டுச் சென்ற செல்வத்தை நீர் அழிக்கிறீர் என்று கேள்விப்பட்டேன். இதற்கு நீர் தரும் பதில் என்ன?"

"தவறு. நல்ல காரியங்களுக்குச் செலவிடுகிறேன். பசித்தவருக்கு அன்னமிடுதலும், மானம் மூட துணி கொடுப்பதும், அடியார்களை ஆதரிக்கச் செலவிடுவதும் அழித்தலாகுமா?"

"இதனால் நீ கண்ட பலன்?"

"நிறையப் புண்ணியம்! சந்தோஷம்."

"அதே மகிழ்ச்சியை உன் பிள்ளைகள் வேறு விதத்தில் காண்கிறார்கள். அவர்களுக்கு உதவ மறுப்பதேன்?"

"அவர்கள் காண நினைப்பது நிலையற்றது. உண்பதும், உடுப்பதும் தான் மகிழ்ச்சியா?"

"நான் கூட ஆடம்பரமான மாளிகையில் வாழ்கிறேன். விருந்து, வேடிக்கைளில் கலந்து கொள்கிறேன். அதுகூட அநித்யமென்கிறாயா?"



"அரச வாழ்வே நிலையற்றது தானே! பதவி இன்றொருவன் கையில். நாளை இன்னொருவர் அமரலாம் அந்த சிம்மா சனத்தில்!"

அவ்வளவுதான்! அரசனுக்குச் சினம் தலைகேறியது. "இவரைக் கோணியில் கட்டி கடலில் வீசுங்கள். இவரால் நாட்டுக்கும், வீட்டுக்கும் எந்த நன்மையுமில்லை! சொத்தெல்லாம் இந்த ஆறுபிள்ளைகளை அடையவேண்டியது" என்று மன்னன் தீர்ப்பளித்தான்.

சபை கலைந்தது. ஜயவந்தரை ஒரு பெரிய சாக்குப்பையில் போட்டுக் கட்டினர் ஏவலர். ஒரு பெரிய குளத்திற்குத் தூக்கிக் கொண்டு போய் எறிந்தனர். ஜயவந்தரோ அரசன் தீர்ப்பைக் கேட்டது முதல் பரந்தாமனைத் துதித்தவாறிருந்தார்.

'விதியை வென்றவர் எவருமில்லை. போன பிறவியில் மன்னருக்கும், என் மக்களுக்கும் பெருந் தீங்கு இழைத்திருப்பேன். அதனால்தான் என் முடிவுக்கு அவர்கள் காரணமானார்கள். நான் வந்த வேலை முடிந்து விட்டது. வேண்டிய பூஜையும், பஜனையும் அன்னதானமும் செய்தாயிற்று. பகவானே! பாண்டுரங்கா, பண்டரீ நாதா! எப்பிறவியிலும் உன்னை மறவாதிருக்கும் வரம் தரவேண்டும்" என்று மெய்யுருகப் பிரார்த்தித்த வாறிருந்தார். தந்தைமீது பாசம் கொண்ட பிள்ளைகளுக்கும், அரசனின் தீர்ப்பு வேதனையையே தந்தது. வேலிக்கு முள் இட, அது காலில் தைத்த' கதையானதே என நொந்துகொண்டார்கள். ஆனாலும் அரசன் தீர்ப்புக்கு எதிர் பேச்சு ஏது? தந்தையைத் தூக்குப்பையில் கட்டி குளத்தில் எறிவதை தவிப்போடு பார்த்தார்கள்.

ஊர் ஜனங்களும், "எப்பேற்பட்ட தர்மவான்! அவருக்கா இந்த தண்டனை" எனப் பலவாறு அரசனை விமர்சித்தபடியே குளக்கரையில் நின்றனர். என்ன அற்புதம்! சாக்குப் பையின் உட்புறம் பட்டைப்போல் மெத்தென்றிருந்தது. உட்கார்ந்த நிலையில் கட்டுக்கள் உடலை இறுக்க வேயில்லை. தெப்பத்தில் மிதப்பது போல் இருந்ததேயன்றி தண்ணீர் உட்புகவே இல்லை. மூச்சுத் திணறவில்லை. உள்ளே இருளில்லை.

வெளியே ஆகா, ஆகா என்ற சப்தம்! செய்திகேட்ட அரசன் குதிரைமீது விரைந்து வந்தான். ஒரு பொன்னிற ஆமையின் முதுகில் ஜயவந்தரைக் கட்டிய சாக்கு மூட்டை கரையில் ஒதுங்க, மக்கள் ஜெயகோஷம் எழுப்ப, அரசன் மூட்டையைத் தூக்க, ஏவலர்கள் மூட்டையைப் பிரித்தனர். உள்ளே

பத்மாசனத்தில் அமர்ந்திருந்தார் ஜயவந்தர். மூட்டை கரை சேர்ந்தவுடன் ஆமை நீரில் மூழ்கி விட்டது. மன்னரும், அவரது புதல்வர்களும், வேடிக்கை பார்க்க வந்த ஜனங்களும், அவர் காலடியில் போட்டி போட்டுக் கொண்டு பணிந்தனர்.

தங்களை மன்னிக்கும்படி வேண்டினர். 'ஏழைக்குச் செய்யும் உபகாரம் பரமனை அடைகின்றது' என்ற உண்மையை உலகுக்கு உணர்த்த ஜயவந்தர் மூலம் இறைவன் நடத்திய நாடகம் இது' என்று மக்கள் பேசிக் கொண்டனர்.

தந்தையுடன் வீடு சேர்ந்த புதல்வர்கள் தகப்பனார் கிழித்த கோட்டைத் தாண்டாமல் இருந்தனர். ஜயவந்தரும் சொத்தைப் பிள்ளைகளிடம் ஒப்படைத்து பகவத் பக்தியில் பூரணமாய் ஈடுபட்டார். பிள்ளைகளும் தந்தையின் ஆசியுடன் வியாபாரத்தைத் தொடங்கி நேர்மையான முறையில், தொழில் செய்து, அடியார்களை ஆதரிக்கப் பொருளை அள்ளி, அள்ளிச் செலவிட்டனர்.

74. இராமராஜன்

இராமராஜன் சிறந்த ராமபக்தன். தினமும் இராமாயணத்தை விஸ்தாரணமாகக் கேட்டார். 'இராமன் காட்டிற்குப் போனான்' என்று கேட்டதுமே கண்ணீர் பெருக்குவார்.

"கைகேயி, என் பிரபுவை இப்படி வதைக்கலாமா?" என்று புலம்புவார். கதை சொல்பவர் அன்புடன் "மன்னா, இராமர் காடு சென்றது கர தூஷணாதிகளையும், இராவணனையும் அழிக்கவல்லவா? அவர் அவதார நோக்கமே அதுதானே" என்று அன்புடன் கூறவும், மன்னன் தேறுத லடைந்து "ஸ்ரீ ராம ஜெயம்" என்பார். இப்படித் துன்ப கட்டங்களைச் சுருக்கியும், இன்ப கட்டங்களை விஸ்தீரணமாகவும் மன்னன் மனமறிந்து சொல்வார் புராணிகர். ஒருமுறை அவருக்குக் கடுமையான காய்ச்சல். தாங்க முடியாத தலைவலி. அரண்மனையில் இராமாயணப் பிரசங்கம் சொல்ல அரசர் வேறு ஆள் நியமித்து விடுவாரோ என்ற அச்சம். நல்ல

வருமானம் போய் விடுமே என்ற கவலை. மகனை அழைத்தார். அவனுக்குப் பதிமூன்று வயது. இனியகுரல். தந்தையிடம் இராமாயண சுலோகங்களைக் கற்றிருந்தான்.

அவனைக் கூப்பிட்டு அரண்மனைக்குச் சென்று இராமாயணத்தைப் படிக்கும்படி கூறினார் தந்தை.

"மானைக் கண்டு சீதை மனதைப் பறிகொடுத்த இடம். கஷ்டங்களைச் சுருக்கி, வெற்றிகளை விஸ்தாரமாகப் படி. மன்னர் உணர்ச்சி வசப்படக் கூடியவர்" என்று எச்சரித்து அனுப்பினார்.

சிறுவனுக்கு மகா சந்தோஷம். அரண்மனையில் அரசருக்குக் கதை சொல்லப்போகிறோம் என்ற பெருமை. தலைப்பாகை, அங்க வஸ்திரம் என்று அலங்காரம் செய்து கொண்டு ஓலைச் சுவடியோடு போனான்.

மன்னரைக் கண்டு வணங்கி, தந்தையின் உடல் நிலையைப் பற்றிக் கூறி, தான் கதை சொல்லப் போவதாகப் பணிவுடன் கூறினான்.

"மன்னர் வேண்டாமென்று சொல்லி விடுவாரோ? சிறுவன் என்று ஒதுக்குவாரோ" என்ற அச்சம். முகத்தைப் பார்த்தபடி நின்றார்.

ஆனால் ராமராஜர் பெருந்தன்மையுடன், ஆசனமளித்து படிக்கும்படி கூறினார்.

சிறுவன் மட்டற்ற மகிழ்ச்சியுடன் கதை சொன்னான். தன் திறமையெல்லாம் காட்டிப் பாராட்டுப் பெற வேண்டுமென உணர்ச்சி பொங்கக் கூறினான். தந்தையின் எச்சரிக்கை அவனுக்கு மறந்து போயிற்று.

"சீதை பொன்மான் மீது ஆசைகொள்கிறாள். லக்ஷ்மணன் அரக்கர் சூதென்று தடுக்கிறான். தான் போய் பிடித்து வருவதாகக் கூறுகிறான். சீதையோ இராமனே போக வேண்டுமென்று விரும்புகிறான். இராமன் அவள் நோக்கத்தைப் புரிந்து கொண்டு லட்சுமணனைத் தடுத்து 'அரக்கர் மாயை என்றாலும் அரக்கரை அழிக்கவே நாம் வனம் வந்தது. அஞ்சி ஒளிந்து கொள்ள அல்ல. சீதையைப் பத்திரமாய்ப் பார்த்துக் கொள்" என்று கூறி மான் பின்னே செல்கிறான். மான் இராமனை வெகு தூரம் அலைக்கழிக்கிறது. கிட்டாது என்று சோர்ந்து நின்றால் ஓடாது நிற்கும்.

விரட்டிக் கொண்டு ஓடினாலோ மலைமீதும், பள்ளத்தாக்கிலும் மின்ன லென ஓடும். கடைசியில் லட்சுமணன் சொன்னதே சரி என்றுணர்ந்த இராமன், கோதண்டத்தை எடுத்து அம்பு தொடுத்தான்".

இந்தக் கட்டத்தை நேரில் நடப்பது போல் உபமான உபமேயங்களோடு வர்ணித்தான் சிறுவன். அரசர் ஆடாது அசங்காது கேட்பது, அவனை மேலும் உற்சாகப் படுத்தியது. 'இராமன் அம்பு தொடுத்தான்' என்று கூறியதும் மன்னர் "சபாஷ்! முடிந்தது மான்" என்று தொடையைத் தட்டினார்.

மான் இறந்ததென்று கூறியதும் "வீழ்க அரக்கர்" என்று ஆரவாரம் செய்தான் இராமராஜன். "ஹா சீதா! அந்தோ லட்சுமனா" என்று மாரீசன் குரல் கொடுத்ததைக் கேட்டதும் 'ஸ்ரீராமஜெயம்' என்று உருகினார். சீதை இதைக் கேட்டு மயங்கி விழுந்தாள் என்பதைக் கேட்டதும் "ஹே! மாதா" என்று வருந்தினார்.

இராவணன் சீதாபிராட்டியை வஞ்சகமாய்த் தூக்கிப் போன செய்தி கேட்டு ராமராஜரின் கண்கள் ஆறாகப் பெருகின. பற்களை நறநறவென்று கடித்தார். முஷ்டியை உள்ளங்கையால் குத்தினார்.

லட்சுமணனைக் கண்ட இராமர் பதறி, தம்பியுடன் பர்ணசாலை வந்து தேவியைக் காணாமல் கண்ணீர் உகுத்தது கேட்டு 'ஸ்ரீராமஜெயம், ஸ்ரீராமஜெயம்' என்று புலம்பினார்.

ஜடாயு வதத்தைக் கேட்டதும் தலை சுற்ற அப்படியே சுவரில் சாய்ந்து கொண்டார். ஜடாயுவை மடியில் போட்டுக் கொண்டு, இராமன் கதறியது கேட்டு தானும் கதறினார். இராமன் காடு மேடெல்லாம் அலைந்தது கேட்டதும், சீறி எழுந்தார்.

"போதும் நிறுத்து.....என் ஐயன் காடுமேடெல்லாம் அலைய நான் இங்கு கதை பேசிக் கொண்டிருப்பதா? படை சித்தமாகட்டும் எனக்குத் தெரியும் பிராட்டி இருக்குமிடம். இலங்கையை அழித்து சீதையை மீட்பேன். என் அப்பன் கண்ணில் கண்ணீரா?" என்று கர்ஜனை செய்தான்.

இராமராஜனின் கண்கள் சிவந்திருந்தன. உதடுகள் துடித்தன. "ஸ்வாமி, இது கதை" என்று சமாதானம் செய்யவந்த அமைச்சரிடம் சீறினான்.

"கோழைகள் வரவேண்டாம். தலையணையைப் போட்டுக் கொண்டு உறங்கலாம். இப்போது வீரம் தான் பேச வேண்டும். எங்கே என் குதிரை? உடைவாளும், கவசமும் வந்தாயிற்றா?" மடமடவென்று உத்தரவுகள் பறந்தன.

மன்னர் எதிர் நிற்கவே மற்றவர் பயந்தனர். நடப்பது நடக்கட்டும் எனச் சேனாதிபதி படைகளைத் திரட்டினான். மன்னர் தலைமையில் புழுதி கிளம்ப படை புறப்பட்டது. கடற்கரை. படைகள் அணி வகுத்து நின்றன. 'இலங்கை அரசன் என்ன நினைப்பாரோ' என்று அமைச்சருக்குக் கவலை. 'இராமா, இதற்கொருவழி நீ தான் காண்பிக்க வேண்டும்" என்று மௌனமாகப் பிரார்த்தித்தார்.

திடீரென்று மன்னர் படைகளை நோக்கி, "நீங்கள் யாரும் என்னுடன் வரவேண்டாம். எனக்குத்தான் இராமன் மேல் பிரியம். நான் ஒருவனாகவே சென்று பிராட்டியை மீட்டு வருவேன்" என்று கட்டளையிட்டு விட்டு, சமுத்திரத்தில் இறங்கி நடக்கலானார். அனைவரும் திகைத்து நின்றனர். தண்ணீர் இடுப்பு, மார்பு, வாய் என்று ஏறிக்கொண்டே போயிற்று. பொங்கும் வெள்ளத்தைக் கையால் தடுத்து விட முடியுமா? மன்னரின்



பக்திப் பித்தும் அப்படித்தான்! நடந்த சரித்திரம் என்பதை முற்றிலும் மறந்து விட்டார்.

'இராமா, இராமா' என்று சேனாவீரர்களின் கோஷம். பளீரென்று ஒரு மின்னல்! சமுத்திரப் பரப்பின் மேல் எம்பெருமான் பிராட்டியோடு தோன்றினார். "அன்பா! உன் அன்புக்கும், உதவிக்கும் நன்றி! இதோபார் ஜானகி! நானே இராவணனை சம்காரம் செய்து உன் அன்னையை மீட்டு வந்து விட்டேன். நீ நாடு திரும்பு" என்றார்.

சேனா வீரர்கள் மெய் மறந்து நின்றனர். இராமராஜர் மகிழ்ச்சியுடன் சேனைகளைத் திரும்பிச் செல்ல உத்தரவிட்டார். கதை சொல்பவரின் புதல்வன் தந்தையிடம் போய் நடந்ததைக் கூறினான். தன் காய்ச்சலையும் பொருட்படுத்தாது அரண்மனைக்கு மகனோடு வந்தார் பௌராணிகர்.

மன்னர் படையோடு கடற்கரைக்குச் சென்றிருப்பதைக் கேட்டு சமுத்திரக் கரைக்கு விரைந்தார்கள். அங்கே ஸ்ரீராமச்சந்திரன் பிராட்டி யோடு நின்ற அற்புத தரிசனத்தை அவர்களும் கண்டு மகிழ்ந்தனர். எங்கும் "ஹரே ராம் ஹரே ராம்" என்ற கோஷங்கள். கன்னத்தில் போட்டுக் கொள்வோரும், விழுந்து விழுந்து வணங்குவோரும், ஆடிப்பாடுவோரும், ராமனும், பிராட்டியும் அயோத்திக்குத் திரும்பி வந்த நாளில் மக்கள் கொண்ட பரவசம் அங்கேயும் இருந்தது. ஸ்ரீராமர் அந்தர்த்யானமான பின் "இந்த சிறுவனாலல்லவா சீதா – ராம தரிசனம் கிடைத்தது" என்று அனைவரும் சிறுவனைக் கொண்டாடினர். அரசரும் அரண்மனைக்கு வந்தபின் பௌராணிகரையும், அவர் மகனையும் நிறையப் பரிசு கொடுத்து கௌரவித்து வழி அனுப்பினார்.

அந்த ஊரில் நரஹரி என்ற ஹரி பக்தர். தசாவதாரங்களையும் நாடகமாக நடிப்பார். இவரது நாடகங்களுக்குப் பெருங்கூட்டம் சேரும். தானே பாத்திரமாக மாறிவிடுவார். அன்று பிரகலாதன் நாடகம். இவர் நரசிம்ம வேஷம் தரித்து பெரிய தூணுக்குப் பின் மறைந்திருந்தார். பிரகலாதனிடம் இரணியன் "உன் ஹரி இந்தத் தூணிலிருக்கிறானா?" என்று கேட்டு அட்டகாசமாய் சிரித்தபடி தூணை உதைக்கிறான். நரஹரி வெளியே வந்தார். அண்டம் பிளவுபட இடி இடியெனச் சிரித்தார். இரணிய வேடம் தரித்தவன் விதவைத்தாயின் ஒரே மகன். அன்றைய நாடகத்திற்கு அவன் அன்னையும் வந்திருந்தாள். இரணியனைப் பிடித்து மடியில் போட்டுக் கொண்டு மார்பைக் கிழித்தார் நரஹரி.

தத்ரூபமாக இருக்க வேண்டுமென்று விரல் நுனிகளில் நீளமான கூரிய சிறு கத்திகள் பொருத்திய கவசம் அணிந்திருந்தார். இரணிய வேடமிட்டவன் வலிபொறுக்காமல் அலறினான். திமிறி எழமுயன்றான். சபையில் ஊசி விழுந்தால் கேட்குமளவு நிசப்தம்.

ஆனால் நரஹரி அவனை ஹரியை நிஜமாகவே தூஷித்த, பிரகலாதனை வாதனைக்கானாக்கிய இரணியனாகவே எண்ணிக் கிழித்து, இரத்தத்தைக் குடித்துவிட்டார். இரணிய வேடமிட்டவனின் உயிரற்ற உடல் 'சொத்'தென்று கீழே விழுந்தது. எழுந்து நின்று கொக்கரித்தார் நரஹரி. இதைப்பார்த்த அவன் தாயார் வயிற்றி லடித்துக்கொண்டு அலற, ஜனங்கள் பயந்து வெளியே ஓடினர். வழக்கு மன்னரிடம் வந்தது. மன்னருக்கும் நரஹரியைப் பற்றித் தெரியும்.

'ஹரிபக்தராயிருந்தாலும், என்னதான் தன்னை மறந்தாலும், அப்பாவி யான ஒரு உயிரைக் கொல்வது மன்னிக்க முடியாத குற்றம். இதற்கு மரண தண்டனை விதிக்க வேண்டும்" என்பது மக்களின் ஏகோபித்த முடிவாக இருந்தது. "தவறினால் பகை முடிக்க இதையே சாக்காகக்கொண்டு விடுவர் நயவஞ்சகர்" என்று அபிப்ராயம் சொன்னார் குலகுரு.

"இவருக்குப் பக்தர் என்று இரக்கம் காட்டினால் ஓரவஞ்சகர் மன்னர்" என்று மக்கள் மனதில் கசப்பு விழும்" என்றார் முதலமைச்சர். மன்னர் வெகு நேரம் யோசித்தார். பிறகு "நாளை தீர்ப்பு சொல்கிறேன். இன்று கடைசியாக நான் நரஹரியின் இராமாயண நாடகம் பார்க்க விரும்பு கிறேன். அதிலும் நரஹரி நடத்தும் பாதுகா பட்டாபிஷேகம் பார்க்க ஆசை" என்றார்.

உடனே நாடகம் நடத்த எற்பாடாயிற்று. நரஹரிக்கு தசரத வேடம். கைகேயியின் வாக்கைக் கேட்டு இராமன் சீதையோடும், தம்பியோடும் வனம் செல்கிறான். தசரதர் மயங்கி விழ, வசிஷ்டர், சுமந்திரர் எப்படியும் இராமனை சமாதானம் செய்து திருப்பி அழைத்து வந்து விடுவார், என்று தேற்றிக் கொண்டிருக்கிறார். சுமந்திரர் வருகிறார் குனிந்த தலையோடு. "இராமன் எங்கே?" தசரதர் ஆவலுடன் கேட்க, சுமந்திரர் கண்ணீர் பெருக்க, தசரதர் 'இராமா, இராமா' என்றலறியபடி உயிர் துறக்கிறார்.

அழுதுகொண்டே ஓடிவந்த கோசலையையும், சுமித்திரையையும் நிற்கச் சொன்னார் இராம ராஜர். காட்சியில் ஐக்கியப் பட்டிருந்த

ஜனங்கள், காரணம் புரியாமல் திகைத்தனர். "தன்னால் ஒரு உயிர் போய் விட்டதே என்று மனதால் சித்ரவதைப் பட்டுக்கொண்டிருந்த நரஹரி, தானே தனக்கு மரணதண்டனை விதித்துக் கொண்டு விட்டார்" என்றார் அரசர். அருகிலிருந்த கலைஞர்கள் நரஹரியைப் புரட்டிப் பார்த்தனர். நரஹரி நிஜமாகவே இறந்து விட்டதைக் கண்டு திடுக்கிட்டனர்.

தன்னையும், இறைவனையும் வேறுபடுத்திப் பார்க்கத் தெரியாத நரஹரியின் அன்யைப் புரிந்து கொண்டார்கள் மக்கள். அதே சமயம் "இன்று கடைசியாக இவர் நாடகம் பார்க்க விரும்புகிறேன்" என்ற அரசரின் வாக்கு நிஜமாகப் போனதையும் எண்ணி வியந்தனர்.

"தாரக நாமத்தை சதா உச்சரிக்கும் நாவல்லவா! அதுதான் சொல்வதெல்லாம் சத்தியவாக்காகி விடுகிறது" என்று மன்னரிடம் பயபக்தியும், விசுவாசமும் கொண்டனர்.

75 ஹரி அனந்த வைஷ்ணவர்

வைஷ்ணவ குலத்தில் உதித்தவர் ஹரி அனந்தர். இவருக்கு ஏராளமான சீடர்கள். இருந்தும் ஒருவன் மட்டும் அவரிடம் அபரிமிதமான பிரியம் வைத்திருந்தான்.

வடக்கே கோதுமை விளைச்சல் அதிகம். தென்னாட்டில் பிட்சைக்கு வருபவர்களுக்கு அரிசி போடுவது போல, வடநாட்டில் கோதுமை மாவு போடுவார்கள். சீடன் தினமும் ஒருபடி மா பிட்சை வாங்கி வந்து குருவிடம் சமர்ப்பிப்பான். குரு அதை ரொட்டி தட்டி பசியால் நவிந்தவர்களுக்கு அளித்துப் பின் தான் உண்பார்.

ஒருதடவை பிட்சைக்குப் போன இடத்தில் சாது இராமானந்தரைக் (கபீர்தாசரின் குரு) கண்டான். பாதங்களில் விழுந்து வணங்கினான்.

இராமானந்தர் திரிகாலமும் உணர்ந்தவர். அனந்தரின் சீடரை ஆசிர்வதிக்கக் கையை உயர்த்தியவர் 'அடப்பாவமே' என்றபடி கையை அப்படியே நிறுத்தி விட்டார். கூடி இருந்தவர்கள் திகைத்தனர்.

சீடன் "ஸ்வாமி! அன்று மலர்ந்த தாமரை போன்ற தங்கள் முகம் கூம்பியது எதனால்? எதுவாயிருந்தாலும் ஒளிக்காமல் சொல்லுங்கள். நான் கோழையல்ல" என்று பணிவுடன் கேட்க,

இராமானந்தர் "நற்குணங்களின் பிறப்பிடமாய் உள்ள உனக்கு நாளைக் காலையோடு ஆயுள் முடிகிறதே என்பதை அறிந்ததும் எழுந்த வேதனை அப்பா" என்றார்.

சீடன் மீண்டும் அவரை வணங்கி, "மரணம் எந்த வயதிலும் வரலாம். முன் கூட்டித் தெரிந்து கொண்டது ஒரு பாக்கியம். அதற்கு முன் தங்களைத் தரிசித்தது அதைவிடப் பெரும் புண்ணியம்" என்று கூறி விடை பெற்றுச் சென்றான். மடத்திற்குச் சென்று குருநாதரை வணங்கி, இராமாநந்தர் கூறியதைத் தெரிவித்தான்.

"மரணத்திற்கு நான் அஞ்சவில்லை. தங்களுக்கு சேவை செய்யும் பணி குறையாய் போகிறதே!" என்று கலங்கினான். ஹரி அனந்தர் சீடனைத் தேற்றி, "இறந்த குரு புதல்வனை மீட்டுத் தந்தவன் அந்த மாயவன். சக்கரத்தை வீசி முதலையை முடித்து, கஜேந்திரனைக் காத்த



ஆதிமூலம் உன்னையும் காப்பாற்றுவார். கவலையை விட்டு நிம்மதியாகத் தூங்கு" என்றார்.

சீடனும் வழக்கம் போல் வேலைகளை முடித்துக் கொண்டு உறங்கினான். அதிகாலை எழுந்து பார்த்தால் குருநாதர் தனக்கு முன் எழுந்து நீராடி முடித்திருந்ததைப் பார்த்து பிரமித்தான். ஹரி அனந்தர் சீடனை சீக்கிரம் குளித்து விட்டு வரும்படி பணித்தார். சீடன் விரைந்து நீராடி வந்தான். பூஜையறையில் தனக்கு முன் உட்காரச் சொன்னார்.

"விழிகளைத் திறக்காதே! நெஞ்சிலே பரந்தாமனின் விஸ்வ ரூப வடிவத்தை உருவகப்படுத்திக் கொள். புற சப்தங்களுக்கு செவி கொடாதே! உதடுகள் அவன் நாமாவை இடைவிடாது உச்சரிக்கட்டும்" என்று உத்தரவிட்டு விட்டு தியானத்தில் ஆழ்ந்தார். தசாவதாரங்களையும் உருக்கமாகப் பாடினார். அப்போதே நடப்பது போல் அணு அணுவாகக் கண்டு களித்தார்.

முதலில் "சீடனைக் காப்பாற்று" என்று பிரார்த்தித்தவர், பின்பு பக்தியில் மூழ்கி கோரிக்கையை மறந்தார். அந்த நேரம் இருவரின் தலைக்கு மேல் சக்கரம் சுற்றியது. அதை இரண்டு பேருமே அறிய மாட்டார்கள்.

அந்தசமயம் கால தண்டத்தை ஏந்தியபடி எருமைக்கடாவின் மேல் உட்கார்ந்தபடி யமதருமன் வந்தான்.

சக்கரத்தின் சுழல் வேகத்தைக் கண்டு பிரமித்தான். நெடு நேரம் காத்திருந்தான். வைஜயந்தி மாலை குலுங்க இறைவன் நகைப்பதைக் கேட்ட யமன் வெட்கி, அவர் பாதம் பணிந்து அவ்விடத்தை விட்டகன்றான்.

"போதும். அன்று மார்க்கண்டேயனுக்காக சிவனிடம் உதை வாங்கினோம். மறுபடி பெருமாளிடம் உதை வாங்கத் தென்பில்லை. அந்தப் பாதங்கள் மகாபவியை, சகடனை உதைத்தவை. காளிங்கன் தலை மீது நர்த்தன மாடியவை. மூவடிகளால் உலகையே அளந்தவை. உதை பட்டால் மீள முடியாது" என்று புலம்பியபடி யமலோகம் போய்ச் சேர்ந்தான்.

பரந்தாமனின் சிரிப்பைக் கேட்டு ஹரி அனந்தரும், சீடனும் கண் விழித்தனர். ஆடிப் பாடினார்கள் பகவான் இருவரையும் கட்டித் தழுவி ஆசிர்வதித்து மறைந்தார். சீடன் குருவை வணங்கி பிட்சைக்குப்

புறப்பட்டான். இராமானந்தரை தரிசித்தான். இராமானந்தர் அவன் உயிரோடிருப்பதைக் கண்டு ஞான திருஷ்டியில் நடந்ததை அறிந்து மகிழ்ந்தார்.

ஹரி அனந்தரின் பாதங்களில் பணிந்து "மறலியையே வென்று விட்டிரே" என்று புகழ, ஹரிஅனந்தரும் இராமானந்தரின் கால்களில் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து, "தாங்கள் சீடனின் அற்பாயூளை, எதிர்காலத்தை அறியும் சக்தியால் கண்டு சொன்னதால் அல்லவா பரந்தாமன் தரிசனம் கிடைத்தது" என்று இதயம் பூரிக்கச் சொன்னார்.

சீடனும், ஹரி அனந்தரின் இறுதிக் காலம் வரை மாறாத பக்தி கொண்டு குருநாதருக்குச் சேவை செய்து வந்தான்.

76. கோமா பாய்

"ஏ பொம்பிளை .... ஒத்திப்போ இதென்ன ரோதனை .... படகைப் பிடிச்சுக்கிட்டு .... உனக்கெல்லாம் பண்டரீபுரம் என்ன கேடு பேசாம பிச்சையெடுத்த மாவை ரொட்டி சுட்டுத் தின்னுட்டு அக்கடான்னு விழுந்து கெட" என்ற ஓடக்காரன் உரக்க, "ஓராள், ஒரு ஆள்.... பண்டரீபுரம் ..... வரீங்களா?" என்று கரையை நோக்கிக் குரல் கொடுத்தான்.

விதவைக் கோமா கெஞ்சினான். "அப்பா, உன்னைக் கூடப் பிறந்த சகோதரனாக நினைச்சுக் கேட்கிறேன். அந்த ஓராளா என்னை ஏற்றிக்கொள்ளக் கூடாதா? நாளைக்கு ஆடிமாத ஏகாதசி. பீமா நதியிலே வெள்ளம் ஓடறதாலே தானே உன்னைக் கெஞ்சறேன்? உனக்கும் அந்தப் புண்ணியத்துலே பங்குண்டு. மத்தவங்க கிட்டே பணத்தை வாங்கி புதைச்சா வைக்கப்போறே? சாப்பாட்டுக்கு கொஞ்சமாவது செலவழிக்க மாட்டியா? என்கிட்டே பணத்துக்கு பதிலா ரொட்டி மாவை வாங்கிக் கொண்டு என்னை அக்கரை சேர்க்கப்படாதா?" அதேசமயம் ஒரு வியாபாரி இரைக்க இரைக்க ஓடிவந்து ஓடத்தில் ஏறினான்.

ஓடக்காரன் கோபத்துடன் "உன்னைப் போல் நாலு பயணிகள் இருந்தால், நானும் கபாலம் ஏந்த வேண்டியது தான் சே! தூரப்போ!

காசில்லாதவளுக்குக் கடவுள் தரிசனம் வேண்டிக் கிடக்கிறதோ" என்றபடி ஓடத்தைச் செலுத்த, படகைப்பிடித்துக் கொண்டிருந்த கோமா, தடுமாறித் தண்ணீரில் விழுந்தாள்.

புடவை சொட்டச் சொட்ட நனைந்து விட்டது. சூரியன் மலைவாயில் விழுந்து இருள் கவிந்து கொண்டு வந்தது. கோமா புடவையைப் பிழியவும் மனமின்றி, சோர்வுடன் அழுதபடி, அப்படியே உட்கார்ந்து விட்டாள். எவ்வளவு நேரம் அப்படி இருந்தாளோ? "அம்மா! தாங்கள் யார்? என்ற குரல் கேட்டு நிமிர்ந்தாள். இளம் வயது. அரும்பு மீசை. தலையில் முண்டாசுக்கட்டு. குறும்புப் புன்னகை. காந்தக் கண்கள். கறுப்பு நிறம். தார்பாய்ச்சிக் கட்டிய வேஷ்டி.

"அப்பா. நான் உன்னை இந்த ஊரில் பார்த்ததேயில்லையே! நீ யார்? என் பெயர் கோமா. சிறு வயதில் பெற்றோர்களை இழந்தேன். மணமான சில நாட்களிலேயே கணவனையும் பறிகொடுத்த தரித்திரி. நாளை ஏகாதசிக்குப் பண்டரி நாதனை தரிசிக்க ஆசை. பீமா நதியில் சோதனை போல் வெள்ளம். காசில்லாதவளுக்கு ஆசை வரலாமா? என் பிறவியை நொந்து கொண்டிருக்கிறேன்" என்றாள் நலிந்த குரலில் கோமா.

அவன் அன்புடன் "அம்மா, நானும் ஒரு ஓடக்காரன் தான். என் பெயர் விட்டல். நிறைய சம்பாதித்து விட்டேன். பண்டரீபுரம்தான் எனது ஊர். இன்னும் யாராவது வருவார்களோ என்று இக்கரை வந்தேன். படகு சும்மாதான் போகிறது. ஏறுங்கள் போகலாம்" என்றான். கோமா மகிழ்ச்சியுடன் ஓடத்தில் ஏறிக் கொண்டாள். படகு ஆடி அசைந்து பண்டரிபுரம் சேர்ந்தது. கோமா தன்னிடம் உள்ள மாவைக் கொடுக்க, அவன் "அம்மா உங்களுக்கே நான் தரவேண்டும். ஏழைகளுக்குக் கொடுங்கள்" என்று சொல்லி விடை பெற்றுக் கொண்டான்.

மறுநாள் அதிகாலை. சந்திர பாகா நதியில் தீர்த்த மாடிவிட்டு, கோபுர வாசலை அடைந்து, பகவந் நாமாவையே இடை விடாது பாராயணம் செய்து வந்தாள். அடுத்த நாள் துவாதசி. யாராவது பிராம்மணருக்கு உணவளித்த பின்பே கோமா சாப்பிட்டு விரதத்தை முடிப்பாள். கோமா எதிர்ப்பட்ட ஏழைகளையெல்லாம் மடக்கி, மடக்கி வருந்தி அழைத்தாள். கந்தலுடைப் பரதேசிகளும் அவளைப்பார்த்துக் கேலியாக "ஏ கிழிசல் ராணி! பெரியபெரிய பணக்காரனெல்லாம் பருப்புப் பச்சடி, பாயசத்துடன் விருந்து வைக்கிறான்.

இன்று ஒரு நாளாவது திருப்தியாய் சாப்பிடுவோம் என்று போய்க் கொண்டிருக்கிறோம். உன் புழுத்த மாவைச் சாக்கடையில் கொட்டி விட்டு நீயும் எங்களோடு வந்து சாப்பிடுவாயா? நமக்கெல்லாம் எதற்கு விரதமும், பாரணையும்? இருந்தா விருந்து இல்லாத நாள் விரதம்" என்று சொல்லிச் சென்றனர். நேரம் சென்று கொண்டே இருந்தது. நடுப்பகல். கோமா சோர்ந்து விட்டாள். "பண்டரீநாதா விரதமும், பாரணையும் செல்வந்தர்களுக்குத் தானா? ஆத்ம சுத்தியுடன் நான் சுத்தப்பட்டினி கிடந்து பஜனை செய்ததை நீ ஏற்க வில்லையா? பக்த வத்ஸலன் என்று உன்னைச் சொல்வது பொய்யா? குசேலரிடம் அன்பு காட்டி அவரது அவலை ஏற்றது போல், என் மாவை ஏற்க எவரையாவது அனுப்ப மாட்டாயா?" என்று பிரலாபித்தாள்.

அப்போது ஒரு கிழவர் கம்பைத்தட்டியபடி அங்கே வந்தார். "அம்மா, நான் ஏழை. பசி பிராணன் போகிறது. ஏதாவது சாப்பிட இருக்கிறதா? அதோ அங்கே சாப்பாடு கொட்டுகிறார்களே என்று கேட்டு விடாதே! வயதான எனக்கு அதையெல்லாம் ஜீரணிக்க சக்தி இல்லை" எனவும் கோமா எல்லை மீறிய மகிழ்ச்சியடைந்து ஒரு பிடிமாவை அள்ளித்தர,



கிழவர் "அம்மா, நானோ கிழவன். எங்கே போய் சுள்ளி பொறுக்கி அடுப்பு மூட்டி, சப்பாத்தி செய்து ....என்பசி எப்போ தீரும்? அப்படி உட்கார்ந்திருக்கிறேன். நீயே சப்பாத்தி செய்து தந்தால் இந்த கிழக்குடலின் வேட்கை தணியும்" என்றார்.

கோமா மகிழ்ச்சியோடு மூன்று பெரிய கற்களைக் கொண்டு அடுப்பாக்கி, சுள்ளி பொறுக்கி வந்து அடுப்பு மூட்டி, பக்கத்திலிருந்த யாத்ரீகர்களின் தோசைக்கல்லை வாங்கி ரொட்டி செய்து தந்தாள். கிழவர் 'படு பிரமாதம்' என்று ரசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே கோலை ஊன்றிக் கொண்டு வந்த ஒரு கிழவி " இங்கே வந்து பசியாறியாகிறதாக்கும்! உங்களை எங்கெல்லாம் தேடுவது? என்னை விட்டு விட்டுச் சாப்பிடுகிறீர்களே! நான் என்றைக்காவது இப்படிச் செய்திருக்கிறேனா?" என்று கிழவரிடம் கோபமாய்ப் பேச, கிழவர் கோமாவின் பக்கம் திரும்பி "அம்மா, இவள் என்மனைவி, இவளுக்கும் ஒன்று கொடு" என்றவர், மனைவியிடம் "அடை என்ன ருசி தெரியுமா? அரிசி, பருப்பு, நெய், வெல்லம் போட்டுப் பண்ணின மாதிரி நாக்கில் தேனாய் கரைகிறது. சாப்பிட்டுப் பாரேன்" என்று சிபாரிசு செய்தார்.

கோமா அடுத்த சப்பாத்தியை கிழவியிடம் கொடுத்தாள். இருவரும் மாறி மாறி சாப்பிட்டும் மாவு குறையவேயில்லை. இதென்ன மாயாஜாலம் என்று கோமா திகைத்தாள். தங்கள் பசி தீர்ந்ததாகத் கிழத் தம்பதியர் கூற, கோமா பாரணை செய்தாள். ஒருவாய் சாப்பிடவுமே வயிறு நிறைந்து விட்டது. கோமா சந்தேகத்தோடு வந்தவர்கள் யாரென நோக்க, அங்கே விட்டவனும், ருக்மாபாயுமாக அவர்கள் காட்சியளித்தனர். கண்களில் ஆனந்தம் பொங்க இருவரையும் மும்முறை வலம் வந்து நமஸ்கரித்தாள்.

கண்ணன் அன்புடன் "கோமா பாய்! பக்தி நிறைந்த நெஞ்ச முள்ளவர்களே நிஜமான செல்வந்தர்கள். அவர்கள் தருவதையே நான் மனமுவந்து ஏற்கிறேன். உனக்காக ஓடமோட்டி வந்தேன். அங்கேயே நீ இருந்தாலும் அங்கேயே நாங்கள் வந்திருப்போம். இனி வருத்தத்தை விடு. தன்னம்பிக்கை கொண்டு, தொண்டு செய்" என்று ஆசீர்வதித்து மறைந்தார். நடந்தது நிஜமா, கனவா, பிரமையா என பிரமித்து நின்றாள் கோமா பாய்! இறுதிக்காலம் வரை இப்படியே பாண்டுரங்கனை பூஜித்தபடியே இறைவனடி சேர்ந்தாள் கோமாபாய்.

77. ஹரி வியாசர்

"சீடர்களே! அழகான ஆறு .... மணமிகு மலர்கள் நிறைந்த நந்தவனம். சற்றே இளைப்பாறி இங்கேயே சாப்பிடலாம். பூரி போவதற்குள் பசி தாங்காது" என்றார் ஹரி வியாசர்.

பயணப் பொருட்களை அங்கேயே இறக்கினர் சீடர்கள். ஆற்றில் நீராடினர். தூரத்தில் தெரிந்த காளி கோயிலுக்குப் புறப்பட்டனர். அங்கே அவர்கள் கண்ட காட்சி! துடிக்கத்துடிக்க ஒரு ஆடு வெட்டப்பட்டது. 'ஹரி, ஹரி' என்று கண்களை மூடிக்கொண்டார் ஹரி வியாசர்.

"இதென்ன அக்ரமம்! பகவானால் படைக்கப்பட்ட ஒரு உயிர் இன்னொரு உயிரைக் கொல்வதா? இதற்குப் பெயர் பூஜையா? எந்த தெய்வம் காப்பற்றப்பட வேண்டுமோ அந்த தெய்வமே இதைப் பார்த்துக் கொண்டிருப்பதா? இதென்ன நீதி? எங்கே இருக்கிறது நியாயம்? இந்த இடத்தில் நின்றாலும் பாவம்! வாருங்கள், போகலாம்" என்று அப்படியே திரும்பினார்.



சீடர்களும் மௌனமாக அவரைப்பின் தொடர்ந்தனர். எதிரே சூலாயுதத்தோடு காளி வழி மறித்தாள். "அன்பா, என் சோதரனின் பக்தன் நீ! ஆலயம் வரை வந்து விட்டுப் பசியோடு செல்வது அழகல்ல. பிரசாதம் வாங்கி சாப்பிட்டு விட்டுப் போ" என்றாள்.

ஹரிவியாசர் "எது நிவேதனம்? இரத்தமும், சதைத் துண்டுகளும், எலும்புமா? அதை நான் சாப்பிடுவதில்லை. என் வழியில் குறுக்கிடாதே! விலகி நில்" என, காளி அன்புடன் "அன்பா! நீ மிகவும் கோபமா யிருக்கிறாய்! முட்டாள்களின் செய்கைக்கு என்னைப் பழி சொல்லலாமா? இவர்கள் நா ருசிக்காக பிரார்த்தனை என்ற பெயரில் ஆடு, மாடு, கோழிகளைப் பலி இடுகிறார்கள். இதற்காக இவர்கள் நரகத்தில் தண்டிக்கப் படுவார்கள். தெய்வங்கள் விரும்புவது ஆத்மார்த்தமான பக்தியையும், தொண்டையுமே. இவர்கள் பொங்கலிட்டு நிவேதனம் செய்து பசியாறக் கூடாதா? மதியீனர்கள்!" என்றாள்.

ஹரி வியாசர் "தாயே! குழந்தைகள் உலகைப் புரிந்து கொள்வது பெரியவர்களால்தான். தெய்வமான நீ பலியைப் பார்த்துக் கொண்டிருப்பது எந்த விதத்தில் நியாயம்?" என்று தர்க்கித்தார். தேவி கனிவுடன் "காயும், கனியும் ஒரு மரத்தில் இருக்கும் போது கனியைப் பறித்து உண்ணும் பகுத்தறிவு கொண்ட மனிதனுக்கு உயிர்பலி தவறென்று உணர்ந்து கொள்ள முடியாதா? குதிரைகளும், தேர்களும் வரும் போது மோதிவிடும் என்று ஒதுங்கி நடக்கிறார்கள். உணவைப் பச்சையாகத் தின்னாமல் வெந்து உப்புக் காரம் போட்டு பக்குவப்படுத்தி உண்கிறார்கள். இவ்வளவு தெரிந்தவர்களுக்கு இது தெரியாதா?" என்று கூறினாள்.

ஹரி வியாசர் "அம்பிகே! நீ சொல்வது நிஜம்தான்! கனியாத காயை வைக்கோலில் வைத்துப் பழுக்க வைக்கிறோம். தண்டனை என்று பயமுறுத்தித் தவறுகளைக் குறைக்கிறோம். அது போல எவ்விதமாவது பலி நிறுத்தப் படவேண்டும். அதற்கு நீ உறுதி தந்தால் உன் ஆலயம் வருவேன்" என்றார். தேவி அப்படியே உறுதி அளித்தாள். ஹரி வியாசரும் ஆலயம் வந்து கோவிலை சுத்தம் செய்து, தேவிக்கு ஆற்றுநீரால் அபிஷேகம் செய்து, பாற்பொங்கல் சமைத்து, நிவேதனம் பண்ணிவிட்டு, சீடர்களோடு அதைச் சாப்பிட்டு அன்றிரவு அங்கே உறங்கினார்.

அன்றிரவு அந்நாட்டு மன்னர் கனவில் காளி பிரசன்னமாகி, "மன்னா, உன் தேசத்தில் வைசூரி, காலரா போன்ற கொடிய நோய்களும்,

காலத்தில் மழை பெய்யாமைக்கும் காரணம் உயிர் வதையே! அவைகளைக் கொல்லும் போது அவைகள் போடும் தீனக்குரல் எனக்கு நாராசமாக இருப்பதால் சிலா வடிவத்தில் என் சக்தி இல்லை. வேளாண்மை செழிக்க வேண்டுமானால், நாடு சுபீட்சமடைய நீ விரும்பினால் உயிர்பலியை நிறுத்து. என் ஆலயத்தில் ஹரி வியாசர் சீடர்களோடு வந்து தங்கி இருக்கிறார். அவரை உபசரித்து அவர் உதவியோடு, சுற்று வட்டாரம் பூராவும் ஜீவஹிம்சை செய்வதைத் தடுத்துப் பிரசாரம் செய்'' என ஆணையிட்டாள்.

அரசன் பரபரப்புடன் எழுந்தான். தான் கண்ட கனவை மந்திரி, சேனாதிபதி, குலகுருவிடம் கூறினான். அனைவரும் காளிகோயில் சென்றனர். கோயிலில் ஹரிவியாசரைக் கண்டு நடந்ததைக் கூற, அவரும் ஆனந்தத்தோடு முன்தினம் நடந்ததைச் சொன்னார். அரசன் சகல மரியாதைகளுடன் ஹரி வியாசரை அரண்மனைக்கு அழைத்து வந்தான். அவர் தலைமையில் நாடெங்கும் ஜீவ ஹிம்சை பிரசாரம் நடந்தது. அரசனும் 'உயிர்வதை செய்பவர் கடும் தண்டனைக் குள்ளாவர்' என்று தண்டோரா போட்டான். உயிர்பலி நின்றது.

அதன்பின் மழைபெய்து நாடு செழித்தது. நோய் நொடிகள் குறைந்தன. ஹரி வியாசரும் மன்னரிடம் விடை பெற்று, ஜகன்னாதனைத் தரிசிக்கச் சென்றார்.

78. பரிச பாகவதர்

''கமலஜா! கொஞ்சம் நில்லு..... நானும் வந்து விடுகிறேன்'' மளமள வென்று தண்ணீர் முகர்ந்து கொண்டு வந்தாள் நாமதேவரின் மனைவி ராஜாபாய்.

பரிசபாகவதரின் மனைவி கமலஜாவும், ராஜாபாயும் தண்ணீர் குடத்துடன் நடந்தனர். ''என்ன இப்படி இளைத்துக் கறுத்து உருமாறி விட்டாய்! எத்தனை பேருக்குச் சத்திரமாட்டம் சோறு போட்டீர்கள்! இப்போ வயிறார நீங்களாவது சாப்பிடுகிறீர்களா? என்னிடம் சொல்வதற்கு

வெட்கமா?" என்று கேட்டாள் கமலஜா. ராஜாபாய் "என்ன செய்வது? நான்கு பிள்ளைகள், மாமியார் .... பெரிய குடும்பம் ....இரக்க குணம், இவரோ சதா பண்டரீ நாதா, பாண்டு ரங்கா என்றே பொழுதைக் கழித்து விடுகிறார்" என்று வருத்தத்தோடு சொன்னான்.

கமலஜா "உன் திருமணத்தின் போது பணமாக, பொற் குவியலாகக் கொட்டினார். பாண்டுரங்கன்! உன்வீட்டு குடிசைக்கு முட்டுக் கொடுத்த மூங்கில் கம்பை தங்கமாக ஆக்கினார். அதல்லாமல் தங்கமாக்கும் ஸ்பரிச வேதிக்கல் நம்மிடமே இருந்தால் ....?" என்று முடிப்பதற்குள் ராஜாபாய் ஆர்வமாக குறுக்கிட்டாள்.

"ஸ்பரிசு வேதிக்கல்லவா? அப்படி ஒன்று உண்டா? நீ பார்த்திருக் கிறாயா?"

கமலஜா கலகல வென்று சிரித்தபடி, "பார்ப்பதா? என்னிடமே இருக்கிறது. என் கணவர் மகாலட்சுமியை ஆராதனை செய்கிறவர். தேவி பிரத்யட்சமாகி இதைக் கொடுத்து 'வேண்டும் போது இரும்பைத் தங்கமாக்கிக் கொள்' என்றாள். இதல்லவா அனுக்கிரகம்! இப்போது பார் ....நேற்றுக்கூட ஒரு உடைந்த இலுப்புச்சட்டியைத் தங்கமாக்கி கடைத் தெருவில் விற்று அரிசி, பருப்பு மூடைகள் வாங்கி வந்தார். வறுமை என்ற பேச்சே என் வீட்டில் இல்லை. என்னைப்பார்த்தாலே தெரியுமே!" என்று பெருமையடித்துக் கொண்டாள்.

"நான் அந்தக் கல்லைப் பார்க்கலாமா?" ராஜாபாய் ஆர்வமாகக் கேட்டாள். "வீட்டிற்கு வா; காட்டுகிறேன்" அதற்குள் கமலஜாவின் வீடு வந்து விட்டது. குடத்தை இறக்கி வைத்து விட்டு, பூஜை மாடத்தில் இருந்த ஸ்பரிச வேதிக்கல்லை தோழிக்குக் காட்டினாள் கமலஜா.

பளபளவென்று ஜொலிக்கும் அக்கல்லை ஏக்கத்தோடு பார்த்த ராஜாபாய் தயங்கித் தயங்கி "கமலஜா, இன்று ஒருநாள் இந்தக் கல்லை நான் உபயோகிக்கலாமா?" என்று கேட்க, பரிசபாகவதரின் மனைவி சற்றே யோசித்து,

"சரி. ஆனால் என் கணவர் 'யாரிடமும் சொல்லாதே' என்றார். நான்தான் ஏதோ பேச்சு வாக்கில் உன்னிடம் உளறி விட்டேன். விஷயம் ரகசியமாயிருக்கட்டும். அப்புறம் ஊர் பூரா கடன் கேட்பார்கள்.

தங்கத்துக்கு மதிப்பிருக்காது. கள்வன் கவர்ந்து கொள்வான். நிறையப் பொருளைத் தங்கமாக்கி வைத்துக்கொள்" என்று சொன்னாள்.

ராஜாபாய்க்கு ஒரே மகிழ்ச்சி. தோழிக்கு நன்றி கூறி விட்டு ஓட்டமும் நடையுமாக வீட்டிற்கு வந்தாள். நாமதேவரின் குடும்பத் தோழில் தையல் வேலை. ராஜாபாய்க்கு ஏற்பட்ட சந்தோஷத்தில் தையல் வேலை செய்யும் கத்திரி, ஊசியை யெல்லாம் கூட தங்கமாக்கி விட்டாள்.

அப்புறம் தான் நேரமானதை உணர்ந்தாள். ஓடிப்போய் கடைவீதியில் ஒரு துண்டு பொன்னை விற்று வேண்டிய சாமான்கள் வாங்கி வந்து அறுசுவையுடன் கூடிய உணவு சமைத்தாள். நாமதேவர் வந்தார். மகிழ்ச்சியோடு மனம் குளிர, தலை வாழை இலை போட்டுப் பரிமாறினாள் ராஜாபாய்.

நாமதேவர் இலையில் இருக்கும் பாயசம், பச்சடி, இனிப்பு, கறி வகைகளைப் பார்த்துத் திகைத்தார். "இவ்வளவு ஆடம்பரமான விருந்துக்குப் பணம் தந்தது யார்?" என்று கேட்டார்.

ராஜாபாய் "எல்லாம் பகவான் தந்தது. பாண்டுரங்கன் தான் 'நீ என் பாட்டைப் பாடுகிறாய்! நான் உன் பாட்டைப் பார்த்துக் கொள்கிறேன்' என்று சொல்லி இருக்கிறாரே! நீங்கள் ஏன் வீட்டைப் பற்றிக் கவலைப்படுகிறீர்கள்! நிம்மதியாகப் பஜனை செய்து கொண்டிருங்கள். குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியது இனி என் வேலை" என்றாள்.

நாமதேவருக்கு ஒரே வியப்பு! பேசுவது ராஜாபாயா? நலிந்து சோகமாகக் காட்சி தரும் இவளின் உற்சாகத்துக்குப் பின்னணி எது? அல்லது யார்?

நாமதேவர் சப்பணமிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தவர் "ராஜாபாய், என் பெயரைச் சொல்லி யாரிடம் கையேந்தினாய்? எந்தப் பணக்காரனை பக்தியின் பெயரால் பயமுறுத்தினாய்? இந்தச் சாப்பாட்டிற்கான மூலாதாரம் தெரியும் வரை உமிழ் நீரும் விழுங்குவதில்லை. குடும்பத்தைக் காக்க உனக்கு உரம் ஏற்பட்ட பிறகு, நான் இருப்பதும் அனாவசியம் தானே!" என்றார் திடமான குரலில்.

ராஜாபாய் பொல பொல வெனக் கண்ணீர் உகுத்தாள். "ஸ்வாமீ! என்னென்ன வார்த்தை பேசி விட்டீர்கள்! தங்களுக்கு மானக்கேடு உண்டாகும்படி ஒருவரிடம் கையேந்துவேனா? தாங்களின்றி நான் உயிர் வாழ்வதா?" என்றவள், கமலஜாவிடமிருந்து இரவல் வாங்கிவந்த

ஸ்பரிசவேதிக் கல்லைக் காட்டி நடந்ததைக் கூறினாள். நாமதேவர் அதை எடுத்துக் கொண்டு போய் "இனி மக்களை மயக்கி அஞ்ஞானத்தில் ஆழ்த்தமுடியாது"என்று சொல்லியபடியே ஆற்றில் வீசி எறிந்துவிட்டார். ராஜாபாய் "தோழிக்கு என்ன பதில் சொல்வோம்? இவர் புத்தி அறிந்தும் அதை வாங்கி வந்தது எத்தனை பெரிய தப்பு" என்று எண்ணி எண்ணி மனம் நொந்தாள். அங்கே கோயிலிலிருந்து திரும்பிய பரிச பாகவதர், பூஜை மாடத்தில் கல்லைக் காணாமல் மனைவியை விசாரித்தார். அவள் நாமதேவரின் குடும்பநிலைமையைக் கூறி, ஒருநாளைக்கு இரவல் தந்திருப்பதாகக் கூறினாள்.

பாகவதர் "கெடுத்தாயே காரியத்தை! அந்த நாமதேவனைப் பற்றி உனக்குத் தெரியாது. சுத்த மூடன். அவனுக்கு மண்ணும், பொன்னும் ஒன்றுதான். யானை வாயில் போன கரும்புதான் இனி. அதற்குத்தான் எவரிடமும் சொல்லாதே என்று சொல்லி இருந்தேன். 'எண்ணறக் கற்று எழுத்தற வாசித்தாலும் பெண் புத்தி பின்புத்திதான்' என்பதற்கு நீயே சரியான எடுத்துக்காட்டு" என்று சீறினார்.

கமலஜா, "இதோ இப்போதே போய் வாங்கி வந்து விடுகிறேன்" என்று விரைந்து, நாமதேவர் வீடு வந்து ராஜாபாயைப் பார்த்தாள். கமலஜாவுக்கு மூச்சிறைத்தது.

ராஜாபாய் "கமலஜா! என்மேல் கோபிக்காதே! வாக்குத் தவறியவளாகி விட்டேன். இப்படியாகும் என்று தெரிந்திருந்தால் அதை வாங்கியே இருக்கமாட்டேன். உன் கணவர் சொன்னபடி ஆற்றில் எறிந்து விட்டாரோ? ஐயோ! அது உனக்கும் உபயோகப் படாமல் செய்து விட்டேனே! 'மக்களை மாய்கையில் ஆழ்த்தும் கொடிய நஞ்சு' என்று சொல்லிக் கொண்டு போகும் போதே நினைத்தேன் இப்படி ஏதாவது நடக்குமென்று" என்று கமலஜாவின் கைகளைப் பிடித்துக் கொண்டு விம்மினாள்.

கமலஜாவின் கேள்விக்கு விடை கிடைத்து விட்டது. அவள் வேறு என்ன செய்ய முடியும்? வெறுப்புடன் கையை உதறிக்கொண்டு, வீட்டிற்கு வந்து கணவனிடம் விஷயத்தைச் சொன்னாள். பாகவதர் கோபத்தோடு நாமதேவரைத் தேடிச் சென்றார். சந்திரபாகா நதிக்கரையில் தியானத்தில் ஆழ்ந்திருந்தார் நாமதேவர்.

"நாமதேவரே! பிறர் பொருளை ஆற்றில் எறிவது என்ன நியாயம்? அதுவும் உமது மனைவி விரும்பிக் கேட்டதால் இரக்கப்பட்டுக் கொடுத்ததற்கு இதுதான் பரிசா? வேண்டாமென்றால் மனைவியை விரட்டி, பொருளை உரியவரிடம் சேர்ப்பது தானே முறை?" என்று பாகவதர் கோபமாகக் கத்த, தெருவில் போவோர், வருவோர் கூடினர்.

கட்சி இரண்டாகப் பிரிந்தது. நாமதேவரும் கண்விழித்தார். "லட்சுமி உபாசகரே! சினம் தணிக. பொருளில் முதலில் ஆசை. பின்னர் குரோதம், மயக்கம் எல்லாம் தொடருகிறது. உம்மை அதிலிருந்து விடுவிக்கவே ஆற்றில் அக்கல்லை எறிந்தேன். பகவான் மேல் செலுத்தும் பக்தியே நிலையானது" என்று அமைதியாகச் சொன்னார் நாம தேவர்.

பாகவதர் கோபத்துடன் "பக்தி செய்யவும் உடலில் உயிரும், சக்தியும் வேண்டும். தெம்பு ஏற்பட சாப்பாடு வேண்டும். சாப்பாட்டுக்குப் பணம் வேண்டும். வயிற்றுப் பிரசினையே பெரிதாக இருந்தால் பக்தி வளராது என்று தான் பெரிய செல்வந்தர்கள், தொண்டர்களெல்லாம் அன்னதானம் செய்கிறார்கள். கையில் பணமில்லாததால் தானே கபீர்தாஸ் திருடினார்? மாயை என்கிறீர்களே..... கர்ணன் போன்ற வள்ளல்களுக்கு பொருளில்லாவிட்டால் அந்தப் புகழ் கிடைத்திருக்குமா?" என, நாமதேவர் "உழைத்துச் சேர்க்கும் பணம்தான் ஒட்டும். இப்படி ஒரு கல் இருந்தால் சோம்பேறித் தனமும், ஆசையும் விருத்தியாகும். இப்போது பாருங்கள்! அக்கல் போய் விட்டதே என்று எப்படி துடி துடிக்கிறீர்கள்!" என்றார்.

பாகவதர் குரலை இறக்கியபடி "வீண்பேச்சு ஏன்? என் கல் எனக்கு வேண்டும். உமது உபதேசங்களை வேறு யாருக்காவது செய்யும்" என நாமதேவர், "அதோ அந்த இடத்தில் தான் எறிந்தேன். வேண்டிய கற்கள் கிடக்கின்றன. வேண்டியவரை அள்ளிக்கொள்ளும்" என்றார். கூட இருந்தவர்கள் "இருக்கும் கல்லெல்லாம் பரிச வேதி ஆகுமா" என்று கேலியாக சிரிக்க,

பாகவதர் "நையாண்டியாயிக்கிறதா உமக்கு! ஆற்றிலுள்ள கல்லெல்லாம் எனக்கு எதற்கு? அன்னை ஸ்ரீதேவி அளித்த பரிசவேதிக் கல் மட்டுமே வேண்டும். வீசி எறிந்த நீங்கள் அதை எடுத்துத் தராவிடில், வெள்ளத்தில் பாய்ந்து உயிரை மாய்த்துக் கொண்ட பழி உங்களைத் தான் சேரும்" என்றார்.

நாமதேவர் எதுவும் பேசாமல் நதியில் மூழ்கி கை நிறைய கற்களை வாரிக்கொண்டு வந்தார். "இதில் உம்முடையதை பொறுக்கி எடுத்துக் கொள்ளும்" என்று அவர் முன் போட்டார். பாகவதர் ஆராய்ந்தார். எல்லாம் பரிச பாகவதரின் பரிச வேதிக்கற்கள் போலவே இருந்தன. திகைத்தார். ஒருவர் இரும்பு ஆணிகளைக் கொண்டுவர எந்தக் கல்லால் உரசினாலும் ஆணிகள் பொன்னாக மாறின. பாகவதருக்குத் தலை சுற்றியது. எல்லோரும் நாமதேவரின் மகிமையைப் பாராட்டினர்.

பரிசபாகவதர் நாமதேவரின் கால்களில் விழுந்து, வணங்கி "நாம தேவரே, அன்னை உங்கள் மூலமாக எனக்கு புத்தி புகட்டி இருக்கிறாள். நான் பல நாள் வேண்டி ஒரு கல் பெற்றேன். நீங்கள் நினைத்த மாத்திரத்தில் ஒருகுவியல் கற்களைக் கொண்டு வந்து விட்டீர்கள்! உங்களது பெருமை அறியாமல் தூஷித்து, அபசாரம் செய்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள். பக்தி என்றால் என்னவென்று புரிந்து கொண்டேன். தாங்களே என் குருநாதர். எனக்கு உபதேசம் செய்ய வேண்டும்" என்று வேண்டினார்.

நாமதேவரும் கற்களைப் பழையபடி நதியில் எறிந்து விட்டு பாகவதருக்கு மேலும் பல நல்ல வார்த்தைகளைக் கூறி ஆசீர்வதித்தார். அன்று முதல் பாகவதரின் இயற்பெயர் மறைந்து பரிசவேதிக் கல்லுக்காக அலைந்ததால் பரிசபாகவதர் என்ற காரணப் பெயரே விளங்கலாயிற்று. பரிசபாகவதர் பண்டரீ நாதனின் மெய்யன்பரானார்.

79. ஸ்ரீ சூர் தாசர்

கண்ணனின் அன்பிற்கு உரிய பெரியவர் அக்ரூரர். அவர் சதா கண்ணனைக் காண்பதற்காக துவாரகையிலேயே வசித்து வந்தார். கண்ணனின் பிரிய மனைவியான சத்யபாமா ஒருமுறை இவரைக் கூப்பிட்டனுப்பினார். அக்ரூரர் சத்யபாமாவைப் பார்த்ததும் திடுக்கிட்டார். கூந்தல் திருத்தி, வாரி பூச்சூடாமல் சடைபிடித்துக் கிடந்தது. முகம் சோபை குன்றி, நகைகள் எதுவும் இன்றி, உடல் வாடித்தளர்ந்து,

சோகமாகக் காணப்பட்டாள். அக்ரூரர் "என்ன செய்தி? ஏன் இந்தத் துயரம்?" என்று விசாரித்தார்.

"ஸ்வாமி, கண்ணனுக்கு நான் என்றால் இளக்காரமாகப் போய் விட்டது. ராதாவும், ருக்மணியும் தான் அவரது பிரிய பத்தினிகள். அவர் நினைவெல்லாம் அவர்கள்தான். எப்படியும் அவரைத் தேடிக் கண்டு பிடித்து அழைத்து வர உங்களால்தான் முடியும். நீங்களென்றால் கிருஷ்ணனுக்கு அன்பும், மரியாதையும் அதிகம். இன்னும் இரண்டு, மூன்று மணி நேரத்திற்குள் என் அந்தப்புரத்தில் அவரைப் பார்க்க வேண்டும். இல்லையேல் தற்கொலை செய்து கொள்வேன். இது சத்தியம்" என்றாள்.

அக்ரூரர் திடுக்கிட்டார். 'இதென்ன வம்பு? என்று ..... அங்குமிங்கும் கண்ணனைத் தேடி அலைந்தார். நேரம் ஓடிக் கொண்டிருந்தது. அவருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. சத்யபாமா பிடிவாதக்காரி. அரச குமாரி. சொன்னபடி செய்யும் குணம். தற்கொலை செய்து கொண்டு இறந்தால் வீண்பழி வரும். கண்ணனே கோபிப்பார். 'என்ன செய்வது' என்று குழம்பினார்.

ஆபத்துக்குப் பாபமில்லை என்று கண்ணனைப்போல் வடிவம் வேண்டும் என்று நினைத்தார். வந்தது. அவர் நினைத்தால் நினைத்த உரு எடுக்கக் கூடியவர். ஆனால் ஆபத்துக் காலங்களில் மட்டுமே அதைப் பயன்படுத்துவார். சத்ய பாமையின் முன் வந்து நின்றார். பாமா பிரமித்தாள். சந்தோஷப்பட்டாள். சீக்கிரமே நீராடி புத்தாடை அலங்காரங்களுடன் வந்தாள். கனவு பலித்ததென்று ஆடிப்பாடினாள்.

"இதோ வருகிறேன் பாமா .... அதற்குள் அக்ரூரரை பயமுறுத்தி விட்டாயே" என்று சமாதானமாகச் சொல்லி விட்டு வெளியே வந்தார் அக்ரூரர். "அப்படிச் சொல்லி இருக்காவிட்டால் உங்களைப் பார்த்திருக்க முடியுமா?" என்று சொல்லி புன்னகைத்தாள் பாமா. அக்ரூரர் அலைந்து திரிந்து, கண்ணனை ஒரு வழியாய் கண்டு பிடித்தார். கண்ணன் அக்ரூரரின் உருமாற்றத்தைக் கண்டு திகைத்தான். "ஏன் இந்த வேடம்?" என்று வினவினான்.

"பாமாவுக்காக..... நீங்கள் அவளைக் கவனிப்பதே இல்லையாம் .... அலட்சியம் செய்கிறீர்களர்ம் ..... உடனே அழைத்து வராவிட்டால் உயிர் தியாகம் செய்து கொள்வேன் என்றாள். தேடினேன் கிடைக்கவில்லை" என்று அக்ரூரர் சொல்லிக் கொண்டு வரும்போது, "அதனால் என்னை போல் உருமாறி முன் நின்றீர்களாக்கும். பாமாவைப் பத்தினியாகப் பார்த்த உமது கண்கள் குருடாகட்டும். குருடனாக பூமியில் பிறக்கக் கடவீர்" என சாபமிட்டார் கண்ணன்.

"கிருஷ்ணா" என்றலறினார் அக்ரூரர். "என் மனம் அறியாயா? எந்தத் தீய எண்ணமும் எனக்கில்லை. தற்கொலையினின்றும் பாமாவைக் காப்பாற்றவே அப்படிச் செய்தேன்" எனத்துடித்தார். "சீதை கற்புள்ளவள் என்றறிந்தும் லோகத்திற்காக தீக்குளிக்கச் சொல்ல வில்லையா? அதைப் போலவே தான் இதுவும். உன்னையும், பாமாவையும் நான் அறிவேன். உருமாறத் தெரிந்தவர்களெல்லாம் உத்தமர்களல்ல....நீ செய்த காரியத்தை ஒரு துஷ்டன் செய்தால் பாமாவின் கதி என்னாகும்? தவறு யார் செய்தாலும் தண்டனை நிச்சயம் என்பதைப் புரிந்து கொள்ளவே இந்த சாபம். கலங்காதே அக்ரூரா....." என்று சாப விமோசனமும் கூறினார். பின்னர் சத்ய பாமாவைப் பார்க்கப் போனார். இவரைக் கண்டதும் அவள் மகிழ்ச்சியோடு "சுவாமி, இதோ வருகிறேன் என்று சொல்லிப் போனவர் எத்தனை நேரமாக்கி விட்டீர்கள்! மறுபடி மறந்து விட்டீர்களோ என பயந்தே போனேன்" என வரவேற்றாள்.

"நில் பாமா ..... நான் இப்போது தான் முதன் முறையாக வருகிறேன். முதலில் வந்தது போலிக் கண்ணன். உருமாறிய அக்ரூரன். என்னைக் கூட அடையாளம் தெரியாமல் ஆடிப்பாடிய நீ பூலோகத்தில் பணிப் பெண்ணாக வாழக்கடவது" என சாபமிட்டார். சத்ய பாமை திகைத்து கண்ணீர் விட்டு, கண்ணன் காலடியில் பணிந்து, மன்னிக்கும்படி வேண்டினாள். "சீக்கிரமாகவே என்னோடு சேர்த்துக் கொள்கிறேன்" என்று வரமளித்தார் முகுந்தன்.

அக்ரூரர் சூர்தாஸராய் மதுராபுரியில் பிறந்தார். மனக்கண்களால் பகவானின் உருவத்தை மனதில் நிறுத்திக் கொண்டு பாட்டுக்கள் இயற்றினார். ஜனங்கள் இவர் பாடல்களை விரும்பிக் கேட்டனர். அந்த அற்புதமான கவிதைகள் 'சூரஸாகரம்' என வழங்கப்பட்டது. ஒவ்வொன்றும் அபூர்வமான கருத்துக்கள் கொண்டவை. மனித முயற்சியால் வெளியே வந்து "பூமிக்குள் புதைந்து கிடக்கும் இரும்பு கருமானால் ஒரு பகுதி நீண்ட கத்தியாகிறது. கசாப்புக் கடைக்காரன் வாங்கிச் செல்கிறான். மறுபகுதி புதிதாகக் கட்டும் ஒரு கோவில் துவஜஸ்தம்பத்தின் அடிப்படையாகிறது. எல்லோரும் தொட்டு கண்களில் ஒற்றிக் கொள்கின்றனர். அது இரும்பின் குற்றம் அல்ல. சூழ்நிலையும், அமைப்பும் அப்படி ....."

இந்த மாதிரித் தத்துவ விளக்கங்கள் நிறைந்த பாடல்களைக் கேட்டு மந்திர சக்திக்குக் கட்டுப்பட்டாற் போல் மக்கள் மெய்மறந்தனர். உத்தமமான குணம் படைத்தவரானதால் பூர்வ ஜன்ம ஞாபகம் அப்படியே இருந்தது சூரதாஸருக்கு, "கண்ணா..... கோபிகைகள் கதறக் கதற தேரிலேற்றி உன்னை மதுராபுரிக்கு அழைத்துச் சென்ற பாபமோ நீர் என்னைக் குருடாகப் படைத்தது! மணிவண்ணா, கிருஷ்ண ஜயந்தி உற்சவ அலங்காரம் ஒன்றைக் கூட காணமுடியாத குருடனாயிருக்கி றேனே! எப்போது உன் அருள் கிடைக்கும்" என்று அடிக்கடி கோவிலில் சென்று புலம்புவார் சூரதாஸர். கண்ணன் அவருக்கிரங்கி "சூர்தாஸ், இன்று முதல் என் அலங்கார உருவத்தை மட்டும் நீ பார்க்க முடியும்" என வரமளித்தார். சூர்தாஸரின் மகிழ்ச்சி சொல்ல முடியாததாக இருந்தது. அன்று முதல் வேணு கோபாலனின் விதவிதமான ரூபங்களை அவர் பார்க்க முடிந்தது.

அவந்தி நாட்டரசனுக்கு இசையில் மிகுந்த ஈடுபாடு. அவன் திறமையான சங்கீத வித்வான்களை தனது சபையில் வைத்து

கௌரவித்திருந்தான். அவர்களுள் தான்சேன் என்னும் வித்வான் மகா திறமைசாலி. அரசன் ஒருநாள் "தான்சேன், உனது இசையை அனுபவிக்க நான் பூர்வ ஜென்மத்தில் நிறையப் புண்ணியம் செய்திருக்கிறேன்" என்று பாராட்டினான்.

தான்சேன் "வேந்தே, மதுரா நகரில் சூர்தாஸர் என்ற ஹரி பக்தர் இருக்கிறார். கடலில் எப்படி அலைகள் தோன்றிக் கொண்டே இருக்குமோ அப்படி புதுபுதிதாக சங்கதிகளும், பாடல்களும் அவரிடமிருந்து புறப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. அவர் பாட்டைக் கேட்பதே போன ஜென்ம பாக்கியம். ஜகந்நாதனே அருகிலிருந்து அவர் பாடலைக் கேட்கிறாராம்!" என்றார்.

உடனே அரசன் பல்லக்கை அனுப்பி அரச மரியாதைகளுடன் சூர்தாஸரை அழைத்துவரச் சொன்னான். சூர்தாஸரிடம் மந்திரிகள் சென்று, மன்னன் விருப்பத்தைக் கூற, சூர்தாஸர் மகிழ்ச்சியுடன் புறப்பட்டு வந்தார். அரசர் சூர்தாஸரை எதிர் கொண்டு உபசரித்து, வரவேற்றான். "ஸ்வாமி, என் கோரிக்கையை ஏற்று வந்தது என்பாக்கியமே. தங்கள் குரலால் பாகவத கீர்த்தனைகளைக் கேட்க வேண்டும் என்ற எங்களது ஆசையைப் பூர்த்தி செய்ய வேண்டும்" என்று பணிவுடன் கூறினான் அரசன்.

"எனக்குப் பிரியமான பணியைச் செய்ய வேண்டுகோள் எதற்கு? என் பிறவிப்பயனே அதுதானே" எனக்கூறிய சூரதாஸர், தம்பூராவை மீட்ட ஆரம்பித்தார். வாணி வீணையுடனும், விநாயகர் ஜாலராவுடனும் சூரதாஸருக்கு இருபக்கமும் வந்து அமர்ந்தனர். தேவமங்கையர் நடனமாட வந்து நின்றனர். தேவர்கள் புடை சூழ ஜகன்னாதனும் வந்தமர்ந்து கொண்டார். இனிய இசைப் பிரவாகம் சபையோரை சிலையென ஆக்கி வைத்திருந்தது. இசை நிறுத்தப்பட்டு தேவலோகவாசிகள் மறைந்தபிறகே அரசன் சுய உணர்வு பெற்றான்.

அரசன் எழுந்து வந்து சூர்தாஸரின் இரு கைகளையும் பற்றியவாறு "தேவ விருந்து படைத்தீர்கள். எனது நகரிலேயே கொஞ்சகாலம் இருந்து ஜனங்களுக்கு பாகவத சாரத்தைப் போதித்து பக்தி மார்க்கத்தில் திருப்பவேண்டும்" என்று கேட்டுக் கொண்டான். சூர்தாஸரின் பெருமையைப்பற்றிக் கேள்வியுற்ற அந்தப்புர நங்கையர் அரசனிடம் "சூர்தாஸரின் பாடலைக் கேட்க முடியாதபடி நாங்கள் என்ன பாவம்

செய்தோம்" என பிரலாபித்தனர். அரசன் சூர்தாஸரிடம் இதை அறிவித்து அந்தப்புரத்தில் வந்து பாட வேண்டுமென்று கோரினான். சூர்தாஸரும் ஒப்புக் கொண்டார்.

அந்தப்புரத்தில் சூர்தாஸர் பாட ஏற்பாடாயிற்று. அந்தப்புரப் பெண்களுக்கெல்லாம் ஒரே சந்தோஷம். 'முன்போல் தேவமங்கையரும், பாண்டுரங்கனும், பிள்ளையாரும், சரஸ்வதியும் வருவார்களா' என்ற ஆசை மன்னனுக்கு. நடுநாயகமாக உட்கார்ந்து கொண்டான். சூர்தாஸர் பார்வையற்றவர் தானே .... கோஷா எதற்கு' என முகத்திரை நீக்கி, சாதாரணமாகவே மங்கையர் உட்கார்ந்து கொண்டிருந்தனர். இனிய இசை ஆரமபித்தது. கண்ணன் லீலைகளை அழகாக விவரித்துப் பாடிக் கொண்டிருந்தார் தாஸர். சாபம் பெற்ற சத்யபாமா அவந்தி ராஜன் அந்தப்புரத்தில் வேலைக்காரியாக இருந்தாள். பகவான் புகழைக் கேட்கக் கேட்க சத்யபாமாவுக்கு சாபம் நீங்கியது. தேஜோ மயமான சுய உருவமடைந்தாள். இதைப் பார்க்க சூரதாஸருக்கும் பார்வை ஒளி பெற்றது.

பாட்டை நிறுத்திய சூர்தாஸர் "சத்யபாமா, இங்கென்ன செய்கிறாய்?" என ஆச்சரியத்தோடு கேட்டார். இதைக் கேட்ட அனைவரும் திடுக்கிட்டனர். "பணிப்பெண்ணல்லவா இங்கு உட்கார்ந்து கொண்டிருந்தாள்! இவள் தான் சத்திய பாமாவா? இவள் எப்படி இத்தனை ஆடை அலங்காரங்களோடு மாறினாள்? ஐயோ....குருடரென்று எண்ணினோமே ..... அத்தனையும் நடிப்பா ....! சேச்சே ..... இருக்காது ..... பகவான் கருணையில் இப்போது பார்வை வந்திருக்க வேண்டும். பார்வை தெரிகிறது என்று புரிந்து கொண்ட பின்பும் அன்னிய ஆண்கள் முன் முகத்திரை இல்லாமல் இருப்பது தவறு' என எழுந்து கொண்டனர். அனைவரும் திரை மறைவுக்கு விரைந்தனர்.

'கண்ணனின் பிரிய பத்தினியிடம், இது வரை வேலை வாங்கினோமே' என மனம் நொந்தனர். அரசன் நடந்தவைகளை எண்ணி பிரமித்து நின்றான். 'பளி'ரென்று ஒரு மின்னல். கருடவாகனத்தில் தோன்றிய பகவான் அக்ரூரரும், சத்யபாமாவும் சாபம் பெற்றதும், சாபவிமோசனம் பெற்ற வரலாறையும் கூறி, இருவரையும் தன்னுள் ஐக்கிய மாக்கிக் கொண்டு மறைந்து விட்டார். அனைவரும் சூரதாஸரின் கவிதைகளை 'சூரசாகரம்' எனப் போற்றிக் கொண்டாடி வழிபட்டனர். அவருடைய சிஷ்யர்கள் அவர் கவிதைகளைப் பாடிப் புகழ் பரப்பினர்.

80. பிரேமா பாய்

'சோதனையும் துன்பமும் பக்தியை வளர்க்கும், வறுமை பக்திக்கு உரம்; என்ற உலக வழக்கை மெய்ப்பிப்பதாயிருந்தது பிரேமாவின் வாழ்க்கை. புண்ணிய கங்கை நதிபாயும் காசி நகரிலே ஏழைக் குடும்பத்தில் பிறந்தவன் பிரேமா. ஆனால் நற்குணங்களில் அவள் பணக்காரி. பிறருக்கு இட்டு உண்பதில் மகா ஆனந்தம். பிறரைப் பற்றி வம்பு பேச மாட்டாள். ஒரு நிமிட ஓய்வு கிடைத்தாலும் போதும். புராணப்புத்தகங்களை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்து விடுவாள். எங்கே கதை நடந்தாலும் சரி, சளைக்காமல் போவாள்.

இவளுக்கு வாய்த்த கணவனோ மகா முன்கோபி. அவலட்சணம் பிடித்தவர். ஆனாலும் கணவனைத் தெய்வமாகவே பாவித்து அவர் மனம் கோணாதபடி நடந்து வந்தாள். எப்போது பார்த்தாலும் அவனுக்கு வியாதிதான். தினமும் காய்ச்சல், வயிற்று வலி, தலைவலி, சிரங்கு, காது குடைச்சல் என்று எப்போதும் ரோதனை தான்! இந்த சூழ்நிலையில் பிரேமாவுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தை அறிவிலும், அழகிலும் தாயைக் கொண்டிருந்தான்.

குழந்தைக்கு ராமகிருஷ்ணன் என்று பெயர் சூட்டினர். குழந்தையைக் கண்ணிமை போல் பாதுகாத்து வளர்த்தாள் பிரேமா. ராமகிருஷ்ணனுக்குப் பத்து வயதாகும்போது பிரேமாவின் கணவன் தீராத நோய்க்காளாகி இறந்து போனான். பிரேமா, "தாலியோடு மங்களமாய் வளைய வந்ததும் உனக்குப் பொறுக்கவில்லையா? என்னிடமிருந்த அந்த ஒரே அணி கலனையும் பறித்துக் கொண்டாயே" என்று மனம் வருந்திக் கதறினாள்.

நல்லவர்கள், கெட்டவர்கள் என்ற பேதத்தை மரணம் பார்ப்பதில் லையே? காலம் யாருக்காவும் நிற்காமல் இயங்கியது. பிரேமாவும் கவலையை மறந்து சத்காரியங்களிலேயே புத்தியைச் செலுத்தி வந்தாள். ஒரு சமயம் ஒரு பாகவத சிரோன்மணி காசியில் பாகவதம் சொல்லிக் கொண்டிருந்தார். அவரது வாக்கு வன்மையால் நிகழ்ச்சிகளை நேரே காண்பது போல் மக்கள் மெய்மறந்தனர். பிரேமாவும் அக்கதைக்கு

விடாமல் சென்று வந்தாள். கதை மாலை ஏழுமணிக்குத் தொடங்கும். ஆறுமணிக்கு ஒரு பாகவத கோஷ்டியார் வந்திறங்கினர்.

"அம்மணி! நாங்கள் பெரும் பசியாயிருக்கிறோம். இன்று தங்கள் வீட்டில் உணவருந்தலாமா?" என்று கேட்டனர். பிரேமா மகிழ்ச்சியோடு அவர்களை வரவேற்றாள். எனினும் மனதிற்குள் இன்று கதை விட்டுப் போகுமே என்ற குமைச்சல்.

மகனை ரகசியமாய் அழைத்து, "ராமகிருஷ்ணா! நீ பத்திரமாய்ப்போய் கதை கேட்டு வந்து அப்படியே அதை எனக்குச் சொல்கிறாயா?" என்று கேட்டார். மகனும் சம்மதித்துச் சென்றான். பிரேமா குளித்து முடித்து சமைத்து வந்த அதிதிகளுக்குப் பரிமாறினாள். அவர்களும் திருப்தியாய் பசி நீங்கி, பிரேமாவை வாழ்த்தி விட்டு உறங்கச் சென்றனர்.

கதைமுடிந்து சிறுவன் வந்தான். குழந்தைக்குச் சாதம் போட்ட பின் "இன்று கதையென்ன?" என்று ஆவலோடு கேட்டாள் பிரேமா. குழந்தை பாகவதர் சொன்ன மாதிரியே சொன்னான். கதை கிருஷ்ணலீலைப் பகுதி. 'விஷமம் செய்த கண்ணனை யசோதை உரலில் கட்டிப் போடுகிறாள்.



கண்ணன் உரலை இழுத்துக் கொண்டு தோட்டத்திற்குப் போகிறான்' என்று சொல்லிக் கொண்டு வரும் போதே பிரேமா உணர்ச்சிவசப்பட்டு எழுந்தாள்.

"இந்த யசோதைக்கு என்ன கல்மனது! கண்ணனைக் கட்டிப் போட்டு விட்டாளே! தோட்டத்திலே மரங்கள் சாய்ந்து விழுந்தால் குழந்தை ஓடித் தப்ப முடியுமா? உரல் கனம் தடுக்காதா? முழங்காலெல்லாம் மண் சிராய்ப்பை ஏற்படுத்தாதா? உரல் விழுந்தால் கண்ணனின் பிஞ்சு விரல்கள் என்னவாகும்?" என்று புலம்பினாள். ராமகிருஷ்ணனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை!

"அம்மா" என்று புடவையைப் பிடித்து இழுக்க, "இதோ வந்து விட்டேனடா! நான் உன்னை அவிழ்த்து விடுகிறேன்?" என்று விறுவிறுவென வாசலுக்கு நடந்தாள். வேலை செய்த களைப்பு! சாப்பிடாத பலகீனம்! துக்கத்தினால் மெலிந்த உடல் ..... வாசற்படி தடுக்க மூர்ச்சையாகி விழுந்தவள் எழுந்திருக்கவேயில்லை. சப்தம் கேட்டு அதிதிகள் எழுந்து வந்தனர். பிரேமாபாய் இறந்து கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றனர். நடந்ததை ராம கிருஷ்ணனிடமிருந்து அறிந்து கொண்டதும் அதிசயித்தனர். ராமகிருஷ்ணன் ஹரிபக்தனாகவே விளங்கி ஹரிதாஸ் என்ற காரணப் பெயரையும் அடைந்தான்.

81. ராகா கும்பார்

"மியாவ், மியாவ்"

"மியாவ், மியாவ், மியாவ்"

ராகா திகைத்தார். மூட்டிவிட்ட சூளை பற்றியெரிகின்றது. பூனை பரிதாபமாய் தன் முகத்தைப் பார்த்தபடி சுற்றிச்சுற்றிக் கதறுகின்றது. உள்ளே இருக்கும் குட்டிகள் மெல்லிய குரலில் பதில் குரல் கொடுக்கின்றன. "ஆகா, என்ன மதி மோசம் போய் விட்டேன்! எல்லா உயிர்களிலும் நானிருக்கிறேன் என்கிறான் இறைவன். மரம் செடி

கொடிகளிலும் நான் உள்ளேன் என்கிறான். இறைவனை பூசிக்கும் நான் ஜீவ ஹிம்சை செய்யும் நிலைக்கு உட்படுத்தப்பட்டேனே! அறியாமல் செய்தாலும் தவறு இல்லையென்று ஆகுமா? அடுக்கிவைத்த பானையில் பூனை, குட்டி போட்டிருப்பதைப் பாராமல் சூளை போட்டு விட்டேனே" ராகா கும்பார் கதறிய குரல் கேட்டு, அவர் மனைவி பாகாபாய் உள்ளேயிருந்து விரைந்து வந்தான்.

"என்ன? என்ன?" என்று பதறினாள்.

"பாகா! பூனைக்குட்டிகள் சூளையில் அகப்பட்டுக் கத்துவதைக் கேட்டாயா? தாய்ப்பூனையின் பரிதவிப்பைப் பார்" என்றார்.

பாகாவுக்கும் கண்ணீர் விடுவதைத் தவிர வேறுவழி தெரியவில்லை. ராகாவின் மனம் இடி, புயல், காட்டாற்று வெள்ளம் எல்லாமாக இருந்தது. கணவரும், மனைவியுமாகப் பாண்டுரங்கனை இரவு முழுவதும் பிரார்த்தித்தனர்.

"பண்டரீநாதா! அன்று திரௌபதியின் மானம் காத்தவனே! பிரகலாதனுக்காகத் தூணைப் பிளந்து வந்தவனே! இன்று எங்களின் மேல் பழி வராமல் இருக்க, உயிர் வாழுமட்டும் மனசாட்சி உறுத்தாமல் வாழ, இந்தப் பூனைக்குட்டிகளை எப்படியும் காப்பாற்று. அன்று கோவர்த்தன கிரியையே தாங்கியவனுக்கு இது ஒரு பொருட்டில்லை. காளிங்கமர்த்தனா! கண்ணா" இப்படி இரவு முழுவதும் பிரார்த்தித்தனர்.

ராகா ஒருபடி மேலே போய் "ஸ்வாமி! இந்தப் பூனைக் குட்டிகள் மட்டும் பிழைத்து விட்டால் என் குலத்தொழிலான பானை வனைவதையே விட்டு விடுகிறேன். இனியொருமுறை இம்மாதிரி இக்கட்டான வரம் கேட்டு உம்மைத் தொந்தரவு செய்யமாட்டேன். இது சத்தியம்" என்று ஆவேசமாகப் பாண்டுரங்கன் மேல் ஆணையிட்டார்.

விடிந்தது. சூளை ஆறியது. கை நடுங்க மளமளவென்று சூளையைக் கலைத்தார். என்ன ஆச்சரியம்! பூனைக்குட்டிகள் வைத்திருந்த பானை மட்டும் வேகவே இல்லை. பூனைக்குட்டிகள் இரண்டும் தலையை நீட்டி, 'மியாவ், மியாவ்' என்று குரல் கொடுத்தன. தாய்ப்பூனையின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. குட்டிகளை நக்கிக் கொடுத்தது. வாயில் கவ்விக் கொண்டு, வேறிடத்திற்குப் போய் விட்டது.

ராகா தம்பதிகளும் நன்றி உணர்ச்சியோடு, பாண்டு ரங்கனை வழிபட்டனர். சொன்னபடி ராகா குலத்தொழிலை விட்டுவிட்டார். ஆனால் பசிக்கும் வயிற்றுக்கு உணவிட வேண்டுமே! காட்டிலே போய் சுள்ளி பொறுக்கிவந்தார். அதிலும் சில தர்மங்கள் வைத்துக் கொண்டிருந்தார். இலையுள்ள பச்சை மரங்களை வெட்டுவதில்லை. காய்ந்து சருகாய்க் கிடக்கும் மொட்டை மரங்களையே வெட்டுவார். நாலைந்து சுள்ளி சேர்ந்தாற்போல் கிடந்தாலும் யாரோ சேகரித்தது என்று தொடமாட்டார். இந்த நிலையிலும் அதிதி பூஜையைத் தவறாமல் நடத்தி வந்தார்.

ராகா கும்பாரின் மகள் பாங்கா தேவி பீமா நதியில் குளித்து எழுந்து கரையில் நின்றபடி ஜபம் செய்து கொண்டிருந்தாள். நாமதேவரின் மகள் அப்போது தான் வந்தவள் துணிகளை நனைத்துத் 'தொப்பு தொப்'பெனத் துவைக்க ஆரம்பித்தாள். தண்ணீரைப் பிழியாமல் துவைத்ததால் நாலாபுறமும் சிதறியது.

"கொஞ்சம் மெதுவாகத் தோய்க்கக் கூடாதா? அழுக்குத் தண்ணீர் குளித்தவள் மேலே படுகிறது. ஜபமும் கெடுகிறது" என்று நயமாகச் சொன்னாள் பாங்கா.

"குசத்திக்கு ஜபம் ஒரு கேடா? குப்பைத் துணியைப் பொறுக்கிக் கட்டிக் கொள்கிறீர்கள்! அது விழுப்பா, மடியா என்றா பார்க்கிறீர்கள்! மாடு மலடானாலும் புண்ணாக்குத் தின்கிறதில் குறைச்சலில்லை! என்ன வேஷம்! மரத்துக்கு வலிக்கும் என்று வெட்டமாட்டார்களாம்! ஆண்ட வனிடம் இதைத்தா, அதைத்த தா என்று கேட்டு தொந்தரவு செய்யக் கூடாதாம்! பூனைக்குட்டிகள் சூளையில் மாட்டிக் கொண்ட போது 'காப்பாற்று' என்று கேட்டது வரமில்லையா? காட்டிலேயே நாளெல்லாம் அலையும் உங்களுக்கு ஆசார அனுஷ்டானங்களும் வேண்டுமோ?" என்று கோபத்தோடு படபடத்தாள்.

பாங்கா "இப்போது நான் என்ன சொல்லி விட்டேனென்று இப்படி வம்புக்கிழுக்கிறாய்? உன் தந்தையும்தான் இறந்த பசுவைப் பிழைக்க வைக்கும்படி பகவானைப் பிரார்த்தித்தார். இன்னொரு உயிருக்காக வேண்டுவதும் ஆசையாகுமா? பொன்னோ, பொருளோ, மோட்சமோ, புண்ணியமோ வேண்டிப் பிரார்த்தித்தோமா? தன்னுடைய ஆசைக்காக சின்னஞ் சிறு வயதிலேயே விக்ரகத்தைச் சாப்பிடச் சொல்லி அழுது

ஆகாத்தியம் பண்ணியவர் உன் தந்தை! உன் அம்மாவைக் கலியாணம் செய்து கொள்ள தங்கக் கட்டிகளாய் பகவானைக் கொட்ட வைத்தார். பகவானே வந்து தாகமாயிருக்கிறது தண்ணீர் கொடுங்கள், என்று கேட்டபோது 'சந்திரபாகா நதியிருக்கிறது போய்க்குடி' என்று விரட்டிய குணாபாயின் பேத்திதானே நீ! கல்யாணத்திலிருந்து, காதுகுத்து விழா வரை பகவானைத் தொல்லைப் படுத்தியவர் உன் தந்தை!

பகவான் அவருக்காக வண்டியோட்டி வந்து லட்சம் வராகனை கொடுக்க வில்லையா? உன் பாட்டி குணாயியைப் போல் கம்பால் நாங்கள் பரந்தாமனை அடித்தோமா? கொட்டும் மழையிலே வீட்டிற்குச் செங்கல் வைக்கச் சொன்னோமா? மூங்கிலை முட்டுக் கொடுக்கச் சொன் னோமா? தங்கள் வீட்டில் ஆயிரம் ஓட்டடையைத் தொங்க வைத்துக் கொண்டு, பிறத்தியார் வீட்டு தூசி கண்ணை மறைக்கிறதென் கிறாயோ?" என்றாள்.

நாமதேவர் மகளுக்குச் சரியான பதில் கிடைக்காததால் மௌனமானாள். வீடு திரும்பியதும், நாமதேவரிடம் "அப்பா, ராகாவின் பெண் மகா அகம்பாவி. பகவானை இக வாழ்வுக்கான பொருளுக்காக நாம் ஹிம்சைப் படுத்துகிறோமாம்! ராகா பற்றற்றவர். பக்தி செய்வதைக் கடமையாகக் கொண்டு வாழ்கிறாராம்! பிரதி பிரயோசனம் எதிர் பார்க்காதவர்களாம்" என்று விம்மினாள்.

'ஒவ்வொருவர் பக்தி ஒவ்வொரு விதமானது' என்று நாமதேவர் ஆறுதல் சொல்லியும் அவள் கேட்கவில்லை.

"பகவான் தான் உங்களோடு நேரிடையாகப் பேசுவாரே! அவரிடம் போய் இதன் முடிவைத் தெரிந்து வரவேண்டும்" என்று வற்புறுத்தினாள். பண்டரி நாதன் சன்னதி சென்று நாமதேவர் மகள் கூறியபடியே கேட்டார்.

பாண்டு ரங்கன் "நான் சொல்வதை விட நீயே நேரில் பார்த்துத் தெரிந்து கொள்வது நல்லது" என்றார்.

"பாகா, பாகா இங்கே ஓடிவா .....கொடிய கருநாகம் சுருண்டிருக்கிறது .....பார்". சுள்ளி பொறுக்கிக் கொண்டிருந்த பாகாவும், பாங்காவும் ஓடிவந்தனர். பளபளவென்று மின்னும் தங்க வளையல்களைக் கண்டனர். பாகா ராகாவின் நெற்றி, முகங்களையெல்லாம் முந்தானையால்

துடைத்து, அங்கிருந்த மரவேரில் உட்கார வைத்தாள். பாங்கா குவளை யுடன் ஓடிப் போய் அருகிலிருந்த சுனையில் தண்ணீர் எடுத்துவந்து கொடுத்தாள்.

ராகா குடித்து சற்றே ஆசுவாசமானவுடன், "கருநாகத்தை விடக் "கொடியது தான் ஆபரணம். நாகவிஷம் உடனே கொன்றுவிடும். பொன்னாபரணங்கள் ஆசையெனும் நஞ்சை நெஞ்சில் புகுத்தி வஞ்சனை, பொறாமை, சுயநலம் போன்ற பல வலிகளை இரத்தத்தில் கலக்கச் செய்து, சிறிது சிறிதாக ஆளைக் கொல்லும். யார் கொண்டு வந்து போட்டிருப்பார்கள்?" என்றாள் பாகாபாய்.

"நடுக்காட்டில் தவறி விழுந்ததாகத் தெரியவில்லை. விறகுக் கட்டிலல் லவா கிடந்தது?" என்றார் ராகா. "இது ஏதோ சதி. இதில் நாம் அகப்பட்டுக் கொள்ளக் கூடாது" என்றாள் பாங்கா தேவி. "இங்கே இத்தனை நேரம் இதைப் பார்த்துக் கொண்டு நின்றதே பாவம். வாருங்கள். விரைந்து வேறிடம் செல்வோம்" என்று ராகா கும்பார் நடக்க, மனைவியும், மகளும் அவரைப் பின் தொடர்ந்தனர்.

மரத்தில் மறைவில் தேவியோடு மறைந்து நின்ற பகவான் நாம தேவரைப் பார்த்து, "போதுமா, இன்னும் வேண்டுமா?" என்றார் புன்னகையுடன். நாமதேவர் தழுதழுத்த குரலில் "ஸ்வாமி! பெண்கள் நகையாசை யுடையவர்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இப்படி ஏகமனதாயிருப்பவர்களை இப்போதுதான் பார்க்கிறேன். அடியேன் இவரை தரிசிக்க வேண்டும் என்ற ஆவலினால்தான் அக்கேள்வி கேட்டேன். ராகாவை சோதித்தது போதும். தரிசனம் கொடுத்து ஆட்கொள்ளும்" என்று வேண்டினார்.

பின்னால் யாரோ நடந்து வரும் காலடியோசை கேட்டு ராகா கும்பார் "பாகா, அந்த வளையலைக் கொடுக்க யாரோ துரத்திக் கொண்டு வருகிறார்கள்" என, மூவரும் தலைதெறிக்க ஓடத் தொடங்கினர். பகவான் தேவியோடும், நாமதேவரோடும் எதிரே வந்து மறித்தார். ராகா மெய்மறந்து எதுவும் பேசத் தோன்றாமல், கண்களில் நீர் பெருக நெடுஞ்சாண் கிடையாக விழுந்தார். பகவான் அவர்களை ஆசீர்வதித்து மறைந்தார்.

82. கூர்ம தாசர்

"பாண்டுரங்க க்ஷேத்திரம்! ஆஹா! பண்டரீநாதர் குடியிருக்கும் நாதப்பிரம்ம ஸ்தலம். நாம தேவர், துக்காராம் போன்றோர் அவதரித்த தலம். மானிடப் பிறவி எடுத்தவர்கள் ஆயுளில் ஒரு முறையாவது சந்திரபாகா நதியில் நீராடி ஒரு இரவாவது பண்டரீபுரத்தில் தங்க வேண்டும். பாண்டுரங்கன் அடியார்க்கு எளியான். நினைத்த மாத்திரத்தில் காட்சி தரும் நந்தபாலன். புண்டரீகனுக்காக ஒரு செங்கல்லின்மேல் காத்திருந்த கருணை வள்ளல். ஆடி, கார்த்திகை மாதத்து ஏகாதசிகளுக்கு ஞானேசுவரர், நாமதேவர் போன்ற மகான்கள் அங்கே வந்து பஜனை செய்கின்றனர். அன்றைக்குத் தரிசனம் செய்வது 24 ஏகாதசி பலன்.....பூர்வ ஜென்ம புண்ணியம் செய்தவர்களுக்கே அப்பாக்கியம் கிட்டும்" புராணிகர் சொல்லச் சொல்ல கூர்ம தாஸருக்கு, பண்டரீபுரம் செல்லவேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று.

கதை முடிந்ததும் அருகிலிருந்தவர்களிடம் "பண்டரீபுரம் எவ்வளவு தூரம்?" என்று ஆவலுடன் கேட்டார்.

அவர்கள் "கை கால் திடமான எங்களுக்கே பண்டரீபுரம் செல்வது கடினம். தவழ்ந்து கொண்டே நீ எந்தக்காலம் போய்ச் சேருவாய்! தகுதிக்கு மீறி ஆசையை வளர்த்துக் கொண்டு அவதிப்படாதே" என்று சொல்லிச் சென்றனர்.

இதற்குப் பிறகு கூர்ம தாஸருக்கு ஆசை அதிகமானதே தவிர குறைந்த பாடில்லை.

"சாப்பிடுவதிலோ, உறங்குவதிலோ நாட்டமின்றி சதா ஏங்குவதில் என்ன பயன்? எனக்கோ பெண்டு, பிள்ளை, தாய், தந்தை, உற்றார், உறவினர் எவரும் இல்லை. இந்த ஊரில் வயிறுவளர்க்க, ஊர்ந்து சென்று உடல் தேயவில்லையா? இதையே பண்டரீபுரம் நோக்கிச் சென்று ..... அட, இந்த வருஷம் முடியவில்லை என்றால் அடுத்த வருஷ ஏகாதசி உற்சவத்திற் காவது போய்ச் சேர மாட்டோமா? அந்த முயற்சியில் உயிரே போனாலும் இந்த ஊனப்பிறவி ஒழிந்ததென்று கவலைப்பட்டு உருக யார் இருக் கிறார்கள்? உடலில் ஊனம் இருக்கலாம். என்பக்தி ஊனப்பட்ட தல்ல.....நிச்சயம் இறைவன் கருணையால் பாண்டுரங்கன் தரிசனம் கிட்டும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது" என்று முடிவு செய்து கொண்டு பண்டரிபுரம் பயணத்தைத் தொடங்கி விட்டார்.

பகல் நகர்ந்து உச்சியாயிற்று. வழியில் கல்லும் முள்ளும் உடையைத் தாண்டிக் கொண்டு உடலை காயப்படுத்தின. வழியோ அடர்ந்தகாடு. முதல்நாள் இரவு சாப்பிட்டது. பசிமயக்கம்; வெயிலில் தவழ்ந்து வந்த களைப்பு. ஒருசிறு ஆஞ்சனேயர் கோயிலைக் கண்டதும் அங்கு சென்று தூங்கினார். எழுந்து பார்க்கும்போது சூரிய அஸ்தமன நேரமாகி விட்டது.

"பண்டரீ நாதா! பூர்வ ஜென்ம வினையால் முடமாகப் பிறந்தேன். ஆமைபோல் நகர்ந்து சென்றதால் கூர்மன் என்று பெயர் பெற்றேன். பெற்றோர் யாரோ, இட்ட பெயர் எதுவோ அறியேன். நீயே என் தாய்; நீயே என் தந்தை; நீயே சுற்றம்; நீயே துணை என்று நம்பிப் புறப்பட்டவனை கைவிடலாமா? இந்த நடுக்காட்டில் என் பசியைத் தீர்ப்பார் யார்? நாளை வழி நடக்கத் தென்பு எப்படி வரும்? நிராசையோடு சாக வேண்டியது தான் என் தலை விதியா?" என்று வருந்தினார்.

அந்தசமயம் தோளில் பெரும் மூட்டைகளிரண்டைக் காவடியாய்த் தூக்கிக் கொண்டு, நெற்றியிலும், உடலிலும் பன்னிரண்டு நாமங்கள், தடித்த பூணூல், கொட்டைப் பாக்களவு கடுக்கன், சரிந்த தொந்தி, துவைத்துப் பழுப்பேறிய வேஷ்டியுடன் ஒரு முதிய வைஷ்ணவர் வந்து கொண்டிருந்தார்.

அனுமார் கோயில் படியில் காவடியை இறக்கியவர் "அப்பா, நாராயணா, ராமா" என்று கூறியபடியே இடுப்புத் துண்டை அவிழ்த்து வழியும் வியர்வையைத் துடைத்துக் கொண்டவர், திரும்பிக் கூர்ம தாஸரைப் பார்த்து,

"அட, மனித ரூபத்தைப் பார்ப்போமா என்றாகி விட்டது. உங்களுக்கு எந்த ஊர்? எவ்வளவு தூரம் பயணம்?" என்றார். "பண்டரீபுரம் போகலாமென்று புறப்பட்டேன். உங்கள் பேரென்ன?" என்று கேட்டார் கூர்மதாசர்.

அந்தனர் மகிழ்ச்சியோடு "பழம் நழுவிப் பாலில் விழுந்து அதுவும் நழுவி வாயில் விழுந்த மாதிரி ஆயிற்று! எல்லாம் அந்த பாண்டு ரங்கன் கிருபை! என் பேர் விட்டலநாதன். பண்டரீபுரத்தில் நான் ஒரு மளிகை வியாபாரி. பண்டரீபுரம்தான் போய்க் கொண்டிருக்கிறேன். பேச்சுத் துணைக்கு நீர் கிடைத்தீர்! ரொம்ப நாளாய் நானும் யாருக்காவது சேவை செய்யணுமென்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்தேன். நீங்கள் கவலைப்பட வேண்டாம். உங்களை நிதானமாக நான் அழைத்துப் போகிறேன். அதிகாலை பயணம் செய்வோம். வெயில் வந்ததும் சமைத்துச் சாப்பிட லாம். சற்றே ஓய்வெடுத்துக் கொண்டு, வெயில் இறங்கியதும் மீண்டும் பிரயாணத்தைத் தொடங்குவோம். இருட்டியதும் பஜனை, சாப்பாடு, தூக்கம் என்னிடம் வேண்டிய உணவுப் பொருள் இருக்கிறது. எனக்கோ கொஞ்சமாய் சமைக்க வராது. என்ன சொல்கிறீர்?" ன்றார்.

கூர்மதாசர் மகிழ்ச்சியில் வாயடைத்துப் போனார். "சொல்லப் போனால் நான்தான் உமக்கு நன்றி சொல்ல வேண்டும். அந்த பகவான்தான் உங்களை இங்கு அனுப்பியிருக்கிறார்" என்று நன்றி கூறினார். பிறகு அந்தணர் சுடச்சுட சமையல் செய்ய, இருவரும் ஆனந்தமாய்ச் சாப்பிட்டு நிம்மதியாய் உறங்கினர். விடியற்காலைப் பயணத்தைத் தொடங்கினர். திட்ட மிட்டபடி காரியங்கள் நடந்தன. கூர்ம

தாஸர் உடம்பு வலிக்கிறதே ஓய்வெடுக்கச் சத்திரம், சாவடி தென்படாதா என்று நினைக்க வேண்டியது தான் தாமதம் உடனே ஏதாவது கோயில், மண்டபம், சத்திரம் தென்பட்டு விடும். குளிக்க வேண்டும் என்று நினைக்கும் போது அருவியோ, சுனையோ தோன்றும், கூர்ம தாஸரின் ஆனந்தத்துக்கு எல்லையே இல்லை. பயணம் இத்தனை சுகமாக இருக்கும் என்று எண்ணவேயில்லை. இப்படியே நான்கு மாதங்கள் அந்தணரின் உதவியோடு தாசர் ஊர்ந்து சென்று பண்டரீபுரத்துக்கு இரண்டு காத தூரத்திலுள்ள வகுளாபுரியை அடைந்தார்.

கார்த்திகை மாத தசமி. அந்தணர் தாசரிடம் "நண்பரே! ஏகாதசியன்று நான் பண்டரீபுரத்தில் கடைதிறக்க வேண்டும். ஏராளமான கூட்டம் வரும். இன்னும் இரண்டு காதம் தானே இருக்கிறது! அதோ வரும் பஜனை கோஷ்டியோடு வருகிறீரா?" என்றார்.

தாசர் வருத்தத்தோடு "உமக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை. இவ்வளவு நாள் எனக்காகத் தாமதித்து வந்ததே என் பாக்கியம். கரும்பு ருசியாயிருக்கிறதென்று வேரோடு பிடுங்கலாமா? உங்களைப் போல் நிதானமாகவும், அன்பும், அக்கறையும் கொண்டு யார் கூட்டிப் போவார்கள்" என்றார்.

அதற்குள் பஜனை கோஷ்டி அருகே வரவே அந்தணர் அதன் தலைவரிடம் கூர்மதாஸரைக் காட்டி "இவர் என்னோடு வந்தவர். எனக்குச் சீக்கிரமாக பண்டரீபுரம் போயாக வேண்டும். இவரையும் பத்திரமாக உங்களுடன் அழைத்து வாருங்கள்" என்று சொல்லிச் சென்றார்.

நடப்பவர்களுக்கும், ஊர்பவருக்கும் சரிப்படுமா? அவர்கள் ஆடிப்பாடிக் குதித்துக் கொண்டே வெகுதூரம் போய்விடுவர். இவர் பின்னால் ஊர்ந்து கொண்டிருப்பார். இப்படியே கொஞ்ச நேரம் கழிந்தது.

கோஷ்டியின் தலைவர் "சீக்கிரம் வாருங்கள். அதிகாலை சூரியோதயமாவதற்குள், நாம் பண்டரிபுரத்தில் இருந்தாக வேண்டும்" என்று அவசரப்படுத்தினார்.

தாஸரோ வேகமாக ஊர்ந்ததில் சோர்ந்து போனார். தலைவரிடம் "எனக்காக நீங்கள் நின்று, நின்று போனால் நீங்களும் ஏகாதசிக்குப்

பண்டரீபுரம் போய்ச் சேர முடியாது. நான் ஒரு வாரத்தில் பண்டரீபுரம் போய் சேர்ந்து அடுத்த ஏகாதசி வரை காத்திருக்க வேண்டியதுதான்! நானும் எவ்வளவோ வேகமாகத்தான் ஊர்கிறேன். எனக்காகவும் இறைவனை வேண்டிக் கொள்ளுங்கள். பகவான் அருள் இருந்தாலன்றி நாளை தரிசனம் எனக்குக் கிட்டாது" என்று சொல்லி அனுப்பினார்.

பிறகு 'பாண்டு ரங்கா, பண்டரிநாதா, ஜெய ஜெய விட்டல' என்று உச்சரித்தபடியே ஊர்ந்து சென்றார். கார்த்திகை ஏகாதசி அதிகாலை. சந்திரபாகா நதியில் ஒருவரோடொருவர் நெருக்கியடித்துக் கொண்டு நீராடும் கூட்டம். பாகவத கோஷ்டியினர் நீராடி முடித்து ஆவேசமாகப் பஜனை செய்தபடி கோயிலுக்குள் வர நாமதேவருக்குக் காட்சி கொடுத்துக் கொண்டிருந்தார் பகவான்.

பாகவத கோஷ்டியின் தலைவர் பகவானின் அருகே சென்றார். பாதங்களில் பணிந்து "பாண்டுரங்கா! என்னை மன்னித்தருளும். கூர்மதாசர் என்றொருவர். இருந்து அவரை கூட்டி வர நேரமில்லாத பாவியாகி விட்டேன். உம்மை நினைத்து உருகித் துடிக்கும் உள்ளம். அவருக்குக் காட்சி தந்து அவரது ஆசையை நிறைவேற்ற வேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

பகவான் "அப்படியா, இதோ புறப்பட்டு விட்டேன்" என, அருகிலிருந்த நாமதேவர் 'உம்மை ஒரு கணமும் பிரியேன்' என்று கூட வந்தார். கர்ப்பக்கிரகம் தாண்டியதும் இதைப் பார்த்த ஞானேசுவரர் "ஸ்வாமி, எங்கே புறப்பட்டீர்? நீங்கள் இல்லாத இடத்தில் எனக்கென்ன வேலை" என்று அவரும் உடன் வந்தார்.

சிலாரூபம் எல்லார் கண்ணுக்கும் தெரிந்தாலும் சூட்சும வடிவம் கொண்டு சுவாமி யெவளியே போவது, உண்மையான பக்தர்களுக்கு மட்டுமே தெரியும். அப்படிப்பட்ட பக்தர்களில் தலை சிறந்தவர்கள் தான் நாமதேவரும், ஞானேசுவரரும். வகுளாபுரி செல்லும் வழியில் பெண்டி என்னும் கிராமம். அங்கே சாமந்தன் என்றொரு பக்தன். அவன் நறுமண மலர்கள் நிறைந்த நந்தவனம் ஒன்று ஏற்படுத்தி, மாலை கட்டி, இறைவனை ஆராதித்து வந்தான். தினமும் ஒவ்வொரு மலரைப் பறிக்கும் போதும், தொடுக்கும் போதும் "பரந்தாமா, நீர் என் நெஞ்சிலே குடியிருக்கும் நாள் என்று வரும்?" என்று ஏங்குவான்.

இப்போது பகவான் அந்த நந்தவனத்தை சமீபித்ததும் நாமதேவர், ஞானேசுவரர் இருவரையும் பார்த்து, "என்ன ரம்யமான வாசனை! மனோரஞ்சிதம், சண்பகம், ஜாதி, ரோஜா, துளசி.....ஆஹா! கொஞ்ச நேரம் இளைப்பாறி விட்டு வருகிறேன். யாரும் உள்ளே நுழையாமல் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று நந்தவனத்துக்குள் நுழைந்து, சாமந்தன் முன் போய் நின்றார்.

திடீரென்று பகவானைப் பார்த்ததும் சாமந்தனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. புளகாங்கிதமுற்று பாதங்களில் விழுந்து விழுந்து வணங்கினான். உட்கார மணை எடுக்க ஓடியவனை பரந்தாமன் கையைப் பற்றி இழுத்தார்.

"சாமந்தா! உன் அன்பு புரிகிறது. சாவகாசமாய் விருந்துண்ண வரவில்லை நான். இரண்டு கள்ளர்கள் என்னை விடாமல் துரத்திக் கொண்டு வருகிறார்கள். ஒளிந்து கொள்ள ஒரு இடம் தா" என்றார். சாமந்தன் நகைத்தான்.

"விளக்கை ஒளிக்க முடியுமா? சூரியனை ஒளிக்க இரவால் தான் முடியும். அண்ட சராசரங்களையும் வாயில் காட்டியவனை நான் ஒளிப்பதா?" என, பகவான் "மெத்தப்படித்த உன் மேதாவித் தனத்தைக் காட்ட இது சமயமல்ல! தேவகியின் வயிற்றில் பிறந்ததிலிருந்தே, இப்படி ஓடி ஒளிவதே என் பிழைப்பாகி விட்டது. சீக்கிரம் ஒரு இடத்தைக் காட்டு" என்று அவசரப்படுத்தினார்.

சாமந்தன் அவரை நந்தவனத்தின் மத்தியில் இருந்த தன் குடிசைக்கு அழைத்து வந்தான். "இந்தக் குடிசையில் எந்த இடத்திலாகிலும் ஒளிந்து கொள்ளுங்கள்" என்றான். பரந்தாமன் சங்குசக்கரம், வனமாலை, கௌஸ்துபம் குலுங்க எல்லாப் பக்கங்களிலும் ஓடிப் பார்த்து வந்து உதட்டைப் பிதுக்கினார்.

"சாமந்தா, இங்கெல்லாம் சரியில்லை. அவர்கள் வல்லாள கண்டர்கள். கண்டுபிடித்து விடுவார்கள்" என்றார். சாமந்தன் சிறிதும் யோசிக்காமல் அங்கிருந்த மண் வெட்டியை எடுத்து மார்பைப் பிளந்து "நீர் ஒளிந்து கொள்ள சரியான இடம் இதுதான். எவரும் உம்மைக் கண்டுபிடிக்க முடியாது" என்றான்.

பரந்தாமனும் சிறிய உருவமாகி அவன் நெஞ்சில் அமர்ந்து கொண்டார். துணியால் நெஞ்சைப் போர்த்துக் கொண்டான் சாமந்தன். "சாமந்தா! இதற்கு நான் பிரதி என்ன செய்யப் போகிறேன்" என்றார் பகவான்.

"ஸ்வாமி! நான்தான் நன்றி சொல்ல வேண்டும். இது என் நெடு நாளையப் பிரார்த்தனை. இன்று தான் பூர்த்தியாயிற்று. எத்தனை பிறவி எடுத்தாலும் உம்மை மறவாமலிருக்கும் வரம் வேண்டும்" என்றான் சாமந்தன். கொஞ்ச நேரத்தில் சாமந்தன் சமாதி நிலையடைந்தான். வெளி உலக நினைவேயற்று, ஆனந்த வாரிதியில் மூழ்கினான்.

வெளியே காத்திருந்த நாமதேவர் "உச்சி வேளைக்குள் கூர்ம தாசருக்குத் தரிசனம் தர வேண்டும் என்ற ஞாபகமின்றி பகவான் உறங்கி விட்டார் போலும். நான் போய் எழுப்பி வருகின்றேன். எங்கேயும் போய்விடாமல் காவலிரும்" என்று ஞானேசுவரரிடம் சொல்லி விட்டு நந்தவனத்துள் நுழைந்தார். இண்டு இடுக்கு விடாமல் தேடினார். சாமந்தனின் குடிசையிலும் பார்த்தார். சாமந்தனிடம் "சங்குச் சக்கர



பீதாம்பரமணிந்து ஒருவர் இந்தப்பக்கம் வந்தாரா?" என்று கேட்டுப் பார்த்தார். சாமந்தன் மோன நிலையிலிருந்ததால், இவர் கேள்வி அவன் மூளைக்கு எட்டவில்லை.

"ஐயோ! தெரியாத் தனமாய் உம்மைத் தனியாக விட்டேனே! பகவானே! உமக்கு என்ன ஆபத்து நேரிட்டதோ?" என்று பலவாறு புலம்பினார். சாமந்தனது மார்பை மூடிய வஸ்திரம் காற்றில் திறந்து கொண்டது. அங்கே ஏற்பட்டிருந்த காயத்தையும், இரத்தத்தையும் பார்த்ததும் நாமதேவருக்கு விஷயம் விளங்கிவிட்டது.

"ஓ, நீர் ஒய்வெடுக்கும் இடம் இந்த நந்தவனம் தானோ! பகவானே! உம்மைத் தாங்கும் வலிமை எவர்க்குண்டு? தேவகியையும், கௌசல் யையும் போல சாமந்தனை பரம சாதுவாக்கி விட்டீர்! உம்மைக் காணாத என் உயிர் எத்தனை நேரம் இருக்குமென்று நினைக்கிறீர்! தரையில் போட்ட மீனைப் போல் என்மனம் துடிப்பதை நீர் தெரிந்து கொள்ள வில்லையா?"

நாமதேவரின் தவிப்பைக் கண்ட பகவான் எழுந்து நின்றார். சாமந்தனின் சமாதி நிலைகலைந்தது.

"சாமந்தா! என் மனதைத் திருடிக் கொண்ட முதல்கள்வன் இந்த நாமதேவன். இனிமேலும் இவனைக் கதற விடுவது முறையல்ல. உன் இருதயக் கதவைத் திறந்து என்னை வெளியே போகவிடு" என்றார் பரந்தாமன்.

ஆஞ்சனேயர் நெஞ்சைப் பிளந்து காண்பித்தது போல் சாமந்தன் வெட்டிய இடத்தை இரு கைகளாலும் விலக்க, பகவான் வெளியே குதித்தார்.

நாமதேவர் அவரைக் கட்டிப் பிடித்துக் கொண்டு புலம்பி அழ, பகவான் "நான்தான் வந்து விட்டேனே! அழாதே! சாமந்தனின் பெருமையை உலகுக்கு அணர்த்தவே அவன் மனப்பீடத்தில் ஒரு முகூர்த்த காலம் உறைந்தேன்" என்று கூறி, தன் பீதாம்பரத்தால் அவரின் கண்ணீரைத் துடைத்து, சமாதானம் செய்தார். சாமந்தனது காயத்தையும் ஆற்றி, அவனையும் ஆசீர்வதித்து, இருவருடனும் நந்தவனத்துக்கு வெளியே வந்தார்.

ஞானதேவர் பகவானைக் கண்டதும் "ஓய்வெடுக்கிறேன் என்று போனவர் இவ்வளவு நேரமாக்கி விட்டீர்களே! நாம தேவ்ரும் என்னைக் காவல் வைத்துவிட்டுப் போய் விட்டார். இது யார்? உள்ளே என்ன நடந்தது? நான் தனியாய் இங்கே எத்தனை தவித்துப்போய் விட்டேன் தெரியுமா?" என, உள்ளே நடந்தவற்றை விஸ்தாரமாய் கூறிய பண்டரி நாதன், மூவரோடும் கூர்ம தாஸரைக் காணச் சென்றார்.

"வலது காலும், தொடையும் துடித்தது. நகர்ந்து வந்ததால் ஏற்பட்ட பலகீனம் என்று நினைத்தேன். இப்போது வலது கண் துடிக்கிறது. என்ன நன்மை நேரப் போகிறது? பகவானை தரிசிப்பதைக் காட்டிலும் ஆனந்தம் வேறெதில் உண்டு? ஏகாதசி உச்சி வேளையாகப் போகிறது. எல்லோரும் உபவாசம் இருந்து பலகாரம் சாப்பிடும் வேளையில் நான் பண்டரி புரத்துக்கு இரண்டு காதம் பின்னால் இருக்கிறேன். எனக்காவது! தரிசனம் கிடைப்பதாவது! பகற்கனவு. யாரோ ஒருவர் பூஜை செய்து துளசியைத் தந்து விட்டுப் போனார். இந்த நற்சகுனங்கள் எதை அறிவுறுத்துகின்றன?" சிந்தனைக்குழப்பத்தோடு நகர்ந்து கொண் டிருந்தார் கூர்ம தாஸர்.

பகவான் அந்தணர் வடிவில் அவரை நெருங்கி "நான் ஏகாதசி உபவாசத்திற்காக ரொட்டி சுட்டிருக்கிறேன். இருவரும் சாப்பிடலாமா?" என்று கேட்டார்.

தாசர் அவரை ஏற இறங்கப் பார்த்து விட்டு "உமது கரிசனத்துக்கு மெத்த வந்தனம். பண்டரிநாதனை தரிசிக்காமல் தண்ணீரும் அருந்துவதில்லை என்று எனக்குள் ஒரு விரதம்" என்றபடி ஊர்ந்தார்.

அவரைப் பின் தொடர்ந்த விட்டலன் "பண்டரிபுரத்திற்கு இன்னும் இரண்டு காதம் இருக்கிறது. இந்த வேகத்தில் போனால் நீர் போய்ச் சேர ஒரு வாரம் ஆகும். பட்டினி கிடந்தால் நகரமுடியுமா?" என, கூர்மதாஸர்.

"ஊரிலிருந்து புறப்பட்ட போது, பண்டரிபுரத்தை எப்படி அடையப் போகிறேன் என்று பிரமிப்பாக இருந்தது. அந்தண ரூபத்தில் வந்து வழிகாட்டிய பெருமாள், மேற்கொண்டும் அனுக்கிரகம் செய்வார். தோல்வியுற்று ஆவி போனாலும் கூட முயற்சி செய்தோம் என்ற நிம்மதியோடு சாவேன்" என்றபடி ஊர்ந்தார்.

மறுநிமிடம் பகவான் சங்கு, சக்கரம், வனமாலை, கௌஸ்துபம், இவற்றோடு பீதாம்பர தாரியாய் காட்சி தந்தார்.

கூர்மதாஸர் மெய்மறந்து அவர் பாதங்களில் சரிந்து விம்மினார். துதித்தார். பகவான் நாமதேவர், ஞான தேவர், சாமந்தன் இவர்களை அறிமுகப்படுத்த, தாசர் "பகவானே! உமது கருணை அற்புதமானது. எனக்காக பாகவதர்களுடன் பண்டரிபுரம் விட்டு கால் கடுக்க நடந்து வந்தீரே!" என்று பகவானின் பாதங்களைப் பிடித்துவிட, பகவான் தாசரை வாரியணைத்து, விழிநீர் துடைத்து "தாசா, உன் முன் வினையால் முடமாகப் பிறந்தாய். நீ கோரும் வரத்தைக் கேள்" என்றார்.

தாசர் "உம்மை தரிசித்தபின் வேறென்ன வேண்டும்? ஆயினும் ஒன்று கேட்கிறேன். என்னைப் போல் முடவர்கள், குருடர்கள், ஊனமுற்றவர்கள், வயோதிகர்கள் இதுவரை வந்து விட்டு பண்டரிபுரம் போகமுடியாமல் போனால் என்னைப் போலத் தவிக்கக்கூடாது. அதனால் இங்கேயே நீ கோயில் கொள்ள வேண்டும்" என்று வேண்ட பரந்தாமன்,

"அன்ப! உன் விருப்பப்படியே நடக்கும். அதுமட்டுமல்ல..... நீ ஆடி, கார்த்திகை மாத ஏகாதசிகளுக்கு என்னை தரிசிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாய். அந்த நாட்களில் பண்டரிபுரம் வருபவர்கள் இங்கும் வந்து தரிசனம் செய்தாலே யாத்ரா பலன் பூர்த்தியாகும்" என்று வரமளித்து அடுத்த கணமே சிலா ரூபமாகி விட்டார்.

நாமதேவர், ஞானதேவர், சாமந்தன் மூவரும் கூர்மதாசருடனேயே தங்கி, மறுநாள் பாரணை முடித்து, அவரவர் இருப்பிடம் திரும்பினர். மன்னன் காதுக்கு இச்செய்திகள் எட்டவும் கூர்ம தாசருக்கு ஒரு வீடும், மற்ற வசதிகளும் செய்து தந்தான். ஸ்ரீமந் நாராயணனுக்கு அங்கேயே ஒரு கோயில் கட்டி, ஆராதனைக் குரிய எல்லா ஏற்பாடுகளும் செய்தான்.

கூர்மதாசர் தன் இறுதிக்காலம் வரை வகுளாபுரியிலேயே தங்கி, பகவானுக்குத் தொண்டு செய்து பக்தியைப் பரப்பி வந்தார்.

இன்றும் ஆடி, கார்த்திகை ஏகாதசி உத்சவத்திற்குப் பண்டரிபுரம் செல்லும் யாத்ரீகர்கள் போகும்போதோ, வரும்போதோ வகுளாபுரி பகவானை தரிசிக்காமல் செல்வதில்லை.

83. ஸ்ரீ கோபால தாசர்

கர்நாடகத்தில் ராய்ச்சூர் மாவட்டத்தைச் சேர்ந்த மொசர காலு என்ற ஊரில் மொனாராயா– வெங்கம்மா தம்பதிகளுக்கு மூத்த மகனாகப் பிறந்தார் பாகண்ணா. தாசப்பா, சீனப்பா, ரங்கப்பா மூவரும் பாகண்ணா வின் தம்பிகள். ரங்கப்பா பிறந்தவுடன் மொனாராயா இறந்து போனார். யாருமற்ற வெங்கம்மா குழந்தைகளுடன் சொசரகாலுக்கு அருகில் உள்ள சங்கரபுராவுக்கு வந்தாள். சங்கரபுராவின் எல்லையில் ஒரு தொன்மை யான ஹனுமன் கோவில் இருந்தது.

வெங்கம்மா அந்த அனுமார் கோவிலைப் பெருக்கி, நீர்தெளித்து, கோலமிட்டு சுத்தமாக வைத்தாள். பஜனைப் பாட்டுடக்களைப் பாடி, பிட்சை எடுத்துக் கிடைக்கும் அரிசியை மூன்று கற்களை வைத்து சுள்ளி, குப்பை, செத்தைகளைப் போட்டு எரியவிட்டு சமைத்து அனுமனுக்கு நிவேதனம் செய்து, உப்பிட்டு பிள்ளைகளுக்குப் போடுவாள். அங்கேயே ஓர் ஓரமாக ஊர் அடங்கியபிறகு உறங்கினர். இப்படியே காலம் சென்றது. வெங்கம்மா பிள்ளைகளையும் சேர்த்துக் கொண்டு மாலை நேரங்களில் பஜனை செய்வாள். ஊரார் இரக்கப்பட்டு மீதம் இருக்கும் சாப்பாட்டை வெங் கம்மாள் பிள்ளைகளுக்குத் தருவார்கள்.

ஹனுமன் கோவிலை சுத்தப்படுத்தும் புண்ணியம் வீண் போகுமா? அந்த அனுமனை வேண்டி, பிரார்த்தனையை நிறைவேற்ற ஒரு மிராசுதார் வந்தார். வெங்கம்மாவின் நிலையைக் கண்டு மனம் வருந்தி, கோவிலுக் குப் பக்கத்திலிருந்த நிலத்தை வெங்கம்மாவுக்கு அளித்தார். பத்திரம், பட்டா என்ற உரிமை எதுவும் இல்லை. ஆனால் உழுது பயிரிடும் உரிமை கிடைத்தது. வெங்கம்மா மனம் பூரித்தாள்.

நெல்லாகக் கிடைத்த பிட்சைகளை ஒரு மண் கலயத்தில் இட்டு வைத்திருந்தாள் வெங்கம்மா. ஒருகுடியானவன் ஏரும், மாடும் இரக்கப் பட்டுத் தந்தான். பாகண்ணாவும், தாசப்பாவும் நிலத்தை உழுதனர். வெங்கம்மாவும், சீனப்பாவும் களை யெடுத்தனர். நல்ல விளைச்சல்.

ஊராரின் அன்பு ஒத்தாசையில் வைக்கோலும், நெல்லுமாகப் பிரித்து மூட்டைக் கட்டி கோவிலிலேயே வைத்தனர்.

களைகள் இல்லாத பயிரும், கல்லில்லாத அரிசியும் பார்க்கமுடியுமா? பொறாமை கொண்ட சில போக்கிரிகள் கிராமக் கணக்குப் பிள்ளையிடம் "அனுமன் கோவிலை சக்தியற்றதாக்கி விட்டாள் இந்த வெங்கம்மா! அவளுடைய கடைசிக் குழந்தை கோவிலுக்குள்ளேயே மலம் கழிக்கிறது. பிருஹஷ்டையான நாட்களில் வெங்கம்மா எங்கே படுத்திருப்பாள்? கேள்வி முறையில்லாமல் போய்விட்டது சங்கரபுரா! அங்கேயே சமைத்து, சாப்பிட்டு..... சேச்சே.... மூட்டை மூட்டையாய் விளைஞ்சிருக்கே! வரி கொடுக்க வேண்டாமா? இன்னொரு ஊராய் இருந்தால் நாறடிச்சி ருப்பானுக,....." என்றெல்லாம் வத்தி வைத்தனர்.

இவ்வளவு போதாதா? கோபம் கொண்ட கணக்கன் வரி, அபராதம் என்ற பெயரில் எல்லா தானிய மூட்டைகளையும் பறித்து க் கொண்டான். இனி மாருதி ஆலயத்தில் தங்கக் கூடாதென்று உத்தரவு போட்டான். சில நல்லவர்கள் கூட வெங்கம்மாவிற்குப் பரிந்து பேசினால் கணக்குப் பிள்ளையின் கோபத்துக்கு ஆளாக நேரிடும் என்று பயந்து மௌன மாயினர்.

வெங்கம்மா விம்மி விம்மி அழுதான். மூத்த மகன் பாகண்ணா "அழாதே அம்மா!" இப்படி வரி வசூலிப்பவருக்கு வாரிசில்லாமல் போகும்! நெஞ்சில் ஈரமில்லாத இவர் வீட்டுக் கிணறும் வறண்டு போகும்" என்றான்.

விதை நெல்லும் போய், தங்குமிடத்திலிருந்தும் துரத்தப்பட்டபின் வெங்கம்மா சில நல்லவர்கள் வீட்டில் வேலை கேட்டாள்; கிடைத்தது. ஒரு சிறு இடம் தங்கவும் கிடைத்தது. அவ்வூர் ஆசிரியர் வீட்டில் வேலைசெய்து கூலியாக தன் பிள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லித் தரும்படி வேண்டினாள். ஆசிரியரும் உண்மையான மனத்துடன் கல்வி போதித்தார்.

வெங்கம்மா வேலை பார்த்த ஒரு செல்வந்தர் வீட்டில் உபநயன விழா. வெங்கம்மாதான் முறுக்கு, அதிரசம், பருப்புத் தேங்காய் எல்லாம் செய்தாள். செல்வந்தர் பாகண்ணாவுக்கும் சேர்த்து உபநயனம் செய்து வைத்தார். உபநயனத்தின் போது சாஸ்திரிகளிடம் பல கேள்விகளை பாகண்ணா கேட்டான். அதனால் காயத்ரி மந்திரத்தின் பெருமைகளை நன்கு புரிந்துக் கொண்டான். வேதத்தில் கூறியுள்ள எண்ணிக்கைப்படி

மூன்று வேளையும் சந்தியா வந்தனம் செய்து காயத்திரி ஜபித்து வந்தான். குளக்கரையில் உள்ள ஒரு பெரிய மரத்தடியில் பல மணி நேரம் தியானத்தில் ஆழ்ந்து விடுவான் பாகண்ணா. சில ஆண்டுகள் கழிந்தன.

குளக்கரை மேட்டில் ஆடுபுலி ஆடிக் கொண்டிருந்த ஒரு கூட்டம், பலநாள் பலவாறு இவரைக் கேலி செய்தது. பாகண்ணா எதையும் பொருட்படுத்துவதில்லை. ஒருநாள், அந்தக் கும்பல், 'இவனை தூக்கத்தி லிருந்து எப்படியாவது எழுப்பிவிடணும்டா" என பேசிக் கொண்டனர். மூன்று பெரிய கற்களை வைத்து தீமூட்டி குளத்திலிருந்து ஒரு பானை நீரைக் கொண்டுவந்து, கொதிக்க வைத்து பாகண்ணாவின் மேல் ஊற்றினர்.

காயத்திரி மந்திர தியானம், அவர் உடலில் எந்த உணர்ச்சியுமில்லை. அவரது தியானமும் கலையவில்லை. ஆனால் வெந்நீரை ஊற்றியவர்கள் 'ஐயோ,அம்மா, அப்பப்பா! என்றெல்லாம் அலறினர். பூமியில் விழுந்து புரண்டனர். அழுதனர். அவர்கள் உடல் சிவந்து கன்றியிருந்தது. குண்டு குண்டான கொப்புளங்கள் தோன்றின.

எல்லோரும் பாகண்ணாவில் கால்களில் விழுந்தனர். "பாகண்ணா, எங்களை மன்னித்துக் காப்பாற்று. எல்லோரும் சாபமிடுகிறபடி நீயும் சாபமிடுகிறாய் என்று நினைத்தோம். கணக்குப் பிள்ளைக்கு உன் சாபப்படி வாரிசில்லை. அவருடைய கிணற்றிலும் தண்ணீர் இல்லை. எங்கள் உடல் எரிச்சல் தாங்க முடியவில்லை. எங்கள் செயலை மன்னித்து அபயம் கொடு. இனி உங்கள் வழிக்கே வரமாட்டோம்" எனக் காலில் விழுந்தனர்.

இந்த ஆரவாரத்தினால் பாகண்ணா கண் விழித்தார். "கடவுள் காப்பாற்றுவார். செய்த தவறை உணர்ந்து வருந்தும் போதே, தவறு மன்னிக்கப்பட்டு விடுகிறது. பிராம்மணன் இதர அனுஷ்டானங்களை செய்யாமல் போனாலும், காயத்திரியை மூவாயிரம் முறை ஜபித்தால் தேவர்களும் அவனை பூஜிக்கிறார்கள். காயத்திரி கவசமாய் நின்று காக்கிறாள். பிரம்ம தேஜஸை அளிக்கிறாள். நாராயணனை நெஞ்சில் நிறுத்தி தியானம் செய்யும் போது உங்களின் செய்கை நாராயணரை நரசிம்மராக்கிவிட்டது. எல்லா ஆத்மாக்களிலும் பகவான் இருக்கின்றான். கண்டுபிடிக்கத் தான் முடிவதில்லை" என்றார்.

இதற்குப்பின் கொப்புளங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்தன. தீயவர்கள் மனம் திருந்தி கவிழ்ந்த முகத்துடன் விடை பெற்றுச் சென்றனர்.

ஒரு நாள் கண்மூடி தியானத்தில் இருந்தசமயம், அவர் நாவில் எவரோ பீஜாட்சரம் எழுதுவது போல் இருந்தது. விழித்துப் பார்த்தால் நாக்கை நீட்டிக் கொண்டிருக்கிறார். எதிரில் எவரும் இல்லை. ஆனால் அவருக்குப் புதிய கற்பனைகள் பிறந்தன. சந்தங்களோடு பக்திப் பாடல்கள் கோர்வையாய் மனதில் படம் பிடித்தாற்போல் ஓடின. அடுத்துள்ள மூன்று பிறவிகளில் எங்கெங்கு யாராய் பிறக்கப் போகிறோம் என்று உணர்ந்து கொண்டார்.

ஆலயத்தில் தானே இயற்றிய அழகிய கவிதைகளை சந்தத்தோடு இனிமையாகப் பாடுவார். கூட்டம் கூடிவிடும். மக்கள் வயது வித்தியாசமில்லாமல் காலில் விழுவார்கள்.

"சீக்கிரம் போ..... மாடு கன்று போடப் போகிறது" என்பார் ஒருவரிடம். அவர் வீட்டிற்குப் போனால் மாடு கன்று போட்டுக் கொண்டிருக்கும்."

"அணை உடையப் போகிறது. குடிசைகளைக் காலி பண்ணுங்கள்" என்பார். சற்று நேரத்தில் அணை உடைந்து விடும். அவர் வாக்கினால் பல உயிர் பிழைக்கும். இம்மாதிரியான அருள் வாக்கினால் எப்போதும் அவரைக்காண ஜனங்கள் அலைமோதிக் கொண்டிருந்தனர்.

பலரின் வேண்டுகோளுக்கிணங்க உத்தனூருக்குப் போனார் பாகண்ணா. அங்குள்ள வேங்கடநாதர் ஆலயத்தில் எதிர் காலத்தைக் கணித்துக் கூறி, அவர்கள் தந்த பொருளுதவியால் தாயையும், தம்பிகளையும் காப்பாற்றினார். தனக்கு அடுத்தவனான தாசப்பாவிடம் குடும்பப் பொறுப்பை ஒப்படைத்து, " தாசப்பா, நான் பக்தியைப் பரப்பப் பிறந்தவன். ஒரே இடத்தில் கட்டிப் போட்டாற் போல் தங்க முடியாது. அம்மாவையும், தம்பிகளையும் கவனித்துக் கொள். ஆந்திராவில் ஆதோணிக்கருகில் மகான் ஸ்ரீ விஜயதாசர் இருக்கிறார். அவருடைய சீடனாகப் போக வேண்டும்" என்று கூறி, தாயிடமும், சகோதரர்களிடமும் விடைபெற்று, ஆதோணி சென்று,ஸ்ரீவிஜயதாசரை தரிசித்து சீடரானார். ஸ்ரீ விஜயதாஸர் பாகண்ணாவுக்கு 'கோபால விட்டல' என்று பெயர் சூட்டினார்.

ஊர் ஊராய் பக்திப்பயிர் வளர்த்தனர் குருவும் சீடரும். ராய்ச்சூர் அருகே மானவி என்ற சிற்றூர். அங்கே மக்களின் பிரம்மாண்டமான வரவேற்பு. மானவியில் ஸ்ரீனிவாசாச்காரியா என்பவர் பெரும் சமஸ்கிருதப் பண்டிதர். பல மாணவர்களுக்கு சமஸ்கிருதம் போதித்து வந்தார். வித்யா கர்வம் நிறைய இருந்தது இவருக்கு. ஒருநாள் ஸ்ரீநிவாசாச்சாரியா இருந்த தெருவில் உஞ்ச விருத்தி பஜனை செய்து கொண்டு போனார்கள் ஸ்ரீ விஜயதாசரும், சீடரும். பின்னால் பக்தர்களின் பக்தி கோஷங்கள். எதிரே பாடத்தை முடித்துக் கொண்டு ஸ்ரீனிவாசாச்சாரியா வீடுநோக்கி வந்து கொண்டிருக்கிறார்.

ஸ்ரீ விஜயதாசரும், ஸ்ரீனிவாசாச்சாரியாரும் எதிரும், புதிருமாய் சந்தித்துக் கொள்ள, பண்டிதர் என்று கௌரவப் படுத்தி விருந்திற் கழைத்தார் ஸ்ரீவிஜயதாஸர். 'அதற்கென்ன, வருகிறேன்' என்று சொல்லி விட்டு வீட்டிற்குப் போய்விட்டார் ஸ்ரீனிவாசாச்சாரியா. ஸ்ரீ விஜயதாஸர் பஜனை முடிந்து, இருப்பிடம் சேர்ந்து, பூஜை செய்தபின்," கோபாலா, ஸ்ரீனிவாசனைக் காணோமே" என்று கேட்டார்.

"அவர் ஒப்புக்குத்தான் வருகிறேனென்றார். வரமாட்டார்" என்றார் கோபாலதாசர்.

"அப்படியில்லை. அவர் வீடுவரைபோய் பார்த்துவிட்டு வந்துவிடு. ஒருவரை சாப்பிடக் கூப்பிட்டுவிட்டு அவர் வருமுன் சாப்பிடுவது சரியல்ல"என்றார் குருநாதர்.

"குருவின் உத்தரவுப்படி பண்டிதர் வீடுசென்றார் கோபால தாசர். "சாப்பிட வாருங்கள்; குருநாதர் காத்திருக்கிறார்" என்றார் கோபால தாசர். "எனக்கு நேரம் தவறி சாப்பிட்டால் வயிற்றுவலி வந்துவிடும். அதனால் சாப்பிட்டு விட்டேன்" என்றார் ஸ்ரீனிவாசாச்சார்யா. குருவை அவமதித்துவிட்டார் எனக் கோபம் வந்தது கோபால தாசருக்கு.

"சாப்பிட்ட பின் மறுபடி வயிற்றுவலி வர எத்தனை நேரமாகும்? "என்றார் கோபத்துடன். அடுத்த கணமே ஸ்ரீனிவாசருக்கு வயிற்றுவலி ஆரம்பித்து விட்டது. கோபால தாசர் திரிகால ஞானி என்பதை உணர்ந்தார். அவர் கோபத்தால் ஏற்பட்ட வலி மருந்தாலோ, உணவாலோ தீருவதாய் இல்லை. ஆலயம் சென்று பல ஸ்லோகங்கள், பாராயணங்கள் செய்தார். திருப்பதி சென்றார். தீரவில்லை. மந்திராலயம் சென்று மன்றாடினார்.

ஸ்ரீனிவாசர் கனவில் ராகவேந்திரர் தோன்றி"உன் வயிற்று வலிக்குக் காரணம் உன் அகம்பாவம். பாகவத சிரேஷ்டர்களை அவமதிக்கக் கூடாது. ஸ்ரீ விஜயதாசர் இப்போது 'சீக்கலபரவி'யில் இருக்கிறார். அங்கு சென்று அவர் பாதங்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டாலன்றி நோய் தீராது" என்று கூறினார்.

ஸ்ரீனிவாசச்சாரியா அப்படியே சீக்கலபரவிக்குச் சென்று ஸ்ரீ விஜயதாசரை சந்தித்து தன்பிழை பொறுக்கும்படி வேண்டினார். ஸ்ரீ விஜயதாசர்"கோபாலன் தாயாரைப் பார்க்க உத்தனூர் போயிருக்கிறார். அவன் கணபதியின்அம்சம். அவனால் வந்த பிணி அவனால் தான் நீங்க வேண்டும்" என்று சொல்லி விட்டார்.

உத்தனூர் சென்றார் ஸ்ரீனிவாசாச்சாரியா. வேங்கடநாதன் ஆலயம்போயிருப்பதாய் கூறினார் அவர் அன்னை. ஆலயத்துக்கு விரைந்தார். தாசரைக் கண்டு நெடுஞ்சாண் கிடையாக விழுந்தார்.

திரிகால ஞானிக்கு அவர் வந்த காரணம் புரியாதா? அவரை அன்புடன் தூக்கி நிறுத்தி ஒரு இடத்தில் உட்கார வைத்தார்.

சோள மாவில் இரண்டு ரொட்டி தட்டி, அவைகளை தன்வந்திரி மந்திரத்தால் ஜபம் செய்து, வேங்கடநாதனுக்கு நிவேதனம் செய்து, ஸ்ரீனிவாசரைச் சாப்பிடச் சொன்னார். சாப்பிட சாப்பிட வயிற்று வலி குறைந்து கொண்டே வந்து, சாப்பிட்டு முடித்ததும் மறைந்தேபோயிற்று. விட்டு விடுதலையானாற் போல் ஒரு உணர்வு. ஆனந்தத்துடன் கோபாலதாஸரின் பாதங்களில் விழுந்தார் ஸ்ரீனிவாசாச்சார்யா.

"ஸ்ரீனிவாசரே! உமது ஆயுள் முடியப் போகின்றது. சமஸ்கிருதத்தை பழுதறக் கற்ற உமது ஆயுள் முடியக் கூடாது. காயத்திரி தேவி! நான் உன்னை உண்மையான மனதுடன் ஜபம் செய்திருக்கிறேன். என் ஆயுளில் நாற்பது ஆண்டுகள் ஸ்ரீனிவாசனுக்குப் போக வேண்டும். எனது கற்பனையையும், கவிபுனையும் திறமையையும், உண்மையான மனதுடன் ஸ்ரீனிவாசனுக்குத் தத்தம் செய்கின்றேன். குருநாதா! அருள்புரியும்" எனத் தியானம் செய்தார்.

பிறகு "இன்று முதல் நீ ஸ்ரீனிவாசாச்சார்யா அல்ல..... ஜகன்னாத விட்டலன் என்று பெயர் பெறுவாய். மக்கள் உன்னை ஜகன்னாத தாசர் என்றழைப்பார்கள்" என்று ஆசி அளித்தார்.

கோபம் சண்டாளம் என்பார்கள். சாபத்தின் பலனை கோபாலதாசரே அனுபவித்தார். வயிற்று வலியுடன் திருப்பதி சென்று ஸ்ரீனிவாசனை தரிசித்தார். திருப்பதியிலிருந்து உத்தனூர் திரும்பினார் சித்திரபானு ஆண்டு வளர்பிறையின் எட்டாவது நாள் தியானத்திலேயே சமாதி அடைந்தார் ஸ்ரீகோபாலதாசர்.

தாயிடமும், சகோதரர்களிடமும் அளவற்ற அன்புகொண்டு, குடும்பத்துக்காக பாடுபட்டு, காயத்திரி மகிமையால் முக்காலமும் உணர்ந்து, கவி புனைந்து, பக்தியைப் பரப்பி, உபதேசங்கள் செய்து, குருநாதரை அவமதித்ததற்காக ஸ்ரீனிவாசாச்சாரியை சபித்து. காலில் விழுந்தவுடன், அவரது வயிற்று வலியை தான் வாங்கிக் கொண்டு, அவரது திறமைக்கு, பாண்டித்தியத்துக்கு தன் ஆயுளில் நாற்பது ஆண்டுகள் தத்தம் செய்த இந்த மகான் 18–ம் நூற்றாண்டில் வாழ்ந்து ம்றைந்தவர்.

84. ஜனார்தனப்ரியதாம்

கிருதயுகத்தின் கால் பாகம்சென்றிருந்தது. அன்படியார் பெரும் நாராயண பக்தர். நடுக்காட்டில் ஆசிரமம் அமைத்து பள்ளிக் கொண்ட பரந்தாமனைப் பற்றி பாட்டுக்கள் இயற்றி, இனிய குரலில் பாடி, இசையால் வழிபட்டுவந்தார். அவர் பாடினால் அவரைச் சுற்றி மானும் மயிலும், பட்சிகளும் மட்டுமின்றி சிங்கம், புலி, கரடி போன்ற கொடிய மிருகங்களும் சாதுவாய் படுத்துக் கிடக்கும். அருகிலிருக்கும் மானின் மேல் சிறுத்தை பாயாது. மரத்தில் உட்கார்ந்திருக்கும் இராஜாளி, புறாவை விரைந்து வந்து பற்றாது. சிங்கத்தின் குட்டிகளும், யானைக் குட்டிகளும் கலந்து விளையாடும். வழக்கம் போல் அன்படியாரின் இசையைக் கேட்க வந்த பக்தவத்ஸலன் "உனக்கு என்ன வரம் வேண்டும்?" கேட்டார்.

அன்படியார் "உன்தரிசனம் பெற்றபிறகு வேறென்ன வேண்டும்? ஆயினும் நீ எல்லோருக்கும் தரிசனம் தர இங்கேயே கோயில் கொள்ள வேண்டும். வைகுண்டத்திற்கு நிகராக இந்த இடம் பூலோக வைகுண்ட மென அழைக்கப்பட வேண்டும்" என்றார்.

மகாவிஷ்ணு சம்மதித்து விடைபெற்றார்.

பிரம்ம தேவரின் மகாசபை. இந்திராதி தேவர்கள் அஷ்டதிக் பாலர்கள். சப்தரிஷிகள். நவக்கிரகங்கள்; ருதுக்கள்; பர்வதங்கள்; நதிகள்; ஆதிசேடன், வாசுகி முதலிய நாகர்கள்; கின்னரர், கந்தர்வர்; வித்யாதரர்; சித்த, சாரணர்கள்; நவ ப்ரஜாபதிகள், மாதங்கள், வருஷங்கள், நட்சத் திரங்கள் என கோலாகலமாக இருந்த சமயம் நாரதர் தனது மகதி வீணையை மீட்டிய வண்ணம் பாடிக் கொண்டு வந்தார். பிரம்மா எழுந்து சென்று சாஷ்டாங்கமாக அவர் காலில் விழுந்தார்.

பிரம்மாவின் இச்செயல் அனைவரையும் திடுக்கிடச் செய்தது. ஆனாலும் எவரும் எதுவும் பேசவில்லை. நவப்ரஜாதிபதிகள் மட்டும் உரக்க "பிரம்மதேவரே! உமது செய்கை சரியில்லை. மகனை தந்தை வணங்கலாமா?" என்றனர்.

"இதோ நாரதரின் வீணை அருகே ஒரு கருவண்டு பறக்கிறதே! இதைத்தான் நமஸ்கரித்தேன். இந்த வண்டின் கால்களிலே சங்கு,

சக்கரம், கதா, பத்மத்தைப் பார்த்தேன். நான் நமஸ்கரித்தது என் தந்தையை! பகவானை! பரந்தாமனை! மகனை அல்ல!" என்றார். "வண்டின் காலில் சங்கு, சக்கரமாம், கதை, பத்மமாம்! நல்ல கற்பனை! தந்தை, மகனுக்கிடையில் ஏற்பட்ட சச்சரவுக்கு நிவாரணம் சபையில் கொடுக்கக்கூடாது". என்றார் ஒருவர்.

அவ்வளவுதான் பிரம்மாவுக்கு கோபம்வந்துவிட்டது. " ஊனக்கண் கொண்டு பார்க்கும் அறிவிலிகளே! நீங்கள் ஒன்பதின்மரும் பூலோகம் சென்று அந்த பரந்தாமனை வேண்டித் தவமியற்றுங்கள். கிருதயுகம் முடியும் போது அவர் காட்சியளிப்பார்" என சாபமும், சாபவிமோசனமும் சொன்னார் நான்முகன்.

நவப்ரஜாதிபதிகள் தங்களை மன்னிக்கும்படி பிரம்மாவிடமும், நாரதரிடமும் வேண்டினர். பூவுலகில் தவம் செய்ய ஏற்ற இடத்தைக் காட்டும்படி திசைமுகனிடம் கேட்க, 'திரிலோக சஞ்சாரிக்குத்தான் ஏற்ற இடம் தெரியும்" என்றார் நான்முகன். நாரதர் தனது மேலங்கியான மரவுரியை சுழற்றிவீசினார். அது அன்படியார் தவம் செய்து பரந்தாமனை தரிசித்து மோட்சம் பெற்ற இடத்தில் வீழ்ந்தது. நவப்ரஜாபதிகளும் அங்கு வந்து சேர்ந்தனர்.

அறுபது யோஜனை அகலம்; அறுபது யோஜனை பரப்பளவு; கடற்கரை; ஒரு பெரிய ஆலமரம் விழுதுகளோடு இருந்தது. சுற்றி சுற்றி வந்தனர்; நித்திய கர்மானுஷ்டானங்களை முடிக்க ஒரு சிறு சுனைகூட இல்லையே என வருந்தி, நாரதரின் வல்கலத்தை (மேலங்கி) வைத்துக் கொண்டு நாரதரை வேண்டினர்.

நாரதர் வருமுன் வீணாகானம் கேட்டது. நாரதர் கண்வ மகரிஷி தங்கி இருந்த ஆசிரமத்தைக் காட்டி விட்டு " நாரணன் அருளால் நீர் கிடைக்கும்; நாராயணனை பூஜியுங்கள்" என்று சொல்லிச் சென்றார்.

"ஓம் நமோ நாராயணாய....." எனக் கண்மூடி ஒன்பதின்மரும் ஜபிக்க, எவ்வளவு நேரமாயிற்றென்று அவர்களுக்கே தெரியவில்லை! "கிர்..ர்..ர்....." சக்கரம் சுழலும் சப்தம் கேட்டு கண் விழித்தனர். எதிரே சுதர்சனச் சக்கரம் சுழன்று கொண்டிருந்தது. நாரதர் சொல்லி நாராயணர் அருள் புரிந்திருக்கிறார் என பூஜித்தனர். பாதாளத்திலிருந்து கங்கை பீய்ச்சி அடித்தது. மலை இடுக்குகள் வழியே பெருகி வந்து சுனை ஒன்றில்

நிறைந்தது. சக்கரம் மறைந்து விட்டது. நீர் வருவது நிற்கவில்லை. ஏகாக்ர சிந்தையராய் நவப் பிரஜாதிபதிகளும் காய், கனி, கிழங்குகளை உண்டு நாராயணனைக் குறித்து நியமத்தோடு தவமிருந்தனர். கிருதயுகம் முடிந்தது. நாரதர் வந்தார்.

"நவப்ரஜாபதிகளே! நிறைந்த சபையில் எவரையும் தூக்கி எறிந்து அலட்சியமாய்ப் பேசுவது தவறு என்பதற்கு உங்கள் நடத்தையே சாட்சி. உங்கள் தவசினால் பாபம் தீர்ந்து விட்டது. ஆனால் வண்டாய் இருந்த நிலையிலும் பகவானை தரிசித்த படைப்புக் கடவுளின் ஞானம் உங்களுக்கும் ஏற்பட ஒரு மகா யாகம் செய்தாக வேண்டும். பிரம்மா வந்ததும் அவரையே நடத்தித் தரும்படி வேண்டிக் கொள்ளுங்கள்" என்று சொல்லி மறைந்தார். பிரம்மா வந்ததும் நாரதர் சொன்னபடியே பிரம்மனிடம் வேண்டினர். பிரம்மா ஒப்புக்கொண்டு விஸ்வகர்மாவிடம் யாகசாலை அமைக்கச் சொன்னார். குரு ஸ்தானம் வியாசருக்குக் கொடுக்கப்பட்டது. ஏழு நாட்கள் யாகம் சிறப்பாக நடந்தது. ஆயிரக் கணக்கான அந்தணர்களுக்கு பூ தானம், கோதானம், ஸ்வர்ணதானம் எல்லாம் அளிக்கப்பட்டது. யாகத்துக்கான பொருள்களைக் கொடுக்க. காமதேனுவையும், கற்பக விருட்சத்தையும் இந்திரன் கொண்டுவந்தான். கைலாசபதியும், மகாவிஷ்ணுவும் வந்திருந்தனர். ஆனால் நவப் பிரஜாபதிகளின் கண்களுக்குத் தெரியவில்லை.

ஏழாம் நாள். யாகம் பூர்த்தியாகி அந்தணர்கள் சமாராதனை நடந்து கொண்டிருந்தது. "யாகத்தை என்ன நேர்த்தியாய், ஸ்பஷ்டமாய் மந்திரம் சொல்லி, ஆகமங்கள் விடாமல், விக்னமேதும் ஏற்படாமல் செய்தோம்! அதுவும் தூஷித்த நவப்ரஜாபதிகளே வேண்டிக்கேட்டுக் கொண்டதற் கிணங்க!" என்று பிரம்மா கர்வமாய் நினைக்க ஹரியும், ஹரனும் மறைந் தனர். அதையும் பிரம்மா கவனிக்கவில்லை. அப்போது தடியை ஊன்றிக் கொண்டு, தொண்டுக் கிழவராய், உடலெல்லாம் நாமங்கள், கழுத்தில் துளசிமாலையுடன் ஒரு வயோதிக அந்தணர்" இங்கே சாப்பாடு போடுகிறீர்களாமே! ஒரே பசி..... பிரும்ம தேவரே யாகம் நடத்துகிறாராம்! பிரும்மா யார்?" என்று கேள்விகளை அடுக்கினார். "நான்தான் பிரும்மா; அப்படி உட்காருங்கள். இலை போடச் சொல்கிறேன். வயிறாரச் சாப்பிடு ங்கள். 64 வகை காய்கறிகளுடன் இந்த மாதிரிச் சாப்பாட்டைப் பார்த்தே இருக்க மாட்டீர்" என்றார் திசைமுகன்.

அந்தணர் கை, கால் கழுவிக்கொண்டு உட்கார்ந்தார். நவப்ரஜாபதி களும் பயபக்தியுடன் பரிமாறினர். பரிசேஷணம் செய்ய இலையைப் பார்த்தால் இலையில் பருக்கை சோறு கூட இல்லை. போஜன சாலையில் ஓடிப்போய் பார்க்க எல்லாப் பாத்திரங்களும் காலியாய் கிடந்தன. காமதேனுவைத் தேடிப் போக காமதேனு, கற்பக விருட்சம் எதுவுமே இல்லை. எல்லோரும் கையைப் பிசைந்தனர். அந்தணர் சாபத்திற்கு பயந்து சமையலறைக்குப் போனவர்கள் வெளியே வரவேயில்லை.

"என்னய்யா யாகம் நடத்துகிறீர்கள்? மந்திரம் சொல்லி ஹோமம் வளர்த்தால் ஆயிற்றா? ஒரு பிராமணனுக்கு வயிறார சோறு போட முடியவில்லையே! தானம் தருகிறார்களாம் தானம்" எனப் பலவாறு கூச்சல் போடவும் பிரம்மா தலைகுனிந்தார். கண்களில் நீரோடு அந்தணர் கால்களில் விழுந்து "சபித்து விடாதீர்கள் ஸ்வாமி!" என வேண்ட சங்கு சக்கரத்தோடு காட்சியளித்தார் மகாவிஷ்ணு.

"பிரம்ம தேவரே! பெரிய செயல்கள் செய்பவனுக்கு முதலில் தேவைப்படுவது பணிவு. பள்ளத்தில்தான் தண்ணீர் நிற்கும். மலை இடுக்குகளில் உற்பத்தியானாலும் சுனையில் தான் நீராட முடியும், இன்று முதல் இந்தத் தீர்த்தத்திற்கு 'சக்கரதீர்த்தம்' 'பிரம்மயக்ஞ தீர்த்தம்' என்ற பெயர் வழங்கப்படும்.

நான் ஆபோஜன தீர்த்தத்துடன் இந்த வல்கலையில் நிற்பேன். ஒரு அந்தணனுக்காவது சாப்பாடு போட்டால் தான் என்னை பூஜித்த பலன் கிடைக்கும். இந்த இடத்துக்கு 'பாஸ்கர க்ஷேத்திரம்' என்று பெயர். எந்த பிரளத்திலும் இந்த ஆலமரம் அழியாது காப்பாற்றுவது உமது பொறுப்பு" என்று சொல்லி மறைந்தார் திருமால். கலியுக ஆரம்பம். மதுரையை அடுத்த ஆரண்யம். ஒரு மகாமுனிவர் தவம் செய்து கொண் டிருந்தார்.ஆறுமாதம் யோக நிலை. ஆறு நாட்கள் உலக விவகாரங்கள். மறுபடி ஆறுமாதம் நிஷ்டை.

ஒரு முறை நிஷ்டை கலைந்த முதல் நாள். அந்த ஆறு நாட்கள் தான் இலை போட்டு சாப்பாடு. மனைவி பரிமாறினாள். "பெண்ணே! ஏன் உன்முகம் வாட்டமுற்றிருக்கிறது? இன்று வேலை அதிகமோ? ஒருவாரம் தானே! பொறுத்துக்கொள்" என்றார் முனிவர். "பதிக்குத் தொண்டுகள் செய்வது பத்தினிக்கு பாரமல்ல..... ஆனால் ஆறுமாதத்துக்கு ஆறு

நாட்கள் தானே எனக்கு அந்த பாக்கியம் கிடைக்கிறது. இன்னும் ஐந்து நாட்களில் நிஷ்டையில் ஆழ்ந்து விடுவீர்கள் என்று நினைக்கும்போது வேதனையாக இருக்கிறது. தொண்டுகளை ஒரு சீடன் கையில் ஒப்புவித்து விட்டு நானும் தவத்தில் ஆழ்ந்துவிடலாமென்றால் என் இளமை காமுகர்களை வசப்படுத்தும். கலகத்தை உண்டு பண்ணும்; முதுமை வரும் வரை காத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை!" என்றாள் ரிஷி பத்தினி அடக்கத்துடன்.

தன் மனைவியை ஏற இறங்கப் பார்த்தார் முனிவர். கடமையை மறந்த தன் தவறை நளினமாய் சுட்டிக்காட்டிய புத்திசாலித்தனத்தை மனதுக்குள் சிலாகித்துக் கொண்டார். "பெண்ணே! என்தவ வலிமையால் நாம் க்ரௌஞ்சப் பறவைகளாகி விடுவோம். திருப்தியாகக் கூடிக் குலவுவோம்" என்றவர், அதன்படியே செய்தார்.

அப்போது மதுரையை. வேல்வீர பாண்டியன் ஆண்டு வந்தான். வேட்டைக்குப் போனவன் கிரௌஞ்சப் பட்சிகளைக் கண்டான். அவன் தொடுத்த அம்புக்கு ஆண் கிரௌஞ்சப் பறவை இறந்தது.

பெண் கிரௌஞ்சம் துடிதுடித்தது.

" உன் மனைவியோடு இனி நீ சேரமுடியாது. உன் நாடு மழையின்றி வறண்டு போகக்கடவது!" என சாபமிட்டு, மரத்தில் தலையைபோதிக் கொண்டு விழுந்து இறந்தது பெண் கிரௌஞ்சம்.

இதைக் கண்டதும் பாண்டியன் பெரிதும் வேதனையுற்றான். மகாராணியிடம் இதைச் சொல்லலாம் என அந்தப்புரத்திற்குள் நுழைந்தான். 'வீல்' என்று கத்தியபடி பட்ட மகிஷி மயக்கமுற்றாள். உடனே மருத்துவரை அழைத்து மயக்கம் தெளிவித்ததும் கவலையோடு அருகிலிருந்த குலகுரு பானு சோமரிடம் "மன்னர் தலைக்கு மேல் கோரமாய் இளித்துக்கொண்டு ஒரு கரும்பூதம் தெரிகிறது. அது செய்யும் சேஷ்டைகள் பயங்கரமாய் இருக்கிறது" என்றாள் அரசி.

அரசன் அரசி எதிரே வருதேயில்லை. பெரிய நெற் கிடங்கு தீப்பற்றி கொண்டு பெருத்த சேதம். அதோடு வானமும் பொய்த்து விட்டது. பாண்டிய மன்னன் சோமசுந்தரப் பெருமான் ஆலயம் சென்று "இதற்கு நிவர்த்தி கிடையாதா?" என வேண்டினான்.

"மன்னா! நீ கொன்றது பறவையல்ல; தவவலிமை மிக்க ரிஷி. அவர் கூட இருந்தது அவரது பத்தினி. பஞ்சாட்சரத்தை ஜபித்துக் கொண்டே தீர்த்தயாத்திரை செல். எந்த இடத்தில் கனவில் திருமால் தோன்றி அருள்புரிகிறாரோ அங்கே உன் பிரும்மஹத்தி தொலையும்" என அசரீரி ஒலித்தது.

குருவிடமும், மந்திரியிடமும் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு தீர்த்த யாத்திரை புறப்பட்டான் மன்னன். சூரிய ஒளியில் தன் நிழலோடு, இன்னொரு நிழலும் தொடர்ந்து வருவதைப் பார்த்தான். பஞ்சாட்சரத்தை விடாமல் ஜபித்தான்.

முதலில் வட இந்திய யாத்திரையாக காசிவரை சென்றான். கங்கை யில், பிரயாகையில் நீராடினான். பிரம்மஹத்தி விடவில்லை. ஆனால் இரண்டடி தள்ளித் தொடர்ந்தது. மதுரைக்கு தெற்கே பயணமானான். அனந்தசயனம் என்ற ஸ்தலம். அங்கொரு அந்தணர். "வல்கலத்துக்குப் போய் சக்கர தீர்த்தத்தில் நீராடு. எப்பேற்பட்ட பிரம்மஹத்தியும் போய் விடும்" என்றார்.



வல்கலத்தை பாண்டிய மன்னன் நெருங்க நெருங்க பிரம்மஹத் திக்கும், மன்னனுக்கும் உள்ள நிழல் இடைவெளி அதிகமாயிற்று. அங்கும் ஒரு அந்தணர் அவனுக்கு அன்படியார் கதை, பிரம்ம யக்ஞும் நடந்த கதையெல்லாம் சொன்னார். அவருக்கு 100 பொற்காசுகள் தானமாகக் கொடுத்தான் வேந்தன். மலையருவியில் கூட்டிக் கொண்டு போய் குளிக்க வைத்தார் அந்தணர். பிரம்ம யக்ஞ தீர்த்தத்திலும் நீராடினான் மன்னன். பிரம்மஹத்தி நிழல் மறைந்தது. பாண்டிய மன்னன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. "இந்த ஆலமரத்தடியில இந்த இரவைக்கழிக்கலாம்" என்று அந்தணனோடு ஆலமரத்தடியில் தூங்கினான்.

தூக்கத்தில் ஒரு கனவு வயது முதிர்ந்த அந்தணர். தேஜஸ் நிறைந்த முகம். கையில் கம்பு உடலில் பன்னிரண்டு நாமங்கள். " பாண்டிய மன்னா! கடற்கரை மணலில் வெண்தாமரை மலர்கள் புதைந்திருக்கும் இடத்திற்கு நேராக ஐந்து மைல் போ. ஐந்து பொன்னிறக் கழுகுகள் ஆகாயத்தில் வட்ட மடிக்கும். நீரில் மூழ்கி முத்துக்குளிப்பவரை அங்கே இறங்கித் தேடச் சொல். ஜனார்த்தன ஸ்வாமி விக்கிரகம் கிடைக்கும். இங்கே பிரதிஷ்டை செய்து கோவில் கட்டினால் உன் பிரம்ம ஹத்திப் பாபம் தொலையும். கிரௌஞ்சப் பட்சிகளுக்கும் இறுதிக்கடன் செய்துவிடு. சாபமும், நிழலும் உன்னை விட்டு அகலும். குழந்தையில்லாத அந்த ரிஷி தம்பதிகளுக்கு நீயே இனி மகன்" என்றார்.அதோடு" இந்த இடத்திற்கு ஏற்ற சங்கல்ப மந்திரம் இந்த ஓலைச் சுவடியில் இருக்கிறது" என்று ஒரு ஓலைச் சுவடியையும் காண்பித்தார்.

கனவு தெளிந்து எழுந்தான் மன்னன். அருகில் ஒரு ஓலைச்சுவடி இருந்தது. அதை எடுத்துப் படித்தான். "ஜனார்த்தனப் ப்ரியதாம்" என்றிருந்தது. தன்னுடன் உறங்கிய அந்தணர் ('வல்கலத்துக்குப் போ' என்று அனந்த சயனத்தில் (திருவனந்தபுரம்) வழிகாட்டிய அந்தணரும் மறுநாள் வந்து சேர்ந்தார்) அனந்த சயனத்தில் வழி சொன்ன அந்தணர் இருவரோடும் மீனவர்கள் உதவியோடு பெரிய படகில் கடலில் சென்றான் மன்னன். ஐந்து தங்க நிறக் கழுகுகள் வட்டமிட்ட இடத்தில் கையில் ஆபோஜன தீர்த்தத்துடன் நிற்கும் ஜனார்த்தன விக்ரகம் கிடைத்தது. மன்னன் அளப்பரிய மகிழ்ச்சி கொண்டான். ஆலமரத்தடியில் தினமும் பூஜைக்கு ஏற்பாடு செய்து விட்டு மதுரை நோக்கிப் புறப்பட்டான். வல்கலம் தாண்டியவுடன் பிரம்மஹத்தி நிழல் தொடர்வதைக் கண்டான்.

தவவேடமணிந்து குலகுருவை சந்தித்தான். மதுரை மாநகரின் வயற்புறங்களில் ஏரோடு மக்கள் செல்வதைக் கண்டு மகிழ்ந்தான். ஆம். ஜனார்த்தனஸ்வாமியை மீட்ட அன்றிலிருந்து பாண்டிய நாட்டில் விடாது மழை பெய்து ஏரி, குளங்களெல்லாம் நிரம்பி இருந்தன.

மன்னன் ஆணைப்படி குருநாதர், கோயில் கட்ட சிற்பிகள், ஸ்தபதிகள், தச்சர்கள் எல்லோரையும் மொத்தமாகக் கூலிக் கொடுத்து அனுப்பி வைத்தார். வல்கலாவில் எங்கும் உளிச்சத்தம். சித்திர வேலைக்காரர்கள், கொத்தனார்கள், தச்சர்கள் என்று சுறுசுறுப்பாய், இரவு பகலாய் வேலை நடந்தது. சுபயோக சுபதினத்தில் பாண்டிய மன்னன், குரு பானுசோமர், அமைச்சர், தளபதி, பட்டமகிஷி ஆகியோரோடு தனது படை பரிவாரங்களோடு அணிவகுத்து பக்தியுடன் நிற்க, வேதியர்கள் வேதகோஷம் எழுப்ப, பரசுராம க்ஷேத்திரம் எனப்படும் கேரளாவின் பெரிய மனைக்கல் தந்திரியானவர் ஜனார்த்தன சுவாமி விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்ய, பத்து நாட்கள் திருவிழா நடந்தது.

பிறகு கிரௌஞ்ச பட்சிகளுக்கும் புதல்வனைப்போல் பிதுர்கடன் செய்ய, முனி தம்பதிகளும் வாழ்த்தி, பிதுர்லோகம் சேர்ந்தனர்..

பாண்டியனின் பிரம்மஹத்தி நிழல் மறைந்தது. அன்படியாருக்குக் கொடுத்த வாக்குப்படி திருமால் வல்கலத்தில் பூலோக வைகுண்டத்தை உருவாக்கி அருள்புரிகிறார். ஜனங்களிடம் பிரியம் கொண்டதால் ஜனார்த்தனன் என்று பெயர் பெற்றார்.

காசியில் மட்டும் "விஸ்வநாத ப்ரியதாம்" என்று சங்கல்பம். மற்ற இடங்களில் 'ஜனார்த்தன ப்ரியதாம்' என்றுதான் அன்றுமுதல் சங்கல்பம் செய்கிறார்கள். இன்றும் வல்கலையில் (வல்கம்) ஒரு வேதியருக்காவது அன்னதானம் செய்து ஓலையில் கண்ட சங்கல்ப மந்திரத்துடன் ஆபோஜன தீர்த்தம் கொடுத்தால் ஸ்ரீ ஜனார்த்தப் பெருமாள் ப்ரீதி அடைகிறார். இன்றும் இங்கு அன்னதானம் நடந்து வருகிறது.

மூன்று சரித்திரங்களைக் கொண்ட இக்கதை படிப்பவருக்கு பாபங்களை நீக்குகிறது. ஜனார்த்தன பகவானின் அருளால் பதினாறு பேறுகளும் கிடைக்கிறது. தீர்க்காயுளுடன், புத்ர பௌத்திராதிகளுடன் வாழ வைத்து, முடிவில் மோட்சத்தையும் கொடுக்கிறது.

85. பக்த போதனா

ஆந்திர மாநிலத்தில் வாரங்கல்லுக்கு அருகிலுள்ள சிறு கிராமம். அங்கு தனக்குள்ள சிறு நிலத்தில் விவசாயம் செய்து வந்தான் கேசனா. அவன் மனைவி பெயர் லக்கம்மா. அவர்களின் மகன் போதனா. போதனாவின் ஆசிரியர் பெயர் சோமநாதராயர்.

பத்து வயது போதனா சின்ன சின்ன கவிதைகள் இயற்றினான். எல்லாம் ஸ்ரீராமனைப் பற்றியும், கிருஷ்ணனைப் பற்றியும்.

'விசுவாமித்திரர் பின் சென்ற ராமா..... கல்லை மங்கையாக்கிய காருண்யா! தாடகை, சுபாகுவை வதைத்து வேள்வி காத்தவரே! சிவதனுசை ஒடித்தவரே! பரசுராமரை ஜெயித்தவரே! விராதனை வென்றவரே! காகாசுரன் கண்ணைப் போக்கியவரே! கர தூஷணாதி களை வென்றவரே! கபந்தனை ஜெயித்தவரே! ஏழு மராமரங்களையும் துளைத்தவரே!

சேதுவில் அணைகட்டியவரே! ஹனுமனைத்தூதராகக் கொண்ட ஆத்மராமா! ராவண, கும்பகர்ணாதிகளை வேரோடு சாய்த்து வெற்றி கொண்டவரே!" இப்படி இராமனின் வீரச் செயல்களைக் கொண்ட கவிகளை ஒழுங்குப்படுத்தினார் சோமநாதராயர்.

கனவில் ஸ்ரீஇராம தரிசனம் பெற்ற போதனா அழகுபட இராமனை வர்ணித்து ஒரு கவி இயற்றி தாயிடம் படித்துக் காண்பித்தார். அதன் இசையில் மயங்கிய லகுகம்மா கணவனிடம் கொடுத்தாள். கேசனா அதைப் படித்துவிட்டு, "லக்கம்மா, தேவுடு நமக்கு நல்ல பிள்ளையைக் கொடுத்திருக்காரு. ஆனா இதெல்லாம் எனக்குப் புரியலே! எனக்குத் தெரிஞ்சதெல்லாம் குடும்பத்துலே யாரும் பசியோட இருக்கக் கூடாது. யார் கண்ணிலேயும் தண்ணி வரமாதிரி சுடுசொல் பேசக்கூடாது. போதனாவை நல்லாப் படிக்க வைக்கணும். பொய் சொல்லக் கூடாது; திருடக்கூடாது; ஏமாத்தக்கூடாது; சோம்பேறியா இருக்கக் கூடாது. இதுதான் எங்க பெரியவுங்க எனக்குக் கத்துக் கொடுத்தது. நிலத்தை உழுவேன்; உரம் அடிப்பேன்; விதைப்பேன்; களை புடுங்குவேன்; அறுத்து வாராங்கல்லுக்குக் கொண்டு போய் நல்ல விலைக்கு வித்துட்டு வருவேன். இதெல்லாம் நான் என்னத்தைக் கண்டேன்" என்று சொல்லி 'வீர பத்ர விஜயம்'என்ற அந்த நூலை வாங்கி, உள்ளே வைத்து விட்டான்.

சில நாட்கள் சென்றன. நிறையப் படித்த உறவினர் ஒருவர் வீட்டிற்கு வந்தார். குசலப்ரசனம் நடந்து நீராடி உணவருந்திய பின் போதனாவின் 'வீர பத்ர விஜயத்' தை அவரிடம் காண்பித்தார் கேசனா. மெய்மறந்து படித்தவர் திகைத்தார்.

"போதனா எழுதியதென்றா சொன்னாய்? அவன் எங்கே?" என்றார் படித்துமுடித்தவுடன்.

"போதனா....." தந்தையின் குரல் கேட்டு ஓடிவந்தார் போதனா.

"நீயே எழுதினாயா? நிஜத்தைச் சொல்.....அயோத்தி, இலங்கையின் வர்ணனைதான் என்ன அழகு! ராம தரிசனம் உனக்குக் கிடைத்ததா? கேசனா, லக்கம்மா நீங்கள் இருவருமே பாக்கியசாலிகள்! போதனா அறிவுப் புதையல்.....பக்தி பொக்கிஷம் இந்த நூல். ஆஞ்சனேயர் இலங்கையைத் தீக்கிரையாக்கும் கட்டம் அடா..டா..டா...." இப்படி பல இடங்களைச் சொல்லி சொல்லி உருகினார்.

பிறகு போதனாவைப் பல பாடல்களைப் பாடச் சொல்லி விளக்கமும் கேட்டார். 'நாபிக் கமலத்திலிருந்து ஸுரம் போட்டுப் பாடும் உன்னை என்ன சொல்லிப் பாராட்டுவேன்" என்று கட்டியணைத்துக் கொண்டார். அப்போது தான் பெற்றவர்களுக்கு மகனிடம் ஏதோ பெரிய விஷயம் இருக்கிறது, என்று தெரிந்தது.

"போதனா, மாமாவை நமஸ்காரம் பண்ணு. மாமா ஆசீர்வாதம் மாதவன் ஆசீர்வாதம் போல" என்றார் கேசனா.

நமஸ்கரித்த போதனாவை தூக்கி நிறுத்தி " போதனா நிலத்திலே புதைந்து கிடக்கும் தங்கம் போல..... காட்டிலே சாதாரண மரங்களுக்கு நடுவிலே இருக்கும் சந்தனமரம் போல! கடலுக்குள் இருக்கும் முத்தைப் போல..... மான் வயிற்றிலுள்ள கஸ்தூரி போல.... உரிய நேரத்தில் மகாகவியாக பிரகாசிக்கப் போகிறான். பக்தியைப் பரப்பும் மகாஜ்ஞம், பண்டிதனும் ஒன்றாகி விடமுடியுமா? நான் கிணற்றுத் தவளை....போதனா கவிக்கடல் .....நான் ஆசீர்வாதம் செய்வதாவது....." என்று கூறி விடை பெற்றார்.

ராஜகொண்டா சமஸ்தான அரசர் சர்வக்ஞ சிங்கபூபாலர். போதனா வாலிப வயதைத் தொடுவதற்குள் ஆஸ்தான கவிஞர் உத்தியோகம் தேடி வந்தது. அப்போது 'போகினி–தண்டகம்'என்ற நூலை எழுதினார். அரசன் மகிழ்ந்து பல பரிசுகள் அளித்தான்.

போதனா வளர வளர அவனது ஞானமும் வளர்ந்தது. பக்குவம் வந்தது. "சொல்லழகுக்கும், வர்ணனைக்குமாக பாடல் இயற்றியது போதும். பக்தி மணம் பரவ வேண்டாமா, பாராட்டுக்கும், பரிசுக்கும் கவி பாடிய நாவே! பரந்தாமன் பெருமைகளை பாமரர்களின் நெஞ்சுருக இனிப்பாடு..... புறக் கண்களை மூடி அகத்தில் ராமனைக் கண்டு அவன் புகழைப்பாட வேண்டும். காதுகளே! பாராட்டுகளை உள்ளே நுழைய விடாமல் வெளியே தள்ளுங்கள். கோதண்டத்தின் 'டங்' கார ஒலியும், புல்லாங்குழலின் ஒலியும், நரசிம்மத்தின் கர்ஜனையும், கஜேந்திரனின் அபயக்குரலுக்கு ஆதிமூலம், கருடன் மேல்பறந்து வரும் காற்றின் 'விர்'ரென்ற சப்தமும், ருக்மணியைத் தேரில் கொண்டுசெல்லும் தேரோடும் சப்தமுமாக இதயம் நிரம்பி இருக்க வேண்டும்" என, தானே தனக்குக் கட்டுப்பாடு விதித்துக் கொண்டான். உத்யோகத்தை உதறினான்.

தியானத்தில் ஈடுபடப் போவதாக அரசரிடம் உத்தரவு பெற்றுக் கொண்டான். "ஊரார் பைத்தியம் என்கிறார்கள். நமக்குள்ள நிலத்தை உழுது பயிரிடு. கவிதைப் படித்த பக்திக்கிறுக்கு என்கிறார்கள், உறவினர். ஸ்ரீராமன் தெய்வம்; தரிசிக்கலாம். பூஜை செய்யலாம். பாடலாம். ஆனால் பார்க்க வேண்டும் என்று அடம் பிடிக்கிறாயே! நடக்கிற காரியமா, அப்பாவுக்கு வயதாகவில்லையா, ராஜாங்கத்தில் வேலை என்று பெருமைப்பட்டிருந்தோமே! நிமிஷமாய் உதறிவிட்டாயே! எதையும் உருவாக்க நாளாகும். சிதைக்க சில நிமிஷங்கள் போதும். ஊர் உலகத்தைப் போல் கல்யாணம் பண்ணி பேரன், பேத்தியைப் பார்க்க எங்களுக்கு ஆசையிருக்காதா, வம்சம் அழிந்து போனால் பிதுர்க்கள் சாபமிடமாட்டார்களா?," என்று பெற்றோர் புலம்பினர்.

"அம்மா! அப்பா! உங்கள் ஆசைக்குக் கலியாணம் பண்ணிக் கொண்டு பேரக் குழந்தைகளைத் தருகிறேன். ஆனால் கொஞ்சகாலம் என்னை என் வழியில் போக விட வேண்டும். நான் நிச்சயம் பரந்தாமனை தரிசிப்பேன். அவரே எனக்கு குரு." என்று உறுதியாகக் கூறிவிட்டு கோதாவரி தீரத்தில் யோகத்தில் ஆழ்ந்து விட்டார்.



கண்கள் மூடியபடி இருக்கும். எதையோ கண்டு சிரிப்பார். எதையோ கண்டு விட்டாற்போல் கண்களில் நீர் பெருக விம்மி விம்மி அழுவார். ஆனால் எந்நேரமானாலும் இரவில் வீடு திரும்பி விடுவார். ஒரு நாள் நள்ளிரவாயும் போதனா வராதது கண்டு லாந்தர் விளக்கோடு பெற்றோர் கோதாவரிக்கரைக்கு வந்தனர். அப்போது தான் ஸ்ரீராம சீதா தரிசனம் பெற்ற போதனா மகிழ்ச்சியில் வாய் குழற பாடி, ஆடி பஜனை செய்து கொண்டிருந்தார்.

"போதனா, இதென்ன இந்த நடு ராத்திரியில் கூத்தாடிக் கொண்டு இருக்கிறாய்? ஊரார் சொல்வதை நிஜமாக்குகிறாயே! இருட்டி விட்டது. வீட்டுக்கு வந்து சாப்பிட வேண்டும். நமக்காக அப்பா அம்மா சாப்பிடாமல் காத்திருப்பார்களே என்ற அக்கறையே இல்லையே! தோளுக்கு மேல் பிள்ளை வளர்ந்து விட்டால் குடும்பச் சுமையை அவன் தோளுக்கு மாற்று என்பார்கள் பெரியவர்கள். உன் கவலையே பெரிதாக இருக்கிறது எங்களுக்கு! நான் என் தந்தையிடம் வலிய பொறுப்பை வாங்கிக் கொண்டேன்... நீ? போதும் நிறுத்து உன் ஆட்டத்தை! என்னத்தைக் கண்டு இப்படி ஆடுகிறாய்?" என்றார் கவலையும், கண்டிப்புமாக கேசனா.

"அப்பா, அம்மா...நான் உண்மையாகவே சீதா தேவியாரோடு ஸ்ரீ இராமனைக் கண்டேன். ருக்மணி பிராட்டியாரோடு கிருஷ்ணனாக அவனே மாறிக் காட்டினான். ஆஹா....நீலமேகச் சியாமளன் தான் என்ன அழகு! கோதண்டம் குழலான அதிசயம் என்ன! அப்பா, அம்மா! 'பாகவதத்தை தெலுங்கில் பாடு' என்றானம்மா கண்ணன். கனவில் வந்தவனை கண் எதிரே கண்டேன்! இந்த கோதாவரியே சாட்சி" எனத் திக்குமுக்காடியபடி பரந்தாமன் தரிசனத்தை விவரித்தார் போதனா.

போதனாவின் முகத்தில் இருந்த தேஜஸ் அவர்களை நம்ப வைத்தது. மௌனமாய் வீட்டிற்கழைத்துச் சென்றனர். கவி சார்வ பௌம ஸ்ரீ நாதர் நல்ல பண்டிதர்; நல்ல அறிஞர். சித்து வித்தைகள் படித்தவர். சாமர்த்தியசாலி. பல பட்டங்கள் பெற்று பகட்டாக வாழும் செல்வந்தர். அவருடைய சகோதரி அழகி. குணசாலி. போதனாவின் திறமைத் தெரிந்து கேசனாவிடம் மணம் பேசி முடித்தார் ஸ்ரீநாதர். தாயின் கண்ணீருக்குத் தலை அசைத்தார் போதனா. திருமணம் சிறப்பாக நடந்தது. உரிய காலத்தில் ஒரு ஆண்குழந்தையும் பிறந்தது. இல்லறத்திலிருந்தாலும் போதனாவின் மனக்குரல் "பாகவதம் எப்போது எழுதப்போகிறாய்?" என்று கேட்டுக் கொண்டே இருந்தது.

'நிலத்தை உழுவது உன் பொறுப்பு' என்று சொல்லிவிட்டார் தந்தை. உழும்போது அவரது எண்ணங்கள் "ராமா, அசுவமேதயாகம் செய்தாயே.....யாக பூமியை பொன்னேர் பூட்டி உழவேண்டுமாமே! உன் கைகள் வலித்திருக்காதா, உன்னைப் பெற உன் தந்தையான தசரதச் சக்கரவர்த்தியும் யாகம் செய்தார். அப்போது அவரும் உழுதிருப்பார். ஜனக மகாராஜா உழும்போது நுகத்தடியில் பூட்டிய பெட்டியில் தானே சீதா தேவியார் இருந்தார். என்மனதை எப்போது உழுவாய்? அதிலே மனைவி, குழந்தை என்று இடரும் கற்களை எப்போது தூக்கி எறியப்போகிறாய்? பாகவதப் பயிர் எப்போது முளைக்கும்?" இப்படிப் பலவாறு எண்ணியவர் மறுநாள் முதல் ஏர், கலப்பையோடு ஏடும், எழுத்தாணியும் கொண்டு வயலுக்கு வந்தார். கற்பனை செய்தபடி உழுவார். புதிய கற்பனை பிறந்து விட்டால் அப்படியே போட்டு விட்டு எழுதுவார். நேரம் காலமே கிடையாது. வீடு வாசலை மறந்தார். உருகி உருகி பாகவத்தை வடித்தார்.

விதை விதைத்தார். களை எடுத்தார். தண்ணீர் பாய்ச்சினார். பாகவதமும், பயிரும் செழிப்பாக வளர்ந்தன. உணவு,உறக்கம் எல்லாம் காலம் தப்பின. ஒருநாள் பயிருக்குக் காவலுக்கு வந்தவர் எழுதிக்

கொண்டே இருந்தார். கற்பனை தடைப்பட்டது. அமைந்த சொற்கள் அவருக்குத் திருப்தியைத் தரவில்லை. மன வருத்தத்தோடு ஸ்ரீராமனை நினைத்து தியானத்தில் ஆழ்ந்தவர் தூங்கி விட்டார்.

திடுக்கிட்டு எழுந்து பார்த்தால் பாடல் முடிக்கப்பட்டிருந்தது. ஜயதேவருக்காக அஷ்டபதி எழுதிய கண்ணன், போதனாவுக்காக பாகவதப் பாடலை முடித்திருந்தார். "ஸ்ரீராமச்சந்திரப்பிரபு! பாடலைப் பூர்த்தி செய்து கொடுக்க நீ வந்தபோது அறியாமையால் உறங்கி விட்டேனே! எப்படி உட்கார்ந்து எழுதினாய்? எங்கே உட்கார்ந்தாய்? இங்கேயா? இப்படியா? இந்த வரப்பிலா?கோதண்டம் பிடித்த கை எழுத்தாணி பிடித்ததா?" என்றெல்லாம் அழுது புலம்பினார். ஏடும், எழுத்தாணியும் இருந்த இடத்தைச் சுற்றிப் புரண்டார். இதையெல்லாம் அந்த வழியாக வயல் வேலைக்கு போகிற வருகிற ஜனங்கள் பார்த்தார்கள். விபரம் விசாரித்தார்கள். விஷயம் ஊர்பூராவும் பரவியது. மன்னர் சிங்கபூபாலருக்கும் எட்டியது.

போதனாவின பாகவதப் பாடல்களை எடுத்துக் கொண்டு வரும்படி உத்தரவிட்டார். ஏராளமான பரிசுப் பொருட்களும் அனுப்பினார். ஆனால் போதனா பரிசுப் பொருட்களை திருப்பி அனுப்பி விட்டார். "பாகவத அரங்கேற்றம் ஆலயத்தில் நடைபெறுமே அன்றி அரசவையில் அல்ல. இது ஸ்ரீராமனுக்கே சமர்ப்பணமான நூல்.... மனிதர்களுக்கல்ல"என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார். போதனாவின் மனைவிக்கு இந்தச் செய்கை பிடிக்க வில்லை. "வலிய வந்ததை தன் கணவர் நிராகரித்து விட்டதையும், வீட்டில் வறுமை தாண்டவமாடுவதையும்" சகோதரன் ஸ்ரீநாதருக்கு சொல்லி அனுப்பினாள்.

"அரசரை ஒருமுறை போதனா பார்த்தால் போதும்; சுத்தமாக மாறி விடுவார்" என்றார் ஒருவர்.

"ஆனானப் பட்டவர்களையெல்லாம் என் ஒருமணிநேரப் பேச்சிலே தலை கீழாய் மாற்றியிருக்கிறேன். உன் மைத்துனன் எம்மாத்திரம் ?" என்றார் இன்னொருவர். "பகவான் அஷ்டபதியைத் திருத்தினார். அரசவையில் தானே அஷ்டபதி அரங்கேறிற்று? அங்கே சிவபெருமானோடு திருமால் வந்து பாகவதம் சரிபார்க்கப்படவில்லையா? ஜயதேவரை விட இவர் எந்தவிதத்தில் உயர்ந்தவர்?" என்றார் இன்னொருவர்.

இப்படிப்பட்ட கோஷ்டி பலத்தோடு போதனாவைப் பார்க்க புறப்பட்டார் ஸ்ரீநாதர்.

இத்தனைபேரும் விருந்துண்ண வேண்டுமே! வண்டி வண்டியாய் காய்கறிகளும், விறகும், மளிகை சாமான்களும், வந்தன. போதனா வீட்டு வாசலில் நின்றிருந்தார்.

'இதையெல்லாம் அனுப்பியது யார்' என்று விசாரித்தார்.''பண்டித கவி ஸ்ரீநாதர் ஐயா தன் சகோதரியையும், அவர் மகனையும் காண வருகிறார். உடன் ஏராளமான நண்பர்களும், சிஷ்யர்களும் வருகிறார்கள். அவர்கள் தங்கி இருக்கும் நாட்களில் விருந்து சமைக்க சமையல்காரர்களும், உதவியாளர்களும் அந்தக் கூட்டு வண்டிகளில் இருக்கின்றனர்'' எனப் பணிவோடு கூறினான் வண்டிக்காரன்.

''இறங்காதே அப்பா! மளிகை கொண்டு வந்து மாப்பிள்ளை வீட்டில் விருந்தா? பேஷ், பேஷ்.... வெகு நன்றாயிருக்கிறது. வண்டியை அப்படியே திருப்புங்கள். கவிஞரும், அவரது சீடர்களும், நண்பர்களும் வருவது, கலைமகள் தன் பரிவாரங்களோடு வருவதுபோல. அவர்களை உபசரிப்பது



சரஸ்வதியின் பொறுப்பு. நீங்கள் புறப்படுங்கள்" என்று சொல்லி விட்டு மகனையும் அழைத்துக் கொண்டு, வயலுக்குப் புறப்பட்டார் போதனா.

வண்டிகள் திரும்பி வந்ததைக் கண்டு தலை குனிந்தார் ஸ்ரீநாதர். வண்டிக்காரன் போதனாவின் பதிலைச் சொன்னதும், "என்ன இறுமாப்பு! கல்வியைத் தருபவர் சரஸ்வதி. அதைக் காட்டிப் பொருளை சம்பாதிக்க வேண்டும். நேரடியாகப் பொருளைத் தரமாட்டாள் என்பதை அவர் புரிந்து கொள்ளவே இந்த சம்பவம் உதவப் போகிறது. என்னை சாதாரணமாக நினைத்து அவமதித்துவிட்டார். என் சக்தியை அவருக்குப் புரிய வைக்கிறேன்" என்று நினைத்துக் கொண்டு பல்லக்கை நேராக வயலுக்கு விடச் சொன்னார்.

போதனாவின் வயலுக்கு அருகில் வந்ததும் சீடர்களிடம், பல்லக்கை விட்டு நகர்ந்து விடுங்கள்; அது தானே போகும்" என்றார். சீடர்கள் நகர, பல்லக்கு தானே நகர்ந்து சென்றது. ஆங்காங்கே வயலில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் இதுகண்டு அதிசயித்தனர். சீடர்களும், நண்பர் களும் பிரமித்தனர். போதனாவின் மகன் " அப்பா, மாமா பல்லக்கில் வந்திருக்கிறார். பல்லக்கு யாரும் சுமக்காமலேயே நகர்ந்து வருகிறது" என்றான்.

"இதென்ன அதிசயம்! மாடுகளை அவிழ்த்து விடு; கலப்பையிலிருந்து கையை எடு" என்றார் போதனா. சிறுவன் அப்படியே செய்ய கலப்பை தானே உழுதது. "ஏட்டிலே எழுத்தாணியால் உழுதால் கவி! நாவிலே சொல்லால் உழுதால் பேச்சு! உணவைப் பற்களால் உழுகிறோம். பக்தியால் மனதை உழவேண்டும். சித்திகளால் அதிசயிக்க வைத்து இறைவனை அடையமுடியாது" என்றார் போதனா.

ஸ்ரீநாதர் பல்லக்கிலிருந்து இறங்கி போதனாவை வணங்கினார். மைத்துனரையும், மைத்துனர்களோடு வந்தவர்களையும், " எல்லோரும் கோதாவரியில் நீராடிவிட்டு வாருங்கள். அதற்குள் விருந்து தயாராகி விடும்" என்றார் போதனா. எல்லோரும் கோதாவரிக்கு நீராடச் சென்றனர். போதனா தான் முன்கூட்டிச் சென்று விருந்து ஏற்பாடுகளை கவனிப்ப தாகக் கூறி, விடை பெற்றார். மகனோடு வீட்டிற்கு வந்தார். "என் அண்ணா அனுப்பிய பொருட்களையும் திருப்பி அனுப்பி விட்டீர்கள்! ஜம்பமாகக் குளித்து விட்டு வரச் சொல்லி இருக்கிறீர்களே! பசியோடு

வரும் அவர்கள்முன் அவமானப் படபோகிறோம்! வீட்டில் மணி அரிசி கிடையாது! அவர்கள்சாபத்தையும் வாங்கிக் கட்டிக் கொள்ளப் போகிறோம். விற்பதற்கு குன்றிமணி பொன் கிடையாது, மன்னர் அனுப்பிய பரிசுப் பொருட்களை வாங்க மறுத்து விட்டீர்கள்! வறட்டு கௌரவம் தான் மிச்சம்" என்று பொறுமினாள் போதனாவின் மனைவி.

போதனா பூஜை அறைக்குப்போய் கலைவாணியை நினைத்துப் பாட ஆரம்பித்தார். விழிகள் மூடி இருந்தன. ஆனால் நாசியில் பாயசமும், பெருங்காயமும், ஏலம், ஜாதிக்காயின் மணமும். புளி. மிளகாடியன் நெடியும் திணறடித்தன. விழித்துப்பார்த்தார். பால் தயிர், பாயசம், சாம்பார், ரசம், அன்னம், புளியோதரை, எள்ளோதரை, தேங்காய் சாதம், லட்டு. அப்பளம், போளி, அதிரசம் என்று ஒவ்வொரு அண்டாவாக நகர்ந்து வந்து வீட்டை நிறைத்தன.நெய் , பழவகைகள் ஒருபக்கம் வந்தன.

நீராடி வந்தவர்கள், அவர்களின் பந்துக்கள், அவர்களைக் காண வந்தவர்கள் என்று பந்தி பந்தியாகத சாப்பாடு நடந்தது. ஸ்ரீநாதர் பிரமித்தார். " எப்படி இப்படி ஏற்பாடு செய்தீர்? என்ன ருசி? யார் சமையல்? எங்கே காய்கறி, மளிகை வாங்கினீர்?" என்று அடுக்கினார், "ஸ்வாமி! தாங்கள் சரஸ்வதி அருள் பெற்ற வரகவி. தங்களுக்கு விருந்து படைக்க கலைவாணி செய்த அருள்" எனப்பணிவுடன் கூறினார் போதனா. ஸ்ரீ நாதர் போதனாவின் காலில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார்.

"போதனா! நீர் பெரிய மகான். உங்களது பக்தியின் வலிமை பெரிது. உங்களுக்கு யோஜனை சொல்ல புறப்பட்டு வந்தது என் முட்டாள் தனம்!" என்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டு தன்சீடர்களுடனும், நண்பர் களுடனும் புறப்பட்டுச் சென்றார்.

அரசர் சிங்கபூபாலர் போதனா தன்னை அலட்சியம் செய்து விட்டதாக எண்ணிக் கோபம் கொண்டு, தன் படைகளை அனுப்பி போதனாவைக் கைது செய்து இழுத்து வரும்படி உத்தரவிட்டார். படைகள் கிராமத்துக்குள் நுழைந்தன. மக்கள் மனம் கலங்கினர். போதனா கோவிலுக்குப்போய் கருவறைக்கு முன் உட்கார்ந்து தியானத்தில் ஆழ்ந்துவிட்டார்.

தளபதி போதனாவின் இல்லத்திற்கு படையோடு சென்றார். போதனா கோவிலுக்குப் போயிருப்பதாக அவர் மனைவி சொல்ல, படையுடன் கோவிலை முற்றுகையிட்டான் தளபதி. கோவில் வாசலில் ஒரு சிறு

குரங்கு. படையில் ஒருவன் அதைத் துரத்த, ஒரு கம்பை ஓங்கினான். ஆனால் கம்பு அவன் காலில் விழுந்து 'அம்மா'என்று உட்கார்ந்து விட்டான். ஆனால் குரங்கு நகரவில்லை. பல படைவீரர்கள் சூழ்ந்து குரங்கைத் தாக்க, குரங்கு ஒவ்வொரு அடியாய் பருத்து உயர்ந்தது. கோவில் வாசலை குரங்கின் உருவம் மறைத்தது. மக்கள்" ஜெய ஜெய ஹனுமான்! ஹரஹர ஆஞ்சனேயா!" என்று கோஷம் எழுப்ப, தளபதியும், படைவீரர்களும் ஓடிவிட்டனர்.

சிறுதூறலாய் பெய்ய ஆரம்பித்த மழை கல்வருஷ தாரையாய் கொட்டியது. மக்கள் ஆஞ்சனேயரை வணங்க குரங்கின் சினம் தணிந்தது. மறு விநாடி மாருதியைக் காணவில்லை. செய்தி கேட்ட மன்னர் தேரில் விரைந்து வந்து, ஊர் எல்லையில் இறங்கி நடந்து ஆலயம் வந்தார். போதனா மன்னரை பூர்ண கும்ப மரியாதையுடன் வரவேற்று ஆலயத்துள் அழைத்துச் சென்றார். போதனாவின் காலில் விழுந்து பிழைபொறுக்கும்படி வேண்டினார் மன்னர்.

"உங்கள் பாகவதப் பாடல்களை கேட்டபிறகே நான் திரும்பி செல்லவிருக்கிறேன்" என்று மன்னர்கூற, ஆலய மண்டபத்தில் அப்போதே போதனாவின் இசை பாகவதம் அரங்கேறியது. மன்னர் மெய் மறந்து ரசித்து ஏராளமாகப் பரிசளிக்க, அங்கேயே, அப்போதே ஏழை ஜனங்களுக்கு அவைகளைத் தானம் செய்து விட்டார் போதனா.

அழகிய கவி வரிகளில், தெலுங்கில் பிரகலாத சரித்திரம்,ருக்மணி கல்யாணம், கஜேந்திர மோட்சம் போன்றவற்றை இயற்றி, ஆலயங்களில் அரங்கேற்றினார்.

மூத்தமகன் தலையெடுத்த பிறகு தவவாழ்க்கை மேற்கொண்டு தீர்த்த யாத்திரை புறப்பட்டார். ஸ்ரீராமபிரான் பாதம்பட்ட எல்லா ஸ்தலங்களுக்கும் போய் தரிசனம் செய்து மனம் குளிர்ந்தார். பொருளுக்காகப் பாடாமல் அருளை நாடிப் பாடியவர் மகாகவி போதனா. அவரின் பாடல்கள் இன்றும் ஆந்திராவில் எல்லா ஆலயங்களிலும் பாடப்பெற்று, விளக்கம் சொல்லப் படுகிறது. போதனாவுக்கு ஒரு தமையன். அவரும் ஒரு கவியே. 'கஜேந்திர மோட்சத்தை'அவரிடம் கொடுத்து படித்துப் பார்க்கச் சொன்னார் போதனா. படித்துபார்த்த அவரது தமையனார்.

"ஆதி மூலமே" என்று கஜேந்திரன் அழைத்தவுடன் ஸ்ரீதேவி, பூதேவியோடு கருட வாகனத்தில் பகவான் வந்ததாக பாகவதத்தில்

இருக்கிறது. நீ உத்தரீயம் நழுவ, கதையும், சக்கரமும் மட்டும் கொண்டு கிரீடமும் அணியாமல் விரைந்து வந்தார் என்று எழுதியிருக்கிறாய்! புராண வரலாறுகளை நம் இஷ்டத்துக்கு மாற்றுவது தவறு. திருத்தி எழுதிக் கொண்டு வந்தாலே ஆலயத்தில் அரங்கேற்றலாம்" என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார்.

போதனா மௌனமாக ஓலைச் சவடியை வாங்கிக் கொண்டு போய்விட்டார். அன்று சனிக்கிழமை. தமையனார் எண்ணைத் தேய்த்துக் கொண்டிருந்தார். உடலில் கௌபீனம் மட்டுமே இருந்தது. வாசலில் அரண்மனைக் கிணறு என்ற பெரிய கிணறு. தமையனாரின் ஐந்து வயதுப் பேரன் வேதகிரி அதனருகில் விளையாடிக் கொண்டிருந்தான். போதனா வேதகிரிக்கு நிறையத் தின்பண்டங்களும், விளையாட்டுச் சாமான்களும் கொடுத்து, ஓரிடத்தில் ஒளித்து வைத்தார். பின் தமையனிடம் வந்து "அண்ணா, வேதகிரி கிணற்றில் விழுந்து விட்டான். மேலே வரமுடியாமல் தவிக்கிறான்" என்றார் பதற்றத்துடன்.

'ஆ' என்றலறியபடி அப்படியே வெளியே வந்தார். கிணற்றுக்குள் இறங்க முயன்றவரை போதனா தடுத்து, "என்னண்ணா இது, இப்படி கோவணத்தோடு, எண்ணை வழிய எத்தனை பேர் வேடிக்கை பார்க்



கிறார்கள்? கிணற்றுத் தண்ணீர் ஒரே எண்ணையாகாதா? சீக்கிரம் குளித்து. உத்தரீயம், ஜிப்பா, தலைப்பாகை, நெற்றியில திலகம் எல்லாம் அணிந்து வாருங்கள். அப்படித்தானே உங்களை எல்லோரும் பார்த்திருக் கிறார்கள்?" என்று கேட்டார்.

அவரின் தமையனார் வெகு சீற்றத்தோடு என்ன பேச்சுப் பேசுகிறாய்? குழந்தை உயிருக்குப்போராடிக் கொண்டிருக்கும் போது அலங்காரமாவது, குளியலாவது..... என்னை விடு..... மெத்தப் படித் திருந்தும் உனக்குப் புத்தியில்லை" என்று கிணற்றில் தாவ, "குழந்தை பத்திரமாய் இருக்கிறான் "என்றார் சாவகாசமாக போதனா. "எங்கே" என்று தமையனார் ஆர்வமாய் கேட்க "வேதகிரீ" என்று குரல் கொடுத் தால் போதனா. வேதகிரி ஓடிவந்தான். "இது என்ன விளையாட்டு? " என்று தமையனார் போதனாவைக் கடிந்து கொள்ள, "அண்ணா, ஒரு நிமிஷம் யோஜியுங்கள். வேதகிரிக்கு ஆபத்து என்றதும் நீங்கள் அலங்காரமா செய்து கொண்டீர்கள்? முரண்பாடாய் இருப்பதை மாற்றுவதில் தவறில்லை. பெருமாள் கிரீடம் அணிந்து சாவகாசமாய் கருடனைத் தேடி இரு தேவியருடன் பக்தனைக் காக்க வந்தார் என்றால், பக்தி எப்படி பெருகும்? அல்லது எங்கோ தேவியரோடு புறப்பட்டுக் கொண்டிருந்த பகவான் கஜேந்திரன் குரல் கேட்டு வந்தார் என்று எழுத வேண்டும். எது சரியானது? என்புத்திக்கு சரியென்று தோன்றியதை நான் எழுதி இருக்கிறேன்."

"போதனா..நீ வயதில் சிறியவனானாலும், அறிவில் பெரியவன். உன்னுடைய கஜேந்திர மோட்சம் ஆலயத்தில் விரைவில் அரங்கேறும்" என்று அன்புடன் கூறினார் தமையன்.

86. ஸ்ரீ அனந்தாழ்வார்

வைணவ மதத்தை ஸ்தாபித்த ராமானுஜரின் சீடர் அனந்தாழ்வார். 900 ஆண்டுகளுக்குமுன் திருமலை (மேல திருப்பதி) இப்போதுபோல் இல்லை. போக்குவரத்துவசதி கிடையாது. நடந்து வரும் பக்தர்களும், டோலியில் வருபவர்களுமாக மிகக் குறைவான பக்தர்களே வருவார்கள். காடுமண்டிக் கிடக்கும். கொடிய விலங்குகள் வாசம் செய்யும்.

அங்கேயே தங்கி சேவைபுரிகிறவர்கள் மிகமிகக்குறைவு. ஒருநாள் ராமானுஜர் 'சிந்து பூமகிழும்' என்ற திருவாய்மொழிப் பாடலை விளக்கிக் கொண்டிருந்தார். திடீரென "வேங்கடவனுக்கு பூமாலைகள் எளிதாகக் கிடைப்பதில்லை. அடிவாரத்திலிருந்து வருவதற்குள் மலர்கள் வாடிவிடு கின்றன. மலைமேல் ஒரு நந்தவனம் அமைத்து புஷ்ப பணி செய்ய எவர் முன் வருகிறீர்கள்?" என்றுக் கேட்டார்.

எல்லாச் சீடர்களும் மௌனம் சாதித்தனர். 'மலைமேல் பனி கொட்டும். திறந்த உடலோடு செடிகளுக்கு நீர்பாய்ச்சி காப்பாற்றி, பூப்பறித்து மாலைதொடுத்து... உடல் நலம் கெட்டால் இறைப்பணி தடைபடும். மலையில் தண்ணீர்வசதி கிடையாது' என்பதெல்லாம் மனதில் கொண்டே அனைவரும் பேசாதிருந்தனர்.

அலங்காரம் பிரியனான திருமாலுக்கு மலர்ப்பணி செய்ய எவருக்கும் மனமில்லையே என்று குரு முகம் வாட, அனந்தாழ்வார் எழுந்தார்.

'நான் செய்கிறேன் சுவாமி' என்றார். இராமானுஜர் மகிழ்ந்தார். அனந்தாழ்வாரை கட்டிச் சேர்த்தணைத்துக் கொண்டார். இதனால் அவருக்கு அனந்தான்பிள்ளை ஆச்சாரியார் என்ற பெயர் உண்டாயிற்று.

"நீ தானடா வீரமுள்ள ஆண்பிள்ளை" என்று மெச்சினார்.

குருநாதர் ஒரு வளமான இடத்தை நந்தவனம் நிறுவத் தேர்ந் தெடுத்துத் தந்தார். ஆனால் சுற்றிப் பாறைகளாயிருந்த அந்த இடத்தில் தண்ணீர் வசதி இல்லை. பூச்செடிகளை அமைத்து தண்ணீர் இல்லாமல் வாடவிடலாமா? அதனால் முதலில் ஒரு ஏரி அமைக்க தீர்மானித்தார்.

ஏரி வெட்ட ஆரம்பித்தார். அனந்தாழ்வாருக்கு 48 வயது. அவன் மனைவிக்கு 35 வயது. அவள் ஒன்பது மாத கர்ப்பிணி. அனந்தாழ்வார் வெட்டி கூடையில் அள்ளித்தரும் மண்ணை, தூரத்தில் உள்ள பள்ளத்தில் கொட்டி விட்டு வருவது அவள் வேலை. ஏறி இறங்கி நடந்து சென்றது அவளுக்கு மூச்சிறைத்தது. தொப்பலாய் வியர்த்து புடவை உடலோடு ஒட்டிக் கொண்டு நடக்கவே சிரமமாயிருந்தது. ஆனாலும் கணவர் வேலை செய்யும் போது சும்மா பார்த்திருக்க அவள் மனம் ஒப்பவில்லை.

ஒரு நாள் பதினேழு, பதினெட்டு வயது மதிக்கத்தக்க ஒருவன், அனந்தாழ்வார் ஏரி வெட்டும் இடத்திற்கு வந்து, "ஐயா, இங்கே எதற்குப் பள்ளம் தோண்டுகிறீர்கள்?" என்று கேட்டான்.

"இங்கே ஒரு நந்தவனம் அமைத்து ஏழுமலையர்னுக்கு புஷ்பப்பணி செய்யப்போகிறேன். அதற்குத் தண்ணீர் வேண்டுமே! மழைக் காலத்துக்குள் ஏரி வெட்டி விட்டால் தண்ணீருக்குப் பஞ்சம் இராது" என்றார்.

"ஸ்வாமி! அந்த கடப்பாரையை என்னிடம் கொடுங்கள். நீங்களும், உங்கள் மனைவியும் அப்படி அந்த மர நிழலில் அமர்ந்து ஒழுங்காக வேலை நடக்கிறதா' என்று கண் காணியுங்கள். நான் இளைஞன்; வலிமை யுடையவன். இன்று அஸ்தமனத்திற்குள் வேலையை முடித்துத் தருகிறேன்" என்றான்.

அனந்தாழ்வார் புன்னகைத்தப்படி "அப்பா, நீ சொல்வதெல்லாம் சரி தான். உனக்குக் கூலிக் கொடுக்க என்னிடம் வசதியில்லை" எனவும் "உங்களிடம் நான் கூலி கேட்டேனா? உங்களது இறைத்தொண்டில் நானும் பங்கு பெறுகிறேன் என்கிறேன்" "இதென்னடா வல்லடிவழக்கு? என் குருநாதர் எனக்கிட்ட பணியில் உனக்கெதற்கு பங்கு தரவேண்டும்? உன்னால் என் வேலை கெடுகிறது. பேச்சுக் கொடுக்காமல் நகர்ந்து போ..

உன்னைப் பார்த்தால் வசதியான வீட்டுப் பிள்ளை போல் தெரிகிறது. உன் பெற்றோர் வந்து சண்டை பிடிப்பதற்கா? இறைப்பணி செய்ய வேண்டும் என்றால் சந்தனம் அரைத்துக் கொடு. தளிகையில் உதவிக்குப் போ. அடிவாரத்திலிருந்து சாமான்கள் கொண்டுவா. விறகு பிளந்து போடு. வடுப்படாத உன் கைகள் கடப்பாரையும், மண் வெட்டியும் பிடித்தால் புண்ணாகி விடும். கையிலும், கழுத்திலும் நகைகள்; காதிலே குண்டலம், விரலிலே மோதிரம்; இடுப்பில் மயில்கண் வேஷ்டி... வேலை செய்கிற ஆளைப் பார்" என்றபடி வேலையில் தீவிரமானார் அனந்தாழ்வார்.

"வயதான காலத்தில் கஷ்டப்படுகிறீரே என்று உதவிக்கு வந்தால் இப்படி நிர்தாட்சண்யமாகப் பேசுகிறீரே! கடப்பாரையைத் தாருமய்யா" என்று இளைஞன் கடப்பாரையைப் பிடுங்க வர, அனந்தாழ்வார் கடப்பாரையை ஓங்கி, "ஒரே வெட்டு தான்.... ஓடு" என்று துரத்தினார். இளைஞன் ஒரே பாய்ச்சலாய் மேடேறி ஓடினான். அனந்தாழ்வாரின் மனைவி மண்கொட்டுமிடத்தில் நின்று கொண்டாள். " அம்மா, பாவம் கர்ப்பிணி....எத்தனை சிரமப்படுகிறீர்கள்! இப்போதே வலி கண்டு விடும் போலிருக்கிறதே! நீங்கள் மண்கூடையை மாற்றி வாருங்கள். நான் அந்த மரத்தின் மறைவில் இருக்கிறேன். நான் சீக்கிரம் நீங்கள் மண்கொட்டு மிடத்திலேயே கொட்டிவிட்டு வந்து விடுகிறேன். "என்று கூடையை பறித்துக் கொண்டான்.

"அப்பா, என் கணவருக்குத் தெரிந்தால் அவர் கோபிப்பார். அவர் மண்வெட்டவே உன்னைச் சேர்த்துக் கொள்ளவில்லையே' என்று தயங்க, 'அவருக்கு ஏனம்மா தெரியப் போகிறது! பாவம், பரிதாபம் தெரியாத மனுஷன் அவர்.....நீங்கள் போங்கள்" என்றான். குவிந்திருந்த மண்மலை கரைந்தது. வெட்டினால் தான் மண் என்பதால் காத்திருந்தாள் அனந்தாழ்வார் துணைவி. அனந்தாழ்வாருக்கு சந்தேகம் வந்தது.

"நீ என்ன பக்கத்தில் எங்காவது மண்ணைக் கொட்டி விட்டு வருகிறாயா? யாராவது சண்டைக்கு வருவார்கள். முன்பு நேரம் கழித்து வந்ததன் காரணம் `என்ன?" எனவும், "சுவாமி,அப்போது உங்களிடம் வம்படி பண்ணின இளைஞன் நடுவழியில் என்னிடம் கூடையை வாங்கிக்கொண்டு பள்ளத்தில் ஓடிச் சென்று கொட்டி விட்டு வருகிறான்" என்றாள் அனந்தாழ்வாரின் மனைவி. அனந்தாழ்வாருக்குக் கோபம்

தலைக்கேறியது. மேடேறி வந்தார். இவர் வருவதைப்பார்த்த இளைஞன், தலை தெறிக்க ஓடினான். கையில் கடப்பாரையுடன் அனந்தாழ்வார் துரத்தினார்.

பருத்த அடிமரம்; செழித்த கிளைகளும், இலைகளுமாய் பரப்பி நின்றிருந்த ஒரு ஏழிலைப் பாலை மரத்தில் சரசரவென்று நிமிஷமாய் ஏறி மறைந்து கொண்டான்.

அனந்தாழ்வார் தூரத்திலிருந்தே இளைஞன் மரத்தில் ஏறுவதைப் பார்த்து விட்டதால் மரத்தடியில் வந்து நின்றார். அவரால் மரத்தில் ஏற முடியாதென்று தோன்றியது. " டேய், நீ மரத்தில் ஏறுவதை நான் பார்த்து விட்டேன். உன்னை விடமாட்டேன். கீழே இறங்கு.... என் வழியில் குறுக்கிடக் கூடாது என்று எச்சரித்த பின்னும் உனக்கு என்ன திமிர்? நீ ஏதோ கெட்ட எண்ணத்துடன் தான் என் மனைவிக்கு உதவி செய்திருக்கிறாய்" என்றார்." சரி, நான் கீழே இறங்குகிறேன். ஆனால் என்னை ஒன்றும் செய்வதில்லை என்று உறுதி அளிக்க வேண்டும். அதோடு பன்னிரண்டு அடி மரத்திலிருந்து தள்ளி நிற்க வேண்டும்.



அதற்குப் பரிசாக இந்த ஜரிகைப் புட்டா போட்ட பட்டு வேஷ்டியையும், வைர மோதிரத்தையும், இந்த மகர குண்டலங்களையும் தந்து விடுகிறேன்" என்று நிபந்தனை போட்டான்.

மனதுக்குள் கறுவிக் கொண்ட அனந்தாழ்வார் நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டு, பன்னிரண்டு அடி தள்ளி நின்றான். இளைஞன் மடமடவென்று இறங்கினான். ஆறடி உயரம் வந்ததும், 'தொப்'பென்று குதித்து ஓடத் தொடங்கினான். அனந்தாழ்வாரின் கோபம் எல்லை மீறியது. சிறிது தூரம் துரத்தியவன் இடைவெளி அதிகமாவதைக் கண்டு ஆத்திரத்துடன் கடப்பாரையை வீசி எறிந்தான். கடப்பாரை இளைஞன் முகத்தினைத் தாக்கியது.

இந்தசமயம் இளைஞன் கோவிலருகே போய் விட்டான். கோவிலுக்குள் நுழைந்து கதவைத் தாளிட்டுக்கொண்டான். அனந்தாழ்வார் படியிலேயே கருவியபடி அமர்ந்திருந்தான். சாயங்கால நேரமாயிற்று. திருவாராதனம் செய்ய அர்ச்சகர்கள் வந்தனர். அர்ச்சகர்களிடம் நடந்ததை விபரமாகக் கூறினான் அனந்தாழ்வார்.

அர்ச்சகர்கள் "அப்பா, குழந்தாய்.....கதவைத் திற. பெருமாளுக்கு ஆராதனை நடக்க வேண்டும். காலம் கடத்தினால் ராஜதண்டனை அனுபவிப்பாய்! ஊருக்கு க்ஷேமம் வரும்" என்று சப்தமாய் சொல்லி, ஆளாளுக்கு கதவை இடித்தார்கள்.

'தடால்' கதவு திறந்து விட்டது. இதற்குள் கூடி நின்ற பக்தர்களும், அனந்தாழ்வாரோடு சேர்ந்து இளைஞனைத் தேடினார்கள்.

அர்ச்சகர்கள் சன்னதியைத் திறந்தார்கள். அதற்குள் அனந்தாழ்வாரும் அங்கு வந்தான். 'ஆ'என்று கத்தினான் அனந்தாழ்வார். பெருமாள் முகவாயிலிருந்து இரத்தம் வழிந்து பட்டுவேஷ்டியை நனைத்துக் கொண்டிருந்தது. இக்காட்சியைக் கண்ட பக்தர்களும் அர்ச்சர்களும் கண்ணீர் உகுத்தனர்.

அப்போது விக்ரகத்திலிருந்து "அனந்தா! நீயும் உன் மனைவியும் பட்ட பாடு என்மனம் தாங்கவில்லை! உதவி செய்யலாம் என்று வந்தேன். நீயோ என்னை நம்பவில்லை. ஓடினேன். துரத்தி கடப்பாரையை வீசினாய்!" என்ற குரல் வந்தது.

அனந்தாழ்வான் சுவாமி ஒளிந்த ஏழிலைப் பாலை மரத்துக்கு ஓடினான். அதன் காய்களைப் பறித்து வந்தான். பஞ்சு போன்ற அவை களால் சுவாமியின் ரத்தத்தைத் துடைத்துக் கொண்டே,

"வேங்கடவா! வந்தது நீயென்று அறிந்து கொள்ளாத பாவியானனே! இந்தக் கைதானே கடப்பாரையை எறிந்தது" என்று கைகளைத் தரையில் அறைந்து கொண்டார்.

ஏழிலைப்பாலை மரத்துக் காய்கள் உதிரப் போக்கைத் தடுத்து ரணத்தை ஆற்றக் கூடியவை. ஏழுமலையானின் மோவாயிலிருந்து இரத்தம் வழிவது நின்றது. துடைத்துக் கொண்டிருந்த அனந்தாழ்வானின் கைகளில் குண்டலங்களும், மோதிரமும் கழன்று விழுந்தன. இடுப்பி லிருக்கும் பட்டு வேஷ்டியும் நழுவி விழுந்தது. 'நான் இவைகளை அனந்த னுக்குத் தருவதாக வாக்களித்திருக்கிறேன்' என்ற அசரீரியும் எழுந்தது. அனந்தாழ்வான் பயபக்தியோடு அவைகளைப் பெற்றுக் கொண்டான்.

அனந்தாழ்வான் நிறுவிய நந்தவனம் இராமானுஜம் என்ற பெயரில் இன்றும் திருமலையில் புஷ்பச் சேவை செய்து கொண்டு இருக்கிறது.

இந்த சரித்திரத்தை பயபக்தியுடன் படிப்பவரும், கேட்பவரும் ஏழுமலையான் அருளால் எல்லாப் பேறுகளும் பெற்று இனிதாக வாழ்வார்கள். கர்ப்பிணிகளுக்கு சுகப்பிரசவம் ஆகும். மாங்கல்ய பலத்தை அதிகரிக்கும் சரித்திரம் இது.

87. சங்கரத்தேவர்

பதினாறாம் நூற்றாண்டு. அஸ்ஸாமில் படாத்ரோபா என்ற சிற்றூர். குசும்பரின் மகன் சங்கரன். தாயில்லாப் பிள்ளை. "அடே துக்கிரி! பிறந்த மூணாம் நாளே தாயைத் தின்று விட்டாய். தகப்பனும் போய்விட்டான். பாட்டி பாவம் உன்னாலே கண்முழிக்கணும்னு உன்னை வளர்த்துண்டு வரா.....நீயானா அடாவடி பண்றே"

குப்பை செத்தைகளை எரித்து அந்த நெருப்பில் சின்னச் சின்ன ஜீவராசிகள், அரைகுறையாய் அடித்துப் போட்டிருந்த பாம்பு எல்லா வற்றையும் போட்டு அவைகள் துடிப்பதை வேடிக்கை பார்த்துக் கொண் டிருந்தான் சங்கரன்.

அதற்குத்தான் விமர்சனம் செய்தாள் ஒருத்தி. படாத்ரோபாவுக்கு விஜயம் செய்த ஒரு மகானிடம் அழைத்துப் போனாள் பாட்டி. அவர் இவனைப் பார்த்துவிட்டு, "மாண்டவ்ய ரிஷி இப்படித்தான் செய்து கொண்டிருந்தார். சமர்த்த இராமதாசர் செய்யாத துஷ்டத்தனங்களா? கண்ணன் செய்யாத குறும்புகளா? கவலைப்படாதே அம்மா! இவன் முகத்திலுள்ள தேஜஸ் இவன் பெரிய மகானாக வருவான் என்று சொல்கிறது" என்று ஆசி அளித்தார்.

"ஆனால் சங்கரன் சரியாகப் படிக்கவில்லையே என்று பாட்டி கவலைப் பட்டாள். சங்கரனுக்கு சாதம் போடும்போது. தூங்கப் போகும்போதும் நிறைய புத்திமதிகள் சொல்வாள். பாட்டி "சங்கரா, நம் குடும்பம் பரம்பரைப்பெருமை வாய்ந்தது. சக்திதான் நம் குல தெய்வம். நம் மூதாதையர்களில் படிக்காதவர்களே கிடையாது. உன்னைக் கண்டு ஆசிரியர் பயப்படுகிறார் என்பது கேவலமில்லையா? பிறரைத் துன்புறுத்தி, அலறவிட்டு இன்பம் [illegible]ன்பது பாபம். நீ செய்யும் சித்திரவதைக்கெல்லாம் ஒருநாள் சித்திரகுப்தனிடம் கணக்குச் சொல்ல வேண்டும். சொன்னதைக் கேட்டு நல்ல பிள்ளையாய் நடக்காமல் போனால், நானே உனக்குக் கடும் தண்டனைகொடுப்பேன்" இப்படி நயமாக ஆரம்பித்து கடுமையாக முடிப்பாள். சிலநேரம் கண்டிப்போடு தொடங்கி அன்போடு நிறுத்துவாள்.

ஒரு நாள் சங்கரன் " பாட்டி, நீ நாளைக்கு மத்யானம் பள்ளிக்கூடம் வருகிறாயா?" என்று கேட்டான்.

'எதற்கு?' என்றாள் பாட்டி.

"வந்து பாரேன்....ஒரு அதிசயம் காட்டுகிறேன். நாளையிலிருந்து என்மேல் எந்தப் புகாரும் வராது" தீர்மானமாகச் சொன்னான் சங்கரன். மறுநாள் கொதிக்கிற வெய்யிலில் கம்பை ஊன்றிக் கொண்டு வந்தாள் பாட்டி. பள்ளிக்கூடத்துக்கருகில் ஒரு பெரிய வேப்பமரம். அதைச் சுற்றி ஒரே கூட்டம். கூட்டத்திடையில் சங்கரன் பெயர் அடிபட்டது. பாட்டிக்கு அடிவயிறு சில்லிட்டது. பதைபதைத்தபடி கூட்டத்தை விலக்கிக் கொண்டு போனாள் பாட்டி.

அங்கே மரத்தடியில் சங்கரன் தூங்கிக் கொண்டிருக்க, ஒரு ராஜநாகம் அவன் தலைக்கு மேல் படமெடுத்து நின்றிருந்தது. "நாகம் கோபம் கொண்டு கொத்தி விட்டால்? இதென்ன வெய்யிலில் தூக்கம்? சப்தம் போட்டால் நிலைமை எப்படியாகுமோ" என்று எல்லோர் மனதிலும் பயம்!

பாட்டி கண்களை மூடினாள். "கண்ணா! அன்று காளிங்க நர்த்தனம் ஆடியவனே! ஆதிசேஷனை படுக்கையாகக் கொண்டவனே! குரு புத்திரனை மீட்க நாகலோகம் சென்றவனே! மலைப்பாம்பாக வந்த அகாசுரனின் வயிற்றைக் கிழித்து இடையர்களையும், கன்றுகளையும் காப்பாற்றியவனே! கருடனை வாகனமாகக் கொண்டவனே! என் பேரனைக் காப்பாற்று" என்று மனமுருக பிராத்தித்தாள். சங்கரன் கண்விழித்தான். நாகம் படத்தைச் சுருக்கிக் கொண்டு சரசரவென்று ஓடி மறைந்தது. சங்கரன் கண்ணன் மீது அற்புதமான ஸ்லோகமொன்று பாடினான்.

கூடியிருந்தவர் சங்கரனுக்கு நாகதேவதை அருள் செய்ததாகப் பேசிக் கொண்டனர். வயதில் மூத்தவர்கள் கூட சாஷ்டங்கமாக விழுந்து வணங்கினர் சங்கரனுக்கு இருபத்துமூன்று வயதில் திருமணம் செய்வித்தாள் பாட்டி. அவன் மனைவி பெயர் சூர்யா. ஒரு பெண் குழந்தை பிறந்தது. சூர்யா இறைவனடி சேர்ந்தாள்.

சங்கரனின் பள்ளி ஆசிரியரும் அவன் குடும்பத்துக்கு வைதீக கர்மாக்கள் நடத்திக் கொடுக்கும் புரோகிதரும் கூட சங்கரரின் சீடர்கள் ஆனார்கள். தன் பெண்ணை வளர்த்து திருமணம் செய்விக்கும் வரை குடும்பத்தை காப்பாற்றினார் அந்த இல்லறத் துறவி.

தீர்த்த யாத்திரையில் அவர் வெகுநாள் தங்கியது பத்ரீநாத்திலும் துவாரகையிலும். அதிகம் படிக்காத சங்கரன் பாகவதக் கதைகளைட் பாடல்களாகப் பாடினார். நாடகமாக எழுதினார். பன்னிரண்டு ஆண்டுகள் ஸ்தலயாத்திரை சென்றார். மக்கள் அவரை சங்கரத்தேவர் என அழைத்தனர். அது ஒரு அஸ்ஸாமிய கிராமம். மக்கள் அழைப்பை ஏற்று அவ்வூருக்கு விஜயம் செய்த சங்கர தேவரை வரவேற்றது ஒப்பாரி கீதம்

"ஐயா, பூரண கும்ப மரியாதையோடு தங்களை வரவேற்க இயலாத துர்பாக்கியசாலிகளாகி விட்டோம். இந்த இளைஞன் புதிதாகத் திருமண மானவன். தங்களை வரவேற்க திட்டம் தீட்டியவனே இவன்தான். தவறிச்

கிணற்றில் விழுந்து விட்டான். உடனே காப்பாற்றியும் கூட உயிர் போய் விட்டது. இவன் வீடு சன்னதித் தெருவாதலால் சமஸ்காரங்கள் முடியும் வரை ஆலயக் கதவுகளைத் திறக்க முடியாத நிலைமை. அபசாரத்திற்கு மன்னிக்க வேண்டும்." என்றனர் அர்ச்சகர்கள்.

ஆலயத்தின் முன் நின்று அற்புதமாகப் பாடினார் சங்கரத்தேவர். "அன்று கோவர்த்தன கிரியைத் தாங்கி கோகுல மக்களைக் காப்பாற்றிய உனக்கு இந்த ஒரு பக்தனின் உயிரைக் காப்பது பெரும் கஷ்டமா? பிரபாச க்ஷேத்திரம் சென்று சங்காசூரனைப்பிளந்து பார்த்தவனுக்கு இந்த இளைஞன் உயிர் போன இடம் தெரியவில்லையா? சுழற்காற்றாய் உன்னை சுழற்றி எறிந்த திருணாவர்த்தனையே மாய்த்த உனக்கு காலனிடமிருந்து இவன் உயிரை மீட்க எத்தனை நேரமாகும்? முரட்டு மாடாக வந்த தேனு காசுரன், பொல்லாத கன்றுகுட்டியாக வந்த வத்சாசுரன், பயங்கரக் காளையாக வந்து அட்டகாசம் செய்த அரிஷ்டாசுரன், இவர்களை அடக்கிய உன்னால் காலனை அடக்க முடியாதென்றால் நம்ப முடியுமா? நாரையாய் வந்த பகாசுரன் அலகைக் கிழித்தெறிந்தாற்போல், இவன்

மரண ஓலையைக் கிழித்து உயிர்ப்பிச்சைத் தரவேண்டும். சகடாசுரனை காலால் உதைத்ததுபோல் இவன் மரணத்தை உதைத்துவிடு. துருவனுக்கு அருளியதுபோல், பிரகலாதனை மரணப்பிடிகளிலிருந்து காத்ததுபோல் இவனைக் காத்தருள வேண்டும்" எனப் பலவாறு ஸ்தோத்தரித்தார்.

எல்லோரும் மெய்மறந்திருக்க வாலிபன் தூங்கி விழித்தது போல் எழுந்தான். சங்கரத் தேவரையும், அவரது சீடர்களையும் சகல மரியாதை களுடன் ஆலயத்துள் அழைத்துச் சென்றனர் அர்ச்சகர்கள். ஊரார் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. பகவானுக்கு அன்று விசேஷ அபிஷேக, ஆராதனைகள், அன்னதானம், திருவீதி உலா என்று அமர்க் களப்பட்டது.

பாகவதக் கதைகளை அஸ்ஸாமிய மொழியில் நாடகமாக்கி சீடர் களைக்கொண்டு திருவிழாக் காலங்களில் நடிக்கச் செய்தார் ஸ்ரீ சங்கரத்தேவர். இதற்கு நல்ல வரவேற்பு இருந்தது.

அரசர் இவருக்கு குறுநிலத் தலைவர் பதவியை அளித்து மரியாதை செய்ய முன்வந்தார். ஏராளமான தங்கக்கட்டிகளையும் சன்மானமாகத் தந்தார். ஆனால் ஸ்ரீ சங்கரத்தேவர் "தமது நோக்கம் பக்தியைப் பரப்புவதை தவிர பதவியைத் தேடுவது அல்ல. செல்வமும், செல்வாக்கும், நிரந்தரம் இல்லாதது. மரத்திலிருந்து கனி உதிர்வதைப்போல உயிர் ஒருநாள் கூட்டைவிட்டுப் பறந்து விடும். அதற்குள் முடிந்தவரை நற்காரியங்கள் செய்யப்பட வேண்டும். நல்லவர்கள் நிறைந்த நாடு நலம் கெடாது" என்று கூறி விட்டார்.

"என் பெயர் ஜகதீஷ் மிஸ்ரா; இலக்கண சுத்தமாக சமஸ்கிருதம் கற்றிருக்கிறேன். பூரி ஜகந்நாதத்தில் பாகவதக் கதைகளை சொல்லி வருகிறேன். தாங்கள் பாகவதத்தை நாடகமாகப் போடுகிறீர்களாம். நான் எத்தனை எளிமையாய் கதை சொன்னபோதிலும் கூட்டம் குறைந்து கொண்டே வருகின்றது. ஜகந்நாதர் சன்னதி முன் தினம் அழுவேன். இரண்டு நாட்கள் முன் என் கனவில் வந்த ஜகன்னாதர்," நீ காமரூபம் சென்று சங்கரத் தேவரைப்பார். ஒருவாரம் அவரது இலக்கியச்சொற் பொழிவுகளை, நாடகங்களைப் பார்த்து அனுபவப் பாடம் படித்துக் கொள்" என்றார். என்னை சிஷ்யனாக ஏற்று அருள் புரியவேண்டும்" என்று காலில் சாஷ்டங்கமாக விழுந்து வணங்கினார் ஜகதீஷ் மிஸ்ரா.

சங்கரதேவர் "நான் பள்ளிப்படிப்பே முடிக்காதவன். உங்களுக்கு நான் உபதேசம் செய்வதா? பரந்தாமன் லீலைகளை நிர்ணயிக்க முடிவ தில்லை.... வாருங்கள். நதிக்கரைக்குச் செல்வோம். நித்ய கர்மானுஷ் டானங்களை முடிப்போம். யமுனையாய், கங்கையாய், சரஸ்வதியாய், காயத் திரியாய் நீராய்நிறைந்திருப்பவன் பதில் சொல்வான்" என்றபடி மிஸ்ரா வுடன் நதிக்கரைக்கு வந்தார் சங்கரத் தேவர். நதிக்கரையில் ஒரு முதிய அந்தணர். உடலெல்லாம் பன்னிரெண்டு நாமங்கள். காதிலே ஒளிவிடும் வைரக் கடுக்கன். கையிலே ஓலைச் சுவடி.

ஓய் மிஸ்ரா....சங்கரா.... அப்படி உட்காருங்கள். நானும் பூரியிலிருந்து தான் வருகின்றேன். நீ பாகவதத்தை நாடகமாக்கித் தருகிறாய்; ஜகதீசன் உபன்யாசம் செய்கிறான். நான் ஸ்லோகமாக எழுதி இருக்கிறேன். படிக்கிறேன்; தப்பிருந்தால் சொல்லுங்கள்" என்றார்.

மிஸ்ராவும், சங்கரத்தேவரும் உட்கார்ந்தனர். பதினெட்டு நாட்கள் பாகவதம் படித்தார் முதியவர். இருவரின் சந்தேகங் களுக்கும் சலிக்காமல், வியாக்ஞானம் சொன்னார். ஒருநாள் குளிக்கிறேன் என்று ஆழத்துக்குப் போய் மூழ்கியவர் வரவேயில்லை. விளக்கம் சொல்ல வந்தது ஜகன்னாதரே என்று புரிந்துக் கொண்டார்கள் இருவரும். இருவருமாக புனித யாத்திரையைத் தொடர்ந்தனர். பண்டிதர் கூட்டம் ஒன்று இவர்களை வழிமறித்தது.

"சங்கர்யய்யா.... சமஸ்கிருதம் உயர்ந்த மொழி. பாகவதத்தை அஸ்ஸாமி யில் மொழி பெயர்ப்பது பாபம். அதுவும் நாடகமாய் நடிப்பது பெருத்த அபசாரம். புராண நூல்களை சந்திக்கு இழுக்கலாமா? குருடனுக்கு ராஜ பார்வை என்றால் என்ன வென்றாவது புரியுமா?" என்று தர்க்கித்தனர். அவர்கள் தாந்திரீக சாஸ்திரம் கற்றவர்கள். சங்கரத் தேவர் அமைதியான குரலில்" பகவான் உயர்வு, தாழ்வு நினைத்திருந்தால் அவயங்களை ஒன்று போல் படைத்திருக்கமாட்டான். முன்செய்த கர்மவினைகளால் பிறப்பு அமைகிறது. இலைகளும், கிளைகளும் செழிப்பாய் வளர வேரில் தான் தண்ணீர் ஊற்றுகிறோம். இலைகளில் அல்ல. உங்கள் முறை இலைகளின் வழியே நீர் ஊற்றுதல். அதுவும் வேருக்குப் போகுமென்றாலும் சேதமாகும். கால தாமதமாகும். சமூகத்தின் அடிமட்டத்திலுள்ளவர்களுக்கு பக்தி வழி நல்லொழுக்கம் போதிக்கப்படாவிட்டால், நம் வீட்டுப் பெண்களின் நகைகள் கொள்ளைபோகும். ஆலயம் சூறையாடப்படும். பெண்கள்

மானப்பங்கப்படுவார்கள். பசித்தவன், சோம்பேறி, உழைப்பின் ருசி அறியாதவன் குறுக்கு வழியைத் தேடுகிறான். கண்ணன் யாதவ குலத்தில்தான் வளர்ந்தான். அதனால் சேரிகளில், கீழ்மட்டத்திலுள்ள வர்களுக்கு நாடகம் நடத்துவதில் தவறில்லை. அக்னி யார் பற்ற வைத்தாலும் எரிகிறது. அழுக்கு,அசுத்தம், கீழ்ஜாதி பார்ப்பதில்லை. மழை எல்லா இடங்களிலும் ஒரேமாதிரிப் பொழிகிறது. மாளிகை, மண்குடிசை என்று பேதம் பார்ப்பதில்லை. காற்றும், அதேபோலத்தான். நிலவும், சூரியனும் அப்படியே ஒளிதருகின்றன. யார் பண்படுத்தி விதையைப் போட்டாலும் பூமி வித்தியாசம் பார்க்காமல் விளைச்சலைத் தருகிறது. புராணங்களே இறைவன் புகழ்தான். அதுமட்டும் பண்டிதர்களுக்கு மட்டுமே சொந்தம் என்றால் எப்படி? பண்டிதர்களாவது படித்து அறிந்துகொள்கிறார்கள். பாவப்பட்டவர்களுக்கு யார் எடுத்துரைப்பது? அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்கிறீர்களே! தாழ்வான பூமியில்தான் மழைநீர் தங்கி அவசியத்துக்கு கை கொடுக்கிறது. மேட்டுக்குடியின ருக்கான நீங்கள் இருக்கலாம். மிஸ்ரா, உங்களின் இலக்கிய மழையை இப்போதே, இங்கேயே பொழியுங்கள்" சங்கரத்தேவரின் கம்பீரமான பேச்சு

பண்டிதர்களைக் கை தட்டவைத்தது. ஒவ்வொரு சேரியிலும் இலக்கியச் சொற்பொழிவுகளும், நாடகங்களும் நடந்து கண்ணனின் புகழால் சேரியெல்லாம் பக்தி மணத்தது. நாற்சந்தி, முச்சந்திகளில் இரவு ஊரடங்கியபிறகு நாடகம் போட்டார் ஸ்ரீ சங்கரத்தேவர். சேரிஜனங்களை 'ஹரிபுத்ராஸ்' என்றழைப்பார். அதனால் சில பெரிய நகரங்களில் இவரை ஆலயத்துக்குள் செல்ல அனுமதிக்கவில்லை. பூரணகும்ப மரியாதை நிறுத்தப்பட்டது. இவரது பிரசங்கங்களுக்குப் போவோரை ஜாதிப்ரஷ்டம் செய்தனர். செல்வந்தர்கள்' ஜாதி வெறியர்கள் இவரது கதா காலட்சேபத்தை பகிஷ்கரித்தனர். மகாதேவன் என்ற அந்தணர் சங்கரதேவரை வீட்டிற்கு அழைத்து பாத பூஜை செய்தார். அதனால் அவர் வீட்டுத் திதிக்கு எவரும் வர மறுத்தனர். சங்கர தேவரிடம் முறையிட்டார் மகாதேவன்.

"கவலைப்படாமல் சமையல் செய்யுங்கள். மூன்று பேருக்கு ஆறு பேராக வந்து சாப்பிடுவார்கள். ஹோமத்துக்கு வேண்டிய தர்ப்பை, நெய், ஹவிஸ், சமித்து, வறட்டி எல்லாம் சேமித்து வையுங்கள்" என்று ஊக்கப்படுத்தினார் சங்கர தேவர்.

மூன்று அந்தணர்கள், மூன்று ஹரிஜன வாலிபர்களுடன் உள்ளே நுழைந்தார் சங்கர தேவர். வேத மந்திரங்களோடு கர்ம காரியங்கள் நடைபெற்றன. சாப்பிடும்போது ஆறுபேரும் சேர்ந்தே சாப்பிட்டனர். வாசலில் அவ்வூர் அந்தணர்களின் கூட்டம். கையில் ஆளுக்கொரு ஆயுதம். முதலில் வெளிவந்த மூன்று ஹரிஜன வாலிபர்களும் கதவைத் தாண்டியதும் மறைந்து விட்டனர். உள்ளே வந்து பார்த்தால் அந்தணர்களையும் காணவில்லை. சங்கர தேவர் கம்பீரமாகப் பேசினார்.

"நீங்கள் பார்த்த மூன்று அந்தணர்களும் மும்மூர்த்திகள். குரோதத்தால் குருடாகி தரிசனம் பெறும் பாக்கியத்தை இழந்தீர்கள். மகாதேவ் பாக்கியசாலி. மூன்று ஹரிஜன வாலிபர்களும், வசிஷ்டர், பிருகு, நாரதர். உங்கள் ஊருக்கு இந்த முனி சிரேஷ்டர்கள் வந்தும், நமஸ்கரித்துப் பாதபூஜை செய்யாத பாவிகளானீர்கள். "எதை ஒதுங்கச் சொல்கிறாய்? ஆத்மாவையா, இந்த அழியும் உடலையா? தீட்டு எதற்கு?" என்று சிவ பெருமானே உணர்த்தியும் கூட உணராத அறிவிலிகள் நீங்கள். உங்கள் ஆத்திரம் என்மேல்தானே! என்னைக் கொன்றால்தான் உங்கள் கோபம் அடங்கும் என்றால் நான் சாகத்தயார். ம்... ஏன் நிற்கிறீர்கள்? நடத்துங்கள்.

கறுப்பாயிருக்கும் திருமாலுக்கு வெண்மையான மகாலட்சுமி மாலையிட்டாள். சிவப்பு நிறமுள்ள சிவபெருமான் கறுப்பு நிறமுள்ள சக்திக்கு பாதி உடம்பையே கொடுத்தார்.. எள் கறுப்பு; அரிசி வெளுப்பு. இரண்டும் சேர்த்துத்தான் பிதுர்கடன் முடிக்கிறீர்கள்! இவர்களை ஒதுக்கினால் எப்படி?

ஆடை நெய்து கொடுக்கிறான். கோடி என்று உடுத்துக் கொள் கிறீர்கள். செருப்புத் தைத்துக் கொடுக்கிறான். கங்காஜலம் புரோக்ஷித்து விட்டு போட்டுக் கொள்கிறீர்கள். அவன் செய்து கொடுத்த கட்டில் படுக்க நன்றாய் இருக்கிறது. அவன் செய்த பீரோ துணி அடுக்க சௌகரியமாய் இருக்கிறது. அவன் செய்த இலுப்பச்சட்டியும், தோசைக் கல்லும் சமையலறையில் ஆட்சி செய்கிறது. அவன் தண்ணீர்விட்டு பிசைந்த மண்ணிலிருந்து செய்த பானைகள் அக்கினியில் சுட்டெடுத்தால் ஔபாசனப் பானையாகக் கூட ஆகிறது. உபநயனத்துக்கு, கலியா ணத்துக்கு ஏன் உங்களின் இறுதி யாத்திரைக்குக் கூட அவன் பானை செய்து தருகிறான். அவன் கறுப்பு கால்கள் உழுத நிலத்திலிருந்து தான் வெள்ளை அரிசியும், கோதுமையும் கிடைக்கின்றது. இப்படி நம்மில் ஒருவனாகி விட்ட அவனை பக்தி என்று வரும்போது ஏன் பிரிக்கிறீர்கள்?

'உன்னோடு ஐவரானோம்' என்று ராமன் ஏற்றுக் கொண்டது வேடன் குகனை. ஒற்றையாய் கர, தூஷண, திரிசிரர்களை முடித்த இராமனால் இராவண கும்பகர்ணாதிகளை முடிக்க முடியாதென்றா வானரர்களைச் சேர்த்துக் கொண்டான்? ஏற்றத்தாழ்வு கூடாதென்று காட்ட!" சங்கர தேவர் பேசப்பேச அந்தணர்கள் கண்களில் நீர் வழிந்தது. ஆயுதங்களை உதறினார்கள். அத்தனை பேரும் அவர் காலடியில் பணிந்து தங்கள் தவறை மன்னிக்கும்படி வேண்டினார்கள்.

"என்னப்பா செய்கிறாய்?" என்றார் சங்கரதேவர். பூக்களில் அழுகல், புழு நீக்கி, கிள்ளியெறிந்து நல்லவைகளைப் பழுது பார்த்துக் கொண்டிருந்தார் ஜகன்னாதர். அவர் ஓரளவு வசதியானவர். முக்கால் மொட்டுக்களை வலுக்கட்டாயமாக மலர்த்திக் கொண்டிருந்தார். அவர் கையைப் பிடித்து நிறுத்தினார் சங்கரதேவர். "தப்பு..... இது ரொம்பத் தப்பு. மலர் கொய்வது ஒருகலை. நாளை மலரவிருப்பதை நாளை தான் பறிக்க வேண்டும். அன்றாடம் மலர்ந்த புத்தம் புது மலர்களாலேயே இறைவனை பூஜிக்க வேண்டும்".

"விலை கொடுத்து வாங்கிய மலர்களில் அதெல்லாம் பார்க்க முடியுமா? செடியிலிருந்தும் பறிக்கப்பட்டு, இறைவனிடமும் சேராமல் போனால் அதுவும் பாவம்தானே" என்றான் ஜகன்னாத். "நேற்றே சொல்ல வேண்டுமென்றிருந்தேன். அள்ளிப் போடாமல் எண்ணிப் போட்டாய் மலர்களை"

'ஒரு நமஹவுக்கு ஒரு பூ சரியாகத்தானேபோட்டேன்!'

"பகவான் பூஜைக்கே கணக்குப் பார்க்கிறீர்களே! என் பிள்ளையின் காலை வெட்டி விட்டார்களே! என் பத்து வயதுப் பெண்ணை பலாத்காரப் படுத்தி சின்னபின்னமாக்கிவிட்டார்களே என்று அன்று கதறினீர்களே! சந்தோஷமான நிறைவான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தபோது ஆண்டவனை மறந்து இருந்தீர்கள். முதல் வகுப்பில் தேர்வு பெற்ற மாணவன் அடுத்த ஆண்டும் பள்ளிக்குச் செல்கிறான். நல்ல மலர்கள் விற்கும் வியாபாரியிடம் புஷ்பம் வாங்குங்கள். இன்று ஆயிரக்கணக்கில் வைத்தியர்களுக்கும், மருத்துவமனைக்கும் செலவிடும் நீங்கள், கொஞ்சம் தாராளமாய் புஷ்பம், அதுவும் நல்ல புஷ்பம் கொண்டு பூஜை செய்ய லாமல்லவா?"

"அப்படிச் செய்தால் இப்படி வந்திருக்காது என்கிறீர்களா?

"பார்த்து நடந்தால் கண்ணாடி காலில் குத்துவதில்லை; குனிந்து போனால் வாசற்படி தலையில் இடிப்பதில்லை. மயிரிழையில் விபத்தி லிருந்து தப்பிப்பவர்களும் உண்டு. அள்ளிப் போடும்போது மொட்டுக்களும் பகவான் பாதத்தில் சேர்ந்துவிடும். தீவனம் வைக்காமலேயே மாட்டைக் கறக்க ஆசைப்படக்கூடாது. பால் விற்று தீவனம் வாங்கி வைக்கிறேன்" என்பது போலுள்ளது உங்கள் பேச்சு. ஒரு மாதம் வேலைசெய்தால் தான் சம்பளம் போடுகிறீர்கள். பகவானிடம் மட்டும் கணக்காக எண்ணி பூஜை பண்ணிவிட்டு கைமேல் பலன் எதிர்பார்க்கலாமா?

ஜகந்நாதன் சாஷ்டாங்கமாய் காலில் விழுந்தார். "ஸ்வாமி, என் அறிவு இன்று தான் விழித்துக் கொண்டது. பணம் கொடுத்து வாங்கியிருக்கி றோமே என்று மொட்டுக்களை மலர்த்தி, கணக்கிட்டு அர்ச்சனை செய்து, சே.....என்னவொரு மூடன் நான்! ஒருவாரம் மடத்திலே வந்து ஒத்தாசை யாய் இரு. உனக்கு வழி சொல்கிறேன் என்றீர்கள். இரண்டு நாளில் கண்டு பிடித்து விட்டீர்கள் என் தவறுகளை. நான் வருகிறேன். இனி நான் நல்ல வழியில் நடப்பேன்" என்று விடை பெற்றுச் சென்றார் ஜகன்னாத்.

"நான் துவாரகை வழி ஸ்தலயாத்திரை போகிறேன். நீங்களும் வருகிறீர்களா?" என்று நாராயண மூர்த்தியைக் கேட்டார் சங்கரதேவர். "துவாரகை பார்த்து விட்டேன். வேறே பக்கம் போனால் சேர்ந்து கொள்கிறேன்"

"சரி, பண்டரிபுரம் போகலாமா?"

"அதுவும் தரிசனமாகிவிட்டது".

"காசிக்குப்போகலாமா?"

"இரண்டு தடவை கங்காஸ்நானமாகி விட்டது ஸ்வாமி!"

நாராயண மூர்த்திக்கு பாகவதம் மனப்பாடம். சமஸ்கிருத பண்டி தோத்தமர்.

பேரன், பேத்தி என்று பெரிய குடும்பம். உண்ணும், உறங்கும் நேரம் தவிர சங்கரதேவர் அருகிலேயேதான் காலம் கழிப்பார். "சரி, ராமேஸ்வரம் பக்கமாகப் போகலாமா?"

"சரியாப் போச்சு.....ராமநாதஸ்வாமி தரிசனம் நாலுதடவை ஆயாச்சு"

"கேரளா? குருவாயூர், திருச்சூர், வைக்கம், ஏத்துமானூர் திருவனந் தபுரம், அம்பலப்புழை"

"எல்லாம் பார்த்தாச்சு"

"மைசூர், சிருங்கேரி, உடுப்பி, தர்மஸ்தலா, சுப்ரமண்யா?"

"சலிக்கிற வரை போயாச்சு."

சங்கரதேவர் மௌனமானார். நாராயண மூர்த்தி விடைபெற்றுக் கொண்டார். ஒருவாரம்சென்றது.

நாராயண மூர்த்தி சொல்லிக் கொள்ள வந்தார்.

"எங்கே பயணம்?"

"பேரன் கராச்சி போறான். இரண்டு வருஷம் பயிற்சியாம்! என் பிள்ளை கோதண்டம் போறான். கூடபோயி பார்த்துட்டு வரேன்"

"பேரன் கைலாசத்தை எத்தனை தடவை பார்த்திருப்பீர்?"

"அதென்ன அப்படிக் கேட்டுட்டேள்? அவன் வளர்ந்ததே இந்தத் தோளிலே தானே! இப்பத்தான் ஆறுமாசமாப் பார்க்கலே...."

"முகம் மறந்து போச்சா?"

"மறக்குமா? மனசிலே படம் புடிச்சி வைச்சிருக்கேன்."

"பின்னே ஏன் போகணும்?"

"இதென்ன கேள்வி..... ஆசை, பாசம்.... மறுபடி பார்க்க சந்தர்ப்பம் வராதோன்னு பயம். அதான் புறப்படறேன்"

"அப்ப எத்தனை தடவை பார்த்தாலும் சலிக்காது!"

"சலிக்குமா..... என் மூத்தபேரனாச்சே... கண்ணுக்குள்ளேயே வைச்சு வளர்த்துருக்கேனே!

'துவாரகை, உடுப்பி, குருவாயூர், பண்டரிபுரம், ஜகந்நாதம் ஸ்வாமி யெல்லாம் ஒரு தடவை பார்த்தாலே அலுத்துப் போயிடறது. கால்வலிக்

கிறது. தள்ளாட்டமாயிருக்கு... ஆசை, பாசமெல்லாம் அவன் மேலே வரவேண்டிய வயசு ஸ்வாமி! குருவாயூரில் எடை தூக்கறேன். என் பேரன் உயிர் பிழைக்கணுங்கறபோது ஓடி வருகிறதுக்கு அவன் வேணும். வரிசையா மூன்று பொண் பொறந்துடுத்து.... ஆண் குழந்தை பிறந்தா கோவில்லே வந்து அன்னப் பிராசனம் பண்றேன்னு ப்ராத்திக்கிறபோது அவன் வரணும். பார்க்காத பந்துக்களா போயி பார்த்துட்டு வரதுதானே! பேரன் மேலே இருக்கிற பாசத்திலே பத்திலே ஒரு பங்காவது பகவான் மேலேயும் இருக்கணும். அடுத்த பிறவி எப்படி வாய்க்குமோ? பார்க்க சந்தர்ப்பம் கிடைக்காதோன்னு பயம் வரணும்.

ஸ்ரீராமநவமி அன்னிக்கு வடை பாயசம் பண்ணலியான்னு கேட்டப்போ ராமர் பொறந்து எத்தனை காலமாச்சு.... ராமர் இன்னிக்கா பொறந்தார்னு கிண்டலடிச்சேளே! உம்மோட பேரன் பொறந்த நாளுக்கு பாயசம்கொணர்ந்து என்னைக் குடிக்கவைச்சு உங்க நாக்கும் தொண்டையும் இனிக்கறப் போல, வயிறு நிறைஞ்சாமாதிரி நிறைவா, சந்தோஷமா ஆசீர்வாதம் பண்ணணும்னேளே! எங்கேயோ பேரன் இருந்தாலும் வாழ்த்தனும்னு ஆசைப்படறேள்! என் ராமனுக்கு பாயசம் வைச்சு வாழ்த்தை வாங்கிக்கோங்கோ.... என் பிரபு.... துரும்பைத் தூக்கிப் போட்டாலே சந்தோஷப்படறவன். உங்கப் பேரனைப் போல கண்ணனையும் பேரனா நினைச்சு தொட்டில்லே போட்டு தாலாட்டுப் பாடின பெரியவாளெல்லாம் பக்திப் பட்டயத்துலே பதிஞ்சு இருக்கா.... அலுப்பும், சலிப்பும், தள்ளாமையும் அவனைப் பார்க்கிறதுலே வந்தா ஆபத்துக்குப் பக்கத்துலே இருக்கோம்னு அர்த்தம்"

"ஸ்வாமி!...சகஜமாப் பழகினதாலே சினேகிதன்னு நினைச்சுட்டேன். நீரும், நெருப்பும் மாதிரி நீர். நான் கராச்சி போகலே...உங்க கூட துவாரகை புறப்படறேன். பாச பந்தங்கற திரை விலகிடுத்து..... உங்க கூட பயணப் படறதே என் பூர்வ ஜென்ம புண்ணியம். உக்ரசேன ராஜாவா ஜெயில்லே பூட்டப் போறேள். அக்ரூரரா கண்ணனை அழைச்சுண்டு மதுரா புறப்படறேன். கண்ணனுக்கு குருவா இருந்து மகனைக் கேட்கணும். நான் வசனம் மனப்பாடம் பண்ணிண்டு வரேன்" நாராயண மூர்த்தி உற்சாகமாக வீட்டிற்குப் புறப்பட்டார். சீடர்கள் வாயடைத்து நின்றிருந்தனர்.

சங்கர தேவர் சிரித்துக் கொண்டார். 1569–ம் வருஷம். தாந்தீரிக சாஸ்திரம் கற்று, தன்னிடம் சம்வாதம் செய்து தோற்றுப் போன மாதவரையே தன் வாரிசாக நியமித்தார். பக்தர்களும், சீடர்களும் கூடியிருக்க நிஷ்டையிலேயே சமாதியடைந்தார். இவர் உடலிலிருந்து ஒரு ஜோதி கிளம்பி ஆகாயத்தில் சென்றது.

இந்த சரித்திரத்தை பயபக்தியுடன் படிப்பவர்களும், கேட்பவர்களும் நன்றாகப் படித்து, திட மனதுடன், எல்லா நலன்களும் பெற்று சம்ப்ரமமாக வாழ்ந்து முக்தி அடைவார்கள் என்பது திண்ணம்.

88. ஸ்ரீ கனக தாஸர்

பைரப்பா கர்நாடக மாநிலத்தின் ஒரு குறுநில மன்னர். அவர் மனைவி பச்சம்மா. விஜய நகர சாம்ராஜ்யத்தை அப்போது ஆண்டவர் ஸ்ரீ கிருஷ்ண தேவராயர்.

பச்சம்மாவின் தோழி ராஜம்மா "பச்சம்மா, நம்ம ராஜாவோட ஆஸ்தான குரு வியாசராஜாவை ஒருமுறை இந்த அரண்மனைக்கு அழைத்து பாதபூஜை பண்ணு. அவர் இங்கே கை நனைச்சா உங்க ஏக்கம் தீரும்" என்றாள்.

பச்சம்மா சூள் கொட்டியபடி "போ, ராஜம்மா... எனக்கு வயசு அம்பதாகப் போறது. இனிமேல் குழந்தை பிறக்கும் என்கிறாயா" என,

"அதென்ன அப்படிக் கேட்டுட்டே... அம்பத்தி நாலுலே புள்ளைப் பெத்திருக்கா எங்க அத்தை. வியாசராயரைப் பத்தி உனக்குத் தெரியாததுனாலே அப்படிக் கேட்டுட்டே. நாலு விஜயநகர ராஜாக்களுக்கு அவர்தான் குருநாதர். ஐந்தாவது கிருஷ்ணதேவராயர். அவருடைய பூர்வாசிரமப் பெயர் யதிராஜன். அவருடைய தகப்பனார் ராமாச்சார் திடீரென்று இறந்து விட்டார். புருஷனும், மனைவியும் ஈருடல் ஒருயிர் என்போமே அத்தனை ஒற்றுமை. உடன்கட்டை ஏறுவேன்னு பிடிவாதமா இருந்தா. அந்த காலத்துலே உடன்கட்டை ஏற யாராவது ஒரு பெரியவா அனுமதி வேணும்.

அப்போ அந்த ஊரிலே மத்வ ஆச்சாரியார் ஸ்ரீ பிரம்மணிய தீர்த்த ஸ்வாமிகள் தங்கியிருந்தார். ராமாச்சாரியோட மனைவி விடுவிடுன்னு போயி அவர் காலிலே விழுந்தா.

'தீர்க்க சுமங்கலி பவ' ன்னார். யமதர்மராஜா சாவித்திரியை ஆசீர்வாதம் பண்ணின மாதிரி. திகைச்சுப் போயிட்டா. "ஸ்வாமி, முதல்லேயே விபரம் சொல்லாததற்கு மன்னிக்கணும். என் புருஷன் இறந்துவிட்டார். நான் உடன்கட்டை ஏறப்போறேன். பெரியவா அனுமதி பெற வந்தேன்னு' கண்ணீர் விட்டிருக்கா.

ஸ்வாமிகள் "என் நாக்குலேருந்து வெளிப்பட்ட வார்த்தைகளுக்கு நான் பொறுப்பில்லே. விட்டலனுக்கே சமர்ப்பணம். அதைக் காப்பாத்த வேண்டியதும் அவன்பொறுப்புதான். நான் நிஜமான சன்யாசி. விட்டலன் அருள் செய்வான். வா"ன்னு அவளைக் கூட்டிண்டு அவ வீட்டிற்கு வந்தார்.

தன்வந்தரி மந்திரத்தை ஜெபித்தார். "குரு புத்திரனை மீட்டுக் கொண்டு வந்தவனாச்சே! உத்தரை கர்ப்பத்தைக் காப்பாத்தினவனில் லையா?" ராமாச்சாரியும் தூங்கி முழிச்சாப் போல எழுந்துட்டான். ஊரே ஆச்சரியப்பட்டது. அதுமட்டுமா?

"சீக்கிரமா ரெண்டு ஆண்குழந்தைகள் பிறக்கும்"னு ஆசீர்வாதம் பண்ணினார். முதல் குழந்தைதான் யதிராஜன். குழந்தையிலேருந்து ரொம்ப பக்தி, ஞானம்.

குழந்தையைக் கொண்டு போய் ஸ்ரீ பாதராஜ தீர்த்தர் கிட்டே விட்டா. இந்தியா பூராவும் குருவும் சிஷ்யனும் ஸ்தல யாத்திரை பண்ணினா. யதிராஜரோட குரு சேவை ரொம்ப பிரசித்தம். குருநாதர் பூஜை அறையிலே செம்மை புடிச்சுப் போய் ஒரு சம்படம் இருந்தது. ஒருத்தராலேயும் திறக்கமுடியலே. யதிராஜர் ஒருநாள் அதைத் திறந்துவிட்டார். உள்ளே என்ன இருந்தது தெரியுமா? ஒரு அழகான கிருஷ்ண விக்ரகம். உடனே யதிராஜர் பாடி ஆட ஆரம்பிச்சுட்டார். குருநாதர் அவருக்கு வியாச நாராயணர் என்ற பட்டமும் கொடுத்தார்.

வியாச ராஜாவுக்கு ஜாதகம் ரொம்ப நன்னாப் பார்க்கத் தெரியும். கிருஷ்ண தேவராயர் ஜாதகத்தைப் பார்த்தார். ராஜாகிட்டே விபரத்தை சொல்லி, கொஞ்சநாள் சிம்மாசனத்துலே உட்கார வேண்டாம் என்று

கேட்டுண்டார். ராஜா என்ன பண்ணினார்னா குருகிட்டேயே ஆட்சியை ஒப்படைச்சுட்டு தீர்த்த யாத்திரை போயிட்டார்.

குரு எதிர்பார்த்த அந்த நாளிலே சிம்மாசனத்துலே தன்னோட காவி உடையை வைச்சார். என்ன ஆச்சரியம்! காவி உடை தீப்பிடிச்சு எரிஞ்சது.

தீர்த்த யாத்திரை போயிருந்த ராஜா இந்தச் செய்தியைக் கேட்டுத் திரும்பி வந்து குரு காலடியிலே சாஷ்டாங்கமா விழுந்து "எனக்கு மறுபடி உயிர் கொடுத்த பகவான்'னு கொண்டாடினார். கொஞ்ச நாள் ஆட்சி பண்ணினதாலே ஜனங்கள் அவரை 'வியாச ராஜா' ன்னு கூப்பிடறா. அவரை வரவழைச்சு ஜாதகத்தைக் காட்டி பரிகாரம் பண்ணினா நிச்சயம் குழந்தைப் பிறக்கும்" ராஜம்மா விடைபெற்றுக் கொண்டாள். பச்சம் மாவுக்கு நம்பிக்கை துளிர் விட்டது. கணவரிடம் வியாச ராஜர் பற்றி எடுத்துரைத்தாள். வியாச ராஜரை வரவழைக்க ஏற்பாடு செய்தார் பைரப்பா.

பைரப்பாவின் மாளிகையில் நடந்த பூஜை... எத்தனையோ ஏவலர்கள் இருந்தும் பச்சம்மா தானே முன்னின்று கவனித்த நிவேதன ஏற்பாடுகள்,



பஜனை கோஷ்டியினருக்கு விருந்தோம்பிய தம்பதிகளின் பணிவு, (ஒரு வேளை தான் வந்ததால் ஏற்பட்ட ஜாக்ரதை உணர்வா என்பதையும் விசாரித்தார்.) உயர்வு, தாழ்வு பார்க்காமல் பஜனையில் கலந்து கொண்ட பண்பு எல்லாமே அவர் மனதைக் கவர்ந்தது. இவர்களுக்கா இந்தக் குறை என்று தனிமையில் விட்டலனிடம் பிரார்த்தித்தார். அவர்கள் இருவரின் ஜாதகங்களையும் ஆராய்ந்தார். சந்திரன் பலம் குன்றி இருக்கிறான். அதனால் திருப்பதி சென்று வெங்கடேஸ்வரனுக்கு சிறப்பு ஆராதனைகள் செய்து பிரார்த்தித்துக் கொண்டு வாருங்கள். நிச்சயம் மகன் பிறப்பான்.''என ஆசி வழங்கினார்.

அப்படியே செய்தனர். சரியாகப் பத்தாவது மாதம் திம்மப்பா பிறந்தான். அரசகுல வழக்கப்படி மல்யுத்தம், வாட்பயிற்சி, வில்வித்தை, யானை ஏறுதல்,எல்லாம் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தார் தந்தை. ''கண்ணன் உக்கிரசேன ராஜாவின் பேரன்; வசுதேவரின் மைந்தன். அவன் எந்த போர் பயிற்சியை மேற்கொண்டான்? துவாரகையைக் காக்கவில்லையா? பாரதப் போரில் கண்ணன் இல்லாவிட்டால் பாண்டவர்கள் வெற்றி பெற்றிருக்க முடியுமா?''இப்படியெல்லாம் நினைத்தார் திம்மப்பா.

ஒருமுறை வியாச நாராயணரிடம் மகனை அழைத்துப் போய், ''ஸ்வாமி! இவனுக்கு பகவத் பக்தியில் உள்ள ஈடுபாடு போர் பயிற்சியில் இல்லை. பரந்தாமன் அடியாரைக் கண்டு விட்டால் அன்று பயிற்சிக்குப் போவதில்லை. கோவிலில் மணி அடிக்கும் சப்தம் கேட்டால் போதும்.... என்ன செய்து கொண்டிருந்தாலும் அப்படியே ஓடிவிடுகிறான்'' என்று குறைப்பட்டுக் கொண்டார் பைரப்பா.

வியாச ராஜா ''கவலைப்படாதே, பைரப்பா...ஏழுமலையான் அருளால் பிறந்தவன். பேரும் புகழும் சரித்திரத்தில் இடம் பெற வாழ்வான். பெருமாள் வழிகாட்டுவார்'' என்றவர் திம்மப்பாவின் பக்கம் திரும்பி'' குழந்தாய்! தந்தை உனக்கு நன்மையைத்தான் செய்வார். பக்திக்கு பருவம் பழுக்க வேண்டும். சுத்த வீரனாகப் போர் பயிற்சி பெற்றுக் கொள். இந்த விஜய நகர சாம்ராஜ்யத்தில் படைத்தலைவனாக இருந்து மன்னருக்குப் பல வெற்றிகளைத தேடித்தருவாய்'' என ஆசி வழங்கினார்.

குருநாதர் வாக்குப்படியே படைத்தலைவனாகி ஜெயக்கொடி நாட்டினான் திம்மப்பா. ''அப்பா என்னைப் பெற பல கோவில்களுக்குப் போனீர்கள். பல தான தருமங்கள் செய்தீர்கள். இல்லையா?''

"ஆமாம், திம்மப்பா"

"அம்மா.....நான் வயிற்றிலிருந்த போது பலவிதத்திலும் அவஸ்தைப்பட்டிருப்பீர்கள் இல்லையா? நீங்களும்பல விரதங்கள் இருந்ததாகச் சொல்லி இருக்கிறீர்கள். உங்களது 51–வது வயதில் நான் பிறந்தேன். வலி அதிகமில்லாமலே பிறந்து விட்டேனா?" பச்சம்மா சிரித்தாள். "வலியில்லாமல் எங்காவது குழந்தை பெற முடியுமா? பொல்லாதவன் நீ! எட்டி எட்டி உதைப்பாய்....எத்தனையோ நோன்பு நோற்றுப் பிறந்த அருமந்தப் பிள்ளை நீ"

"அம்மா.... தவமிருக்கவில்லையென்றாலும் ஒவ்வொரு பெண்ணும் வெகு சிரமப்பட்டே ஒரு குழந்தையைப் பெறுகிறாள். அதை ஆளாக்க எத்தனை கஷ்டப்படுகிறாள். பொருள் செலவழித்துப் போர்பயிற்சி தருகிறார் தகப்பனார்"

"ஆமாம்..... இன்று எதற்கு இந்த ஆராய்ச்சி?"

"அம்மா, அப்பா..... போர்க்களத்தில் மடியும் ஒவ்வொரு உயிரும் என் மனதில் வேதனையைத் தருகின்றன! அதைப்போல் ஒரு உயிரை நம்மால் உருவாக்க முடியுமா? என்மனதில் ஏதோ ஒன்று உங்கள் ஆசைப்படி நான் திருமணம் செய்து கொண்டாலும் அந்த வாழ்க்கை நிலைக்காது என்று சொல்கிறது. என்னால் கொல்லப்பட்ட உயிர்களெல்லாம் 'உயிர்களை அழிக்கும் உனக்கு சந்ததி ஒரு கேடா' எனக் கனவில் வந்து கெக்கலி கொட்டுகின்றன."

"என்ன இவன் ஏதேதோ பிதற்றுகிறான்? யுத்தம் என்பது க்ஷத்திரிய தர்மம்" என்றார் தந்தை. "உயிர்களின் சமாதியில் தான் ஜெயக்கொடி நாட்டுகிறோம். அந்த வெற்றி கசக்கிறதப்பா. என்னை விட்டு விடுங்கள். ஒவ்வொரு குடும்பமும் தவிக்கும் தவிப்பின் ஜ்வாலை நம் குடும்பத்தைப் பொசுக்கி விடும். 'பாடா' வில் நான் விவசாயம் செய்கிறேன்" தீர்மானமாகச்சொல்லிவிட்டான் திம்மப்பா.

"அவன் போக்குப்படி விட்டுப்பிடியுங்கள்....அவன் கை ராசியானது. மண்ணைத் தொட்டாலும் பொன்னாகும். நீங்கள் திடமாயிருக்கும் வரை நிர்வாகத்தை கவனியுங்கள்." என மகனுக்கு பரிந்து வந்த பச்சம்மா, திம்மப்பா, ஆனால் ஒரு நிபந்தனை. உன் கனவு பொய் என்று நிரூபிக்க

வேண்டும். தூரத்து சொந்தக்காரப்பெண்; குணசாலி.....உனக்காகவே காத்துக் கொண்டிருக்கிறாள். நீ கல்யாணத்துக்கு சம்மதிக்க வேண்டும்" என்றாள்.

சம்மதித்தார். பெற்றோர் விருப்பப்படி திருமணம் நடந்தது. திம்மப்பா விருப்பப்படி விவசாயமும் நடந்தது. ஏர் முட்டியது. நுகத்தடி எழ மறுத்தது. பக்கத்து உழவர்கள் பலமெல்லாம் சேர்த்துத்தள்ள மாட்டிக் கொண்ட பெட்டி இடம் பெயர்ந்தது. 'ஹேய்–ய்–ய்' ஆனந்தக்கூக்குரல்கள்.

"பெட்டிக்குள்ளே கர்ண மகராஜா மாதிரி ஆம்பிளைப் பிள்ளை இருக்கும்". "எடுத்து வளக்கறாங்க.... இவங்களுக்குத்தான் குழந்தை இல்லியே?"

"அம்மிணிக்கு வயசா ஆகிப் போச்சு.... பொறக்கும்" "ஐயா இவ்வளவு வஜ்ரம் மாதிரி இருக்கறதுக்கு அம்மா பாவம் சதா நோக்காடு தான்". "அதைவிடு....பொட்டி பூட்டை உடைக்கிறாங்க... பாரு.. என்ன இருக்குங்கறே?"

"நம்ம சீதாதேவி மாதிரி அழகானபொம்பளைப் புள்ளை"

'டங்....' கூடியிருந்தவர்கள் விமர்சனங்களை நிறுத்தி விட்டு பூட்டுத் திறந்து கொண்ட பெட்டியை எட்டிப் பார்த்தனர். பளபளக்கும் தங்கக் காசுகள்! சூரியவெளிச்சத்தில் கண்ணைப் பறித்தன! தாயின் வாக்கு பலித்துவிட்டது. சுற்றி நின்றவர்கள் தெய்வ தரிசனம் பெற்றவர் போல், இமைக்கவும் மறந்து நின்றிருந்தனர். ஆனால் திம்மப்பா எந்தச் சலனமுமில்லாமல் இருந்தார்."சரஸம்மா..... மகளுக்குக் கல்யாணம் பண்ணணும் என்றாயே! சின்னவளும் வயசுக்கு வந்து ரெண்டு வருஷமாச்சே... ரெண்டு பேருக்கும் சேர்த்தே மாப்பிள்ளை பாரு..... கல்யாணச் செலவு, புடவைங்க நகைங்க எல்லாம் மாதவன் கொடுத்துட்டான்"

"சாமி.....தெய்வத்தை நேரே பார்க்க முடியாதும்பாங்க..... நீங்கதான் எங்க குலதெய்வம்..... விழுங்கடி" பெண்களுடன் காலில் விழுந்து வணங்கினாள் சரஸம்மா.

"தெய்வமில்லே நான்! தாசன்..... இந்தப் புதையலைப் பங்கிட்டுக் கொடுக்கும் உங்க பங்காளி.... குப்புசாமி.... ஏன் தயங்கறே..... உன் கடன் பத்திரத்தை மீட்டுக்கோ. இந்தா ராமப்பா..... உங்கப்பாவுக்கு முதுகிலே 'ராஜ பிளவை' ன்னியே.... வைத்தியம் பாரு....பசவப்பா...உன் பசங்களை நல்லா படிக்க வை"

புதையல் கிடைத்து பணம் பங்கிடுகிற செய்தி அறிந்து அக்கம், பக்கம் கிராமங்களிலிருந்து ஜனங்கள் திரள் திரளாக வந்தனர். தேவையறிந்து பெட்டி காலியாகும் வரை கொடுத்துக் கொண்டே இருந்தார் திம்மப்பா. கனகத்தை அள்ளி அள்ளித் தந்ததனால் 'கனகப்பா' ஆகி 'பரந்தாமனின் தாசன்' என்று சொல்லிக்கொண்டதால் 'தாசப்பா' என்று அழைக்கப்பட்டு, திம்மப்பா என்ற பெயர் மறைந்து கனக தாசர் ஆக மாறி விட்டது.

கனகதாசரின் குலதெய்வம் வெங்கடேசப் பெருமாள் என்றாலும் அவர் அடிக்கடி செல்வது கனகிளே என்ற சிற்றூரில் உள்ள ஆதி கேசவப் பெருமாள் ஆலயத்திற்கே. அவர் மனதைக் கவர்ந்தவர் அவரே. தந்தை காலமானதும் ஆட்சிப் பொறுப்பு அவர் தலையில் விழுந்தது.

அவர் அஞ்சியதுபோல் வீணையும், நாதமுமாய் இருந்த அவர் மனைவியும் விண்ணுலகேகினாள். மகனின் நலிந்த முகம் தாயின்

ஆயுளையும் கவர்ந்த கொண்டது. கட்டுகளெல்லாம் தளர பற்றற்று வாழ்ந்தார் கனக தாசர். நலிந்த நேரம் எதிரி படையெடுத்து வந்தான். கனகதாசரின் படை தோல்வி கண்டது. போரில் இறந்தவர்களுக்காக கண்ணீர் உகுத்தார். கனகதாசர்.

"வேண்டாத தளையில் மாட்டி வேடிக்கை பார்ப்பது நியாயமா விட்டலா? உன் மனம் இரங்காதா? என் உள்ளம் புழுவாய் துடிப்பதை அறியாயா" என்று உருகிப் பாடினார்.

"தங்கத்தை தானம் பண்ணின கனகதாசன் நீதானா? நன்றாகப் பாடுகிறாய்.... வாயைத் திற..... கொஞ்சம் பிரசாதம் தருகிறேன். கை யெல்லாம் ஆகும். கை கழுவ நீர் இல்லை...." என்ற வெண்கலக்குரல் கேட்டு கண்களைத் திறந்து பார்த்தார்.

தளர்ந்த தொந்தியுடன் உடலெல்லாம்பன்னிரண்டு நாமங்கள். கழுத்தில் துளசி மாலை. காதில் வைரக் கடுக்கன்; கைகளில் கங்கணம்; விரல்களில் மோதிரத்துடன் நின்றிருந்தார் ஒரு வைணவப் பெரியார். மந்திரத்துக்கு கட்டுப்பட்டாற்போல் வாயைத் திறந்தார் கனகதாசர். கெண்டி ஜலத்தை விட்டார். சர்க்கரைப் பொங்கலைப் போட்டார்.

"என்ன செய்கிறீர்கள் ஸ்வாமி?". "பேசாதே..... பல் பட்டு விடப் போகிறது. வெல்லத்துரும்பு நாக்கில் ஒட்டிக் கொண்டிருக்கிறது. எடுக்கிறேன். அப்புறம் தொண்டையில் சிக்கிக் கொள்ளும். நீ என்னைத் திட்டுவாய். பாவி பிராமணன் எதையோ வாயில் போட்டானென்று!"

முதியவர் பேசிக்கொண்டிருந்தார். கனகதாசர் யோஜித்தார். "இல்லை.... இவர் நாக்கிலிருந்து எதையும் எடுக்கவில்லை. எழுது கோலால் என்னவோ எழுதுகிறார். என்ன எழுதுகிறார் என்று கவனிப் பதற்குள்அறிவு மயங்கியது. ஆலய மணி ஒலித்தது. சாம்பிராணி, அத்தர், புனுகு, சவ்வாது வாசனை திணறடித்தன. அப்படியே சாய்ந்தார்.

மயக்கம் தெளிந்து எழுந்து பார்த்தபோது, இருட்டி விட்டிருந்தது. கோவிலில் எல்லா தீபங்களும் எரிந்தன. முதியவரைக் காணவில்லை. வந்தது கேசவப் பெருமாளே என்று உணர்ந்து கொண்டார். புதிய கற்பனைகள் மனதில் அருவியெனப் பெருக, பக்தி பரவசத்துடன் தங்கு தடையின்றி அருவியெனப் பாடத் தொடங்கினார். கனக தாசர் கேசவரின்

புகழைப் பாடிக் கொண்டே கிராமம் கிராமமாகப் போனார். விஜய நகரத்துக் கருகில் வரும்போது வியாசதீர்த்தரை தரிசித்தார். கனக தாசருக்கு மந்திரோபதேசம் செய்தார் வியாசதீர்த்தர். குருநாதரின் சேவையே பாக்கியமென்று அங்கேயே தங்கிவிட்டார் கனகதாசர். வியாச தீர்த்தரும் கனக தாசரிடம் அதிக அன்பு வைத்திருந்தார்.

"திம்மப்பா வந்ததிலிருந்து குரு நாதருக்கு நாம் ரெண்டாம் பட்சம் தான்" என்றான் ஒரு சீடன். 'அவர் பேர் கனகதாசன்..... பழைய பேரைச் சொல்லிக் கூப்பிடாதே'

"அவனுக்கு அதுக்கான தகுதி கிடையாது; குரு நாதர் எல்லாக் காரியத்துக்கும் அவனையே கூப்பிட்டுக் கூப்பிட்டு அந்தஸ்தை ஏத்தி விட்டுட்டார். பெரிய ஞான சிகாமணி....." இந்த சமயம் ஒரு சீடன் வந்து குருநாதர் அழைப்பதாகக் கூறினான். தோட்டத்திலிருந்து பத்து மாம்பழங்கள் பறித்து வரச் சொன்னார் வியாச தீர்த்தர். பறித்து வந்தார்கள். ஒவ்வொன்றையும் ஒவ்வொரு சிஷ்யனுக்குக் கொடுத்து "இன்று சாயரட்சைக்குள், யாருமில்லாத இடத்தில் இதைச் சாப்பிட வேண்டும்" என்று கூறினார்.

ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு மறைவிடத்தைச் சொல்லி அங்கே சாப்பிட்டதாகச் சொன்னான். கனகதாசர் இருட்டியபிறகு சோகமாக வந்தார். மாம்பழத்தை குரு நாதர் காலடியில் வைத்தார். "கனகதாசா..... நீ ஏன் மாம்பழம் சாப்பிடவில்லை?" என்று அன்புடன் கேட்டார். அது அபூர்வ ருசியுள்ள மாங்கனி.

கனகதாசர் "குருநாதா! உங்கள் கட்டளையை நிறைவேற்ற இயலா தவனாகி விட்டேன். எந்த இடத்திற்குப் போனாலும் பரந்தாமன் குறுஞ் சிரிப்புடன் ஓரக்கண்ணால் பார்ப்பது போலவே இருக்கிறது. இதென்ன சோதனை.....!" என்று காலில் விழுந்தான். வம்பு பேசிய சீடர்கள் வெட்கித் தலைக் குனிந்தனர். வியாச தீர்த்தர் கனகதாசரை கட்டி அணைத்துக் கொண்டார். குருநாதர் ஆணைப்படி பக்திப் பயிர் செழிக்க தீர்த்த யாத்திரை மேற்கொண்டார் தாசர்.

"யசோதை பெற்ற பாக்கியம் நான் பெறவில்லை; நீ சிரித்து தவழ்ந்து விளையாடி, வெண்ணை உண்டு, தயிர் பானையைக் காலால் உதைத்து, உன்னைக் கயிற்றால் கட்டிப்போட்டு, உன்னை மார்போடு சேர்த்த

ணைத்து, உனக்குச் சோறூட்டி, மழலை மொழிக் கேட்டு, மனமகிழ்ந்து, எத்தனை பெரிய பாவியடா நான்”

சலித்து வேதனையுற்ற தேவகியின் எல்லா ஆசைகளும் தீர்ந்தது. பகவான் தாய்மை மனம் கொண்ட பக்தர்களுக்காக அப்படியே நின்ற இடம் தான் உடுப்பி. பிறவி எடுத்தவர் நிச்சயமாக ஒரு தடவையாவது உடுப்பி கிருஷ்ணனை தரிசிக்கவேண்டும். உடுப்பி மண்ணை மிதித்ததும் சின்னஞ்சிறு பாலகனாக கண்ணன் தாயிடம் கதை கேட்டதும், தாயின் வார்த் தைகளும் கனகதாசரின் நெஞ்சில் நிழலாடின. உடுப்பியில் உள்ளே சென்று தரிசிக்கும் உரிமை பொதுமக்களுக்குக் கிடையாது. அத்தனை ஆசார அனுஷ்டானங்கள் மிகுந்த ஆலயம். வாசலில் தடுத்து நிறுத்தப்பட்ட கனகதாசர், பலகணி வழியாக பகவானை தரிசித்தார். உள்ளே அர்ச்சனை நடந்து கொண்டிருந்தது.

கோவிலுக்கு மேற்கே ஒரு குடிசை போட்டுக் கொண்டு தங்கினார். “என்னைப் பார்க்க விருப்பமில்லையா” என்று நெஞ்சுருகப் பாடுவார். தாயிடமிருந்து கற்றுக் கொண்ட பட்சணங்களை செய்து நிவேதிப்பார். ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு பட்சணம். நடுச் சாமத்தில் ‘கண்ணனுக்குப் பசிக்கும்’ என்று பட்சணம் செய்வார்.

ஒரு நாள் இரவு; சன்னதியின் பின்பக்கம் சென்று கிருஷ்ணனின் புகழைக் கேட்போர் மனம் உருகப் பாடத் தொடங்கினார்.

"அன்று கோவர்த்தன கிரியின்கீழ் கோகுலமே நின்றிருந்ததே! சாக பட்சிணி மழை நீருக்கு ஏங்குவது போல் உன் முக தரிசனத்தை காண நான் ஏங்குவதை அறியாயா? யாதவ குலத்தில் பிறந்த நான் அப்போது உன் பக்கத்தில் நின்றிருப்பேன்! உன் இடையில் கிச்சு கிச்சு மூட்டி உன்னை தொந்தரவு செய்திருப்பேன். அதனால் உனக்கு என்மேல் கோபமா? வருத்தமா? நீ காளிங்க நர்த்தனம் ஆடியபோது காளிங்கன் மேல் நான் சினந்து வீசிய கல் உன்மீது பட்டிருக்குமோ? வெண்ணை திருடியது நீதான் என்று யசோதாம்மாவிடம் கோள் மூட்டி இருப்பேனோ? பலராம பட்டாபிஷேகம் முடிந்தவுடன் நீங்கள் பெற்றோரை நமஸ்கரிக்க வந்தபோது கூட்டத்தில் உன்னை நெருக்கித் தள்ளினேனோ? பாகவதம் பண்டிதர் போற்றும் பொக்கிஷம்; அதை சேரிகளில் நாடகமாகப் போட்டு மலிவுப் படுத்தி விட்ட அபசாரமா?" அவ்வளவு தான்! பூமி அதிர்ந்தது. தடதடவென்ற சப்தம்! பலகணியும், சுவரும் இடிந்து விழுந்தன.

கிருஷ்ண விக்ரகம் முகம் திரும்பி கனக தாசரைப் பார்த்து இருந்தது. கனகதாசர் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தார். விம்மி விம்மி அழுதார். "எனக்காகத் திரும்பி நின்றாயா? தடை நீக்கிய தாமோதரா? தேவகியின் விருப்பத்தை நிறைவேற்றியது போல் என் கோரிக்கையையும் ஏற்றுக் கொண்டாயா? திவ்ய தரிசனம் பெற்றேன். இனிப் பிறவியே வேண்டாம். நானே பாக்கியவான்!" எனப் பலவும் கூறி புளகாங்கித முற்றார்.

அர்ச்சகர்களும், பக்தர்களும் கனகதாசர் காலடியில் பணிந்து மன்னிக்கும்படி வேண்டினர். அவர் இவருக்குச் சொல்லி, இவர் அவருக்குச் சொல்லி என்று அந்த இரவு நேரத்தில் உடுப்பி நகரமே அங்கே கூடி ஜேஜே என்றிருந்தது. கனகதாசரும் விடியும் வரை மெய்யுருகப் பாடிக் கொண்டிருந்தார்.

உஷத் கால பூஜைக்கு ஸ்ரீ வாதிராஜ சுவாமிகள் வந்தார். இரவில் கண்ணன் செய்த லீலையைப் பார்த்து ஆச்சரியப்பட்டார். உடைந்த சுவரை அப்படியே விட்டுவிடச் சொன்னார். பலகணியை மட்டும் சீர்திருத்தி 'கனகதாசர் ஜன்னல்' என்று பெயர் சூட்டினார். எட்டு மடாதிபதிகளும் கூட 'ஜன்னல் தரிசனம்' பார்த்த பிறகுதான் உள்ளே

செல்லலாம் என்று நியமப் படுத்தினார். அந்த ஆணை இன்றளவும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

ஒரு நாள் முற்பகல்..... கண்ணனுக்கு அப்பம் செய்து நிவேதனத் துக்குக் கொண்டு வைத்து விட்டு பாடிக் கொண்டிருந்தார் கனகதாசர். அப்போது அந்தக் கூடத்தின் வடக்குச் சுவரிலிருந்து ஒரு கல் விழுந்தது. அதன் வழியே சூடான அரிசிக் கஞ்சி அப்பம் வைத்திருந்த பாத்திரத்துக் கருகில் வந்து தேங்கி நின்றது. (அந்த இடம் தரை சற்று பள்ளம்) வடக்குச் சுவரின் பின்னால் தான் மடத்துச் சமையலறை இருந்தது.

கஞ்சியை தேங்காய் சிரட்டையில் ஏந்தினார் கனகதாசர். கண்ண னுக்கு நிவேதித்தார். 'குலம், கோத்திரம், ஆசாரம், அனுஷ்டானம்' என்று வேலிகளிட்டுக் கொண்டிருந்த ஸ்ரீ வாதிராஜஸ்வாமிகளுக்கு இச்செய்தி எட்டியது. கோவில் நிர்வாகிகளையும், எட்டு மடாதிபதிகளையும அழைத்தார்.

'குலமும், அந்தஸ்தும், சம்பத்தும் கண்ணனுக்கு முக்கியமல்ல என்று நிரூபித்து விட்டான். அடியார்க்கு எளியான் அவன். பக்திக்குக் கட்டுப் பட்டவன். சரணாகதிக்குச் செவி சாய்ப்பவன். அவன் கருணைக்கு அளவு கோல் ஏது? இன்றிலிருந்து நிவேதன சம்பிரதாயங்களை மாற்றிவிடலாம். அப்பமும். நொய் கஞ்சியும் நிச்சயம் நிவேதிக்க வேண்டும்" என்று உத்தரவிட்டார்.

இன்றும் தங்க கொட்டாங்கச்சியில் நொய்க் கஞ்சியும், அப்பமும் உடுப்பிஸ்ரீ கிருஷ்ணருக்கு நிவேதனம் செய்யப்படுகிறது. கனகதாசர் கேசவனின் புகழை கர்நாடகம் முழுவதும் பாடிப் பரப்பினார். அவருடைய கீர்த்தனைகளுக்கு 'ஹரிபக்த சாரா' என்றும் 'மோகன தாரங்கா' என்றும் பெயர். கனகதாசரின் கீர்த்தனைகள், இலக்கிய முக்கியத்துவம் பெற்றதாகத் திகழ்கின்றன. அவரது கீர்த்தனையை இசைக்காத சத்சங்கங்களே கிடையாது. கனகதாசர் நூறு வருஷங்கள் வாழ்ந்து இசையின் மூலம் பக்தியைப் பரப்பினார்.

அவரது இறுதிக் காலத்தில் அவர் 'கனகிளே'க்கு வந்து கேசவரை அனுதினமும் வழிபட்டு வந்தார். கடைசியில் திருப்பதி சென்று வெங்கடேஸ்வரனைத் தரிசித்து, "என்னைப் பிறப்பிக்க வைத்தாய். நீ இட்ட பணியை என்னால் இயன்ற மட்டும் செய்விக்கச் செய்தாய். என்

ஜீவ யாத்திரையும் இங்கேயே முடியவேண்டும்.'' என்று பிரார்த்தித்தார். அவர் வேண்டுகோளின்படி அவரது இறுதிப்பயணம் அங்கேயே முடிந்தது. நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மகான். அவரது உண்மை யான பக்திக்கு அடையாளம் உடுப்பி கோவில். அவரது சமாதியை பல்லா யிரக்கணக்கான மக்கள் ஆண்டு முழுவதும் தரிசனம் செய்து கீர்த்தனை அஞ்சலி செய்கிறார்கள்.

இந்த சரித்திரத்தை பக்தியுடன் படிப்பவரும், கேட்பவரும் எல்லா நலன்களும் பெற்று தீர்க்காயுளுடன் சாதனைகள் நிகழ்த்தி சரித்திரத்தில் இடம் பெறுவார்கள் என்பது சத்தியம்.

89. ஸ்ரீ சைதன்ய மஹாப்பிரபு

நாடியாவில் மாயாபூர் என்னும் கிராமத்தில் 1486–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18–ம் தேதி சூரிய அஸ்தமனமான சிறிது நேரத்தில் ஜகந்நாத மிஸ்ராவுக்கும், சசி தேவிக்கும் ஒரு ஆண்குழந்தை பிறந்தது.

தாய்க்கு நிரம்ப வியர்த்ததால் ஒரு வேப்பமரத்தடிக்கு கூட்டிக் கொண்டு வந்து விட்டனர். குழந்தை அழகில் கண்ணனையும், நிறத்தில் பொன்னையும் கொண்டிருந்தது. வேப்பமரத்தடியில் பிறந்ததால் 'நிமாய்' என்றும், தங்கமயமான உடலைக்கண்டு 'கௌர் ஹரி' என்றும் பெயர் சூட்டப்பட்டது.

சசி தேவியின் தந்தை பண்டிட் நீலாம்பர் சக்கரவர்த்தி புகழ் பெற்ற ஜோதிடர். சரித்திரத்தில் இடம் பெறும் மகானாக விளங்குவான் என்று பேரன் ஜாதகத்தைக் கணித்துச் சொன்னார். அவர் 'விஷ்வம்பர்' என்ற பெயரைச் சூட்டினார்.

குழந்தை ஒரு நாள் விடாமல் அழுதது. அழுகையை நிறுத்த எவர் எவரோ வந்து என்னென்னமோ செய்து பார்த்தனர். ஊஹூம்.... ஒரு பலனுமில்லை. 'ஹரி போல், ஹரி போல்'' என்று ஒரு பெண் கைதட்டிப் பாட, குழந்தை அழுகையை நிறுத்தி அப்பெண்ணைத் திரும்பிப்

பார்த்தது. அவ்வளவு தான்! எல்லாப் பெண்களும், சசி தேவியும் சேர்ந்து பஜனை செய்தனர்.

மற்றொரு நாள் களிமண்ணைத் தின்று கொண்டிருந்தான் குழந்தை நிமாய். சசி ஓடிவந்தாள்.

" ஏன் களிமண்ணைத் தின்கிறாய்?" என்று அதட்டினாள்.

"நீ தரும் இனிப்புக்கும், களிமண்ணுக்கும் வித்தியாசமே இல்லை" என்றான் நிமாய். சசிதேவி எழுந்து போய் ஒரு செங்கல்லையும், ஒரு மண் கூஜாவையும் கொண்டு வந்தாள்.

"இந்த செங்கல் தயாரிக்கவும் களிமண் தேவைப்படுகிறது. இந்த கூஜா செய்யவும் மண் தேவைப்படுகிறது. இரண்டும் ஒன்றாக முடியுமா? பல செங்கற்கள் சேர்ந்தால் தான் ஒரு சுவர் எழுப்பமுடியும். ஆனால் இந்த கூஜா தனியாகவே இவ்வளவு நீரை சேமித்து வைத்துக் கொள்கிறது. களிமண்ணின் ருசியும் இனிப்பில் இருக்கும். அந்தக் களிமண்ணில்தான் கரும்பு விளைகிறது.கரும்பிலிருந்து இனிப்புக் கிடைக்கிறது. மண்ணி லிருந்து தான் கோதுமை விளைகிறது. இரண்டையும் சேர்த்து இனிப்பு செய்கிறேன் அது உடம்புக்குக் கெடுதல் இல்லை.கூஜா தண்ணீர் போல நேராக சாப்பிடலாம். வெறும் செங்கல் கட்டடமாகாது. நிற்காது. இடிந்து விழுந்து காயப் படுத்தும்" சசி தேவி குழந்தைதானே என்று அலட்சி யமாக இராமல் தனக்குத் தெரிந்த முறையில் விளக்கம் சொன்னாள்.

நிமாய் என்ன புரிந்து கொண்டானோ, ஆனால் அன்று முதல் களிமண் சாப்பிடுவதை விட்டு விட்டான்.

நிமாய்க்கு குறும்புத்தனம் அதிகம். ஒருமுறை அவர் வீட்டிற்கு வந்த விருந்தாளி (பிறர் சமைப்பதை சாப்பிடாதவர்) தானே சமைத்து இலையில் பரிமாறிக் கொண்டு கண்மூடி கண்ணனைத் தியானித்தார். கண்ணைத் திறந்து பார்த்தால்.....? நிமாய் பருப்பு சாதம் பிசைந்து "மாமா, கூட்டு ரொம்ப நன்னாயிருக்கு" என்றபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

அப்போது ஜகந்நாத மிஸ்ரா அங்கே வந்தார். "அடாடா! நிமாய்.... என்ன இப்படி பண்ணி விட்டாய்! மாமா எத்தனைபெரிய மகான்! எச்சில் சோற்றை சாப்பிடுவாரா? வரவர உன் துஷ்டத்தனம் தாங்க முடிய வில்லை" என்று சொல்லிக்கொண்டே அடிக்கக் கையை ஓங்க, அதிதி தடுத்தார்.

"குழந்தையை நான் ஸ்ரீ கிருஷ்ணனாகவே பார்க்கிறேன். குழந்தையை அடித்து என்னை அவமானபடுத்தாதீர்கள்" என்றார் கண்கள் கலங்க.

"அப்படியானால் மறுபடி சமைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் பட்டினி கிடந்தால் என் மனது சங்கடப்படும்" என்று ஜகந்நாத மிஸ்ரா கூற, சமைத்தவைகளை ஒதுக்கி அடுப்பை சுத்தம் செய்து மீண்டும் சமைத்தார். விருந்தாளி. கிருஷ்ண விக்ரகத்தின் முன் கொண்டு வைத்து நிவேதனம் செய்ய நீர் எடுத்து வருமுன், "ஹை, கத்திரிக்காய் கறி" என்றபடி பொரியலை வாயில் போட்டுக் கொண்டுவிட்டார் நிமாய்.

மூன்றாம் முறை அதிதி சமைத்துக் கொண்டிருக்கும் போது வீட்டி லுள்ள அனைவரும் உறங்கி விட்டனர். இம்முறை முதலில் நீரை எடுத்து வைத்துக் கொண்டு நிவேதனத்தைக் கொண்டு வந்தார். இடுப்பிலே இரண்டு கைகளையும் வைத்துக் கொண்டு குறும்புப் புன்னகை புரிந்து கொண்டிருந்தவன் நிமாயல்ல..... நந்தகுமாரன்.

"நான் நிவேதனத்தை சாப்பிட்டால் நீ மறுபடியும் சமைப்பாய்" என்ற அமுதமொழிகள் கேட்டதும் அந்த முதிய பக்தர் மயங்கிச் சாய்ந்து விட்டார்.

ஒரு சமயம் இரண்டு திருடர்கள் நிமாயை நகைகளுக்காக தூங்கும் போது தூக்கிச் சென்றனர். இனிப்புப் பொருள்களைக் கொடுத்து விட்டு காது குண்டலங்களைக் கழற்ற கைவைத்தால் அங்கே குண்டலங்கள் இல்லை. "நீ கழற்றி விட்டாயா?" அவன் மற்றவனைக் கேட்டான். "இல்லையே" என்றபடி கங்கணத்தை அவிழ்க்கப் போனவன், மூளிக் கையாய் இருப்பதைப் பார்த்து "கங்கணங்களை எங்கே வைத்தி ருக்கிறாய்" ன்றான் இவன்.

"கொலுசை ஒளித்த இடத்தைச் சொல்" என்ற மற்றவன், "அதோபார் குண்டலங்கள்" என்று கூவினான். ஆம்.... அவர்கள் கழற்ற கை வைத்தால் மறைகிறது. மாயாவியாயிருப்பானோ என்ற கோபத்தில் அடித்தான் ஒருவன். காற்றிலே கை வீசிற்று. இது ஏதோ பேய், பிசாசு என்று ஓடியே போய்விட்டனர். நிமாய் சப்தமிடாமல் வீட்டிற்கு வந்து படுத்துக் கொண்டான்.

"என்னடா நிமாய், அந்தப் பானைக் குவியலில் உட்கார்ந்துக் கொண்டிருக்கிறாய்? அம்மா பார்த்தால் அசிங்கம் என்று திட்டுவாங்க" என்றான் ஜகதீசன்.

"சரண்யா, நீ எத்தனை காசு சேர்த்து வைச்சிருக்கே? பெருமாளுக்கு ஏகாதசியன்னிக்கு பூஜை பண்ணி ஏதாவது நைவேத்தியம் செய்யலா மென்று நினைக்கிறேன். அதுக்கு மிட்டாய் வாங்கணும். மூணு பேரும் உண்டியலை உடைப்போமா?" நிமாய் ஆர்வமாய் கேட்டான். சரண்யா தலையாட்டினாள். அந்த நாளில் திருவிழாவில் குழந்தைகளுக்கு மண் உண்டியல் வாங்கித் தருவார்கள். விருந்தாளிகள் அன்பாகத் தரும் காசுகளை அவற்றில் போட்டு சேமித்து வருவார்கள் குழந்தைகள். சேமிக்கும் பழக்கம் பால்யத்திலேயே வரும்.

மூன்று பேர் உண்டியலும் உடைக்கப்பட்டன.

செடியில் இருந்து இலைகள், பூக்கள் பறிக்கப்பட்டு கண்ணனுக்கு மூவரும் பூஜை செய்தனர். மிட்டாய் வாலாவிடமிருந்து மிட்டாய் வாங்கி (கடிகாரம், தேள், பாம்பு இப்படி விதவிதமாக) நிவேதனம் செய்தார்கள்.

"மூணு பேரும் என்ன பண்ணுகிறீர்கள் இங்கே" என்றபடி வந்த சசி தேவி சிரித்தாள்.

"பகவான் புனிதமானவர்; இதையெல்லாமா அர்ச்சனை செய்வது? இதையெல்லாமா நிவேதிப்பது" என்று செல்லமாகக் கடிந்துக் கொண்டாள்.

நிமாய் பூஜையறைக்கு ஓடிப்போய் துளசியை எடுத்து வந்தான்.

"இது என்னம்மா?"

'துளசி'

"இதற்கு யாரம்மா இந்தப் பெயர் வைத்தது? நீங்க பெரியவங்க மட்டும் இந்த இலையாலே கண்ணனைப் பூஜை பண்ணலாமா? நாங்க போட்டி ருக்கிற இலைக்குப் பேரும் துளசிதான். அன்னிக்கு அப்பா பக்தி தான் முக்கியம்; பத்ரம் முக்கியமில்லேன்னாரே! அது எங்களுக்கும் சேர்த்து தானே!

"நேத்திக்கு பாயசம் பண்ணினியே.....அந்த அரிசி மிச்சத்துலே இருந்துதான் இன்னிக்குச் சர்க்கரைப் பொங்கல் பண்ணியிருக்கே? உப்பு கரிக்குதான்னு வாயிலே போட்டு பார்த்துதானே வெல்லம் வாங்கினே? அப்போ சேஷம் ஆகாதா? ஒருகுலை பழத்துலே ஒரு சீப்பு தானே

நிவேதனம் பண்றே! அப்புறம் நாம் சாப்பிடறோம். மறுநாள் இன்னொரு சீப்பு நிவேதனம் பண்ணினா புனிதம் கெடாதா? ஒரு மரத்துப் பழங்களையோ, ஒரு நிலத்து தானியங்களையோ மொத்தமாக பகவானுக்கு நிவேதனம் பண்றோமா?"

'நான்கு வயது குழந்தை பேசுகிற பேச்சா இது', என்று வாய்பிளந்து நின்றாள் சசிதேவி.

ஐந்து வயதில் பள்ளியில் சேர்க்கப்பட்ட நிமாய் வெகு சீக்கிரம் வங்காள மொழியைக் கற்றுக் கொண்டார். பத்து வயதிற்குள் பண்டித ரகுநாத சிரோமணியிடம் சமஸ்கிருதத்தையும் இலக்கண சுத்தமாக படித்தார். தந்தை சேகரித்து வைத்திருந்த புத்தகங்களையும் படித்து அறிவைப் பெருக்கிக்கொண்டார். ஆனால் அதற்கு முன் சசி பட்டபாடு! கண்ண னைப் பற்றி யசோதையிடம் கோபியர்கள் புகார் செய்ததுபோல் சசியிடம் நிமாயைப்பற்றி தினம் குற்றப் பத்திரிக்கை படிப்பார்கள். அடிப்பேன், உதைப்பேன், கட்டி வைப்பேன் என்று மிரட்டுவதோடு சரி. நிமாயின் முகத்தைப் பார்த்த பின்பு எதுவும் செய்ய மனம் வராது. பள்ளியிலும் இவன் தலையைப் பிடித்து இழுத்தான்; அவனது ஏட்டுச் சுவடியைக் கிழித்தான் என்று ஏகப் புகார்கள். நிமாயின் பாலபருவத்தில் ஒருநாள் போவது ஒரு யுகமாக இருந்தது.

"நிமாய்.....வருகிறான். பட்சணத்தை மூடி வை" என்று பரபரப்பார்கள் பெண்கள். தூங்குபவர் முகத்திலெல்லாம் நாமம் போட்டு, மீசை எழுதி பிறர் நகைக்க காட்சி அளிப்பார்கள்.

அடிக்கப்போனால் "மனித ஆயுள் எப்போ முடியுமென்று சொல்ல முடியுமா? இப்படித் தூங்கிக் கழிக்கலாமா? ஹரி நாமா சொல்லுங்கள். சண்டை போட தொண்டை இல்லையா? வாய்க்கு பூட்டா போட்டிருக் கிறது? காசு கொடுத்திருக்கிறோம் என்று கண் சிமிட்டாமல் நாடகம் பார்க்கிறீர்களே? இங்கே விலையாகக் கொடுத்திருப்பது ஆயுளை" என்பான். இதெல்லாம் ஐந்து வயது முடியும்வரைதான்.

படிக்கத் தொடங்கியபிறகு குறும்புகள் கொஞ்சம் கொஞ்சமாய் குறைந்தன. தமையன் விஸ்வரூபன் துறவியானதும் நிமாயின் துஷ்டத் தனங்கள் மறைந்தே போயின.

"தலைப்பிள்ளை இப்படி காவியோடு வந்து நிற்கிறாயே" தந்தை பதறினார்.

"அப்பா..... பந்தபாசங்களைக் காட்டி என்னை சிறைப் படுத்தாதீர்கள். தம்பி நிமாய் குடும்பத்தை கவனித்துக் கொள்வான்" என்று பொறுப்பை நிமாயின் மேல் சுமத்தி விட்டான் விஸ்வரூபன். அப்போது நிமாய்க்கு ஏழுவயது. ஜகந்நாத மிஸ்ரா மயங்கி விழுந்தார். விஸ்வரூபன் திரும்பிப் பாராமல் சென்று விட்டான்.

"அப்பா, அம்மா..... கவலைப் படாதீர்கள். நான் உங்கள் அனுமதி இன்றி எதுவும் செய்யமாட்டேன். உங்கள் விருப்பப்படி திருமணம் செய்து கொள்வேன். இனி எங்கேயும் எவரும் புகார் சொல்லும்படி நடந்து கொள்ள மாட்டேன். பெற்றோரை தளர்ந்த பருவத்தில் சேவை செய்து அன்புடன் பேணுவது சுவர்க்க வாசத்திற்கும் மேலானது. உங்களை அனாதரவாய் தவிக்கவிட்டால் பகவான் கோபத்துக்கு நான் ஆளாவேன்" என அன்புடன் ஆறுதல் சொன்னார் நிமாய். அதுபோலவே நடந்து கொண்டு நல்ல பிள்ளை, வித்யா மேதை என்று பெயர் பெற்றான்.

'கௌரங்கா' என்ற சிறப்புப் பட்டமும் பெற்றான்.

நவதீபம் கல்விக் கூடங்களும், பாடசாலைகளும் நிரம்பிய ஊர். ஒவ்வொரு மொழியையும் கற்பிக்க தனிதனி விற்பன்னர்கள் இருந்தனர். காஷ்மீரிலிருந்து தீர்த்த யாத்திரையாக அங்கு வந்தவர் கேசவ பண்டிதர். அவர் தர்க்க வியாகரண வாதம் செய்து எல்லா ஊர்களிலும் வெற்றிக் கொடிநாட்டி வந்தார். கௌரங்காவிடம் அவரது கர்வத்தை அடக்க வேண்டு மென்று பல பண்டிதர்கள் வேண்டிக் கொண்டனர்.

"நான் வயதில் சிறியவன். அவர் பெரிய பண்டிதர். அவரை நான் வாதம் செய்ய அழைப்பது அகம்பாவமல்லவா?" என்று கௌரங்கா தயங்க, "ஆஞ்சனேயரைப் போல் உங்கள் பலம் உங்களுக்குத் தெரியவில்லை! சொற்போரிடுவதே அவர் பொழுதுபோக்கு. தன்னை ஜெயிக்க ஆளில்லை என மமதையுடன் இருக்கிறார். மேலும் சின்னப் பையன் நிமாய்..... ஏட்டுச் சுவடியை மனப்பாடம் செய்து விட்டவனெல்லாம் பண்டிதனாக முடியுமா? கொண்டாடிக் கொண்டாடி எல்லோருமாக கோபுரத்தில் ஏற்றி விட்டார்கள்" என்று உங்களைப் பற்றி இகழ்ச்சியாகப் பேசுகிறார். நீங்கள் தயங்கினால் அவரை வெற்றி கொள்ள ஆள்

கிடையாது.”என பண்டிதர்கள் எடுத்துரைக்க, கௌரங்காவும், கேசவ மிஸ்ராவும் கங்கைக் கரையில் எதிர் கொண்டனர்.

கங்கையைப் பற்றி பத்து ஸ்லோகங்கள் பாடினர் இருவரும். கேசவ மிஸ்ராவின் ஸ்லோகங்களில் பத்து இலக்கணப் பிழைகளையும், பத்து கருத்துப் பிழைகளையும் எடுத்துச் சொன்னார் கௌரங்கர். ஆனால் ஒரு பிழையைக் கூட கௌரங்காவின் ஸ்லோகங்களில் கேசவ மிஸ்ராவால் கண்டு பிடிக்க முடியவில்லை. கூடியிருந்த மக்களின் கரகோஷம் தெருவின் போக்குவரத்தை ஸ்தம்பிக்கச் செய்தது. “குரு, மீன், தண்ணீர், கஞ்சன், செல்வம், தாய், சிஷ்யன், மகன் இவைகளை இணைத்து ஒரு அறிவுரை சொல்ல வேண்டும்.” கேசவ மிஸ்ரா தலை குனிந்தார். “மீனுக்கு தண்ணீர் உயிர் நாடி; கஞ்சனுக்கு செல்வமே ஜீவன்; தாயின் பிரியம் மகன் மீது; நல்ல சீடனின் இலக்கணம் குருபக்தி” கௌரங்காவே விடை சொன்னார்.

அங்கே ஊசி விழுந்தால் கேட்கும் நிசப்தம்; எல்லோரும் காதுகளை கூர்மையாக்கிக் கொண்டிருந்தனர்.

“பூக்களில் வாசனையும், பாலிலே நெய்யும், சிக்கிமுக்கிக் கல்லில் அக்னியும், மான் வயிற்றில் கஸ்தூரியும், எள்ளுக்குள் எண்ணையும் வாய்க்குள் பகவானின் நாம சங்கீர்த்தனமும் மறைந்து இருக்கிறது. வெளிப்பட்டால் அந்தந்த மூலப் பொருள் பெருமை பெறுகிறது” கௌரங்காவின் தெளிந்த பதில், கூடியிருந்தவர்களை ‘ஆஹா’ காரம் போட வைத்தது.

“நெருப்புக்கோழி, கடல்நீர்,வெள்ளைத் துணி, ஒட்டகம், சிற்றெறும்பு, தயிர்த்துளி இவைகளோடு மனித மனத்தையும், பக்தியையும் இணைக்க வேண்டும்.”

மிஸ்ரா மௌனம் சாதிக்க, கம்பீரமான குரலில் விளக்கம் சொன்னார் கௌரங்கா. “நாக்கும், அலகும் புண்ணானபோதிலும் அனல் கட்டிகளை விரும்பித்தின்னும் நெருப்புக் கோழியைப் போல, சிற்றின்பத்தால் துன்பமே ஏற்படும் என்று தெரிந்தும், மனிதன் திரும்பத்திரும்ப அதையே விரும்பு கிறான்.

கடல் நீரிலிருந்து எத்தனை உப்பை எடுத்தபோதிலும் கடல் நீர் இனிப்பதில்லை. இல்லறத்திற்காக எத்தனை திறமையைச் செலவழித்த

போதிலும், எத்தனை சம்பாதித்துப் போட்ட போதிலும் சரித்திரத்தில் இடம் பெறமுடியாது.

வெள்ளைத் துணியில் எந்தச்சாயம் ஏற்றினாலும் 'கப்' பென்று பிடித்துக் கொள்ளும். சுயநலம், பொறாமை, காமம்,குரோதம், மதவெறி போன்ற சாயங்கள் உள்ள மனத் துணியில் பக்தி வர்ணம் தோய்க்க முடியாது. ஒட்டகம் முட்செடிகளை விரும்பி உண்ணும். முட்கள் நாவைக் கிழித்து இரத்தம் வரும். தன் இரத்தத்தையே ருசித்து உண்ணும் குணம் கொண்டது ஒட்டகம்.

சம்சாரத்தில் மனிதனை ஏகப்பட்ட முட்கள் கிழித்து இரத்த சேதம் ஏற்படுத்துகிறது. முதுமையிலும் பந்தபாசமெனும் இரத்தத்தை சுவைத்து உண்கிறான் அறியாமை கொண்ட மனிதன்.

துளி உணவையும் எவரும் தகவல் கொடுக்காமலேயே விரைந்து வந்து சூழ்ந்து கொள்கின்றன சிற்றெறும்புகள். துளி நாழிகைகளையும் வீணாக்காமல் பகவான் நாமாவை ஜபிக்க நேரத்தை ஒதுக்க வேண்டும்; கடமையைச் செய்ய வேண்டும். ஒரு பானை பாலாயிருந்தாலும்ஒரு துளி தயிர் அத்தனையையும் தயிராக்கி விடும். எத்தனை நல்ல மனதையும் நியாயமற்ற ஆசைகளின் துளிகள் கெடுத்து விடும். கொஞ்சம் கொஞ்ச மாக தயிராகுமே தவிர இனிப்பு செய்யப் பயன்படும் கோவா ஆகாது. பக்தி என்ற பானைப் பாலிலும் ஆசை என்ற தயிர் துளி விழாமல் எச்சரிக்கை யாயிருக்க வேண்டும்."

கேசவ மிஸ்ரா பிரமித்துப் போனார். 'சின்ன வைரக்கல் இந்தச் சிறுவன். கூழாங்கல் எத்தனை பெரியதாயினும் ஜ்வலிக்கும் ஒளி வீசுமா? வயதாகி, தலை நரைத்தால் போதுமா? ஏட்டுச் சுரைக்காய் கூட்டுக்காகுமா?' இப்படி எண்ணியவர் தோல்வியை ஒப்புக் கொண்டு, கௌரங்காவை மனமாரப் பாரட்டி விட்டு காஷ்மீருக்குப் போய் விட்டார்.

கணவர் இறந்ததும் சசிதேவி துக்க சாகரத்தில் மூழ்கினார். தாயை சமாதானப் படுத்த வல்லபாச்சார்யாவின் மகள் லக்ஷ்மி தேவியைத் திருமணம் செய்துக் கொண்டார். வீணையும், நாதமுமாக வாழ்ந்தனர் தம்பதிகள்.

கிழக்கு வங்காளத்தில் ஒரு பாடசாலை அமைத்து மாணவர்களுக்கு பாடம் போதித்தார். அடிக்கடி சொற்பொழிவுகள் நடத்த வெளியூரும்

செல்வார். போதுமான பொருள் வளம். பாசமான தாயார். அன்பான, அழகான, ஒற்றுமையான மனைவி! விதி யாரை விட்டது?

லக்ஷ்மி தேவி நச்சரவம் தீண்டி இறந்துவிட்டாள். சசி தேவி அடைந்த துயரம் கொஞ்ச நஞ்சமல்ல! "அம்மா, ஒரு தம்பதிகளுக்கு நெடுங்காலமாய் குழந்தையில்லை! கணவர் என்னைப்போல் ஒரு ஆசிரியர்.

யமனுடைய பிள்ளை இவரிடம் கல்வி கற்று வந்தான். படிப்பு முடிந்தது. யமன் மகன் குருவிடம் "ஐயா, குரு தட்சணையாக தங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான்.

குரு தேவருக்கு நெடு நாட்களாக யமலோகத்தைச் சுற்றிப்பார்க்க ஆசை. விருப்பத்தை மாணவரிடம் தெரிவித்தார். அவன் தந்தையிடம் அனுமதிக் கேட்டு வரச் சென்றான். ஆசிரியரின் விருப்பத்தைக் கேட்ட யமன், "மகனே 86–ம் எண்ணுள்ள அறையை மட்டும் திறந்துக் காட்டாதே! குரு வருத்தம் உனக்கு வேண்டாம்; அழைத்து வந்து காட்டு" என்றார். சீடன் வந்து அழைத்ததும், குரு மகிழ்ச்சியோடு புறப்பட்டார்.



"எப்படி உடம்போடவேயா?" சோகம் மறைந்து கேட்டாள் சசி தேவி. உற்சாகமாகக் கதையைத் தொடர்ந்தார் கௌரங்கா.

"உடலோடு போக முடியுமா? குருவை ஒரு மறைவான இடத்துலே தூங்க வைத்து அரூபமாகத்தான் அழைத்துக் கொண்டு போனார். வரிசையாகக் காண்பித்து விளக்கம் சொல்லிக்கொண்டே வந்தான் சீடன். 85–ம் அறை பார்த்துவிட்டு 87–ம் அறைக்குப் போகும் போது, 'இது பார்க்கவில்லையே' என்று 86–ம் அறையைச் சுட்டிக் காட்டினார் ஆசிரியர். 'அதைத் திறக்கக்கூடாதுன்னு அப்பா சொல்லியிருக்கார்' என்று பதில் சொல்லி விட்டு மேலே நடந்தான் மாணவன். குரு பேசாமல் பார்த்துக் கொண்டு வந்தார். ஆயிற்று. எல்லா இடங்களும் பார்த்தாகி விட்டது.

"குருவே! திருப்தி தானா? புறப்படலாமா?" என்று கேட்டான் மாணவன். குருநாதர் முகத்தை தொங்க விட்டபடி "நீ யம லோகத்தையே காட்ட முடியாது என்று சொல்லி இருந்தால் கூட இத்தனை வருத்தம் வந்திருக்காது. ஆனால் 86–ம் அறையைப் பார்க்காமல் போவது எனக்கு திருப்தியில்லை. எதை மறைக்கிறோமோ அதன் மேல் ஆர்வம் அதிகமாகும் என்பது உனக்குத் தெரியாதா?" என்றார்.

குரு சாபமிட்டு விடுவாரோ என்று சீடன் அஞ்சினான். குருவை மறுபடி அழைத்துச் சென்றான். பெரிய கொத்து சாவியிலிருந்து 86 எண் போட்ட சாவியால் பூட்டைத்திறந்தான்.

உள்ளே ஒரே இருள். ஆசிரியர் உள்ளே நுழைந்தார். 'இந்த அறையில் அப்படியென்ன ரகசியம்' என்று கண்களை குறுக்கிக் கொண்டு பார்த்தார். அதற்குள் கன்னங்கரேலென்ற ஒருவன். ஆசிரியரின் பின்பக்கமாக வந்து கழுத்தில் துண்டைப் போட்டு முறுக்கினான். ஆசிரியரின் விழிகள் பிதுங்கின.

"அடேய், எண்ணை வாங்கி தின்று விட்டு ஏப்பம் விட்டவனே! ஆறு படி எண்ணைக்கான காசை கீழே வைத்து விட்டு மறுவேலை பார். எண்ணை கொடுத்தவன் இறந்து விட்டால் வாரிசுதாரர்களிடம் பணம்கொடுக்க வேண்டாமா? உன்னை விட்டேனா பார்" என்று உறுமினான்.

எண்ணை வாணியன் துண்டைப் போட்டு முறுக்கியதுமே சீடன் ஓடிப்போய் தந்தையிடம் சேதி சொன்னான். யமன் வருத்தத்துடன் "மகனே, எத்தனை எச்சரித்தும் இப்படி செய்து விட்டாயே" என்றபடி விரைந்து வந்தான். எண்ணை வாணியன் பிடியிலிருந்து ஆசிரியரை விடுவித்தான். "இதோ பார்..... அவரது ஆயுள் முடியவில்லை.... நீ என்ன முறுக்கினாலும் அவரால் இங்கே பணம் தரவும் முடியாது. அவரது காலம் முடிந்து இங்கு வந்த பின் வழக்கைத் தீர்த்து வைக்கலாம் என்றிருந்தேன். ஆர்வக் கோளாறு அவஸ்தையைத் தேடிக் கொண்டார். நீ அவருக்கு மகனாகப் போய் பிறந்து எண்ணையாகவே வசூல் செய்து கொள்" என்று தீர்ப்பளித்தான் யமன்.

"எண்ணை மட்டும் வசூலாகாதே! பிள்ளை பேற்றுச் செலவு, பால் செலவு, மருந்துச் செலவு என்று கடனாகுமே!" என்றான் எண்ணை வணிகன். "அதற்கென்ன செய்வது? அது பிறவிகளின் பந்தக்கடன். சங்கிலி போல் தொடர்ந்து வந்து கொண்டே தான் இருக்கும். எல்லாவற்றிற்கும் ஒரு கணக்கு போட்டு சித்ர குப்தன் எழுதிக் கொள்வான். அதனால் தான் எவருக்கும், அள்ளித் தரலாம்; அளந்து கொடுத்தால் கடன். வாங்கிய கடனை திருப்பித் தராதவர்கள் பந்தபாச வலைகளில் சிக்குகிறார்கள்" என்று யமன் சொல்ல, ஆசிரியர் "தர்மராஜா! இவன் எனக்கு மகனா? வேண்டாம்.... பணத்தை வாரிசுகளைத் தேடிக் கொடுத்து விடுகிறேன்" என்றார்.

யமன் சிரித்தான்.

'ஒவ்வொரு நாளைக்கும் இங்கே வட்டி உண்டு.... பணமாக அல்ல... பிரச்சினைகளாக..... அதை அனுபவித்துத்தான் தீர்க்க வேண்டும். அறிந்து பாவம் செய்தவன் அழுந்தி அனுபவிக்க வேண்டும்" என்பது விதி. பிடிவாதமாக பூட்டைத் திறக்கச் சொன்னதற்கு உங்களுக்கு ஒரு தண்டனை! இங்கே நடந்ததெல்லாம் உங்களுக்கு ஞாபகம் இருக்கும். ஆனால் வெளியே சொல்லக் கூடாது."

'சொன்னால்....?" என்று ஆசிரியர்கேட்க,

'சொன்ன அக்கணமே உங்கள் உயிர் பிரிந்து விடும்" என்றான் யமன்.

ஆசிரியரின் ஆத்மா பூலோகம் வந்து கூட்டில் புகுந்து கொண்டது. இரண்டு மாதத்தில் அவர் மனைவி கருவுற்றிருப்பது தெரிந்தது.

அவளுக்கு அடக்கமுடியாத மகிழ்ச்சி. உற்றார், ஊரார் எல்லோரும் அவளைப் பெருமைப் படுத்த, ஆசிரியர் வெறுப்பாய் நாட்களைக் கடத்தினார்.

"இதென்ன ஆச்சரியமாயிருக்கிறது! இத்தனை காலம் கழித்து என்மகள் கருவுற்றிருக்கிறாள். வளைக்காப்பு, சீமந்தம் எதுவும் வேண்டா மென்கிறீர்களே?" என்று மனைவியின் பெற்றோர் சீறினர்.

ஆசிரியரின் மனைவி அழகி; குணவதி. கணவன் மேல் அபார பிரியம் உள்ளவள். அவள் துன்பப்பட ஆசிரியர் மனம் தாங்காது. கடன் தீர்ந்து குழந்தை இறந்து விட்டால் மனைவியும் உயிர் துறப்பாளே எனப் பயந்தார்.

'வளைகாப்பு, சீமந்தமெல்லாம் குழந்தை நன்றாகப் பிறக்கத்தானே செய்யப்படுகிறது! அதை சித்ரகுப்தன் கணக்கில் எழுதுவானா, மாட்டானா' என்று குழம்பினார். குழந்தை பிறந்தது. புண்யாகவசனம், தொட்டில் எல்லாம் அமர்க்களமாய் நடந்தன. குழந்தையின் வடிவில் எண்ணை வாணியனையே பார்த்தார் ஆசிரியர்.

எண்ணை தேய்த்துக் குளிப்பாட்டும் போது பக்கத்தில் வந்து நின்று கொள்வார். "வாசவி..... இவ்வளவு எண்ணை வேண்டுமா? ஏன் வாரத்தில் மூன்று நாட்கள் எண்ணைத் தேய்க்கிறாய்?" என்றெல்லாம் தொணதொணத்தார்.

"அடடா! என்ன இப்படி மாறி விட்டீர்கள்? உங்களுக்குப் பாசமே இல்லையா? குழந்தைக்கு திருஷ்டி படும். தள்ளிப் போங்கள்.... செலவு, செலவு என்று இம்மிக் கணக்கு பார்ப்பார்களா? எத்தனை தவமிருந்து பெற்ற குழந்தை! எத்தனை முறை அரசு சுற்றி, நாக பிரதிஷ்டை பண்ணி, நோன்பு நோற்று....."

அவள் முடிப்பதற்குள் அவர் போய் விட்டார். குழந்தையின் சிரிப்பு அவரைக் கேலி செய்வது போல் எரிச்சலை மூட்டியது. உறவினர் குழாம் அவரைக் கருமி எனப் பெயர் சூட்டியது.

குழந்தைக்கு ஒரு வயதாகியது. மகனின் தளர் நடையையும், மழலையையும் கேட்டு மனமகிழ்ந்தாள் அவர் மனைவி. ஆசிரியருக்கு இரவில் உறக்கமில்லை; மனதில் நிம்மதியில்லை. கணக்குப் போட்டு,

கணக்குப் போட்டு புழுங்கிக் கொண்டிருந்தார். மூளையின் இரைச்சல் தாங்கவில்லை.

ஒரு நாள் பொறுக்க முடியவில்லை. அவர் மனைவி குழந்தைக்கு எண்ணை ஸ்நானம் செய்வித்துக் கொண்டிருந்தாள். பக்கத்திலிருந்த கடையில் ஆறுபடி எண்ணை வாங்கினார். விடு விடு வென்று வந்து,

"இந்தா உன் கடன்; தொலை.....என்னை விடு" என்றபடி தலை வழியே கொட்டினார். கடனின் அளவு முடிந்தவுடனே, குழந்தை மூச்சுத் திணறி இறந்து விட்டது. மனைவியின் கோபம் எல்லை மீறியது. கூச்சல் போட்டு அக்கம் பக்கத்தினரைக் கூட்டி விட்டாள். ஆசிரியரின் அடாத செயலை அனைவரும் கேவலமாக இகழ்ந்தனர்.

செத்துக் கிடக்கும் குழந்தையையும், பெருகி ஓடும் எண்ணையையும் கண்டு மனைவி மூர்க்கமானாள். தற்கொலை செய்து கொள்ள, கிணற்றில் குதிக்க முயல, ஆசிரியர் மனைவியைத் தடுத்து நிறுத்த, நடந்ததெல்லாம் விபரமாகக் கூறினார். மறுகணம் அவர் உயிரும் பிரிந்தது.

பார்த்தாயா அம்மா... விதிக்குத் தப்பியவர் எவரும் கிடையாது! லக்ஷ்மியிடம் போன பிறவியில் கடன் பட்டிருப்போம்; கடன் தீர்ந்ததும் போய்விட்டாள். நம் கடன் தீரவில்லை; இருக்கிறோம். எல்லோரும் துணிக்கடைக்கு செல்கிறோம். கொஞ்சமாய் துணி வாங்குகிறவன் சீக்கிரம் வேலை முடிந்து போய் விடுகிறான். நாமெல்லாம் நிறையத் துணிகள், புண்ணிய காரியங்கன் என்ற பட்டுத் துணிகளை வாங்க வந்தவர்கள்..... நிதானமாக நாலு இடம் போய், நயம் பார்த்து, விலை பார்த்து வாங்கி வீடு போய் சேர காலதாமதாமாகும்.....

அவசரப்படக் கூடாது. நாம் மூட்டை மூட்டையாய் தானியங்கள் கொண்டு வந்தவர்கள். சாப்பிட வருஷங்கள் பல ஆகும். அவள் பானையிலே தானியம் கொண்டு வந்து செலவழிந்ததும் புறப்பட்டு விட்டாள்"

சசி தேவி "நீ சொல்வதெல்லாம் சரி..... குடை தொலைந்து போனதே, நீ என்ன செய்தாய்?" என்று கேட்டாள்.

"அதுதான் புதுக்குடை வாங்கியாகி விட்டதே"

"செருப்பும் தோல் அறுந்து தொங்குகிறது"

"புதுச் செருப்பு தைத்துக் கொள்கிறேனம்மா"

"ரசம் வைக்கும் ஈயச் செம்பு உருகி விட்டது"

"புதுசு வாங்கித் தருகிறேன்..... அப்புறம் வேறென்ன வேணும்"

"கிழக்குப் பக்கச் சுவரில் கறையான் புற்று கட்டியிருக்கிறது. சுவரும் ஒதம் கொண்டு விரிசல் விட்டு கொஞ்சம் இடிந்தும் இருக்கிறது"

"இவ்வளவு தானே! இடித்துவிட்டு புதுசாக சுவரே எழுப்பி விடலாம். அதோடு ஓடு மாற்றி வெள்ளையடித்து புது வீடாட்டம் ஜொலிக்க வைத்து விடலாம். உன் சந்தோஷம் தான் முக்கியம் அம்மா" அன்போடு கூறினார் கௌரங்கா.

"அது நிஜம்னா நீ இன்னொரு கல்யாணம் பண்ணிக்கணும். வீடும், பொருள்களும் மட்டும் புதுசா இருந்தா போதுமா? தொலைந்த குடை, உருகிய ஈயச் சொம்பு, அறுந்த செருப்பு, இடிந்த சுவர் இவைகள் காலியாக்கின இடத்தை புதுப்பிக்க வில்லையா? அதுபோல் தான் இதுவும்."

சசியின் வாதத்திற்கு முன் கௌரங்காவின் பேச்சு எடுபடவில்லை. லக்ஷ்மி விட்டுப் போன இடத்திற்கு விஷ்ணுப்ரியா வந்தாள். இவளும் நல்லவள்தான்! கணவன் மனமறிந்து நடந்து கொண்டாள். ஆனாலும் கௌரங்காவின் மனம் அவளிடம் ஒட்டவில்லை. முன்னிலும் நாம சங்கீர்த்தனத்தில் தீவிரமாய் இறங்கினார்.

தனது பதினேழாவது வயதில் ஈசுவர பூரி என்ற வைணவத் துறவியிடம் ஆத்ம தத்துவ உபதேசம் பெற்றவர் கௌரங்கா. ஸ்ரீவாச பண்டிதரின் வீட்டில் இரவுப் பாட சாலை தொடங்கி கீர்த்தனைகள் சொல்லிக் கொடுத்தார். சிப்ளாக் கட்டையுடன் தானே பாடி ஆடுவார்.

அந்த சமயம் முராரி குப்தா என்ற பெரியவர் 'கண்ணா, மணிவண்ணா, கார்முகில் வண்ணா' என்று உணர்ச்சி வசப்பட்டு இவர் காலடியில் மயங்கிச் சாய்ந்து விட்டார். 23 வயதிற்குள் பாரத தேசம் முழுவதும் சுற்றி வைணவப் பிரச்சாரம் செய்தார்.

24–வது வயதில 'கடாவா' என்ற இடத்தில் வாழ்ந்த கேசவ பாரதி என்ற ஆச்சாரியரிடமிருந்து சன்னியாசத்தை மேற்கொண்டார். இதை அறிந்த விஷ்ணுப்ரியாவும், தாய் சசிதேவியுரும் வேதனைக் கொண்டு விம்மி விம்மி அழுதனர்.

முண்டனமானதலை; கௌபீனம்; மேலே ஒரு போர்வை; கையில் தண்டு; கமண்டலம் தாயை விழுந்து வணங்கினார்.

"அம்மா, இந்த உடல் நீ எனக்குப் போட்ட பிச்சை. நான் துறவு நிலையில் உறுதியோடு வாழ்ந்து கடமையைச் செய்ய வேண்டும் என்று மனமார ஆசீர்வதிக்க வேண்டுமம்மா" என்றார்.

"விஷ்ணுப்ரியா.... நாளைய வரலாற்று ஏடுகளில் உன் பெயரும் பதிக்கப்படும். வருந்தாதே! விதவையான பெண்களைப் பார்; கொடுமைக் கார புருஷனிடம அடி உதை வாங்கும் மங்கையரை நினைத்துப்பார். உன் நிலை மேலானது. 'கொண்டு வா' என்று உன் கணவன் உன்னை துன்புறுத்தி வேதனைப் படுத்தவில்லையே என்று பகவானுக்கு நன்றி செலுத்து. அம்மா, இறந்து விட்ட அப்பாவுக்கும், லக்ஷ்மிக்குமாக யமதருமன் மேல் வழக்கா போட முடிந்தது? உன் புதல்வர்கள் போக்கிரிகள், முட்டாள்கள், திருடர்கள் என்று பேரெடுக்க வில்லை. சன்னியாசியான உங்கள் பிளளைகளை எத்தனை ஜனங்கள் வழிபடுகிறார்கள்! பூஜை பாத்திரங்களில் சமைக்க முடியாது; அவை புனிதமானவை. நாங்கள் பிறக்க உங்கள் வயிற்றைத் தேர்ந்தெடுத்த பிரம்மாவுக்கு நன்றி கூற வேண்டும். விஷ்ணுப்ரியா சிறியவள்; அவளுக்கு நீங்கள் உறுதுணையாய் இருந்து ஆறுதல் சொல்வதை விடுத்து நீங்களே வருந்தினால் எப்படி?" என்று மனைவி, தாய் இருவருக்கும் சமாதானம் சொல்லி விட்டுப் புறப்பட்டு விட்டார்.

ஸ்ரீ கிருஷ்ணரைப் பற்றி பஜனை செய்து கொண்டே உணர்ச்சி வசப்பட்டு மெய் மறந்து விடுவதாலும், பலர் பார்வைக்கு அவர் கிருஷ்ணராக காட்சி அளித்ததாலும், ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் என்ற ழைக்கப்பட்டார்.

ஒரிஸாவில் சார்வ பௌமர் என்ற பண்டிதரை சந்தித்தார். "சின்னவயது; இளைஞன். புலன்களைக் கட்டுப்படுத்தாவிடில் சன்யாச ஆசிரமத்துக்கே அவமானம்!" என்றார் சார்வ பௌமர்.

"புலன்கள் அடங்கிப் போன வயதில் துறவு மேற்கொள்வது அதிசயம் அல்ல... கோபம் கொண்ட சிறுத்தையையும், பசியோடிருக்கும் சிங்கத் தையும் சமாளிப்பதுதான் வீரத்தின் இலக்கணம்" என்று பதில் சொன்னார் சைதன்யர்.

சார்வ பௌமர் இயற்றிய வேதாந்த சூஸ்திரப பாடல்களை 7 நாட்கள் மௌனமாகக் கேட்டார். அபிப்ராயம் சொல்லும்படி சார்வ பௌமர் கேட்க "மிகக்கடினமாய் உள்ளது. சாமானியனும் புரிந்து கொள்ளும்படி எளிமைப்படுத்த வேண்டும்" என்றார்.

"உன்னால் எளிமைப் படுத்த முடியுமா?" என்று சார்வ பௌமர் சவாலவிட, அழகாக, எளிமையான சொற்களால் பிரம்ம சூஸ்திரத்திற்கு உரை நிகழ்த்தினார் சைதன்யர். சார்வ பௌமர் வைணவராக மாறிவிட்டார்.

வாசுதேவர் என்ற தொழுநோயாளியை ஸ்ரீகிருஷ்ண நாமம் ஜெபிக்க வைத்து குணப்படுத்தினார். அவர் கால்படாத நகரங்களே இல்லை. பண்டரிபுரம், பூரி, காசி, கயை, என்ற வட இந்திய யாதத்திரையை முடித்துக் கொண்டு தெற்கே கன்னியாகுமரி வரை ஒரு இடத்தையும் பாக்கி வைக்காமல் பக்தியைப் பரப்பினார். புத்தர்கள், சமணர்கள்,மந்திரவாதிகள் என்று பலரையும் வைணவராக்கிய பெருமை இவருக்கு உண்டு. அப்போது அவருடைய வயது 27. இந்த சமயத்தில் தாயை ஒருமுறை சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டு ஆறுதல் கூறி விட்டு வந்தார்.

முஸ்லீமாக இருந்து சைதன்யரால் வைஷ்ணவரானவர்களை 'பதான் வைஷ்ணவா' என அழைக்கின்றனர். காட்டு வழியில் இவர் பஜனை செய்து கொண்டு வரும்போது யானைகளும், புலிகளும் நடனமாடும். 31 வயதிலிருந்து 48 வயது முடிய ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் பூரியிலேயேதான் இருந்தார். இவருக்கு எண்ணற்ற சீடர்கள் இருந்தாலும் முக்கியமான வர்கள் புருஷோத்தமாச்சார்யா, ராய் ராமானந்தர், நித்யானந்தர், ரூபகோஸ்வாமி, சனாதனர், ஹரிதாஸ், ரகுநாத்தாஸ், சந்திர சேகர், தபன்மிஸ்ரா, கோபிநாத், வெங்கட பட்டர், கோபாலர்.

ஸ்ரீசைதன்யர் அத்யாவசியமான உறக்கத்தை மட்டுமே கை கொண் டார். நாடியாவுக்கு யார் சென்றாலும் தாயாருக்கு எதையாவது அனுப்பி நலம் விசாரித்து வரச் சொல்வார். தொண்டர்கள் எவராவது நூலிழை ஒழுக்கம் பிசகினாலும் தண்டனை தருவார். ஜாதி, உயர்வு, தாழ்வு

இவைகளை அறவே ஒழிக்க அரும்பாடுபட்டார். மனதில் பட்டதை 'பளிச்' சென்று சொல்லி விடுவார். அவர் பதில்கள் சாட்டையடி கொடுப்பது போல் இருக்கும். எல்லோரிடமும் இனிமையாகப் பழகுவார். அதே சமயம் கொண்ட லட்சியத்தில் உறுதியோடிருப்பவர். கடமை தவறாதவர்.

ஒரு தடவை பிரம்மானந்த பாரதி என்ற மகான் புலித்தோல் அணிந்திருந்தார் என்று சைதன்யர் அவரை வணங்க மறுத்துவிட்டார்.

"புலித் தோல், மான் தோல் எல்லாம் ஆசாரமானதல்லவா?" என்று பிரும்மானந்தர் கேட்க, "இறந்த மிருகத்தின் தோல் என்றால் பரவா யில்லை. பணத்துக்காக வேடர்கள் வேட்டையாடி அவைகளின் உயிரைப் பறிக்கிறார்கள். அதனால் எனக்கு தோலாடைகளைப் பார்க்கும் போதெல்லாம் அந்த மிருகங்கள் தான் நினைவுக்கு வருகின்றன! உயிர் பிரியும் நேரம் எப்படித் துடித்திருக்கும்!" என மனம் நொந்து பதில் சொன்னார் சைதன்யர்.

உடனே தோலாடையைக் களைந்து மரவுரியுடன் வந்தார் ஆச்சார்யா. உடனே அவரை வணங்கினார் சைதன்யா. பாகவதத்திற்கு விளக்கம்



எழுதியவர் ஸ்ரீதரஸ்வாமிகள். பல்லவ பட்டர் என்ற புகழ் பெற்ற பண்டிதரும் பாகவதத்துக்கு விளக்கமான உரை எழுதினார்.

பல பண்டிதர்கள் கூடிய சபை. ஸ்ரீ கிருஷ்ண சைதன்யா நடுவே அமர்ந்திருக்கிறார். பல்லவப்பட்டர் ஸ்ரீதர பண்டிதரை அலட்சியமாக நடத்தினார். அவரது வினா எதற்கும் பதில் தரவில்லை. ஸ்ரீதரரின் முகம் சுண்டியது. இதை ஒரு அன்பா ஸ்ரீசைதன்யாவுக்கு விளக்க, "விபசாரி தன் புருஷனை மதிக்க மாட்டாள்; காக்கைக்குத் தான் செத்த எலி பிடிக்கும். நாய் அழுவதனால் சூரியனின் ஒளி குன்றுமா? அல்லி நீரில் இருக்கிறது. சந்திரன் ஆகாயத்தில் இருக்கிறது. சந்திரனின் அமுத மயமான கிரணங்கள் அல்லியை மலரச் செய்வதில்லையா? அதோ பாரும்.... அங்கோர் அல்லி மனிதர்.... இப்படி வாருங்களய்யா..." கூட்டத்தின் கோடியில் இருந்த ஒரு பாகவதோத்தமர் சைதன்யாவின் கை அசைவுக்கும், குரலுக்குமாக வாரிச்சுருட்டிக் கொண்டு வந்தார்.

"இப்படி உட்காருங்கள். ஸ்ரீதர ஸ்வாமிகளின் விளக்கம் காதில் விழவில்லை என்று தானே வருத்தப்பட்டு கொண்டிருந்தீர்கள்! அற்புதமான உரை..... பாகவதம் ஒரு கடல்..... அதில் யார் வேண்டு மானாலும் நீராடலாம்.

முத்துக் குளிக்கலாம். உப்பெடுக்கலாம். எல்லாமே பயனுள்ளது தான்! இன்னும் சொல்லப் போனால் உப்பு ரொம்ப அத்தியாவசியமான பண்டம். உப்பில்லா விட்டால் ருசிக்குமா? ஸ்ரீதரரின உரை உப்பைப் போன்றது." என்று நிறுத்தினார். பல்லவபட்டர் தவறை உணர்ந்து ஸ்ரீதரரிடம் மன்னிப்புக்கேட்டுக் கொண்டார். சபை கலகலத்து. பல்லவ பட்டரின் அகந்தையும் அழிந்தது.

'சைதன்யர் பக்தியின் அவதாரம். பக்தியைப் போதிக்க உலகில் அவதரித்திருக்கிறார்" என ஸ்ரீ ர்ராமகிருஷ்ண பரமஹம்ஸர் போற்றிக் கொண்டாடிய மகான்.

அவர் வாழ்ந்த காலத்தை 'சைதன்ய சகாப்தம்' என்றே சொல்லலாம்.

சீடர்களிடம் தான் சமாதி அடையும் காலம் வந்து விட்டதைத் தெரி வித்தார். சீடர்கள் விம்மி விம்மி அழுதனர்.

1534–ம் வருஷம். பூரி ஜெகன்னாதரின் ஆலயம். மெய் மறந்து நாம சங்கீர்த்தனம் செய்து கொண்டிருக்கிறார். திடீரென்று நாமாவளி நின்றது.

விழிகள் நிலைத்தபடி நிற்க, சீடர்கள் உள்ளே ஓடிவர முயற்சிக்க, கதவுகள் தாமே மூடிக் கொண்டன.

சீடர்கள் பிரமித்து நிற்க கதவுகள் தாமே திறந்து கொண்டன. சைதன்யரின் உடலைக் காணவில்லை. அங்கே கற்பூர, சாம்பிராணி, ஜவ்வாது, புனுகு வாசனை நிரம்பி இருந்தன.

கற்பூர ஜோதி போல் கண்ணனோடு கலந்து விட்ட இந்த மகானது சரித்திரம் படிப்பவரையும், கேட்பவரையும் ஸ்ரீ கிருஷ்ணனின் கிருபா கடாட்சத்துக்குப் பாத்திரமாகி விடும். அதனால் எல்லா நன்மையும் கூடும்.

90. ஸ்ரீ நாராயண தீர்த்தர்

ஜயதேவரின் மறுபிறவி நாராயண் தீர்த்தர். வேதவியாசரின் மூன்றாவது பிறப்பு.

ஆந்திராவிலிருந்து தமிழகத்திற்குக் குடிபெயர்ந்த அந்தத் தம்பதிகள் தவமாய்தவம்கிடந்து பெற்ற செல்வம் தீர்த்த நாராயணர்.

தகப்பனார் பாடும்போது தானும் மழலைக் குரலில் பாடுவான் நாராயணன். குஞ்சுக் கைகளால் தாளம் போட்டு பஜனை செய்வான். குழந்தை வளர வளர அவனோடு பக்தியும், இசையும் வளர்ந்தன. அக்கம் பக்கம் எங்கே பஜனை என்றாலும் ஓடிவிடுவான். அவனுடைய சாப்பாடு, தூக்கம், விளையாட்டு என்று எல்லாவற்றிலும் பக்தி கலந்திருந்தது.

"இதென்ன..... எது சாப்பிடக் கொடுத்தாலும் ஸ்வாமிக்கு நைவேத்யம் என்கிறான். தினமும் பகவானை ஏளப்பண்ணுகிற மாதிரி, திருவிழா, அபிஷேகம், நரசிம்மாவதாரம் என்று சொப்பனம் காண்கிறான். எனக்கு ரொம்ப பயமாயிருக்கிறது சாமியாராப் போயிடுவானோன்னு " தாயார் கவலைப்பட்டாள்.

"நல்லதுதானே! சமைச்சு சாப்பிட்டு குடும்பம் நடத்தறா. எல்லாரும்! எல்லாரும் குழந்தை பெத்துக்கறா! லோக க்ஷேமத்துக்காக ஆசார்ய பதவி தேடிண்டு வரதுன்னு சந்தோஷப்படுவியா?" தந்தை ஆனந்தப்பட்டார்.

ஆனாலும் நாராயணனின் தாய் கணவனை நச்சரித்து உறவுக்குள் பெண் தேடினாள். பேரழகியான பெண் கிடைத்தாள். வீணையின் நாதம் போன்ற குரலில் பக்தி ததும்பப் பாடினாள். திருமணம் வெகு சிறப்பாக நடந்தது. பிள்ளையும், மருமகளும் குடித்தனம் நடத்துவதைக் கண்டு பூரித்தாள் பெற்றவள்.

நாராயணனின் வேட்டகம் இருந்த ஊரில் திருவிழா. தாயாருக்கு உடம்பு சரியில்லாமலிருந்ததால் மனைவியை மட்டும் அனுப்பி வைத்தான் நாராயணன். ஆனால் 24 மணி நேரம் கூட அவள் பிரிவைத் தாங்க முடியவில்லை. அழைத்து வருவதாகக் கூறிப் புறப்பட்டான். இடியும், மின்னலும் மழையுமாக வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தது மேகம்.நதியில் நுங்கும், நுரையுமாக வெள்ளம் சுழித்தோடியது. பரிசலைக் கட்டிப் போட்டு விட்டு மரத்தடியில் உட்கார்ந்திருந்தான் பரிசலோட்டி.

"என்ன சாமி இந்த நேரத்திலே?" பரிசலோட்டி ஓடி வந்தான். "அக்கரைக்குப் போகணுமப்பா.... தெரியாத்தனமாய் மனைவியை அனுப்பி விட்டேன். அம்மாவைக் கவனிக்க பெண்பிள்ளையானால் தேவலை என்று படுகிறது.... பரிசலை எடு" என்றார் நாராயணன்.

"ஐயோ, சாமி...இந்த மழையிலா..... பரிசல் கவுந்துரும்.....மழையோ, வெள்ளமோ நிற்கட்டும்" என்று நடுங்கினான் பையன்.

'தொபீர்' ஆற்றில் குதித்து வெள்ளத்தில் எதிர் நீச்சல் போட்டான் நாராயணன். ஆனால் பாதி தூரம் சென்றதும் ஒரு பெரிய சுழலில் சிக்கிக் கொண்டான். சுற்றி சுற்றி வந்ததில் களைத்துப்போனான். எல்லா உறுப்புகளும் சோர்ந்த நிலையில் மரணம் நிச்சயம் என்று தெரிந்தது. துறவியாக சாக ஆசைப்பட்டு, துறவுக்கான மந்திரங்களைச் சொன்னான்.

'சன்னியாசம் என்பது மறு பிறவி; அப்படிச்செய்தால் ஒரு வேளை உயிர் பிழைக்கலாம்', என்ற நப்பாசை' ஒரு பெரிய காற்றின் வேகம் நாராயணனைக் கரை சேர்த்தது. வெகு நேரம் சென்றபின் நினைவு திரும்பியது.

எழுந்து மனைவியின் வீட்டைத் தேடி நடந்தான். "சன்னியாச வாழ்க்கை எனக்குப்பிடித்ததுதான்; ஆனாலும் இப்போது வேண்டாம். மனைவியின் வடிவழகு இன்னும் கொஞ்சம் திகட்டட்டும். நான்

துறவுக்கான மந்திரம் ஜெபித்தது என்னைத் தவிர வேறு யாருக்குத் தெரியும்? இப்போதைக்கு இதைப்பற்றி மூச்சு விடவேண்டாம்" என்று தீர்மானித்துக் கொண்டான்.

மாமனார் வீடு சென்று உடைமாற்றிக்கொண்டு, விருந்துண்டு, தாம்பூலம் தரித்து படுக்கைக்குச் சென்றான். சிறது நேரத்தில் மனைவி வந்து கதவைத் திறந்தவள் 'வீல்' என்று கத்திக் கொண்டு மூர்ச்சையாகி விட்டாள். மாமனார் வீட்டில் எல்லோரும் ஓடிவந்தனர். நாராயணன் மனைவியின் முகத்தில் நீர் தெளித்து மூர்ச்சை தெளிவித்தான். நாராயணனுக்கு எதுவுமே புரியவில்லை, தன்னைக் கண்ணாடியில் பார்த்தான். ஒன்றும் தெரியவில்லை.

ஆனால் அவன் மனைவி மட்டும் "ஸ்வாமி! தங்களுக்கு நான் எதில் குறை வைத்தேன்? தண்டும், கமண்டலமும், காவி உடையும் எங்கே ஒளித்து வைத்திருந்தீர்கள்? துறவியானதைச் சொல்ல இந்த வெள்ளத்தில் நீந்தி வந்தீர்களா?" எனப் பலவாறு புலம்பிக் கொண்டிருந்தாள்.

நாராயணனுக்கு எல்லாம் புரிந்து போயிற்று. 'நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகமில்லை' என்று தெரியாமலா எழுதி வைத்திருக்கிறார்கள்! இல்லாவிட்டால் இல்லாளின் கண்களுக்கு மட்டும் காஷாயதாரியாய் தெரிவானேன்! பகவான் எங்கும் நிறைந்தவன் என்பதை எப்படி மறந்து போனேன்?" என ஒரு நொடிக்குள் நிலைமை உணர்ந்த நாராயணன் கோவிலுக்கு ஓடிப்போய் அழுதான். "பரந்தாமா! சபலத்தால் சத்தியத்தைக் கைவிட்ட என்னை மன்னித்து விடு. ஆசைத்திரை அகன்றது. மாயை விலகியது" எனப் புலம்பினான்.

"நாராயணா.....உன் மனைவி மேல் கொண்ட பற்றை மாதவன் மேல் திருப்பு " என அசரீரி ஒலித்தது.

நிஜமாகவே காஷாயம் தரித்து ஸ்தல யாத்திரைக்கு புறப்பட்டான் நாராயணன்.

கடுமையான வயிற்றுவலி. நிற்கவும், உட்காரவும் கூட முடியவில்லை. பேசாமல் படுத்திருந்தார். உணவும், உறக்கமும் கை விட்டார். ஆனாலும் வேதனை அவரைப் புலம்ப வைத்தது.

"பரந்தாமா? இது என்ன சோதனை? என்ன பாபம் செய்தேன்? யார் சாப்பாட்டைத் தட்டிப் பறித்தேன்? பசித்தோர் காத்திருக்க உண்டிருப் பேனோ? பிதுர்க்கடன் முடிக்காமல் பாக்கி வைத்தேனோ? உணவுப் பொருட்களை லாபம் கருதி கலப்படம் செய்த வியாபாரியாய் இருந்தேனோ? செய்த வேலைக்குக் கூலி குறைத்துக் கொடுத்தேனோ?" புலம்பியபடியே கண் அயர்ந்து விட்டார்.

அழகான கனவு; மகாவிஷ்ணு "பக்தா, வினைப்பயன் எவரையும் விடாது. பக்தி அதன் வேகத்தையும், காலத்தையும் குறைக்கும். நாளைக் காலையில் உன் கண்ணில் படும் முதல் உருவத்தைத் தொடர்ந்து போ. உன் வயிற்று வலி நீங்கும்" என்றார்.

நாராயணர் விழித்துக் கொண்டார். அதன்பிறகு உறங்காமல் பஜனை செய்து கொண்டிருந்தார். விடிகாலை. நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு காவேரிப் படிகளைக் கடந்து மேலே வந்ததும் அவர் கண்ணில் பட்டது ஒரு வராஹம். அதைப் பின் தொடர்ந்து சென்றார். பூபதி ராஜபுரம் என்ற கிராமத்தில் உள்ள வெங்கடாஜலபதி ஆலயத்துள்



சென்று மறைந்து விட்டது. கோவிலை மூன்று முறை சுற்றி வந்தார். பன்றியையும் காணவில்லை! வயிற்று வலியையும் காணவில்லை! அதிகாலை ஆலயத்துக்கு வந்த பக்தர்கள் அவருடைய மெய் மறந்த பஜனையில் கலந்து கொண்டனர். அங்கேயே ஒரு ஆசிரமமும் கட்டிக் கொடுத்து அவரை அன்புடன் கவனித்துக் கொண்டனர். அங்கேதான் கிருஷ்ணனின் லீலைகளை விவரிக்கும் 'லீலா தரங்கிணி' உருவாயிற்று.

அரங்கேற்ற நாள்; ஆலயத்துள் பெரியபந்தல்; வாழை, கமுகு கொண்ட தோரணங்கள்! சுவாமியை பட்டாடைகளாலும் திருவாபரணங்களாலும் அலங்கரித்துத் திரை போட்டிருந்தனர். நாராயணன் " பகவானுக்குத் திரைப் போட்டால் எப்படி நூலை அங்கீகரிப்பார்? எப்படிக் கேட்டு ரஸிப் பார்?" என்று கேட்க, சில விதண்டாவாதிகள் "பகவான் எங்கும் நீக்கமற நிறைந்திக்கிறார் என்கிறீர்கள்! ஒவ்வொரு கோபிகைக்கும் ஒவ்வொரு கண்ணனாய் ராஸலீலை புரிந்தவர் உங்கள் பக்கத்திலும் உட்கார மாட்டாரா? ருக்மணி, சத்ய பாமா, ஜாம்பவதி, மித்திரவிந்தை, காளிந்தி, கௌஸல்யை, பத்திரை, சத்யை,லக்ஷ்மணை என்று ஒவ்வொரு மனைவி வீட்டில் ஒவ்வொரு விதமாய் நாரதருக்கு காட்சி தந்தவர் உங்களுக்காக, உங்கள் தரங்கிணியைக் கேட்க ஒரு வடிவம் எடுப்பது கஷ்டமா? சூரிய, சந்திரர்களுக்குத் திரை போட முடியுமா என்றீர்களே அன்று! அவைகளை விழிகளாகப் படைத்தவருக்கு நாங்கள் போட்ட திரை எம்மாத்திரம்? சுழல் காற்றாய் வந்த திருணாவர்த்தனைத் தூக்கி எறிந்தார் என்று பாடி இருக்கிறீர்கள்! இப்பேற்பட்டவனுக்கு இந்தத் திரையை தூக்கி எறிவது எம்மாத்திரம்? நாரையாக வந்த பகாசுரனின் அலகைக் கிழித்தவருக்கு இந்தத் திரையைக் கிழிக்க எத்தனை நேரமாகும்? காளையாக வந்த அரிஷ்டாசுரனின் வாலைச் சுழற்றி வீசி எறிந்தவருக்கு இந்தத் திரையைக் களைவது கடினமான செயலா? மலைப் பாம்பாக வந்த அகாசுரன் வயிற்றைப் பிறந்து கொண்டு வந்தவர் நிச்சயம் இந்தத் திரையை நீக்கிக் கொண்டு வெளிப்படுவார். குருபுத்ரனை மீட்க, சமுத்திரத்தின் ஆழத்துக்குப் போனவர் இந்த சன்னதியிலிருந்து வெளிப்பட எத்தனை நேரம் வேண்டும்? " என்று வாதிட, கண்ணனை தியானித்து கண்களை மூடியபடி தரங்கத்தைப் பாடத்தொடங்கினார். காளிங்க நர்த்தனப் பாடல்கள்!

காளிங்கன் "ஒவ்வொரு தலையைத் தூக்கும்போதும் அடி பிறழாமல் எப்படிக் குதித்துக் கூத்தாடினான் என்று விவரிக்கும் இடத்தில்

சன்னதியிலிருந்து 'ஜல் ஜல்' என சதங்கை ஒலி கேட்டது. அதன் பிறகு லீலா தரங்கிணி பாடி முடியும்வரை சதங்கை ஒலி நிற்கவேயில்லை. பக்தர்களின் 'ஆஹா'காரமும், பரவசமும் விதண்டாவாதிகளை தலை குனியச் செய்தது.

தரங்கிணி முடியும் சமயம் எல்லா தீபங்களும் தாமே ஏற்றிக் கொண்டன. கண்டா மணிகள் காற்றில் அலைந்து ஒலி எழுப்பின. திரை அறுந்து விழுந்தது. விதண்டாவாதிகள் நாராயணரின் காலில் விழுந்து பிழை பொறுக்குமாறு வேண்டினர். நாராயணரின் கண்களுக்கு மட்டுமே நடனக் காட்சி தெரிந்தது. ஊரார் அவரை தரங்கிணியோடு ஊர்வலம் நடத்தி கௌரவித்தனர். ஹரி பக்தி சுதார்ணவம் என்ற காவியத்தை இயற்றினார் நாராயணர். பக்தி மீமாம்ஸைக்குப் பாஷ்யம் இயற்றினார். ஊர் ஊராகச் சென்று நாம சங்கீர்த்தனத்தால் பக்தியைப் பரப்பினார்.

"நாராயணா! திருப்பூந்துருத்திக்கு வா.... அங்கேதான் உனக்கு மோட்சம் " திடுக்கிட்டெழுந்தார் நாராயணன். உடனே காவிரிக் கரை நோக்கிப் புறப்பட்டார். அவரோடு ஒரு ஆடும்வந்தது. திருப்பூந்துருத்தியில் ஆசிரமம் அமைந்தது. ஏராளமான சீடர்கள். ஒரு நாள் ஆசிரம ஆட்டுடன் விளையாடிய குழந்தைகள் ஆடு திடீரென இறந்துபோனதைக் கண்டு துடிதுடித்து அழுதனர். அவர்களுக்காக மந்திரம் ஜெபித்து தண்ணீர் தெளித்து ஆட்டை எழுப்பிக் கொடுத்தார். குழந்தைகள் குதூகலித்தனர்.

சுக்லபட்சம், வியாழக்கிழமை, கார்த்திகை நட்சத்திரம், அஷ்டமி திதியில் மரத்தடியில் யோக நிலையில் சமாதி அடைந்தார். அவர் உடலில் இருந்து ஜோதி கிளம்பிச் செல்வதை ஊரார் பார்த்தனர். ஆண்டுதோறும் அவரது நினைவு நாளில் அவரது சமாதியில் அவரது தரங்கங்களைப் பாடி நாத அஞ்சலி செலுத்துகிறார்கள் பக்தர்கள்.

இந்த மகானது சரித்திரம் படிப்பவருக்கும், கேட்பவருக்கும் திருமாலின் அருள் கிடைக்கச்செய்வதோடு, பக்தியும், சங்கீத ஞானமும் பெருகும்.

91. ஸ்ரீ ஜகன்னாத தாசர்

பூரியிலிருந்து ஆறு கி.மீட்டர் தூரத்திலுள்ளது கபிலேசுவர புரி. அங்கே பகவான்தாஸ்–பத்மாவதி தேவிக்கு குழந்தையாய்ப் பிறந்தவர் ஸ்ரீ ஜகன்னாததாஸா.

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்றபடி சொப்பு வைத்து விளையாடினாலும் நைவேத்யம் வைப்பான் ஜகன்னாதன். மரப்பாச்சி பொம்மைகளுக்கு விதவிதமாய் அலங்காரம் பண்ணி கடற்கரையில் பொறுக்கிச் சேர்த்த சின்ன சங்கை ஒரு தோள் பட்டையிலும், பொம்மை வண்டியின் சக்கரத்தை மறு கையிலும் கொடுத்து சங்கு, சக்கரதாரியாய் பார்த்து மகிழ்வான். ஒரு நாள் விஷ்ணுவுக்கு உபநயன மகோத்ஸவம் நடக்கும். ஒரு நாள் ராதா கல்யாணம். பத்மாவதி தரும் பட்சணங்கள் விநியோக்கப்படும். மரப்பாச்சிகளுக்கு சந்தனம்பூசி, நலங்கிட்டு மகிழ்வான். இலைகளையும், காட்டுப்பூக்களையும் இணைத்து மாலைக் கட்டிப் போட்டிருப்பான். ஒரு நாள் அம்மாவின் மாவு சலிக்கும் சல்லடையைத் தூக்கி வந்து அபிஷேகம் செய்து ஈரப்படுத்தி விட்டான்.

பத்மாவதி "ஜகன், நாம ஏழைகள். சல்லடை துருப்பிடித்து ஓட்டையாகி விட்டால் வேறு வாங்கக்கூட முடியாது. இப்படியெல்லாம் நீ பக்தியை காண்பிப்பதைவிட ஓரியா மொழியை நன்றாக இலக்கண சுத்தமாகக் கற்றுக்கொள். எனக்கு பாகவதம் என்றால் ரொம்பப் பிடிக்கும். எங்க பாட்டி, அத்தை சொல்லக் கேட்டிருக்கிறேன். கோவிலில் வடமொழியில் பாகவதம் சொல்கிறார்கள்! அது எத்தனைப் பேருக்குப் புரியும்? தவிர நாம இல்லாதவர்கள் என்ற இளப்பம் வேறே. நீ அப்படி இல்லாமல், இருப்பவர், இல்லாதவர் எல்லாரையும் ஒரேமாதிரி மதித்து பாகவதம் சொல்ல வேண்டும். அதுதான் என் ஆசை. செய்வாயா?" என்று குரல் தழுதழுக்கக் கேட்டாள்.

'நிச்சயம் செய்கிறேனம்மா' என்று வாக்களித்தான் ஜகன்னாதன்.

ஜகன்னாதனுக்கு எட்டு வயதில் உபநயனம் நடந்தது. 'கபலா, வர்த்தமானா' என்ற இலக்கண நூல்களை ஐயம் திரிபறக்கற்றான் ஜகன்னாதன். வேதங்கள், சாஸ்திரங்கள், உபநிடதங்கள்,இராமாயணம்,

மகாபாரதம், பாகவதம் எல்லாவற்றையும் படித்தான். படிப்பே அவன் மூச்சாயிற்று; ஒவ்வொரு விநாடியும் தாயின் வார்த்தைகள் அவன் செவிகளில் ஒலித்துக் கொண்டிருந்தன.

திருமணத்திற்கு பெண் தேடினார் பகவான்தாஸ். "அப்பா, நம் வம்சம் தழைக்க வேண்டும் என்ற குறுகிய நோக்கை விட்டு விடுங்கள். ஓரிய மக்கள் சீலமும் ஒழுக்கமும் பெற வேண்டும். பாகவதம் போன்ற அரிய பொக்கிஷங்கள் அவர்களைச் சேர வேண்டும். எல்லோரையும் வட மொழி படிக்க வைப்பதென்பது இயலாத செயல். அதனால் நான் ஓரிய மொழியில் பாகவதம் எழுதப் போகிறேன். இல்லறம் என்ற வட்டத்துள் மாட்டிக் கொண்டால் குழந்தைகள், அவர்கள் நலம், என்ற சுயதேவைகள் பூர்த்தியாகி நிமிர்வதற்குள் காதோரம் நரைத்து விடும்; பார்வை பழுது படும்; பற்கள் விழுந்து விடும்; நடை தள்ளாடும். சமூக நலன் என்ற தொலை நோக்கோடு என்னை விட்டு விடுங்களப்பா" என்றான் ஜகன்னாதன்.

"பாகவதத்தை ஓரிய மொழியில் எழுதப் பண்டிதர்கள் ஒருநாளும் ஒப்புக் கொள்ள மாட்டார்களே! உன் ஆசை நிறைவேறாது. நம்மை ஊரை விட்டு ஒதுக்கி வைத்து விடுவார்கள். பொதுத் தொண்டும் போய், இல்லற வாழ்க்கையையும் இழந்து பிறவியே வீண் என்று வருந்த நேரிடும்" எச்சரித்தார் தந்தை.

"அப்பா, அஸ்திவாரம் போட்டவன் இறந்துவிட்டால் கட்டடம் எழும்பாமல் நிற்காது. வேறொருவன் கட்ட வருவான். பாதி ஆடைக்குத் தறி போட்டவன் காலக்தி அடைந்தால் வேறொருவன் ஆடையை நெய்து முடிப்பான். பாதி ரத்னஹாரம் செய்யும் போது நகை ஆசாரி இறைவனடி சேர்ந்தார். மீதி அப்படியேவா நின்றது? நான் தொடங்குகிறேன். யாரைக் கொண்டு முடிக்க வேண்டும் என்று பரந்தாமன் நினைக்கிறானோ அவர்களைக் கொண்டு முடித்துக் கொள்வான். எவர் பிறவியும் வீணாகாது நற்காரியங்களுக்கு முயற்சி செய்யும் வரை! குழந்தைகள் பிறக்கின்றன.... பெற்றோர்கள் அற்பாயுளில் மரித்து விட்டாலும் எங்கோ எப்படியோ குழந்தைகள் வளர்ந்து விடுகிறார்கள். கணவன் காப்பாற்று வான் என்று தான் மனைவி கழுத்தை நீட்டி தாலி வாங்கிக் கொள்கிறாள். அவன் ஓடிவிட்டால்.... பித்தாகி விட்டால்..... செத்து விட்டால்.... எந்த

முயற்சியிலும் எதிர்விளைவுகள் என்பது உண்டு. உங்கள் ஆசியே என் பலம். வாழ்த்துங்கள் அப்பா" பகவான் தாஸ் ஆசி அளித்தார்.

புருஷோத்தம ஸ்தலத்துக்கு வந்தான் ஜகன்நாதன். கோவிலை நன்றாக அலம்பி விடுவான். நந்தவனத்தில் பூப்பறித்து வருவான். பூச்செடிகளுக்கு நீர் ஊற்றி பராமரிப்பான். கோவிலுக்கு வரும் பக்தர் களின் செருப்புகளை பாதுகாத்துக் கொடுப்பான். அவனைப் போலவே பலராம் தாஸ், ஆனந்த தாஸ், யசோவந்த தாஸ், அச்சுதானந்த தாஸ் என்ற நால்வர் அங்கு வந்து சேர்ந்தனர்.

எல்லோருமாக ஓரிய மொழியில் இனிய பாடல்களைப் பாடி பஜனை செய்வார்கள். இவர்களின் தன்னலமற்ற தொண்டும், பக்தியும் அனை வரையும் கவர்ந்தன. இவர்களை 'பஞ்சசகா' என செல்லப் பெயரிட்டு அழைத்தனர். பலராம் தாஸ் இராமாயணத்தை ஓரிய மொழியில் மொழிப் பெயர்ந்து இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினான். சாஸ்திரங் களையும்,புராணங்களையும் ஓரிய மொழியில் இவர்கள் சொல்ல புருஷோத்தம ஆலயத்தில் ஓரிய மக்கள் கூட்டம் பெருகியது. அதனால்



ஆசார சீலர்கள் என்று பறை சாற்றிக் கொண்டவர்களுமு, ஜாதி வெறி பிடித்தவர்களும் ஆலயத்துக்கு வருவதை நிறுத்திக் கொண்டார்கள்.

ஜகன்னாததாசரால் புராணங்களுக்கு அனர்த்தம் விளைந்ததென்று சொல்லி அவர் குடும்பத்தை ஒதுக்கி வைத்தனர். ஆலயத்துக்கு புனருத் தாரணம் செய்து, ஹோமங்கள் நடத்தி, மறுபடி ஆறுகால பூஜைகள் தொடங்கப்பட்ட அன்று இரவு, கோவில் காவலாள் வந்து பட்டாச்சாரியார் வீட்டுக் கதவை இடித்தான்.

"ஐயா, ஜகந்தாதய்யா ஆலமரத்தடியிலே உட்கார்ந்து பாகவதம் பாடுகிறார். கோவிலுக்குள்ளே இருந்து மின்னலடிக்கிறாப் போல'பளிச், பளிச்' சுனு வெளிச்சம் வருதுங்க. ஏன் தாக்கல் சொல்லலேன்னு கோவிச்சுக்குவீங்களேன்னு ஓடி வந்தேங்க. என்ன நடக்குமோன்னு பயமா இருக்குதுங்க" என்றான் குரல் நடுநடுங்க.

பட்டாச்சாரியார் கோவில் சாவிகளோடு மேலும் இருவரை அழைத்துக் கொண்டு போனார். கோவில் திறக்கப்பட்டது. நின்ற திருக் கோலத்தி லிருந்த பகவான் சப்பணமிட்டு உட்கார்ந்து கொண்டிருந்தார். கோவிலெல் லாம் ஜெகஜ்ஜோதியாய் தீபங்கள் எரிந்தன. மணிகள் ஒலித்தன. ஊருக்குள் செய்தி பரவி ஊரே திரண்டு வந்தது. எல்லோரும் ஜகந் நாதரின் காலில் விழுந்து பிழை பொறுக்குமாறு வேண்டினர். இச்சம்பவத் திற்குப் பிறகு அவர் ஜகந்நாத தாசர் என்றே அழைக்கப் பட்டார். பல சீடர்கள் அவர் சொல்லச் சொல்ல பாகவதத்தை ஏடுகளில் எழுதினர்.

கிராமம் கிராமமாக இலக்கிய சொற்பொழிவுகள், போதனைகள், பஜனைகள் ஓரிய மொழியில் நடைபெற்றன. கலிங்க தேசத்திலுள்ள கோயில்களிலெல்லாம் 'பாகவத துங்கி' என்ற இசைமன்றம் உருவானது. பலர் ஜகன்னாதரின் சீடர்களாகி அவரிடம் ஓரிய மொழிப் பாகவத்தைக் கற்று, நாடெங்கும் பக்தியைப் பரப்பினர்.

சாகும் தருவாயில் பாகவதம் படிப்பது ஓரிஸாவில் வழக்கமாயிற்று. இல்லம் தோறும் தினமும் பாகவதம் படிக்கப்பட்டது.

ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் பூரி ஜகன்னாதரை தரிசிக்க வருகிறார். மன்னர் பிரதாப ருத்திர தேவர் அவரை எதிர் கொண்டழைக்கிறார். பெரும் ஜனத்திரள். சைதன்யர் சுற்றும் முற்றும் பார்த்தார். "ஸ்வாமி! யாரைத்

தேடுகிறீர்கள்?" என்றார் அரசர். "பாமரனுக்கும் போய்ச் சேர வேண்டும் என்று பாகவதம் பாடினானே அந்த என் ஜகந்நாததாசனைத் தேடு கிறேன்" என்றார் சைதன்யர்.

அதற்குள் தாசர் வந்து விட்டார். இருவரும் கட்டித் தழுவி கண்ணீர் பெருக்கினர்.

"எனக்கு தீட்சை அளிக்க வேண்டும்" என்று ஜகன்னாதர் கேட்க, "இராமாயணத்தை ஒரிய மொழியில் பாடினானே பலராமதாஸ், அவனிடம் தீட்சை பெற்றுக் கொள். கடற்கரையில் 'தசதலகாதி' மடம் நிறுவு. சத்சங்கம் எங்கும பரவ வேண்டும். சந்தோஷம் எல்லோர் மனதிலும் நிறைந்திருக்க வேண்டும். சஞ்சலப்படும் மனிதர்களைத் தேடிப் போய் சமாதானம் சொல்லு. அக்கறை எல்லா காரியங்களிலும் இருக்க வேண்டும் என்று வற்புறுத்திப் பிரசாரம் செய்யச் சொல். சரணாகதியில் கேவலம் இல்லை என்பதை ஜனங்களுக்கு உணர்த்த வேண்டும. திரௌபதியின் சரணாகதி மானத்தைக் காத்தது. அர்ஜுன சரணாகதி வெற்றியைத் தேடித் தந்தது. விபீஷண சரணாகதி ராஜ்யத்தைக் கொடுத்தது என்று உதாரணங்களோடு விளக்க வேண்டும். வெறும் வார்த்தை அலங்காரங்கள் போதாது. கதைகளோடு தான் கருத்துக்கள் கலந்திருக்க வேண்டும். மனிதனுக்கு சாதனையே குறிக்கோளாய் இருக்க வேண்டும். சாதனையற்ற மனிதர்கள் சமூகத்துக்கு சோதனையாய் அமைந்து விடுவார்கள். பகீரதனின் சாதனை கங்கை பூமிக்கு வந்தாள். ஹனுமனின் சாதனை தான் சுந்தர காண்டம். சாதனைகள் தான் மனிதர்களை சரித்திரத்தில் பெயர் பொறிக்க வைக்கும்.

பிரேமை முக்கியம். பகவானிடத்தில் ஒரு தாய் குழந்தைகளிடம் காட்டும் பிரேமை இருக்க வேண்டும். யசோதைக்குக் கண்ணனிடம் இருந்தது போல! ராதைக்கு கிருஷ்ணனிடம் இருந்தது போல! அக்ரூரருக்கு கோபாலனிடம் ஏற்பட்டது போல! குசேலன் கோவிந்தனிடம் கொண்டது போல.... கோபிகைகள் மாதவனிடம் மயங்கியது போல! ஹனுமான் ஸ்ரீராமனிடம் காட்டியது போல, லட்சுமணருக்கு ஸ்ரீ ராமனிடம் உண்டானது போல பிரேமை பகவானிடம் பாமரர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். மடை திறந்தவெள்ளம் போல் பக்தி பெருக்கெடுத்தோட வேண்டும். வைணவம் தழைக்கப் பாடுபட வேண்டும். ஜகந்நாதா, எங்கும் சுற்றிவிட்டு என் வாழ்நாளின் இறுதிப் பகுதியைக் கழிக்க இங்கேயே

வருகிறேன். நான் பக்திக்குத் தொண்டன். நீ அதிபதி" என்று கூறி வாழ்த்தி விடைபெற்றார் சைதன்யர்.

சைதன்யர் உத்தரவிட்டபடி கடற்கரையில் தசதலகா மடம் அமைத்தார் ஜகந்நாதர். அங்கேயே பாகவதப் பாடல்களைப் பாடினார். ஆனால் கடல் அலைகளின் சப்தத்தில் அவர் குரல் அமுங்கிப் போயிற்று. "கண்ணா... நான் பாடுவது உன் செவியில் கேட்கிறதா? பாற்கடலில் பள்ளிக் கொண்ட பரந்தாமா? அங்கு அலைகள் போடும் சப்தம் போதாதென்று இங்கும் அலைகள் ஆர்ப்பரிக்கின்றனவே! கடலுக்கடியில் ஒளித்து வைக்கப்பட்ட் வேதங்களை மீட்டு வர மச்சாவதாரம் எடுத்தவனே! மந்தரமலை அமிழ்ந்து போகாமலிருக்க ஆமை வடிவெடுத்துத் தாங்கிப் பிடித்தவனே! கடலுக்கடியிலுள்ள பூமியைக் கோரைப் பற்களால் மீட்டுக் கொண்டு வர வராஹ அவதாரம் எடுத்தவனே! சேதுவில் எப்படித்தான் அணை கட்டினாயோ? குரு புதல்வனை இந்த அலைகளூடே எப்படித் தேடிக் கண்டு பிடித்தாயோ? கடலில் பிறந்த சங்கைப் பிடித்தவனே! நாற்புறமும் கடல் சூழ்ந்த துவாரகையில் எப்படித்தான் காலம் தள்ளினாயோ? என்னால் முடியவில்லை! இதற்கொரு வழி காட்டு" என்று புலம்பித் தவித்தார்.

என்ன அதிசயம்! வரிவரியாய் ஏழு பெரிய அலைகள் சிறு அலை களோடு பின் வாங்கின. நிலப்பகுதி தெரிந்தது. அதன் பின் இன்றளவும் அங்கே அலைகள் வருவதில்லை! ஜகன்னாதர் அதன்பின் உற்சாகமாகப் பாடினார். பேரும், புகழும் அவர் விரும்பாவிட்டாலும் வந்து சேர்ந்தன.

மன்னர் பிரதாப ருத்ர தேவர் அவருக்கு ஒரு அரண்மனையே கட்டிக் கொடுத்து, ராஜகுரு என்ற பதவியையும் அளிக்க முன்வந்தார். ஜகன்னாதர் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. கால் நடையாகவே கலிங்கம் பூராவும் சுற்றி பக்திப் பயிரை வளர்த்தார் தாசர். மன்னரும் அவர் கூடவே சென்றார். மன்னரின் பட்ட மகிஷி கௌரி தேவி ஜகந்நாதரிடம் மந்திர தீட்சை பெற்றுக் கொண்டாள். ராமதாசர் தான் இயற்றிய 'தார்த்தியாத பக்தி ரஸாம்ருதம்' என்ற நூலில் 'பகவானே ஜகந்நாததாசர் அருகிலிருந்து ஓரிய மொழி பாகவதத்தைக் கேட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார். ஜகந்நாததாசர் பகவான் கட்டளைப்படி பாகவ தத்தைப் பாடினார். அவருக்கிணையாக வேத வியாசரைத் தான் சொல்ல முடியும்' என்று பாராட்டுகின்றார்.

காலை எழுந்து நீராடி கோபி சந்தன மணிந்து பாகவதப் பாடலைப் பாடியபடி ஜகந்நாதர் ஆலயத்துள் வந்த தாசர் சிறிது நேரத்தில் பகவானோடு ஐக்கியமாகி விடுகிறார்.

அன்று கலிங்கத்தார் போற்றும் மகத சப்தமி காலம். சைதன்யர் குறிப்பிட்ட சத்சங்கம், சந்தோஷம், சிரத்தை, சரணாகதி, சேவை, சாதனை, சர்வபூதப்ரேமை ஆகிய ஏழு அம்சங்களையும் இறுதி வரை கடைப்பிடித்து வாழ்ந்த மகான் ஜகன்னாத தாசர். தாயின் வாக்கையே லட்சியமாகக் கொண்டு வாழ்ந்தார். இவரின் சரித்திரம் படிப்பவருக்கும், கேட்பவருக்கும் நற்கீர்த்தியையும், கல்விச் செல்வத்தையும் பரந்தாமன் அருளையும் பெற்றுத் தரும்.

92. ஸ்ரீ ஆனந்த தீர்த்தர் அல்லது ஸ்ரீ மத்வாச்சாரியார்

"மத்ய கேஹ பட்டர் இருக்காரா?"

"ஓ, நீங்களா.... இன்னும் கொஞ்சம் பொறுத்துக்கணும். நெல் விலை எறங்கிப் போச்சு. போனவருஷம் பயிர் பால் வைக்கிற பருவத்துலே மழை பெஞ்சு ஒரே நஷ்டம். இல்லேன்னா சொன்னபடி காளை வாங்கின கடனை அடைச்சிருப்பேன்" நயமாக கெஞ்சி நிலைமையை விளக்கினார் கடன் வாங்கியவர்.

"ஏனுஸ்வாமி! நாக்கு நாணயம் வேண்டாமா? இரண்டு வருஷமா பண்டிகை கொண்டாடலியா?சாப்பிடலையா! துணி வாங்கி உடுத்தலியா? இன்னிக்கு ரெண்டுலே ஒண்ணு தெரியாம இந்த இடம் விட்டு நகர்ர தில்லே....." கடன் கொடுத்தவர் திண்ணையில் சப்பணமிட்டு உட்கார்ந்து விட்டார்.

பட்டர் தலை கவிழ்ந்தார். எப்படி உடனடியாகக் கடனை அடைப்ப தென்று புரியவில்லை..... சோறு போடும் சிறுநிலம், விற்க முடியாது. பால்

தரும் பசு. அதுவும் அத்தியாவசியமானது. சினைப்பசுவை விற்று விடலாம். ஆனால் கூட,'காளை வாங்க' என்று வாங்கிய கடனுக்குக் குறையுமே. மனைவியிடத்திலோ குந்துமணி தங்கம் இல்லை. இருந்தால் கேட்குமுன் கழற்றிக் கொடுத்திருப்பாள்.

"அப்பா! அம்மா சாப்பிடக் கூப்பிடறாங்க" தந்தையை அழைக்க வந்த பூரண பிரக்ஞன் புதிய நபரை ஏற இறங்கப் பார்த்தான்.

"நீ போய் சாப்பிடு கண்ணா; அப்பாவுக்கு இப்பப் பசியில்லே"

"ஊஹூம்.... நீங்க இல்லாம நான் என்னிக்கு சாப்பிடிருக்கேன்? நீங்களும் வாங்க..... இவர் யாரு? இவர் நம்ப வீட்டிலே சாப்பிட மாட்டாரா?" பூரண பிரக்ஞன் கேள்விகளை அடுக்கினான்.

"நிலத்தை உழ, காளை மாடு வாங்க இவர் கிட்டே பணம் கடன் வாங்கினேன். சொன்னபடி பணத்தைத் தரமுடியலே! பணத்தை வசூல்பண்ண வந்திருக்கார் இவர். இவருக்குப் பணம் தான் வேணுமாம்! சாப்பாடு வேண்டாமாம்!" தந்தை மகனிடம் விபரம் சொல்ல,

"அது குழந்தை..... அதுக்கு என்ன புரியும்னு அதுங்கிட்டே போயி விளக்கம் சொல்லிகிட்டு" கடன் கொடுத்தவர் இழுக்க,'அப்படியா' என்றபடி உள்ளே ஓடினான் சிறுவன்.

புறக்கடையில் அவன் தாய் புளியைக் கொட்டை வேறு, கோது வேறாகப் பிரித்துக் கொண்டிருந்தாள்.

கை நிறையப் புளியங் கொட்டைகளை அள்ளினான் பூரணன். "எங்கடா, எதுக்குடா?"என்று தாய் கேட்க,'வந்து சொல்றேன்' குழந்தை வாசலுக்கு ஓடிவிட்டான். திண்ணையில் புளியங் கொட்டைகளை வைத்தான்.'கையைக் காட்டுங்கள்' குழந்தை விளையாட்டு என்று கடன் கொடுத்தவர் கைகளை பிட்சைப் பாத்திரமாக ஏந்த,'ஒன்று, இரண்டு, மூன்று ' என எண்ணிப் போட்டான் சிறுவன்.

என்ன ஆச்சரியம்! பூரணன் எடுத்தது புளியங்கொட்டை தான்.... ஆனால் கடன் கொடுத்தவர் கையில் விழுந்ததும் அவை நாணயங்களாக மாறின.

மத்யகேஹ பட்டரும், குழந்தை எங்கே போகிறான் என்று பார்க்க வந்த தாயாரும், கடனுக்காக அடம் பிடித்தவரும், இந்தத் தெய்வச் செயல் கண்டு அதிசயத்தினர்.

கடன் கொடுத்தவன் கண்ணீர் உகுத்தான்.

"குழந்தே! இல்லே....நீ தெய்வம்.....ஸ்வாமி....என் பாக்கி உங்க குழந்தை கையால் தொட்டுக் கொடுத்தது என் பூர்வ ஜென்ம புண்ணியம்" என்று பூரணனைத் தழுவிக் கொண்டான்.

"இன்னும் குழந்தை பள்ளிக் கூடத்திலிருந்து வரலியா அம்மா"

"தினமும் இதுக்குள்ளே வந்துடுவான். என்னமோ இன்னிக்கு நேரமாறது. அவன் வந்தவுடனே அவன் கையைப் பார்த்து நாலு நல்ல வார்த்தை சொல்லணும். வழியிலே ஏதாவது பசங்க விளையாடறதை வேடிக்கை பார்த்துண்டு நிக்கறானோ என்னவோ..." என்றவள் வாசலுக்கு வந்து "வாசுதேவா, வாசு.... பூரணா.... பூரண்... பிரக்ஞா" என்று உரக்கக் கூவினாள். பெரிய மலைப்பாம்பு.... தாண்டினல் விழுங்கி விடுமே என்று யோசித்துக் கொண்டிருந்த சிறுவனின் காதில் தாயின் கவலை தோய்ந்த அழைப்புக் கேட்டது தான் தாமதம!

"இதோ வந்துவிட்டேன் அம்மா" என்று பாம்பின் தலையை மிதித்துக் கொண்டு ஓடி விட்டான். பாம்பு நசுங்கி இறந்து கிடந்தது.

பாம்பைச் சுற்றி நின்றவர்கள் அதிசயப்பட்டனர். தேடி வந்த தாயாரும் திக்பிரமித்து நின்றாள்.

"ஸ்வாமி! நீங்கள் சொன்னபடி ஒரு மண்டலம் 'பயோ விரதம் அனுஷ்டித்துப் பிறந்தவன் இவன். பாம்பு விழுங்கி இருந்தால் என்ன செய்வேன்! அவன் கைகளை நன்றாகப் பார்த்து சொல்லுங்கள். கொம்பாலே தூக்கி எறிந்து பந்தாடின முரட்டுக் காளை! அதன் முதுகில் சவாரி செய்கிறான். வாலைப் பிடித்துத் தொங்குகிறான்! கொம்பைப் பிடித்துக் கொண்டு ஊஞ்சலாடுகிறான். என்பயம் இவனுக்கெங்கே புரிகிறது. ஆயுள் பாவத்தைப் பாருங்கள்" என்று கலக்கத்தோடு வேண்டினாள் தாய்.

வாசுதேவனின் கைரேகைகளை ஆராய்ந்தவர் "அம்மணி இவன் ரேகைகள் இவன் ஒரு அவதார புருஷன் என்று சொல்கிறது. இந்து மதம் தழைக்க, பக்திப் பயிர் செழிக்க பாடுபடும் மகானின் கைகளைத் தொடும் பாக்கியம் எனக்குக் கிட்டியிருக்றிது. ராமாவதாரத்தில் ஆஞ்சனேயனாகவும், கிருஷ்ணாவதாரத்தில் பீமனாகவும் பிறந்த வாயுவின் அம்சம்

கொண்டவன். பல அற்புதங்கள் நிகழ்த்துவான்; நிகழ்த்தி இருப்பான். பாரதம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்யப் போகிறான் என்று பாதங்களில் உள்ள இந்த சக்கரரேகை சொல்கிறது. கர்நாடக மாநிலமே பெருமை கொள்ளும் பிள்ளையைப் பெற்றிருக்கிறாயம்மா! கவலையை விடு; திருமணம், குழந்தைகள் என்ற பாச பந்தங்கள் இவனைப் பற்றாது" என்று விளக்கமாகக் கூறினார்.

"நமக்குத் துன்பம் நேரிடும் போது நாம் என்ன செய்ய வேண்டும்?" வாசுதேவன் ஆசிரியரைக் கேட்டான். "பகவானைச் சரணாகதி அடைய வேண்டும். பகவான்ஒருவனாலேயே நம் கஷ்டங்களைப் போக்க முடியும். அவன் ஒருவனே நிஜம்" என்றார் ஆசிரியர்.

"அப்போ நேத்திக்கு உலகம் அநித்யம்; வாழ்க்கை மாயை என்று போதித்தீர்கள்! நிஜமான கடவுள் படைத்தவை எப்படி பொய்யாக முடியும்! உடலுக்கு வேண்டுமானால் அழிவுண்டே தவிர உயிர்கள் உண்மை யானவை..... பழுத்துப்போன பழங்கள் அழுகி விடலாம். விதைகள் அழுகு வதில்லை! பகவானுக்கு சேவை செய்ய வேண்டும் என்கிறீர்கள். எல்லா உயிர்களிலும் ஆண்டவன் இருக்கிறான் என்றும் சொல்கிறீர்கள். அப்படியானால் பாவப்பட்ட உயிர்களுக்குச் செய்யும் தொண்டு பரந்தா மனைப் போய் சேராதா? பசித்தவர்களை, கஷ்டத்திலுள்ளவர்களை அலட்சியம் செய்துவிட்டு பகவானுக்கு மட்டும் சேவை செய்தால் பகவான் திருப்திப்பட்டு விடுகிறாரா?"

ஆசிரியர் அச்யுதப்ரக்ஷர் திகைத்தார்.

"வாசுதேவா! நான் கற்றதை மாணவர்களுக்குப் போதிக்கிறேன். உன் கேள்விகள் வித்தியாசமானவை. சிந்திக்க வைப்பவை. ஆனால் எனக்குப்பதில் தெரியவில்லை. நீயே பதில் கண்டுபிடித்து மக்களிடம் பிரசாரம் செய். மக்கள் நீ சொல்வதை ஏற்றுக் கொண்டால் உனது முதல் சீடன் நான்தான். எனக்கு இதில் வெட்கப்பட ஒன்றும் இல்லை. கேள்வி கேட்காமல் படிப்பதானால் தான் நீ தொடர்ந்து பள்ளிக் கூடம் வரலாம். இன்று மாலை நான் உன் பெற்றோரை சந்தித்துப் பேசுகிறேன்"என்றார்.

"அம்மா, கேள்வி கேட்பதானால் பள்ளிக் கூடத்திற்கு வரக் கூடாது என்று சொல்லி விட்டார் உபாத்யாயர். கேள்வி கேட்காமல் எப்படி சந்தேகங்கள் நிவர்த்தியடையும்?" என்று மகன் கேட்க, என்ன பதில் சொல்வதென்று புரியாமல் தாய் குழம்பினாள்.

மாலையில் ஆசிரியர் வந்து "அம்மணி, நான் ஏடுகளில் இருப்பதை மனப்பாடம் செய்து போதிக்கிற சாதாரண ஆசிரியன். வாசுதேவனோ சுய சிந்தனையாளன். யானைக்கு நிழல் கொடுக்க பூனையால் ஆகுமா? இவன் அறிவு பூர்வமான கேள்விகள் கேட்கிறான். இவனைப் பின்பற்றி சில குதர்க்க குணமுள்ள மாணவர்கள் வினயமான வினாக்கள் எழுப்ப லாம்! ஆசிரியர் அறிவிலி என்று ஆகுமல்லாவா? வாசுதேவன் சிங்கக்குட்டி. கழுதைகள் மத்தியில் இருப்பது கடினம்" என்று பணிவுடன் வேண்டிக் கொண்டார்.

பேதைத்தாய்..... என்ன செய்ய முடியும்?

வாசுதேவன் உடல் வலிமை பெற்றவன். திண்மையான தோள்களும் அகன்ற மார்பும், நெடிதுயர்ந்த வடிவமுமாக மற்ற மாணவர்களிலிருந்து வித்யாசமாகத் தெரிவான். மாணவர்களுக்குள் சண்டை வந்து விட்டால் வெற்றி அவன் சேர்ந்த பக்கம் தான்! மாணவர்களுக்குள் நடமாடும் நீதி மன்றமாகவே இருந்தான்.

அன்று ஏதோ விசேஷ நாள். ஒரு பெரிய தொட்டியில் பால் காய்ச்சப்பட்டுக் கொண்டிருந்தது. "வாசு, இதைப் பார்த்துக் கொள்" என்று சொல்லி விட்டு அவசர வேலையாக தந்தை சென்றிருந்தார்.

நண்பர்கள் வந்து சடுகுடு விளையாட அழைத்தனர்.

"பால் காய்கிறதடா.... அப்பா வந்ததும் வருகிறேன்" என்றான் வாசுதேவன்.

"போடா... இருட்டின பிறகா விளையாட முடியும்..... அப்புறம் படிக்க உட்காரணும். இப்பவே மணி ஐந்தாகிவிட்டது. நீ வராவிட்டால் நாங்கள் தோத்த கட்சிதான்" நண்பர்கள் வருத்தப்பட, வாசுதேவன் எரியும் விறகை இழுத்து தண்ணீர் தெளித்தான். 'பால் தொட்டியை மூடாமல் போனால் ஏதாவது விழுந்து விடுமே' சுற்று முற்றும் பார்த்தான். தொட்டி முற்றம் போடவென்று பெரிய கல்தளம் வாங்கி புறக்கடையில் வைத்திருந்தது நினைவுக்கு வந்தது. அதை ஒருவனாகவே தூக்கி வந்து மூடிவிட்டுத் திரும்பினால் தந்தை நின்று கொண்டிருந்தார்.

"பால் காய்ந்து விட்டது; விறகை இழுத்து அணைத்து விட்டேன். விளையாடப் போகிறேன்" வாசு தேவன் ஓடி விட்டான். மத்யகேஹ பட்டர் திகைத்து நின்றார்.

"என்ன அசுரபலம்! இவன் சாதாரணமானவனல்ல... நான்கு பேர் சேர்ந்து கஷ்டப்பட்டுத் தூக்கி நகர்த்த வேண்டிய பாறைப் பலகையை ஒருவனே தூக்குவதா? இவன் தாய் ஒரு மண்டலம் பால் மட்டுமே அருந்தி, ஆஞ்சனயரை வேண்டி விரதம் இருந்து பெற்ற பிள்ளையாயிற்றே! பாலைத் திறந்து போடக் கூடாதென்ற பொறுப்பு இருக்கிறது. தலைவனுக்குள்ள குணங்கள் நிறைந்திருக்கிறது. ஹூம்! பிரம்ம லிபி எப்படி. எழுதியிருக்கிறதென்று போகப்போக பார்க்கலாம்" இப்படிப் பல எண்ணங்கள் அவர் மனதில் ஓடின.

"வாசு.... எனக்கு பெரிய ஆசையெல்லாம்இல்லே... ஆனா சாகறதுக் குள்ளே கங்கையிலே குளிக்கணும். என்ன பாவம் பண்ணினேனோ! ஏழையாப் பொறந்திருக்கேன்! எப்பேற்பட்ட பாவமும் கங்கையிலே குளிச்சா போயிடும்னு எங்க தாத்தா சொல்வார்! ஹூம்! அவ்வளவுக்கு ஏது அதிர்ஷ்டம்.... எனக்கு இந்த வாசுதேவ தீர்த்தம் தான் கங்கை" மத்யஹ்ன பட்டர் புலம்பிக் கொண்டே வந்தான். மௌனமாக உடன் வந்த வாசுதேவர் "அப்பா, காசிக்குப் போகிற வழி காடுகள் நிறைந்த பாதை. புதை குழிகள் இருக்கும். திடீரென்று புலி, சிங்கம், கரடி, பாம்புன்னு

மாட்டிக்குவோம். உங்களுக்கு அடிக்கடி காய்ச்சல், ஜலதோஷம், ஆஸ்துமா என்று படுத்துகிறது.'' என்று சொல்லிக் கொண்டு வரும்போது வாசு தேவ தீர்த்தம் வந்து விட்டது.

"அப்பா, கண்ணை மூடிக் கொள்ளுங்கள்; கங்கா மாதாவை உள்ளம் உருக பிரார்த்தியுங்கள்'' என்றார் மகன். அப்படியே செய்தார் தந்தை. வாசுதேவனும் ஸ்ரீ கிருஷ்ணரைப் பிரார்த்தித்தான். கங்கை நுங்கும், நுரையுமாகப் பொங்கி வந்தது. "அப்பா, கங்கை வந்து விட்டாள்; உங்கள் ஆசை தீரும் மட்டும் இறங்கி நீராடுங்கள்'' என்றார் வாசுதேவர்.

மத்யஹேக பட்டரின் ஆனந்தம் அளவிடமுடியாததாய் இருந்தது. 'தந்தைக்கு ஆனந்தத்தைக்கொடுத்த ஆனந்தா' என்று கட்டியணைத்துக் கொண்டார். 'தீர்த்தத்தை வரவழைத்த தீர்த்தங்கரா' என்று புளகாங்கித முற்றார். இரண்டையும் சேர்த்து 'ஆனந்த தீர்த்தன்'என்ற மூன்றாவது பட்டப் பெயரையும் சூட்டினார்.

அன்று மத்யஹேக பட்டரோடு அனேகருக்கு கங்கையில் நீராடிய புண்ணியம் கிடைத்தது. துறவு வாழ்க்கையை மேற்கொள்ள பெற்றோரிடம் அனுமதி வேண்டினான் ஆனந்த தீர்த்தன்.

"ஒரேபிள்ளையாயிற்றே! வம்சம் விளங்க வேண்டாமா? உன்னைப் பிரிந்து நாங்கள் எப்படி உயிர் வாழ்வோம்'' என்று பெற்றோர் கலங்கினர்.

"இன்னொரு மகன் பிறந்தால் என் சன்யாசத்தைத் தடுக்க மாட்டீர்களே?'' என்று கேட்டான் ஆனந்ததீர்த்தன். "இன்னொரு பிள்ளையா? பதினைந்து ஆண்டுகள் கழித்தா? சாத்தியமா?'' என்று பெற்றோர் சிரிக்க, "அதெல்லாம் வீண்பேச்சு.... பிறந்தால் என்னை விடுவிப்பீர்களா? '' என்று மகன் கேட்டான்.

"எங்கே பிறக்கப்போகிறது.... நமக்கும் வயதாகி விட்டதே' என்று நினைத்துப் பெற்றோர் உறுதியளிக்க, அடுத்த ஆண்டு ஆனந்த தீர்த்தருக்கு தம்பி பிறந்தான்.

வாசுதேவன் துறவு கொண்டபோது வயது பதினாறு. அச்சுதப் பிரேக்ஷாச்சாரியாரை குருவாக வரித்து தீட்சை பெற்றான் பூரணப்ரக்ஞன். உடுப்பி அனந்தேஸ்வரர் ஆலயத்தில் ஆயிரக்கணக்கானோர் இந்த வைபவத்தைக் காண கூடியிருந்தனர்.

உடுப்பியிலிருந்த எட்டு மைல் தூரத்தில் உள்ள 'பாஜக க்ஷேத்திரத்தில் பிறந்த வாசுதேவன் ஸ்ரீமத்வாச்சாரியாரானார். பல புலவர்களும், பண்டிதர்களும், ஞானிகளும் இவரிடம் வாதிட்டுத் தோற்றனர். பத்ரி நாத்தில் ஆனந்த மடத்தில் நாற்பத்தெட்டு நாட்கள் தங்கினார்.

மேல் பத்ரியில் வியாசர் வாழ்ந்த இடத்தில் தங்கி,தியானத்தில் ஆழ்ந்தார். அங்கே வேத வியாசரை சந்தித்தார். கீழே போகவே மறுத்தார். வியாசர் "உன் பணி பாக்கி நிற்கிறது. முடித்து விட்டு வரலாம் " என்று ஆசி கூறி அனுப்பினார். அதன்பிறகு அவருடைய தேஜஸ் கூடியது. சொன்னபடி அவரின் ஆசிரியர் அச்யுதப்ரக்ஷர் அவரின் சீடராக மாறி ஞானோபதேசம் பெற்றார். சீடர்களுக்கு மத்வர் ஐத்ரேய உபநிஷத்தைச் சொல்லிக் கொடுக்கும்போது மலர் மாரி பொழிந்திருக்கிறது.

ஒரு சமயம் ஸ்ரீ மத்வர் இயற்றிய பல நூல்கள் திருட்டுப்போய் விட்டன. அதை அறிந்த கும்ப்ளா நாட்டு மன்னன் ஜெய சிம்மன் துரித நடவடிக்கை எடுத்து அவற்றை மீட்டான். தனது சாஸ்திர நூல்களைப் பெற ஸ்ரீ மத்வர் அரசவைக்கு வந்தார்.

ஜெயசிம்மன் அரசவையில் திரி விக்கிரம பண்டிதர் என்ற புலவர் பெருத்த ஞானி. அவர் மத்வரிடம் "உங்களது நூல் என்கிறீர்கள்! உங்களால் மறுபடி அதேபோல் எழுத முடியாதா என்ன?" என்று தர்க்கம் செய்ய,

"கறந்த பால் மடி புகாது; பிறந்த உடனே கூட மறுபடி குழந்தை தாயின் கர்ப்பத்தில் வசிக்க முடியாது. குழந்தை காணவில்லை என்றால் கூட பெற்றோர் தேடுவரே தவிர மறுபடி பெற்று வளர்த்துக் கொள்ளலாம் என்று நினைப்பதில்லை. அப்படியே பெற்று வளர்த்தாலும்.... அதுவும் இல்லையே என்றுதான் மனம் பரிதவிக்கும்" மத்வரின் பதில்கள் அனைவரின் மனதையும் கவர்ந்தன. வேத வியாகரணங்களைப் பற்றி பதினைந்து நாட்கள் தர்க்கம் செய்தார் பண்டிதர். இறுதியில் தோல்வியுற்று தனது ஏழு சகோதரர்களோடு மத்வரைச் சரண் அடைந்தார் பண்டிதர். அவரது நூல்களை அவருக்குத் திருப்பித் தந்து மன்னிப்பு வேண்டினான் மன்னன் ஜெயசிம்மன்.

ஜலாலுதீன் கில்ஜி ஆண்ட காலம். இந்து மத போதகருக்கு யமுனை யைக் கடக்க முஸ்லீம் அரசரின் அனுமதி கிடைக்கவில்லை. ஜல ஸ்தம்பம்

செய்து நடந்தே கரையேறினார் மத்வர். கரை ஏறியவுடன் கைது செய்து, மன்னன் முன் நிறுத்தினர்.

துருக்கிய மொழியிலேயே தனது நோக்கத்தையும், கொள்கைகளையும் விளக்கினார்.

"அரசே, முஸ்லீம்களையோ, இஸ்லாமையோ அழிப்பது எனது நோக்கமல்ல.... அவர்கள் எனக்கு எதிரியுமல்ல.... ஒருவரே சமைத்து உலக மக்களின் பசி தீர்க்க முடியுமா? ஒவ்வொருவர் பக்குவம் ஒவ்வொரு விதமாய் இருக்கும்! நதிகள் பல இருக்கின்றன! கடல்கள் பல இருக்கின்றன. மலைகள் பல இருக்கின்றன! ஏற்றுக் கொள்கிறோம். மதங்கள் பல இருப்பதில் என்ன தவறு? நீங்களும், நாங்களும் நல்லெண்ணங்களை, நற்செய்கைகளை, நற்போதனைகளைத் தான் பிரசாரம் செய்கிறோம். நீருக்கடியில் உள்ள மண்தான் வேறு.... நீருக்கு நிறமேது? செம்மண், களிமண், மணல் என்று மண்ணின் நிறத்தை நீர் கொண்டிருக்கிறது.

திருடாதே, பொய் சொல்லாதே, பிறன் மனைவியை இச்சிக்காதே! எவரையும் துன்புறுத்தாதே, கருணகாட்டு இதெல்லாம் எல்லா மதங்களுக்கும் பொதுவான கொள்கைகள். நீங்கள் ரட்சகர். உங்களுக்கு மதத் வேஷம் இருக்கக்கூடாது. நீங்கள் எந்த மதத்தைப் பின்பற்றினாலும் அனைத்து மக்களும் உங்களுக்கு சமமே. நல்லவர், கெட்டவர், அறிவாளி, மூடன் என்ற பேதங்கள் மட்டுமே நீங்கள் பார்க்க வேண்டும். நீங்களும் மண்டியிட்டே தெய்வத்தை வணங்குகிறீர்கள். நாங்களும் அப்படியே இறையைத் தொழுகிறோம். ஒருவன் ஆடை நெய்து ஊர் மானம் காக்க முடியாது. ஒருவன் மட்டுமே கட்டினால் கட்டிடம் பூர்த்தியடையாது. கொல்லனோடு, தச்சனும், சிற்றாட்களும் வேண்டும். ஒரு மொழி மட்டுமே கற்றிருந்தால் உங்களுடன் துருக்கிய மொழியில் பேசியிருக்க முடியுமா?"

கில்ஜி பிரமித்தான்.

"உங்களுக்கு வேறு என்னென்ன மொழி தெரியும்?" என்று அன்புடன் கேட்டான்.

"பண்டிதர்களோடு வாதாட சமஸ்கிருதம் தெரிய வேண்டும். ஆந்திரமக்களிடம் பிரசாரம் செய்ய தெலுங்கு மொழி, தமிழகத்தில் தமிழ்,

தாய் மொழியானகன்னடம், வட நாட்டில் ஹிந்தி, மகாராஷ்டிரத்தில் மராட்டி, வங்காள நாட்டில் பிரசாரம் செய்ய வங்காளி, உருது..... இன்னமும் சில மொழிகள் கற்க நேரமில்லையே என்ற வருத்தம் எனக்குண்டு" மத்வர் பேசப்பேச அவரிடம் கில்ஜிக்கு மதிப்பும், மரியாதையும் உயர்ந்தன.

'கலகமும், குழப்பமுமாக இருந்ததால் தங்களுக்கு தீங்கு ஏற்பட்டு விடக் கூடாதே என தடை செய்தேன். மன்னிக்க வேண்டும். தங்கள் பயணத்துக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் செய்து தருகிறேன்" என்று அன்புடன் கேட்டுக் கொண்டு சொன்னபடி செய்தான்.

இதேபோல் கலிங்க மன்னன், பத்ரி நாத்தை ஆண்ட வேந்தன், ஹொய்சள மன்னள், கும்பள அரசன் அனைவரும் இவரைப் பின்பற்றினர். ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் இவரிடம் உள்ள பிரேமையினால் உடுப்பில் வந்து இவரிடம் அளவளாவுவார்.

1317–ஆம் ஆண்டு (மங்கள வருஷம்) வளர்பிறை மக நட்சத்திரத்தன்று தனது எழுத்தொன்பதாவது வயதில் சீடர்களிடம் விடை பெற்று வேதவியாசரிடம் சேர இமாசல யாத்திரையை மேற்கொண்டார். அவர் முப்பத்தேழு நூல்கள் எழுதினார். தசப்பிராகர்ணங்கள், பத்து உபநிடத விளக்கங்கள், கீதை பிரம்ம சூஸ்திர விளக்கங்கள், ருக் வேத விளக்கம், பிரம்ம சூஸ்திரத்தின் வேதாந்த அடிப்படையை விளக்கும் அனுவியாக் ஞானம், இது தவிர பக்தியை எளிதாய் பாமரர்களுக்கு விளக்கும் ஸ்லோகங்கள், ஸ்தோத்திரங்கள் எல்லாம் எழுதி இருக்கிறார்.

திரி விக்கிரம பண்டிதர், பத்ம நாப தீர்த்தர், நரஹரி தீர்த்தர், மாதவ தீர்த்தர், அக்ஷோப்ய தீர்த்தர் என்ற அவரின் முக்கிய சீடர்கள் இந்தியா முழுவதும் மத்வ தத்துவங்களை அவர் சார்பில் பிரசாரம் செய்தவர்கள்.

ஸ்ரீ மத்வாச்சாரியார் முதன் முதலில் பூஜித்த தெய்வம் குஞ்சார கிரி துர்க்கை அம்மன். உடுப்பியில் அவர் எட்டு மடங்களை ஸ்தாபித்தார். உடுப்பி ஸ்ரீ கிருஷ்ண விக்ரஹம் ஸ்ரீமத்வரால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அது ஸ்ரீருக்மணி தேவியாரால் துவாரகையில் பூஜைசெய்யப்பட்ட விக்கிரகம். உடுப்பி கிருஷ்ண விக்ரகம் மத்வர் கைக்கு வந்து சேர்ந்ததே ஒரு வினோதமான சரித்திரம்.

உடுப்பிக்கு அருகேயுள்ள கடற்கரை கொந்தளித்துக் கொண்டிருந்தது. சரக்குக் கப்பல் ஒன்று மூழ்கும் அபாயத்தில் இருக்கவே, அதிலுள்ள

சாமான்கள் வேக வேகமாய் இறக்கப்பட்டன. ஒரு பெரிய நீளமான சந்தனக் கட்டி. அதை ஸ்ரீ மத்வரிடம் கொண்டு வந்து கொடுத்தான் மாலுமி. "இது என்னவென்று உனக்குத் தெரியுமா?" மத்வர் கேட்க, "அபிஷேகத்துக்குப் பயன்படும் சந்தனக் கட்டி" மத்வர் புன்னகைத்தார்.

"சந்தனம் சிப்பி தான்; உள்ளே முத்துஇருக்கிறது. இது தேன் கூடு.... உள்ளே அருள் செய்யும் மதுசூதனன் இருக்கிறான்" என்றவர், சீடர்களைக் கூப்பிட்டுத் தூக்கச் சொன்னார். எவராலும் தூக்க முடிய வில்லை.

"உன் பரம்பரைக்கே புண்ணியம் சேர்த்துவிட்டாய் ; நீடுழி வாழ்க" என்று வாழ்த்தியவர்,"துவாரகையை கடல் கொண்டு விட்டபோது சந்தனப் போர்வையோடு இந்த விக்கிரகம் மண்ணில் புதையுண்டு இருந்திருக்கிறது. அதனால் தான் கப்பல் புயலில் சிக்கி உடுப்பியில் கரை தட்டியிருக்கிறது" என்றவர் அதைத் தானே தோளில் சுமந்து உடுப்பியில் ஸ்ரீ அந்தேஸ்வரஸ்வாமி ஆலயத்தின் அருகில் உள்ள மானஸஸரோவத்தில்



நீராட்டினார். சந்தனம் கரைந்து ஸ்ரீ கிருஷ்ண விக்ரஹம் வெளிப்பட்டது. அதை வேத கோஷங்களோடு உடுப்பியில் பிரதிஷ்டை செய்தார். பிரதிஷ்டை செய்த நாள் மகர சங்கராந்தி.

ஸ்ரீ மத்வர் வாழ்ந்த இல்லம் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அவர் படித்த பாடசாலை, அவர் நீராடிய திருக்குளம், அவர் விளையாடிய இடங்கள், அவர் நட்ட விருட்சம், மலைப்பாம்பு மிதியுண்டு இறந்த இடம் எல்லாவற்றைம் அந்த அவதார ஸ்தலத்தில் பார்க்கலாம். ஸ்ரீ மத்வர் முதன் முதல் பூஜை செய்த குஞ்சாரகிரி துர்க்கை அம்மன் அவ்வூரில் கோவில் கொண்டிருக்கிறாள்.

'எல்லா ஜீவராசிகளிடமும் பகவான் இருக்கிறார். எல்லாரிடமும் காட்டும் கருணை, செய்யும் உதவி பகவானை போய் அடைகிறது' என்பதை பள்ளிப்பிராயத்திலேயே தைரியமாய் ஆசிரியரிடம் எடுத்துச் சொன்னவர் ஸ்ரீமத்வர். அந்த ஆசிரியரே இவரது மேதா விலாசத்தால் ஈர்க்கப்பட்டு இவரின் சீடராகி இருக்கிறார். மத்வர் நிறுவிய எட்டு மடங்கள் பாலிமார் மடம், அட்மார் மடம், கிருஷ்ணாபுர மடம், புட்டிகே மடம், ஷிரூர் மடம், சோதே மடம், கணியூர் மடம், பேஜாவர் மடம். இவற்றில் முறையே ஸ்ரீ ரிஷிகேச தீர்த்தர். ஸ்ரீ நரசிம்ம தீர்த்தர், ஸ்ரீ ஜனார்த்தன தீர்த்தர், ஸ்ரீ உபேந்திர தீர்த்தர், ஸ்ரீ வாமன தீர்த்தர், ஸ்ரீ விஷ்ணு தீர்த்தர், ஸ்ரீ ராம தீர்த்தர், ஸ்ரீ அதோக்ஷஜ தீர்த்தர் இவர்களை மடாதிபதிகளாக நியமித்தார்.

ஸோதே மடத்தின் தலைவராகத இருந்தவர் ஸ்ரீ வாதிராஜர். புரந்தரதாசர், கனகதாசர் காலத்தவர். வாதிராஜர் காலத்தில் தான் கனகதாசர் வாசல் ஏற்பட்டது.

வாதிராஜர் ஹயக்ரீவ பக்தர். இவர் தினமும்கடலைப் பருப்பை நன்கு வேகவைத்து, வெல்லம் (இடித்து) தேங்காய் (துருவிப்போட்டு) நன்றாக மசித்து நிவேதனமாக ஒருஅகலப் பாத்திரத்தில் போட்டு தலைக்கு மேல் பிடித்துக் கொண்டு ஹயக்ரீவரை தியானிப்பார். சிறிது நேரத்தில் பரந்தாமன் ஒரு வெள்ளைக் குதிரை வடிவத்தில் இவர் பின்புறமாய் வந்து தனது இரு முன்னங்கால்களையும் வாதிராஜர் தோள்மேல் வைத்துக் கொண்டு சாப்பிடுவார். தோளிலிருந்து காலை எடுத்த பிறகு திரும்பிப் பார்த்தால் குதிரை இருக்காது. மீதமுள்ள கஞ்சியே வாதிராஜரின் ஆகாரம். இதற்கு 'ஹயக்ரீவ பண்டி' என்று பெயர்.'ஹயவதனா' என்ற பட்டப் பெயரும் இவருக்கு உண்டு.

வாதி ராஜர் மத்வரின் துவைத வேதாந்தத்தை விளக்கி பல நூல்கள் எழுதியவர்.

மகாரஷ்டிரத்தில் ஒரு கோடீஸ்வரரின் மகனாகப் பிறந்த ஜயதீர்த்தர் செல்வத்தையும், சுகபோகத்தையும் உதறிவிட்டு ஸ்ரீமத்வரின் முதல் சீடரான அஷோப்ய தீர்த்தரின் சீடராகி மத்வரின் நூல்களுக்கு விளக்க உரை எழுதியவர். இந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் செய்து மத்வரின் தத்துவங்களை எளிய முறையில் எடுத்துச் சொன்னவர்.

ஸ்ரீ மத்வரின் தத்துவத்தைப் பின்பற்றிபாடல்கள் இயற்றியவர் ஸ்ரீ வியாஸராயர். புரந்தரதாசர், கனகதாசரின் குரு. கிருஷ்ணதேவராயரின் ஞான குரு. சந்திரகிரி மன்னரான சாளுவ நரசிம்மரால் சமஸ்கிருதத் திலும் கன்னடத்திலும் பெற்ற புலமைக்காக வைராபிஷேகம் செய்யப்பட் ஸ்ரீ பாத ராஜரின் சிஷ்யர்.

ஸ்ரீ விஜய தாசர், ஸ்ரீ சேஷதாசர், ஸ்ரீபிரசன்ன வெங்கட தாசர், ஸ்ரீ புரந்தர தாசர், ஸ்ரீ பிராணேச தாசர், ஸ்ரீ கோவிந்த தாசர் இப்படி எண்ணற்ற தாச பரம்பரைக்கு ஸ்ரீமத்வர் வேராக இருந்தார்.

இந்த புண்யரின் சரித்திரம் படிப்பவருக்கும், கேட்பவருக்கும் ஸ்ரீ கிருஷ்ணனின் அருளையும், தைரியத்தையும், ஆரோக்கியத்தையும், கீர்த்தியையும், கல்வியையும், அளிக்கும் என்பது சர்வ நிச்சயம்.

93. ஸ்ரீ போதேந்திரர்

"ஸ்ரீராம ஹரே! ஸ்ரீ ராம ஹரே! ராம ராம ஸ்ரீ ராம ஹரே"

"காமாட்சியும்,ஈசனும் அருள்பாலிக்கும் இந்த காஞ்சி காமகோடி பீடத்தில் சதா ராம பஜனையாய் இருக்கிறதே!" ஒரு உண்மையான சீடன் தன் நண்பனிடம் கிசுகிசுத்தான்.

"உஷ்... குருநாதர் காதில் விழுந்து வைக்கப்போகிறது. ராம நாமத்தின் பெருமையை ஈசுவரன் அம்பிகைக்கு விளக்கி இருக்கிறார் என்று அன்றே யாருக்கோ விளக்கம் சொன்னாரே! அம்பிகையின் சகோதரன் திருமால். தவிர ராமாவதாரமே சக்தியின் வடிவம் என்று

சொல்கிறார்கள். சங்கர நாராயணராய் சங்கரன் கோவிலில் காட்சி தரவில்லையா, அதோபார்..... யாரோ ஒரு ஐந்து மாதக் குழந்தையைக் கொண்டு வருகிறார்கள்.... பார்ப்போம் வா..”

“குழந்தை அழகாய் இருக்கிறது. நெற்றி விசாலமாய் இருக்கிறது. அறிவும்,ஞானமும் நிரம்பி இருக்கும், கண்களைப் பார்த்தால் கருணை நிறைந்தவன் என்று தோன்றுகிறது. தீர்க்கமான நாசி புத்திசாலித் தனத்தைக் காட்டுகிறது. ஆனால்.....” குரு ஆத்மபோதர் தயங்கினார். “ஆனால் என்ன ஸ்வாமி.... அனாதைக் குழந்தையே என்ற யோஜிக் கிறீர்களா?

“அனாதையாவது.... அதெல்லாமில்லை.... உறவு என்று அன்பு காட்டினால் உலகமெல்லாம் சொந்தம். கடூரமாய் நடந்து கொள் கிறவனுக்கு பெற்றவரே எதிரிகள். குழந்தை நறுக்நறுக்கென்று கடித்தால் பத்து மாதம் சுமந்தவள் அடித்து விடுகிறாள். கை நகங்கள் உடலைக் கிழித்தால் மறு நிமிஷமே கிள்ளி எறிகிறோம். இளம் பிராயத்தில் சமாதி அடைவது பக்தர்கள் மனத்தில சஞ்சலத்தைக் கிளப்பாதா?”

எல்லோரும் வாயடைத்து நின்றனர். குழந்தைக்கு ஞான சாகரன் என்று பெயர் சூட்டினார் குரு நாதர் அவனும் ஞானக் கடலாகவே வளர்ந்தான்.

“ என்பேர் கேசவ பாண்டு ரங்கன். இவள் என் மனைவி சுகுணாபா ய். குழந்தைக்குத் தங்கள் திருவாக்கால் பெயர் சூட்டி ஆசீர்வதிக்க வேண்டும்” என வேண்டினார் தந்தை. புருஷர்களில் உத்தமனா யிருப்பான். அதனால் ‘புருஷோத்தமன்’ என்றழைக்கலாம்” என ஆசி வழங்கினார் ஆத்மபோதர்.

“விட்டலனை வேண்டிப் பிறந்தவன். அவன் நாமமே தங்கள் வாக்கில் வந்தது எங்கள் பாக்கியம்” கேசவ பாண்டுரங்கயோகியும், சுகுணாபாயும் மகிழ்ச்சியுடன் விடை பெற்றனர்.

புருஷோத்தமன் வளர்ந்தான். தந்தை பாண்டுரங்க பஜனை செய்யும் போது தானும் தனது பிஞ்சுக் கைகளால் தட்டி பஜனை செய்வான். பெற்றோர் காஞ்சி மடத்துக்கு வரும் போதெல்லாம் புருஷோத்தமனின் பக்திப் பற்றியே பெருமையாய் பேசினார்கள்.

"அம்மா, சுகுணா.... நான்ஒன்று சொல்கிறேன். செய்கிறாயா? இவனை ஸ்ரீமடத்துக்குக்கொடுத்து விடேன். இங்கே வந்தாலும் ஞான சாகரனை விட்டுப்போக மாட்டேனென்று அடம்பிடிக்கிறான். இங்கே சாப்பாட்டுக்குப் பஞ்சமா? கவனிக்க ஆளில்லையா? எப்போதும் பூஜை, சத்சங்கம் என்ற நல்ல விஷயங்களிலேயே மனம்செல்லும்" ஆத்ம போதர் வார்த்தைக்கு மறு பேச்சில்லை. புருஷோத்தமனும், ஞான சாகரனும் ஒன்றாக வளர்ந்தனர். ஒருவனைக் காணோம் என்றால் மற்றவனைத் தேடுவார்கள். அந்த அளவு நெருக்கம். ஒன்றாகச்சாப்பிட்டு, ஒன்றாகத் தூங்கி, விளையாட்டுக்குக் கூட சண்டைப் போட்டுக் கொள்ள மாட்டார்கள்.

கீர்வாணேந்திர சரஸ்வதி என்னும் பெரியவரிடம் வேதம் கற்க அனுப்பினார் ஆத்ம போதர். இருவரும் பணிவுடன் சாஸ்திர ஆகமங்களைக் கற்றுத் தேர்ச்சி பெற்றனர்.

"புருஷோத்தமா..... நாதோபாசனையால் பக்தியைப் பரப்புவாய். தீர்க்காயுஷ்மான் பவ: " என்றார் குரு. "ஸ்வாமி, ஞான சாகரனையும் வாழ்த்துங்கள்" என்றான் புருஷோத்தமன்"

"உன்னை மடத்துக்கு இழுத்த காந்தத் துண்டு ஞான சாகரன். நீ காரிய கர்த்தா; அவன் காரண கர்த்தா; வாழைப்பழத்தோல் போல் அவன். பாலிலிருந்த பிரிந்த நெய் மறுபடி பாலோடு சேரமுடியாது.

குருவின் பேச்சு சிஷ்யர்களுக்குப் புரியவில்லை. "குரு காசிக்குப் போகப் போகிறார். நாங்க எல்லாரும் போகிறோம். நீங்க இரண்டு பேர் மட்டும் கிடையாது" ஞான சாகரன் திகைத்து நிற்க புருஷோத்தமன் ஆத்ம போதரிடம் ஓடினான்.

"நீங்க எல்லாரையும் காசிக்குக் கூட்டிண்டு போறேளாமே! நாங்க ரெண்டு பேர்மட்டும் கிடையாதாமே!"

"ஆமாம்" குரு பொறுமையாய் பதில் சொன்னார்.

"ஏன்?"

"ஒருவருக்கொருவர் ஆறுதலாயிருக்க.... உனக்கு காசிக்குப் போக நேரம் வரும். மனதை திடமாய் வைத்திரு. எதுவும் நிலையானதல்ல....

உணர்ச்சி வசப்படாதே... கோபமும், துக்கமும் ஆயுளைக் குறைக்கும். நாம் இந்த மண்ணில் என்ன செய்திருக்கிறோம் என்று ஒவ்வொரு மனிதனும் எண்ணிப் பார்க்க வேண்டும். புத்தியைக் கட்டுப் பாட்டில் வைத்திருப் பவனே புத்திசாலி''

'ஏன் இப்படி சம்பந்தா சம்பந்தமில்லாமல் பேசுகிறார் குருநாதர்' புருஷோத்தமன் குழம்பிக் கொண்டிருக்கும்போதே காசியாத்திரையின் முதல் கட்டமாக இராமேஸ்வரம் சென்று விட்டார் ஆத்மபோதர். அக்காலத்தில் இராமேஸ்வரததிலிருந்து மணல் எடுத்து வந்து கங்கையில் போட்டு, எல்லா ஸ்நான கட்டங்களிலும் நீராடி, மறுபடி கங்காஜலம் எடுத்துவந்து இராமலிங்கத்துக்கு அபிஷேகம் செய்து, வழியில் உள்ள புண்ய தீர்த்தங்களில் நீராடி, ஸ்தல தரிசனம் செய்து கொண்டு, பக்தர்களின் வேண்டுகோளை ஏற்று அன்னபிக்ஷை செய்து, கிட்டத்தட்ட ஒரு வருஷம் ஆகும்.

சில மாதங்களில் புருஷோத்தமனின் பெற்றோர் ஒருவர் பின் ஒருவராக மரித்தனர். குருவின் வார்த்கைள் புருஷோத்தமனுக்கு விளங்கியது.

'நாம் இருவரும் சமமாகி விட்டோம்' என்று ஞான சாகரனை அணைத்துக் கொண்டு கண்ணீர் விட்டான் புருஷோத்தமன். 'காசிக்கு இருவரும் வாருங்கள்' குருநாதரிடமிருந்து அழைப்பு வந்தது. இருவரும் புறப்பட்டு சென்றனர்.

பாதி தூரம் சென்றதும் விஷக்காய்ச்சல் பற்றிக்கொண்டது ஞான சாகரனை. ''புருஷோத்தமா, நட்பென்னும் கயிறும் இற்றுக் கொண் டிருக்கிறது . நீ தனியாய் இருந்தால் தாங்கமாட்டாய் என்று தான் குருநாதர் இருவரையும் காசிக்கு வர உத்தரவிட்டிருக்கிறார். என் கண்களுக்கு பிதுர்க்கள் தெரிகிறார்கள். தேவ புருஷர்கள் நிற்கிறார்கள். குருவே துணை என்று கங்கைக்கு புறப்படு. உனக்குத்தான் வம்சவழியாக வந்த எத்தனையோ அபங்கங்களும், நாமாவளிகளும் தெரியுமே! பாடிக் கொண்டே என்னை விட்டுச் செல்'' என்று ஹீனஸ்வரத்தில் கூறினான் ஞான சாகரன்.

''நண்பா.....ஆபத்து நேரத்தில் கைவிடுவது சிறந்த நட்பல்ல.... உன் உயிர் இருக்கும் வரை என்னாலான முயற்சிகளையும், உதவிகளையும் செய்யாமல் நான் போகமாட்டேன். இந்தப் பச்சிலைச் சாற்றை அருந்து.

தேன் கலந்திருக்கிறேன். கசக்காது..... 'என்னை விட்டுப் போய் விடுவாயா? நான் அனாதைப் பையன்.... நீ என்னோடயே எப்பவும் இருக்கணும்னு ஆசையாயிருக்கு' என்று நான் எங்க அப்பா அம்மா வோடு வரும்போது கெஞ்சுவியே.... ஞாபகமிருக்கா.... அந்த உன் அன்புக்காக அந்த வயசிலே பெற்றோரைத் துறந்து வந்தவன் நான். 'பாதியிலே போ' என்று சொல்வது உனக்கு நியாயமாக படுகிறதா? இந்த விஷஜ்வரம் என்னையும் பிடித்துக் கொள்ளும் என்று பயப்படுகிறாய். விதித்தவரை அன்றி மிதித்தாலும் தீண்டாது நாகம்! வியாதிகளும் அப்படித்தான்! யமன் பழி ஏற்பதில்லை! அவன் புகும் மார்க்கம் கோடி..... அதில் இதுவும் ஒன்று! அவ்வளவுதான்! கொஞ்சம் சாய்ந்தாற் போல் உட்கார்ந்து கொள்கிறாயா? தலைவலிக்கு சுக்கு உரைத்துப் பற்றுப் போடுகிறேன்"

புருஷோத்தமனின் அடுத்த வார்த்தைக்குள் இசிப்பு கண்டு விட்டது. ஞானசேகரனை அடக்கம் பண்ணிவிட்டு காசிக்குப் போனான் புருஷோத் தமன்.

"தனியாக ஆகிவிட்டேன்....உலக வாழ்வே எனக்குப் பிடிக்கவில்லை. ....கங்கையில் செத்தால் முக்தி என்றுதான் இங்கு வந்தேன்."

புருஷோத்தமனின் புலம்பலைக் கேட்ட ஆத்ம போதர்,"புருஷோத்தமா! பக்குவமான புளி ஓட்டை விட்டு விடுகிறது. பாதுகாப்பாய் உள்ள சகுணி, தோல் எல்லாவற்றையும் ஒதுக்கிக் கொண்டு பலாச்சுளை வெளிப் படுகிறது. வெடித்த பருத்திதான் நூலாகிறது. இலையையும், வேரையும் தள்ளி விட்டு வரும் மலர்கள் இறைவனுக்கு அர்ப்பணமாகின்றன. எள்ளுக்குள்ளேயே இருப்பேன் என்று எண்ணை அடம் பிடித்தால் பகவான் திருமுன் தீபமாக எரிந்து புண்ணியம் பெற முடியமா? வெந்த அரிசிதான் நிவேதனமாகும் பாக்கியம் பெற்று, பசி தீர்க்கிறது. உலக மக்கள் அபவாதத்திற்காக சீதா தேவியாரைக் காட்டில் விட்டுவிட்டு ஸ்ரீராமபிரான் வாழவில்லையா? கடலில் துரும்பு மனித வாழ்க்கை" குருநாதர் எத்தனை எடுத்துச் சொல்லியும் புருஷோத்தமன் கேட்பதா யில்லை.

"சரி..... பகவத் சங்கல்பம் எப்படியோ அப்படி நடக்கட்டும் அருகே வா.... தாரக மந்திரத்தை செவியில் ஓதுகிறேன். ஆத்மா கடைத்

தேறட்டும்.” என்ற குருநாதர், சீடனோடு இடுப்பளவு நீரில் நின்று தாரக மந்திரத்தை உபதேசித்து ‘மூழ்கு’ என்று உத்தரவு கொடுத்தார்.

என்ன ஆச்சரியம்! மூழ்கிய புருஷோத்தமனின் மனதில் புது ஞானம் பிறந்தது. உடலும், மனமும் லேசாகியது. “ஞான சாகரன் உன்னிலும் உயர்ந்தவன். உன்னை ஆசிரமத்துக்குத் தர அவன் உதவினான். நீ என்ன செய்தாய்? பகவான் அளித்த உயர்ந்த மானிடப் பிறவியை என்னில் அழித்து என்னையும் மாசுபடுத்தப் போகிறாய்! பிணங்களும் கடைத்தேற, மனிதர்களின் பாபக் குவியல்கள் கரைய பகவான் ஆணைப்படி நான் ஒடுகிறேன். நீ பிணமுமல்ல.... பாவியுமல்ல.... பக்தி என்னும் அரிய பொக்கிஷத்தை உன்னிடம் அளித்து ‘அதை வளர்த்து எல்லோருக்கும் பகிர்ந்து கொடு” என்ற பகவானின் வார்த்தையை மீறி ஆத்மஹத்தி செய்து கொள்ளப் போகும் நீ ஒரு கோழை. கோழைகளுக்கு மறுபிறவி சிறப்பானதாக அமையாது” கங்காதேவி ஒரு க்ஷணத்தில் அத்தனையும் சொன்னாள்.



மூழ்கியவன் எழுந்தான் புதுப்பிறவியாக. இப்போது அவனிடம் பந்த பாசம் இல்லை. அதனால் வருத்தமும் இல்லை! ஆத்மபோதர் மகிழ்ச்சியுடன் "புருஷோத்தமா! காசியில் எதையாவது விட வேண்டும் என்பார்கள். நீ பழைய வாழ்க்கையை விட்டிருக்கிறாய்! எல்லாம் தாரக நாமத்தின் மகிமை! கங்கையின் பெருமை! இங்கேயே உனக்கு தீட்சை அளிக்கிறேன்" என்று ஆசி வழங்கி காஷாய உடை களைக் கொடுத்தார். பகவான் நாம போதேந்திர சரஸ்வதி என்ற திரு நாமமும் சூட்டினார்.

"போதேந்திரா, நீ காஞ்சிக்குச் சென்று காமகோடி பீடத்தில் அமருமுன் பூரி ஜகன்னாதம் சென்று ஜகன்னாதரை தரிசிக்க வேண்டும். அங்கே கோவிலில் 'லட்சுமி காந்தக் கவி' என்று கேள். அடையாளம் சொல்வார்கள். அவரிடம் 'நாம கௌமுதி' நூல் வேண்டும் என்று கேள். தருவார். உன் பஜனைக்கு ஏற்ற நூல்" என்றார் ஆத்ம போதர்.

குருநாதர் சொன்னபடியே பூரிக்குச் சென்று ஜகன்னாதரை தரிசித்தார். எவரிடம் விசாரிப்பது? ஜகந்நாதனை விட அறிந்தவர்களும் உண்டோ? நீ தான் வழி காட்ட வேண்டும் ' என்று தியானத்தில் ஆழ்ந்து விட்டார். ஆலயம் மூடும் நேரம். அர்ச்சகர்கள் நினைவூட்ட எழுந்து நடந்தார். கால் வலித்தது. ஒரு அகலமான திண்ணையுள்ள வீட்டில் வந்து படுத்துக் கொண்டார்.

கொஞ்ச நேரம் சென்றது. எவரோ ஒருவர் கதவை இடித்தார். கூட இருந்த பெண் (காலில் மெட்டி இருந்தது) முஸ்லீம்கள் போல் கறுப்புத் துணியால் முகம் மறைத்திருந்தாள்.

கதவு திறந்தது. கதவைத் திறந்தவர் லாந்தரைத் தூக்கிப்பிடித்து அவர்களை ஏற இறங்கப் பார்த்தார். வந்தவர் கதவைத் திறந்தவரின் கால்களில விழுந்து,

"ஸ்வாமி, இவள் என் மனைவி; நாங்கள் வழிப்பயணம செய்யும்போது சில பாதகர்கள் இவளைக் களவாடிச் சென்று விட்டார்கள். இவள் தூய்மை பறிக்கப்பட்டது. எப்படியோ தப்பி என்னிடம் வந்து 'உங்களை விட்டால் எனக்குக் கதி இல்லை ' என்று அழுகிறாள். இவளை ஏற்றுக் கொண்டால் ஊர் தூற்றும். இவளது இந்த நிலைக்கு இவள் எப்படிப் பொறுப்பாளி யாவாள்? என் மனசாட்சி உறுத்துகின்றது. எனக்கு சரியான வழி காட்ட வேண்டும் " என்று கண்ணீர் விட்டார்.

"எழுந்திருங்கள்.... இவளை ஏற்றுக் கொண்டு குடும்பம் நடத்த உங்களுக்கொன்றும் ஆட்சேபணை இல்லை! ஊரார் பழி வராதிருக்க நல்ல ஆதாரம் வேண்டும். அவ்வளவு தானே! நாளை காலையில் சூரியோதயத்திற்குப் பின் இவளோடு ஊர் எல்லையில் உள்ள 'சந்தன் தலாப்' என்ற திருக்குளத்துக்கு வாருங்கள். ஊராரது கேள்விக்குக் கோபப்படாமல் விளக்கம் சொல்லிக் கொண்டிருங்கள். அகலிகை சாபம் தீர்த்த அந்த ஆத்ம ராமனை நினைத்து செயல்படுங்கள். ராமன் கைவிடமாட்டான் " என்று கூறிவிட்டு கதவைத் தாளிட்டுக் கொண்டு போனார். வந்தவர்," வா, லட்சுமி காந்தக் கவியிடம் போனால் விமோசனம் கிடைக்கும் என்று சொன்னேனில்லையா? " என்று சொல்லிக் கொண்டே படி இறங்கினார்.

'பளீர்' என்ற வார்த்தைகள் போதேந்திரர் நெஞ்சில் இறங்கியது. 'ஆக, லட்சுமி காந்தக் கவி வீட்டுத் திண்ணையில் தான் ஜகன்னாதன் கொண்டு சேர்த்திருக்கிறான்! காலை சந்தனப் பொய்கையில் தீர்ப்பு எப்படி என்று பார்த்து விட்டுப் பேசுவோம்' என்று மௌனமாகப் படுத்து விட்டார்.

விடிந்தது. குளிக்கலாம் என்று குளத்தருகே போனால் குளத்தைச் சற்றி ஒரே கூட்டம். கசமுச வென்று பேச்ச சப்தம். அந்தப் பெண் கண்ணீரோடு ஒரு ஓரமாய் உட்கார்ந்திருந்தாள். அவளருகே இருந்த ஆடவர் கேட்பாருக்கெல்லாம் பொறுமையாய் பதில் சொல்லிக் கொண் டிருந்தார்.

கவி லட்சுமிகாந்தர் வந்தார். பேச்சு சப்தம் நின்றது. கம்பீரமான குரலில் லட்சுமி காந்தர்,

"ஜகந்நாதபுரியின் பிரஜைகளே! இதற்குள் உங்கள் எல்லோருக்கும் இந்த பெண்ணுக்கு ஏற்பட்ட அவலம் புரிந்திருக்கும். அபலை. அழகி. அநாதையாய் விட்டால் நாசப்படுத்தி விடுவார்கள். உங்களுக்கெல்லாம் ஒன்று சொல்லிக் கொள்கிறேன். ஒவ்வொரு ஆடவனும் நம் தாய், சகோதரி, மனைவி, பெண்ணுக்கு இந்தத் துன்பம் நடந்ததாக உணர வேண்டும். ஒவ்வொரு மங்கையரும் தனக்கே இத்துயரம் வந்ததாகப் பாவித்து இவளிடம் கருண காட்ட வேண்டும். பெண்ணே, இது சீதா தேவிக்கு திருமஞ்சன மாட்டிய கஸ்தூரி மஞ்சள். இதை உடலெல்லாம் பூசிக் கொள். இந்த சந்தனக் குளம் லக்ஷ்மணன் வளர்த்த அக்னி குண்டம்.

நடுக்குளத்துக்கு சென்று நன்றாக மூழ்கி எழுந்திரு. பெண் உடலால் பலஹீனமானவள். ஆனால் அவளது சக்திகள் நெருப்புக்கும், நீருக்கும் மேல். அவள் கடலை விட ஆழமானவள். பூமியை விடப் பொறுமை யானவள். ஆகாயத்தைவிட விஸ்தீரணமானவள். பெண்மையைச் சீண்டினால் அனலாய் பற்றி எறிவாள். வெள்ளமாய் அணை உடைப்பாள். பூகம்பமாய் வெடித்துச் சிதறடிப்பாள். கடலெனப் பொங்கி எழுவாள். மேகமென இடியாய் முழங்குவாள். ராமபிரான் இங்கு அரூபமாய் இருக்கிறார். அவர் தீர்ப்புக் கூறியபிறகு நடந்தவைகளை அனைவரும் மறந்துவிட்டு நல்லிணக்கத்தோடு ஊரார் இத்தம்பதிகளிடம் பழக வேண்டும். அதைவிட்டு ஜாடை பேச்சு பேசி அவர்கள் மனத்தை வருத்து பவரின் குலம் அழிந்து போகும். இது ஸ்ரீ சீதாராமன் மேல் ஆணை" என்று பேசி முடித்தப் பின், அந்த மங்கை உடலெல்லாம் அவர் தந்த கஸ்தூரி மஞ்சளைப் பூசிக் கொண்டு தடாகத்தின் மையப் பகுதி சென்று மூழ்கினாள்.

எங்கும் ஊசி விழுந்தால் கேட்கும் நிசப்தம். எல்லோர் கண்களிலும் ஆவல் கலந்த பயம். இமைக்கவும் அஞ்சி அப்பெண் மூழ்கிய இடத்தையே



பார்த்தனர். போதேந்திரருக்கும் அந்த ஆர்வம் இருந்தது. பச்சைப் புடவை உடுத்தி மூழ்கிய அம்மங்கை நீரிலிருந்து வெளிப்பட்ட போது கஸ்தூரி மஞ்சள் நிறத்திலேயே அவள் புடவை இருந்தது. எங்கும் 'ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெய ராம் ' என்ற ஒலி காற்றில் பட்டு எதிரொலித்தது.

அப்பெண்ணின் நெற்றியில் சிவப்பு நிறத்திலகம். கைகளில் மஞ்சளும், சிவப்புமான கண்ணாடி வளையல்கள். கழுத்திலே புது மாங்கல்ய கயிறு பளபளவென மின்னியது.

"கௌதமரே! இந்த அகலிகையை ஏற்றுக் கொள்ளும். ஸ்ரீராமனின் வெகுமதி இவள்' என்றார் லட்சுமி காந்தர். எங்கும் ஒரே கோலாகலம். ஸ்ரீராமனின் மகிமையைப் பேசியபடி மக்கள் கலைந்து சென்றனர். லட்சுமி காந்தரிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார் போதேந்திரர்.

"ஓ, நீங்கள் தானா அது! என் தந்தை சொல்லிவிட்டுத் தான் போனார். போதேந்திர சரஸ்வதி தானே வந்து 'நாம கௌமுதி'யைப் பெற்றுச் செல்வார் என்று. இந்தாருங்கள்" என்று நூலை அன்புடன் கொண்டு வந்து கொடுத்தார்.

'நாம கௌமுதி'யுடன் காஞ்சிக்கு வந்து குருநாதருக்காகக் காத்திருந்தார். ஆத்ம போதர் வந்தவுடன், 'கங்கை நீரால் இராமநாதனை அபிஷேகம் செய்தால் தானே காசியாத்திரை பூர்த்தியாகும். எப்போது இராமேஸ்வரம் புறப்படப்போகிறோம்?" என்று ஆவலுடன் கேட்டார் போதேந்திரர். குருநாதர் சிரித்தார். இராமேஸ்வரம் புறப்பட்டார்கள். வழியில் 'வடவம்பலம்' என்ற ஸ்தலம். அங்கே நிஷ்டையில் அமர்ந்த ஆத்ம போதரின் நிஷ்டை கலையாமலே யோக சித்தி பெற்று விட்டார். குருநாதருக்கு அங்கேயே சமாதி அமைத்தார் போதேந்திரர்.

இராமேஸ்வரம் போகும் வழியெல்லாம் பஜனை கீதங்கள், பக்த கோடி.களோடு இராமலிங்கத்தை கங்கை நீர் கொண்டு குளிர்வித்துத் திரும்பினார். பீடாதிபதி பட்டம் அவரின் நாதோபாசனைக்கு இடையூறாய் இருந்தது. தஞ்சை மண்ணில் பெரம்பூரில் காமகோடி பீடாதிபதியைத் தேர்ந்தெடுத்து அத்வைதாத்மப் பிரகாசர் எனப் பெயர் சூட்டினார். அந்த ஊரில் ஒரு ஊமைக் குழந்தை. பெற்றோர் அவரிடம் சொல்லி கண்ணீர் விட்டனர். அருகில் குழந்தையை அமர்த்திக் கொண்டார். லட்டுப் பிரசாதத்தை விண்டு வாயில் போட்டார்.

'ரா, மா' சொல்லு' என்றார். குழந்தை திக்கித் திணறி ஆ...மா, ரா, ஆ..... என்றெல்லாம் சொல்லி, பின் பஜனை செய்யும் அளவுக்கு நாக்கைப் புரட்டியது. திருவானைக்காவலில் அகிலாண்டேஸ்வரி அம்மனுக்குத் தாடங்கப் பிரதிஷ்டை செய்தார். பூவனூரில் ராம நாமாவைச் சொல்லியே பேயை விரட்டி அடித்தார். திருவிசை நல்லூர் நிலமெல்லாம் பாளம் பாளமாக வெடித்திருந்தது. ஆறு, குளமெல்லாம் வறண்டு பையன்கள் சடுகுடு விளையாடிக் கொண்டிருந்தனர்.

ஸ்ரீதர ஐயாவாள் ஜனங்களை திருவிச நல்லூர் சிவன் கோவிலுக்கு அழைத்துச் சென்று மழை வேண்டி பூஜை செய்து கொண்டிருந்தார். பூஜை முடிந்து பஜனை நடந்தது. போதேந்திரர் பார்த்துக் கொண்டிருந்த போதே மழை சிறு தூறலாகத்தொடங்கி கொட்டு கொட்டென்று கொட்டியது. தெருவெல்லாம் வெள்ளம். போதேந்திரர் கோவிலில் ஸ்ரீதர ஐயாவாளை சந்தித்தார். இருவரும் சேர்ந்து இராமனை, கண்ணனை, சிவனை கான மழையால் நீராட்ட மழையும் நிற்காமல் பெய்தது.

காஞ்சிக்கு அத்வைதாத்ம ப்ரகாசரை அனுப்பிவிட்டு திருவிடை மருதூருக்கருகில் உள்ள கோவிந்த புரத்தில் தங்கி விட்டார் போதேந்திரர். தினமும் வீர சோழன் ஆற்றில் நீராடுவார். ராம நாம பஜனை செய்வார். "அப்படியே சாப்பிட்டால் சாதம்; பகவானுக்குக் காட்டி விட்டு சாப்பிட்டால் பிரசாதம்" என்று சொல்லி விநியோகிப்பார். "இந்தக் கனி உதிரும் காலம் நெருங்கி விட்டது" என்று சீடர்களிடம் சொன்னார். சீடர்களும், பக்தர்களும் அவர் பிரிவை எண்ணி கண்ணீர் உகுத்தனர்.

தினமும் மணலில் குழி தோண்டி அதில் அமர்ந்து தியானிப்பார். மழை பெய்தாலும், வெயில் அடித்தாலும், பனி கொட்டினாலும் தியானம் முடியாமல் எழுந்திருக்க மாட்டார். மாலையில் விளையாட வரும் குழந்தைகள் அவரை வெளியே எடுப்பார்கள். பஜனை நாமாவளிகளை அவர்களுக்கும் சொல்லிக் கொடுத்து அவர்களோடு சேர்ந்து தானும் கூத்தாடுவார். இது தினமும் அவ்வூர் மக்கள் கண்ட காட்சி.

புரட்டாசி மாத பௌர்ணமி. போதேந்திரர் வழக்கம் போல் யோக நிஷ்டையில் ஆழ்ந்தார். சாயங்காலம் அவரை எழுப்ப வந்த குழந்தைகளால் அவரைத் தூக்க முடியவில்லை! கூச்சல் போட்டார்கள். கூச்சல் சப்தம் கேட்டு விரைந்து வந்த பக்தர்கள் அவர் சமாதி ஆகி விட்டதைப் புரிந்து

கொண்டார்கள். செய்தி கேட்டு ஊர் கூடியது. போதேந்திரரின் சமாதி வீரசோழன் ஆற்றின் பெரு வெள்ளத்தில் மண்ணிற்குள் மறைந் திருக்கிறது. இன்றும் ஆற்றங்கரையில் புரட்டாசி பௌர்ணமியில் பக்தர்கள் அவருக்கு பஜனாஞ்சலி செலுத்துகிறார்கள். அங்கே நாத மணம் கமழ்கின்றது.

இந்த போதேந்திரரின் சரித்திரம் படிப்பவரையும், கேட்பவரையும் காமாட்சி, திருமால் இருவரின் திருவருளுக்கும் பாத்திரமாக்கும்.

94. பூஜ்ய ஸ்ரீ ராகவேந்திரர்

மகாமக குளம் இருக்கும் குடந்தையில் திம்மண்ண பட்டருக்கும், கோபம்மாவுக்கும் பிறந்த இளைய மகன் வேங்கடநாதன். மூத்த மகன் பெயர் குருராஜன். திம்மண்ண பட்டர் சிறந்த வீணை வித்வான். இரு புதல்வர்களுக்கும் வீணை கற்றுக் கொடுத்தார் திம்மண்ணா. ஆனால் வேங்கட நாதனுக்கு உபநயன பருவம் வருவதற்குள் திம்மண்ணா இறைவனடி சேர்ந்ததால், தமையனே தந்தையின் ஸ்தானத்தில் கடமைகளைச் செய்து வந்தார்.

ஸ்ரீமடத்தில் அப்போது ஸ்ரீ சுதீந்திர தீர்த்தர் தலைவராக இருந்தார். அவரிடம் தம்பியை ஒப்படைத்தார் குருராஜன். வேங்கடநாதன் பாடம் நடக்காத நேரங்களில் அடிக்கடி தியானத்தில் ஆழ்ந்து விடுவான். உடன் பயிலும் மாணவர்கள் "நாமெல்லாம் படுத்துக் கொண்டு தூங்குகிறோம். வேங்கடநாதன் உட்கார்ந்தே தூங்குகிறான்" என்று கேலி செய்தாலும் வேங்கடநாதன் அதைப் பொருட்படுத்து வதில்லை.

யாரும் சுலபத்தில் வராத இடமாகப் பார்த்து இருட்டு கவிழும் வரை அன்றைய பாடங்களில் தனக்குத் தோன்றிய விளக்கங்களை எழுதுவான். எழுதும்போதே சில சமயம் நிஷ்டையில் ஆழ்ந்து விடுவான்.

ஒருநாள் முன்னிரவு. நந்தவனத்து மேடையில் தியானத்தில் ஆழ்ந்திருக்கும் வேங்கட நாதனை குருநாதர் கண்டார். மார்கழி மாதப்பனி

பெய்து கொண்டிருந்தது. தனது சால்வையை வேங்கடநாதன் உடலில் போர்த்தினார். பக்கத்திலிருந்த நோட்டுப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு தனது அறைக்கு வந்து விட்டார். காடா விளக்கைத் தூண்டி நோட்டைப் புரட்டிப் பார்த்தார். "ஸ்ரீமன் நியாய சுதா" வுக்கு தெளிவான விளக்கங்கள் எழுதப்பட்டிருந்தது. எத்தனை கரடு முரடான ஸ்லோகங்கள்! வேங்கட நாதனுக்குள் இத்தனை அறிவுப் புதையலா? பிரமித்தார். நோட்டில் அவனது விளக்கங்கள் படிக்கப் படிக்க தெவிட்டாததாயிருந்தது. நள்ளிர வானதைக் கூட அவர் உணரவில்லை.

மறுநாள் சால்வையை ஒழுங்காய் மடித்து குருவின் அருகில் வைத்து, கைகட்டி, வாய் பொத்தி "இதை எவர் என்மேல் போர்த்தினாரென்பது எனக்குத் தெரியாது. அதோடு எனது நோட்டுப் புத்தகத்தையும் காண வில்லை" என்று கண்ணீர் மல்கக் கூறினான் வேங்கடநாதன்.

"நான் தான் போர்த்தினேன். அதோடு நோட்டுப் புத்தகமும் என்னிடம் தான் இருக்கிறது என்ற ஆசிரியர் "ஞானக் கடலடா நீ " என்று கட்டி அணைத்துக் கொண்டார்.

பிறகு "வேங்கடநாதா, மலர்களின் வாசனை போல் சில கருத்துக் களுக்கும் சுகந்தம் உண்டு. உனது விளக்கங்களின் பரிமள சுகந்தம் மனதுக்கு மிகவும் ரம்யமாயிருக்கிறது. 'ஸ்ரீமன் நியாய சுதா'வின் எல்லா ஸ்லோகங்களுக்கும் நீயே உரை எழுத வேண்டும். இன்று முதல் உன்னை எல்லோரும்" மஹா பாஷ்ய பரிமளாச்சாரியார்" என்றழைக்கட்டும். உனது உரைக்கும் 'பரிமளா' என்ற பெயர் விளங்கட்டும்" என ஆசி அளித்தார்.

மெய் சிலிர்க்க குருநாதர் காலில் விழுந்து வணங்கினான் வேங்கட நாதன். அதன்பிறகு ஸ்ரீ மாத்வ கிரந்தங்கள் நிறையக் கொடுத்து படிக்கச் செய்தார் குருநாதர். தான் ஸ்தல யாத்திரை செல்லும் போதெல்லாம் பரிமளனையும் உடன் அழைத்துச் செல்வார். ஒவ்வொரு தீர்த்தங்களின் பெருமையைப் பற்றியும் விஸ்தீரணமாகச் சொல்வார்.

படித்து முடித்து வீடு வந்த வேங்கடநாதனுக்கு சரஸ்வதி என்ற குலமங்கையை திருமணம் செய்வித்தார் தமையன். இல்லறம் மேலும் சிறப்புற மகன் பிறந்தான். லக்ஷ்மி நாராயணன் எனப் பெயர் சூட்டி னார்கள். புவனகிரியில் பல மாணவர்களுக்கு கல்வியும், சங்கீதமும் கற்றுக் கொடுத்தார். பரிமளாச்சாரியாருக்கு இரக்கக் குணம் அதிகம். ஏழை மாணவன் என்றால் அதட்டி சம்பளம் கேட்க மாட்டார்.

"அவர்களும் நம்மைப் போலததானே சரஸ்வதி! கல்விக் கண்ணைத் திறக்கணும் என்று ஆசைப்பட்டு அனுப்புகிறார்கள். பாவம்.... இல்லாமை.... வைத்துக் கொண்டு எவரும் ஏமாற்ற மாட்டார்கள்.... கொடுக்கிறபோது கொடுக்கட்டும்" என்று சொல்வார்.

இப்படி இருந்தால் குடும்பம் எப்படி நடக்கும்? பாதி நாள் பட்டினி தான்! அதனால் சரஸ்வதியின் யோஜனைப்படி பூஜைகள், சமாராதனைக் கெல்லாம் சாஸ்திரிகள் கூடப்போய் மந்திரம் சொன்னார். 'அவர் வயிறாவது நிரம்பாதா.....' என்பது சரஸ்வதியின் எண்ணம்.

ஒரு பெரிய செல்வந்தர் வீட்டு சமாராதனை. கூட்டம் அதிகம். தலைமை ஏற்று அழைத்துச் சென்றிருந்த சாஸ்திரிகள் ஒவ்வொரு வரையும் விரட்டிக் கொண்டிருந்தார். வேங்கடநாதனைப் பார்த்து "சும்மா நிற்கிற நேரம் சந்தனத்தையாவது அரைக்கலாமில்லையா? நன்றாகப் பசி எடுக்கும். கூட ரெண்டு கவளம் சாப்பிடலாம். இரண்டு நாள் பசி தாங்கும். ஏகப்பட்ட தினுசு பண்ணியிருக்கா" என்று அமர்க்களமாய் பேசினார். அருகில் இருந்தவர்கள் வேங்கடநாதனை ஒரு மாதிரியாய் பார்க்க வேங்கடநாதன் கூனிக் குறுகினான்.

"இந்தப் பாழும் பசிக்காக எப்படியெல்லாம் பேச்சுக் கேட்க வைக்கிறா யப்பா....." என்று நொந்து கொண்டு, சந்தனம் அரைக்கத் தொடங் கினார். வாய் அக்னி ஸுக்தத்தைச் சொல்லியது. இல்லாவிடில் நாக்கு பொல்லாதது. தன்னையும் மீறி யாரையாவது எதையாவது பேசி விடுமோ என்ற அச்சம்.

பெரிய சந்தனக்கல். இரண்டு கைகளாலும் ஆவேசமாக அரைத்தார். விழுது விழுதாக கிண்ணத்தில் வழித்தார். எல்லோரும் அள்ளி அள்ளிப் பூசிக் கொண்டனர். ஆனால் பூசிக் கொண்டவர்களெல்லாம் தடாகத்தைத் தேடி ஓடினர். சிலர் தவித்தனர். குளிர வேண்டிய சந்தனம் அனலாய் பற்றி எரிந்தது. பூசியவர்கள் உடலெல்லாம் சிவந்தது. 'எரிகிறதே, எரிகிறதே' என்று துடித்தனர்.

இத்தனை பேர் துன்பத்துக்கும் மனத்துள் தான் அடக்கி வைத்த கோபம் தான் காரணம் என்பதை பரிமளர் உணர்ந்தார். அதற்குள் கிராம அதிகாரி வந்தார். உடன் சமாராதனை நடத்தும் பணக்காரரிடம்,

"ஐயா, சந்தனம் எரிவதின் காரணம் என்ன?" என்று அதிகாரி கேட்க, அக்னி ஸுக்தம் சொல்லிக் கொண்டே சந்தனம் அரைத்து விட்டேன்.

இதோ வருண ஸுக்தத்தைச் சொல்கிறேன்! என்று பரிமளர் வருண ஸுக்தம் சொல்ல எல்லாருக்கும் எரிச்சல் நின்று 'தண்'ணென்றிருந்தது.

எல்லோரும் "இவர் மகான்; அக்னி ஸுக்தத்துக்கு இவர் நாவிலிருந்து புறப்பட்டதால் தான் இத்தனை சக்தி" என்று இவர் பாதங்களில் விழுந்து வணங்க, இவரை விரட்டிய சாஸ்திரிகள் ஒரு ஓரமாய் ஒதுங்கினார். சாஸ்திரிகள் மிரட்டியதைப் பார்த்தவர்களால் செல்வந்தருக்கு சமாசாரம் புரிய வர குடும்பத்தோடு பரிமளர் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, இவரை அருகிலிருந்து கவனித்து சாப்பாடு போட்டு சம்பாவனை செய்தார். அதோடு இவரது இல்லத்திற்கும் நெல்மூட்டை, பருப்பு வகைகள், உயர்ந்த ஆடை அணிகள் தந்து கௌரவித்தார்.

"செக்களவு பொன் இருந்தாலும் செதுக்கித்தின்றால் எத்தனை காலம் வரும்? தவிர எவர் பசி என்று வந்தாலும் அவர் மனம் தாங்காது. 'சரஸ்வதி' என்று குரல் கொடுப்பார். இந்த நிலையில் அவரால் முழு ஈடுபாட்டோடு எந்த நூலும் எழுத முடியவில்லை. "குழந்தைக்கு உடம்பு சரியில்லை; பக்கத்து வீட்டில் துர்மரணம்; ராகவனுக்குக் கடன் தொல்லை; தேசிகாச்சாரி பெண் கல்யாணம் நின்று போய் விட்டது" இப்படி தினம் ஒரு செய்தி வரும். அதோடு பரிமளரைத் தேடிவந்து முறையிடுபவர்களும் ஏராளம். இதையெல்லாம் பார்த்தாள் சரஸ்வதி!

"இதோ பாருங்கள்.... வீட்டிலிருந்தால் உங்களால் எதுவும் எழுத முடியாது. பேசாமல் மடத்துக்கே போய் விடுங்கள். நிம்மதியாய் எழுதலாம். அவரவருக்கு ஆயிரம் பிரச்சினைகள். அவைகளெல்லாம் உங்கள் ஒருவராலேயே தீர்க்கப்பட்டு விடுமா? ஸ்ரீமடத்திலிருந்து நெல்லும், மற்ற சாமான்களும் வந்திருப்பதால் எங்கள் வயிற்றுப் பாட்டுக்கும் கவலை இல்லை" என்று சரஸ்வதியே பரிமளரை ஸ்ரீ மடத்துக்கு அனுப்பி வைத்தாள்.

பரிமளரின் இலக்கியப் பணி ஸ்ரீமடத்தில் தொடர்ந்தது. சமயம் பார்த்து குருநாதர் தனக்குப்பின் ஸ்ரீ மடத்தின் பொறுப்புக்களை ஏற்கும்படி வேண்டிக் கொள்ள பரிமளர் குழம்பினார்.

"ஒரேயடியாய் இல்லறத்தைத் துறக்கவா உங்களை ஸ்ரீமடம் அனுப்பி னேன். ஒரு குழந்தைக்கு தகப்பனாரின் கடமைகள் எவ்வளவு பாக்கி நிற்கின்றன? சின்னஞ்சிறு அபலைப் பெண்ணான நான் என்ன செய்து

குழந்தையை ஆளாக்குவேன்" என்ற சரஸ்வதியின் கேள்விகளுக்கு என்ன பதில் சொல்வது? கலங்கிய மனதுடன் நந்தவனத்தில் உலாவிக் கொண்டிருந்தவர் அப்படியே அயர்ந்து சாய்ந்து விட்டார்.

இனிய வீணை இசை. கண்விழித்துப் பார்த்தார். எதிலே கலைவாணி தான் வீணை இசைத்துக் கொண்டிருந்தாள். அலை பாய்ந்த மனம் அமைதியுற்றது.

மகளை, மனைவியை, வீட்டைத் துறந்தார். சுதீந்திர தீர்த்தரிடம் துறவு கொள்ள சம்மதம் தெரிவித்தார். குருநாதர் அடைந்த மகிழ்ச்சி அளவிட முடியாதது.

தஞ்சையில் மன்னர் ரகுநாத பூபாலர் முன் பீடாரோகண விழா நடை பெற்றது. மன்னர் பவனிவந்த சுவாமிகளுக்கு வெண் சாமரம் வீசினார் "ஸ்ரீ ராகவேந்திர தீர்த்த பாதங்களவரு" என்ற திருநாமம் சூட்டப்பட்டு ஸ்ரீ மாத்வ பீட அதிபதியாக நியமிக்கப்பட்டார்.

ருக்மிணி தேவி பூஜித்த கிருஷ்ண விக்ரகத்தை உடுப்பியில் ஸ்ரீமத்வாச்சாரியார் ஸ்தாபிதம் செய்தது போல், சீதாதேவி பூஜித்த மூலராமரையும், மற்றும் புனித ராம விக்ரகங்களையும் பூஜை செய்யும் பாக்கியம் ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளுக்குக் கிடைத்தது. சுதீந்திர தீர்த்தர் ஸ்தல யாத்திரைக்குச் சென்றார். முறைப்படி பூஜை செய்து வந்தார் ஸ்ரீ ராகவேந்திரர்.

ஒரு நாள் அபிஷேகப் பால் சரிந்தது. ஸ்ரீ ராகவேந்திரர் கண்மூடி தியானித்தார். தடங்கலுகுக் காரணம் புரிந்தது. விரிந்த தலையுடன் சரஸ்வதி, "அக்னி சாட்சியாய் கை பிடித்த மனைவியைத் துறக்க எந்த சாஸ்திரம் சொல்கிறது? நிர்க்கதியாய் விடப்பட்ட நான் கிணற்றில விழுந்து தற்கொலை செய்து கொண்டேன் என்பதையாவது தாங்கள் அறிவீர்களா? நம் குழந்தை அனாதை ஆகிவிட்டது. பார்த்தீர்களா? ஆவியான நான் உங்களை அலைக் கழிப்பேன். எங்களை பரிதவிக்க விட்ட உங்களை நிம்மதியாய் பூஜை செய்ய விடமாட்டேன்" என்று அழுதாள்.

ஸ்ரீ ராகவேந்திரர் " சரஸ்வதி! அக்னி சாட்சியாய் கை பிடித்தவனை எமன் கொண்டு போனால் என்ன செய்கிறார்கள்? இந்த உலகத்தில எவருமே அனாதைகள் அல்ல. அனாதரட்சகன், ஆபத்பாந்தவன்

ஸ்ரீராமன். பூக்கும் மலர்களெல்லாம் பூஜைக்கு போவதில்லை! சில பிணத்துக்கும் போகின்றது. அது அது அவரவர் தலைவிதி! தற்கொலை செய்து கொள்ளவேண்டுமென்பது பிரம்மன் உனக்கு எழுதிய லிபி. ஆனாலும் பூர்வாசிரமத்தில் நீ வேங்கடநாதன் மனைவி. நீ ஆவியாய் சுற்றுவது உலக மக்களை அவதூறு பேச வைக்கும். உனக்கு நற்கதி கிடைக்கட்டும்" என்று மந்திரம் செபித்து கமண்டல நீரைத் தெளிக்க, ஆவி மறைந்தது. அதன்பின் சரஸ்வதியின் ஆவி வரவேயில்லை.

ஒரு சமயம் தஞ்சையில் மாரி பொய்த்தது. அப்போது தஞ்சாவூரை விஜய ராகவ நாயக்கர் ஆண்டு வந்தார். ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகளிடம் வந்து நிலைமையை விவரித்துப் பரிகாரம் வேண்டினார்.

பெரிய அளவில் வருணயக்ஞம் நடத்தப்பட்டது. நெற்களஞ்சியங்களில் எல்லாம் அட்சயம் என்று எழுதச் சொன்னார் சுவாமிகள். அவ்விதமே எழுதப்பட்டது.

யாகம் பூர்ணாஹுதி ஆனதும் வானம் கறுத்து, இடி, மின்னல்களோடு மழை கொட்டியது. நிற்காமல் பெய்த மழையைக் கண்டு நாயக்கர் மகிழ்ந்து இரத்தின மாலை ஒன்றைப் பரிசாக அனுப்பினார்.

ஸ்ரீ இராகவேந்திரர் அதை திருப்பிப் பார்த்தார்–பின் கொண்டு வந்தவரையும் பார்த்தார். பிறகு அக்னியில் போட்டுவிட்டார். தூதன் போய் மன்னரிடம் சேதி சொன்னான். மன்னர் சுவாமிகளைக் காண வந்தார். பணிவுடன். "சுவாமி, தங்களுக்குக் காணிக்கையாய் அனுப்பிய இரத்தின மாலையைச் சற்றுத் தரமுடியுமா? அதேபோல் வேறொன்று செய்ய வேண்டி இருக்கிறது. செய்ததும் திருப்பித் தந்து விடுகிறேன்" என்றான்.

ஸ்ரீ ராகவேந்திரர் எதுவும் பேசவில்லை. வருணயக்ஞம் நடந்த ஹோம குண்டத்தில் அக்னி வளர்த்தார். மந்திரங்களை 'கணீர்' என்று உச்சரித்தபடி கையை நீட்டினார். கைகளில் மாலை வந்து விழுந்தது. பாம்பைத் தொடுவது போல் அதை அரசனை நோக்கி நீட்டினார் 'இந்தா'என்று. மன்னர் கதி கலங்கிப் போய் சுவாமிகள் காலடியில் விழுந்து மன்னிக்கும்படி மன்றாடினான்.

மதுரைக்குச் சென்று நீலகண்ட தீட்சிதரிடம் அளவளாவி மகிழ்ச்சி யுடன் உடுப்பி வந்து கண்ணனை மனம் குளிர தரிசித்தார். உடுப்பியில்

இருந்தவரை அவர் கண்களுக்கு மட்டும் ஒரு நாள் தவழ்ந்த கோலத்தில், அடுத்த நாள் வெண்ணை உண்டவாயனாக, அதற்கும் மறுநாள் காளிங்க நடனத்தில், மறு நாள் கோபாலனாக, அதற்கடுத்த நாள் கோவர்த்தன கிரிதாரியாக விதவிதமாக காட்சி அளித்தான்.

மைசூர் மகாராஜா சுவாமிகளை எதிர் கொண்டு சாதுர்மாஸ்ய விரதத்தை அரண்மனையில மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஒப்புக் கொண்டார் சுவாமிகள். தேவராஜபுரம் என்ற கிராமத்தையும், ஸ்ரீராமனுக்கு வைர ஆபரணங்களையும் அளித்து ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினார் மன்னர்.

சுவாமிகள் ரெய்ச்சூர் புறப்பட்டு விட்டார். போகும் வழியில் சாவனூர் என்ற கிராமம். உச்சிக்கால பூஜைக்காக அந்த ஊர் ஆற்றங்கரை அருகில் தங்கினார் சுவாமிகள். பூஜை முடிந்து தியானத்தில் ஆழ்ந்து விட்டார். நிஷ்டை கலைந்து கண் விழித்தால் எதிரே ஒரு நவாபும், அவன் மனைவியும். அந்த நங்கையின் கண்களில் கண்ணீர். காரணம் கேட்டார் சுவாமிகள்.

"ஐயனே! எங்களின் ஒரேமகன் சமீபத்தில் இறந்து விட்டான்.இவள் சோகம் நீங்க ஆறுதல் சொல்ல வேண்டும்" நவாப் வேண்டினான்.

"புதை குழியிலிருந்து உன் மகனின் சடலத்தைக் கொண்டு வா" நவாப் பரபரப்படைந்தான். மின்னல் வேகத்தில் ஊழியர்களுக்கு உத்தர விட்டான். சில மணி நேரங்களில் சவப் பெட்டி திறக்கப்பட்டது. அதற்குள் தன்வந்தரி ஜெபம் செய்த சுவாமிகள் கமண்டல நீரை அரச குமாரன் மேல் தெளிக்க குழந்தை தூங்கி விழித்தது போல் எழுந்து வந்தான். நவாப் தம்பதிகள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. நன்றியின் அடையாளமாக பல கிராமங்களை மடத்துக்கு எழுதி வைத்தான் மன்னன்.

ரெய்ச்சூரில் ஸ்ரீ இராகவேந்திரரை தரிசிக்க வந்தார் கனகதாசர். சீடர்கள் அனுமதி மறுத்தனர். குரல் கேட்டு எழுந்து வெளியே வந்தார் சுவாமிகள்.

"என் நிலத்தில் விளைந்தது. சாதுர் மாஸ்ய நைவேத்யத்துக்கு எனது சிறு காணிக்கை" என்றபடி ஒரு சிறு மூட்டை கடுகைக் கொடுத்தார். சுவாமிகள் வாங்கிக் கொண்டார். நமஸ்கரித்து விட்டுப் போய் விட்டார் கனகதாசர்.

"சுவாமி, சாதுர் மாஸ்ய விரதத்துக்கு கடுகு சேர்க்கக் கூடாதே" ஒரு சிஷ்யன் தயங்க, "சேர்க்கலாம். இதை ஒதுக்கினால் ஸ்ரீ கிருஷ்ணனின் கோபத்துக்கு ஆளாக நேரிடும். இந்த கனகதாசனுக்காக கண்ணபிரான் உடுப்பியில் திரும்பி நிற்கப் போகிறார்"என்றார்.

அன்றைய நிவேதனத்தில் கனகதாசர் கொணர்ந்த கடுகு சேர்க்கப் பட்டது. யாதவராயர் என்பவரின் சீடரான பித்ரு ஹள்ளி ஸ்ரீனிவாச தீர்த்தர் கடுகு சேர்ந்த பிரசாதம் எங்களுக்கு வேண்டாம்" என்று சொல்லி விட்டார். அதற்காக கடுகு சேர்க்காத நைவேத்யம் தனியாக எடுத்து வைத்துக் கொடுத்தார்கள். சுவாமிகளிடம் எல்லோரும் மந்திராட்சதை பெற்றுக் கொண்டனர்.நைவேத்யத்தையும், மந்திராட்சதையையும் எடுத்துக் கொண்டு யாதவ ராவைத் தேடிப் போனார் சீனிவாச தீர்த்தர்.

யாதவராவ் இவரைப் பார்த்ததும் சிடுசிடுப்புடன் "இராகவேந் திரஸ்வாமிகளிடம் மந்திராட்சதை வாங்கிக் கொண்டு வந்தாயா?" என்றார். "இதோ"என்றபடி துணி முடிச்சை அவிழ்த்து அட்சதையைக் காட்டினார்.

அட்சதை கன்னங்கரேல் என்றிருந்தது ஸ்ரீனிவாச தீர்த்தர். திடுக் கிட்டார். தூய வெண்ணிற அட்சதை கறுப்பானதெப்படி? எதனால்?

ஸ்ரீனிவாச தீர்த்தர் ஓடிவந்து ஸ்ரீ ராகவேந்திரரின் பாதங்களில் விழுந்தார்.

"சுவாமி, சாதுர் மாஸ்ய விரத நாளில் நீங்களே கடுகு சேர்த்த பிரசாதம் ஏற்கும் போது, நான் அகந்தையால் ஒதுக்கினேன். பரந்தாமனும் என் எண்ணம் தீயது என்று அட்சதை மூலம் உணர்த்தி விட்டான். இதோ கடுகு சேராத பிரசாதம்.இதை எடுத்துக் கொண்டு நீங்கள் உண்ட சேஷத்தை எங்களுக்குத் தரவேண்டும்" என்று பிரார்த்தித்தான்.

"சீனிவாசரே! பகவானை விட நாம் உயர்ந்தவர்களல்ல.... அவனுக்கு நிவேதனம் செய்பவை எல்லாம் மேன்மையானவையே! கடுகு அவன் தாசன் அளித்தது. அவனுக்கு ஏற்கும் என்றால் நமக்கு விரதபங்கம் ஏற்படுத்தாது" என்ற சுவாமிகள் தம்மோடு அவனையும் கடுகு சேர்ந்த பிரசாதத்தை உண்ணச் செய்தார். என்ன ஆச்சரியம்! மடியிலிருந்த அட்சதை கீழே விழுந்தது, தூய வெண்மையாக!

ஆதோனி என்ற இடத்தில் வெங்கண்ணா என்ற சிறுவன் வந்து சுவாமிகளை தரிசித்து நமஸ்கரித்தான். "வெங்கண்ணா, அரசாங்கத்தில் நீ உயர்பதவி வகிக்கப் போகிறாய்! மனதிற்கு நியாயமாக நடந்து கொள். தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் எப்போதும் கடைபிடி. ஆபத்தான நேரங்களில் என்னை நினைத்துக் கொள்" என ஆசீர்வதித்தார். வெங்கண்ணா சுவாமிகள் சொன்னபடியே நடந்து கொண்டான். அரசாங்க உத்யோகம் கிடைத்தது. அவனது நீதியும், நேர்மையும் அரசனைக் கவர திவான் பதவி அளித்தார் மன்னர்.

முஸ்லீம் மன்னரான அசாதுல்லாகானுக்கு வெங்கண்ணா ஸ்ரீ ராகவேந்திரரை அடிக்கடி புகழ்ந்து பேசுவது வியப்பாக இருந்தது. "உன் குரு அத்தனை சக்தி வாய்ந்தவரா? நீ சொல்ல சொல்ல அவரைப் பார்க்கும் ஆவல் என்னுள் பெருகுகிறது. சீக்கிரம் ஏற்பாடு செய்" என்றார் கான் மன்னர்.

இராகவேந்திரரை வேண்டி வரவழைத்து தன் மாளிகையில் தங்க வைத்தார் வெங்கண்ணா. அதற்குள் பசு மாமிசத்தைப் பக்குவமாக சமைத்து தங்க தாம்பாளத்தில் வைத்து, பட்டாடையால் மூடி எடுத்து வரச் செய்தான் நவாப். தானே தாம்பாளத்தை வாங்கி சுவாமிகள் முன் வைத்தான் நவாப். இராகவேந்திரரை தரிசிக்க மக்கள் கூட்டம் திரண்டிருந்தது.

"சுவாமிஜி! இன்றைக்கு இதை உங்கள் இராமருக்க நிவேதனம் செய்து பக்தர்களுக்கு உங்கள் கையால் விநியோகிக்க வேண்டும்" என்றான் அரசன். தட்டை உற்று நோக்கினார். பின் மூலராமரைப் பார்த்தார். ஓம், ஓம், ஓம் என்றபடி அதன்மீது நீர் தெளித்தார். சீடர்கள் பட்டாடையை நீக்கினர்.

என்ன ஆச்சர்யம்! உள்ளே மணம் வீசும் மலர்களும், சுவையுள்ள கனிகளும் நிரம்பி இருந்தன. கான் தடாலென்று சுவாமிகள் காலில் விழுந்து மன்னிக்குமாறு வேண்டினான். எவருக்கும், எதுவும் புரிய வில்லை! மன்னரை எழுந்திருக்கச் சொன்ன மகான், ஒரு மாதுளம் கனியை எடுத்து மன்னருக்குக் கொடுத்தார். பிறகு பூவும், கனிகளும் அவர் பக்தர்களுக்குக் கொடுத்துக் கொண்டே இருக்க தட்டிலுள்ள மலரும், பழங்களும் அட்சயமாய் வளர்ந்து கொண்டே இருந்தது.

நவாப் 'மஞ்சாலா' என்ற வளமான கிராமத்தை சுவாமிகளுக்குக் காணிக்கையாகக் கொடுத்தான். வெங்கண்ணாவைப் போலவே அப்பண்ணா என்பவரும் சுவாமிகளின் அந்தரங்க சீடன்.

சுவாமிகள் " நான் முந்தைய பிறவியில் பிரகலாதனாய் இருந்தேன். நீயும் வெங்கண்ணாவும் எனது நெருங்கிய சினேகிதர்களாய் இருந்தீர்கள். நீங்கள் பக்கத்தில் இருக்கும்போது நான் சமாதி அடைய வேண்டும்" என்றார். வெங்கண்ணா விம்மி விம்மி அழுதார். "நீங்கள் இல்லாத பூவுலக வாழ்க்கை எனக்கும் வேண்டாம்" என்றார்.

"அழாதே வெங்கண்ணா! அண்ணா அப்பாவாக இருந்து எனக்கு நிறைய செய்திருக்கிறார். அவரது கடைசி மகனை அழைத்து வந்து மடாதிபதியாக பீடாரோஹனம் செய்ய வேண்டும். எழுநூறு சாளக்கிராமங் களைக் கொண்டு வரச் சொல். வா, துங்கைக்குப் போவோம்" துங்கபத்ரைக்குப் போனார்கள்.

அங்கிருந்து ஆறு மைல். "இந்த கல்லை எடுத்துக் கொள்ளலாம். இது திரேதாயுகத்தில் சீதையைத் தேடிவந்த அண்ணல் தம்பியுடன் இளைப்பாற அமர்ந்த கல்" என்றார். கல்லை எடுத்துவர ஏற்பாடு செய்தார் வெங்கண்ணா. கண்டகி தீரத்திலிருந்து சாளக்கிராமங்கள் வந்து குவிந்தன. அப்பண்ணாவுக்கு குடும்பப் பிரசினை. கட்டாயம் போக வேண்டிய சூழ்நிலை. சுவாமிகளிடம் அனுமதி கேட்டான். "சரி! நானும் புறப்படுகிறேன்"

"என்ன ஸ்வாமி இப்படிச் சொல்கிறீர்கள்? உங்களுக்கு ஒன்றும் ஆகா து. நான் போனேன், வந்தேன் என்று திரும்பி விடுவேன்" அப்பண்ணா குரல் தழுதழுக்கக் கூறினான்.

"இருக்கலாம்.... நான் என் விருப்பத்தைச் சொல்லியும் நீ போக வேண்டும் என்கிறாய்! நாம் பார்த்துக் கொள்வது அனேகமாக இதுதான் கடைசி தடவையாக இருக்கும்"

"அப்படிச் சொல்லாதீர்கள்.... சந்தோஷமாக அனுமதி தாருங்கள்" "எல்லாருக்கும் எல்லா ஆசையும் நிறைவேறுவதில்லை. போய்வா" என்றார் ஸ்வாமிகள்.

அப்பண்ணா குழப்பத்தோடுதான் போனான். பிருந்தாவனமும் மாருதி விக்ரஹமும் தயாராகி விட்டது. குருராஜரின் கடைசி மகனுக்கு பீடா

ரோகணம் செய்து யோகீந்திர தீர்த்தர் என்ற திரு நாமமும் சூட்டப்பட்டு விட்டது.

விரோதி வருஷம்; ஆவணி மாதம்; கிருஷ்ணபட்சத் துவிதியை. வியாழக்கிழமை.

சுவாமிகள் அதிகாலை நீராடி மூலராமரை பூஜை செய்தபின், சீடர்களை அழைத்து "நான் சமாதியடையப் போகிறேன்.எல்லோரும் கடமையை ஒழுங்காகச் செய்யுங்கள். எவரையும் கீழாக மதிப்பிடாதீர்கள். ராம பக்தியைப் பரப்புங்கள். கோபத்தைத் துரத்துங்கள். சுற்றி வர சாளக் கிரமங்களை நிறையுங்கள். என் கையிலிருந்து துளசி மாலை உருளுவது நின்றதும் மேலே அந்தக் கறுப்புக் கல்லைப் போட்டு மூடி விடுங்கள். எவரும் அழ வேண்டாம். எவருக்காகவும் கல்லைத் திறக்கவும் கூடாது. இது என் மேல் ஆணை" என்று சொல்லி விட்டு துளசி மாலையுடன் கிழக்கு நோக்கி பத்மாசனமிட்டு யோக நிஷ்டையில் அமர்ந்து விட்டார்.

சீடர்கள் கண்ணீர் விட்டபடி சாளக்கிராமத்தை சுற்றிலும் அடுக்கி னர். அப்பண்ணா வந்து விடக் கூடாதா என்று எல்லோரும் பரிதவித்த வேளையில் சுவாமிகள் கையில் துளசி மாலை நின்று விட்டது. கல் கொண்டு சமாதியை மூடினர். மேலே சுவாமிகள் சொன்னபடி மூலராமர், லட்சுமி நரசிம்மர் எல்லாரையும் வைத்தனர்.

அப்பண்ணா இராகவேந்திரர் மேல் ஸ்லோகங்கள் அமைத்துப் பாடியபடி ஓட்டமும், நடையுமாக வந்து கொண்டிருந்தார். முப்பத்து ஒன்றாவது சுலோகத்தின் நான்காவது அடியில் சமாதி அவர் கண் களுக்குத் தெரிந்தது. அவரால் மேற்கொண்டு பாட முடியவில்லை. கண் ணீரோடு "மோசம் போனேனே" என்று அழுதார். முப்பத்து ஒன்றாவது ஸ்லோகத்தின் நான்காவது அடி சமாதிக்குள்ளிருந்து வந்தது. எல்லோரும் மெய்சிலிர்த்தனர்.

"அப்பண்ணா, நீ குரல் தரிசனம் பெற்று விட்டாய்! குருநாதர் உன்னை வாழ்த்தி விட்டார்" என்றனர் மற்ற சீடர்கள். முப்பத்து இரண்டாவது ஸ்லோகத்தையும் பாடி முடித்தான் அப்பண்ணா. அன்று முதல் இன்று வரை அந்த ஸ்லோகங்களே பூஜ்ய ஸ்ரீ இராக வேந்திர ஸ்வாமிகளின் பிருந்தாவனங்களில் பாடப்பட்டு வருகின்றன.

வெங்கண்ணாவின் கனவில் தோன்றி அவனைத் தேற்றினார் ஸ்வாமிகள்.

ஆங்கில ஆட்சியில் பெல்லாரியில் தாமஸ் மன்றோ கலெக்டராக பதவி ஏற்ற புதிது.

ஆலயங்களில், மடங்களில், மத ஸ்தாபனங்களின் பூஜை, நிவேதனம் நிர்வாகத்திற்கான செலவு, அதற்குண்டான சொத்து வரவு போக உபரி என்று அரசு நினைப்பதை அரசுடைமையாக்கப்பட்டு விடும் என்ற சட்டம் இருந்தது. மந்திராலயத்திற்கு ஏகப்பட்ட வருமானம் என்ற செய்தி மன்றோவுக்கு எட்டியது. ஸ்ரீ மடத்தின் திவானுக்கு தஸ்தாவேஜுகளை கொண்டு வர உத்தரவிட்டான் மன்றோ. கணக்கைக் கொண்டு வந்த திவான் ஸ்ரீ ராகவேந்திரரின் பெருமைகளைக் கூற, மறுநாள் காலை தானே ஸ்ரீ மடத்துக்குச் சென்று காலணிகளையும், தொப்பியையும் கழற்றி வைத்து விட்டு சிறிது நேரம் தியானம் செய்தான்.

படத்தில் பார்த்த மகான் எதிரே நின்றிருந்தார். நிஜமா, கனவா என்று மன்றோ மயங்கினான்.

"செலவுகள் கூடிக் கொண்டே போகின்றன. வானம் பொய்த்து விட்டால் பூமி மாதா மனம் விண்டு போகிறாள். ஆனால் அப்போதும் பக்தர்களுக்குப் பசிக்கும். ஆலயங்களில் தீபம் எரிய வேண்டும். பூஜை நடக்க வேண்டும். தர்மம் செழிப்பாக இருந்தால்தான் ஆள்பவர் பிரச்சினையின்றி இருக்க முடியும், மன்னரே தானிய இருப்புப் போதாமல் இருக்கும் சமயத்தில் ஆலயங்களும், ஸ்ரீமடங்களும் மன்னரிடம் கையேந்துவது அழகா? கேட்டால் தான் கிடைக்குமா?" என்று பேச எல்லாமே நியாயமாகப் பட்டது மன்றோவுக்கு.

"இந்த மந்திராட்சதையைச் சேர்த்து சமைக்கச் சொல். ஆரோக்கிய மாய், நீடுழி வாழ்வாய்" என்று ஒரு இலையில் அட்சதையும் தந்தார். அவர் கண்ணிலிருந்து மறைந்த பின்பே சுய உணர்வு பெற்றார் தாமஸ் மன்றோ. இருப்பிடம் திரும்பி அந்த மகான் தந்த அட்சதையை சமைக்கச் சொல்லி சாப்பிட்டார். தாமஸ் மன்றோ சுவாமிகளின் தரிசனம் பெற்றதை சர்க்கார் கெஜட்டில். 'பிரான்ஸிஸ்' என்பவரால் 'ஆதோனி தாலுகா' என்ற தலைப்பில் 113–ம் பக்கத்தில் பிரசுரமாகி இருக்கிறது. சென்னைக்குத்

திரும்பினார் மன்றோ. அங்கே அவருக்கு கவர்னர் பதவி காத்திருந்தது. மகானின் ஆசி என்று நம்பினார் தாமஸ் மன்றோ.

அலுவலகத்தில் தஸ்தாவேஜுக்களில் மும்முரமாகக் கையெழுத்துப் போட்டுக் கொண்டிருக்கிறார். திடீரென்று எழுந்து நின்றார். ஏன் என்று எவருக்கும் புரியவில்லை. அவர் கைகளிலிருந்த மந்திராலய மட தஸ்தா வேஜுகள். ஒரு நிமிஷம் மகானை தியானித்து விட்டு சொத்து வருமானமும், செலவுகளும் சமமாயிருப்பதாகக் கையெழுத்திட்டு அரசாங்க முத்திரையைப் பொறித்தார்.

மறைந்த பிறகும் மடத்தின் சொத்துக்களைக் காப்பாற்றித் தந்த இந்த மகானின் சரித்திரம் படிப்பவரையும் கேட்பவரையும் பல துன்பங்களி னின்றும் காப்பாற்றி ஸ்ரீ ராகவேந்திரரின் அருளுக்குப் பாத்திரமாக்கும்.

95. அருணாச்சல கவிராயர்

பெற்றோரை இழந்து தமையன் பாதுகாப்பில் இருந்த அருணா சலத்துக்கு அப்போது பதினெட்டு வயது. கஷ்ட ஜீவனம். ஆதின வித் வான்அம்பலவாணக் கவிராயரிடம் சைவத்திருமுறைகளையும், தமிழ் சாஸ்திரங்களையும், வட மொழி ஆகமங்களையும் கற்று வந்தான். ஆனால் எல்லாவற்றையுமே பாடலாக மாற்றிப் பாடிப் பார்ப்பான். இசைவழி அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. ஆற்றங்கரைக்குப் போனால் திரும்பி வர மணிக்கணக்காகும். அதிலும் உடன் படிக்கும் பையன்கள் பார்த்து விட்டால் என்ற பயம் தான் அவன் கால்களை வீட்டுக்கு அழைத்துவரும்.

அந்த சமயம் தான் தருமை ஆதின கர்த்தா அவனைத் துறவு மேற்கொண்டு சைவத்தொண்டு புரிய அழைத்தார். தமையனார் இதை ஏற்கவில்லை. அன்றிரவு இரு வாலிபர்கள் அருணாசலத்தின் கனவில் தோன்றி,இராமாயணத்தை கர்நாடக இசை வடிவில் பாடு" என்றனர். அம்பறாத் தூணியும், கோதண்டமும் அவர்கள் ராம லட்சமணரே என்று அறிவுறுத்தியது.

"யாரோ, இவர் யாரோ, என்ன பேரோ அறியேன்" என்ற அடிகள் முதன் முதலில் மனதில் இசைவடிவில் எழுந்தது. இதையேதான் பாலகாண்டத்தில் சீதை தன் தோழிகளிடம் கேட்பதாக, ஸ்ரீராமன் தன் மனத்துள் கேட்பதாக முழுப்பாடலாக்கினார் அருணாசலம். இவர் பிறந்த ஊர் சீர்காழி.

அதன்பின் பன்னிரண்டு ஆண்டுகள் இயல், இசை, நாடக நூல்களை ஐயம் திரிபறக் கற்றான் அருணாசலம். கருப்பூர் வியாபாரியின் மகளை தம்பிக்கு மணமுடித்து வைத்தான் தமையன். மாமனார் காசுக் கடை வைத்துக் கொடுத்தார். பகலெல்லாம் வியாபாரம்; இரவில் புராண பிரவசனம். அருணாசலத்துக்கு இனிய குரல். சந்தர்ப்பத்துக்கு ஏற்றாற் போல் விழும் வார்த்தைகளைப் போட்டுப் பாடுவார். எங்குமே கேட்டிராத பாடலாயிருப்பதால் மக்கள் கைதட்டி உற்சாகம் ஊட்டுவர்.

உடலெல்லாம் திருநீறு; தூய வெள்ளை வேஷ்டி. தலையிலும், மார்பிலும் துளசி, தாமரை மணி மாலைகள். மக்கள் அருணாசலத்தின் இசை இராமாயணத்தைக் கேட்க முன்கூட்டியே வந்து இடம் போட்டனர். அதனால் அவருக்கு பொறுப்பு கூடியது. கம்ப இராமாயணத்தை நுணுக்கமாகப் படித்தார்.

சட்ட நாதபுரத்திலிருந்து கோதண்டராமன், வேங்கடராமன் என்ற இரு இளைஞர்கள் அருணாசலத்தின் கதா காலட்சேபம் எங்கு நடந்தாலும் தவறாமல் முதல் வரிசையில் இருந்து கேட்டனர். "ஐயா! இந்தப் பாடல்களின் நகலை எங்களுக்குத் தரமுடியுமா?" என்று அவர்கள் கேட்க, அருணாசலம் "அப்போதைக்கப்போது கற்பனையாய் பாடப்படு பவை அவை. குறிப்பேதும் கிடையாது" என, இருவரும் "ஸ்வாமி, இனிமேல் அன்றன்று பாடப் போகும் பாடல்களை முன்கூட்டியே கற்பனை செய்து சொல்லுங்கள். நாங்கள் குறிப்பெடுத்துக் கொள்கிறோம். சபையில் நீங்கள் செய்யும் மாற்றங்களையும் குறித்துக் கொள்கிறோம். அதோடு எங்களுக்கு இராமாயணப் பாடமும் போதிக்க வேண்டும்" என்று வேண்டினர்.

அப்படியே நடந்தது. ஒரு நாள் இராமாயணப் பாடம் நடத்தும்போது, லட்சுமணன் இராமன் காட்டுக்குப் போகவேண்டும் என்பதைக் கேட்டு சீறும் கட்டத்தில் – 'நானே இலட்சுமணன். ஆனால் கொடுக்கிறேன்

இராமனுக்கு மகுடம்' என்று ஆவேசமாகப் பாடினார். வில்லில் நாணேற்றும் ஒலி அவர் வாயிலிருந்து வெளிப்பட்டது.

பையன்கள் இருவரும் வெலவெலத்துப் போயினர். அன்றைய பிரவசனத்தில் இந்தப் பாடலைக் கேட்டு வித்வான்கள் அவரை 'அருணாசலக் கவிராயர் ' என்ற சிறப்புப் பட்டம் தந்து கௌரவித்தனர்.

சீர்காழியைத் தாண்டாத கவிராயர் அயோத்தியையும், சரயு, கோதாவரி நதிகளையும் கண்முன்னால் நிற்கும்படி வர்ணித்து பாட்டியற்றினார் என்றால் அது ஸ்ரீ ராமபிரான் திருவருளல்லவா? கோதண்டராமனும், வேங்கடராமனும் குருநாதர் பாடலைப் பாடி பிரவசனம் செய்து புகழ்



ரப்பினர். "இராமனுக்கு மன்னன் முடி தந்தானே" மந்தரையை கோபித்து கைகேயி பாடும் இந்தப் பாடலை 'ஒன்ஸ் மோர்'கேட்டு திரும்பத் திரும்ப பாட வைத்து ஜனங்கள் மகிழ்ச்சியுற்றனர்.

"சரணம், சரணம், ரகுராமா, நீ என்னை தற்காத்தருள் பரந்தாமா". விரிகடல் வேந்தன் உன் திருவடி சேர்ந்ததென்மேல் என்ன உபசாரம்; ஆயிரம் நமஸ்காரம் " சமுத்திர ராஜன் ஸ்ரீ ராமனிடம் சரணாகதி அடையும் இந்தப் பாடலில் 'விரி கடல் வேந்தன் உன்' என்று கவிராயர் ஆலாபனை செய்யும் போது, சபையில் ஊசி விழுந்தால் கேட்கும் நிசப்தம் நிலவும்.

'பதினான்கு வருஷமும் உமைப் பிரிந்திருப்பேனோ.... நீர் பட்டாபி ஷேகம் செய்து காண்பதும் இது எப்போ?' பரதன் காட்டில் இராமரிடம் பாடலாக உருகிக் கேள்வி எழுப்பும் போது பெண்கள் பக்கமிருந்து விம்மலும், கேவல்களும் எழும்பும். ஆண்களும் மௌனமாய் கண்ணீர் சொரிவர்.

கச்சேரிகளில் இவர் பாடல்கள் இடம் பெற்றன. அதிலும் "ஸ்ரீ இராமச் சந்திரனுக்கு ஜெய மங்களம்; திவ்விய முக சந்திரனுக்கு சுப மங்களம்" என்ற பாடல் கச்சேரி முடிவில் எல்லோராலும் பாடப்பட்டது. கம்ப இராமாயணத்துக்கு கம்பருக்கு தடை ஏற்பட்டது போலவே இராம– நாடகக் கீர்த்தனைகளுக்கும் அரங்கேற்ற தடை விதிக்கப்பட்டது.

"பெருமாள் உத்தரவு கொடுத்தால்தான் அரங்கேற்றலாம் " என்று செர்ல்லிவிட்டார்கள் வைஷ்ணவ அடியார்கள். "ஏன் பள்ளி கொண் டீரய்யா.....ஸ்ரீ ரங்கநாதரே" என்று மோகன ராகத்தில் மனம் வருந்திப் பாடினார்.

'விஸ்வாமித்திரர் பின் நடந்தவருத்தமோ.... என்ற ஆரம்பித்து மாரீசமானைத் துரத்தியது, சீதையைத்தேடியது என்று ஒவ்வொன்றாகச் சொல்லி இராவண வதம் வரை இராமாயணத்தையே பாடினார். வைஷ்ணவ ஆசாரியர்கள் கனவில் திருமால் வந்து அரங்கேற்ற நாளைக் குறிப்பிட, கம்பர் இராமாயணத்தை அரங்கேற்றிய அதே பங்குனித் திருநாளில் அருணாசலக் கவிராயரின் இராம நாடகக் கீர்த்தனைகளும் வெகுச் சிறப்பாகத அரங்கேறியது.

இராம–நாடகக் கீர்த்தனைகள் மொத்தம் நாற்பது ராகங்கள் கொண்டவை. "எனக்குன் இருபதம் நினைக்க வரம் தருவாய்– ஸ்ரீ ராமச்சந்திரா" என்பது போன்ற தனிப்பாடல்களும் இசை கலைஞர்களால் கௌரவிக்கப்பட்டவை. புதுவையில் துபாஷாக இருந்த ஆனந்த ரங்கம் பிள்ளை கவிராயரை வரவேற்று சிறப்புக்கள் செய்தார்.

"என் நண்பர் தஞ்சை மன்னன் துளஜா ஆற்காட்டு நவாபோடு போரிட்டுக் கொண்டிருக்கிறான். இல்லையேல் இந்தப் பாடல்களை பெரிதும் ரசிப்பான். போர் முடியட்டும். அவரோடு சேர்ந்து இதை ரசிக்கிறேன். இப்போது மணலி முத்துக் கிருஷ்ண பிள்ளையிடம் போங்கள். நாடெல்லாம் ஒலிக்க வேண்டிய நாத காவியமய்யா இது" என்று உற்சாகப்படுத்தி அனுப்பிவைத்தார். அதன்படியே முத்துக் கிருஷ்ண பிள்ளை சென்னையில் கவிராயரின் இராம நாடகக் கீர்த்தனைகளைப் பிரபலமாக்கினார். போர் முடிந்ததும் கலை வள்ளலான தஞ்சை மன்னரிடமும் பாடிக் காட்டி பரிசுகளையும், பாராட்டையும் பெற்றார்.

நாதபிரம்மம் தியாகராஜ ஸ்வாமிகள் குழந்தைப் பருவத்தில் கவிராயரின் பாடல்களைக் கேட்டே ஸ்ரீ ராமபிரான் மேல் பக்தியை வளர்த்துக் கொண்டதாகக் கூறுவார்கள். ஒவ்வொருவர் பக்தி ஒவ்வொரு விதம். இசை மூலம் பரந்தாமனைப் பணிந்தவர்கள் பலர். அதில் அருணாசலக் கவிராயரும் ஒருவர். அவருடைய இந்த சரித்திரம் படிப்பவரையும் கேட்பவரையும், இசை மேதையாக்குவதோடு ஸ்ரீ ராம பிரானின் அருளுக்கும் பாத்திரமாக்கும்.

96. ஸ்ரீ வேதாந்த தேசிகர்

காஞ்சிபுரம் அருகிலுள்ள துப்புல் கிராமம். அங்கே அனந்த சூரி–தோதாரம்மா தம்பதிகளுக்கு சந்தான பாக்கியம் இல்லை. இருவரும் திருப்பதிப் பெருமாளின் பரம பக்தர்கள்.

அசுவத்த நாராயண பூஜை, சத்ய நாராயண பூஜை, அனந்த விரதம், நாக பஞ்சமி விரதம், வரலக்ஷ்மி விரதம் ஏகாதசி விரதம், இப்படி எல்லா

விரதங்களும், பூஜைகளும் செய்து வந்தனர் தம்பதிகள். ஒருநாள் அனந்த சூரியின் கனவில் பெருமாள் தோன்றி "திருப்பதிக்கு வா.... நிச்சயம் குழந்தை பிறக்கும்", என்றருளினார். தம்பதிகள் திருப்பதி சென்றனர். நீராடி அங்கப்ரதட்சணம் பண்ணி சுப்ரபாத தரிசனம்முடித்து விட்டு இருப்பிடம் திரும்பினர். அசதியால் கண் அயர்ந்தாள் தோதாரம்மா.

சின்னஞ்சிறு மணி ஒன்றைக் கொடுத்து வாயில் போட்டுக் கொள்ளச் சொன்னார் பெருமாள். வாயில் போட்டுக் கொண்டதும் விழிப்பு வந்து விட்டது. எண்ணி பத்தாவது மாதம் ஆண் குழந்தை பிறந்தது. பெருமாளின் பெயரான வேங்கடநாதன் எனவும், மணியை விழுங்கச் சொல்லி பிறந்ததனால் கண்டாவதரன் என்றும் பெயர் சூட்டினர்.

வேங்கடநாதன் கூர்மதி படைத்தவனாயிருந்தான். வேங்கட நாதனின் மாமா ஆத்ரேய இராமானுஜர். ஒரு நாள் காஞ்சி வரதர் கோவிலுக்கு வேங்கடநாதனையும் அழைத்துச் சென்றார். அங்கே குரு வத்ஸ்ய வரதாச்சாரியாரின் பிரவசனம் நடந்து கொண்டிருந்தது. வரதாச்சாரியார் வேத சமுத்திரம். சமஸ்கிருத விற்பன்னர். அவர் கதை என்றால் கண்ணுக்கெட்டிய தூரம் ஜனக்கடல்தான். மாமனும், மருமகனும் காலட்சேப வசீகரிப்பில் சற்று நின்றனர். இராமானுஜருக்கும், வரதாச் சாரியாருக்கும் நல்ல பழக்கம். நட்புக்காக அவர் பக்கம் திரும்ப வேங்கட நாதனின் முக தேஜஸில் கதையை ஒரு விநாடி மறந்து விட்டார்.

"பிப்ராணம் வஜ்ர கேடேளஹலமுஸல கதாகுந்த
மத்யுக்ர தம்ஷ்ட்ரம்! ஜ்வாலாகேசம் திரிநேத்ரம்"

என்று அடியெடுத்துக் கொடுத்தான் வேங்கடநாதன். ஜனங்களின் கரவொலி மண்டபத்தை அதிர வைத்தது. கண்களில் ஆனந்த பாஷ்யத் தோடு "குழந்தாய், ஞானக் கடலாய் வேதத்தை எல்லோருக்கும் உபதேசம் செய்ய வேண்டும். வேதத்தினை முழுவதும், கற்றுக் கொடுத்து, வேதாந்த தேசிகனாய் நீடூழி காலம் வாழ்ந்து புகழ் பெறுவாய்" என்று நிறைந்த சபை நடுவே மனமார வாழ்த்தினார். அவர் வாக்கு பொய்க்க வில்லை. சதுர் வேதங்கள், ஆறு சாஸ்திரங்கள், நியாயம், தர்க்கம், மீமாம்ஸை, புராணங்கள், இதிகாசங்கள் எல்லாவற்றிலும் குறுகிய காலத்திற்குள் நுணுக்கமாகக் கற்றுத் தேர்ந்தான். புத்த, ஜைன மதங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்தான்.

உரிய காலத்தில் திருமங்கை என்ற நங்கையை மணம்செய்து கொண்டார். குருவத்ஸ்ய வரதாச்சாரியார் காஞ்சி ஸ்ரீமடத்தின் பொறுப்புக் களை வேதாந்த தேசிகனிடம் ஒப்படைத்தார். மடத்தின் வேலைகளை அக்கறையாய் கவனித்து கடமையாற்றினார் தேசிகர். தினமும் வைணவ மத குரு ஸ்ரீ ராமானுஜரின் பாதுகைகளுக்கும் பூஜை செய்வார். இவரது வேதாந்த சொற் பொழிவுகளைக் கேட்க வெகு தொலைவிலிருந்தெல்லாம் பக்தர்கள் வந்தனர்.

திருமண பந்தத்தில் ஒட்டியும், ஒட்டாமலும் இல்லறத் துறவியாய் வாழ்ந்து வந்தார் தேசிகர். அந்தண மரபைக் கடைப்பிடித்து உஞ்ச விருத்தி எடுத்தே உண்டு வந்தார்.

கருட நதிக்கரையில் ஔஷதாசல மலையடிவாரத்தில் உள்ள திருவஹீந்திரபுரத்தில் தேவநாயக சுவாமி கோவிலில் சில காலம் தங்கியிருந்தார். அங்கே அவருக்கு லக்ஷ்மி ஹயக்ரீவரின் தரிசனமும், கருட மந்திரத்தின் பொருளும் கிடைத்தன.

ஒரு நாள் தேசிகர் மேல் அபார பிரேமை கொண்ட ஒரு வியாபாரி அரிசிக்கு நடுவில் பொற்காசுகளை வைத்து அவருக்கு பிட்சை அளித்தார். வீட்டிற்கு வந்ததும் முறத்தில் அரிசியைக் கொட்டினார்.

"மங்கை, கொஞ்சம் பொறு. நிறையப் புழு இருக்கிறது. பொறுக்கி விடுகிறேன்" என்றவர் ஒரு குச்சி எடுத்து பொற்காசுகளை விலக்கி அரிசியை சமைக்கச் சொன்னார். தேசிகர் சொற்படி மங்கை பொற்காசு களைக் குப்பையில் போட்டு விட்டு வந்து விட்டாள். பகவானிடம் அறியாமையால் "வீடு வேண்டும்; உத்யோகம் வேண்டும்; கடன் தீர வேண்டும்" என்று பிரார்த்தனை செய்கிறீர்களே! பிறவிக்கடன் தீர வேண்டும். நல்ல ஞானமும், புத்தியும் கொடு; விவேகமும், வீடு பேறும் அடைய வேண்டும்" என்று வேண்டிக் கொள்ளுங்கள்' என்று உபதேசித்தார். சொன்னபடி வாழ்ந்தும் காட்டினார்.

"உங்களுக்கு கைகளிரண்டு, கால்களிரண்டு கொடுத்திருக்கிறார் கடவுள். அது உங்கள் வேலைகளை நீங்களே செய்து கொள்ள. ஒரு நாவால் எத்தனை ருசி அறிகிறோம். அந்த ஒரு நாவால் எம்பெருமானின் எத்தனை அழகுக் கோலங்களைப் பாடலாம்? எத்தனை அவதாரங் களைப் பாடலாம்! நமது உணவை நாமே தான் மென்று சாப்பிடுகிறோம்.

கூலிக்கு ஆள் தேடுவதில்லை. உங்கள் ஆடைகளைத் துவைக்க, உங்கள் பூஜை அறையை பெருக்கித் துடைக்க ஆள் தேடாதீர்கள். நீங்களே தெய்வத் தொண்டு செய்யும் போது பரந்தாமனை நெருங்கி இருக்கிறீர்கள். உங்கள் இரு கண்களால் விரும்பியவற்றை நீங்களே பார்க்கிறீர்கள்! உங்களின் இரு காதுகளால் தேவையான விஷயங்களை நீங்களே கேட்கிறீர்கள். கைகளையும், கால்களையும் கூட இதே போல் பயன்படுத்துங்கள். பல்லக்கிலேயே போய் கொண்டிருந்தால் சுமப்பவர் களின் பாவங்களில் பங்கேற்க வேண்டி வரும். ஆடம்பர வாழ்க்கை என்றும் ஆபத்தையே தரும்" என்ற அவரது போதனைகளை தனவந்தர்கள் கடைப்பிடித்தனர்.

விஜய நகர அரசர் வித்யாரண்யர் சரஸ்வதி கடாட்சமும் பெற்றவர். அவருக்கு தேசிகரின் 'பவதி பிட்சாந்தேஹி' என்ற குரல் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியது போல் இருந்தது.

ஒரு நாள் அரசர் தேசிகரிடம் "ஸ்வாமி, நீங்கள் பிட்சை எடுக்கும் நேரத்தில் எத்தனை ஸ்லோகங்கள் இயற்றலாம்? பலருக்கும் வேதம் போதிக்கும் நேரம் வீணாவதை எப்போது புரிந்து கொள்ளப் போகிறீர்கள்? கலைவாணியே படித்துக் கொண்டிருக்கிறாள் என்னும் போது நாம் படிக்க எவ்வளவு இருக்கிறது? அரண்மனையில் தங்கினால் உங்கள் கௌரவத்துக்கு இழுக்கு வராமல் நான் கவனித்துக்கொள்ள மாட்டேனா?" என்று பணிவுடன் வேண்டினார்.

"தூக்கத்தில் வாழ்நாள் வீணாகிறதென்று தூங்காமல் இருக்கி றோமா? சாப்பிடும் நேரம் வீண் என்று தெரிந்தும் இரண்டு வேளையும் சாப்பிட்டுக் கொண்டு தானே இருக்கிறோம். அதெல்லாம் சக்தி பெற என்றால்..... நான் பிட்சை எடுப்பதும் சக்தி பெறத்தான். நான் பாமரன் என்ற ஞானசக்தி பெற. வித்யாகர்வம் என்ற தூசுகளை அகற்றி 'அடியார்க்கு எளியான்' என்ற எண்ணத்தை எனக்குள் வேரூன்ற வைக்க! சுகம் ஒரு போதைப் பொருள். அந்த நேரத்துக்கு சாப்பாடு போடா விட்டால் நாக்கு ஒத்துக் கொள்ளாது. சந்தனம் பூசிக் கொள்ளாத மேனி கொப்பளங்களாய் வெடிக்கும். கட்டிலும், மெத்தையும் இல்லாவிட்டால் கண்கள் ஒத்துழைக்காது. நன்றாகச் சாப்பிட்டு, நன்றாகத் தூங்கினால் மூளை சுறுசுறுப்பாய் செயல் படாது. மன்னா! நீங்கள் நல்லவர்.... கடைசி வரைகாப்பாற்றுவேன் என்று உறுதி அளிக்கிறீர்கள்! யாருடைய

கடைசிவரை ? என்னுடைய கடைசி என்றால் சந்தோஷப்படலாம்? கடலில் துரும்பாய் மனிதவாழ்க்கை அலைக்கழிக்கப் படுகிறது. 'கஞ்சி வரதப்பா' என்றால் கருடன் மேல் ஓடிவரும் எம்பெருமான் இருக்க மனிதர் களை சாஸ்வதமாக நான் நினைப்பதில்லை!" என்று தீர்மானமாக பதில் சொல்லி விட்டார்.

மன்னர் மௌனமானார். காஞ்சியில் ஒரு ஏழை. அவன் திருமணம் செய்து கொண்டால் தான் கோவிலில் வேலை கிடைக்கும். அவனிடமோ ஒரு நாணயம் கூட கிடையாது. எல்லா ஊரிலும் பொறாமைக்காரர்கள் போக்கிரிகள் உண்டு. தேசிகரைப் பிடிக்காதவர்களும் சிலர் காஞ்சியில் இருந்தார்கள்.

அவர்கள் அந்த ஏழை வாலிபனிடம்,"அதோ அந்த திருமால் பக்தர் இருக்கிறாரே! அவர் மனது வைத்தால் கனகதாரையே பொழிவாள் லக்ஷ்மி தேவி. அஷ்ட லக்ஷ்மியும் அவர் சித்திக்குள் அடக்கம். விடாமல் காலைப் பற்றிக் கொள். மன்றாடியாவது மன இரக்கத்தை சம்பாதித்துக் கொள்." என்று தியான நிலையிலிருந்த தேசிகரை கைக் காட்டி விட்டனர்.

அவனும் அதை நிஜமென நம்பி அவர் எதிரே போய் பவ்யமாய் நின்று கொண்டிருந்தான். தியானம் கலைந்து எழுந்த தேசிகர் எதிரே இருந்த வாலிபனை விபரம் கேட்டார்.

"ஐயா, நான் பரம ஏழை. எனக்குத் திருமணமானால் எங்களூர் கோவிலில் பரம்பரை வேலை கிடைக்கும் முறைப் பெண் காத்துக் கொண்டிருக்கிறாள். பெண்ணுக்குத் தாலி, கூறைப் புடவை எடுக்க பணம் வேண்டும். நீங்கள் நினைத்தால் மகாலட்சுமியிடமிருந்து கனக மழையே பொழியுமாமே! என் மீது கருணை காட்டி கல்யாணம் நடக்க உதவ வேண்டும்" என்று பாதங்களில் பணிந்தான்.

"உனக்கு நான் உதவுகிறேன். ஆனால் ஸ்ரீதேவி அருள் புரிய வேண்டுமே! ஆலயத்தில் தரிசித்த அன்னை லக்ஷ்மியை அகத்தில் இருத்தி வேண்டிக் கொள்" என்றபடி, "ஸ்ரீமான் வேங்கட நாதய்யா: கவிதார்க்கி ககேஸரீ–" என்று தொடங்கி இருபத்தைந்து பாசுரங்களை மனம் உருகிப் பாடினார்.

இடிஇடிக்காமல், மின்னாமல் கனக மழை பொழிந்தாள் கனகலக்ஷ்மி. 'அள்ளிக்கொண்டு போய் விவாகத்தை முடித்து ஆனந்தமாக வாழ்க்கை

நடத்து', என்று ஆசிர்வதித்தார். ஏவி விட்ட துஷ்டர்கள் ஏமாந்து தலை குனிந்தனர்.

"ஸ்வாமி.... வழக்கு என்பக்கம் ஜெயமாகி நிலம் என் கைக்கு வந்து விட்டதென்று என் பங்காளிக்கு விரோதமாகி விட்டது. இன்னும் பத்து நாள் போனால் அறுவடை செய்ய வேண்டும். இந்த சமயத்தில் ஒரு மந்திர வாதியைப்பிடித்து குளத்துத் தண்ணீரையும் என் வயலில் பெருக் கெடுத்தோட பூஜை போடுவதாக உற்ற நண்பர்கள் வந்து சொன்னார்கள். ஓடோடிவருகிறேன். நீங்கள்தான் எப்படியாவது காப்பாற்ற வேண்டும். அடைக்கலம் தரவேண்டும்" என்று கால்களில் விழுந்தான்.

"பணத்தையும், நேரத்தையும், புத்தியையும் இப்படி செலவழிப்பதை விடுத்து என் பரந்தாமனுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து அடியார்களுக்கு அன்னதானம் செய்து வேண்டிக் கொண்டால் அவனை உன்னை விட உயரச் செய்வாரே! அழிவுக்குப் பாதை அமைத்துக் கொள்கிறானே! விதி பின் தொடர மதி கெட்டலைகிறது. சரி.... நீ போ! எம்பெருமான் மேல் பாரத்தைப் போடு" என்று அவனை அனுப்பி விட்டு, பாய்ந்து வரும் நீருக்கு முன் கால் கட்டை விரல் நகத்தால் ஒரு கோடு போட்டார்.தண்ணீர் திரும்பவும் குளத்தையே அடைந்தது.

பங்காளி கோபமுற்று, " நீ என்னப்பா மந்திரவாதி! அவன் உன்னை விட பெரிய மந்திரவாதியாய் இருக்கிறானே! இப்படி என்று தெரிந் திருந்தால் முதலில் அவனிடமே போயிருப்பேன்" என்று சலித்துக் கொண்டான்.

மந்திரவாதி சினம் கொண்டு ஏராளமான பாம்புகளை ஏவினான். தேசிகர் மறுபடி கால் நகத்தால் கோடு கிழிக்க, பாம்புகள் மந்திர வாதியிடமே திரும்பிச் சென்றன. இதைக் கண்டு மந்திரவாதியின் ஆத்திரம் கட்டுக்கடங்காமல் தன் சக்தியெல்லாம் திரட்டி ஒரு கரு நாகத்தை ஏவினான்.

பத்மாசனமிட்டு அமர்ந்த தேசிகர் விஷ்ணுவை தியானித்து கருடமந்திரம் ஜபித்தார். கரு நாகம் சீறிக் கொண்டு அவர் அருகே வந்ததும் பிரம்மாண்டமான கருடன் தோன்றி கருநாகத்தைத் தூக்கிக் கொண்டு போய்விட்டது. விவசாயி சந்தோஷமாக அறுவடை செய்தான். மந்திரவாதி ஊரை விட்டே ஓடிப்போனான்.

வைணவத் திருப்பதிகளில் ஸ்தல யாத்திரை சென்றார் தேசிகர். ஆங்காங்கே தங்குவார். பக்தர்கள் கேட்கும் கேள்விகளுக்கு விளக்கமும் சொல்வார். "ஏஞ்சாமி.... வைகுண்டத்தைப் பத்தி அப்படி சொல்றீங்களே! உங்களாலே ஒரு கிணறு வெட்டமுடியுமா? இன்னைக்கு ஒரு சுவரை உடைக்கிறதுக்குள்ளே.... இதப் பாருங்க.... விரல்லே அடி. நகம் பேர்ந்து போச்சு" என்றான் ஒரு கல் தச்சன்.

"அவனவனுக்கு அவனவன் வேலை உயர்த்தி. வேலையிலே கவனமா இருக்காதது உன் தப்பு. அதுக்கு சுத்தியலை கோபிக்கலாமா? இதோ பார். கிணறு வெட்டுவது கிருஷ்ணனுக்குப் பெரிய காரியம் இல்லை. அதுக்காக உன்கிட்டே சவால் விட்டு விட்டு, ஜெயிக்கணுமென்று பகவானை கஷ்டப்படுத்த நான் விரும்பலே... உன் வழி வேறே, என் வழி வேறே" என்றார் தேசிகர்.

கல்தச்சன் விடுவதாயில்லை! "சாமி... சாக்கு போக்கு சொல்லாதீங்க. நிஜமாகவே உங்க பெருமாளுக்கு சக்தி இருந்து வானத்திலே கருடன் மேல பறக்கறார்னா, கடலுக்கடியிலே போயி வேதங்களையும், பூமியையும் மீட்டுக் கொண்டு வந்தாருன்னா, தூணைப் பிளந்து வந்து ராட்சசனை வதம் பண்ணினார்னா, பூமிக்கடியில் இருந்து விஸ்வரூபம் எடுத்து வந்தாருன்னா உங்களுக்காக கிணறு தோண்டச் சொல்லுங்க" என்று வம்பிழுத்தான்.

பெருமானை நினைத்து தேசிகர் துதிக்க, சக்கரம் சுழன்றது போல பிரம்மாண்டமான வட்ட வடிவமான பள்ளம். குபு குபு வென ஊற்று பெருகி வரும் சப்தம். கல்தச்சன் பயந்து தேசிகர் காலடியில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். ஸ்ரீரங்கத்தில் சுதர்ஸன பட்டர், லோகாச்சார்யா பிள்ளை என்ற பண்டிதர்களோடு சத்சங்கங்கள் நடத்தினார் தேசிகர். வேதாந்த விசாரணைகளில் பொழுது இனிமையாய் கழிந்தது. அங்கே அவரை "சர்வ தந்த்ஸ்வதந்த்ரா", "கவி தார்கிக்க கேசரி" என்ற பட்டங்கள் கொடுத்து கௌரவித்தனர்.

ஸ்ரீ ராமானுஜரின் இலக்கியப் படைப்புகளுக்கு விரிவுரை எழுதினார் தேசிகர். கண்ணன் மேல் "யாதவப் புதயா" என்ற கவிதையும், "சங்கல்ப சூர்யோதயா" என்ற பிரார்த்தனைப் பாடல்களின் தொகுப்பும் அருளினார். ஒரு நாள் தேசிகர் வீட்டு வாசலில் செருப்பு மாலைதொங்க

விடப்பட்டிருந்தது. 'சில வைஷ்ணவர்களே இதில் சேர்ந்திருக்கிறார்கள்' என்றார் ஒருவர்.

"செருப்பு சிம்மாசனம் ஏறி ஆட்சி புரிந்திருக்கிறது. பரதன் அதைத் தலைமேல் தாங்கி பாதுகா பட்டாபிஷேகமே செய்திருக்கிறான். வாழ்க்கை கல்லும், முள்ளும், கரடும் முரடும் நிறைந்தது. செருப்பில்லாமல் கல்லிலும், முள்ளிலும் நடக்க முடியாது. பகவான் பாதார விந்தங்களை எப்போதும் நினைத்துக் கொண்டிருங்கள் என்று சதா உபதேசம் செய்யும் என் வீட்டின் முகப்புக்கு செருப்பு மாலை போட்டது பொருத்தமானதுதான். சம்சார சங்கடம் என்ற கொதிக்கும் வெயிலுக்குக் காப்பு ஸ்ரீ ராம நாமம் என்ற பாதுகைதான். இதைக் கட்டியவனுக்கு ஒரு நாள் கூலி கிடைக்க கண்ணன் அருளினான்" என்றார் தேசிகர்.

"கவி தர்க்கிக்க சிம்மன்' என்று பட்டம் கொடுத்திருக்கிறார்களே! ஸ்ரீ ரங்கநாதர் மேல் நாளை விடிவதற்குள் ஆயிரம் பாடல்கள் பாடி விடுவீர்களா?" என சவால் விட்டார் அழகிய மணவாள நாயினார் என்ற புலவர். கூடி இருந்தவர்கள் இருவரில் யார் அப்படி எழுதுகிறார்களோ அவர்களே 'கவி தர்க்கிக்க கேசரி' என்று தீர்ப்புக் கூறினர்.

தேசிகர் "பட்டம் நிலைக்க வேண்டும் என்ற ஆசையில்லை. ஸ்ரீ ரங்க நாதன் மேல் பாட இது ஒரு வாய்ப்பு" என்று கூறி இரவோடு இரவாக ஆயிரம் பாடல்களையும் இயற்றி விட்டார்.

அழகிய மணவாளரோ திக்கித்திணறி முன்னூறு பாடல்களே இயற்ற முடிந்தது. மறுநாள் கோவில் மண்டபத்தில் பெருங்கூட்டம். 'பாத கமல சகஸ்ரம்' என்ற பெயரில் முன்னூறு பாடல்களைப் பாடினார் அழகிய மணவாளர். வேதாந்த தேசிகர் மடை திறந்த வெள்ளம் போல், கொட்டும் அருவி போல் ஆயிரம் பாடல்களையும் மளமள வென்று பாடினார்.

சுபப்ரணாதா பவதீ ச்ருதீனாம்
கண்டே ஷு வைகுண்ட பதீம் வராணாம்
பத் நாஸி நாநம் மணி பாதரக்ஷே
மங்கல்ய ஸூத்ரம் மணி ரச்மிஜாலை:

என்ற ஸ்லோக வரிகளைப் பாடும் போது சபை விதவான்கள் எழுந்து நின்று 'இவர் சிம்மமே தான்! இவரே இந்த பட்டத்துக்குத்தகுதியானவர்'

என்று கரகோஷம் செய்தனர்.அழகிய மணவாளர் தோற்று தலை குனிந்தார்.

அந்நிய நாட்டவர்கள் ஆலயங்களைச் சூறையாடினர். வேத, புராண, இலக்கியப் புதையல்களைத் தீ வைத்துக் கொளுத்தினர். அதனால் இரகசியமான இடத்தில் இலட்சியப் படைப்புகளைப் புதைத்து வைத்தார். ஸ்ரீ ரங்கநாதரை திருப்பதி கோவிலில் ஒளித்துக் காப்பாற்றினார்.

1263– ஆம்ஆண்டில் பிறந்த ஸ்ரீமந்நிகமாந்த மகா தேசிகர் 1363–ம் ஆண்டு பரமபதமடைந்தார். ஸ்ரீ விஷ்ணுவின் சேவைக்கே தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த ஸ்ரீ வேதாந்த தேசிகரின் இந்த சரித்திரம் படிப்பவருக்கும், கேட்பவருக்கும் வித்யத்துவத்தையும், கீர்த்தியையும், நற்புத்தியையும், திருமாலின் அனுக்ரஹத்தையும் கொடுக்கும் என்பது உண்மை.

97. ஸ்ரீ நாராயண பட்டத்ரி

"நாராயணன் எங்கே" தாமோதரன் நம்பூதிரி மனைவியிடம் கேட்டார். "காலையிலே எழுந்து வெளியே போனவன் மணி பதினொன்னு இருக்கும் போலருக்கு.... சாப்பிடக் கூட வராம அப்படி என்ன காரியம்?" என்றாள் இல்லாள்.

"வெட்டி முறிக்கிற ஜோலி..... சும்மா ஊர் சுத்தறதும், விடலைப் பசங்களைக் கூட்டிக் கொண்டு அரட்டை அடிக்கறதும்.... வேளை வேளைக்கு நீ வடிச்சுக் கொட்டறே. வீட்டிலே இருக்கா இல்லையான்னு கண்டானா? திங்கறதும், தூங்கறதும் தான் ஜோலி. வேத பாட சாலையிலே விட்டேன். வேதமும் படிக்கலே..... சமஸ்கிருதமும் கத்துக் கலை.... அதிகாலை எழுந்து, குளிச்சு சுவாமிகிட்டே ஒரு ஸ்லோகம் பாகவதமோ, இராமாயணமோ படிக்கப் படாதா? என்ன பிராரப்த கர்மமோ, இப்படிப் பிள்ளை வந்து பிறந்திருக்கு. வயசான அப்பாவாச்சேன்னு கொஞ்சமாவது நெனைப்பு இருக்கா? இப்படியொரு பிள்ளை பொறக் கலைன்னு யார் அழுதா?" படபடவெனப் பொரிந்தார் நம்பூதிரி.

"அப்படிச் சொல்லாதேங்கோ.... கருவேப்பிலைக் கொத்து மாதிரி ஒரே பிள்ளை. பட்டாம்பிக்காரா தூற்றறது போதாதுன்னு நாமளும் பேசலாமா? தானே தெரிஞ்சுக்கறான்!" பரிந்து வந்தாள் தாய்.

எல்லாவற்றையும் நடையில் நின்று கேட்டுக் கொண்டிருந்த நாராயணன் 'பசிக்கலேம்மா' என்று சொல்லி விட்டு மறுபடி கோவில் குளக்கரைக்குப் போய் விட்டான்.

"விடுடி..... நான் என்ன தப்பா சொல்லிட்டேன்? கேட்டாலும் ஒண்ணும் தப்பு இல்லே.... ரோஷம் பொத்துண்டு வந்துடுத்தாக்கும் துரைக்கு! இருக்கட்டும்.... இருக்கட்டும்.... இந்த பட்டாம்பியிலே எவ கதவைத் திறந்து வைச்சுண்டு ஆரத்தி எடுத்து அழைக்கறான்னு பார்க்கறேன்" நம்பூதிரி கறுவ, தாய் மனசு பொறுக்காமல் முந்தானையால் முகத்தை மூடிக் கொண்டு விசும்பினாள்.

தந்தையின் வாக்கு பலித்து விட்டது. ஆனால் பட்டாம்பியில் அல்ல! வேறு ஊரில். பெண்ணையும் கொடுத்து ஆரத்தி எடுத்து வரவேற்றவர் அச்சுத பிஷாரோடி.

வீட்டுக்கு இனி திரும்புவதில்லை என்ற வைராக்கியத்தோடு கிராமம் கிராமமாய் தெருத் தெருவாய் கால் போன போக்கில் அலைந்த நாராயணனை ஜோதிடர் அச்சுத பிஷாரோடி விசாரித்து வீட்டிற்கு அழைத்து வந்தார்.

"நாராயணி! இரண்டு இலை போடு... விருந்தாளியோடு வந்திருக்கி றேன்" என்று குரல் கொடுத்தார். அச்சுதபிஷாரோடிக்கு இரண்டும் பெண்கள். ஆண் வாரிசு இல்லை.

"யார் இது?" குசுகுசு வென்று கேட்டாள் அச்சுதரின் மனைவி.

"வீட்டிலே கோபிச்சுண்டு வந்திருக்கான். பேர் நாராயணன். பசிச்சுக் களைச்ச முகம். பிராம்மணப் பையன். வேதம், சமஸ்கிருதம் படிக்க லேன்னு தகப்பனார் கோபிச்சுண்டிருக்கார்னு தெரியறது. முகத்திலே இருக்கற தேஜஸ் இவன் பெரிய ஆளா வருவான்னு சொல்றது. பேசாம நாராயணியை இவனுக்குக் கட்டி வைச்சு வீட்டோட வைச்சுக்கலாம்னு நெனைக்கறேன்"

"போறுமே! செலவில்லாம ஒரு வயசுப் பிள்ளை மாட்டிண்டுட்டான்னு நெனைக்கறேளா, நாம பிராம்மணா இல்லே.... பின்னாலே பெத்த வாளுக்குத் தெரிஞ்சு நாராயணியை ஒதுக்கி வைச்சுட்டா.... குழந்தை வாழ்க்கையே வீணாப்போயிடும்" அச்சுதர் மனைவி கலங்கினாள்.

"அப்பா! இலை போட்டாச்சு..... உங்க அதிதியோட சாப்பிட வரலாம்" நாராயணியின் குரல் கேட்டதும் நாராயணனையும் அழைத்துக் கொண்டு சாப்பிடச் சென்றார் அச்சுதபிஷாரோடி.

மனைவியின் கருத்தை ஒதுக்கி வைத்து தன் வீட்டிலேயே ஒரு அறை ஒழித்துக் கொடுத்து தங்க வைத்தார் ஜோதிடர்.

"நாராயணா.... நீ பொறந்த மாசம், வருஷம், நாள், கிழமை நேரம் தெரியுமா?"

சொன்னான். ஜாதகம் கணித்துப் பலன் பார்த்தார். பிறகு நாராயணி ஜாதகத்துடன் பொருத்தம் பார்த்தார்.

"இதென்ன அக்கிரமமாயிருக்கு. பையன் ஊரைச் சொல்லாம, பெத்தவா பேரைச் சொல்லாம அழும்பு பிடிக்கிறான். அவனோட செவத்த தோலைப் பார்த்து உங்க பொண்ணும் சம்மதிச்சுட்டா. .....ஒரு நாள் லோகமே கொண்டாடப் போறதுன்னு நீங்க கல்யாண ஏற்பாடு பண்றேள். நாராயணிக்கு இதைவிட நல்ல மாப்பிள்ளை கிடைப்பான். கலப்புக் கல்யாணம் பண்ணிண்ட குடும்பம் என்று சின்னவளைக் கட்டத் தயங்குவா" அச்சுதரின் மனைவி தடை சொன்னாள்.

"மரம் வெச்சவன் தண்ணீர் ஊற்றுவான்" என்று சொன்ன அச்சுதர் திருமணத்தை ஜாம் ஜாமென்று நடத்தினார்.

"அழகாயிருந்தா போறாது..... அதிர்ஷ்டமும் வேணும்.... தலை தலையா அடிச்சுண்டேன்.... கேட்டேளா, கன்னி கடன் கழிச்சுட்டேள்.... ஒரு நாளு, பொழுது ஒண்ணும் கிடையாது மாப்பிள்ளைக்கு! ஒரு ஆசார அனுஷ்டானம் உண்டா, நீங்களும் தான் ஜோஸியம் கத்துக் கொடுக்கறேன்னேள்.... வணங்கினானா? பகவான் என்கிட்டே உயர்ந்த காரியம் கொடுக்கப் போறார்னு என் உள் மனசு சொல்றதுன்னு வேதாந்தம் படிக்கறான். கொஞ்சங்கூட நன்னால்லே இது! பொண்ணையும், மாப்பிள்ளையையும் அண்டையிலே வைச்சிண்டிருக்கறது கொஞ்ச

நாளைக்குத்தான் சந்தோஷமாயிருக்கும்! ஊர்லே என்ன பேசிக்கறா தெரியுமா? "அடைச்ச கதவு திறக்கறது சாப்பிடறதுக்கு மட்டுமா? குளிக்கிறப் பழக்கமும் உண்டா' ன்னு கிண்டல் பண்றா! இன்னொரு பொண்ணும் வீட்டிலே இதையெல்லாம் பார்த்துண்டிருக்காளேன்னு எனக்கு மனசு பதைக்கறது! சூரியன் முகத்துலே 'சுள்'ளுனு அடிக்கற வரைக்குமா தூங்குவா? ஒரு கோவில் உண்டா,..... சரி..சரி,, இடைக் கழியிலே நிழலாடறது... யாரோ ஜாதகம் பார்க்க வந்திருக்கா... நீங்க போங்கோ.... ஆனா நீங்க மாப்பிள்ளைகிட்டே கொஞ்சம் கண்டிச்சுப் பேசணும்"

அச்சுதன் வாசலுக்கு வந்து விட்டார். பகல் பன்னிரண்டு மணிக்கு நாராயணன் வந்தான்."நாராயணி... ரொம்ப உஷ்ணமாயிருக்கு.... கொஞ்சம் எண்ணெய் எடுத்துண்டு வா"

நாராயணன் நிதானமாக விரல்களை நீவி விட்டுக் கொண்டு எண்ணை தேய்த்துக் கொள்ள ஆரம்பித்தான்.

"ஏன் ஸ்வாமி? வெள்ளிக் கிழமை ஆண்கள் எண்ணை தேய்ச் சுண்டா தரித்திரம் வரும்பீங்க.... மாப்பிள்ளை சாமி எண்ணை தேச்சுக் கிடறாங்க..... ஊருக்கு தான் உபதேசமா?"

மனைவி பற்ற வைத்த நெருப்புக்கு வந்திருந்தவனின் கேள்வி காற்றாய் இருந்தது. வந்தவர்களை அனுப்பி விட்டு உள்ளே வந்தார் அச்சுதன்.

"நாராயணா! உத்யோகம் புருஷலட்சணம். உன்னை நம்பி ஒரு பெண் இருக்கிறாள். காலையில் எழுந்து எண்ணை தேய்த்து நீராடுவதுதான் நல்லது. முரண்பாடான வாழ்க்கை முற்றிலும் வேதனையைத் தான் தரும். பொறுப்பில்லாததால் தானே பெற்றவர்கள் துரத்தியிருக்கிறார்கள்.... அதே நிலைமையை நானும் கையாள வைத்து விடாதே" 'கடுமையாகப் பேசி விட்டேனா' என்பது போல மனைவியைப் பார்த்தார். இருட்டு மூலையில் உட்கார்ந்து நாராயணி சப்தமிடாமல் அழுதாள்.

நாராயணன் கல்லாய் சமைந்து போனான். குளித்து விட்டு வாசல் திண்ணையில் உட்கார்ந்து கொண்டான். "நான் ஏன் இப்படி இருக்கிறேன் என்று சிந்தித்தான்.

கணவன் சாப்பிடாமல் நாராயணி சாப்பிட மறுத்து விட்டாள். மகளின் நிலை பெற்றவர்கள் மனதை கலங்க வைத்தது. இளைய பெண்ணை அனுப்பி மாப்பிள்ளையைச் சாப்பிட அழைத்தனர். மைத்துனி எப்படியெல் லாமோ சொல்லியும் நாராயணன் மௌனமே சாதித்தான்.

பிறகு தாயார் நாராயணியிடம் வந்து "எனக்கு அச்சமாயிருக்கிறது. நீயே போய் அவரைச் சாப்பிடக் கூப்பிடு" என்று நாராயணியிடம் வேண்டினாள்.

நாராயணி அழுது கொண்டே கணவனைப் பிதாவின் பிழை பொறுக்குமாறு வேண்டி சாப்பிட அழைத்தாள். நாராயணன் அவள் முகத் தைக் கூட நிமிர்ந்து பார்க்கவில்லை. அச்சுதனே வெளியே வந்தார்.

"நாராயணா! நான் உன்னை மாப்பிள்ளையாய் நினைத்துப் பார்க்கவேயில்லை! பிள்ளையாய் எண்ணித்தான் புத்தி சொன்னேன். தப்பென்றால் மன்னித்து விடு. சனியிருக்க வெள்ளி எண்ணை தேய்த்து நீராடக் கூடாது. உன்னை முதன் முதலில் பார்த்தபோது உன் பசிமுகம் கண்டு கூட்டி வந்தேனே! அப்போது ரோஷம் பாத்தாயா? அந்த உரிமையில் கேட்கிறேன்! என்னை நீ மதிப்பதானால் எழுந்து சாப்பிடவா.... "நாராயணன் எழுந்து கைகால் கழுவி சாப்பிட அமர்ந்தான். நாராயணி பரிமாறினாள். சாப்பிடும்போது நயமாக பேசத் தொடங்கினார் அச்சுதன்.

"நாராயணா! வேதம் கற்றுக் கொள்வது புண்ணியத்தோடு பிழைப் புக்கும் வழிக் கொடுக்கும். ஏன் வேதம் கற்றுக் கொள்ள பயப்படுகிறாய்?"

"நீங்கள் வேதம் கற்றுக் கொடுப்பதானால் நான் கற்றுக் கொள்கிறேன்" என்று தயங்கிய குரலில் சொன்னான் நாராயணன். "நானா? வேதமா? உனக்குச் சொல்லிக் கொடுப்பதா? அந்தணன் அல்லாதவர் வேதம் படிப்பது குற்றம் என்பது விதிமுறை. நான் வேதம் படித்து பிறகு உனக்குச் சொல்லிக் கொடுத்து நடக்கக்கூடிய காரியமா? ஊரை விட்டு நம் குடும்பத்தை தள்ளி வைப்பார்கள். அதனால் நான் பாதிக்கப்படுவேன்" என அதிர்ச்சியுடன் கூறினார் அச்சுதன்.

"உங்களுக்கு கேடு வர நான் பார்த்துக் கொண்டிருப்பேனா?" என்று ஊக்கம் கொடுத்தான் நாராயணன்.

பாடம் படிக்க வரும் இளம் குழந்தைகளின் பிழைகளை ஆசிரியர்கள் மென்மையாகத் திருத்த வேண்டும். பொதுவாக ஆசிரியர்களுக்குத் தாய்

மனம் வேண்டும். நாராயணனுக்கு வேதம் படிக்கத் தொடங்கிய போது ஏற்பட்ட கசப்பான அனுபவம் அவன் வாழ்க்கையையே வீணடித்துக் கொண்டிருக்கிறதே! இல்லை... இனி அப்படியாக விடமாட்டேன். என் மகளின் வாழ்க்கையும் இவனோடு பிணைந்து விட்டது. எனக்கு என்ன பாதகம் வந்தாலும் சரி....” என்று தீர்மானித்தவர் அடுத்த ஊரில் ஒரு ஏழை அந்தணரிடம் போய் வேதம் கற்று வந்தார். அன்றன்று படித்ததை அப்படியே நாராயணனுக்கு போதிப்பார். நாராயணனின் ‘கணீர்’ என்ற குரல்; ஸ்வரம் தப்பாமல் ராகத்தோடு சொல்லும் முறை, அச்சுதனை மேலும் உற்சாகப் படுத்தியது.

விஷயம் எப்படியோ ஊருக்குள் பரவ ஊரார் “அச்சுத பிஷாரோடி வேதம் படிக்கிறானாமா? படித்து மாப்பிள்ளைக்குச் சொல்லிக் கொடுக் கிறானா? பேஷ், பேஷ்! வெகு நன்றாயிருக்கிறது! நாராயணன் நம்மகிட்டே வந்து கேட்டிருந்தா சொல்லிக் கொடுத்திருக்கமாட்டோமா? அச்சுதன் தப்பு தப்பா சொல்லிக் கொடுப்பாரே! அச்சுதனோட வாத்தியாருக்கே ஸுரம் போட்டு வேதம் சொல்லத் தெரியாது! அவன் கிட்டே இவன் கத்துண்டு, இவன் கிட்டே நாராயணன் படிக்கிற வேதம் .... சிவ சிவா....” என்று கேலி பேசினர்.

மன அமைதிக்காக கோவிலுக்குச் சென்றான் நாராயணன். அங்கே வேத பாராயணம் நடந்து கொண்டிருந்தது. ஓரிடத்தில் தடாலென்று பாராயணம் நின்றது. விட்ட இடத்தில் தொடர்ந்த நாராயணன் கொட்டும் அருவியெனப் பொழிந்தான். அட்சர சுத்தமான அவன் பாராயணத்தைக் கேட்டு வயதும், அறிவும் முதிர்ந்த அந்தணர்கள் ஆச்சரியமடைந்தார்கள்.

நாராயணனைப் பாராட்டி, அன்றிலிருந்து நாராயணனையும் பாராயணத்துக்குத் தங்களுடன் சேர்த்துக் கொண்டனர்.

இந்த மகிழ்ச்சியான செய்தியைக் கூற வீட்டிற்குத் திரும்பிய நாராயணன் மாமனார் காய்ச்சலில் படுத்திருப்பதைக் கண்டு வருந்தினான். மூன்று நாட்கள் கழித்து உடலில் கொப்புளங்கள் தோன்றின. ‘அம்மையாயிருக்கும்’ எனப் பாதுகாத்தனர். காய்ச்சலும் நிற்கவில்லை. உடலில் ஊசி குத்த இடமில்லை. வலியும், வேதனையும் தாங்க முடியாமல் அச்சுதன் புலம்பினார். “அச்சுதன் வேதம் கற்றுக் கொண்டது முதல் தவறு. அந்தணனான நாராயணனுக்கு அந்தணரில்லாத அச்சுதன்

வேதம் படிப்பித்தது இரண்டாவது தவறு. அதனால் தான் இந்த தண்டனை" என்று ஊர் பேசியது, நாராயணன் காதில் விழுந்தது. தன்னால் ஏற்பட்ட துன்பம் என்று மன வேதனையுற்ற நாராயணன் குருவாயூர் சென்றான். சன்னதி முன் உட்கார்ந்தான்.

"கண்ணா, அவரிடம்தான் வேதம் கற்றுக் கொள்வேன் என்று அடம்பிடித்தவன் நான். அவர் வேதம் கற்க நானே காரணன். அதனால் தண்டனை எனக்குத்தான் தரவேண்டும். அவருடைய வியாதியை எனக்கு மாற்றிவிடு. உங்களுக்கு ஒரு கெடுதல் வர நான் பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன் என்று வீறாப்பாய் பேசியது வெட்டித்தனமாய் போகவிடாமல் காப்பாற்று" என்று பலவும் எண்ணிப் புலம்பினார்.

என்ன ஆச்சரியம் நோய் கொஞ்சம் கொஞ்சமாய் மாமனாரிடமிருந்து விலகி நாராயணனைப் பிடித்துக் கொண்டது. அச்சுதன் நன்கு குணமாகிவிட நாராயணன் பார்க்கவே அருவறுப்பான நிலையை அடைந்தான். அதனால் அவன் தன்னையே வெறுத்து ஓர் இரவில் ஒருவருக்கும் தெரியாமல் ஊரை விட்டே போய்விட்டான்.

"குருவாயூரப்பா.... இந்தப் புண்கள் எத்தனை வேதனையைத் தருகிறது! வேதம் கற்குமுன் சுகமாக இருந்தேன்! கற்றபின் துன்பங்களே பரிசாகக் கிடைக்கின்றது... இந்த நிலை ஏன்? நான் செய்த புண்ணியங் களின் சேமிப்பு கரைந்து விட்டதா, பெற்றோரை மனம் வருந்தச் செய்த பாவம் தொடர்கிறதா, சீச்சி... இந்த நிலையில் போய் அவர்களை சந்திக்க மாட்டேன்" இப்படி மனம் நினைத்ததையெல்லாம் புலம்பி பரந்தாமன் புகழை பாடியபடி சென்றார்.

மடம் ஒன்றில் வாதநோயால் அவதியுறும் ஒரு அந்தணரைப் பார்த்து குசலம் விசாரித்தார். "ஐயா, பொருளுக்காக அந்தணரல்லாத அச்தப்பிஷாரோடி என்பவருக்கு வேதம் சொல்லிக் கொடுத்ததற்கு கிடைத்த பரிசு இது..." என்றார் அவர். நாராணன் மனம் கசிந்தார்.

"குருவாயூரப்பா, என்னால் எத்தனை பேர் எத்தனை விதமான தொல்லைகளை அனுபவிக்கிறார்கள்! இந்த சரீரம் அழியக் கூடியது. இதோடு அதுவும் இருக்கட்டும். அவருடைய நோயையும் எனக்கு மாற்று" என மனமுருகப் பிரார்த்தித்தார். பெரியவரின் வாத நோய் குணமடைய அடைய நாராயணனை வாத நோயும் பிடித்துக் கொண்டது. நோய்களுடன் ஸ்தல யாத்திரை செய்தார்.

வழியில் பரமேஸ்வரன் நாயர் என்ற பக்தர் "ஸ்வாமி, குருவாயூரப்பனை விட்டால் இதையெல்லாம் குணமாக்க எவரால் ஆகும்? ஊர்ந்து ஊர்ந்தாவது குருவாயூர் போய் விடுங்கள். 'உன்னை நம்பி வந்து விட்டேன். உன்னை விட்டால் கதியில்லை' என்று தஞ்சமடைந்து விடுங்கள்" நிச்சயம் காப்பாற்றுவான்" என்றார்.

நாராயணனின் இசைக்கு மயங்கி அவர் பின்னோடு இராமன் என்ற பக்தன் அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்துகொண்டு வந்தான் இராமனின் உதவியோடு குருவாயூர் வந்தார் நாராயணன். கோவிலே கதியாக, கண்ணனே புகலிடமாக உருகிஉருகிப் பாடினார். அப்போதும் அவர் வியாதி அவரைவிட்டு அகலுவதாயில்லை.

"குருவாயூரப்பா, அப்போது எனக்கு மன்னிப்பே கிடையாதா" என்று அரற்றியபடியே ஒரு நாள் உறங்கி விட்டார். கனவில் ஸ்ரீ கிருஷ்ணன் தோன்றி. "நாராயணா, உன் வியாதிக்கு மருந்தை துஞ்சத்து எழுத்தச்சனிடம் கேள்" என்றான். திடுக்கிட்டுக் கண் விழித்தார் நாராயணன்.

"துஞ்சத்து எழுத்தச்சனிடமா? கிருஷ்ணலீலையை யாரறிவார்" என வியந்தவர், இராமனை "என்னுடைய வியாதிக்கு என்ன மருந்து என்று துஞ்சத்து எழுத்தச்சனிடம் கேட்டுவா" என்று அனுப்பிவைத்தார்.

அப்போது குளத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்தார் எழுத்தச்சன். இராமன் குருநாதர் கூறியதைச் சொல்ல "நாளை முதல் மீனைத் தொட்டுக் கொண்டு பாடச் சொல்" என்றார் எழுத்தச்சன். இராமன் திடுக் கிட்டான்."நாராயணன் அந்தணர். ஆசார அனுஷ்டானமுள்ளவர். எழுத்தச்சன் மதுவுக்கு அடிமையானவர். மது அருந்தி போதையால் வந்த பேச்சா? நாம் சொன்னதை சரியாகக் காதில் வாங்கிக் கொள்ள வில்லையோ?"இராமன் குழம்பியபடியே நாராயணன் இருக்குமிடம் வந்தான்.

"எழுத்தச்சனைப் பார்த்தாயா? என்ன சொன்னார்?"ஆவலாகக் கேட்டான் நாராயணன். "பார்த்தேன்...ஆனால்" இராமன் தயங்க, "சொல்லு...அவர் சொன்னதை அப்படியே சொல்லு"துரிதப் படுத்தினார் குரு. "நாளை முதல் மீனைத் தொட்டுக் கொண்டு பாடச் சொன்னார்" திக்கித்திணறி இராமன் சொன்னதும்,

"இராமா, பயப்படாதே! மீன் என்றால் மச்சம், மச்சாவதாரம் தொடங்கி பத்து அவதாரங்களையும் நாளை முதல் பாடச் சொல்லி, எழுத்தச்சன் மூலமாக கட்டளையிட்டிருக்கிறார் குருவாயூரப்பன்.

இதைக் கண்ணனே சொல்லாமல் எழுத்தச்சன் மூலமாக சொல்ல வைத்திருப்பதன் காரணம் தெரியுமா உனக்கு! இராமாயணம், மகாபாரதம் இரண்டையும் மலையாளத்தில் எழுதிய மகாகவி இவர். 'இவர் சதா மது போதையில் கிடப்பவர்; இவரின் தாயார் ஒரு சக்கிலியப்பெண்' என்று இவரைப் பற்றி மட்டமாக நான் நினைத்திருந்தேன். அதற்கு பகவான் என் தலையில் வைத்த குட்டு இது; யாரைப்பற்றியும் கேவலமாய் எண்ணாதே! கர்வம் கொள்ளாதே"என்று அடிக்கடி என் மனதுக்குக் கட்டளையிட்டுக் கொண்டுதான் வருகிறேன். சில சமயங்களில் என் மனக்குதிரை லகானை அறுத்துக் கொண்டு போய்விடுகிறது. என்ன செய்ய? 'ஒரு அருமையான பாடல் இயற்றியவுடன் நமக்கு இந்தஅளவு திறமை இருக்கிறதே' என்று கர்வப் பிசாசு மனதில் நாற்காலி போட்டு உட்கார்ந்து கொண்டு விடுகிறது. அதைத்துரத்த பெரும்பாடு படவேண்டி இருக்கிறது! இராமா, நாளைப் பொழுது எப்போது விடியும் என்று காத்துக் கொண்டிருக்கிறேன்"என்றார் நாராயணன்.

விடிந்தது. அதிகாலை எழுந்து நீராடி, குருவாயூரப்பனை மனதால் வரித்து, சிறிது நேரம் ஜபம் செய்துவிட்டு மச்சாவதாரத்தைப் பாடத் தொடங்கினார். மொத்தம் 1034 ஸ்லோகங்கள். பத்து பாடல்கள் கொண்டது ஒரு தசகம். ஒவ்வொரு ஸ்லோகத்திற்கும் "அப்படிச் செய்தாயா? அப்படி நடந்ததா" என்று பட்டத்ரி கேட்க, குருவாயூர் கண்ணன் 'ஆம்' என்று தலையை அசைத்து அங்கீரித்திருக்கிறார். இந்த அதிசயத்தை அப்போது அவ்வூரில் வாழ்ந்தவர்களெல்லாம் கண்டு களித்தார்களாம். ஸ்லோகங்கள் இயற்றுவதில் வியாதியின் வேதனையை நாராயணன் உணரவில்லை. நோயும் குணமாகிக் கொண்டே வந்தது. நாராயணின் புகழைப் பாடிய நூல் என்பதாலும், நாராயண நம்பூதிரி பாடியதாலும் அந்த மகா காவியத்துக்கு 'நாராயணீயம்' என்ற பெயர் ஏற்பட்டது.

சமஸ்கிருத ஸ்லோகங்களின் அர்த்தம் புரியாமல் பல மலையாள பக்தர்கள் பாதியிலே எழுந்து போய் விடுவார்கள். சிலர் பகவன் நாமா என்று பக்தியுடன் கடைசி வரை கேட்பார்கள். அவ்வளவு பக்தியுடனும், மன உருக்கத்துடனும் அதைப் பாடினார் நாராயணன்.

ஒன்றுக்கும் உதவாமல் ஊர் சுற்றிக் கொண்டிருந்த நாம் எத்தனை அழகாக ஸ்லோகம் இயற்றுகிறோம் என்ற கர்வம் நாராயணனுக்கு மெதுமெதுவே வரலாயிற்று. நோய்தான் குணமாகி விட்டதே! அவர் மாமனார் வீட்டைவிட்டு வெளியேறும்போது வயது முப்பது. நாராயணீயத்தை அவர் எழுதி முடிக்கும் போது அவரது வயது 65. அவரது காலம் 450 ஆண்டுகளுக்கு முன்.

கொட்டுகின்ற மழை. படபடவென கதவைத்தட்டும் சப்தம். சொட்டச் சொட்ட நனைந்தபடி உள்ளே வந்தார் பூந்தானம் என்ற கிருஷ்ண பக்தர்.



"ஸ்வாமி! என் பெயர் பூந்தானம். நான் கிருஷ்ணனின் சரித்திரத்தை மலையாளத்தில் இசை வடிவில் எழுதி இருக்கிறேன். தங்களுடைய ஒவ்வொரு ஸ்லோகத்திற்கும் பகவான் 'ஆம்' என்று தலை அசைக் கிறாரே! அப்பேற்பட்ட தாங்கள் என் எழுத்திலுள்ள தவறுகளைச் சுட்டிக் காட்டினால் பாக்கியம்பெற்றவனாவேன்" என்று பணிவுடன் நூலைத் தர பட்டத்ரி அலட்சியமாக,

"என்னை வேலையற்றவன் என்று எண்ணிக் கொண்டீரா? இதற்காகவா இந்நேரம் வந்து கதவை இடித்தீர்? கொஞ்சம் கூட இங்கிதம் தெரியாத மனிதராயிருக்கிறீரே! எனக்கு இதற்கெல்லாம் நேரமில்லை.... போம், போம் "என்று விரட்டி விட்டார். மனம் நொந்து, தலைகுனிந்து திரும்பிப் போனார் பூந்தானம்.

எழுத்தாணியைப் பிடிக்க முடியாமல் கை நடுங்குகிறது. நிற்க முடியாமல் கால் உளைகிறது. 'கப கப' வென்று உடலில் காய்ச்சல் பற்றுவதை உணர்ந்தார். மூன்றாவது நாள் முழுவதுமாக வாத நோய் அவரைப் பற்றிக் கொண்டது. உடலில் கொப்புளங்களும் தோன்ற ஆரம்பித்தன. " குருவாயூரப்பா.... நான் என்ன தப்பு செய்தேன்? இதென்ன மறுபடி சோதனை" என்றலரினார். சீடர்கள் அவர் சொற்படி அவரை குருவாயூரப்பன் சன்னதியில் கொண்டு விட்டனர். குருவாயூரப்பன் அவர் கண்களுக்கு மட்டும் தெரிந்தார். ஆனால் குரல் எல்லோர் செவிகளிலும் விழுந்தது.

"நாராயணா! பூந்தானம் அதிகம் படிக்காதவனாக இருக்கலாம். ஆனால் பக்தியில் உனக்கும் மேம்பட்டவன். அவனை கொட்டும் மழையில் திருப்பி அனுப்பினாய்! மூன்று நாட்களாய் சோறும், நீரும் இன்றி அவன் புலம்பிக் கொண்டிருக்கிறான். நீ அவன் மனத்தை புண்படுத்தினாய்! உன் உடம்பு புண்ணாகி விட்டது. அவனுடைய கிருஷ்ண லீலாம்ருதத்தை சரி பார்த்துக் கொடு. முதலில் அவனிடம் மன்னிப்புக் கேள். உன் வியாதி குணமடையும். வேப்பத்தூர் நாராயண நம்பூதிரியின் அலங்கார பக்தியை விட, பூந்தானம் நம்பூதிரியின் பாமர பக்தியில் தான் எனக்கு அதிகப் பிரியம்". நாராயணன் கண்ணீர் பெருகியபடி கண்ணன் காலடியில் விழுந்தார்.

"பரந்தாமா.... என் பக்தி உனக்கு அலங்காரமாகத் தோன்றியதற்குக் காரணம் பூந்தானத்திடம் நான் காட்டிய அலட்சியம் என்பதைப் புரிந்து

கொண்டேன். இப்போதே போய் மன்னிப்புக் கேட்கிறேன். ஆனால் பூந்தானத்தைப் போல் மனதுக்கு உகந்த விதத்தில் பக்திசெய்யும்படி என்னை மாற்று" என்று உருகினார். பிறகு சீடர்கள் உதவியோடு பூந்தானத்தின் வீட்டிற்குச்சென்றார். இவரைக் கண்ட பூந்தானம் "ஸ்வாமி, என்னைத் தேடி தாங்கள் வருவதா? கூப்பிட்டனுப்பினால் நானே ஓடிவந்திருப்பேனே! ஐயோ, இதென்ன பழையபடி வாதம் வந்து விட்டதா" என்று இவர் காலைத் தடவ, "ஆ..... இந்த உங்களின் அன்புதான் குருவாயூரப்பனை வசீகரித்திருக்கிறது. உங்களை அலட்சியப்படுத்திய என் மேதா கர்வத்துக்கு ஸ்ரீ கிருஷ்ணன் தந்த தண்டனை. மூன்று நாளாய் தூக்கம் விட்டு பசியோடிருக்கிறீர்களாமே! கொண்டு வாருங்கள் ஸ்ரீ கிருஷ்ண கர்ணாமிருதத்தை.... நீங்கள் படியுங்கள்; நான் சரிபார்க்கிறேன்" என்றார்.

பூஜை அறையில் பூந்தானம் படிக்கப் படிக்க நாராயணனின் நோய் நீங்கியது. நாராயணீயத்தின் நடைப்படி நாராயணன் சில இடங்களில் திருத்தினார். முன் பின்னான நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்தினார்.

தூக்கிக் கொண்டு வரப்பட்ட நாராயணன் கம்பீரமாக எழுந்து நின்றார். பூந்தானத்தை அன்புடன் கட்டித்தழுவிக் கொண்டார். தன் கைவிரல் மோதிரத்தைக் கழற்றி பூந்தானத்தின் விரல்களில் போட்டு, 'ஸ்ரீ கிருஷ்ண கர்ணாமிர்தம்' எழுதிய விரலுக்கு என் அன்புக் காணிக்கை" என்று கூறி விடை பெற்றார்.

நாராயணீயத்தைப் பாடும் போது தான் எத்தனை பிரச்சனைகள் முதல் மூன்று அவதாரங்கள் எழுதியாகி விட்டது. நரசிம்மாவதாரத்தை பட்டத்ரிக்கு விவரிக்க சரியான சொற்கள் சிக்கவில்லை. இரவு முழுவதும் தூக்கம் வராமல் புரண்டார். நாளைக்குக் கோவிலில் எப்படிப் பாடப் போகிறோம் என்ற குழப்பம். அதிகாலையில் நீராடி விட்டு "குருவாயூரப்பா, நீதான் வழிகாட்ட வேண்டும்" என்று பிரார்த்தித்தபடி சன்னதிக்குச் சென்றார்.

நடைதிறந்தது. தூணிலிருந்து இரண்ய கசிபுவை வதைக்கப் புறப்பட்ட நரசிம்மவடிவத்தில் நம்பூதிரிக்கு மட்டும் காட்சி அளித்தான்கண்ணன். கொட்டும் அருவியென நரசிம்மாவதாரத்தை வர்ணித்துப் பாடுகிறார் நாராயணன்.

அடுத்து நாராயணனுக்கு சோதனை ஏற்படுத்தியது ஸ்ரீ ராமாவதாரம். சுந்தரக் காண்டத்தின் எல்லா நிகழ்ச்சிகளையும் ஒரே ஸ்லோகத்தில் அடக்கியாயிற்று. "தத்வார்த்தா" என்று தொடங்கி "மௌலி ரத்னம் ததௌள" என்று முடிக்கிறார்.

"இல்லையே.... இன்னும் ஒரு எழுத்து சேர்ந்தால்தானே பூரணத்துவம் பெறும்! குறையாயிருக்கிறதே... கண்ணா.... அந்த எழுத்தை நீ எடுத்துக் கொடுக்கக் கூடாதா" என்று கெஞ்சுகிறார்.

"நீ என்னைச் சேர்க்கவில்லை" என்றான் கண்ணன். "உன்னைச் சேராமல் எனக்கொரு வாழ்வா?" உருகினார் நாராயணன். "பூந்தானத்திடம் கேள்.... சொல்வான்" என்றான் பகவான்.

பூந்தானத்திடம் ஸ்லோகத்தையும், அர்த்தத்தையும் விளக்கிக் கூறி கண்ணன் உத்தரவையும் கூறினார் நாராயணன்.

"சீதை தந்த சூடாமணியை அனுமன் கொண்டு வந்து கொடுத்தான்" என்று முடிந்திருக்கிறீர்கள். யாரிடம் சூடாமணியைக் கொடுத்தான் என்று எழுதவில்லையே! சீதை தந்த சூடாமணியை ராமனிடம் அனுமன் கொடுத்தான் என்று ஸ்ரீ கிருஷ்ணனை நினைத்துக் கொண்டு எழுதுகிறீர்கள் என்பது உண்மை. ஸ்ரீ ராமனைச் சேர்க்காமல் விட்டு விட்டதைத்தான் பரந்தாமன் குறிப்பிட்டிருக்கிறான்" பூந்தானம் வெகு எளிமையாக விளக்கி விட்டார். பட்டத்ரிக்கு வெட்கமாக இருந்தது.

"மௌலி ரத்னம் ததௌளதே" என்று முடித்தார். 'தே–தங்களிடம் சேர்க்கப்பட்டதல்லவா' ஸ்லோகம் அழகாக முடிந்துவிட்டது. 'தே' இந்த ஒரு எழுத்தை வைத்துக் கொண்டு ஸ்ரீ கிருஷ்ணன் என்ன விளையாட்டு விளையாடிவிட்டான், என்று பெருமூச்செறிந்தார்.

சேலப் பரம்பு நம்பூதிரிக்கு 96 வயது. குடுகுடு கிழவர். ஆனால் சுகபோகங்களில் உள்ள ஆசை குறையவில்லை. நாயர் வீட்டில் சம்பந்தம் வைத்துக் கொண்டிருந்தார்.

ஒருநாள் அவர் குளத்தில் குளித்துக் கொண்டிருக்கும் போது நாராயணர் வந்தார். "நம்பூதிரி, இப்படி பாவம் செய்து கொண்டே போகிறீரே! எப்போது கடைத்தேறுவீர்?" என்றார் நாராயணர்.

"உங்களுடைய கிருஷ்ணன் அனேகம் பெண்களை மணந்துகொள்ள வில்லையா? கோபிகா ஸ்தீரிகளோடு ராஸக்கிரீடை என்று கூத்தடிக்க

வில்லையா? பகவான் செய்தால் பரவாயில்லை.... நான் மனைவி இறந்தபின் ஒரு மங்கையைச்சேர்த்துக் கொண்டது தப்பா?

ராஜ குடும்பத்தில் பிறந்த கண்ணன் இடையர் குலப் பெண்களோடு சம்பந்தம் வைத்துக் கொள்ளவில்லையா?'' என்றார். மூச்சிறைத்தது.

நராயணன் '' நம்பூதிரி, அப்படி உட்காரும். ஒரு சமயம் கிருஷ்ணன் ருக்மணி தேவியாரிடம் ஆற்றுக்கு அக்கரையில் துர்வாச மகரிஷி வந்தி ருக்கிறார். அறுசுவை உண்டி எடுத்துப்போய் உன் கையால் பரிமாறு. ஆசிர்வதிப்பார்'' என்றார்.

பதி சொல் தட்டாத மாதரசி ருக்மணி தேவியார். கணவர் சொற்படி தங்கத்தட்டில் அறுசுவை உணவை எடுத்து வைத்து தலை வாழை இலை போட்டு மூடிக் கொண்டாள். உப்பரிகையிலிருந்து பார்த்தாள். யமுனையில் வெள்ளம் பெருகியது. கிருஷ்ணரிடம் வந்து உபாயம் கேட்டாள்.'நித்ய பிரம்மச்சாரி வழி விடச் சொல்கிறான்' என்று சொல். பாதை கிடைக்கும்'' என்றார்.

ருக்மணி தேவியார் அப்படியே போய் சொல்ல யமுனை இரு பிளவாக பிரிந்து வழி விட்டது. அக்கரை சென்று துர்வாசருக்கு அமுது படைத் தாள். தயிர், நெய் பாயசம் என்று ஒன்றும் குறையாமல் பரிமாறினாள். திருப்தியாய் சாப்பிட்டு ஏப்பமும் விட்டார் முனிவர்.

ருக்மணி தேவி தயங்கியபடி 'யமுனையின் வெள்ளத்தில் திரும்பிப் போகும் மார்க்கத்தைக்கேட்டாள். ஒரு சத்திய வாக்கு ஒருமுறைதான் பலிக்கும். ருக்மணி கரை ஏறியதுமே யமுனை ஒன்று கூடி விட்டது.

''நித்திய உபவாசி வழி விடச் சொன்னான்'' எனச் சொல். வழி கிடைக்கும்'' என்றார் முனிவர். ருக்மணிக்கு ஆச்சர்யம்! மூக்குப் பிடிக்கச் சாப்பிட்டு விட்டு உபவாசமாமே! அதுவும் தினமும்! எதையும் வெளிப்படுத்தாமல் அப்படியே போய் சொன்னாள்! யமுனை முன் போலவே பாதை விட்டாள். ருக்மணி தேவியார் அரண்மனை வந்து விட்டாள்.

இரவு. நிலவு. அருகாமையில் கண்ணன். தாம்பூலம் மடித்துக் கொடுத்தபடி தன் சந்தேகத்தைக் கேட்டாள் தேவி.

''ருக்மணி மனம் ஒன்றாமல் மற்றவர் திருப்திக்காக பெண்களை யெல்லாம் மணந்து கொண்டேன். கோபியர்கள்சந்தோஷத்திற்காக

ராஸக்ரீடை நடத்தினேன். அதேபோல் துர்வாசரும் நாக்குக்குக் கட்டுப படாதவர். மனதால் மறுபடி அதே உணவு எப்போது கிடைக்கும் என்று ஆசைப்படாதவர். உடலில் சக்திக்காக மட்டுமே சாப்பிடுபவர்கள் உபவாசிகள். சந்ததி விருத்திக்காக மட்டுமே உறவு கொண்டு. பல காலம் தாம்பத்யம் கிடைக்கா விட்டாலும் கட்டுப்பாடோடு இருப்பவன் பிரம்மச்சாரி..... சத்தியத்துக்கு கட்டுப் பட்டவள் யமுனை" என்று விளக்கம் கூறினார்.

உங்கள் கேள்விக்கு கண்ணன் வாய் மொழியையே விடையாகக் கொள்ளுங்கள். கண்ணன் விசுவரூபம் எடுத்தானே! உங்களால் எடுக்க முடியுமா? போர்க்களத்திலே கண்ணன் கீதை அருளினானே! இந்தக் குளக்கரையில் உங்களால் கீதையைப் போல ஒரு ஸ்லோகம் சொல்ல முடியுமா? கண்ணன் கோவர்த்தன கிரியையே குடையாகப் பிடித்து கோகுலம் முழுவதையும் காப்பாற்றினானே! நீர் இந்தப்பாறாங்கல்லை ஒரு பத்து நிமிஷம் தூக்கிக் கொண்டு நில்லுமே? விஷப் பாம்பின் மேல் அந்தசின்னஞ்சிறு பாலகன் நடனமாடினானே! நீர் பாம்பைக் கண்டால் பத்து மைல் தூரம் ஓடுவீரே! கொடிய அசுரர்களை ஒற்றையாய் பந்தாடியவன் என் கண்ணன். போக்கிரிகள் வந்தால் போர்த்திப் படுத்துக் கொள்வீர் நீர். அழகி திரௌபதிக்கு புடவையாக அள்ளித் தந்தானே கண்ணன்! நூறு புடவை வாங்கி தானம் பண்ண மனசு வருமா உமக்கு" நாராயணனின் ஆவேசமான பேச்சு சேலப் பரம்பின் மனதை அலைத்தது,

நாராயணரின் காலில் விழுந்து "நான் கடைத்தேற ஒரு வழி சொல்லுங்கள்" என்றார். நாராயணர்"குருவாயூரப்பன் காலில் விழுங்கள். எஞ்சியுள்ள காலத்தையாவது அவனுக்குத்தொண்டு செய்து பாபத் தைப்போக்கிக் கொள்ளுங்கள்" என்றார். "குருவாயூரப்பா... என்னை நீர் தான் ரட்சிக்க வேண்டும்...." என்றலறியபடியே சன்னதி முன் சாஷ்டாங் கமாக விழுந்தார்.

"துருவனுக்கு நான்கு மாதங்களில் தரிசனம் கொடுத்தாய்! பிங்கலைக்கு உடனே தரிசனம் தந்தாய்! பரிட்சித்துக்கு ஏழுநாளிலும், கட்வாங்கனுக்கு ஒரு முகூர்த்தத்திலும் மோட்சம் கிடைத்தது. 96 வயதை வீணாக்கிவிட்ட, இந்த மூடனுக்கு எப்போது முக்தி அளிப்பாய்' என்று பலவாறு புலம்ப, 'துருவன், பிங்கலை, பரிட்சித்து. கட்வாங்கன் இவர் களைப் பற்றியெல்லாம் எப்போது தெரிந்துகொண்டாய்' என்ற குரல் சன்னதியில் இருந்து வந்தது. 'பாகவத கதா காலட்சேபத்திலிருந்து.....'

என்று சேலப் பரம்பு பதில் கொடுத்தார். "அப்படியானால் என் பக்கத்தில் வா" என்ற குரல் ஒலிக்க, சேலப்பரம்பு சன்னதிக்குள் போனார். பகவான் தன்னோடு சேலப்பரம்பை ஐக்கியப் படுத்திக் கொண்டு விட்டார்.

இதெல்லாம் சேலப் பரம்புக்கும், பரந்தாமனுக்கும் நடந்த அரூபமான செயல்கள். சூழ்ந்திருந்த பக்தர்களுக்கு சேலப்பரம்பு புலம்பியபடி நமஸ்கரித்ததும் வெகு நேரமாகியும் அசைவில்லாததுமான செய்கைகள் தான் தெரிந்தது. வெகுநேரமாகியும் சேலப்பரம்பு அசைவில்லாமல் இருக்கவே ஜனங்கள் அவரைத் தட்டி எழுப்பினர். அப்போது அங்கே வந்த நாராயணப் பட்டத்ரியும் சேலப்பரம்புக்கு முக்தி கிடைத்து விட்டதை உணர்ந்தார்.

நிந்தாஸ்துதி செய்வது பட்டத்ரிக்குப் பிடிக்காது. பூர்வ ஜென்ம வினைக்கு பகவானை கோபித்து என்ன புண்ணியம் என்பார். அவர் எத்தனை உபாதைப்பட்ட போதிலும் "குருவாயூரப்பா, என்னால் தாங்க முடியவில்லையே! என் மீது இரக்கம் காட்டக்கூடாதா" என்று கெஞ்சு வாரே தவிர, கோபித்துக் ஒரு வார்த்தை சொன்னதில்லை!

குருவாயூர் ஆலயமே கதி என்று நாராயணீயத்தைப் பாடிக் கொண்டு பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்ந்தார். குருவாயூரப்பனின் புகழையும், பக்தியையும் பரப்பியதில் பட்டத்ரிக்குப் பெரும் பங்கு உண்டு. நாராயண பட்டத்ரி ஒரு மண்டலம் மூகாம்பி என்ற தலத்தில் யோக நிஷ்டையில் இருந்தார். பின்னர் துவாரகை, பூரி, மதுரா, பண்டரிபுரம், பத்ரிநாத் என்று வட இந்திய யாத்திரை செய்தபடியே கண்ணன் கழலடி சேர்ந்தார்.

பகவானைத் தொட்டு அபிஷேக அலங்காரம் செய்பவர் பட்டர். நாராயணீயம் என்ற அமர காவியத்தின் மூலம் பகவானின் அவதாரங் களை அணு அணுவாக ரசித்து, மானசீகமாகஅவனைத் தொட்டு, மக்களுக்கு உணர்த்தி, ஒவ்வொரு ஸ்லோகத்திற்கும் பகவானிடம் ஒப்புதல் பெற்று "பட்டத்ரீ" என்ற பட்டத்தைப் பகவானிடம் பெற்றவர் நாராயண பட்டத்ரி. நாராயணப் பட்டத்ரி. எழுத்தச்சன், பில்வ மங்கள், பூந்தானம் போன்ற பக்த சிரோன்மணிகள் வாழ்ந்த காலம் கேரளத்தின் வஸந்த காலம்.

பட்டத்ரியின் இனிய சரித்திரம் படிப்பவரையும், கேட்பவரையும் பக்திப் பரவசத்தில் ஆழ்த்தி, நல்வழியில் வாழச் செய்து குருவாயூரப்பனின் கருணைக்குப் பாத்திரமாக்கும்.

98. எழுத்துக்கே தந்தையாக வாழ்ந்த எழுத்தச்சன்.

கேரளத்தில் திருக்கண்டியூரில் பிறந்தவர் எழுத்தச்சன். ஒரு வயதுக் குழந்தையாக இருந்த போது தந்தையைப் பறி கொடுத்தார். தாயார் சக்கிலியக் குடும்பத்து மங்கை. ஏழைக் குடும்பம். வயலில் வேலை செய்து மகனைக் காப்பாற்றி வந்தாள்.

வேலை செய்யுமிடத்திற்கு குழந்தையை அழைத்துப் போனால் வயலில் இறங்கி உடம்பெல்லாம் சேறாக்கிக் கொள்வான். அவனைச் சுத்தப்படுத்தி உட்கார்த்தி விட்டு வரும்போது வேலை தடைப்பட்டது. அதனால் சிவன் கோவில் மைதானத்தில் விளையாட விட்டு விட்டு அவன் ஏமாந்த நேரம் தப்பிவிடுவாள்.

ஆற்றங்கரையில் அந்தணர்கள் நீராடி சப்தமாக வேதம் சொல்லிக் கொண்டு வருவதை தினம் கவனித்தது அந்த ஒன்றரை வயதுக் குழந்தை. கேள்வி ஞானத்தில் குழந்தைக்கு வேதம் மனப்பாடமாகி விட்டது. புதியதாக வேதம் சொல்பவர்களின் தப்புக்களை குழந்தை திருத்தியது. ராகத்தோடு குழந்தை மழலையில் வேதம் சொல்வதை நம்பூதிரிமார் பாராட்டினர். முதலில் ஆச்சரியப்பட வைத்த விஷயம் பின்னர் ஆத்திரமாக மாறியது. "ஒரு சக்கிலியக் குழந்தை நம்மை திருத்துவதாவது" என்ற அகந்தையில் குழந்தையைப் பேசவிடாமல் செய்து விடுவது என்று முடிவு கட்டினர். மாந்திரீகன் துணை கொண்டு பழமும், பொரியும் மந்திரித்து எடுத்து வந்தனர்.

குழந்தையை அன்புடன் அழைத்து பழத்தையும், பொரியையும் உண்ண செய்தனர். வேலை முடிந்து வந்த தாய் வழக்கத்திற்கு மாறாக குழந்தை தூங்குவதைக் கண்டாள். குழந்தை தூங்கிய கோலமும் அவளைக் கலவரப்படுத்தியது. தூக்கிக் கொண்டு வந்தாள். இரவு நெடுநேரம் கழித்து குழந்தையை எழுப்பினாள். பேந்தப் பேந்த விழித்தது குழந்தை. என்ன கேட்டும் எப்படிக் கேட்டும் குழந்தையால் பேச முடியவில்லை. வாயை அசைத்தது. சப்தம் வரவில்லை. கண்களில் நீர் வழிய கைகளை விரித்துக் காட்டியது. தலை தலையாய் அடித்துக் கொண்டு

கதறினாள் தாய். குழந்தையின் சைகையால் அவளால் எதுவும் புரிந்து கொள்ள முடியவில்லை.

வைத்தியரிடம் தூக்கிக் கொண்டு ஓடினாள். வைத்தியர் நன்கு பரிசோதித்த பிறகு ஒரு கஷாயம் கொடுத்தார். 'முப்பது நாட்கள் விடாமல் கஷாயம் கொடுத்தால் குழந்தை கண்டிப்பாய் பேசுவான்' என்று உறுதியும் அளித்தார்.

கஷாயம் மிகவும் கசப்பாய் இருந்ததால் குழந்தை அதை குடிக்க மறுத்தான். வாந்தி எடுத்தான். வெல்லம், கருப்பட்டி, கற்கண்டு எல்லாம் சேர்த்துப் பார்த்தார்கள். ஊஹூம். ஒரு பயனும் இல்லை. நிறைய மதுவைச் சேர்த்தார் வைத்தியர். குழந்தை மறுப்பின்றி குடித்தது. முப்பது நாட்களில் நன்றாகவும் பேசியது. ஆனால் முப்பது நாட்களின் மதுப்பழக்கம் ஆயுள் முடிய எழுத்தச்சனை விடவில்லை. பேசுவதற்காக அவர் விலையாகக் கொடுத்தது போதை பழக்கம். ஆனால் மது அருந்திய பிறகு அவரது கவித்திறமை ஒளிவிட்டுப் பிரகாசித்தது. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், சமஸ்கிருதம் ஆகிய ஐந்து மொழிகளையும் திறமையாகப் படித்தார் எழுத்தச்சன்.

ஒரு திண்ணைப் பள்ளிக் கூடம் தொடங்கி ஏழைக் குழந்தைகளுக்கு ஆரம்ப நிலையிலிருந்தே படிப்புச் சொல்லிக் கொடுத்தார். எழுத்துக்களை நன்றாக எழுத, உச்சரிக்கத் தெரிந்த பிறகே பாடத்துக்குப் போவார். அதனால் பெற்றோர் வைத்த பெயர் மறைந்து எழுத்து+அச்சன் என்றே பெயர் வழங்கலாயிற்று. 'அதோ எழுத்தச்சன் வருகிறார் பார்' என்று பெற்றோர் அடையாளம் காட்டினர். 'எழுத்தச்சன் வீட்டிலிருக்கிறாரா' 'எழுத்தச்சன் வீட்டுக்கு எதிர் வீடு' என்றெல்லாம் அடையாளம் சொல்லி சொல்லி இயற்பெயர் அழிந்தே போயிற்று. சொல்லிக் கொடுக்க சரியான நூல்கள் இல்லை என்பதாலேயே இவர் பலமொழிகளைக் கற்றார். ஆந்திரா, தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா முழுவதும் சுற்றினார். பல பண்டிதர்களை சந்தித்தார். வைணவ மடம் ஒன்றில் தங்கி இராமாயண, மகாபாரதங்களை நுட்பமாய்ப் படித்தார்.

இவரது வைணவ குரு 'கேரள இராமானுஜன்' என்றே இவரை அழைப்பார். மலையாளமும், சமஸ்கிருதமும் கலந்து இயற்றிய இவரது இராமாயணமும், மகாபாரதமும் இவருக்கு துஞ்சத்து இராமானுஜ எழுத்தச்சன், 'துஞ்சத்து ஆசாரியன்' என்ற சிறப்புப் பட்டங்களைப் பெற்று தந்தது. இவரது ஸ்லோகங்களில் சந்தமும், நடையும் கவித்துவமும், அர்த்தம் பொதிந்த பாண்டித்யமும் அனைவராலும் போற்றப்படுபவை.

நாராயண பட்டத்ரி நாராயணீயம் எழுத எழுத்தச்சனே காரண கர்த்தா.

"உன் வாதநோய்க்கான மருந்தை எழுத்தச்சனிடம் கேட்டு த் தெரிந்து கொள்" என்று பட்டத்ரியிடம் கண்ணன் சொல்ல, சீடனை எழுத்தச்

சனிடம் கேட்டுவர அனுப்பினார் பட்டத்ரி. 'நாளை முதல் மீனைத் தொட்டுப் பாடச் சொல்' என்று சொல்லிவிட்டார் எழுத்தச்சன். 'அந்தணரான பட்டத்ரி மீனைத் தொட்டுக் கொண்டு பாடுவதா' எனத் தயங்கியபடி சீடன் சொல்ல, மச்சாவதாரம் தொடங்கி தசாவதாரங்களுடன் 'நாராயணீயம்' என்ற அமரகாவியம் பிறந்தது. பட்டத்ரியின் வியாதியும் தொலைந்தது.

இராமர், கிருஷ்ணன் இருவர் மேலும் அவருக்கு பக்தி அதிகம். பூவுலகில் மானிட ஜென்மம் எடுத்த என் பரந்தாமன் எப்படிப்பட்டவர்! அடுத்த வீட்டுக்காரனைக் குறிப்பிடுவது போல் வெறுமே இராமன், கண்ணன் என்று குறிப்பிடுவதா" என்பார்.

சுந்தரன், ஆனந்தஸ்வரூபன், இந்திரா மந்திரன், சந்திர பிம்பாதனன், சந்திராடப் பிரியன், இந்த்ராதி விருந்த வந்த்யாஸ்ரீ யுக்மார விந்தன் என்ற அடைமொழிகள் சேர்த்துத்தான் எழுதியிருக்கிறார். கேட்டதைக் கொடுக்கும் பாரிஜாதம், கற்பக விருட்சம் என்று ஸ்ரீ இராமனை வர்ணிப் பவர். உவமானமில்லாமல் எதையும் எழுதுவதில்லை. அக்னியை ஸ்வாஹா திபதி என்றும், இந்திரனை சுரபதி என்றும், யமனை பித்ருபதி என்றும், தென்மேற்கின் அதிபதியை நிருதி என்றும், வருணனை யாத சாம்பதி என்றும், வாயுவை சதாபதி என்றும் குபேரனை தனபதி என்றும், ஈசானனை பசுபதி என்றும் மமபதி கண்ணன் என்றும் அழகுற வர்ணித்திருக்கிறார். உலக பந்தங்கள் அநித்யம என்று காட்ட லக்ஷ்மணனுக்கு இராமன் சொல்வது போன்ற அறிவுரைகள் 'லட்சுமண உபதேசம்' என்ற ஒரு அத்தியாயமாகவே வருகிறது. இவருடைய இலக்கியங்களில் வர்ணனைகளோடு அறிவுரைகளுக்கும் பஞ்சமில்லை.

நெருப்பு ஆபத்தானது. ஆனால் நெருப்பின் உதவியின்றி உணவைப் பக்குவப் படுத்த முடியாது. விளக்கின் ஒளியின்றி காவியங்களைப் படிக்க முடியாது. நீரும் அதுபோலத்தான். நீந்தி விளையாடினால் மகிழ்ச்சியைத் தரும். கொட்டும் அருவியில் குளிப்பதால் பல நோய்கள் தீருகிறது. தாகம் தணிக்க தண்ணீர் உதவுகிறது. சுழலும் வெள்ளமுமான நீரும் அபாயமானதுதான்.

மது எழுத்தச்சன் வாழ்க்கையில் நீரைப் போல், நெருப்பைப் போல் உதவியது. மது அவர் சிந்தனையை தெளிவாக்கியது. காவியங்களைப் படைக்க வைத்தது. அவரது புலமையைப் பிரகாசிக்கச் செய்தது,

கொட்டையோடும், கோதுகளோடும் இருக்கும் புளியை உணவாகக் கொள்கிறோம். கடலில் மீனோடு, கடல் வாழ் உயிரினங்களோடு இருக்கும் உப்பைக் காய்ச்சி எடுத்துக் கொள்கிறோம். நெல்லை நீக்கி அரிசியை சமைத்து ஏற்கிறோம். வாழைக்காயை தோல் சீவியும், வாழைப் பூவை கை கறையானாலும் சகித்துக் கொண்டு பட்டையையும், கள்ளனையும் எடுத்துவிட்டு அது தரும் நன்மைகளுக்காக உட்கொள்கிறோம். இப்படி அன்றாட வாழ்க்கையில் ஏராளம். மதுவோடு இணைந்த கவி எழுத் தச்சனும் அப்படித்தான். மதுவை விலக்கி எழுத்தச்சனின் காவியங் களுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். இந்தக் காவியம் படிப்பவருக்கும், கேட்பவருக்கும் குருவாயூரப்பன் அருளைப் பெற்றுத் தரும் என்பதில் சந்தேகமில்லை.

99. பொய்கையாழ்வார்

துவாபர யுகத்தின் பிற்பகுதியில், தொண்டை நாட்டின் தலை நகரான காஞ்சிபுரத்தில், திருவெஃகா என்னும் ஊரில், ஐப்பசி மாதம், வளர்பிறை அஷ்டமி, திருவோண நட்சத்திரம், செவ்வாய்க் கிழமையில் பாஞ்சசன்யம் என்னும் திருசங்கின் அம்சமாக பொய்கையில் பொற்றாமரை மலரில் பொய்கையாழ்வார் அவதரித்தார். இவருக்குப் பெருமாளிடம் பேரன்பு; இவரால் பாடப் பெற்ற ஸ்தலங்கள் ஸ்ரீரங்கம், ஒப்பிலியப்பன் கோவில், காஞ்சிபுரம், திருப்பதி, திருக்கோவலூர், ஸ்ரீ வைகுண்டம்.

முதலாம் திருவந்தாதி என்று நூறு பாடல்கள் பாடி 'கவிஞர் பேரேறு' என்ற சிறப்புப் பெயர் பெற்றவர். பகவானைத் தவிர வேறெதையுமே அறியாதவர். ஆழ்வார்களில் முதலாழ்வார் இவர்.

நாடினும் நின்னடியே நாடுவேன் நாள் தோறும்
பாடினும் நின் புகழே பாடுவேன்– சூழலும்
பொன்னாழி ஏந்தினான் பொன்னடியே சூடுவேற்கு
என்னாகில் என்னே எனக்கு?

யாரையாவது உதவி கேட்க வேண்டும் என்ற நிலை வந்தாலும் உன் பாதங்களைத் தான் பற்றிக் கொள்வேன். என் நா தினமும் உன் புகழை மட்டுமே பாடும், என்று பெருமாளையே நினைத்துக் கொண்டிருக்கும் பொய்கையாழ்வாருக்கு திருமாலையன்றி வேறு நினைப்பே கிடையாது. பொய்கையில் தோன்றியதால் பொய்கை யாழ்வார் என்ற பெயர் பெற்றார்.

100. பூதத்தாழ்வார்

துவாபர யுகத்தின் முடிவில், மகாபலிபுரத்தில், திருமால் சயனக் கோலத்தில் எழுந்தருளியுள்ள இந்த ஸ்தலத்தில், மல்லிகைத் தோட்டத் தின் நடுவில், ஒரு நீலோத்பல மலரில் சித்தாத்ரி ஆண்டு, ஐப்பசி மாதம், வளர்பிறை நவமி திதி, அவிட்ட நக்ஷத்திரம், புதன் கிழமை அன்று கௌமோதகி என்னும் கதாயுத அம்சமாக பூதத்தாழ்வார் அவதரித்தார். இவர் லோகாதய வாழ்வை வெறுத்தவர்.

"தாழ் சடையும் நீண் முடியும் ஓன் மழுவும் சக்கரமும்
சூழ் அரவும் பொன்னாணும் தோன்றுமால் சூழும்
திரண்டு அருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து"

திருப்பதியில் சிவனையும், பெருமாளையும் ஹரி ஹரனாகப் பார்த்தவர் இவர் மட்டுமல்ல. பொய்கை யாழ்வாரும்,

"பொன் திகழும் மேனிப் புரிசடைப் புண்ணியனும
நின்றுலகம் தாய நெடுமாலும்– என்றும்
இருவர் அங்கத்தால் திரிவாரேனும் ஒருவன்
ஒருவன் அங்கத்து என்றும் உளன்"

என்று திருமால் உருவத்திலே சிவனையும் தரிசித்தவர்.

பெருமாளை தரிசித்ததை "யானே ஏழ்பிறப்பும் தவம் உடையேன்" என்ற புளகாங்கிதத்துடன் பாடியவர் பூதத்தாழ்வார்.

"திருமாலைச் செங்கண் நெடியானை, எங்கள் பெருமானை, கை, கூப்பி வணங்கப் பெற்றேனாதலின் யான் இனி ஒரு குடையின் கீழ்

மண்ணுலகம் ஆள்வதையும் வேண்டேன்; தேவர்க்கும் தேவனாய் தேவருலகம் ஆள்வதையும் வேண்டேன்" என்று பூலோகம் முழுவதையும் ஒரு குடையின் கீழ் ஆளக் கொடுத்தாலும் வேண்டாம். இந்திரப் பதவியும் வேண்டாம். என் பெருமாளை சிரத்தின் மேல் கைகூப்பி வணங்குவதை விட அவை என்ன பெரிய பாக்கியம்' என்கிறார்.

"கதையும் பெரும் பொருளும் கண்ணா! நின்பேரே!
இதயம் இருந்தவையே! ஏத்தில் – கதையும்
திருமொழியாய் நின்ற திருமாலே உன்னைப்
பரு மொழியால் காணப் பணி.

சிறந்தார்க் எழுதுணையாம் செங்கண்மால் நாமம்
மறந்தாரை மானிடமா வையேன் – அறந்தாங்கும்
மாதவனே! என்னும் மனம் படைத்து மற்றவன் பேர்
ஓதுவதே நாவினால் உள்ளு.

மகிழ்ந்தது சிந்தை திருமாலே! மற்றும்
மகிழ்ந்தது உன்பாதமே போற்றி – மகிழ்ந்த(து)
அழல் ஆழி சங்கம் அவை பாடி ஆடும்
தொழிலாகம் சூழ்ந்து துணிந்து.

ஒவ்வொன்றும் மணிமணியான அர்த்தங்கள் கொண்ட பாசுரங்கள். சரித்திரம் என்றால் கண்ணன் சரித்திரம்; செல்வம் என்றால் பக்தியோடு அவன் புகழைப் பாடுவதே பெரும் செல்வம். எத்தனை கருணை இருந்திருந்தால் இந்த அறிவுப் புதையலை எனக்குப் பரிசாக அளித்திருப்பான்! இதே புத்தியை எப்போதும் மாறாமலிருக்க அருள் புரிய வேண்டும். உன்னை மறந்தவர்களை நான் மனிதர்களாகவே நினைப் பதில்லை. உன் பேரையன்றி வேறொரு பேரை என் நா உச்சரிக்காது. நெருப்பின் ஜ்வாலையில், சமுத்திர அலைகளில், சங்கின் வடிவத்திலே இப்படிக் காணும் பொருளிலெல்லாம் நான் உன்னையே பார்க்கிறேன்." இப்படி பாசுரங்கள் வாயிலாக தன் கருத்தை அழுத்தந்திருத்தமாகச் சொல்பவர் பூதத்தாழ்வார்.

யாராவது இறந்து விட்டால் "அன்னாரின் பூத உடல் மறைந்தது' என்று குறிப்பிடுகிறோம். ஆத்மாவுக்கு அழிவு கிடையாது. பாப புண்ணிய பலன்களை அனுபவித்து விட்டு வேறொரு கூட்டுக்குள் புகுந்து

கொள்கிறது. கதாயுதமாயிருந்த தன்னை ஒரு உடலை இரவல் கொடுத்து பூமியில் விட்டவர் பெருமாள். அவன் புகழ் பாடுவது அவனிட்ட பணி.

பூமியில் உயிரிருக்கும் போதே தன் உடலை வெறுத்து, பூதமாக பாவித்துப் பூதம் வந்திருக்கிறது; பூதம் சாப்பிடுகிறது; பூதம் தூங்கப் போகிறது; பூதம் குளிக்கிறது என்றே பேசி வந்ததால் பூதத்தாழ்வார் என்பது காரணப் பெயராயிற்று. அதனால் இவர் தெய்வப் பிறவியே என்று அனைவரும் வணங்கினர்.

ஸ்ரீரங்கம், கும்பகோணம், அழகர்கோவில், தஞ்சாவூர், திருகோஷ்டியூர், திருதண்காலூர், திருக்கோவிலூர், அத்திகிரி, காஞ்சிபுரம், திருநீர் மலை, மகாபலிபுரம், திருப்பதி, ஸ்ரீ வைகுண்டம் இவைகள் இவரால் பாடப் பெற்ற பெருமை பொருந்திய ஸ்தலங்கள். இவர் பாடிய நூறு பாடல்களும் இரண்டாம் திருவந்தத்தாதியாக நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

101.பேயாழ்வார்

துவாபர யுகத்தின் இறுதியில், தொண்டை நாட்டில், சென்னையிலுள்ள மைலாப்பூரில், ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் திருக்கோவிலில் உள்ள திருக்கிணற்றில், செங்கழுநீர் (செவ்வல்லி) பூவிலிருந்து, சித்தார்த்தி ஆண்டு, ஐப்பசி மாதம், சுக்ல பட்ச தசமி, சதய நட்சத்திரம், வியாழக்கிழமை அன்று திருமாலின் படைகளில் ஒன்றான நந்தகம் என்னும் வாளின் அம்சமாக பேயாழ்வார் அவதரித்தார்.

இளமையிலேயே கல்வியில் சிறந்து விளங்கினார். அருந்தமிழ் பாக்களால் அரவிந்தனைப் பாடினார். திருமாலின் மேல் இவர் பாடிய பதிகங்கள் நூறும் மூன்றாம் திருவந்தாதியாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

இறந்தவர் திரும்பி வந்தால் பேய் என்கிறோம். அது எவரையாவது பிடித்துக் கொண்டால் பேயோட்டுகிறோம். இதையெல்லாம் பார்த்த இவர் உயிரோடிருக்கும்போதே தன்னைப் பேய் என்றே சொல்லிக் கொள்வார்.

அதனால் இவரைப் பேயாழ்வார் என்றே அனைவரும் அன்புடன் அழைத்து நமஸ்கரித்துச் சென்றனர். ஸ்ரீரங்கம், கும்பகோணம், ஒப்பிலியப்பன் கோவில், அழகர் கோவில், திருக் கோஷ்டியூர், காஞ்சிபுரம், திருவேளுக்கை, திருவல்லிக்கேணி, திருப்பதி, காஞ்சிபுரம், திருவெஃகா, சோளிங்கபுரம், ஸ்ரீவைகுண்டம் முதலிய ஸ்தலங்கள் இவரால் பாடப் பெறும் பாக்கியத் தைப் பெற்றவை.

பகவானின் பாதாரவிந்தங்களே நிரந்தரம். இந்தப் பேய் சரீரம் அழியக் கூடியது என்று போதனை செய்தவர். பேயாழ்வார், பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார் மூவருக்கும் நிறைய ஒற்றுமைகள் உண்டு. மூவரும் சித்தாத்ரி ஆண்டு, ஐப்பசி மாதம், வளர்பிறையில் பிறந்தவர்கள். மூவருமே ஆளுக்கு நூறு அந்தாதி பாடியவர்கள். மூவரும் பொற்றாமரை, நீலோத்பலம், செவ்வல்லி மலர்களில் தோன்றியவர்கள். இம்மூவரும் சந்தித்த வரலாற்றைப் பார்ப்போம்.

"என்ன ஸ்வாமி! உங்களின் சங்கும், வாளும், கதையும் பூலோகத்தில் அவதரித்தும் ஒருவருக்கொருவர் சந்தித்துக் கொள்ளவில்லையே! அப்படியேதான் காலகதியடைந்து வரப் போகிறார்களா?" என்றான் மகாலக்ஷ்மி.

"வெகு காலம் பார்க்காதவர்கள் சந்தித்துக் கொள்வதானாலும் சரி; ஒரு ஜன்மம் முடிந்து மறுபடி பூமியில் ஜனன மெடுப்பதானாலும் சரி... ஒரு மழை பெய்த பிறகே பார்க்கலாம். சாதாரண மழையல்ல... பூமி குளிர வேண்டும். மூவருமே என் அடியார்கள். சந்திக்கும் அதிசயத்தைப் பார்" என்றார் பரந்தாமன். "அதென்ன பூதத்தார், பேயார் என்றெல்லாம் உங்களின் அடியார்கள் பெயர் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்?" என்றாள் தேவி.

'ஆகாயம், பூமி, நீர், நெருப்பு, காற்று' இவைகளை பஞ்ச பூதங்கள் எனப்படுகிறது. பூதம் என்று சொல்லப்படுவதனால் அவை கோபப் படுவதில்லை. பஞ்ச பூதங்களின் உதவியின்றி உலகம் இயங்காது. நான் உனக்கு அத்யந்தமானவன் என்று பூதத்தார் நினைவூட்டவே அப்பெயரைச் சூட்டிக் கொண்டிருக்கிறார்.

வாழைப் பழங்களிலே பேயன் பழம் எனக்கு மிகவும் பிடிக்கும். சிவபெருமானுக்கு பேயன் என்றொரு பெயர் உண்டு. சங்கர நாராய

ணனாக பாதி உடலைப் பகிர்ந்து கொண்ட எனக்கும் பேயன் என்ற பெயரில் பங்கு வந்து விடுகிறது. எனக்குப் பிடித்தவைகளை நினைவூட்ட பேயன் என்று அவன் பெயர் சூட்டிக் கொண்டிருக்கலாம்" என்று பகவான் சொல்ல,

'நல்ல விளக்கம்' என்று சொல்லி சிரித்தாள் ஸ்ரீதேவி. மூன்று ஆழ்வார்களுக்கும் ஒரே சமயத்தில் திருக்கோவிலூர் பெருமாளைத் தரிசனம் செய்யும் ஆசையைத்தோற்றுவித்தார் பெருமாள். மூவரும் புறப்பட்டனர்.

பொய்கையாழ்வார் முதலில் தரிசனம் செய்து விட்டுத் திரும்பினார். ஆழ்வார் கோவிலை விட்டு வெளிவந்ததும் ஆரம்பித்த தூறல் பெரு மழையாய் கொட்டியது. மாலை முடிந்த இரவின் தொடக்க நேரம்.

மிருகண்டு மகரிஷியின் ஆஸ்ரமம். சாணம் போட்டு மெழுகிய திண்ணை. பேசாமல் திண்ணையில் ஏறிப்படுத்தார் பொய்கையார். சிறிது நேரத்தில் லேசாக நனைந்தபடி 'இங்கே இடமிருக்கிறதா' என்று கேட்டுக் கொண்டு பூதத்தார் வந்தார்.

"ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்" என்ற பொய்கையார் எழுந்து உட்கார்ந்து பூதத்தாருக்கு இடம் கொடுத்தார். கொஞ்சப் குறைந்திருந்த மழை மீண்டும் வலுத்தது. ஓடி வந்தார் பேயாழ்வார்.

"எனக்கும் கொஞ்சம் இடம் கிடைக்குமா?" பேயாழ்வாரின் கேள்விக்கு," வாருங்கள். ஒருவர் படுக்கலாம்; இருவர் இருக்கலாம்; மூவர் நிற்கலாம்" என்றனர் இருவரும். மூவரும் நின்றனர். பொழுது போக வேண்டுமே! ஊர், பேர், தொழில் விசாரித்தனர். மூவரும் புலவர் என்றறிந்ததும் மூவருக்கும் மகிழ்ச்சி பெருகிற்று.

"மச்சாவதாரம் எடுத்த எம்பெருமான் உங்களைப் போல் தான் நனைந்திருப்பார்" என்றார் பொய்கையாழ்வார். "கூர்மாவதாரத்திலும், வராஹ அவதாரத்திலும் கூட பகவான் நனையவில்லையா?" என்றார் பூதத்தார்.

"நரசிம்மாவதாரத்தைப் பார்த்து விட்டு மற்றவர்கள்தான் தொப்பலாய் நனைந்தார்கள்" என்றார் பேயாழ்வார். திரி விக்கிரமனாய் மூவடி மண் அளக்கும் போது மூன்றுலங்களையும் சேர்த்துத் தானே அளந்தான்"

என்றார் பொய்கையார். "கோடாலிக்கே பெருமை சேர்த்து பரசுராமனாய் அவதரித்தானே! தந்தை வாக்குக்குப் பெருமை சேர்த்தான். அந்த அவதாரத்திலும் சரி, ஸ்ரீராமாவதாரத்திலும் சரி "என்ற பேயாழ்வாரை" ஸ்ரீ ராமாவதாரத்துக்கு ஈடு ராமாவதாரம்தான்! ஒரு பாணம், ஒருவாக்கு, ஒரு பத்னி" என்று வாழ்ந்து காட்டிய அவதாரமல்லவா" என்ற பூத்ததாரின் சொல் புளகாங்கித முறச்செய்தது.

"தம்பியாய் பிறந்தால் கஷ்டம் என்று அண்ணனாய் அவதரித்தான் ஆதிசேஷன். பலமான இராமனாய் இருக்கலாம். காரிய பலத்தைக் காட்டியவன் கண்ணன் தானே! அந்த காசாம்பு மேனியன் தன் முத்துப் பல் வரிசை காட்டித்தானே கோபிகைகளை மயங்க வைத்தான்! யசோதை பெற்ற பாக்யம் எவருக்குக் கிடைக்கும்? அவர் தவழ்ந்து வரும் சலங்கை ஓசையைக் கேட்டிருக்கிறீரா?" என்றார் பொய்கையாழ்வார்.

"கண்ணன் வந்து கோவர்த்தனகிரியை மறுபடி பிடிக்க வேண்டும் போல் மழை கொட்டுகிறதே" என்றார் பூதத்தார். "காளிங்கன் மேல் நர்த்தனமாடுமுன் எத்தனை முறை யமுனைக்குள் இழுக்கப்பட்டு நனைந்தான் எம்பெருமான். ஒரு தடவை நனைந்ததற்கே இப்படி வெடவெடக்கிறதே" என்றார் பேயாழ்வார்.

"பரந்தாமன் பாத சேவை பவித்ரமானது.... காளிங்கன் மேல் நடனமாடிய பாதங்கள். வாமனனாய் உலகை அளந்த பாதங்கள். மகாலக்ஷ்மி பூஜித்த பாதங்கள்! சகடனை உதைத்த பாதங்கள்" பொய்கையார் மெய் மறக்க, "தாமரை மலர் போன்ற பாதங்களில் காயம் பட்டிருக்கிறதா என்று யசோதை தடவிப் பார்த்தாளாமே" என்றார் பூதத்தார்.

"வாய்க்குள் பிரபஞ்சத்தைக்காட்டியவன், மண்ணையும், வெண்ணை யையும் ஒன்றாய் எண்ணி உண்டவன், குசேவனின் அவலுக்காக குபேர சம்பத்தை அளித்தவன். நம்மை சந்திக்க வைக்க மழையை உண்டாக் கியவன், குரு புத்திரனுக்காக சமுத்திரத்தில் துழாவி சங்கெடுத்து ஊதியவன்" பேயாழ்வார் உணர்ச்சி வசப்பட்டு வர்ணித்துக் கொண்டே போக, பூதத்தார் "யாரோ நெருக்குகிற மாதிரி இல்லையா?" என்றார்.

"ஆமாம்.... நாலாவதாய் ஒருத்தர் வந்திருக்கிறார். இந்த இருட்டு மழையில் முகம் தெரியவில்லை" என்றார் பொய்கையார்.

மூவரும் மௌனமாகி ஞானதிருஷ்டியால் வந்திருப்பது எப்பெருமானே என்று கண்டு கொண்டனர். முதலில் பொய்கையார், 'வையந் தகளியா வார் கடலே நெய்யாக, வெய்யக் கதிரோன் விளக்காக' என்று தொடங்கி முதல் திருவந்தாதியைப் பாடினார். அடுத்து பூதத்தார், "அன்பே தகளியா, ஆர்வமே நெய்யாக, இன்புருகு சிந்தை இடுதிரியா நன்புருகி ஞானச் சுடர் விளக்கேற்றினேன்; நாஏணர்க்கு ஞானத்தமிழ் புரிந்த நான்" என்று இரண்டாம் அந்தாதியைப் பாடினார். மூன்றாவதாக பேயாழ்வார், "திருக் கண்டேன், பொன்மேனி கண்டேன். திகழும் அருக்களனி நிறமும் கண்டேன், செருக்கினனும் பொன் ஆழி கண்டேன், புரி சங்கம் கைக் கண்டேன், என் ஆழி கண்ணன் பால் இன்று." என்று தொடங்கி நூறு பாடல்களையும் பாடி முடித்தார்.

'இந்த பூமியை விளக்காகவும், கடலை நெய்யாகவும், சூரியனை எரியும் சுடராக' இயற்கையையெல்லாம் இறைவனாகக் கண்டவர் பொய்கையார். அன்பே விளக்காக, பக்தியே நெய்யாக, இறைவனே எண்ணமாக இருக்கும் சிந்தனையே திரியாக, ஞான விளக்கேற்றி வழிபடுகிறார் பூதத்தார்.

'திருவாகின்ற லட்சுமியைக்கண்டேன்; நாராயணனது பொன் மேனியைக் கண்டேன்; சங்கு சக்கரதாரியைக் கண்டு கொண்டேன்" என்று கண்ட காட்சியை கண்முன் நிறுத்துகிறார் பேயாழ்வார்.

இதிலிருந்து என்னதெரிகிறது? பகவானின் புகழும், கல்யாண குணங்களும், பேசப்படும் இடங்களிலெல்லாம் பகவான் அரூபமாக இருக்கின்றார். பகவான் சஞ்சரிக்கும் இடங்களில் மன அமைதிக்கும் சந்தோஷத்திற்கும் பஞ்சமிருக்காது. ஸ்ரீ ராம பஜனை செய்யும் இடங்களி லெல்லாம் ஆஞ்சனேயர் வருவதாக ஐதீகம். அதனால் எடுத்த காரியங்கள் வெற்றி அடையும்.

திவ்ய பிரபந்தங்களை முதன்முதல் அருளிய பெருமையினால் இவர்களுக்கு 'முதலாழ்வார்கள்' என்ற சிறப்பு உண்டு. யோக பலத்தால் நெடுங்காலம் வாழ்ந்தவர்கள் இவர்கள். திருக்கோவிலூரிலேயே முக்தி பெற்றார்கள். இவர்களின் புண்ய சரித்திரம் படிப்பவர்களையும் கேட்பவர் களையும் வைராக்கிய மனத்தினராக்கி, புலமையையும், புகழையும், முக்தியையும், பெருமானின் அருளையும் அருளச் செய்யும்.

102. திருமழிசை ஆழ்வார்

துவாபர யுகத்தில் தொண்டை நாட்டில் திருமழிசையில் பார்க்கவ ரிஷி 'தீர்க்க சத்ரம்' என்ற யாகத்தைச் செய்தார். ரிஷி பத்தினி கனகாங்கி கருவுற்று பன்னிரண்டு மாதங்கள் கழிந்தபின் சித்தாத்ரி ஆண்டில், தை மாதம், கிருஷ்ணபட்சப் பிரதமை, மக நட்சத்திரம், ஞாயிற்றுக்கிழமை கை, கால்கள், கண், மூக்கு வாய் என்று எந்த அவயவமும் இல்லாமல் ஒரு மாமிச பிண்டத்தை பெற்றெடுத்தாள். யாகம் செய்து, தவமிருந்து இப்படியா ஒரு பிண்டம் பிறக்கவேண்டும் என்று வருந்திய பெற்றோர் பெருமாளின் சக்கர அம்சம் என்று அறியாமல் அதை ஒரு பிரம்புப் புதர் அருகே வைத்து விட்டு வேறு ஊர் சென்று விட்டனர்.

திருமாலும், திருமகளும் அங்கு வந்து அன்புடன் அப்பிண்டத்தை நோக்க பிண்டம் கண்கள், மூக்கு, வாய், காது, மார்பு, வயிறு, கைகள், கால்கள், விரல்கள் என்று ஒவ்வொன்றாக உருப்பெற்று கை, கால்களை உதறி அழத்தொடங்கியது. அச்சமயம் பிரம்பறுக்க திருவாளன் என்பவன் வந்தான். அழும் குழந்தையை எடுத்துச் சென்று மனைவியிடம் கொடுத்தான்.

"பிள்ளைக்குறை தீர்க்க பெருமாள் அருளிய செல்வம் என்று அவளும் அன்போடு அதை வாங்கிக்கொண்டாள். ஆனால் குழந்தை வற்புறுத்திப் புகட்டினாலும் பாலும் அருந்துவதில்லை. மலஜலமும் கழிப்பதில்லை. தெய்வக் குழந்தை என்று ஊரார் தரிசனம் செய்தாலும் கண்டெடுத்தவர் கவலையுற்றனர். வேளாள குலத்தினரான ஒரு கிழத்தம்பதியினர் ஒரு கிண்ணத்தில் பால் கொணர்ந்து,"பிள்ளையில்லாமலே வாழ்வின் கடை வாயிலுக்கு வந்துவிட்டோம். எங்கள் கைப்பாலை நீ குடித்தால் நாங்கள் பெருமை பெற்றவர்களாவோம்" என வேண்ட, குழந்தை அப்பாலை வாங்கிக் குடித்தது.

வேளாள தம்பதியினர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. தினமும் காராம்பசுவின் பாலை சுண்டக் காய்ச்சி, பதமாக குடிக்கும் சூட்டில் கொண்டு வந்து கொடுத்தனர். ஒரு நாள் பாதி குடித்து விட்டு, மீதியை "நீங்கள் இருவரும் பகிர்ந்து சாப்பிடுங்கள்" என்று திருப்பிக் கொடுத்தது. பிரசாதமாக நினைத்து பக்தியுடன் இருவரும் பருகினர்.

என்ன ஆச்சர்யம்! இருவரும் முதுமை நீங்கி யௌவன கோலத்தி னராகி விட்டனர். இந்த அதிசயத்தை எல்லோரும் கூடி வியந்து பேசினர். எண்ணி பத்தாவது மாதம் அவர்களுக்கொரு ஆண் குழந்தையும் பிறந்தது. அதற்கு 'கணி கண்ணன்' என்று பெயர் சூட்டினர்.

கணிகண்ணன் எல்லா வேத சாஸ்திரங்களையும் கசடறக் கற்றான். திருமழிசை ஆழ்வாருக்கே சேவை செய்து தொண்டனானான். திருமழிசை ஆழ்வார் ஏழு வயதானதும் அஷ்டாங்க யோகம் புரிய எண்ணினார். ஒவ்வொரு சமயமாக படித்து ஆராய்ந்ததில் ஒவ்வொன் றிலும் அவருக்குக் குறைகளே தென்பட்டன. சைவ சமயத்தை ஆராய்ந்து கொண்டிருந்த நேரம் பேயாழ்வாரை சந்தித்தார். இருவரும் சந்தித்துக் கொண்ட முதல் நிகழ்ச்சியே சற்று விசித்திரமானது.

"இதென்ன..... செடிகளையெல்லாம் தலைகீழாய் நட்டிருக்கிறீர்கள்? குடமானால் பொத்தல்...நைந்து இற்றுப் போன கயிறு.... எந்த நேரம் அறுந்து கிணற்றுக்குள் விழப் போகின்றதோ...? இதென்ன பைத்தியக் காரத்தனம்.... நீங்கள் பித்தரா, பேயரா?" என்றார் திருமழிசை ஆழ்வார்.

"அடியேன் பெயரே பேயன் தான்.... ஆனால் நீர் மட்டுமென்ன... ஒவ்வொரு சமயமாக ஆராய்ந்துக் கொண்டிருக்கிறீரே! எப்போது முடிவுக்கு வந்து கடைபிடிப்பீர்? பிரளயம் வந்து யுகம் முடிந்தபோது கண்ணன் மட்டுமே ஆலிலையில் இருந்தான்! வேதங்களையெல்லாம் மச்சாவதாரனாக கொண்டு வந்தவர் திருமால். அமிர்தம் கடையும்போது மந்தரமலையை கூர்மமாக அவர் முதுகில் தாங்கி இராவிட்டால் அமிர்தம் கிடைத்திருக்குமா? கடலுக்கடியில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த பூமியை மீட்டுக் கொண்டு வந்தவர் அவர்தானே? விஸ்வரூபம் காட்டின கீதா சாரியானை விட சிறந்த தெய்வமும், வைஷ்ணவத்தை விட சிறந்த சமயமும் உண்டா?" என்று பலவாறு எடுத்துக் கூறி, பஞ்ச சமஸ்காரங் களுடன், மந்திரார்த்தங்களையும் உபதேசித்தருளினார்.

திருமழிசையில் உள்ள 'கஜேந்திர ஸரஸ்' என்ற குளக்கரையில் பல ஆண்டுகள் யோக நிஷ்டையிலிருந்தார் ஆழ்வார். பிறகு ஒரு மலைக் குகையில் யோகத்தில் ஆழ்ந்தார்.

அப்போது பொய்கையார், பூதத்தார், பேயாழ்வார் மூவரும் ஸ்தலயாத்திரை செய்து கொண்டே அங்கு வந்தனர். குகைக்கு வெளியே

வந்த ஒளி வெள்ளத்தைக் கண்டு ஞான திருஷ்டியால் குகைக்குள் ஆராய்ந்தனர்.

உள்ளே இருக்கும் ஆழ்வாரைக் காண மூவரும் சென்று நலம் விசாரித்தனர்.

"மூன்று முதலாழ்வார்களின் சங்கமம் பெற்ற என் நலத்துக்கு குறையொன்றுமில்லை" என்று பதில் சொன்னார் திருமழிசைஆழ்வார். இறைவனின் கல்யாண குணங்களையும், புகழையும் நால்வரும் பேசி மகிழ்ந்த பிறகு முதல் மூவரும் விடைபெற்று சென்றனர்.

தியானம் கலைந்த திருமழிசை ஆழ்வார் திருமழிசை வந்தார். சாத்துகைக்குத் திருமண் வேண்டியிருந்தது. தோண்டிப் பார்த்த இடத்தில் திருமண் அகப்படவில்லை. மனவருத்தத்தோடு உட்கார்ந்திருந்தவர் அப்படியே தூங்கி விட்டார். கனவில் திருமால் தோன்றி திருமண் இருக்குமிடத்தைச் சொல்ல, ஆழ்வார் மகிழ்ந்து அங்கு சென்று தோண்டிப் பார்க்க ஏராளமான திருமண் கிடைக்கப் பெற்றார். திருவெஃகாவில் பொய்கையார் பிறந்த பொய்கைக் கரையில் மீண்டும் திருமாலை வேண்டி யோக நிஷ்டையில் ஆழ்ந்தார்.

ககன மார்க்கமாய் சென்று கொண்டிருந்த உமாதேவி மகேஸ்வரனிடம் 'இந்த தவசி யார்' என்றுகேட்க, 'உன் தமையனின் பக்தன்' என்றார் ஈசன். "நாமும் இவனை ஆசிர்வதிப்போம்" என்றாள். தேவி. எதிரே கௌரி சங்கரர் வந்ததையும் அறியாமல் தவத்தில் ஈடுபட்டிருந்தார் ஆழ்வார்.

'பக்தி ஸாரர்' என்ற பெயரைச் சூட்டி விட்டு சிவனும், சக்தியும் அங்கிருந்து மறைந்தனர்.

ஒரு சமயம் புலியை வாகனமாகக் கொண்டு ககனமார்க்கமாய் சென்று கொண்டிருந்த சுக்திஹாரன் என்ற கந்தர்வன் ஆழ்வாரைப் பார்த்துக் கீழிறங்கி வந்தான்.

"பக்தி ஸாரரே.... துணி உடை அடிக்கடி கிழியும். அழுக்கானால் துவைத்து உலர்த்தும் தொல்லை உண்டு. உம்மைப் போல் பக்தியே உயிராக கொண்டவர்களுக்கு இது தான் ஏற்றது" என்று கூறி ஸ்வர்ண கவசம் ஒன்று கொடுத்தான்.

பக்தி ஸாரர் திருமாலைக் கண்மூடி தியானிக்க, கோடி சூர்யப் பிரகாசமுள்ள ஒரு சந்திரகாந்த கவசம் அவர் கையில் இருந்தது. கந்தர்வன் வெட்கி தன் கழுத்தில் உள்ள நவரத்தின ஹாரத்தை நீட்டி " இதை ஜபமாலையாய் உபயோகித்துக் கொள்ளுங்கள்" என, கழுத்தி லிருக்கும் துளசி மணிமாலையை நாராயண மந்திரம் சொல்லிக் கொண்டே கழற்ற அது வைர மாலையாய் கண்ணைப் பறித்தது. கந்தர்வ சித்தன் ஆழ்வாரை வலம் வந்து வணங்கி விடைப் பெற்றான்.

திருவெஃகாவில் ஒரு கிழவி திருமழிசையாழ்வார் இருந்த இடத்தைப் பெருக்கி, மெழுகி கோலமிட்டு சுத்தப்படுத்தி வந்தாள். பெருமாள் கோவிலிலும் அதே கைங்கரியத்தை விடாது செய்து வந்தாள்.

கிழவிக்கு யாருமில்லை என்பதையும், பணி செய்யும் போது கிழவி அடிக்கடி சோர்வடைவதையும், மூச்சுத் திணறலோடு அவள் அவஸ்தைப் படுவதையும் பார்த்தார் ஆழ்வார்.

"பகவானே! இவள் மட்டும் இளமையோடிருந்தால் உனக்கு எத்தனை உற்சாகமாய்ப் பணி செய்வாள்! உன் கோவிலை அழகுப்படுத்தும் இவள் மேனி அழகு பட அருள் செய்யக் கூடாதா" என்று பரந்தாமனை! இறைஞ்சினார்.

என்ன ஆச்சரியம்! பெருக்கிக் கொண்டிருந்த கிழவியின் கூனிட்ட முதுகு நிமிர்ந்தது. உருண்டு திரண்டன கைகள். தொய்ந்து விழுந்த கால்கள் திடமாய் நிமிர்ந்தன. பொக்கை வாயில் முத்து முத்தான பல்வரிசை. இடுங்கிய கண்கள் கூர்மையான ஒளிபெற்று தீர்க்கமாய் இருந்தன. பஞ்சப் பொதி போன்ற நரைத்த முடி, கருகரு வென்ற மேகமென அலைந்தது. மொத்தத்தில் கிழவி அழகும், இளமையும் கொண்ட குமரியானாள்.

"பகவானே! உமக்கு சேவை செய்து பாக்கியவதியானேன்" என்று ஆழ்வார் திருவடிகளில் தெண்டனிட்டாள். ஊர் முழுவதும் இந்த அதிசயத்தைப்பற்றியே பேச்சு. பல்லவ மன்னன் அம்மங்கையை சந்திக்க ஆலயம் வந்தான். அவன் மேல் மோகமுற்று, அவளிடம் தன் விருப்பத் தைக் கூறி அவளையே மணந்து கொண்டான்.நாளாக ஆக அரசனை முதுமை தழுவிக் கொண்டது. கண் பார்வை மங்கியது. தலை நரைத்து நடை தளர்ந்தது.

"கிழவியான நீ குமரியானாய்! நானும் யௌவனமடைய வழி யொன்று சொல்..... அப்போதுதானே சம வாழ்க்கை வாழ முடியும்" என்று மனைவியிடம் கேட்டான் அரசன்.

"ஸ்வாமி, ஆழ்வார் தொண்டுக்குப் பரிசாக கிடைத்தது என் இளமை அடியார் தொண்டு ஆண்டவன் தொண்டை விட உயர்ந்தது. ஆழ்வா ருக்கு கணிகண்ணன் என்ற அருமையான சீடர் ஒருவர் இருக்கின்றார். தினமும் அரண்மனைக்கு உஞ்ச விருத்திக்கு வருகின்றார். கணிகண் ணனார் மூலமாக ஆழ்வாரின் அருளைப் பெறலாம்" என்று யோஜனை கூறினாள்.

மறு நாள் கணிகண்ணன் உஞ்சவிருத்திக்கு வந்த போது காவலர்கள் மன்னர் அழைப்பதாகக் கூறினர். கணிகண்ணன் அவர்களுடன் மன்னரைக் காணச் சென்றான். மன்னர் "உமது குருநாதரான திருமழிசை ஆழ்வாரை நான் காண வேண்டுமே! அவரை எப்படியாவது இங்கு

அழைத்து வாரும்" என, கணிகண்ணன், "அரசே! அவர் தலைவனாக நினைப்பது எம்பெருமானை மட்டும் தான். அவர் சிரம் அவனுக்கு மட்டுமே வணங்கும்; அவரது கால்கள் அவனது ஆலயம் மட்டுமே மிதிக்கும். அவரை அழைத்து வருவதென்பது நிலாவை பூமிக்கு இழுத்து வருவது போல நடக்க முடியாத செயல்" என்றார்.

"சரி; போகட்டும். ஆழ்வார் அருளால் பிறந்த நீங்களே என்மேல் ஒரு பாட்டுப் பாடும்; செவி குளிரக் கேட்டு திருப்தியுறுகிறேன்" என்றார் அரசர்.

" என் நா அரங்கனையன்றி அரசனைப்பாடாது" என்றார் கணி கண்ணன். "அரசன் திருமாலின் அம்சம். அதனால் பாடலாம்" என்று மன்னன் வற்புறுத்தினான்.

கணிகண்ணன் பெருமாள் மேல் பதிகம் பாடினார். "ஏன் என்மேல் பாடாமல் பெருமாள் மேல் பாடினீர்?" என்று அரசன் அதட்ட, "நீங்கள் தானே சற்றுமுன் 'திருமாலும், வேந்தனும் சமம் என்றீர்கள். பெருமாளைப் பாடினாலென்ன, உங்களைப் பாடினால் என்ன... உங்களைப் பாடியதாய் எடுத்துக் கொள்ளுங்கள்" என, அரசன் வெகுண்டு, "என்ன நெஞ்சழுத்தம்! என் குடிமகன் என்னை அலட்சியம் செய்வதா? உன்னைப் போல் பத்துப்பேர் கிளம்பினால் என்னை யார் மதிப்பார்கள்? இன்றிலிருந்து உன்னை நாடு கடத்துகிறேன். அஸ்தமனத்திற்குள் எல்லையைக் கடக்க வேண்டும்" எனக் கோபமாக ஆணையிட்டு விட்டு அரசவை விட்டுச் சென்றான்.

கணிகண்ணன் நேராக குருநாதரைத் தேடிச் சென்று நடந்தவை களைக் கூறி "ராஜாங்க உத்தரவு; நான் போக உத்தரவு தர வேண்டும்" என்று பணிந்து வேண்ட, ஆழ்வார், "எனக்கு மட்டும் இங்கென்ன வேலை? இங்கேயே இரும். எம்பிரானைப் பாராமல் என்னால் இருக்க முடியாது. அவரையும் எழுப்பிக் கொண்டு வருகிறேன்" என்றவர், திருவெஃகா பெருமாள் முன்சென்று,

கணிகண்ணன் போகின்றான் காமரு பூங்கச்சி
மணிவண்ணா நீ கிடக்க வேண்டா – துணிவுடைய
செந்நாப் புலவனும் போகின்றேன் – நீயும் உந்தன்
பைந்நாகப் பாய் சுருட்டிக் கொள்.

என்று பாட பெருமாள் ஆதிசேஷனைச் சுருட்டி கடகததில் வைதது கொண்டு பிராட்டிகளோடு பின் சென்றார்.பகவான் செல்வதைப் பார்த்து கருடாழ்வாரும், மற்ற பரிவார தேவதைகளும் பின் சென்றனர். கோவில் 'வெறிச்' சோடிப் போயிற்று.

காஞ்சி நகரத்து மக்களுக்கு இல்லம் தோறும் பிணி வாட்டியது. பேய், பிசாசு போன்ற ஆவிகளின் கொட்டத்தால் மக்கள் அவதியுற்றனர். மகாலக்ஷ்மி நாட்டை விட்டுச் சென்றதால் பொக்கிஷம் சூறையாடப் பட்டது. கள்வர்களையும் கண்டு பிடிக்க முடியவில்லை. ஆதி சேஷனும், பூமாதேவியும் மறைந்ததால் பூமி பாளம் பாளமாய் வெடித்தது. எங்கும் விஷ நாகங்கள் பயமின்றித் திரிந்து மக்களைத் துன்புறுத்தின. அதனால் அகால மரணங்கள் ஏற்பட்டன. நல்லவர்களெல்லாம் வேறு நாட்டுக்குக் குடி பெயர்ந்தனர். நாட்டின் நிலையறிந்து எதிரி நாட்டினர் படை திரட்டுவதாக ஒற்றர் செய்தி கொண்டு வந்தனர். அறுவடை காலத்தில் மழை பெய்தது.

பெரும் பூஜையொன்று நடத்தி பெருமாளைத் திரும்பி வரும்படி இறைஞ்சினான் மன்னன்.

"ஆழ்வார் வந்தால்தான் நான் வருவேன். பக்தனுக்குக் கட்டுப்பட்டவன் நான்" என்ற அசரீரி கேட்டது.

திருமழிசை ஆழ்வாரிடம் ஓடினான் வேந்தன். ஆழ்வார் "கணி கண்ணனை தேசப் பிரதிஷ்டம் செய்தது என்னைச்செய்தது போல. கணி கண்ணனை சகல மரியாதைகளுடன் நாட்டுக்குள் அழைத்தால்தான் நானும் வருவேன்" என்று தீர்மானமாகச் சொல்லி விட்டார். மன்னனுக்கு வேறு வழியில்லை. வீதியோடு போகிற ஓணானை மடியில் போட்டுக் கொண்டாற் போல் ஆகிவிட்டது. கணி கண்ணரைத் தேடிச் சென்று மன்னித்து ஆழ்வாரோடு நகருக்கு வரவேண்டுமென்று அழைப்பு விடுத்தான். கணிகண்ணர் ஆழ்வாரை வேண்ட, ஆழ்வார் எம்பெருமானிடம்,

"கணிகண்ணன் போக் கொழிந்தான் காமருபூங்கச்சி
மணி வண்ணா நீ கிடக்க வேண்டும் – துணிவுடைய
செந்நாப்புலவனும் போக் கொழிந்தேன் – நீயும் உந்தன்
பைந்நாகப் பாய் படுத்துக் கொள்.

எனப் பாடி வேண்டினார்.

கணிகண்ணன், ஆழ்வார், பெருமாள், பிராட்டியார், கருடாழ்வார், பரிவார தேவதைகள் எல்லோரும் திருவெஃகா வந்தாகி விட்டது. பார்த்தால் அவசரத்தில் பெருமாள் தவறாக மாறி கால்மாடு தலை மாடாகப் படுத்து விட்டார்.

திருவெஃகாவில் இன்றும் அதே நிலையில் தான் தரிசனம் அளிக் கிறார். பெருமாள் ஆழ்வாரோடு தங்கியிருந்த இடத்துக்கு 'ஓரிருக்கை' என்று பெயர். ஒரு இரவு பெருமாள் வெளியே இருப்பதற்குள் நாட்டில் எத்தனை அலங்கோலங்கள் நிகழ்ந்து விட்டன!

திருமழிசையாழ்வாரை அதுமுதல் "யதோக்தகாரி" என்று மக்கள் குறிப்பிட்டனர். திருமால் திருத்தலங்களை வழிபட்டவாறே திருவை யாற்றுக்குப் பக்கத்தில் பெரும்புலியூர் என்ற கிராமத்துக்கு வந்தார். அப்போது அவ்வூரில் பெரிய யாகம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. ஆழ்வார் ஓய்வுக்காக யாகம் நடந்த வீட்டுத் திண்ணையில் அமர்ந்தார்.

இதைப் பார்த்த அந்தணர்கள் " வேளாள குலத்தவனான இவன் காது கேட்க வேதம் சொல்ல வேண்டாம்"என்று நிறுத்தி விட்டார்கள். இதை அறிந்த ஆழ்வார் திண்ணையை விட்டிறங்கினார். ஆழ்வார் புறப்படு கிறாரே என வேதத்தைச் சொல்ல ஆரம்பிக்க, விட்ட இடம் தெரியாமல் விழித்தார்கள் அந்தணர்கள்.

கீழே கிடந்த ஒரு கரு நெல்லை நகத்தால் கீறி ஜாடை சொன்னார் ஆழ்வார். அதைப் பார்த்ததும், "கிருஷ்ணானாம் வர்ஹீனாம் நகநிர் பின்னம்....." என்று விட்ட அடி அவர்கள் ஞாபகத்திற்கு வந்தது. எல்லாரும் அவரைத் தம் பிழை பொறுக்கும்படி பணிந்து வேண்டினர். ஆழ்வார் அவர்களுக்கு ஆசி கூறி விடை பெற்றார்.

திருமழிசை ஆழ்வார் உஞ்ச விருத்தி எடுக்கும் போது, கோயிலைச் சுற்றியுள்ள நான்கு வீதிகளிலும் பகவான் இவர் இருக்கும் பக்கமாக முகம் திருப்பிக் கொண்டார். இதைக் கண்ட அர்ச்சகர், பகவான் முகம் திரும்பி யதும் முதலில் பயந்தார். காரணம் புரிந்ததும் யாகத்தை முன்னின்று நடத்தும் தீட்சிதரிடம் இதைச் சொன்னார். தீக்ஷிதரும் மறுநாள் இதை சோதித்து அறிந்து கொண்டதும் பேரானந்தம் அடைந்து, திருமழிசை ஆழ்வாரைப் பூர்ண கும்ப மரியாதையுடன் யாக சாலைக்கு அழைத்து அக்ராசன பூஜை செய்தார்.

ஆனால் இச்செய்கையை யாகம்செய்த ரிக் வித்துக்கள் கண்டித்தனர். தீட்சிதர் மனம் நொந்து தலை கவிழ, ஆழ்வார் எம்பெருமானை 'என்னால் தீட்சிதருக்கு ஏற்பட்ட தலை குனிவை மாற்று" என வேண்டிப் பதிகம் பாடினார்.

அக்கரங்களக் கரங்களென்று மாவதென் கொலோ
இக்குறும்பை நீக்கி என்னை ஈசனாக்க வல்லையேல்
சக்கரம் கொள் கையனே சடங்கர் வாய் அடங்கிட
உட்கிடந்த வண்ணமே புறம் பொசித்துக் காட்டிடே!

இப்பாடல் முடிந்ததும் ஆழ்வார் மார்பில் சயன கோலத்தில் பெருமாளின் திருவுருவை எல்லோரும் சேவித்தனர். சாஷ்டாங்கமாக எல்லோரும் பெருமாள் காலடியில் விழுந்து வணங்கி மன்னிக்குமாறு வேண்டினர்.

அவர்களிடம் விடை பெற்று குடந்தை வந்தார் திருமழிசை ஆழ்வார். தாம் இயற்றிய நூற்றுக்கணக்கான பிரபந்தங்களை காவேரி வெள்ளத்தில் வீசி எறிந்தார். 'தகுதி உள்ளதை காவேரித்தாய் திருப்பித் தருவாள்' என்று பார்த்துக் சொண்டிருந்தார். திரும்பி வந்தவை "நான்முகன் திருவந்தாதி பாசுரம் 96, திருச்சந்த விருத்தம் 120 பாசுரம், இரு நூல்களையும் பெரு மாளின் பாதார விந்தங்களில் வைத்து, "ஸ்வாமி!

நடந்த கால்கள் நொந்ததுவோ, நடுங்க ஞாலமேனமாய்
இடந்த மெய் குலுங்கவோ விலங்குமால் வரைச் சுரம்
கடந்தகால் பரந்த காவிரிக் கரைக் குடந்தையுள்
கிடந்தவாறு எழுந்திருந்து பேசு" என்று பாடினார்.

உம்மைத் தரிசனம் செய்யவென்று ஓடி வந்திருக்கிறேன்.

காவேரிக்கும், அரசலாற்றுக்கும் நடுவே ஆனந்தமாய் பள்ளி கொண்டி ருக்கிறீரே! ஆராவமுதரே! மகாபலியிடம் மூவடி மண் யாசிக்க யாக சாலைக்கு நடந்து சென்ற களைப்போ? ஊழி வெள்ளத்திலே மூழ்கி கடலில் தேடி பூமியை மீட்டு வந்த சிரமம் இன்னும் தீரவில்லையா? சீதாபிராட்டியாரைக் காணாமல்; அலைந்த கால்வலியா, எதுவானாலும் சரி கொஞ்சமாகவாவது எழுந்து, என்னை கடாட்சித்து, இரண்டு வார்த்தை பேச வேண்டும்" என்று விண்ணப்பித்தார். அளக பாரங்கள்

அசைந்து குலுங்கியது; சற்றே எழுந்து ஆழ்வாரை குளிர நோக்கினான் ஆராவமுதன். ஆழ்வார் எம்பெருமானது கேச அழகில் ஈடுபட்டு "வாழி, கேசனே" என்று பாடினார். அதற்குள் 'பெருமாளை சிரமப் படுத்து கிறோமே, என்று நினைத்த ஆழ்வார் 'போதும், போதும்...இவ்வளவு போதும்' என அப்படியே இருந்து விட்டார் பெருமாள்.

இதனால் 'சொன்ன வண்ணம் செய்த பெருமாள்' என்ற பெயரும் ஆராவமுதனுக்கு ஏற்பட்டது. இங்கே பெருமாளை 'ஆராவமுதாழ்வார்' என்றும் திருமழிசை ஆழ்வாரை 'திருமழிசைப் பிரான்' என்றும் அழைப்பார்கள். இதன் காரணம், ஒரு சமயம் பெருமாளுக்கு நிவேதனம் செய்ய முடியாமல் பொருளாதாரம் சீர்கேடடைந்திருந்தது. அப்போது திருமழிசை ஆழ்வார் தனக்காக சமைத்த தளிகையை பரந்தாமனுக்கு அனுப்பி நிவேதனம் செய்த பிறகு பிரசாதமாக வாங்கி சாப்பிட்டார். கோவிலின் நிலை சீரடைந்ததும் பல பெரியவர்கள் கனவில் தோன்றி "இன்று முதல் என்னை 'ஆராவமுதாழ்வார்' என்றும், ஆழ்வானைத் 'திருமழிசைப் பிரான் ' என்றும், அழைப்பதே என்விருப்பம் 'என்ற ருளினார். தனக்கு சமமாக பத்மாசனத்தில் இடம் தந்து ஆழ்வாரைப் பெருமைப்படுத்தி இருக்கிறார்.

திருமழிசை ஆழ்வார் இங்கு 3000 ஆண்டுகள் யோகத்திலிருந்து பெருமாள் திருவடியை அடைந்தவர். "உறையிலிடாதவர்" என்று பெருமைப்படுத்தி இருக்கிறார் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார். சுதர்சனச் சக்கரத்தின் அம்சமாகப் பிறந்தவர் ஆதலால் குடந்தையில் சுதர்சனச் சக்கரத்தில் சம்மணமிட்ட கால்கள், கூப்பிய கைகள், அகன்ற மார்பு, தோள்கள், கண்கள், காதுகள், நீண்முடியுடன் ஆழ்வார் காட்சி தருகின்றார்.சுதர்சனச் சக்கரத்தை வலம் வருபவர்கள் 6,12,18,24 என்று வலம் வருவது வாழ்க்கையில் மேன்மையைத் தரும்.

இவரால் பாடப்பட்ட ஸ்தலங்கள் ஸ்ரீரங்கம், அன்பில், திருப்பேர் நகர், (கோவிலடி) கும்பகோணம், திருக்கோஷ்டியூர், கபிஸ்தலம், மதுரை, திருக்குறுங்குடி, திருப்பாடகம்(காஞ்சி புரம்) திருவூரகம், திருவெஃகா, திருவள்ளூர், திருப்பதி, துவாரகை, ஸ்ரீ வைகுண்டம்.

ஒரு முறை பிருகு, வசிஷ்டர், அத்திரி, பார்க்கவர் போன்ற பிரம்ம ரிஷிகள் 'பூலோகத்தில் தவம் செய்ய சிறந்த இடத்தைக் காண்பிக்க வேண்டும் ' என வேண்டினர்.

பிரம்மா விஸ்வகர்மாவைக் கூப்பிட்டு ஒரு மகோன்னதத் தராசைக் கொண்டு வரச் சொல்லி ஒரு தட்டில் உலகத்திலுள்ள அத்தனை வைணவ ஸ்தலங்களையும் மற்றொரு தட்டில் திருமழிசையையும் வைத்தார். அப்போது கூட திருமழிசைத் தட்டு கீழிறங்கியே இருந்தது. அதனால் அதுவே தவம் செய்யச் சிறந்த இடமாகக் கொண்டு எந்த இடையூறு மின்றித் தவமியற்றினர். திருக்கச்சி நம்பிகள் இந்த சம்பவத்தை பாடலாக எப்படி வடித்திருக்கிறார் பாருங்கள்.

உலகுமழிசைய முள்ளுணர்ந்து தம்மில்
புலவர் புகழ்க் கோலால் தூக்க – உலகு தன்னை
வைத்தெடுத்த பக்கத்தும் மாநீர் மழிசையே
வைத்தெடுத்த பக்கம் வலிது.

திருமழிசை ஆலயத்தில் பிரம்மா துலாக்கோல் ஏந்தி நிற்கும் சிற்பத்தை இன்றும் காணலாம்.

"பழமுறைகள் முறையிட, பைந்தமிழ் பின் சென்ற, பச்சைப் பசும் கொண்டலே" என்று குமர குருபரர் பாடிக் கொண்டாடிய ஆழ்வாரின் சரித்திரமாயிற்றே! பகவானை நமக்காக எல்லாம் தரச் செய்வார் ஆழ்வார். ஆழியின் அம்சமான இந்த ஆழ்வாரின் சரித்திரத்தைப் படிப்பவரும், கேட்பவரும் பரந்தாமனின் கருணைக்குப் பாத்திரமாகி, எல்லா நலன்களும் பெற்று வாழ்வில் மேன்மையுறுவர் என்பதில் சந்தேகமில்லை.

103. நம்மாழ்வார்.

நெல்லை மாவட்டத்தில் தாமிரபரணி நதிக்கரையில் இருக்கும் புண்ய ஸ்தலம் திருக்குருகூர். அங்கே வேளாளர் குலத்தில் காரியார் என்ற வைஷ்ணவ பக்தர் இருந்தார். காரியாரின் தந்தை பொற்காரியார் திருவண் பரிசாரம் என்னும் ஊரிலுள்ள திருவாழ் மார்பனின் மகள் உடைய நங்கையாரைத் தன்மகனுக்கு மணம் பேசி முடித்தார். நெடுநாள் ஆகியும் அவர்களுக்கு சந்தான பாக்கியம் இல்லை. சந்தான கோபால கிருஷ்ண விருதம், சந்தான லக்ஷ்மி பூஜை, சத்ய நாராயண விரதம் எல்லாம் இருந்தும் பலன் காணவில்லை.

ஒரு நாள் கோவிலில் பகவானுக்கு அர்ச்சனை நடக்கும்போது அர்ச்சகருக்கு அருள் வந்து "நாமே வந்து பிறக்கின்றோம். கவலை வேண்டாம்" என்ற நல்வாக்குக் கிடைத்தது. அதன்படி கலியுகம் பிறந்து நாற்பத்து மூன்றாவது நாள், பிரமாதி ஆண்டு, வைகாசி மாதம் 12ம் நாள் சுக்ல பக்ஷ சதுர்த்தசி, விசாக நக்ஷத்திரம், கடக லக்னத்தில் ஆழ்வார்கள் அனைவரையும் உறுப்புகளாகக் கொண்டு விஷ்வக்சேனரின் அம்சமாகப் பிறந்தவர் நம்மாழ்வார். அதற்கு முன்பே, பெருமாள் ஆதிசேஷனிடம் திருக்குருகூர் ஆலயத்தின் சுற்றுப் பிரகாரத்தில் போய் புளியமரமாய் இருக்கப் பணித்தார்.

அருந்தவம் கிடந்து பிறந்த குழந்தை அழுவதில்லை; சிரிப்பதில்லை; தாய்ப்பால் குடிப்பதில்லை. மலஜலம் கழிப்பதில்லை. உலக நடைக்கு மாறாக குழந்தை வளர்ந்ததால் அதற்கு 'மாறன்' எனப் பெயர் சூட்டினர். குலப்பெயரையும் இணைத்து காரி மாறன் என அழைத்து வந்தனர்.

கோவில் சன்னதியில் குழந்தையைக் கிடத்தி "பால் அருந்தாமல், அழாமல், மலஜலம் கழிக்காமல் இந்தக் குழந்தை எப்படிப் பெரியவனாகப் போகிறதென்று புரியவில்லை. நீ தந்த பிரசாதத்தை உன்னிடமே போட்டிருக்கிறோம் இவன் வளர்ந்து பெரியவனாகி பேர் சொல்வது உன் பொறுப்பு" எனக் கூறி, கோவில் புளிய மரத்திலேயே தூளி கட்டிப் போட்டார்கள். குழந்தை தவழ்ந்து உட்கார்ந்து நின்று நடந்து ஓடினான். பாம்பணையில் பள்ளிக் கொண்ட பரந்தாமனை தரிசிக்க சேனை முதலியார் வந்தார். 'விஷ்வக் சேனர் பூமியில் அவதரித்து சும்மா இருக்கின்றார். குருமுக உபதேசம் வேண்டும். எண்ணையும், திரியும் விளக்கும், நெருப்பும் இருந்தாலும் ஏற்றுவதற்குத் தகுந்த நபர் நீர் தான். வேதாந்த தீபத்தை ஏற்றிவிட்டு வருக" என உத்தரவிட்டார் பெருமாள்.

பகவான் கட்டளையைச் சிரமேல் தாங்கி திருக்குருகூர் வந்தார் சேனை முதலியார். புளிய மரப் பொந்திலே உட்கார்ந்திருந்த யோகக் குழந்தைக்கு உபதேசம் செய்தார் முதலியாண்டார். 16 ஆண்டுகள் யோக நித்திரையில் இருந்தார் மாறன். பெற்றோரும், உற்றோரும் வந்து பார்த்துப்போயினர். ஸ்ரீ வைஷ்ணவ சமயத்தின் அருட் சுரங்கம் நாலாயிர திவ்யப் பிரபந்தம். ஆயிரமாயிரம் ஆண்டுகளாக போற்றிப் பாதுகாக்கப் பட்டுவந்த அந்தத் தமிழ் வேதம் 1200 ஆண்டுகளுக்கு முன் காணாமல் போய்விட்டது.

ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஸ்ரீமத் நாதமுனிகள் பல க்ஷேத்திரங்களுக்குச் சென்று திருமாலை சேவித்துகும்பகோணம் சாரங்கபாணி கோவிலுக்கு வந்தார். பூஜையில் ஆராவமுதனைப் போற்றி பத்து பிரபந்தங்கள் பாடினார் அர்ச்சகர். அதிலே லயித்திருந்த ஸ்ரீமத் நாதமுனிகளை 'பிரபந்தங்களில் இருபத்து' என்ற வரிகள் உசுப்பின. 'இன்னொரு பத்து தெரியாதா?' என்று நாதமுனிகள் கேட்க, கையை விரித்தார் அர்ச்சகர். பல இடங்களிலும் விசாரித்து ஏமாற்றமடைந்தார் நாதமுனிகள்.

"சாரங்கா.... கடலுக்கடியில் ஒளிந்திருந்த வேதங்களையும், பூமியையும் கண்டு பிடித்தவன் நீ! சீதையைக் கண்டு பிடிக்க அன்று அனுமன் உனக்கு உதவினான். இன்று நீ எனக்கு உதவ வேண்டும்" என்று மனமுருகப் பிரார்த்தித்தார்.

அன்றிரவு பெருமாள் அவர் கனவில் தோன்றி "ஆழ்வார் திருநகரிக்குப் போ. நம் ஆழ்வார் ஒருவர் அங்கே யோகத்தில் இருக்கிறார். எல்லாவற்றையும் அவரே பாடி விடுவார். எழுதிக் கொள்" என்றார். நாதமுனிகள் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. பெருமாளிடம் சொல்லிக் கொண்டு திருக்குருகூர் புறப்பட்டார். இதற்கிடையில் பாண்டிய நாட்டில் திருக் கோளூரில் பிறந்த மதுரகவியாழ்வார் பல புண்ணிய ஸ்தலங்களை தரிசித்துக் கொண்டு அயோத்திக்கு வந்திருந்தார். அயோத்தியில் தென் திசையிலிருந்து ஒரு பேரொளி வருவதைக் கண்டார். வெளிச்சத்தைக் குறியாகக் கொண்டு நடந்தவர் கோதாவரியில் நீராடி, திருப்பதி சென்று வேங்கடவனை தரிசித்து ஆழ்வார் திருநகர் வந்தார். கோவிலுக்குள் வந்ததும் ஒளி நின்றுவிட்டது.

இந்த ஆலயத்தில்தான் ஏதோ விசேஷமிருக்கிறது என்று சுற்றி வந்தார். புளிய மரப்பொந்தில் நிஷ்டையிலிருந்த மாறனைப் பார்த்தார். அங்கே அவர் கண்டகாட்சி அவரை மெய் சிலிர்க்கச் செய்தது. ஒரு பொந்தினுள் பத்மாசனம் இட்டு ஞான முத்திரையோடு கூடிய வலக்கையும், இடது தொடையின் மேல் உள் வளைந்து பொருந்தி விளங்கிய இடதுகையும், எடுத்து முடிந்த குழலும், மகிழம்பூ மாலையணிந்த மார்பும் தேஜோ மயமாக அருள்பெருகும் அழகிய முகமும் அவரை புளங்காங்கிதமுறச் செய்தது. பலரிடமும் அவர் பிறப்பு வரலாற்றைக் கேட்டறிந்து கொண்டார். சன்னதியில நம்பியெம் பெருமானிடம் சென்று "இவரைப்பேசவைப்பது

உன் சக்தி; நான் முயற்சி செய்கிறேன். துணை இருப்பாய்" என மனதிற்குள் பிரார்த்தித்துக் கொண்டார்.

மாறனின்முன் ஒரு கல்லை எடுத்துப்போட்டார். கண்மலர்ந்தார் மாறன்; மதுரகவியாரை அன்பொழுகப் பார்த்தார். 'செத்தத்தின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?" என்று கேட்டார் மதுரகவி. "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" எனத் திருவாய் மலர்ந்தருளினார் மாறனார். "நீரே எனது குருநாதர்; என் பிறப்பே தன்யமாயிற்று" என்று புளகாங்கிதமுற்று மாறன் காலடியில் பணிந்து வணங்கினார் மதுரகவி.

'செத்து விடுகிறது உடல். ஆன்மா வேறொரு கூட்டில் புகுந்து மறுபடி சிறியதாகப் பிறக்கிறது. அது எது கிடைத்தாலும் தின்று (துன்பம், இன்பம் எதுவானாலும் ஜீரணித்து) அங்கே கிடக்கிறது' என்பது ஒரு பொருள்.

'உடலின் தொடர்பினால் உண்டாகும் இன்ப துன்பங்களை அனுபவித்துக் கொண்டு அதிலேயே உழலும்' என்பது மற்றொரு பொருள்.

'வெளியே வரவேண்டும். நிரந்தரமான பேரின்பத்தைத் தேட முயலவேண்டும்' என்பதே மறைமுகப் பொருள். இப்படி ஏராளமான அர்த்தங்களைப் புரிந்து கொண்டதால் 'மகான்' என்று கொண்டாடினார் மதுரகவியார். அதன்பின் மடை திறந்த வெள்ளம்போல் கொட்டும் அருவி போல் திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி எனும் நான்கு திவ்யப் ப்ரபந்தங்களை அருளினார்.

திருவாய் மொழி – சாமவேத சாரம் (1102 பாடல்கள்)
திருவிருத்தம் – ருக்வேத சாரம் (100 பாடல்கள்)
திருவாசிரியம் – யஜுர்வேதசாரம் (7 பாடல்கள்)
பெரிய திருவந்தாதி – அதர்வண வேத சாரம் (87 பாடல்கள்)
என்று கற்றறிந்த ஆன்றோர்கள் கூறுவர்.

மதுரகவியார் அத்தனை பாடல்களையும் கைப்பட எழுதினார்.

எல்லோரும் பரந்தாமன் மேல் பாடல் இயற்றியிருக்க மதுரகவியார் 'என் கண்ணுக்குத் தெரிந்த பரமன் இவரே' எனவும், 'அடியார் தொண்டே ஆண்டவன் தொண்டு' எனவும் இவர் மேல் மட்டும் 11 பாசுரங்கள் பாடினார்.

அதன்பின் முப்பத்தோரு ஆண்டுகள் யோகத்தில் ஆழ்ந்திருந்தார் நம்மாழ்வார். வைணவ திவ்ய க்ஷேத்திரங்களான 108 திருப்பதி மூர்த்தங் களையும் இவர் தனது ஞானக் கண்களால் தரிசித்துப் பாடியிருக்கிறார்.

குடந்தை சாரங்கபாணிப் பெருமாளை,

"ஆராவமுதே அடியேன் உடலம் நின் பாலன்பாலே
நீராய் அலைந்து கரைய உருக்குகின்ற நெடுமாலே
சீரார் செந்நெல் கவரி வீசும் செழுநீர்த் திருக்குடந்தை
ஏரார் கோலம் திகழக் கிடந்தாய் கண்டேன் எம்மானே!

என உருகிப் பாடுகின்றார். நம்மாழ்வாரால் பாடப் பெற்ற ஸ்தலங்கள் முப்பத்து ஐந்து. அதில் குடந்தையும் ஒன்று.

உப்பிலியப்பன் தன் உருவத்தை இவர் முன் காட்டாததால் பெருமாள் மேல் நம்மாழ்வாருக்குக் கோபம் ஏற்பட்டு விட்டது. 'உன்னைப் பாடுவதில்லை' என்று சொல்லிவிட்டு வேறு ஸ்தல மூர்த்திகளையே பாட பெருமாள் ஸ்பஷ்டமாக இவருக்கு தன் வடிவத்தைக் காட்டி இருக்கிறார்.

நம்மாழ்வாரின் உதடுகள் அசையாது; முகம் எந்த உணர்ச்சியையும் வெளிப்படுத்தாது. எல்லாம் நெஞ்சுள்ளே நடக்கும் போராட்டங்கள்தான்!

"என்னப்பனெக்காயிகுளாய் என்னைப் பெற்றவனாய்
பொன்னப்பன், மணியப்பன் முத்தப்பன் என் அப்பனுமாய்
மின்னப் பொன் மதில் சூழ் திருவிண்ணகர் சேர்ந்தவப்பன்
தன்னொப்பாரில்லப்பன் தந்தனன் தனதாள் நிழலே.

என்று உடனே பாடிவிட்டார்.

உப்பிலியப்பன் கோவிலில் உற்சவர் நாமம் பொன்னப்பன். பலி சாதிக்கும் பெருமாள் முத்தப்பன்; மூலஸ்தானத்தில் மணியப்பன். ஆழ்வார் சூட்டிய பெயர்களையெல்லாம் ஏற்றுக்கொண்டார் பெருமாள்.

வைகுந்தா மணிவண்ணனே! என் பொல்லாத் திருக்குறளா! என்னுள் மன்னி வைகும் வைகல் தோறும் அமுது ஆய வான் ஏறே! செய்குந்தா அரும் தீமை உன் அடியார்க்குத் தீர்த்து அசுரர்க்குத் தீமைகள் செய்குந்தா! உன்னை நான் பிடித்தேன் கொள் சிக்கெனவே.

மணிவண்ணா! வைகுண்டத்தை விட்டு வா.... நிறைய வேலை இருக்கிறது. உன் அடியார்களின் துன்பங்களைப் போக்கு. அரக்கர்களை அழித்து பக்தர்களைக் காப்பாற்று....” என்று பக்தர்களுக்காக பகவான் காலை சிக்கெனப் பாட்டுப்பாடி பிடித்துக் கொண்டவர் நம்மாழ்வார்.

மாயா! வாமனனே! மதுசூதா! நீ அருள்வாய்!
தீயாய், நீராய், நிலனாய், விசும்பாய், காலாய்
தாயாய், தந்தையாய், மக்களாய், மற்றுமாய், முற்றுமாய்,
நீயாய் நீ நின்றவாறு – இவை என்ன நியாயங்களே!
அவனே அகல் ஞாலம் படைத்து இடந்தான்
அவனே அஃதுண்டு உமிழ்ந்தான், அளந்தான்
அவனே அவனும், அவனும், அவனும்
அவனே மற்றும் எல்லாமும் அறிந்தனமே.

மாயன் என் நெஞ்சின் உள்ளான் மற்றும் எவர்க்கும் அதுவே காயமும் சீவனும் தானே; காலும் எரியும் அவனே! சேயன், அணியன், எவர்க்கும் சிந்தைக்கும் கோசரன் அல்லன் தூயன், துயக்கன், மயக்கன் என்னுடைத் தோளிணியானே!

நாதமுனிகள் ஆழ்வார் திருநகரி வந்து யோக சமாதியிலுள்ள நம்மாழ்வாரைத் தரிசித்து பிரார்த்தித்ததும் நம்மாழ்வார் அருவியெனக் கொட்ட நாதமுனி அவற்றை எழுதித் தொகுத்து வெளியிட்டார். அது தான் இன்று வைணவர்கள் போற்றிக் கொண்டாடும் நாலாயிர திவ்யப் பிரபந்தம்.

இறைவனால் நம்+ஆழ்வார் என்று குறிப்பிடப்பட்ட நம்மாழ்வாரின் வேறு பெயர்கள் சடகோபன், குருகைப்பிரான், திருக்குருகூர் நம்பி, வகுளாபரணன், அருள் மாறன், தென்னரங்கன், பொன்னடி, திரு நாவீறுடைய பிரான் என்பன.

நம்மாழ்வாரின் பாடல்களில் பக்தி, அன்பு, திறமை, அழகு, வர்ணனை எல்லாம் கலந்திருக்கும்.

பாதுகைக்கு ‘சடாரி’ என்றும், இவருக்கு சடகோபன் என்றும் பெயர் வரக் காரணம் பெருமானின் பாதங்களையே சதா இவர் மனதில் நிறுத்திக் கொண்டதுதான்.

"இழைத்தாரொருவரும் இல்லா மறைகளை இத்தமிழால் குழைத்தார்" என்றும், "வேதம் தமிழ் செய்த மாறன்" என்றும், வைணவ ஆசாரியார்கள் இவரைப் போற்றுகின்றனர்.

"சித்து அசித்தோடு ஈசன் என்று செப்புகின்ற மூவகைத் தத்துவத்தின் முடிவுகண்ட 'சதுர்மறைப் புரோகிதன்' என்று வில்லிப் புத்தூரார் கொண்டாட, கம்பர் 'சடகோபர்அந்தாதி' என தனி நூலே இயற்றியுள்ளார்.

"இதுவோ வேதத்தமிழ் செய்து மெய் பொருட்கும் உட்பொருளாய் ஒதும் சடகோபன் ஊர்?" என இராமானுஜர் போற்றிக் கொண்டாடிய நம்மாழ்வாரின்இந்த சரித்திரம் படிப்பவரையும், கேட்பவரையும் பரந்தா மனின் கருணா கடாட்சத்துக்கு பாத்திரராக்கி எல்லா நன்மைகளையும் பெற்றுத் தரும்.

104. மதுர கவியாழ்வார்

பாண்டிய நாட்டில் ஆழ்வார் திருநகருக்கு அருகில், திருகோளூர் என்ற ஊரில், சோழிய அந்தணர் குடும்பத்தில், ஈஸ்வர வருஷம், சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரத்தில், வளர்பிறை சதுர்த்தசி, வெள்ளிக் கிழமை கருடாழ்வாரின் அம்சமாகப் பிறந்தவர் மதுரகவியாழ்வார்.உரிய காலத்தில் உபநயனம் செய்தனர் பெற்றோர். வேத சாஸ்திரங்களைக் கசடறக் கற்றார். தமிழ், சமஸ்கிருதம், இரண்டிலும் நல்ல பாண்டித்யம் பெற்றார்.

அயோத்தி, வட மதுரை, கயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை ஏழுஸ்தலங்களையும் முறைப்படி சேவித்து, அயோத்தியிலேயே சிலகாலம் தங்க நினைத்து அங்கு சென்றார்.

திருக்கோளூர் பெருமானைத் தொழ தென் திசை திரும்பும் சமயம், அங்கோர் ஒளி வெள்ளம் தோன்றி அவரை ஆகர்ஷிக்க, தென்திசை நோக்கிப் பயணமானார். அந்த ஜோதி ஆழ்வார் திரு நகரிக்கு வந்ததும் மறைந்து விட்டது. புளிய மரத்தடியில் யோகத்தில் ஆழ்ந்திருக்கும்,

ஆழ்வாரைக் கண்டு அவரது தேஜஸையும், வரலாற்றையும் புரிந்து கொண்டு, அவர் எதிரே இரு கைகளையும் பலமாகத் தட்ட, கண்விழித்துப் பார்த்தார் நம்மாழ்வார்.

"செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?" என்று மதுரகவியார் வினா எழுப்ப, "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" என்றார் நம்மாழ்வார்.

'ஆத்மா பிரிந்து விட்டால் உடம்பு செத்து விடுகிறது. மறுபடி ஆத்மா புகுந்து கொண்டால் உயிர் பெறுகிறது. அந்த உடலால் ஏற்படும் சுக துக்கங்களை அனுபவித்துக் கொண்டு அதிலேயே உழல்கிறது' என்ற தத்வார்த்தமான பதிலைக் கேட்டு மதுரகவியார் அவருக்கே தாசரானார்.

நம்மாழ்வாரின் பாடல்களை படி எடுத்தார். அவர்மேல் பதிகங்கள் பாடினார். நம்மாழ்வாரின் சரித்திரத்திலிருந்து மதுர கவியாரைப் பிரிக்க முடியாது. மதுரகவியாழ்வாரால் தான் நம்மாழ்வார் கண் மலர்ந்து வேதங்கள் என போற்றப்படும் பதிகங்களைப் பாடினார். நெருப்பும், அதன் தகிப்புமாய் இருந்தார்கள். இருவரும். மதுரகவியார் நம்மாழ்வாரைப் போற்றிப் பாடிய பாடல்களுக்குக் 'கண்ணி நுண் சிறுத்தாம்பு' என்று பெயர். நாடெங்கும் நம்மாழ்வார் பாடலைப் பாடி விளக்கம் சொன்னார். நம்மாழ்வாருக்குப் பல விருதுகளைக் கூறி முழக்கமிட்டார்.

நம்மாழ்வார் மோட்சமடைந்தவுடன் அவருக்கு ஒரு விக்கிரகத்தை ஆழ்வார் திருநகரியில் ஸ்தாபித்து நித்திய நைமித்திக விழாக்களை சிறப்பாகச் செய்தார்.

"காளமாறர் வாழ்க! சடகோபர் வாழ்க! பராங்குசர் வாழ்க! திருக்குருகூர் நம்பி வாழ்க! திருவழுதி வளநாடர் வாழ்க! "என மதுரைச் சொற்பொழிவின் முடிவில் மதுரகவியார் வாழ்த் துரைக்க (ஒவ்வொரு உபன்யாச இறுதியிலும் அவர் அப்படித்தான் வாழ்த்துரைப்பார்) சங்கப்புலவர்கள் வெகுண்டனர்.

"நிறுத்துங்களையா உமது பட்டியலை! எங்களுடன் வாதம் செய்து வெற்றி கொண்டவரா உங்கள் குருநாதர்? உங்களுக்கு நீங்களே பட்டம் சூட்டிக் கொண்டால் எப்படி "என்றனர். "எங்கள் குருநாதர் இப்போது உயிருடன் இல்லை. சங்கப் பலகையில் உட்கார்ந்து நிரூபிக்க முடியாது.

ஆனால் அவர் விட்டுச் சென்ற பிரபந்தங்கள் இருக்கின்றன. "கண்ணன் கழலினை நண்ணும் மனமுடையீர்! எண்ணும் திருநாமம் திண்ணம் நாரணமே" என்ற திருவாய் மொழிப் பாசுரத்தை ஓலையில்எழுதி "இதை உங்கள் சங்கப் பலகையில் வையுங்கள். இதற்கு உங்கள் சங்கப்பலகை இடம் கொடுத்தால் நீங்கள் ஏற்றுக் கொள்ளத் தடை இல்லை அல்லவா?" எனக்கேட்க, அவர்கள் அந்த ஓலையை வாங்கி சங்கப் பலகையில் வைத்தனர். ஓலை வந்தவுடன் சங்கப் பலகை கவிழ்ந்தது. புலவர்கள் நீரில் தத்தளிக்க, பலகை ஓலையுடன் கரை சேர்ந்தது. புலவர்கள் நீந்திக் கரை சேர்ந்தனர்.

"மதுர கவியாரே! உமது குருநாதர் வாழ்நாளின் பெரும் பகுதியை யோகத்திலேயே கழித்தவர் என்று கேள்விப் பட்டிருக்கிறோம். அவர் உலகப் பற்றற்றவர். எங்களை மன்னிக்க வேண்டும். எங்கள் பிழை பொறுக்க வேண்டும். இதற்கு பிராயசித்தமாக நாங்களும் உங்கள்குருநாதர் மேல் உங்களைப் போல் ஆளுக்கொரு பாட்டு இயற்றப் போகிறோம்" என்றபடி தனித்தனியே ஆளுக்கொரு பாடல் எழுதி வந்து பாடினர். என்ன ஆச்சர்யம்! எல்லாம் ஒரே பாடல்! கருத்து மட்டுமல்ல....பாடல் வரிகளும் ஒத்திருந்தன.

சேமங் குருகையோ! செய்யத் திருப்பாற் கடலோ!
நாமம் பராங்குசமோ! நாரணமோ! – தாமந்
துளவோ, வகுளமோ தோளிரண்டோ! நான்கும்
உளவோ பெரும உமக்கு.

சங்கப்புலவர்கள் ஒத்து எழுதிய பாடல் இதுதான்! "நம்மாழ்வார் அரூபமாக இருந்து செய்த அருள் தான் நாம் அனைவரும் ஒரே மாதிரிப் பாடல் இயற்றிய மகத்துவம்! அவர் கருடன் என்றால் நாம் ஈக்கள்! அவர் சூரியன் என்றால் நாம் மின்மினிப் பூச்சிகள். அவர் புலி என்றால் நாம் நாய்கள்! அவர் கவிதைகள் சிங்கம் என்றால். நம் புலமை நரிக்கு ஒப்பாகும். நாட்டியத்திலகம் ஊர்வசி முன் பேயாடுவது போல் ஆடி விட்டோம். அந்த வகுளாபரணரின் ஒரு பிரபந்த வரிக்கு உலகத்துக் கவிதைகளெல்லாம் ஈடாகுமா?" என்ற சங்கத் தலைவர்,

ஈயாடுவதோ கருடற்கெதிரே
இரவிக் கெதிர் மின்மினியாடுவதோ?

நாயாடுவதோ உறுவெம் புலிமுன்
நரியாடுவதோ நரகேசரி முன்
பேயாடுவதோ அழகு ஊர்வசிமுன்
பெருமான் வகுளா பரணன் அருள் கூர்ந்(து)
ஓவாதுறையா பிரமா மறையின்
ஒரு சொற் பெறுமோ உலகிற் கவியே”

என்று பாடவும், மதுரகவியார் அடைந்த ஆனந்தத்துக்கு அளவே யில்லை. நமக்கு நெருக்கமானவரை மற்றவர் புகழும்போது ஏற்படும் ஆனந்தமே தனிதான். ஆழ்வார்களின் விருதுகளை சங்கப்புலவர்களே முழங்கிக் கௌரவித்தனர்.

குரு சேவையே பரம பதத்திற்கான வழி’ என்று கூறி ஆழ்வார் வரிசையில இடம்பெற்றவர் மதுர கவியாழ்வார். மதுரமான குரலால் குருநாதர் புகழ் பரப்பி மதுரகவி என்ற பட்டப் பெயர் பெற்ற இவரின் சரித்திரம் படிப்பவரையும், கேட்பவரையும் வியாழ பகவானின் அருளால் கல்வி பெறச் செய்து, கீர்த்தியுடன் வாழ்ந்த பின் வைகுண்டத்தில் சேர்க்கும் என்பது திண்ணம்.

105. குலசேகராழ்வார்.

கொல்லி நகரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டவன் த்ருட விரதன். அவனுக்கு நெடுங்காலம் பிள்ளைப் பேறில்லாமல் இருந்தது. பல நோன்புகள் நோற்றபின் கலியுகத்தில், புனர்பூச நக்ஷத்திரம், வெள்ளிக் கிழமையில், திருவஞ்சிக்களம் என்ற ஊரில், திருமாலின் கௌஸ்துப அம்சமாக ஒரு ஆண் குழந்தைப் பிறந்தது.

‘குலப் பெருமையை சேகரிக்க வந்தவன் இவன்’ என்று ஆன்றோர் வாழ்த்த ‘குல சேகரன்’ என்றே பெயர் சூட்டினான் த்ருட விரதன்.

குலசேகரன் கூரிய மதிப்படைத்தவன். வடமொழி, தென் மொழி இரண்டும் கற்றான். நான்கு வேதங்களையும், ஆறு சாஸ்திரங்களையும்

படித்தான். மற்றும் அரசர்குரிய நீதி நூல்களையும், யானை ஏற்றம், குதிரையேற்றம், வாட்போர், வில்வித்தை, மற்போர் என எல்லாம் பயிற்சிகளிலும் வல்லவனாகத் திகழ்ந்தான். த்ருட விரதன் மனமகிழ்ந்து குலசேகரனுக்கு இளவரசுப் பட்டம் கட்டினான்.

பெரியபுராணத்தில் சேக்கிழார் சேரமான் பெருமாள் நாயனாரை அறிமுகப்படுத்தும்போது அவருக்கு முன்நாட்டை ஆண்டவர் "தரணி நீத்துத் தவம் சேர்ந்தார்" என்று கூறுகிறார். அனேகமாக அது குலசேகராழ்வாராய்த்தான் இருக்க வேண்டும். அதனால் சேரமான் பெருமானுக்கு முற்பட்டவர் குலசேகரர் என்று ஆகிறது.

த்ருட விரதன் வானப்ரஸ்தம் சென்ற பின் குலசேகரன் முழுப் பொறுப்பேற்று மன்னனானான். ஆலயங்களைப் புதுப்பித்து, ஆறு கால பூஜை நடக்க வகை செய்தான். யாகம் செய்யும் அந்தணர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்ததால் நாட்டில் சுபிட்சம் நிலவியது. கஷ்டம் என்று வருபவர் வெறுங்கையோடு போனதில்லை. மாதம் மும்மாரி பெய்தது. பூமி செழித்தது. நெற்களஞ்சியங்களில் தானியங்கள் நிரம்பி வழிந்தன. அதனால் சோழ, பாண்டிய நாடுகளில் கூட சேரன் புகழ் ஒலித்தது. இது அவ்விரு மன்னர்களுக்கும் பொறாமையை எற்படுத்தவே இருவரும் கலந்து பேசி படையெடுத்தனர்.

சோழ, பாண்டியர்களையும், அவர்களுக்குத் துணையாக வந்த அரசர்களையும் தைரியமாக எதிர்த்து வெற்றி வாகை சூடினான் குலசேகரன். "கொல்லிக் காவலன், கூடல் நாயகன், கோழிக் கோன் குலசேகரன்" என்று விருது கொடுத்து வாழ்த்தினர் ஆன்றோர்.

போரில் வெற்றி பெற்ற குலசேகரனது வீரத்தைப் போற்றி, நட்பை விரும்பி தன் மகளை மணக்கும்படி வேண்டினான் பாண்டிய மன்னன். பாண்டிய ராஜகுமாரியின் அழகு குலசேகரனை சம்மதிக்கச் செய்தது. திருமணம் வெகு சிறப்பாக நடந்தது.

முதலில் பிறந்த ஆண் குழந்தைக்குத் த்ருட விரதன் என்ற தன் தந்தையின் பெயரையே சூட்டினான் குலசேகரன். அடுத்துப் பிறந்த மகளுக்கு சேரகுலவல்லி என்று பெயரிட்டான். குல சேகரருக்கு இல்லறம், அரசவை அலுவல்கள், போர் முனை எல்லாமே அலுப்புத் தட்டி விட்டது. இனிப்பே சுவைப்பதானாலும் திகட்டுதல் இயற்கைதானே! வேதாந்த

விசாரத்தில் இறங்கினார். 'முதலும், முடிவுமற்ற முழு முதற் கடவுள் யார்?' என்று பண்டிதர்களோடு சர்ச்சை செய்தார். 'பிரம்ம பிரளயம் ஏற்பட்டாலும் அலைபாயும் கடலில் ஆலிலை மேல்' துயில்பவனே நிரந்தரம் என்றும், ஒளிக்கப்பட்ட பூமியையும், வேதங்களையும் மீட்டுக் கொண்டு வந்தவனே நிதர்சனம் எனவும், மூவடியால் உலகங்களை அளந்த தெய்வம்



வேறில்லை என்பதையும் புரிந்து கொண்டார். 'பாற்கடலில் துயிலும் பரந்தாமனைக் காண்பது தான் இயலாது; ஆனால் ஸ்ரீ ரங்கத்தில் சயனத் திருக்கோலம் காட்டும் அவனை காண வேண்டும் ' எனப் புறப்பட்டார். 'இது நாள் வரை வீணாய் நாட்களைக் கழித்தேனே' என வருந்தினார். "கம்ப மதயானை கபத்தகத்தின் மேலிருந்து

இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான் வேண்டேன்" என அரச பத வியை வெறுத்தார். ஸ்ரீரங்கம், திருப்பதி, திருக்கண்ணபுரம், சிதம்பரத்தி லுள்ள கோவிந்தராஜப் பெருமாள், திருவித்துவக் கோடு இங்குள்ள பெருமாள்களிடம் இவருக்கு ஈடுபாடு அதிகம். எந்த ஸ்தலத்துக்குப் போனாலும் இவரைத் திருப்பி அழைத்து வருவதற்குள் மந்திரி, பிரதானிகளுக்குப் போதும் போதுமென்றாகி விடும். அப்படித்தான் திருப்ப தியில் வெங்கடேசப் பெருமாள் சன்னதியில்" கோனேரித் தீர்த்தத்தில் வீழும் தாரைகளுடன்வாழ்ந்து எப்போதும் உன்னையே எண்ணிப் பாடும் வாழ்க்கை தான் எனக்கு வேண்டும். திருவேங்கட மலைத் தீர்த்தத்தில் ஒரு மீனாய் பிறந்தாலே போதுமே! எம்பெருமானே! உன் மலைமேல் ஏதேனுமாக ஆகிறேனே!" என பித்துப் பிடித்தவர் போல் உருகிப் பாடிக் கொண்டே திரும்பிவர மறுத்துவிட்டார்.

அதனால் மந்திரி பிரதானியர் மன்னர் ஸ்ரீரங்கம் போவதை ஏதாவதொரு வழியில் தடை செய்து கொண்டிருந்தனர். அடியார்களுக்கு அன்ன வஸ்திரம் வழங்குதலும்; கதா காலட்சேபங்களும் விடாமல் நடந்தது.

ஒரு முறை ஸ்ரீ ராமாயண உபன்யாசம் செய்த பௌராணிகர் ரொம்பத் திறமையானவர். கதை என்றோ நடந்தது என்றெண்ணாதபடி அன்றே அங்கேயே நடப்பது போல சொல்லி வந்தார். சபையினரின் 'ஆஹா' காரமும், கரகோஷமும் பௌராணிகரை மேலும் உற்சாகப் படுத்தியது. இராமர் பிறந்த கோலாகலத்தைச் சொன்ன அன்று குலசேகரர் தன்னைக் கௌசல்யையாகப் பாவித்துக் கொண்டு பத்துப் பதிகங்களில் தாலாட்டே பாடி விட்டார். "மன்னு புகழ் கௌசலை தன் மணி வயிறு வாய்த்தவனே!

ஆலினிலை பாலகனாய் அன்றுலகம் உண்டவனே! தாமரை மேல் அயனவனைப் படைத்தவனே! திண்திறலாள் தாடகை தன் உரமுருவ சிலை வளைத்தாய்! தென்னிலங்கையை கோன்முடிகள் சிந்து வித்தாய்' பாராளும் படர் செல்வம் பரத நம்பிக்கேயருளி, ஆராவன் இளையவ

னோடு அருங்கானம் அடைந்தவனே! மலையதனால் அணை கட்டி மதிளிலங்கை அழித்தவனே! அலைக் கடலைக் கடைந்து அமர்க்க முதருளிச் செய்தவனே! வாலியைக் கொன்று அரசு இளைய வானரர்க்கு அளித்தவனே! தேவரையும், அசுரரையும், திசைகளையும் படைத்தவனே! யாவரும் வந்து அடிவணங்க அரங்க நகர்த்துயின்றவனே! காவிரி நல் நதிபாயும் கண்ண புரத்தென்கருமணியே! தசரதன் தன் குலமதலாய்! மைதிலி தன்மணவாளா!" என திருமால் புகழெல்லாம் குழைந்து குழைந்து பாடித் தாலாட்டுகின்றார்.

கூனியை விளையாட்டாய் உண்டை வில் அடித்த கதை சொன்ன போது வேண்டாம் ராமா... அவன் பொல்லாதவள். வெஞ்சினம் கொண்டு பழி தீர்ப்பவள்" என்று மனதிற்குள் மருகுகிறார்.

விசுவாமித்திரர் பின் சென்ற கதை சொன்ன இரவில் தசரதருக்கு மேல் பிரிவுத் துயர் பெற்றார். சீதாகல்யாணத்தன்று அரண்மனையில் அன்னதானம் அமர்க்களப்பட்டது. ராமர் வனவாசம் சென்ற அன்று கூடியிருந்த மக்களோடு தானும் விம்மி விம்மி அழுதார்.

'கரதூஷண திரிசிரனையும், பதினாலாயிரம் ராட்சதர்களையும் ஸ்ரீராமன் ஒருவராக எதிர்க்கிறான்' என்று கேட்டதும், தளபதியை அழைத்துப் படை திரட்டும்படிக் கூறி கவசங்களை அணிந்து கொண்டார்.

"அங்கே என் இராமன் தனியாகப் போரிட்டுக் கொண்டிருக்கும்போது நாம் கதை பேசிக் கொண்டிருப்பதாவது" எனச் சீறினார்.

புத்திசாலியான பௌராணிகர் "கரதூஷணாதிகளை தனியொ ருவனாக வென்ற இராமனை லட்சுமணனும். சீதையும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்" என்று சொல்லி நிறுத்தினார். "அது தானே! என் ராமன் பெருமையென்ன.... பதினாயிரம் அரக்கரென்ன! பதினாயிரம் கோடியா யிருந்தாலும் லட்சமணன் துணை கூட இல்லாமல் ஜெயம் கொள்வான்" என தோள் தட்டினார். அதிலிருந்து உபன்யாசகர் துயர சம்பவங்களை சுருக்கியும், மகிழ்ச்சியான சம்பவங்களை விஸ்தாரமாகவும் சொல்லி வந்தார்.

ஒரு நாள் பண்டிதருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டது. புதல்வரை அனுப்பினார். இராவண சன்யாசி சீதையைத் தூக்கிச் செல்லும் கட்டம்.

தந்தையைப் போலவே மகனும் கதை சொல்வதில் சமர்த்தன். கேட்போர் மனம் உருகும்படி கூறினான். குலசேகரர் மனம் கொதித்து, வெகுண்டு எழுந்தார். "மந்திரி, சேனாபதி.... ஏன் நிற்கிறீர்கள்? கவசம் அணிந்து கொள்ளுங்கள். படைத் திரட்டிக் கொண்டு பின்னால் வாருங்கள். எனது பஞ்ச கல்யாணியில் நான் முன்னே போகிறேன். இராவணனை வம்சத்தோடு ஜெயித்து பிராட்டியை மீட்டு வருவேன்" என்று சூளுரைத்து கவசம் அணிந்து கொண்டார்.

மந்திரிகள், சேனாதிபதிகள் அனைவரும் செய்வதறியாது தவித்தனர். படைகள் மன்னரைப் பின் தொடர்ந்தன. சமுத்திர நீர் மன்னரின் மார்புக்கு வந்துவிட்டது.

கடலில் காகுஸ்தன் சீதை லட்சுமணரோடு தோன்றி, "அன்ப! நானே சீதையை மீட்டு வந்து விட்டேன். இராவண சம்காரம் ஆகிவிட்டது. நீ ஊருக்குத்திரும்பு" என்று ஆசி கூற குலசேகரரால், அனைவருக்கும் சீதாராம லட்சுமண தரிசனம் கிடைத்தது.

குலசேகரர் ஸ்ரீரங்கம் சென்றால் மீண்டும் நாடு திரும்ப மாட்டார் என்று பயந்த அமைச்சர்கள், அவர் ஸ்ரீரங்கம் புறப்படும் போதெல்லாம் திருமால் அடியார்களை அரசர்முன் அனுப்பி வைத்தனர். அரசரும் அவர்களைப் பேணுவதில் பயணத்தைத் தள்ளிப் போட்டார்.

தலைவலி போய் திருகு வலி வந்தமாதிரி அடியார்களின் கூட்டம் அரண்மனையில் பெருகி விட்டது. இதைத் தடுக்க அமைச்சர்கள் மன்னர் பூஜிக்கும் பெருமாளின் நவரத்தின மாலையை ஒளித்து வைத்தனர். அரசர் மாலையைக் காணாமல் விசாரிக்க மந்திரிகள், "அடியார்களில் கபடர்களும் இருக்கலாம். பயிரினூடே களைகள் வளர்வதில்லையா? நெல்லோடு கல் கலந்திருப்பதில்லையா? அதுபோல அவர்களை சோதிக்க வேண்டும்" என்றனர்.

அரசரின் மனம் இதைக் கேட்டுத் துடித்தது. ஒரு குடத்தில் நல்ல பாம்பைப் போட்டு எடுத்து வரச் செய்தார். நிறைந்த சபையில் "அடியார் கள் எடுக்கவில்லை என்றால் என்னை இந்தப் பாம்பு தீண்டாதிருக் கட்டும்" என்று கூறியபடி குடத்தினுள் கையை விட்டார். பாம்பு அவரைத் தீண்டவில்லை!

மந்திரிகளும், அடியார்களும் மற்றுமுள்ளோரும் பதறினார். அரசர், அடியார்களைக் கைவிடச் சொல்வார்! என்று எண்ணி ஏமாந்தனர். அடியார்களுக்காக தான் சுமை தாங்கிய பெருந்தகையாளர் குலசேகரர். மன்னரிடம் மன்னிக்கும்படி வேண்டி நவமணி மாலையைச் சேர்ப்பித்தனர்.

இதன்பிறகு அரசாட்சி அவருக்கு வெறுத்துவிட்டது. மூத்தமகனுக்குப் பட்டம் கட்டிவிட்டு அடியார்களுடன் ஸ்ரீரங்கம் புறப்பட்டார். ஸ்ரீரங்கம் கோவிலுக்கு மூன்றாவது பிர்காரம் கட்டினார். மற்றும் பல கைங்கர்யங் களும் செய்தார்.

திருக்குருகூர் சென்று நம்மாழ்வாரை வணங்கி மன்னார் கோவில் சென்று ராஜகோபால ஸ்வாமியிடம் மனம் பறிகொடுத்து தனது 67–வது வயதில் பரமபதமடைந்தார். இவர் இயற்றியது பெருமாள் திருமொழி எனப்படும் 105 பாசுரங்களாகும்.

திருவரங்கனை கண்டு களிக்க ஆசைப்படுவது முதல் திருமொழி. அரங்கனின் அடியாரது தொண்டில் ஈடுபடுவது இரண்டாம் திருமொழி. அரங்கனது தொண்டனாக உலக இயல்போடு தான் சேராதிருப்பது மூன்றாம் திருமொழி. திருவேங்கட மலையில் ஏதாவதாக இருக்க விரும்புவது நான்காம் திருமொழி. பேறு கிட்டாமல், வேறு எவரையும் புகலாகக் கொள்ளாமல் இருப்பது பற்றி பரந்தாமனிடம் விண்ணப்பம் செய்வது ஐந்தாம் திருமொழி. பெருமானோடு கூடுவதும், பிரிவதும், ஊடல் கொள்வதுமாக உள்ள நிலை ஆறாம் திருமொழி.

ஸ்ரீ கிருஷ்ணணின் பால லீலைகளைக் காணாத வருத்தத்தில் தேவகி கம்ஸ வதத்துக்குப் பின் கண்ணனிடம் புலம்பும் பாசுரங்கள் ஏழாம் திருமொழி. கௌஸல்யா தேவியாக மாறி திருக்கண்ண புரத்தில் ஸ்ரீராமனைத் தாலாட்டுவது எட்டாம் திருமொழி. தசரதனாக மாறி காட்டுக்கு ராமன் செல்லும்படி நேர்ந்ததே என்று புலம்புவது ஒன்பதாம் திருமொழி. ராமாயணத்தையே சுருக்கமாகப் பாடியது பத்தாம் திருமொழி யென்று பாடியிருக்கிறார் குலசேகரப் பெருமான்.

திருமால் சன்னதிகளில் எம்பெருமான் திருமுன்னேயுள்ள வாயிற்படி 'குலசேகரன் படி' என்று வழங்கப்படுகிறது. இவருடைய திவ்ய சரித்திரம் படிப்பவரையும், கேட்பவரையும் ஒழுக்கமும், நல்லபுத்தியும் கொண்டு வாழ வைப்பதோடு வைகுண்ட பதவியையும் கொடுக்கும்.

106. பெரியாழ்வார்

கலியுகத்தில், குரோதன ஆண்டு, ஆனிமாதம், ஸ்வாதி நட்சத்திரத்தில் ஸ்ரீ கருடாழ்வாரின் அம்சமாக ஸ்ரீ வில்லிப் புத்தூரில் முகுந்த பட்டருக்கும், பத்ம வல்லிக்கும் ஐந்தாவது புதல்வனாகப் பிறந்தவர் இவர். பெற்றோர் இட்ட பெயர் விஷ்ணு சித்தர். உரிய காலத்தில் வேதங்களைக் கற்றுத் தேர்ந்தார் இவர். உபநயனமும் நடந்தது. ஸ்ரீவில்லிப் புத்தூர் வட பெருங்கோயில் பெருமானிடத்தில் இவருக்கு பக்தி அதிகம்.

ஒரு பெரிய நந்தவனம் அமைத்தார். அதில் இல்லாத பூச்செடிகளே இல்லை. துளசி, அரளி, மல்லிகை, முல்லை, சாமந்தி,தவனம், மனோரஞ்சிதம்,மகிழம்பூ, மரு, சண்பகப் பூ, இடைஇடை தாழம்பூ என அழகிய மணம் மிகுந்த மலர்களால் மாலை கட்டி, செண்டாக கதிர்பச்சை வைத்து திருமாலுக்கு சார்த்தி அழகு பார்ப்பார். செடிகளைக் களையெடுத்து எருப்போட்டு, தண்ணீர் பாய்ச்சி பாதுகாத்தார். மொட்டுகளைக் கிள்ளாமல் அன்று மலரும் மலர்களையே பரந்தாமன் நாமத்தைப் பாடியபடியே பறிப்பார்.

உரியவயதில் விஷ்ணு சித்தருக்குத் திருமணம் செய்வித்தார் முகுந்தப்பட்டர். அப்போது பாண்டிய நாட்டை ஆண்டவன் ஸ்ரீ வல்லபத் தேவன். ஒரு நாள் மாறு வேடத்தில் நகர் சோதனை வரும்போது ஒரு அந்தணர் உபன்யாசம் செய்து கொண்டிருந்தார்.

“மானிடர்களே....! என்றோ வரும் வயோதிகத்திற்காக பிள்ளை பெற்றுக் கொள்கிறோம். வீடு, மாடு, நிலம், நகைகள் எனப் பொருளை சேர்க்கிறோம். ஆனால் மறுமைக்கு? மறுபிறவியில் நற்குடியில் பிறந்து சுகமாய், சந்தோஷமாய் வாழ வேண்டுமானால் புண்ணியத்தைச் சேர்க்க வேண்டும். தான தருமம் செய்ய வேண்டும். பக்தி பண்ண வேண்டும்” என்று கூறினார்.

அரண்மனை வந்த மன்னன் மறுநாள் தனது குலகுருவான செல்வ நம்பி பண்டிதரை அழைத்து “எந்த கடவுள் அனாதியானவர்? எவரை வழிபட்டால் மறுபிறவி சிறப்பாக அமையும்?” என்று கேட்டார். பண்டிதர் செல்வநம்பி, “மன்னா, இந்த விஷயத்தில் நான் ஒருவன் சொல்வதைவிட

பல பண்டிதர்களின் ஏகோபித்த கருத்தை கேட்பது நல்லதென்று எனக்குப் படுகிறது. பொற்கிழி ஒன்று அமைப்போம். எவர் வாசகத்திற்கு பொற்கிழி அறுந்து விடுகிறதோ அதை நீங்கள் கடைப்பிடிக்கலாம்" என்றார்.

அரசனுக்கு அது சரி என்று தோன்றியதால் ஒரு நீண்ட மூங்கில் கம்பை நட்டு தங்கக் காசுகள் கொண்ட பெரும் கிழி ஒன்றைக் கட்டினான். நாடெங்கும் பறையறைந்து இச்செய்தியை அறிவித்தான். தூதர்கள் மூலமாக பாரதம் முழுவதும் செய்தியைப் பரப்பினான்.

பல புலவர்கள், வித்துவான்கள், பண்டிதர்கள், சிரோன்மணிகள் வந்து அடுக்கு மொழியோடும், எதுகை, மோனையோடும், வர்ணனைகளோடும் சொல்மாரி பொழிந்தும் கிழி கட்டியபடியே இருந்தது.

விஷ்ணு சித்தர் கனவில் பெருமாள் தோன்றி," அன்ப, என் ஆலயத் தைப் புதுப்பிக்க முடியவில்லையே என்ற வேதனை உன்னை தினமும் வாட்டுவதை நானறிவேன். அதற்கொரு வழி கூறுகிறேன். மதுரை சென்று எம்புகழ் பாடு. பொற்கிழியை வாங்கி வந்து புனருத்தாரணம் செய்" என்றார்.

வடபெருங்கோயில் அர்ச்சகர்கள் கனவிலும் "பல்லக்கு, திருச் சின்னங்களோடு நாளை அதிகாலை விஷ்ணுசித்தனை அழைத்துச் சென்று மதுரை விட்டு வருக. விஷ்ணு சித்தனால் வட பெருங்கோயில் சீர்படப் போகிறது" என்றார்.

மறு நாள் காலை விஷ்ணு சித்தர் எழுந்ததும் மேளச் சத்தத்தோடு பல்லக்கு வருவதைக் கண்டார். எம்பிரான் கருணையை எண்ணி மெய் மறந்தவர் பல்லக்கேறி மதுரை சென்றார். "எவர் வருகின்றனர்?" என்று கேட்டான் மன்னன்.

"ஸ்ரீ வில்லிப்புத்தூரிலிருந்து பட்டர் பிரான் வருகிறார். வேதங்களை நன்கு கற்றவர். கர்வமற்றவர். ஒவ்வொரு மலரினும் இறைவனைப் பார்ப்பவர். திருமாலைத் தொண்டு புரிபவர். ஆசைகளைத் துறந்தவர். இவரைப் பூர்ண கும்ப மரியாதையோடு வரவேற்பது மன்னருக்குப் பெருமை" என்றார் செல்வ நம்பிகள்.

மன்னர் அப்படியே அவரை வரவேற்று எதிர் கொண்டழைத்து வந்தார். மற்ற வித்வான்கள் "இதென்ன ஒருவரின் பெருமை தெரியுமுன்பே இப்படி

வரவேற்பளிக்கிறீர்கள்? பல மதங்களைச் சேர்ந்த பண்டிதர் அவையிலே ஒருவருக்கு மட்டும் இப்படி வரவேற்பளிப்பது மற்றவரை அவமதிப்ப தாகும்" என்றனர்.

செல்வ நம்பிகள் விஷ்ணு சித்தரைப் பார்த்து " பட்டர்பிரானே! பூவின் இயல்பு வாசனை.... பூமாலை தொடுத்து பகவத் கைங்கரியம் செய்யும் நீங்கள், உங்கள் பகவத் வாசனை நிறைந்த விளக்கங்களை நிறைந்த சபையில் எடுத்துரைக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

விஷ்ணு சித்தர் நாவில் கலைமகள் குடி புகுந்தாள்.'வேத முடிவான உண்மைப் பொருள் நாராயணனே என்றுரைத்தார். தேவலோகங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும், எல்லா வித்வான்களின் வினாக்க ளுக்கும், வேந்தனின் சந்தேகங்களுக்கும் தங்கு தடையின்றி வேதத்தி லிருந்து மேற்கோள் காட்டி பதில் சொன்னார் விஷ்ணு சித்தர். பல்லாயிரக் கணக்கான அந்த வினா–விளக்கங்களுக்கு 'விஷ்ணு சித்த விஜயம்' என்று பெயர். சபையோர் வாயடைத்திருக்க, பொற்கிழி கட்டியுள்ள மூங்கில் கம்பு வளைந்து விஷ்ணு சித்தர் முன் வந்தது. பொற்கிழியை எடுத்துக் கொண்டார் விஷ்ணு சித்தர்.

ஸ்ரீ வல்லபதேவன் விஷ்ணு சித்தரை தனது பட்டத்து யானை மேல் ஏற்றி,"வேதப் பயன் கொள்ளவல்ல விஷ்ணு சித்தர் வந்தார்", 'மெய் நாவன் வந்தார்"டெ ய்யடியார் வந்தார்' முதலிய விருதுகளை வழங்கி நகர்வலம் வந்தான்.

அச்சமயம் பிரம்மா, சிவன், இந்திரனோடு கருடாழ்வார் மேல் காட்சி கொடுத்தார் திருமால். விஷ்ணு சித்தர் அடைத்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. பெருமாளுக்குப் பல்லாண்டு பாடினார்.

பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா!
உன் செவ்வடி செவ்வி திருக்காப்பு 1

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின் வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
படைபோர் புக்கு முழங்கும் அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே 2

வாழாட்பட்டு நின்றீர் உள்ளீரேல் வந்து மண்ணும் மணமும் கொண்மின்
கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்.
ஏழாட்காலும் பழிப்பிலோம் நாங்கள் இராக்கதர் வாழ் இலங்கை
பாழாளாகப் படைபொரு தானுக்கும் – பல்லாண்டு கூறுதுமே. 3

ஏடு நிலத்தி விடுவதன் முன்னம் வந்தெங்கள் குழாம் புகுந்து
கூடு மனமுடையீர்கள் வாய்மொழி வந்தோல்லைக் கூடுமினோ
நாடு நகரமும் நன்கறியாமோ நாராயணாய வென்று,
பாடு மனமுடைப் பத்தருள்வீர் வந்து பல்லாண்டு கூறுமினே. 4

அண்டகுலத்துக் கதிபதியாகி அசுரர் இராக்கதரை
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த இருஷிகேசன்
தனக்கு தொண்டக் குலத்தலுள்ளீர் வந்தடி தொழுதாயிரம் நாமம்
சொல்லி, பண்டை குலத்தைத் தவிர்த்துப் பல்லாண்டு
பல்லாயிரத்தாண்டென்மினே 5

எந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ஏழ்படி கால் 6
தொடங்கி, வந்து வழி வழி ஆட் செய்கின்றோம், திருவோணத்
திருவிழாவில் அந்தியம் போதில் அரியுருவாகி அரியை, அழித்தவனை,
பந்தனை தீரப் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே.

தீயில் பொலிகின்ற செஞ்சுடராழி திகழ் திருச்சக்கரத்தின்
கோயிற் பொறியாலே ஒன்றுண்டு நின்று குடிகுடியாட் செய்கின்றோம்.
மாயப் பொரு படை வாணனை ஆயிரந்தோளும் பொழிகுருதி
பாயச் சுழற்றிய ஆழி வல்லானுக்குப் பல்லாண்டு கூறுதுமே. 7

நெய்யிடை நல்லதோர் சோறும், நியதமும், அத்தாணிச் சேவகமும்
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணோடு காதுக்குக் குண்டலமும்,
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்தென்னை வெள்ளுயிராக்க வல்ல,
பையுடை நாகப் பகைக் கொடியானுக்குப் பல்லாண்டு கூறுவனே. 8

உடுத்துக் களைந்த நின் பீதக வாடை உடுத்துக் கலந்துண்டு
தொடுத்த துழாய் மலர் சூடிக் களைந்தன சூடு மித்தொண்டர்களோம்
விடுத்த திசைக் கருமம் திருத்தித் திருவோணத்திருவிழாவில்
படுத்த பைந்நாகனைப் பள்ளிக் கொண்டானுக்குப் பல்லாண்டு 9
கூறுதுமே.

எந்தாளெம் பெருமானுன்றனுக்கடியோம் என்றெழுத்துப் பட்ட
அந்நாளே, அடியோங்களடிக்குடில் வீடு பெற்றுய்ததது காண்.
செந்நாள் தோற்றித் திரு மதுரையுட் சிலை குனித்து,
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே! உன்னைப் பல்லாண்டு 10
கூறுதுமே.

அல்வழக்கொன்று மில்லாவணி கோட்டியர் கோன்,
அபிமானதுங்கள், செல்வனைப் போலத் திருமாலே! நானும்
உனக்குப் பழவடியேன், நல்வகையால் நமோ நாராயணா
வென்று நாமம் பல பரவி பல்வகையாலும் பவித்திரனே! 11
உன்னைப் பல்லாண்டு கூறுவனே.

பல்லாண்டென்று பவித்திரனைப் பரமேட்டியை, சார்ங்க
மென்னும் வில்லாண்டான் தன்னை வில்லிப் புத்தூர் 12

விஷ்ணு சித்தன் விரும்பிய சொல்,
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் நமோ நாராயணாயவென்று,
பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந் தேத்துவர் பல்லாண்டே

விஷ்ணுசித்தரின் இந்தப் பல்லாண்டைக் கேட்டு பரவசமடைந்த பரந்தாமன் "எமது ஆழ்வார்களிலே பெரியவன் நீ.... அதனால் இன்று முதல் உன் பெயர் 'பெரியாழ்வான்' என்று வழங்கப்படும்' என்று அருளி மறைந்தார்.

திருப்பல்லாண்டின் சாரத்தை மன்னர் பெரியாழ்வாரிடம் கேட்டறிந்து கொண்டார். நாராயணன் புகழ் கேட்டு மும்மூர்த்திகளும் தரிசனம் கொடுத்ததை நிதரிசனமாகக் கண்டதனால் வைஷ்ணவ சமயத்தையே மேற்கொண்டார்.

மன்னரிடம் விடைப்பெற்று வில்லிப் புத்தூர் வந்த விஷ்ணு சித்தர் பொற்கிழியின் நிதி கொண்டு வடபெருக்கோயிலைப் புதுப்பித்தார்.

இட அணரை இடத் தோளோடு சாய்த்து
இருகைக் கூடப் புருவம் நெரிந்தேறக்
குட வயிறுபட வாய் கடைகூடக்
கோவிந்தன் குழல் கொடு ஊதின போது
மட மயில்களோடு மான் பிணை போலே

மங்கை மார்கள் மலர்க் கூந்தல் அவிழ
உடை நெகிழ ஓர் கையால் துகில் பற்றி
ஒல்கி ஓடு அரிக்கண் ஓட நின்றனரே.

புவியுள் நான் கண்டதோர் அற்புதம் கேளீர்!
பூணி மேய்க்கும் இளங்கோவலர் கூட்டத்து
அவையுள் நாகத்து அணையான் குழல் ஊத

அமர லோகத்தனவும் சென்றிசைப்ப
அவியுணாமறந்து வானவர் எல்லாம்
ஆயர்பாடி நிறையப் புகுந்து ஈண்டி
செவியுள், நாவின் சுவை கொண்டு மகிழ்ந்து
கோவிந்தனைத் தொடர்ந்து என்றும் விடாரே.

இப்படிக் கண்ணனின் அவதாரச் சிறப்பை நாற்பத்து நான்கு திருமொழிகளால் பாடினார். மொத்தம் 461 பாசுரங்கள். இவைகளுக்கு 'பெரியாழ்வார் திருமொழி' என்று பெயர். நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் இவை முதலிடம் பெறுகின்றன. அவிழ்ந்து அலையும் கூந்தலோடு கோபிகைகள் குழலோசை கேட்டதும் ஓடி வந்த அழகை இவரது பாசுரங்கள் அப்படியே கண்முன் நிறுத்துகின்றன. நாக்குக்குத்தான் ருசி பார்க்கத் தெரியும் என்பதில்லை! குழலோசையின் இனிமையை செவி ருசி பார்க்கிறதென்கிறார்! என்ன நயமான உவமைகள்.

குலசேகராழ்வார் ஸ்ரீ ராமனுக்குத் தாலாட்டு பாடியது போல பெரியாழ்வார் ஸ்ரீ கிருஷ்ணனைத் தாலாட்டி இருக்கிறார்.

மாணிக்கம் கட்டி வைரம் இடைக்கட்டி
ஆணிப் பொன்னால் செய்த வண்ணச்சிறு தொட்டிலிலே
பேணி உனக்கு பிரமன் விடு தந்தான்
மாணிக்குறளனே தாலேலோ! வையமளந்தானே தாலேலோ! 1

ஒளிவீசும் வைரமும், சிவப்பு நிறமுள்ள மாணிக்கமும் பதித்த தங்கத் தொட்டிலிலே உலகை அளந்தவனை பையத் தாலாட்டுகின்றார் ஆழ்வார்.

உடையார் கண்மணியோடு ஒண் மாதுளம்பூ
இடை விரவிக் கோத்த எழில் தெழ்கினோடு
விடையேறு காபாலி ஈசன் விடுதந்தான்!
உடையாய் அழேல், அழேல் தாலேலோ! 2.
உலகமளந்தானே தாலேலோ!

பூமியிலே கண்ணன் அவதாரமானதும் பிரம்மனும், ஈசனும் அவன் படுத்து உறங்கப் பரிசளிக்கிறார்கள். இருந்தாலும் ஆழ்வாரை பிரமிக்க வைத்தது மூவடியால் உலகளந்தது தான்!

என் தம்பிரானார் எழில் திருமார்வார்க்கு
சந்தமழகிய தாமரை தாளர்க்கு
இந்திரன் தானும் எழிலுடைக் கிண்கிணி

தந்து உவனாய் நின்றான் தாலேலோ!
தாமரைக் கண்ணனே தாலேலோ! 3

சங்கின் வலம்புரியும், சேவடிக் கிண்கிணியும்
அங்கைச் சரிவளையும் நாணும், அரைத் தொடரும் அங்கண்
விசும்பில் அமரர்கள் போத்தந்தார் செங்கண் கருமுகிலே தாலேலோ!
தேவகி சிங்கமே தாலேலோ! 4

எழிலார் திருமார்புக்கு ஏற்கமிவையென்று
அழகிய ஐம்படையும் ஆரமும் கொண்டு
வழுவில் கொடையான் வயிச்சிரவணன்
தொழுது உவனாய் நின்றான் தாலேலோ!
தூமணி வண்ணனே தாலேலோ! 5

ஓதக்கடலின் ஒளிமுத்தினாரமும்
சாதிப்பவளமும், சந்தச்சரிவளையும்
மாதக்கவென்று வருணன் விடு தந்தான்
சோதிச் சுடர் முடியாய் தாலேலோ!
சுந்தரத் தோளனே தாலேலோ! 6

கானால் நறுந்துழாய் கை செய்த கண்ணியும்,
வானார் செழுஞ்சோலைக் கற்பகத்தின் வாசிகையும்,
தேனார் மலர் மேல் திருமங்கைப் போத்தந்தாள்
கோனே அழேல் அழேல் தாலேலோ!
குடந்தைக் கிடந்தானே தாலேலோ! 7

கச்சோடு பொற் சுரிகை காம்பு கனகவளை
உச்சி மணிச் சுட்டி ஒண்தாள் நிறைப் பொற்பூ
அச்சுதனுக் கென்று அவனியாள் போத்தந்தாள்
நச்சுதனு முலையுண்டாய் தாலேலோ!
நாராயணா அழேல் தாலேலோ! 8

மெய்த்திமிரும் ஸ்நானப் பொடியோடு மஞ்சளும்,
செய்யத் தடங்கண்ணுக்கு அஞ்சனமும், சிந்தூரம்,
வெய்யக் கலைப்பாகிக் கொண்டு உவளாய் நின்றாள்
ஐயா அழேல் அழேல் தாலேலோ!
அரங்கத்தணையானே தாலேலோ! 9

வஞ்சனையாய் வந்த பேய்ச்சி முலையுண்ட,
அஞ்சன வண்ணனை ஆய்ச்சி தாலாட்டிய,
செஞ்சொல் மறையவர் சேர் புதுவைப் பட்டன் சொல்
எஞ்சாமை வல்லவர்க்கு இல்லை இடர் தானே. 10

இந்திரன், வருணன், பூமாதேவி, மகாலக்ஷ்மி, மற்றும் தேவர்க ளெல்லாம் பார்த்துப் பார்த்து ஒவ்வொன்றாய் கொண்டு வந்து தருகி றார்கள். குளிக்க வாசனைப் பொடி, மஞ்சள், கண்ணுக்கு மை, திலகமிட சிந்தூரம் விளையாட கிலுகிலுப்பை, கொலுசு, சுட்டி, வளையல்கள், முத்தாரம், பவள, வைர வளையல்கள், இடுப்புக்கு தங்க அரை நாண், அடேயப்பா. பெரியாழ்வார் பாசுரம் பாடியே வெகுமதிகளைக் குவித்து விட்டார்! பூதனையின் நஞ்சு கலந்த பாலை உண்ட கண்ணனின் இந்தத் தாலாட்டைத் தன்னைப் போலவே தாயுள்ளத்தோடு பக்தி பெருக பாடுபவருக்கு நஞ்சு போல் தோன்றும் துன்பங்களெல்லாம் தொலைந்து விடும் என்று நயமாகச் சொல்கின்றார்.

சோர்வினால் பொருள் வைத்த துண்டாகில்
சொல்லு சொல்லென்று சுற்றுமிருந்து
ஆர்வினாலும் வாய் திறவாதே
அந்த கால மடைவதன் முன்னம்
மார்வ மென்பதோர் கோவிலமைத்து
மாதவனென்னும் தெய்வத்தை நாட்டி
ஆர்வமென்பதோர் பூவிட வல்லார்க்கு
அரவதண்டத்தில் உய்யலுமாமே!
மேலெழுந்ததோர் வாயு கிளர்ந்து
மேல் மிடற்றினை உள்ளெழவாங்கி,
காலும், கையும் விதிர்விதிர்த்தேறிக்
கண்ணுறக்க மதாவதன் முன்னம் மூலமாகிய ஒற்றை யெழுத்தை
மூன்று மாத்திரை உள்ளெழ வாங்கி வேலை வண்ணனை மேவுதி
ராகில் விண்ணுலகத்தில் மேவலுமாமே!
ஊத்தைக் குழியில் அமுதம் பாய்வது போல் உங்கள்
மூத்திரப் பிள்ளையை என் முகில் வண்ணன் பேரிட்டு
கோத்துக் குழைத்துக் குணவமாடித் திரிமினோ!
நாத்தகு நாரணன் தம் அன்னை நரகம் புகாள்

எல்லையில் வாசல் குறுகச் சென்றால்
எற்றி நமன் தமர் பற்றும் போது
நில்லுமினென்னும் உபாயமில்லை
நேமியும், சங்கமும் ஏந்தினானே
சொல்லலாம் போதே உன் நாமமெல்லாம்
சொல்லினேன் என்னைக் குறிவதூண்டு என்றும்
அல்லல் படா வண்ணம் காக்க வேண்டும்!
அரங்கத் தரவணைப் பள்ளியானே!

இப்படி இவரின் வேதாந்தப் பாசுரப் பொக்கிஷங்கள் ஏராளம்! எதை விடுவது....? சர்க்கரைப் பொம்மையில் எந்தப் பக்கம் உண்டாலும் இனிப்புத்தான்!

ஸ்ரீ ரங்கநாதரிடமும், அழகர்கோவில் அழகரிடமும், ஸ்ரீவில்லிப்புத்தூர் பெருமாளிடமும் பெரியாழ்வாருக்கு ஈடுபாடு அதிகம். பூமாலையும், பாமாலையும், புனைந் தோடு பெரியாழ்வார் வெறொரு பெருந்தொண்டும் செய்திருக்கிறார். சூடிக் கொடுத்த சுடர்க் கொடியை வளர்த்து ஸ்ரீ ரங்க நாதருக்கு சமர்ப்பித்து தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார். இவருடைய பல்லாண்டு தான் இன்றைக்கும் வைணவ ஆலயங்களில் பாடப்படுகிறது.

பெரியாழ்வார் பாடும் பாக்கியம் பெற்ற ஸ்தலங்கள் ஸ்ரீரங்கம், திருவெள்ளறை, திருப்பேர் நகர், (கோவிலடி) கும்பகோணம், திருக்கண்ண புரம், திருச்சித்திரக் கூடம், திருமாலிரும் சோலை, திருக்கோஷ்டியூர், ஸ்ரீவில்லிப்புத்தூர், திருக்குறுங்குடி, திருவேங்கடம், அயோத்தி, சாளக் கிராமம், பத்ரிநாத், துவாரகை, வடமதுரை, தேவப் பிரயாகை, கோகுலம், ஸ்ரீவைகுண்டம். அழகர் கோவிலிலேயே நெடுங்காலம் இறைத் தொண்டு செய்து 85–வது வயதில் பேரின்பப் பெரு வீடு பெற்றவர் பெரியாழ்வார்.

அவரின் இந்த சரித்திரம் படிப்பவரையும், கேட்பவரையும் பரந்தாமனின் கருணைக்குப் பாத்திரராக்கி எல்லா நலன்களையும் அருளுவதோடு இறுதியில் முக்தியும், அளிக்கும் என்பது சர்வ நிச்சயம்.

107. ஸ்ரீ ஆண்டாள்

பெரியாழ்வாருக்கு 52 வயதாகி விட்டது. பெருமாளுக்கு பூமாலை கட்டி அணிவிப்பதும், கோயில் திருப்பணி செய்ததும் மட்டும் அவருக்குப் போதுமானதாகத் தெரியவில்லை. இன்னும் ஏதாவது செய்ய வேண்டுமே என்று அவர் மனம் தவித்துக் கொண்டிருந்தது. குழந்தைப் பேறில்லாமல் அவர் மனைவியும் துவண்டிருந்தாள்.

"பெருமாளே! உன் கோவிலிலே கதியாய் கிடக்கிறாரே.... எங்களுக் கேன் அந்த பாக்கியத்தை அருளவில்லை?" என தினமும் மனதிற்குள் புலம்புவாள்.

இருவர் குறையையும் நீக்க திருமால் பூமாதேவியை பெரியாழ்வாரின் நந்தவனத்தில், துளசிச் செடிக்கருகே பிறக்கப் பணித்தார். 8–ம் நூற்றாண்டின் நடுப்பகுதி, நள வருஷம், ஆடி மாதம் சுக்ல சதுர்த்தி செவ்வாய் கிழமை பூர நட்சத்திரத்தில் பூப்பறிக்கும் நேரம் அக்குழந் தையைக் கண்டெடுத்தார் பெரியாழ்வார். குழந்தையை அள்ளி அணைத்து மனைவியிடம் கொடுத்தார். 'கோதை' எனப் பெயர் சூட்டி 'பிள்ளைக் கலி தீர்க்க பெருமாள் தந்த பரிசு' என அகமகிழ்ந்து குழந்தையை கண்ணும் கருத்துமாக, அன்பும், மகிழ்ச்சியும் கொண்டு வளர்த்து வந்தனர்.

குழந்தை கோதைக்கு பெரியாழ்வார் தினமும் கண்ணன் கதைகளைச் சொல்வார்.

சிறைக் கதவுகள் திறந்து கொண்டதும், விலங்குகள் அறுபட்டதும், யமுனை வழிவிட்டதும், ஆதிசேஷன் குடைப் பிடித்ததும் கோதையின் பிஞ்சு மனத்தில் அந்த அதிசயக் கண்ணனின் நட்பு வேண்டும் என ஆசைப்பட வைத்தது. ஆய்ச்சியர் இல்லங்களில் கண்ணன் வெண்ணையும், தயிரும், பாலும் திருடித்தின்று குறும்புகள் செய்த விதத்தில் கோதையின் மனதையும் திருடிக் கொண்டான்.

பூதனை, சகடாசுரன், திருணாவர்த்தன், (நாரையாகவும், பாம்பாகவும்) அகாசுரன், பகாசுரன், வத்ஸாசுரன், அரிஷ்டாசுரன் ஒவ்வொருவரையும் கண்ணன் வெற்றிக் கொண்டதை வெகு அழகாகச் சொல்வார்

பெரியாழ்வார். இப்படிப்பட்ட வீரனைத்தான் தான் மணக்க வேண்டும் என்று அந்த எட்டு வயதுப் பெண் ஆசை கொண்டாள். கோவர்த்தன கிரியால் கோகுலம் முழுவதும் காத்ததும், காளிங்கனை அடக்கி நடனமாடியதும், ஊரார் அவனைப் புகழ்ந்ததும் கண்ணனை கோதை நெஞ்சில் சிம்மாசனமிட்டே உட்கார்ந்து கொள்ள வைத்தது. ராஸக் கிரீடையை வெகு நாசுக்காகத் தான் சொல்வார் பெரியாழ்வார்.

"எல்லோரும் மேலேறி வந்து கும்பிட்டுக் கேட்டால்தான் ஆடைகளைத் தருவேன்" என்று கோபிகைகளை அழவைத்தானம்மா கண்ணன். அவன் சிறு பையன். அவர்களை நிர்வாண கோலத்தில் பார்க்கும் ஆசையில் அப்படிச் சொல்லவில்லை. எல்லோரும் இளமையான மங்கையர்.... இப்படி ஒரு துஷ்டன் புடவையை எடுத்துக் கொண்டால் அவர்களின் நிலை என்னவாகும் என்பதை அவர்களுக்கு உணர்த்த. நீர் நிலைகளில் ஆடையின்றிக் குளிப்பது பாபம்; குற்றமான செயல் என்பதையும் புரிய வைக்கவே அப்படிச் செய்தான். இது அவர்களுக்கு மனதில் ஒரு பயத்தை உண்டு பண்ணும். இனிமேல் ஆடையின்றிக் குளிக்க மாட்டார்களல்லவா?

குழலிசைக்குப் பாம்பு மயங்கும் என்பார்கள். இங்கே பாவையர் மயங்கினர். இராமாவதாரத்தில் ஸ்ரீராமனின் திருக்கோலம் கண்டு எத்தனையோ பேர் மோகித்தனர். எத்தனையோ பேர் தழுவ முயன்றனர்.... அவர்களையெல்லாம் கிருஷ்ணாவதாரத்தில் கோபிகைகளாகப் பிறக்க வைத்து அவர்களது விருப்பத்தைப் பூர்த்தி செய்தான். திருமால் கருணா சமுத்திரம். அவனிடத்தில் கேட்டு இல்லை என்ற சொல்லே கிடையாது. பலர் வானரர்களாகப் பிறந்து உதவி செய்த தேவர்கள்.... " இப்படிப் பட்டும் படாமலும் சொன்னாலும் கோதை ராதையாகவே ஆகிவிட்டாள்.

'இராமாவதாரத்தில் நான் சீதை; கிருஷ்ணாவதாரத்தில் நான் ராதை. இப்போது நான் கோதையாகப் பிறந்திருக்கிறேன். என்னை வந்து நிச்சயம் ஆட்கொள்வான்" என்று நம்பிக்கையோடு சொல்லிக் கொண்டாள்.

கோதை மனதில் ஏற்பட்ட புரட்சி புரியாமல் பெரியாழ்வார் கதை சொல்லிக் கொண்டு வந்தார்.

கம்சன், சாணூரன், முஷ்டிகன், சிசுபாலன் வதம், திரௌபதியிடம் கொண்ட கருணை; குரு புதல்வனை மீட்டுக் கொண்டு வந்த சாகசம். ருக்மணி, சத்தியபாமா, ஜாம்பவதி திருமணங்கள். கோதை வளர வளர அவள் கண்ணன் மேல் கொண்ட காதலும் வளர்ந்தது.

என் கண்ணன் இல்லாவிட்டால் பாரதப் போரில் வெற்றியேது? குந்தியைக் கர்ணனிடம் அனுப்பி வரம் பெறாவிட்டால் அர்ஜுனனைத் தவிர அனைவரும் இறந்திருப்பார்களே! அஸ்வத்தாமாவிடம் மோதிரத்தை நழுவ விட்டு வினா எழுப்பியுதால் தானே துரியோதனன் ஏமாந்தான்! கர்ணனின் நாகாஸ்திரம் அர்ச்சுனன் கழுத்தைத் துண்டாகாதிருக்க என் கண்ணனல்லவா தேரை பூமிக்குள் அழுத்தினான்....! அடேயப்பா... எத்தனை சாகசங்கள்!'' நினைத்து நினைத்து பூரிப்பாள்!

அணுஅணுவாய் கண்ணன் அழகை பெரியாழ்வார் வர்ணிக்க இமையும் கொட்டாமல் அப்படியே நெஞ்சினுள் சித்திரமாய் வரைந்து கொள்வாள் கோதை.

சின்ன வயதில் அவளது விளையாட்டுத் தோழன் கண்ணன். ''கோதை! யாரோடு விளையாடுகிறாய்?'' என்று அவள் வயதுப் பெண்கள் கேட்க 'கண்ணனோடு' எனத் தயங்காது பதில் சொல்வாள் கோதை. கண்ணன் தன்னைப் பிடிக்க வருவதாய் பாவித்து பதுங்கிப் பதுங்கி, சுற்றிச் சுற்றி ஓடுவாள். அடுத்துத்தான் கண்ணைக் கட்டிக் கொண்டு ''கண்ணா, எத்தனை நேரமாயிற்று? வந்துவிடு'' என்று கெஞ்சுவாள். அழகான சிறிய கிருஷ்ணர் பொம்மை. அதற்கு அழகாகப் பட்டுடுத்தி, தன்னுடைய நகைகளைச் சூட்டி, சிறுமலர் மாலை அணிவித்து, இதயம் முழுவதும் கண்ணனே! கோதையின் உலகமே கண்ணனானான். பிள்ளை விளையாட்டு என்று பெற்றவர் மகிழ்ந்தனர். தந்தைக்கு உதவியாய் கோதையும் மலர் பறிப்பாள்.

பச்சை நிறமுள்ள துளசி, தவனம், மரு, கதிர் பச்சை மருதாணிப் பூக்களைப் பறிக்கும் போது இதெல்லாம் மாயவன் நிறம் என்பார் பெரியாழ்வார். மல்லிகை, முல்லை,இருவாட்சி,சம்பங்கி, ஜாதி மலர்களைப் பறிக்கும் போது பரந்தாமனின் பல் வரிசை என்பார். சிவந்த நிறமுள்ள செம்பருத்தி, அரளியைப் பறிக்கும் போது முகுந்தனின் இதழ் இப்படித்தான் இருக்கும் என்பார். சாமந்தி, கொன்றை போன்ற மஞ்சள்

நிற மலர்களைப் பறிக்கும் போது இது மாலவன் தேவி நிறம் என்று சொல்லி பூரிப்பார். இப்படி மலர்கள் வேறு மாதவன் வேறு என்று பெரியாழ்வார் நினைத்ததில்லை. மகளையும் அப்படியே வளர்த்தார். அவர் பார்த்துப் பார்த்து மலர்களை இணைத்துக் கட்டுவதை வைத்த கண் வாங்காமல் பார்த்து அதிசயிப்பாள். சிறுமி கோதை பருவமங்கையானாள். குடலையில் எப்போதும் பெரியாழ்வார் மாலைகட்டி வைத்துவிட்டு மற்ற வேலைகளை முடித்துக் கொண்டு வந்து, பிறகு ஆலயம் சென்று கோவிலில் சமர்ப்பிப்பார். மாலை சார்த்தி தீபாராதனை காட்டியதும் மெய் மறந்து பூரித்து மனம் திருப்தியடைந்த பிறகே வீடு திரும்புவார்.

"எம்பெருமான் என் கழுத்தில் மாலை சூடும் போது நான் எப்படி இருப்பேன்? வெட்கத்தினால் கன்னம் சிவக்குமா? ஓரக்கண்ணால் கண்ணனைப் பார்ப்பேனா? சூழ மனிதர் கூட்டமாயிருக்குமே... மாலை சூட்டிய பிறகு என் அழகு எப்படியிருக்கும்? இப்போது மாலையை நான் அணிந்து கண்ணாடியில் பார்த்தாலென்ன? அது தப்பாயிற்றே! பகவானுக்குச் சூடுமுன் மற்றவர் அணிவது குற்றமல்லவா? நான் அயலாரா? பகவானுடைய நாயகியல்லவா? திருமணத்தில் மாலை மாற்றும் போது நான் சூட்டிக் கொண்ட மாலையை கண்ணன் கழுத்துக்கு மாற்றச் சொல்வார்களே! அப்போது குற்றம் என்று தயங்கினால் பெண்ணுக்கு இஷ்டமில்லை என்று பேசமாட்டார்களோ? அதனால் நான் அணிந்து பார்ப்பது குற்றமாகாது" என தனக்குள் தீர்மானித்த கோதை 'தந்தை வருகிறாரா'என ஆராய்ந்து பார்த்து விட்டு. மாலையை மென்மையாக எடுத்து அணிந்து கண்ணாடியில் பார்த்து "கண்ணா, உன் கழுத்துக்கு இந்த மாலை போன பின் நீ எவ்வளவு அழகாயிருப்பாய்" என்று கற்பனை செய்து மகிழ்ந்தவள், மாலையை அலுங்காமல், குலுங்காமல் பதனமாகக் கழற்றி முன்போலவே குடலையில் வைத்தாள்.

"அப்பாவுக்கு இப்போது சொன்னால் புரியாது. கோபிப்பார். வ ருத்தப்படுவார். காலம் வரும்போது நீயே புரிய வைப்பாய்" என்று மானசீகமாக சொல்லிக் கொண்டாள்.

வெளியிலிருந்து வந்த பெரியாழ்வார் நடந்தது எதையும் அறியாமல் குடலை மாலையை வடபத்ர சயனருக்குக் கொண்டு போய் கொடுக்க, அர்ச்சகர்கள் அம்மாலையைச் சார்த்தி விட்டு, தீபாராதனை காண்பிக்க கண்ணன் புன்னகைப்பது போலிருந்தது பெரியாழ்வாருக்கு.

'பிரமை' என்று பேசாதிருந்தார் ஆழ்வார். அர்ச்சகர்களும் "இன்றைக்கு மாலையில் விசேஷ வாசனை வருகிறதே" என்றனர்.

அன்று கோவிலிலிருந்து தந்தை வந்தபிறகு மாறுதலாக ஏதாவது சொல்வாரோ என எதிர்வார்த்தாள் கோதை. அர்ச்சகர்கள் சொன்னதை, தான் எண்ணியதைச் சொன்னார் பட்டர்பிரான். மனதிற்குள் பூரிப்படைந்தாள் கோதை.

தினமும் பெரியாழ்வார் கட்டிய மாலையை கோதை சூடி அழகு பார்ப்பதென்பது வழக்கமாகிவிட்டது! இந்த இடத்தில் ஒரு செண்பகப்பூ வைத்தால் நன்றாயிருக்கும். மகிழம்பூக்கொத்து செண்டாகத் தொங்கினால் மேலும் பொலிவுடன் இருக்கும். இடையிடை தாழம்பூவும், மனோரஞ்சிதமும் வையுங்கள் அப்பா" என்று யோஜனையும் சொல்வாள். தினமொரு கற்பனை, தினம் ஒரு கனவு என கோதை நாட்களைக் கழித்தாள்.

ஒரு நாள் பெரியாழ்வார் கண்ணாடியில் கோதை மாலையைச் சூட்டிக் கொண்டு அழகுப் பார்ப்பதைப் பார்த்துப் பதறினார்.

"கோதை! என்ன காரியம் செய்து விட்டாய்? பகவானுக்கு உன்னுடைய சேஷமா? முகர்ந்து பார்த்தாலே மலர்களை பூஜைக்கு எடுக்கக் கூடாது என்பார்கள். இப்படிப் பண்ணி விட்டாயே"என்று கோபித்துக் கொண்டார்.

கோதையின் எந்த சமாதானத்தையும் அவர் ஏற்கவில்லை. நந்த வனத்தில் போய் புதிய மலர்களைப் பறித்தார். அவசர அவசரமாக ஒரு மாலை தொடுத்து ஆலயத்தில் சமர்ப்பித்தார். வடபத்ர சயனரிடம் மனதிற்குள் "காறை பூணும் கண்ணாடி காணும் தன்

கையில் வளைகுலுங்கும், கூறை உடுக்கும்

அயர்க்கும் தன் கொவ்வைச் செவ்வாய் திருத்தும்'

அவள் உன்மேல் கொண்ட மோக மயக்கத்தை ஊரில் பித்தென்பார் களே! இந்த பித்து உனது மாலையைச் சூடிப் பார்க்கும் அளவு வந்து விட்டதே! அவளை என் பொருட்டு மன்னித்து விடு. இந்த மயக்கத்தைத் தீர்த்து என் பழி துடைப்பாயா?"என உருகி வேண்டினார்.

அர்ச்சகர்கள் "விஷ்ணு சித்தரே! இன்று ஏன் கால தாமதம்? ஹூம்.... உமக்கும் வயதாகவில்லையா? ஆனால் மாலை என்றும் போல் இல்லையே.... தினமும் வரும் அபூர்வ வாசனையும் வரவில்லை... நெருக்கமாகவும் கட்டவில்லை" என்று சொல்லிக் கொண்டே கற்பூர ஹாரத்தி செய்தனர்.

பெரியாழ்வார் அன்று எவரோடும் பேசாமல் உறங்கச் சென்றுவிட்டார். கனவில் எம்பெருமான் தோன்றி, "விஷ்ணு சித்தரே! கோதை சூடிக்

கொடுத்த மாலையே எமக்கு மகிழ்ச்சி.... இது பல நாட்களாய் நடந்து வரும் நிகழ்ச்சி. இன்று நீர் கண்டு பிடித்து விட்டீர். நாளையிலிருந்து கோதை சூடிக் கொடுத்த மாலையே எனக்கு அணிவிக்கப்பட வேண்டும்" என்றார்.

பெரியாழ்வார் நித்திரை கலைந்து எழுந்தார். கோதை தேவ மங்கை என்பதைப் புரிந்து கொண்டார். மறுநாள் கோதையிடம் தன் கனவைக் கூறி "ஆண்டவனையே ஆண்டவளம்மா நீ.... ஆண்டாள் என்றே இனி உன்னை அழைப்பேன். சூடிக் கொடுத்த சுடர்க் கொடியே! என்குலம் தழைக்க வந்த கோமளமே! நாரணனுக்கேற்ற நாச்சியார் நீ!"என்று பரவசத்துடன் கொண்டாடினார்.

இதன் பிறகு கோதைக்குத் திருமணம் செய்து வைக்க பெரியாழ்வார் முயற்சித்தார். "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்று முடிவாகச் சொல்லி விட்டாள்.

"அம்மா, நாம் மனிதர்கள்... திருமணம் செய்யாமல் ஒரு பெண்ணை வைத்திருந்தால் பெற்றவர்களை ஊர் பழிக்கும்" என்று ஆழ்வார் நைந்து கூற," பரந்தாமனுக்கே மாலையிடுவேன்" என்றாள் ஆண்டாள்.

"நூற்றெட்டு வைணவத் திருப்பதிகளில் இருக்கிறார் எம்பெருமான். யாருக்கு மாலையிடப் போகிறாய்?" என்று விஷ்ணு சித்தர் கேட்க, "108 திருப்பதி பெருமான்களின் பெருமையையும், குணங்களையும், நீங்கள் விஸ்தாரமாய் சொல்லுங்கள். அப்புறம் நான் தீர்மானிக்கிறேன்" என்றாள் கோதை. ஆழ்வார் தினமும் ஒரு ஸ்தல மகிமையைச் சொல்லிக் கொண்டே வர, 108–வது நாளன்று "ஸ்ரீ ரங்கநாதருக்கு மாலையிட விரும்புகிறேன்'என்றாள் கோதை.

கோதையின் தோழிகள் ஒவ்வொருவராய் திருமணமாகிப் போக, "கோதை, உனக்கெப்போது திருமணம்? என்றாள் ஒருத்தி. 'நாச்சியார் திருமொழி' என்ற 143 பாடல்களால் பரந்தாமனிடம் விண்ணப்பம் செய்தாள் கோதை.

அதோடு கண்ணனைக் காணாத கோபிகைகள் காத்யாயினி விரதம் இருந்தது போல் மார்கழி முதல் நாளிலிருந்து நோன்பிருக்க முடிவு செய்தாள். திருமண வயதிலுள்ள மணம் தடைப்பட்ட மங்கையரெல்லாம்

ஆண்டாளோடு சேர்ந்து கொள்வதாக உறுதி கூறினர். மார்கழி மாதம் வைகுண்டத்தில் பரந்தாமன் துயில் எழும் நேரம். அந்த நேரத்தில் வேண்டும் கோரிக்கைகள் நிச்சயம் நிறைவேறும் என கோதை நம்பினாள். மார்கழி முதல் நாள். நம்பிக்கையோடு முதல் பாசுரத்தைப் பாடி நங்கையரை எழுப்புகின்றாள். "யசோதையின் இளம் சிங்கம் அவன் வேண்டியதைத் தருவான்; விடியற்காலை நாம் பேசிக் கொண்டது போல் நீராடிக் கண்ணனைப் பாடலாம்..... எழுந்திருங்கள்"

2–ம் நாள்; பாவை நோன்பின் வழிமுறையை மறந்து விடாதீர்கள்!

நெய், பால் கலந்த உணவை ஒதுக்க வேண்டும்; கண்ணுக்கு மை தீட்டி, கூந்தலுக்கு மலர்சூட்டி அழகு செய்து கொள்ளக் கூடாது. தீய எண்ணங்களே சிந்தையில் தோன்றக் கூடாது. கர்வமும், பொறாமையும் ஏற்படாமல் கவனமாக இருக்கவேண்டும். பசி என்பவருக்கு 'இல்லை' என்ற சொல்லே நாம் சொல்லக் கூடாது. சரி, இப்படி நோன்பிருப்பதால் என்ன பயன் என்கிறாயா? நாடு செழிக்கும்; மாதம் மும்மாரி பெய்யும். பூமி மாதா மனம் குளிர்ந்து தானியங்களை அள்ளித் தருவாள். பசுக்கள் நிறையப் பால் சொரியும். செல்வம் நிறைந்த நாடாக நமது நாடு இருக்கும். பொது நலத்தை நீ கவனித்தால் உன் நலத்தை கண்ணன் கவனிப்பான். கருமேகங்களைப் பார்த்ததும் அதில் கண்ணன் நிறத்தைப் பார். இப்படி நீ நினைக்க நினைக்க உன் பாவங்கள் கரைந்து உனக்கு கண்ணன் அருள் கிடைக்கும்.

பறவைகள் பாடுவது உன் காதில் விழவில்லையா? முனிவர்களும், யோகிகளும் நாராயண ஜபம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள், பார். கோவிலின் சங்கு சப்தம் கூட உன்நித்திரையைக் கலைக்க வில்லையா? இந்தப் பெண் ரொம்ப மோசம். பறவைகளிலேயே 'ஆனைச் சாத்தனின்' குரல் தனியாகக் கேட்கும். அதுகேட்டுக் கூட இவள் கதவைத் திறக்கவில்லையே. எங்கள் பாட்டு உன்னை எழுப்ப வில்லையா? எல்லா இல்லங்களிலும் தயிர் கடையும் ஓசை கூட உன் காதுக்கு எட்டவில் லையா? அபபடியென்ன உறக்கம்? எருமைகள் மேயச் செல்கின்றன. கிழக்கு வெளுக்க ஆரம்பித்து விட்டது. இப்படித் தூங்கினால் வாழ்க் கையில் நீ பின்தங்கி விடுவாய். மாமி, அவளை எழுப்புங்கள்... எங்களை யெல்லாம் விட வயதில் அவள் தான் மூத்தவள். இப்படி தூங்குகிறாளே! இவளென்ன ஊமையா? செவிடா, இரவு வெகு நேரம் விழித்து வைகுந்த

வாசியின் பெயரை ஜபித்துக் கொண்டிருந்ததினால் கண் முழிக்க மாட்டாமல் படுத்திருக்கிறாளா? அரைத் தூக்கமா? இவளுக்காக மற்றவர்களையெல்லாம் தடுத்து அழைத்து வந்திருக்கிறேன். இப்படிப் பண்ணுகிறாளே! கும்பகர்ணன் இவளிடம் தோற்று போய் விடுவான்! இலங்கேஸ்வரனை ஜெயித்த ஸ்ரீராமன் புகழ் பாடுகிறோம்! பார்... பனி எங்கள் தலையை நனைக்கின்றது! நேற்று நீ சொன்னது என்ன? இப்போது செய்வதென்ன? எல்லோரையும் முதலில் வந்து எழுப்புகிற ஆளைப்பார்....

ஆ, அதோ கண் விழிக்கிறாள். உரக்கப்பாடுங்கள்... நன்றாக விழிக்கட்டும். நந்த குமாரா! எழுந்திரு.... எங்கள் கோரிக்கைகளை காது கொடுத்துக் கேள். எங்களோடு வந்து நீராடு. சந்திர சூரியர்களைப் போன்ற உனது பார்வையில் முதலில் நாங்கள் விழ வேண்டுமென்று ஆசைப்படுகின்றோம். திரிவிக்ரமா! இலங்கையை வெற்றி கொண்ட ஸ்ரீராமா! சகடாசுரனைக் காலால் உதைத்தவனே! கன்றாய் வந்து துவம்சம் செய்த வத்ஸாசுரனை அழித்தவனே! கோவர்த்தன கிரி தாங்கி கோகுலத்தைக் காத்தவனே! இவ்வளவெல்லாம் அருள்புரிந்த உனக்கு எங்களுக்கு இரக்கம் காட்டுவதா பெரிது! தேவகி மைந்தனாய் அவதரித்து யசோதை பாலனாய் ஒளிந்து வளர்ந்தவனே! கெடுதல் செய்த கம்சன் என்ற பஞ்சுக்கு நெருப்பாய் இருந்தவனே! உன் புகழ் பாடி நிற்கும் எங்கள் வேண்டுதலை நீயறிவாய்! எங்கள் வருத்தத்தை தீர்த்து வை.

உன் பாஞ்சசன்யம் முழங்க வேண்டும்! நாங்கள் பல்லாண்டு பாடும்படி கவிதா சக்தியைக் கொடு. இருண்ட எங்கள் வாழ்க்கையில் நீ விளக்காய் இரு. கொடியேற்றினால் திருவிழா நடக்கும்; பந்தல் போட்டால் திருமணம் நடக்கும். நீ எங்களுக்குக் கொடியாக, விதானமாக இருப்பாய்!" இப்படி 26 நாட்கள் 26 பாடல்கள் பாடி தோழியரோடு பாவை நோன்பு நோற்றாள் கோதை.

26–ம் நாள் கனவில் அவள் கண்டதை தோழிகளிடம் சொல்கிறாள்.

1. "வாரணமாயிரம் சூழ வலம் வந்து
நாரணன் நம்பி நடக்கின்றான் என்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழி நான்.

2. நாளை வதுவை மணமென்று நாளிட்டு
பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்
கோளரி மாதவன் கோவிந்தன் என்பான் ஓர்
காளை புகுத கனாக் கண்டேன் தோழி நான்.

3. இந்திரன் உள்ளிட்ட தேவர் குழாமெல்லாம்
வந்திருந்தென்னை மக்கட் பேசி மந்திரித்து
மந்திரக் கோடி உடுத்தி மணமாலை
அந்தரி சூட்டக் கனாக் கண்டேன் தோழி நான்.

4. நாற்றிசைத் தீர்த்தம் கொணர்ந்து நனி நல்கி
பார்ப்பனச் சிட்டர்கள் பல்லானெடுத்தேத்தி
பூப்புனைக் கண்ணிப் புனிதனோ டென்றன்னை
காப்பு நாண் கட்டக் கனாக் கண்டேன் தோழி நான்.

5. கதிரொளி தீபம் கலசமுடன் ஏந்தி
சதிரிள மங்கையர் தாம் வந்தெதிர்கொள்ள
மதுரையார் மன்னன் அடிநிலை தொட்டெங்கும்
அதிரப் புகுதக் கனாக் கண்டேன் தோழி நான்.

6. மத்தளம் கொட்ட வரி சங்கம் நின்றூத
முத்துடை தாமம் நிறை சாய்த்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுஸூதனன் வந்தென்னைக்
கைத்தலம் பற்ற கனாக் கண்டேன் தோழி நான்.

7. வாய் நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால்
பாசிலை நாணல் படுத்துப் பரிதி வைத்து
காய்ச்சின மாகளிறன்னான் என் கைப் பற்றி
தீ வலம் செய்யக் கனாக் கண்டேன் தோழி நான்.

8. இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மையுடைய நாராயணன் நம்பி
செம்மையுடைய திருக்கையால் தாள் பற்றி
அம்மி மிதிக்கக் கனாக் கண்டேன் தோழி நான்.

9. வரிசிலை வார்முகத்தென்னை மார் தாம் வந்திட்டு
எரிமுகம் பார்த்து என்னை முன்னே நிறுத்தி

அரிமுகன் அச்சுதன் கைமேல் என்கை வைத்து
பொரிமுகம் தட்ட கனாக் கண்டேன் தோழி நான்.

10. குங்குமம் அப்பிக் குளிர் சாந்தம் மட்டித்து
மங்கல வீதி வலம் செய்து மண நீர்
அங்கவனோடும் உடன் சென்றங்காளைமேல்
மஞ்சனமாட்ட கனாக் கண்டேன் தோழி நான்..

இதுநாள் வரை கற்பனையில் கண்டு மகிழ்ந்ததை கனவாகக் கண்ட கோதை தோழியிடம் சொல்லி மகிழ்ந்தாள். கோதைக்குத் தன் கனவு பலிக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்று தெரிந்து விட்டது.

27–வது நாள் "கோவிந்தா, இந்தப் பாவை நோன்பினால் நாங்கள் பெறும் பரிசு மிகப் பெரியது. இனி நாங்கள் புதிய ஆடை அணிவோம்;பல ஆபரணங்களைப் பூணுவோம். மலர் சூடுவோம்;பாலும், நெய்யும் சேர்த்துக் கொள்வோம்" என்று மகிழ்ந்து பாடுகின்றாள். அதனால் தான் அன்று முராரியை உபாசிப்பவர்களும், வைணவ ஆலயங்களிலும் பாலும், நெய்யும், கலந்த சர்க்கரை பொங்கலை நிவேதனம் செய்கிறார்கள்.

அடுத்த நாள் ஆண்பாலான போகர்களாகவே தங்களை வரித்துக் கொண்டு "கோவிந்தா, நாங்கள் அதிகம் படிக்காத அறிவிலிகள். நாங்கள் செய்த புண்ணியம் நீ பிறந்த இடத்தில், உன் ஜென்ம காலத்தில் பிறந்து வாழ்கிறோம். இந்த உறவை எங்களால் ஒழிக்க முடியாது. 'டேய் கண்ணா, என்று நாங்கள் கூப்பிடுவதற்காக கோபித்துக் கொண்டு விடாதே! இந்த அதிகாலையில் உன்னை வழிபடுவதின் காரணம் என்ன தெரியுமா, இப்போது மட்டுமல்ல... எப்போதும், அடுத்தடுத்த பிறவிகளிலும் உனக்கே நண்பனாக உன் அடிமையாக இருக்கும் பாக்கியத்தை எனக்காக கட்டாயம் தரவேண்டும். இந்நினைப்பு மாறாதிருக்கும் வரத்தையும் அருள வேண்டும்." என்று கோதை பாடிய இந்த 29 பாடல்களும் முடிந்தன. 30ம் நாள் பட்டர்பிரான் கனவில் ஸ்ரீரங்கநாதன் தோன்றி "உம்முடைய புதல்வி கோதையுடன் நாளை ஸ்ரீரங்கம் வாரும். அங்கே அவளை நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்றார். விஷ்ணு சித்தருக்குப் புல்லரித்தது.

பாண்டிய மன்னன் வல்லபத் தேவன் கனவிலும் ஸ்ரீரங்கநாதர் தோன்றி,"நீ சம்பிரமமாக வில்லிப்புத்தூர் சென்று பெரியாழ்வாரின் வளர்ப்புப் புதல்வி கோதையை முத்துப் பல்லக்கிலேற்றி ஸ்ரீரங்கம்

அழைத்து வா" என்றார். உடனே அரசன் மந்திரி, பிரதானி, குலகுருவிடம் விஷயத்தைக் கூறி, ஸ்ரீவில்லிப்புத்தூருக்கும், ஸ்ரீரங்கத்துக்கும் உள்ள இணைப்பு வழியெல்லாம் பூப்பந்தலிட்டு, தோரணம் கட்டி, வாழை, கமுகு, பாளைகளால் அலங்கரிக்க உத்தரவிட்டான். பின் அந்தணர் குழாத்தோடு முத்துப் பல்லக்கைக் கொண்டு வந்து பெரியாழ்வார் இல்லத்தில் நிறுத்தி ஆழ்வாரிடம் ஸ்ரீரங்கநாதர் கனவில் தனக்கிட்ட பணியைப் பணிவுடன் எடுத்துரைத்தார். பெரியாழ்வார் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அன்று ஆண்டாள் முப்பதாவது பாடலையும் பாடி முடித்தாள்.

கூர்மமாக நின்று மந்தர மலையைத் தாங்கி கடலைக் கடைந்த மாதவனை, கேசிகாசுரனை அழித்த கேசவனை, பட்டர்பிராணின் மகள் கோதை தன் தோழியரோடு வேண்டிப் பிரார்த்தித்து இந்த முப்பது பாடல்களையும் பக்தி சிரத்தையுடன் இயற்றினாள். இதைப் பாடு வோருக்குத் திருமாலின் திருவருள் நிச்சயம் கிடைக்கும் என்று கூறி தோழிகளிடம் அன்புடன் விடை பெறுகின்றாள். கோதையைப் போலவே அவளோடு பாவை நோன்பு நோற்ற எல்லா மங்கையருக்கும் அந்தத் தைத் திங்களிலேயே திருமணம் நடைபெறுகிறது. பூமாதேவியோடு நோன்பு கொண்டாடுவதென்பது லேசான பாக்கியமா? ஸ்ரீரங்கம் கோவிலி லிருந்தும் குடை, கவரி, விருதுகள், வாத்தியங்கள், மற்றும் பல சிறப்புக் களுடன் பெரியாழ்வார் இல்லத்தில் கோதையை அழைக்க வந்தனர். அங்கேயும் கனவில் பெருமாள் உத்தரவிட்டிருக்கிறார்.

ஸ்ரீவில்லிப்புத்தூர் மாந்தரெல்லாம் பெரியாழ்வாரின் வீட்டின் முன் கூடியிருந்தனர். மணிகள் இழைத்த மூடு பல்லக்கில், அன்னமென பம்மி நடந்து, குனிந்த தலை நிமிராது, சர்வாபரண பூஷிதையாய், தந்தை கட்டிக் கொடுத்த மாலையோடு ஏறி அமர்கிறாள் கோதை. தோழிகள் விழிகளி லெல்லாம் நீர் கட்டிக் கொண்டு வெளிவரத்துடிக்கிறது. விழுந்தால் அமங் கலமாகி விடுமே என்று இமைக்காது நிற்கின்றனர். பின்னால் தொண்டர் கூட்டம் பரந்தாமனின் கல்யாண குணங்களைப் பாடிக் கொண்டு வருகின்றன. வாத்திய கோஷங்களுடன் முத்துப் பல்லக்கு அழகிய மணவாளனுடைய திருமண்டபத்தை அடைகிறது.

சூடிக் கொடுத்த நாச்சியார் கல்யாண திருக் கோலத்துடன் பைய இறங்குகின்றாள். பெரியாழ்வார் கண்ணீர் பெருக்குகின்றார். மௌனமாய்த் தந்தையிடம் விடைபெற்ற கோதை, அரங்கன் சன்னதிக்குள் நுழைய

'பளிரென்ற'ஒரு ஜோதி. கோதை அரங்கனோடு கலந்து விட்டாள். "வருந்தாதீர்! திருப்பாற்கடலரசன், ஜனகன், மார்க்கண்டேயரைப் போல் நீரும் எனக்கு மாமனாராகி விட்டீர்" என்ற குரல் கருவறையிலிருந்து வந்தது.

விஷ்ணுசித்தருக்கு தீர்த்தம், திருப்பரிவட்டம், மாலை, திருச்சடகோபம் எல்லா மரியாதைகளும் செய்தனர். ஸ்ரீ ஆண்டாளோடு ஸ்ரீரங்கநாதன் காட்சி கொடுத்து, வில்லிபுத்தூர் உறைவோனுக்குத் தொண்டு பூண்டிரும்" என திருவாய் மலர்ந்தருளி விடை கொடுத்தார்.

ஸ்ரீ ஆண்டாளால் பாடப் பெற்ற ஸ்தலங்கள் ஸ்ரீரங்கம், திருக்கண்ண புரம், அழகர் கோவில், ஸ்ரீவில்லிப்புத்தூர், திருப்பதி, துவாரகை, வடமதுரை, கோகுலம், ஸ்ரீவைகுண்டம்.

பல்லாயிரக்கணக்கான கன்னிப் பெண்களுக்காக பூமியில் அவதரித்து பாவை நோன்பு நோற்று, உறுதியையும், தன்னம்பிக்கையையும் தோற்று வித்து வழி காட்டிய ஸ்ரீ ஆண்டாளின் இந்த புண்ய சரித்திரம் பக்தியுடன் படிப்பவருக்கும், கேட்பவருக்கும் எல்லா நலன்களையும் அருளுவதோடு, திருமாலின் அருளுக்கும் பாத்திரமாக்கும் என்பது சத்தியம். பிரிந்த தம்பதியர் கூடுவர். கன்னிப் பெண்களுக்கெல்லாம் திருமணம் நடக்கும்.

108. தொண்டரடிப் பொடியாழ்வார்

கலியுகத்தில் சோழ நாட்டில் உள்ள திருமண்டங்குடியில், பராபவ ஆண்டு, மார்கழி மாதம், கேட்டை நட்சத்திரத்தில், ஸ்ரீ வனமாலையின் அம்சமாக சோழிய வைஷ்ணவ குலத்தில் விப்ர வேத விசாரதருக்குப் பிறந்தவர் இவர்.

தாழம்பூ மேனி அழகும், முகவசீகரமுமான குழந்தையைப் பார்ப்ப வர்கள் சற்று நேரமாவது நின்று கொஞ்சாமல் போக மாட்டார்கள். 'விப்ர' என்பது பரம்பரைப் பெயர். நாராயணன் என்பது பெற்றோர் வைத்த பெயர். விப்ர நாராயணன் பரம சாது. யாரிடமும் வம்பு சண்டை விவகாரங்

களுக்குப் போக மாட்டான். நன்றாகத் தமிழும், சமஸ்கிருதமும் கற்றான். உரிய காலத்தில் உபநயனம் செய்வித்தார் வேத விசாரதர்.

ஸ்ரீ ரங்கநாதரைத் தரிசிக்க வந்த நாராயணன் ரங்கனின் அழகில் மயங்கி அங்கேயே தங்கி விடத் தீர்மானித்தார். 'இறைவன் மகிழும்படியாக என்ன தொண்டு செய்யலாம்?' என சிந்தித்து, நந்தவனம் ஒன்று உண்டாக்கினார். வாசனை மிகுந்த மலர்ச் செடிகளை வளர்த்தார். ஒரு பக்கம் திருத்துழாய் தோட்டம். ஒரு ஓரத்தில் அவர் வசிக்க ஒரு குடில். பார்த்துப் பார்த்து மாலை தொடுத்து ஸ்ரீரங்கநாதனுக்கு அணிவித்து அழகு பார்ப்பார்.

"விசாரதா! நான் கேள்விப்பட்டது நிஜம் தானா? நாராயணன் ஸ்ரீரங்கத்திலேயே தங்கி விட்டானாமே!" என்று பரபரப்பாக ஓடி வந்தார் வேத விசாரதரின் அத்யந்த நண்பர். "ஆமாம்..... நானும் எப்படியெல் லாமோ சொல்லிப் பார்த்தேன். கல்யாணமே வேண்டாம் என்று அடம் பிடிக்கிறான். வயதான காலத்தில் இங்கே நாங்களும், அங்கே அவனுமாக காலம் தள்ளுகிறோம். பூந்தோட்டம் அமைக்க நிலம் வாங்கித் தரவேண்டும்" என்று கேட்டான். பகவத் கைங்கரியம் செய்தாலாவது நல்ல புத்தி வராதா என்று நிலம் வாங்கிக் கொடுத்தேன்" கண்கலங்கக் கூறினார் வேத விசாரதர்

"நல்ல காரியம் தான்! மற்ற பிள்ளைகள் மாதிரி குடி,கூத்தி, சூதாட்டம் என்று தவறான வழிக்குப் பணம் கேட்கவில்லையே என்று சந்தோஷப் பட வேண்டும். நாங்களெல்லாம் இல்லையா.... உங்களை கவனித்துக் கொள்ள மாட்டோமா? என் கவலை அது இல்லை.... இவனுக்கோ வாலிப வயசு! தனியாக இருக்கிறான். அதிலும் அழகாக வேறு இருக்கிறான்! மூவாசைகளிலும் கொடியது பெண்ணாசைதான். அந்த அரங்கன்தான் காப்பாற்ற வேண்டும்" என்று பெருமூச்செறிந்தார் நண்பர்.

"மன்னர் முன்னிலையில் நடனமாட அழைப்பு வந்திருக்கிறது. இந்த நேரம் பார்த்தா இந்தக் காய்ச்சலும், தலைவலியும் வரவேண்டும்! தேவதேவிக்கு அழகு மட்டுமல்ல..... அதிர்ஷ்டமும் அதிகம் என்று எனக்கு அப்போதே தெரியும்.... ஒவ்வொருத்தியும் இந்த வாய்ப்புக்காக தவம் கிடந்திருக்கிறார்கள்."

"நீ ஏனம்மா கவலைப் படுகிறாய்? தேவதேவியை நான் பத்திரமாய் அழைத்துச் செல்ல மாட்டேனா?" தேவதேவியின் தமக்கை தாயின் படுக்கை அருகே அமர்ந்து அன்போடு ஆறுதல் கூறினாள்.

"அதற்கில்லையடி. இந்த உத்தமர் கோவிலிலேயே அவளுடைய அழகுக்கு நிகராக ஒருவர் பிறந்ததும் இல்லை.... இனி பிறக்கப் போவதும் இல்லை. அதனால் அவளை நான் அதிகம் கோவிலுக்குக் கூட அழைத்துச் செல்லாமல் பொத்திப் பொத்தி பாதுகாக்கிறேன். வகையான இடம் வந்து மாட்ட வேணும் என்றிருக்கிறேன். இந்த சமயத்தில்....." தாயை இடைமறித்தாள் மூத்த மகள் தேவி.

"அம்மா.... தேவதேவி தப்பிப போய் கணிகையர் குலத்தில் பிறந்து விட்டாள். உன் ஆசை நிறைவேறுமா என்று தெரியவில்லை.... ஊர்வசியும், ரம்பையும் இணைந்தால் கூட அவன் அழகுக்கு நிகராக மாட்டார்கள். ஆனால் அவள் பிடிவாதம்.... உடும்பை விட வலியது... அவள் போக்குப் படி விட்டாலாவது மனம் மாறுவாள்...வற்புறுத்தினோமானால்..."

"சரி சரி... அதோ அவள் வருகிறாள், பார்.... பேச்சை நிறுத்து.... பத்திரமாக அழைத்துச் சென்று, பத்திரமாகக் கூட்டி வா... ஆடை, அணிமணிகளெல்லாம் மறக்காமல் எடுத்துக் கொள். வாத்தியக்காரர்கள், பதம் பாடுபவர்கள்..."

"என்ன அக்கா.... அம்மா இன்று இதை எத்தனையாவது தடவையாகச் சொல்கிறார்கள்? கணக்கு வைத்துக் கொண்டிருக்கிறாயா? 108 ஆனதும் பிள்ளையாருக்கு சிதறுக் காய் அடித்து விடுவோம்" கலகலவென்று சிரித்தாள் தேவ தேவி.

"கேலி போதும்.... அரண்மனை போனதும் இரண்டுபேரும் ஒருதடவை ஒத்திகை பார்த்து விடுங்கள். அரசவையில் தவறு ஏற்பட்டு விடக் கூடாது. அரசர் போதும் என்கிற வரை ஆட வேண்டும். வேகமான அடவுகளை நடுவில் வைத்துக் கொள்ளுங்கள். அரசருக்கு திடீரென்று அரசாங்க அலுவல்கள் குறுக்கிடலாம். அதனால் தில்லானாவையும், சர்ப்ப நடனத்தையும் நான்கு நடனத்துக்குப் பிறகு ஆடி விடுங்கள். பாகவத நாட்டியத்தை இரண்டாவதாகத் தொடங்கிவிடு. இரண்டாம் நாளுக்கு இராமாயண நடனத்தை வைத்துக் கொள்"

"அக்கா... அம்மாவுக்கு உடம்புதான் இங்கே... மனசெல்லாம் நம்மோடுதான் வரப் போகிறது!" என்றாள் தேவதேவி.

"பச்சை மாமலை போல் மேனி பவள வாய்க் கமலச் செங்கன் அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே! என்னும் இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன், அரங்கமா நகருள்ளானே! ஊரிலேன் காணியில்லை! உறவு மற்றொருவர் இல்லை பாரில் நின் பாதமூலம் பற்றினேன் பரம மூர்த்தி காரொளிர் வண்ணனே! கண்ணனே கதறுகின்றேன்! ஆருளத் அரங்கத்தம்மான் அரங்கமா நகருளானே! மற்றுமோர் தெய்வமுண்டோ? மதியிலா மானிடர்காள்! உற்ற போதன்றி நீங்கள் ஒருவனென்றுணர மாட்டீர்! அற்றமேல் ஒன்றறியீர் அவனல்லால் தெய்வம் இல்லை! கற்றினம் மேய்த்த எந்தை கழலிணைப் பணிமின்! நீரே! இனித்திரைத் திவலை மோத எரியும் தண் பரவை மீதே தனி கிடந்து அரசு செய்யும் தாமரைக் கண்ணன் எம்மான் கனியிருந் தனைய செவ்வாய்க் கண்ணனைக் கண்ட கண்கள் பனி அரும்பு திருமாலோ! என் செய்கேன் பாவியேனே!"

சோழ அரசவையில் சிறப்பாக நடனமாடி, ஏராளமான பரிசுகள் பெற்று உத்தமர் கோயிலுக்குத் திரும்பிக் கொண்டிருந்த சகோதரியர், விப்ர நாராயணரின் இனிய சங்கீதத்தை மெய் மறந்து கேட்டனர். "என்ன இனிமையான கானம்! பக்தியோடு, குரல் வளமும் பொங்கப் பாடுகிறார்; மலர்களின் மணமும் என்னை ஈர்க்கிறது. உள்ளே போய் பூக்களோடு அவரது பாக்களையும் ரசிப்போம்" சொல்லிக் கொண்டே தேவதேவி பூந்தோட்டத்துள் நுழைந்து விட்டாள். வேறு வழியின்றி பின் தொடர்ந்தாள் தமக்கை.

பாடிக் கொண்டே பூப்பறிக்கும் விப்ர நாராயணரின் முக தேஜஸைக் கண்டு பிரமித்தனர் சகோதரிகள். நிலத்தில் விழுந்து நமஸ்கரித்தனர். விப்ர நாராயணரோ மெய்மறந்து பாடிக் கொண்டே போய் விட்டார். தேவிதேவி கொதித்தாள்.

"சரியான திமிர் பிடித்தவராயிருக்கிறாரே! வணங்கியவர்களை ஆசிர்வதித்தால் இவர் கௌரவம் குறைந்து போகுமோ?" என்று சாடினாள்.

"சகோதரி.... அவர் பகவானின் உருவத்தை மனத்துள் நிறுத்திப் பாடுகிறார். கண்ணனைக் கண்ட கண்கள் மற்றெதையும் காணவில்லை. இது வேண்டுமென்று செய்த செய்கையாய் தெரியவில்லை. வீண் கோபத்தை விடு. நாம் நம் வழி செல்வோம். நமக்கெதற்கு வீண் விவகாரங்கள்" என பலவிதமாய் சமாதானம் சொன்னாள் தமக்கை.

ஆனால் தேவதேவி "அக்கா, நான் ஒருமுறை திரும்பிப் பார்க்க மாட்டேனா என்று தவம் கிடப்பவர்களெல்லாம் இருக்கிறார்கள். இவரோ என்னை, என் அழகை அலட்சியப் படுத்தி விட்டார். அதை நீ பக்தி, மெய் மறந்த நிலை என்கிறாய்! இருக்கட்டும்... இதே கண்களை என் தரிசனத்துக்காக ஏங்கச் செய்கிறேன். இவர் மனத்துள் அரங்கன் இருக்கிறான் என்றாய். அதில் என்னை வைத்து பூஜிக்காவிட்டால் நான் தேவதேவி இல்லை..." சினத்தோடு சூளுரைத்த தங்கையின் கரத்தைப் பிடித்துக் கொண்டாள் தமக்கை.

"இதென்ன விபரீதமான சபதம்! இதனால் உனக்குக் கெட்ட பெயர் தான் வரும். ஜனங்கள் உன்னை கல்லாலடித்து அவமானப் படுத்துவார்கள். பிரம்மசரிய விரதமிருக்கும் பக்தரை விரத பங்கம் செய்விப்பது பாபமல்லவா? எல்லாவற்றிற்கும் மேலாக அம்மாவுக்கு என்ன பதில் சொல்வது?"

"அக்கா! எல்லாவற்றிற்கும் துணிந்து தான் இதில் இறங்குகிறேன். எனக்கு ஆறுமாதம் அவகாசம் கொடு. இதில் நான் தோற்றுவிட்டால் நீ சொன்னபடியெல்லாம் நான் கேட்கிறேன். பரிசுப் பொருள்களை, என் நகைகளை, ஆடம்பர, நடன ஆடைகளையெல்லாம் நீ கொண்டு போய் விடு. சாதாரணப் புடவைகள் இரண்டு மட்டுமே போதும். அம்மாவிடம் ஸ்ரீ ரங்க நாதரைத் தரிசனம் செய்து கொண்டு நாட்டியப்பள்ளி நடத்துவதாகச் சொல். எக்காரணத்தைக் கொண்டும் இந்த இடத்தைச் சொல்லாதே! அம்மாவோ, வேறு நபரோ என்னைத் தேடி வந்தால் நான் தற்கொலை செய்து கொண்டு விடுவேன். பிரம்மச்சரியம் புண்ணியம் என்றால் பரந்தாமன் ஏன் ஸ்ரீ தேவி, பூதேவியோடு காட்சி தருகிறார்? உலகில் ஏன் திருமணங்கள் புனிதமானதாய்க் கருதப் படுகின்றன?" தேவதேவியின் தமக்கை வேறெதுவும் பேசாமல் பரிசுப் பொருள்கள், தேவதேவியின் உடமைகளோடு உத்தமர் கோவிலை அடைந்தாள். தாயாரிடம் தேவதேவி சொன்னதை அப்படியே சொன்னாள்.

தேவதேவியின் பிடிவாத குணம் தெரிந்த தாய் நாட்களை எண்ணிக் கொண்டிருந்தாள்.

தேவதேவி எளிமையான காவி உடை அணிந்தாள். கழுத்தில் துளசி மாலை. காதுகளில் துளசி மணிக் குண்டலம். கைகளில் துளசி மணி கோர்த்த கங்கணம். நெற்றியில் நீண்ட திருமண். விப்ர நாராயணர் ஓய்ந்திருந்த சமயமாகப் பார்த்து அவர் காலடியில் விழுந்தாள். "அம்மா, நீ யார்? உனக்கென்ன வேண்டும் " என அன்புடன் விசாரித்தார் விப்ர நாராயணர்.

"ஸ்வாமி என் பெயர் தேவதேவி. ஊர் கரம்பனூர். கணிகையர் குலத்தில் பிறந்தவள். என் தாய் பணத்தாசை பிடித்தவள். என்னைக் குலத் தொழிலில் ஈடுபடும்படி வற்புறத்துகிறாள். எனக்கோ அதில் விருப்ப மில்லை. தங்களின் பெருமைப் பற்றிக் கேள்வியுற்று தங்களைச் சரண டைந்திருக்கிறேன். தங்களின் துளவத் தொண்டில் என்னையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். தாங்கள் நிராகரித்தால் தற்கொலை செய்து கொள் வதைத் தவிர வேறு வழியில்லை....." எனக் கண்ணீருடன் விண்ணப் பித்தாள்.

விப்ர நாராயணர் அன்புடன்"அடியார்களைப் பேணுவதே இறைவன் எனக்கிட்ட பணி! தஞ்சம் என்று வந்தவர்களுக்கு அடைக்கலம் தர மறுப்பது பெரும் பாவம். இனி நீ கவலைப்படாதே. இந்த பூச்செடிகளை தினமும் நீர் ஊற்றி, எருப்போட்டு, பாதுகாத்து வா. இறைவன் வரப்பிரசாதமாய் கொடுத்த வாழ்க்கையை நடுவில் முடித்துக் கொள்வது மகாபாவம். கைகள் கொடுத்தது பூப்பறிக்க, மாலைகட்ட, சந்தனம், அரைக்க. நாவைக் கொடுத்தது அவன் புகழ் பாட! கண்கள் அவனைக் காண..... கால்கள் அவன் ஆலயம் நோக்கி நடக்க! செவிகள் ஆலய மணியோசையையும், அவன் புகழையும், அவனது அடியார்களின் குறைகளையும் கேட்க! தோள்கள் திருமஞ்சன நீர் சுமக்க! ஊனமற்றுப் படைத்த அரங்கனுக்கு சேவை செய்வதை விடுத்து உயிரை மாய்த்துக் கொள்வேன் என்று சொல்வது தவறல்லவா? அதோ அந்தக் குடிசையில் தங்கிக் கொள்... நான் வேறு கட்டிக் கொள்கிறேன்" என்றவர், வேறொரு புறத்தில் தனக்குக் குடிசைக் கட்டிக் கொண்டார். தான் சாப்பிட்ட பிறகு மிச்சமிருந்த அமுதைக் கொடுத்தார்.

பூக்களைப் பறிக்கும் போதும், தொடுக்கும் போதும் பாகவதக் கதைகளை அவளுக்குச் சொன்னார் விப்ர நாராயணர். ராஸக் கிரீடை, ருக்மணிக் கல்யாணம், ஜாம்பவதி, சத்யபாமா திருமணம், அக்ரூரரோடு செல்லும்போது ராதையின் பிரிவாற்றாமை. பாமாவிடம் பரந்தாமன் கொண்ட பாசம் இவைகளில் மட்டுமே தேவதேவிக்கு சந்தேகம் வந்தது.

ஒருநாள் பெரும் மழை. கூரை இற்று குடிலெல்லாம் ஒழுகல். தேவதேவி தொப்பலாய் நனைந்துவிட்டாள். இதைப் பார்த்த விப்ர நாராயணர் இரக்கப்பட்டு தமது குடிலுக்குள் அவளை அழைத்துச் சென்றார். உடலோடு ஒட்டிய உடை. அழகிய இளமை. ஸ்ரீரங்கனின் சோதனை. அவர்

புத்தி தடுமாறியதை தேவதேவி புரிந்து கொண்டாள். இம்மாதிரி சந்தர்ப்பத்திற்காகத் தானே காத்திருந்தாள்!

'தலையைத் துவட்டிக் கொள்' என்று அவர் கொடுத்த மேல்துண்டால் துடைக்கும் பாவனையில் மேலும் அவர் சிந்தையை அலைக்கழித்தாள்.

மோகதாபமோ, மழையில் நனைந்ததோ விப்ர நாராயணருக்குக் காய்ச்சல் வந்து விட்டது. காய்ச்சலில் 'தேவி, தேவி' என பிதற்றினார். மஞ்சள் அரைத்து கரண்டியில் சூடுபண்ணி பற்றுப் போட்டாள். தலை, கை, கால், மார்பெல்லாம் தைலம் தேய்த்து விட்டாள். கஞ்சி வைத்து மடியில் சாய்த்துக் கொண்டு புகட்டினாள். கஷாயம் வைத்துக் கொடுத்தாள். மெதுவாகக் கால்களைப் பிடித்து விட்டாள். இனிமையான குரலில் பரந்தாமன் பாமாலைகளைப் பாடினாள். காய்ச்சலின் வேகம். பெண்ணின் ஸ்பரிசம். பாடலின் இனிமை. தேவதேவி இவர் கண்களுக்குக் கண்ணனாகவே காட்சி அளித்தாள். கட்டிப் பிடித்தார். 'கண்ணா, கண்ணா, பரந்தாமா' என முத்த மழை பொழிந்தார்.

சிறிது நேரம் பொறுத்தே தன் செயலின் தன்மை அறிந்து வெட்கித் தலைக் குனிந்தார். தேவதேவி,

"ஸ்வாமி! இப்போது என்ன நடந்து விட்டதென்று இப்படித் துடிக்கிறீர்கள்? பாபமென்றால் பரந்தாமன் பாமாவுக்கு கால் பிடித்து விட்டிருப்பாரா? ஸ்ரீ கிருஷ்ணர் ருக்மணியைத் தூக்கி வந்து திருமணம் செய்து கொள்ள வில்லையா? கண்ணனின் புல்லாங்குழல் இசைக் கேட்டு கணவனை, குழந்தையை விட்டு கோபிகைகள் ஓடிவந்தார்கள் என்று சொன்னீர்களே! பாதி அலங்காரத்தில், பாதி வீட்டு வேலைகளில் ஓடி வந்த கோபிகைகள் பாவிகளா? ஆபரணங்களை மாற்றி அணிந்து வந்த கோலாகலத்தை ராஸக்கிரீடையில் பாடி ரசிக்க வில்லையா? ஒருவர் பல பெண்களை விரும்புவது பாபம். ஒருவனுக்கு ஒருத்தி என்பது எப்படிக் குற்றமாகும்? விரும்பாத பெண்ணை பலாத்காரம் செய்வது பாபம். பகவானையே நெஞ்சில் சுமக்கும் உங்கள் மார்பில் சாய்ந்ததையே நான் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்." தேவதேவியின் விளக்கங்கள் விப்ர நாராயணரை சமாதானப்படுத்தியது. "அப்போது நாம் கூடுவது தவறில்லை அல்லவா? தேவி, நீயும் என்னை முழு மனதோடு நேசிக்கிறாயா?" என நெகிழ்ந்து போய் கேட்டார் விப்ர நாராயணர்.

"என் பூர்வ ஜென்ம புண்ணியம் நான் தங்களைச் சேர்வது" என கள்ளத்தனமாய் சிரித்த தேவதேவி நறுமணம் மிகுந்த சந்தனத்தை மார்பில் பூசிவிட்டாள்.

விப்ர நாராயணரின் உலகமே தேவதேவியானாள். அரங்கன் ஆலயத்தை, அரங்கன் பணியை மறக்க வைத்தது தேவதேவியின் கூட்டுறவு. மலர்களை மாலையாகக் கட்டி தேவதேவிக்குச் சூட்டி அழகு பார்த்தார்.

விப்ர நாராயணரின் பிரேமைப் பித்து தேவதேவியின் கர்வத்தை அதிகப்படுத்தியது. தனது வெற்றியை தமக்கையிடம் காட்டத் துடித்தாள்.

"ஸ்வாமி, நான் போய் என் தாயையும், தமக்கையையும் பார்த்து வர உத்தரவு தர வேண்டும் " எனப் பணிவுடன் வேண்டினாள் தேவதேவி. "தேவி... என் நிலை நீ அறியாயா? கட்டாயம் போகத்தான் வேண்டுமா? உன்னைப் பிரிந்து நான் எப்படி உயிர் வாழ்வேன்" என்று உருகினார் விப்ர நாராயணர்.

"ஒரே ஒரு நாள்... போனவுடன் திரும்பி விடுகிறேன். பாசம் மறந்த பாதகி என்று தூற்றுவார்கள்!" என வினயத்தோடு கூறி விடை பெற்றுச் சென்று விட்டாள்.

தமக்கையிடம் தன் வெற்றியைக் கூறினாள். தாயார் இனி தேவதேவியை வெளியே விடக் கூடாது எனத் தீர்மானித்துக் கொண்டாள். இரண்டு நாட்கள் உற்சாகமாய் சென்றது. பிறகுதான் தேவதேவி பிரிவுத் துயரத்தை உணர்ந்தாள். தானும் விபர நாராயணரை எத்தனை நேசித்திருக்கிறோம் என்று அப்போதுதான் புரிந்தது.

நீராடப் போனால் அவர் தொட்ட இடங்களை நினைத்து அப்படியே நின்றாள். சாப்பிட அமர்ந்தால் தங்களிடையே நடந்த நிகழ்ச்சிகள் அவளை ஆட்டிப் படைத்தன. உணவு செல்லவில்லை. உறக்கம் புறக்கணித்தது. மலர்களைப் பார்த்தால் அவர் நினைவு; சந்தனத்தைக் கண்டால் கண்ணில் நீர் பெருகியது. தமக்கை மூலமாகத் தாயிடம் தெரிவிக்கப் பட்டபோது தான் தனக்கு வீடு ஒரு சிறைச் சாலை என்பதை உணர்ந்து மேலும் துடிதுடித்தாள். விப்ர நாராயணரோ அவளைத் தேடிக் கொண்டு கரம்பனூருக்கே வந்து விட்டார். "ஆள் அழகாயிருந்தாப்

போதுமா? அந்த ஒன்றரைச் சாண் நிலத்தை நம்பி பெண்ணை அனுப்ப முடியாது. தங்கம் கொண்டு வாரும்" என விரட்டி விட்டாள் தேவ தேவியின் தாயார்.

"ஸ்வாமி.... உங்களுக்கே இது நன்றாயிருக்கிறதா? அக்கடா என்று பூமாலையும், பாமாலையும் புனைந்து தொண்டு செய்து கொண்டிருந்த பக்தனை இப்படிப் பெண் மோகம் கொண்டு அலையச் செய்து விட்டீர்களே! இது அடுக்குமா?" திருமகள் கோபத்துடன் கேட்க, "தங்கம் பூமியிலேயே புதையுண்டு கிடந்தால் அதன் பெருமை யாருக்குத் தெரியும்? அகழ்ந்து எடுத்து, நெருப்பிலிட்டு ஆபரணமாவதற்குள் எத்தனை சோதனைக்குள்ளாகிறது. ஒரே அடியில் பிளந்து விடும் கருங்கல் படியாகிறது. தூளாகும் கல் ஜல்லியாகிறது. சிற்பியின் அடிகளுக்கெல்லாம் தாக்கு பிடிக்கும் கல் கோவிலில் இருக்கும். அந்தஸ்தைப் பெறுகிறது. கடல்மேல் வலை வீசுபவனுக்கு மீன் கிடைக்கிறது. கடலுக்கடியில் அகழ்ந்து செல்பவன் முத்தை அடைகிறான். விப்ர நாராயணனின் புகழ் உலகத்தில் பரவவே இந்த சோதனை" என தேவிக்குப் பதில் சொன்ன பரந்தாமனை மறு விநாடி காணவில்லை. ஸ்ரீ தேவி புன்னகைத்தாள்.

"நீ யார்? உனக்கென்ன வேணும்?" தேவதேவியின் தாயார் விசாரித்தாள். "என் பெயர் அழகிய மணவாளன். நான் விப்ரநாராயணரின் தொண்டன். இதை என் குருநாதர் தங்களிடம் கொடுத்து விட்டு வரச் சொன்னார்" என்று அழகிய பொன் வட்டிலைக் கொடுத்தான் வந்தவன்.

பொன் வட்டிலைத் திருப்பித் திருப்பிப் பார்த்தவள், "சரி, போய் உன் குருநாதரை வரச் சொல்' என்று சொல்லி அனுப்பினாள். விப்ர நாராயணரிடம் வந்த அழகிய மணவாளன், "ஸ்வாமி, தேவ தேவியின் வீட்டுக் கதவு உங்களுக்காகத் திறந்திருக்கிறது. போய் தேவதேவியைப் பாருங்கள்" என்று கூறினார்.

விரக தாபத்தில் மூழ்கிக் கிடந்த விப்ர நாராயணர் தேவதேவியின் இல்லத்திற்கு விரைந்து சென்றார். தேவதேவி விப்ர நாராயணரை முழுமனதுடன் வரவேற்றள். பிரிவாற்றாமையைச் சொல்லிச் சொல்லி இருவரும் பலவிதமாய் வருந்தினர். பின்னர் கூடிக் களித்தனர். இரவு நெடுநேரம் விழித்திருந்ததால் விடிந்தும் கூட உறங்கினர்.

ஆலயத்தில் பொன் வட்டிலைக் காணவில்லை. அர்ச்சகர்கள் பதறிக் கொண்டு அதிகாரிகளிடம் தெரிவிக்க, அதிகாரிகள் அரசரிடம் முறை யிட்டனர். அரசர், காப்பாளர், அர்ச்சகர்கள் பரி, சாரகன் முதலியவர்களைப் பிடித்து மிரட்டி விசாரித்தான். "அரங்கன் ஆலயத்து பொன் வட்டில் திருட்டுப் போயிருக்கிறது. உளவு சொல்பவருக்கோ, கண்டு பிடித்துக் கொடுப்பவருக்கோ தக்க சன்மானம் அளிக்கப்படும்" என நாடெங்கும் பறை சாற்றப்பட்டது.

வீடு பெருக்கும் போது பொன் வட்டிலைப் பார்த்த தேவதேவியின் வீட்டு வேலைக்காரி பரிசுப் பணத்துக்கு ஆசைப்பட்டு மன்னரிடம் போய் துப்பு சொல்ல, காவலர்கள் தேவதேவியின் இல்லத்திற்கு வந்து தேவதேவியின் தாயாரை மிரட்டி, பொன் வட்டிலைக் கைப்பற்றி விப்ர நாராயணரைக் கைது செய்து மன்னர் முன் நிறுத்தினர்.

"பொன் வட்டில் உன் வீட்டிற்கு எப்படி வந்தது?" தேவதேவியின் தாயாரிடம் கேட்டார் மன்னர். "இதோ நிற்கிறாரே விப்ர நாராயணர். இவருடைய சிஷ்யன் தான் இவர் கொடுக்கச் சொன்னதாக கொண்டு வந்து தந்தான்; பொன் வட்டிலைக் கொடுத்துவிட்டேன். இவர் சகவாசமே வேண்டாம். எங்களை விட்டுடுங்க" தேவதேவியின் தாயார் அழுதாள்.

"அப்போதே சொன்னேன்.... உன்னுடைய சபதம் எல்லாரையும் கொண்டு வந்து மன்னர் முன் நிற்க வைத்திருக்கிறது" மெல்லிய குரலில் கடிந்து கொண்டாள் தமக்கை. தனது சாகசங்களெல்லாம் பகவான் லீலையின் முன் அடிபட்டுப் போனதையும், விப்ர நாராயணரைக் குற்றவாளியாய் நிற்க வைத்திருப்பதையும் எண்ணி விம்மி விம்மி அழுதாள் தேவதேவி. "எத்தனை பெரிய மகான்.... அவரைத் திருட வைத்து விட்டாயே பாவி" என தமக்கை கடிந்து கொண்டாள்.

"அழகிய மணவாளன் எங்கே இருக்கிறான்?" மன்னர் விப்ர நாராயணரை விசாரிக்க, "அழகிய மணவாளன் என்ற பெயரிலே எனக்கு நண்பனோ, சீடனோ கிடையாது. இப்போது தான் இப்பெயரைக் கேள்விப் படுகிறேன். அரங்கனின் பொருளைத் திருடுமளவுக்கு நான் மோசமானவன் அல்ல. நான் செய்த தவறெல்லாம் அரங்கனுக்கு இடம் கொடுத்த நெஞ்சில் ஒரு ஆடலரசிக்கு இடம் கொடுத்தது தான். அதற்குரிய தண்டனையை நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கூறினார்.

கோயில் முத்திரை பதித்த பொன்வட்டில் என்று தெரிந்தும் வாங்கி வைத்துக் கொண்ட தேவதேவியின் தாயாருக்கு அபராதம் விதிக்கப் பட்டது. பொன் வட்டிலை கோவிலுக்கு அனுப்பிவிட்டனர். விப்ர நாராயணர் சிறையில் அடைக்கப்பட்டார். அன்றிரவு மன்னர் கனவில் முகுந்தன் தோன்றி, "மன்னா, விப்ர நாராயணர் குற்றமற்றவர். ஒரு நாள் சிறை வாசமும், தாசி சகவாசமும் முன் வினைப்பயன். பொன் வட்டிலை இடம் மாற்றிய அழகிய மணவாளன் நானே" என்றார்.

விப்ர நாராயணர் கனவில் "பெண் மோகத்தில் என்னையே மறந்து விட்டாயே.... நான் உனது நண்பனல்ல என்று நிறைந்த சபையில் கூறி விட்டாயே" என்று கூறி குறும்பாகச் சிரித்தார்.

விப்ர நாராயணர் மெய்மறந்து முகுந்தனுக்குப்புகழாபரணம் சூட்டினார். அதே சமயம் மன்னர் வந்து அவரை விடுதலை செய்து சகல மரியாதைகளுடன் அனுப்பி வைத்தான்.

அதுமுதல் விப்ர நாராயணர் விஷ்ணு பக்தர்களின் பாதம் அலம்பி அருந்தி தன்னை பரிசுத்தராக்கிக் கொண்டார். அதனால் 'தொண்டரடிப் பொடி' என்ற பட்டமும் பெற்றார்.

தேவதேவி தாயுடன் போராடி இவரை வந்தடைந்தாள். இவரோ இல்லறத்தின் பற்றை விடுத்து இறைத் தொண்டே பேரின்பம் எனக் கூறி விட்டார். அதனால் அவளும் தனது சொத்துக்களை எல்லாம் ஸ்ரீ ரங்கம் ஆலயத்துக்கே எழுதி வைத்துவிட்டு பகவத் கைங்கரியத்திலேயே தனது வாழ்நாளைக் கழித்து பரமபதம் அடைந்தாள்.

தொண்டரடிப் பொடியாழ்வார் 45 பாசுரங்கள் கொண்ட 'திருமாலை' யைப் பாடினார். ஆழ்வார்களில் திருமாலுக்கு திருப்பள்ளியெழுச்சி பாடியவர் இவரே. திருப்பள்ளியெழுச்சி 10 பாசுரங்கள் கொண்டது. இவரால் பாடப் பெற்ற ஸ்தலங்கள் ஸ்ரீரங்கம், அயோத்தி, திருப்பாற்கடல்.

கடைசி வரை மாலை கைங்கர்யம் செய்த இவரது வரலாற்றினைப் படிப்பவரும் கேட்பவரும் பாபம் விலகி இம்மையில் எல்லா நலன்களையும், அரங்கனின் அருளையும், மறுமையில் மோட்சத்தையும் பெறுவார் என்பது திண்ணம்.

109. ஸ்ரீ திருப்பாணாழ்வார்

துன்மதி வருஷம், கார்த்திகை மாதம், தேய்பிறை துவிதியை; புதன் கிழமை; ரோஹிணி நட்சத்திரம்; திருச்சிக்கு அருகிலுள்ள உறையூரில் செந்நெல் வயல்களுக்கிடையே திருமாலின் ஸ்ரீ வத்ஸத்தின் அம்சமாக அந்த ஆண்குழந்தை பிறந்தது.

வயலுக்கு நீர் பாய்ச்ச சென்று கொண்டிருந்த அந்த உழவனின் கண்களில் அக்குழந்தை பட்டது. எடுத்துச் சென்று மனைவியிடம் கொடுத்தான். 'பாணன்' என்று பெயர் சூட்டி அன்புடன் வளர்த்தனர்.

குழந்தை சின்னஞ்சிறு வயதிலேயே யாழ் இசைத்து அழகாகப் பாடியது. கேட்டவர் மயங்கும் வண்ணம் பாடியது. குழந்தை வளர்ந்து வாலிபனானான். ஆனால் பொறுப்பு வரவில்லை. ஸ்ரீ ரங்கநாதன் மேல் அபாரப் பித்து. தம்பூராவில் சுருதி சேர்த்துக் கொண்டு பாடத் தொடங்கி விட்டால் இரவு, பகல், பனி, மழை, வெய்யில் என்று எதையும் உணர மாட்டான் பாணன்.

அக்காலத்தில் காவிரியில் நீராடவோ, ஆலயத்துள் சென்று அரங்கனை தரிசிக்கவோ பஞ்சமர்களுக்கு உரிமை இல்லை. அரங்கனின் உருவத்தைப் பிறர் சொல்லக் கேட்டு மனதில் தீட்டிக் கொள்வான். "மைவண்ணா...." எனப் பாடும்போது கண்ணாடியில் பார்ப்பது போல் அது மட்டும் பெரியதாகத் தெரியும். உடல் வண்ணத்தை நினைவூட்டும்.

அரளிப் பூவினைக் கண்டால் அரங்கனின் உதடுகள் போலிருக் கின்றன என்றெண்ணிக் கொள்வான். 'கச்சப்பரம்' என்று அம்பாளுக்கு பிச்சோடா சரம் குண்டு மல்லிகையில் கட்டி கோவில் வாசலில் விற்பனை செய்வார்கள். அவைகள் அரங்கனின் புன்னகைக்கும் பல்வரிசையை நினைப்பூட்டும். திருவிழாக் காலங்களில் குடை ராட்டினம் சுற்றினால் அம்பரீஷனைக் காத்த சக்கரம் இப்படித்தானே சுற்றியிருக்கும் என்று நினைத்துக் கொள்வான். அவ்வளவு ஏன்? மரண அறிவிப்பிற்காக சங்கு ஊதினால், அந்தச் சங்கையே வெறி பிடித்தவன் போல் பார்த்து நிற்பான். இந்த மாதிரி சமயங்களில் அவனை யார் கூப்பிட்டாலும் கேட்காது. சுற்றி என்ன நடக்கிறதென்றும் தெரியாது.

தகப்பனாருக்கு ரொம்ப வருத்தம். தோளுக்கு மேல் வளர்ந்த பிள்ளை மேழி பிடிக்க வரவில்லையே என்று. பாணனது இனத்தவர்கள் அவனை உதாரணம் காட்டி இகழ்ச்சி பேசினார்கள்.

"இதோ பார்.... பாணனோட அப்பா தண்ணி தெளிச்சு விட்டாப்போல நானும் விட்டுருவேன்னு எதிர் பார்க்காதே! மரியாதையா கஞ்சி குடிச்சிட்டு வயலுக்கு வந்துடணும்..... நடவு சமயத்திலே நாலு காசு பார்த்தாதான் உண்டு. பணம் இருக்கறவன் பொழுது போகாம ஆண்டவனைப் பாடறான். நாம அவுங்களோட போட்டி போட முடியுமா? ஏதோ 'நாராயணா' ன்னு கலப்பையைப் புடிச்சோமுன்னா நாராயணன் கஞ்சி ஊத்துவான். அதை விட்டுட்டு காவேரிக் கரையிலே உட்கார்ந்து கத்திக் கிட்டிருக்கான்" என்றெல்லாம் ஜாடை பேசினார்கள். எதிரே இருந்தாலும் பாணனின் செவிக்குள் அச்சொற்கள் நுழைவதில்லை. ஊரும், உறவும் புத்தி சொல்லி அலுத்துப் போனார்கள்.

அதிகாலை எழுந்து, பல்விளக்கி, நீராடி, அன்றாடம் துவைத்த ஆடைகளை உடுத்தி, உடலில் பன்னிரண்டு நாமங்கள் தரித்து, துளசி மாலை அணிந்து, பாடுவதற்குத் தம்பூராவுடன் காவேரிக் கரைக்குச் சென்று விடுவான். மெய் மறந்த நிலையில் கண்ணீர் பெருக்கெடுத்து வழியும்.

அரங்கன் கோவிலில் பிரதான பட்டர் லோக சாரங்கர். காவேரிப் படிக்கட்டில் குடத்தை வைத்து விட்டு, குளித்து, திருமண் அணிந்து ஈர வேஷ்டியுடன் கழுத்தில் ஸ்படிக மாலை, துளசி மாலை, தாமரை மணி மாலையுடன் சந்தியாவந்தனம் செய்த பிறகு குடத்தில் திருமஞ்சன நீர் எடுத்துச் செல்வார்.

அரங்கனின் திருமஞ்சனம் முடியும் வரை ஒரு வார்த்தை கூட பேசமாட்டார். அவசியம் ஏற்பட்டால் சைகையில்தான் பேச்சு. வாய் காயத்ரியை உச்சரித்துக் கொண்டிருக்கும். அன்றும் அப்படித்தான்.

பாணனோ மெய்மறந்து பாடிக் கொண்டிருக்கிறான். விழித்தபடி நின்று பாடிக் கொண்டிருந்தவனை 'விலகு' என்று ஜாடை காட்டினார். உள்ளே அரங்கனைக் கண்டு ஆனந்த லாகிரியில் ஆழ்ந்திருந்தவனுக்கு பட்டரே கண்ணுக்குத் தெரியவில்லை! அப்புறமல்லவா அவர் சைகை புரிவதற்கு!

ஒரு சிறு கல்லை வீசினார். குறி தப்பியது. பட்டருக்குக் கோபம் வந்தது. தண்ணீர் குடம் தோளை அழுத்தியது. ஒரு பெரிய கல்லாக எடுத்து குறி தவறாமல் வீசினார்.

குபுகுபுவென ரத்தம் பெருகி வழிந்தது. வலி பாணனை சுய நினை வுக்குக் கொண்டு வந்தது. தவறை உணர்ந்து வழியை விட்டு ஒதுங்கினான். "வரவர இந்தப் பாணனுக்கு திமிர் ஜாஸ்தியாயிடுத்து. போனாப் போறான்னு விட்டா அவமரியாதையா வழியை அடைச்சிண்டு பாடி ஆடறான். இருக்கட்டும். சீக்கிரமே இதுக்கொரு முடிவு கட்டிட வேண்டியதுதான்" என்று மனத்துள உறுமியபடி பூட்டைத் திறந்தார். கருவறைக்குள் நுழைந்தார். தீபத்தைத் தூண்டி விட்டார். 'ரங்க நாதா' என்றபடி பகவான் திருமுகத்தைப் பார்த்தவர் திகைத்து விட்டார்.

" இதென்ன நெற்றியில் சிவப்பாய்... ஆ, சொட்டுகிறதே! இரத்தமா? சிலா ரூபத்துக்கு இரத்தம் வருமா, பயம், பீதி, திருமண்ணில் தண்ணீர் விழுந்திருக்குமோ? குங்குமத்தில் குடத்து நீர் சிந்தியிருக்குமோ?" பரிவட்டத்தால் துடைத்தார். நிற்காமல் பெருகியது.

"இதென்ன அபவாதம்? யார் செய்த குற்றம்? எந்த பக்தனின் மனக்காயம் ஸ்வாமி!" என்றழுதபடி திருமஞ்சனம் செய்ய மடையில் இரத்த ஆறு பெருகி ஓடியது. சக பட்டர்கள், அதிகாரிகள், பக்தர்கள் என்று கூட்டம் கூடி விட்டது. எவரெவரோ என்னென்னமோ செய்து பார்த்தனர். இரத்தக் கசிவு நிற்கவில்லை. மேற்கொண்டு தூப, தீப, நைவேத்யம் எதுவும் நடக்கவில்லை!

எல்லோரும் லோக சாரங்கரையே குற்றவாளியைப் போல பார்த்தனர். "குடத்தால் ஸ்வாமி தலையில் இடித்திருப்பேன் என்ற நினைக் கிறீர்களா? யார் செய்த தவறோ எம்பெருமான் தலையில் இரத்தம் வழிகிறது! ரங்க நாதா, நானே தவறு செய்திருந்தாலும் அதைக் காட்டிக் கொடுக்கலாகாதா? இதென்ன சோதனை! மனிதர்களைப் போல இரத்தம் வரும் என்றால் உம்மால பேசவும் முடியும்! அசரீரி ஒலிக்காதா? பார்த்துப் பார்த்து அலங்காரம் செய்யும் என் பக்தி பழுதுபட்டதா? என் ஆசாரத்தில் குறையா, மனதில் அகந்தை கொண்டேனா?" என்றெல்லாம் அழுது புலம்பியபடி வீடு வந்து சேர்ந்தார்.

சாரங்கர் தெருவில் நடந்தால் பயபக்தியோடு வணங்கி வழிவிடுபவர் களெல்லாம் ஒரு புழுவைப் பார்ப்பது போல் அலட்சியமாகப் பார்த்தார்கள். அன்று முழுவதும் அவர் சாப்பிடவில்லை. மனதிலும் நிம்மதி இல்லை களைத்து உறங்கிவிட்டார். 'சாரங்கா....' என்ன இனிமையான குரல்! சயனங்கொண்ட பகவானின் நின்ற திருக்கோலம். 'ஸ்வாமி.....' நெடுஞ் சாண் கிடையாக விழுந்தார் சாரங்கர். தினமும் தொட்டுத் தொட்டு அலங்கரிக்கும் சாரங்கரைத் தொட்டுத் தூக்கி நிறுத்தினான் ரங்கநாதன்.

"பாணனைக் கல் கொண்டு தாக்கினாயே! வழிந்த இரத்தத்தைப் பார்த்து பரிதாபப் படக்கூட உன்னால் முடியவில்லை! நான் பண்டரியில் காத்திருந்தவன்; இங்கும் காத்திருப்பேன். போன வருடம் உன் தந்தை இறந்த சமயம் நீ தீட்டு காத்து வீட்டில் இருந்தாய். எனக்கு கால தாமதமாகத்தான் திருமஞ்சனம் நடக்கும். நான் காத்திருக்கவில்லையா? பாணன் என் பக்தன். அடுத்த பிறவியில் நீ பஞ்சமனாகவும், அவன் அந்தணனாகவும் பிறக்கலாம். அப்போது யார் உயர்ந்தவர்? எவர் ஒதுங்கி நடக்கவேண்டும்? அஞ்ஞானத்தை ஒழிக்க வேண்டும் என்று தான் நான் இடையர் குடியில் பிறந்தேன். கடலில் மீனோடு சேர்ந்து தான் உப்பும் முத்தும் விளைகின்றன. அவர்கள் உழவு செய்த மண்ணிலிருந்துதான் அரிசி கிடைக்கிறது. நைவேத்யத்துக்கு அந்த மடி பரவாயில்லையா? நீயாவது உனக்களக்கும் அரிசிக்கும், சம்பளத்துக்குமாக எனக்கு தொண்டு செய்கிறாய்! பாணன் ஊரார் பேச்சுக்கும், உற்றார் ஏச்சுக்கும் நடுவில் என்னைப் பாடுகிறான்! யார் உயர்ந்தவர் என்று இப்போது நினைத்துப் பார்".

கண்ணன் பேசப் பேச மெய்மறந்து நின்றிருந்த சாரங்கர் "ரங்கா, 'ஊரோடு ஒத்து வாழ்' என்றிருந்து விட்டேன். என் அறிவுக் கண்கள் திறந்தன. என் குற்றத்திற்கு பரிகாரம் சொல். என் தவறை மன்னித்துக் கொள்" என்று வேண்டினார். "எதைச் சொன்னாலும் செய்வாயா? அவமானம் என்று நினைப்பாயா?" ரங்கநாதர் குறும்புப் புன்னகையுடன் கேட்க, "அவமானமாவது! கல்லெறிந்த போது இருந்த மூர்க்கத்தின் பரிசை இன்று அனுபவித்து விட்டேன். சொல்லுங்கள், ஸ்வாமி" என்று கெஞ்சினார் சாரங்கர்.

"நாளை உதயத்தில் பாணனின் வீடு சென்று பாணனை உமது தோள் மீது சுமந்து என் சந்நிதிக்கு வநதால் பெருகும் உதிரம் நின்றுவிடும்.

செய்வாயா? பாணன் ஆலயத்துள் வரலாமா?”என பரந்தாமன் கேட்க, கனவு கலைந்து எழுந்து உட்கார்ந்தார் சாரங்கன். ‘என்ன குற்றம் செய்தேன்’ என்ற கேள்விக்கு விடையும், உதிரம் நிற்க வழியும் கிடைத்து விட்டது. கனவு என்ற ஒதுக்கிவிடலாமா என்ற கிஞ்சித்தும் அவர் மனம் நினைக்கவில்லை. ‘பழியை சுமந்து கொண்டு பூமியில் இருப்பதை விட பாணனை சுமப்பது நல்லது’ என்று நினைத்தார்.

பாணனை ஆலயத்துள் விட்டால் நம்மை வேலையிலிருந்து நிராகரிப் பார்கள். ஆனால் பெருமாள் தலை உதிரம் நிற்காவிட்டாலும் அதே கதிதான்! பெருமாள் சொன்னபடி செய்தால்அவன் அருளாவது கிடைக்கும் என்ற தீர்மானத்துக்கு வந்தவர், எப்போது பொழுது விடியும் என்று காத்திருந்தார்.

பாணனின் குடிசை. பெற்றோர் பச்சிலை வைத்துக் கட்டியும் உதிரப் பெருக்கு நிற்கவில்லை. “கூப்பிட்டு போட்டாதான் சாப்பிடுவான். காலையிலே போகும் போது திட்டினியே! இப்பப்பாரு அடிபட்டு வந்து நிக்குது.... நீ ஏண்டா! அவரு வழியில நிக்கறே?” என்று புலம்பினாள் அன்னை.

பாணனோ மெய்மறந்து பாடிக் கொண்டிருந்தான். இசையின் இனிமையில் பெற்றோர் உறங்க, பாணன் நீராடி, திருமண் இட்டுக் கொண்டு தம்பூராவோடு கிளம்பினான். விழித்துக் கொண்டு விட்ட பெற்றோர் தடுத்தனர்.

அந்த சமயம் நீராடி, உடலெல்லாம் புண்டரீகத்துடன் லோக சாரங்கர் அங்கு வந்தார். தனது கனவைக் கூறி பாணன் காலில் விழுந்து வணங்கினார்.‘அபசாரம் அபசாரம்’ என்று ஒதுங்கிக் கொண்டான் பாணன்.

அதற்குள் சேரியிலுள்ளவர்கள் “என்ன அதிசயம்! சாமியைத் தொட்டு பூசை பண்ற நீங்க எங்க குடிசைக்கு வரலாமுங்களா?” என்றபடி பாணர் குடிசைக்கு வெளியே கூடிவிட்டனர். “நான் உங்கள் தோள்மேல் எழுந்தருளுவதா? என்ன மனப்பிரமை... அரங்கனைக் கண்ணாரக் காண வேண்டும் என்று ஆசைப்பட்டது உண்மை. ஆனால் பாவப்பட்டு அல்ல....” என பாணன் பயந்து ஒதுங்க, லோக சாரங்கர் கெஞ்சினார்.

"பாணா... நீ மறுத்தால் என் பழியே என்னைக் கொன்று விடும். உன் பக்திக்கு எனது தொண்டு. நான் செய்த பாவத்துக்கு பரிகாரம். நீ சம்மதிக்காவிடில் உன் குடிசையிலேயே உண்ணா நோன்பிருந்து உயிர் துறப்பேன்" என்று உட்கார்ந்து விட்டார் லோக சாரங்கர்.

வேறுவழியின்றி கூச்சத்துடன் அவர் தோள் மீது உட்கார்ந்து கொண்டான் பாணன். திருப்பாணனின் கண்களில் நீர் பெருக்கெடுத் தோடுகிறது. அரங்கனின் அருளை எண்ணி உருகிப் பாடுகிறான். சூழ்நிலை மறக்கப் பாடுகிறான்.

இருபுறமும் மக்கள் கூட்டம். 'லோக சாரங்கரின் புத்தி குழம்பி விட்டதோ' என்று சிலர் பேச, 'ஆலயத்துள் பஞ்சமன் நுழைவதாவது' என சிலர் கோபிக்க, சாரங்கருக்கும், பாணனுக்கும் எதுவுமே மூளையில் பதியவில்லை. அவர்கள் பின்னோடு கோவிலுக்குள் நுழைந்த மக்களை தடுக்கும் சக்தியும் எவருக்குமில்லை. ஆலயத்து வாத்தியக்காரர் வாசித்த பூபாள இசை காற்றில் மிதந்து வந்தது. சன்னதி முன் பாணனை இறக்கி ஸ்வாமியை சேவித்தார் லோக சாரங்கர்.

என்ன புதுமை! அரங்கனின் இரத்த காயம் நின்றிருந்தது. பாணனோ முதன் முறையாய் அரங்கனைத் தரிசனம் செய்வதால் மெய்மறந்து பாடிக் கொண்டிருந்தான். பெருமான் பாதங்களில் சிரசும் படும்படியாக நமஸ்கரித்து பாதத்திலிருந்து ஒவ்வொரு அங்கமாய் வர்ணித்துப் பாடிக் கொண்டிருந்தான்.

"அரங்கநாதா! உன் மனப்புண் ஆறியதா? கனவில் வந்து பரிகாரம் சொன்ன காகுஸ்தா! ஸ்ரீனிவாசனாய் வந்து அடிப்பட்டது போல் பாணனுக்காக வலி சுமந்தாயோ? யசோதையிடம் மத்தினால் மொத் துண்டது போல் நான் அடித்த அடி உன் மேல் பட்டதே" என்று சாரங்கர் ஒரு பக்கம் புலம்பிக் கொண்டிருந்தார். "பாணனாலே நம்ம சேரிக்கே பெருமை.... இது தெரியாம அவனை எத்தனை ஏசியிருப்போம்.... அவனை வளர்த்த மகராசி கால்லே விழுந்தலாவது நாமம் பாவத்தை ரங்கன் போக்க மாட்டானா" என்றபடி சேரி ஜனங்கள் பாணனை வளர்த்தோரையும் வணங்கினர். உயர் குடியில் பிறந்த அனைவரும் பாணன் காலடியில் விழுந்து நமஸ்கரிக்க. சிலர் சாரங்கரிடம் கனவைப் பற்றி விசாரித்து மற்றவர்க்குச் சொன்னார்கள்.

"கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணை
உண்ட வாயன் என் உள்ளம் கவந்தானை
அன்பர் கோன் அணியரங்கன் என் அமுதனைக்
கண்ட கண்கள் மற்றொன்றைக் காணாவே!"

என்ற பத்தாவது பாசுரத்தைச் சொன்னதும் கண்டாமணிகள் ஒலித்தன. கண்ணைக் கூச வைக்கும் வெளிச்சம். வெளிச்சம் குறைந்த பின் பார்த்தால் திருப்பாணனைக் காணவில்லை.

"பாணர் வாழ்க! பரம்பொருளோடு ஐக்கியமாகி விட்ட திருப் பாணாழ்வார் வாழ்க! கருடனைப் போல் சாரங்கமுனியை வாகனமாகக் கொண்டு ரங்க நாதன் சன்னதி வந்து ஜோதியில் கலந்த முனி வாகனர் நாமம் வாழ்க!" என்று ஜனங்கள் குரல் எழுப்பினார்கள். ஜாதி, செல்வன், பாமரன் என்ற பேதம் பரந்தாமனுக்கு இல்லை. பக்தியே அவனை அடையும் வழி என்பதை பாரதத்தில் நிருபணமாக்கியவர் திருப் பாணாழ்வார். அவரின் சரித்திரத்தை படிப்பவரும், கேட்பவரம் பாரில் மேன்மையான வாழ்வைப் பெற்று, இறுதியின் மோட்சத்தையும் அடைவர் என்பது திண்ணம்.

110. திருமங்கை ஆழ்வார்

கலியுகத்தில் சோழ மண்டலத்தில், திருமங்கை என்னும் நாட்டில், சீர்காழி அருகில் திருவாலி–திருநகரிக்கு மிக அருகிலுள்ள திருக்குறை யலூரில், கள்ளர் குலத்தில், நளவருஷம் பௌர்ணமி திதி, கார்த்திகை மாதம், கார்த்திகை நட்சத்திரத்தில், வியாழக்கிழமையில், சார்ங்கம் என்னும் விஷ்ணுவின் வில்லின் அம்சமாக அவதரித்தவர் இவர்.

இவருக்குப் பெற்றோர் இட்டப் பெயர் நீலன். குடிக்கேற்ற வீரமும் அஞ்சாண்மையும் இவரிடம் நிரம்பி இருந்தது. வில்வித்தை, வாட்பயிற்சி மற்போர் முதலிய போர் பயிற்சிகளெல்லாம் திறம்படக் கற்றார். சோழ மன்னனிடம் படைத்தலைவனாகப் பணியேற்று பல பெரும் வெற்றிகளைத் தேடித்தந்து கொற்றவனால் 'பரகாலன்' (எதிரிகளுக்கு எமன்) என்ற வீர

விருதையும் பெற்றான். அதோடு மன்னன் 'ஆலி'நாட்டுக்குக் கப்பம் கட்டும் சிற்றரசனாக்கி கௌரவித்தான். ஆலி நாட்டின் தலைநகர் 'திருமங்கை'. அதனால் திருமங்கை மன்னன் என்று நீலன் அழைக்கப்பட்டான். பட்டத்துக் குதிரைக்கு 'ஆடல்மா'என்று பெயர்.

சுமங்கலை ஒரு தேவமங்கை. பேரழகி; பிரம்மா நிதானமாக பார்த்துப் பார்த்துச் செதுக்கிய பொற்சிற்பம். தேவ மங்கையர் பூலோகத்தில் வந்து நீர் விளையாடுதல் வழக்கம். அதன்படி திருவெள்ளக்குளம் (அண்ணன் கோவில்) தாமரைப் பொய்கையில் தோழிகளோடு நீராடிக் கொண் டிருந்தாள் சுமங்கலை. உரிய நேரத்தில் தோழிகள் அழைத்தும் நீரை விட்டு எழ மனமில்லாமல் நீரிலுள்ள அல்லி மலர்களோடு சுமங்கலை விளை யாடிக் கொண்டிருக்க, தோழிகள் சென்று விட்டனர். இருட்ட ஆரம்பித்த பின் தான் சுமங்கலை நீரை விட்டு வெளியே வந்தாள். அவளால் தேவ லோகம் செல்லமுடியவில்லை. மங்கைப் பருவம் ஆபத்து என்று யோசித்து சிறுமியாய் மாறினாள். அப்போது அங்கே வந்த ஒரு வைணவத் தம்பதியினர்,

"நீ யாரம்மா? இங்கே தனியே என்ன செயகிறாய்? " என்று அன்புடன் விசாரித்தனர். உருமாறியதை மட்டும் கூறாமல் மற்றவற்றை அப்படியே கூறினாள் சுமங்கலை. பூலோக அழகுகள் அவளை வசீகரித்ததினால் அங்கேயே தங்கிவிட நிச்சயித்தாள். அதனால் "எங்களுக்குக் குழந்தை இல்லை. எங்களோடு வருகிறாயா?" என்று அவர்கள் கேட்டபோது அவர்களோடு செல்ல இசைந்தாள். கை கொள்ளாமல் குமுத மலர்களை வைத்திருந்ததால் 'குமுதவல்லி' என்றே அவர்கள் அழைத்தனர்.

பூலோக அழகுகளை ஆசைதீர அனுபவித்த குமுதவல்லி மங்கைப் பருவமடைந்தாள். அவள் அழகைக் கேள்விப்பட்ட திருமங்கை மன்னன் நீலன், அவளைப் பெண் கேட்டான்.

குமுதவல்லி திருமாலிடம் அளவற்ற ஆழ்ந்த பக்தி கொண்டவள். "திருவிலச்சினையும், திருநாமமும் உள்ளவரை அன்றி மற்றவரை மணக்கமாட்டேன்" எனத் தீர்மானமாகக் கூறிவிட்டாள் குமுதவல்லி.

திருமங்கை மன்னன் திரு நறையூர் (நாச்சியார் கோயில்) சென்று, எம்பெருமானை வேண்டி பன்னிரண்டு திருநாமங்கள் அணிந்து திரும்பி வந்தான்.

மீண்டும் குமுதவல்லி "வேஷங்கள் பக்தியாகாது! தினமும் 1008 ஸ்ரீ வைஷ்ணவர்களின் பாதம் அலம்பி அத்தீர்த்தத்தை சாப்பிட்டு, அவர் களுக்கு அன்புடன் அன்னமிட்டு, பிரசாதத் தளிகையைச் சாப்பிடும் பக்தி யும், பொறுமையும், உறுதியும் உம்மிடம் இருக்குமானால் உமக்கு மாலை சூட்டுவேன்"என்ற சொல்லி விட்டாள்.

"அதற்கிடையில் நீ எவரையும் மணக்கக் கூடாது" என்று நீலன் கேட்க, குமுதவல்லியை வளர்த்தவர், 'திருமணம் நடக்கட்டும். நீலன் சொன்ன வாக்கைக் காப்பாற்றுவார்' என்று சொல்ல, நீலனிடம் சத்தியவாக்குப் பெற்றுக் கொண்டு திருமணத்துக்கு இசைந்தாள் குமுதவல்லி. திருமணத்தை சிறப்பாக நடத்தினர் பெற்றோர். நீலன் குமுதவல்லிக்குக் கொடுத்த வாக்குப்படி தினமும் ஆயிரத்தெட்டு வைஷ்ணவ அடியார்களின் பாதமலம்பி, அன்னமிட்ட பிறகே ஸ்ரீபாத தீர்த்தமும், தளிகையும் உண்டான். தம்பதிகள் மனமொத்து வாழ்ந்தனர். தினமும் ஏராளமான பணம் செலவழிந்ததால் சோழ அரசருக்குக் கப்பம் கட்ட முடியவில்லை. கப்பப்பணம் வசூலிக்க மன்னன் ஆட்களை அனுப்பினான். நாளை, நாளை மறுநாள் என்று சாக்குச் சொல்லிக் கொண்டே இருந்தான் நீலன். நீலனைக் கைது பண்ண காவலர்களை அனுப்பினான் சோழன். அவர்களை விரட்டியடித்தான் நீலன். தளபதியைப் படையுடன் சோழன் அனுப்ப, போரிட்டு வெற்றிக் கொண்டான் நீலன். அடுத்து சதுரங்க சேனையுடன் சோழனே போருக்கு வந்தான். அஞ்சாநெஞ்சம் கொண்ட நீலனார் அவரையும் எதிர்க்கத் துணிந்தார். அரசர், "நீலா, பகைக்கஞ்சா உனது வீரம் பார் போற்றக் கூடியது. என்னோடு வா" என்றழைத்துக் கொண்டு தலைநகர் வந்தார். அமைச்சரிடம் நீலனை ஒப்படைத்து "எதிர்த்தால் நீலன் என்னையும் ஜெயித்து விடுவான். கப்பப் பணம் கட்டும் வரை நீலனைக் கோவிலிலேயே அடைத்து வையுங்கள். இவனைப் பார்த்து கப்பப் பணத்தை எல்லோரும் துஷ்பிரயோகம் செய்வார்கள். அடியார்களுக்கு அன்னமிட்டேன் என்கிறான். ஆண்டவன்தான் அடியார்களின் உள்ளத்தில் உறைபவனா யிற்றே! நீலனாரை வந்து காப்பாற்றுகிறானா பார்ப்போம்" என்றார்.

மன்னரிடம் ஏமாந்து விட்டோமே எனப் புழுங்கிய நீலன் மூன்று நாட்கள் ஆலயத்தில் அடைப்பட்டிருந்தான்.

"குலம் தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலம் தரம் செய்யும் நீள் விசும்பு அருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற தாயினும்
ஆயின செய்யும் நலம் தரும் சொல்லை
நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்.

'கண்ணா! இப்படி எல்லாம் தரும் உன் நாமம் என்று நம்பிக் கொண்டிருந்தேனே! சிறையிலே பிறந்த நீ என்னை உன் கோவிலில் சிறை வைக்கச் செய்து விட்டாயே! 108 திருப்பதிகளில் கோவில் கொண்டுள்ள மூர்த்திகளில் ஒருவருக்குக் கூட என் அவலநிலை புரியவில்லையா? மூன்று நாட்களாய் உண்ணா விரதம் இருக்கும் என் நிலை ஒருவர் மனதைக் கூட இளக்கவில்லையா? உன் அடியார்களுக்கு அமுதிட்டால் உன் மனம் குளிரும் என்றாளே குமுதவல்லி! அது பொய்யா? தேவகி, வசுதேவர், உக்கிரசேனர் இவர்களை சிறை மீட்டது போல் என்னையும் சிறை மீட்பாய் என்று தான் இன்னமும் நம்பிக் கொண்டிருக்கிறேன். அடியார்க்கமுதிடும் பணி தடைபடுகிறதே! அதற்காகவாவது என்னை விடுவிக்கக்கூடாதா" எனப் பாடி பிரலாபித்துக் கொண்டிருந்தார்.

அன்றிரவு நீலனார் கனவில் காஞ்சி வரதராஜர் தோன்றி, "காஞ்சிக்கு வந்து என்னைப் பாடு. வேண்டிய பொருள் தருகிறோம்" என்றார். மறுநாள் சேவகர்களிடம் மந்திரியை அழைத்து வரச் சொன்னார். மந்திரி வந்ததும்"காஞ்சிக்கு என்னை விடுதலை செய்து அழைத்துப் போங்கள். உங்கள் கப்பப் பணத்தை அங்கு தருகிறேன்" என்றார் நீலன்.

மந்திரி அதை மன்னரிடம் தெரிவிக்க, மன்னர் நீலனோடு மந்திரி யையும் அனுப்பி வைத்தார். காஞ்சிக்கு மந்திரியோடு வந்த நீலன் வரதர் சன்னதியில் பாமாலை தொடுத்தார். "வரதராஜரே! கொடுத்த வாக்கைக் காப்பாற்றும்" எனப் பிரார்த்தித்துக் கொண்டு, அங்கேயே படுத்துவிட்டார். அன்று இரவு கனவில் வரதர் தோன்றி, "வேகவதி நதிக்கரையில் நிதியுள்ள இடம் இது" என்று அடையாளம் காட்டினார். கனவு கலைந்து எழுந்த நீலனார், மந்திரியை எழுப்பி அழைத்துக் கொண்டு, பகவான் குறிப்பிட்ட இடத்தைத் தோண்ட பெரும் புதையல் கிடைத்தது. கப்பப் பணத்தை எண்ணிக் கொடுத்தார் நீலன்.

மீதி நிதியோடு திருவாலி–திருநகரி வந்து மனைவியிடம் நடந்தவற்றைக் கூறினார். குமுதவல்லி பரந்தாமன் கருணையை நினைத்துப் பெருமிதமுற்றாள்.

சோழமன்னரிடம் மந்திரி நடந்தவற்றைக் கூறி கப்பப் பணத்தையும் காட்டினார். "மன்னா! முராரி அருள் பெற்றவர் நீலன். அவரை ஏமாற்றி அழைத்து வந்ததற்கும், கோவிலில் மூன்று தினங்கள் சிறைவைத்ததற்கும் என்ன தண்டனை கிடைக்கப்போகிறதோ என அஞ்சுகிறேன்" என, அரசர் உடனே, நீலனை அழைத்து வர உத்தரவிட்டார்.

நீலன் வந்ததும் "பரகாலா.... என்னை மன்னித்துவிடு. இனி நீ கப்பம் செலுத்த வேண்டாம். திறைப் பணம் வசூலித்தால்தான் மக்களுக்குப் பல நன்மைகள் செய்யமுடியும். அதனால் சற்றுக் கடுமையாக நடந்து கொண்டு விட்டேன் " என்று கூறி, கட்டிய கப்பப் பணத்தையும் திருப்பிக் கொடுத்து கௌரவமாக அனுப்பி வைத்தார்.

'குந்தித் தின்றால் குன்றும் மாளும்' என்பது பழமொழி. தினமும் 1008 அடியவர்களுக்கு அறுசுவை உண்டி என்றால் சும்மாதானா? பணம் தண்ணீராய் செலவாகி விட்டது.

யாசகம் கேட்க நீலனாரின் தன்மானம் இடம் தரவில்லை. பணத்தை பூட்டி வைத்த கருமித்தனமான செல்வந்தர்களாகப் பார்த்து கொள்ளையடித்தார். அடியார்களின் அமுதுப் பணி எதனாலும் நிற்கக் கூடாதென்ற வெறியிலிருந்தார்.

"குமுதவல்லி மேல் கொண்ட காதல் அவள் வார்த்தைக்குக் கட்டுப்பட வைத்தது. இப்போது அவள் நிறுத்தச் சொன்னாலும் இவர் நிறுத்த மாட்டார் போலிருக்கிறதே! போதும், ஸ்வாமி... நீங்கள் வெண்ணையும், பாலும், தயிரும் திருடித் தின்றது போல் உங்கள் பக்தரையும் களவாடித் தொண்டு செய்ய வைத்திருக்கிறீர்! நீங்கள் உறையும் ஸ்தலங்கள் தோறும் தரிசிக்க குமுதவல்லி ஆர்வங்கொண்டிருகிறாள். பக்தரை ஆட்கொள்ளலாம்.... வாரும்" எனத் திருமகள் அழைக்க,

"நீ சர்வாபரண பூஷிதையாய் வந்தால் நான் வருகிறேன்" என, மகாலக்ஷ்மி அப்படியே அலங்கரித்துக் கொண்டு புறப்பட்டாள். நீலன் வழக்கமாகக் கொள்ளையடிக்கும் காட்டுப் பகுதி. (திருமணஞ்சேரி)

"நில்லுங்கள்" என வழிமறித்தான் நீலன்.. இறைவன் எதிர்பார்த்ததும் இதைத்தானே! பெரிய துண்டை விரித்தான் நீலன்.

"எல்லாவற்றையும் கழற்றி இதில் போடுங்கள். புதிதாய் மணமான வர்கள் போல் காணப்படுகிறீர்கள்! அம்மா, உங்கள் மூக்குத்தியையும், மாங்கல்யத்தையும் மட்டும் கழற்ற வேண்டாம். இவையெல்லாம் அடியார் களுக்கு அன்னமிடவும், இறைப் பணிக்குமே தான் செலவிடுவேன்" என்ற நீலன் எச்சரிக்கையாக சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டான். தன் சகாக்களை நான்கு பக்கமும் நிறுத்தி வைத்தான்.

"ஏனப்பா, திருடியாவது அடியவர் சேவை செய்ய வேண்டுமென்று எந்த வேதத்தில் சொல்லி இருக்கிறது?" என்ற கேட்டபடியே பரந்தாமன் காது குண்டலத்தைக் கழற்றினார்.

"வேகம்... வேகம்... யாராவது பின்னால் வருகிறார்களா? இந்த வயதில் சுறுசுறுப்பே இல்லையே? உங்கள் மனைவி அனேகமாக எல்லாவற்றையும் கழற்றி விட்டார்கள், பாருங்கள்... என்ன கேட்டீர்கள்? திருடியாவது.... ஹஹ்ஹா.... (சிரிக்கிறான்) என்ன செய்வது? பசியை வயிற்றில் கொடுத்துவிட்டானே பரந்தாமன்! உங்களை மாதிரிப் பணக்காரர்கள் எங்கே தான தருமம் செய்கிறீர்கள்? கேட்டால், 'அவன் பாவம், முன் செய்த வினை' என்று சுலபமாகச் சொல்லி விடுகிறீர்கள்! ஏழை என்ன செய்வான்? என் மனசிலே கருணையையும், பக்தியையும் வளர்த்த பரந்தாமன் பணத்தைத் தரவில்லையே? ஓ, காலிலே தங்க மிஞ்சியா? மாமனார் வீட்டிலே போட்டதோ? அதையும் கழற்று" என்று உறுமினான் நீலன். (அந்த நாட்களில் பெண்களைப் போல ஆண்களும் காலில் மிஞ்சி அணிவதுண்டு. அதைப் பார்க்கும் பெண்கள் இவன் திருமணமானவன் என்று மணமகனாக வரிக்காமல் ஒதுங்கி விடுவார்களாம்)

"கழற்ற முடியவில்லையே" என்றார் திருமால். குனிந்து பாதத்தை இடது கையால் கெட்டியாகப் பற்றிக் கொண்டு வலதுகையால் பிடித் திழுத்தான். பிறகு பற்களால் கடித்திழுத்தான். (பகவான் இதை காலைப் பிடித்து தெண்டனிட்டதாய் ஏற்று கொண்டார்.)

"மிஞ்சி அளவெடுக்கும் போது மெலிந்திருந்தேன். இப்பேற்பட்ட மகாலக்ஷ்மி நமக்கு மனைவி என்ற பூரிப்பில் சற்றுப் பெருத்து விட்டேன்" என்று குறும்புப் புன்னகையுடன் ஓரக் கண்ணால் லக்ஷ்மியைப் பார்த்தபடி

சொன்னார் நம்பி. மிஞ்சியைக் கழற்றுவதில் வெற்றிக் கண்ட நீலன் நகைகளை மூட்டைக் கட்டினான். "ஏனப்பா சுற்று முற்றும் பார்க்கிறாய்? யாராவது வந்து விடுவார்களோ என்ற அச்சமா?" என்றார் நாராயணன். "ஹும்.... யார் வந்து என்னை என்ன செய்ய முடியும்" அலட்சியமாகத் தோள் தட்டினான் நீலன்.

"ஓ, நீ அப்பேற்பட்ட கலியனோ? (பலவானோ) என்றார் பரந்தாமன். (திருமங்கையாருக்குப் பின்னாளில் கலியன் என்றபெயர் ஏற்பட்டதற்கு இதுவே காரணம். பகவான் சூட்டிய நாமமாயிற்றே!). நீலனால் மூட்டையைத் தூக்க முடியவில்லை... பலமுறை முயன்றதில் சினம் கொண்டான்.

"மந்திர மாயம் தெரிந்த அந்தணனே! என்ன மந்திரம் ஜெபித்தாய்? ஏமாந்து விட்டுவிட்டுப் போய்விடுவேன் என்று நினைத்தாயா? வெட்டிப் போட்டுவிடுவேன்" என்று உறையிலிருந்து வாளை உருவ, பரந்தாமன் பயந்தவர் போல் பாசாங்கு செய்தார்.

"அப்பா, என்னை ஒன்றும் செய்து விடாதே....! கிட்டே வா, அந்த மந்திரத்தை உனக்குச் சொல்லித் தருகிறேன். ஜபித்துக் கொண்டே தூக்கு; வந்துவிடும்" என்றார்.

நீலன் அருகே வர வலதுகையால் அவனை அணைத்து அவனது வலது காதில் "ஓம் நமோ நாராயணாய " என மும்முறை கூறினார். அடியார்களுக்கு அமுதிட்ட புண்ணியம் ஆண்டவனே குருநாதரானார். அஞ்ஞான இருள் அகன்றது. பகவானைப் பிராட்டியோடு தரிசித்தார். நகை மூட்டை மாயமாய் மறைந்தது. நீலனோடு சேர்ந்த புண்ணியம் சகாக்களும் தரிசனம் பெற்றனர்.

பரந்தாமன் அந்தர்தியானம் ஆனதும் 'வாடினேன் வாடி'என மனம் வருந்தி, பத்து பாசுரங்கள் பாடினார்.

"துஞ்சும் போ தழைமின்! துயர்வரில் நியமின்!
துயரிலீர் சொல்லினும் நன்றாம் நஞ்சுதான் கண்டீர்!
நம்முடை வினைக்கு நாராயணா வென்னும் நாமம்"
"தூவிசேரன்னம் துணையோடும் புணரும்
சூழ்புனற் குடந்தையே தொழுது, என்

நாவினாலுய்ய நான் கண்டுக் கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்”

இப்படி அவர் பாடியவை பெரிய திருமொழி 1084; திருக்குறுந் தாண்டகம் 20 . திருவெழு கூற்றிருக்கை ஒன்று. சிறிய திருமடல் ஒன்று. பெரிய திருமடல் ஒன்று; திருநெடுந்தாண்டகம் முப்பது. நம்மாழ்வாருக்கு அடுத்த படியாக அதிக பிரபந்தங்களைப் பாடியவர் இவரே.



நம்மாழ்வாரின் நான்கு பிரபந்தங்களுக்கும் ஆறு, அங்கமாக ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்ற நான்கு விதமான கவிகளால் அருளிச் செய்து, 'நாலுகவிப் பெருமாள்' என்ற விருதினையும் பெற்றார்.

குமுதவல்லியோடு வைணவத் திருப்பதிகள் பல சென்று எம்பெரு மானைப் பாடிப் பணிந்தார். இமயமலையின் உச்சியிலுள்ள மானச சரோவருக்குப் பக்கதிலுள்ள (பத்ரிநாத் செல்லும் வழியில் உள்ளது) திருப்பிருதி, பத்ரிநாத், நேபாளத்திலுள்ள சாளக்கிராமம், நைமிசாரண்யம் சென்று பரந்தாமனைப் பாடினார். திருச்சிங்கவேள் குன்றத்தில் (அஹோபிலம்) ஒரு பதிகம் பாடினா ர். திருப்பதி வேங்கடவன் மேல் நான்கு பதிகங்கள் பாடினார். தொண்டை நாட்டுத் திருப்பதி இருபத்து இரண்டுக்கும் சென்று பதிகங்கள் பாடினார். அதில் சென்னையிலுள்ள திருவல்லிக்கேணி நரசிம்மப் பெருமாளை (பார்த்தசாரதிக் கோவிலின் பின்புறம் கொடி மரத்தோடு இருக்கிறார். ஆதியில் நரசிம்ஹஸ்வாமி ஆலய மாகத்தான் இருந்ததாம். பாரதப் போர் முடிந்து ஸ்ரீ கிருஷ்ணர் முகத்தில் அம்பு தைத்த காயங்களோடு, பக்தர்களுக்கு அருள அங்கெழுந்தருளி விட்டார். அதனால் புதிய கொடி மரம்... பார்த்த சாரதி கோவில் ஆகிவிட்டது. கர்ப்பக் கிரஹத்தில் தீபாராதனை காட்டும்போது அர்ச்சாவிக்ரஹத்தில் தழும்புகளை இன்றும் பார்க்கலாம்)திருமங்கை ஆழ்வார் பாடிய பாடல்....

"பள்ளியிலோதி வந்ததன் சிறுவன் வாயில் ஓராயிர நாமம்
ஒள்ளிய வாகிப் போத ஆங்கதனுக்கு ஒன்று மோர் பொறுப்பிலனாகி
பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண் புடைப்பப் பிறையெயிற்று
அனல் விழிப்பேழ்வாய்
தெள்ளிய சிங்கமாகிய தேவைத் திருவல்லிக்கேணி கண்டேனே!"

பள்ளியில் படித்த பிரகலாதன் கற்று வந்தது திருமாலின் ஆயிரம் நாமங்களை. அதனால் தந்தை கோபமுற்று 'உன் திருமால் எங்கிரு க்கிறான்?" என்று கேட்க, ஆயிரம் நாமம் கொண்டவனாயிற்றே! எங்குமிருப்பான்... தூணிலும், துரும்பிலும் கூட இருப்பான்" என்றான் பிள்ளை.

"இந்தத் தூணிலிருக்கிறானா" என்று தூணை உதைக்க, தூண் பிளந்து மூன்றாம் பிறை போன்ற மெல்லிய, கூரான, வளைந்த

பற்களுடனும், நெருப்புப் பொறி பறக்கும் கண்களுடனும் தெள்ளிய சிங்கமாக அவதரித்த வரலாற்றை கண்முன் கொண்டு நிறுத்துகிறார். இப்படி திருமங்கையாரின் ஒவ்வொரு பாசுரமும் ஒரு காவியம் சொல்லும்.

பிறகு நடு நாட்டுத் திருப்பதியான திருவஹீந்தரபுரத்திற்கும், திருக் கோவிலூருக்கும் சென்று நம்பியெம் பெருமானைத் தரிசித்துப் பதிகம் பாடினார். திருநாங்கூரிலுள்ள திருபார்த்தன் பள்ளி, திருமணிக் கூடம், திருத்தெற்றியம்பலம், திரு வைகுந்த விண்ணகரம், திரு மணிமாடகக் கோவில், திருச் செம்பொன் செய் கோவில், திருவண் புருஷோத்தமம், திரு அரிமேய விண்ணகரம், திருக்காவளம்பாடி இவைகளில் உறையும் எம்பெருமானைப் பாடிவிட்டு, மாயவரம் வந்தார். மாயவரத்தின் பழைய பெயர் திரு இந்தளூர். புதிய பெயர் மயிலாடுதுறை.

மயிலாடு துறைக்கு திருமங்கை ஆழ்வார்–குமுத வல்லியுடன் வரும்போது நள்ளிரவாகி விட்டது. சன்னதிக்கு எதிரே நின்று ஆழ்வார் "பெருமாளே! எவ்வளவு தூரம் நடந்து உன்னை தரிசிக்க வந்திருக் கிறேன்! கதவைத் திறந்து எங்களை கடாட்சிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்து ஒரு பதிகமும் பாடினார். கர்ப்ப கிருஹத்திலிருந்து "நான் அர்ச்சகருக்குக் கட்டுப் பட்டவன். என்னால் எப்படி வெளியே வரமுடியும்? கதவு பூட்டியிருக்கிறதே" என்ற குரல் வந்தது.

"பூட்டியிருந்த கதவுக்குள்ளிருந்து நீர் வெளியே வந்ததே இல்லையா? கிருஷ்ணாவதாரத்தில் சிறைக் கதவுகள் திறந்து விலங்கு உடைபட வில்லையா? எத்தனை அடியார்களுக்கு பல பல வேடங்களில் வந்து உதவியிருக்கிறீர். உமது பரிமள வாசனையை நுகர வேண்டும். எனக்காக வெளியே வாரும். நீர் நினைத்தால் எதுவும் நடக்கும். மனது வையும்" எனப்பல சொல்லிக் கெஞ்சியும் கதவு திறக்கவில்லை.

திருமங்கையாழ்வாருக்க சினம் தலைக்கேறியது. "எம்பெருமானே! தன் அழகை தானே ரசிப்பது போல் உமது அழகை, வாசனையை நீரே ரசித்துக் கொள்ளும். சகலமும் அறிந்த சர்வாந்தர்யாமி நீர். உமக்கா என்மன ஆவல் புரியாது! வாசிவில்லீர்! இந்தளூர் பெருமானே! இவையனைத்துடனும் நீர் வாழ்ந்து கொள்ளும்" என்று ஏசி, கடிந்து வைத்துவிட்டு திரு வெள்ளியங்கிரிக்குப் புறப்பட்டு விட்டார். பொழுது விடியட்டும்; தரிசனம் செய்து விட்டுப் போகலாம், என்று சொன்னால்

கோபம் நம்மீது திரும்பிவிடும்" என்று குமுதவல்லியும், சீடர்களும் மௌனமாகப் பின் தொடர்ந்தனர். பெருமாளோடு வம்பு செய்த ஆழ்வார் இவர் ஒருவர் தான்.

சீடர்கள், 'நாலு கவிப் பெருமாள் வந்தார்', 'நம் கலியன் வந்தார்', ஆலி நாட்டரசர் வந்தார்', 'திருமங்கை வேந்தர் வந்தார்','பரகாலர் வந்தார்' என்ற விருதுகளை முழங்கிக் கொண்டே முன் சென்றனர். திருஞான சம்பந்தரின் சீடர்கள் "மற்ற விருதுகளெல்லாம் சரி, 'நாலு கவிப் பெருமாள்' என்று விருது முழங்கக் கூடாது என்று தடுக்க, திருமங்கையாழ்வார், திருஞான சம்பந்தரை சந்தித்தார். சைவத் தொண்டரும், வைணவத் தொண்டரும் தர்க்க வாதம் செய்தனர்.

'ஒரு குறளாயிரு நிலம்.....' என்ற திருமொழியைப் பாடினார் ஆழ்வார். திரு ஞான சம்பந்தர் 'நாலு கவிப் பெருமாள்' என்ற பட்டத்துக்குப் பொருத்தமானவர்தான் நீர்" எனப் பாராட்டினார். சோழநாட்டு வைணவத் திருப்பதிகள் நாற்பதையும் தரிசனம் செய்து கொண்டு, பாண்டிய நாட்டிலுள்ள பதினெட்டு திருப்பதிகளையும் தரிசித்துக் கொண்டு மீண்டும் சோளிங்கர் வந்தார்.

"மிக்கானை மறையாய் விரிந்த விளக்கை என்னுள்
புக்கானை புகழ் சேர் பொலிகின்ற பொன்மலையைத்
தக்கானைக் கடிகைத் தடங்குன்றின் மிசியிருந்த
அக்காரக் கனியை அடைந்துய்து போனேனே!"

மலைமேலிருக்கும் நரசிம்மரின் உற்சவ மூர்த்தி அடிவாரத்தில் எழுந்தருளியிருக்கிறார். அவர் பெயர் 'தக்கான்' தக்க சமயத்தில் கைகொடுப்பவர். சோளிங்கரிலுள்ள தீர்த்ததின் பெயர் 'தக்கான் குளம்' 'வேதமாய் விரிந்த தீபம்' என்ன அழகான உவமை! 'அக்கார வடிசில்' என்ற இனிப்பு பெரும் பெயர் பெற்றது. அதன் இனிப்பைக் கொண்ட கனி என்று சோளிங்கப் பெருமாளை வர்ணிக்கிறார். அவருள் புகுந்து விட்ட திருமால் அக்காரக் கனியாய் இனிக்கிறாராம்! இப்படி அவருடைய ஒவ்வொரு பாசரங்களுமே அக்காரக் கனியாய் இனிக்கும்.

திருக்கண்ணமங்கையில் இப்படி பதினைந்து பாசுரங்கள் இயற்றி யிருக்கிறார் இவர். 'திருக்கண்ண மங்கைக்கு ஸப்தாமிர்த க்ஷேத்திரம் என்றொரு பெயருண்டு. வாமனராய் மூவடி மண் யாசிக்க வந்த திருமால்,

திரி விக்கிரமராக நெடிது வளர்ந்து நின்றபோது பிரம்ம லோகத்தைத் தொட்ட அவரது திருவடியை திசைமுகன் கங்கையால் அலம்பினார். அந்த அபிஷேக நீர் விழுந்த இடம் இது. இங்குள்ள தீர்த்தம் விஷ்ணுபதி கங்கை என்றழைக்கப்படுகிறது' என்று குமுதவல்லிக்கு விளக்கிக் கொண்டே நீராடினார் திருமங்கையாழ்வார். குலசேகரர் ஸ்ரீ ராமனுக்குத் தாலாட்டுப் பாடிய க்ஷேத்திரம்.

திருமங்கையாரின் சில பாடல்கள் கடிதம் போலவே இருக்கும்."

பரந்தாமா! நீர் சரியான ஏமாற்றுக்காரர். தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் சமமாய் அமிர்தம் கொடுப்பதாய்க் கூறி, அசுரர்களை அமிர்தம் கடையச் செய்தீர். மோகினி அவதாரம் எடுத்து அசுரர்களை மயக்கிவிட்டு, தேவர்களுக்கு அமிர்தத்தைப் பங்கிட்டு விட்டீர். அதுபோல் என் நெஞ்சில் குடி புகாமல் எனக்குத் தரிசனம் தராமல் ஏமாற்றுகிறீர்! வாலியை மறைந்திருந்து கொன்றது நய வஞ்சகமல்லவா? எதிரில் வந்தால் பாதி பலம் போய்விடும் என்றால் அப்படிப்பட்ட வரத்தை ஏன் தரவேண்டும்? அசுரர்கள் எவ்வளவு சாமார்த்தியமான வரம் கேட்டாலும் நீர் தூணில் அவதாரமாகி, துடையில் வைத்து சம்காரம் செய்கிறீர். இரத்தத்தை சிந்தாமல் குடித்து குடலை மாலையாகப் போட்டுக் கொண்டு விடுகிறீர்! மனிதனுமில்லாமல், மிருகமுமில்லாமல் ஒரு அவதாரம்! பெண்ணாய் ஒரு அவதாரம்! குட்டையாய் உருவம் எடுத்து வந்து மூன்றடி மண் யாசிக்க வேண்டியது. அப்புறம் பிரம்மாண்டமாய் வளர்ந்து மூன்றாவது காலை எங்கே வைப்பது என்று கேட்க வேண்டியது! இது மோசடி இல்லையா? தந்தை சொற்படி தாயை வெட்டவேண்டியது! தந்தை மகிழ்ந்து வரம் கொடுத்தால் தாயை எழுப்ப வரம் கேட்பது! உன் மோசடிகளை அம்பலமாக்குகிறேன் பார்... நான் மற்றவர்களைப் போல் ஏமாளி அல்ல... நீ எத்தனை இல்லங்களில் வெண்ணை, தயிர், பால் பட்சணங்கள் திருடி உண்டிருக்கிறாய்! கோபியர் சேலையைத் திருடிக் கொண்டு நீ செய்த கூத்தை ஊரறிய தம்பட்டம் அடிப்பேன்! அந்தணர் பூஜையிலே அத்தனையும் அந்தணர் பத்தினி கையால் புறக்கடை வழியாகக் கொண்டு வரச் சொல்லி உண்டது நேர்மையான செயலா? ஒவ்வொரு பெண்களிடத்திலும் மாயத் தோற்றம் காண்பித்த நீ மாயன்... ! இப்போது நீ முகம் காட்டாவிட்டால் நான் கடவுள் நம்பிக்கையை ஊர் ஊராய் அலைந்து அழிப்பேன்! 'திருவெழுக் கூற்றிருக்கை' பாடி உன் சரணம் பற்றிக் கெஞ்சினேன். நீ மனமிரங்கவில்லை. சிறிய மடல் எழுதினேன். மௌனம்

சாதிக்கிறாய்! 'என்னைத் திருமங்கை இப்படிப் பண்ணி விட்டான்' என்று உன்னைப் பேர் பேராகப் புலம்ப வைக்காவிட்டால் நான் 'கலியன்' இல்லை" என்று திருமங்கையார் சூளுரைக்க, பரந்தாமன் பிராட்டியரோடு கருட வாகனத்தில் தரிசனமளித்தார்.

"கலியா.... உனது நிந்தாஸ்துதியை இன்னும் சற்று நேரம் ரஸிக்க வேண்டியே காலம் தாழ்த்தினோம். மழலைக்குரலில் பிள்ளை திட்டுவதை தகப்பன் மகிழ்ச்சியோடு ஏற்பதில்லையா? உன் மனம் நானறிவேன்" என ஆசியளித்து மறைந்தார் பரந்தாமன்.

திருமங்கையாழ்வார் அப்போதிருந்த தனது மனநிலையை திருநெடுந்தாண்டகத்தில் முப்பது பாசுரங்களில் பாடி இருக்கிறார்.

"என்ன ஸ்வாமி, யோஜிக்கிறீர்கள்?" குமுதவல்லி அன்புடன் கேட்டாள்.

"குமுதா, நீ என் நெஞ்சில் ஏற்றிய வைணவ தீபம் பிரகாசமாய் எரிகிறது. அது மட்டுமல்ல.... அது நெருப்பாகவும் எரிகிறது. இறைத் தொண்டுதான் அதைத் தணிக்க முடியும். ஸ்ரீரங்கம் கோவிலைப் பார்த்தாயா? கோபுரம், விமானம், மண்டபம், மதில்கள் எல்லாம் சிதிலமடைந்திருக்கிறது. அது உன் மனதில் வேதனையைத் தோற்றுவிக்க வில்லையா, கையாலாகாதவனாய் இப்படி உட்கார்ந்திருக்கிறேனே." வருத்தத்தோடு பேசினார் கலியன். "அதற்கு நம்மால் என்ன செய்ய முடியும்? மறுபடி திருடப் போகிறீர்களா?"

"ஹஹ்ஹா.... சரியான நேரத்தில் நினைவூட்டினாய்? அதிலென்ன தப்பு? தோள்களில் தினவும், நெஞ்சிலே உறுதியும், பக்தியும், புத்தியிலே புதுப்புது வழிகளும் இருக்கும் வரையில் எனக்குப் பொருளுக்குப் பஞ்சமில்லை. இப்போது நான் குறி வைத்திருப்பது செல்வந்தர்களான வழிப்போக்கர்களை அல்ல" எனக் கொக்கரித்தார் கலியன்.

"என்ன செய்யப் போகிறீர்கள்?" குமுதவல்லி கவலையுடன் கேட்க, "பொறுத்திருந்து பார்" என பதில் கூறிய கலியன், "குமுதா, நாம் திரு நாகை போனேமே, அங்கே ஒரு பெரிய புத்த விகாரம் காண்பித்தேனே! நினைவிருக்கிறதா?" என்றார்.

"நன்றாக நினைவிருக்கிறது. ஆனால் வாசலிலிருந்து தான் பார்த்தோம். உள்ளே போகமுடியவில்லையே! அங்கே உள்ள பெரிய புத்தர்

சிலை தங்கமாமே! நிஜமா?'' ஆர்வமாகக் கேட்டாள் குமுதவல்லி. ''நிஜம் தான். நான் பார்த்திருக்கிறேன். அங்கே உள்ள சிற்ப வேலைப்பாடுகள் அபூர்வமானது. விசித்ரமானது. கோபுரத்தின் மேல் சக்கர வடிவில் ஒரு யந்திரம் சதா சுழன்று கொண்டிருக்கும். அது நின்றால் உள்ளே நுழையலாம். மனிதன் மூச்சு விட மறந்து விடலாம். ஆனால் அது சுற்றுவதை நிறுத்துவதே இல்லை'' என பெருமூச்செறிந்தார் கலியன்.

''திடீரென்று அந்த புத்தர் மேல் ஏன் ஞாபகம்..... பகவானையே வம்புக்கிழுத்தவராயிற்றே.... இப்போ புத்தர் அகப்பட்டுக் கொண்டிருக் கிறார்'' குமுதவல்லி கலகலவென்று சிரித்தாள்.

கலியனார் சிரிக்கவில்லை!

''இங்கே கொஞ்சம் தண்ணீர் கிடைக்குமா?'' கலியனார் குரல் கொடுத்தார். வெளியே வந்தவர்,''உங்களுக்கு எந்த ஊர்? இலங்கைக்குப் புதியவரோ?'' என்றார்.

''எனக்கு ஊர் நாகப்பட்டினம். புத்த விகாரத்துக்கு அருகில் குடியிருக் கிறேன். இராம தாசன். வானரங்கள் அழித்த இலங்கை எப்படியிருக்கிற தென்று பார்க்கும் ஆசையில் வந்துவிட்டேன். தாகம் நாக்கை வறட்டுகிறது'' கலியனார் நிறுத்தி வந்தவரை ஏற இறங்கப் பார்த்தார்.

''ஓ, திருநாகையிலிருந்து வருகிறீரா? புத்த விகாரத்துச் சக்கரம் சுற்றிக் கொண்டிருக்கிறதா?'' என்று கேட்டபடி குவளையில் நீர் கொண்டு வந்து கொடுத்தார்.

தண்ணீரைக் குடித்த கலியனார் ''சக்கரம் நின்று ரொம்ப நாளாகி விட்டது'' என்றார்.

ஒரு நிமிஷம் பிரமித்து நின்றவர், ஹூம் ''வாழை பெருத்த ஊர்... என்ன செய்வது?'' என்றபடி கதவைப் பூட்டிக் கொண்டு போய் விட்டார்.

கடற்கரையில் கலியன் நண்பர்களை சந்தித்தார். கலியா! ஏதாவது தெரிந்ததா? '' என்று கேட்டான் ஒருவன். ''எல்லாமே தெரிந்தது'' என்றார் கலியன். ''கலியா! எங்கள் ஒவ்வொரு வரையும் இங்குள்ள சிற்பிகளை பேட்டி எடுக்கச் சொன்னாய். நாங்களும் பெரிய கோவில் அமைக்கப் போகிறவர்களைப் போல் போய் வித விதமாய் விசாரித்தோம்''

"என்னிடம் தானே விஷயம் சிக்கியது.....!

நாகைப்பட்டினத்தில் புத்த விஹார் அமைத்த சிற்பிதான் வேணு மின்னதும்... முகவரி வாங்கிக் கொண்டு வந்தது நான் தானே! அதனால் முதலில் என்னிடம் தான் சமாசாரம் சொல்ல வேண்டும்"

"சரி, சரி... நாலு கால் சேர்ந்தால் தானே பந்தல்! நமக்குள் பேதமே கிடையாது. நான் வழிப்போக்கனைப் போல் போய் அந்தப் பொறி அமைத்த சிற்பியை சந்தித்தேன். அவன் 'சக்கரம் சுற்றுகிறதா?' என்று கேட்டான். நான் 'நின்று விட்டது' என்றேன். 'வாழை பெருத்த ஊர் என்று சொல்லிக் கொண்டே போய் விட்டான்" என்றார் கலியன்.

"ஒன்றுமே புரியவில்லையே..... மொட்டைத் தலைக்கும், முழங் காலுக்கும் முடிச்சுப் போட்டாற் போலிருக்கிறது....! " சலித்துக் கொண் டான் ஒருவன். "முழங்காலும், மொட்டைத் தலையும் வழுவழு வென்றிருக்கும். முழங்கால் வலி என்றால் மொட்டை அடித்துக் கொள்ள மலை ஏறமுடியாது"

"விளையாடியது போதும்... விஷயத்துக்கு வா, கலியா" என்றான் பொறுமையிழந்த நண்பன்.

"வாழைக்கும், சக்கரம் நிற்பதற்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறது. அதை யோஜிப்போம். முதலில் திரு நாகை செல்வோம். கப்பல் பயணத்தின் போது நான் கண்டு பிடித்ததைச் சொல்கிறேன். ஒவ்வொரு கப்பலிலும் என்ன சரக்கு என்று தெரிந்து கொள்ளச் சொல்லியிருந்தேனே" கலியனார் விசாரிக்க, "ஓ, அடுத்தக் கப்பலில் சரக்கு பாக்கு" என்றான் நண்பன். அந்தக் கப்பலுக்கு நண்பர்களோடு பயணச் சீட்டு பெற்றுக் கொண்டார் கலியன். பாதிப் பாக்குகளாக கையில் கொஞ்சம் எடுத்துக் கொண்டார். அந்த நாளில் சரக்குகளை தலைவரிடம் ஒப்படைத்து கையெழுத்து பெற்றுக் கொண்டு இறங்கும் இடத்தில் பெற்றுக் கொள்வது பழக்கம்.

கப்பலின் அடித்தளத்தில் வேண்டுமென்றே ஒரு பாதிப் பாக்கை தவறவிட்டு விட்டு 'எடுத்துத்தரவேண்டும்' என அடம் பிடித்தார் கலியன். நேரமும், பொறுமையுமற்ற கப்பல் தலைவன் கலியனார் சொற்படி "பாதிப் பாக்கு கலியனாருக்கு சொந்தம். திருநாகை வந்தவுடன் கொடுத்து விடுகிறேன்" என்று எழுதிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார். "சரக்குப் பாக்கில் பாதி தன்னுடையது" என்று வம்பு வளர்த்தார் கலியனார். சாட்சி நண்பர்கள். கப்பல் தலைவனின் கையெழுத்திட்ட சான்றிதழை அனைவரிடமும் காட்டினார்.

"பாதி உடைந்த பாக்கிற்கு எவனாவது கையெழுத்துப் போட்டுத் தருவானா?" என்று மக்கள் பேசினர். பஞ்சாயத்தார், வழக்கறிஞர்கள், நீதிபதிகள் எல்லோரும் வந்தனர். கப்பல் தலைவனுக்கு வெறுப்பு வந்து, விட்டால் போதுமென்று பாதி சரக்கை கலியனாருக்குக் கொடுத்து விட்டான்.

எல்லாவற்றையும் பொதிகளாகக் கட்டி விற்றுப் பணமாக்கினார் கலியன். நிறைய வாழையைத் தோட்டங்களோடு அப்படி அப்படியே வாங்கிக் கொண்டார். நண்பர்களின் உதவியோடு தண்டுகளை உரித்து எடுத்தார்.

ஊர் உறங்கியதும் புத்த விஹாரத்தில் சுழலும் சக்கரத்திடையே தண்டுகளை நண்பர்கள் எடுத்துத் தர தொடர்ச்சியாக இடையில்

கொடுத்து வந்தார். சிறிது நேரத்தில் சக்கரம் நின்று விட்டது. ஒரு வீர தளபதியை உள்ளே போய் புத்தர் சிலையை எடுத்து வரச் சொன்னார் கலியன். மந்திரிக்கப்பட்ட அந்த புத்தர் சிலை தளபதி அருகில் சென்றதும் ஊளையிட்டது. அழுக்கு நீரை புத்தர் சிலையில் கொட்டினார் கலியன். சிலை அங்கும் இங்குமாய் ஓடியது. மேலும் மேலும் நண்பர்களோடு அதை அசுத்தப்படுத்த அதன் மந்திரசக்தி போய் விட்டது. பின்பு அதை ஒரு சாக்குப் பையில் கட்டி வெளியே கொணர்ந்தனர்.

அடர்ந்த காட்டுப் பகுதிக்கு வந்ததும் அதைத் துண்டு துண்டாக உடைக்கச் சொன்னார் கலியன். மறுபடி சாக்கு மூட்டையில் கட்டிக் கொண்டு திருக்கண்ணங்குடி வந்தனர்.

அங்கே ஒரு வயல் உழுது சேறாகக் கிடந்தது. அப்போது அதில் புத்தர் சிலையைச் சாக்கு மூட்டையோடு புதைத்து வைத்தனர். பக்கத்திலிருந்த புளிய மரத்தில் ஒருவர் மாற்றி ஒருவர் விழித்திருந்து காவல் காத்தனர். விடியும் நேரம். மறு சால் உழ மாடுகள், ஏர், கலப்பையோடு வயலுக்கு சொந்தக்காரன் வந்தான். புளிய மரத்திலிருந்து கலியனார் நண்பர்களோடு கீழே குதித்து குடியானவனை மறித்தார்.

"எங்க வயல்லே நீ உழ வர்ரியே....! இது என்ன நியாயம்?" என்றான் ஒருவன். "உங்க நிலமா? நேத்து நான் உழுதுட்டுப் போயிருக்கேன். ஒரு இராத்திரிக்குள்ளே உரிமைக் கொண்டாடறீங்களே! எப்ப வாங்கினீங்க? பாதி ராத்திரியிலேயா? பட்டா எங்கே?" என்றான் கேலியாக.

அதற்குள் அண்டை அயல் வயல்காரர்கள் கூடி விட்டனர். 'நாட்டாண்மைக்காரர் வந்தால்தான் பேச்சு' என்று கலியனார் கூறி விட, நாட்டான்மைக்காரரை அழைத்து வர சிலர் ஓடினர்.

"அடே மூதி.... நிலம் வாங்கினது தான் வாங்கினே... பாட்டன் சொத்தா.. மஞ்சக் காணியான்னு கவனிச்சுப் பத்திரம் பதிஞ்சியா?" என்றான் ஒருவன்.

கலியனாருக்கு இவ்வளவு போதாதா? நாட்டாண்மைக்காரர்கள் வந்ததும் கலியன் பணிவுடன், "ஐயா, இது என் தாய் வழிச் சீதனம். விற்க என் தகப்பனுக்கு உரிமை இல்லை. பாட்டன் சொத்து பேரனுக்குத் தானே சேர வேண்டும்" என்ற கேட்டார்.

"சரி.... உம்மிடம் பத்திரம் இருக்கிறதா?" என்று அவர்கள் விசாரிக்க, "பத்திரமாக வைத்திருக்கிறேன். இன்று ஒரு நாள் அவகாசம் தர வேண்டும். ஆடுதுறையில் என் அம்மான் இல்லத்துக்கு என் தாயார் சென்றிருக்கிறார்கள். அவர்களை பத்திரத்தோடு அழைத்து வர கால அவகாசம் வேண்டும். இப்போதுதான் விற்ற விபரம் தெரிந்தது. ஓடி வந்தேன். மறு சால் உழ விவசாயி வருவார் என்றுதான் தோழர்களோடு காத்திருக்கிறேன்" என்ற அன்பொழுகக் கலியனார் சொல்லவும், நாட்டாண்மைக்காரர், "எது பொய், எது உண்மைன்னு தெரியலே.... நாளைக்குள்ளே குடி முழுகிடாது. நீ போய் வீட்டில் இரு" என்று குடியானவனிடம் கூறியவர், கலியன் பக்கம் திரும்பி, "ஊருக்குளே வரக் கூடாது. ஊரிலே என்ன வம்பு தும்பு நடந்தாலும் நீங்கதான் பொறுப்பு. ஆளை அனுப்பி நாளைக் காலைக்குள்ளே பத்திரத்தோடு வந்து எங்களைப் பார்" என்றார்.

கலியனார் உடனே ஒரு நண்பனிடம் "ஆழ்வார் திருநகரி போய், அம்மா, மாமா எல்லாரையும் பத்திரத்தோடு கூட்டிக் கொண்டு வா" என்றார் அவர்கள் முன்னிலையில்.

குறிப்பறிந்து அவன் புறப்பட்டான். பலவாறு பேசிக் கொண்டு மக்களும் கலைந்து சென்றனர். இரவு ஊர் அடங்கியதும் சாக்கு

மூட்டையை எடுத்துக் கொண்டு ஸ்ரீ ரங்கம் போய் விட்டனர். கலியனார் விரும்பியபடி கோவிலை சீர் திருத்தம் செய்தார். நாச்சியார் கோவிலில் தேன் சொட்ட சொட்ட இரண்டு பிரபந்தங்கள் பாடி இருந்தார் திருமங்கையார்.

ஸ்ரீ ரங்கநாதர் "நீர் கட்டிய இந்த ஏழு மதில்களும் அந்த இரண்டு பிரபந்தங்களுக்கு ஈடாகாது. இந்த மதில்களை அங்கே கட்டிவிட்டு அந்தப் பாசுரங்களை இங்கே பாடி இருக்கலாம்! நாச்சியார் கோவில் நம்பியை விட நான் அழகில் குறைந்தவனா, உமக்கு அருள் செய்யப் பின் வாங்கினேனா?" என்று கேட்க,"நாச்சியார் கோவில் நம்பியெம்பெருமான் எனது குரு. அவருக்கு அப்பிரபந்தங்கள் ஆசார்ய தட்சணை" என்றார் கலியன்.

திருக்கண்ணமங்கையில் ஆழ்வார் பாசுரம் பாடியதும் "இதை எனக்கு விளக்கிடுக; யாம் கேட்டு இன்புற வேண்டும்" என்றார் பரந்தாமன். "மறு படியும் அவதரித்து மாணவனாய் வந்தால் எல்லாம் விளங்கச் சொல் கிறேன்" என்று ஆழ்வார் கூற 'ஆகட்டும்' என்றார் எம்பெருமான்.

அதன்படி ரோகிணி நட்சத்திரத்தில் பெரியவாச்சான் பிள்ளையாகப் பிறந்தார் ஸ்ரீ கிருஷ்ணன். திருமங்கை ஆழ்வார் அதே கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரத்தில் 'கலி கன்றி தாஸ ராகப்' பிறந்து வரி வரியாகப் பொருள் கூறி சீடராக வந்த எம்பெருமானை மகிழ்வித்தார். திருமங்கை ஆழ்வார் ஸ்ரீ ரங்கநாதரிடம் நம்மாழ்வார் அருளிய நான்கு பிரபந்தங்களும், வேதம் முழங்கும் மார்கழி மாதத்தில் ஒலிக்கும்படி வரம் கேட்டுப் பெற்றக் கொண்டார்.

பின்னர் வந்த ஸ்ரீ நாதமுனிகள் எல்லா ஆழ்வாரின் பாடல்களையும் பகல் பத்து உத்சவமாகக் கேட்கச் செய்தார். தொண்டரடிப் பொடி ஆழ்வார் பூப்பறிக்கும் தனது ஆயுதத்துக்கு திருமங்கையாரின் பெயர்களில் ஒன்றான 'அருள்மாரி' என்று பெயரிட்டு கௌரவித்தார். கடைசியில் திருமங்கையாழ்வார் திருக்குறுங்குடிக்கு மனைவியோடு சென்று பரந்தாமனுக்குப் பாதசேவை செய்து 'வைஷ்ணவ நம்பி' என்ற தாஸ்ய நாமர் பிரசாதித்து அங்கிருந்தே வைகுண்டப் பதவி அடைந்தார்.

'கல்லெடுத்துக் கல்மாரி காத்தாய்' என்றும், 'காமரு பூங்கச்சி யூரகத்தாய் ' என்றும்,'வில்லிறுத்து மெல்லியள் தோள் தோய்ந்தாய்'

என்றும், 'வெஃகாவில் துயிலமர்ந்த வேந்தே!' என்றும், 'மல்லடர்த்து மல்லரையன் நட்டாய்!' என்றும், 'மாகீண்ட கைத்தலத்தென் மைந்தா!' என்றும், 'கன்று மேய்த்தினிதுகந்த காளாய்!' என்றும், 'மன்றமரக் கூத்தாடி மகிழ்ந்தாய்!' என்றும், 'வென்ற சுரர் குலங்களைந்த!' என்றும், 'துன்று குழல் கரு நிறத்தேன் துணையே!' என்றும், 'நஞ்சரவில் துயிலமர்ந்த நம்பீ' என்றும் இப்படிப் பல பாமாலைகள சூட்டியிருக்கிறார் திருமங்கையார். தன்னைத் தலைவியாகவும், மாயவனைத் தலை வனாகவும் பாவித்து பாடப்பட்டதுதான் பெரிய திருமடல். "ஒவ்வொரு ஸ்தலமாகச் சென்று என் பிரிவாற்றாமையைச் சொல்வேன். அப்படியும் நம்பி என்னை ஏற்காவிட்டால் அவன் செயல்களை ஊரறியச் சொல்லி அம்பலப் படுத்துவேன்" என்று திரு நாறையூர் நம்பி மேல் காமமுற்றுப் பாடியவைதான் பெரிய திருமடல் பாசுரங்கள்.

'மோட்சத்தைக் கண்டவருண்டா? சொன்னவர் கண்டதில்லை. கண்டவர் சொன்னதில்லை' அதனால் தேவலோகத்து இன்பம் வேண் டாம். தெய்வ இன்பமே திளைத்தாடுவேன்" என்ற பாடிய திருமங்கை யாழ்வாரின் வரலாற்றினைப் படிப்பவரும், கேட்பவரும், படிப்பிக்கச் செய்தவரும் பரந்தாமன் அருள் பெற்று, பலகாலம் இன்பமாக வாழ்ந்த பின் வைகுண்ட பதவி அடைவார் என்பது சர்வ நிச்சயம்.

'பிறப்பிறப்பு மூப்புப் பிணி துறந்து, பின்னும்
இறக்கவும் இன்புடைத்தா மேலும், மறப்பெல்லாம்
ஏதமே என்றல்லால் எண்ணுவனே—
மண்ணளந்த உன் பாதமே ஏத்தாப் பகல்?

திருமங்கையார் போற்றிய நம்மாழ்வார் பாடியது போல் மண்ணளந்த வனைப் பாடி பயன்பெறுவோம்.

111. பூந்தானம்

அளவு கடந்த சோகத்தினால் சிலர் துறவு மேற்கொள்வதுண்டு. சிலர் தற்கொலைக்கு முயல்கிறார்கள். சிலர் ஞானியாகிறார்கள். குருவாயூரப்பன் சன்னதியில் அன்னப் பிராசனம் செய்ய நினைத்திருந்த அருமைக் குழந்தை திடீரென்று இறந்ததும் கிருஷ்ண பக்தரான பூந்தானம் கண்ணனையே தன் குழந்தையாக எண்ணி 'ஞானப் பானை' என்ற அற்புதமான பாடல்களைப் பாடினார்.

நாராயண பட்டத்ரி 'நாராயணீயம்' என்ற மகா காவியத்தை பாடி முடித்திருந்தார். நாடெங்கும் அந்நூல் போற்றப்பட்டது. தனது நூலை அவர் திருத்திக் கொடுத்தால் சரியாயிருக்கும் என்று எண்ணினார் பூந்தானம். நாராயண பட்டத்ரி தினமும் குருவாயூரப்பனை தரிசிக்க வருவார். அக்காலத்தில் வயதிலும், அனுபவத்திலும், மேதா விலாசத்திலும் பெரியவர்களோடு சம திறமை, வயது, அந்தஸ்தற்றவர்கள் வலிய:ச் சென்று பேசமாட்டார்கள். அதோடு அவர்களின் மிக அண்மையில் கூட நடக்க மாட்டார்கள். நான்கு காலடி பின் தள்ளியே நடப்பர்.

பூந்தானம் அந்நூலோடு நாராயண பட்டத்ரிக்கு நான்கு அடி தள்ளி வலம் வந்தார். சன்னதியில் அவர் பார்வைக்காக வெகு நேரம் காத்திருந்தார். நாராயண பட்டத்ரி எரிச்சலோடு "என்ன வேணும் உமக்கு" என்று கேட்க, பூந்தானம் பவ்யமாக தனது 'ஞானப் பானை'யைக் காட்டி "கிருஷ்ணர் கதையை எழுதி இருக்கிறேன். கொஞ்சம் சரி பார்த்துத் தரணும் " என்றார்.

நாராயண பட்டத்ரிக்கு தனது பாண்டியத்தைப் பற்றி கர்வம் அதிகம். "ஹ.... இதுக்கெல்லாம் எனக்கு நேரமேது? வெட்டி வேலை... கல்லும் கடுகும் கலந்தா பிரிக்கறது எத்தனை சிரமமோ அதைப் போல இந்த ஜோலி" என்று அலட்சியமாகச் சொல்லி விட்டுச் சென்று விட்டார்.

அப்படியும் பூந்தானத்துக்கு மனம் கேட்கவில்லை. 'கோவிலில் நாலு பேர் எதிரில் கேட்டிருக்கக் கூடாது. வீட்டிற்குப் போய் விநயமாக வேண்டினால் ஒத்துக் கொள்ளலாம்' என்று சமாதானம் சொல்லிக் கொண்டார்.

கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு நாராயண பட்டத்ரியை சந்திக்கச் சென்றார். கேரளாவில் திடீர் திடீரென்று மழை பிடித்துக் கொள்ளும். அன்றும் அப்படித்தான் ஆயிற்று. பூந்தானம் தொப்பலாக நனைந்து போனார். ஆனாலும் முன்வைத்தக் காலை பின் வைப்பதா என்ற வைராக்கியத்தில் பட்டத்ரி வீட்டை அடைந்து கதவைத் தட்டினார். கதவைத் திறந்த பட்டத்ரி பூந்தானத்தின் கோரிக்கையைக் கேட்டதும் மகா கோபம் அடைந்தார்.

"உமக்கு ஒரு தடவை சொன்னால் புரியாதா? அதான் கோவிலிலே விளங்கச் சொன்னேனே! உமது ஞானப் பானையை வேறே யார்க் கிட்டேயாவது காண்பியும்! சும்மா சும்மா என்னைத் தொந்தரவு செய்யாதேயும்! சொன்னாலே புரியாத நீரெல்லாம் பாகவதம் எழுதினா எப்படி இருக்கும்? தப்பும் தவறுமா எப்படி வேணாலும் பாகவதம் பாடறதா" என வெளியே அனுப்பிக் கதவைத் தாளிட்டார்.

மழையில் வந்திருக்கிறாரே என்ற இரக்கம் இல்லை. பாவம், பரிதாபம் என்று எண்ணவும் இல்லை. பட்டத்ரியின் திறமை என்ற சூரியனை கர்வம் என்ற கருமேகம் மூடியது.

பூந்தானம் நொந்துபோய் இல்லம் வந்தவர் "கிருஷ்ணா, கிருஷ்ணா என்றழுதார். 'அருகதையற்ற எனக்கு ஏன் பாகவதம் இயற்ற ஆசை தந்தாய்' என வருந்தினார். ஈர ஆடையைக் கூட மாற்றவில்லை... உண்ணவில்லை. உறங்கவில்லை.

நாராயண பட்டத்ரி சாயங்கால வேளைகளில் நாராயணீயம் பாடி அர்த்தம் சொல்வார். ஏராளமான பேர் கேட்க வருவார்கள். மெய் சிலிர்த்து கண்ணீர் விடுவோரும் 'ஆஹா'ஹாரம் போடுவோரும் மிகுதி. 'ஸாந்திரானந்த... என்று தொடங்கும் முதல் ஸ்லோகத்தைப் படித்தார்.

"ஒரு தவறு இருக்கிறது. சொல்ல அனுமதியுண்டா?"என்றான் எதிரிலிருந்த இளைஞன். உடலெல்லாம் பன்னிரண்டு நாமங்கள். கட்டுக் குடுமி. தீட்சண்யமான கண்கள். பிரம்ம தேஜஸ் முகத்திலே. நிறைந்த ஸதஸில் மறுத்துப் பேசமுடியுமா?

'குருவாயூரப்பன் ஒப்புதலளித்த சமஸ்கிருத ஸ்லோகங்களில் குற்றம் இருக்கிறதா? சொல்.... பார்ப்போம்' என்றார் பட்டத்ரி.

இளைஞன் அழகாக சொல்லி விட்டான்! அவனது ஸ்பஷ்டமான வட மொழி உச்சரிப்பும், கணிரென்ற குரலும் சபையோரின் பாராட்டையும் பெற்று விட்டது.

பட்டத்திரியின் மனதில் விழுந்த முதல் சவுக்கடி. இரண்டாவது ஸ்லோகத்தைப் படித்தார். முன்பிருந்த கம்பீரமில்லை. குரல் தொய்ந்தது. இளைஞன் இரண்டு குற்றம் கண்டு பிடித்தான். பட்டத்ரியால் மறுத்துக் கூற முடியவில்லை. மூன்றாவது ஸ்லோகத்துக்கு மூன்று தப்புக்கள். இப்படியே தொடர்ந்து ஒன்பதாவது ஸ்லோகத்தில் ஒன்பது தப்புக்கள் கண்டுபிடித்தான்.

"நாமெல்லாம் படிக்காதவர்கள்... இந்தப் பையன் மாதிரி நாலு பேர் சொன்னாதானே தப்பு தெரியறது... தப்பும், தவறுமா பாகவதத்தைக் கேட்டாப் பாவம் வரும்" என்று பலர் எழுந்து சென்றனர். 'என்ன நடக்கும்... பட்டத்ரி கோபம் வந்து பையனோடு சண்டை போட மாட்டாரா' என்ற வம்பு ஆர்வம் கொண்ட ஒரு சிலரைத் தவிர பெரும்பாலோர் கலைந்து சென்றனர். பட்டத்ரியோ அவமானத்தால் குறுகிப்போனார்.

"குருவாயூரப்பன் கவிதை நயத்தில், இவர பக்தியில், பழைய நிகழ்ச்சிகளின் மயக்கத்தில் தலை அசைத்திருக்கலாம்" பத்தாவது ஸ்லோகத்தில் பத்து குற்றங்கள் கண்டு பிடித்த இளைஞன் பேசினான்.

'சமஸ்கிருத பண்டிதர்களால் பாராட்டப் பெற்ற நாராயணீயத்தில் இத்தனை பிழைகள் கண்டுபிடித்த இந்த இளைஞன் யார்' என்பதைக் கண்ணனை தியானித்தபடி பார்த்தார். மேற்கொண்டு ஸ்லோகம் படிக்கவே அவர் நா எழவில்லை.

எதிரே மகர குண்டலங்களோடு, மயிற் பீலியோடு, பட்டு உத்தரீயத்தோடு, குறும்புப் புன்னகை தவழ கண்ணன் அமர்ந்திருந்தான். 'கண்ணா, இதென்ன சோதனை' என்று சாஷ்டாங்கமாய் பாதங்களில் விழுந்தார். உட்கார்ந்திருந்தவர்கள் 'பட்டத்ரிக்கு புத்தி பேதலித்து விட்டது' என்று எழுந்து போய் விட்டார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணன் "பூந்தானத்தின் பாடல்களை தப்பும், தவறுமானது என்று நீர் அவமதித்தீர். உம்முடைய ஸ்லோகங்களில் தப்புக்கள் முளைத்து விட்டன. பக்திக்கு மொழியோ, பாண்டித்யமோ முக்கியமல்ல.... பூந்தானம்

அன்ன ஆகாரமில்லாமல் துவண்டு கிடக்கிறான். அவனை சமாதானப் படுத்தி அவனது 'ஞானப் பானை'யை சரி பார்த்துக் கொடு.... நான் என்ற அகந்தை இல்லாதவன் பூந்தானம். மீண்டும் வாதநோய் பற்றிக் கொண்டதே என்று சன்னதியில் புலம்பினால் ஆயிற்றா? பட்டத்ரியின் நாராயணீயத்தை விட பூந்தானத்தின் 'ஞானப் பானை'யே எனக்குப் பிடித்தமானது. நான் தலையை அசைத்து, ஆமோதித்தால் தான் நீர் அடுத்தப் பாடலைப் பாடுவீர்! நான் அடிக்கடி தலையை அசைத்தாலே தலை வலிக்கும் என்று நினைப்பவன் அவன்" என்றார். கிருஷ்ணரின் பேச்சுக்களும், தரிசனமும் பட்டத்ரிக்கு மட்டுமே கிடைத்த அனுபவங்கள்.

பூந்தானத்தைத் தானே தேடிப் போனார் பட்டத்ரி. காலில் விழுந்து மன்னிப்பும் கேட்டுக் கொண்டார். பூந்தானம் பதறிப் போய் "ஒரு வார்த்தை சொல்லி விட்டிருந்தால் நானே வந்திருப்பேனே... என் குடில் தேடி வந்து என்னை அபசாரத்துக்காளாக்கி விட்டீர்களே" என்று வருந்தினார்.

"பூந்தானம்! பகவானுக்கே நீ பிரியமானவன்... இல்லாவிட்டால சரியென்று ஆமோதித்ததை தப்பென்றிருப்பானா? மூன்று நாட்களாய் நீ சாப்பிடாமல்... தூங்காமல்.... எத்தனை பெரிய பாவி நான்.... முதலில் ஏதாவது சாப்பிடு..... உன் 'ஞானப் பானை'யைக் கொண்டு வா.... பகவான் நாராயணீயத்தை ரசித்தது பெற்றோர்களிடம் பிள்ளைகள் காட்டும் பாசம்! 'ஞானப் பானை' குழந்தைகளிடம் பெற்றோர் கொண்ட பந்தம். இரண்டுமே சமம் தான்!" என்று அன்புடன் கூறிய பட்டத்ரி 'ஞானப் பானை'யை பூந்தானத்தைப் படிக்கச் சொல்லித் திருத்திக் கொடுத்தார்.

பிறகு தன் கையிலிருந்த மோதிரத்தை 'ஞானப் பானை' எழுதிய விரல்களுக்குப் பரிசு" என்று கூறி பூந்தானத்தின் விரலில் அணிவித்து, கட்டித் தழுவி விடை பெற்றார்.

பூந்தானம் அம்மோதிரத்தைப் பார்த்து பார்த்து மகிழ்ந்தார். அம்மோதிரத்துக்கொரு சோதனை வந்தது.

பூந்தானம் வாழ்ந்த இடம் அங்காடிபுரம். நிர்மால்யதரிசனம் காண மூன்று மணிக்கு ஆலய வாசலில் இருக்கவேண்டும். அங்காடி புரத்துக்கும், குருவாயூருக்கும் வரும் வழி அடர்ந்த காடாக இருந்தது. ஒவ்வொரு திங்கட்கிழமையும், மற்றும் விசேஷ தினங்களிலும் குருவாயூரப்பனை தரிசிக்க வருவார் பூந்தானம். ஒருமுறை மூன்று கள்வர்கள் அவரை

வளைத்துக் கொண்டனர். ஏழையான அவரிடம் பட்டத்ரி பரிசளித்த மோதிரத்தைத் தவிர வேறெதுவும் இல்லை.

மோதிரத்தை அவர்கள் கழற்ற முயன்ற போது "ஐயா, இதை நாராயண பட்டத்ரி என்ற மகான் அன்புப் பரிசாகக் கொடுத்தார். 'குருவாயூரப் பனைத் தவிர வேறெவர் கேட்டாலும் தரக்கூடாது' என்ற அன்புக் கட்டளையும் போட்டார். தயவு செய்து அதைக் கழற்றாதீர்கள் " என்று கெஞ்சினார்.

திருடர்களிடம் கருணையை எதிர்பார்க்க முடியுமா? பூந்தானத்தைப் பேசமுடியாமல் வாயில் துணி அடைத்து ஒரு மரத்தில் கட்டிப் போட்டு விட்டு மோதிரத்தைக் கழற்ற முனைந்தனர். மோதிரம் பிடிப்பாக இருந் ததால் கழற்ற கஷ்டமாயிருந்தது.

"கண்ணா! திருமங்கை ஆழ்வார் களவாடி அன்னதானம் செய்ததாக உபன்யாசகர் சொன்னார். இந்தக் கள்வர்களும் நல்ல காரியத்துக்காகக் களவாடுகிறார்களோ? கண்ணா, ருக்மணியோடு நீயே வழிப்போனாய் வந்தாயாமே! அப்படி இவர்கள் மும்மூர்த்திகளோ? கட்டிப் போடாவிட்டால் நமஸ்கரித்திருக்கலாம்! வாயைத் துணி வைத்து அடைக்காவிட்டால் பஜனாவளியாவது பாடலாம்! யசோதையின் கட்டு இப்படித்தானே உன் உடலை இறுக்கியிருக்கும்! பூவால் கட்டினாளாமே சீதாபிராட்டி" எனப் பலவாறு எண்ணி உருகினார் பூந்தானம்.

அப்போது தூரத்தில் குதிரைகள் காலடி சப்தமும், தீப்பந்தங்களின் வெளிச்சமும் தெரிந்தன. திருடர்கள் ஓடி விட்டனர். வந்தவர் குருவாயூர் திவான் மாங்காட்டச்சன். பூந்தானத்தின் வாயிலிருந்த துணியை எடுத்து கட்டுகளை அவிழ்த்து விடச் சொன்னார்.

"நன்றி, திவான் அவர்களே! உங்கள் உதவியால் நான் உரிய காலத்தில் நிர்மால்ய தரிசனம் பெற முடியும். திருடர்களிடமிருந்து காப்பாற்றியதற்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்" என்றார் பூந்தானம் மனம் நெகிழ. "அதோ, உங்கள் நினைவாக கையிலிருக்கும் மோதிரத்தைக் கொடுக் கலாமே" என்றார் மாங்காட்டச்சன்.

திடுக்கிட்டார் பூந்தானம். பிறகு 'திருடர்கள் எடுத்துக் கொண் டிருந்தால் என்ன செய்திருப்போம்? எல்லாம் குருவாயூரப்பன் செயல்.

அவன் தான் மாங்காட்டச்சன் வடிவில் வந்து கேட்கிறான் என்றெண்ணிக் கொள்வோம்" என்று மனதை சமாதானப் படுத்திக் கொண்டு மோதிரத்தைக் கழற்றி மாங்காட்டச்சனிடம் கொடுத்தார். திவான் கோவில் வரை பூந்தானத்திற்குத் துணையாக வந்தார். "பட்டத்ரி கேட்டால் என்ன சொல்வது" என்ற கலக்கமும் ஏற்பட்டது. 'பட்டத்ரியின் அன்பு, திவானின் உதவி இரண்டில் எது அதிகம் என்று எடைப் போடவா முடியும்?" என்று மனசாட்சி கேட்டது.

அன்றிரவு அர்ச்சகர் கனவில் கண்ணன் தோன்றி, "நாளை நிர்மால்ய தரிசனத்துக்குப் பூந்தானம் வருவான். பூமாலைகளைக் களையும் போது என் பாதங்களுக்கிடையே ஒரு மோதிரம் இருக்கும். அதை அவனிடம் சேர்ப்பித்துவிடு" என்றான். அதேபோல் மோதிரம் இருந்தது. அர்ச்சகர் கனவைக் கூறி பூந்தானத்திடம் மோதிரத்தைக் கொடுத்தார்.

திவானான மாங்கட்டச்சன் உடல் நலக் குறைவால் ஒரு வாரமாய் படுத்திருக்கிறார்" என்ற செய்தியும் எட்டியது. "பட்டத்ரிக்குத் தரிசனம்



கொடுத்தீரே! எனக்குக் கிடைக்க வில்லையே என்று நினைத்தேன். மாங்கட்டச்சன் வடிவில் கண்டு கொள்ளாமல் இருந்து விட்டேனே " என உருகினார் பூந்தானம்.

இவ்வளவெல்லாம் நடந்தும் கூட பூந்தானத்தின் மேல் பட்டத்ரி பெரிய மதிப்பு வைத்திருக்கவில்லை. ஒருமுறை பட்டத்ரியிடம் "எந்த விதமாய் பகவானை சேவிக்க வேண்டும்?" என்று கேட்டார் பூந்தானம்.

நாராயண பட்டத்ரி இடக்காக பதில் சொன்னார். "பக்தி இருந்தால் போத்தினுடைய (எருமைக் கடா) வடிவத்தில் கூட தரிசிக்கலாம்" என்றார் பட்டத்ரி. பூந்தானம் பட்டத்ரி சொன்னதை வேத வாக்காகக் கொண்டு அப்படியே தியானிக்கலானார்....!

ஒரு நான் உச்சி கால பூஜைக்காக கோவிலில் உள்ள உற்சவ விக்ர ஹத்தை வெளியே எடுத்து வரும்போது வெளியே தட்டியது.... என்ன தட்டுகிறதென்று எவருக்கும் தெரியவில்லை... எப்படி எப்படியெல்லாமோ சாய்த்துப் பார்த்தனர். அப்போது பூந்தானம் நம்பூதிரி "இரண்டு பக்கமும் போத்தினுடைய கொம்பு இடிக்கிறது பாருங்கள். இப்படிச் சாய்க்க வேண்டும்"என சாய்த்து வெளியே கொண்டு வர வழி சொன்னார்.

ஸ்ரீ கிருஷ்ணர் அவர் தியானித்தபடி எருமைக் கடா வடிவத்தில் எழுந்தருளி இருந்தார் என்பது அசரீரி மூலம் அனைவருக்கும் புரிந்தது. அப்போது அங்கே தரிசனத்துக்காக வந்திருந்த பட்டத்ரி நாணித் தலை குனிந்தார். 'அப்ரமேயோ ஹ்ருஷி கேஸ: பத்மநாபோ மரப்பிரவு'. பூந்தானம் நம்பூத்ரி சகஸ்ரநாம ஸ்லோகங்களுக்கு விளக்கம் சொல்லிக் கொண் டிருந்தார்.

கேட்டுக் கொண்டே வந்த நாராயண நம்பூத்ரி "பூந்தானம்.... அது மரப் பிரபு அல்ல.... அமரப் பிரபு.... தேவர்களின் தலைவனே என்று பொருள். ஸமஸ்கிருதம் தெரியாதவனெல்லாம் அரை குறையாய் படித்துவிட்டு அர்த்தம் சொன்னால் இப்படித்தான் இருக்கும்.... நாராயணா... என்றன் குருவாயூரப்பா...." என்று தலையில் தட்டிக் கொண்டார்.

பூந்தானத்திற்கு கண்ணில் நீர் கட்டிக் கொண்டது. "கிருஷ்ணா! என்னை ஏன் இப்படி அறிவிலியாய் படைத்தாய்" என்று மனதிற்குள்

மறுகினார். அப்போது கர்ப்பக்கிரஹத்திலிருந்து, "நம்பூதிரி அமரப் பிரபு என்று சொல்வதை விட மரப் பிரபு என்று சொல்வது தான் பொருத்த மானது. மரத்திலிருந்து வந்தவன் நான்.... தூண்ண மரத்தால் செய்யப்பட்டது தானே! பூந்தானம் என் நரசிம்மாவதாரத்தைக் கற்பனையில் கண்டு சொல்கிறான்.... அப்படித் தானே பூந்தானம்..."

பட்டத்ரி, பூந்தானம் இருவருமே சன்னதியில சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்துக் கண்ணீர் பெருக்கினர். "குருவாயூரப்பா! எத்தனை முறை குட்டு வாங்கியும் நான் திருந்தவில்லையே!" என்று பட்டத்ரியும், "எனக்காகப் பரிந்து வர நீயிருக்கிறாய் என்பதை உணராமல் நொந்து கொண்டேனே....! உன் கருணையே கருணை" என்று பூந்தானமும் உருகினர்.

கூடியிருந்த கூட்டமும் இந்த அதிசயத்தைக் கண்டு பூந்தானததைக் கொண்டாடின. நாராயணீத்தில் ஒவ்வொரு தசகத்தின் கடைசி ஸ்லோகத்திலும் "என்னை இந்த வியாதியினின்று காப்பாற்று' என்று மனமுருகப் பிரார்த்திப்பார் நாராயண பட்டத்ரி. ஒவ்வொரு ஸ்லோகத் திற்கும் பகவான் தலையை அசைத்து ஒப்புதல் அளித்த பிறகே அடுத்த ஸ்லோகத்திற்குப் போவார். ஒருநாள் பகவான் தலையை அசைத்து அங்கீகரிக்கவில்லை. "குருவாயூரப்பா... இதில் என்ன குற்றம் என்று புரியவில்லையே" என்று மெய்யுருக பிரார்த்தித்தார் பட்டத்ரி.

ஸ்ரீ கிருஷ்ணர் புன்னகையுடன் "பூந்தானத்திடம் கேள்; விளக்கு வான்" என்றார். பட்டத்ரி தனது ஆஜானுபாகுவான தோற்றமும் சிறுத்துவிட்டது போல் உணர்ந்தார். சமஸ்கிருதம் தெரியாதவன்; தன்னைப் போல் பெருமை மிகுந்த, சிறப்பான பாடல்களை இயற்றத் தெரியாத பாமரன் என்றெல்லாம் எண்ணிக் கொண்டிருந்த பூந்தானத்தை மேம்படுத்த பரந்தாமனின் விளையாட்டு என உணர்ந்து கொண்டார்.

பூந்தானத்திடம் தனது செய்யுளைப் படித்துக் காட்டி 'எங்கே தவறு' என வினயமாகக் கேட்டார். "வைகுண்டத்தின் ஒளி வெள்ளமே! சுற்றுக்கரசிகள் சூழ அருள் தருபவளே! நிகரில்லா சௌந்தர்ய லக்ஷ்மியே! மாற்றாத செல்வத்தைக் கொடுப்பவளே! திருமாலில் பாதகமலங்களுக்கு அருகிலேயே சதா இருக்க ஆசைப்படுபவளே! என்னையும் உன் அருகில் அழைத்துக் கொள்ளக் கூடாதா?" என்று விண்ணப்பிப்பது போல் பாடி

இருக்கிறீர்கள்! இதிலே பரந்தாமன் பெருமை இல்லை... மகாலக்ஷ்மியின் அருளும், வைகுண்டத்தின் மகிமையும்தான் இருக்கிறது. திருமாலின் பெருமையைக் கூறாத இந்த ஸ்லோகத்தை பரந்தாமனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை!" என்றார் அன்புடன் பூந்தானம். "அப்படியானால் இதை நீக்கி விட்டு புதிதாக வேறு பாடட்டுமா?" என்று பட்டத்ரி கலக்கத்துடன் கேட்க, "அதெல்லாம் வேண்டாம். ஒரு சிறு திருத்தம் செய்தால் போதும். 'விபவா' என்ற இடத்தில் 'விபவம்' என்று மாற்றிப் பாடினால், 'அப்பேற்பட்ட லக்ஷ்மியையே மார்பில் தாங்கும்' என்ற எம்பெருமானின் பெருமையாகி விடும்"என்றார் துளிகூட கர்வமில்லாமல்.

நாராயண பட்டத்ரி ஆச்சரியப் பட்டார். இந்த சிறுவிஷயம் தன் புத்திக்கு எட்டவில்லையே' என்று வெட்கப்பட்டார். பூந்தானத்தைக் கொண்டாடி விட்டு மாற்றிப் பாடினார். உடனே குருவாயூரப்பன் தலையை அசைத்து ஒப்புதல் அளித்து அந்த ஸ்லோகத்தை ஏற்றுக் கொண்டார்.

மஞ்சுளா என்ற பக்தை தினமும் இரவு அத்தாள பூஜைக்கு மாலைகள் கட்டிக் கொடுப்பாள். ஒரு நாள் மஞ்சுளா வரும்போது பூஜை முடிந்து நடை சாத்தி விட்டார்கள. சோதனை போல் நேரமாகி விட்டதே என்று பதற்றத்தோடு ஓட்டமும், நடையுமாய் வந்தும் பிரயோஜனமில்லையே என



வருந்தி கண்ணீர் விட்டாள் மஞ்சுளா. அப்போது அங்கு வந்த பூந்தானம் "பூஜை முடிந்து கோவில் சார்த்தப் பட்டதே என்ற கவலைப் படாதீர்கள். கோயிலுக்கு நேர் கிழக்கே இருக்கும் அந்த ஆலமரத்தடியில் குருவாயூரப் பனை நினைத்துக் கொண்டு அந்த மாலையை வைத்து விட்டுச் செல்லுங்கள். மாலை கிருஷ்ணரிடம் சேர்ந்து விடும்" என ஆறுதலாகக் கூறினார். பூந்தானத்தின் கிருஷ்ண பக்தி அப்போது பிரசித்தி பெற்றி ருந்தது. அவர் சொன்னபடி மஞ்சுளா "குருவாயூரப்பா....உனக்கே சமர்ப் பணம்" என்று கூறி மாலையை ஆலமரத்தடியில் வைத்து விட்டு சென்று விட்டாள்.

மறுநாள் நிர்மால்ய தரிசனத்துக்கு மஞ்சுளாவும், பூந்தானமும் வந்திருந்தனர். தனது மாலை ஆலமரத்தடியில் காணாததையும், தரிசனத்தின் போது பகவான் மேல் இருப்பதையும் கண்டு ஆனந்தப் பட்டாள் மஞ்சுளா. தான் சார்த்தாமல் பகவான் மேல் புத்தம் புதிய மாலை எப்படி வந்தது என்றதிசயித்தார் அர்ச்சகர். ஆனால் அதை எடுக்க முடியவில்லை.

"மஞ்சுளவின் மாலையைக் களைந்து விடுங்கள் கண்ணா" என்று பூந்தானம் சப்தமாகக் கூற, மாலை 'தொப்'பென்று கீழே விழுந்தது. அர்ச்சகரும், கூடியிருந்தவர்களும் நடந்தவைகளைக் கேட்டு, "பூந்தானம் வாக்கு கண்ணன் வாக்காயிருக்கிறது. மஞ்சுளாவுக்கு பகவான் அனுக்ரஹம் கிடைத்தது" எனக் கொண்டாடினர். இப்படி மாலை சார்த்தி வழிபட்ட மஞ்சுளா முக்தியடையும் போது கழுத்தில் மாலையாகவே ஆகிவிட்டாள். அவள் மாலையை வைத்து வணங்கிய ஆலமரம் 'மஞ்சுளால்' என்று இன்றும் பெயர் பெற்று பக்தியின் அடையாளமாக விளங்குகிறது.

பூந்தானம் இருந்த ஊரின் பழைய பெயர் 'திருமரத்தாங்குன்று' குருவாயூருக்கு அவரால் தினமும் போக முடியாதபடி உடல் தளர்ந்து விட்டது. அப்போது ஸ்ரீ கிருஷ்ணர் அவரது கனவில் தோன்றி, "இங்கேயே ஒரு ஆலயம் ஏற்படுத்தி என்னை பிரதிஷ்டை செய்து வழிபடும். இங்கேயே நான் உமக்கருள் செய்ய வருகிறேன்" என்றருளினார். அதன் விபரத்தை அவர் ஊரில் சொல்ல நிதி வசூலித்து அங்கேயே ஸ்ரீ கிருஷ்ணருக்கு ஒரு கோயில் கட்டினர் ஊரார். அதற்கு 'இடப்புறத் தம்பலம்' என்று பெயர்.

அங்கே தினமும் மாலையில் பாகவதக் கதைகளைக் கூறுவார் பூந்தானம். நெடுநாள் கழிந்ததும் கனவில் கிருஷ்ணர் வந்து "பூந்தானம், வா... வைகுந்தம் பார்க்கலாம்' என்று அழைத்துச் சென்றார்.

வைகுண்ட வாசலில் இருந்த இரண்டு துவார பாலகர்களும் பூந்தானத்தை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தனர். பூந்தானம் "வைகுண்டத்தையே காவல்காக்கும் பெருமை பெற்ற நீங்கள் சாமான்ய பூலோக வாசியான என்னை நமஸ்கரிக்கலாமா" என நகர்ந்து கொண்டார். "சீடர்கள் குருவை வணங்குவதில் என்ன தவறு? எங்களுடைய இந்த பாக்கியம் நீங்கள் போட்ட பிச்சை" என்றார்கள் அவர்கள். "நான் எப்போது எப்படி உங்களுக்குக் குருவானேன்? உங்களைப் பார்த்த ஞாபகமும் எனக்கில்லையே" என்று விழித்தார் பூந்தானம்.

"உங்கள் வீட்டு வாசலில் இரு பலா மரங்களைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? தினமும் உங்களது பாகவத விளக்கங்களைக் கேட்டுக் கேட்டு எங்களுக்கு இந்த உயாந்த பதவி கிடைத்து விட்டது" என்று அவர்கள் கூறவும், பூந்தானத்தின் கனவு கலைந்தது. வாசலுக்கு விரைந்து சென்று பார்த்தார். இருபலா மரங்களும் வேரோடு வீழ்ந்து கிடந்தன. இந்த சொப்பனத்தை அன்றைய கதையில் சொல்லி குருவாயூரப்பன் கருணையை சிலாகித்தார்.

பூந்தானம் கொட்டியூர் சிவன் கோவிலில் பல பக்தர்களின் வேண்டுகோளுக்கிணங்கி பிரவசனம் செய்தார். ஒவ்வொரு நாளும் அன்றைக்கு நிறுத்திய இடத்தில் அடையாளம் வைப்பார். மறுநாள் பார்த்தால் மூன்று நான்கு பக்கங்கள் முன் தள்ளி அடையாளம் இருந்தது. நாம் தான் மறந்து போய் அப்படிப் பண்ணியிருப்போம் என நினைத்தார். ஆனால் தொடர்ந்து வந்த நாட்களிலேயும் இப்படியே நடந்தன.

பூந்தானம் விட்ட இடத்தை ஞாபகம் வைத்துக் கொண்டு கதை சொன்னார். அடையாளம் வைப்பதேயில்லை. அன்றிரவு கனவில் சிவபெருமான் வந்து, "பூந்தானம், உன் கதை சொல்லும் அழகை மீண்டும், மீண்டும் ரசிக்க நான்தான் அடையாளத்தை முன்னால் வைத்தேன். கதை சீக்கிரம் முடிந்து விடுமே" என்றார். பூந்தானம் அன்றிலிருந்து கதையை மேலும் விஸ்தாரமாகச் சொல்லலானார். "பூந்தானம், நாளை பகல் பன்னிரண்டு மணிக்கு உன்னை அழைத்துச்

செல்ல விமானத்தோடு வருகிறேன்" என்றார் பகவான். நித்திரை தெளிந்து எழுந்த பூந்தானம் இக்கனவை தெரிந்தவர், அறிந்தவர், வீட்டார், உறவினர் எல்லாரிடத்திலும் கூறினார்.

"பூந்தானம், பரம பாகவதர்.... சதா பாகவதம் படித்து, எழுதி, விளக்கம் சொல்வதால் கனவையெல்லாம் நிஜமென்று நம்பத் தொடங்கி விட்டாரே" என்று உற்றார் கவலையுற்றனர். "என்னை வருகிறாயா' என்று வேறு கேட்கிறார்" என்று மனைவி அங்கலாய்த்துக் கொண்டாள். "உன்னை மட்டுமா கேட்கிறார்... ஊரில் ஒருவர் பாக்கி இல்லை" என்றாள் பக்கத்து வீட்டுப் பெண்மணி.

"பீதாம்பரம், புதிய பூக்கள், குங்குமம் எல்லாம் பகவானுக்கு என்று எடுத்து வைத்தார். நிறைய சந்தனம் பன்னீர் விட்டு அரைத்து எடுத்துக் கொண்டார். பகவானுக்குப் பூசவேண்டும். 'பகவானுக்கு வாசனை சந்தனம் என்றால் ரொம்ப ப்ரீதி' என்று சொல்லிக் கொண்டார்.

வீடெல்லாம் பெருக்கி மெழுகி அழகழகாய் கோலமிடச் செய்து எல்லா இடத்திலும் தீபங்களேற்றி, வாழை, கமுகு, பாளை, மாவிலைத் தோரணங்கள் கட்டி,.... இவரது செய்கைகள் மற்றவர்களை 'பைத்தியம் முற்றி விட்டது' என்று பேச வைத்தது. அவர் வீட்டு வேலைக்காரி மட்டும் அவர் சொன்னபடி கிண்ணங்களில் வெண்ணெய், தயிர், பால், பாத்திரங்களில் பட்சணங்கள், பாயசம், பழங்கள் எல்லாம் எடுத்து வைத்தாள்.

"பைத்தியச் செய்கை என்றாலும் கூட பரம பாகவதசிரோன்மணி யாயிற்றே! இவர் சொன்னபடி செய்த மஞ்சுளாம்மா மாலையை பரந்தாமர் ஏற்றுக் கொள்ளவில்லையா? பலாமரங்கள் சாயவில்லையா? நாராயண பட்டத்ரி எத்தனை பெரிய பண்டிதர்...! இவரிடம் வந்து யோஜனை கேட்க வில்லையா? ஏதாவது அர்த்தம் இல்லாமல் வேலை சொல்ல மாட்டார். பின்னால் தான் புரியும்" என்ற தீர்மானத்தில் இருந்தாள் அவள். உரிய நேரம் வந்தது. விமானமும், விமானத்தில் இருந்த கண்ணனும் பூந்தானம் கண்ணுக்கு மட்டுமே தெரிந்தன.

"புஷ்பம், சந்தனம், குங்குமம், பீதாம்பரம் எல்லாவற்றையும் கொடு. நானே அணிந்து கொள்கிறேன்" என்றார் கண்ணன். அந்தக் குரல் வேறெவர் காதிலும் கேட்கவில்லை. "ஆகாயத்தை நோக்கி சந்தனத்தை, புஷ்பத்தை வீசுகிறார்... ஆனால் கீழே விழாமல் மறைந்து விடுகின்றது.

பீதாம்பரம் அந்தரத்தில் நிற்கிறது. பட்சணங்கள், பாயசம் எல்லாம் காலியாகிறது. ஏதோ இஷ்ணி சேஷ்டை" என்று மற்றவர் நினைக்க, வேலைக்காரி மட்டும் நடப்பதைப் புரிந்துக் கொண்டு மெய்மறந்து நின்றாள்.

பகவான் பூந்தானத்தின் கையைப் பிடித்து விமானத்தில் ஏற்ற பூந்தானம் வெளியே கை நீட்டினார். "வைகுண்டம் வர விரும்புகிறவர்கள் என் கைகளைப் பிடித்துக் கொள்ளுங்கள். விமானம் கிளம்பப் போகிறது" என்றார் பூந்தானம் உரக்க. மனைவி தயங்க, உறவினர் குழம்பி நிற்க, ஓடிவந்து கைபற்றிக் கொண்டாள் வேலைக்காரி. அவளது பூத உடல்அற்றுக் கீழே விழ, உயரத்தில் பூந்தானம் சரீரத்தோடும், வேலைக்காரி புதிய உடலோடும் ஸ்வர்க்கம் செல்வதை அனைவரும் கண்டு பிரமித்தனா. தங்களின் மதியீனத்தை எண்ணி வருந்தினர்.

உடலோடு வைகுண்டம் சென்ற பூந்தானத்தின் இந்த திவ்ய சரித்திரத்தை படிப்பவரும், கேட்பவரும், படிப்பிக்கச் செய்தவரும் குருவாயூரப்பன் அருளுக்குப் பாத்திரமாகி இம்மையில் எல்லா நலன்களும் பெற்று, புத்திர பௌத்ராதிகளோடு நீடுழி வாழ்ந்து மறுமையில் மோட்சத்தை அடைவர் என்பது திண்ணம்.

112. ஸ்ரீ ஜயதீர்த்தர்

ஸ்ரீமத்வாச்சாரியாருக்குப் பிரியமான சீடர்கள் நால்வர். அவர்கள் ஸ்ரீபத்மநாப தீர்த்தர், ஸ்ரீநரஹரி தீர்த்தர், ஸ்ரீ மாதவ தீர்த்தர், ஸ்ரீ அக்ஷோப்யிய தீர்த்தர்.

தனக்கு நிகரான பாண்டித்யம் பெற்றவர் எவருமில்லை என்று செருக்கோடு வந்தார் பண்டித வித்யாரண்யர். அக்ஷோப்பிய தீர்த்தரை வாதுக்கழைத்தார். முளுபாகலில் ஒருமலைப்பாறையில் கரித்துண்டால் ஸ்ரீ நரசிம்ம மூர்த்தியை வரைந்தார் அக்ஷேப்பியர். வாதத்தில் அக்ஷோப்பியரே வென்றார். அக்ஷோப்பியர் வரைந்த நரசிம்மர் நாள்தோறும் வளர்ந்தார். தினமும் நரசிம்மரை அக்ஷோப்பியர் பூஜிக்க, கரிக்கோடுகள் மறைந்து பாறையில் நரசிம்மர் உருவமாய் வெளிப்பட்டார்.

அக்ஷோப்பிய தீர்த்தர் க்ஷேத்ராடனம் புறப்பட்டு இறுதியாகப் பண்டரி புரத்தில் தங்கி விட்டார். தினமும் ஸ்ரீராமரை பூஜித்தபின் பாண்டுரங்கனை தரிசிக்க வருவார்.

ஒருநாள் "பாண்டு ரங்கா! ஸ்ரீராமனை எனக்குப் பின் பூஜிக்க ஒரு சீடனைக் கொடு என்று தினமும் வேண்டுகின்றேனே! அது உன் செவி களில் விழவில்லையா? எனக்கும் வயதாகி விட்டது. எனக்குப் பின் ஸ்ரீமடத்தின் பொறுப்புகளை யார் நிர்வகிப்பார்?' என்று மனம் உருகி வேண்டியவர், அசதியில் அப்படியே உறங்கி விட்டார்.

பாண்டு ரங்கர் அவர் கனவில் தோன்றி, "அன்ப! வருந்தாதே! நாளைய தினம் பீமா நதிக்கரைக்கு பல குதிரை வீரர்கள் வருவார்கள். அவர்களில் ஒருவன் குதிரையிலிருந்தபடியே தண்ணீர் குடிப்பான். அவனே ஸ்ரீமடத்தின் வருங்கால சீடன். மத்வரின் நூல்களுக்கு உரை எழுதுபவனும் அவனே" என்று கூறி மறைந்தார்.

ஸ்ரீ அக்ஷோப்பியர் கனவு கலைந்து எழுந்தார். மகிழ்ச்சியுடன் மடத்துக்குச் சென்றார். மறுநாள் அதிகாலை எழுந்து நீராடி' சீக்கிரமே பூஜை முடித்து பீமா நதியில் போய் அமர்ந்து கொண்டார். உச்சிப் பொழுது நெருங்கியது.

அப்போது பல குதிரைகள் வரும் காலடியோசை கேட்டது. கனவு நிஜம் தான், பிரமையில்லை என்று ஆனந்தித்தார் அக்ஷோப்பியர்.

குதிரைகளை அதன் மேலிருந்த வீரர்கள் பீமா நதியில் செலுத்தினர். சில குதிரைகள் நதியைக் கடந்துவிட்டன. ஒரு குதிரை வீரன் தன் குதிரையை நதியின் ஆழமான பகுதிக்குச் செலுத்தினான். குதிரை முகத்தை உயர்த்திக் கொண்டது. குதிரையிலிருந்தபடியே குனிந்து நீரைப் பருகினான் வீரன்.

இதை கவனித்த அக்ஷோப்யர் வீரனை அருகில் வரும்படி சைகை செய்தார். வீரன் குதிரையை விட்டிறங்கி நடந்து வந்தான்.

"அப்பா! குதிரை மேலிருந்து நீரைப் பருகுபவனே ஸ்ரீமடத்தின் வாரிசு, ஸ்ரீராமனை பூஜிக்கத் தகுந்தவன்' என்று நேற்று என் கனவில் பண்டரி நாதர் கூறினார். அதனால் நீ மடத்துக்கு வந்து சன்யாசம் வாங்கிக் கொண்டு பொறுப்பை ஏற்றுக் கொள். ஸ்ரீ மத்வரின் அருள் கிட்டும்" என்றார்.

"குருநாதா! ஸ்ரீமடத்தின் நிர்வாகத்தை நடத்தும் தகுதி எனக்கு உண்டா? உங்கள் கனவில் வந்து சொன்ன பாண்டுரங்கர் என் கனவில் வந்து ஏன் சொல்லவில்லை? ஒருத்திக்கு இரண்டு பேராய் கலியாணம் கட்டி வைத்திருக்கிறார்கள். துறவு ஏற்பது நியாயமாகுமா?" என்றான் வீரன்.

"சரி. இன்று இரவு ஸ்ரீமடத்தில் தங்கி இரு. பாண்டுரங்கர் உன் கனவிலும் வந்து சொல்வார்" என்றார் அக்ஷோப்பியர்.

வீரன் அவரோடு ஸ்ரீமடத்துக்குச் சென்றான். ஸ்ரீராமனின் பூஜையை முடித்து பிரசாதத்தைக் கொடுத்து சாப்பிடச் சொன்னார். சாப்பிட்டு அங்கேயே படுத்து உறங்கினான்.

அவனது கனவில் ஸ்ரீ பாண்டுரங்கர் தோன்றி, "முன் பிறவியில் நீ ஒரு காளை மாடாக ஸ்ரீ மத்வரின் மடத்தில் இருந்தாய்! தினமும் அவருடைய உபதேசங்களைக் கேட்ட உனக்கு இப்பிறவி வாய்த்தது.

உன்னால் மத்வரின் நூல்களுக்கு உரை எழுதமுடியும். என் சகோதரி யின் அருளும் உனக்குக் கிடைக்கும்" என அருள் புரிந்தார். கனவு கலைந்து எழுந்தவன் குருதேவரின் பாதம் பணிந்து தன் கனவைக் கூறி இன்முகத்துடன் சன்யாசம் கொடுக்கும்படி வேண்டினான். அக்ஷோப்யர் முறைப்படி அவனுக்கு சன்யாசம் கொடுத்து ஸ்ரீஜய தீர்த்தர் என்ற பெயரையும் சூட்டினார்.

இச்செய்தி அவரது பெற்றோர்களுக்கு எட்டியது. தந்தை கொதித்தார். படைவீரர்கள் புடைசூழ மடத்துக்கு வந்தார்.

'வாலிபனான என் புதல்வனை மொட்டை அடித்து சன்யாசம் கொடுத்து விட்டீர்களே! உங்களைக் கொல்லாமல் விடமாட்டேன்" என்று அச்சுறுத்தினார்.

ஜயதீர்த்தர், "பரந்தாமன் என்னைத் தேர்ந்தெடுக்க நான் புண்ணியம் செய்திருக்க வேண்டும். நானே விரும்பி துறவு மேற்கொண்டிருக்க குரு நாதரை குற்றம் சொல்லலாமா? என்றார்.

அக்ஷோப்பியர், "ஐயா! தங்கள் மகனைத் தாங்கள் தாராளமாக அழைத்துச் செல்லலாம்" என்றவர், ஜயதீர்த்தரைப் பார்த்து, "அவரோடு இல்லத்திற்குச் செல். பாண்டு ரங்கன் பார்த்துக் கொள்வான்" என்றார்.

ஜயதீர்த்தர் தந்தையுடன் இல்லம் சென்றார். நறுமண நீரால் அவரை குளிக்கச் செய்து புத்தாடை, ஆபரணங்கள், சரிகைத் தலைப்பாகை அணிவித்து, அறுசுவை விருந்திட்டு, படுக்கை அறையை அலங்கரித்து மனைவியரை அனுப்பி வைத்தனர்.

பஞ்சுமெத்தையில் அமர்ந்திருந்த கணவனைக் கண்ட முதல் மனைவி, 'ஆ' என்றலறினாள். அவர் அவள் கண்களுக்கு ஐந்து தலை நாகமாகத் தெரிந்தார். இரண்டாம் மனைவியின் கண்களுக்கு அவர் தீ ஜ்வாலைக்குள் அமர்ந்திருப்பது போல் தெரிந்ததால் மயக்கமானாள்.

பெரியவளின் கூச்சல் கேட்டு பெற்றோரும், உறவினரும் விரைந்து வந்தனர். இளையவளின் மயக்கத்தைத் தெளிவித்து இருவர் கண்டதையும் கேட்டறிந்து நடுங்கினர். சன்யாசி, இனி சம்சாரியாக முடியாது என்பதைப் புரிந்து கொண்டனர். ஸ்ரீ ஜயதீர்த்தரை அக்ஷோப்ய தீர்த்தரிடம் ஒப்படைத்து தங்கள் பிழையை மன்னிக்குமாறு வேண்டினார் தந்தை.

பாரதநாடு முழுவதும் க்ஷேத்ராடனம் செய்தார் ஜயதீர்த்தர். வாதத்துக்கு அழைத்தவர்களோடு வாதிட்டு வென்றார். சிறிது காலம் பீமா நதிக்கரையில் தவம் செய்தார். அப்போது துர்க்கை தோன்றி ஒரு கொட்டைப்பாக்கையும், ஒரு எழுத்தாணியையும் கொடுத்து ஆசீர்வதித்தாள்.

அதன்பிறகு அந்த எழுத்தாணி கொண்டு மத்வரின் நூல்களுக்கு உரை எழுதினார். தவறு நேர்ந்தால் கொட்டைப்பாக்கால் அழிப்பார். அது மறைந்துவிடும்!

ஸ்ரீ ஜயதீர்த்தரின் உரை நூல்களே ஸ்ரீ பாதராஜர், ஸ்ரீ வியாசராஜர், ஸ்ரீராகவேந்திரர் ஆகியவர்களுக்கு தெளிவான விளக்க நூல் எழுத உதவியாக இருந்தது.

ஸ்ரீஜயதீர்த்தர் கி.பி.1388ம் ஆண்டு ஆடிமாதம், கிருஷ்ணபட்ச பஞ்சமி அன்று பிருந்தாவன பிரவேசம் செய்தார்.

113. ஸ்ரீ இராமானுஜர்

ஸ்ரீ பெரும்பூதூரிலுள்ள ஆசூரி கேசவ சோமயாஜி –காந்திமதி தம்பதிகள் நீண்டகாலம் சந்தான பாக்கியம் இல்லாமலிருந்து திருமாலை வேண்ட, ஆதிசேஷன் அவதாரமாய் கி.பி.1017ம் ஆண்டு, பிங்களவருஷம், சித்திரை மாதம், சுக்ல பட்சம், பஞ்சமிதிதி, திருவாதிரை நட்சத்திரம், வியாழக்கிழமையில் ஸ்ரீராமானுஜர் பிறந்தார்.

தாய்மாமனான ஸ்ரீசைல பூரணர் செய்தி கேட்டு விரைந்து வந்தார். லக்ஷ்மணன் என்று பெயர் சூட்டினார். சோமயாஜி தாமே குருவாக இருந்து வேத சாஸ்திரங்களைக் கற்பித்தார். உரியவயதில் உபநயனம் நடந்தது. உறவுப் பெண்ணான தஞ்சம்மாளை அவரது 16–வது வயதில் திருமணமும் செய்வித்தார். அதன்பிறகு சோமயாஜி சீக்கிரமே இறைவனடி சேர்ந்தார்.

'தந்தையோடு கல்விபோம்' என்ற வாக்கை பொய்ப்பிக்க எண்ணிய ராமானுஜர் திருப்புட்குழியிலுள்ள யாதவப் பிரகாசர் என்ற பண்டிதரிடம் மாணவராகச் சேர்ந்தார். அவருடன் அவரது ஒன்றுவிட்ட சகோதரரான

கோவிந்தரும் கல்வி பயின்றார். யாதவப் பிரகாசரின் உபமானங்கள் சரியில்லை யென்றால் தைரியமாக மறுப்புக் கூறுவார் இராமானுஜர். அதோடு சரியான விளக்கமும் சொல்வார். ஆரம்பத்தில் மகிழ்ந்த குருநாதர் போகப் போக வெறுப்பும், குரோதமும், பொறாமையும் கொண்டார். மற்ற மாணவர்கள் தன் திறமையைக் குறைத்து மதிப்பிடு வார்களே என்று பயந்தார்.

இந்த சமயத்தில் காஞ்சி இளவரசியை பேய் பிடித்துக் கொண்டது. மந்திரவாதிகள், ஜபம், ஹோமம் எதுவும் பயனற்றுப் போயிற்று. 'யாதவப் பிரகாசரால் பேயை ஒட்ட முடியும்' என்று பலரும் கூற யாதவப் பிரகாசரை அழைத்தார் அரசர். மாணவர்கள் புடைசூழ வந்தார் யாதவப் பிரகாசர்.

யாதவப் பிரகாசர் மந்திரம் ஜபித்தார். பேய் அட்டகாசமாய் சிரித்து, "உனது மந்திரம் என்னிடம் பலிக்காது. உன்னுடன் வந்திருக்கும் இராமானுஜனிடம் மட்டும்தான் எனக்கு பயம்' என்றது. தனக்கு அவமானம் ஏற்படாதிருக்க இராமானுஜனை அழைத்து "இராமானுஜ! எனக்கு அயர்ச்சியாக இருக்கிறது. என் வல்லமையை உனக்கு தத்தம் செய் கிறேன். என் ஆசியுடன் இந்த அரசகுமாரியைப் பிடித்திருக்கும் பிரம்ம ரக்ஷஸை விரட்டு" என்றார்.

அப்போதும் தோல்வியை ஏற்காத வறட்டு கௌரவம் அவரை விடவில்லை! இராமானுஜர் மந்திரங்களை ஜெபித்து பிரம்ம ரக்ஷஸை விட்டு விலகும்படி வேண்டினர். பேயும் சாபம் நீங்கு[illegible]காலம் வந்ததால் அரசகுமாரியை விட்டு விலகியது.

அரசனும், அரசியும் மற்றுமுள்ளோரும் ராமானுஜரைப் புகழ்ந்தனர். இதைக் கண்டு யாதவப் பிரகாசரின் பொறாமை அதிகமாயிற்று. "இனி மேல் உனக்குப் பாடம் சொல்லித் தர முடியாது. விட்டு விலகி விடு" என்று கூறிவிட்டார்.

அப்படியும் யாதவப் பிரகாசர் மனம் திருப்தியடையவில்லை. அவரைக் கொன்று விட முடிவு கட்டினார். தனக்கு உண்மையான சில சீடர்களைக் கூப்பிட்டு "இராமானுஜனை சமாதானம் செய்துஅழைத்து வாருங்கள். அதிகமாகப் பேசி ஏதும் உளறி விடப்போகிறீர்கள்!" என்று எச்சரித்து அனுப்பினார். குரு கட்டளைப்படி பிரிந்து சென்ற இராமானுஜர் மீண்டும்

குருவுடன் இணைந்தார். சில நாட்களில் காசிக்குப் புறப்பட திட்டமிட்டார் யாதவப் பிரகாசர்.

கங்கையில் நீராடும் போது இராமானுஜரை தண்ணீரில் அமிழ்த்திக் கொன்று விடுவதென்பது குருவின் திட்டம். அவர் அந்தரங்க சீடர்களோடு திட்டமிடும் போது இராமானுஜரின் ஒன்றுவிட்ட சகோதரன் கோவிந்தன் இதைக் கேட்டுக் விட்டான். இராமானுஜரிடம் இதைத் தெரிவிக்க அவனுக்கு சந்தர்ப்பம் வாய்க்கவில்லை!

தீர்த்த யாத்திரை தொடங்கியது. இராமானுஜர் வெகு உற்சாகமாக இருந்தார். விந்திய மலையில் சில நாட்கள் தங்கினர். ஒருநாள் விடியுமுன் இராமானுஜர் காலைக் கடன்களை முடிக்கச் செல்லும் போது கோவிந்தனும் சப்தமிடாமல் தொடர்ந்தான். வெகுதூரம் வந்த பிறகு யாதவப் பிரகாசரின் திட்டத்தைக் கூறி, "உயிர் பிழைக்க நினைத்தால் ஓடி விடு. யாரும் எழுந்திருக்கு முன் நான் போக வேண்டும்" என்றார்.

'எல்லாம் இறைவன் செயல்' என்றெண்ணிய இராமானுஜர் கோவிந் தனுக்கு நன்றி கூறி விந்திய மலைக் காட்டுக்குள் ஓடலானார்.

விடிந்ததும் இராமானுஜரைக் காணாமல் சிஷ்யர்கள் எங்கும் தேடினர். தூங்கிக் கொண்டிருந்த கோவிந்தனை எழுப்பி விசாரித்தனர்.

"இராமானுஜனைக் காணோமா? பலி கொடுக்க காட்டுவாசிகள் தூக்கிச் சென்றிருப்பரோ? விடிகாலையில் எழுந்து நதிக்கரைக்குப் போயிருப்பானோ? அப்போது புலி, சிங்கம் ஏதாவது அடித்துச் கொன்றிருக்குமோ?" என்றெல்லாம் விசனப்பட்டான்.

யாதவப் பிரகாசருக்கு உள்ளூரப் பெரும் சந்தோஷம். பகை அழிந்தது என்று திருப்தியடைந்து பயணத்தைத் தொடர்ந்தார். முள்ளும், கல்லும் நிறைந்த காட்டில் வெகுதூரம் வந்த ராமானுஜனுக்கு வழி தெரியவில்லை! பசியும், தாகமும் வருத்த மயக்கமானார்.

மயக்கம் தெளிந்த அவர்முன் ஒரு வேடனும், அவன் மனைவியும் இருந்தனர். "குழந்தாய்! நாங்கள் காஞ்சிபுரம் போகிறோம். நீ எங்களோடு காஞ்சிபுரம் வரை வரலாம். அங்கிருந்து நீ போக வேண்டிய இடத்துக்குப் போகலாம்" என்றனர். மகிழ்ச்சியோடு அவர்கள் பின் சென்றார் இராமானுஜர்.

மறுநாள் விடிந்ததும் வேடுவத் தம்பதிகளைக் காணவில்லை. அங்கு மிங்கும் தேடினார். அப்போது சில வழிப்போக்கர்களைக் கண்டார். அவர்கள் பின்னால் சென்றார். அவர்கள் திரும்பி ஊர், பெயர் விசாரித்ததும் 'இது எந்த இடம்?' என்று கேட்டார். 'இது காஞ்சிபுரம் போகும் பாதை' எனவும், வேடுவத் தம்பதிகளாக வந்தது காஞ்சி வரதரும், பெருந்தேவி தாயாரும் என்பதைப் புரிந்து கொண்டார். காஞ்சிபுரத்திற்கு ஒரே நாளில் கொண்டு சேர்த்த பெருமாளுக்கு மனத்துள் பாமாலை சூட்டினார்.

காட்டிலே தண்ணீர் வேண்டுமென்று கேட்ட பெருந்தேவித் தாயாருக்கு தினமும் திருமஞ்சனதமாட்ட நீர் இறைத்துக் கொடுத்தார். காசிக்குப் போய் திரும்பி வந்த யாதவப் பிரகாசர் இராமானுஜர் உயிரோடு இருப்பது கேட்டு திடுக்கிட்டார். கோவிந்தரோ மனத்துள் மகிழ்ந்தார்.

காஞ்சி பூரணர் எனப்படும் திருக்கச்சி நம்பிகனிடம் அளவற்ற அன்பு கொண்டிருந்தார் இராமானுஜர். திருக்கச்சி நம்பிகளின் குரு ஸ்ரீ ஆள வந்தார். அவர் முதுமையடைந்ததால் தகுந்த வாரிசு வேண்டும் என்று ஸ்ரீ ரங்கநாதரிடம் தினமும் முறையிட்டு வந்தார்.

ஒருமுறை காஞ்சியில் நீர் கைங்கர்யம் செய்துவரும் இராமானுஜரை அவர் சந்தித்தார். அவருடைய குணம், நடத்தை பற்றி திருக்கச்சி நம்பிகளிடம் விசாரித்து அறிந்தார். அவரையே தன் வாரிசாக மனத்துள் வரித்திருந்தார்.

மகாபூரணன் என்ற சீடனிடம் காஞ்சிபுரம் சென்று இராமானுஜரை அழைத்து வருமாறு பணித்தார். மகாபூரணன் என்ற பெரியநம்பி காஞ்சி சென்று 'ஆச்சார்ய பீடம் உனக்காகக் காத்திருக்கிறது' என்று கூறினார்.

ஆனால் இராமானுஜர் வருவதற்குள் யமுனைத்துறைவர் என்ற ஆளவந்தாரின் பூத உடல் மட்டுமே எஞ்சி நின்றது. காவிரிக் கரைக்கு விரைந்து வந்த இராமானுஜர் ஆளவந்தாரின் அறவுரைகளைக் கேட்க முடியவில்லையே என்று வருந்தினார். ஆளவந்தாரின் பூத உடலின் வலது கையில் மூன்று விரல்கள் மட்டும் மூடியபடி இருந்தன.

இதனால் ஆளவந்தாருக்கு ஏதோ மனக்குறை இருக்கவேண்டும் என்று யூகித்தார்.

சீடர்களிடம் அதுபற்றி விசாரித்தார்.

1. பிரம்ம சூத்திரத்திற்கு ஆழ்வார்கள் மற்றும் ஆளவந்தார் உள்ளம் உருகும்படி விசிஷ்டாத்வைத முறையில் விளக்க உரை எழுத வேண்டும்.

2. பராசரர், வியாசர் இருவர் பெயர் விளங்க இரு பிள்ளைகளுக்குச் சூட்ட வேண்டும்.

3. நம்மாழ்வாரின் திருவாய் மொழிக்கு ஒரு வியாக்யானம் செய்ய வேண்டும்.

இந்த மூன்றையும் நம்மால் செய்ய முடியவில்லையே என்ற குறை குருநாதருக்கு உண்டு என்று அறிந்து கொண்டார்.

"இம்மூன்றையும் நான் நிறைவேற்றுவேன். உங்கள் ஆசியும், அருளும் எனக்கு உதவுமானால் உங்களின் மடங்கிய விரல்கள் நிமிரட்டும்" என்றார் இராமானுஜர்.

என்ன ஆச்சரியம்! ஆளவந்தாரின் மூடிய விரல்கள் திறந்து கொண்டன. கூடி இருந்தவர்கள் இராமானுஜரை பயபக்தியோடும், மரியாதையோடும் பார்த்தனர்.

அதன்பின் ஆளவந்தாரின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. தன் வாக்குப்படி ஆளவந்தாரின் மூன்று கோரிக்கைகளையும் நிறைவேற்றினார் இராமானுஜர்.

திருக்கச்சி நம்பியிடம் அளப்பரிய பிரியம் கொண்டிருந்த இராமானுஜர் அவர் தன் இல்லத்தில் ஒரு வேளையாவது உணவருந்த வேண்டும் என்று விரும்பினார். திருக்கச்சி நம்பியும் அதற்கு ஒப்புக் கொண்டார்.

இராமானுஜரின் மகிழ்ச்சி சொல்ல முடியாததாக இருந்தது. மனைவியை அறுசுவை உணவு தயாரிக்கச் சொன்னார். இராமானுஜருக்குக் குருவாயிருக்கத் தனக்குத் தகுதி இல்லை என்று ஒதுங்கி இருந்தவர் நம்பிகள். அவரது சேஷத்தைச் சாப்பிட்டால் தன் ஜென்மம் கடைத்தேறும் என்று நம்பியிருந்தவர் இராமானுஜர்.

குருநாதர் வரவில்லையே என்று அவரை அழைக்க தெற்கு வீதி வழியே இராமானுஜர் போக, இதை அறிந்திருந்த திருகச்சி நம்பிகள்

வடக்குத் தெரு வழியாக இராமானுஜர் இல்லத்தை அடைந்தார். தாம் வந்திருப்பதை வாசலில் நின்றே தெரிவித்தார்.

"அம்மணி! தங்கள் கணவர் சாப்பிட அழைத்திருந்தார். எனக்குக் காத்திருக்க நேரமில்லை. உணவு படைத்தால் உண்டு செல்வேன்" என்றார்.

தஞ்சம்மாள் ஆசாரம் பார்ப்பவள். அவருக்கு இடைக்கழியிலேயே இலை போட்டுப் பரிமாறினாள். திருக்கச்சி நம்பிகள் சாப்பிட்டதும் புறப்பட்டு விட்டார். அந்த இலையை எடுத்துப் போட்டு இடத்தை சுத்தம் செய்துவிட்டுக் குளித்தாள் தஞ்சம்மாள்.

அப்போது திருக்கச்சி நம்பிகளைக் காணாமல் முகவாட்டத்தோடு வந்த இராமானுஜர் மனைவி மறுபடி நீராடுவதற்கான காரணத்தைக் கேட்டார்.

"திருக்கச்சி நம்பிகள் வந்தார். சாப்பாடு போட்டேன். அவா வைசியாளாச்சே! எச்சல் இலை எடுத்து சுத்தம் பண்ணினதாலே குளிக்க வேண்டியதாப்போச்சு!"

இந்த பதில் அவர் மனதை ரணமாக்கியது. தானே இருந்து நம்பிகளை உபசரிக்க முடியவில்லையே என்ற வருத்தம் வேறு. "ஒவ்வொருவரும் தன் வீட்டில் அவரது காலடி படாதா என்று ஏங்கிக் கிடக்க நீ இப்படிப் பேசுகிறாயே! மனிதனின் ஒழுக்கம், பண்பு, கல்வி, மரியாதை இவற்றைப் பார்க்காமல் சாதியை வைத்தா எடை போடுவது?" என்று கண்டித்தார்.

மகாபூரணர் இராமானுஜரை சந்திக்க ஸ்ரீரங்கத்திலிருந்து மனைவியுடன் காஞ்சிக்குப் புறப்பட்டார். தன் ஞானப்பசிக்கு இரைதேட இராமானுஜர் மகாபூரணரைத் தேடி ஸ்ரீரங்கத்துக்குப் புறப்பட்டார். இருவரும் மதுராந்தகத்தில் சந்தித்துக் கொண்டனர்.

"இராமானுஜரே! ஆளவந்தார் தங்களுக்கு உபதேசிக்க சில மந்திரங்களை எனக்குக் கற்றுக் கொடுத்தார். அதைத் தங்களுக்கு உபதேசிக்கவே நான் புறப்பட்டு வந்தேன்" என்றார்.

அவரைக் காஞ்சிபுரத்தில் தன் இல்லத்தருகிலேயே தங்கலாம் என்று கூறி அழைத்து வந்தார் இராமானுஜர். திருக்கச்சி நம்பிகள் அவரை வரவேற்று பல விஷயங்களையும் பேசி மகிழ்ந்தார்.

இராமானுஜர் பக்கத்திலேயே அவர் தங்க ஒரு வீட்டை வாடகைக்குப் பேசி முடித்தார். பெரிய நம்பியிடம் பிரபந்த பாடல்கள், வியாச சூத்திரங்கள் முதலியவற்றைக் கற்றுக் கொண்டார். ஒருநாள் ஒரு ஏழை வைஷ்ணவர் 'பசிக்கிறது' என்று வந்தார். "ஐயா! என்வீடு உங்களுக்குத் தெரியுமல்லவா? அங்கே போய் என் மனைவியிடம் உங்களுக்கு நான் வயிறார உணவிடச் சொன்னதாகச் சொல்லுங்கள்" என்று கூறி அனுப்பினார்.

அந்த ஏழையும் அப்படியே போய் கேட்டார். " என் கணவருக்கு வேறு வேலையில்லை! வந்தவர்களுக்கெல்லாம் வடித்துக் கொட்ட இது சத்திரமா? நான் இப்போது தான் சாப்பிட்டேன். பருக்கை சாதமும் இல்லை" என்று சொல்லிவிட்டாள். கோவிலிலிருந்து வீட்டுக்கு வந்து கொண்டிருந்த இராமனுஜர் எதிரே வந்த அவரிடம் "அதற்குள்ளா சாப்பிட்டு விட்டீர்?" என்று கேட்டார். தஞ்சம்மாள் சொன்னதை அப்படியே சொன்னார் அவர்.

திரும்பி கோவிலுக்கு அவரோடு சென்று மடைப்பள்ளியிலிருந்து பிரசாதம் வாங்கிக் கொடுத்து அனுப்பினார்.

வீட்டுக்கு வந்தவர் தஞ்சம்மாளிடம் மிகுந்திருந்த சாதத்தைக் காட்டி, "அவர் வயிற்றிலிருந்தால் இதற்கு மட்டுமல்ல. உனக்கும் பெருமை. தண்ணீர் மூன்று பிழை பொறுக்கும். நான் இரண்டு பிழை பொறுத்தேன். முதல் பிழை திருக்கச்சி நம்பிகளுக்கு ரேழியில் வைத்து உணவிட்டது. அதன்பின் குளித்தது. இரண்டாவது பிழை உணவை மறைத்து இல்லையென்று சொல்லி என் வாக்கை அவமதித்தது. மூன்றாவது பிழை உன்னைத் துறக்க வைக்கும். குலைக்கிற நாய் கடிக்காது என்று நினைக்காதே" என்று அறிவுறுத்தினார்.

இராமானுஜர் வெளியூர் சென்றிருந்தார். தஞ்சம்மாள் கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தார். பெரிய நம்பியின் மனைவியும் தண்ணீர் இறைக்க வந்தார். வந்த வேகத்தில் அவருடைய ஆடை காற்றில் தஞ்சம்மாளின் ஆடையில் உரசியது.

தஞ்சம்மாள் சண்டை பிடித்தாள். வாய்ச் சண்டை வலுத்தது. பெரிய நம்பி இதை அறிந்தார்.

"இராமானுஜன் வந்தால் சம்மதிக்க மாட்டான். நாம் உடனே ஸ்ரீரங்கம் புறப்படலாம்" என்று வீட்டை காலி செய்து கொண்டு போய் விட்டார்.

ஊரிலிருந்து திரும்பி வந்த இராமானுஜர் இதை அறிந்து மனம் புண்ணானார்.

"பாலிலிருந்து பிரிந்த நெய் மறுபடி பாலோடு சேராது. உனக்கும் எனக்கும் இனி ஒட்டாது" என்று கூறி இல்வாழ்க்கையைத் துறந்தார்.

"வரதராஜா! எனக்கு சன்யாசம் கொடு" என்று வரதர் சன்னதி முன் இறைஞ்சினார். அப்போது திருக்கச்சி நம்பிகளும் உடன் இருந்தார்.

தீபாராதனை காட்டிக் கொண்டிருந்த அர்ச்சகருக்கு சன்னதம் வந்தது. "கோவிந்தா, கோவிந்தா" என்று கூவினார். அருகிலிருந்தவர்கள் அவரை கெட்டியாக அணைத்துப் பிடித்துக் கொண்டனர். அர்ச்சகர் உதடுகள் துடிக்க ஆவேசத்துடன்,

"ஏ, இராமானுஜா! நீ விரும்பியபடி உனக்குத் துறவறம் தந்தோம். இனி நீ முக்கோலைக் கை பிடித்து காவியுடை அணிந்து கொள். இன்று முதல் நீ, எதிராஜ ஸ்ரீ இராமானுஜ முனி' என்று பட்டம் பெறுகிறாய்!" என்றவர், திருக்கச்சி நம்பிகளைப் பார்த்து, "இராமானுஜனுக்கு மடம் ஒன்று நிறுவுவாய்!" என்றபடி மயக்கமாகி விட்டார்.

இராமானுஜரும், திருக்கச்சி நம்பிகளும் அங்கு கூடி இருந்தோரும் இதைக் கேட்டு பரவசமடைந்தனர். இராமானுஜர் துறவறம் ஏற்றதும் தேடி வந்து சீடரானவர் யாதவப் பிரகாசர். 'கோவிந்த ஜீயர்' என்ற பெயரில் சன்யாசமும் ஏற்றார்.

ஸ்ரீரங்கத்துக்கு இச்செய்தி எட்டியதும் இராமானுஜர் வருகைக்காக வைஷ்ணவர்கள் காத்திருந்தனர். கூரேசன், முதலியாண்டான் என்ற இரு சீடர்கள் பின் தொடர ஸ்ரீரங்கம் புறப்பட்டார் இராமானுஜர். ஸ்ரீரங்கத்தில் இராமானுஜருக்கு பிரம்மாண்டமான வரவேற்பு!

முதலில் ரங்கநாதரை தரிசித்து பின்னர் மற்ற ஆலயங்களுக்கும் சென்றார். இறைவனால் 'உடையவர்' என்றழைக்கப்பட்டார். ஸ்ரீரங்கம் கோவிலின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றார். ஆளவந்தாரின் சீடரான வாரங்கரிடம் திருவாய்மொழியையும், பெரிய திருமொழியையும் இசையோடு பாடக் கற்றுக் கொண்டார்.

இராமானுஜரின் சீடன் கூரேசன் தன் செல்வத்தையெல்லாம் துறந்து கூரத்தாழ்வான் என்ற பெயரைப் பெற்றான். கூரேசனின் மகனுக்கு

'பராசரன்' என்று பெயரிட்டு ஆளவந்தாரின் விருப்பத்தை நிறைவேற்றினார் இராமானுஜர்.

இராமானுஜரின் உயிரைக் காத்த கோவிந்தரும் இராமானுஜரைப் போலவே இல்லறத்தைத் துறந்து சன்யாசம் பெற்றுக் கொண்டார். 'எம்பார்' என்ற பட்டப் பெயருடன் இவரும் இராமானுஜருக்குப் பின் ஸ்ரீவைணவ பீடத்தை அலங்கரித்தார்.

மகாபூரணரிடம் வேத மந்திர உபதேசம் பெற இராமானுஜர் விரும்பினார். பெரிய நம்பியோ 'அதற்குத் தகுதியானவர் திருக்கோஷ்டியூர் நம்பியே' என்று கூறினார்.

அதன்படி இராமானுஜர் திருக்கோஷ்டியூர் நம்பிகளைத் தரிசித்து தன் கோரிக்கையை வெளிப்படுத்தினார்.

'அதற்கான நேரம் வரும்' என்று கூறி அனுப்பி விட்டார் நம்பிகள். இராமானுஜரின் பொறுமையை சோதிக்கவே அவ்வண்ணம் செய்தார். இப்படி ஒருமுறை, இருமுறை அல்ல, பதினேழுமுறை அலையவைத்தார்.

பதினெட்டாவது தடவை அவரது பொறுமையையும், ஆர்வத்தையும் பாராட்டி, "நான் உனக்கு இந்த மகாமந்திரத்தை உபதேசிக்கிறேன். இது மகாரகசியமானது. இதை நீ வெளியிடுவதில்லை என்று சத்தியம் செய்து தந்தால் தான் உபதேசிப்பேன்" என்று கண்டிப்புடன் கூறினார்.

அப்படியே வாக்களித்தார் ஆச்சார்யார். முறைப்படி உபதேசம் செய்தார் திருக்கோஷ்டியூர் நம்பி. குருநாதருக்கு நன்றி கூறி விடை பெற்றார் இராமானுஜர். அதன்பின் நிறைய சிந்தித்தார், சிந்தித்து ஒருமுடிவு கண்டார்.

கோயில் மதிற்சுவர் மேல் அதிகாலை நேரத்தில் எல்லோரும் பார்க்கும் படியாக நின்றுகொண்டார்.

"என் அன்பிற்குரியவர்களே! வாருங்கள்! நெருங்கி வாருங்கள். நிலையில்லாத பொருளை சம்பாதிக்க உழைக்கிறீர்கள். உண்டு உறங்குவதற்காக மட்டும் ஏற்பட்டதல்ல இந்தமனித வாழ்க்கை! திருமால் நாமத்தைச் சொல்வதால் ஜென்மம் கடைத்தேறும். 'ஓம் நமோ நாராயணாய" என்ற மகாமந்திரத்தைச் சொல்லிக் கொண்டே பணிபுரியுங்கள்.

சம்சார துன்பங்களும் தீரும். சம்சார கடலில் அலைபவனுக்கு அது துடுப்பு. கெட்டியாகப் பற்றிக் கொள்ளுங்கள்'' என்றார்.

கீழே நின்றவர்கள் பரவசத்துடன், 'ஓம் நமோ நாராயணாய நம:' என்று உரக்கக் கூவினார்கள். அந்த கோஷ்டி கானம் இராமானுஜரை மகிழ்வித்தது.

கோயிலுக்கு வந்த சில வைஷ்ணவர்கள் திருக்கோஷ்டி நம்பிகளிடம் சென்று இதைக் கூறினர். நம்பிகள் கோபத்துடன் இராமானுஜரை அழைத்து வரப் பணித்தார்.

இராமானுஜர் வந்ததும் ''நான் உனக்கு உபதேசித்த அஷ்டாக்ஷர மந்திரத்தை பகிரங்கமாக வெளிப்படுத்தினாயாமே! இது நியாயமா? குரு வார்த்தையை மீறினால் என்ன நடக்கும் என்பதை அறிவாயா?'' என்று கேட்டார்.

''குரு வாக்கை மீறினால் நரகம் கிடைக்கும் என்பதை அறிவேன் ஸ்வாமி! என்னைப் போல் பதினெட்டு தடவை அலைய எத்தனை பேருக்கு பொறுமை இருக்கும்? அதில் வைஷ்ணவர்கள் எத்தனை பேர்? அவர்கள் கடைத் தேற வேண்டாமா? கூரையில் போடும் சோற்றைத் தான் மட்டுமே தின்று பசியாறுவோம் என்று காகம் நினைப்பதில்லை! ஆறறிவு படைத்த மனிதனுக்கு சுயநலம் வரலாமா? நான் ஒருவன் நரகம் போனாலும் இத்தனை பேர் கடைத்தேறுவார்களே என்று நினைத்தேன். செயலாற்றினேன். தவறு என்று தாங்கள் நினைத்தால் தரும் தண்டனையை ஏற்கத் தயாராக இருக்கிறேன், என்று பணிவுடன் கூறினார் இராமானுஜர். ''வயதில் நான் பெரியவனாக இருக்கலாம்! உள்ளத்தில் நீ பெரியவன். கருணை உடைய நீயே குரு. நான் சீட நிலையிலேயே இருக்கிறேன்'' என்று மனம் நெகிழ, குரல் உருக வாழ்த்தினார் திருக்கோஷ்டியூர் நம்பி.

''எம்பெருமானுக்கு மட்டுமே இத்தகைய பெருந்தன்மையான குணம் உண்டு. இன்று முதல் நீ 'எம்பெருமானார்' என்றழைக்கப் படுவாய்!'' என்று கட்டி அணைத்துக் கொண்டார். அப்போதும் இராமானுஜர் தன்னடக்கத்துடனேயே இருந்தார்.

இராமானுஜருடைய மடத்திற்கு சீடர்கள் புடைசூழ யக்ஞ மூர்த்தி என்ற பண்டிதர் வந்தார். ''நான் விசிஷ்டாத்வைதத்தை எதிர்ப்பவன். வடநாட்டில்

என்னை ஜெயிக்க ஒருவரும் இல்லை. இராமானுஜரை வாதத்தில் வெல்ல வந்திருக்கிறேன். இதை உங்கள் குருவிடம் சொல்லுங்கள்'' என்றார்.

சீடர்கள் இராமானுஜரிடம் இதைச் சொல்ல யக்ஞ மூர்த்தியை அழைத்து வரும்படி கூறினார் குருநாதர்.

''நாம் இருவரும் வாதம் செய்வோம். தோற்பவர் வென்றவருக்கு அடிமையாக வேண்டும்'' என்றார் இராமானுஜர்.

''வீணாக வாதத்தை வளர்த்தக் கூடாது. பதினெட்டு நாட்களுக்குள் உங்கள் கோட்பாடுகளை உதாரணங்களோடு நிரூபிக்க வேண்டும்'' என்றார் யக்ஞ மூர்த்தி.

வாத விவாதங்கள் காரசாரமாயிருந்தன. 17 நாட்களாகியும் சம நிலை யிலேயே இருந்தனர். பதினெட்டாவது நாள் அதிகாலை. நீராடி இறைவன் முன் அமர்ந்து இராமானுஜர், ''பரந்தாமா! என் திறமை குறைவினால் விசிஷ்டாத்வைதம் தோற்கலாமா? உலக நலனுக்காகவாவது எனக்கு வெற்றி கிடைக்கச் செய்யக்கூடாதா? உன் சோதனையை நான் தாங்குவேனா?'' என்று வருந்தினார்.

''இராமானுஜா! உன் வாக்கு சாதுரியம் வெளிப்படவே நாம் பேசாதிருந் தோம்! இன்றைய வெற்றி உனதே. மாயா வாதத்தை மறுத்து ஆளவந்தார் இயற்றிய பாடலை வாதத்தில் பாடு. பிறகு நடப்பதைப் பார்'' என அசாரி ஒலித்தது.

இராமானுஜர் மகிழ்ந்து பலமுறை தெண்டனிட்டார். இராமானுஜர் அசரீரி வாக்குப்படி முதலிலேயே ஆளவந்தார் பாடலைப் பாடினார். அடுத்த வினாடி இராமானுஜர் கால்களில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார் யக்ஞ மூர்த்தி.

''நீங்கள் அறிவுக் கடல். நான் தோற்றேன். உங்களது கோட்பாடுகளை நான் ஒப்புக் கொண்டேன். என்னைப் பெரிய மனது பண்ணி சீடனாக ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று பணிவுடன் கேட்டுக் கொண்டார்.

மற்ற சீடர்கள் இது கண்டு கரகோஷம் செய்தனர். 'தேவராஜ முனி' என்ற தீட்சா நாமம் கொடுத்து யக்ஞமூர்த்தியைத் தன் சிஷ்யனாக ஏற்றுக் கொண்டார் இராமானுஜர். விசிஷ்டாத்வைதத்தைப் பரப்புவதில் தீவிர மாக ஈடுபட்டார் தேவராஜ முனி.

ஆளவந்தாரின் பூத உடல் முன் சபதம் செய்தபடி வியாசரின் பிரம்ம சூத்திரத்திற்கு ஸ்ரீ பாஷ்யம் எழுதத் தொடங்கினார். வியாசர் எழுதிய விருத்தி என்ற நூல் தென்னாடு முழுவதும் தேடியும் கிடைக்கவில்லை! வடநாட்டிற்கு முதலியாண்டான், கூரேசன் முதலான சீடர்களோடு புறப் பட்டார். அங்கும் அந்நூல் கிடைக்கவில்லை!

"ரங்கநாதா! குருநாதா! விருத்தி எங்கு கிடைக்கும் என்று அருளக் கூடாதா?" என்று பிரார்த்தித்தார்.

அப்போது முதலியாண்டான் ஓடிவந்து 'விருத்தி'யை ஒரு வைஷ்ணவர் வைத்துப் படித்துக் கொண்டிருப்பதாக பரபரப்புடன் கூறினார்.

கூரத்தாழ்வாரும், இராமானுஜரும் அங்கு விரைந்தனர். 'விருத்தி'யைக் கண்டதும் இராமானுஜர் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. தன் னையும், தன் பணியையும் அறிமுகப்படுத்திக் கொண்டவர், விருத்தியைக் கொடுத்து உதவும்படி கேட்டார்.

"ஐயா! நான் சுவடியை இனாமாகவோ, இரவலாகவோ யாருக்கும் கொடுப்பதில்லை. எத்தனை முறை, எத்தனை நாள் வேண்டுமானாலும் படிக்கத் தருகிறேன். அதுவும் இங்கேயே" என்று திட்ட வட்டமாகக் கூறி விட்டார் அவர்.

கூரேசனுக்கு அபார ஞாபக சக்தி. ஒவ்வொரு சம்பவத்தையும் வருடம், மாதம், தேதி, நாழிகை பிசகாமல் சொல்வார். கூரேசன் 'விருத்தி' முழுவதையும் படித்து மனப்பாடம் செய்து கொண்டார். ஸ்ரீரங்கம் திரும்பியதும் இராமானுஜர் பாஷ்யம் சொல்ல, கூரேசர் எழுதிக் கொண்டே வருவார். இராமானுஜர் சொல்வதற்கும், விருத்தியில் இருந்ததற்கும் வித்தியாசம் வந்தால் கூரேசர் எழுதுவதை நிறுத்தி விழுவார். இராமானுஜர் உடனே உரையைத் திருத்தி சொல்வார். ஸ்ரீபாஷ்யம் இப்படி யாக விரைவில் எழுதி முடிக்கப்பட்டது. இராமானுஜரும் சரஸ்வதி தேவி யாரிடம் ஸ்ரீ பாஷ்யக்காரர்" என்ற பட்டம் பெற்றார்.

இராமானுஜர் நாடு முழுவதும் யாத்திரை சென்று விசிஷ்டாத் வைதத்தைப் பரப்பினார்.

திருப்பதியில் அவருக்கு ஒரு சிக்கல் ஏற்பட்டது. சைவர்கள் அவரிடம் வந்து, "முருகனுக்கு நாமத்தைப் போட்டு பெருமாளாக்கி விட்டதாக"

புகார் கூறினார். வைணவர்களோ அங்கிருப்பது வேங்கடமுடையானே'' என்று அடித்துப் பேசினர்.

"அன்பர்களே! இதை பகவானிடமே கேட்போம். இறைவன் முன் சங்கு, சக்கரம், வேல், சூலம் முதலியவற்றை வைத்துக் கதவைத் தாளிடு வோம். நாளைக் காலையில் நம் அனைவரும் கூடியபின் கதவு திறக்கப் படும். இறைவன் தீர்ப்பை நாம் மறுபேச்சின்றி ஏற்க வேண்டும்'' என்றார்.

இருபாலரும் இதை ஒப்புக் கொண்டனர். "இறைவா! சரியான தீர்ப்பை வழங்கு'' என்று பிரார்த்தித்தார். இராமானுஜர் சொன்னபடி செய்யப் பட்டது. மறுநாள் காலையில் கருவறையைத் திறந்தால் சங்கும், சக்கரமும் பகவான் கையில் இருந்தது! சப்தகிரியின் மேலிருப்பது வேங்கடமுடை யானே என்று சைவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

அப்போது முதலாம் குலோத்துங்கச் சோழன் சோழ அரசனாக இருந்தான். அரசன் சைவ சமயத்தைத் தழுவி இருந்தான். இராமானு ஜரால் சைவம் நலிந்து விடும் என்று பல சைவர்கள் குலோத்துங்கனிடம் முறையிட்டனர்.

இராமானுஜரை அழைத்து வரும்படி ஆணையிட்டான் அரசன். ஏவலர் வரும்போது மடத்தில் சில சீடர்களே இருந்தனர். இராமானுஜர் வெளியே சென்றிருந்தார்.

கூரேசன் பெரிய நம்பியிடம் "அரசரால் குருநாதருக்குத் தீமை ஏற்படும் என்று என் உள்மனம் கூறுகின்றது. நான் ஆச்சாரியாரைப் போல காவி ஆடை அணிகின்றேன் முதலியாண்டான்! நீ ஆச்சாரியாரை வற்புறுத்தி வெள்ளை வேஷ்டி கட்டச் சொல்லி கர்நாடகாவுக்கு அழைத்துச் சென்று விடு. நம் குருநாதரை அரசனோ, இந்தச் சேவகர் களோ பார்த்ததில்லை! நானே குருநாதர் எனக் கூறி இவர்களுடன் புறப் படுகிறேன்'' என,

பெரியநம்பி இடைமறித்து, "நானும் உன்னுடன் வருகிறேன்'' என்றார்.

"சரி, என்று கூறி விரைந்து ஆடை மாற்றிக் கொண்டு முக்கொம்பு பிடித்து வெளியே வந்தார் கூரேசன். அவரையும், பெரிய நம்பியையும் அழைத்துக் கொண்டு ஏவலர் சிதம்பரம் வந்தனர்.

அரசவையில் "சைவ நெறியே சிறந்தது. அதையே இனி கடை பிடிப்போம்" என்று கூறுங்கள் என்றார் அமைச்சர். கூரேசர் 'வைணவமே சிறந்தது' என்று ஆதாரத்தோடு வாதிட்டார். சினம் கொண்ட வேந்தன் இருவர் கண்களிலும் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியைச் செருகு மாறு உத்தரவிட்டான்.

அரசகட்டளை நிறைவேறியது. கண்களை இழந்த இருவரும் ஸ்ரீரங்கம் திரும்பலானார்கள், கண்களை இழந்த பெரிய நம்பி மனதாலும், உடலாலும்

தளர்ந்து வரும் வழியிலேயே மரணமடைந்தார். கூரேசர் கண்களை குருநாதருக்குக் காணிக்கையாய் கொடுத்ததாகவே எண்ணி மனத்திடம் கொண்டிருந்தார்.

இராமானுஜர் மடத்துக்கு வந்ததும் சீடர்கள் நடந்ததைக் கூறி அவரை மாற்று ஆடை அணிய வற்புறுத்தினர். இராமானுஜர் தயங்கவே "உங்களுக்காக கூரேசன் மேற்கொண்ட முயற்சி பாலைவனத்தில் கொட்டிய பால் போல ஆகிவிடும். வைணவம் தழைக்க தாங்கள் கட்டாயம் உயிரோடிருக்க வேண்டும். சோழன் கோபத்திற்கு இரு உயிர்கள் பலியாவது அதிக விலை" என்றெல்லாம் வற்புறுத்தவே ஆடைமாற்றிக் கொண்டு ஸ்ரீரங்கத்தை விட்டுப் புறப்பட்டார்.

'கண்ணன் ஒளிந்து வளரவில்லையா? ஸ்ரீராமன் மந்தரை, கைகேயி போன்ற பெண்களால் வனவாசம் செய்யவில்லையா? வாமனனாகப் பிறந்த என் பிரபு திரிவிக்ரமனாக மாறவில்லையா? தந்தை சொல்லுக்காக தாயின் தலையையே பரசுராமர் துண்டிக்கவில்லையா? ஆமையாக மாறி முதுகில் மந்தரமலையைத் தாங்க வில்லையா? கீழ் விலங்கு என்று மதிப்பிடும் வராகமாக அவதரித்தாரே! என்னை இப்படி மாறி ஒளியச் சொல்பவனும் அவனே! கூரேசன் சோழனிடம் என்ன பாடுபடு கிறானோ?" இப்படிப் பலவும் எண்ணியவாறு அறுபது வயதில் காடுகளில் நடந்தார் இராமானுஜர்.

கண்கள் குருடாகி ஸ்ரீரங்கம் போகும் பாதையில் விழுந்து கிடந்த பெரியநம்பியையும், கூடவே இருந்த கூரேசனையும் பார்த்த அமைச்சரின் உறவினர் ஒருவர் நடந்ததை விசாரித்து அறிந்து கொண்டு சிதம்பரம் விரைந்தார். வந்தது இராமானுஜரல்ல; அவரது சீடர் என்பதை அறிந்த சோழன் கொதித்தான். ஏமாற்றிய இராமானுஜரை சும்மாவிடுவதில்லை என்று கங்கணம் கட்டிக் கொண்டான். மடம் வெறிச் சோடியிருப்பதாக சேவகர்கள் தகவல் கூறினார்.

நாலாபுறமும் தேட ஆட்களை அனுப்பினான் மன்னன். இதற்குள் இராமானுஜர் நீலகிரியை அடைந்திருந்தார். அங்கிருந்து மைசூருக்குப் புறப்பட்டார். செல்லும் பாதையில் சைவராயிருந்த வடுக நம்பி இவரோடு வாதிட்டு இவர்வாதத்தில் பற்றுக் கொண்டு இவரது சீடரானார். அங்கிருந்து இருவரும் தொண்டனூர் சென்றனர்.

தொண்டனூர் அரசன் பித்தி தேவன் ஜைன மதத்தைச் சேர்ந்தவன். பித்திதேவனின் மகளைப் பேய் பிடித்திருந்தது. மந்திரமும், மருத்துவரும் அதைக் குணமாக்க முயன்று தோன்றிருந்தனர்.

அந்த சமயம் இராமானுஜர் தன் சீடர்களோடு வந்து தொண்டனூரில் தங்கி இருப்பதை அரசியிடம் தெரிவித்தார் ஒரு பெரியவர்.

"மகாராணி! இவர் காஞ்சி இளவரசியைப் பிடித்திருந்த பேயை விரட்டியவராம்! தாங்கள் மன்னரிடம் கூறி இவரை வரவழைத்தால் நம் ராஜகுமாரி குணமடையலாம்" என்றார்.

அரசி அரசரிடம் கூற, அரசர் ராணியுடன் சென்று தன் துன்பத்தைச் சொல்லி இராமானுஜரை அரண்மனைக்கு அழைத்து வந்து மகளை அவர் முன் நிறுத்தினார்.

இராமானுஜர் ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வருமாறு கூறினார். அது வந்ததும் அந்த நீரை மந்திரித்து அந்தப் பெண்ணைக் குடிக்கச் செய்தார். பேய் உடனே ராஜகுமாரியை விட்டு ஓடிவிட்டது. அரசனும், அரசியும் மட்டுமல்லாமல் அரண்மனையே கோலாகலமாக விழாக் கோலம் பூண்டது.

பித்தி தேவன் வைணவத்துக்கு மாறினான். விஷ்ணு வர்த்தனன் என்று பெயர் சூட்டினார் இராமானுஜர்.

இதனால் ஜைன மதத் தலைவர்கள் கோபம் கொண்டு, "வாதம் செய்ய" இவரை அழைத்தனர். இராமானுஜர் சம்மதித்து வாத மண்டபத்தின் நடுவே ஒரு திரையைக் கட்டச் சொன்னார். இராமானுஜர் ஆதிசேஷனாக மாறி ஒவ்வொரு கேள்விக்கும் ஆணித்தரமான பதிலைக் கூறினார். ஜைனர்கள் தோற்று ஓடினார்.

இராமானுஜர் மைசூரில் தங்கி இருந்த சமயம் திருமால் அவர் கனவில் தோன்றி, "இராமானுஜா! இங்கிருந்து சிறிது தூரத்தில் மேல் கோட்டை என்ற மலை இருக்கிறது. அந்த மலையில் திருநாராயணபுரம் என்ற ஊரில் என் சிலா வடிவம் இருக்கின்றது. எனக்குக் கோவில் கட்டி பூஜை முறை களை ஏற்படுத்து. அங்கிருந்து நீ வைணவத்தைப் பரப்பலாம்." என்றார்.

உடனே இராமானுஜர் திருநாராயணபுரம் சென்று மகாவிஷ்ணு சிலையைக் கண்டு ஆனந்தித்தார். விஷ்ணு வர்த்தனனை சந்தித்து

கோயில் கட்ட நிதி கேட்டார். அவனும் மகிழ்ச்சியோடு பொருளுதவி செய்தான். நினைத்தபடி ஆலயம் எழும்பியது.

மறுபடி இராமானுஜர் கனவில் நாராயணர் தோன்றி, "எனது உற்சவ விக்ரகம் டில்லி பாதுஷாவின் அந்தப்புரத்தில் இருக்கிறது. மீட்டு வந்து உற்சவம் நடத்து" என்றார்.

உடனே டில்லிக்கு சீடர்களுடன் பயணமானார் இராமானுஜர். பாதுஷா அவரது ஆஜானுபாகுவான தோற்றத்தையும், தேஜஸையும் கண்டு அவரை மரியாதையுடன் வரவேற்று ஆசனமளித்தவர், வந்த காரியத்தை விசாரித்தார்.

"பாதுஷா! திருநாராயணபுரத்து உற்சவ விக்ரகம் உன் மகளிடம் இருப்பதாக சொப்பனத்தில் பரந்தாமன் திருவாய் மலர்ந்தருளினார். அதை பெற்றுச் செல்லவே வந்தேன்" என்றார் இராமானுஜர்.

"நல்லது. தங்களின் தெய்வீக சக்தியால் அச்சிலையை வரவழைத்துக் கொள்ளுங்களேன்" என்றார் பாதுஷா.

'செல்லபிள்ளாய் வாரும்' என்றழைக்க அந்தப்புரத்திலிருந்த 'ராம ப்ரியா' என்ற விக்ரகம் குழந்தை வடிவில் நடந்து வந்து இராமானுஜர் மடியிலேறி அமர்ந்ததும் மீண்டும் விக்ரகமானது. பாதுஷாவும், அவரோடு இருந்தவர்களும் இது கண்டு அதிசயித்தனர்.

இராமானுஜர் 'ராமப்ரியா' வோடு திருநாராயணபுரம் சென்று உற்சவம் நடத்த ஏற்பாடு செய்தார்.

திருநாராயணபுரத்தில் இராமானுஜர் ஒரு மடத்தை நிறுவினார். மைசூரில் திருமாலுக்கு நிறையக் கோவில்கள் கட்டி வைணவத்தை வளர்த்தார்.

பத்மகிரியில் பௌத்தர்கள் அதிகம். சமயச் சண்டைகளும் மிகுதியாக இருந்தது. இராமானுஜர் அங்கு சென்று பௌத்தர்களோடு வாதிட்டு வென்றார். பல புத்தர்கள் வைஷ்ணவ மதத்தைத் தழுவினர்.

ஸ்ரீரங்கத்திலிருந்த வந்த ஒரு பக்தர் இராமானுஜரைப் பார்த்தார். பெரிய நம்பி இறைவனடி சேர்ந்ததையும், கூரேசன் கண்களைப் பறி கொடுத்ததையும் அவர் மூலம் அறிந்து துடித்தார் இராமானுஜர்.

"சோழன் காலமும் முடிந்தது. குலோத்துங்கனின் மகன் அகனங்க சோழன் சமய சார்பற்றவன். தந்தையின் கொடுமைகளுக்கு வருந்தி தங்களைக் காணத் துடிக்கிறான். திருவரங்கத்து மக்கள் மட்டுமல்ல! ரங்க நாதரும் உங்கள் வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருக்கின்றார்" என்றார் அவர்.

மேல்கோட்டை பக்தர்களிடம் பிரியாவிடை பெற்று ஸ்ரீரங்கத்திற்குப் புறப்பட்டார் இராமானுஜர். ஸ்ரீரங்கத்து எல்லையில் அவருக்குப் பிரம்மாண்டமான வரவேற்பு. அரசனும் குருநாதர் காலடியில் பணிந்து தந்தையின் செயலுக்காக மன்னிப்புக் கோரினான். இராமானுஜரும் பெருந்தன்மையுடன் அவனை ஆசீர்வதித்தார்.

குலோத்துங்கனுக்கு அஞ்சி சிதம்பரம் கோவிந்தராஜர் கோவில் சிலையை திருப்பதியில் மறைத்து வைத்திருந்தனர். இராமானுஜர் திருப்பதி வந்ததும் கோவிந்தராஜப் பெருமாளுக்குக் கோவில் கட்டி வழிபாட்டு முறைகளை ஏற்படுத்தினார்.

கூரேசன் அழகர் கோவிலில் வசித்து வந்தார். அவர் குருநாதரை தரிசிக்க ஸ்ரீரங்கம் வந்தார். அவர் நிலையைக் கண்டு துயருற்ற இராமானுஜர், "என்னாலன்றோ உனக்கு இந்த நிலை ஏற்பட்டது! காஞ்சி வரதரைப் பிரார்த்தனை செய். உன் கண் பார்வை திரும்பக் கிடைக்கும்" என்றார்.

கூரேசர் "குருதேவா! இழந்ததை நான் திரும்பப் பெற்றால் பல குருடர்கள் உங்களை சிரமப்படுத்துவார்கள். பாப புண்ணியத்துக்கு ஏற்ப பகவான் விதித்த நியதிகளை நாம் மாற்றச் சொல்லி பரந்தாமனை தர்ம சங்கடத்துக் குள்ளாக்குவோம். பகவானுக்கு நல்ல குழந்தைகளாகவே நாம் இருப்போமே" என்று சொல்லி விட்டார்.

தம் சிஷ்யர்களுள் 74 பேரைத் தேர்ந்தெடுத்து விசிஷ்டாத்வைதத்தைப் பரப்பினார். அவர்களுக்கு 'சிம்மாசனாபதிகள்' என்று பெயர். ஸ்ரீரங்கம், காஞ்சி, தோத்தாத்ரி, அஹோபிலம், வானமாமலை ஆகிய இடங்களிலுள்ள மடங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை. இராமானுஜரின் பணிகளை செவ்வனே செய்து வருகின்றன.

முதலியாண்டாரின் மகன் இராமானுஜரின் விக்ரகத்தை ஸ்ரீபெரும் புதூரில் நிறுவினார். அதைக்கட்டி அணைத்து தனது சக்தியை அதில்

செலுத்தி விட்டதாகக் கூறினார் இராமானுஜர். 120 ஆண்டுகள் இறைவன் எனக்கிட்ட பணியைச் செய்தேன் அவன் மலரடி சேரும் காலம் நெருங்கி விட்டது" என்று கூறியவர், அவரது விக்ரகம் நிறுவப்பட்ட நேரத்தில் பூவுலக வாழ்வைத் துறந்தார். அவர் மறைந்த ஆண்டு கி.பி.1137.

"கோபம், வெறுப்பு, பொறாமை, பேராசை, கர்வம் ஆகியவற்றை அழித்து அன்பு, ஒழுக்கம், நிதானம் ஆகியவற்றைக் கடைபிடித்து வாழ வேண்டும். எண்ணமும், செயலும் நல்லவையாக இருக்கவேண்டும். இறைவன் முன் அனைவரும் சமம். பகவானிடம் கொண்ட பக்தி உயர்ந்து கொண்டே போக வேண்டும். கடவுள் கருணையுள்ளவர். நாம் தொடர்ந்து அன்பு செலுத்தினால் அவர் நம் அன்பை ஏற்பார். பெற்றோர், உறவினர், பெரியோர், நண்பர் ஆகியோரை மதித்து அன்புடன் பழக வேண்டும்.

குறையில்லாத மனிதரைக் காண முடியாது. பகவான் ஒருவரே குறைகளில்லாதவர். நம் குறைகளை நீக்கி நல்வழியில் வாழவைப்பவர் அவரே" என்பது போன்ற உபதேசங்களை பாமர மக்களிடம் பரப்பினர்.

வேதாந்தசாரம், வேதாந்ததீபம் எனப்படும் இருநூல்கள் ஸ்ரீபாஷ்யத்தை எளிதில் புரிந்து கொள்ள உதவும். கீதாபாஷ்யம், வேதாந்த சங்கிரகம், கத்யத்ரயம், நித்யம் போன்ற அரிய நூல்களையும் இராமானுஜர் இயற்றினார்.

பக்தியைப் பொதுவுடைமை ஆக்கிய ஸ்ரீராமானுஜரின் வரலாறு படிப்பவருக்கும், கேட்பவருக்கும் துன்பங்களை நீங்கி இன்பங்களை அளிப்பதோடு முடிவில் மோட்சமும் கொடுக்கும்.

114. ஸ்ரீ பில்வ மங்கள ஸ்வாமிகள்

லீலாசுகர் என்ற பில்வ மங்கள ஸ்வாமிகள் குருவாயூரப்பனிடம் மிகுந்த பக்தி கொண்டவர். 'நடுவில் மடம்' என்ற இடத்தில் புஜை செய்து கொண்டிருந்தார். பூஜையில் தினமும் அவருக்கு கிருஷ்ணர் தரிசனம் கொடுப்பார். ஒருநாள் பூஜை முடிந்தும் தரிசனம் கிட்டவில்லை. நைவேத் தியத்தில் அவருக்கு ஒருகை கொடுத்த பிறகுதான் பில்வமங்கள் சாப் பிடுவார்.

அதனால் அன்று சாப்பிடவேயில்லை. அயர்ச்சியில் கண்ணுறங்கி விட்டார். சலங்கை ஒலி அவரை எழுப்பியது. "கண்ணா! இன்று ஏன் நிவேதனம் ஏற்க வரவில்லை?" என்று ஆற்றாமையோடு கேட்டார்.

"குரூரம்மை பாடிய தாலாட்டில் அதிகம் தூங்கிவிட்டேன்" என்றார் உன்னிகிருஷ்ணன்.

"அது யார் குரூரம்மை?" வியப்போடு கேட்டார் ஸ்வாமிகள். "நீ தந்தையைப் போல் பாசம் காட்டுகிறாய்! அவள் தாயாகவே மாறி விட்டாள்! எல்லோரும் பக்தியைக் காட்டி எதையாவது கேட்கிறார்கள்! அவள் மட்டுமே அக்கறையாக குளிப்பாட்டி, சாதம் ஊட்டி, தூங்க வைத்து, கண்டித்து, கட்டிப் போட்டு ... வித்தியாசமான இந்த அன்பு எனக்குப் பிடித்திருக்கிறது. குரூரம்மை எனக்கு யசோதையை ஞாபகப்படுத்துகிறாள்! அவள் கண்களுக்கு மட்டுமே நான் தெரிவதால் அவளைப் 'பிச்சி' என்கிறார்கள் ஊரார். அவள் அதை லட்சியம் செய்வதில்லையே! ஒருமுறை அங்கு வந்து பாருங்கள்! அவள் உபசரணையில் நீங்கள் மெய்மறந்து விடுவீர்கள்!" குருவாயூரப்பன் போய் நெடு நேரமாகியும் பில்வமங்களின் பிரமை தீர வில்லை!

குரூரம்மை வீட்டை விசாரித்துக் கொண்டு புறப்பட்டார். குரூரம்மை அவர் வரவுக்காக மகிழ்ந்தாள். சாப்பிடச் சொல்லி இலை போட்டாள். "உன்னி கிருஷ்ணா! பாயசம் வைக்க வேண்டிய இடத்தில் பச்சடியும், பச்சடி வைக்குமிடத்தில் அவியலையும் மாற்றிப் பரிமாறுகிறாயே! பெரியவர்கள் அதை அவமரியாதையாய் நினைப்பார்கள். ஒரு ஓரமாய் போய் உட்காரு. உன் உபகாரம் அபகாரமாய்த் தான் முடியும்" என்று பச்சடிக் கிண்ணத்தைப் பிடுங்கினாள் குரூரம்மா. பில்வமங்கள் கிருஷ்ணன் முகத்தில் ததும்பும் சோக பாவத்தைக் கண்டு பரிந்து வந்தார்.

"உங்களுக்குத் தெரியாது! இது எனக்குப் பிடித்திருக்கிறது!" என்று உருகினார் ஸ்வாமிகள். சுடச்சுட சாதத்தையும், பருப்பையும் போட்டு நெய் ஊற்றி குழையப் பிசைந்து கொஞ்சம் ரசத்தைச் சேர்த்து, "தப்பாக நினைத்துக் கொள்ளாதீர்கள்! அவன் பசி தாங்க மாட்டான்" என்று கண்ணனை மடியில் அமர்த்தி "சூடு ஆறினால் செரிக்காது" என்று நெல்லிக்காயளவு உருட்டி வாயில் ஊட்டும் அழகை ரசித்தபடி அமர்ந்திருந்தார் பில்வமங்கள். 'ஒரு தடவை தரிசனம் கிடைத்ததற்கே

கர்வம் கொண்டிருந்த தன்னை மட்டம் தட்டுவதற்கே இந்த நாடகம்' என்பதும் அவருக்குப் புரிந்தது.

விருந்துண்டபின் குரூரம்மையை மனதால் வணங்கி விடை பெற்றார்.

பில்வ மங்கள ஸ்வாமி திருச்சூரிலுள்ள நெய்யில் உறையும் நாதரான வடக்க நாத ஸ்வாமியை தரிசிக்கச் சென்றார். கருவறையில் சுவாமி இல்லை! கோவிலில் இண்டு இடுக்கு விடாமல் தேடினார். பகவான் கோவில் மதில் சுவற்றில் தெற்குப் பகுதியில் தெற்கே பார்த்து அமர்ந் திருப்பதைக் கண்டார்.

கேரளத்தில் ஆராட்டு உற்சவம் மிகப் பிரசித்தம். இந்த விழா இரவில் தான் நடக்கும். குமார நல்லூரில் மட்டும் பகலில் நடை பெறும். கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரத்தில் பிறந்த காத்யாயினி தேவி புனித நீராடி விட்டு வடக்கு நாதரை தரிசிக்க யானை மேல் வருகிறாள். அவளை எதிர் கொண்டழைக்க ஈசன் மதில் சுவரில் காத்திருக்கிறார். இன்றைக்கும் அங்கே மதில் சுவற்றுக்கு பூஜை நடக்கிறது.

அம்பலப்புழா, திருவாரப்பு, ஆரண்முலா இங்கெல்லாம் பில்வமங்கள் தரிசனம் செய்து கொண்டு வந்தார்.

ஸ்ரீ கிருஷ்ணனுக்கு பால் பாயச நைவேத்தியம் விசேஷமானது. 'மாரார்' என்ற இனத்தவர் 'ஊட்டு' என்ற அன்னதானம் நடத்துவார்கள். அப்போது 'செண்டா' என்ற இசைக் கருவி முழங்கும்.

சன்னதியில் உன்னிகிருஷ்ணனைக் காணாமல் ஊட்டுப்புரைக்கு வந்தார் பில்வமங்கள். அங்கே பரிமாறும் சேவார்த்தியாகப் பணிபுரிந்து கொண்டிருந்தார் கண்ணன்.

"கிருஷ்ணா! நீ இப்படி குற்றேவல் புரிவதா?" என்று பில்வமங்கள் கண்ணீர் விட்டார். "அதில் என்ன தவறு? மக்களோடு மக்களாய் இருப்பதில் தான் எனக்கு ஆசை. நான் தொண்டர் உள்ளத்தில் இருப்பவன். சாப்பிடும் ஒவ்வொரு வரும் கிருஷ்ணன் தான்! அவர்கள் வயிறு நிறைந்தால் என் வயிறும் நிறையும்" என்றார் தேவகி மைந்தன்.

சாப்பிடும் ஒவ்வொருவரும் ஒருவிநாடி பில்வ மங்கள் பார்வையில் ஸ்ரீகிருஷ்ணனாகவே தெரிந்தனர்.

காட்டு வழியில் போய்க் கொண்டிருந்த சுவாமிகள் தனக்கு முன்னால் ஏழு பெண்கள் போவதைக் கண்டார். ஒவ்வொருவராய் குளத்தில் குதித்தனர். திடுக்கிட்ட சுவாமிகள் ஏழாவது மங்கையையாவது காப்பாற்ற விரைந்தோடி வந்தார். ஆனால் அந்தப் பெண் புதைகுழியில் அமிழ்ந்து கொண்டிருந்தாள். அந்த மங்கையின் புடவைத் தலைப்பு சுவாமிகளின் கையில் இருந்தது. அதைப் பற்றி இழுத்து அவளைக் காப்பாற்றிக் கரை சேர்த்தார்.

சப்த கன்னியரில் அவர் கரை சேர்த்தது காத்யாயனி தேவியை! சிலையான தேவியை அங்கேயே பிரதிஷ்டை செய்து ஆலயம் எழுப்பி. ஆகம விதிப்படி பூஜைகள் நடக்க ஏற்பாடு செய்தார். ஸ்வாமிகள் அம்பிகையைக் கரை சேர்த்த இடம் "சேர்த்தலை" ஆயிற்று. தேவியின் சோதனையில் ஸ்வாமிகளின் கருணை மனம் வெளிப்பட்டது.

தம்பிரான் ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர் மாளவிக்ரமன். அவர் குருவாயூரப்பனைத் தரிசனம் செய்ய வந்த போது பில்வ மங்கள சுவாமிகள் சன்னதியில் கண்மூடி மெய் மறந்து நிற்பதைக் கண்டார். அவரை நமஸ்கரித்த அரசர் "நானும் கிருஷ்ணனை என் ஊனக் கண்ணால் காண அருள வேண்டும்" என்று கோரினார். பில்வ மங்கள் எத்தனை மறுத்தும் அரசன் பிடிவாதமாக இருந்தான்.

"சரி, என்னைத் தொட்டுக் கொண்டு பார்" என்றார் ஸ்வாமி. அப்படியே செய்தான் மாளவிக்ரமன். திவ்யாலங்கார சொரூபமாகக் கிருஷ்ணனைக் கண்ட மாளவிக்ரமன், ஓடிப்போய் கிருஷ்ணரைத் தூக்கத் தொடங்கினான்.

"பில்வ மங்கள் உன்னைப் பார்க்கச் சொன்னாரேயன்றி தூக்கச் சொல்லவில்லையே" என்று குறும்பாகக் கேட்ட கண்ணன், மீண்டும் சிலையானார்.

அரசன் கையில் இரு மயில் பீலிகள் இருந்தன. கருவறையிலிருந்து வெளியே வந்து, பில்வமங்களரிடம் மயில் தோகைகளைக் காட்டி கிருஷ்ணர் சொன்னதையும் கூறினான்.

"அரசே! இது கிருஷ்ணர் உங்களின் பக்திக்குக் கொடுத்த வெகுமதி. ஒரு கிரீடம் செய்து அதில் இந்தத் தோகைகளைச் செருகி, குருவா

யூரப்பன் த்லையில் அது இருப்பதாக நினைத்து பூஜை செய்து வாருங்கள். பல லாபங்களை அடைவீர்கள்” என்று வாழ்த்தினார் பில்வமங்கள்.

அதன்படியே செய்த அரசன் பல வெற்றிகளை, சுபங்களை அடைந் தான். குருவாயூர் உற்சவத்தில் தைமாதம் ஸ்ரீ கிருஷ்ண லீலையை கதகளி ஆட்டமாக நடத்த மானியம் வழங்கினான். மன்னன் காலமான பின் அவன் விருப்பப்படி சமாதியை கதகளி மண்டபத்துக்கு எதிரிலேயே அமைத்தனர்.

பில்வமங்கள் தைமாதம் குருவாயூர் வந்திருந்தார். நாராயண சரஸில் நீராடினார். சன்னதியில் வெறும் சிலை மட்டுமே இருந்தது. கிருஷ்ணர் அவருக்கு தரிசனம் தரவில்லை. கலக்கத்தோடு தாளவாத்ய சப்தம் கேட்கும் திசையை நோக்கி நடந்தார். ராஸக்ரீடை கதகளி நாட்டியமாக நடந்து கொண்டிருந்தது. அதில் கிருஷ்ணாக ஆடிக் கொண்டிருந்தார் கண்ணன். பில்வமங்களைப் பார்த்ததும் குருவாயூரப்பன் கோவிலுக்குள் சென்று விட்டார். பில்வமங்கள் அப்போதுதான் மாளவிக்ரமன் பக்திக்காக அவன் மடிந்த பின்னும் அவனுக்கு தரிசனம் தருகிறார் பகவான்’ என்பதை உணர்ந்து கொண்டார். ஏனெனில் அரசன் சமாதி எதிரேதான் கிருஷ்ணர் நடனமாடிக் கொண்டிருந்தார்!

ஒருநாள் பில்வமங்கள் பூஜை ஆரம்பிக்குமுன் தியானத்தில் இருந்தார். கண்ணன் அவரை சோதிக்க குழந்தை வடிவில் வந்து பூஜைக்கான மலர்களை இறைத்து பஞ்சபாத்திர நீரைக் கொட்டி விஷமம் செய்து கொண்டிருந்தார். மனம் ஒருமைப்படாத நிலையில் பில்வமங்கள் போ’ என்று புறங்கையால் குழந்தையைத் தள்ளினார். கண்ணன் மறைந்தான். அன்று பூஜை முடிந்து தரிசனம் கிடைக்காத பில்வமங்கள், ‘என்ன குற்றம் செய்தேன்’ என்று அரற்றினார்.

“புறங்கையால் தள்ளப்பட்ட நான் அனந்தங் காட்டுக்குப் போய் விட்டேன். என் தரிசனம் வேண்டுமானால் அங்கு வா” என்று அசரீரி ஒலித்தது.

அனந்தங் காட்டைத் தேடிப் புறப்பட்டார் பில்வ மங்கள். ஆறு மாதங்கள் காடும் மேடுமாக அலைந்து திரிந்தார். கால்கள் ரணமாய் வலித்தன. பாதங்களிரண்டும் முட்களும், கற்களும் கிழித்த காயங்கள். ஒரு வனவாசியின் குடிசைத் திண்ணையில் சோர்ந்து அமர்ந்தார். உள்ளே புருஷன் மனைவி சண்டை.

"நீ இனிமேல் எதிர்த்துப் பேசினால் உன் தலையைச் சீவி அனந்தங் காட்டில் புதைத்து விடுவேன்" என்று கத்தியது ஆண்குரல்.

பில்வமங்களுக்கு 'அனந்தங்காடு' என்ற சொல் அமிர்த தாரையாக செவிகளில் இறங்கியது தான் தாமதம்! உள்ளே எழுந்து ஓடுகிறார்.

"அப்பா! அனந்தங்காடென்றாயே! அது எங்கே இருக்கிறது? அதை எனக்குக் காட்டுவாயா?" என்று இறைஞ்சுகிறார். பொழுது விடிந்ததும் அவன் முன்னே வழி நடக்க அனந்தங்காட்டை அடைகிறார். அடர்ந்த காட்டின் நடுவே ஒரு வெட்ட வெளி.

அங்கே அனந்த பத்மநாபர் சயனக் கோலத்தில் பில்வமங்களுக்குக் காட்சி தருகிறார். வேரற்ற மரம் போல் பகவான் பாதத்தில் ஸ்வாமிகள் விழ பரந்தாமன் அந்தர் தியானமானார்.

மனதில் ஆழமாகப் பதிந்த அனந்தனை சிலையாக வடிக்கச் செய்தார். அனந்தனுக்கு ஆலயம் எழும்பியது. அந்த இடமே திரு+அனந்த+புரம் என்ற புண்ணிய ஸ்தலமாயிற்று. தினமும் புஷ்பத்தால் அனந்தனை பூஜித்தால் புஷ்பாஞ்சலி சுவாமிகள் என்று அவ்விடத்து மக்கள் அழைக்க லாயினர்.

திரும்பவும் குருவாயூரப்பனை தரிசிக்க வந்தவரை வயிற்று வலி பிடித்துக் கொள்கிறது. குருவாயூரப்பன் தன் வியாதியை குணப்படுத்து வார் என்று காத்திருக்கிறார். வியாதி நாளுக்கு நாள் அதிகமாகவே அஷ்டாங்க வைத்தியரிடம் காட்டி, அவர் தந்த கஷாயத்தை அருந்தி குணமடைகிறார்.

மறுநாள் பூஜையில் காட்சி தந்த கிருஷ்ணர், "பில்வமங்கள்! வயிற்று வலி உன் பூர்வ ஜென்ம வினை. அதை அனுபவித்துத் தீர்க்கட்டும் என்றல்லவா பேசாதிருந்தேன்! இப்படி மருந்து சாப்பிட்டு குணப்படுத்திக் கொண்டதால் இன்னும் மூன்று பிறவிகள் எடுத்தாக வேண்டும். நீ என் அருகிலேயே இருக்க வேண்டும் என்ற என் ஆசை நிராசையாகி விட்டது" என்றார்.

"இன்னும் மூன்று பிறவிகளா? எங்கே? எப்படி? தினமும் தரிசனம் தருகிறவர் 'மருந்து சாப்பிடாதே' என்று சொல்லி இருக்கக்கூடாதா? என்று வருந்தினார் பில்வமங்கள்.

"சரி. நடந்தது நடந்துவிட்டது. விதியைத் தடுக்க யாரால் முடியும்? நாளைக்கு கணியான் ஜோதிடர் தரிசனத்துக்கு வருவார். நீயும் அங்கு வா?" என்று கூறி மறைந்தார் பகவான். கணியான் ஜோதிடர் முக்காலமும் கணித்து சொல்லக் கூடியவர். அவர் சொன்னால் சொன்னபடி நடக்கும். பில்வமங்கள் ஆர்வத்தோடு கோவிலுக்குப் போனால், அங்கே நாராயண

பட்டத்ரி இருந்தார். கணியானிடம் 'என் எதிர்காலம் என்ன? அடுத்தடுத்த பிறவிகள் எப்படி இருக்கும்?" என்று கேட்டுக் கொண்டிருந்தார் பட்டத்ரி. பில்வ மங்களும் போய் சேர்ந்து கொண்டார்.

"பில்வ மங்கள ஸ்வாமிகளா? என்ன ஒற்றுமை! பட்டத்ரி! நீங்கள் அடுத்த பிறவியில் பசுவாகப் பிறப்பீர்கள்! பில்வமங்கள் அந்தப் பசுவைத் தானமாகப் பெறுவார். பால் கறக்கும் போது மடியில் உள்ள புண்ணை அவர் விரலால் அழுத்த, வலிதாளாமல் பசு துடிதுடித்து மடியும். அவர் பால் மடியை அழுத்தும் போது பின் காலால் எட்டி உதைக்கும். அது மார்பில் பட்டு பில்வமங்களும் மரணமடைவார்.

இரண்டாவது பிறவியில் க்ஷேத்ராடனம் செல்கையில் காட்டுக்கு நடுவில் உள்ள கோவிலில் ஒரு இரவு தங்குவார். கால் கழுவ குளத்தில் இறங்க, படிக்கட்டில் படுத்திருக்கும் கருநாகமான உங்களை மிதித்து விடுவார். மிதி பட்ட கருநாகம் சாகும். சாகுமுன் நாகம் கோபத்தால் இவரைக் கடிக்கும். அதனால் பில்வ மங்களின் காலமும் முடியும்.

மூன்றாவது பிறவியில் பில்வமங்கள் குருவாயூரப்பனுக்கு தினமும் துளசிமாலை கட்டிப் போடுவார். ஒருநாள் துளசி எங்கு தேடியும் அகப்பட வில்லை! பகவான் கழுத்தில் கதம்ப மாலையைப் பார்த்தவர் துளசிச் செடியைத் தேடி அலைந்தார். கடைசியில் நாராயண பட்டத்ரி துளசியாக இருக்குமிடத்திற்கு வந்து அதை வேரோடு பிடுங்கி எடுத்து வந்து ஸ்வாமியின் பாதங்களில் போட்டு மயக்கமாகிறார்.

அப்புறம் மீண்டும் அவர் எழுந்திருக்கவேயில்லை! இருவரும் ஸ்வாமி யின் ஜோதியில் கலக்கிறீர்கள்!" என்றார் கணியான். இருவரும் அப்படியே பிறவி எடுத்து பகவானோடு ஐக்கியமானதாக வரலாறு கூறு கின்றது. பில்வமங்கள சுவாமிகளின் இந்த புனித சரித்திரம் படிப்ப வரையும், கேட்பவரையும் புனிதப்படுத்துவதோடு, முக்தியும் கொடுக்கும்.

115. ஸ்ரீ ஸ்வாதித் திருநாள்

ஸ்வாதித் திருநாள் திருவனந்தபுரம் மகாராஜா. அவரது பெற்றோர் நெடுங்காலம் பத்மநாபஸ்வாமியை வேண்டி, ஸ்வாதி நட்சத்திரத்தன்று பிறந்தவர். அறிவும், ஆற்றலும் இசைப் புலமையும் கொண்டவர். தானே பாடல்கள் இயற்றி, இசையும் அமைக்கும் வல்லமை பெற்றவர்.

தங்கத்தால் பெரிய தாமரை செய்து மந்திரங்கள் முழங்க அதனுள் அமர்ந்து வெளி வந்த பின் (அந்த தங்கத்தாமரை இதழ் இதழாய் எடுக்கும் படி செய்திருக்கும்) அதன் இதழ்களை ஏழைகளுக்கு தானமாகக் கொடுப்பது பத்ம கர்ப்பதானம். பட்டமேற்ற ஐந்தாவது ஆண்டு இதைச் செய்தவர் ஸ்வாதித் திருநாள்.

ஏழை எளியவர்களிடம் மிகவும் இரக்கம் கொண்ட இவர். வரிகளை மிகவும் குறைத்தே வாங்கினார். குடிமக்களிடம் தானே நேரில் சென்று விசாரித்து அவர்கள் குறைகளை களைந்தார் 'சர்வே' துறையைக் கொண்டு வந்தார். விண்மண்டல ஆராய்ச்சிகள் நடத்த முதல் நட்சத்திர பங்களாவை நிறுவினார். இப்படி நாட்டுக்காக நிறைய சீர்திருத்தங்கள் நடத்தினார். பத்மநாப ஸ்வாமிக்கு அழகிய ரதம் செய்து கொடுத்தார். வேத விற்பன்னர்கள், வைதிகர்கள், வேதாந்திகள் ஆகியோரை வரவழைத்து ஊக்கமளித்து பரிசுகள் கொடுத்து கௌரவித்தார்.

அஜாமிளன் கதையையும், குசேலர் கதையையும் எழுதி இருக்கிறார். சத்குரு தியாகராஜ சுவாமிகளுக்கு கோவிந்த மாரார் மூலம் அழைப்பு அனுப்பினார். சகல வசதிகளோடு ராஜபோகமாக இருக்கலாம் என்று சொல்லியும், 'இராமபிரானே என் அரசன்" என்று சொல்லி அனுப்பி விட்டார் தியாகராஜர்.

ஸ்வாதித் திருநாள் சம்ஸ்கிருதம், மலையாளம், தெலுங்கு, ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்றவர். 'பாவயாமி ரகுராமம்' என்ற ராமாயண ராகமாலிகையை அழகான ஸ்வரப்ரஸ்தானங்களோடு இயற்றி இருக்கிறார். "விகசித பட்டாபிஷேகம், விஸ்வபாலம் பத்மநாபம்" என்று முடியும் அந்த கீர்த்தனை. ராமனையும் பத்மநாபனாகப் பார்த்த பக்தர் இவர். இவரது எல்லா பாடல்களும் 'பத்மநாபம்' என்றுதான் முடியும்.

கர்நாடக இசைக்கு வளம் சேர்க்கும் பாடகர்களும், சாகித்ய கர்த்தாக்களும் எங்கிருந்தாலும் அழைத்து கௌரவித்த வள்ளல் இவர். அவர்களோடு சேர்ந்து பாடும் போது அரசர் என்ற கர்வமின்றி மாணவனாக, தோழனாக செயல்பட்டிருக்கிறார். கீர்த்தனைகளுக்கு நயம் கூட்ட நளினமான யோஜனைகளும் கூறி இருக்கிறார். பத்மநாப ஸ்வாமி

யின்மேல் நிறைய பாட்டு இயற்றியிருக்கிறார். இசையைத் தவிர வீணை, பரதநாட்டியம், ஓவியம் ஆகிய கலைகளிலும் இவருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. அத்துறை வல்லுனர்களையும் அழைத்து பொன்னும், பொருளும் கொடுத்து கௌரவித்திருக்கிறார்.

ஒருநாள் கூட பத்மநாப ஸ்வாமியை தரிசிக்காமல் சாப்பிடமாட்டார். தினமும் 'ஊட்டுப்புரை'யில் அன்னதானம் நடத்தினார். பசித்த மனிதன் பாபங்களுக்கு அஞ்சமாட்டான். கொலையும், கொள்ளையும் நாட்டில் மலியும், என்பது அவரது ஆணித்தரமான வாதம்.

தனது 34–வது வயதில் அவர் அமரரானாலும் கேரளம் அவரை பத்மநாப தாசர் என்று இன்றும் கொண்டாடுகிறது.

116. மண்மலரால் அர்ச்சித்த பீமய்யா

திருமலையில் பீமய்யா என்ற குயவன். ஒரு கால் ஊனம். பரம ஏழை. 'காலில்லாத – நான் உன்னை எப்படி பூஜிப்பது' என வருந்தினான்.

திரிலோக சஞ்சாரியான நாரதர் பீமய்யாவின் கனவில் தோன்றி 'பீமய்யா... நீ பிரம்மாவுக்கு சமமானவன். அவர் மனிதர்களைப் படைக்கிறார். நீ தெய்வங்களையே படைக்கலாமே! உன் வீட்டிற்கருகிலுள்ள நந்தவனத்தைப் பார்... நந்தவனம் அமைத்து புஷ்ப கைங்கர்யம் செய்பவன் செல்வந்தன். நீ பூக்களைப் போல் மண்ணில் உருவாக்கு. நீ படைத்த தெய்வத்துக்கு அர்ச்சனை செய்'' என்றார்.

கனவு கலைந்து எழுந்தான் பீமய்யா...! சுறுசுறுப்பாக மண்பிசையத் தொடங்கினான். ரொம்ப நிதானமாக வேங்கடேசப் பெருமானது உருவம் செய்தான். நுணுக்கமாக சங்கு, சக்கரம், பீதாம்பரம், சாளிக்கிராம மாலை, கிரீடம் ஆகியவற்றை அழகழகாகச் செய்தான். செய்து முடிக்கும் வரை உண்ணவில்லை; உறங்கவில்லை.

சனிக்கிழமைதோறும் உபவாசம் இருந்தான். விதவிதமான களிமண் மலர்கள் செய்து குவித்தான். பானை செய்யும் போதே 'வாமனா, ஸ்ரீதரா,

கோவிந்தா' என்ற பகவந்நாமாவைச் சொல்லியபடி அர்ச்சித்தான். தான் சாப்பிடுவது எதுவானாலும் அதை நிவேதித்தான்.

சக்கரவர்த்தி தொண்டைமான் ஏழுமலையான் மேல் அபார பக்தி கொண்டவர். மல்லிகை, இருவாட்சி, ஜாதி, முல்லை, செண்பகம், அரளி, மகிழம்பூ. மனோரஞ்சிதம், ரோஜா, சம்பங்கி, துளசி போல விதவிதமான பொன்மலர்களைச் செய்து தினமும் அர்ச்சிக்க ஏற்பாடு செய்திருந்தான்.

'என்னைப் போல் பகவானை இப்படிப் போற்றிய பக்தர்களும் உண்டோ' என்ற கர்வமும் வந்துவிட்டது.

பொன்னால் செய்த மல்லிகையோடு மண் மல்லிகையும் விழுகிறதே" அர்ச்சகர்கள் நடு நடுங்கினர். அரசன் திடுக்கிட்டான். அடுத்து தங்க ரோஜாவுடன் மண் ரோஜா விழுந்தது. ஒருவன் ஓடிப்போய் கதவுகளைச் சார்த்தினான். பொன் சம்பங்கியோடு, மண் சம்பங்கியும் வந்தது.

அன்றிரவு மன்னன் கனவில் திருவேங்கடமுடையான் தோன்றி, "அன்ப! உன் பொன் மலர்களைவிட பீமய்யாவின் மண்மலர்களே எனக்குப் ப்ரீதி! ஏனெனில் மண்ணைப் பிசைந்து அவனே அதைச் செய்கிறான். பொருளைக் கொடுத்து பொற்கொல்லரால் உருவாக்கப்பட்டவை பொன் மலர்கள். தரும் பொருளிலல்ல உயர்வு... தரும் மனத்தைப் பொருத்தே தருவது பெருமை பெறுகிறது. சந்தேகமிருந்தால் நாளை அங்கஹீன முள்ள பீமய்யாவின் மண்பானை செய்யுமிடத்தில் வந்துபார்" என்றார்.

மறுநாள் மன்னன் பீமய்யாவின் இருப்பிடத்தை விசாரித்துக் கொண்டு வந்தான்.

சக்கரம் சுழல்கிறது. கண்மூடிய பீமய்யாவின் கைகள் லாகவமாய் பானையை உருவாக்குகின்றன. நாடாளும் மன்னன் எதிர் நிற்பதை அவன் அறியவில்லை. உதடுகள் பகவன் நாமாவை உச்சரித்துக் கொண்டிருக்கின்றன. இடையிடையே அருகில் குவித்து வைத்திருக்கும் களிமண் மலர்களில் ஒன்றை எடுத்து அருகிலிருக்கும் வெங்கடேசப் பிரதிமை மேல் மெல்ல அர்ச்சிக்கிறான்.

தொண்டைமான், பீமய்யாவே கண் திறக்கட்டும் என்று வெகு நேரம் காத்திருந்தான்.

"அந்த நாட்டை ஜெயிக்க வேண்டும்... அது வேண்டும், இது வேண்டும்" என்று கோரிக்கைவிடும் தான் எங்கே? கண்ணையே திறக்காமல், சரீரத்தையே மறந்து, கடமையைச் செய்து கொண்டே ஏழ்மையிலும் பக்தி செய்யும் இவன் எங்கே" என்று வேந்தன் வெட்கினான்.

"பீமய்யா" மன்னரின் குரல் கேட்டு கண் திறந்தான் பீமய்யா!

"அரசே... என்னைப் பார்க்க தாங்களா?"

பக்தி என்ற மணிமுடியைத் தரித்தவன் நீ. வேங்கடசப் பெருமானின் இதயத்தில் குடியேறியவன் நீ! அரசபதவி அலங்காரச் சின்னம். பக்தி மோட்சத்தின் வழிகாட்டி! இப்போது நான் உன்னைப் பார்க்க வந்தது சரிதான் என்று தோன்றுகிறதா?

அரசன் சொல் கேட்டு பீமய்யா மகிழ்ச்சியுடன் "அரசே! பகவானிடம் தினமும் என்னை எப்போது உன்னிடம் சேர்த்துக் கொள்ளப் போகிறாய்?" என்று கேட்பேன். ஒரு நாள் கனவில் பெருமாள் தோன்றி "உன்னைப் பற்றிப் புகழ்ந்து எவரிடமாவது சொல்லி அனுப்புவேன். அன்று உனக்கு முக்தி என்றருளினார். இன்றைக்கு எனக்கு முக்தி கிடைத்து விடும்" என்றான்.

அப்போது ஒரு விமானம் வந்து கண் இமைக்கும் நேரத்தில் பீமய்யாவை ஏற்றிக்கொண்டு மறைந்து விட்டது.

தொண்டைமான் மகனுக்குப் பட்டம் கட்டி பொறுப்புக்களை ஒப்படைத்து விட்டு திருமலைக்கு வந்து தன்னலம் மறந்து வெங்கடே சருக்குத் தொண்டு புரிந்து உரிய காலத்தில் முக்தி பெற்றார்.

117. ஸ்ரீ ராமபக்தர் தியாகபிரம்மம்

மனுநீதிச் சோழனின் நீதியை உலகுக்கு எடுத்துக்காட்ட இந்திரன் பசுவாகவும், யமன் கன்றாகவும் அவதரித்த திருவாரூக்கு பூங்கோயில் என்றொரு பெயருண்டு. அந்தப் பூங்கோயிலில் ராம பிரம்மம் வசித்து வந்தார். ஒரு நாள் அயர்ந்த உறக்கம்.

"ராம பிரம்மம்! நாரதனைப்போல், இசையால் ராம பக்தியைப் பரப்பி பரம்பரைக்குப் புகழ் சேர்க்கும் மகனை அடையப் போகிறாய்!"

திடுக்கிட்டு விழித்தார். கனவென்பதையே அவர் மனம் நம்ப மறுத்தது. மனைவி சீதம்மாளை அழைத்து கனவைச் சொல்லி உருகினார். அவளும் நெகிழ்ச்சியோடு, 'சபேசன் சுயநலவாதி; இரண்டாவது பிள்ளை பஞ்சாப கேசனுக்கு எதிலுமே பிடிப்பில்லை. வம்சத்துக்குப் பெருமைத் தேடித் தர மூன்றாவது பிள்ளையை தியாகராஜர் கொடுத்தால் அவர் பெயரையே சூட்டுவோம்" என்றாள்.

சொன்னபடி பத்தாவது மாதம் தியாகராஜன் பிறந்தான். குழந்தை அழும் குரலே சங்கீதமாய் ஒலித்தது. அத்தனை இனிமை! ராமப் பிரம்மம் கதாகாலட்சேபம் செய்யும்போது ஒன்றரை வயதுக் குழந்தை விஷமத்துக்கு அலையாமல் சப்பணமிட்டு அமர்ந்தபடி ஆடாது அசையாது கதையில் லயித்திருப்பதை பக்த கோடிகள் வியந்து பாராட்டுவர். அதே போல் தாய் சீதம்மா வீணையை மீட்டிக்கொண்டே அஷ்டபதி, ராமதாசர் கீர்த்தனைகளைப் பாடும்போதும் விழி இமைக்காது கேட்பார்.

நாளடைவில் தாய் பாடும் எல்லாப் பாடல்களும், தந்தை சொல்லும் ராமாயணக் கதைகளும் தியாகராஜனுக்கு மனப்பாடமாகி விட்டன.

தியாகராஜனுக்கு ஐந்து வயதானதும் சமஸ்கிருதப் பள்ளியில் சேர்க்க திருவையாற்றுக்குக் குடி பெயர்ந்தார் ராம பிரம்மம். அவரது புலமையை மதித்து தஞ்சை மன்னர் துளசிங்கர் திருவையாற்றில் திருமஞ்சன வீதியில் ஒரு இல்லத்தை ஒதுக்கினார். குடும்ப மொழியான தெலுங்கை ஐயம் திரிபறக் கற்றுப் பல நூல்கள் படித்தார். வடமொழியில் தேர்ச்சி பெற்று வேத ஞானத்தில் சிறந்து விளங்கினார். உரிய வயதில் உபநயனம் முடிந்தது.

ஒருநாள் அவர்கள் இல்லத்தில் ராமகிருஷ்ணானந்த சுவாமி என்ற பெரியவர் வந்தார். அவர் தியாகராஜனை அருகில் அழைத்து ஸ்ரீராம சடாட்சரத்தை உபதேசம் செய்து ஆசீர்வதித்தார்.

கர்நாடக இசையில் தியாகராஜன் கொண்டிருந்த நாட்டத்தைக் கண்ட ராம பிரம்மம், வெங்கடரமணய்யா என்ற இசை மேதையிடம் சங்கீதம் கற்றுக் கொடுத்தார்.

தியாகராஜன் தினமும் காலை, மாலை இருவேளைகளிலும் சங்கீத அப்பியாசம் செய்வார். நாக்கு எப்படி பேசுவதற்கு மட்டுமல்லாமல் சுவையையும் அறியச் செய்கிறதோ, அதுபோல் தியாகராஜனின் குரலினிமையோடு, பக்தியும் கலந்திருந்ததால் கேட்பவர் மெய் மறந்தனர்.

ஒருநாள் அதிகாலை, சாதகம் செய்து கொண்டிருந்த தியாகராஜர் முன் ராமகிருஷ்ணானந்தர் தோன்றினார். தியாகராஜர் திகைத்தார். "ஸ்வாமி, நீங்கள் இமயமலையில் போய் தவம் செய்யப்போவதாக புறப்பட்டீர்களே! எப்போது திரும்பினீர்கள்?" என்று கேட்டார்.

"தியாகு! பஞ்சநதீஸ்வரரைத் தரிசிக்கப் போகிறேன். கேள்விகள் கேட்டு நேரத்தை வீணடிக்காமல் என்னுடன் புறப்படு" என்று கூற, அப்படியே அவர் பின்னோடு சென்றார் தியாகராஜன்.

பஞ்ச நதீஸ்வரர் சன்னதி:

"ஸ்வரார்ணவம் என்ற இசைக் களஞ்சியம் இது. வெகு நுட்பமானது. உள்ளே ஒளிந்திருக்கும் சிறு நரம்பையும் சிலிர்க்க வைக்கும் இசை ஞானம் இதைப் படிக்க படிக்க உன்னிடம் பெருகும். அற்புதமான சங்கதிகளெல்லாம் விழும். நான் காவேரிக்குப் போய் ஸ்நானம் செய்து விட்டு சாப்பாட்டுக்கு வருகிறேன்" என்று கூறி ஓலைச்சுவடிக் கட்டை கொடுத்தார்.

திக்பிரமித்து நின்று கொண்டிருந்த தியாகராஜன் வீட்டிற்கு வந்தார். அறைக்குள் நுழைந்து ஸ்வரார்ணவத்தைப் படிக்க ஆரம்பித்தவர் சுற்றுச் சூழலை மறந்தார். உணவை மறந்தார். வெயில் உச்சிக்கு ஏறியது.

"தியாகு! கேட்கக் கேட்க பதிலே சொல்லாமல் அப்படி லயித்துப் படிப்பது எதை? எதானாலும் சாப்பிட்டு விட்டுப் படிக்கக்கூடாதா?" என்றான் அன்னை.

"அம்மா! ராமகிருஷ்ணானந்த ஸ்வாமி வந்திருக்கிறார். அவர்தான் ஸ்வரார்ணவம் என்ற இந்த இசைப் பொக்கிஷத்தை தந்தார். படிக்கப் படிக்க அற்புதமாய் இருக்கிறது! அதோடு சுவாமி நம் வீட்டிற்குச் சாப்பிட வருவதாய் சொல்லி இருக்கிறார். அவர் சாப்பிட்ட பிறகு சாப்பிடுகிறேன்" என்றார் தியாகராஜன்.

மகன் பேச்சைக் கேட்டு பச்சடியும், பாயசமும வைத்து, வடை தட்டிய சீதம்மாவை கேலி செய்தார் ராம பிரம்மம். காசியிலிருந்த நேற்று நேபாளம் போறதா தகவல் அனுப்பிச்சிருக்கார் ராமகிருஷ்ணானந்தர். இந்தப் பித்துக்குளி சொப்பனத்திலே எதையோ பார்த்துட்டு உளர்ரது"

"அவன் படிக்கிற ஓலைக்கட்டு?" குறுக்கே மடக்கினாள் சீதம்மா.

"காவேரிக்கரையிலே பொங்கலுக்கு வீட்டை ஒழிச்சவா வீசி எறிஞ்சதாயிருக்கும். இல்லே.... இவன்கிட்டேயே கொடுத்திருக்கலாம். விளக்கேத்தற நேரமாச்சு! காவேரியிலே குளிக்கப் போனவர் கடல்லே சங்கமமாயிட்டாரா? அதோ பார்.... உன் அருமைப் பிள்ளை பசியிலே தூங்கிட்டான்! எழுப்பி நல்ல வார்த்தை சொல்லி சோத்தைப் போடு" என்றார் ராம பிரம்மம்.

பாசத்தோடு புதல்வனை எழுப்பினாள் சீதம்மா....."தியாகு... வயிறு ஒட்டிப்போச்சேடா கண்ணா..... முழிச்சுண்டு சாப்பிட வா" என்ற தாயை மலங்க மலங்கப் பார்த்தான் மகன்.

"அம்மா! என்னோட சொப்பனத்திலே நாரதஸ்வாமி வந்தார். 'குழந்தே! நீ பெரிய இசை ஞானியா வருவேன்னு' ஆசீர்வதிச்சார். இப்படித் தலையைத் தொட்டு..... பக்தியை இசையோடு கலந்து பரப்ப நீதான் பொருத்தமான ஆளுன்னு ஸ்ரீ மகாவிஷ்ணு சொன்னதாலே குருநாதர் வடிவத்துலே வந்தாராம். நேரத்தை வீணாக்காம நிறையக் கிருதிகள் இயற்றப்போறேன்!" என மெய் புளகப் பேசினார்.

சீதம்மா கண்ணில் ஆனந்த நீர் பெருக நின்றாள்.

காலம் நல்லது, கெட்டது எதற்காகவும் நிற்பதில்லை. ராம பிரம் மத்தின் காலம் முடிய, மூத்தவன் சபேசன் குடும்பத் தலைவனானான்.

"இதோ பாரும்மா.... இவன் சதா பாடிண்டிருந்தா காலட்க்ஷேபம் என்னாறது? நான் ஒருத்தன் தான் இளிச்சவாயனா? ஓடிப்போன பஞ்சாபகேசன் என்னானான்னே தெரியலே....வேலைக்கும் போகாம, வயல் வேலையும் பார்க்காம உஞ்சவிருத்தி சொம்பை எடுத்துண்டு போறது கேவலமில்லையா? கலியாணம் பண்ணி வைச்சா குடும்பப் பொறுப்பு வந்துடும்னே! கலியாணம் செஞ்சு வைச்சோம்! அந்தப் புண்ணியவதிக்கும் சேர்த்து கையேந்தினான்! அது பொறுக்காமையோ, என்னவோ

பார்வதியும் போய் சேர்ந்துட்டா பார்வதியோட தங்கை கமலம் தானாவே முன் வந்து இவனுக்குச் சேவை செய்யறேன்னு இவன் குணம் தெரிஞ்சு ஒத்துண்டிருக்கா. கலியாணம் முடிஞ்சப்புறம் கட்டாயம் பாகம் பிரிச் சுடணும். வேணும்னா வீட்டுக்கு நடுவிலே என் செலவுலேயே தடுப்புச் சுவர் கட்டிக்கிறேன்" என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டார்.

கலியாணம் முடிந்ததும் சொன்னபடி சுவர் எழுப்பினார் சபேசன். தஞ்சை மன்னன் சரபோஜி பொன்னும், பொருளும், பட்டாடைகளும் அனுப்பி, சபையில் வந்து பாடும்படி, அரசவைக் கவிஞராக இருக்கும்படி அழைத்தார். எல்லாவற்றையும் திருப்பி அனுப்பி, பதவியை மறுத்து, "நிதி சால சுகமா?" என்று பாடிய தம்பியைப் பிழைக்கத் தெரியாதவன் என்று தூற்றினார் தமையன்.

கேரள அரசர் சுவாதித் திருநாள் தானாகவே கிருதிகள் இயற்றிப் பாடுவதில் வல்லவர். வடிவேல் என்ற வயலின் வித்வான் மூலம், காவிரிக் கரையில் பாடுவதை இங்கு வந்து பாடலாம் என்று தூது விட்டார். பரிசாக வந்த பொன் முடிப்பையும், ஆபரணங்களையும் திருப்பி அனுப்பிவிட்டார் தியாகராஜர். காவேரி நீரிலே ஸ்ரீராமன் உருவத்தை அவர்கள் பார்க்க முடியாவிட்டால் அவன் இல்லை என்று அர்த்தமா? அதோ பள்ளி கொண்டிருக்கும் ரகுநாதன் காலை ஜனககுமாரி பிடித்துவிட்டுக் கொண்டிருக்கிறாள்! தாயே! நன்றாகப் பிடி. காட்டிலே உன்னைத் தேடி கல்லிலும், முள்ளிலும், அலைந்த கால்கள்! போரிலே அம்புகள் தைத்து தாகவிடாய் எடுத்ததால் காவிரிக்கு வந்து விட்டீரா.. என் பிரபு!" என்று உள்ளம் கனியப் பேசிக்கொண்டிருப்பவர், உடனே பாட்டியற்றிவிடுவார்.

அது நீராடும் போதா, துணி துவைக்கும் போதா, ஸ்வாமிக்கு அலங்காரம் செய்யும்போதா என்று தெரியாதபடியால் ஓலைச் சுவடியும், எழுத்தாணியும் கொண்டு பின் தொடர்வார்கள் சிஷ்யர்கள். தாளமும், ராகமும் குறித்துக் கொண்டு பின்னர் பாடிக் காண்பிப்பார்கள்.

கமலம் தியாகராஜர் குறிப்பறிந்து நடப்பாள். ஒரு தடவை உஞ்ச விருத்திக்குப் போகாமல், இசையிலேயே லயித்துப் போய்விட்டார். "நைவேத்யம் கொண்டு வா என்று சொல்லும்போது நான் என்ன செய்வேன்" என்று மனம் அலை பாய தவித்தாள் கமலம். அடுத்த நிமிஷம் அன்னமும், பருப்பும், நெய்யும் வழக்கமான பாத்திரங்களில் நிறைந்து இருந்தது கண்டு ஸ்ரீராமனின் கருணையை அனைவரும் வியந்தனர்.

"எல்லாரும் சதா ராமா, ராமா என்றால் என் ராமன் தூங்க வேண்டாமா என்று "உய்யால லூகவையா" என்று நீலாம்பரி பாடுவார். "மேலுகோவையா" இது அலங்காரம் செய்துகொண்டே இயற்றிய கிருதி "தீருடெளராமதாஸுனி பந்தமு" என்று "தீரனான இராமதாசரது பந்தங் களை போக்கியவரே" ஏன்ற பொருள்பட "க்ஷீர சாகர சயனா" என்ற பாடலில் உருகுகின்றார். பத்ராசல ராமதாசரின் பாடல்களில் மனதைப் பறி கொடுத்தவர் தியாகராஜர். 'பிருந்தாவன லோல' என்ற பாடலில் 'ராம தாஸன்' என்று தம்மைக் குறிப்பிட்டுக் கொள்கிறார். "அரசன் பணத்தை எடுத்து செலவு செய்தால் கடும் தண்டனை கிடைக்கும்" என்று தெரிந்தும், துன்பத்தை எதிர்கொண்ட ராமதாசரின் தீரம் இவர் இதயத்தில் இடம் பிடிக்கச் செய்தது.

ஒரு சமயம் திருவாங்கூரிலிருந்து கோவிந்தமாரார் என்ற இசை மேதை வந்து தியாகராஜரின் காலில் விழுந்து வணங்கி, "எனது தாள வாத்தியக் கச்சேரியை கேட்டு ஆசீர்வாதம் பண்ணினால் தன்யனாவேன்" என்று வேண்ட, கச்சேரியைக் கேட்க இசைந்தார். 'சத்கலா பல்லவி' என்ற சிறப்பான அந்த தாளவாத்தியக் கச்சேரியைக் கேட்டு மனம் பூரித்து, ஸ்ரீராகத்தில் 'எந்தரோ மகானுபாவலு' என்று பாடி பாராட்டை இசை வடிவில் வெளியிட்டார்.

தமையன் சபேசனுக்கு தம்பியின் பெருமைகள் பொறாமையைத் தூண்டியது தியாகராஜர் பூஜித்த ராம, லட்சுமண, சீதா விக்கிரங்களைத் தூங்கும்போது ஆற்றில் எறிந்துவிட்டால், தம்பியின் பக்திப்பித்து மறைந்து விடும் என்று முடிவு கட்டி நினைத்ததை செயலாக்கி விட்டார்.

காலையில் எழுந்த தியாகராஜர் விக்கிரங்களைக் காணாமல் தவித்தார். நிலத்தில் போடப்பட்ட மீனைப் போல் அவர் மனம் துடித்தது. குளிக்கவில்லை, சாப்பிடவில்லை, மயக்கமா, சோகத்தின் அழுத்தமா, உறக்கமா என்று தெரியாத நிலை.

அவர் கண்முன் ஸ்ரீராமன் தோன்றி, "அன்ப! வருந்தாதே காவிரியில் புஷ்ய மண்டபப் படித்துறைக்கு அருகில் நான் இருக்கிறேன். வா, என்னை மீட்டுக்கொள்" என்றார்.

தியாகராஜர் ஓடினார் புஷ்ய மண்பத்துறைக்கு காவிரியில் மூழ்கி கண்டெடுத்தார். விக்கிரங்களை! "கனு கொண்டினி" என்று ஆனந்தமாய் பாடிக் கொண்டே இல்லம் வந்து சேர்ந்தார்.

"என் பேர் கணேச கிரி பாவா.....உங்கள் ராமன்தான் எங்கள் பண்டரியில் கண்ணனாக அருள்பொழிகின்றான். நீங்கள் ஏன் அமீர்–கல்யாணி, யமுனா–கல்யாணி ராகங்களில் பாட்டு இயற்றவில்லை? உங்களோடு கொஞ்சநாள் இருந்து உங்கள் பக்தியை, இசையைப் பாண்டு ரங்கனுக்குக் சொல்ல உத்தரவு தரவேணும்" என்ற கோரிக்கைக்கு இசைந்தார் தியாக பிரம்மம். கணேச கிரி பாவாவின் விருப்பப்படி வடநாட்டு ராகங்களிலும் கீர்த்தனைகள் இயற்றினார்.

காஞ்சி ஸ்ரீ உபநிஷத் பிரம்மேஸ்வர சுவாமிஜியின் அழைப்பை ஏற்று காஞ்சிக்குச் சென்று, காமாட்சி சன்னிதானத்தில் 'வினாயகுனி வலனு ப்ரோ' என்று மத்யமாவதி ராகக்கீர்த்தனையையும், வரதராஜப் பெருமாள் சன்னதியில்", வரதராஜ நின்னு கோரி" என்ற ஸ்வரபூஷண ராகக் கிருதியையும் பாடினார்.

பஞ்ச ரத்னக் கீர்த்தனைகள் பாடிய இடம் திருவொற்றியூர், கோவூரில் கோவூர் பஞ்சரத்னக் கீர்த்தனைகளைப் பாட, கோவூர் சுந்தரேச முதலியார் என்ற கோடீஸ்வரர் தியாகராஜரையும் அவரது சீடர்களையும் நன்கு உபசரித்து பொற்கிழி ஒன்றைப் பரிசாகத் தந்தார். தியாகராஜர் வழக்கம் போல் இதையும் மறுத்துவிடவே, 'பல்லக்கிலாவது போக வேண்டும்' என்று வேண்டிக் கேட்டுக் கொண்டார்.

தியாகராஜர் சம்மதிக்க அவரறியாமல் பல்லக்கின் ஒரு மூலையில் பொற்கிழியை மறைத்து வைத்தார். திருப்பதிக்குப் போகும்போது பொன் முடிப்பு சீடர்கள் பார்வையில் பட அவர்கள் குருநாதரிடம் கூறினார்கள். தியாகராஜர் விரக்தியோடு "இப்படியெல்லாம் பக்தர்கள் செய்தால் அதற்கென்ன செய்ய முடியும்! ஸ்ரீராமன் தன் கைங்கரியத்துக்காக வசூலித்திருக்கிறான்! வேண்டுமென்றால் அவனே காப்பாற்றிக் கொள்வான்" என்றார்.

காட்டு வழியில் பல்லக்கை மடக்க கொள்ளையர்கள் காத்திருந்தனர். அவர்கள் பார்வையில் பல்லக்கின் இருபுறமும் இரண்டு அழகிய ராஜகுமாரர்கள் வில், அம்புடன் காவல் வருவதைப் பார்த்தனர். ஏதோ ஒரு காந்த சக்தி அவர்களை ஆகர்ஷிக்க, பல்லக்கின் அருகில் வீரர்களைப் பார்த்தபடி பின் தொடர்ந்தனர். விடிந்ததும் வீரர்களைக் காணவில்லை.

கொள்ளையர்கள் தியாக பிரம்மத்திடம் பணிவுடன் "ஐயா, பல்லக்குடன் வந்த அரசகுமாரர்கள் எங்கே?" என்று கேட்க, தியாக பிரம்மம் சிந்தித்தார்.

சீடர்களோ, "ஸ்வாமி! இவர்கள் இரவெல்லாம் பல்லக்குடனேயே ஓடி வந்தார்கள். இவர்களின் முரட்டு உருவத்தைப் பார்த்துக் கொள்ளை யர்கள் என்று புரிந்துக் கொண்டோம். தகுந்த நேரமும், இடமும் நிர்ணயிக்க முடியாமல் பின் தொடர்கிறார்கள் என்று நடுநடுங்கிக் கொண்டிருந்தோம். ஆனால் இவர்கள் சொல்வது போல் வில் வீரர்கள் எவரும் காவலாக வரவில்லையே?" என, தியாக பிரம்மம் கண்ணீர் உகுத்தார்.



"ராமதாசருக்காக நள்ளிரவில் பாதுஷாவிடம் கடன் தீர்க்க வந்தது போல இந்தப் பொற்கிழியைக் காப்பாற்ற என் பல்லாக்கோடு ஓடி வந்தீர்களா? அப்பா, இரவு முழுவதும் தரிசனம் செய்த நீங்கள்தான் புண்ணியவான்கள்! அவர்கள் எப்படி இருந்தார்கள் என்று சொல்லுங் களேன்" என்று உருகினார் கொள்ளையர்கள் வர்ணிக்கவும், அப்போதே ராமனின் ரூப சௌந்தர்யத்தை உருவகித்து ஒரு கீர்த்தனை பாடினார்.

கொள்ளையர்கள் மனம் திருந்தி விடைபெற்றனர். திருப்பதியில் கர்பக்கிரஹத்தில் திரை போடப்பட்டிருந்தது. கௌளிபந்து ராகத்தில் 'தேரதீயகராதா' என்று உருகிப் பாடவும் திரை தானாகவே விலகியது. திவ்யதரிசனம் செய்து மகிழ்ந்தார். திரும்பி வருகையில் புத்தூர் ஆலய கோபுர உச்சியிலிருந்து பக்தி முற்றி போய், 'பகவானே உன்னிடம் வருகிறேன்' என்று ஒரு வேதியன் உயிரைவிட அவனைச் சேர்ந்தவர் களின் துயரம் தியாக பிரம்மத்தின் நெஞ்சத்தை வாட்டியது பிலஹரி ராகத்தில் சுவாமிகள் பாடிய பாடல் அந்தணரை உயிர் பெறச் செய்ததோடு புத்தியையும் தெளிவாக்கியது.

சோளிங்கபுரம், ஸ்ரீரங்கம் என்று ஸ்தல யாத்திரை முடித்துக் கொண்டு ஊர் திரும்பினார் சுவாமிகள். அதற்காகவே காத்திருந்து போல் இவர் மடியில் உயிர்விட்டாள் மனைவி கமலம்.

தியாக பிரம்மத்திற்கு முப்பத்தெட்டு வயது முடிந்தது. ஸ்ரீராம சடாட்சர மந்திரத்தை 96 கோடி முறை பாராயணம் செய்து விட்டார். ஒருநாள் பூஜையில் ராமாயணக் காட்சிகள் கண்முன் நடப்பது போலவே தெரிந்தது. மெய்யுருக அடாணா ராகத்தில் 'ஏலானிதயாரது' என்ற கிருதியைப் பாடியது அப்போதுதான்.

"தை மாதம் புஷ்ய பகுள பஞ்சமியன்று என்னை அழைத்துக் கொள் வதாக என் பிரபு சொல்லிவிட்டார். குருநாதரின் சமாதிக்கு அருகிலேயே என் சமாதி இருக்கட்டும். 60 ஆண்டுகள் என் கீர்த்தனைகளைப் பிரபலப் படுத்தும் முயற்சியில் ஈடுபடவேண்டாம். பின்னர் அது தானாகவே புகழ் பெறும்" என்றார்.

பகுளபஞ்சமி அன்று சிஷ்யர்கள் விம்மி விம்மி அழுதனர். 'பரிதாபமு' என்ற கீர்த்தனையைப் பாடினார். "வாக்குதவறாத ஸ்ரீ ராமச்சந்திரா! பிதுர் வாக்கியப் பரிபாலனம் செய்தவனே! சுக்ரீவனுக்குக் கொடுத்த வாக்

குக்காக மறைந்து நின்று வாலியைக் கொன்றாய் என்ற உலகப் பழிக்கு ஆளானவனே! விபீஷணனுக்கு இலங்காபுரியை அளித்தவனே! என் விஷயத்தில் உரைத்தது பொய்யானால், அது உனக்கு இழுக்காகாதா?" எனப் புலம்பிய உடன் தியானநிலை அவரை ஆட்கொண்டது.

தலை உச்சியிலிருந்து ஒரு ஜோதி கிளம்பி ஸ்ரீராம விக்கிரகத்திடம் சேர்ந்தது.

பொருளையும், பதவியையும், புகழையும் புறக்கணித்து ராமபக்தியையே உதிரமாகக் கொணடு இசையின் மூலம் அதை வெளிப்படுத்தியவர் தியாகப் பிரம்மம்.

அந்தத் தியாகராஜ சுவாமிகளின் வரலாற்றினைப் பக்தியோடு படிப்ப வரும், கேட்பவரும் அவரது கீர்த்தனைகளைப் பாடி புகழ் பரப்புவோரும் ஸ்ரீராமபிரானின் அருளுக்கும், ஸ்ரீ ஆஞ்சனேய ஸ்வாமிகளின் அருட் கடாட்சத்துக்கும் பாத்திரமாகி காரியசித்தியும், வைராக்கியமும் மகாலக்ஷ் மியின் அருளும் ஆற்றலும் வித்வத்துவமும பெற்று மேன்மை யடைவர் என்பது திண்ணம்.

சுபம்

118. ஜயதேவர் அஷ்டபதி (தசாவதாரம்)

1. ப்ரளய பயோதி ஜலே த்ருத வானஸி வேதம்
விஹித வஹித்ர சரித்ரம் அகேதம்
கேசவ! த்ருத மீனஸரீர ஜய ஜகதீஸஹரே (ஜயஜய)

2. க்ஷிதி ரதி விபுல தரே தவ திஷ்டதி ப்ருஷ்டே
தரணி தரண கிண சக்ர கரிஷ்டே
கேசவ! த்ருத கச்சப ரூப (ஜயஜகதீ ஸஹரே)

3. வஸதி தஸனஸிகரே தரணீ தவ லக்னா ஸஸினி
களங்க கலேவ நிமக்னா கேசவ! த்ருத ஸூகரரூப! (ஜய ஜகதீஸ)

4. தவ கர கமல வரே நகம் அத்புத ஸ்ருங்கம்
தளித ஹிரண்யகஸிபு தனுப்ருங்கம்
கேசவ! த்ருத நரஹரி ரூப (ஜய ஜகதீஸ)

5. சலயஸி விக்ரமணே பலிம் அத்புதவாமன
பத நகநீ ரஜனி தஜன பாவன
கேசவ! த்ருத வாமனரூப (ஜய)

6. க்ஷத்ரிய ருதிர மயே ஜகத் அபகதபாபம்
ஸ்னபயஸி பயஸி ஸயித பவதாபம்
கேசவ! த்ருத ப்ருகு பதி ரூப! (ஜய)

7. விதரஸி திக்ஷு ரணே திக்பதி கமனீயம்
தஸமுக மௌளி பலிம் ரமணீயம்
கேசவ! த்ருத ரகுபதி ரூப! (ஜய)

8. வஹஸி வபுஷி விஸதே வஸனம் ஜலதாபம்
ஹலஹதி பீதி மிளிதய முனவம்
கேசவ! த்ருத ஹல தர ரூப! (ஜய)

9. நிந்தஸி யக்ஞவிதே: அஹஹ ஸ்ருதி ஜாதம்
ஸதய ஹ்ருதய தர்ஸித பஸுகாதம்
கேசவ! த்ருத புத்த ஸரீர! (ஜய)

10. ம்லேச்னி வஹனி தனே கலயஸி கரவாளம்
தூமகேதும் இவ கிமபி கராளம்
கேசவ! த்ருத கல்கி ஸரீர (ஜய)

11. ஸ்ரீ ஜயதேவகவேர் இதம் உதிதம் உதாரம்
ஸ்ருணு ஸுகதம் ஸுபதம் பவஸாரம்
கேசவ! த்ருததஸ விதரூப! (ஜயஜக)

(கை கால் வெட்டுப்பட்டு கிணற்றில் தள்ளப்பட் சமயம் ஜயதேவர் மனம் உருகிப் பாடிய அஷ்டபதி. பரந்தாமன் தசாவதாரங்களையும் காட்டி அருளினார்.)

அஷ்டபதி (ராஸலீலா)

1. ஸஞ்சரத் அதரஸுதா மதுரத்வனி முகரித மோஹன வம்சம்
சலித த்ருகஞ்சல சஞ்சல மௌளி கபோல விலோல வதம்ஸம்
ராஸே ஹரிம் இஹ விஹித விலாஸம்
ஸ்மரதி மனோ மம க்ருத பரிஹாஸம் (ராஸே)

2. சந்த்ரக சாரு மயூர சி கண்டக மண்டல வலயித கேஸம்
ப்ரசுர புரந்தர தனுரனு ரஞ்ஜிதமே துர முதிரஸுவேஷம் (ராஸே)

3. கோப கதம்ப நிதம்பவதீமுக சும்பன லம்பித லோபம்
பந்து ஜீவ மதுராதர பல்லவ கலித தரஸ்மித ஸோபம் (ராஸே)

4. விபுல புலக புஜா பல்லவ வலயித வல்லவ யுவதி ஸஹஸ்ரம்
கர சரணோ ரஸி மணி கண பூஷண கிரண விபின்னத மிஸ்ரம்
(ராஸே)

5. ஜலத படல சலதிந்து விநிந்தக சந்தன பிந்து லலாடம்
பீனபயோதர பரிஸரமர்தன நிர்தய ஹ்ருதய கவாடம் (ராஸே)

6. மணிமய மகர மனோகர குண்டல மண்டித கண்ட முதாரம்
பீத வஸனம் அனுகதமுனி மனுஜா ஸுரா ஸுர வர பரிவாரம்
(ராஸே)

7. விசத கதம்ப தலே மிளிதம் கலிகலுஷ பயம் ஸமயந்தம்
மாமபி கிமபி தரங்க தனங்க த்ருஸா வபுஷா ரமயந்தம் (ராஸே)

8. ஸ்ரீஜய தேவ பணிதம் அதி ஸுந்தர மோஹன மதுரி புரூபம்
ஹரி சரண ஸ்மரணம் ப்ரதி ஸம்ப்ரதி புண்ய வதாம் அனுரூபம்
(ராஸே)

கனகதாஸர் கீர்த்தனை

1. கோவிந்த கோவிந்த என்ன லரியதே வ்ருத
கோவிந்த பங்கவ படுவுது சிதவே!
க்ஷீண ஸாஸ்த்ராத்தவ பரிக்ரஹி ஸுதே குரி
கோண கள தல செண்டாடி

2. ப்ராண ஹத்யவ மாள் புதாவ ஸத்கர்மவோ
ஸ்ரீனிவாசன நாம ஸ்மரணேய மாடோ!
கண்ட கொய்து கொட பேடா தள்ளுரி யக்னி
குண்டவனு ஹொக்கு ஹொரடுவுது சிதவே

3. பண்ட ரந்ததி பத்தலெ பஹுதா வட
புண்டரீ காட்சன நெனே காணோ மனவே!
குட்டி கொள்ள திரி ஜட்டி குண்டினலி
சிட்டி கொள்ள திரி பென்னலி ஸிடியனு

4. கட்டி தூகிஸி கொள்ள திரி காடக தந்தே
குட்டினலி கோபாலன ஸ்மரிஸோ!
தொகள பில்லே கொரளலி கட்டி கொண்டு
ஹகலு இருளு அன்ன பானகெ ஹோகதே

5. கக வைரி யந்தே கிஸு கேல வுதாவாட
ஜக ததி பதி நாம ஸ்மரிஸு மருளே!
உத்தம ஜனரு ஸுரெய நிண்டுவரே
மதோன்மத்தராகி ஸப்தனு டியுவரே

6. ஸத்தவனந்தே பித்து ஹுதா வனீதி
புருஷோத்தமன நாம ஸ்மரணேய மாடோ!
வேதோக்த பூஜெயலி த்ருப்தி படி ஸதிரே
ஆதுதேனு அதரிந்தே பவவாவுது

7. நாதவ கேளித ஹரிணனந்தே கெடயதே
மதுஸூதனன நாமஸ்மரணேய மாடோ!
நிந்தாப வாத கடிஸு வுதைஸே இதரிந்த
முந்தே முக்தியு நிமகே ஸாத்யவ ஹுதே
தந்தே காகெ நெலயாதி கேஸவநாம
ஒந்தே வைகுண்டவனை திபுதய்ய

கபீர்தாசர் கீர்த்தனை

1. ராம ஸுமர ராம ஸுமர ராமஸுமர பாக
ராம நாம ஸுமரன பின பூடத அதிகாயீ
வனிதாஸுத தேஹ கேஹ ஸம்பதி ஸுததாயீ
இன மேம் கசு நாஹீம் தேரோ கால அவதி ஆசு

2. அஜாமிள கணிகா கஜபதித கர்மகீனே
தேவு உதர பாரபரே ராம நாம லீனே!
ஸுகர கூகர யோனி ப்ரம்யோ தவு லாஜ ந ஆயீ
ராம நாம சாண் – அம்ருத காஹே விஷகாயீ!!

❖❖❖

3. தேஜ பர்ம கர்ம விதி நிஷேத ராம நாம லேஹீ
குரு ப்ரஸாத ஜன கபீர ராம கர ஸனேஹீ

1. ஹரி ஸே கோயி நஹீ படாதிவானே க்யோம் கபலத மேம் படா!
ப்ரஹ்லாத பேடா ஹரிஸே லபடா தபீ கம்ப கடகடா!
கோபீ சந்தனே பசன ஸுனகர மஹால முலுக ஸப ஸோடா!

2. ஹனுமானே ஸேவா கீனீலே த்ரோணா கிரி உடா!
புண்டலிக நேம் ஸேவா கீனி விட்டல சண்ட் பரகடா
கஹத கபீரா ஸுனபாயீ ஸாது ஹரி சரண சித்தஜுடா

ஸ்ரீ மீரா பஜன்

1. வந்தே மோஹன மோஹினீ ஸஹசரீம் ஸ்ரீ சம்ப வல்லீம் முதா
ராதா மாதவ கேலனாம்ருத ரஸஸ் பீதாம் ச பத்மாவதீம்!

2. ஸ்ரீலீலா சுக தேவ சித்த குமுத ஜ்யோத்ஸ்னாம் ச சிந்தாமணீம்
கிருஷ்ணப்ரேம த்ருணீ க்ருத த்ரிபுவனாம் மீராம் ச மத் ஸ்வாமினீம்!!

❖❖❖

1. ராதே க்ருஷ்ண போல தோதீ மைனா ராதே க்ருஷ்ண போல
ஏகஹீ தோதி துண்டத ஆயீ லகட கியா அநிமோல தோதி மைனா ।

2. தானா காவே தோதீ பானீ பீவே பிஞ்ஜரமேம் காத கல்லோல தோதி மைனா
மீரா கே ப்ரபு கிரிதர நாகர ஹரிகே சரண சித்த டோல தோதி மைனா ॥

❖❖❖

1. ராதா ப்யாரே தே டாரோஜி பன்ஸீ ஹமாரீ ।
ஜோ பன்ஸீமே மேரா ப்ராண பஸத ஹைவோ பன்ஸீ
கயீ சோரீ! நாஸோனே கீ பன்ஸீ ரூபேகி ॥

2. ஹரி ஹரி பான்ஸகீ பேரி! கடி ஏக முகமேம் கடி ஏக காமேம் ।
கடி ஏக் அதர தரீ மீரா கே ப்ரபு கிரிதர நாகர
சரண கமல பலி ஹாரீ ॥

❖❖❖

।. ப்யாரீ மேம் ஜஸே தேகே ஸ்யாம்
பாம்ஸுரி பஜாவத காவத கல்யாண் ।
கபகீ மைம் டாடீ பையாம் ஸுத புத பூலகையாம்
சௌனே ஜைஸே ஸாதூடாரா பூலே மோஸே காம் ॥

ஜயதுன கான பையா தேஹகீ நாஸுத ரஹியா
தனமன ஹர லீனோ விரஹோம் வாலே கான்ஹ ।
மீரா பாயீ ப்ரமே பாயா கிரிதர லால த்யாயா
தேஹ ஸோம் விதேஹ பையாம் லாகோ பக த்யான் ॥

3. க்ருஷ்ண கரோ யஜமான ப்ரபு தும் க்ருஷ்ண கரோ யஜமான
ஜாகீ கீரத பேத பகானத ஸாங்கீ தேத புரான – ப்ரபு தும்

4. மோர முகுட பீதாம்பர ஸோபத குண்டல ஜலகத கான ப்ரபுதும்
மீரா ப்ரபு கிரிதர நாகா கே தர்ஸன கோ தான ப்ரபு தும்

ஸ்ரீ துளசிதாசர் கீர்த்தனை

1. ஸ்ரீ ராமச்சந்த்ர க்ருபாளு பஜுமன ஹரண பவபய தாருணம்॥
நவகஞ் லோசன கஞ்ஜமுக கரகஞ்ஜபத கஞ்ஜாருணம்
கந்தர்ப்ப அகணித அமித சபி நவநீல நீரஜ ஸுந்தரம்
படபீதமானோ தடித ருசி ஸுசி நௌமி ஜனக ஸுதாவரம் ॥

2. பஜன தீனபந்து தினேச தானவ தைத்ய வம்ச நிகந்தனம்।
ரகு நந்த ஆனந்த கந்த கோஸல தசரத நந்தனம் ॥
ஸிரமுகுட குண்டல திலக சாரு உதார அங்க விபூஷணம் ॥

3. ஆஜானு புஜ சரசாபதர ஸங்கர்ஷ மஜித கர தூஷணம் ।
இதி வதத துளஸீதாஸ சங்கர சேஷ முனி மன ரஞ்ஜன
மம ஹ்ருதய கஞ்ஜ நிவாஸகர காமாதி கலதல கஞ்ஜனம்

❖❖❖

1. பஜரே பையா ஸீயா நந்தன கோ தசரத ஸுத
ஆனந்த கந்தன கோ ரே ॥
ஜானகீ நாயக ஜனஸுக தாயக ஸப ஸந்தன
தன ரஞ்ஜன கோரே ॥
ஜனக ஸ்வயம்வர பாவன கீ நோ கடீன
தனுஷகே பஞ்ஜன கோரே॥

2. ஜாம்பவந்த ஸுக்ரீவ நீல நள சரண கமல
பத பந்தக கோரே ॥
லங்க பாதிகோ கரவ ஹராயோ விஸபுஜாஸிர

கண்டன கோரே ॥
துலஸீதாஸ ப்ரபுரூப நிஹாரகே கடத ஜமகே
பந்தன கோரே ॥

ஸ்ரீ பத்ராசல ராமதாஸர்

1. ஓ ராம நீ நாம மேமி ருசிரா
ஸ்ரீ ராம நீ நாம மெந்த குசிரா (ஸ்ரீ ராம)

2. மதுரஸ முல கண்டே ததி க்ருத முல கண்டே
அதிர ஸமகு நாமமே ருசிரா (ஸ்ரீ ராம)

3. நவரஸ பரமான்ன நவநீத முல கண்டே
நதிக மௌ நி நாம மேமி ருசிரா (ஸ்ரீ ராம)

4. த்ராக்ஷா பல முகன்ன நிக்ஷு ரஸமு கன்ன
பக்ஷி வாஹ நீ நாம மேமி ருசிரா (ஸ்ரீ ராம)

5. அஞ்சனா தனய ஹ்ருத்கஞ்ச தலமுனந்து
ரஞ்சில்லு நீ நாம மேமி ருசிரா (ஸ்ரீ ராம)

6. ஸதா சிவுடு மதி ஸதா பஜிஞ்சேடி
ஸதானந்த நாம மேமி ருசிரா (ஸ்ரீ ராம)

7. ஸாரமுலேனி ஸம்ஸார முனகு
ஸந்தார கமகு நாம மேமி ருசிரா (ஸ்ரீ ராம)

8. ஸரணன்ன ஜன முல ஸர்குண ரக்ஷிஞ்சு
ப்ருது கல்கின நாம மேமி ருசிரா (ஸ்ரீ ராம)

9. கரிராஜ ப்ரஹ்லாத தரணீஜ விபீஷணுல
காசின நீ நாம மேமி ருசிரா (ஸ்ரீ ராம)

10. கதலீ கர்ஜ்ஜூர பல ரஸ முல கதிகமமு
பதித பாவன நாம மேமி ருசிரா (ஸ்ரீ ராம)

11. தும்புரு நாரதலு டம்பு மீரக
கானம்பு ஜேஸேடி நாம மேமி ருசிரா (ஸ்ரீ ராம)

12. ராம பத்ராசல தாம ராமதாஸுனி
ப்ரேமனேலின நாமமேமி ருசிரா (ஸ்ரீ ராம)

❖❖❖

1. நாராயண நாராயண ஜய கோபால ஹரே
ஸ்ரீ கௌஸ்துப மணி பூஷ ஸ்ருங்காரம் ருதுபாஷ (நாராயண)

2. நந்தவரகுமார நவநீத ததிசோர
கமனீய ஸுபகாத்ர கஞ்ஜாத தளநேத்ர (நாராயண)

3. கருணா பாராவார வருணாலய கம்பீர
மஞ்சுள குஞ்சபூஷ மாயா மானுஷவேஷ (நாராயண)

4. அஜ பவனுத கம்ஸாரே அச்யுத கிருஷ்ண முராரே
முரளீ கான வினோத வ்யத்யஸ்தாத் புதபாத (நாராயண)

5. யமுனா தீர விஹார த்ருத கௌஸ்துப மணிஹார
வர பத்ராசல வாஸ பாலித ஸ்ரீ ராமதாஸ (நாராயண)

❖❖❖

1. தீன தயாளோ தீன தயாளோ! தீன தயாளோ தேவதயாளோ॥
கனகாம்பர கனஸ்யாம தயாளோ! ஸனகாதி முனியோகி
வினுத தயாளோ ॥

2. ஸரதி பந்தன ராமச்சந்த்ர தயாளோ!
வரதாமர ப்ருந்தானந்த தயாளோ ॥
நாரதமுனி தேவநாத தயாளோ!
ஸாரஸாக்ஷ ரகுநாத தயாளோ ॥

3. ஆகம கல்பித அமித தயாளோ ।
போகி சயன பரமபுருஷ தயாளோ ॥

ககனாந்தர்கத நாத தயாளோ ।
நிகம கோசர நிர்விகார தயாளோ ॥

4. தஸகண்ட லுண்டனோத் தண்ட தயாளோ ।
ப்ஸுபதி சாப த்ருடித தயாளோ ॥
வர பத்ராத்ரி நிவாஸ தயாளோ ।
பாலித ஸ்ரீராமதாஸ தயாளோ ॥

❖❖❖

1. பஜரே ஸ்ரீ ராமம்! ஹே மானஸ பஜரே ரகுராமம்
பஜ ரகுராமம் பண்டன பீமம்
ரஜநிச ரௌ கவி ராமம், ராமம் (பஜரே)
2. வனருஹ நயனம், கனதஹி ஸயனம்
மனஸிஜ கோடி ஸமானம் மானம் (பஜரே)
3. தாரக நாமம் தசரத ராமம்
சாரு பத்ராத்ரி ஸஞ்சாரம் தீரம் (பஜரே)
4. சீதாராமம் சின்மய தாமம்
ஸ்ரீ துளஸீதள ஸ்ரீகர தாமம் (பஜரே)
5. ஸ்யாமள காத்ரம் சத்ய சரித்ரம்
ராமதாஸ ஹ்ருத் ராஜீவ மித்ரம் (பஜரே)

❖❖❖

1. ராமபத்ர ரார ஸ்ரீராமச் சந்த்ர ரார
தாம ரஸ லோசன ஸீதா சமேத ரார! (ராம)
2. முத்து முத்து காரக நவ மோஹனாங்கர ரார
அத்தம்பு செக்கிள்ள வாட நீரஜாக்ஷி ரார! (ராம)
3. சுஞ்சு ரவி ரேகதோ நீ ஸொம்பு ஜூது ரார
பஞ்ச தார சிலுக நாதோ பலுகுதுவு ரார । (ராம)
4. நாயெடல தயபுஞ்சி நல்லனய்ய ரார

எடபாயக எபுடு நீ பண்டனய்ய ரார । (ராம)

5. முஜ்ஜக முலகு நாதி மூல பிரம்ம ரார
கஜ்ஜல சப்புல்லுகல்லு கல்லு மனசு ரார । (ராம)

6. அந்தெலு முவ்வலு சேத ஸதீதடிம்ப ரார
குந்தனபு பொம்ப யெந்தோ அந்த காட ரார । (ராம)

7. பட்ட ராணி ப்ரேம, நா பட்டு கொம்ம ரார
கட்டிக கௌசல்ய முத்துபட்டி வேக ரார । (ராம)

8. நின்னு மான லேனுரா நீலவர்ண ரார
கண்ணுல பண்டுக கனுது கன்ன தண்ட்ரிரார । (ராம)

9. மனவி செப்பு கோந்து கானி மரவகிந்து ரார
மனஸுனீ மீதனே கானி மரலதெந்து ரார । (ராம)

10. ஸாமகான லோல நா சங்கனய்ய ரார
ராமதாஸு நேலின பத்ராசலேஸ ரார । (ராம)

(ஹரி ஹரி ராம ராம 'நன்னர' என்ற முதல் பாட்டை இங்கே சேர்க்கவும்)

ஸ்ரீ புரந்தர தாஸர் கீர்த்தனை

1. யாதவ நீ பா யதுகுல நந்தன
மாதவ மது சூதன பாரோ! (யாதவ)

2. ஸோதர மாவன மதுரேலி மடுஹித
யசோதே கந்த நீ பாரோ! (யாதவ)

3. ஸங்க சக்ரவு கைய்யலி ஹொளெயுத
பிங்கத கோவள நீ பாரோ! (யாதவ)

4. அகளங்க மஹிமனே ஆதி நாராயண
பேகம்ப பக்தரி கொலி பாரோ! (யாதவ)

5. கண் காலந்திகே கலுகலு யெனுதலி

ஜணஜண வேணு நாததலி! (யாதவ)

6. சிணி கொளு செண்டு புகரியனாடுத
ஸண ஸண்ண கோவள ரொடே கூடி (யாதவ)

7. கக வாஹனனே பகெப கெரூபனே
நகெ மொக தாசனே நீ பாரோ (யாதவ)

8. ஜகதொளு நின்னய மஹிமெய பொகஜவே
புரந்தர விட்டல நீ பாரோ (யாதவ)

❖❖❖

1. ஹரே விட்டல பாண்டு ரங்க பரிபாலய கம்ஸாரே
கர கமலத்வய கடியமே லெயிட்ட பரமபுருஷ ஸௌரே! (ஹரே)

2. ஜல ஜபவாதி ஸுஸன்னுத பாத ஜலஜ நாப நாத
கலுஷ தூர கருணாகர ரங்க ஸுலலித மஹிம தொரே! (ஹரே)

3. புண்டரீக வரதாத முகுந்த குண்டலி ஸயன ஹரே
அண்ட ஜ வாஹன அப்ராக்ருத காய கண்டஸ்தல
வர குண்டலதாரே! (ஹரே)

4. திட்டதனதி பக்த கொட்ட இட்டி கெமே லெ மெட்டி நிந்ததேவ
ஸ்ருஷ்டி கொடெய ஸ்ரீ விஜய விட்டல துஷ்ட குலாந்தகனே(ஹரே)

❖❖❖

1. தேவகி நந்தன நந்த முகுந்த வந்தித முனிகண நித்யானந்த
நிகமோத்தாரா நவனீத சோரா ககபதி வாஹன ஜகதுத்தார
(தேவகி)

2. மகர குண்டல தர மோஹன வேஷ
ருக்மணி வல்லவ பாண்டவ போஷ! (தேவகி)

3. ஸங்க சக்ரதர ஸ்ரீகோவிந்த
பங்கஜ லோசன பரமானந்த ! (தேவகி)

4. கம்ஸமர்த்தன கௌஸ்துபா பரண

ஹம்ஸவாகன பூஜித சரண ! (தேவகி)

5. வரத வேலாபுர சென்னப்ரஸன்ன
புரந்தர விட்டல குணபரிபூரண ! (தேவகி)

ஸ்ரீ சூர்தாசர் கீர்த்தனை

1. கோபீ கோபால லால ராஸ மண்டல மாஹீம்
த்தாதேயீ தாஸுதங்க நிரத்த நஹிபாஹீம் ! (கோபீ)

2. த்ரும, த்ரும, த்ரும, த்ரும ம்ருதங்க சன னன னன ரூபரங்க
த்ருகதா த்ருக தாலதங்க உகடத ரஸனாயீ ! (கோபீ)

3. பீசலால பீசபாலா ப்ரதி ப்ரதி அதித்யதி ரஸால
அவிகத கதி அதி உதார நிரகி த்ருக ஸராஹீம் ! (கோபீ)

4. ஸ்ரீ ராதாமுக சரத சந்த பேரஞ்சத ஜல ஸ்ரம அனந்த
ஸ்ரீ வ்ரஜ சந்த வடக வடக கரதமுகுட சாஹீம் ! (கோபீ)

5. தத்த தத்த ஸிகர காத ஸரிகம பதநி கடாட
ஒளர பதஹி ப்ரலாத தாம்ப தம்பதி அதிஸாதஹிம் ! (கோபீ)

6. காவத ரஸ பரே அனந்த தான தான ஸுர அபங்க
உமங்கத ஸபி அதி அனந்த ரீஜத ஹரி ராதஹிம் ! (கோபீ)

7. சாயே தேவன விமான தேகத ஸுர சக்ர பான
தேவாங்கனா நிதான ரீஜி ப்ராண வாரஹிம் ! (கோபீ)

8. சகித தகித யமுனா நீர கக ம்ருக ஜக மக சரீர
தன நந்த கே குமார பலி பலி ஜாய ஸுரதாஸ
ராஸஸுக திஹாரஹீம் ! (கோபீ)

119. ஸ்ரீ பாண்டு ரங்காஷ்டகம்

மஹாயோக பீடே தடே பீமரத்யா
வரம் புண்டரீகாய தாதும் முனீந்த்ரை: ।
ஸமாகத்ய திஷ்டந்த மானந்த கந்தம்
பரப்ரம்ஹ லிங்கம் பஜே பாண்டுரங்கம் ॥

மகாயோக பீடத்தில் பீமா நதிக்கரையில் புண்டரீகன் என்ற பக்தனுக்கு வரம் கொடுக்க மகரிஷிகளுடன் வந்து வசிப்பவரும், ஆனந்தத்துகுக் காரணமானவரும், பரப்பிரம்ம சொரூபியுமான பாண்டுரங்கனை பஜிக்கிறேன். 1

தடித்வாஸஸம் நீலமேகவ பாஸம்
ராமமந்திரம் ஸுந்தரம் சித்ப்ரகாசம் ।
வரம் த்விஷ்ட காயாம் ஸமன்யஸ்த பாதம்
பரப் ரம்ஹ லிங்கம் பஜே பாண்டுரங்கம் ॥

மின்னல் போன்ற ஆடை தரித்தவரும், நீருண்ட மேகம் போன்றவரும், மகாலக்ஷ்மிக்கு வாசஸ்தலமானவரும், அழகுள்ள, சித் பிரகாச ரூபியுமான பாண்டுரங்கனைப் பஜிக்கிறேன். 2

ப்ரமாணம் பவாப்தேரிதம் மாமகானாம்
நிதம்ப: கராப்யாம் த்ருதோ யேன தஸ்மாத் ।
விதாதுர் வஸத்யை த்ருதோ நாபிகோஸ:
பரப்ரஹ்ம லிங்கம் பஜே பாண்டுரங்கம்வ ॥

தன்னைச் சரணடைந்த பக்தர்களுக்கு சம்சார சாகரம் இவ்வளவு தான் என்று காட்ட இடுப்பில் இரு கைகளையும் வைத்திருப்பவரும், பிரம்மா வசிப்பதற்காக தொப்புளில் தாமரையை தரித்தவரும், பரப்பிரம்ம சொரூபியுமான பாண்டுரங்கனை பஜிக்கிறேன். 3

ஸ்புரத் கௌஸ்து பாலங்க்ருதம் கண்ட தேஸே
ஸ்ரியா ஜுஷ்ட கேயூரகம் ஸ்ரீ நிவாஸம் ।
ஸிவம் ஸாந்த மீட்யம் வரம் லோக பாலம்
பரப்ரஹ்ம ரூபம் பஜே பாண்டுரங்கம் ॥

கழுத்தில் பிரகாசிக்கின்ற கௌஸ்துப மணியால் அலங்கரிக்கப் பட்டவரும், தோள்வளை தரித்தவரும், திருமகளின் இருப்பிடமானவரும்,

கண்டா கர்ணனுக்கு சிவலிங்க வடிவாய் காட்சி தந்தவரும், சாந்தமான வரும், ஸ்தோத்திரம் பண்ணத்தகுதி பெற்றவரும், சிறந்தவரும், உலகங் களை ரட்சிப்பவரும், பரப்பிரம்ம சொரூபியுமான பாண்டுரங்கனைப் பஜிக்கின்றேன். 4

ஸரத் சந்த்ர பிம்பானனம் சாருஹாஸம்
லஸத் குண்டலாத்ராந்த கண்டஸ்தலாங்கம் ।
ஜபா ராக பிம்பாதரம் கஞ்ஜ நேத்ரம்
பரப்ரஹ்ம லிங்கம் பஜே பாண்டுரங்கம் ॥

சரத்கால சந்திரனைப் போன்ற வதனமுடையவரும், அழகிய புன் சிரிப்பை தேக்கி வைத்திருப்பவரும், பிரகாசிக்கின்ற குண்டலத்தி னால் ஆக்ரமிக்கப்பட்ட கன்னங்களை உடையவரும், செம்பருத்தி மலர் போல சிவந்த உதட்டைக் கொண்டவரும், தாமரை போன்ற கண்களை உடையவரும், பரப்பிரம்ம ஸ்வரூபியுமான பாண்டுரங்கனை பஜிக்கின் றேன். 5

கிரீடோஜ் ஜ்வலத் ஸர்வ திக் ப்ராந்த பாகம்
ஸுரை ரர்ச்சிதம் திவ்ய ரத்னைரனர்க்யை: ।
த்ரி பங்கா க்ருதிம் பர்ஹ மால்யா வதம்ஸம்
பரப்ரம்ஹ லிங்கம் பஜே பாண்டுரங்கம் ॥

உனது கிரீடத்தின் ஒளி சகல திசைகளையும் எட்டுகின்றது. விலை மதிக்க முடியாத உயர்ந்த நவரத்தினங்களைக் கொண்டு தேவர்களால் அர்ச்சிக்கப் படுபவரே! கழுத்திலும், வயிற்றிலும் மூன்று மடிப்பு சதையுடன் கூடியவரே! மயில் தோகையினால் அலங்கரிக்கப்பட்ட பரப்பிரம்ம சொரூபியான பாண்டுரங்கா! உம்மை பஜிக்கின்றேன். 6

விபும் வேணு நாதம் சரந்தம் துரந்தம்
ஸ்வயம் லீலயா கோப வேஷம் ததானம் ।
கவாம் ப்ருந்த கானந்தனம் சாருஹாஸம்
பரப்ரஹ்ம லிங்கம் பஜே பாண்டுரங்கம் ॥

வேணுகானம் செய்கின்ற ப்ரபுவும், முடிவில்லாதவரும், தானாக விளை யாட்டாக கோபாலனாக அவதரித்தவரும், பசுமந்தைக்கு சந்தோஷத்தைக் கொடுப்பவரும், அழகிய சிரிப்புள்ளவரும், பரப்ரம்ம ஸ்வரூபியுமான பாண்டுரங்கனை பஜிக்கிறேன். 7

அஜம் ருக்மிணீ ப்ராண ஸஞ்ஜீவனம் தம்
பரம்தாம கைவல்ய மேகம் துரீயம் ।
ப்ரஸன்னம் ப்ரபன்னார்த்தி ஹம் தேவ தேவம்
லிங்க பரப்ரஹ்ம ரூபம் பஜே பாண்டு ரங்கம் ॥

பிறப்பற்றவரும், ருக்மிணியின் பதியும், பரஞ்ஜோதி சொரூபனும் முக்தியைத் தருபவனும், நமஸ்கரித்தவர்களுடைய மனக்கவலையை துரித காலத்தில் போக்கும் முக்கிய தேவனும், தேவர்களின் தலைவனும், பரப்ரம்ம சொரூபியுமான பாண்டுரங்கனை பஜிக்கின்றேன். 8

ஸ்தவம் பாண்டு ரங்கஸ்ய வை புண்யதம் யே
படந்த்யேக சித்தேன பக்த்யா ச நித்யம் ।
பவாம் போ நிதிம் தே அபி தீர்த்வா அந்தகாலே
ஹரே ராலயம் ஸாஸ்வதம் ப்ராப்னு வந்தி ॥

புண்ணியத்தைத் தரும் இந்த பாண்டுரங்க ஸ்தோத்திரத்தை எவரெல்லாம் ஏகமனதுடனும் பயபக்தியுடனும் படிக்கிறார்களோ அவர்கள் மரண காலத்தில் சம்சார சமுத்திரத்தைக் கடந்து அழிவற்றதான, ஸ்ரீ ஹரியின் இருப்பிடமான ஸ்ரீ வைகுண்டத்தை அடைகின்றனர். 9

MAHA BHAKTA VIJAYAM YENNUM
SRI PANDURANGAN MAHIMAI
(TAMIL)

धर्मो रक्षति रक्षितः

FOR INDIAN CULTURE & TRADITION

GIRI

SINCE 1951

GIRI®

ISBN : 978-81-7950-310-2

9 788179 503102

91001310

Price ₹ 250.00